திருவாவடுதுறைப் புராணம்

பதிப்பாசிரியர்

முனைவர் வே. இரா. மாதவன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

திருவாவடுதுறைப் புராணம்

(THIRUVAVADUTHURAI-P-PURANAM)

(சுவடிப் பதிப்பு)

பதிப்பாசிரியர்

முனைவர் வே. இரா. மாதவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை,

மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Thiruvavaduthurai Puranam**
Author	:	Dr. V.R. Madhavan, M.A., B.Ed., Ph.D. Associate Professor Dept. of Palmleaf Manuscripts Tamil University, Thanjavur - 613 005.
Publisher	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Taramani, Chennai - 600 113. Ph: 22542992
Publication No	:	537
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	2005
Paper Used	:	18.6 kg TNPL Map litho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 816
No. of Copies	:	1000
Price	:	Rs. 250/- (Rupees Two Hundred and Fifty Only)
Printing	:	United Bind Graphics 89 (101-D), Royapettah High Road Chennai - 600 004.
Subject	:	Manuscriptology

His Holiness Thirukaiyilaya Parambarai
23rd Guru Maha Sannidhanam Sri-La-Sri
SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL
Aadheenakarthar, Thiruvavaduthurai Aadheenam
Thiruvadaduthurai - 609 803, Nagai District 04364-232021

நாள்: *25.2.2005*

அருள் வாழ்த்துரை

"பிறக்கமுத்தி ஆரூரில், காணமுத்தி
சிதம்பரத்தைப், பிரியா துற்றங்கு
இறக்கமுத்தி காசிதனில், நினைக்கமுத்தி
சோணகிரி என்பர், இந்தச்
சிறப்புறுங்கோ முத்திநகர் பிறந்தவர்க்கும்
இறந்தவர்க்கும் தெரிசித் தோர்க்கும்
மறப்பறஉள் நினைத்தவர்க்கும் துதித்தவர்க்கும்
இருந்தவர்க்கும் வழங்கும் முத்தி"
– திருவாவடுதுறைப் புராணம்

அனைத்து உயிர்களுக்கும் பசுத்துவ நீக்கமும், சிவத்துவ விளக்கமும் அருளவல்ல அற்புதத் திருத்தலமாம் திருஆவடுதுறையின் மாட்சிமையினை எடுத்துரைக்கும் "திருவாவடுதுறைப் புராணம்" அச்சாகி வெளிவருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

திருவாவடுதுறை திருத்தலம் அநாதி முத்தித்தலம் எனப்போற்றப் பெறுவது. எல்லா உயிர்களுக்கும் வழிகாட்டும் முறையில் உமையன்னையே எம்பெருமானைப் பூசித்துத் தன் பசுவடிவம் நீங்கப்பெற்றது இத்தலத்தில் நிகழ்ந்த பேரருட்செயல். அகத்திய மாமுனிவர் அருள்பெற்ற மகிமை உடையது இத்தலம். திருமூலர் எழுந்தருளியிருந்து அருந்தவப் பயனாய் திருமந்திரம் அருளிச்செய்த சிறப்புடையதும் இத்தலமே.

இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்தரு ஒப்பிலாமுலையம்மை உடனுறை அருள்மிகு கோமுத்தீசுவரப் பெருமான் மூவர் தேவாரங்களாலும் போற்றப்பெறுபவர். கோமுத்தி தீர்த்தம் எனத் தீர்த்த மகிமை பெற்றுள்ள இத்தலத்தில் விளங்கும் நந்தி மிகப்பெரிய உருவமுடையது.

திருவிசைப்பாவாம் ஒன்பதாந்திருமுறை அருளிய திருமாளிகைத் தேவரும், பதினோராந் திருமுறையுள் பனுவல்கள் அருளிச்செய்த சேரன்

பெருமாள் நாயனாரும், மாடக்கோயில்கள் பல அமைத்த கோச்செங்கட்சோழ நாயனாரும், வரகுண பாண்டியரும் இத்திருத்தலத்திலே அருள்பெற்ற மகான்கள்.

தருமதேவதை சிவபெருமானை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறுபெற்ற இத்திருத்தலம், முசுகுந்தன் என்ற அன்பர் உய்யும் பொருட்டு எம்பெருமானால் திருவாரூராகக் காட்டப்பெற்று விளங்கிய சிறப்புடையது.

இத்திருத்தலத்தை வழிபட்டுப் பொன்னும், பொருளும், நோய்நீக்கமும், சித்திகளும், முடிவில்லாப் பேரின்பமாம் முத்தியும் கைவரப்பெற்ற ஆன்றோர்கள் பலராவர். இத்தகைய அளவில்லாப் பெருமையினைப் பெற்று விளங்கும் திருவாவடுதுறைப் பதியில் திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனமானது அருள்திரு நமச்சிவாயமூர்த்திகளால் நிறுவப்பெற்றுச் சிவப்பொலிவுடன் விளங்கிவருகின்றது. ஆதலால் ஏற்கெனவே மூர்த்தி தல தீர்த்தங்களால் சிறப்புப்பெற்ற இத்திருத்தலம் குருலிங்க சங்கமங்கள் கூடியிருக்கும் சிறப்பையும் பெற்றுத் தன்னிகரற்று விளங்குகிறது.

இந்த அரிய திருத்தலத்திற்குத் தலபுராணம் இயற்றியவர் சாத்திரம் சாமிநாதமுனிவர். இவர் பத்தாவது குரு மகாசன்னிதானம் அவர்களின் அருளாட்சிக் காலத்தில் ஆதீனத்தில் தம்பிரான் சுவாமிகளாக விளங்கியவர். ஆதீன மாபாடியகர்த்தர் மாதவச்சிவஞான சுவாமிகளுக்குச் சமகாலத்தவர். இவர் இயற்றித் தந்துள்ள திருவாவடுதுறைப்புராணம் தற்போது ஓலைச் சுவடியில் நல்ல நிலைமையில் உள்ளது. இச் சுவடியை ஆதீனப்புலவர் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் காகிதத்தில் அச்சுக்கு ஏற்றவாறு எழுதியுள்ள கையெழுத்துப் பிரதியும் இந்நூலகத்தில் உள்ளது.

இப்புராணம் முதன்முதலாக வசன நூலாக 21-ஆவது குரு மகாசன்னிதானம் அவர்களின் அருளாட்சிக்காலத்தில் வெளியிடப் பெற்றது. 22-ஆவது குரு மகாசன்னிதானம் அவர்களின் அருளாட்சிக் காலத்தில் 27-8-1972ஆம் ஆண்டு ஆலயம் கும்பாபிடேகம் செய்யப்பெற்றுக் கும்பாபிடேக மலரும் வெளியிடப்பெற்றது. ஆலயத்தை விரிவாக்கிப் பெரிய அளவில் திருப்பணி செய்து அருளியவர்கள் 11-ஆவது குரு மகாசன்னிதானம் என்ற செய்தி இப்புராணத்தின் மூலம் அறியவருகிறது. ஆலயத்தின் தியாகேசர் சந்நிதியில் முசுகுந்த அர்ச்சனை செய்யப்பெறுகிறது. ஆதீனத்தம்பிரான் சுவாமிகளாக விளங்கிய தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் அருளிய துறைசைக்கோவை நூற்பாடல்கள் பூசைக்காலங்களில் ஓதப்பெறுகின்றன. இம்முனிவர் அருளிய க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழில் திருவாவடுதுறையின் பெருமை சிறப்பாக பாடப்பெற்றுள்ளது.

நமது அருளாட்சியில் ஸ்ரீகோமுத்தீசுவரர் கோயில் வரலாறு (கல்வெட்டுகளுடன்) முதன் முதலாக வெளியிடப்பட்டு நான்கு பதிப்புகள் வந்துள்ளன. ஓலைச் சுவடியிலிருந்து முதன் முதலாக ஆலயத்தின் அம்பாளுக்குரிய ஒப்பிலாமுலையம்மைப் பிள்ளைத்தமிழ் நூல் வெளியிடப்பெற்றுள்ளது. கையடக்க இலவச நூல்களாக இத்தலத்துப் பதிகங்கள் அடங்கிய நூல்கள் வெளியிடப்பெற்றுள்ளன.

உலக நலன்கருதி ஒவ்வொரு தமிழ் மாதப்பிறப்புத்தோறும் உருத்திராபிடேகம் செய்யப்பெற்று வருகின்றது. திருமூலர் திருநட்சத்திரம் அன்று ஒரே நாளில் திருமந்திரம் முற்றோதல் செய்யப்பெறுகின்றது. திருக்கோயில் தை இரதசப்தமி பிரமோற்சவத்தில் 5-ஆம் திருநாளன்று திருஞானசம்பந்தர் பொற்கிழி பெறும் திருவிழாவில் திருமுறை இசைவாணர் ஒருவருக்குப் பொற்கிழியும், பாராட்டிதழும் கொடுக்கப்பெறுகிறது. அறுபத்து மூவர் திருவுருவ வரிசையில் சேக்கிழார் திருவுருவம் 15-9-1988 பிரதிட்டை செய்யப்பெற்றுள்ளது. ஆலயத்தின் பள்ளியறை விமானம் திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிடேகம் செய்யப்பெற்றது. திருமுறைக்கோயில், மெய்கண்ட சாத்திரக்கோயில், பண்டாரசாத்திரக்கோயில் ஆகியன மரப்பேழைகளில் நிர்மாணிக்கப் பெற்று நித்தம் இவற்றிற்குப் பூசை நிகழ்த்தப்பெறுகிறது. மாசிலாமணி ஈசர் சகஸ்ரநாமாவளி என்னும் நூல் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்த அரும்பெரும் புராண நூலினை அச்சில் வெளிக்கொணரும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்து இணைப்பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களுக்கும், அச்சிட்டு வெளியிடும் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்து இயக்குநர், முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், அன்பர்களுக்கும், இந்நூலினைக்கற்றும், கேட்டும் சிவசிந்தனை வளர்க்கும் அன்பர்களுக்கும் இம்மையில் தீர்க்காயுளும், சகல செல்வங்களும் கைகூடி, மறுமை வளங்களும் பொருந்தி, சிவஞானம் சித்திக்க வேண்டும் என நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை
25–2–05

திருவாவடுதுறை ஆதீனம்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

தமிழில் சங்க காலத்தின் பின் பல்வகை இலக்கியங்கள் பெருகலாயின. இந்நூல்களுக்கு இலக்கணம் வரையறுக்கு முகமாகப் பாட்டியல் நூல்களும் பெருகின. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல், 'பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறெனும் தொகையதான' இலக்கியங்களை விளக்குகின்றது.

வழிவழி வந்த மரபு வரலாறுகளைக் கூறும் பல்வகையான புராண நூல்களுள் திருத்தலங்கள் பற்றிய தனிச்சிறப்புகளை எடுத்துரைக்கும் தலபுராணம் என்னும் தனி இலக்கிய வகை மிக விரிந்ததாகும். திருத்தலங்கள் மற்றும் திருக்கோயில்கள் பற்றிய கருத்துக் கருவூலங்களாக விளங்கும் தலபுராண நூல்கள் பல இலக்கிய இன்பம் பயப்பன. மேலும், இவை தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பண்பாட்டுப் பரவலுக்கும் ஆக்கம் சேர்ப்பன.

பல்லாயிரக்கணக்கான செய்யுள்களில் எழுதப்பட்ட பல நூறு தலபுராண இலக்கிய நூல்கள் பல காலங்களில் அச்சில் வெளிவந்தும் இன்று கிடைக்காத நிலையுள்ளது. இன்னும் அச்சில் வெளிவராத நூல்கள் பலவும் ஓலைச்சுவடி வடிவிலேயே உள்ளன. இவ்வகையில், இதுவரை அச்சில் வெளியிடப்பெறாத மிகச் சிறந்த தலபுராணமாகிய துறைசைப் புராணம் என்னும் திருவாவடுதுறைப் புராணம் இப்பொழுது முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிடப் பெறுகின்றது.

தமிழகத்தில் காவிரியால் வளம்பெற்ற சோழநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றான திருவாவடுதுறை பற்றிய தலவரலாற்று இலக்கியமாக இந்நூல் திகழ்கிறது. 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' எனத் திருமூலர் தம் திருமந்திரத்தை இத்தலத்தில் தங்கியிருந்து அருளியது, தேவார மூவர், சித்தர்கள் மற்றும் மன்னர்கள் பலர் இங்கு வந்து பேறு பெற்றமை போன்ற பல வரலாற்று நிகழ்ச்சிகள் இந்நூலில்

பொதிந்துள்ளன. அரிய சொல்லாட்சிகள், அழகிய அணிநலன்கள், இனிய சந்தங்கள், எளிய யாப்புகள் பல அமைந்து தமிழிலக்கிய வகைகள் ஆய்விற்கும் திருத்தல வரலாற்று ஆய்விற்கும் துணை நல்கும் இச்சுவடிப்பதிப்பு நூலினை வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது.

திருவாவடுதுறை ஆதீனத்தில் சிவஞான முனிவரவர்கள் காலத்தவரான சாத்திரம் சாமிநாத முனிவரால் இயற்றப்பெற்ற இத்தலபுராண நூலின் ஒரேயொரு ஓலைச்சுவடிப் பிரதி திருவாவடுதுறை ஆதீனத்திலுள்ளது. ஆதீனச் சுவடி நூலகத்திலுள்ள இந்த அரிய ஓலைச்சுவடியைக் கடந்த இரண்டு ஆண்டுகட்கு முன் அரிதின் முயன்று பெற்றுப் பெயர்த்தெழுதி, அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் தகுந்த குறிப்புரை, விளக்கவுரைகள் எழுதிச் சேர்த்துப் பதிப்பித்து அளித்துள்ள முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவராவார்.

முனைவர் வே.இரா. மாதவன் அவர்கள் இந்நிறுவனத்தின் முன்னை முனைவர் பட்ட மாணவர். 1980-86இல் சுவடியியல் மாணாக்கர்களுக்குப் பயிற்றுநராக விளங்கியவர். இவர் எழுதிய கண்மருத்துவம்(1982), சித்திரக் கவிகள் (1983) ஆகிய நிறுவன நூல்கள் தமிழக அரசின் முதற்பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன. நிறுவன நூற்பதிப்புப் பணிகள் பலவற்றில் இவர் பங்கு பெற்றுள்ளார். இவருடைய 'தமிழில் தலபுராணங்கள்' என்னும் இரண்டு தொகுதிகள் இலக்கிய ஆராய்ச்சியுலகில் அடிப்படை நூலாக விளங்கிவருகின்றன. ஓலைச்சுவடிப்பதிப்புத் துறையில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் இவர் தமிழ் மருத்துவ இலக்கியங்கள் வரிசையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட புதிய நூல்களைப் பதிப்பித்து வழங்கி 'நற்பதிப்பாசிரியர்' என்ற பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார். அரிய சுவடிப் பதிப்புகளை உருவாக்கி அருந்தமிழ் நூல்களை அழியாமல் காத்துவரும் இவருடைய பணியைப் பாராட்டிய தவத்திரு சுந்தரசுவாமிகள் 'கவிக்காவலர்' என்ற விருதினையும் இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இப்பொழுது இவர் பதிப்பித்து அளித்துள்ள இப்புராண நூலில் உள்ள 2560 செய்யுட்கள் அடங்கிய மூலபாடங்களைச் செம்மையாகப் பிரித்து வழங்கியிருப்பதுடன், 68 அத்தியாயங்களுக்கான உரைச் சுருக்கங்களையும், தேவையான பகுதிகளில் குறிப்புரைகளையும் எழுதிச்

சேர்த்துள்ளார். ஆய்வுக்குத் தேவையான பாடல் முதற்குறிப்பகராதி, அருஞ்சொல்லகராதி ஆகியவற்றுடன், நூலாக்கம் பற்றிய நுண்ணிய பதிப்புரையையும் மிக விரிவாக எழுதிச் சேர்த்திருப்பது இவருடைய பேருழைப்பிற்குச் சான்றாகும். இவை, தமிழுலகிற்குப் பெரிதும் பயன் நல்கும் என நம்புகிறேன். முனைவர் வே.இரா. மாதவன் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

இச்சுவடிப் பதிப்பிற்குச் சுவடிகளை வழங்கி ஊக்கமளித்ததோடு ஆசியுரை வழங்கிய திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கட்கும், நூலை வெளியிட இசைவளித்த இந்நிறுவனப் பதிப்புக் குழுவினர்க்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப. அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
13-03-2005

இயக்குநர்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

***"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க"***

'தானமொடு தவமோங்கும் தமிழ்த் திருவாவடுதுறை' எனறு போற்றப்பெறும் திருவாவடுதுறை தமிழ் அறிவுக் கருவூலமாம் திருமந்திரம் தோன்றிய அருட்தலமாகும். இத்திருத்தலக் கோயிலோடு இணைந்தே வளர்ந்து, அரும்பெரும் சித்தர்களையும் குருமகா சந்நிதானங்களையும் பெற்ற திருவாவடுதுறை ஆதீனம், பல்லாண்டுகளாகத் தமிழ்த் தாயின் கோயிலாகவே விளங்கி வருவதைக் கால வரலாறு காட்டும். தீராத் தமிழ்க் காதல் கொண்டு திகழ்ந்த பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அறிமுகப் படுத்திய தமிழ் மாணாக்கர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள். திருவாவடுதுறை ஆதீனம் தமிழுக்குத் தந்த கொடையான இவர் தமிழ்த் தாத்தாவாகத் திகழ்ந்து, பதிப்பித்து அச்சிட்ட சுவடிகள் பல. ஆயின், அவர் விட்டுச்சென்ற ஏடுகள் ஏராளம். அவர் பதிப்பிக்காத நூல்கள் அவற்றினும் பல. அவற்றுள் ஒன்றே இத்துறைசைப் புராணம் என்னும் திருவாவடுதுறைப் புராணம்.

சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் இவ்வாதீனக் குலதெய்வமாக விளங்கிய மாதவச் சிவஞான யோகிகள் காலத்தவரான சாத்திரம் சாமிநாத முனிவரால் இயற்றப்பெற்ற பெருநூல் இதுவாகும்.

'புராணம் பாடும் புலவன்' என்றே தமிழ் இலக்கிய வரலாற்றில் புகழ்பெற்ற ஆதீனப் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய புராண நூல்கள் இருபத்திரண்டும் மிக அருமையானவை. சிறப்புடைய தலங்களுக்கு முன்னரே புராணங்கள் எழுதப் பெற்றிருப்பினும் இவர் காலத்தில் அதே தலங்களுக்கு இவரைக்கொண்டு புராணங்கள் எழுதச் செய்வதில் பலரும் பெருமை கொண்டனர். இவ்வகையில், முன்பு சாத்திரம் சாமிநாத முனிவர் இயற்றிய திருப்பெருந்துறைப் புராணத்தை அடியொற்றி மகாவித்துவான் இயற்றிய மற்றொரு திருப்பெருந்துறைப் புராணம் இவண் குறிப்பிடத்தக்கது. இதே முறையில், திருவாவடுதுறைக்கும் மகாவித்துவான் அவர்கள் ஒரு புராணம் இயற்றித் தரவேண்டுமெனவும், அதற்கு மூன்று வேலி நிலம் அளிப்பதாகவும் பதினாறாவது குருமகா சந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் கூறியிருந்ததையும் அறிகிறோம். இருப்பினும், இப்பணியை இறுதி வரையில் நிறைவு செய்ய இயலாமையை எண்ணி மகாவித்துவான் அவர்கள் வருந்தியமையை அவர்தம் வரலாற்றால் அறிகின்றோம். அவரால் ஒரு புராணநூல் இத்தலத்திற்குக் கிடைக்காமை ஒரு குறையேயாம். அவ்வாறு இனி இயற்றுவாரும் இல்லை. இந்நிலையில், இத்தலத்திற்குரிய பழைய புராணமான சாத்திரம் சாமிநாத முனிவர் இயற்றிய இப்பெருநூலைச் சுவடியிலிருந்து பதிப்பித்து அச்சிட்டு வழங்க வேண்டுமென அன்பர்கள் பலரும் விழைந்து வேண்டிவந்தனர்.

பழந்தமிழோடும் சுவடிகளோடும் இணைந்தே வளர்ந்த இத்திருவாவடுதுறை ஆதீனத்திலே, இத்தல வரலாறு பற்றி எழுதப்பெற்ற ஒரு பழைய ஓலைச்சுவடி இன்னும் அச்சில் பதிப்பித்து வெளியிடப் பெறாமையைத் திருவுளம் கொண்ட குருமகாசந்நிதானம் **சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் இதனை உரியவகையில் பதிப்பித்தளிக்குமாறு இரண்டாண்டுகட்கு முன்பு பணித்தருளினார்கள். அவர்களின் திருவருளாணையின் வண்ணம் இப்பொழுது இந்நூலினை ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி, சீர் பிரித்து, அனைவரும் பயன்கொள்ளத்தக்க முறையில் உரைச் சுருக்கங்களுடன் அளித்துள்ளேன்.

இப்புராண நூலைப் பண்ணுடன் படிப்பவர் இதயத்தில் இறைவன் மகிழ்ந்து வசிப்பர் என்றும், இதை எழுதி அளிப்ப வர்கள் பல போகங்களையும் பெறுவர் என்றும், இப்புராண ஏடு உள்ள இடத்தில் வறுமை ஒழிந்து நல்வாழ்வு உண்டாகும் என்றும் இந்நூற்பயனை இந்நூலாசிரியர் பலவாறு கூறுவர். 2560 பாடல்களைக் கொண்ட இத்தகைய பெருநூலைச் சுவடியிலிருந்து பதிப்பிக்கும் நோக்கில் படியெடுக்கும் பொழுதும், ஒப்பிடும் பொழுதும், உரை காணும் பொழுதும் எனப் பன்முறையும் பல மாதங்களாகத் திரும்பத் திரும்பப் படித்து மகிழும் நற்பேற்றினை அடியேனுக்கு நல்கி, அருள் வாழ்த்துரையும் அருளிய சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுன்பிற்குப் பணிவான நன்றியறிதலை முதற்கண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு சுவடிப் பதிப்புப் பணியில் என்னை ஈடுபடச் செய்து, பல்வேறு நூல்களைப் பதிப்பித்து வெளியிட ஆக்கமும் ஊக்கமும் தந்து வரும் பேராசிரியர் செந்தமிழ்ச் செம்மல் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்களே இந்நூலுக்கும் முன்மொழிந்துத வினார்கள். அன்னாருக்கு நன்றி கூறுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

பழைய ஓலைச்சுவடியிலிருந்து முதன் முதலாகப் பதிப்பிக்கப் பெற்ற இப்பெருநூலினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அச்சிட்டு வெளியிடின் தமிழுலகம் பல்வகையிலும் பயன்பெறும் என விண்ணப்பித்த வகையில் இப்பணியை மனமுவந்து நிறைவு செய்துதவிய நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தகைய பதிப்புப் பணிகள் அனைத்திற்கும் பல்லாற்றானும் உறுதுணையாக ஊக்கமளித்துச் சிறப்பித்து வந்த தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும், சுவடிப்புலத் தலைவர் பேராசிரியர் த.கோ. பரமசிவம் அவர்களுக்கும் நன்றிகூறி மகிழ்கிறேன்.

இந்நூல் வெளிவர அனைத்து நிலைகளிலும் உதவிய நிறுவன அன்பர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல உரித்தாகும்.

என்னுடைய ஐம்பதாவது வயதில், நான் பதிப்பிக்கும் ஐம்பதாவது நூலாக இப்புராண நூற்பதிப்பு அமையத் துணைநின்ற குருவருளையும் திருவருளையும் நினைந்து வணங்கிப் போற்றுகின்றேன்.

இப்பெரும் புராண நூலைப் படித்து இன்புறும் அன்பர்கள் அனைவரும் ஒப்பிலா முலையம்மையுடனுறை மாசிலாமணியீசர் திருவருள் பெற்றுய்ய வேண்டி வணங்கி மகிழ்கிறேன்.

அன்பன்,

வே.இரா. மாதவன்

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

பண் - காந்தாரபஞ்சமம் *(2 ஆம் திருமுறை)*

நாலடி மேல் வைப்பு

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உன்கழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 2

நனவினுங் கனவிலும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாதென்நாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதிள் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழல்அலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினுநின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணனும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் அடியலால் அரற்றாதென்நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே. 10

அலைபுனல் ஆவடு துறையமர்ந்த
இலைநுனி வேற்படை யெம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்

விளையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

○○○

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருநேரிசை (4 ஆம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 1

மடந்தைபா கத்தர் போலும் மான்மறிக் கையர் போலும்
குடந்தையிற் குழகர் போலும் கொல்புலித் தோலர் போலும்
கடைந்தநஞ் சுண்பர் போலும் காலனைக் காய்வர் போலும்
அடைந்தவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 2

உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை யாவர் போலும்
செற்றவர் புரங்கள் மூன்றுந் தீயெழச் செறுவர் போலும்
கற்றவர் பரவி ஏத்தக் கலந்துலந் தலந்து பாடும்
அற்றவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 3

மழுவமர் கையர் போலும் மாதவள் பாகர் போலும்
எழுநுணை வேலர் போலும் என்புகொண் டணிவர் போலும்
தொழுதெழுந் தாடிப் பாடித் தோத்திரம் பலவுஞ் சொல்லி
அழுமவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 4

பொடியணி மெய்யர் போலும் பொங்குவெண் ணூலர் போலும்
கடியதோர் விடையர் போலும் காமனைக் காய்வர் போலும்
வெடிபடு தலையர் போலும் வேட்கையாற் பரவுந் தொண்டர்
அடிமையை அளப்பர் போலும் ஆவ்டு துறைய னாரே. 5

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர் கொண்டு போற்றச்
சக்கரங் கொடுப்பர் போலும் தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர் தம்மைத் துயரிலே வீழ்ப்பர் போலும்
அக்கரை ஆர்ப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 6

* இப்பதிகம் பாடி உலவாக்கிழி பெற்று மகிழ்ந்ததை அறிவிக்கும்.

விடைதரு கொடியர் போலும் வெண்புரி நூலர் போலும்
படைதரு மழுவர் போலும் பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர் போலும் உலகமு மாவர் போலும்
அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடு துறைய னாரே. 7

முந்திவா னோர்கள் வந்து முறைமையால் வணங்கி ஏத்த
நந்திமா காள ரென்பார் நடுவுடை யார்கள் நிற்பச்
சிந்தியா தேயொ ழிந்தார் திரிபுரம் எரிப்பர் போலும்
அந்திவான் மதியஞ் சூடும் ஆவடு துறைய னாரே. 8

பானமர் ஏன மாகிப் பாரிடந் திட்ட மாலும்
தேனமர்ந் தேறும் அல்லித் திசைமுக முடைய கோவும்
தீனரைத் தியக்க றுத்த திருவுரு வுடையர் போலும்
ஆனரை ஏற்றர் போலும் ஆவடு துறைய னாரே. 9

பார்த்தனுக் கருள்வர் போலும் படர்சடை முடியர் போலும்
ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள் கொடுப்பர் போலும்
கூத்தராய்ப் பாடி யாடிக் கொடுவலி அரக்கன் தன்னை
ஆர்த்தவாய் அலறு விப்பார் ஆவடு துறைய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மஞ்சனே மணியு மானாய் மரகதத் திரளு மானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போ தாக வந்து துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டும் ஆவடு துறையு ளானே. 1

நானுகந் துன்னை நாளும் நணுகுமா கருதி யேயும்
ஊனுகந் தோம்பு நாயேன் உள்ளுற ஐவர் நின்றார்
தானுகந் தேயு கந்த தகவிலாத் தொண்ட னேன்நான்
ஆனுகந் தேறு வானே ஆவடு துறையு ளானே. 2

கட்டமே வினைக ளான காத்திவை நோக்கி ஆளாய்
ஒட்டவே ஒட்டி நாளும் உன்னையுள் வைக்க மாட்டேன்
பட்டவான் தலைகை யேந்திப் பலிதிரிந் தூர்கள் தோறும்
அட்டமா வுருவி னானே ஆவடு துறையு ளானே. 3

பெருமைநன் றுடைய தில்லை யென்றுநான் பேச மாட்டேன்
ஒருமையால் உன்னை உள்கி உகந்துவா னேற மாட்டேன்

கருமையிட் டடாய வூனைக் கட்டமே கழிக்கின் றேன்நான்
அருமையா நஞ்ச முண்ட ஆவடு துறையு ளானே. 4

துட்டனாய் வினைய தென்னுஞ் சுழித்தலை அகப்பட் டேனைக்
கட்டனாய் ஐவர் வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்
மட்டவிழ் கோதை தன்னை மகிழ்ந்தொரு பாகம் வைத்து
அட்டமா நாக மாட்டும் ஆவடு துறையு ளானே. 5

காரழல் கண்ட மேயாய் கடிமதிற் புரங்கள் மூன்றும்
ஓரழல் அம்பி னாலே உதைத்துத்தீ எரிய மூட்டி.
நீரழற் சடையு ளானே நினைப்பவர் வினைகள் தீர்ப்பாய்
ஆரழல் ஏந்தி யாடும் ஆவடு துறையு ளானே. 6

செறிவிலேன் சிந்தை யுள்ளே சிவனடி தெரிய மாட்டேன்
குறியிலேன் குணமொன் றில்லேன் கூறுமா கூற மாட்டேன்
நெறிபடு மதியொன் றில்லேன் நினையுமா நினைய மாட்டேன்
அறிவிலேன் அயர்த்துப் போனேன் ஆவடு துறையு ளானே. 7

கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோல மாய
சீலமே யறிய மாட்டேன் செய்வினை மூடி நின்று
ஞாலமாம் இதனுள் என்னை நைவியா வண்ணம் நல்காய்
ஆலமா நஞ்ச முண்ட ஆவடு துறையு ளானே. 8

நெடியவன் மலரி னானும் நேர்த்திரு பாலும் தேடக்
கடியதோர் உருவ மாகிக் கனலெரி யாகி நின்ற
வடிவின வண்ண மென்றே என்றுதாம் பேச லாகார்
அடியனேன் நெஞ்சி னுள்ளார் ஆவடு துறையு ளானே. 9

மலைக்குநே ராய ரக்கன் சென்றுற மங்கை அஞ்சத்
தலைக்குமேற் கைக ளாலே தாங்கினான் வலியை மாள
உலப்பிலா விரலால் ஊன்றி ஒறுத்தவற் கருள்கள் செய்து
அலைத்தவான் கங்கை சூடும் ஆவடு துறையு ளானே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை (5 ஆம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நிறைக்க வாலியள் அல்லளிந் நேரிழை
மறைக்க வாலியள் அல்லளிம் மாதராள்
பிறைக்க வாலப் பெரும்புனல் ஆவடு
துறைக்க வாலியோ டாடிய சுண்ணமே. 1

தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞகன் எம்மிறை
அளவு கண்டிலள் ஆவடு தண்டுறைக்
களவு கண்டனள் ஒத்தனள் கன்னியே. 2

பாதிப் பெண்ணொரு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவன் ஒண்பொருள்
ஆதி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேயென்று சொல்லுமே. 3

கார்க்கொள் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொள் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றையன் ஆவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே. 4

கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேயெனும் பண்பினன்
அருகு சென்றிலள் ஆவடு தண்டுறை
ஒருவன் என்னை யுடையகோ வென்னுமே. 5

குழலுங் கொன்றையுங் கூவிள மத்தமும்
தழலுந் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழகன் ஆவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைவளை காரிகை யாளுக்கே. 6

பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சு வாள்அல்லள் ஆவடு தண்டுறை
மஞ்ச னோடிவள் ஆடிய மையலே. 7

பிறையுஞ் சூடிநற் பெண்ணொடா ணாகிய
நிறையும் நெஞ்சமும் நீர்மையுங் கொண்டவன்
அறையும் பூம்பொழில் ஆவடு தண்டுறை
இறைவன் என்னை யுடையவன் என்னுமே. 8

வையந் தான்அளந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினான்
ஐயன் ஆவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே. 9

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்வலி வீட்டினான்
அக்க ணிந்தவன் ஆவடு தண்டுறை
நக்கன் என்னுமிந் நாணிலி காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம் (6 ஆம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் தன்னைக்
கற்பகமா யடியார்கட் கருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 1

மின்னானை மின்னிடைச்சே ருருமி னானை
வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி,
என்னானை யெந்தை பெருமான் தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 2

பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்ற மாகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்பை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 3

பேணிநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்குந்

தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 4

ஒருமணியை உலகுக்கோ ருறுதி தன்னை
உதயத்தி னுச்சியை உருமா னானைப்
பருமணியைப் பாலோடஞ் சாடி னானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பின் இன்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 5

ஏற்றானை யெண்டோ ளுடையான் தன்னை
எல்விநட மாட வல்லான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன் தன்னை
நீற்றானை நீளரவொன் றார்த்தான் தன்னை
நீண்டசடை முடிமேல் நீரார் கங்கை,
ஆற்றானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 6

கைம்மான மதகளிற்றை யுரித்தான் தன்னைக்
கடல்வரைவான் ஆகாச மானான் தன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழும் முத்தைத்
திங்கள் ஞாயிற்றைத் தீயா னானை
எம்மானை யென்மனமே கோயி லாக
இருந்தானை என்புருகு மடியார் தங்கள்
அம்மானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 7

மெய்யானைப் பொய்யரோடு விரவா தானை
வெள்ளடையைத் தண்நிழலை வெந்தீ யேந்துங்
கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த
கண்ணானைக் கண்மூன் றுடையான் தன்னைப்
பையாட ரவமதியு டனேவைத்த சடையானைப்
பாய்புலித் தோலு டையான் தன்னை
ஐயானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 8

வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை
விசயனைமுன் னசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநற் சோதி தன்னைச்
சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட வுதைசெய்த மைந்தன் தன்னை
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 9

பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் தன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்
திருமார்பிற் புரிவெண்ணூல் திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 10

தரித்தானைத் தண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்தான் தன்னைப்
பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பெருவலியால் மலையெடுத்த அரக்கன் தன்னை
நெரித்தானை நேரிழையாள் பாகத் தானை
நீசனேன் உடலுறுநோ யான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 11

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேஎன் னுறவே என்ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 1

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணா நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
மேற்றான்நீ செய்வகைகள் செய்யக் கண்டு
வேதனைக்கே இடங்கொடுத்து நாளு நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 2

வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே னாகில்
உறுநோய்வந் தெத்தனையு முற்றா லென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே யேத்து மன்பர்க்
கரையா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 3

சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலைவளைவித் துமையவளை யஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடுங்
களிறுரித்த கங்காளா எங்கள் கோவே
நிலத்தார் அவர்தமக்கே பொறையாய் நாளும்
நில்லா வுயிரோம்பு நீத னேனான்
அலுத்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 4

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே யேத்தி வாழ்த்தித்
துறவா ததுன்பந் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்றா லென்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரைநீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சே லென்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 5

கோனா ரணன்அங்கந் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் தன்சிரத்தைக் கையி லேந்திக்
கானார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்

நானார் உமக்கோர் வினைக்கே டனேன்
    நல்வினையுந் தீவினையு மெல்லாம் முன்னே
ஆனாய் அடியேனை அஞ்சே லென்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 6

உழையுரித்த மானுரிதோ லாடை யானே
    உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே,
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
    கயிலாய மலையானே உன்பால் அன்பர்
பிழைபொறுத்தி என்பதுவும் பெரியோய் நின்றன்
    கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்கள் ஆலுஞ் சோலை
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 7

உலந்தார் தலைகலனொன் றேந்தி வானோர்
    உலகம் பலிதிரிவாய் உன்பால் அன்பு
கலந்தார் மனங்கவருங் காத லானே
    கனலாடுங் கையவனே ஐயா மெய்யே,
மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
    மயக்குளே விழுந்தழுந்தி நாளு நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 8

பல்லார்ந்த வெண்டலை கையி லேந்திப்
    பசுவேறி யூருரன் பலிகொள் வானே
கல்லார்ந்த மலைமகளும் நீயு மெல்லாங்
    கரிகாட்டி லாட்டுகந்தீர் கருதீ ராகில்
எல்லாரு மென்தன்னை இகழ்வர் போலும்
    ஏழையமண் குண்டர்சாக் கியர்க ளொன்றுக்
கல்லாதார் திறத்தொழிந்தேன் அஞ்சே லென்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 9

துறந்தார்தந் தூநெறிக்கட் சென்றேன் அல்லேன்
    துணைமாலை சூட்டநான் தூயேன் அல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசின் அல்லாற்
    பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதிலிலங்கைக் கோமான் தன்னைச்
    செறுவரைக்கீ ழடர்ந்தருளிச் செய்கை யெல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சே லென்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

மறைய வனொரு மாணிவந் தடைய
வார மாய்அவன் ஆருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற்
கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவன் எம்பெரு மான்என்றெப் போதும்
ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடும் அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 1

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்தி ரப்பந்தர் சிக்கன இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
போற்றி போற்றிஎன் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 2

திகழும் மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வான்ஒரு நீள்மலர் குறையப்
புகழி னால்அவன் கண்இடந் திடலும்
புரிந்து சக்கரங் கொடுத்தல்கண் டடியேன்
திகழும் நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 3

வீரத் தால்ஒரு வேடுவ னாகி
விசைத்தொர் கேழலைத் துரந்து சென்றணைந்து
போரைத் தான்விச யன்றனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன்
வாரத் தால்உன் நாமங்கள் பரவி
வழிபட் டுன்திற மேநினைந் துருகி
ஆர்வத் தோடும்வந் தடியிணை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதிஎம் மானே. 4

ஒக்க முப்புரம் ஓங்கெரி தூவ
    உன்னை உன்னிய மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுல காளப்
    புகழி னால்அருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின்கழ லேதொழு தரற்றி
    வேதி யாஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மான்உனை அடைந்தேன்
    ஆவ டுதுறை ஆதிஎம் மானே. (5-10)

திருச்சிற்றம்பலம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கங்கை வார்சடை யாய்கண நாதா
    கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றானே
    பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே
    தீர்த்த னேதிரு வாவடு துறையுள்
அங்க ணாஎனை அஞ்சல்என் றருளாய்
    ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 1

மண்ணின் மேல்மயங் கிக்கிடப் பேனை
    வலிய வந்தெனை ஆண்டுகொண் டானே
கண்ணி லேன்உடம் பில்லடு நோயாற்
    கருத்த ழிந்துனக் கேபொறை ஆனேன்
தெண்ணி லாஎறிக் குஞ்சடை யானே
    தேவ னேதிரு வாவடு துறையுள்
அண்ண லேயெனை அஞ்சல்என் றருளாய்
    ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 2

ஒப்பி லாமுலை யாள்ஒரு பாகா
    உத்த மாமத்தம் ஆர்தரு சடையாய்
முப்பு ரங்களைத் தீவளைத் தங்கே
    மூவ ருக்கருள் செய்ய வல்லானே
செப்ப ஆல்நிழற் கீழிருந் தருளுஞ்
    செல்வ னேதிரு வாவடு துறையுள்
அப்ப னேயெனை அஞ்சலென் றருளாய்
    ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 3

கொதியி னால்வரு காளிதன் கோபங்
குறைய ஆடிய கூத்துடை யானே
மதியி லேன்உடம் பில்லடு நோயால்
மயங்கி னேன்மணி யேமண வாளா
விதியி னால்இமை யோர்தொழு தேத்தும்
விகிர்த னேதிரு வாவடு துறையுள்
அதிப னேயெனை அஞ்சலென் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 4

வந்த வாளரக் கன்வலி தொலைத்து
வாழும் நாள்கொடுத் தாய்வழி முதலே
வெந்த வெண்பொடி பூசவல் லானே
வேட னாய்விச யற்கருள் புரிந்த
இந்து சேகர னேஇமை யோர்சீர்
ஈசனேதிரு வாவடு துறையுள்
அந்த ணாஎனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 5

குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேன்உனை அன்றிமற் றடியேன்
ஒருபி ழைபொறுத் தால்இழி வுண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 6

வெய்ய மாகரி ஈருரி யானே
வேங்கை ஆடையி னாய்விதி முதலே
மெய்ய னேஅடல் ஆழியன் றரிதான்
வேண்ட நீகொடுத் தருள்புரி விகிர்தா
செய்ய மேனிய னேதிகழ் ஒளியே
செங்க ணாதிரு வாவடு துறையுள்
ஐய னேயெனை அஞ்சல்என் றருளாய்
ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 7

கோதி லாவமு தேஅருள் பெருகு
கோல மேஇமை யோர்தொழு கோவே
பாதி மாதொரு கூறுடை யானே
பசுப தீபர மாபர மேட்டி
தீதி லாமலை யேதிரு வருள்சேர்
சேவ காதிரு வாவடு துறையுள்

ஆதி யேயெனை அஞ்சல்என் றருளாய்
    ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 8

வான நாடனே வழித்துணை மருந்தே
    மாசி லாமணி யேமறைப் பொருளே
ஏன மாவெயி றாமையும் எலும்பும்
    ஈடு தாங்கிய மார்புடை யானே
தேனெய் பால்தயிர் ஆட்டுகந் தானே
    தேவ னேதிரு வாவடு துறையுள்
ஆனை யேயெனை அஞ்சல்என் றருளாய்
    ஆர்எ னக்குற வமரர்கள் ஏறே. 9

வெண்ட லைப்பிறை கொன்றையும் அரவும்
    வேரி மத்தமும் விரவிமுன் முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடை யானை
    ஈச னைத்திரு வாவடு துறையுள்
அண்ட வாணனைச் சிங்கடி யப்பன்
    அணுக்க வன்றொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்ட மிழ்மலர் பத்தும்வல் லார்கள்
    சாத லும்பிறப் பும்மறுப் பாரே. 10

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் - திருவிசைப்பா

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
    புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
    மிகுகா விரிக்கரை மேய
ஐயா! திருவா வடுதுறை அமுதே!
    என்றுன்னை அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக் கொன்று
    அருளா தொழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழில்
    மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
    சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனாம்
    அணிஆ வடுதுறை நம்பிநின்ற

நீதி அறிகிலள் பொன்நெடும்
திண்டோள் புணர நினைக்குமே. 2

நினைக்கும்; நிரந்தரனே! என்னும்;
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும்; நன்னுதல் நங்கைமீர்;
மனக்கின்ப வெள்ளம் மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. 3

தருணேந்து சேகர னே!எனும்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருள்நேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வம் மல்குபொற் கோயிலுள்
அருள்நேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே!
தெருள்நேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. 4

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேம்எனும்
அணியும்வெண் ணீறுஅஞ் செழுத்தலால்
வலதொன் றிலள்இதற் கென்செய்கேன்!
வயலந்தண் சாந்தையர் வேந்தனே! 5

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதல்! அயன் சாரதி
கதியருள் என்னும்இத் தையலை
ஆந்தண் திருவா வடுதுறையான்
செய்கை யாரறி கிற்பாரே! 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்கு
எழுந்தோ டிக்கெட்ட அத்தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்! என்
சொல்லிச் சொல்லும்இத் தூமொழி

கற்போல் மனம்கனி வித்தளங்
    கருணால யாவந்தி டாயென்றால்
பெற்போ! பெருந்திரு வாவடு
    துறையாளி! பேசா தொழிவதே. 7


ஒழிவொன்றி லாவுண்மை வண்ணமும்
    உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
ஒழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
    முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
    அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை எய்திநின்று
    இறுமாக்கும் என்னிள மானனே. 8

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
    கொள்ளை கொள்ளவழக் குண்டே?
தேனே! அமுதே! என் சித்தமே!
    சிவலோக நாயகச் செல்வமே!
ஆனேஅ லம்புபுனற் பொன்னி
    அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனே! நின் மெய்யடி யார்மனக்
    கருத்தை முடித்திடுங் குன்றமே! 9

குன்றேந்தி கோகன தத்தயன்
    அறியா நெறிஎன்னைக் கூட்டினாய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்றாள்
    இளவல்லி எல்லை கடந்தனள்
அன்றேஅ லம்பு னற்பொன்னி
    அணிஆ வடுதுறை ஆடினாள்
நன்றே இவள்நம் பரமல்லள்
    நவலோக நாயகன் பாலளே. 10

பாலும் அமுதமும் தேனுமாய்
    ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
    புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
    திருவா வடுதுறை வேந்தனோடு
ஆலு மதற்கே முதலுமாம்
    அறிந்தோம் அரிவைபொய் யாததே. 11

திருச்சிற்றம்பலம்



துறைசைப் புராணம் - ஓலைச்சுவடி

பதிப்புரை

உலகியலில் மக்கள் நற்பண்புகளுடன் வாழ்ந்து மகிழ்ச்சியுடன் வளர்வதற்குக் காரணமான பல வரலாறுகளை வழக்கில் வைத்துக் காட்டி உள்ளத்தில் ஊக்கமும் இன்பமும் பெருகச் செய்யும் இயல்புடையது இலக்கியம். முன்பு நாட்டிலே இருந்து மறைந்த பெரியோர்களது அறிவுப் பிழம்புகளான இந்நூல்கள், தம்மைச் சார்ந்து போற்றுவோரை அறிவுத்துறையிலே முன்னைச் சான்றோர் பெற்று நின்ற உயரிய நிலையை எளிதிலே அடையச் செய்வன. மேலும் நாட்டிலே மக்கள் விலங்குத் தன்மையினின்று நீங்கி மக்கட் தன்மையையும் பண்பையும் பெற்று வாழச் செய்தலே இத்தகைய இலக்கிய நூல்களின் பெரும்பயனாம். எனவே, மக்கட்கு இந்நூல்களின் பயிற்சி பெரிதும் வேண்டப்படுவதாம். இத்தகைய நூல்களில் புராணங்கள் இவண் குறிப்பிடத்தக்கன.

தல புராணங்கள்

புராணம் என்பது பழங்கதை (Ancient tale or legend) என்று கூறுவதைவிட, புராணம் என்பது வழிவழி வந்த மரபு வரலாறு (Traditional History) என்று கூறுவதே பொருத்தமுடையதாகும். பலவகையான புராண நூல்களுள் திருத்தலங்கள் பற்றியவை 'தலபுராணம்' என்னும் தனி இலக்கிய வகையையே உருவாக்கி யிருப்பதையும் காண்கிறோம். கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதலாக இத்தகைய தலபுராணங்கள் பல நமக்குக் கிடைக் கின்றன. இடைக்காலத்தில் நிகழ்ந்த அந்நியர் ஆதிக்கம், சமயப் பூசல்கள் ஆகியவற்றால் தளர்ச்சியுற்ற மக்களை எழுச்சி பெறச் செய்த இத்தலபுராணங்களின் இலக்கியப் பயன் அளவற்றதாகும்.

பொய்யர்களைப் பாடி வாடாதீர்கள்; திருத்தலங்களைப் பாடுங்கள்; இம்மையில் சோறும் ஆடையும் மறுமையில் சிவலோக ஆட்சியும் கிடைக்கும் என்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

"தம்மை யேபுகழ்ந் - திச்சை பேசினும்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!

இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே".

என்னும் சுந்தரர் கருத்து இவண் சிந்திக்கத்தக்கது.

தல புராணங்களின் நோக்கமும் பயனும்

பொதுநிலையில், தல புராணங்கள் பக்தி இலக்கிய வகையைச் சார்ந்தவை எனினும் அவற்றினும் மேலான பயன்களை அவை நல்குவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியுள்ளோம். இத்தகைய நூல்கள், ஓர் இலட்சிய நாட்டைப் பற்றிய நோக்கைத் தருகின்றன; இன்றைய ஊர்களின் பழைய வரலாறுகளை அறிய உதவுகின்றன; கோயில்கள் பற்றிய கருத்துக் கருவூலங்களாக விளங்குகின்றன; மூர்த்தி, தலம், தீர்த்தம், நோன்பு, விழாக்கள், வழிபாடுகள் இவற்றின் வழிமுறைகளை எடுத்துக் கூறுகின்றன; இந்நூல்கள் பாமர மக்களையும் படித்த மக்களாக்குகின்றன; நுண்கலைகள் வளர்ச்சிக்கு வித்திடுகின்றன; அக்காலச் சிற்பம், ஓவியம், கட்டடக்கலை, இசை, நடனம், இலக்கியம் பற்றிய எண்ணங் களைத் தருகின்றன; தலப் பயணங்களுக்கு ஊக்கமூட்டு கின்றன; இவற்றால் நெடுஞ்சாலைகள், நீர்நிலைகள், தரும சாலைகள், இயற்கை வளங்கள் மேம்பாடடைகின்றன; பாடல் பெற்ற பல தலங்கள் சீர்பெறுகின்றன; அங்கங்கே கிடைக்கும் கல்வெட்டுகள், பழைய பாடல்களால் பல வரலாறுகள் வெளிப்படுகின்றன; வசதியற்றவரும் வாழ வலுவூட்டுகின்றன; கடையருக்கும் இங்குக் கடைத்தேற்றம் உண்டு, பாவங்களுக்குப் பரிகாரம் உண்டு, யானை, பூனை, பாம்பு, எறும்பு, பறவை, சிலந்தி, சிறுகுருவியும் பேறு பெற்றன, நாமும் பெறுவோம் என்ற நம்பிக்கையை ஊட்டுவன; நாம் யாருக்கும் தாழ்வில்லை என்ற உயருணர்ச்சியைத் தருகின்றன; தம்மிடம் பற்றிய பெருமிதம், தன்னம்பிக்கை, சொந்த ஊர்ப்பற்று இவற்றை உண்டாக்குகின்றன; கடவுள் ஒருவரே - அவர் இங்கும் - இக்கோயிலிலும் இருக்கிறார், யாதும் எனது ஊர், யாவரும் எனது கேளிர் என்ற தேசிய ஒருமைப்பாட்டை இந்நூல்கள் வளர்க்கின்றன.

மொத்தத்தில், மக்களிடையே நல்லொழுக்கம் வளர வழிவகுப்பதில் தல புராண நூல்கள் முதலிடம் பெறுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அறமும் மனிதப்பண்பும் வளர வழிகாட்டும் நூல்கள்

"புராணங்களை மனிதன் பற்றி, அவை இறை வழிபாட்டுணர்வுகளுக்குப் பற்றுக் கோடாயிருந்த வரையில் அவனுடைய வாழ்க்கையில் தெய்வப் பெயரால் கொஞ்சமேனும் நல்லொழுக்கம் இடம்பெற்றிருந்தது. வழிபாட்டேணி வழுக்கி விட்டு, மனிதனை இன்று எங்கோ வீழ்த்தியிருப்பதால், அவனுடைய ஒழுக்கமும் வீழ்ச்சியுற்றிருப்பதைக் காண்கிறோம். அறமும் மனிதப் பண்பும் ஜனநாயகத்தின் முன் பலியிடப் பட்டிருப்பதைக் காண்கிறோம்" என்கிறார் அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் (தமிழ் இலக்கிய வரலாறு, 16-ஆம் நூ.பக். 48).

முற்போக்கு என்ற போர்வையில் நாட்டில் தோன்றிய சில இயக்கங்கள், சாதியின் பெயராலும், மொழியின் பெயராலும் பிரிவினைகளைத் தூண்டியபோது 'பக்தி இலக்கியங்கள் மூடநம்பிக்கையை வளர்ப்பன' என்ற நச்சுக்கருத்தை விதைத்தன. அதில் நசிந்த தமிழ் இலக்கியச் செல்வங்கள் மிகப் பல. அவற்றுள் பல தலபுராணங்களும் இடம்பெறும்.

தலபுராண இலக்கியப் பயிற்சி

புராணங்கள் பொய்யுரைகள் அல்ல என்பதும், புராணப் புனைந்துரைகள் பகுத்தறிவுக்குப் பொருந்தும் என்பதும், புராணம் படிப்பதால் மூடநம்பிக்கைகள் பல விலகும் என்பதும் புராண இலக்கியப் பயிற்சியுடையாருக்கு எளிதில் விளங்கும். ஆலயங்கள் தொழுவதும் ஒருமைப்பாட்டை வளர்ப்பதுமே நம்முடைய குறிக்கோள் என்ற நிலையில் இத்தகைய நூல்களைப் போற்றிப் பயில்வது இன்றைய தேவையாகும்.

இந்நிலையில், சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு இயற்றப் பெற்ற துறைசைப் புராணம் என்னும் திருவாவடுதுறைப் புராணம் முதன் முதலாகப் பழைய ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி உரையுடன் பதிப்பிக்கப் பெறுகிறது.

கோயில்களும் மடங்களும் மிகுந்த தமிழ்நாடு

சமய நிறுவனங்கள் இரண்டு வகை. அவை, 1. கோயில்கள் 2. மடங்கள், இதுவே முற்கால முறை.

உலகத்திலேயே தமிழ்நாட்டில்தான் கோயில்கள் மிகுதி, மடங்கள் மிகுதி.

உலகில் எல்லாக் கண்டங்களையும் விட ஆசியாக் கண்டத்தில்தான் கோயில்கள் மிகுதி. அதிலும், இந்திய நாட்டில் தான் கோயில்கள் மிகுதி. இந்தியாவிலும் தென்னிந்தியாவில் தான் கோயில்கள் மிகுதி. தென்னிந்தியாவிலும் தமிழ்நாட்டில் தான் கோயில்கள் மிகுதி. தமிழ் நாட்டிலும் சோழநாட்டில் தான் கோயில்கள் மிகுதி. பாடல்பெற்ற 274 சிவத்தலங்களில் சோழநாட்டுத் தலங்கள் மட்டும் 190 ஆகும்.

இதிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவிரிக்கரை யிலுள்ள கோயில்களே மிகுதி.

தமிழ்நாட்டில் குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில்தான் கோயில்களைப் போன்றே மடங்களும் மிகுதியாக உள்ளன.

திருவாவடுதுறை - தலம்

பசுக்கள் நிறைந்துள்ள காவிரிக்கரையிலுள்ள ஊர் (ஆஅடுதுறை) எனப் பொதுப் பெயராகத் தோன்றினும், இறைவியாகிய உமையம்மை பசு வடிவில் வழிபட்ட பதி என்பதே இதன் முதன்மைச் சிறப்பாகும். மேலும், 1. ஞானசம்பந்தர், தம் தந்தையின் வேள்விக்காக இறைவனிடம் பொற்கிழி பெற்றது; 2. சுந்தரர் உடற்பிணி தீரப்பாடித் துதித்தது; 3. திருவிடைமருதூரின் பரிவாரத் தலங்களுள் நந்தித் தலமாக விளங்குவது; 4. தேவர்கள் படர் அரசு ஆக விளங்க அதன்கீழ் எழுந்தருளியது; 5. திருமூலர் தங்கியிருந்து தவம் செய்து திருமந்திரம் அருளியது; 6. போக சித்தருடைய மாணவராகிய திருமாளிகைத் தேவர் பல அற்புதங்களை நிகழ்த்தியது; 7. சேரமான் பெருமாள் நாயனார், வரகுண பாண்டியன் ஆகியோர் வழிபட்டது; 8. முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் இறைவன் காட்டியது; 9. சித்தர்க்கு அட்டமா சித்திகளை அருளியது; 10. தரும தேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றது; 11. இறைவன் வீரசிங்க ஆசனத்திருந்து சுந்தர நடனம் ஆடி மகாதாண்டவம் புரிந்தது; 12. திருமூலர், திருமாளிகைத் தேவர் முதலிய மகான்களுடைய சமாதிகள் இருப்பது; 13. சமய குரவர் நால்வரும் வந்து இருந்தது போன்ற எண்ணற்ற சிறப்புக்களையுடையது இந்தத் திருத்தலம்.

கோயில்

திருவாவடுதுறையிலுள்ள மாசிலாமணீசுவரர் கோயில் மிகப் பழமையானதும் சிறப்புகள் பல பெற்றதுமாகும். கோயில் கிழக்கு நோக்கியது. எதிரில் கோமுத்தி தீர்த்தம் உள்ளது. பசுவான உமைக்குத் துணையாக வந்த விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன. இரண்டாங் கோபுர வாயிலில் பெரிய நந்தி உள்ளது. பின்னால் உள்ள பலிபீடமே ஞானசம்பந்தருக்குப் பொற்கிழி அளித்த இடமாகும்.

இக்கோயிலில் அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியுள்ளது. தியாகேசர் கோயில் உள்ளது. தியாகேசர், செம்பொன் தியாகர், புத்திரத் தியாகர், சொர்ணத் தியாகர் மூர்த்தங்கள் உள்ளன. கோயிலின் மேற்குச் சுற்றில் திருமூலர் சந்நிதி உள்ளது. திருமாளிகைத் தேவர் ஆலயமுள்ளது. இவர், நரசிங்கன் என்னும் மன்னனின் படைகளை விரட்டக் கோயில் மதிலில் உள்ள நந்திகளை உயிர் பெற்றெழச் செய்தமையால் இன்றும் கோயில் மதில்களில் நந்திகள் இல்லையென்று கூறுகின்றனர்.

முதற் பராந்தகன் காலத்திய கல்வெட்டில், புரட்டாசி விழாவில் ஒருநாளில் திருமூலர் நாடகமும் - ஆரியக் கூத்தும் நடந்து வந்ததாகக் கூறப்பெறுகிறது.

இன்றைய நிலையில் கோயில் நன்கு பராமரிக்கப்பட்டுச் சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

திருவாவடுதுறை ஆதீனம்

மடங்கள் என்ற பெயர் பழைய வழக்கு, ஆதீனம் என்று கூறும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. காளமேகம் பாடிய திருவானைக்கா உலாவில் சைவ மடங்கள் 18 என முதன் முதலில் குறிப்பிடப் பெறுகின்றன.

இவற்றுள் முதன்மையான மடம் திருவாவடுதுறை ஆதீனம் ஆகும்.

முற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழையும் கலைகளையும் வளர்த்தனர். பிற்காலத்தில் குறுநில மன்னர்களும் ஆதீன கர்த்தர்களும் வளர்த்தனர். அறம் வளர்ப்பதோடு மொழி, கலை, பண்பாடுகளையும் ஆதீனங்கள் வளர்த்தன. ஆதீனங்கள் பெரிய சமஸ்தானங்கள் போன்றவை.

இவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனம் மிகப்பெரிய சமய நிறுவனமாகும்.

“சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக” என்பது சைவ உலகில் வழங்கி வரும் ஒரு பழமொழி. சைவம் இல்லாமல் தமிழ் இல்லை. தமிழ் இல்லாமல் சைவம் இல்லை. சங்க இலக்கியங்களுக்குப் பின்பு சமய இலக்கியங்களே, சைவ இலக்கியங்களே தமிழில் மிகுதி. சங்க காலத்திற்குப் பின்பு, சமய குரவர் காலத்திற்குப் பின்பு, தமிழை வளர்த்த பெருமை சைவ ஆதீனங்களையே சாரும். திருவாவடுதுறை ஆதீனம் ஒரு சைவப் பல்கலைக்கழகமாக, தமிழ்ப் பல்கலைக் கழகமாக விளங்கியது. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர் போன்றோர் திருவாவடுதுறை ஆதீனத்தின் அங்கமாகவே விளங்கினர்.

சைவ ஆதீனங்களின் வரிசையில் முதலில் வைத்து எண்ணப் பெறும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சிவராஜதானி என்ற பெருமையோடு பாராட்டுவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள். ‘சிவஞானப் பண்ணை’, ‘சிவஞானப் பேரரசு’ என்பர் ஆதீன வித்துவான் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். “தானமொடு தவமோங்கும் தமிழ்த் திருவாவடுதுறை” என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் தம் அம்பலவாண தேசிகர் கலம்பகத்தில் குறிப்பர்.

திருவாவடுதுறை என்ற ஊரில் இவ்வாதீனம் அமைந் துள்ளதால் திருவாவடுதுறை ஆதீனம் எனப் பெயர் பெற்றது.

இவ்வூர், இப்பொழுது நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது.

திருவாவடுதுறை - பெயர்க் காரணம்

திரு+ஆ+அடுதுறை = திருஆவடுதுறை. ஆக்கள் அடுத்த துறை - ஆவடுதுறை. ஆ - பசு. துறை - ஆற்றுத்துறை, பசுக்கள் நிறைந்துள்ளதும் காவிரிக்கரையில் ஆற்றுத்துறையில் அமைந்துள்ளதுமான ஊர். சோழ நாடு காவிரியால் வளம் பெற்றது. காவிரியாற்றின் இருகரையிலும் உள்ள தலங்கள் பல, ‘துறை’ என்றே பெயர் பெற்றன. தவத்துறை, மாந்துறை, பராய்த்துறை, கடம்பந்துறை போன்றவை அவை.

ஆவடுதுறை முற்காலத்தில் ஆக்கள் - பசுக்கள் நிறைந்த தலமாக, பசுவளம் மிக்க ஊராக இருந்திருக்க வேண்டும்.

அதனால் ஆ அடுதுறை (ஆக்கள் அடுத்த துறை) என்ற பெயர் பெற்றிருக்கலாம். சோழ நாடு மருதநிலம். மருதநிலத்து ஊர்கள் நிலவளம் நீர்வளம் மிக்கவை. நன்செய் நிலங்கள் நிறைந்தவை. ஆறுகள் பலவற்றால் வளம்பெற்றவை. எனவே பசுவளமும் இயல்பாகவே மிகுந்திருக்கும். திருமூலர் திருவாவடுதுறைக்கு வந்த காலத்தில் ஆயன் மூலனுக்குப் பதிலாக ஆநிரை-பசு மேய்க்கலானார் என்ற வரலாறு இத்தலத்தின் பசு வளத்தைக் காட்டும்.

ஆவளம் மிக்க இவ்வூரில் இறைவி பசு-ஆ வடிவங் கொண்டு இறைவனை வழிபட்டதால் இத்தலம் திருஆவடு துறை எனப் பெயர் பெற்றது என்பர்.

கோமுத்தி, கோகழி என்ற பெயர்களும் திருவாவடு துறைக்கு உண்டு. கோ - பசு.

ஆவடுதுறை - பிறவி தீர்ந்து பசுத்தன்மை நீங்க வேண்டுவோர் அடையுமிடம் என்றும் பொருள் கூறுவர்.

தலச்சிறப்பு

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவரும் வழிபட்டுத் தேவாரம் பாடியருளிய தலம் இது. சேந்தனார் வழிபட்டுத் திருவிசைப்பாப் பாடிய தலம். திருமூலர் வாழ்ந்த தலம், தவம் செய்த தலம், திருமந்திரம் பாடியருளிய தலம். திருமாளிகைத் தேவர் வாழ்ந்த தலம், தவம் செய்த தலம், முக்தி பெற்ற தலம் எனப் பல சிறப்புக்களைக் கூறுவர்.

திருமூலர் தவம் செய்தது

கயிலாயத்திலிருந்து தென்னாடு வந்த திருமூலர் திருவாவடுதுறையில் நெடுங்காலம் தங்கித் தவமிருந்தார். அவர் தங்கியிருந்ததும் தவமிருந்ததும் திருவாவடுதுறைக் கோயில்; அதன் அரச மரத்தடி. மரங்களுக்கெல்லாம் அரசு அரசமரம் ஆகும். மரங்களில் நான் அரச மரமாக இருக்கிறேன் என்று கண்ணபிரான் கீதையில் கூறுகிறார். அரசு சிவத்துக்கு உரியது. அரசடியில்தான் பகவான் புத்தர் ஞானம் பெற்றார். அரசுக்குப் போதி என்ற ஒரு பெயர். போதம் என்றால் ஞானம். புத்தர் போதி மரத்தடியில் தவமிருந்து ஞானம் பெற்றதால் 'போதி மாதவர்', 'போதி சத்துவர்' எனப் பெயர் பெற்றார். திருமூலரும் ஒரு போதி மாதவர் என்பர்.

"சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்துறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்" (மந்திரம் - 79)

எனத் திருமூலரே திருமந்திரத்திற் கூறுகிறார். போதியைச் சிவபோதி என்கிறார்.

திருவாவடுதுறையின் தலமரம் அரசு; படர் அரசு, இங்குள்ள நந்தி பெரியது. தருமநந்தி என்று பெயர், 'படர்ந்த அரசு, வளர்ந்த ரிஷபம்' என்பது இங்கு வழங்கும் பழமொழி.

திருவாவடுதுறைக்கு அரசவனம் என்ற ஒரு பெயர். இங்குள்ள அரசம்பலம், போதியம்பலம், நவநிதியம்பலம் ஆகும்.

திருமாளிகைத் தேவர் முத்தி பெற்ற தலம்

சிறந்த சைவ சித்தாந்தியும் சித்தருமான திருமாளிகைத் தேவர் போகரின் மாணாக்கர் ஆவார். இவர் திருவிசைப்பாவைப் பாடியுள்ளார். திருமாளிகைத் தேவரைப் பற்றிய பல அற்புத வரலாறுகளை இத்தல புராணத்திலும் காணலாம். இவர், திருவாவடுதுறையில் தவம் செய்த இடத்திலேயே முத்தி பெற்றார். இவரது சமாதிக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குள் உள்ளது.

திருவாவடுதுறை ஆதீனத்திற்குள், ஆதீன நிறுவனரும் குரு முதல்வருமான நமச்சிவாய மூர்த்திகளின் சமாதிக் கோயிலும் திருமாளிகைத் தேவரின் சமாதிக் கோயிலும் அடுத்து அடுத்து உள்ளன. திருமாளிகைத் தேவரின் மாளிகை மடம் இருந்த இடத்திலேயே, அவரது சமாதியை ஒட்டியே பிற்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஏற்பட்டுள்ளது.

திருவாவடுதுறைக் கோயிலும் திருவாவடுதுறை ஆதீனமும் அடுத்தடுத்து ஒன்றை ஒன்று ஒட்டினாற்போல் உள்ளன. இரண்டுக்கும் இடையே வாயிலும் உண்டு. கோயிலிலிருந்து ஆதீனத்திற்குச் செல்லலாம். ஆதீனத்திலிருந்து கோயிலுக்குச் செல்லலாம். குறுக்கு வழி போன்று அமைந்துள்ளது. கோயிலில் கோமுத்தீசுவரருக்கு வழிபாடு நடந்த உடனே ஆதீனத்திற்குள் இருக்கும் திருமாளிகைத் தேவர் சந்நிதியில் வழிபாடு நிகழும். கோயிற் பூசை செய்யும் சிவாசாரியரே ஆதீனத்திற்குச் சென்று திருமாளிகைத் தேவர் சந்நிதியில் ஆராதனை செய்வார். அதன் பின்னரே நமச்சிவாய

மூர்த்திகளுக்கு வழிபாடு நிகழும். அதன் பின்னே மாகேஸ்வர பூசை ஆகும். இதுவே திருவாவடுதுறை ஆதீனத்தில் கடைப்பிடிக்கப் பெற்று வரும் மரபு. இன்றும் இவ்வழக்கம் நடைமுறையில் உள்ளது. ஆதீனத்தில் திருமாளிகைத் தேவருக்கு உள்ள முதன்மையை இதன் மூலம் அறியலாம்.

திருவாவடுதுறை முத்தி நகரம், சித்திபுரம், நவகோடி சித்திபுரம் என்றொரு பெயரும் உண்டு. சித்தர்கள் தவஞ் செய்தது. திருவாவடுதுறைத் திருக்கோயிலில் திருமூலர் தவம் செய்தார். பின்பு திருமாளிகைத் தேவர் வந்தார். அவரது மாளிகை மடம் திருக்கோயிலை அடுத்து அமைந்தது. அதிலேயே அவர் கோயில் கொண்டார். அவ்விடத்திலேயே பின்னாளில் திருவாவடுதுறை ஆதீனம் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

திருவாவடுதுறைக் கோயில், திருமூலர் குகை, திருமாளிகைத் தேவர் மாளிகை மடம், திருவாவடுதுறை ஆதீனம் ஆகிய நான்கும் ஒன்று சேர்ந்த சைவக்கோட்டை, சித்தர்கோட்டை, இன்றைய திருவாவடுதுறையாதீனம்.

கோமுத்தீசுவரர் சந்நிதி விசேடம், திருமூலர் சந்நிதி விசேடம், திருமாளிகைத் தேவர் சந்நிதி விசேடம், நமச்சிவாய மூர்த்திகள் சந்நிதி விசேடம் ஆகிய நான்கு சந்நிதி விசேடங்களையும் கொண்டது இன்றைய திருவாவடுதுறையாதீனம் எனப் பாராட்டுவர் தவத்திரு ஊரன் அடிகள் (சைவ ஆதீனங்கள், ப. 42).

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

சைவ ஆதீனங்களின் குருபரம்பரை திருக்கயிலாயத்திலிருந்து தொடங்குகிறது. திருக்கயிலாயத்திலிருந்து தொடங்குவதால் 'திருக்கயிலாய பரம்பரை' என வழங்கப் பெறும். பூவுலகில் மெய்கண்டார் முதலாகத் தொடங்குவதால் 'மெய்கண்ட சந்தானம்' எனவும் அழைக்கப் பெறும், சந்தானம் - பரம்பரை. ஈண்டு சீடபரம்பரை.

திருக்கயிலாய மலையிலே, கல்லால மர நிழலிலே, தட்சிணாமூர்த்தியாய் (தென்முகப் பரமாசாரியராய்) எழுந்தருளிய ஸ்ரீகண்ட பரமசிவனிடத்திலே உபதேசம் பெற்றவர் திருநந்தி தேவர். திருநந்தி தேவரிடம் உபதேசம் பெற்றவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் சனகாதி நால்வர். சனற்குமாரரிடம் உபதேசம் பெற்றவர் சத்தியஞான

தரிசினிகள். சத்தியஞான தரிசினிகளிடம் உபதேசம் பெற்றவர் பரஞ்சோதி மாமுனிவர்.

பரஞ்சோதி மாமுனிவரிடம் உபதேசம் பெற்றவர் மெய்கண்டார். மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்றவர் அருணந்திசிவம். அருணந்திசிவத்திடம் உபதேசம் பெற்றவர் மறைஞான சம்பந்தர். மறைஞான சம்பந்தரிடம் உபதேசம் பெற்றவர் உமாபதிசிவம்.

திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி மாமுனிகள் ஆகிய நால்வரும் கயிலாயவாசிகள், தேவ பரம்பரை; அகச்சந்தான குரவர்கள்.

மெய்கண்டார், அருணந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும் பூவுலகவாசிகள்; பூத பரம்பரை, புறச்சந்தான குரவர்கள்.

உமாபதி சிவத்தின் சீட பரம்பரையில் வருபவையே இன்றுள்ள திருஆவடுதுறை முதலான சைவ ஆதீனங்கள்.

உமாபதி சிவத்திடம் உபதேசம் பெற்றவர் அருணமசிவாயர். இவரிடம் உபதேசம் பெற்றவர் சித்தர் சிவப்பிரகாசர், இவரிடம் உபதேசம் பெற்றவர் நமசிவாய மூர்த்திகள்.

நமசிவாய மூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவியவர், குருமுதல்வர் - முதலாவது குருமகாசந்நிதானம். இவர்கள் வரை உபதேச பரம்பரை. இவர்களுக்குப் பின் இன்றுவரை தொடர்ந்து வருவது - இனி என்றும் தொடர விருப்பது - அபிடேக பரம்பரை.

நமசிவாய மூர்த்திகளின் அருட்சிறப்பு

சீர்வளர்சீர் நமசிவாய மூர்த்திகள் நெடுங்காலம் திருவாவடு துறையில் குரு முதல்வராக எழுந்தருளி அருள்பாலித்தார்கள். நான்கு சிறந்த சீடர்களை உருவாக்கினார்கள். அவர்கள்:

1. குடந்தைச் சிவப்பிரகாசர் (பின்னாளில் வீர சைவராக மாறிப் பிரிய நேர்ந்தது).
2. மறைஞான தேசிகர் (பின்னாளில் இரண்டாம் குருமகா சந்நிதானமானவர்).
3. அம்பலவாண தேசிகர் (பின்னாளில் மூன்றாவது குருமகா சந்நிதானமாக விளங்கினவர்).

4. தட்சிணாமூர்த்தி தேசிகர் (பின்னாளில் இளவரசுப் பட்டத்தில் இருக்கும்போதே முத்தி பெற்றார். குருமகா சந்நிதானமாகப் பட்டத்திற்கு வரவில்லை).

ஆதீன நிறுவனர் நமசிவாய மூர்த்திகள் மூன்றாம் குருமகா தேசிகர் காலத்தில்தான் முத்தி பெற்றார்கள். அதுவரை நீண்ட காலம் விளங்கியிருந்தார்கள். தம் காலத்திலேயே இரண்டாம் மூன்றாம் சந்நிதானங்களை அமர்த்திப் பார்த்துவிட்டார்கள் என்பதே சிறப்பு.

இவ்வாறு மிகப்பெரிய ஒரு திருமரபை உண்டாக்கிய குரு முதல்வராகிய பஞ்சாக்கர தேசிக பரமாசாரியராம் நமசிவாய மூர்த்திகள் முத்திபெற்ற நாளை "மகரத் தலைநாள் குருபூசை" என ஆண்டுதோறும் தைத்திங்கள் அசுபதி நட்சத்திரத்தில் ஆதீனத்தில் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

திருவாவடுதுறை ஆதீன மடாலயத்துள் நுழைந்ததும் விளங்குவது நமசிவாய மூர்த்திகளின் சந்நிதியே. இதுவே ஆதீனத்தின் உயிர்நிலை. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய அமைப்புடன் இது கருங்கற் கோயிலாகக் கட்டப் பெற்றுள்ளது. இங்கு நமசிவாய மூர்த்தியை வழிபடுவோர் நோய் நீங்கி எல்லா வளங்களும் பெற்று நல்வாழ்வு எய்துவர் என்பது அடியவர்களின் நம்பிக்கை.

திருவாவடுதுறை குருமகா சந்நிதானங்கள்

சீர்வளர்சீர் நமசிவாய மூர்த்திகளுக்குப் பின் 23 பட்டங்களாகக் குருமரபு வளர்ந்து வருகிறது.

1. சீர்வளர்சீர் நமசிவாய மூர்த்திகள்
   (ஆதீன நிறுவனர், குரு முதல்வர்)
2. சீர்வளர்சீர் மறைஞான தேசிகர்
3. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர்
4. சீர்வளர்சீர் உருத்திரகோடி தேசிகர்
5. சீர்வளர்சீர் வேலப்ப தேசிகர்
6. சீர்வளர்சீர் குமாரசாமி தேசிகர்
7. சீர்வளர்சீர் (பின்) குமாரசாமி தேசிகர் 1622 - 1625
8. சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிகர் 1625 - 1658

9. சீர்வளர்சீர் இராமலிங்க தேசிகர் 1658 - 1678

10. சீர்வளர்சீர் வேலப்ப தேசிகர் 1678 - 1700

11. சீர்வளர்சீர் (பின்) வேலப்ப தேசிகர் 1700 - 1730

12. சீர்வளர்சீர் திருச்சிற்றம்பல தேசிகர் 1730 - 1770

13. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் 1770 - 1789

14. சீர்வளர்சீர் (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர் 1789 - 1845

15. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் 1845 - 1869

16. சீர்வளர்சீர் (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர் 1869 - 7.1.1888

17. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் 7.1.1888 - 15.4.1920

18. சீர்வளர்சீர் சுப்பிரமணிய தேசிகர் 15.4.1920 - 5.2.1922

19. சீர்வளர்சீர் வைத்தியலிங்க தேசிகர் 05.02.1922 - 1937

20. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் 1937 - 13.04.1951

21. சீர்வளர்சீர் சுப்பிரமணிய தேசிகர் 13.04.1951 - 23.9.1967

22. சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் 23.9.1967 - 7.4.1983

23. சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 07.04.1983 முதல் 23-ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து இப்போது அருளாட்சி செய்து வருகிறார்கள்.

நூல்கள் இயற்றிய குருமகா சந்நிதானங்கள்
மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர்

திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானங்களில் மிகுதியான நூல்களைச் செய்தவர் மூன்றாம் பட்டம் அம்பலவாண தேசிகரே. திருவாவடுதுறை ஆதீன பண்டார சாத்திரம் பதினான்கில் 10 நூல்களை இவர் இயற்றியுள்ளார். அவை:

1. அம்பலவாண தேசிகர் தசகாரியம்
2. சன்மார்க்க சித்தியார்

3. சிவாச்சிரமத் தெளிவு
4. சித்தாந்தப் பஃறொடை
5. சித்தாந்த சிகாமணி
6. உபாயநிட்டை வெண்பா
7. உபதேச வெண்பா
8. நிட்டை விளக்கம்
9. அதிசய மாலை
10. நமசிவாய மாலை என்பன.

இவர் காலத்தில் சின்னப்பட்டமாக இருந்து சிவப்பேறு எய்திய தட்சிணாமூர்த்தி தேசிகரும் இரண்டு நூல்களை இயற்றினார். அவை, 1. தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், 2. உபதேசப் பஃறொடை. இவ்விரண்டும் பண்டார சாத்திரம் பதினான்கில் சேர்ந்த நூல்களாம்.

இவ்வாறு அம்பலவாண தேசிகர் காலம் பண்டார சாத்திரம் பதினான்கில் 12 உண்டான காலம். நூற்திறத்தால் ஆதீனத்தை ஒளிரச் செய்தவர் இவர்.

ஐந்தாவது குருமகா சந்நிதானம்
சீர்வளர்சீர் வேலப்ப தேசிகர்

இவர், சிவஞானசித்தியார் பரபக்கத்திற்கு உரை எழுதியுள்ளார். இவரும் இவருடைய அடியார் திருக்கூட்டத்தில் ஒருவராகிய நமசிவாயத் தம்பிரானும் மெய்கண்ட சாத்திரம் பதினான்குக்குமே உரை எழுதினர் என்பர்.

பதினாறாவது குருமகா சந்நிதானம்
சீர்வளர்சீர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் (1869 - 1888)

இவருடைய காலம் தமிழிலக்கியப் பொற்காலத்திலும் பொற்காலம் என்பர். டாக்டர் உ.வே. சாமிநாதையர், இவர்கள் காலத்தில்தான் மகாவித்துவான் பிள்ளையவர்களிடமும் மகாசந்நிதானத்திடமும் பாடங்கேட்டார். பாடஞ் சொல்லுவதில் ஆற்றல் மிக்க இத்தேசிகர் சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குப் பதவுரை ஒன்றும் எழுதியருளியுள்ளார்கள். இவர்கள் காலத்தில் திருவாவடுதுறை ஆதீனம் ஒரு சைவத் தமிழ்ப் பல்கலைக் கழகமாக விளங்கியது என்பர்.

திருவாவடுதுறை ஆதீன முனிவர்கள்

குருமகா சந்நிதானங்களின் கீழ், பயிற்சி பெறுபவர்களும் பணி செய்பவர்களுமான துறவிகள் தம்பிரான்கள் எனப் பெறுவர். இவர்களுள் பலர் இலக்கிய இலக்கணப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினர். ஆதீன வித்துவான்கள் பலரும் அந்தந்தக் காலங்களில் இருந்தனர். இவர்களேயன்றி, இவ்விருவரினும் உயர்ந்து, முனிவர்களாய் விளங்கியோர் சிலர் இருந்தனர். அவருள் முக்கியமானவர் மூவர்.

1. சிவஞான முனிவர் (1753 - 1785)

ஆதீன குலதெய்வமாகப் போற்றப் பெறுகிறார். இவர் இயற்றிய நூல்கள் 29. இலக்கணம், இலக்கியம், தருக்கம், சமயம் என அவற்றை வகைப்படுத்தலாம்.

இவர், காஞ்சிபுராண முதற்காண்டம் - இயற்றியிருப்பது இவண் சுட்டத்தக்கது. இவருடைய மாணாக்கர் பன்னிருவரில் நால்வர் முனிவர் என அழைக்கப் பெற்றனர். அவர்கள்: 1. திருத்தணிகைக் கச்சியப்ப முனிவர், 2. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர், 3. காஞ்சிச் சிதம்பர முனிவர், 4. இலக்கணம் சிதம்பரநாத முனிவர் ஆவர்.

2. கச்சியப்ப முனிவர் (1790)

(கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியர் வேறு). சிவஞான முனிவரின் மாணவர் பன்னிருவருள் முதல்வர். கவிராக்ஷஸர் எனப் பெயர் பெற்றவர். இவர், தூது, அந்தாதி எனப் பல நூல்களை இயற்றியவர். தணிகைப் புராணம், திருவானைக்காப் புராணம், பூவாளூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், விநாயக புராணம் போன்ற புராண நூல்களை இயற்றியளித்த ஆதீன முனிவர் இவர்.

3. தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர்

சிவஞான முனிவரின் மாணாக்கர் பன்னிருவரில் இரண்டாவதாக விளங்கியவர். இவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் இப்போது தெரிந்தவை என 25 நூல்களை டாக்டர் உ.வே. சாமிநாதையர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். திருவாவடுதுறைக் கோவை முதலான இந்நூல்களால் இவருடைய புலமை பெரிதும் பாராட்டப்பெறும்.

இவ்வாறே, வேலாயுத முனிவர், இலக்கணம் சிதம்பரநாத முனிவர் போன்றோரும் ஆதீனப் புலவர்களாக விளங்கி, முனிவர் என அழைக்கப் பெற்றனர்.

சாத்திரம் சாமிநாத முனிவர்

பத்தாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் வேலப்ப தேசிகர் காலத்தில் (1678 - 1700) சிவஞான முனிவர் திருவாவடுதுறைக்கு வந்து சேர்ந்தார். அக்காலத்தில் துறைசையில் விளங்கியிருந்தவர் சாத்திரம் சாமிநாத முனிவர் ஆவார். இவர், திருவாவடுதுறைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய இரண்டையும் இயற்றினார். இவற்றுள் அளவில் பெரியது இந்தத் திருவாவடு துறைப் புராணமேயாம்.

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்கள்

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்கள் சிலரும், தம்பிரான்கள் பலரும் புலவர்களாக விளங்கியிருக்கிறார்கள். இவர்களே யன்றி ஆதீனப் புலவர்கள் பலர் சிறப்பாகத் திகழ்ந்திருந்தனர் என்பதை இலக்கிய வரலாற்றால் அறிகிறோம்.

முற்கூறிய முனிவர்கள், தம்பிரான்கள் பலருடன் சேற்றூர் கந்தசாமிக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர், மு.ரா. அருணாசலக் கவிராயர், அனந்தகிருஷ்ண கவிராயர், சர்க்கரைப் புலவர், சீனிப்புலவர், சிலேடைப்புலி பிச்சுவையர், இராயசம் பொன்னுசாமி செட்டியார், மதுரை இராமசாமி பிள்ளை போன்றோரும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், பொன்னோதுவா மூர்த்திகள், வி. சிதம்பரராமலிங்கம் பிள்ளை, த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், நாகர்கோயில் ஆறுமுகம் பிள்ளை, கடலூர் தே.ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஆகிய பெரும்புலவர்கள் பலர் திருவாவடுதுறை ஆதீன வித்துவான்களாக விளங்கியுள்ளனர். இவர்களுடைய தமிழ் இலக்கியப் பணிகளைத் தொகுப்பின் அவை மிகச் சிறந்த பெருந்தொகுதிகளாகும்.

கல்வித் தகுதியோடு ஒழுக்கத் தகுதியும் உடையவர் களையே ஆதீனப் புலவர்களாக நியமிப்பதென்பது ஆதீன மரபாகவே கடைப்பிடிக்கப் பெற்று வருகிறது. அதன் காரணமாகவே சைவத்திற்கும் திருமடத்திற்கும், செந்தமிழுக்கும் ஏற்றம் தரும் இலக்கியப் பணிகள் பல நிகழ்த்தப் பெற்றுள்ளன என்பது வரலாற்றில் குறிக்கத் தக்கனவாம்.

பாராட்டுப் பெற்ற பாவலர்கள்

திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்ற பாவலர்கள் பலராவர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் *(1822-1879)*, யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் *(1844 - 1903)*, வேதநாயகம்பிள்ளை *(1826 - 1889)* போன்றோர் ஆதீன வரலாற்றில் இடம்பெற்ற தமிழ்ப் பேரறிஞர்களாவர்.

இத்தகைய நிலை - தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் ஆதீன கர்த்தர்களுக்கும் உள்ள தொடர்பு - இன்றும் தொடர்வது இவண் குறிக்கத்தக்கது.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில்கள்

திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சியிலுள்ள கோயில்கள் மொத்தம் இருபது. அவற்றுள், தேவாரப்பாடல் பெற்ற திருக் கோயில்கள் ஒன்பது (இவற்றுள், திருஆவடுதுறைக் கோயில் முதன்மையானது). திருவாசகத் தலம் - திருப்பெருந்துறை ஒன்று. ஏனைய பெருங்கோயில்கள் சிறுகோயில்கள் எனப் பத்து உள்ளன.

ஆதீனக் கிளை மடங்கள்

திருவாவடுதுறையில் உள்ளது ஆதீனத் தலைமை மடம். ஆதீனக் கிளைமடங்கள் காசி முதல் கன்னியாகுமரி வரை நாடெங்கும் 130-க்கும் மேற்பட்டவை உள்ளன.

அன்னம்பாலிக்கும் ஆதீனம்

அன்னம் என்பதற்கு உண்ணும் சோறு என்று ஒரு பொருள்; முத்தி என்று ஒரு பொருள்.

கர்நாடக மாநிலத்தில் 'தர்ம ஸ்தலம்' போன்றும், கேரள மாநிலத்தில் 'உடுப்பி' போன்றும், ஆந்திர மாநிலத்தில் 'திருப்பதி' போன்றும், தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அன்னக் களஞ்சியமாக விளங்குவது 'திருவாவடுதுறை ஆதீனம்' ஆகும். இங்குள்ள மடைப்பள்ளியும் (சமையற்கூடம்), பந்திக்கட்டும் (உணவுக்கூடம்), 'அன்னக் களஞ்சியம்' என ஒரு தனிச்சிறப்புப் பெயரைப் பெற்று விளங்குகின்றன. இந்த அன்னக் களஞ்சியத்தின் அடுப்பு அணையா அடுப்பு ஆகும். சுமார் முந்நூறு ஆண்டுகளாக இந்த அடுப்பு அணையாமல் எரிந்து, பல்லாயிரக்கணக்கானவர்களுக்குத் தினந்தோறும் அன்னம்பாலித்து வருவது பெருஞ் சிறப்பாகும்.

இங்கு நாள்தோறும் நிகழும் மாகேஸ்வர பூசை, அன்னம் பாலிப்பு, அன்னதானம் ஆகிய மூன்றும், குருபூசை முதலிய சிறப்பு நாள்களில் பெரிய அளவில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இருபத்து மூன்றாவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனத்தின் 23 ஆவது குருமகா சந்நிதானமாக அருளாட்சி செய்துவரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சிவஞான முனிவர் அவதரித்த விக்கிரமசிங்கபுரத்தில் 15.11.1949-இல் அவதரித்தவர்கள். சிவசுப்பிரமணியன் என்னும் பிள்ளைத் திருநாமத்துடன் கோமதிநாயகம் பிள்ளைக்கும் கோமதி அம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராகத் தோன்றிய இவர்கள் இளைய வயது முதலே திருவாவடுதுறை ஆதீனப் பணிகளில் மிகுந்த நாட்டங் கொண்டவர்கள். இவர்களது தகுதி, திறமை, பரிபக்குவ நிலைகளைக் கண்டுணர்ந்த 22-ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், இவர்களைச் சிவப்பிரகாச தேசிகர் என்ற பெயருடன் 06.08.1980-இல் இளவரசுப் பட்டத்தில் நியமித்தருளினார்கள். 07.04.1983-இல் 22-ஆவது குருமகாசந்நிதானம் சிவப் பேறெய்னார்கள். இளவரசாக இருந்த இவர்கள் 23-ஆவது குருமகாசந்நிதானமாக அன்றே பட்டமேற்றார்கள்.

இளவரசுப் பட்டத்திலிருந்த காலத்திலும், பட்டத்திற்கு வந்த பின்பும் காசி முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செய்து, கிளைமடங்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டு, சீர்திருத்தங்கள் பலவற்றையும் செய்தார்கள், திருப்பணிகள் பலவற்றையும் செய்தார்கள்.

காசியில் கண்ணப்பசுவாமி மடத்தை ஆக்கிரமிப்பினின்று மீட்டுத் திருப்பணி செய்து செம்மையாக்கினார்கள்.

12.12.1982-இல் மெய்கண்டார்-திங்களிதழைத் தொடங்கியது; 1992-ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தைத் தொடங்கியது; 1996-ஆம் ஆண்டில் பெருங்குளம் செங்கோல் ஆதீனத்திற்குத் தகுந்த ஒருவரை ஆதீனகர்த்தராக ஏற்படுத்திச் செம்மை செய்தருளியது; 10-12.03. 2000-இல்

மலேசியாவில் நடைபெற்ற திருமந்திர மாநாட்டிற்குத் தலைமை வகித்து அருளாசி வழங்கியது என இவர்கள் எண்ணற்ற ஆன்மீகப் பணிகளில் மிகச்சிறந்து விளங்கி வருகிறார்கள். சைவத் திருப்பணிகளோடு மொழிப்பணிகள் பலவற்றிற்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து பல பனுவல் பதிப்புகள் வெளிவரவும் துணைபுரிந்து வருகின்றார்கள்.

காட்சிக்கு எளியவராகவும், வன்சொல் வழங்காதவராகவும், ஏழை எளியோருக்கெல்லாம் அன்பராகவும் விளங்கும் ஒப்பற்ற துறவியாக ஆதீனத்தின் பாரம்பரியப் புகழைப் பரப்பும் பணியை இடையறாமல் நடத்தியருளி வருகின்றார்கள்.

திருவாவடுதுறைத் திருத்தலத்தின் பெருமை கூறும் இத்துறைசைப் புராண மூல நூல் இதுவரையில் அச்சில் வரவில்லை என்பதை அறிந்து, இதனை உடனடியாகப் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்று அருளாசி வழங்கியுள்ள அளவிலே இந்நூல் இப்பொழுது பதிப்பித்து அளிக்கப் பெறுகிறது.

நூலாராய்ச்சி

ஓலைச்சுவடி

துறைசைப் புராணம் என்னும் இந்தத் திருவாவடுதுறைப் புராணம் எழுதப்பெற்ற ஒரே ஓலைச்சுவடி ஆதீனச் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப் பெற்றுள்ளது. இது பழைய சுவடி யாகும். இதன் நீளம் 37 செ.மீ., அகலம் 3 செ.மீ., ஆகும். இதில், ஒரு பக்கத்திற்கு எட்டு அல்லது ஒன்பது வரிகள் எழுதப்பட்டுள்ளன. மொத்தம் 184 ஏடுகளில் (368 பக்கங்கள்) எழுதப்பட்டுள்ளன. ஏடு எண் 103 முதல் 287 வரை எழுத்தாணியில் எழுதப்பட்டுள்ளன. இதற்கு முன் 1 முதல் 102 வரையுள்ள ஏடுகளில் வேறு நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இந்த ஏட்டில் சில பகுதிகள் பூச்சரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சுவடி நல்ல நிலை யிலுள்ளது. நூல் முழுமையும் உள்ளது.

ஏடுகளின் இடதுபுற ஓரங்களில் ஏட்டு எண்ணும், அத்தியாயங்களின் தலைப்புகளும் எழுதப் பெற்றள்ளன.

இச்சுவடியின் ஏட்டெண் 196-இல் பின்வரும் குறிப்பு ஒன்றும் எழுதப் பெற்றுள்ளது.

''முப்பத்தைந்தாவது சகத்திரநாம அர்ச்சனைக் கவி. திருவாவடுதுறைசைக் கோயில் அறையிலிருக்கும் மூலபாடத்தில் எழுதிய கவி 47 இல் இப்பொத்தகத்தில் ஆதியிலொன்றும் அந்தத்தில் மூன்றும் எழுதியது, வரலாறு'' என உள்ளது.

இப்புராண நூலின் 35-வது அத்தியாயம் சகத்திர நாம அர்ச்சனையாக உள்ளது. வடமொழி மந்திரார்ச்சனையை அப்படியே தமிழ் விருத்தங்களாக நாற்பத்தைந்து பாடல்களில் நூலாசிரியர் அமைத்துள்ளார். இதில், முதல் பாடலும் நாற்பத்தைந்தாவது பாடலும் மட்டுமே இச்சுவடியில் எழுதப் பெற்றுள்ளன. பிற பாடல்கள் எழுதப் பெறவில்லை. 'இவையுடனே மூலபாடத்திலிருப்பது கவி 47' என்ற குறிப்பையும், மூலபாடம் எங்குள்ளது என்ற குறிப்பையும் மிகக் கவனமாக மேற்கூறிய ஏட்டில் எழுதி வைத்துள்ளனர். எனவே, இந்தச் சுவடி பிரதி செய்யப்பெற்ற சுவடி என்பது தெளிவாகிறது.

மூலபாடம் உள்ள சுவடி இப்பொழுது கிடைக்கவில்லை. இடைக்காலத்தில் அது இடம்பெயர்ந்திருக்கலாம்.

1959 இல் காகிதத்தில் பிரதி செய்யப்பெற்றுள்ள ஒரு படியும் ஆதீன நூலகத்திலுள்ளது.

பதிப்பில் நிகழ்ந்தவை

ஆதீன நூலகத்திலுள்ள இந்த ஒரே ஓலைச்சுவடியை அடிப்படையாகக் கொண்டு இப்பதிப்பு மேற்கொள்ளப் பெற்றது. ஓலைச்சுவடியிலுள்ள எழுத்துக்கள் மிகச் சிறியவை; அழகுடன் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், பல எழுத்துக்கள் சிதைந்துள்ளன. பாடல்கள் அடிவரையறையில்லாமல் உரைநடை போலவே தொடர்ந்து எழுதப் பெற்றுள்ளன. ஒற்றெழுத்துகளுக்குப் புள்ளி இல்லாமலும், ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பெழுத்துக்களிடையே வேறுபாடு இல்லாமலும், ா-ர-ற இவற்றினிடையே வேறுபாடின்றியும், ழ-ள, ண-ன, ன-ந என இவை ஒன்றுற்கொன்று மயக்கம் தரும் வகையிலும் சுவடியில் எழுதப்பட்டுள்ளன. இத்தகைய பிழைகள் ஏடு எழுதியோரால் நிகழ்ந்திருக்கலாம். எனவே, ஒவ்வொரு பாடலிலும் காணப்படும் இத்தகைய பிழைகளைத் திருத்தம் செய்து, வேண்டிய இடங்களில் சீர் பிரித்து, பொருள் மாறுபடாத வகையில் இப்பதிப்பு அமைகின்றது.

நூலின் பாடல்கள், அத்தியாயத் தலைப்புகள் அனைத்தும் சுவடியிலுள்ளவாறே எழுதி அமைக்கப் பெற்றுள்ளன. சுவடியில், ஒவ்வொரு அத்தியாயத்திலுள்ள பாடல்களுக்குத் தனித்தனியே வரிசை எண்கள் உள்ளன. நூல் முழுமைக்குமான செய்யுள் வரிசை எண் இல்லை. எனவே, நூல் முழுமைக்குமான வரிசை எண்கள் 1 முதல் 2560 வரை தொடர்ச்சியாக இப்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல் முதற்குறிப்பு அகராதியைக் கொண்டு குறிப்பிட்ட பாடலை உடனே கண்டறியவும் பிற தரவுகளுக்கும் இது மிகவும் பயனுடையதாகும்.

உரைச் சுருக்கம்

சுவடியில் பாடல்கள் மட்டுமே உள்ளன. உரை விளக்கங்கள் இல்லை. இப்புராண நூல் மிக எளிய நடையில் யாவரும் எளிதில் படித்தறியும் வகையில் உள்ளமையால் அருஞ்சொற்களுக்கு மட்டும் தேவையான இடங்களில் அடிக்குறிப்புகள் இப்பதிப்பில் எழுதி அமைக்கப் பெற்றுள்ளன. நூல் நுவலும் செய்திகளைத் தொகுத்துக் காணும் வகையில், ஒவ்வொரு அத்தியாயத்திலுள்ள பாடல்கள் நிறைவு பெற்றதும், அந்தந்த அத்தியாயத்திலுள்ள செய்திகள் அனைத்தையும் சுருக்கி உரைநடையாக எழுதி அங்கங்கே சேர்க்கப் பெற்றுள்ளன. 1961 ஆம் ஆண்டில் ஆதீனத்தில் சுவாமி ஞானானந்தா அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள துறைசைப் புராண வசன நூல் இதற்குப் பெருந்துணையாகும்.

நூலாசிரியர்

இந்நூலாசிரியர் சாத்திரம் சாமிநாத முனிவர் ஆவார். இவர், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன அடியார் குழாத்துள் ஒருவர். 18 காண்டங்களையுடைய வடமொழி ஸ்காந்தத்தில் உள்ள உருத்திர சங்கிதையில் இந்தக் கோமுத்திச் சேத்திர மாகாத்மியம் கூறப்பட்டுள்ளது. அதனை இவர் தமிழில் மொழிபெயர்த்து செய்யுள் வடிவில் அமைத்துள்ளார். எனவே, இவர் வடநூற்பயிற்சியில் தேர்ந்தவர் என்பது புலனாகிறது.

தலமுழுதும் புகழவள ராவடுதண்
டுறைசையரன் சரிதை யோதும்
இலகுவட மொழியதனைத் தமிழ்விருத்தப்
பாவதனா லிசைத்தல் செய்தான்

பலனுதவுந் துறைசைவே லப்பகுரு
வருள்பதிந்த பண்பன் ஞானக்
கலைதெரிந்த சுவாமிநா தன்முனிவன்
என்னையுமாள் கருணை யோனே.

என்னும் சிறப்புப் பாயிரப் பாடல் மாணாக்க வசனமாக அமைந்துள்ளது. இதன்வழி இந்நூலாசிரியரை அறிகிறோம்.

ஆதீனத்தின் பத்தாவது குருமகாசந்நிதானமாகிய சீர்வளர்சீர் முன் வேலப்ப தேசிகர்பால் *(1678 - 1700)* இந்நூலாசிரியராகிய சாத்திரம் சாமிநாத முனிவர் ஞானதீட்சையும் சந்நியாசமும் பெற்றவர். இவர், திருவாவடுதுறைப் புராணம் மட்டுமின்றி, *1763* முதல் *1787* வரையில் தஞ்சையில் அரசாண்ட துளசேந்திர மகாராஜாவின் விருப்பத்திற்கிணங்க திருப்பெருந்துறைப் புராணத்தையும் இயற்றியுள்ளார். அதற்கு முன், திருப்பெருந்துறைக் கலம்பகம் என்ற இலக்கியத்தையும் படைத்துள்ளார். ஆயின், அந்நூல் இன்று கிடைக்கப் பெறவில்லை.

சாத்திரம் சாமிநாத முனிவரும் மாதவச் சிவஞான யோகிகளும் ஒரே காலத்தவராவார்கள்.

இந்நூலாசிரியர் ஆதீனத்தில் பன்னிரண்டாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த சீர்வளர்சீர் திருச்சிற்றம்பல தேசிகர் காலம் வரை இருந்திருக்கிறார் என்பது இப்புராணத்தில் வரும் தேசிக வணக்கத்தால் தெரிய வருகிறது.

இவர் இயற்றிய மற்றொரு தல புராணமான திருப்பெருந்துறைப் புராணத்தின் சொல் நடை, பொருள் நடை முதலியவற்றைத் தழுவியே பின்னாளில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைக்கு மற்றொரு புராணம் பாடினார் என்பது இவண் குறிப்பிடத் தக்கது. இவ்வாறே, இத்திருவாவடுதுறைக்கும் மகாவித்துவான் அவர்கள் ஒரு புராணம் இயற்ற முயன்றார் எனத் தெரிகிறது. இருப்பினும், அம்முயற்சி முடிவடையாமல் போனது அவருடைய வாழ்வில் ஒரு பெருங்குறையானது என்பது இவண் சுட்டத் தக்கதாகும்.

துறைசைப் புராண நூலமைப்பு

அறுபத்தெட்டு அத்தியாயங்களைக் கொண்ட இத்துறைசைப் புராணத்தைப் பலரும் அறியும்படியாக எளிய

நடையில் 2560 செய்யுட்களால் பாடி அமைத்துள்ளார் ஆசிரியர் சாத்திரம் சாமிநாத முனிவர்.

அநாதிமுத்திச் சேத்திர காண்டம், ஆவடுதுறைசைக் காண்டம், தியாகேசபுரக் காண்டம் என மூன்று காண்டங்களாக இப்புராண நூல் அமைந்துள்ளது. முதல் காண்டத்தில் 26 அத்தியாயங்களும், இரண்டாம் காண்டத்தில் 10 அத்தியாயங்களும், மூன்றாவது காண்டத்தில் 32 அத்தியாயங்களும் உள்ளன. ஒவ்வொரு காண்டத்தின் தொடக்கத்திலும் தோத்திரக்கவி அமைந்துள்ளது. மொத்தம் 2560 செய்யுட்கள் தொடர்ந்து பல்வேறு யாப்புகளில் அமைந்துள்ளன.

முதலில், பொதுப்பாயிரமாக விநாயகர் காப்பும் வாழ்த்தும் என மூன்று செய்யுள்கள் அமைந்துள்ளன. அடுத்து வரும் சிறப்புப் பாயிரம் பகுதியில் கடவுள் வணக்கமும், தேசிக வணக்கமும், அவையடக்கமும், புராண வரலாறும், மாணாக்க வசனமும் என 49 செய்யுள்கள் அமைந்துள்ளன.

இத்தல வரலாற்றைச் சிவபெருமான் கயிலையில் நந்தீசருக்கருள, நந்தியெம்பிரான் சநற்குமாரருக்கும், சநற்குமாரர் சூதரது குருவாகிய வியாசருக்கும் உபதேசித்தனர். வியாசர் சூதருக்கு உபதேசித்தார். சூத முனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு உபதேசிக்கின்றார். பின்பு, சூத முனிவரிடம் கேட்டவாறு நைமிசாரணிய முனிவர்களுள் ஒருவரான தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறியதாக இப்புராணம் அமைகிறது.

நாட்டுச் சிறப்பு

நாட்டுச் சிறப்பைக் கூறும் நூலாசிரியர் பொதிய மலையின் சிறப்பையும் வளப்பத்தையும் புகழ்ந்துரைக்கின்றார். காவிரி நதியின் பெருமையையும், காவிரி சூழ்ந்த நிலங்களின் வளங்களையும், அவ்வியற்கை வளத்தால் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதையும் படம்பிடித்துக் காட்டுகின்றார். இத்தகைய சோழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலங்களையும் கணக்கிட்டுக் காட்டுகின்றார். பதிகம் பெற்ற தலங்கள் மொத்தம் 273 என்பதையும், சோழ நாட்டிலுள்ள 190 தலங்களில் காவிரியின் வடகரையில் 63 தலங்களும், தென்கரையில் 127 தலங்களும் இருப்பதைச் சுட்டிக்காட்டி, இத்திருவாவடுதுறையின் சிறப்பைக் கூறுகின்றார்.

இத்திருவாவடுதுறைக்கு நாற்பாங்கெல்லை கூறும்போது கிழக்கே திருத்துருத்தியும், தெற்கில் திருக்குளம்பியமும், மேற்கே குரங்காடு துறையும், வடக்கே திருக்கோடிகாவும் கூறி, இவற்றின் நடுவே இத்தலம் விளங்குவதைக் கூறுகின்றார்.

இந்நகரின் சிறப்பைப் பலவாறு புகழ்ந்துரைக்கின்றார். இந்நகர மக்கள் அனைவரும் செல்வந்தர்களாக உள்ளனர். எந்த நேரத்தில் யார் எதை விரும்பி வந்தாலும் இல்லை என்று கூறாமல் வழங்கும் கொடைச் சிறப்புள்ளவர்களாக உள்ளனர். இந்நகர வீதிகள், மனைகள் யாவும் எப்போதும் அலங்கரிக்கப் பட்டிருப்பதையும் கூறுகின்றார். இப்பாடல்கள் பலவும் பயின்று இன்புறத்தக்கன.

தலம், தீர்த்தம், மூர்த்தி

தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றின் சிறப்பைத் தனித் தனியே விளக்குகின்றார்.

"ஆவடுதண் துறையெல்லை யதுமுழுதும்
கோவுருவாம் அமலை பாதம்
மேவுதலால் மிகுபுனிதத் தலமாகும்
அதிற்சனித்த மிருகம் பட்சி
ஊர்வனநீ ருறைவனதா பரமனுடன்
யாவும்அரன் உருவ மாகி
மேவருமுத் தியிலடைதல் கண்டுதே
வரும்பிறக்க விருப்பம் மிக்கார்". ***(195)***

என்னும் பாடலில், விண்ணுலகோரும் இத்தலத்தில் வந்து பிறக்க விரும்புவதைக் கூறுகின்றார். மேலும்,

"பிறக்கமுத்தி ஆரூரில், காணமுத்தி
சிதம்பரத்தைப், பிரியாதுற் றங்கு
இறக்கமுத்தி காசிதனில், நினைக்கமுத்தி
சோணகிரி என்பர், இந்தச்
சிறப்புறுங்கோ முத்திநகர் பிறந்தவர்க்கும்
இறந்தவர்க்கும் தெரிசித் தோர்க்கும்
மறப்பறஉள் நினைத்தவர்க்கும் துதித்தவர்க்கும்
இறந்தவர்க்கும் வழங்கும் முத்தி". ***(197)***

என உறுதிபடக் கூறுகின்றார். இதற்குக் காரணம், சிவனுக்கு உகந்த சிறப்பான தலம் இது என்றும், உமையம்மைக்குக்

கயிலை முதலான தலங்களில் கிடைக்காத பேறு இத்தலத்தில் தான் கிடைத்தது என்றும் விளக்குகின்றார். இப்பாடல்கள் மிக அருமையானவையாகும்.

இறைவன் - இறைவி விளையாடல்

இந்நூலில், சூது விளையாடிய அத்தியாயம் மிகவும் சுவையானதாகும். இப்பரந்த உலகம், சிவம் - சத்தி இவர்களால் நடத்தப்படுகிறது. சிவ சத்தி திருவிளையாடலே இவ்வுலக இயக்கம் என்பர். பாகம் பெண்ணோடு ஆயின விதமானது உயிர்களுக்கு ஞானத்தையூட்டி வினையை மாய்த்து அருளற் பொருட்டே என்பதை விளக்குகின்றது. அச்சிவ சத்தியின் திருவிளையாட்டே இப்புராணத்தில் சூதாட்டமாக விளைகின்றது. முதலிலே இறைவன், உமையம்மை வெற்றிபெறுமாறு விட்டுக்கொடுத்து ஒப்பந்தப்படி பல தலங்களையும் அளிக்கின்றார். பின்பு, இறைவன் தம் திருவிளையாடலை வேறு வகையில் திருப்பும்போது உமையம்மைக்குக் கோபம் வந்து இறைவனின் கருணையை மெச்சுவதுபோல இகழ்ச்சி தோன்றக் கூறி வருந்துகிறாள். இவ்விடத்தில், இறைவன் உமையம்மையை 'மாடே போ' என்று சினந்து கூறும்போது, 'எப்போதும் என் பக்கத்தில் பிரியாது இருப்பவளே' என்பது உள்ளுறையாயினும் 'பசுவாகக் கடவாய்' என்பது உலகத்தவரின் பொருளாகும் என்று இறைவன் கூறியதை இந்நூலாசிரியர் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

"மாடே போவென் றுனைநாம் புகல்சொல் வசவன்று
பீடே யாகும் அப்பொருள் கொள்வோர் பிழையென்று
நாடார் பக்கப் பெயரது வென்றே நவில்கிற்பார்
நீடார் வேற்கண் ணாய்நீ பிரியா நிலையாமால்".

"ஆதலி னால்ஈ துட்பொரு ளாமிவ் வகிலத்தோர்
ஓதுவ தாலே சாபமு மாய்க்கொண் டுமையேஉன்
பாத முறுந்தூ ளாற்பரி சுத்தம் பாரெய்தக்
கோதகல் கின்ற பசுவுரு வம்நீ கொள்ளென்றான்". (367, 368)

என உமையம்மை பசு உருவம் எய்தி இத்தலத்திலே வந்து தவம் புரிந்து பேறு பெற்ற வரலாற்றை மிக அழகாக ஆசிரியர் விளக்குகின்றார்.

உமையம்மை காசியில் பசுஉரு அடைந்தது, பின்பு பூமிவலமாக வந்து பல தலங்களுக்கும் வந்தது பற்றி விளக்கும்

ஆசிரியர் சிவத்தலங்கள் பலவற்றையும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு உமையம்மையைப் பிரிந்து கயிலையில் இருந்த சிவபெருமானின் ஏக்க நிலைகளையும், அவள் நினைவால் மோகித்திருந்த நிலைகளையும் மிக அழகாக விளக்குகிறார். இப்பகுதிகள் மிகச் சுவையானதாகும்.

புராண வரலாறுகள் சில

கோமுகாசுரன் தேவருக்கு இடர்புரிந்த வரலாறு விளக்கமாக இந்நூலில் இடம்பெறுகின்றது.

கயிலைநாதன் கபிலைகளுக்குக் காட்சி கொடுத்த அத்தியாயத்தில் பஞ்சகவ்விய அபிடேகத்தையும் பால் அபிடேகத்தையும் நூலாசிரியர் சிறப்பித்து விளக்குகிறார்.

"புண்ணியம் எவைக்கு மூலப் பொருள்பசு வீனமே யாகும்
நண்ணுமவ் உருவி லென்றும் நாம்குடி இருப்ப துண்மை
திண்ணிய உயிர்நோய் தீர்க்கும் தெய்வவெண் ணீறு மிவ்வான்
வண்ணநீள் கோம யத்தின் வரிவிதற்கு இணையிங்கு யாதே!"
(624)

என வரும் பாடற் பகுதிகள் பல குறிப்பிடத்தக்கன.

இம்முத்தித் தலத்தில் அசுவத்தவனம் தோன்றிய வரலாறு, இறைவன் சாத்தாவைப் பிறப்பித்துக் காவல் தொழில் கொடுத்த வரலாறு போன்றவற்றுடன், கோவுருநாயகி சோணாட்டில் திருக்குளம்பியம் சேர்ந்தது, தேவர்கள் கணபதி பூசை செய்தது, கோவுருவ நாயகி சத்ததலம் தரிசித்ததுடன் இங்கே வந்து மாசிலாமணியைத் தரிசித்தது, இறைவனை முறைப்படி பூசை செய்தது ஆகிய வரலாறுகளுடன் முதற்காண்டம் நிறைவு பெறுகிறது.

இந்நூலின் இரண்டாவது ஆவடுதுறைசைக் காண்டம், உமையம்மை பசுத்துவம் நீங்கி இத்தலத்திலே இறைவன் பாகம் பெற்ற வரலாற்றுடன் தொடங்குகின்றது. பின்பு, வேதபுத்திரனாகிய தருமதேவதைக்கு இறைவன் இடபவாகனப் பேறு அருளிய வரலாறு, கோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்த வரலாறு, சந்திரசேகரர் வேதாத்தியானம் உரைத்தது, தேவர்கள் சித்திரை விழாச் சிறப்பு நடத்தியது, தேவி மஞ்சள் நீராடியது போன்ற செய்திகள் நிரல்படக் கூறப் பெறுகின்றன.

திருமணக் கோலம்

முப்பத்து மூன்றாவது அத்தியாயத்தில் இறைவன் இறைவியின் திருமணச் சிறப்பை ஆசிரியர் மிகமிக அழகாகப் பாடியுள்ளார்.

"ஆதியோ டந்த மில்லான் அநாதியாய் நித்த மாகி
மாதுமை களத்தில் தங்கும் மங்கல நாண்மேற் செங்கை
காதலா லமைத்துப் பூதிக் காப்பணிந் தவள்பொற் காந்தட்
போதலர்ச் செங்கை பற்றிப் பொற்பொடும் இருந்த போது"

(1244)

இத்திருமணக் காட்சியைக் கண்ட ஆண்களும் பெண்களும் அடைந்த பேரின்பப் பேற்றினையெல்லாம் சுவைபட இந்நூலாசிரியர் எடுத்துரைக்கின்றார்.

மாசிலாமணியின் மாதாண்டவம்

போதியம்பலத்தில் இறைவன் மகாதாண்டவம் புரிந்தமையை முப்பத்து நான்காவது அத்தியாயத்தில் விளக்குகிறார். சிவாலயங்களில் சிவலிங்கத்திற்கு அடுத்த பெருமை தாண்டவப் பெருமானாகிய நடராசப் பெருமானுக்கேயாம். இத்திருவுருவமே இறைவனின் திருமேனிகளில் மிகச் சிறப்புடையதாகும்.

"அண்டகோ டிகளாடக் கீழாட மேலாட வருந்திக் காடத்
தெண்டிரைநீர்க் கடலாட மலையாடப் பூதபவு திகங்க ளாட
மண்டுதிரி சுடராடச் சேடன்முடி அசைந்தாட வானோ ராடத்
தண்டுளவ முகிலாட அயனாட உலகசரா சரங்க ளாட"

(1316)

மாசிலாமணியீசர் நடம்புரி மாதாண்டவத்தின் வடிவழகை இப்பகுதியில் மிகத் திறம்பட ஆசிரியர் புனைந்துரைக்கின்றார்.

ஆயிரம் நாமங்கள்

மாசிலாமணிப் பெருமானின் ஆயிரம் நாமங்களைத் திருமால் முதலான தேவர்கள் அர்ச்சித்து வழிபடுவதை அடுத்த அத்தியாயத்தில் கூறுகின்றார். இந்த ஆயிர நாமங்களில் பல வேதமந்திரங்களாகும். யாகப் பொருள்களும் மந்திர வடிவங்களில் இறைவனின் திருநாமங்களாகவே விளங்கு கின்றன. இவைகட்குப் பொருள் காண வேண்டின் சாயண பாஷியத்தின் துணை வேண்டும் என்பர். சில நாமங்கள்

இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்ப வருகின்றன. ஆனால், இவை பொருளில் வேறுபாடு உடையனவாக உள்ளன.

மூன்றாம் காண்டத்தில் சில வரலாறுகள்

இத்தலத்திலே ஒப்பிலாமுலையம்மன் ஆடிப்பூரத் திருவிழாக் கொண்டருளிய.வரலாற்றுடன் இரண்டாம் காண்டம் முடிவடைகின்றது. அடுத்து, தியாகேசுரபுரக் காண்டத்தில் பல வரலாறுகள் இடம்பெறுகின்றன. முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளை வரத்துக்கு வந்த வரலாறு, திரவியத் தியாகேசர் தைத்திருவிழாக் கொண்டருளிய வரலாறு, முசுகுந்தச் சக்கரவர்த்தி சிவார்ச்சனை செய்து முத்தி பெற்ற வரலாறு, சாத்தர் அசோமுகியின் கையறுத்த வரலாறு, சாத்தர் தாருகனைச் செயங்கொண்டு வெற்றி மேவிய வரலாறு, அசோமுகி மகள் கிருத்திகைக்கு அருள்புரிந்த வரலாறு, சலந்தரனைச் சக்கரம் படைத்தறுத்த வரலாறு, திருமாலுக்குத் துளபமாலை கொடுத்துப் பிருந்தைமயல் அகற்றிய வரலாறு, தேவர்கள் கார்த்திகைத் திங்கள் சோமவார பூசை செய்த வரலாறு, செவ்வாய்க்கு இறைவன் அருளிய வரலாறு போன்றவை விளக்கமாக அமைகின்றன.

அடுத்து, பிப்பிலவனத்தில் அகத்தியர் தருமநந்தீசுரரைத் தரிசித்தது, நந்தீசுரர் அகத்தியருக்குத் தலமகத்துவம் உரைத்தது, அக்கினி பகவானுக்குக் குருத்துரோகம் தீர்த்தது, அகத்தியருக்கு வெண்ணோய் அகற்றி அருள்புரிந்தது போன்ற பல வரலாறுகளும் தொடர்ந்து அமைகின்றன.

சாத்திரநூற் கருத்துக்கள்

அழகிய விநாயகர் அகத்தியருக்குப் பஞ்சாக்கரம் உரைத்தது, சைவத்திறம் உரைத்தது, வேதாந்தம் உரைத்தது ஆகிய பகுதிகளில் சாத்திரக் கருத்துக்கள் பலவற்றையும் ஆசிரியர் விளக்குகின்றார். இவற்றுடன் அழகிய விநாயகர் அகத்தியருக்கு சித்தாந்த முத்தி உரைத்தது, வேதாந்தத் தெளிவு உரைத்தது, நவகோடி சித்தாதிகட்கு அட்டமாசித்தி அருளியது ஆகிய பகுதிகள் சமயநூல் பயில்வோருக்கு மிகவும் பயனுடையன.

சித்தர் போற்றும் திருத்தலம்

இத்திருத்தலத்தில் வந்திருந்த திருமூல தேவரை இறைவன் தடுத்தாட்கொண்ட வரலாற்றை ஆசிரியர் மிக விரிவாக

விளக்குகின்றார். திருமூலர் இங்கேயே தங்கி வேறு பல சித்தர்களையெல்லாம் சந்தித்திருந்ததையும், போதி வனத்திலே எழுந்தருளி, திருமந்திரம் முழுவதையும் விளம்பிய வகைகளையும் மிகத் தெளிவாகப் பாடியுள்ளார். திருமூலர் மொழிந்த திருமந்திரச் செய்யுட்களின் உட்பொருள்கள் பலவற்றையும் மிக எளிய நடையில் விளக்கியுள்ளார். இத்தகைய பாடல்கள் பலவும் திருமூலரின் திருமந்திரச் செய்யுள்கள் போன்ற அமைப்பிலேயே பாடப் பெற்றிருப்பதும் இந்நூலாசிரியரின் புலமைக்குச் சான்றாகும்.

இவ்வாறே திருமாளிகைத் தேவரின் மகத்துவம் இந்நூலில் மிக அருமையாக விளக்கப் பெற்றுள்ளது. இத்தலத்தில் கொங்கண சித்தர் சிவபூசை செய்து அருள்பெற்ற வரலாறு விரிவாக அமைகின்றது. இந்தக் கொங்கணர் பூசித்த சிவலிங்கமானது இக்கோயிலில் இன்றும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நால்வர் வரலாறுகள்

அடுத்து அமையும் நால்வர் வரலாறுகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாம்.

மாணிக்கவாசகர்

திருவாதவூரர் வரலாற்றை விளக்கும் ஆசிரியர், மாணிக்கவாசகருக்கு இறைவன் அருள்புரிந்ததைச் சுருக்கமாக விளக்குகின்றார். திருவாவடுதுறையிலே எழுந்தருளியிருக்கும் மாசிலாமணிப் பெருமானை மணிவாசகர் வணங்கி எழுகின்ற பொழுது அப்பெருமான் திருக்குருந்த மரத்தின் கீழிருக்கும் புண்ணியக்கோலக் காட்சியைக் காட்டியருளினதாகக் கூறுகின்றார். மேலும், மாணிக்கவாசகர் இத்தலத்திலுள்ள அருட்டுறை மடத்திலிருந்து, தாம் செய்த திருவாசகத்தை ஒழுங்குபடுத்திக் கோர்வை செய்ததாகவும் கூறியுள்ளார் (பா. 2205, 2207). மேலும், கோமுத்தி நகராகிய இத்திருவாவடுதுறைத் தலத்திற்குக் கோகழி என்ற பெயரையும் ஆசிரியர் கூறுகின்றார். இதை மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் குறிப்பதையும் கூறுகின்றார்.

சிவபுராணத்தில் 'கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்றும்; குயிற்பத்தில், 'கொம்பில் தங்கு கூக்குயிலே இங்ஙன் மருவு கோகழியுள்ளானை வருக நீ கூவாய்' என்றும், 'பண்டாய' என்னும் வெண்பாவில், 'என்றனையும்

ஆளாக்கொண்டாளுகின்ற, மிக்க கோகழியெம் கோமாற்கு' என்றும் வருமிடங்களிலெல்லாம் துறைசையிலே எழுந்தருளி யுள்ள பெருமானையே குறிப்பதாக இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

''பாகுற மின்சொற் தேவி பசுவுருக் கழித்த வாற்றாற்
கோகழி யென்னும் நாமம் கோமுத்தி நகர்க்குக் கூறி
மோகமாய்ச் சிவபு ராண அகவலின் முதன்மொ ழிக்கண்
வாகுறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்த சொற்பின்''.

''அருள்மாசில் மணியை வாழ்த்தி அழகுகோ கழியை யாண்ட
குருமணி வாழ்க வென்று கூறிப்பின் குயிற்பத் தின்கண்
தருகுவ னின்பங் கொம்பிற் றங்குகூக் குயிலே யிங்ஙன்
மருவுகோ கழியுள் ளானை வருகநீ கூவா யென்றும்''.

''பண்டாய வெனும்வெண் பாவிற் பண்பிலென் றனையு மாளாக்
கொண்டாளு கின்ற மிக்க கோகழி யெங்கோ மாற்கும்
உண்டாமோ நெஞ்சே கைம்மா றுரையென்றும் புகழ்ந்து பாடித்
தொண்டாய தன்மை கூறித் துதித்தனர் வாத வூரர்''.
(2208 - 2210)

என வரும் பாடல்கள் இவ்வரலாற்றை விளக்குகின்றன.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்த பெருமானுக்கு உலவாக்கிழி அருளிய அத்தியாயத்தில் அவர்தம் முழு வரலாற்றை மிக விரிவாக இந்நூலாசிரியர் விளக்குகின்றார். சம்பந்தப் பெருமானுக்கு, பூதத்தின் தலையில் ஆயிரம் பொன் கொண்ட ஒரு முடிப்பை, செம்பொற் தியாகேசர் வைத்து அனுப்பும்போது, முடிப்பை எடுத்துச் செல்லும் பூதத்துக்குத் துணையாக மற்றும் இரண்டு பூதங்களைத் தடியுடன் அனுப்பினதாக இந்நூலாசிரியர் கூறுகின்றார். சம்பந்தப் பெருமான் அருட்டுறை மடத்தில் சில நாள்கள் தங்கியிருந்ததாகவும் பதிவு செய்துள்ளார். (பா. 2247). அப்பொழுது அவர் பதிகம் பாடிய நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கின்றார்.

''ஈவ தெமக்கிலை யேல்எமை யாளுமா றீதோவுள்
மேவிடர் சாரினும் உன்னடி நான்மற வேனென்றே
ஆவலி னோடுநற் காந்தார பஞ்சமம் அழகாகச்
சீர்வளர் ஆவடு தண்துறை யாயருள் செய்யென்று''(2249)

நாலடி மீதி லிரண்டடி வைத்து இசை நலமாகப் பதிகம் ஒன்றை சம்பந்தபெருமான் புதிதாக யாத்ததை இந்நூலாசிரியர் சிறப்பாகக் குறிப்பது அனைவரும் அறியத்தக்கதாம்.

திருநாவுக்கரசர்

அப்பர் பெருமானாகிய திருநாவுக்கரசர் இத்தலம் வந்திருந்து, அருட்டுறை மடத்தில் தங்கியிருந்து பதிகம் பாடிய வரலாற்றையும் ஆசிரியர் குறிக்கின்றார்.

"குறுந்தொகைப் பதிக மொன்றும் குளிர்ந்தநே ரிசையி ரண்டும்
உறுந்திருத் தாண்ட கச்சீர்ப் பதிகமோ ரிரண்டும் ஓதித்
திறங்கொளா யிரம்பொன் சம்பந் தர்க்கருள் சிறப்பும் பாடிப்
பெறுந்திர வியப்பொற் தியாகர் பேரருள் மிகவும் பெற்று".
(2335)

திருவருட்துறை மடத்துட் சில பகலிருந்து மாசிலாமணியைப் போற்றினார் என்ற அரிய செய்திகளையும் இந்நூலாசிரியர் தருகின்றார்.

சுந்தரர்

சுந்தரர் இத்தலத்திற்கு வந்திருந்து திருப்பதிகம் ஓதித் தரிசித்த வரலாற்றையும் ஆசிரியர் விரிவாக விளக்குகிறார் (பா. 2376 - 2381). மேலும், சுந்தரர் செம்பொற்தியாகேசரை வணங்கி எழும்பொழுது, திருவாரூர்க் காட்சியையே இறைவன் இங்கும் சுந்தரருக்கு அளித்ததாகவும் குறிக்கின்றார்.

இந்நால்வர் வரலாறுகள் முழுமையையும் சுருக்கமாக அறிய மேற்கூறிய அத்தியாயங்கள் மிகப் பயனுடையனவாம்.

ஆலயத் திருப்பணிகள்

சேரமான் பெருமாள் சிவப்பிரதிட்டை செய்து இத்தலத்திலே அருள் பெற்ற வரலாறும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்பெறு கின்றது. சேரமான் திருவாவடுதுறைக்கு வந்து, 'சேரலிங்கம்' என்ற சிவலிங்கத்தை மாசிலாமணிப் பெருமானுக்கு வடக்குத் திக்கில் வாயு மூலையில் பிரதிட்டை செய்து பூசித்ததாக இந்நூலாசிரியர் கூறுகின்றார். அந்தச் சேரலிங்கம் இன்றும் இக்கோயிலுவிள்ளே அமைந்திருக்கக் காணலாம்.

செங்கட்சோழர் இத்தலத்திலே வந்திருந்து ஆலயத் திருப்பணிகள் பல செய்ததையும் இவர் சுட்டுகின்றார்.

செங்கட் சோழரால் நிறுவப்பட்ட சோழ லிங்கமானது சேரலிங்கத்துக்குப் பக்கமாக இன்றும் திகழக் காணலாம்.

வரகுணபாண்டியனும் இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து மாசிலாமணிப் பெருமானுக்கு அருச்சனை செய்து அருள் பெற்ற வரலாற்றையும் இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

நூற்பயன்

புராண பல சுருதி உரைத்த அத்தியாயத்தில் இப்புராண நூலைப் படிப்போர், கேட்போர் அடையும் பலன்களை மிகத் தெளிவாக உரைக்கின்றார் ஆசிரியர். நிறைவாக, அறுபத் தெட்டாவது அத்தியாயத்தில், மிதிலேசன் முனிவர்களுடன் காசியிலிருந்து திருவாவடுதுறைக்கு வந்து, மாசிலாமணிப் பெருமானைப் பூசித்து, யாகங்களையும் அர்ச்சனைகளையும் செய்து, இறைவன் திருவருளையும் முனிவர்களது நல்லாசி களையும் பெற்று மீண்டும் மிதிலை நகரடைந்து, நீண்டநாள் வாழ்ந்து, நிறைவாகப் பேரானந்த வீட்டைப் பெற்றான் என்பதுடன் வாழ்த்தும் கூறி நூலை முடிக்கின்றார் ஆசிரியர்.

காசியிலுள்ள விசுவநாதர் ஆலயத்தின் முத்தி மண்டபத்தில் நைமிசாரணிய முனிவர்களின் வேண்டுகோளின்படி தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறிய இத்தல வரலாறுகள் பலவும் இந்நூலாசிரியரின் புலமை வளத்தால் பெருநூலாகப் பொலிவுடன் திகழ்கின்றமை இவண் குறிக்கத்தக்கதாகும்.

புராணத்தில் இத்தலப்பெயர் வழங்கும் விதம்

துறைசைப் புராண ஆசிரியர் தம் நூலில் இத்தலப் பெயரைப் பலவாறு எடுத்துரைக்கின்றார். அவற்றுள் சில வருமாறு:

ஆவடுதண்துறை

சீருலவும் ஆவ டுதண்துறை - 4

முத்திதருதலமாகும் ஆவடுதண்துறை - 68

அருள்பெருகும் ஆவடுதண்துறை - 167

அகிலம் போற்றும் ஆவடுதண்துறை - 1794

சுரும்பார் பொழில்சூழ் ஆவடுதண்துறை - 2041

நலமேவும் ஆவடுதண்துறை - 2298

ஞானப் போதிசேர் துறைசை - *29*,
செவ்விய துறைசை - *212*

நன்மக மிகுந்துறைசை - *253*

மாதவர்கள் போற்று திருத்துறைசை - *1022*

துறைசை - *1426*, பொன்னுலவு துறைசை - *1484*

ஏதமறு துறைசைநகர் - *35*, தென்துறைசைப்புரம் - *1427*

துறைசை நன்னகர் - *874*, துறைசையூர் - *1013, 1145*

பண்புறு துறைசை நன்னகர் - *1141*

நீதிசேர் துறைசை நகர் - *1142*

வளர்புகழ்த் துறைசை - *1154*

மிக்க வளம்பெறுநற் துறைசை நகர் - *1207*

தென் துறைசை நன்னகர் - *1285*

முத்திநகர்

அநாதிமுத்திச் சேத்திரம் - *53, 191*
ஆசிலா முத்திச் சேத்திரம் - *921*,

கோமுத்திச்சேத்திரம் - *94, 1172*

பல்லூழிகண்ட கோமுத்திநகர் - *63*

நற்றவ மேவு கோமுத்திநகர் - *151*

கோமுத்திநகரம் - *167*, கோமுத்திபுரம் - *1406*

புண்ணிய அருட்கோமுத்திபுரம் - *211*

முத்திநகர் - *694*, முத்திச்சேத்திரம் - *1015, 1827*

உத்தம முத்திச் சேத்திரம் - *1161*

முத்தி நன்னகர் - *1458*, அநாதி முத்தித்தலம் - *1787*

தீதிலாத கோமுத்தித்தலம் - *1796*

திருமலி பதிகோமுத்திச் சேத்திரம் - *1990*

சத்திய முத்தி ஈயும் தலம் - *1992*

மட்டிலா அருட் கோமுத்தித்தலம் - *2011*

வேறு பெயர்கள்

அரசவூர் - *659*, சிவானந்த வாரிதி - *162*, வேதபுரம் - *1789*, அமுதபுரம் - *166*, பிப்பிலவனம் - *167*, கோகழி -

167, 2208, சிவபுரம், பிரமபுரம், அகத்தியபுரம், கசாரணியம் - 167, பூகயிலாசம் - 167, 1788, போதிவனம் - 1789, அரசாரணியம் - 1582, தேவதாருவனம் - 1790, தியாகபுரம் - 1792, போதியம்பலம் - 1792, அகத்தியபுரம் - 1793, சிவலோகபுரம் - 1991, பூலோக கயிலாசம் - 1827, திருக்கோகழியாள் குருமணி பொற்கோயில் - 1211, கோகழி ஈசுரர் பொற்கோயில் - 1294

என இவ்வாறு பல நிலைகளில் இத்தலம் அழைக்கப்பெறக் காணலாம்.

புராணத்தில் இத்தல இறைவர் பெயர் வழங்கும் விதம்

துறைசைப் புராண ஆசிரியர் இந்நூலில் இத்தல இறைவர் பெயரைப் பலவாறு எடுத்துரைக்கின்றார். அவற்றுள் சில வருமாறு:

கோமுத்தீசர்

கோமுத்தீசர் - 199, 247, 928, 1076, 1294

ஆசிலாக் கோமுத்தீசர் - 1305

தியாகேசர்

இந்துசேகரனான மாசிலாமணித் தியாகேசன் - 95

தியாகேசன் - 1426

நாதன்

கோகழிநாதன் - 193,
உம்பர் தொழுந் துறைசை நாதன் - 223

மாசிலாமணிநாதன் - 1208, 1285,

நாதன் - 1164, 1178, 1182,

கோமுத்திநாதன் - 194, ஆவடுதுறைசை நாதன் - 1231

எந்நலமுந் தருநாதன் - 1274

தியாகநாதன் - 1518, கோதிலா நாதன் - 1997

நச்சுறு களத்து மாசிலாமணிநாதன் - 1744

அப்புலாவுஞ் சடைநல் மாசிலாமணி நாதர் - 2475

நாயகன்

திருக்கோமுத்தி நாயகன் - *259*

நாவலர்கோன் தனையாண்ட நாயகன் - *738*

என்றுமுடனாகியிரு மாசில்மணி நாயகன் - *901*

முத்திநாயகன் - *925*, ஞானநாயகன், அம்பிகைநாயகன் - *941*

சீலமேவிய துறைசை நாயகன் - *1061*

இளநிலா முடிக்கும் வேணிநாயகன் - *1165*

கண்டவர் சிந்தை கவர்ந்திடுங் காமரு மாசிலா நாயகன் - *1261*

அற்புத நாயகன் - *1266*, ஆரண நாயகன் - *1267*

மாசிலா நாயகன் - *1268*, ஆதிநாயகன் - *1502*

அணைத்தெழுந்த நாயகர் - *1520*, சுந்தரநாயகன் - *1529*

அணைத்திருந்த சுந்தரக் கருணைநாயகன் - *1715*

மாசிலாச் செல்வ நாயகன் - *1788*

மாசிலாமணி நாயகன் - *1797*

பவமகலக் கருணைபுரி அணைத்தெழுநாயகர் - *1832*

நதிமேவுசடை மாசிலாமணி நாயகன் - 2012

சுத்தக் கருணைப் பிரகாசமணி நாயகன் - 2044

மாசிலாமணி

சிவ மாசிலாமணி - 53, நம்பரருள் மாசிலாமணி - 222

மாசிலாமணி - *237, 918*

முத்தித் திருநகர் மருவு மாசிலாமணி - *818*

மாசிலீசன் - 904, அரிய மாசிலாமணி - 921

காமதேனுநாயகி செய் பூசையினாற் களித்துளங்குளிர் மாசிலாமணியார் - 922

தேடருஞ் சிவமாசிலாமணி - 926

மாசொன்றிலா நன்மாமணி யனையான் - 974

சுந்தர மாசிலான் - *1181*, மாசிலாமணி - 1162

மாசிலான் - *1171, 1172*, மனத்துணையான மாசிலாமணி - *1303*

மாசிலாமணியீசர் - 1317, மாசிலாமணி - 1424

மாசிலாக் கருணைச் செழுஞ்சுடர் - 1716

தூவிடை மாசிலார் - 1769, மான்கர மாசிலான் - 1793

மாசிலா நல் மணியீசர் - 2521

பிற பெயர்கள்

மைமருவும் கண்ணியை ஓர்பால் அணைத்தார் - 220

போக்கொடு வரவுமில்லாப் பூரணப் பொருளாய் நின்றோன் - 291

வானோர் உய்ந்திட நஞ்சுண்ட கிருபாநிதி - 95

ஏழைகட்கிரங்கும் உமைகோன் - 95

வண்டுலாஞ்சடை வள்ளல் - 449

ஆரண முதலாயுள்ளோன் - 820

அரசமா வனத்தின் மேவும் காரணன் - 820

பொன்திகழ் சடாதரன் - 901, கருணாகரன் - 968

புண்ணியரூபன் - 1015, கபிலநாயகி தலைவன் - 1059

திருக்கோகழியாள் குருமணி - 1211

நிமலன் - 1142, அமலன் - 1154, இந்துசேகரன் - 1181

சிவபரஞ்சுடர் - 1241, குருத்துமதிச் சடையான் - 1288

அப்பணிந்திடு செஞ்சடை மாசிலா அமலன் - 1791

கோகழியுள்ளான் - 2209,
ஆவடுதண்துறை மேவிய அரன் - 2254

மாசிலாத தலைவன் - 2500

அருள்தரு கோமுத்தீச அமல நன்மணி - 2553

இவ்வாறு பல அடைமொழிகளுடன் இத்தல இறைவர் பெயர் இந்நூலில் வழங்கக் காணலாம்.

புராணத்தில் இத்தல இறைவி பெயர் வழங்கும் விதம்

துறைசைப் புராண ஆசிரியர் தம் நூலில் இத்தல இறைவியின் பெயரைப் பலவாறு எடுத்துரைக்கின்றார். அவற்றுள் சில வருமாறு:

அம்பிகை

அகிலங்கள் அனைத்தும் ஈன்ற அம்பிகை - *1236*

அயில்விழி அம்பிகை - *863*

அன்னை

உலகுயிரெல்லா மீன்ற அன்னை - *60*

அகில வுலகமும் ஈன்ற அன்னை - *867*

சகத்தினுக்குயிராம் அன்னை - *874*

யார்க்கும் புகலிட மான ஞான பூரண அன்னை - *1236*

உமை

தாதாரும் குழலுமையாள் - *44*

ஆதிச் சிற்பரையாகிய உமை - *60*

குடம்பொரு நல்மடி உமையாள் - *369*,
ஆனுமையாள் - *921*

கன்னல்மொழி உமை - *1208*

ஒப்பிலாமுலை

சூதார் மென்முலை ஒப்பிலாள் - *44*,
அதுலதனத்தாள் - *1037*

மாவடு வகிர்க்கண் ஒப்பிலா முலை - *1143*

ஒப்பிலா முலைத்தாய் - *1148*, *2475*

ஒப்பிலா முலைமயில் - *1162*, *1292*, *1318*, *1831*

முகிழ்முலை ஒப்பிலாள் - *1164*

துளிமதுப் பெறுபூங் கூந்தற் துணைமுலை
ஒப்பிலாள் - *1165*

ஒப்பிலா முலையாள் - *1170*, *1209*

ஒப்பிலாமுலை - *1178*, *1181*, *1260*

ஒப்பிலாக் கிளர்தனப் பூவை - *1182*

ஒப்பிலாத முலை - *1019*, *1024*

மாவடு வகிர்க்கண் ஒப்பிலா முலை - *1143*

ஒப்பிலா முலையாந் தோகை - *1207*

ஓவியமனைய ஒப்பிலாமுலை - *1230*

உகந்தரன் பாகம் நீங்கா ஒப்பிலாமுலையாள் - 1236

ஓது நான்மறைகளேத்தும் ஒப்பிலாமுலையாள் - 1246

ஒப்பிலா மென்முலைத் தெள்ளமுதம் - 1283

ஞானச் சுடராஞ் செல்வ ஒப்பிலாமுலை - 1289

ஒப்பிலா முலைமான் - 1322

வால சவுந்தர ரூபநல் ஒப்பிலா முலைமாது - 1394

ஒப்பிலா முலையுமையாள் - 1427

குயில்மொழி ஒப்பிலா முலை - 1730

ஒப்பிலாக் கச்சுறு முலையாள் - 1763

துணைமுலை ஒப்பிலாள் - 1769

ஒப்பிலா மென்முலை - 1791

ஒப்பிலாத முத்தார் மென்முலையாள் - 1961

மாண்டகு சொல் ஒப்பிலா முலை - 1984

குவிமுலை ஒப்பிலா நற்குயில் - 1991

ஒப்பில்லாக் குருநன் மணிப் பூணிலகு
முலைக்கோதை - 2043

மணிமுலை ஒப்பிலாநல் மயில் - 2551

நாயகி

தேனு நாயகி - 559, ஆவுருநாயகி - 673,
காமதேனு நாயகி - 922

கோ நாயகி - 736, பசுவுருவப் பராபர நாயகி - 737

பூரண நாயகி - 845, சிவாகம நாயகி - 848

பசு நாயகி - 902, கருணைச்சேம நாயகி - 966

திருவருள் நாயகி - 966, செழும்பூந்தாம நாயகி - 966

தலைவர் வாம நாயகி - 966, ஒப்பிலா நாயகி - 1389

பிற பெயர்கள்

ஞானமெய்ப் பயனாகிய முதல்வி - 60,
கபிலைதாரை - 397

துரியபதமாய் நிறைந்த விமலை - 60,
கபிலையம்மன் - 397

அருள்மிகுந்த கவுரி - 605, உத்தமி - 880
கோட்டும் விற்புருவக் கோதை - 1182, கபிலேகரி - 422
குயிலின் மென்மொழிக் கோமளவல்லி - 406
இமையப் பிடியன்னாள் - 964
சிந்துர நுதலினாள் - 1241, ஒப்பிலாமின் - 1264, 1274
பூங்குழலுமையாள் - 1288, நம்பரிடம் பிரியாள் - 1393
கன்னல்மொழிக் கருணாகரி - 1403
ஒப்பில்லாத் துணைவி - 1507

என இவ்வாறு இத்தல இறைவியின் பெயர்கள் பல இந்நூலுள் அமைந்துள்ளன.

இப்புராணத்தில் காணப்பெறும் துதிகள்

இத்தல விநாயகர், மாசிலாமணிப்பெருமான், ஒப்பிலா முலையம்மை துதிகள் பல இவண் தொகுத்துக் காணத் தகுவனவாம்.

1. அழகிய விநாயகர் துதி

சங்கர ஞான புத்திர! சயிலமா தருள்கு மார!
துங்கவேள் முன்பு வந்த சுந்தர! சூர்ப்ப கர்ண!
பொங்கர வணிந்த தோள! புங்கவ! புனித போத!
ஐங்கர நாத! சோதி அழகிய கணேச போற்றி!

மூடிக வாக னா!நல் மோதக அத்த! வேத
பீடிக! ஏக தந்த! பிரணவா சன!சை யோக
ஓடுமும் மதவி லாச! உயர்சதா ரவிப்பிர காச!
ஆடவர் திலக! யோக அழகிய கணேச போற்றி!

இந்துசே கர!முக் கண்ண! இலகுசோ டசக ணேச!
தொந்திகொ ளுதர! நீண்ட துளைபெற துதிக்கை நாத!
சிந்துரா னனவி லாச! தேவநா யக!அ மோக!
அந்தமி லாத இன்ப அழகிய கணேச போற்றி!

கிம்புரித் தந்த! நால்வாய்க் கிளர்புகர் வதன! வீர!
நம்பினோர்க் கருள்செ யுங்கிரு பாகர! நாத கீத!
செம்பொன்மா மணிச்சி லம்பு கிண்கிணி சிறந்த பாத!
அம்பர வுருவ! மிக்க அழகிய கணேச போற்றி!

பாரத மேரு வென்னும் பருப்பத ஏட்டிற் கொம்பே
கூரெழுத் தாணியாக்கொண் டெழுதிய குழக! போரின்
நேருறுங் கசான னத்து நிசிசரன் தனையட் டியார்க்கும்
ஆரருள் புரிந்து காத்த அழகிய கணேச போற்றி!

சந்திரன் சாப நீசத் துவஞ்சதுர்த் தியில்வைத் தாண்ட
மந்திர வடிவ! காக வுருவமாய் மருவி மிக்க
செந்தமிழ் முனிக்க மண்ட லத்துநீர் சிந்திப் பொன்னி
அந்தமில் நதிய மைத்த அழகிய கணேச போற்றி!

தகவொடு கவுரி தன்மேற் தரித்தசந் தனந்தி ரட்டு
மகவுரு வான தன்சீர் வடிவினை யழித்த முக்கட்
பகவனுக் கிணையா முக்கண் படைத்தேங் காயு டைப்போர்க்கு
அகமகிழ்ந் துதவும் இன்ப அழகிய கணேச போற்றி!

இருங்கடம் பணியுந் தம்பி எழில்மயில் மீதி லேறிப்
பெருந்திருக் கயிலை சுற்றி வருமுனம் பிதாவைச் சுற்றித்
திருந்துள மகிழ்ச்சி கூரச் செய்தவர் திருக்கை யீந்த
அருங்கனி வாங்கி நூங்கும் அழகிய கணேச போற்றி!

முப்புரம் எரிக்கு ஞான்றும் உன்றனை நினையா தங்கு
மெய்ப்பொடுஞ் செய்த தேரை விழவொடித் தளவி லாத
துய்ப்பொடு பூசை கொண்டு சுகித்தபின் அதற்கு வெற்றி
அப்பொழு தளித்து நின்ற அழகிய கணேச போற்றி!

செக்கர்மே னியனே! மிக்க சித்திமுத் திகட்கு வித்தாம்
விக்கின விநாய காய நமவென விளம்பிப் பூசித்து
எக்கணுள் ளோரும் ஏன்ற மாத்திரம் ஏத்து வாரேல்
அக்கணம் முன்னின் றாளும் அழகிய கணேச போற்றி!

(23. தேவர்கள் கணபதி பூசை செய்த
அத்தியாயம், பா. 16-25)

2. மாசிலாமணி ஈசர் துதி

கங்காத ரா!காள கண்டா!திரி யம்பகா! கால காலா!
துங்காபு ராந்தகா! தண்துறைசை நாயகா! சுயம்ப்ர காசா!
சங்கார காரணா ! சதாசிவா! சுராதிபா! சயில மாது
பங்கா!து ரந்தரா! சங்கரா! சுந்தரா! பரம நாதா!

(7. மூர்த்திவிசேடம் உரைத்த அத்தியாயம், பா. 13)

சந்திர சேகர! அம்பிகை நாயக! சங்கர புங்கவவற்
கந்தர! இன்ப நிரந்தர! பூரண! காரண! வாரணநற்
சுந்தர! மங்கள கங்கை சுமந்தவ! தொண்டர்கள் கண்டுபுணர்
மந்திர ஞானப ரம்பரை யாதிப! வானவ! யாமபயம்.

உத்தம! அற்புத முத்தப ரப்பிரம! உற்பவ! மற்றகுண
வித்தக! வெட்டுரு வுற்றுள கர்த்த! விடைக்கொடி பற்றுகர
சத்துரு வானவ! சத்துரு வானவர் சத்திய ழித்திடுசூர்
முத்தலை வேல்வலன் வைத்திடு கொற்றவ! முக்கண! யாமபயம்.

எயிலை எரித்திட முறுவல் படைத்தவ! யமனையு தைத்தவ! பொற்
சயிலம் வளைத்தவ! மதனை யழித்தவ! சதுர்மறை சொற்றவ! நல்
மயிலை உகைப்பவ னுடன்மிகு மத்தள வயிறனை உய்த்தவ!
வெண்
கயிலை மலைத்திரு மனையுறு சிற்பரை கணவ! உனக்கபயம்.

(10. அம்பிகை பசுச்சாபம் ஏற்ற அத்தியாயம்,
பா. 354 - 356)

பொங்க ராவணி திண்புயா! போதிநீ ழலில்வாழ்
சங்க ரா!எமை ஆண்டருள் புரிந்திடு தகையோய்!

(21. சாத்தாவைப் பிறப்பித்துக் காவல் தொழில்
கொடுத்த அத்தியாயம், பா. 30)

சன்னதி யெதிர்போய் நின்ற தலைவனே போற்றி! போற்றி!
மின்னவிர் சடையாய் போற்றி! வேதநா யகனே போற்றி!
கன்னல்வில் மதனைக் காய்ந்த கண்ணுதல் நாதா போற்றி!
என்னையாள் இறைவ போற்றி! ஈசனே போற்றி! போற்றி!

உனைப்பிரிந் திருத்த லாற்றேன் உரிமைதந் தருள்வாய் போற்றி!
தினைப்பொழு தேனும் வேண்டேன் தேகத்தின் தன்மை போற்றி!
வினைப்பிணிப் பறவே உன்னை விரும்பினோர் தமக்கும் போற்றி!
மனத்தினுக் கதீத மாமென் மாசிலா மணியே போற்றி!

(25. கோவுருவநாயகி மாசிலாமணியைத் தரிசித்த
அத்தியாயம், பா, 18-19)

கீற்றிளம் பிறையொளி கிடந்த சென்னிமேல்
ஆற்றையுஞ் சூடிய அழகன் ஆதியான்
ஏற்றின்மேல் வரும்அணைத் தெழுந்த நாயகன்
கூற்றதை சேவடி குலாவிப் போற்றுவாம்!

பாலலோ சனன்செழும் பவள மேனியன்
ஆலகா லந்திகழ் அழகு கந்தரன்
ஏலவோ தியைஅணைத் தெழுந்த நாயகன்
கோலமா ரெழில்நலங் கும்பிட் டேத்துவாம்!

சுந்தர நாயகன் சுடர்கொள் முக்கணன்
கந்தனை யீன்றநற் கருணைக் குன்றனான்
இந்துவே ணியன்அணைத் தெழுந்த நாயகன்
பந்தம்நீக் கிடும்புகழ் பகர்ந்து வாழ்த்துவாம்!

திரிபுர மெரிசெய்த சிலையன் காமனை
ஒருகனல் விழியினால் உருவ ழித்தவன்
இருபதந் தரும்அணைத் தெழுந்த நாயகன்
அருள்நினைந் துருகிநல் லன்பு செய்குவாம்!

ஆரண முடிமிசை அமர்ந்த சோதியான்
காரண னாயுல கீன்று காப்பவன்
ஏரணைந் திடஅணைத் திருந்த நாயகன்
பூரண வடிவினைப் புகழ்ந்தி றைஞ்சுவாம்!

(27. தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்ற
அத்தியாயம், பா. 52-56)

புண்ணியனே தென்துறைசைப் பொருளே போற்றி!
புரமெரியப் புன்னகைசெய் புனிதா போற்றி!
எண்ணுமுயிர்க் குயிராகி அறிவாய் இன்பமாய்
எங்குமாய் நிறைந்துநின்ற இறைவா போற்றி!
கண்ணொருமூன் றுடையஅருட் கனியே போற்றி!
கருதுவார் இருளகற்றும் கதிரே போற்றி!
பண்ணமர்சொல் ஒப்பிலா முலையாள் மேவும்
பங்கனே போற்றி! பரா பரனே போற்றி!

புளகமுற உளமுருகக் கண்ணீர் வாரப்
போற்றும்அடி யாரிடத்திற் புணர்வாய் போற்றி!
எழில்மதியும் சுரநதியும் பாம்பும் அக்கும்
என்பும்அணிந் திலகியசெஞ் சடையாய் போற்றி!
களபமலிந் திறுமாந்து பனைத்து விம்மிக்
கதித்த ஒப்பி லாமுலையாள் கணவ போற்றி!
வளர்புகழ்சேர் ஆவடுதண் துறையி லென்றும்
மருவியருள் மாசிலா மணியே போற்றி!

வேதநெறி தழைத்தோங்க அருள்வாய் போற்றி!
மிகுசைவத் துறைவிளங்க அருள்வாய் போற்றி!
நீதிமிகுந் தருமநெறி அருள்வாய் போற்றி!
நின்னடிமைத் திறம்விளங்க நினைவாய் போற்றி!
ஏதமற நாயேனை உனக்கெந் நாளும்
இடபவா கனமாய்க்கொண் டருள்வாய் போற்றி!
மாதவர்கள் போற்றுதிருத் துறைசை மேவி
வளருமருள் மாசிலா மணியே போற்றி!

(28. வேதபுத்திரனாகிய தரும தேவதைக்கு இடபவாகனப் பேறு அருளிய அத்தியாயம், பா. 13 - 15)

பிணைத்த மலர்த் தொங்கலிடும் அன்பருளம்
பிரியாத பிரானே! முன்னாள்
இணைத்தசரா சரங்களெல்லாம் ஈன்றுகாத்
தருள்புரியும் இறைவா! மிக்க
பணைத்தெழும்பூண் அதுலதன உமைபாகா!
தென்துறைசைப் பரனே! மானை
அணைத்தசந்திர சேகரஉன் பரிபுரத்தாள்
கமலமலர் அகத்துள் வைப்பாம்!

மருளகற்றி இருள்புரக்கும் கருணையினாற்
தேவியொடும் மைந்த ரோடும்
தெருளுமருட் பூதகணச் செல்வரொடும்
சந்திரசே கரரு பங்கொண்டு
இருளகல்வித் தெமையாள் மாசிலா
மணிவடிவி லிருந்திங் கெய்தி
அருள்மிகுத்த தேரழுந்தூர் வந்திருந்தோன்
இருமலர்த்தாள் அகத்துள் வைப்பாம்!

(29. சோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்த அத்தியாயம், பா. 36, 37)

ஆதி யந்தமி லாத சுந்தர அங்க ணாபரி பூரணா!
நாத விந்துவை யுங்க டந்தருள் நாத மெய்க்கிரு பாகரா!
வேத மந்திர ரூப தந்திர வீர பூத கணாதிபா!
மாது பங்குறை போதி யம்பல மாசி லாமணி நாயகா!

நாக பூடண நாக கங்கண நாத கீத மனோகரா!
வேக மன்மத கோடி ரூபநல் லிடப வாகன கேதனா!
சாக ரந்தரு நீல நஞ்சு தழைத்தி ருண்டொளிர் கந்தரா!
வாகு கொண்ட பினாக மேந்துகை மாசி லாமணி நாயகா!

முப்பு ரத்தை யெரிப்ப வோர்குறு மூரல் கொண்ட புராந்தகா!
வெப்பெ ழுந்து கரிந்து மன்மதன் வேக நோக்கும் விலோசனா!
செப்பு நான்மறை யுட்பொ ருட்சன காதி பர்க்கருள் தேசிகா!
மைப்பு யற்குழல் ஒப்பி லாள்புணர் மாசி லாமணி நாயகா!

கயிலை மாமலை மேவு காவல கங்கை நாயக மங்களா!
சயில மாமரு காபு லிக்குயர் சதுர்ம றைப்பொருள் தந்தவா!
அயில்கொள் நற்திரி சூல மேந்துகை யைமு கப்பர மேசுரா!
மயில்கெ டுத்தரு ளுயிர்பு ரக்கும்நன் மாசி லாமணி நாயகா!

ஐங்க ரக்கர டக்க டாம்பொழி யழகு குஞ்சரம் ஈன்றவா!
செங்கை யுற்றிடு முகிரி னாலயன் சிரம றுத்த செகாதிபா!
துங்க வுக்கிர நீள்வ ரிப்புலின் தோலு டுத்திய உத்தமா!
மங்கை யுற்றிடு பங்க நற்சிவ மாசி லாமணி நாயகா!

சோமு காசுரன் தனைய டர்ந்தருட் சுருதி தந்திடு தூயவா!
காம தேனுவி னுருவ கற்றிநற் கவுரி யைப்புணர் காதலா!
தேம லர்க்கர மாத வத்தினர் சித்த முற்றிடு பூசிதா!
மாம ழுப்பொறி மான்பி டித்தகை மாசி லாமணி நாயகா!

சந்திர சேகர கங்கை சூடு சடாத ராகரு ணாகரா!
சிந்து ரத்துரி கொண்ட போர்வைகொள் தேவ தேவம கேசுரா!
கந்த னைத்தரு பால லோசன கால காலதிரி யம்பகா!
மந்த ரப்புயம் நான்கு கொண்டநல் மாசி லாமணி நாயகா!

அரியி டந்துகண் மலர்பு னைந்தடி பணிய ஆழி கொடுத்தவா!
விரத மங்கையர் துகில்ச ரிந்திட விரக மீந்த திகம்பரா!
பொருவில் மாமுனி மகவி னுக்கழி யாத மெய்யருள் புண்ணியா!
மருவும் ஆவடு துறைசை வாழ்திரு மாசிலாமணி நாயகா!

(34. போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்த
அத்தியாயம், பா. 41 - 48)

நிரந்தநாற் சுருதி தேரும் நின்மல பகவ போற்றி!
வரந்தர விருந்து வாழும் மாசிலா மணியே போற்றி!
பொருந்தலர் புரமூன் றட்ட புண்ணியக் கடவுள் போற்றி!
திருந்துதென் துறைசை வாழுந் திரவியத் தியாக போற்றி!

காவிவேல் விழிக ளொப்பி லாமுலை கணவ போற்றி!
தாவில்செங் கழுநீர் மாலை தரித்தருள் புயத்தாய் போற்றி!
தாவுகட் பொழில்செவ் வந்தித் தோடணி குழையாய் போற்றி!
ஆவடு துறையுள் மேவும் அழகுபொற் தியாக போற்றி!

உகம்பல புரப்பாய் போற்றி! உயிர்க்குயி ரானாய் போற்றி!
நகங்கொடு மலரோன் சென்னி நறுக்கிய நாத போற்றி!
மகம்புரி தக்கன் மீதோர் மறிமுகம் படைத்தாய் போற்றி!
சகம்புகழ் துறைசை ஊரிற் சார்செம்பொற் தியாக போற்றி!

துளங்குவெண் மதியும் கொன்றைத் தொடையலும்
அணிந்தாய் போற்றி!
களங்கமி லறிவோர் நெஞ்சங் கலந்திடு தலைவ போற்றி!
இளங்கொடி உமையாட் கென்றும் இன்பனே போற்றி! நாளும்
விளங்குதென் துறைசை வீதி விடங்கனே போற்றி! போற்றி!

போதகம் புரிவாய் போற்றி! போதியம் பலத்தாய் போற்றி!
மாதவர்க் கரசே போற்றி! மாசிலா மணியே போற்றி!
கீதமோ டுறையும் நாகக் கிண்கிணிச் சரணா போற்றி!
மேதகு துறைசை வீதி விடங்கனே போற்றி! போற்றி!

(37. முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளைவரத்துக்கு
வந்த அத்தியாயம், பா. 41 - 45)

சச்சிதா னந்த ரூப சதாசிவ முதலே போற்றி!
பிச்சனேன் தனையாட் கொண்டு பிழைபொறுத் தாண்டாய்
போற்றி!
செச்சைமா மலர்ப்பொன் மேனிச் சிவஞான முடையாய் போற்றி!
நச்சர வணிபொற் தியாக நாதனே போற்றி! போற்றி!

செய்யனே போற்றி! செல்வத் திருவாரூர் அரசே போற்றி!
அய்யனே போற்றி! தென்ஆ வடுதுறை அமுதே போற்றி!
துய்யனே போற்றி! ஞானச் சுகமளித் தென்னை யாண்ட
மெய்யனே போற்றி! தியாக விடங்கனே போற்றி! போற்றி!

(39. முசுகுந்த சக்கரவர்த்தி சிவார்ச்சனை செய்து
முத்திபெற்ற அத்தியாயம், பா. 13, 17)

அங்கண போற்றி! என்னை ஆண்டருள் அமல போற்றி!
செங்கணா போற்றி! வேதச் சிரப்பரம் பொருளே போற்றி!
கங்கண நாகச் செங்கைக் காதணி குழையாய் போற்றி!
மங்கையோர் பங்க போற்றி! மாசிலா மணியே போற்றி!

(50. அகத்தியருக்கு வெண்ணோய் அகற்றி
அருள்புரிந்த அத்தியாயம், பா. 12)

எனையும் பொருளாய்த் தடுத்தாட்கொண்ட
டின்ப மருள்செய் எழில்மலையே!
பனிவெண் திங்கட் கொழுந்துதவழ்
ப்டர்செஞ் சடைக்கா டுடையானே!
புனிதம் பெருகும் அதுலதனப்
பூவை கணவா! ஏனமுமோர்
அனமுங் காணாக் குருமணியே!
அய்யா! யானுன் அடைக்கலமே!

(57. திருமூலதேவரைத் தடுத்தாட் கொண்ட
அத்தியாயம், பா. 36)

தேவர்கள் தேவேபோற்றி! சிவபரம் பொருளே போற்றி!
மாவடு வகிர்கண் ஒப்பி லாமுலை மணாளா போற்றி!
பாவினுக் காயி ரம்பொன் பரிசருள் தியாகா போற்றி!
ஆவடு துறையுள் மேவும் அமலனே போற்றி! போற்றி!

(68. மிதுலேசன் முனிவருடன் வந்து அர்ச்சித்து முத்தி
பெற்ற அத்தியாயம், பா. 21)

3. ஒப்பிலா லையம்மன் துதி

தேவ தேவன் திருவருள் நாயகி! காவ லாயுல காள்கரு ணாகரி!
தாவில் சுந்தரி! சங்கரி! சாம்பவி! பாவ கோபி! பருப்பத வர்த்தனி!
சுத்த ஞான சுகோதய பூரணி! பத்த ரன்பிற் புதிந்தசிந் தாமணி!
முத்த மூரல் முகிழ்முலை முக்கணி!

(11. தேவி காசியில் பசு உரு அடைந்த
அத்தியாயம், பா. 34, 35)

கயிலையில் சிவன் அம்பிகையைப் பிரிந்திருந்தபொழுது அவளை நினைத்து உருகிப் பாடுகின்றார்.

பசியகோ மளமே! சுந்தர மயிலே!
பாகம்விட் டகன்றிடாக் குயிலே!
வசிகர முதலே! எமதுயிர்த் துணையே!
வாழ்வெமக் காகிய மருந்தே!
கசிவுகொண் டமுதங் கான்றிடு மதியே!
கயிலையி லிருந்தொளிர் விளக்கே!
உசிதமெய் யுமையே! எம்மைவிட்
டகன்றெங் குற்றனை யோ

(13. கயிலையில் சிவன் அம்பிகையை நினைந்து
மோகித்திருந்த அத்தியாயம், பா. 2)

போத நாயகி! புராதன நாயகி! புகழ்சேர்
சோதி நாயகி! சுந்தர நாயகி! தொகுமான்
சாதி நாயகி! சதுர்மறை நாயகி! தகைசேர்
ஆதி நாயகி! அஞ்சினேம் யாங்கள்உன் அபயம்!

(17. தேவர்கள் கயிலை அடைந்த அத்தியாயம், பா.19)

அப்பணி சடையினான் அணைப்ப வோர்புறம்
துப்பிதழ் மானெனத் துலங்கு வாள்தனை
இப்பவ மறஎமக் கிரங்கி ஆண்டருள்
ஒப்பிலா முலைபதம் உவந்து போற்றுவாம்!

மாவடு வகிர்விழி மயிலை ஐங்கரக்
கோவினை அருளிய குயிலைக் கோதிலாச்
சேவினி லான்அணைத் திருக்குஞ் செல்வியை
ஆவடு துறைசைவாழ் அனையைப் போற்றுவாம்!

பகிர்நில வணிசடைப் பரமன் பங்கினிற்
துகிர்கொள்வாய்க் கிளியெனத் தோன்று மங்கையை
அகிலகா ரணியைஅம் பிகையை அன்னையை
நிகரிலாத் தனத்தியை நினைந்து வாழ்த்துவாம்!

மறைபுகழ் மரகத மணியை மாதவர்க்கு
இறைவியை இமையம்ஈன் றெடுத்த கன்னியைப்
பிறையணி அரனிடம் பெறும்பி ராட்டியைத்
துறைசைவாழ் இறைவியைத் தொழுதி றைஞ்சுவாம்!

கதிமுத லாங்கயற் கருணைக் கண்ணியைப்
பதிமுத லோடுறும் பரையைப் பைந்தருப்
பொதியுரு வெழிலைஅம் புவியிற் காட்டிய
அதுலகு சாம்பிகை அடியை ஏத்துவாம்!

(27. தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்ற
அத்தியாயம், பா. 57 - 61)

தெரிவரிய பரையாகி விமலை யாகிச்
செப்பரிய இன்பவருட் செல்வி யாகி
விரியுமுயிர்த் தனுகரண புவன போக
மேவவருட் காரணியாய் விண்ணோர் போற்ற
வருமிமைய மடமகளாய்த் தேவி யாகி
வலியஎமைக் கருணையினால் வந்தாட் கொண்டெம்
உரியமன் மொருகணமும் பிரிய மாட்டா
ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம்.

மலமகலத் தனுவாதி யுடனே யொன்றாய்
    மருவுமிரு வினைப்பயனும் வழாதுகூட்டி
நிலவுசரி யாதியொரு நான்குந் தானாய்
    நின்றசெய்வித் துளத்தைவெளிப் படுத்திமிக்க
பலன்மருவு பதமூன்று மருளி யொத்த
    பரிபாகங் கண்டுசிவ பாதம் நல்கி
உலகவுயிர்க் குயிராயைந் தொழில்செய் தாளும்
    ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம்.

வாக்குமனா தீதகோ சரமாய்ச் சத்தாய்
    மனோலயத்தி லளவிலின்ப மயமாய்த் தோன்றிப்
போக்குவர வற்றுயிர்தா ணாகி நிற்கும்
    பூரணத்தின் திருநடங்கட் புலனாற் கண்டு
தேக்கிமகப் பிணிக்குமருந் தன்னை யுண்டு
    திரள்முலைப்பால் வழியூட்டித் தீர்க்கு மாபோல்
ஊக்கமிகு மெங்கள்மல நோய்தீர்த் தாள
    ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம்.

(34. போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்த அத்தியாயம், பா, 7-9)

அஞ்ச மே!அமு தே!அழ கே!அருட்
புஞ்ச மே!வால சுந்தரப் பூவையே!
வஞ்சி யே!ஒப்பி லாமுலை மங்கையே!
தஞ்சம் உன்பொற் சரணபங் கேருகம்!

(36. ஒப்பிலாமுலையம்மன் ஆடிப்பூரத் திருவிழாக் கொண்டருளிய அத்தியாயம், பா. 32)

அணிநலன்கள்

புராண இலக்கியக் கருத்து நயங்களுடன் பல அணிநலன் களும் கொண்டதாக இந்நூலை ஆசிரியர் அமைத்துள்ளார். காட்டாக, உவமை நயம் மிக்க பாடலடிகள் சில வருமாறு:

"எள்ளுறு மெண்ணெய்போ லெங்கும்
  நிறைந்திடும் இயல்பை யுணர்ந்திலையோ" (பா. 349)

"எழுந்தன தானை வெள்ளம் எழுகட லெய்து மாபோல்
எழுந்தன குதிரைப் பந்தி இருந்திரை தாவு மாபோல்
எழுந்தன கரிகள் மேகம் எங்கணும் பொருந்து மாபோல்
எழுந்தன கொடிஞ்சித் திண்சேர் எண்ணிலா மலைகள் போல"
(பா. 462)

"பொன்னணி சுமந்து வீங்கும் பொம்மல்மென் முலையி னார்கள்
மன்னுதென் திசையை நோக்கி வந்தனர் மயில்கள் போல"
(பா. 546)

"மற்றொரு கயிலை முன்பு வந்துநின் றதுபோல் நின்ற
வெற்றிவெள் விடை" (பா. 609)

"அஞ்சியென் செய்வோம் என்றே அரவிந்த இலைநீர் போலத்
தஞ்செயல் அழிந்து மிக்க தலைதடு மாற்ற மெய்தி" (பா. 659)

"எண்ணில் சிங்க மானவை வாரணத் திரளினிற்
சென்றடு மாபோலப் பங்கியைப் பிடித் தறுத்தனர்" (668)

"நேரின் மைக்கரி யுரியகற் றியஉருத் திரன்போற்
காரி ருட்பிழம் பகற்றியே எழுந்தனன் கதிரோன்" (773)

"கம்பை யாற்றின்மா வினிற்தனக் குவட் டொடுங் கட்டி
அன்பி னோடணைத் திடும்பொழு தங்கத்தின் மறுப்போல்
எம்பி ராட்டிகை வளைத்தழும் பேற்றவிச் சையினுஞ்
செம்பொன் நூபுரக் காற்தழும் மிருத்தினன் சிரத்தில்" (776)

"உவாமதிநீர்க் கடலிரைந்து வருவதுபோ
லுவந்தெதிர்வந்து"
(848)

"பரங்கடலைப் பரங்கடல்முன் பணிவதுபோற்
பணிந்தெழுந்தான்" (849)

"செங்கனல்போற் திருமேனி திகழ்ந்தொளிருந் திருவடிவும்"
(851)

"பாலைவிடாச் சுவைபோலப் பராபரையோ டொன்றாகும்
பான்மை காட்டி" (பா.890)

என இவ்வாறு அமையும் அணிநலமிக்க பாடல்களை இந்நூல் முழுமையும் காணலாம்.

நம்பிக்கைகள்

மண்ணுலக மனிதர்கள் கொண்டுள்ள சில நம்பிக்கைகளையும் இந்நூலில் அங்கங்கே சுட்டக் காணலாம். கோவுருவ நாயகி இத்தலத்தில் வந்து மாசிலாமணியீசரைத் தரிசித்த அத்தியாயத்தில், அம்பிக்கைக்கு இடதுகண் துடித்தல், பாதம் இடறுதல் ஆகிய நல் நிமித்தங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"தென்முக மாக நோக்கித் திருவடி வைக்கும் போது
தன்மண வாளன் வெள்ளிப் பொருப்பினிற் சாற்றும் வண்ணம்
நன்மலர் பொருமி டக்கண் துடித்துதன் னெறிமேல் வைக்கும்
நின்மலர்ப் பாதஞ் சற்றே இடறிடும் நிமித்தங் கண்டாள்"
(872)

"அண்ணலன் றுரைக்கும் இன்பக் குறியின்றிங் கடுத்த தென்னா
உண்ணிறை மகிழ்ச்சி யோடும் குறிபெறும் உண்மை யோர்ந்தாள்
தண்ணுகால் இடறுந் தன்மை நமக்கிவ் ஆனுடல்விட் டேகும்
கண்ணிடந்த துடித்த தாலே கணவனை அணைவோ மென்று"
(873)

அகத்தினுள் நினைந்து இம்முத்தித் தலத்தில் அம்பிகை வந்தாள் என்னும் பகுதிகளில் இவற்றைக் காணலாம்.

குறள் கருத்துக்கள்

இந்நூலில் ஆசிரியர் குறள் கருத்துக்கள் பலவற்றை அங்கங்கே அமைத்துள்ளார். காட்டாக, தேவர்கள் கணபதி பூசை செய்த அத்தியாயத்தில் ஒரு பகுதியைக் காணலாம்.

சோமுகாசுரன் வேதங்களைக் கொண்டு போய்க் கடலில் ஒளித்து வைத்த நாள் முதலாக, பூமியில் தருமமும் வேள்வியும் தானமும் செய்பவர்கள் இல்லாமையாலும், மேகங்கள் வற்றி அசுரர்களுக்குப் பயந்து விண்ணை அடையாமல் ஒளித்துக் கொண்டமையாலும் மிகுந்த பஞ்சம் தோன்றியது. அப்பொழுது, தேவர்கள் ஒன்றுகூடி விநாயகப் பெருமானை வணங்கி பூசை செய்ய முடிவு செய்தனர்.

"விசும்பின் நீர்த்துளி வீழி னல்லது மேதி னித்தல மீதுறும்
பசும்புன் முற்தலை காண்ப திங்கரி தென்னும் பான்மை
பதிந்துளங்
கசிந்து நற்கட வுளர்கள் கூடியோ சனைகள் செய்துகா
சினியின்மீது
இசைந்த நற்பசு வினங்கள் துய்ப்பவும்" (780)

என்னும் இப்பாடலில்,

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது" (குறள் - 16)

என்னும் திருக்குறட் கருத்தை அப்படியே எடுத்தாண்டிருக்கக் காணலாம்.

இவ்வாறே இயற்கை வருணனைகள், கற்பனைகள் பலவற்றையும் சந்த இனிமையோடு பாடுவதில் இந்நூலாசிரியர் சிறப்பிடம் பெறுகின்றார். மேலும், பிறதலங்கள், மலைகள், ஆறுகள், மலர்கள், விலங்குகள், ஆடை ஆபரணங்கள், பழக்க வழக்கங்கள், பல்வகை விழாக் கோலங்கள் போன்ற பலவற்றையும் அங்கங்கே பாடல்களில் தொகுத்துரைப்பதில் இவர்தம் புலமை நன்கு புலனாகின்றது. அரிய சொல்லாட்சி களும், செய்யுள் நடைக்கேயுரிய புனைவுத் திறனும் கைவரப் பெற்ற பெரும் புலவராக இந்நூலாசிரியர் சாத்திரம் சாமிநாத முனிவர் விளங்குகிறார். இவை அனைத்தையும் இந்நூலை முழுமையாகக் கற்பார் நன்கு உணர்வர்.

"ஞானநா யகன்தாள் வாழ்க! நலந்தரு பொற்றாள் வாழ்க!
ஊனமில் துறைசை வாழ்க! ஒப்பிலா முலைத்தாய் வாழ்க!
தேனுறை மலர்தூஉஞ் செம்பொற் சிங்கமா பீடம் வாழ்க!
வானவர் முதலோர் வாழ்க! வாழ்கசீர் அடியா ரெல்லாம்!"

(பா.2560)

வே.இரா. மாதவன்

துறைசைப் புராணம்
என்னும்
திருவாவடுதுறைப் புராணம்

2. ஆவடுதுறைசைக் காண்டம்

3. தியாகேசுரபுரக் காண்டம்

○○○

துறைசைப் புராணம்
என்னும்
திருவாவடுதுறைப் புராணம்

உ
சிவமயம்

துறைசைப் புராணம்

பொதுப் பாயிரம்

விநாயகர் காப்பு

1. காவளிக்குத் தேன்கொடுத்து வளர்த்திடுதென்
 தமிழ்ப்பொதியக் கவின்வெற் பீன்ற
மாவளிக்கன் றலவுதுறை சைப்புரா
 ணந்தமிழால் வகுப்ப நாளும்
பூவளிக்கும் இருவருக்கும் காண்பரிதாய்
 நீண்டுகனற் பொருப்பாய் நின்ற
கோவளிக்கு மன்முனருள் குஞ்சரத்தாள்
 தொழுதுவரம் கொள்வாம் அன்றே. 1

2. சிந்தைநினை உறுதியும்சொற் றமிழ்ச்சுவையும்,
 பொருட்சுவையும், தெளிவும், பாசப்
பந்தமறுத் திடும்போதப் பரிவுமளித்
 துடனிகழ்வென் பாலிற் தோன்றச்
சுந்தரக்கன் றுருவாகிக் கயிலைவிட்டுத்
 தாய்ப்பசுவின் துணையாய்க் கூட
வந்தருள்மும் மதத்துதிக்கை வாரணத்
 திருமலர்த்தாள் வழுத்தல் செய்வாம் 2

வாழ்த்து

3. வையம் வாழ்க! விண் மாரிபெய்க! நல்
 மன்னன் ஓங்க! மறைக்குலத்து
ஐயர் செய்மகம் நீள்க! ஐந்துறுப்பு
 ஆன்இ னங்கள் தழைப்ப! நீள்

குறிப்பு:

1. காவளி - சோலை வண்டு, பொதியம் - மலையமலை. மாவளிக்கன்று - அழகிய கருவண்டு போன்ற கண்களைக் கொண்ட பார்வதி. இருவர் - நான்முகன், திருமால், கனற்பொருப்பு - தீமலை, திருவண்ணாமலை. கோவளிக்குமன் - பசுபதி. குஞ்சரம் - விநாயகன். சுந்தரக்கன்று - விநாயகன். வாரணம் - விநாயகன்.

3. வையம் - உலகம். மாரி - மழை. மகம் - வேள்வி. ஆன் இனங்கள் - பசுக்கள் கூட்டம்.

பொய்யில் ஆகம வேதநன்னெறி
பொலிக! மேன்மைவெண் ணீறிடும்
சைவம் நீடுக! நீடுக! கதி
தங்கும் அஞ்செழுத் துண்மையே. 3

பொதுப் பாயிரம் (சுருக்கம்)

துறைசைப் புராணம் என்னும் இப்பெருநூலின் முதற்கண் பொதுப்பாயிரம் அமைக்கின்றார் இந்நூலாசிரியர். முதலில் விநாயகர் காப்பாக இரண்டு பாடல்களையும், வாழ்த்தாக ஒரு பாடலையும் அளிக்கின்றார்.

உமையம்மையின் பெருந்தவச் சிறப்பினை விளக்கும் திருவாவடுதுறை என்னும் துறைசையின் புராணத்தைத் தமிழில் எடுத்துரைக்க முயலும் முன்னர், நான்முகனுக்கும் திருமாலுக்கும் காண்பதற்கரிதாய் தீமலையாய் நின்ற பசுபதி யானவர் முன்னதாக அளித்தருளிய விநாயகரை முதற்கண் வணங்கி இப்பணி சிறக்க வரம் பெறுவோமாக.

இறையருளை என்றும் சிந்தித்திருக்கும் மனத்திட்பமும், செந்தமிழ்ச் சுவையும், பொருள் நலமும், தெளிவும், பந்த பாசங்களை நீக்கத்தக்க நல்லுணர்வும் நம்மிடையே உண்டாக வேண்டுமென்பதற்காக, இமய மலையிலிருந்து தம் தாயாகிய உமையம்மை இங்குப் பசுவாக அவதரித்த போதும் உடன் கன்றுருவாகி வந்திருந்து அருளும் மும்மதத் துதிக்கையானாகிய விநாயகரின் திருவடிகளைத் துதித்துப் போற்றுவோமாக.

இவ்வுலகம் நன்றாக வாழ வேண்டும்! எப்பொழுதும் பருவந் தவறாமல் மழை பெய்தல் வேண்டும்! நல்லாட்சி புரியும் அரசர் நலம் ஓங்குதல் வேண்டும்! வேதங்களைப் பயின்ற அந்தணர் நடத்தும் வேள்விகள் தொடர்ந்து நடைபெற வேண்டும்! மன்னுயிர்கள் வாழ அடிப்படைச் செல்வங்களை நல்கும் பசுக்கூட்டங்கள் பெருக வேண்டும்! வேதாகம நெறிகள் பல்கிப் பெருக வேண்டும்! திருநீற்றால் அனைத்துப் பெருமைகளையும் விளக்கும் சைவசமயம் பஞ்சாட்சரப் பெருமை தரும் சிறப்பால் மேன்மேலும் நீடூழி வாழ வேண்டும்! என இவ்வாறு தம் நல்வாழ்த்துகளையும் முன்னதாகக் கூறிப் பொதுப் பாயிரத்தை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

சிறப்புப் பாயிரம்

கடவுள் வாழ்த்து

நடராசப் பெருமான்

4. நீருலவு செஞ்சடைபின் தாழ,முய
லகன்மீது நின்று மன்றில்
தாருலவு குழலுமையாள் கண்களிப்ப
அன்பர்பவத் தகைதீர்ந் துய்யக்
காருலவு மிடறிலங்கக் கைவீசிக்
குஞ்சிதத்தாள் காட்டி ஆடும்
சீருலவும் ஆவடுதண் துறைமருவு
பரம்பொருளைச் சிந்தை செய்வோம். 1

மாசிலா மணியீசர்

5. ஆசிலாத் தென்துறைசை அரசடியின்
முளைத்தெழுந்த அமுதை, ஞானத்
தேசுலா வுங்கருணைச் சிவக்கொழுந்தைப்
பரபோகத் திரளை, யார்க்கும்
பேசொணாச் சுகந்தருமுக் கட்கனியை
அன்பரின்பப் பெருக்கிற் தோன்றும்
மாசிலா மணியினைக்கண் மணிகுளிரக்
கண்டுதினம் வணங்கி வாழ்வாம் 2

ஒப்பிலா முலையாள்

6. கற்புமிகுங் கருணையினாற் கவுணியர்க்குப்
பால்சுரந்து கயிலை வெற்பைச்
சுப்பிரமாக் கிப்பெருமே ருவைவளைத்துத்
தலைவர்பொருஞ் சூதை வென்று

---

4. நீர் - புனல், கங்கை. மன்று - கனகசபை. தார் - பூமாலை. அன்பர் - அடியவர். பவத்தகை - பாவங்களால் ஏற்பட்ட தளர்வு. கார் - கருமை, மிடறு - கழுத்து. குஞ்சிதத்தாள் காட்டி - ஒரு கால் தூக்கி நின்று. சீர் - புகழ்.

5. ஆசுஇலா - குற்றம் இல்லாத. ஞானத்தேசு - ஞான மகத்துவம். பரபோகம் - பேரின்பம். கண்மணி - கண்ணிற் கருமணி.

6. கவுணியர் - திருஞானசம்பந்தர். கயிலை வெற்பு - வெள்ளிமலை. சுப்பிரமாக்கி - ஒளிபெறச் செய்து. பெருமேரு - பொன்மலை. தலைவர் - சிவபெருமான். பொருதல் - போர் செய்தல். பெருவெளி - ஏகவெளி - மறைவிலா வெளி. வடு - தழும்பு. உபயத்தாள் - திருமலரடி யிரண்டு. அபயம் - அடைக்கலம்.

செப்புநான் மறைக்கடங்காப் பெருவெளியை
வடுப்படுத்தித் திகழ்ந்து வாழும்
ஒப்பிலா முலைஉபயத் தாட்கபயங்
கூறிமகிழ்ந் துளத்துள் வைப்பாம் 3

அணைத்திருந்த நாயகர்

7. பிணைத்தமலர்க் கொன்றையணி பெருமானை
அமரர்தொழும் பிரானை, உள்ளக்
கணைத்திறந்து மெய்க்காட்சி காட்டிஅன்பர்க்
கருள்புரிமாக் கருணை யானைப்
பணைத்ததனக் குவடேந்தும் இமயமலைப்
பசுங்கொடியைப் பதுமக் கையால்
அணைத்திருந்த நாயகனைத் தொழுதுபுகழ்ந்து
இருதுணைத்தாள் அகத்துள் வைப்பாம். 4

திரவியப்பொற் தியாகேசர்

8. அரவணைமேற் திருமறுமார் பன்கிடக்கும்
பயோததியை அரும்புற் பாதன்
தருமகவின் பசிக்களித்த கருணையனைத்
திருஞான சம்பந் தர்க்கிங்கு
உரிமையுடன் பாமொழிகேட்டு உலவாப்பொற்
கிழியினில்ஆ யிரம்பொன் உய்த்த
திரவியப்பொற் தியாகனைத்தென் துறைசைநக
ராதிபனைத் தெரிசித் துய்வாம். 5

அதுலதன நாயகி

9. விதிபெறுபா மகள்முதலோர் யாழொடுநல்
மிடறிசையும் மிகுந்த பண்கொண்டு
அதிரசமா கப்பாடும் இசைக்கசையா
ஈசர்சிரம் அமுத மூறும்

---

7. பெருமான், பிரான் - சிவபெருமான். மெய்க்காட்சி - மெய்ஞ்ஞானம் - உண்மை ஞானம். தனக்குவடு - மலை போன்ற நகில். பசுங்கொடி - உமையம்மை. பதுமம் - தாமரை. நாயகன் - சிவபெருமான்.

8. அரவணை - பாம்பணை. திருமறுமார்பன் - திருமால். பயோததி - பாற்கடல். அரும்புற்பாதன் - வியாக்கிரபாதர்.

9. பாமகள் - சரசுவதி. கம்பிதம் - அசைவு. மருங்கு - இடை, பக்கம். அதுலதனநாயகி - ஒப்பிலாமுலையாள். அதுலம் - உவமையின்மை.

மதுரமொழி யாற்பலகாற் கம்பிதஞ்செய்
திடப்பேசி மருங்கு நிற்கும்
அதுலதன நாயகிதன் இணையடிப்பூங்
கமலமலர்க்கு அன்பு செய்வாம். 6

சந்திரசேகரர்

10. மந்திரமா முனிவர்களும் அமரர்களும்
மெய்ஞ்ஞான மதியுள் ளோரும்
தந்திரமாய்ப் பன்மலர்தூஉய் வழிபடுபூங்
கமலமலர்த் தாளி னானைச்,
சுந்தரமால் விடையேறுஞ் சோதியைஆ
தியை,அமரர் துயரந் தீர்த்த
கந்தரனைச், சந்திரசே கரனைஇருள்
மலம்அகலக் கருத்துள் வைப்பாம். 7

தட்சிணாமூர்த்தி

11. செம்மலர்நோன் றாட்சேர லொட்டாமல்
உயிரையெல்லாந் தியக்கஞ் செய்யும்
அம்மலங்க ழீஇமிகுந்த அன்பரொடு
மருவிநீ ரடையு முத்தி
இம்முறையா மௌனநால்வர்க்கு இருவிரற்சின்
முத்திரையால் இயம்பி ஆல்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண்அன லிறைத்திருந்த
குருபரனை வணக்கம் செய்வாம். 8

சீவிலி நாயகர்

12. ஆவலினால் நெய்நுகரப் போய்நுனிமுக்
கால்விளக்கை அலரத் தூண்டு
மாவெலிக்கிவ் வுலகமெலாம் புரக்கும்அர்
சாட்சிதந்த வள்ளல் வேதத்
தூவிடைமே லிவர்ந்தனத்திற் துணைவியொடும்
போந்தடியார் தொழஉ லாவும்
சீவிலிநா யகன்இருபொற் திருவடித்தா
மரைஎமது சென்னி சேர்ப்பாம் 9

---

10. சந்திரசேகரன் - சந்திரனைச் சூடிய சிவபெருமான்.

11. தியக்கம் - கலக்கம். மலம் - மும்மலம். சின்முத்திரை - ஞானமுத்திரை. ஆல் - கல்லால மரம். நுதற்கண் - நெற்றிக்கண். குருபரன் - பரமகுரு - தட்சிணாமூர்த்தியாகிய சிவபெருமான். துணைவி - உமையம்மை.

12. வள்ளல் - சிவபெருமான்.

பூர நாயகி

13. காரிலகு கூந்தல்மலர்ப் பின்னலும்சுட்
டியும்முடியும் களமும் நெற்றிச்
சீரிலகு பட்டமும்தோ ளும்குழையும்
முகமும்விழிச் சேலும் மூக்கும்
ஏரிலகு சிற்றிடையும் பட்டுடையும்
பைங்கிளியொன் றேந்து கையும்
பூரணகும் பமும்பூர நாயகிபொற்
தாளிணையும் போற்றி உய்வாம். 10

வேறு
அழகிய விநாயகர்

14. கள்ளு லாவுங் கடிமலர்க் கூந்தலாள்
வள்ளை வார்குழை மாதுமை வாய்மலர்
கொள்ள முத்தங் கொடுக்கும் அழகிய
பிள்ளை தாள்மலர் பேணிப் பணிகுவாம். 11

சுப்பிரமணியர்

15. மாறு கொண்டசூர் மார்பிரு கூறுறச்
சீறு கின்றவை வேல்பெறு சேவகன்
ஊறு கின்றகள் ளுண்டுவண் டூர்கடம்
பேறு கின்றபொற் தாள்மலர் ஏத்துவாம். 12

வயிரவக் கடவுள்

16. காலன் மார்பிறக் கால்மலர் நீட்டிய
சீலன் கோயிற் றிறம்இகழ்ந் தோர்களைச்
சூலம் ஏற்ற சுழல்விழிக் கேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம். 13

திருநந்தி தேவர்

17. காணி யாகக் கயிலையைக் காப்பவன்
தாணு வின்பதஞ் சார்தவத் தோர்க்கெலாம்
பேணு நல்வழி காட்டும் பெரும்புகழ்
பூணு நந்திதன் பொன்னடி போற்றுவாம். 14

---

13. களம் - கழுத்து. விழிச்சேல் - கயற்கண்.
14. பிள்ளை - பிள்ளையார், விநாயகன்.
15. வைவேல் - கூர்மையான வேல். சேவகன் - வீரன்.
16. சீலன் - சிவபெருமான். கேத்திரபாலன் - வயிரவன்.
17. தாணு - சிவபெருமான்.

சண்டேசுவரர்

18. அட்ட மூர்த்திக்கு அடாதுசெய் வோர்மனங்
கட்ட மாகிக் கலங்கிடத் தாதைதாள்
வெட்டும் வாள்விதிர்க் குங்கரத் தண்டிதாட்கு
இட்ட மாய்மல ரிட்டுப் பணிகுவாம். 15

போதியம்பலவாணர்

19. வேதம் நான்கருள் மெய்யுருக் கொண்டுதன்
ஆதி பாதம் அருச்சித்த அன்பொடும்
போதி நீழற் பொருந்தும் பொருவிடை
நாதர் தாளை நமக்கரித் துய்குவாம். 16

கடவுள் வணக்கம் முற்றியது.

தேசிக வணக்கம்

வேறு

துருவாசர், பிருகு, வியாக்கிரபாதர், பதஞ்சலி, நாரதர், ததீசி, உபமன்னியர், வியாசர், சூதர்

20. சமயகுர வரில்வேதா கமப்பொருளை
வடமொழியாற் சாற்றி என்றும்
உமையொருபா கனைப்பணியும் துருவாசர்,
பிருகுமுனி, உயர்புற் பாதர்,
அமைவுபெறு பதஞ்சலி, நாரதர், ததீசி,
உபமனியர் அடிகள் போற்றி
இமையவர்கள் தொழும்வேத வியாதரையும்
சூதரையும் இறைஞ்சு வாமே. 17

திருமூலர், போகர், திருமாளிகைத்தேவர், நவகோடிசித்தர்

21. சிவயோகம் போதியின்கீழ் எண்ணில்பல
உகமிருந்து செய்தாண் டுக்கோர்
நவமேவு சொற்றிருமந் திரம்உரைத்த
மூலரடி நயந்து போற்றித்,

---

18. அட்டமூர்த்தி - சிவபெருமான். தண்டி - சண்டேசுவரர்.

20. புற்பாதர் - வியாக்கிரபாதர்.

21. உகம் - யுகம். மூலர் - திருமூலர்.

தவமேவு போகர்பதந் தொழுது,மா
ளிகைத்தேவர் தாளிற் தாழ்ந்து,
நவகோடி சித்தரடித் தாமரையெல்
லாம்வணங்கி நயந்து வாழ்வாம். 18

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

22. பரசமயம் வயிறெரியத் தமிழ்ப்பதிகந்
தீயிலிட்டுப் பச்சை யாக்கிக்
கரவுடைய பொய்ச்சமணர் கழுவேறப்
பாசுரம்வை கையின்மீ தேற்றிப்
புரவலன்கூன் நிமிர்த்தினிய தமிழ்நாட்டைச்
சேணாடு போலச் செய்த
சிரபுரக்கோன் சிற்றடிப்பொற் தாமரைப்போது
எப்போதும் சிரமேற் கொள்வாம். 19

திருநாவுக்கரசு நாயனார்

23. கற்பெருந்தூண் புணையாகக் கடல்கடந்தை
ஆற்றில்எழிற் கயிலை கண்டு,
பற்பணியின் விடம்தீர்த்துஅப் பூதிமக
உயிரளித்துப், பதிகச் சொல்லால்
பொற்புறுவே தாரணியக் கதவுதிறந்து,
அருட்புகலூர்ப் பொருளிற் சேர்ந்த
அற்புதநா வுக்கரசன் அடியிணைப்பூ
முடியிலுற அமைத்தல் செய்வாம். 20

சுந்தரமூர்த்தி நாயனார்

24. மனைப்பாசம் அகற்றவென்று வந்துவழக்
குரைத்தாண்ட வரதர் தம்மைத்
தினைப்போதிற் பரவையிடத் தெனைக்கூட்டும்
எனத்தூது செலுத்தி வாழ்ந்து
வினைப்போகம் கடந்ததவ முனிவரெதிர்
கொளக்கரிமேல் வெள்ளி வெற்பில்
பனைத்தாரோ னுடன்போன பாவலன்பொன்
னடிக்கமலம் பரவு வாமே. 21

22. பரசமயம் - சைவமல்லாத பிற சமயம். புரவலன் - பாண்டியன். சேணாடு - சுவர்க்கம். சிரபுரக்கோன் - சீகாழியில் அவதரித்த திருஞானசம்பந்தர்.

23. அப்பூதி - அப்பூதியடிகள்.

24. வரதர் - சிவபெருமான். வெள்ளிவெற்பு - கயிலாய மலை. பனைத்தாரோன் - சேரமான் பெருமாள் நாயனார். பாவலன் - சுந்தரமூர்த்தி நாயனார்.

மாணிக்கவாசக சுவாமிகள்

25. ஊற்றிருந்தா னந்தவெள்ளம் ஒழுகஉளம்
அனல்மெழுகாய் உருகு வோனை
நாற்றடந்தோட் சுந்தரர்மண் சுமந்திடமெய்
அன்புகொண்ட நலத்தி னானைத்
தேற்றுதிரு வாசகம்இவ் வுலகுய்யச்
செப்பியசெவ் வாயுங் கொண்டு
தோற்றுபரா னந்தநடப் பொதுவினிற்சென்
றிருந்தோனைத் துதித்து வாழ்வாம். 22

திருநந்தி, சனற்குமாரர், சத்தியஞான தரிசினி பரஞ்சோதி மாமுனிவர்

26. சந்தான குரவர்களிற் சிவஞான
போதம்வட மொழியாற் சாற்றும்
நந்தீசர், சனற்குமர பகவான்,சத்
தியஞான நலத்தோன் இன்பப்
புந்திபெறு பரஞ்சோதி மாமுனிகள்
திருவடியைப் புகழ்ந்து போற்றிச்
சிந்தைமகிழ்ந் தார்வமுறத் தினந்தினமும்
நினைந்துருகிச் சிந்தை செய்வாம். 23

மெய்கண்டார், அருணந்தி, மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம்

27. தமிழுரலா லந்நூன்முன் னூலாக்கும்
மெய்கண்டான் சரணம் போற்றித்
திமிரமகற் றிடுங்கதிர்போல் வழிநூல்செய்
அருணந்தி திருத்தாள் ஏத்திச்
சுமையுடன்நோ யகற்றுதிரு மறைஞான
சம்பந்தர் துணைத்தாள் வாழ்த்தி
அமுதெனச்சார் பருள்நூல்சொல் உமாபதிதே
வன்துணைத்தாள் அடைந்துய் வாமே. 24

அருணமச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர்

28. மத்தராய் மலத்தால் வாடும் மன்னுயிர் அருள்பெற் றீசன்,
பத்தராய் வாழ நோக்கும் பரமகல் யாண தேசன்,
முத்தர்சேர் நமச்சி வாயன் முண்டக மலர்த்தாள் போற்றிச்
சித்தராஞ் சிவப்பிர காசர் திருவடி உளத்துள் வைப்பாம். 25

25. சுந்தரர் - திருவாலவாய் இறைவனாகிய சிவபெருமான். 27. திமிரம் - இருள்.
28. மத்தர் - மதம், வெறி கொண்டவர். மலம் - மும்மலம்.

நமச்சிவாய மூர்த்திகள்

29. மெய்கண்ட மரபின் உண்மை மிகுசம்ப்ர தாயம் ஓங்கப்
பொய்கண்டு நீங்கி ஞானப் போதிசேர் துறைசை மேவி
உய்கின்ற வழிஈ தென்றிங் குயிர்க்கெலாம் உபதே சங்கள்
செய்கின்ற நமச்சி வாய தேசிகன் திருத்தாள் போற்றி.
26

மறைஞானர், அம்பலவாணர், உருத்திரகோடியார்

30. துறைசைவாழ் நமச்சி வாயர் தொடர்பின்மோ னத்தில் நின்ற
இறைமறை ஞான தேசன் இணையடி வழுத்தி, உண்மை
அறிவெலாம் தமிழிற் கோத்த அம்பல வாணர் பாதம்
குறைவறப் பணிந்து, ருத்திர கோடிதாள் சேர்வாம் அன்றே.
27

வேலப்ப தேசிகர், இருகுமாரசாமி தேசிகர், மாசிலாமணி தேசிகர், இராமலிங்க தேசிகர் முன்வேலப்ப தேசிகர்

31. நயமிகும் அருள்வே லப்பர், நற்திருக் குமார சாமிப்
பெயர்பெறும் இருவர், மாசி லாமணி பெருமை சார்ந்த
பயனுறு ராம லிங்கர் பதம்பணிந் தெனையும் ஆளாய்த்
தவவொடாண் டருள்வே லப்ப தாதைதாள் தலைமேற்
கொள்வாம். 28

பின்வேலப்ப தேசிகர்

32. முன்னின்றாண் டெவர்க்கு மின்பம்
உதவுகோ முத்தி ஈசர்க்கு
என்னென்று புகல்வேம் என்றிங்கு
யாவரும் வியப்பக் கோயில்
பொன்னென்றும் பிரியா வாறு
புதிதாகப் பிரித்துண் டாக்கும்
பன்னொன்றாம் குருவே லப்பர்
பதமலர் பணிந்து வாழ்வாம். 29

திருச்சிற்றம்பல தேசிகர்

33. பிள்ளைசொல் மழலை கேட்கும்
பிதாவெனத் துறைசை வாழும்
வள்ளல்தன் புராணம் நாயேன்
வகுத்தசொல் விரும்பிக் கேட்கும்

29. துறைசை - திருவாவடுதுறை. 33. வள்ளல் - சிவபெருமான்.

தெள்ளுதே சிகனாம் எங்கள்
திருச்சிற்றம் பலவர் பாதம்
கள்ளுலாம் மலர்தூய் வாழ்த்திக்
கருத்தினுட் கொண்டு வாழ்வாம். 30

பிற அடியார்கள்

34. யாவர்க ளேனும் எந்தக் குலத்தினில் உதித்தா ரேனும்,
தேவர்கள் தேவன் நாமம் சிவசிவ என்று பேசி
ஆவலோ டுருகி ஏத்தும் அவர்திரு வடிகள் போற்றி,
மேவரும் துறைசை அன்பர் மெய்ப்பதம் தொழுதுய்
வாமே. 31

தேசிக வணக்கம் முற்றியது

அவையடக்கம்

வேறு

35. ஐந்தி லக்கணத் தொன்ற தேனும்
அறிந்தி டாஅறி விலியான்
இந்த நற்துறை சைப்பு ராணம்
இயம்பு தற்கிசை கின்றதிங்கு
உந்து சூதரங் கின்றி யாடுதல்
ஒக்கு மென்றுளத் துன்னியும்
முந்தை ஊழினால் வெள்கி டாமல்என்
மோகம் பேசமு திர்ந்ததே. 32

36. ஆத லாலறி ஞோர் பொறுப்பதற்கு
ஐய மின்றதெவ் வாறெனிற்
காத லோடுமின் மினிவி ளக்குதல்
கண்டி ராக்கதிர் காயுமோ
ஓது நற்கதை சிவன தென்றுரை
கொண்டு வப்பர்பொ றாமையாற்
கோது பேசுவோர் வீணி லேஉமி
குற்று கையரை ஒப்பரே. 33

35. அறிவிலி - மூடன், அறிவில்லான். உன்னுதல் - நினைத்தல். வெள்கிடாமல் - அச்சம் கொள்ளாமல். மோகம் - ஆசை.

36. மின்மினி - மின்மினிப்பூச்சி.

37. துன்புபுகழ்ச் சூதர்சொலக் கேட்டதவு
மியர்புகன்ற தொன்மை நூலைத்
தென்தமிழால் உரைசெய்யத் துணிந்ததுமும்
மதயானை நின்று சிந்தி
முன்றிலிடத் துதிருணவை எறும்பெடுத்துக்
கொண்டுரும் முயற்சி போலாம்
குன்றனைய குணத்தோருக்கு இதுகுறையோ
குறையன்று கொள்ள லாமே! 34

புராண வரலாறு

38. சூதர்நயி மிசஞ்சேர்ந்து முனிவருக்குப்
புராணநெறி சொன்ன வாறும்,
தீதகன்ற மிதுலேசன் காசிநகர்
அடைந்ததுவும், சிறந்த ஞானப்
போதமிகு தவுமியரங் கவற்குச்சோ
ணாட்டுவளம் புகன்ற வாறும்,
ஏதமறு துறைசைநகர்ச் சிறப்பும்அந்தத்
தலவிசிட்டம் இயம்பு மாறும். 35

39. தீர்த்தமகி மையும், இனிய மூர்த்திவிசே
டமும்,கயிலைச் சிலம்பின் ஞானக்
கூத்தருமை யுடன்விளையா டியவகையும்,
சூதாடுங் குணமும், தேவி
ஆர்த்தகோ உருச்சாபம் ஏற்றதுவும்,
காசியில் ஆன்ஆன வாறும்,
பூத்திகழும் குழலுமையாள் பூமிபிர
தக்கணமாய்ப் போந்த வாறும். 36

40. தேமருவும் குழற்பிரிவாற் சிவன்மோக
மாயிருந்த செயலும், மிக்க
கோமுகா சுரன்வரம்பெற் றமரருலகு
அழித்ததுவும், துளப மாலோடு
ஏமுறுபோர் விளைத்தவன்வை குண்டத்தில்
உற்றதுவும், இமையோர் மாதர்
காமதே னுவினுருவாம் கவுரியொடும்
ஆவுருவாய்க் கலந்த வாறும். 37

41. தேவர்திருக் கயிலாயம் சேர்ந்ததுவும்,
கயிலைமலைச் செல்வர் சென்று
கோவினங்கள் தமக்கினிய காட்சிகொடுத்
ததுவும்எழில் குலவு போதிக்
காவுயர்முத் தித்தலத்திற் தோன்றியதும்,
சோமுகா சுரன்க டற்குட்
தாவறும்வே தங்களைக்கொண் டொளித்ததுவும்,
அய்யனார் தமைஉண் டாக்கி. 38

42. காவல்கொடுத் ததுவும்கோ நாயகிதென்
குளம்பியஞ்சேர் கவினும் மிக்க
தேவர்கண பதிபூசை செய்ததுவும்,
கோவுருவச் செல்வி உள்ளத்து
ஆவலொடு சத்ததலம் சேர்ந்துதரி
சித்ததுவும், அம்மன் போதிக்
காவிலுற மாசிலா மணியினைக்கண்
மணிகுளிரக் கண்ட வாறும். 39

43. மாசிலா மணிபூசை தேவிபுரி
மகத்துவமும், வைய முய்யத்
தேசுலாம் பசுத்துவம்தீர்ந்து அரனிடத்திற்
தேவியமர் சிறப்பு மிக்க
நேசமார் தருமதே வதைஇடப
மானதுவும், நெறிமா றாகு
மாசுசேர் கோமுகனைச் சங்கரித்து
வேதம்வர வழைத்த வாறும். 40

44. வேதாத்தி யானம்அர னுரைத்ததுவும்,
மிக்கதிரு விழவின் சீரும்,
சூதார்மென் முலைஒப்பி லாள்மஞ்சள்
நீர்க்குளித்துத் தோன்று மாறும்,
தாதாரும் குழலுமையாள் திருக்கலியா
ணச்சிறப்பும், தவத்தோர் காண
நாதாதீ தப்போதி அம்பலத்துள்
நின்றுதிரு நடம்செய் சீரும். 41

45. தேவர்அருச் சனைபுரிந்த சகத்திரநா
மத்திறனும், சிறந்த இன்பம்
மேவும்ஆ டிப்பூர மாதுவிழாக்
கொண்டருளும் விதியும், நேமிக்

காவலனா கியஞான முசுகுந்த
ராசன்மிகு கவின்ஆ ரூரர்
ஏவலினாற் பிள்ளைவரம் வேண்டிஆ
வடுதுறையூர்க் கெய்து மாறும். 42

46. திரவியத்தியா கேசர்திரு விழவினிற்சுந்
தரநடஞ்செய் சிறப்பும் நேமிப்
புரவலனோர் சிவலிங்கப் பிரதிட்டை
செய்துபூ சித்த வாறும்,
பெருகுதிறற் சாத்தர்அசோ முகியெனும்
வல்லசுரி தனைப்பிடித்துக் கையை
வெருவிவிழ அறுத்ததுவும், தாருகனைச்
சமர்பொருது வென்ற வாறும். 43

47. அசோமுகிபெற் றெறிந்தகிருத் திகைக்கிரங்கி
இனியவர மளித்த வாறும்,
விசாரசலந் தரனுடலைச் சக்கரங்கொண்டு
இருகூறாய் வீட்டு மாறும்,
திசாதிபர்கள் தொழுமாற்குத் துளவருளிப்
பிருந்திமயல் தீர்த்த வாறும்,
வசீகரஉம் பர்கள்சோம வாரத்திற்
பூசைசெய்து மகிழ்ந்த வாறும். 44

48. செவ்வாயைப் படைத்ததிகா ரங்கொடுத்த
வகையும்அகத் தியர்வந் தின்ப
மெய்வாழ்வு பெறும்தரும நந்தியைக்கண்
டதுவும்நந்தி மிகுகும் பற்கு
மைவாழ்கண் டப்பரமர் முத்திச்சேத்
திரப்பெருமை வகுத்த வாறும்,
நைவாம்அக் கினிபகவான் குருத்துரோ
கம்தீர்ந்து நலங்கொள் சீரும். 45

49. அகத்தியர்க்கு வெண்ணோய்தீர்த் தருள்கொடுத்த
பெருமையும்அஞ் செழுத்தின் உண்மை
மகத்துவம்அக் கும்பமுனிக்கு அழகுவிநா
யகருரைத்த வகையும், பின்னும்
மிகுத்தசைவத் திறம்ஞான நூற்திறம்சித்
தாந்தமுத்தி வேதாந் தத்தின்
அகத்தெளிவு புகன்றதுவும், நவகோடி
சித்தர்சித்தி அணுகு மாறும். 46

50. திருமூலர் தமைத்தடுத்தாண் டதுவும்மா
ளிகைத்தேவர் சிறப்பு மிக்க
அருள்மேவு கொங்கணர்பூ சித்ததுவும்,
வாதவூ ரடிகள் சீரும்,
பொருள்மேவும் உலவாப்பொற் கிழிஞான
சம்பந்தர் பொருந்து மாறும்,
மருள்நீக்கும் வாகீசர் வன்தொண்டர்
பதிகத்தால் வணங்கு பேறும். 47

51. சேரமான் பெருமாள்செங் கட்சோழர்
வரகுணபாண் டியன்சி றந்த
பூரணநற் சிவலிங்கப் பிரதிட்டை
செய்துபூ சித்த வாறும்,
ஏரணுகும் புராணபல சுருதிஇயம்
பியதும், மிது லேசன் முத்திக்
காரணமும் அறுபத்தெட் டத்தியா
யத்துளிங்குக் கழற லுற்றாம். 48

மாணாக்க வசனம்

52. தலமுழுதும் புகழவளர் ஆவடுதண்
துறைசைஅரன் சரிதை யோதும்
இலகுவட மொழியதனைத் தமிழ்விருத்தப்
பாவதனால் இசைத்தல் செய்தான்
பலனுதவுந் துறைசைவே லப்பகுரு
வருள்பதிந்த பண்பன் ஞானக்
கலைதெரிந்த சுவாமிநா தன்முனிவன்
என்னையுமாள் கருணை யோனே. 49

சிறப்புப் பாயிரம் முற்றியது.

சிறப்புப் பாயிரம் (சுருக்கம்)

வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் என்ற நூல் மரபிற்கேற்ப, கடவுள் வாழ்த்து, தேசிக வணக்கம், அவையடக்கம், புராண வரலாறு, மாணாக்க வசனம் என இவ்வாறு நிரல்படுத்திப் பாடி இச்சிறப்புப் பாயிரப் பகுதியை அமைத்துள்ளார் ஆசிரியர்.

முதற்கண் கடவுள் வாழ்த்துக் கூறுகிறார். தொடக்கத்தில் திருவாவடுதுறையில் திருநடனம் புரியும் நடராசப் பெருமானைப் பரம்பொருளின் உருவமாகக் கண்டு வணங்குகிறார்.

தென்துறைசை அரசடியில் முளைத்தெழுந்த அமுத மயமான மாசிலாமணி ஈசரைக் கண்ணாரக் கண்டு போற்றுகிறார். பின்பு, கயிலை வெற்பையே ஒளிபெறச் செய்யும் துறைசையின் தலைவியாம் ஒப்பிலா முலையாளையும், அணைத்திருந்த நாயகரையும், திரவியப் பொற்தியாகேசரையும், அதுலதன நாயகியையும், சந்திரசேகரரையும், தட்சிணாமூர்த்தியையும், சீவிலிநாயகரையும், பூரநாயகியையும், அழகிய விநாயகரையும், சுப்பிரமணியரையும், வயிரவக் கடவுளையும், திருநந்தித் தேவரையும், சண்டேசுவரரையும், போதியம்பலவாணரையும் துதித்துப் போற்றிப் பரவுகின்றார்.

தேசிக வணக்கத்தில் சமயக்குரவரில் வேதாகமப் பொருளை வடமொழியாற் சாற்றி என்றும் மாதொரு பாகனை வணங்கி மகிழும் துருவாசர் முதலாக, பிருகுமுனி, வியாக்கிர பாதர், பதஞ்சலி, நாரதர்,ததீசி, உபமன்னியர், வியாசர், சூதர், திருமூலர், போகர், திருமாளிகைத்தேவர், நவகோடி சித்தர், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், திருநந்தி, சனற்குமாரர், சத்தியஞான தரிசினி, பரஞ்சோதி மாமுனிவர், மெய்கண்டார், அருணந்தி, மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம், அருள்நமச்சிவாயர், சித்தர் சிவப்பிரகாசர், நமச்சிவாய மூர்த்திகள், மறைஞானர், அம்பலவாணர், உருத்திரகோடியார், வேலப்ப தேசிகர், இருகுமாரசாமி தேசிகர், மாசிலாமணி தேசிகர், இராமலிங்கதேசிகர், முன்வேலப்ப தேசிகர், பின்வேலப்ப தேசிகர், திருச்சிற்றம்பல தேசிகர், பிற அடியார்கள் என ஒவ்வொருவரையும் தனித்தனியே வணங்கித் துதிக்கின்றார்.

அவையடக்கச் செய்தி என்பது, நூலாசிரியர் அரங்கேற்றத்தின்போது தம்மைக் குறைத்துக் கொண்டு, அவையோரை உயர்த்திக் குறிப்பிட்டுக் கூறுவதாகும். அஃதாவது குறையறிவுடையேன் செய்துள்ள குற்றம் களைந்து, குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர்கடன் என்ற வேண்டுகோளைப் பல உவமைகளால் விளக்கிக் கூறுதலாகும். அவையோர் அடங்குமாற்றான் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல் இப்பகுதியாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களில் ஒன்றையும் முழுமையாக அறியாத

வனாகிய நான் இந்தத் துறைசைப் புராணத்தை இயற்ற முற்பட்டது என்பது, அரங்கு இழைக்காமல் வட்டாடுதலைப் போன்றது என உளமார அறிவேன். ஆயினும், என்னுடைய முன்வினைப் பயனாகவும், சிவபெருமானின் பெருமைகள் மீது கொண்ட மோகத்தின் காரணமாகவும் இதனைப் பாடத் துணிந்தேன் என்கிறார் ஆசிரியர்.

கல்லாமையை விளக்க வந்த வள்ளுவர்,

> 'அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
> நூலின்றிக் கோட்டி கொளல்' (குறள் - 401)

எனக் குறிப்பர். இதைப் இப்புராண நூலாசிரியர் இங்கே நினைவுறுத்துகிறார்.

பல நூல்களைப் படித்து நிரம்ப கல்வியறிவில்லாதவன் ஒரு சபையில் பேசுவது தாயக்கோடுகள் இல்லாமல் தாயம் ஆடுவதைப் போன்றதேயாகும் என்பது இக்குறளின் கருத்தாகும்.

'அரங்கு' என்றது சதுரங்கம், சொக்கட்டான், தாயம் முதலிய விளையாட்டுகளுக்காக வரையப்படுகிற கோடுகளமைந்த கட்டம். இவை, 'கட்டளை யன்ன வட்டரங்கு இழைத்துக், கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்' (நற்.3) என்னும் நற்றிணைப் பாடல் அடிகளால் விளங்கும்.

வட்டு அல்லது சூது என்பது அந்த விளையாட்டுக்காகத் தரையில் உருட்டுகின்ற கருவி. தாயக்கட்டங்கள் இல்லாமல் கருவியை மட்டும் உருட்டினால் எந்தக் காயை எங்கே வைப்பது ஏன் வைப்பது என்ற வரையறை இருக்காது. அதுபோல, கல்வியறிவில்லாதவன் சபையில் பேசினால் எதை எந்த இடத்தில் சொல்லுவது, ஏன் சொல்வது, எவ்வளவு சொல்வது என்ற வரையறை இல்லாமல் வெறும் குழப்பமாகத் தானிருக்கும். எனவே, கல்வியறிவில்லாதவன் அவையில் பேசுவதற்கே ஆசை கொள்ளக் கூடாது என்பது கருத்தாகும்.

இவ்வாறு, கல்லாத அறிவிலியாயினும் யான் சிவபெருமானின் பெருமை கூறும் பேராவலினால் இந்நூலைப் பாட முற்பட்டுவிட்டேன். அறிஞர்கள், குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளலே சாலச் சிறந்ததாகும். இரவில் மின்மினிப்பூச்சி ஒளி காட்டுகின்றது என்பதற்காக அவ்விரவில் கதிரவன் தோன்றிக் காய்வதில்லை.

யான் சொல்ல முற்படும் இப்புராணம் சிவபெருமானுடையது என்ற அளவிலாவது அறிஞர்கள் மகிழ்வர் என உறுதியாக நம்புகிறேன். பொறாமையால் இதில் குற்றங்களையே கண்டு பேசுவோர் வீணே உமிக்குற்றி கைநொந்தவரை ஒப்பவராவர்.

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்' (குறள் - 1079)

என்னும் குறளுக்கிணங்க, அழுக்காற்றினால் பிறரை எப்பொழுதும் குறை கூறும் கீழ்மக்களும் நம்மிடையே இன்றும் இருப்பதைக் காண்கிறோம். இத்தகையவர் இந்நூலாசிரியர் காலத்திலும் இருந்ததைக் குறித்து இவ் அவையடக்கப் பாடலிலும் ஆசிரியர் இவ்வாறு பாடியுள்ளார்.

புகழ்மிக்க சூதர் சொல்லக்கேட்ட தவமுயர் சொன்ன தொன்மையான இப்புராணத்தை அழகிய தமிழால் யான் பாடத் துணிந்தது வியப்புக்குரியதுதான். மதயானை தின்று சிந்திய உணவுப்பொருள் எச்சங்களைத் தம் சிறு வாயால் கவ்வியெடுத்துக் கொண்டு ஊர்ந்து செல்லும் சிற்றெறும்பின் முயற்சியைப் போன்றது என்னுடைய முயற்சி. எனக்கு முன்னே எத்தனையோ பெரியவர்கள் இத்தலப் பெருமையைச் சொல்லிச் சென்றுள்ளனர். யானும் இன்று சிறிய அளவில் இவற்றைக் கூறத் துணிந்தேன். குணக்குன்றாக விளங்கும் பெரியோர்கள் இதை ஏற்பது ஒன்றும் குறையாகாது. இதிலுள்ள சிறப்புக்களை அவர்கள் ஏற்பார்களாக.

அனைத்திற்கும் பசுபதியே தலைவர் என்பதாலும் இந்தப் புராண அரங்கேற்றத்திற்கும் அவைக்களத் தலைவர் சிவபெருமானே என்பதாலும் அவையோர் இதற்கு எதிர்மொழி கூறார் என்ற கருத்தில் ஆசிரியர் இந்த அவையடக்கப் பாடல்களைப் பாடியுள்ளார்.

அடுத்து, புராண வரலாறு கூறப்பெறும். 1. சூதர் நைமிசவனம் சேர்ந்து முனிவருக்குப் புராண நெறி சொன்னது; 2. மிதுலேசன் காசிநகர் அடைந்தது; 3. தவமுயர் சோணாட்டு வளம் புகன்றது; 4. துறைசை நகர்ச் சிறப்புரைத்தது; 5. துறைசைத்தல விசிட்டம் உரைத்தது; 6. தீர்த்த மகிமை உரைத்தது; 7. மூர்த்தி விசேடம் உரைத்தது; 8. கயிலை மலையில் ஞானக்கூத்தராகிய சிவபெருமான் உமையுடன் திருவிளையாடல் புரிந்தது; 9. சூதுவிளையாடியது;

10. அம்பிகை பசுச்சாபம் ஏற்றது; 11. தேவி காசியில் பசுஉரு அடைந்தது; 12. உமையாள் பூமிபிரதக்கணம் வந்தது; 13. கயிலையில் சிவன் அம்பிகையை நினைந்து மோகித்திருந்தது; 14. கோமுகாசுரன் வரம்பெற்று அமரருலகு அழித்தது; 15. கோமுகாசுரன் வைகுந்தத்தில் வெற்றி கொண்டிருந்தது; 16. தேவமாதர் காமதேனுவினுருவாம் கவுரியொடும் ஆவுரு மேவியிருந்தது; 17. தேவர்கள் கயிலாயம் அடைந்தது; 18. கயிலைநாதன் கபிலைகளுக்குக் காட்சி கொடுத்தது; 19. முத்தித் தலத்தில் அசுவத்தவனம் தோன்றியது; 20. கோமுகாசுரன் கடலுக்குள் வேதங்களைக் கொண்டு ஒளித்து வைத்தது; 21. அய்யனாரை உண்டாக்கிக் காவற்தொழில் கொடுத்தது; 22. கோவுருநாயகி திருக்குளம்பியம் சேர்ந்தது; 23. தேவர் கணபதி பூசை செய்தது; 24. கோவுருநாயகி சத்ததலம் தரிசித்தது; 25. அம்மன் போதிக் காவிலுறும் மாசிலாமணியைத் தரிசித்தது; 26. தேவி மாசிலாமணியைப் பூசித்தது; 27. தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்றது; 28. வேத புத்திரனாகிய தரும தேவதைக்கு இடபவாகனப்பேறு அருளியது; 29. கோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்தது; 30. சந்திரசேகரர் வேதாத்தியயனம் உரைத்தது; 31. தேவர்கள் சித்திரை விழாச் செய்து தரிசித்தது; 32. தேவி மஞ்சள் நீராடல் சிறப்புரைத்தது; 33. உமையம்மை திருக்கலியாணச் சிறப்புரைத்தது; 34. போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்தது; 35. சகஸ்ரநாமம் உரைத்தது; 36. அம்பிகை ஆடிப்பூர விழாக் கொண்டருளியது; 37. முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளைவரம் வேண்டி திருவாவடுதுறை தலத்திற்கு வந்தது; 38. திரவியத் தியாகேசர் தைத்திருவிழாவினில் சுந்தரநடனம் செய்கின்ற சிறப்பு; 39. முசுகுந்தன் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தது; 40, சாத்தர் அசோமுகி கையறுத்தது; 41. சாத்தர் தாருகனை வென்று வெற்றி மேவியது; 42. அசோமுகி மகள் கிருத்திகைக்கு அருள் புரிந்தது; 43. சலந்தரனைச் சக்கரம் படைத்தறுத்தது; 44. திருமாலுக்குத் துளபத்தார் அளித்துப் பிருந்தை மயல் அகற்றியது; 45. தேவர்கள் கார்த்திகை மதியில் சோமவார பூசனை செய்தது; 46. செவ்வாய்க்கு அநுக்கிரகம் செய்தது; 47. பிப்பிலாரணியத்தில் அகத்தியர் தரும நந்தீசுரரைத் தரிசித்தது; 48. நந்தீசுரர் அ்கத்தியருக்கு முத்திச்சேத்திரப் பெருமை அறிவித்தது;

49. அக்கினி பகவான் குருத்துரோகம் தீர்ந்து நலங்கொண்டது; 50. அகத்தியருக்கு வெண்ணோய் தீர்த்தருள் கொடுத்தது; 51. அழகிய விநாயகர் அகத்தியருக்கு அஞ்செழுத்தின் உண்மை மகத்துவம் உபதேசித்தருளியது; 52. அகத்தியருக்குச் சைவத்திறம் உரைத்தருளியது; 53. அகத்தியருக்கு ஞானநூற்திறம் உரைத்தருளியது; 54. அகத்தியருக்குச் சித்தாந்த முத்தி உரைத்தருளியது; 55. அகத்தியருக்கு வேதாந்தத்தின் அகத் தெளிவு புகன்றது; 56. நவகோடி சித்தாதிகட்கு அட்டமாசித்தி அருளியது; 57. திருமூலதேவரைத் தடுத்தாட் கொண்டது; 58. திருமாளிகைத்தேவர் சிறப்புரைத்தது; 59. கொங்கண சித்தர் சிவபூசை செய்து அருள் பெற்றது; 60. திருவாதவூரடிகள் சிறப்புரைத்தது; 61. திருஞானசம்பந்தர்க்கு உலவாப்பொற்கிழி அருளியது; 62. வாகீசர் வந்து திருப்பதிகம் பாடி அருள்பெற்றது; 63. சுந்தரர் திருப்பதிகம் ஓதித் தரிசித்து அருள் பெற்றது; 64. சேரமான் பெருமாள் சிவப்பிரதிட்டை செய்து அருள் பெற்றது; 65. செங்கட் சோழர் திருப்பணியும் சிவார்ச்சனையும் செய்தது; 66. வரகுண பாண்டியன் சிவார்ச்சனை செய்து அருள்பெற்றது; 67. புராணபல சுருதி உரைத்தது; 68. மிதுலேசன் முனிவருடன் வந்து அருச்சித்து முத்தி பெற்றது என இவ்வாறு அறுபத்தெட்டு அத்தியாயங்களில் இத்துறைசைப் புராணத்தைப் பாடியுள்ளோம்.

திருவாவடுதுறை எனப் புகழப்பெறும் சிறப்புடைய இத்தல நாயகர் சிவபெருமானின் ஆதி வரலாறு வடமொழியிலே இருக்க, அவற்றைத் தமிழிலே விருத்தப்பாவினால் பாடியுள்ள, துறைசை வேலப்ப குருவருள் பதிந்த சாத்திரம் சாமிநாத முனிவர் மாணாக்கர்களிடம் கருணை நோக்குடைய ஞானக்கலை முதிர்ந்த அறிஞராவார் என மாணாக்க வசனமாக அமைந்த பாடலுடன் சிறப்புப் பாயிரப் பகுதி முற்றுப் பெறுகின்றது.

முதலாவது அநாதிமுத்திச் சேத்திர காண்டம்

முதற்காண்டத் தோத்திரக்கவி

53. கார்முகில்போற் கொடைபுரிகை வள்ள லாகிக்
காசினியெல் லாம்புரக்கும் அரசர் தாமும்
ஏர்மருவு சீர்த்திநெடு வாணாள் இன்பம்
எழில்வீரம் பலகலைகள் எளிதின் மேவிப்
பேர்மருவு வானுலகும் புவியும் போற்றப்
பேரின்பம் இம்மையிற்பெற் றுய்வோர் தாமும்
சீர்மருவும் அநாதிமுத்திச் சேத்தி ரஞ்சேர்
சிவமாசி லாமணியைத் தெரிசித் தோரே. 1

ஆகத் திருவித்தம் 53

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

வேறு

முதலாவது சூதர் நைமிசவனம் சேர்ந்த அத்தியாயம்

54. திங்கள் தங்கு செஞ்சடைச் சிவன்ப தச்ச ரோருகம்
தங்கு சென்னி யானுருத்தி ராக்க மாலை சாத்துதோள்
புங்க வன்வெண் ணீறணிந்த பொருவில் சூதன் நைமிசத்
தங்கு ளோர்கள் காணவோர்போ தகம கிழ்ந்து தோன்றினான். 11

55. கண்ட மாத வக்குழாங் கசிந்தெ ழுந்து போயெதிர்
கொண்ட ழைத்து வந்துதங்கள் குலவு பன்ன சாலையுட்
பண்டை மெய்த்த வப்பயன் பலித்த தென்றி ருத்திநல்
உண்டி மூல பலமளித் துவந்து பூசை செய்யவே. 2

56. சவுன காதி முனிவரைத் தழைத்த அன்பில் நோக்கிநீர்
சிவன துண்மை மோனஞானம் சிந்தை செய்து வாழ்ந்திடும்
உவகை காண வந்தோமென் றுரைத்தி டும்பு ராணமா
தவனை நோக்கி முகமன்மிக்க சாற்றி அன்னோர் சாற்றுவார். 3

---

54. சரோருகம் - தாமரை. பொருவில் - ஒப்பற்ற. போதகம் - உபதேசம்.

55. பன்னசாலை - முனிவர் வாசம்.

57. எம்மை நீர்பு கழ்ந்துரைத்த தென்கொல் சாத கங்கள்தாம்
தம்மில் மேக வரவுபார்க்கும் தன்மை போல மன்னருட்
செம்மை ஞேய மானநற் சிவானு போக அமுதுணற்
கும்மை யிம்மை நாடியிங் குறைத்தி ருந்தோ மென்றுபின். 4

58. முன்னர் நீரெ மக்குரைத்த முதிர்மொ ழிப்பு ராணநூல்
பன்னி ரண்டொ டாறினிற் பகர்ந்த காந்தத் துட்சிவன்
மன்னு ருத்திர சங்கிதை வகுத்து ரைத்த சேத்திரத்து
இன்னும் ஓர்த லத்தினுண்மை கேட்க இன்றி சைந்துளோம். 5

59. கொள்ளு மாறு கேட்குமுன் குறிப்ப றிந்து நல்கநீர்
உள்ளு முன்ன மெங்கள்மால் உளத்தில் மீறு கின்றதால்
விள்ளன் மேயி னோமகிழ்ந்து கேட்டி ரங்கி மெல்லவே
உள்ள வாறெ லாம்விரித் துரைக்க வேண்டு மின்றரோ. 6

வேறு

60. அப்பதியா தெனவினவில் உலகுயிரெல்
லாமீன்ற அன்னை ஞான
மெய்ப்பயனா கியமுதல்வி துரியபத
மாய்நிறைந்த விமலை ஆதிச்
சிற்பரையா கியஉமைக்கு ஆவுருநீக்
கிப்பரம சிவன்பாற் சேர்த்த
நற்பதியாம் எனஂநமி சாரணிய
முனிவரெலாம் நவிற்றும் போதில். 7

61. அவ்வுரைமுற் றுங்கேட்கு முனஞ்சூதர்
பரவசமாய் அவச மாகி
மெய்விதிர்த்துக் கைகுவித்து ரோமபுள
கிதம்பெருக விழிநீர் சிந்தி
உய்வகைநீர் உணர்ந்துரைத்தீர் எனஅவரைத்
தழுவிஉளத் துவகை மீறச்
செவ்வியநன் மொழியதனால் அவர்செவிக்கா
ரமுதமெனச் செப்ப லுற்றான். 8

62. ஒப்பிலா அப்பதியி னுண்மையாந்
தரங்கபத்தி யுடையோ ருக்கே
செப்பவேண் டுவதுபொதுப் பத்தியுடை
யோர்கேட்கச் செப்பொ ணாதாற்

57. சாதகம் - சாதகப்புள், வானம்பாடி. ஞேயம் - நேயம்.
61. அவசம் - பரவசம், மயக்கம். 62. சுருதி - வேதம்.

துப்புரவு பொறுநீரே கேட்கவேண்டி
யதுமுன்னாட் சுருதி இன்னம்
இப்படியன் இவ்வுருவன் எனஅறியாச்
சிவன்கயிலை யிடத்திற் தென்பால். 9

63. கல்லாலின் புடையிருந்து நால்வருக்கு
மோனமுத்தி காட்டிப் பின்னர்
நல்லார்வ முதிர்ச்சிகொணர்ந்து ஈசர்க்குச்
சித்தாந்த ஞான முற்றும்
எல்லாரும் உயத்தனித்தோர் இடத்திருந்து
பன்னிருசூத் திரமாய் ஈந்து
பல்லூழி கண்டகோ முத்திநகர்
மகத்துவமும் பகர்ந்திட் டானே. 10

64. தேட்டமிகும் சனற்குமரற் கவருண்மைச்
சிவஞான சித்தி யாவும்
கேட்டபடி சொலஅவரெங் குருவாகும்
வியாசருக்குக் கிருபை யாலே
ஊட்டும்அமு தம்போலித் தலத்தருமை
உரைத்தாரெற் குரைத்தான் வியாசன்
தீட்டுபுரா ணங்கள்சொலும் தலங்களுக்குள்
இத்தலமே சிறந்த தம்மா. 11

65. காசிமுதற் சிவனிருக்கும் பதிகளெலாம்
உயிர்ப்பாசக் கட்டு நீக்கி
ஆசகல்நல் முத்திதரு மம்முத்தி
யின்புருவாம் அருட்கே யிந்தப்
பேசரிய தலம்முத்தி கொடுக்குமெனில்
இதன்பெருமை பேசற் பாற்றோ?
நேசமுடன் இமைப்பொழுதுயார் நினைத்திடினும்
கொடும்பவநோய் நீக்கு மன்றே. 12

66. என்றுதிரு வாவடுதண் துறைத்தலத்தின்
பெருமையும்நல் லெழில்சேர் கஞ்ச
மன்றல்கமழ் கோமுத்தி தீர்த்தத்தின்
பெருமையும்நான் மறைகள் போற்றும்
கொன்றையணி மாசிலா மூர்த்திமகத்
துவமும்அந்தக் குறியின் மேவு

63. ஈசர் - நந்தீசர். 64. தேட்டம் - ஆராய்வு, பேரவா.
65. கஞ்ச மன்றல் - தாமரை வாசனை.

கின்றசிவன் விளையாட லும்சூதர்
சொலமகிழ்ந்து கேட்டு மிக்காய். 13

67. அகத்தியர்கா சிபர்சுகர்வான் மீகர்கவு
தமர்சமதக் கினிப ராசரர்
மகத்துவமார் துருவாசர் கண்ணுவர்நா
ரதர்வசிட்டர் வாம தேவர்
பகுத்தறிவு மிகும்பிருகு தவுமியரா
தியமுனிவர் பரவி னோடுஞ்
சுகத்தின்மிகு பரமானந் தக்கடலின்
மூழ்கிமிகச் சுகித்துப் பின்னர். 14

68. முத்திதரு தலமாகும் ஆவடுதண்
துறைமேவு முதல்வன் சீர்த்திப்
பத்தியொடும் கேட்டதனாற் சன்மசா
பல்லியம்இங்கே பலிக்கப் பெற்றோம்
உத்தமனா கியசூத முனிவஇனிக்
காசிநகர்க் குறுதல் வேண்டும்
சித்தமகிழ்ந் தெம்முடன்நீர் வாரும்என
அவருடன்போய்ச் சேர்ந்தார் காசி. 15

முதலாவது
சூதர் நைமிசவனம் சேர்ந்த அத்தியாயம் முற்றிற்று

ஆகப் பாயிரம் உள்படத் திருவிருத்தம் 68

திருச்சிற்றம்பலம்

1. சூதர் நைமிசவனம் சேர்ந்த அத்தியாயம் (சுருக்கம்)

குளிர்ச்சி பொருந்திய மதியைத் தம் செஞ்சடையிலே தாங்கியருளும் சிவபெருமானின் தாமரைத் திருவடிகளை எப்போதும் தியானித்து, திருவெண்ணீற்றினையும் அக்கமாலை யினையும் அணிந்து விளங்கும் சூதமாமுனிவர், ஒரு சமயம் நைமிச வனத்திலுள்ள முனிவர்களைக் காண வந்தார். சூதமுனிவரைக் கண்ட மாதவக் குழாங்கள் அனைவரும் அவரை எதிர்கொண்டு அழைத்து வந்து தங்களுடைய பன்ன சாலையில் அமர்த்தி, முன்னை மெய்த்தவப் பயனாய் அவர்களிடையே-

68. சன்ம சாபல்லியம் - பிறவிப்பேறு. உறுதல் - சேர்தல்.

அவர் எழுந்தருளியுள்ளதைப் போற்றி வணங்கி, கந்த மூல பலாதிகளை உணவாகப் படைத்துப் பூசை செய்தனர்.

சவுனகாதி முனிவர்களை அன்புடன் நோக்கிய சூதமுனிவர். சிவனது உண்மை மோன ஞானத்தை நினைந்து எப்பொழுதும் தவம் செய்து வாழ்ந்திருக்கும் உங்களுடைய மகிழ்ச்சிமிக்க வாழ்க்கையைக் காண்பதற்காகவே இங்கு வந்தோம் என்று கூறினார். நைமிசாரணிய முனிவர்கள், புராண மாதவனாம் சூத முனிவரை நோக்கி, சுவாமி! தாங்கள் எங்களைப் புகழ்ந்துரைத்தது எங்களுக்கு வியப்பாகவுள்ளது! சாதகப் பறவைகள் மேகத்தின் வரவையே பார்த்திருக்கும். அதுபோல நாங்களும் தங்களது வரவையே நோக்கி இங்கு இருக்கின்றோம் என்று மகிழ்ந்து கூறி மேலும் வணங்கிப் போற்றினர்.

தாங்கள் முன்னர் எங்களுக்கு உரைத்த மிகவும் பழமையான, பதினெட்டுக் காண்டங்களை உடைய காந்தத்துள் உருத்திர சங்கிதையை வகுத்துரைத்த தலத்தில் இன்னும் ஒரு தலத்தின் மேன்மையை அறிய விரும்புகின்றோம். அதைத் தாங்கள் எங்களுக்கு மனமுவந்து விரித்துரைக்க வேண்டும் என மிகவும் பணிந்து வேண்டினர்.

மேலும் நைமிசாரணிய முனிவர்கள் இத்தலம் பற்றிக் கூறுகின்றனர். அப்பதியானது யாதென வினவில், எல்லா உலகங்களிலுள்ள உயிர்களையெல்லாம் பெறாது பெற்றெடுத்த தாயாகிய உமையம்மைக்கு இறைவன் பசுவுருவை நீக்கித் தன்னிடம் சேர்த்தருளிய நற்பதியாகும் என்று முனிவர்கள் கூறக்கேட்ட சூதமாமுனிவர் பரவசமானார். மெய்விதிர்த்துக் கைகுவித்து மயிர்க்கூச்சலுடன் ஆனந்தக் கண்ணீர் வார, உய்யும் வகையை நீங்கள் உணர்ந்து உரைத்தீர்கள் என்று கூறி அம்முனிவர்களைத் தழுவி மிகுந்த உவகையுடன் சொல்லத் தொடங்கினார்.

ஒப்பற்ற இப்பதியின் பெருமையை அந்தரங்க பத்தியுடையோருக்கே சொல்ல வேண்டும். பொதுப் பத்தியுடையோர் கேட்டுப் பயனில்லை என்பதும் தெளிவு. இறையருள் இன்பம் நாடித் தவமியற்றும் நீங்கள் கேட்கத் தகுதியுடையவரே என்பதால் கூறுகின்றேன். பண்டைய நான்மறைகள் எல்லாம் அறுதியிட்டுக் கூறவொண்ணாதவன் இறைவன். அவன் இத்தகையவன், இவ்வுருவமுடையவன் என அறிவிக்க இயலாத ஒப்பற்ற தன்மையுடையவன்.

இத்தகைய சிவபெருமான், கயிலாயத்தில் தென்பாலுள்ள கல்லாலின் கீழிருந்து சனகாதி நால்வருக்கும் மோன நெறியிலே சின்முத்திரையினாலே முத்தி காட்டினர். பின்பு நந்தீசருக்குச் சித்தாந்த ஞானம் முழுவதும் தனித்து ஓரிடத்திருந்து பன்னிரு சூத்திரங்களாக அளித்து, கோமுத்திநகரின் பெருஞ்சிறப்பையும் விளக்கியருளினார்.

நந்தியெம்பெருமான் சனற்குமார முனிவருக்கு, உண்மைச் சிவஞான சித்தி யாவும் தாம் இறைவனிடம் கேட்டபடியே சொல்ல, சனற்குமார முனிவர் என்னுடைய குருவாகிய வியாசருக்கு இந்தத் தலத்தின் அருமையை உரைத்தார். அவர் எனக்கு எல்லாத் தலங்களுள்ளும் சிறந்ததாகிய இக்கோமுத்தி நகரினைப் பற்றிக் கூறினார்.

அன்புடன், இமைப்பொழுது நெஞ்சினில் யார் நினைத் திடினும் அவருக்குப் பிறவிநோயை நீக்கும் பேறு நல்குபவர் கோமுத்திநாதர். எனவே, இத்தலத்தின் பெருமையை அளவிட்டுரைக்க இயலாது என்று, திருவாவடுதுறைத் தலத்தின் பெருமையினையும், கோமுத்திமா தீர்த்தத்தின் பெருமையையும், நான்மறைகள் போற்றும் மாசிலாமணிப் பெருமானின் பெருமையையும், திருவிளையாடல்களையும் சூதமாமுனிவர் சொல்லுகின்றார். இதை, நைமிசாரணிய முனிவர்களாகிய அகத்தியர், காசிபர், சுகர், வான்மீகர், கௌதமர், சமதக்கினி, பராசரர், துருவாசர், கண்ணுவர், நாரதர், வசிட்டர், வாமதேவர், பிருகு, தவுமியர் ஆகிய முனிவர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

மேலும், முத்தியைக் கொடுக்கின்ற தலமாகிய திருவாவடு துறையிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய சீர்த்தி களைப் பக்தியுணர்வோடு கேட்டதனால் பிறவியெடுத்ததன் பயனை நாங்கள் அடைந்தோம் என முனிவர்கள் மகிழ்ந்து கூறினர்.

உத்தமராகிய சூதமாமுனிவரே, நாங்கள் காசி நகர்க்குப் போதல் வேண்டும்; தாங்களும் எங்களுடன் வர வேண்டும் என்று முனிவர்கள் விண்ணப்பித்தனர். பின்பு அனைவரும் காசிநகர் அடைந்தனர்.

இரண்டாவது
மிதிலேசன் காசிநகர் அடைந்த அத்தியாயம்

69. அத்தலத்தின் மரிப்போர்கட் கோங்கார
தாரகத்தை அருள்செய் தின்ப
முத்திகொடுத் தருளும்விசு வேசர்தமைப்
பணிந்துதவ முனிவோ ரெல்லாம்
வித்தகரா கியவேத வியாசருடன்
மகங்கள்செய்து மேவு நாளில்
சித்தசுத்தி யுறுசனக மிதிலேசன்
அங்கடைந்த செய்தி சொல்வாம். 1

வேறு

70. உறைகழித் தொளிரும் வாளால்
ஒன்னலர்க் கடந்து வாய்ந்த
திறைகொடுத் திறைஞ்சு மன்னர்
சிரமுடி கழற்கால் தீண்ட
அறம்வளர்த் தரியின் பீடத்
திருந்தர சளிக்கு மன்னன்
பொறைசெனித் துடைய நெஞ்சன்
வரையெனப் பொலிந்த தோளான். 2

71. காரென வழங்கு கையன்
கருணைபெய் தொழுகும் கண்ணன்
வாருறப் பொலிந்த கொங்கை
மங்கையர்க் கமுதம் அன்னான்
சீருறு கின்ற திங்கட்
குலத்தினன் சிவன்தாட் கன்பன்
வீரர்கள் வீரன் மிக்க
மிதிலைவாழ் சனக மன்னன். 3

72. பொதுக்கடிந் துலகம் காத்துப்
புண்ணிய மகங்க ளாற்றி
மதித்துல கேத்த வாழும்
நாளிலோர் நாளில் வையம்

---

69. மரிப்போர் - இறப்போர், விசுவேசர் - சிவபெருமான், மகங்கள் - யாகங்கள்

70. ஒன்னலர் - பகைவர், திறை - அரசிறை, அரியின் பீடம் - சிம்மாசனம் வரை - மலை

71. கார் - மேகம். 72. மகங்கள் - யாகங்கள்

விதிப்படி தோற்றி நின்றிங்கு
அழிந்திடும் விருத்தி யெல்லாம்
உதித்தமெய் யுணர்வால் நோக்கி
உருநிலை யாமை கண்டான். 4

73. அறிந்திடும் பொருள்கள் யாவும்
அழிபொரு ளன்றி நித்தம்
செறிந்திடும் பொருளிங் கொன்றும்
கண்டிலேம் செகமென் றோர்பேர்
உறும்பொரு ளெல்லாம் ஐந்து
புலனன்றி அயலொன் றில்லை
பிறந்திடும் அதுவும் யூகித்
துணர்ந்திடிற் பேய்த்தே ராமால். 5

74. இன்பமென் றிசைந்த யாவும் விடம்கலந் திட்ட தேனாம்
பின்பவை துன்ப மாதல் பிரத்தியட்சக் காட்சி யாகு
மின்பொரு நவத்து வார மெய்யை நாமென்று வீணே
அன்புகொண் டுறுநா ளெல்லாம் அவத்திலே கழித்தோம்
அந்தோ! 6

75. என்றிரு வினையொப் பாகி மலபரி பாக மேய்ந்து
நன்றுறும் சத்தி தோய்ந்த நன்மையால் எண்ணி யன்றே
ஒன்றிய பந்த மெல்லாம் உவாக்கழித் தெடுத்துக் கக்கி
முன்றாகும் வாந்தி அன்ன மென்னவே முனிந்து நீத்தான். 7

76. மைந்தனுக் கரசை ஈந்து மந்திரி மார்பா லாக்கித்
தந்திரச் சேனை விட்டுத் தனியனாய்க் கற்பு நீங்காச்
சுந்தர மனைவி யோடும் தொழுந்தவ வேடம் தாங்கி
வந்தனன் என்னை யாளும் வரதன்வாழ் காசி தன்னில். 8

77. பகிரதன் வேண்ட அண்ணல் படர்சடை யிழிந்து வந்த
தகைபெறு கங்கை தன்னைத் தாழ்ந்ததில் மூழ்கி நேம
மகிழ்ந்துசெய் தெய்திக் கால வயிரவன் தண்ட பாணி
மிகுபதம் பணிந்து துண்டி விநாயகன் தாள்மேல் வீழ்ந்து. 9

78. பசியநஞ் சுண்ட கண்டப் பவளச்செஞ் சடில முக்கண்
விசுவநா யகனை ஞான விசாலாட்சி யொடுங்கண் டேத்தி
இசைவுறு மிகுமன் பாற்கண் ணீரிறைத் திறைஞ்சிப் போந்து
திசைபுகழ் முத்தி மண்ட பத்தினிற் சென்றான் மன்னோ. 10

74. பிரத்தியட்சம் - காணத்தக்கது. அவம் - வீண்.
76. வரதன் - காசி விசுவநாதர்.

79. அந்தமண் டபத்தின் மேவும் அருமறை முனிவர் தம்மை
முந்தவே செய்த தன்மம் முழுவதும் கண்டாற் போல
விந்துவின் குலத்தில் வந்த மிதிலைமன் வைன்கண் டேத்திப்
பைந்துணர் மலர்கள் தூவிப் பணிந்தனன் பரிவாற் பல்கால். 11

80. வியாசனே முதலா ஞான மேதகு குரவ ரெல்லாம்
தயாவொடும் ஈன்ற கன்றைத் தாய்ப்பசு நோக்கு மாபோல்
வயாவொடு வருத்த மாற மன்னனை இனிது நோக்கிப்
பயோததி யிரைத்தாற் போலப் பற்பல வாசி சொல்லி. 12

81. விரதவே டத்தினோடு மேவிய வடிவுங் கண்ணீர்
சொரிதரப் புளகம் போர்த்துத் துளங்கிவீழ்ந் தெழுந்து நிற்கும்
பரிவையும் கண்டி ரங்கிப் பணிமிதி லேசன் தன்னை
அரசவந் தனையோ என்றங்கு அருள்மொழி புகன்று கேட்பார். 13

82. மன்னுயிர் புரத்தல் விட்டு வந்தவா றென்கொல் என்ன
அன்னவன் சொல்வன் பொல்லா அரும்பவக் கடலில் வீழ்ந்த
என்னைநீர் எடுத்தல் வேண்டும் யான்கரை ஏறல் வேண்டும்
உன்னிவந் ததுவே றில்லை என்றனன் உலக மன்னன். 14

83. அனைவரும் உவந்து கேட்டங்கு அற்புதம் எய்தி யார்க்கும்
வினைகடிந் தருள வல்ல மேதகு தவமி யப்பேர்
முனிவனை நோக்கி இந்த முதிருமன் பரசற் கின்னே
நனையலர் இதழிப் புத்தேள் நற்பதங் கொடுத்திஎன்றார். 15

84. அவ்வுரை கேட்ட லோடும் அரசனை அழைத்து ஞானத்
திவ்வியம் உணர்ந்த செல்வத் தவுமியர் சிறந்த அந்த
வைவ்வமின் மண்ட பத்தோர் தனியிடத் திருந்து மன்னன்
உய்வித ஞான தீக்கை உண்மையா கமப்பண் போர்ந்து. 16

85. அறுவகை யவுத்தி ராதி அன்புடன் புரிந்து யிர்க்கண்
உறுமல மாயை கன்மம் ஒழிந்தெழுந் தஞ்சு மோதிப்
பெறுமருள் அவத்தை ஐந்தும் பேசிநின் மலத்தில் ஆவி
நிறைவுடன் விரவும் வண்ணம் நிருமித்தங் குபதே சித்து. 17

86. தாடலை முடியின் மீது சாத்தினன் மிதிலே சன்தாள்
நீடருள் பெற்று வாழ்ந்தேன் எனத்தொழ நீறு சாத்திப்

79. தன்மம் - அறம், தருமம். 80. பயோததி - பாற்கடல்.

83. புத்தேள் - தெய்வம்

பீடுறும் அரச இன்னும் வேண்டுவ பேசாய் என்னக்
கோடுறழ் புயத்தி ராசன் குவித்திடு கரத்த னாகி. 18

87. எந்தையே! தவுமி யாஎம் ஐயனே! யானிங் குய்யத்
தந்தபே றறிய வேதா கமத்தினிற் சாரு முண்மைச்
சிந்தனை விரித்துப் பேசிச் சித்தத்தி லிருத்தும் வண்ணம்
புந்திசெய் தெனக்கோ ருண்மைத் தலமும்நீ புகல்தி
என்றான். 19

88. கேட்டலும் கிருபை எய்திக் கேடிலான் செல்வன் மன்னா
நாட்டமூன் றுடையோன் நந்திக் குரைத்திட நந்தி முன்னாள்
மீட்டருட் சனகர்க் கோத வியாசர்அங் கவர்பாற் கேட்டுக்
கோட்டமில் சூதர்க் கோதும் உண்மையாங் கொண்ட வாறு.
20

89. அன்பினாற் கேட்பை யாகில் ஐயமும் திரிவும் தீரும்
இன்பமும் சீவன் முத்தி இயல்புஇங் குடனே எய்தும்
துன்பெலாம் நீங்கி நீங்காச் சுகபர போக மேவும்
முன்புறாப் பேறி தன்றே தவுமியன் மொழிவன் மாதோ. 21

வேறு

90. அருவாகிய காரண மாயையினால்
அகிலங்களை யாக்கி நிறுத்திடுநாட்
பரைநாயக னான பராபரனிப்
பாராண்மன ராணை நிறுத்துவபோல்
விரிவானவே தாகம சாத்திரநன்
மிருதிக்கலை யோடு புராணமிக
உரைசெய்ததி லேயரு ளாக்கினைவைத்து
உலகத்துயிர் ஓர்ந்துய ஓதினனே. 22

91. அதில்நான்மறை யிற்கரு மம்பதினான்கு
அகலாமிரு திக்கலை யாதிகளில்
விதிகொள்கரு மம்பதி னாறும்அருள்
மேவுஆகமத் திற்சரி யாதியும்வைத்து
இதமோடுசந் துட்டிகள் தன்திருவுள்
ளத்தெய்த இயற்றும் அவர்க்கின்மை
உதவுஞ்செய லும்நெறி தப்பினபேர்க்
குறுதண்டமும் ஓதினன் உம்பர்பிரான். 23

88. நாட்டமூன்றுடையோன் - முக்கண்ணன். 90. ஆக்கினை - கட்டளை.
91. சந்துட்டி - மகிழ்ச்சி. தண்டம் - தண்டிப்பு. விதி - பிரமன். மால் - திருமால்.

92. வேதாகம சாரம் உணர்ந்தபடி
விதிமால்முத லாகிய பல்லுயிர்கள்
ஆதாரம்ந மக்கர னாரடியே
யல்லாதிலை என்று நினைந்துறுநாள்
நாதாதிப னான சிவன்தனது
நல்லாணை கடப்பவர்க் கச்சம்வரப்
போதார்மணம் போற்பிரி யாஉமைபாற்
பொருந்துமொரு லீலை புரிந்தனனே. 24

93. அதுவென்னென வேவின விற்பிரியா
அருளாமுமை யம்மைகூ தாடுமிடத்து
இதமின்றி எதிர்த்துரை செய்தனளென்று
இகல்செய்து முனிந்தொரு கோவடிவாய்ப்
பதிநன்னதி கான்மலை நாடுகளிற்
பத்தூழி படர்ந்திட நீமருவி
மிதியென்றொரு சாபம் வழங்கிஇது
விடும்ஓர்தலத் தென்றும் விதித்தனனே. 25

வேறு

94. அப்படியே ஆவுருவாய் உமையம்மை
சஞ்சரித்தத் தலத்தின் மேவிச்
செப்பிரிய சாபவிமோ சனமான
தாலந்தச் சிறப்பு மேவும்
மெய்ப்பதிகக்குக் கோமுத்திச் சேத்திரமென்று
உலகமெலாம் விளம்பும் அந்தச்
சுப்பிரமாம் ஊர்வளமும் தலம்தீர்த்தம்
மூர்த்திமுன்னாட் தோன்று மாறும். 26

95. இந்துசே கரனான மாசிலா
மணித்தியா கேசன் வானோர்
உய்ந்திடநஞ் சுண்டகிரு பாநிதி
ஏழைகட் கிரங்குமுமை கோன்என்றும்
அந்தமிலா அத்தலத்தி லிருந்துவிளை
யாடலுமிங் கறைவன் அந்தச்
சுந்தரஆ வடுதுறைசை மருவுநாடு
ஒன்றுளது சொல்லக் கேண்மோ. 27

---

92. லீலை - திருவிளையாடல்.

93. கோ வடிவு - பசுவடிவு, கான் - காடு.

94. ஆவுரு - பசு உருவம். 95. இந்து - சந்திரன்.

96. ஏணாட்டும் புயவலிசேர் மிதிலேச
அதன்நாமம் இயம்பில் என்றும்
சேணாட்டுள் ளோர்தொழுசோ ணாடாகும்
எங்குமிலாச் சீர்சேர் அந்தச்
சோணட்டின் வளமுந்தி வளமுமருட்
சிவதலத்தின் தொகுப்பு மிக்க
பாணாட்டும் வடமொழியாற் சொல்வனெனத்
தவமியர்முன் பகர்வன் மாதே. 28

இரண்டாவது
மிதிலேசன் காசிநகர் அடைந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 96

திருச்சிற்றம்பலம்

2. மிதிலேசன் காசிநகர் அடைந்த அத்தியாயம் (சுருக்கம்)

காசிநகரில் இறப்போருக்கெல்லாம் முத்தி கொடுத்தருளும் விசுவநாதரை முனிவர்கள் வணங்கி, வேத வியாசருடன் வேள்விகளைச் செய்து கொண்டிருக்கும் நாளில், ஒருநாள் சனகனாகிய மிதிலேசன் அங்கடைந்ததைப் பற்றிச் சொல்லப் புகுவோம்.

சிற்றரசர்களால் திறை கொடுத்து வணங்கப்பெற்றவனும், அறம் வளர்த்து அரியாசனத்திருந்தவனும், பொறையுடை நெஞ்சத்தவனும், மலைபோன்ற வலிய புயபலங்கொண்டவனும், மேகம் போன்று அனைவருக்கும் வழங்குபவனும், கருணை நோக்குடையவனும், மங்கையர்க்கு அமுதம் போன்றவனும், சந்திரகுலத்தில் தோன்றியவனும், சிவபெருமானிடத்து மிகுந்த அன்புடையவனும், வீரர்களுக்கெல்லாம் வீரனும் ஆகிய மிதிலைவாழ் சனக மன்னன் நீதிமுறை தவறாது உலகம் காத்தும், புண்ணிய வேள்விகளைச் செய்தும் அனைவரும் புகழும்படியாக வாழ்ந்து வந்தனன்.

இவ்வாறு சனக மன்னன் இருக்கும் நாளில் ஒருநாள் அவனுக்கு நிலையாமையைப் பற்றிய உணர்வு எழுந்தது. இவ்வுலகமானது விதிப்படியே தோன்றி, நின்று, அழிந்து, மீண்டும் மீண்டும் இந்த மூன்று நிலைகளையே அடைகின்றது

96. சேணாடு - சுவர்க்கம்

என்ற மெய்யுணர்வு தோன்ற முடிவில் ஒன்றும் நிலையாமைக் கண்டான் மன்னன்.

உலகத்திலே நாம் அறிந்திடும் எல்லாப் பொருள்களும் அழியக்கூடிய பொருள்களேயாம். நிலைபெற்ற அழியாத பொருள்கள் இவை என எதுவுமே கிடையாது. இவ்வுலகத்தவர் உணர்வாலறிவது ஐம்புலன்களல்லாமல் வேறொன்றும் இல்லை. அவையும் நம்மைவிட்டுப் பிரியும்போது பேய்த் தேராக முடியும்.

இன்பமென்று கூறுகின்றவையெல்லாம் விடம் கலந்த தேனேயாகும். பின்பு அவை துன்பமாக மாறி அதை நாம் உணரும் சமயம் உண்மையில் நேர்க்காட்சியாகும். ஒன்பது துளைகளுடன் கூடிய இப்பூதவுடலை 'நாம்' என்று வீணே அன்புகொண்டு வாழ்கின்றோம். இவ்வாறு எண்ணி வாழ்ந்த, வாழ்கின்ற நாள்களெல்லாம் வீணாகக் கழிந்த நாள்கள் அல்லவோ! என வருந்தினான் அம்மன்னன்.

இந்நிலையில், இருவினையொப்பாகி, மலபரிபாகமும், சத்திநிபாதமும் வந்தடைய, பந்த பாசங்களிலிருந்து விடுபட முற்பட்டான். அரசாட்சியை மகனுக்கு அளித்து, மந்திரிகளிடத்தில் மகனை ஒப்படைத்து, படைகள் அனைத்தையும் விட்டுவிட்டுத் தனியாளாய், கற்புடை மனைவியோடு தவவேடம் பூண்டு காசிமாநகர் வந்து சேர்ந்தான் சனகன்.

முன்பு பகீரதன் வேண்ட அண்ணல் சிவபெருமான் படர்சடை இழிந்து வந்த கங்கையை வணங்கி அதில் நீராநியமம் முடித்தான். காலபைரவர், தண்டபாணி, துண்டிவிநாயகர் ஆகிய இவர்களைப் பணிந்தான். முக்கண் விசுவநாதப் பெருமானையும் ஞான விசாலாட்சியம்மையையும் கண்டேத்தி, ஆனந்தக்கண்ணீர் சொரிய அங்குள்ள முத்தி மண்டபத்திற்குச் சென்றான்.

அந்த மண்டபத்தில் வீற்றிருந்த அருமறை முனிவர்களை வணங்கி, மலர்களால் அர்ச்சித்து மகிழ்ந்த சனக மன்னனை அம்முனிவர்கள் அன்புடன் நோக்கி வாழ்த்தியருளினார்கள். மிகுந்த தயவோடும், ஈன்ற கன்றைத் தாய்ப்பசு நோக்குமா போல மன்னனைக் கருணையோடு நோக்கி, விரத வேடத் தோடும், அழுத கண்ணீரோடும், அடிவணங்கிப் பணிந்து நிற்கும் உம் நிலைக்குக் காரணம் யாது? எதற்காக இக்காசி நகர்

வந்து எங்களை வணங்கியுருகுகிறாய் என முனிவர்கள் வினவினார்கள்.

இதற்கு சனக மன்னன், பிறவிக்கடலில் விழுந்து துன்பமுறும் அடியேனைத் தாங்கள்தான் கரையேற்றல் வேண்டும். இது ஒன்றே அடியேன் வேண்டுகோள் என்றனன். இதனைக் கேட்ட முனிவர்கள், தவுமிய முனிவரைப் பார்த்து, இத்தகைய பக்தியும் பக்குவமும் உடைய மன்னனுக்குத் தாங்கள் தான் அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

முனிவர்களின் வேண்டுகோளை ஏற்ற தவுமிய முனிவர் சனக மன்னனை அழைத்து, முத்தி மண்டபத்திலேயே ஒரு தனி இடத்திலிருந்து, ஔத்திரிதீக்கை செய்து, உயிர்க்கண் தோன்றும் மல மாயை கன்மம் ஒழிக்கும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, ஐந்தவத்தைகள் விளக்கி, திருவடி தீக்கையும் செய்து, வெண்ணீறு அணிவித்து அருளினார். மன்னனே! இன்னும் ஏதாவது கேட்க விரும்பினால் கேட்பாயாக என்றும் பணித்தார்.

உடனே தவுமிய முனிவரை வணங்கிய மன்னன், எந்தையே! அடியேன் உய்வதற்குத் தக்கவாறு வேதா கமத்தினிற்சாரும் உண்மைச் சிந்தனைகளை விரித்துப் பேசி மனத்தில் வைத்துச் சிந்திக்க ஓர் உண்மைத்தலத்தை அடியேனுக்கு அருளுவீராக என்று வேண்டினான்.

சனக மன்னன் கூறியதைக் கேட்ட தவுமிய முனிவர் உண்மைத் தலத்தைப் பற்றிக் கூற முற்பட்டார். முன்பு, சிவபெருமான் நந்திக் குரைத்திடவும், நந்தி அதை அருட் சனகருக்கு ஓதவும், அவர் வியாசருக்குச் சொல்லவும், அவரிடமிருந்து சூதர் வழியாக அறிந்ததைச் சொல்வதாகவும் கூறினார். இதைக் கேட்டால், ஐயமும் திரிபும் தீரும். இன்பமும் சீவன் முத்தி இயல்பும் இங்கு உடனே எய்தும். துன்பமெல்லாம் நீங்கும். எல்லையற்ற சுகபரபோகம் மேவும். எனவே இதைக் கேட்பாயாக எனப் பணிக்கின்றார்.

அருவாகிய காரண மாயையினால் எல்லா உலகங் களையும் இறைவன் தோற்றுவிக்கும்போது வேதம், ஆகமம், சாத்திரம், மிருதிக்கலையோடு புராணம் ஆகியவற்றை அருளிச் செய்து பாராளும் மன்னன் மக்களுக்கு ஆணையை நியமிப்பது போல் அந்நூல்களிலே அருளாணையையும் உலக உயிர்கள் உய்வதற்காக நியமித்தார்.

மேலும், நான்மறையில் கருமம் பதினான்கும், மிருதிக்கலை போன்றவற்றில் கருமம் பதினாறும், ஆகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் வைத்தார். அத்துடன், தமது திருவுள்ளம் மகிழும் படியாக சாத்திரமுறைப்படி கருமத்தைச் செய்கின்றவர்களுக்குத் திருவருள் புரிதலும், முறை தவறியவர்களுக்குத் தண்டனை அளிப்பதும் ஆகிய இவற்றையும் அருளினார்.

நான்முகன், திருமால் போன்ற தேவர்களும், பல்லுயிர் களும், வேதாகமசாரங்களின் வாயிலாக உணர்ந்தபடி இறைவனது திருவடிகளே யல்லாமல் நமக்கு வேறு ஆதாரம் இல்லையென்று எண்ணியிருக்கும் நாளில், நாதாதிபனான சிவன் தனது நல்லாணையை மீறுபவர்களுக்கு அச்சம் தோன்றும் படியாக ஒரு திருவிளையாட்டினை உமையம்மை யினிடம் செய்தார். அந்த விளையாட்டினை நாம் விளக்க மாகக் கூறுவோம்.

ஒருமுறை, சிவபெருமானும் உமையம்மையும் சூதாடு கின்றபொழுது, உமையம்மை இறைவனை எதிர்த்துப்பேசி இகல் செய்தாள். அதனால் சிவபெருமான் சினமடைந்து, நீ பசுவடிவம் எய்தி மலைநாடுகளில் பத்தூழிக் காலம் திரிவாயாக என்று சபித்தார். பின்னர், அச்சாபம் ஒரு தலத்தில் நீங்கும் என்றும் விதித்தார். அவ்வாறே உமையம்மையும் ஆவுருவாய் சஞ்சரித்து வரும்போது சாபவிமோசனமாகும் படியான தலத்தினை அடைந்தாள். அத்தலமே கோமுத்திச் சேத்திரம் என்பதாகும். இது, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் பெருமையினையுடையது. இதுவே, திருவாவடுதுறை என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பெறும்.

திங்களை முடியிலே சூடியவனும், மாசிலாமணியானவனும், தியாகேசனும், தேவர்கள் உய்ந்திட நஞ்சுண்டவனும், கிருபாநிதியும், ஏழைகட்கு இரங்கும் உமைகோனும் ஆகிய சிவபிரான் என்றும் இத்தலத்திலிருந்து அருளாடல்கள் பல புரிந்து அடியவர்களுக்கு இன்பம் அருளுகின்றான்.

திருவாவடுதுறைசை என்னும் இத்திருநாட்டின் பெயரைக் கூறிய அளவில், பேரின்பமும் சீவன் முத்தியும் உடனே வந்தடையும். சுவர்க்கத்திலுள்ளோரும் தொழும்படியான சிறப்புமிக்க சோணாடாகும் இப்பதி. உலகில் எங்குமிலாச் சிறப்பு இச்சிவதலத்திற்கே உரியதாகும். இதைச் சூதமகா

முனிவர் கூறியபடியே உமக்குக் கூறுகிறேன் எனத் தவுமிய முனிவர் எடுத்துரைக்கின்றார்.

மூன்றாவது
சோணாட்டுச் சிறப்புரைத்த அத்தியாயம்

97. திங்கள்முடிச் சிவபெருமான் திருவருளாற்
சுந்தரர்நற் சேரமா னோடு
அங்கயிலைக் கிபமேறி வருஞ்சோதி
கண்டெதிர்போய் அங்கை கூப்பத்
துங்கமுனிக் கணமிதென்கொ லெனக்கேட்ட
சங்கையறத் தூயதாந் தன்மை
பொங்குதவத் துபமனியர் புகழ்ந்துரைத்த
தென்திசையிற் பொருப்பொன் றுண்டால். 1

98. அம்மலையா வதுசிவனை யிகழ்ந்துமகம்
புரிந்தபிதா வழியச் சீறிச்
செம்மையுடன் பார்ப்பதியோர் திருமகளாய்
வரத்தவமுன் செய்த தாகும்
எம்மலையு மதற்கிணையன் றதன்நாமம்
மலையரைய னென்று மிக்க
பொன்மருவும் இமவானென் றும்பெருமை
யாய்ச்சான்றோர் புகல்வ ரன்றே. 2

99. மாமலர்ப்பொய் கையிற்குழந்தை யுருவாகி
உமையமலை மருவக் கண்டு
சேமநிதி யெனஇமவான் மேனைகையி
லெடுத்தளிப்பச் சீராட் டோடு
நேமமிகுந் தவள்வளர்ப்ப ஐயாண்டிற்
தவமுமையாள் நிற்றல் கண்டு
சோமகலா நதிச்சடையோன் மணம்பேசி
வதுவைசெயத் துணிந்த ஞான்று. 3

100. திருக்கலியா ணக்கோலஞ் சேவிப்ப
உலகமெல்லாந் திரண்டு வந்து
பொருப்பினிடத் துறப்பாரம் பொறாமையாற்
பூமிவட புறங்கீழ்ச் சாய

97. இபம் - வெள்ளை யானை, பொருப்பு - மலை.
98. சீராட்டுதல் - கொண்டாடுதல். வதுவை - கலியாணம்
100. தசகங்கை - பத்துகங்கை. கரகம் - கமண்டலம்

மருக்கமழ்பூங் கொன்றையணி மார்பர்அகத்
தியமுனியை மகிழ்ந்து நோக்கி
அருட்கருணை யாற்தசங் கையிலொருகங்
கையைக்கரகத் தடைத்தங் கீந்து. 4

101. விருப்புடன்நீ நமதுமணக் கோலவெழில்
பொதியமலை மேவிக் கண்டங்கு
இருப்பதற்குப் போதுகென விடைகொடுப்பக்
குறுமுனியும் வியந்து போற்றி
உருக்கமுடன் தென்திசைமேற் போந்துவிந்த
வரைச்செருக்கை யுடனே தீர்த்துக்
கருக்கொள்முகி லுலவுதிருச் சயிலவரை
தொழுதுகா ளத்தி மேவி. 5

102. திண்ணனார் கண்மலர்க்கு மிச்சிலிக்கும்
ஆசைகொண்ட சிவனை ஏத்தித்
தண்ணிலா நகைக்காமக் கண்ணிமுலைக்
கரிபாயுந் தழும்பு பெற்ற
அண்ணலார் தமைக்காஞ்சி தனில்வணங்கி
எப்பதியும் அன்பாய் போற்றி
வண்ணநீள் மலர்ச்சோலைச் சையமால்
வரையிடத்தில் வந்தா னன்றே. 6

103. சையபருப் பதப்பெருமை என்சொல்வேன்
நாவாலோர் தாலத் தாலே
மெய்யுணர்ந்து சொலலாமோ தாலமே
மூங்கூடி விளம்பி னாலும்
ஐயமறச் சொலலாகா ஆதலினால்
அறிந்தவகை அறைகு வேன்நான்
துய்யபுகழ் மிதிலேச கேண்மின்என
முனிமகிழ்ந்து சொல்லு கின்றான். 7

வேறு

104. ஆகமமெஞ் ஞானமுணர் அன்பரிடம் ஓர்பால்
யோகினி லுறங்குமவர் ஒன்றுமிடம் ஓர்பால்
சேகரறு தவம்புரிவோர் சேருமிடம் ஓர்பால்
மாகமுறு தேவர்பலர் வைகுமிடம் ஓர்பால். 8

---

101. சயிலவரை - திருச்சயிலமலை.

102. மிச்சில் - எச்சில். காமக்கண்ணி - காமாட்சியம்மை

103. சையபருப்பதம் - திருச்சயிலமலை. தாலம் - நா.

105. ஏரணுகு விஞ்சையர்கள் ஏயுமிடம் ஓர்பால்
ஆரணம் உணர்ந்தவர்கள் ஆளுமிடம் ஓர்பால்
சீரணகு சித்திபெறு செல்வரிடம் ஓர்பால்
காரணம் இயம்புதமிழ் கற்றோரிடம் ஓர்பால். 9

106. இத்தகைமை கொண்டிலகும் இம்மலையின் மீதே
மொய்த்துவளர் சந்தன முதிர்ந்தபொழில் மேவும்
தத்தைகள் மொழிந்திடு தமிழ்ச்சொல்நயம் விண்வாழ்
சித்திரமின் னார்பயின்று செப்பிடுவர் என்றும். 10

107. தண்டலைமீ தேறியே தவழ்ந்துபடர் துய்ய
கொண்டலைவிண் மாதர்நீர் குளித்துவரம் பேறிக்
கண்டுமுனம் வைத்தவெண் கலிங்கமிது வென்றே
முண்டக மலர்க்கைகொ டிழுத்திடுவர் மொய்த்தே. 11

108. கோம்பியென மூக்குறு குறத்தியர்கள் கூடி
ஆம்பல்வெண் மருப்பதுகொ டைவனம் இடிக்கும்
மேம்படும் உலக்கைதரு மீதுற வுதிர்ந்த
தேம்பழ முசுக்கள்பல தின்றகுதி கொள்ளும். 12

109. திண்சிகரி யுச்சியிடை சேர்மதுவை வேடப்
பெண்சிறார்மி குந்ததின்மேற் பின்னுகொடி யேறும்
பண்புநல்வே ழம்பமினார் பைங்கழைமே லாடற்கு
எண்பெறு கயிற்றின்மிசை ஏறுதலை ஒக்கும். 13

110. கானவர்கள் விற்கொடு கலைக்குலம் எழுப்பப்
போனதிலோர் மான்மதியுட் புக்கதென எண்ணி
ஆனகணை ஏவுதல்முன் அம்மறியின் கண்பார்த்து
ஈனமில் கொடிச்சியர்கள் என்றுமருள் கொள்வார். 14

111. தண்ணருவி சேர்முழவ முந்திரள் தடக்கை
வண்ணமத மால்கரிகள் வாய்பிளி றொலிப்பும்

---

105. விஞ்சையர் - புலவர், வித்தியாதரர். ஆரணம் - வேதம்

106. தத்தை - கிளி, சித்திரமின்னார் - பேரழகுமிக்க தேவப்பெண்கள்.

107. கொண்டல் - மேகம். வரம்பு - கரை. கலிங்கம் - சீலை, ஆடை. முண்டக மலர் - தாமரைப்பூ

108. கோம்பி - பச்சோந்தி, ஆம்பல் - யானை, மருப்பு - கொம்பு, மூசுக்கள் - குரங்குகள்.

109. வேழம்பர் - கழைக்கூத்தர். மினார் - பெண்கள்.

110. கலைக்குலம் - மான்கூட்டம், மதி - சந்திரன், மறி - மான், கொடிச்சியர் - குறிஞ்சி நிலத்துப் பெண்கள்.

எண்ணரு மயிற்குலம். இசைக்குமொலி யும்நீள்
மண்ணகமும் விண்ணகமு மாதிரமும் போர்க்கும். 15

112. இன்னபல நல்வளம் இலங்கும்வ ரைக்கண்
முன்னமலை வாரிதியை யுண்டமுனி மொய்ம்பிற்
பன்னகம ணிந்தபரமன் பழைய நாமம்
தன்னையுள மெண்ணியவண் சார்ந்துறையு மேல்வை. 16

113. சூரனிக லுக்குடைவு கொண்டுசுர ரோடும்
பாரின்மிகு புண்மறைவேள் பண்பொடும்பூ சித்த
ஊரிட மதற்குள்மக வானுரு வொளித்தே
சீருற விருந்துமலர் செய்வனமொன் றாக்கி. 17

114. நீருணவி லாமலவை வாடுதல்நி னைந்தே
வாரணமு கன்தனைவ ழுத்திவரங் கொள்ளப்
பேருணர்வி னோர்க்கருள்செய் பேழைவயிற் றெங்கோன்
காரணம் விளங்கவொரு காகவுரு வாகி. 18

115. கும்பமுனி கொண்டுவரு குண்டிகையின் நீரை
இம்பருல குய்யவுளம் எண்ணியே கவிழ்ப்பச்
சம்புவருள் கங்கையதோர் தண்ணதிய தாகி
உம்பர்தொழ வெள்ளமலிந் தோடியதை யன்றே. 19

வேறு

116. அன்று தொட்டது காவி ரிப்பெய
ராய்வி ளங்கிய தன்றியும்
வென்றி யுற்றிடு பொன்னி யென்றும்
விளம்பு வார்தன் மேன்மையைத்
தொன்று தொட்டெவர் பேசி னுந்தொ
லையா வளந்தரு மாதலால்
இன்றெ னக்கெண வொண்ணு மோசில
வேன்ற வாருரை செய்குவாம். 20

117. இடமி குத்தவிவ் வுலகு ளோர்தமக்
கின்ப மீந்து நடந்துபோய்க்
கடலி னிற்புகு பொன்னி விண்ணவர்
காதல் கொண்டுணு மமுதமின்

112. வரை - மலை. வாரிதி - கடல். பன்னகம் - பாம்பு. பரமன் - சிவபெருமான்
114. வாரணமுகன் - விநாயகன். பேழை வயிற்றெங்கோன் - விநாயகன்.
115. குண்டிகை - கமண்டலம். இம்பருலகு - இவ்வுலகு. சம்பு - சிவன். உம்பர் - வானோர். 116. தரங்கம் - கடல்.

குடக முற்றிடு சைய மால்வரை
மீதி ழிந்து குணக்குறுந்
தடமி குத்ததன் தாய்ம னைக்கெழு
தன்மை போல விளங்குமே. 21

118. கால்க ளெண்ணில கொண்டு நற்கரங்
கக்க ரம்பல வீசியே
மேல்கொ ளுங்குமி ழித்த ணங்களு
மீன நோக்கமுங் காட்டிநீள்
மால்கொள் தங்குமு தச்செவ் வாய்முன்
மலர்ந்தி ரங்கிநற் பொன்னியைம்
பால்கொள் மன்னுயிர் காக்கும் அன்னையின்
பான்மை கொண்டு நடக்குமே. 22

119. தான மாக்களை முல்லை மேன்முலை
தங்கு மாக்களைப் பாலைமேல்
ஆன தாக்கிநற் பழனம் எங்கணும்
ஆன தாக்கிநீள் மருதமர்
மேனி லம்பெறு முப்ப ழங்களு
முப்ப ளம்பெற வீசுமால்
வான முட்ட வளர்த்த சையநல்
மன்ன வன்தரு பொன்னியே. 23

120. காலை யுச்சிநல் மாலை யாந்திரி
கால முப்புவி யோர் மகிழ்ந்து
ஒல மிட்டர கரவெ னப்படிந்
தோதும் மந்திர ஓசையே
சால மிக்கெழு காவி ரிப்பெயர்
தன்னை உன்னுவோர் வினையெலாம்
நீல முற்றிடு கந்த ரத்தர்முன்
நேர்ந்த முப்புரம் ஒக்குமே. 24

வேறு

121. அகில நிற்க நடுவிருந்த அம்பொன் மேரு வென்னநாம்
புகலு மிக்க பொன்னிநேர் பொருந்து நாடொன் றுண்டது
சகம கட்கு மார்பினிற் தரித்த வாரம் ஒக்குமென்று
இகல்ம றுத்த தவுமியப் பேர்இருடி பின்பும் ஓதுவான்.
25

120. கந்தரத்தர் - நீலநிறக் கழுத்தையுடைய சிவபெருமான்.

122. ஏற்ற மான வெற்றிகொண் டிலங்கு கின்ற புற்கொடி
நாற்றி சைக்குள் மேருவின்கண் நாட்டி வாழ்ந்த சோழர்கள்
போற்றி யாண்டு வேறுவேறு புகழ்நி றுத்து கின்றதால்
ஆற்றல் கொண்ட சோழநா டதற்கு நாமம் ஆகுமால். 26

123. ஈடி கழ்ந்த பொன்னி நாட தென்று மிக்க காவிரி
நாட தென்று மோதலாமந் நாட்டின் மேன்மை யார்சொல்வார்
நீடு கின்ற நல்வ ளம்நி னைந்த மட்டும் சொல்லுகேன்
பீடு தங்கு மிதில கேண்மி னென்று பேசு வானரோ. 27

124. கன்று தேடி ஆப்ப ரந்து கதறி யேகு மாறெனச்
சென்ற காவிரிப்பு னல்சி றந்த ஓடை நன்மடு
வென்ற பல்லி டங்க ளும்ஏ திர்ந்து பாய வார்ப்பொடும்
துன்று மள்ளர் பழன மெங்கும் தொக்கு மேர்கள் தாவியே. 28

125. சேறு செய்த செய்க ளிற்றி ரண்டு முத்தி மங்கையர்
நாறு தங்க வூன்றி டந்த லங்கொள் சாலி எங்கணும்
ஆறு கின்ற சீடர் கல்வி அறிவு தேறு மாறுபோல்
மீறி யெங்க ணுந்த ழைந்து மென்கு ருத்து திக்குமே. 29

126. களைக டிந்தி டும்ப தங்கள் கண்டு வந்து கடைசியர்
வளைகு லுங்கு கைகள் கொண்டு மல்கு மாம்பல்
குவளைகள்
கிளைமி குந்த கழுநீர் கஞ்சஞ் கீன்றெ டுத்தே யெறிவர்புல்
முளைக ளொன்றி லாமை யால்மு ழங்கு மிக்க
துதியொடும். 30

127. பாடு வார்கள் மீறுதம் பயோத ரங்க ளசையநின்று
ஆடு வார்கள் அன்னமொத் தசைந்து லாவு வார்கடங்
கூடு மள்ளர் கட்குடங் கொடுப்ப வாங்கி யுண்டுளே
தேடு வார்கள் கலவியின்பஞ் சிறிது செங்கண் மள்ளியர். 31

128. காந்த ளிங்கெ ழுந்த தென்கொ லென்று கைநி மிற்கடிந்து
ஏந்தி ஆம்ப லோஇ தென்று எண்ணி நோக்கி மீனமென்று
ஓர்ந்து மள்ளர் கையின் மீது குத்தன் னார்செய் மூரலாற்
போந்த முத்தி தென்று வாங்கிப் போயிற் றென்பர்
புருடன்மார். 32

---

124. மள்ளர் - உழவர். பழனம் - வயல்.
125. சாலி - நெல். சீடர் - மாணாக்கர்.
127. பயோதரங்கள் - நகில்கள் 128. மூரல் - சிரிப்பு

129. மானி னங்கள் போல்வ யற்குள் மன்னு மாதர் கால்களை
ஈன மொன்றி லாவ ராலி தென்று மள்ளர் கைதொடத்
தான மீதோ புல்கு தற்கெ னக்கை கொண்டு தள்ளுதல்
தேனி லங்கு கூந்தல் மின்னார் சிலர்கள் கண்டு நகுவரே.
33

130. மத்திய பான உண்டி டும்ம யக்கி னாற்சில் மாதரை
முத்த மீயெ னச்சொல் வோரை முடுகி மைத்து னப்பள்ளர்
நத்து குத்த முத்த மீதோ நாங்கள் ஈவோம் கொள்கவென்று
அத்த லத்து முத்தை மெத்த அள்ளி வீசி ஆர்ப்பரால்.
34

131. தாய்கள் தங்கள் மகவினைத் தயாவொ டும்வ ளர்ப்பபோல்
ஆய செய்கை மள்ளர்காத் தளிக்கும் நெற்ப யிர்க்குழாம்
ஏய மெய்க்கு ளிர்ச்சி தோன்ற இறைவர் மக்கள் வளர்வபோல்
மாயி ரும்பூ வுலகெ லாம்வ ளர்க்க வென்றே வளருமே. 35

132. கன்ன லன்று நெல்லெ னக்க தித்து யர்ந்து களைகள்மொட்டு
என்ன நீண்டு சூல்மு திர்ந்தெம் ஈச னன்பர் சிந்தைபோல்
முன்ன லர்ந்தவ் வன்பர் மூன்றி டத்தி னும்வ ணங்குகம்
என்ன வேவ ளைந்தன் னோர்தம் இன்பு போல்வி ளைந்திட.
36

133. கூனு பற்கு யங்கள் கொண்ட ரிந்த ரிக்கு வித்துமேற்
பானு மண்ட லம்பு கப்ப ரீஇய சூட டுக்கிநீள்
வானி லங்கு மேக மொத்து வளர்க டாவி னாலடித்
தான வைக ளைந்து தூற்றி யாற்றி நெற்கு விப்பரே. 37

134. நவம ணிப்பி றங்கல் போலும் நாடெ லாங்கு வித்தநெற்
தவம னுச்செய் நூலின் நீதி தப்பு றாம லைந்துபங்கு
இவண்ம கிழ்ந்தைம் பாலி டத்தும் ஈந்து மற்றோர் பங்கினை
உவகை கொண்டெந் நாளும் உண்டிங் குலக றம்பு ரப்பரே.
38

135. தண்ணி லாக்கொ ழுந்தணிந்த சடையி னார்தம் அன்பருக்கு
உண்ண வேநல் லமுத ளித்திங் குரிமை அன்பு செய்வதும்
அண்ண லார்வி ழாவெ டுத்திங்கு அகம கிழ்ந்து காண்பதும்
எண்ணில் மிக்க தவமி தாமென் றினிது ணர்ந்தே செய்குவார்.
39

129. வரால் - ஒருவகை மீன். தானம் - இடம். புல்குதல் - கூடுதல்.
130. மத்தியபானம் - மதுபானம்.
132. இன்பு - இன்பம்.

136. சரியை யோடு கிரியையுந் தழைத்த யோக ஞானமும்
உரிய பேர்கள் சோழநாட்டி லுள்ள பேர்க ளாதலால்
அரிய கல்வி செல்வம் வீரம் அறிவு தண்மை அன்பருள்
பெருமை சீலம் உறவு தூய்மை பெருகி நிற்கும் அவர்கணே. **40**

வேறு

137. காணு முட்கறை கதிர்மதி யிடத்தலாற் காணார்
பேணு மையமின் னார்மருங் கிடத்தன்றிப் பெறார்கள்
பூணும் பொய்யவர் புலவியி னிடத்தன்றிப் புகலார்
கோண வின்றிவாழ் காவிரி நாட்டுநாற் குலத்தோர். **41**

138. சுவர்க மார்பினிற் காட்டுவர் சுவர்க்கவாழ் வுடையோர்
உவக்கு மாரமு துரையினிற் காட்டுவர் நிதியைச்
சிவக்குங் கைகளிற் களங்களிற் காட்டுவர் தினமும்
புவிக்குள் மேம்படு சோழநாட் டுள்ளபூ வையர்கள். **42**

139. காரு மாரியும் பனிவரு காலமும் கலைக்காற்
சீரு லாஇள வேனிலும் போற்சென்னி திருநாட்டு
ஆரும் காண்கி லாழற்று வெங்கோடையை யடர்ந்து
நீரி னோங்குபூங் காவெங்கு மேநெருங் குதலால். **43**

140. அப்பி லல்லது பங்கம்வே றிலை[illegible]ருங் கவலை
செப்பி னீள்கவர் நெறியலா தி[illegible]ந்திகழ் சூது
துப்பு வாய்மினார் மார்பிடை ம[illegible]து தோன்றா
தெய்ப்பு மன்னவ ரிடைக்கலாற் பொன்னிநாட் டிலையே. **44**

141. கதலி யின்குலை தகர்த்துமாம் பழந்தின்று கழித்து
முதிர்ப லாப்பழச் சுவையுண்டு கமுகின்மேல் முடுகிச்
சிதற நற்பழுக் காயுதிர்த் துயர்தெங்கின்ஏறிப்
பதிகொள் வான்தருப் பழங்களைக் கவியினம் பறிக்கும். **45'**

142. கோங்கு பாடலம் செருந்திமந் தாரைகூ விளஞ்சீர்
தாங்கு தாதகி அலரிபன் னீர்மௌவ றளவம்
பாங்கு சேர்வகு ளம்துள வம்பல மருவி
ஓங்கு நந்தன வனமிகு திகளையா ருரைப்பார். **46**

---

141. கவியினம் - குரங்கினம்.

143. கன்னன் மெல்லும் வாய்கடையினிற் தரளங்கள் கான்று
துன்னு நீள்பொழில் நிழலெங்கு மேதிகண் துயிலும்
இந்ந லம்பெறு சோழநாட் டினில்மிகுந் தெங்கும்
பன்ன காபர னன்பதி பற்பல உளவால். **47**

144. அத்தி ருப்பதிப் பெருமையும் அளவில அதனின்
முத்தி பெற்றவர் பெருமையும் அளவில மொழியிற்
சுத்த மெய்த்தவர் தொண்டுசெய் பதிகள்ஆ தலினாற்
பத்தி யாற்சொல வேண்டிடும் அதிற்சில பகர்வாம். **48**

வேறு

145. புண்டரி கப்பத மாமுனி யும்புகழ் பூண்ட பதஞ்சலியும்
கண்டு பணிந்திட வெண்குண மேவுமுக் கண்ணர் நடம்புரிதல்
மண்டல மீதினில் வந்து பணிந்தவர் வன்பவ மாற்றியிடத்
தெண்டிரை வாரிதி சூழ்புவி நள்ளிடை சேர்ந்த சிதம்பரமும்.
49

146. ஆண்டொரு மூன்றில் அழைத்தழு பாலர்முன்
அன்பொடு சென்றருளிப்
பாண்டகு மென்மொழி யாள்முலை யூறிய பாலொடு
ஞானமெலாம்
ஈண்டுண வூட்டி இயம்புசொல் மாலையின் இன்பம்
நுகர்ந்தசெவித்
தாண்டவர் வாழ்பிர மாபுர மென்னுமோர் சண்பை
நெடும்பதியும். **50**

147. மாத வமன்பொடு செய்து பெறுந்திரு மைந்தனை
யான்பழியின்
தீது தவிர்ந்திட மாரத முந்திய சீருறு சோழனெனும்
நீதி மனன்தொழ மால்விடை யேறிமு னின்றருள்
செய்திடுநல்
வீதி விடங்கர் விழாமலி இன்ப மிகும்திரு வாரூரும். **51**

148. கண்ட மறுத்தொரு மைந்தனை யட்ட கறிச்சுவை
யூட்டுசிறுத்
தொண்டர் மனைக்கொரு நல்விருந் தானவர்
தோன்றிய செங்காடும்

143. பன்னகாபரனன் - பாம்பணி கொண்டவன், சிவபெருமான்.
145. புண்டரிகப்பத மாமுனி - வியாக்கிரபாதர்.
146. சண்பை - சீர்காழிப்பதி
147. சோழன் - மனுநீதிச்சோழன்

எண்டிசை யேத்திட நன்மனை யாள்தனை யீந்த
இயற்பகையார்க்கு
அண்டர்கள் கண்டறி யாவளம் ஈந்தோர் அமர்ந்திடு
சாய்க்காடும். 52

149. குங்குலி யக்கல யற்கு நிமிர்ந்தவர் கோயிலும் வெங்கூற்றை
மங்கவு தைத்திள நல்முனி வற்கருள் மண்கட வூரும் நெய்யை
உண்க விளக்கை விளக்கும் எலிக்கர சுய்த்தோர் மறைக்காடும்
பைங்கணு லூரதையைச் செம்பிய னாக்கிய பண்பரி
கரிக்காவும். 53

150. மாலொரு செந்தா மரைக்க ணிடந்து மலர்ப்பத மீதணியச்
சீலமு டன்திகி ரிப்படை ஈந்தவர் சேர்திரு வீழியும்நற்
கோல முடன்மணஞ் செய்திடு தேவியைக் கூடல்
நகர்க்கிறைவன்
ஏலுமெய் யன்பொடு மீந்திட வாங்கினோர் ஏய்ந்த
இடைமருதும். 54

151. மற்றுள நற்பதி யுஞ்சிவ னார்மலை மாதொடு முள்ளமகிழ்ந்து
உற்றபி டேக நிவேதன நல்விழா ஓங்கவே கொண்டருளும்
பற்றுமெய் நற்றவ மேவுமின் நாட்டிடை பண்பு மிகுந்துவளர்
நற்றவ மேவுகோ முத்தி நகர்க்கிட நன்மையொடும்
புகல்வாம். 55

வேறு

152. காழிமா நகர்க்குள் மேவு கருணை வள்ளல் பங்கில்வாழ்
வீழி வாய்மின் னாள்த னங்கள் விம்மி யூற்று பாலையுண்டு
ஏழி சைச்சொல் மாரிபெய் திலங்கு ஞான மேகமும்
ஆழி யிற்கல் மேல்மிதப்ப அஞ்செ ழுத்தோ தண்ணலும்.
56

153. முதலை யுண்டுபோன மைந்தன் முன்பு வந்தி டக்கவி
சதுர்மி குந்திடப் புகன்ற தலைவர் நாவ லூரரும்
நதிபு னைந்த சடிலநாதர் நற்தி றம்பு கழ்ந்திடும்
பதிக மேவு பதிகளிந்தப் பாரில் நான்கு திசையுளும். 57

154. இரண்டு நூறொ டேழுபத்து மூன்று றும்மி வற்றுளே
பரந்த ஈழ நாட்டிரண்டும் பாண்டி யிற்பன் னான்குமெய்
தெரிந்தி டுங்கல் நாட்டி லொன்றுங் கொங்கிலேழுஞ் சீருடன்
பொருந்து மிருபத் தோரிரண்டு புகழ்ந டுந்நாட் டும்முறும் 58

149. நிமிர்ந்தவர் கோயில் - திருப்பனந்தாள். செம்பியன் - சோழன்.

155. தொண்டை நாட்டின் முப்பதோ டிரண்டு மொன்று துளுவமும்
ஒண்ட மிழ்கொள் ளாவி டத்தினான்கு முண்டி தன்றியே
மண்டு சோழ நாட்டில் நூற்றுத்தொண் ணூறாகு மற்றிவை
அண்டர் போற்றும் பொன்னி நீள கன்கரைம ருங்கிலே. 59

156. வடக ரைக்கு ளாறுபத்து மூன்று மிக்க வளமலிந்து
இடமி குத்த தென்கரைக்குள் நூறு மேழு மிருபதும்
அடைவு பெற்றி லங்குமற்றுள் ஆவ டுந்து றைசையூர்
திடமி குத்தி டுந்துருத்தி சீரு றுங்கீழ் பாலினும். 60

157. ஆன்கு ளம்ப ழுந்து சென்னி யார்திருக் குளம்பியம்
ஓங்கு தெற்கி னுங்குரங்கு ரங்குலாவி யாடு துறைகுடப்
பாங்கி னுந்ந லுத்தரம் பரிந்த கோடி காவுமே
வீங்கு றப்பூ வுலகமேத்த வென்று நாப்பண் மேவிடும். 61

158. என்று மிக்க தவுமியப்பே ரின்ப னோத மிதிலனும்
நன்று நன்றெ னச்சிரந் நலங்கொ ளத்து ளக்கிமேற்
துன்று மன்பு ளத்தினோடத் தென்ன கர்ச்சி றப்பினை
ஒன்று மின்சொ லாலெமக்கிங் கோது கென்ன
உரைசெய்வான். 62

மூன்றாவது
சோணாட்டுச் சிறப்புரைத்த அத்தியாயம் முற்றியது
ஆகத் திருவிருத்தம் 158
திருச்சிற்றம்பலம்

3. சோணாட்டுச் சிறப்புரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

சிவபெருமான் திருவருளால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனாரோடு கயிலைக்கு வெள்ளை யானை மீதேறி வருகின்றபோது ஒரு சோதி தோன்றியதைக் கண்ட முனிவர்கள், உபமன்யு முனிவரை வணங்கி, அது என்ன என்று கேட்கின்றனர். அவர் உடனே அச்சோதி தோன்றிய சிறப்பையெல்லாம் எடுத்துரைக்கின்றார். அத்துடன், இமயமலையின் பெருமையினையும் முனிவர்களுக்கு அவர் கூறுகின்றார்.

அம்மலையானது, முன்பு சிவனை இகழ்ந்து வேள்வி புரிந்த இமவானாகிய தந்தை தம் தவறுணர்ந்து அழியுமாறு

செய்யப் பார்ப்பதி அவன் மகளாக அவதரிப்பதற்காகத் தோன்றிய இடமாகும். வேறு எந்த மலையையும் இதற்கு ஈடாகக் கூற இயலாது. மலையரையன் என்றும் பொன்மருவும் இமவான் என்றும் மேலோர் இதனைப் போற்றுவர்.

இத்தகைய இமயமலைக் கண்ணிலுள்ள மானச சரோவரக் குளத்தின் கரையிலுள்ள சோலையில் குழந்தை உருவாயுள்ள உமையம்மையை அம்மலையின் காவலனான இமவான் கண்டெடுத்துத் தன் மனைவியாகிய மேனையினிடத்திலே கொடுத்தான். அவள், அக்குழந்தையைப் பெற்று, மிக்க சீருடன் வளர்த்து வந்தாள். ஐந்தாவது வயதிலேயே உமையாள் தவத்தில் தலைசிறந்து விளங்கினாள். அப்பொழுது சிவபெருமான் அவளை மணம்பேசி, திருமணம் செய்ய வந்தார்.

இறைவன் இறைவியின் திருமண விழாவைக் கண்டுகளிக்க எல்லா உலகத்தவர்களும் திரண்டு வந்தனர். அதனால் அம்மலை அச்சுமையைத் தாங்க மாட்டாமல் அமிழ்ந்தது. பூமியானது வடபுறமாகத் தாழ்ந்தது. அதுகண்டு இறைவன் அகத்திய முனியை அழைத்தார். அவரைக் கருணையோடு நோக்கி, பத்து கங்கையில் ஒரு கங்கையைக் கமண்டலத்திலே அடைத்து அகத்தியரிடம் கொடுத்து, நம்முடைய திருக்கல்யாண கோலத்தைப் பொதிய மலையிலிருந்து சேவிப்பாயாக! என்று பணித்தருளினார்.

அகத்தியரும் இறைவனை வணங்கித் தென்திசை நோக்கிப் புறப்பட்டார். இடையில் விந்தமலையின் செருக்கை அடக்கி, திருச்சயிலமலையைக் கடந்து, திருக்காளத்தி, காஞ்சி முதலான பல தலங்களையும் தொழுது, திருச்சயிலமால் வரையை வந்தடைந்தார்.

சையப்பருப்பதத்தின் பெருமை முழுவதுமாகக் கூறுவதற் கியலாது. ஆயினும், யான் அறிந்தவரையில் கூறுகிறேன் இதனை ஊன்றிக் கேட்பாயாக எனத் தவுமியமுனிவர் மிதிலேசனுக்கு விளக்குகின்றார்.

ஞானிகளும், யோகிகளும், தவசிகளும், தேவர்களும், விஞ்சையர்களும், மறையோர்களும், சித்தர்களும், தமிழ் கற்றவர் களும் தனித்தனியாக வசித்துவரும் சிறப்பினையுடையது சையபருப்பதம். இத்தகைய மலையின் மீது ஓங்கிவளர்ந்து மணம்வீசும் சந்தன மரங்களிலே விளையாடி மகிழும் கிளிகள்

பேசும் தமிழ்ச் சொல் நயங்களை விண்ணுலக மகளிரும் பயின்று மகிழ்வர்.

சையப்பருப்பதத்திலுள்ள தடாகத்தில் விண்ணுலக மங்கையர்கள் நீராடிய பின்னர்க் கரையில் வந்து, சோலைமீது படர்ந்திருக்கின்ற மேகங்களைத் தாம் நீராடப் போவதற்கு முன் வைத்துச்சென்ற தம்முடைய ஆடைகள் என எண்ணி அவற்றைத் தாமரைக் கரங்களால் பிடித்து இழுப்பார்கள்.

பச்சோந்தியைப் போன்ற மூக்கினையுடைய குறப் பெண்கள், யானைத் தந்தத்தை உலக்கையாகக் கொண்டு மலைநெல்லை இடிப்பர். அப்பொழுது அவ்வுலக்கையானது மேல்நோக்கிச் செல்கையில் மேலேயுள்ள இனிய பழங்களில் முட்டுவதால் அவை கீழே விழ அவற்றைக் குரங்குகள் உண்டு மகிழும்.

அம்மலையின் உச்சியில் தேன் எடுக்க வேடப்பெண்கள் ஏறுவதானது, கழைக்கூத்தாடிகள் உயர்ந்த மூங்கிலின்மேல் ஏறுவதைப் போன்றிருக்கின்றது.

மலைவேடர்கள், கையில் வில்லினை ஏந்தி மான்கூட்டத்தை எழுப்புவர். அப்பொழுது மான்கள் அங்குமிங்கும் ஓடும். அப்பொழுது ஒரு மான் சந்திரனிடத்தில் போய்விட்டதோ என்றும், மற்றவைகளின் கண்களைப் பார்த்து இவை குறிஞ்சி நிலப் பெண்களாகிய கொடிச்சியர்களோ என்றும் திகைப்பர்.

மலையருவிகளிலே விழும் நீரொலியும், மதயானை களின் பிளிறொலிப்பும், மயில்களின் அகவலொலிகளும் இம் மண்ணகம் மட்டுமில்லாமல் விண்ணகத்திலும் எதிரொலிக்கும்.

இத்தகைய வளங்கள் பல கொண்ட இந்த மலையில் அகத்திய முனிவர் இறைவனைத் தொழுது வணங்கி வரும் நாளில், அங்கு சூரனுக்குப் பயந்து இந்திரனானவன் தேவர் களுடன் இறைவனைப் பூசிப்பதற்காக ஒரு நந்தவனத்தை உண்டாக்கினான். பின்னர் அங்குள்ள பூச்செடிகள் நீரின்றி வாடுவதைக் கண்ட இந்திரன் விநாயகப் பெருமானைத் துதிக்கின்றான். உடனே விநாயகப் பெருமான் ஒரு காக வடிவாகி வந்து அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்தார். அக்கமண்டலத்தில் அடைக்கப்பட்டிருந்த கங்கை ஒரு நதியாகப் பெருகி ஓடியது. அன்றுமுதல் அந்நதி காவிரி என்றும், பொன்னி

என்றும் பெயர் பெற்றது. இக்காவிரி நதியின் பெருமையை என்னால் முழுவதுமாகக் கூற இயலாது எனினும் இயன்றவரை சொல்லுகின்றேன் என்று தவுமிய முனிவர் மிதிலேசனுக்கு உரைக்கத் தொடங்கினார்.

அமுதமயமான அக்காவிரியானது தான் செல்லுமிடங் களிலெல்லாம் அங்குள்ள நிலங்களை வளம்பெறச் செய்து தாயினும் இனியதாகின்றது.

காவிரி நதி ஓடுகின்ற ஓசையானது, உலக மாந்தர் காலை, நண்பகல், மாலை என மூன்று காலங்களிலும் இறைவனைத் தொழுது வழிபடும்போது கூறும் அரகரவென்னும் மந்திர ஓசையைப் போன்றுள்ளது. இத்தகைய காவிரி நதியின் பெயரை நினைத்த மாத்திரத்தில், சிவபெருமானுடைய நெற்றிக் கனலால் முப்புரம் எரிந்ததைப் போன்று நம்முடைய தீவினைகளெல்லாம் அழிந்து போகும்.

நம் பூமியானது நிலைத்து நிற்க மகாமேருமலை நடுவில் இருப்பதைப் போன்று, காவிரி நதியானது ஓடுகின்ற இடங்களுக்குள் நடுவாக இருப்பது சோழ நாடாகும். இது பூமகள் மார்பில் தரித்த ஆரத்தினை ஒத்ததாகும். இச்சோழ நாட்டிற்குப் பொன்னி நாடு என்றும் காவிரி நாடு என்றும் நதியால் பெற்ற பெயர்களும் கூறப்பெறுகின்றன. இதன் பெருமையை முற்றும் கூற முடியாதெனினும் வளப்பங்களை மட்டுமாவது கூறுகின்றேன் எனத் தவுமிய முனிவர் மேலும் விளக்குகின்றார்.

கன்று தேடி ஓடும் தாய்ப்பசுவினைப் போன்று, காவிரி நதியானது மிக வேகமாகச் சென்று ஓடை மடுவு ஆகிய பல இடங்களையும் நிரப்பிக் கொண்டு உழவு செய்யும் வயல் களையும் நிரப்பியது. நீர் நிரம்பிய வயல்களை உழவர்கள் சேறாக்கி, உழத்தியர்கள் நாற்றை நட்டு, அவை வளர்ந்து, நெற்பயிர்கள் மேலோங்கிவரும். மாணாக்கர்களுக்குக் கல்வியினால் அறிவு தெளிவாகுமாறு போல அப்பயிர்களிலிருந்து குருத்துக்கள் தோன்றும். களையெடுக்குங் காலங்களில் கடைசியர்கள் கைவளைகள் குலுங்க, அந்த நிலத்திலே தோன்றியுள்ள ஆம்பல்கள், குவளைகள், செங்கழுநீர்கள், தாமரைகள் ஆகியவற்றைக் கிளறி எடுத்து எறிவர். புல்முளைகள் ஒன்று மில்லாமையால் மகிழ்வுடன் பாடுவார்கள், ஆடுவார்கள். அன்னங்களைப் போன்று அசைந்து அசைந்து உலாவுவார்கள்.

மள்ளர்கள் கொடுக்கும் கட்குடங்களை வாங்கிக் குடித்து, செங்கண் சிவப்பக் கலவி இன்பம் தேடுவார்கள். ஆணும் பெண்ணுமாய் அளவிலாக் காதல் விளையாட்டுகளை ஆடுவார்கள்.

தாய் தன் மகவை வளர்ப்பது போன்றும், செங்கோல் மன்னன் தன் மக்களைப் பேணுவது போன்றும் உழவர்கள் நெற்பயிர்களைப் பேணி வளர்ப்பர். கரும்பும் நெல்லுமாகப் பல்கிப் பெருகி வளர்ந்து கொழிக்கும் பொழுது அறுவடை செய்தும், கடாவைக் கொண்டு புணையடித்தும் வந்த நெற்களை நன்கு தூற்றிக் குவிப்பார்கள். நவமணிக் குவியல்கள் போல நாடெல்லாம் நெற்குவியல்கள் காணப்பெறும். மனுநீதி நூல்களில் கூறப்பட்டுள்ளதற்கேற்ப, நெல்களை ஆறு பங்காகச் செய்து, ஐந்து பங்குகளைத் தாங்கள் எடுத்துக் கொண்டு, ஆறாவது பங்கை அரசனுக்குச் செலுத்துவார்கள். தம்முடைய பங்கிலுள்ள நெற்களிலிருந்து அடியார்களுக்கு அறுசுவை உணவளித்தும், இறைவனுக்குரிய விழாக்களை நடத்தியும் அகம் மகிழ்வார்கள்.

சோழ நாட்டிலுள்ளவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றில் சிறந்தவர்களாதலால் இவர்கள், அரிய கல்வி, செல்வம், வீரம், நல்லறிவு, ஒழுக்கம், நல்லுறவு, தூய்மை ஆகியவற்றிலும் சிறந்து விளங்குகிறார்கள். நல்லொழுக்கம் மிக்க நாற்குலத்தாரின் மேன்மையாலும், கற்புடை மங்கையரின் மாண்பாலும் இயற்கை வளம் பல கொழிக்கும் இச்சோழ நாட்டில் இறைவன் எழுந்தருளியிருக்கும் புண்ணியத்தலங்கள் பல உள. அந்தத் தலங்களின் பெருமையும், அங்கங்கே முத்தி பெற்றவர்களின் பெருமையும் அளவில்லாதன. அவற்றுள் சிலவற்றை மட்டும் கூறுகின்றேன் எனத் தவுமிய முனிவர் மிதிலேசனுக்குரைக்கின்றார்.

வியாக்கிர பாதரும் பதஞ்சலியும் ஆனந்தநடனத்தைக் கண்டு மகிழ ஆடல்புரிந்த நடராசப்பெருமான் எழுந்தருளி யிருக்கும் சிதம்பரமும்,

திருஞானசம்பந்தருக்கு மூன்று வயதினில் உமையம்மை ஞானப்பாலை ஊட்ட, அக்குழந்தையும் தேவாரப் பாடல்களைப் பாடியருள, அப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற பிரமாபுரம் என்னும் சீர்காழிப் பதியும்,

தன்னுடைய அருமை மகன் என்றும் பாராமல், நீதியை நிலைநாட்டத் தன் மகன் மீதே இரதத்தைச் செலுத்திய சோழனுக்குக் காட்சிதந்த இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவாரூரும்,

பிள்ளைக்கறி சமைத்தூட்டிய சிறுத்தொண்டர் இல்லத்திற்கு நல்விருந்தாக வந்த இறைவன் வீற்றிருக்கும் திருச்செங்காட்டங்குடியும்,

எண்திசையும் போற்றும்படியாகத் தன்னுடைய மனைவி யையே விருப்புடன் அளித்த இயற்பகைநாயனாருக்கு, விண்ணோர்களும் கண்டறியாத எல்லா நற்பேறுகளையும் ஈந்த இறைவன் வீற்றிருக்கும் திருச்சாய்க்காடும்,

குங்குலியக்கலய நாயனாருக்காகத் தமது திருமுடி நிமிர்ந் தருளிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்பனந்தாளும்,

மார்க்கண்டருக்காக கூற்றுவனை உதைத்தருளிய இறைவன் கோயில் கொண்டுள்ள திருக்கடவூரும்,

நெய்யை உண்பதற்காக விளக்கைத் தூண்டிய எலிக்கு அரசபதவி நல்கிய இறைவன் எழுந்தருளியுள்ள திருமறைக்காடும்,

சிலந்தியைச் சோழனாக்கிய இறைவன் கோலங் கொண்டுள்ள திருவானைக்காவும்,

சிவபூசையில், ஆயிரம் தாமரைப் பூக்களில் ஒரு பூ குறைய அதற்காகத் தன் ஒரு கண்ணைப் பறித்து அருச்சித்த திருமாலுக்குச் சக்கராயுதத்தை அருளிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருவீழிமிழலையும்,

மதுரை மன்னனாகிய வரகுணப்பாண்டியன் தன் மனைவியை அளிக்க அவளை ஏற்றுக் கொண்டு அவனுக்கு முத்தியருளிய சிவபெருமான் கோயில் கொண்டுள்ள திருவிடைமருதூரும், மற்றுமுள்ள நற்பதிகளும்,

சிவனார் மலைமகளோடு உள்ளம் மகிழ்ந்து அபிடேகம் நிவேதனம் திருவிழா முதலியவைகளையும் கொண்டு கோமுத்திநாதர் எப்பொழுதும் கோயில் கொண்டிருக்கும் திருவாவடுதுறையும் ஆகப் பல தலங்களும் இச்சோழநாட்டில் சிறப்புடன் திகழ்கின்றன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் பாடிய தலங்கள் மொத்தம் இருநூற்று எழுபத்துமூன்று ஆகும். இவற்றுள், ஈழ நாட்டில் இரண்டும், பாண்டி நாட்டில் பதினான்கும், மலை நாட்டில் ஒன்றும், கொங்கு நாட்டில் ஏழும், நடு நாட்டில் இருபத்திரண்டும், தொண்டை நாட்டில் முப்பத்திரண்டும், வடநாட்டில் நான்கும், துளுவ நாட்டில் ஒன்றும் உள்ளன. இவையல்லாமல், சோழ நாட்டில் மட்டும் நூற்றுத் தொண்ணூறு தலங்கள் உள்ளன.

அவற்றுள் காவிரியின் வடகரையில் அறுபத்துமூன்றும், தென்கரையில் நூற்றிருபத்தேழு தலங்களும் உள்ளன.

இவற்றுள், ஆவடுந்துறைசையூர் என்னும் திருவாவடுதுறை யானது கிழக்கே திருத்துருத்தியையும் (குற்றாலத்தையும்) தெற்கே திருக்குளம்பியத்தையும் (கோழம்பத்தையும்), மேற்கே தென்குரங்காடு துறையையும் (ஆடுதுறையையும்), வடக்கே திருக்கோடிகாவையும் நான்கு எல்லைகளாகக் கொண்டு இவற்றின் நடுவிலுள்ளது.

இவ்வாறு தவுமியமுனிவர் நாட்டுச் சிறப்புகளையெல்லாம் கூறக் கேட்ட மிதிலேசன் அத்துறைசை நகரின் சிறப்பினை எடுத்துரைக்க வேண்டத் தவுமியரும் மகிழ்வுடன் கூறத் தொடங்குகின்றார்.

நான்காவது
திருநகரச் சிறப்புரைத்த அத்தியாயம்

159. புவிமகள் மலர்முக மெனவும்அம் முகமேற்
பொலிதிரு நுதலிடு திலகம தெனவும்
கவினுறும் அவள்திரு உரமிசை மருவும்
கண்டிகை யெனவும்அக் கண்டிகை நடுவுள்
நவமுற மருவுமோர் நன்மணி யெனவும்
நவிலுவ மைகள்பொரு நன்னில மகள்தன்
துவள்குழ லெனவெழில் பெருகிய பொழில்சூழ்
சுகமிகும் ஆவடு துறைசைநன் னகரம். 1

160. திருமகள் மருவுநல் மலரணை யெனவும்
செயமகள் கலைமகள் திகழிட மெனவும்
தருவுறும் இமையவர் நகரெழில் முழுதும்
தரணியின் மிசையுறு தகைமைய தெனவும்

159. உரம் - மார்பு.

அருள்பெறு நிதிபதி அளகை பொன்னியனேர்
அழகுற வளமுடன் அமர்குவ தெனவும்
துரிசறு புகழ்பெறும் எழிலுட னிலகும்
சுகமிகும் ஆவடு துறைசைநன் னகரம். 2

161. செம்பொனின் மிசைநவ மணிபல குயிற்றிச்
செயுந்திரு மாளிகைச் சிறப்பும்நற் றியாகர்
இன்பொடு குலவும்நல் நிருத்தண் டபமும்
எழிதரு பத்தியி னொழுங்கும்நல் முகப்பும்
உம்பர்கள் மணிமுடி ஒன்றோடொன் றுரசி
உதிர்மணி முன்றிலும் மிகுமுயர் புளதால்
நம்பர்தம் கயிலைமா நகரிது வெனவும்
நலந்தரும் ஆவடு துறைசைநன் னகரம். 3

162. வைதிகர் வேதபா ராயண ஒலியும்
வளமிகு சைவர்சி வாகம ஒலியும்
மெய்திக ழன்பர்கள் இன்பொடு புகழும்
மேம்படு பதிகநல் லிசைகளும் அடியார்
கைதலை மிசையுற அரகர எனும்நற்
கதிதிக ழொலியும்ஏழ் கடலொலி யதுபோற்
செய்திட லாற்சிவா னந்தவா ரிதியாய்ச்
செப்பவும் படும்திருத் துறைசைநன் னகரம். 4

163. தானவர் வானவர் விஞ்சையர் முனிவர்
தவமுறு சத்தாகந் தருவர்சிம் புருடர்
மானிட வுருவுகொண் டடியவ ருடனே
மருவிநல் மாசிலா மணிதரி சனைசெய்
தானகைம் மலர்கொடு சொரிமலர் மழையை
அன்பொடும் அவர்கள்கண் ணருவிபெய் மழையே
தூநல முறுநில மலகிடு மெனில்முன்
தொழுபவர் மிகுதியின் அளவெவர் புகல்வார். 5

164. பொங்குபொன் னேமியங் கிரிநக ரெயில்மேற்
பொற்புற நாட்டிய நற்கொடி பலவும்
அங்கணர் விழவணி கண்டிட விண்ணோர்
யாவரும் வாருமென் றழைப்பவர் போலத்
தங்கும்விண் ணாட்டுளோர் மனைதொறு முலவும்
தகவுறு புகவுகொள் கோபுரம் அரனார்

161. குயிற்றி - இழைத்து. 164. எழிலி - மேகம்.

எங்கணும் அறியநல் மேருவில் லதனை
எடுத்துமுன் நாட்டின போலெழில் இயையும். 6

வேறு

165. கயிலைமலை காவல்புரி நந்தி தேவர்
கருணையொடு முலகவுயிர் கதியின் மேவப்
பயிலுமுப தேசசிவா கமசித் தாந்தம்
பரம்பரையி லருள்குருவாழ் பண்பு தங்கு
நயமருவு திருமடமும் அடியார் கூட்டம்
நவில்கிரியா சாதகஞ்செய் மடமும் நிட்டை
மயமருவி னோர்களின் சலதி மூழ்கி
வாழிடமும் துறைசையிலெம் மருங்கும் ஓங்கும். 7

166. பசியகல நுகர்வதுவேட் டியாவ ரேனும்
பகலிரவில் எந்நேரம் வரினும் அன்னம்
இசைவுபெறும் அறுசுவையோ டூட்டு வோமென்று
இலகும்அன்னக் கொடிநிறுவி இசைதல் கண்டு
திசையிலுள்ளோர் திருமடத்திற் புசித்து நாளும்
சித்தமகிழ்ந் திடுதலாற் துறைசைக் கென்றும்
வசையறுநல் அமுதபுரம் என்னும் பேராய்
மாநிலத்தோர் கொண்டாடி மதிப்பரன்றே. 8

167. அருள்பெருகும் ஆவடுதண் துறைய தென்றும்
அழகுமிகு கோமுத்தி நகர மென்றும்
திருவுறுபிப் பலவனம தென்றும் முத்திச்
சேத்திரமென் றும்திகழ்கோ கழிய தென்றும்
பெருமைபெறு சிவபுரம தென்றும் மிக்க
பிரமபுர மென்றும்அகத் தியபுரம தென்றும்
தருமநக ரொடுகசா ரணிய மென்றும்
தகுபெயர்பூ கயிலாச மென்றும் சாரும். 9

168. பன்மணித்தோ ரணவீதி மருங்கிற் செய்ய
பவளக்காற் பந்தரிற்பூ மாலை நாற்றிப்
பொன்மலிவே திகைமெழுகிக் கோல மிட்டுப்
பூரணகும் பங்கள்நிரைத் திலகு தீபம்
வின்மருவு மெழில்பெருக வேற்றி யண்ண
விழவுதொழு மாதர்கள்ஆ னந்த வெள்ளந்
தின்மருவு கரையருகில் அனக்கு ழாங்கள்
சார்ந்துநிரை யாகிநிற்கும் தகைமைக் கொக்கும். 10

169. குங்குமமும் மான்மதமும் மிகுபன் னீரிற்
குழைத்துமறு கினிற்தெளித்து குலவு மாதர்
எங்கணும்தம் கூந்தல்மலர்த் தேன்கள் சிந்தும்
இடங்களில்ஆ டவர்வழுக்கி விழுதல் நோக்கிச்
செங்குமுத வாய்முறுவல் நிலவு காட்டும்
செவ்வியினால் நாணியவர் செங்க ணென்னும்
பங்கயங்கள் குவிந்துதோ ரணமா ணிக்கப்
பரிதிஅலர்த் திடஅலர்ந்து பார்ப்ப ரெங்கும். 11

170. ஊடலுடன் பளிக்குமண்ட பத்திற் புக்கங்கு
ஒளிக்குமா தரைத்திருத்தி உறவுசெய் தற்கு
ஆடவர்கள் தேடிவந்து பார்க்கும் போதில்
அளகபா ரங்கள்மிகு காடு போன்றும்
கோடனைய கொங்கைகள்பன் மலைகள் போன்றும்
கூர்விழிகள் மான்போன்றும் தோன்றக் கண்டு
நீடுமதி மயங்கிஇது குறிஞ்சி யென்னும்
நிலமோஎன் றதிசயித்து நின்று பார்ப்பார். 12

171. நாதர்மகிழ் வேள்விகள்அந் தணர்கள் செய்யும்
நறுநெய்மணப் புகையும்நறை யொழுகு மன்றற்
போதுசெரு கியகுழற்கு மடவா ரூட்டும்
புதியமணம் பெருகுமகிற் புகையுங் கூடி,
மீதுதிகழ்ந் திடுதல்கண்டு கார்கா லத்து
மேகமென உளமகிழ்ந்து விரும்பி யென்றும்
கோதகல்பொன் மேடைமலி யிடங்கள் தோறும்
குலவுசிறை விரித்துமயிற் குலங்க ளாடும். 13

172. கொண்டல்தவழ் நெடுமாட முகப்பி லிட்ட
கோதில்மர கதப்பலகை கோத்த ஊசற்
தண்டரள மணியிடுபொற் கம்பிப் பின்னற்
சதுர்வித நாண்டாதி யர்கடள்ள மீது
துண்டமதி நுதற்பேதை மாத ராடுந்
தோற்றமகல் வானிடத்திற் தோன்று மேக
மண்டலத்தி னூடெழுமின் னினங்கள் போல
மல்குமெழிற் காட்சியென்று மலியு மெங்கும். 14

173. வச்சிரம்கோ மேதகம்செம் பவளம் நீலம்
மாணிக்கம் நித்திலம்புட் பராகம் பச்சை
மெச்சுவயி டூரியம்பொற் தகட்டில் வேய்ந்த
மேல்வீடுப் பரிகைநிலா முற்றம் தேற்றி

170. அளகபாரம் - கூந்தற்பாரம். கோடு - கொம்பு.

நச்சுமொழி லாடரங்கு முதலா விந்த
நற்பதியிற் றோற்றுதல்கண் டும்பர் வானத்
தச்சனைத்தம் பதியிலிவ்வா றில்லை யென்று
சாற்றிஇகழ்ந் திடுவரெனிற் சரிவே றுண்டோ. 15

174. தேங்கமழும் பலபலவின் கனியின் தேனும்
செழுஞ்சூதப் பழமுடைந்த தேனும் பொங்கர்
தாங்குமலர் மதுவுமொன்றாய் வயலிற் சென்று
தடம்புகுந்து மிகுந்தெழுந்து தவழ்ந்து வீதிப்
வாங்குறுமா றன்பரொடு மின்னார் ஊடல்
பண்ணிஎறித் திடுங்கலன்கள் வாரி வாரி
ஆங்கடைத்துப் பெருவரம்பு செய்வ வென்றால்
அப்பதியோர் செல்வமதற்கு அளவு யாதே. 16

175. இரங்கியெழுந் துறுமறுகிற் கசிந்து நல்லோர்
இடங்களிற்சென் றகமகிழ்ந்து முகமன் கூறிப்
பரிந்தெமது மனையினில்வந் தினிய வன்னம்
பால்தயிர்நெய் யொடும்புசித்துப் பணிபொன் னாடை
பொருந்துவது யாதெனினும் வேண்டு கின்ற
பொருளேன்று கொளவேண்டு மென்று நாளும்
திருந்தியநல் நேசமொடும் இரப்போர் அன்றிச்
செல்வமிலாது இரப்பவர்அத் திசையி லின்றே. 17

176. முல்லைமுகை நகைமடவார் குழலும் கானம்
முதிரெழில்கொள் அவர்கள்செவ்வாய் மொழியும் கானம்
கல்லெனுநூ புரத்தாள்கொள் வதும்செம் பஞ்சி
கரமலர்செய் தொழில்களும்பண் கனிவி பஞ்சி
புல்லுமவர் விரகமலர் போது மாலை
புரிகுழல்மே வுவதுமலர் போது மாலை
அல்லின்முலை பொருந்துவதம் புயமே யன்னோர்
அங்கைபத முகங்களுமம் புயமே யாமால். 18

177. ஆடவர்கள் புயங்கள்தங்க மலையே யங்கண்
அகலாம விருப்பதங்க மலையே கற்கும்
நீடுமொழி யருணூற்சா தகமே யொன்னார்
நிலையினுக்குச் சற்றுமஞ்சா தகமே யன்னோர்
பீடுறப்பூண் பதுவுமக்கின் பணியே யுள்ளப்
பிரியமுடன் செய்தவரன் பணியே யார்க்குந்
தேடியளித் திடுவதுமோ தனமே கோயிற்
திருப்பணிக்கீந் திடுவதுமோ தனமே யென்றும். 19

178. அணிநிழற்பூம் பொழில்களுங்கற் பகமே யெங்கும்
அன்னமன்னார் மனங்களுங்கற் பகமே யெங்கும்
மணியுயிர்த்து லாவுசங்க வயலே யெங்கும்
வளர்தமிழ்நற் பிரசங்க வயலே யெங்கும்
தணிவின்மறை யோதுநற்பார்ப் பாரே யெங்கும்
சந்ததஞ்சங் கரரெழில்பார்ப் பாரே யெங்கும்
பிணியறியா தெழில்பெறுமெய் யினரே யெங்கும்
பெருகுசைவ நெறிபெறுமெய் யினரே யெங்கும். 20

வேறு

179. வாரிதி மேவு கலன்களில் வந்த வளத்தோடும்
சீருறு கின்ற மலைப்பொரு ளும்மெழில் திகழ்கானிற்
பாருற வந்த வளங்களு மேவிய பண்பாலே
ஏருறு மாவண மவ்விட மூன்றுபோ லெழில்கொள்ளும். 21

180. கோசிகம் பொற்கலன் மாலைசந் தம்பல கொள்வோரிற்
தேசுற நாடியே தம்மியல் பிற்கொள் வோர்சிலராகும்
நேசமு டன்சிவ பூசனைக் கேற்கு நிமித்தங்கள்
ஆசையு டன்கொளும் அன்பரை நாடிடில் அளவின்றே. 22

181. மன்னர்கு மார்கள் தேர்பரி யானைகள் மறுகூடு
நன்மைய மோடு நடத்திடு காட்சி நலந்தோன்றாது
அன்னமின் னாரொடும் ஆடவர் செய்மண வணிதாங்கிப்
பொன்னெடும் வீதிவ லம்வரு காட்சியே பொலிவாமால். 23

182. பள்ளியி லோதிடு செல்வர்சொல் லோசையும் பந்தாடும்
ஒள்ளிழை யார்பத நூபுர வோசையும் ஒளிர்சிறுதேர்
மெள்ளந டத்துசி றார்விழ வோசையும் வில்மாரன்
கள்ளல ரம்புதொ டுத்திடு நாணொலி காட்டாதால். 24

183. பொன்னிந திப்புன லாடமின் னார்சிலர் போம்போதிற்
தன்னினம் என்றபின் னேபல மஞ்ஞைகள் தாம்போகும்
அன்னுமந் நீர்குடைந் தாடினர் மீண்டு வரும்போதில்
அன்னமி ருந்து தொடர்ந்திடும் தன்னின மாமென்றே. 25

184. நந்த வனத்தின் மேவுமின் னார்சிலர் நலமேவும்
எந்த முலைக்கும் நகைக்கும் எழிற்கும்நீர் இணைவென்று
உந்து மதுப்புணர் கோங்கொடு முல்லைமா மொடுமூடிக்
கொந்த லருந்தளி ருங்கன மாகவே கொய்வாரும். 26

---

180. கோசிகம் - பட்டுச்சீலை. 183. மஞ்ஞை - மயில்.

185. ஆடவர் மேவிடு போதுநம் மோதியி லணைமீது
சூடிய சண்பக மீதென நின்றுது திப்பாரும்
பாடளி கூந்தல் வளம்புக வீகள்ப றந்தேநல்
ஏடவிழ் கின்ற குராவருள் பாவை யெடுப்பாரும். 27

186. ஆகிய பூம்பொழில் சூழ்பதி மேவுவோ ராக்கத்தாற்
போக மிகுந்திடு மேலுல கொக்கினும் போகத்தின்
மோக மிகுந்திலர் நற்சிவ புண்ணிய மோகத்தாற்
பாக மிகுந்தரன் அன்பர்சொல் ஏவலே பணிநிற்பார். 28

187. ஆசிர மத்துறு வோர்களும் அவ்விய லதுதப்பார்
நேச மிகுத்திடும் நால்வரு ணத்தரும் நெறிதப்பார்
தேசுறு கற்புமின் னார்களும் அச்செய லேசெய்வார்
வாச மலர்ப்பழ னம்விளை போகமும் வற்றாதால். 29

188. இவ்வியல் பாகிய ஆவடு தண்துறை எழில்யாவும்
செவ்விய மாமுனி நால்வருள் சொல்லமு தஞ்சென்றே
அவ்விய மற்றம னன்செவி யிற்புக அன்போடும்
உய்வகை அத்தல மேன்மையும் உரையென
உரைசெய்வான். 30

நான்காவது திருநகரச் சிறப்புரைத்த அத்தியாயம்
முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 188

திருச்சிற்றம்பலம்

4. திருநகரச் சிறப்புரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

புவிமகளுக்கு முகமாகவும், அம்முகத்தின்மேல் பொலிவுறும் நெற்றியின் திலகமாகவும், அவளுடைய திருமார்பில் விளங்கும் கண்டிகையாகவும், அக்கண்டிகையின் நடுவில் இருக்கும் நன்மணியெனவும், அவளுடைய கூந்தலாக விளங்கும் சோலைகள் சூழ்ந்த சுகம் பல தரும் நகரம் திருவாவடுதுறை என்னும் துறைசை நன்னகரமாகும்.

திருமகளுக்கு மலரணையெனவும், வீரமகளும் கலைமகளும் வாழ்கின்ற இடமெனவும், கற்பகத்தரு பொருந்திய இமையவர் நகர் எழில் முழுவதும் இப்பூமியில் வந்ததென்று கூறும்படி யாகவும், அளகாபுரியின் அதிபதியான நிதிபதியே இங்கு

வந்து அமர்ந்தனன் எனவும் அமைந்துள்ள இன்பநகரம் திருவாவடுதுறை என்னும் துறைசை நன்னகரமாகும்.

செம்பொன்னின்மேல் நவமணிகளையும் இழைத்துச் செய்யப்பட்ட திருமாளிகையும், செம்பொற்தியாகர் மகிழ்வுடன் நடனமிடும் நிருத்தமண்டபமும், எழில்தரும் பத்திமண்டபமும், முகப்பும், தேவர்களின் மணிமுடிகள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் மணிகள் உதிர்ந்து கிடக்கின்ற கோபுர வாயிலும் உடையது ஆதலால் சிவபெருமான் வாழும் கயிலாயமே இது என்று கூறும்படியாக விளங்குகின்றது திருவாவடுதுறை என்னும் இத்துறைசை நன்னகரம்.

வைதிகர்கள் செய்யும் வேத பாராயண ஒலியும், சைவர்கள் ஓதும் சிவாகம ஒலியும், சிவனடியார்கள் பாடும் தேவாரப் பதிகங்களின் பண்ணிசை ஒலியும், அரகர என்னும் நற்கதி திகழ் ஒலியும் ஏழு கடல்களின் ஒலியைப் போன்றிருத்தலால் இத்துறைசை நன்னகரம் 'சிவானந்தக்கடல்' என்றும் அழைக்கப் பெறும்.

தானவர், வானவர், விஞ்சையர், முனிவர், கந்தருவர், கிம்புருடர் போன்றோரும் மானிட உருவம் கொண்டு அடிய வருடனே வந்து மாசிலாமணி ஈசரைத் தரிசனம் செய்து, மலரிட்டு அர்ச்சித்து மகிழ்வர்.

கயிலை மலையைக் காவல்புரியும் திருநந்தி தேவரின் வழியாக உபதேசம் பெற்ற சிவாகம சித்தாந்த பரம்பரையாக உலக மக்களுக்கு உபதேசம் செய்யும் குருமூர்த்திகள் எழுந் தருளியிருக்கும் திருமடமும், அடியார் கூட்டம் கிரியா சாதகஞ் செய்கின்ற மடமும், நிட்டையிலிருக்கும் தவச்சாலைகளும் இத்துறைசை மாநகர் எங்கும் ஓங்கி விளங்கும்.

பசி அகல உணவு கேட்டு, பகலிலும் இரவிலும் யார் வந்து, எந்த நேரத்தில் கேட்டாலும் அவர்களுக்கு அன்னத்துடன் அறுசுவை உணவை அளிப்போம் என்று அன்னக்கொடியை ஏற்றி வைத்திருப்பர். இதனைக் கண்டு நான்கு திசைகளில் உள்ளவர்களும் திருமடத்திற்கு வந்து நாளும் வயிறார உண்டு மகிழ்ச்சி அடைவதால் இத்துறைசைக்கு 'அமுதபுரம்' என்னும் பெயரிட்டு மாநிலத்தோர் கொண்டாடி மதிக்கின்றனர்.

மேலும், ஆவடுதண்துறை, கோமுத்திநகர், பிப்பிலவனம் (அரசவனம்), முத்திச்சேத்திரம், கோகழி, சிவபுரம், பிரமபுரம்,

அகத்தியபுரம், தருமநகர், கசாரணியம், பூகயிலாசம் எனப் பல திருப்பெயர்களும் துறைசைக்கு வழங்கி மகிழ்கின்றனர்.

இத்துறைசை நகரின்கண், நன்மணிகள் பலவும் தோரணமாய் அமைத்து அலங்கரிக்கப்பட்ட வீதிகளில், பவளக்காறப்பந்தரில் பூமாலைகள் புனைந்து, அழகுடன் மெழுகிக் கோலமிட்டுப் பூரண கும்பங்கள் நிறைத்து, நல் விளக்குகள் ஏற்றி, விழாக் கோலமுடன், ஆனந்த வெள்ளத்தில் மிதந்திருக்கும் மகளிர் கூட்டங்கள் யாவும் அன்னப்பறவைக் கூட்டங்கள் போல அழகு மிகுந்திருக்கின்றன.

குங்குமம், மான்மதம், பன்னீர் ஆகியவற்றைக் குழைத்து மாதர் தெளித்திருக்கவும் அதில் அவர்தம் கூந்தல் மலரிலுள்ள தேன் சிந்தவும், அவ்விடங்களில் வரும் ஆடவர் அதில் வழுக்கி விழவும், அதைக் கண்டு நாணிச் சிரிக்கும் நங்கையரின் எழில் பலவும் இந்நன்னகரில் காணலாம்.

ஆடவர்பால் கொண்ட ஊடலால் தம்மைப் பளிங்கு மண்டபங்களில் மறைத்து ஒளிந்திருப்பர் இந்நகர மகளிர். அவர்களின் ஊடலைத் தீர்க்கும் வகையில் ஆடவர் தேடி வருவர். அப்பொழுது, அம்மகளிரின் கூந்தல் மிகுதிகள் காடுகள் போன்றும், நகில்கள் பல மலைகள் போன்றும், கூர்விழிகள் மான்போன்றும் தோன்றக் கண்டு, 'இது குறிஞ்சி நிலமோ' என மதிமயங்கி நின்று வியப்புடன் பார்ப்பர் இந்நகர ஆடவர்.

சிவபிரான் மகிழும்படியாக அந்தணர்கள் செய்கின்ற வேள்விப் புகையும் பெண்கள் தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் அகிற்புகையும் கூடி மேலே சென்று மேகமாகத் திகழ, அவற்றைப் பார்த்த மயில்களெல்லாம் கார்காலம் வந்து விட்டதென நினைத்து, இறகுகளை விரித்து ஆடுகின்ற எழிலையுடையது இத்துறைசை நகரம்.

வச்சிரம், கோமேதகம், பவளம், நீலம், மாணிக்கம், முத்து, புட்பராகம், பச்சை வயிடூரியம் ஆகிய நவமணிகளையும் பொற்தகட்டில் வைத்து இழைத்துச் செய்யப்பட்ட உப்பரிகை, நிலாமுற்றம், சித்திரகூடம், ஆடரங்கு ஆகிய இவற்றைத் தேவர்கள் இப்பதியிற் பார்த்த பின்னர், நம் உலகில் இவ்வாறு இல்லையே என்று தமது உலகை இகழ்ந்து பேசுகிறார்கள் எனின், இத்துறைசை மாநகருக்கு இணையாக வேறு எந்த நகரும் இணையாகாது என்பது தெளிவு.

சுவை மிகுந்த பலாக்கனியின் தேனும், மாம்பழங்கள் உடைந்து அதிலிருந்து ஊறுகின்ற தேனும், சோலைகளிலுள்ள மலர்களிலிருந்து ஒழுகும் தேனும் ஒன்றாகச் சேர்ந்து பெருகி அங்குள்ள வயல்களில் பாய்ந்து வழிந்து தவழ்ந்து செல்லும். மகளிர் ஆடவர்களுடன் ஊடல் செய்து கொண்டு தங்கள் ஆபரணங்களை வாரிவாரி அத்தேன் வெள்ளத்தை அடைத்தும் வெள்ளமானது மீறி வீதியை அடையும். இதுவே இத்துறைசை நகர மக்களின் செல்வச் செழிப்புக்குச் சான்றாகும். மற்றுமுள்ள செல்வங்களை அளவிட்டுரைக்க இயலாது என்றே தோன்றுகிறது.

அகமிக மகிழ்ந்து, அன்பு வார்த்தைகளைக் கூறி, எங்களுடைய இல்லங்களில் வந்து பால், தயிர், நெய் இவற்றுடன் அறுசுவை உணவுகளை உண்டு, பொன்னாடைகளையும் அணிகலன்களையும் பொருள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நட்புமுறையில் இரப்பவர்களே இத்துறைசை நகரில் இருக்கின்றனர். செல்வமில்லாமல் வறுமை நிலையிலோ, ஏழ்மை நிலையிலோ இரப்பவர்கள் இந்நகரில் எந்நாளும் இல்லையாம்.

இந்நகரத்திலுள்ள ஆடவரும் மகளிரும் கொண்டுள்ள நற்பண்புகளும், செல்வச் செழிப்பும் பார்ப்போர் அனைவரையும் வியக்கச் செய்வனவாம். இருப்பினும், இங்குள்ளவர்கள் சிவபூசையில் அளவற்ற பேரார்வங் கொண்டிருப்பது அதனினும் வியப்பாம்.

கல்விச் சாலைகளிலே மாணாக்கர்களின் சொல்லோசையும், பந்தாடும் பெண்களின் காற் சதங்கைகள் ஓசையும், சிறுதேர் ஓட்டி மகிழும் சிறாரின் ஓசையும் கூடி இந்நகரின் எழிலை மேலும் மெருகூட்டும்.

காவிரியில் நீராட மகளிர் செல்லும்போதில், மயிலினங்கள் அவர்கள் தம்மினம் என மயங்கி அவர்களின் பின்னே செல்லும். அம்மகளிர் நீராடிவிட்டுத் திரும்பும்போது அவர்கள் தம்மினம் என மயங்கிய அன்னப் பறவைகள் அம்மகளிரின் பின்னே நடந்து வரும். இத்தகைய அரிய காட்சிகளைக் கொண்டது இத்துறைசை நகரம்.

பூம்பொழில்கள் சூழ்ந்த இந்நன்னகரில் ஆடவரும் பெண்டிரும் எப்பொழுதும் கூடி மகிழ்ந்திருப்பர். மேலுலகைக் காட்டிலும் மிகுதியான போகங்களை இந்நகரில் மக்கள்

பெற்றிருந்தாலும் இவர்கள் அப்போகத்தின் மோகத்திலேயே அமிழ்ந்து விடுவதில்லை. சிவ புண்ணியத்தின் மீதே இவர்களின் மோகம் முழுவதும் இருக்கும். இதனால், எப்பொழுதும் சிவனடியார்களுக்குப் பணி செய்வதையே இவர்கள் கடமை யாகக் கொண்டிருப்பர்.

இத்துறைசை நகரிலுள்ள ஆசிரமத்திற்கு வருவோர்களும் பயபக்தியுடன் பணிந்தேத்தி நிற்பர். நால்வருண மக்களும் நட்புடன் பழகித் தத்தம் பணிகளில் நெறிதவறாது நடப்பர். கற்புடைய மகளிர் இல்லற வொழுக்கங்களை மீறாது மதித்து நடந்து வருவதால் வயல்களில் விளைச்சல் பெருகி இந்நகரே சிறப்புற்றிருக்கக் காணலாம்.

இத்தகைய இயல்புகளைக் கொண்ட திருவாவடுதுறை நகரின் பெருமைகளைத் தவுமிய முனிவர் கூறக்கேட்ட மதிலேசன் இத்தலத்தின் சிறப்பைச் சொல்ல வேண்டும் என வணங்கிக் கேட்டான். தவுமிய முனிவரும் இத்தலச் சிறப்பினைக் கூறுகின்றார்.

ஐந்தாவது
தலவிசிட்டம் உரைத்த அத்தியாயம்

189. ஆரணங்கள் இன்னமுங்கண் டறியவொணாச்
சுகாதீத அமல ஞானப்
பூரணமாம் அநாதிமுத்திச் சேத்திரநற்
தலமகிமை புவியின் மேவும்
காரணமும் அந்நகரிற் தவம்தானம்
புரிபவர்சேர் கதியும் சொல்வேம்
சீரணுகும் மிதிலேச கேண்மின்எனத்
தவுமியர்முன் செப்பு கின்றார். 1

190. பாராதி நாதாந்த மாகியதத்
துவங்க ளெலாம் பதநீமுற்குட்
சேராமற் சேர்த்துமலத் தொடுக்கியிளைப்
பாற்றிமலந் தீர்க்கப் பின்னும்
ஆராத கருணையினாற் சத்தியைத்தன்
பால்முகிழ்ப்பித் தமலா னந்தப்
பேராரும் பரைதருமிச் சாஞானக்
கிரியையுருப் பேணி யன்றே. 2

189. ஆரணங்கள் - வேதங்கள். சுகாதீதம் - மேற்பட்ட சுகம்.

191. ஐந்தொழில்செய் திடக்கருதி ஆசனமாய்
ஆதிதொறும் அமரு கின்ற
சுந்தரமா கியகுடிலை வடிவாம்இத்
தொல்நகரம் தொன்று தொட்டு
வந்திடலால் அநாதிமுத்திச் சேத்திரம்என்
றிதன்நாமம் மறைகள் கூறும்
எந்தவிடம் அழிந்திடினும் அழியாதித்
தலவிசிட்டத் தியல்ப தென்றும். 3

192. அரிஅயன்இந் திரன்முதலாம் அமரர்முனி
வர்கள்மறைகள் அளவில் காலம்
பரிவினொடும் தவம்புரிந்து தேடியுங்காண்
பரியவரைப் பரம ஞானப்
பெருகொளியோர் பசுவுருவாய்த் தவம்புரிந்து
பூசிக்கும் பெருமை கொண்ட
திருநகரீ தாதலினால் இதற்கிணையாகும்
தலமும் செகத்தி லுண்டோ. 4

193. உம்பர்தொழும் திருவாத வூரரரன்
உபதேச உறுதி கொண்டு
கொம்பின்மிழற் றுங்குயிலே கோகழிநா
தனைக்கூவாய் கூவாய் என்னும்
செம்பொருள்வீற் றிருப்பதனாற் கோமுத்தித்
தலப்பெருமை செப்பு வார்யார்
இம்பர்தனிற் பிரத்திட்ச சாயுச்சிய
தலமெனவே இசைக்கும் வேதம். 5

194. கோமுத்தி நாதாஎன் றபுத்திபூ
ருவத்தில்எவர் கூறி னாலும்
காமித்த பொருளெல்லாம் கையுறும்ஆ
மலகம்எனக் கண்டு வாழ்ந்து
மாமுத்தி அடைவரெனிற் புத்திபூ
ருவத்துடனே வழுத்து வோர்கட்கு
ஆமுத்தி யின்பமுரைக் களவுறுமோ
மனத்தினுக்கும் அஃதே யாமால். 6

---

191. மறைகள் - வேதங்கள். விசிட்டம் - மேன்மை. 192. செகம் - பூவுலகம்.

193. திருவாதவூரர் - மாணிக்கவாசக சுவாமிகள். கோகழிநாதன் - துறைசை கோமுத்தீசர்.

194. அபுத்திபூருவம் - தன்னுணர்ச்சி இன்மை. புத்திபூருவம் - தன்னுணர்ச்சி யோடு. ஆமலகம் - நெல்லிக்கனி.

195. ஆவடுதண் துறையெல்லை யகமுழுதும்
கோவுருவாம் அமலை பாதம்
மேவுதலால் மிகுபுனிதத் தலமாகும்
அதிற்சனித்த மிருகம் பட்சி
ஊர்வனநீ ருறைவனதா பரமனுடன்
யாவும்அரன் உருவ மாகி
மேவருமுத் தியிலடைதல் கண்டுதே
வரும்பிறக்க விருப்பம் மிக்கார். 7

196. வரமிகவு முதவுசேத் திரமிதுவென்
றறிவதற்கா மலரோன் முன்னாள்
தரைமருவு தலங்கள்தரும் பலன்களைஓர்
தட்டிலிட்டோர் தட்டின் மீது
சுரர்தொழுங்கோ முத்திநகர்ப் பலனையுமிட்
டிணையாகத் தூக்க நல்லூர்
அரனிடுங்கோ வணம்பொறுத்த அமர்நீதி
யார்துலைக்கொப் பாயிற் றன்றே. 8

197. பிறக்கமுத்தி ஆரூரிற், காணமுத்தி
சிதம்பரத்தைப், பிரியாதுற் றங்கு
இறக்கமுத்தி காசிதனில், நினைக்கமுத்தி
சோணகிரி என்பர் இந்தச்
சிறப்புறுங்கோ முத்திநகர் பிறந்தவர்க்கும்
இறந்தவர்க்கும் தெரிசித் தோர்க்கும்
மறப்பறஉள் நினைத்தவர்க்கும் துதித்தவர்க்கும்
இருந்தவர்க்கும் வழங்கும் முத்தி. 9

198. மோகமுட னேதிருவா வடுதுறையிற்
போதியின்கீழ் மூல தேவர்
யோகினிலெண் ணிலிகோடி யுகமிருந்தா
னந்தமின்ன முறுதல் கண்டு
தாகமிகுந் ததிற்தவஞ்செய் யாமல்அய
லிடத்துறுவோர் தன்மை பார்க்கிற்
போகமிகு நிட்சேபம் விட்டரித்துப்
பொன்தேடும் புதுமைத் தாமால். 10

195. அமலை - உமையம்மை. கோவுருவம் - பசுவுருவம்.
சனித்தல் - பிறத்தல்.

196. சேததிரம் - தலம். மலரோன் - நான்முகன்.

197. சோணகிரி - அருணகிரி, திருவண்ணாமலை.

198. மூலதேவர் - திருமூலர். நிட்சேபம் - புதையல். போதி - அரசமரம்.

199. முன்னொருகா லத்தினிற்கோ முத்தீசர்
தேவர்குழாம் முழுதும் தங்கத்
தன்னருள்மந் திரமதனால் அசுவத்த
வனமாக்கத் தழைந்து மண்மேல்
மன்னிடவே ருன்றிநடந் துகந்தொறும்பூங்
கோயில்வலம் வருமே யானாற்
பொன்னெடுங்கோ யிலையும்அர சையும்வலஞ்செய்
வோர்பலனைப் புகலற் பாற்றோ. 11

200. ஆதலினால் அத்தலத்திற் தவஞ்செபம்தியா
னம்பூசை அருள்நூ லோதல்
நீதமிகுங் குருவருள்சேர் சமயமொடு
கிரியைநிரு வாண மேவல்
மேதகுநல் மகம்விரதம் தானம்மிக
வும்புரிதல் விருப்புற் றாரே
ஏதமில்வே தாகமஞ்சொல் லூதியமெல்
லாம்பெறுநல் லியல்புற் றாரே. 12

வேறு

201. அருண்மிகு மிதில கேண்மோ ஆவடு துறைசை யூரிற்
திருமலிஆல யங்கள் சிறப்பொடு மிகவும் செய்வோர்
கருவுறாா் மலவோ் முற்றுங் களைந்தரன் அருளின் மூழ்கிப்
பரபத மருவி யென்றும் பரனடி நிழலில் வாழ்வார். 13

202. பழகுமுற் பணியி லுள்ள பழுதினை யகற்றி மிக்காய்
அழகுறப் புதுப்பித் தோர்கள் அமரரும் ஏவல் கேட்பத்
தழையவிழ் கொன்றை சூடும் சங்கர னுருவு தாங்கி
எழில்பெறும் சிவக ணத்தோ டினிதுவீற் றிருப்ப ரென்றும். 14

203. ஆலயப் பணிசெய் வோர்கள் அகத்தினில் மகிழ்ச்சி மேவச்
சீலமெய்ப் பத்தி யோடும் செங்கல்மண் நீறு சாந்து
சாலவே சுமந்தன் பாகத் தத்தமக் கியன்ற செய்வோர்
பாலலோ சனன்பொற் பாத பங்கயஞ் சுமந்து வாழ்வார். 15

204. அந்தணர்க் ககங்கள் ஈவோர் அன்னசத் திரங்கள் செய்வோர்
பந்தமி லாத வேத பாராயணம் பயிலு வோர்க்குச்
சந்தத மகிழ்ச்சி செய்து தானங்கள் பலவுஞ் செய்வோர்
அந்தமி லாத பேரா னந்தவீ டடைவ ரென்றும். 16

---

203. பாலலோசனன் - கோமுத்தீசுவரர். 204. அகங்கள் - வீடுகள்.

205. சிவனடி யார்கள் மேவத் திருமடங் கட்டுவித்தே
அவர்களுக் கமுது தூசு முதலிய அளித்துப் போற்றும்
தவமுளோர் பெறும்பே றெம்மாற் சாற்றலாந் தகைமைத் தன்று
புவனகோ டிகளை யெல்லாம் புரப்பவர் அவரே யாமால். 17

206. நந்தன வனங்கள் வைப்போர் நாதன்மெய்ப் பணிக்கா மென்றே
புந்திசெய் தன்பி னோடும் பொழில்மிக வளர்ப்போர் மற்றும்
இந்தநற் பதிநெ றிக்கண் எழிற்திகழ் சாலை வைப்போர்
பைந்தரு நிழற்கீழ் வாழ்ந்து பரமர்தம் பதியிற் சேர்வார். 18

207. கோமுத்தி நகரெல் லைக்கண் கூவலாழ் குளங்கள் தொட்டோர்
பார்மெய்க்க மிக்க தண்ணீர்ப் பந்தர்கள் பலவைப் போர்கள்
சீர்மொய்த்த அமுத போகம் தெவிட்டவே யுண்டு வாழ்ந்து
காமித்த பதங்க ளெல்லாம் கண்டுவீற் றிருப்பர் மாதோ. 19

208. கோயில்முற் றங்கள் தூர்ப்போர் மெழுகுவோர் கோலம் செய்வோர்
ஏயுநல் வீதி யெல்லாம் எழில்பெற விளங்கு வோர்கள்
தூயநல் தீபம் வைப்போர் தோரணம் நாட்டு வோர்கள்
ஆயிர கோடி கற்பம் அமருல குறுவ ரன்றே. 20

209. ஈசனார் விழவு காண்டற் கிப்பதி தன்னில் வந்து
தேசுற இயன்ற மட்டும் செய்பணி செய்து போற்றி
ஆசையாற் களித்து வாழ்வோர் அநேகசன் மத்திற் செய்த
காசுறு பாவம் முற்றும் கனலுறும் விறகா மன்றே. 21

210. கோபுரத் தெழிலை நோக்கிக் கும்பிடப் பெற்று ளோரும்
ஆபத்துக் காலந் தன்னில் ஆவடு துறைசை யுன்னித்
தாபித்து வீய்ந்து ளோரும் சந்ததம் திசையை நோக்கி
மாபத்தி யுடனே போற்றும் மாந்தரும் நரகிற் சேரார். 22

211. புண்ணிய அருட்கோ முத்தி புரம்சிவ லோக மென்றே
எண்ணிடா ததில்வா முன்பர்க் கிடர்புரிந் திகழ்ந்தோர் பாவம்

---

205. அமுது - உணவு. தூசு - உடை.
207. கூவல் - கிணறு. காமித்த - விரும்பிய.
208. தூர்ப்போர் - கூட்டுவோர்.
209. விழவு - திருவிழா. சன்மம் - பிறவி.

அண்ணல்வாழ் தலங்க ளெங்கும் அடையினும் அறாதவ்
வூர்வாழ்
பெண்ணொரு பாகன் தானே பிழைபொறுத் தருளிற் தீரும். 23

212. இவ்வித முரைத்த தென்கொல் என்றிடிற் சிவனுக் கந்தச்
செவ்விய துறைசை யென்றும் பொதுவின்றிச் சிறந்த தாலாங்
கொவ்வைவா யுமைக்குக் குற்றங் கூடிய கயிலை யாதி
எவ்வமில் பதியிற் தீராது இப்பதி அகற்றல் சான்றாம். 24

ஐந்தாவது தலவிசிட்டம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 212

திருச்சிற்றம்பலம்

5. தலவிசிட்டம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

வேதங்களாலும் முற்றிலும் கண்டறிய வொண்ணாத மிகுந்த சிறப்புடைய, மேம்பட்ட ஞான முழுமையாக விளங்கும் இந்த அநாதிமுத்திச் சேத்திரத்தின் மகிமையைக் கூறுகிறோம். இத்தலம் இங்கு விளங்குகின்ற காரணமும், இங்கு வந்து தவம், தானம் செய்பவர் அடையும் பெறும் பயன்களையும் கூறுவோம். மிதிலேசனே கேட்பாயாக எனத் தவுமியர் மேலும் விளக்குகின்றார்.

மலமாயை யிருள்களையெல்லாம் அகற்றி, பசுவாகிய உயிர்களெல்லாம் தம் மலரடியடையத் தக்கவாறு அருள வேண்டி, தம்மிடத்திருந்து அருட்சத்தியையும் உண்டாக்கி, அமலானந்தப் பேரருளை அளிப்பவர் இத்தலத்திறைவர்.

எல்லாவற்றையும் சங்காரம் செய்து, பின்னர் ஐந்தொழில் செய்யும்போதே இருப்பிடமாக, குடிலை வடிவமான இத்தொன்மை நகரம், தொன்றுதொட்டு வந்திடலால் இதற்கு அநாதிமுத்திச் சேத்திரம் என்று பெயர் என வேதங்கள் கூறுகின்றன. அதாவது, பிரளய காலத்தில் எல்லா இடங்களும் அழிந்துவிட்டாலும் இந்த முத்திச் சேத்திரம் மட்டும் அழியா திருக்கும் என்ற சிறப்புத் தன்மையைக் கொண்டுள்ளது இத்துறைசைத் திருத்தலம்.

நான்முகன், திருமால், இந்திரன் முதலான தேவர்கள், முனிவர்கள் ஆகிய இவர்களாலும் அளவற்ற காலம் தவம்

புரிந்து தேடியும் காணமுடியாத சிவபெருமான் எழுந்தருளியுள்ள இத்தலமானது பார்வதி தேவியார் பசு உருவாகக் தவம் செய்து பூசிக்கும் பெருமையுடையது என்றால் இத்தலத்திற்கு இணையான வேறொரு தலத்தையும் கூற இயலுமோ? இயலாது. இப்பூமியில் இத்தலத்திற்கு நிகர் வேறு இல்லையாம்!

திருவாதவூரராகிய மணிவாசகப் பெருமானால் 'கோகழி நாதனை'க் (துறைசையிலுள்ள மாசிலாமணியை) கூவாய் என்று திருவாய் மலர்ந்தருளப் பட்டமையால் இக்கோமுத்தித் தலத்தின் பெருமையை இனிமேலும் யார்தான் கூற முடியும். வேதமும் இத்தலத்தை, 'பிரத்தியட்ச சாயுச்சிய தலம்' என்றே கூறுகிறது.

கோமுத்தி நாதா! என்று தன்னுணர்ச்சி இல்லாமலேயே எவர் கூறினாலும், அவர்கள் வேண்டிய பொருள்களையெல்லாம் பெற்று வாழ்ந்து முடிவில் முத்தியை அடைவார்கள் எனின், புத்தி பூர்வத்துடனே அதாவது உணர்ச்சியோடு துதிப்பவர்கள் அடையும் முத்தியின்பத்தைப் பற்றி அளவிட்டுரைக்க இயலுமா, நெஞ்சார நினைப்பவர்களுக்கும் இதே இன்ப நிறைவு கிட்டுமாம்.

ஆவடுதண்துறை எல்லை முழுவதும் பசு உருவமாகும். அதனால் இத்திருத்தலம் மிகவும் புனிதமுடையதாகும். இங்குப் பிறந்த விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்கள், மனிதர்கள் ஆகிய யாவும் அரன் உருவமாகி (சிவ சொரூபமாகி) முத்தி அடைகின்றன. இவற்றைப் பார்த்த தேவர்கள் தாங்களும் இத்தலத்தில் வந்து பிறக்க விரும்புகின்றனர்.

விரும்பிய வரங்களையெல்லாம் அளிக்கவல்லது இந்தத் தலம் என்பதை உணர்த்துவதற்காக மலரோன் ஒருசமயம், மற்றுமுள்ள தலங்கள் அளிக்கும் பலன்களையெல்லாம் ஒருதட்டிலும் இந்தக் கோமுத்தித்தலம் தரும் பலன்களை ஒரு தட்டிலும் வைத்துத் தூக்கிப் பார்த்தபோது, இத்தலப் பயனே மிகுந்திருந்தது. இது அமர்நீதி நாயனார் வரலாற்றினை ஒத்ததாகவும் உள்ளது.

திருவாரூரில் பிறக்க முத்தி; சிதம்பரத்தைத் தரிசிக்க முத்தி; காசியில் இறக்க முத்தி; திருவண்ணாமலையாகிய அருணகிரியை நினைக்க முத்தி என்று பெரியோர் கூறுவர். ஆயின், இந்த

கோமுத்தி நகர் இங்குப் பிறந்தவர்களுக்கும், இறந்தோர்க்கும், தரிசித்தோர்க்கும், நினைத்தோர்க்கும் துதித்தோர்க்கும், இங்கு வாழ்வோர்க்கும் முத்தியைக் கொடுப்பதாகும்.

திருவாவடுதுறையில் அரச மரத்தடியில் திருமூல தேவர் எண்ணில் கோடி யுகம் யோகத்திலிருந்து பேரானந்தம் அடைந்ததை நாமும் இன்றும் பெறலாம் என்று தெரிந்தும் அவ்விடத்தில் தவம் செய்யாமல் வேறிடங்களில் போய்த் தவம் செய்கின்றவர்களின் தன்மையைப் பார்க்குமிடத்து, மிகுந்த போகங்களைக் கொடுக்கும் புதையல் இருக்கும் இடத்தைவிட்டு மணல்களைத் தண்ணீர்விட்டு அரித்துப் பொடிப் பொன்களைத் தேடுபவருக்கு ஒப்பாகும்.

இத்தலக் கோயிலையும் அரச மரத்தையும் வலம் வருவோரிடையும் பயன்களை அளவிட்டுரைக்க இயலாது. இக் கோமுத்தித் தலத்தில் தவம், செபம், தியானம், பூசை, அருள்நூல் படித்தல், குருவினிடத்தில் சமயம் விசேஷம் நிருவாணம் ஆகிய மூன்று தீக்கைகளையும் பெறுதல், யாகம் விரதம் தானம் போன்றவற்றைச் செய்வதில் விருப்பமுற்ற வர்களே வேதாகமங்களில் சொல்லிய நற்பேறுகளைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.

திருவாவடுதுறை ஊரில் திருக்கோயில்களைக் கட்டுவிக் கின்றவர்கள் மீண்டும் பிறவியை அடைய மாட்டார்கள். என்றும் பரமனடி பாடி ஞான வெள்ளத்தில் மூழ்கியிருப்பர். அவ்வாறே, மிகப் பழைய திருப்பணியிலுள்ளவைகளைப் பழுது பார்த்து மிகவும் அழகாகப் புதுப்பிக்கின்றவர்கள், தேவர்களும் தங்களது ஏவல் கேட்ப சிவசங்கரன் திருவுருவம் பெற்று (சாரூபப் பதவி பெற்று) சிவகணங்களுடன் இனிதே அமர்ந்திருப்பர்.

திருக்கோயில் திருப்பணி செய்கின்றவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கவும் பக்தியுடனும் கல், மண், சுண்ணாம்பு இவற்றைச் சுமந்து தங்களாலானதை உடனிருந்து செய்வார் களானால் சிவபெருமான் திருவடியின்கீழ் இன்புற்று வாழ்வர்.

அந்தணர்களுக்கு வீடு அளிப்பவர்களும், அன்னசத்திரங்கள் கட்டுகின்றவர்களும், வேத பாராயணம் பயிலுகின்றவர் களுக்கு மகிழ்வுடன் தானங்கள் செய்கின்றவர்களும் முடிவற்ற பேரானந்த வீட்டை அடைவார்கள்.

சிவனடியார்கள் தங்கி வாழத் திருமடங்களைக் கட்டுவித்து அவர்களுக்கு உணவு உடை ஆகியவற்றை அளித்துப் போற்றுபவர்கள் பெறும் பேற்றினை எம்மால் உரைக்க இயலாது. அவர்கள் புவனகோடிகளையெல்லாம் புரக்கும் மண்டலேசுவரர்கள் ஆவர்.

சிவலோகநாதன் மெய்ப்பணிக்காக நந்தன வனங்கள் வைப்பவர்கள், சோலைகளை வளர்ப்பவர்கள் மற்றும் இந்த நற்பதி செல்லும் வழியிலே இருமருங்கிலும் சாலைகள் அமைப்பவர்கள் ஆகிய இவர்களெல்லாம் கற்பகத் தருவின் நிழலில் வாழ்ந்து கயிலையை அடைவர்.

கோமுத்தி நகரின் எல்லையில் கிணறு, குளங்கள் ஆகிய இவைகளை வெட்டி வைத்தவர்கள், தண்ணீர்ப்பந்தர்கள் வைப்பவர்கள் ஆகிய இவர்களெல்லாம் அமுதமுண்டு தேவருலகில் வாழ்ந்து, அவர்கள் விரும்பிய பதங்களை யெல்லாம் பெற்று வாழ்வர்.

திருக்கோயிலின் கோபுர வாயிலை அலகிடுவோரும், கோலமிடுவோரும், திருவீதிகளை எழில்பெற விளக்குவோரும், தூயநல் தீபம் வைப்போரும், தோரணம் பல நாட்டுவோரும் ஆகிய இவர்களெல்லாம் ஆயிரகோடி காலம் தேவருலகத்தில் வாழ்ந்திருப்பர்.

கோமுத்தீசருடைய திருவிழாக் காண இத்துறைசையில் வந்து, இயன்றமட்டும் திருப்பணிகள் செய்து, துதித்துப் போற்றி, விருப்பமுடன் மகிழ்வுடன் வாழ்கின்றவர்களுக்கு எண்ணற்ற பிறவிகளிலே செய்த எல்லாப் பாவங்களும் விலகும்.

திருக்கோயில் திருக்கோபுரத்தழகை நோக்கிக் கும்பிட்டு மகிழ்வோரும், ஆபத்துக் காலங்களில் ஆவடுதுறைசையை உள்ளத்தில் நினைந்து உருகுவோரும், எப்பொழுதும் இத்தலம் உள்ள திசையை நோக்கிப் பெரும் பக்தியுடன் தொழுவோரும் நரகத்தில் சேரமாட்டார்கள்.

இறைவன் திருவருளும் புண்ணியப்பேறும் நிறைந்த இந்தக் கோமுத்திபுரம் சிவலோகம் என்று எண்ணாமல், இங்கு வாழும் மெய்யடியார்களுக்கு இன்னல்களைச் செய்தும் இகழ்ந்தும் பெறும் பாவங்களைத் தேடிக் கொண்டவர்கள் வேறு எந்தத் தலத்தினை அடைந்தாலும் நீங்காது.

திருவாவடுதுறையில் வாழ்கின்ற மாதொரு பாகனாகிய கோமுத்தீசுவரரே அப்பிழைகளைப் பொறுப்பவர் ஆவார்.

இவ்வாறு கூறுகின்றீரே இது எப்படி உண்மையாகும் என்று எவரும் வினவலாம். சிவபிரானுக்குத் துறைசை என்றும் பொதுவின்றிச் சிறந்த தலமேயாதலால்தான் உமையம்மையின் சாபம் கயிலை முதலான எத்தலத்திலும் தீராது இத்தலத்திலே தீர்ந்தது. இதுவே இத்தலத்தின் தனிச்சிறப்புக்குச் சான்றாகும்.

ஆறாவது
தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம்

213. இன்னணம்ஆ வடுதுறைசைத் தலவிசிட்டம்
உரைத்ததுகேட் டின்ப மெய்தி
மன்னன்மிதி லேசன்இறும் பூதுடனே
தவுமியரை மகிழ்ந்து நோக்கி
அன்னதலத் தினிலமருந் தீர்த்தவிசே
டத்தினையும் அறைகு வாயென்று
இன்னமொ டிரந்துகரங் குவித்திறைஞ்சிக்
கேட்பமுனி இயம்பு கின்றான். 1

214. சொருபவடி வாயெவையுந் தன்னடிக்கீ
ழாக்குகின்ற துரியா தீதப்
பரமபர மிரண்டினையுங் கடந்தபரா
பரன்சிருட்டி பண்ணுங் காலம்
கருணையொடுந் தடத்தவுரு வாய்ச்சரா
சரம்படைக்கக் கருதி முன்னே
பெருகுமெழிற் தலம்தீர்த்த மூர்த்திவடி
வாய்த்தானே பிறங்கு கின்றான். 2

215. அன்னமூ வகையையும்பின் பலவுருவ
மாக்கிஉயிர்க் கருள வேண்டி
மன்னுமருள் மெய்யுபாங் கம்புலன்அந்
தக்கரணம் வளர்முச் சீலம்

---

213. இன்னணம் - இவ்வண்ணம். தலவிசிட்டம் - தலமேன்மை. இறும்பூது - பெருமை. தீர்த்தவிசேடம் - தீர்த்த மகிமை.

214. சொருபவடிவு - அழகுவடிவு. துரியாதீதம் - ஆன்மாக்கள் மிகத் தூய்மையாய் நிற்கும் நிலை. ஐந்தாமவதை. பராபரன் - இறைவன். சிருட்டி - உலகத் தோற்றம். சராசரம் - பிரபஞ்சம்.

215. அன்ன-அப்படிப்பட்ட. அந்தக்கரணம் - உட்கரணம், மணம்.

தன்னுடன்இச் சாஞானக் கிரியையையும்
புவியிடத்திற் தலங்கள் தீர்த்தம்
முன்னுசிவ மூர்த்திவடி வாய்ப்பிரித்தங்
கவைதோறும் உறைகின் றானால். 3

216. அதில்ஞானம் கிரியைஇச்சை எனும்மூன்றை
ஆவடுதண் துறையி லன்றே
மதியார்நல் மூர்த்திசேத் திரம்தீர்த்த
மாயமைத்து மருவ லாலப்
பதிமேவு தீர்த்தம்இச்சா சத்திவடி
வாமதனைப் பாரி லுள்ளோர்
கதிமேவு கோமுத்தித் தீர்த்தமென்றும்
பேசியுளங் களிப்ப ரென்றும். 4

217. இச்சாபோ கந்தரும்இச் சாசக்தி
தீர்த்தமென்றும் இன்பம் ஈயும்
சிற்சாயுச் சியதீர்த்த மென்றும்நீள்
அநாதிமுத்தித் தீர்த்த மென்றும்
அச்சாகும் பவநாச தீர்த்தமென்றும்
அருட்தீர்த்த மாகு மென்றும்
மெய்ச்சார்பிற் கோமுத்தி தீர்த்தத்தின்
பெயர்பலவாய் விளங்கு மென்றும். 5

218. பத்தியுடன் பிராதத்தா னந்தொழுதா
டித்திலதர்ப் பணங்கள் செய்து
சித்தசுத்தி தருமநுட்டா னம்பூசை
செபமதன்கட் செய்வா ராகில்
அத்தனருட் கிருபையெலாம் அவர்களுக்கே
கைவசமாம் அநேக சன்மத்
தொத்துடனாய்த் தொடர்ந்தகொடும் பாவமெலாம்
அக்கணம்மாய்ந் தொழியு மன்றே. 6

219. அமாவாசை விதிபாதம் பிரதோடம்
அட்டமிஈ ரயனம் செவ்வாய்
உமாநாதன் மகிழ்சோம வாரம்சுக்
கிரவாரம் உதயன் வாரம்

---

218. பிராதத்தானம் - விடியற்காலம். திலதர்ப்பணங்கள் - எள்ளும் தண்ணீரும் இறைத்தல். சித்தசுத்தி - மனத்தூய்மை. தருமநுட்டானம் - அறம்செய்தல். செபம் - மந்திரமுச்சரித்தல். அத்தன் - சிவபெருமான். தொத்து - பழமை.

தமினாளுங் கோமுத்தி தீர்த்தநீர்
படிந்தேதேன் தானம் செய்வோர்
இமனாடெந் தத்திசைக்கண் என்றறியா
துயர்வான்பெற் றிருப்ப அன்றே. 7

220. தைமகரச் சூரியன்தே ருத்தரத்திற்
திரும்பிடுஞ்சத் தமியில் வந்து
மெய்ம்மருவும் கோமுத்தித் தீர்த்த நீர்
படிந்துபொடி மெய்யிற் பூசி
மைமருவும் கண்ணியைஓர் பால் அணைத்தார்
இடபமிசை மருவுங் கோலம்
கைமலர்கள் குவிந்திடக்கண் களிகூரத்
தொழுமவரே கடவு ளாவார். 8

221. சங்கமுறும் பசுத்துவந்தீர்த் துமையமையைப்
பெற்றருட்சங் கரனுக் கீந்த
புங்கமுறுஞ் சத்தியென்றே கோமுத்தித்
தீர்த்தத்தின் புகழை யோர்ந்து
கங்கைமுதற் புவியிலுள்ள தீர்த்தமெல்லாம்
பணிந்திடுங்கா வேரி தானும்
மங்களமாய்ச் சூழ்ந்துதினம் வலம்வருமென்
றால்அதன்சீர் வழுத்த லாமோ. 9

222. அம்பொனால் இரசதத்தால் தாம்பிரத்தாற்
செய்தகடம் அவற்றொன்றேனும்
இம்பரிற்கைக் கொண்டுகோ முத்திதீர்த்
தப்புனல்மொண் டெடுத்துச் சென்று
நம்பரருள் மாசிலா மணிமுடியின்
மனுவோதி நயந்தங் காட்டிற்
பம்புகங்கைப் புனற்தசும்பா யிரமெடுத்தா
டினுமதிற்செம் பாதிக் கொவ்வா. 10

223. கும்பமா தத்தினிற்கோ முத்திதீர்த்
தத்தின்மகங் குறித்தங் காடி
அன்பினுடன் அசுவத்த நிழலிலிருந்து
அரனெழுத்தஞ் சமர வோதி
உம்பர்தொழுந் துறைசைநா தனைப்பணியிற்
பிரயாகை உதகந் தன்னில்

222. தசும்பு - குடம். 223. உத்கம் - நீர். சதமகம் - நூறுமகம்.

அன்புடனே சதமகஞ்சென் றாடினோர்
பதம்பெறுதற்கு ஐய மின்றே. 11

224. அறமொருநாள் மூழ்கிலுண்டாம் இருநாள்மூழ்
கிடிற்பொருளும் அதனோ டாகும்
திறமுடன்முத் தினமூழ்கின் இன்பமுடன்
முப்பொருளுஞ் சேரும் வாசத்
துறைமருவு கோமுத்தி தீர்த்தத்தில்
நான்குதினந் தொழுது மூழ்கில்
இறையருளால் வீடொடுநாற் பொருளுமுறும்
உண்மையிதென் றெண்ணி னோர்க்கே. 12

225. தெரிசிக்கிற் பரிசிக்கிற் தாகத்தால்
நீரருந்திற் தீர்த்த மாடில்
கரிசுற்ற பாவமெலாம் வெந்துபொடி
யாம்கொடிய கலிநோய் துன்பம்
சுரமிக்க குட்டம்முய லகன்பிரம
கத்திப்பேய்த் தொடர்பு தீரும்
பரிசுத்த மாகியகோ முத்திதீர்த்தப்
பெருமை பகருங் காலே. 13

226. தண்டுலம்எள் பயறுபூ சணிக்காய்தேங்
காயிழுது தாம்பூ லம்கற்
கண்டுசருக் கரைபால்தேன் கற்பூரம்
சந்தனம்பூக் கனகம் தூசு
வண்டமர்பூங் கோமுத்தி தீர்த்தத்தின்
கரைமருங்கு மறையோர் கையில்
அண்டருக்கும் முனிவருக்கும் பிதிர்களுக்கும்
ஈந்திடிலொன் றனந்த மாமால். 14

227. மிருகங்கள் பட்சிகள்நீர் வாழ்சாதி
தாவரங்கள் மிகுமூர் சாதி
மருவிநீர் குடித்ததுவும் தோய்ந்ததுவும்
விடுநீரால் வளர்ந்த பூடும்
உருவிடுநாள் அரனுலகுக் குறுதல்கண்டு
தேவர்களும் உறுதி கொண்டு
பொருவிலருட் கோமுத்தி தீர்த்தமென்றும்
ஆடிஅரன் பூசை செய்வார். 15

226. தண்டுலம் - அரிசி. இழுது - நெய். கனகம் - பொன். தூசு - சீலை.

228. ஆனதினாற் கோமுத்தி தீர்த்தத்தின்
பெருமையைநா வனந்தங் கொண்டு
மானயமா யுரைத்திடினும் அளவுபடா
தாகிலெவர் மதிக்க வல்லார்
கானமரு மலரலங்கற் புயக்குரிசி
லேமிதிலை காவ லாவென்று
ஈனமிலாத் தவமிகுந்த தவுமியமா
இருடிஅன்போ டியம்பி னானே. 16

ஆறாவது தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 228

திருச்சிற்றம்பலம்

6. தீர்த்த மகிமை உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

திருவாவடுதுறைத் தலத்தின் சிறப்பை உரைத்ததைக் கேட்ட மிதிலேசன், தவுமியரை மகிழ்ச்சியுடன் பார்த்து இத்தலத்திலுள்ள தீர்த்தச் சிறப்பையும் சொல்லியருள வேண்டு கின்றான். தவுமிய முனிவரும் அதைச் சொல்லத் தொடங்குகிறார்.

அழகு வடிவமாக இருக்கின்ற அனைத்தையும் தன்னுடைய திருவடியின் கீழாக்குகின்ற பராபரன்ான இறைவன், உலகத் தோற்றம் செய்யும் காலத்தில், தடத்த வுருவாகச் சராசரங்களைப் படைக்கக் கருதினான். முதலில் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவற்றின் வடிவமாகத் தானே விளங்குவானாயினான்.

தலம், தீர்த்தம், மூர்த்தி என்று சொல்லப்பெற்ற இம்மூன்று வகையையும் பின்னர்ப் பல உருவங்களாக்கினான். ஆன்மாக்களுக்கு அருளவேண்டி உடல், புலன், அந்தக் கரணம், முச்சீலம் ஆகியவற்றுடன் இச்சை, ஞானம், கிரியை ஆகியவற்றையும் தோற்றுவித்து, உலகில் தலங்கள், தீர்த்தங்கள், மூர்த்திகள் போன்றவற்றில் பிரித்து அவை ஒவ்வொன்றிலும் உறைகின்றவனானான்.

இவற்றுள், ஞானம், கிரியை, இச்சை என்னும் மூன்றையும் திருவாவடுதுறைப் பதியில் அன்றே இறைவன் மூர்த்தி, தலம், தீர்த்தமாய் அழைத்து அதில் பொருந்தினான். ஆதலால், இத்தலத்திலுள்ள தீர்த்தமானது இச்சா சத்தி வடிவமாகும். இதனை, கோமுத்தித் தீர்த்தம் என்று உலகத்தவர் அழைத்து மகிழ்வர்.

மேலும், இச்சா போகந்தரும் இச்சாசக்தி தீர்த்தம் என்றும், இன்பமளிக்கும் சிற்சாயுச்சிய தீர்த்தம் என்றும், அநாதி முத்தித் தீர்த்தம் என்றும், பாவநாச தீர்த்தம் என்றும், அருள் தீர்த்தம் என்றும் பல நாமங்களுடன் இக் கோமுத்தித் தீர்த்தம் விளங்குகின்றது.

நாள்தோறும் விடியற்காலையில் மிகுந்த பக்தியுடன் இத்தீர்த்தத்தில் நீராடி, திலத்தர்ப்பணங்கள் செய்து, சித்தசுத்தி தரும அநுட்டானம், பூசை, செபம் இவற்றைச் செய்பவர்கட்கு இறைவன் திருவருள் உடனே கைகூடும். மேலும், பல பிறவிகளில் தொடர்ந்து வரும் கொடிய பாவங்களெல்லாம் உடனே நீங்கும்.

அமாவாசை, பிரதோடம், அட்டமி, உத்தராயணம், தட்சிணாயனம், செவ்வாய்க்கிழமை, திங்கட்கிழமை, வெள்ளிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை போன்ற நாள்களில் கோமுத்தித் தீர்த்தத்திலே நீராடி ஏதேனும் தானம் செய்கின்றவர்களுக்கு காலபயம் இல்லை. அவர்கள் எமனுடைய உலகம் எந்தத் திசையில் இருக்கிறது என்றும் அறியார்கள்; எப்பொழுதும் அமரருலகில் மகிழ்ந்திருப்பார்கள்.

கோமுத்தித் தீர்த்தத்திலே தைநீராடலை மெய்யன்போடு செய்து, ஒப்பிலாமுலையம்மையை ஒருபால் அணைத்து மகிழும் சிவபெருமானின் திருவருட் கோலத்தைக் கண்டு களித்தவர் தெய்வ வடிவு பெறுவர்.

உமையம்மை தாம் பெற்ற பசுத்தன்மை நீங்கிப் பரமன்பால் சேர்வதற்குக் காரணமாயிருந்த இத்தீர்த்தத்தின் சிறப்பை உணர்ந்த கங்கை முதலான எல்லாப் புண்ணிய தீர்த்தங்களும் வணங்கும் காவிரி நதியானது தினமும் இக்கோமுத்தித் தீர்த்தத்தை வலம்வருகின்றது என்றால் இதன் பெருமையை யார்தான் கூற இயலும்.

பொன் மற்றும் தாமிரத்தாலான குடங்களிலே இக்கோமுத்தித் தீர்த்தத்திலிருந்து நீரை மொண்டெடுத்துச் சென்று இத்தலத் திறைவர் மாசிலாமணி முடியில் கவிழ்த்து புனலாட்டுபவர் பெரும் புண்ணியம் பெறுவர்.

மாசி மகத்தில் இத்தீர்த்தத்திலே நீராடி, அரச மரத்தின் நிழலிலிருந்து, ஐந்தெழுத்தோதி, துறைசைநாதனைப் பணிப வர்கள், பிரயாகையில் நூறு மகத்திற்குச் சென்று நீராடிய பெரும் பயன்பெறுவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இத்தீர்த்தத்தில் ஒருநாள் மூழ்கியவர்களுக்கு அறம் உண்டாம். இரண்டு நாள்கள் நீராடியவர்களுக்கு அறமுடன் பொருளும் உண்டாம். மூன்று நாள்கள் குளித்தவர்களுக்கு இவற்றுடன் இன்பமும் உண்டாம். நான்கு நாள்கள் மூழ்கியவர்களுக்கு அறம், பொருள், இன்பம் ஆகியவற்றுடன் வீடுபேறும் கிடைக்கும்.

கோமுத்தித் தீர்த்தத்தைத் தரிசித்தாலும், தீண்டினாலும் அருந்தினாலும், குளித்தாலும் பாவங்களெல்லாம் வெந்து பொடியாம். மிகுந்த துன்பம் தரும் நோய், சுரம், குட்டம், முயலகம் நோய், பிரமகத்தி, பேய் போன்றவையும் தீரும்.

இத்தீர்த்தக்கரையில், மறையவர்கள் கையில் அரிசி, எள், பயறு, பூசணிக்காய், தேங்காய், தாம்பூலம், நெய், கற்கண்டு, சர்க்கரை, பால், தேன், கற்பூரம், சந்தனம், பூ, பொன், ஆடை ஆகிய பொருள்களைத் தானமாகத் தந்திடில் தேவர்களும், முனிவர்களும், பிதிர்களும் மகிழ்ந்து இறையருள் கிட்டும்.

இத்தீர்த்தத்தில் மனிதர்களேயன்றி, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் போன்றனவும் வந்து நீராடி, நீரருந்தி செல்லுமாயின் அவையும் இறைவனடி சேரும் பேறு பெறுவதைக் கண்ட தேவர்களும் இங்கு வந்து நீராடி அரன் பூசை செய்கின்றனர்.

எனவே, கோமுத்தித் தீர்த்தத்தின் பெருமையை ஆயிரம் நாக்குகளைக் கொண்டு உரைத்தாலும் அளவுபடாது எனின் அதன் சிறப்பை மதிப்பிட வல்லவர்கள் யார்? மிதிலை காவலனே இதனை அறிவாயாக எனத் தவுமியமா முனிவர் அன்போடு கூறினார்.

ஏழாவது
மூர்த்தி விசேடம் உரைத்த அத்தியாயம்

229. சீர்த்தி கொண்டிடு தலமும் தீர்த்தமும்
செப்பி னீர்இனித் துறைசைவாழ்
மூர்த்தி மேன்மையை உரைசெய் வாய்எனை
முழுது மூடிய மலவிருட்
பேர்த்து நல்லருள் தந்த தேசிக
வென்று பேசிய மிதிலனைப்
பார்த்த கங்குளிர்ந் திருக ணீர்வரப்
பரவ சத்தொடும் பகருவான். 1

229. மலவிருள் - ஆணவம், மாயை, காமியம் என்னும் முக்குற்றங்கள்.

230. அளவ தற்றபல் லுயிரில் மொய்த்திடும்
ஆண வத்திமி ரத்தினுக்கு
ஒளிர்க திர்த்திர ளாம்வி னைக்கடல்
உணவு பெற்றிடு வடவையாந்
தளர்வு றப்புணர் பவவ னத்தொகை
தனையெ ரித்திடு கனலதாம்
வளர்பு கழ்த்துறை சையின்மு ளைத்தெழு
மாசி லாமணி தரிசனம். 2

231. இரும்பை ஈர்த்திடு காந்தம் ஒத்தெனும்
உயிரை யீர்த்திரும் பிணையனல்
ஒருங்கு வைப்பது போல்ம லத்தையொ
ழித்த ருட்குளொ ளித்துயிர்க்கு
அருந்து நற்கரும் பினிய முக்கனி
அமுதை யொத்தக மேவுமால்
வரங்கொ டுத்தொளிர் துறைசை யுற்றிடு
மாசி லாமணி தரிசனம். 3

232. திருவு மிக்கசெல் வமுமி குத்திடு
தேசு நற்புக ழுந்திகழ்
அருளு நட்புள துணையும் வித்தையும்
அரிய சித்தியு முத்தியும்
பெருமை யுற்றுள பொருளும் புத்தியும்
பெருகு நற்றவ முந்தரு
மரக தத்திர ளெனமு ளைத்தொளிர்
மாசி லாமணி தரிசனம். 4

233. இந்த அற்புத மான மாசிலா
மணிஇ லிங்கமுன் ஆதியில்
வந்த அற்புதம் அரச கேள்சுக
வாரி யாய்அழி யாததாய்ப்
பந்த மற்றிடு பரம சூக்கும
மாய்ப்ப ரந்தபூ ரணமதாய்
அந்த மத்திம மாதி யொன்றுமி
லாத தாய்வடி வற்றதாய். 5

230. ஆணவத்திமிரம் - ஆணவமாகிய மல இருள். வடவை - வடவை அனல். பவ வனம் - பிறவிக்காடு. கனல் - நெருப்பு.

232. தேசு - அழகு. துணை-மனைவி. வித்தை - கல்வி.

234. நித்த மாய்அரு வுருவ மற்றிடு
நின்ம லத்தனி முதலுமாய்ச்
சுத்த மாய்உவ மான மற்றிடு
சொருப மாய்மிகு பிரபுவாய்ப்
பத்தர் கண்டுசு கித்தி டும்பர
போக மான பராபரஞ்
சத்தி தங்குசி வம்ச தாசிவம்
தகும கேசமுன் றாதியே. 6

235. நிட்க ளச்சிவம் ஒன்றும் நிட்கள
சகளம் ஐந்தும்நீள் சகளமாயி
உட்கொ ளுந்திற லார்ம கேசுரம்
இருப தைந்தும் ஒன் றாகிநற்
தட்கு ணம்பெறு கின்ற மெய்க்கிரி
யாச தாசிவத் தன்மைகொண்டு
எட்கண் நின்றிடு மெண்ணெய் போல்உல
கெங்கும் நின்றும்ஓர் பிண்டமாய். 7

236. தேவர் மானிட ராதி யாமுயிர்
செய்தி டும்பணி கொண்டவர்க்கு
ஆவ லாகிய சித்தி முத்திகள்
அன்பு டன்கொடுத் தாட்கொள
மேவு சோதியி லிங்க நற்குறி
யாகி மேதினி மீதிலே
ஏல்வ ளம்பெறு மெண்ணி லாதஇ
டங்க ளெங்கணு மேவுமுன். 8

237. மூல மாகிய வில்வ வேரின்
முளைத்தெ ழுங்கிளை யென்னவே
ஞால மீதுறு குறியெ லாமெழ
நல்கி மாசிலா மணியதாய்
ஏல வேசிவ லிங்க மாகி
இலங்கு முத்திநற் சேத்திரத்து
ஆல முண்டவ னுயிர்க ளுக்கருள்
செய்ய வேண்டி அமர்ந்தனன். 9

---

235. தட்குணம் - அட்டகுணம். எட்கண் - எள்ளுக்குள்.

238. அகில காரண பிரண வம்மம
ராச னம்பர ஞானமே
மிகவி லங்குநல் மூர்த்தி மூர்த்தியுள்
மேவு மூர்த்திமான் மிகுபரஞ்
சகமெ னுந்திரு மகள்தன் நெஞ்சகந்
தங்கும் ஆவடு துறையென
இகல்க டிந்திடு சுருதி யாகமம்
என்றும் எங்கும் இயம்புமே. 10

239. மனாதி யால்மறை யால்அ யன்திரு
மாலி னால்அறி தற்கொணா
அனாதி நின்மல சொருப மாகிய
அமல மேதுறை சையினிடத்து
இனாத நீக்கும்நல் மாசி லாமணி
லிங்க மாகி யிருந்ததென்று
உனாத மாந்தர்க ளறிவெ னாமுணர்ந்
துருகு வோர்செயல் உரைசெய்வாம். 11

வேறு

240. புலருங்கா லத்தெழுந்து சௌசாதி
முடித்தினிய புனிதத் தோடு
மலருலாங் கோமுத்தி தீர்த்தமா
டிச்சிறந்த மனுக்க ளோதி
இலகுமனுட் டானமும்தர்ப் பணமுதலா
னதும்விதி கொள்ளியல்பி னாற்றிக்
குலவுசிவார்ச் சனைமுடித்துக் கோயிலொடும்
அரசைவலங் கொண்டு சென்று. 12

241. கங்காத ரா!காள கண்டா திரி யம்பகா! கால காலா!
துங்காபு ராந்தகா! தண்துறைசை நாயகா! சுயம்ப்ர காசா!
சங்கார காரணா! சதாசிவா! சுராதிபா! சயில மாது
பங்கா!து ரந்தரா! சங்கரா! சுந்தரா! பரம நாதா! 13

242. என்றுதுதி செய்தாடிப் பாடிநமக்
கரித்துயிர்ப்போ டிரங்கி மேனி
துன்றுமயிர்ப் புளகமுற இருகணீ
ருகுத்துமிகத் துளங்கி யார்த்து

---

240. அரசு - அரச வனம்.

நின்றுபர வசமாகி அனல்மெழுகொத்
துருகிஅருள் நிமலா னந்தத்
தொன்றிஇரண் டறக்கலந்தொன் றாகியசா
யுச்சியபதத் துறுவர் பல்லோர். 14

243. ஐம்புலப்பந் தனைகள்விடுத் தடியிணைக்கே
ஆவர்வமிகுந் தருளி னோடு
நம்பியல கிடல்மெழுகல் மலர்புனைதல்
முதலாம்நற் பணிகள் செய்தும்
உம்பர்நா யகனைமல ரால்அருச்சித்
தேத்தியும்யோ குற்றுக் கண்டும்
இன்பமிகுந் தெப்பொழுதுந் தொழுதுபத
முத்திகளேய் வார்கள் பல்லோர். 15

244. தத்தமக்கென் றதுசிவனுக் குபகார
மானபொருள் தன்னை நல்கி
அத்தனே! எமையாளும் ஐயனே!
கொடும்பவநோய் அறுப்பா யென்று
பத்தியொடு நினைந்துதினந் தினம்போய்ச்சந்
நிதியில்நின்று பகர்ந்து போற்றிச்
சித்தமய லகற்றிவிண்ணோ ரெதிர்கொளச்சென்
றுயர்போகந் திளைப்பர் பல்லோர். 16

245. காலைபோய்த் தொழுவோர்கட் கிச்சனனத்
துறும்பாவங் கழியும் உச்சி
வேலைபோய்த் தொழுவோர்கட் கேழ்பவத்து
வினைமுழுதும் வீயும் அன்பாய்
மாலைபோய்த் தொழுவோர்க்கு மாசிலா
மணியருளால் வளர்பா வஞ்சேர்
மூலநோய் முழுதும்அறும் மெய்ப்பயனுங்
கைப்பொருள்போல் மேவு மன்றே. 17

246. பிறதோட வேளையினில் ஆவடுதண்
துறையுறையும் பெருமான் தன்னை
நிறைவான நேசமொடுங் கண்டுதரி
சித்திடில்முன் நெடுங்கா லத்தில்
மறையோர்நல் ஆனினங்கள் மாதர்சிசுத்
தந்தைதாய் வதைசெய் பாவம்

245. இச்சனத்துறும் - இந்தப் பிறவியில் வரும். ஏழ்பவத்து - ஏழு பிறவிகளில்.

உறமேவி னாலுமலர் கதிரவன்முன்
இருள்போல்விட் டொழிதல் மெய்யே. 18

247. சோமவா ரத்தினிற்கோ
முத்தீசர் ஆலயத்தைச் சுற்றி வந்து
நேமமுடன் பூமாலை பலசாத்தி
நெய்த்தீபம் நிறைய ஏற்றிச்
சேமநிதி யே!அரனே! சிவனே!என்
றேத்திநின்று சேவிப் போர்கள்
பூமகள்நா யகனாவர் அயனாவர்
அரனுருவும் பொருந்து வாரே. 19

248. சிவநிசியில் விரதமுட னுபவாச
மாய்த்துறைசைச் சிவனுக் கன்பாய்
நவமிகுபூ சனைபுரிவித் திராமுழுதும்
விழித்திருந்து நாற்சா மத்தும்
உவகையொடுந் தரிசனஞ்செய் திடுமவர்கள்
அரன்கயிலை உயர்வில் மேவிப்
புவனமெலாம் பரவுசிவ கணநாத
ராவார்கள்பின் புவியின் மேவார். 20

249. நிருத்தமா டுதல்காண மழைக்கொதுங்கச்
சங்கீத நிலையை கேட்கத்
துரத்துமொரு வலியனுக்காய்ப் புகுந்தொளிக்கச்
சித்திரத்தின் தொகுதி காண
விருப்பொடுங்கோ யிற்குள்வந்தே பராமுகமாய்க்
கண்டிடினு மிகுமான் கன்றை
கருத்துறநேர் நோக்குதல்போல் மாசிலா
மணிநோக்கிக் கருணை கூடும். 21

வேறு

250. அண்டர்தொழும் ஆவடுது றைப்பரமர்க் கன்பாய்
மண்டபம்வி மானமணி மாளிகைசெய் விப்போர்
பண்டைமறை யோதுபர போகமவை யாவுங்
கண்டுநுகர்ந் தென்றுமழி யாதகதி சேர்வார். 22

251. ஆரமணி மாலைகன கப்பணிபொன் னாடை
வீரமணி மோலிவல யம்பலவி ளங்கச்

---

247. சோமவாரம் - திங்கட்கிழமை.

248. சிவநிசி - சிவராத்திரி.

சீரணிகோ முத்திபுரச் செல்வர்பெற வீய்ந்தோர்
தாரணிபு யக்கமலை தங்குபுய னாவார். 23

252. பொற்குடம்வெள் ளிக்கலசம் பொங்குமணி பூந்தட்டு
எற்குலவு மாசனம்நல் மஞ்சமிர தஞ்சீர்
வற்கமிகு வாகனம்வெண் சாமரை வளைந்த
நற்கழைகொ ளூஞ்சிவிகை நல்லகுடை குஞ்சம். 24

253. நென்மிக விளைந்திடு நிலங்கொள்பழ னங்கள்
பொன்மிக விளைந்திடு புரம்புதிய தாக
நன்மக மிகுந்துறைசை நாயகருக் கன்பாய்த்
தன்மன மகிழ்ந்துதவு தன்மமுடை யோர்கள். 25

254. ஓகைபெறு மூவெழுகு லத்தினர்க ளோடு
நாகர்பதி திக்கதிபர் நற்பதிபூ வனமால்
போகபதி யோடுயர் புராரிநகர் மேவிப்
பாகமிகு போகநுகர் வார்கள்பல கற்பம். 26

255. பேரிமுர சம்பிளிறு சின்னமொடு தாரை
தூரியம் விபஞ்சிமிகு தும்புருநல் வீணை
சாருநட மாதர்பல தாளம்இசை வித்தோர்
சீரணுகு வானுலகு சேர்ந்தினிது வாழ்வார். 27

256. எட்டயிலம் நெய்தயிர்பால் இன்கனி யினங்கள்
அட்டிடு கரும்பிளநீர் ஆர்கலவை சந்தம்
கட்டும்வடி தேன்மலிகோ ரோசனைகற் பூரம்
இட்டமிகும் அன்னம்அபி டேகம்நிவே திப்போர். 28

257. இம்மையினில் இன்மையில ராய்மிகும் வளத்தோடு
எம்மைபுரி சஞ்சிதநோய் யாவுமில ராகிக்
கொம்மைமுலை மாதரொடு மைந்தரொடுங் கூடிச்
செம்மைமிகு நற்சிவப தத்தின்நிழல் சேர்வார். 29

258. சத்தியம தாய்நைமி சத்திரு வனத்தில்
உத்தமகு ணத்தையுறு சூதனுரை செய்தது
அத்தனையு மாய்ந்துரைசெய் தேம்அரச வென்றான்
பத்தியொடு மாதவுமி யப்பனவன் மாதோ. 30

ஏழாவது மூர்த்தி விசேடம் உரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 258

திருச்சிற்றம்பலம்.

7. மூர்த்தி விசேடம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

என்னுடைய அறிவின்மையைப் போக்கியருளிய ஞான குருவே! திருவாவடுதுறைத் தலத்தின் சிறப்பையும், தீர்த்தச் சிறப்பையும் எடுத்துரைத்தீர்கள். இப்பொழுது, இங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியின் சிறப்பையும் உரைத்தருள்க என மிதிலேசன் வேண்டினான். அதுகேட்ட தவுமியமுனிவர், அகங்குளிர்ந்து, இரு கண்களிலும் ஆனந்தக்கண்ணீர் பெருக் கெடுக்க மிகுந்த பரவசத்துடன் பகரத் தொடங்குகின்றார்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள மாசிலாமணிப் பெருமானது தரிசனமானது எண்ணற்ற ஆன்மாக்களைப் பற்றியுள்ள ஆணவமலமாகிய இருட்டிற்கு, ஒளிவீசுகின்ற சூரியனுடைய கதிர்களைப் போன்றும், வினைக்கடலுக்கு வடவை அனல் போன்றும், பிறவிக் காட்டினை எரிக்கும் நெருப்புப்போலவும் உளதாம். மேலும், இரும்பை ஈர்க்கும் காந்தம் போல ஆன்மாக்களை இழுத்து, மலத்தை ஒழித்து, திருவருளில் மறைத்து, அருந்துகின்ற நற்கரும்பும் முக்கனியும் போன்ற அமுதத்தினையொத்தும் பொருந்தும்.

மாசிலாமணிப் பெருமானது தரிசினமானது, மிகுந்த செல்வத்தையும், எழிலையும், புகழையும், திருவருளையும், நட்புள்ள மனைவியையும், கல்வியையும், நல்ல மகப் பேற்றினையும், சித்திகள் எல்லாவற்றையும், நல்லறிவையும், தவத்தையும், முத்தியையும் அளிக்க வல்லதாம்.

இத்தகைய வல்லமை படைத்த மாசிலாமணி இலிங்க மானது ஆதியில் வந்த அற்புதத்தையும் கேட்பாயாக எனக் கூறத் தொடங்குகிறார் தவுமிய முனிவர்.

சுகவாரிதியாய், அழியாததாய், பந்தமற்றிடு பரம சூக்குமமாய், பரந்த பூரணமதாய், அந்தம் மத்திமம் ஆதி ஒன்றுமிலாததாய், வடிவற்றதாய், நித்தமாய், அருவுருவமற்றிடு நின்மலத் தனிமுதலுமாய், சுத்தமாய், உவமான மற்றிடு சொருபமாய், மிகு பிரபுவாய், பத்தர் கண்டு சுகித்திடும் பரயோகமான பராபரனான இறைவன், நிட்களசிவம் ஒன்றும், நிட்களச் சகளம் ஐந்தும், மகேசுரம் இருபத்தைந்தும் ஒன்றாகி, அட்ட குணங்களையுடைய சதாசிவத் தன்மை கொண்டு, எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் ஒரு பிண்டமாய் நின்று, தேவர்கள்

மானிடர்கள் முதலிய உயிர்கள் செய்யும் பணியைக் கொண்டு, அவரவர்கள் விரும்பிய சித்தி முத்திகளைக் கொடுத்து, ஆட்கொள் வதற்குச் சோதியிலிங்க நற்குறியாகி, உலகிலே எண்ணற்ற இடங்களில் எழுந்தருளியிருப்பதற்கு முன்பேயே, உலகின் கண்ணுள்ள அனைத்து இலிங்கங்களும் ஒன்றுசேர்ந்து மாசிலாமணியதாய், சிவலிங்கமாகி, இம்முத்திச் சேத்திரத்திலே அனைத்து உயிர்களுக்கும் அருள்செய்ய வேண்டி எழுந்தருளி யுள்ளார்.

இவ்வாறு இத்தலத்திலே மாசிலாமணிப் பெருமானாக எழுந்தருளியுள்ளமையை மநுக்களாலும், வேதங்கள், பிரமன், திருமால் போன்றவர்களாலும் அறிய இயலாதெனின் சாதாரண மானிட அறிவு எவ்வாறு அறிய முடியும்!

மாசிலாமணிப் பெருமானின் மூர்த்திச் சிறப்பை அறிந்து மனம் உருகுகின்றவர்களுடைய செயல்களும் அவற்றால் அவர்கள் அடையும் பயன்களும் மிகப் பலவாம்.

விடியற்காலையில் எழுந்து சௌசம் முதலான கடன்களை முடித்து, கோமுத்தித் தீர்த்தத்திலே நீராடி, சிறந்த மநுக்களோதி, அநுட்டானம் தருப்பணம் ஆகியவற்றை முடித்து, சிவபூசை சிவார்ச்சனைகள் செய்து, திருக்கோயிலையும், அரச வனத்தையும் வலமாகச் சென்று, கங்காதரா! காளகண்டா! திரியம்பகா! கால காலா! துங்காபுராந்தகா! தண்துறைசை நாயகா! சுயம்பிரகாசா! சங்கார காரணா! சதாசிவா! சுராதிபா! சயில மாது பங்கா! துரந்தரா! சங்கரா! சுந்தரா! பரம நாதா! என்று துதி செய்து, ஆடிப் பாடி வணங்கி, உயிர்ப்போடு இரங்கியழுது, உடலெங்கும் மயிர்க் கூச்சடைந்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, பரவசமாகி, அனலிலிட்ட மெழுகாய் உருகி, அருள் நிமலானந்தத்து ஒன்றி, இரண்டறக்கலந்து ஒன்றாகிய சாயுச்சிய பதத்துறுவர் பலர்.

ஐம்புலன்களை அடக்கி, இறைவனுடைய இணையடிக்கே அன்பு செய்து, அலகிடல் மெழுகல் மாலை தொடுத்தல் போன்ற நற்பணிகள் செய்தும், நறுமண மலர்களால் அருச்சித்துப் போற்றியும், யோக நிலையிலே கண்டும், மகிழ்ச்சி பொங்கி எப்பொழுதும் வணங்கி, பதமுத்தியடைவர் பலர்.

தமக்கு விருப்பமான பொருள்களையெல்லாம் இறைவனுக்கே உகந்ததாம் என்று அளித்து, அத்தனே!

எமை ஆளும் ஐயனே! கொடிய எனது பிறவி நோயை அறுப்பாயாக! என மிகுந்த பக்தியோடு நினைந்து, நாள்தோறும் போய்ச் சந்நிதியில் நின்று வணங்கிப் போற்றி மகிழ்பவர்கள் பலரும் சித்தமயல் நீங்கி, தேவர்கள் எதிர்கொண்டு அழைக்கச் சென்று வானுலகில் பல போகங்களில் திளைத்து இன்புறுவர்.

துறைசையிலுள்ள மாசிலாமணியீசரைக் காலையில் வணங்கு கின்றவர்களுக்கு இப்பிறவியில் வரும் பாவங்கள் நீங்கும். நடுப்பகலில் தொழுகின்றவர்களுக்கு ஏழு பிறவிகளில் தோன்றிய வினைகளெல்லாம் நீங்கும். மாலையில் வணங்கு கின்றவர்களுக்கு எல்லா வினைகளுக்கும் காரணமான மூலநோய் முழுதும் கெட்டு ஒழியும்; அவர்கள் உண்மைப் பயனை முழுவதுமாக அடைவர்.

ஆவடுதண்துறை ஈசரைப் பிரதோட வேளையில் வணங்கு பவர்களுக்கு, முன்பு மறையோர், பசுக்கள், பெண்கள், குழந்தைகள், தாய் - தந்தையர் போன்றோரைத் துன்புறுத்திய தாலுண்டான பெரும்பாவங்களெல்லாம் தீரும்.

திங்கட்கிழமையில் கோமுத்தீசர் ஆலயத்தைச் சுற்றி வந்து, நியதியுடன் பூமாலைகள் சாத்தி, நெய்த் தீபங்கள் ஏற்றி, சேமநிதியே! அரனே! சிவனே! எனப் போற்றித் துதித்து வணங்குகின்றவர்கள் திருமாலாகவும், பிரமனாகவும், அரனாகவும் இறைவன் திருவுருவத்தையும் பெற்று வாழ்வர்.

சிவராத்திரியில் விரதமிருந்து துறைசைச் சிவனுக்குப் பூசைகள் செய்து, இரவு முழுவதும் விழித்திருந்து, நான்காவது யாமத்தில் அன்புடன் தரிசனம் செய்பவர்கள் சிவன் உறையும் கயிலையை அடைந்து சிவகண நாதர்களாக வாழ்வர். அவர்களுக்கு மீண்டும் பிறவி என்பதே கிடையாது.

இறைவனை வணங்க வேண்டும் என்ற நோக்கமே யில்லாமல் இக்கோயிலை வந்தடைந்தவர்களுக்கும் மாசிலாமணியீசர் அருளுகின்றார். இக்கோயிலிலே, நடனத்தைக் காணவும், இசைக் கச்சேரியைக் கேட்கவும், மழைக்காக ஒதுங்கவும், ஓவியங்களைக் காணவும் எனப் பல வகைகளில் வந்தவர்களெல்லாம் இங்குள்ள ஈசரை வணங்காவிடினும், அவர்கள் இக்கோயிலினுள்ளே வந்தார்கள் என்ற காரணத்திற் காகவே தாய் நோக்குடன் அவர்களைப் பார்த்துக் கருணை கூறுவார் மாசிலாமணியீசர்.

ஆவடுதுறை ஈசருக்குரிய திருக்கோயிலிலே மண்டபங்கள், விமானங்கள், மணிமாளிகைகள் போன்றவற்றைச் செய்விப்போர் பழமையான மறைகள் கூறும் பரபோகங்கள் அனைத்தையும் பெற்று, என்றும் அழியாத முத்தி சேர்வர்.

துறைசை நாதருக்குப் பொன்னாலும் மணியாலும் ஆன ஆடை ஆபரணங்களைச் செய்தளித்து மகிழ்பவர்கள் திருமகளோடு கூடிய திருமாலெனத் திகழ்வர்.

பொற்குடம், வெள்ளிக்கலசம், மணி, பூந்தட்டு, நல்லாசனம், மஞ்சம், வாகனம், வெண்சாமரை, சிவிகை, வெண்கொற்றக்குடை, விளை நிலங்கள் போன்றவற்றைத் துறைசை நாயகருக்கு அன்புடன் அளித்தவர்கள், மூவேழு உலகத்தினர்களோடும், இன்னுமுள்ள கீழ், மேல் உலகத்தினர்களோடும் பொருந்தி, மிகுந்த போகங்களைப் பெற்று, சிவபிரான் திருவடியில் பல கற்ப காலங்கள் வாழ்வர்.

துறைசைத் திருக்கோயிலிலே பூசையின்போது பேரி, முரசம், பிளிறு, சின்னம், தாரை, தூரியம், விபஞ்சி, தும்புரு, வீணை, தாளம் போன்ற இசைக்கருவிகளை இசைவித்தோர் தேவருலகடைந்து இனிதே வாழ்வர்.

மாசிலாமணி மூர்த்திக்குத் தைலம், நெய், தயிர், பால், இனிய பழங்கள், கரும்பு, இளநீர், சந்தனம், தேன், கோரோசனை, கற்பூரம், அன்னம் போன்றவற்றால் அபிடேகம் செய்பவர்கள் அனைவரும் இப்பிறவியில் எல்லா வளங்களும் ஒருங்கே பெற்று, நோய்த் துன்பமற்று, மனைவி மக்களோடு இணைந்து இனிதே வாழ்ந்து, சிவபிரான் திருவடி நிழலடைவர்.

மேற்கூறிய உண்மைகள் அனைத்தையும் நைமிச வனத்தில் சூதர் உரைக்க அத்தனையும் ஆராய்ந்து உமக்கு உரைத்தோம் எனத் தவுமியர் மிதிலேசனுக்கு மகிழ்ந்து கூறினார்.

எட்டாவது
கயிலையில் சிவசத்தி திருவிளையாடல் உரைசெய்த அத்தியாயம்

259. **மன்னு சீர்மிதி லேசன்நற்**
தவுமிய மாமுனி தனைநோக்கி
மின்னு செஞ்சடி லன்திருக்
கோமுத்தி நாயகன் விளையாடல்

பன்னு நல்மொழி யால்வகுத்
துரையெனப் பரன்மிகு கயிலாயத்து
அன்ன மென்னடை உமையொடும்
ஆடல் செய்அற்புதம் உரைசெய்வான். 1

260. ஆதி மூலமென் றானைகூடப்
பிடச்செலும் அரிவரா கமுமற்றத்
தீதி லாததண் சிரம்படைப்
பதற்கறி யாத்திசை முகப்புள்ளு
மீது கீழுறத் தேடியுங்
காண்கிலா விமலன்நல் லுமையோடு
நீதி மேவும்ஐந் தொழில்புரிந்
தமர்ந்திடு நிலைபெறு கயிலாயம். 2

261. அண்ட கோடிக ளெனும்பலன்
காய்க்குமோர் அருங்கிழங் கதுபோன்றும்
பண்டை மாதவர் செயுஞ்சிவ
புண்ணியம் பரிந்திருந் ததுபோன்றும்
வண்டு லாங்கமழ் கொன்றையன்
புகழெனை வளர்ந்துவெண் ணிறச்சோதி
கொண்டு நான்மறைச் சிரமெனத்
திரண்டரன் குளிர்பதம் பரித்தோங்கும். 3

262. தேவர் தானவர் முனிவர்கந்
தருவர்நற் சித்தர்பன் னகர்மொய்த்துப்
பூவி றைத்துநற் கரங்களைக்
குவித்தெமைப் புரந்தருள் புரிவாயென்று
ஆவ லுற்றர கரவெனுஞ்
சத்தமே அகிலமெங் கணுங்கேட்கத்
தாவு தெண்டிரைக் கடலென
முழங்குநற் தமனியத் திருவாயில். 4

263. மட்டில் நிற்பவர் போமவர்க்
கிடம்பொருள் வகையறிந் தினிதேவிக்
கட்டுங் காவலுஞ் செய்துநந்
தீசுரர் காப்பதம் மலையாகுஞ்

---

263. மட்டு - எல்லை. சிட்டர் - தெய்வத் தொண்டர். அட்டமூர்த்தம் - ஈசுரன் வடிவம் எட்டு: அவை இயமானன், காற்று, சந்திரன், சூரியன், தீ, நிலம், நீர், வெளி.

சிட்ட ரைப்பரி பாலனுஞ்
செய்ததிற் திருமுக மைந்தோடும்
அட்ட மூர்த்தமா யிருந்துல
களிப்பன்நல் லருமறை சொலும்நாதன். 5

264. அட்ட மூர்த்தமே அவனுரு
வாகினும் அதில்மதி ரவியான்மா
விட்ட மாகிய வளிபுனல்
மண்ணிவை எழில்வடி வுயர்வின்றாம்
வட்ட மாகிய ககனமொ
டங்கியின் வடிவுமுக் கியமாமென்று
உட்டெ ளிந்துநான் மறைசொலும்
அம்மறை யுருவமும் அரனாகும். 6

265. ஆத லால்வெளி யிடத்துறும்
அங்கியில் அறுமறை மனுவோதி
நீதி யார்சிவ மகம்புரிந்
தவிப்பல நின்மலன் தனக்கீயில்
ஏது வேண்டினும் ஈகுவன்
அவன்தனை இகழ்ந்துசெய் மகச்சாலை
பீதி தந்திடு பேய்க்கணம்
ஊனுகர் பெரும்பிணக் காடாமால். 7

266. மருவு யிர்த்திடு கமலநான்
முகற்கொரு மகனென வருந்தக்கன்
அரன்த னக்கவி ஈந்திடேன்
எனஇகழ்ந் தருமக மொன்றாற்றி
இருள்மி குந்தநெஞ் சமரர்கட்
கூட்டிஅம் பிகைதனை இகழ்போதிற்
பொருமி வைதவன் மகளெனுந்
தேகத்தைப் போக்கியே இமவான்பால். 8

267. தனையை யாகியே உமைவளர்ந்
தருந்தவந் தனைச்செய்தங் குறத்தக்கன்
வினையி னாற்செயும் மமதையைக்
கயிலையில் விமலனா ருளத்தெண்ணி

---

264. ககனம் - ஆகாயம். அங்கி - தீ

265. அங்கி - தீ, அவி - தேவருணவு. மகச்சாலை - யாகசாலை.

266. மமதை - அகந்தை. வீரன் - வீரபத்திரன்.

முனிவு கொண்டிடத் தோன்றிய
வீரனை முக்கணான் தனிநோக்கிப்
பவன வேகநாற் படையொடு
முத்தலைப் படையொடும் விரைந்தெய்தி. 9

268. இக்க ணத்தினிற் சிறுவிதி
மகஞ்சிதைத் திங்குவா வெனவீரன்
அக்க ணத்தினிற் பொரும்படைப்
பூதரோ டாங்குசென் றயன்மைந்தன்
மக்க ளோடவன் சுற்றமும்
மனைவியு மகத்தையும் அவியுண்ணத்
தொக்க தேவர்கள் கூட்டமும்
இமைப்பினிற் தொலைத்தவன் சிரந்தள்ளி. 10

269. ஆடும் போதில்முன் றைன்சென்றங்
கினியவர்க் கருள்புரி யெனவீரன்
கூடு மெய்த்திருக் கருணையாற்
தேவர்கள் குழாங்களை முன்போற்செய்து
ஊடுந் தக்கனுக் கொருதகர்த்
தலையினை யொட்டியுள் மகிழ்ந்தீசன்
பீடு சேர்பதந் தொழுதிடக்
கயிலையிற் பிரானெழுந் தருளிப்பின். 11

270. சனக ராதிய முனிவர்கள்
நால்வர்க்குந் தன்னுண்மை நிலைகாட்டி
இனிய தெக்கணா மூர்த்தியாய்
ஆல்நிழ லினிலிருந் திடும்போது
தனது சத்தியை யொடுக்கிநல்
யோகுறுந் தன்மையா லுயிர்க்கெல்லா
மனையில் வேட்கையற் றோவியப்
பதுமைபோல் மன்னிய துலகெங்கும். 12

271. ஆர்க்கும் ஆவியாம் அவனசை
யாமல்ஓர் அணுவசை யாதென்னும்
தீர்க்க மாகிய உண்மைமால்
முதற்பல தேவர்க ளறிந்தும்தாம்
போர்க்கும் ஆணவ வலியினால்
அறிவிலாப் புந்திகொ டரன்மீது

---

271. ஆர்க்கும் - எல்லா உயிர்களுக்கும். மாரன் - மன்மதன்.

வேர்க்கு மெய்பெறு மாரனை
ஏவஅவ் வேள்சென்று வில்வாங்கி. 13

272. கடிம லர்க்கணை யொன்றெய்
முன்நுதற் கண்திறந் தவன்தேகம்
பொடியு றக்கனல் போக்கிடக்
கண்டபின் போந்திசை யறியாதே
படிநெ ளித்திட வொருவரோ
டொருவர்கள் பார்த்தொரு பேச்சின்றி
அடியெ டுத்துளப் பயத்தொடும்
ஓடினர் அரிமுதற் பலதேவர். 14

273. துய்க்கு மங்கையர் போகத்தின்
இச்சையாற் றுணிந்திது செய்தாரென்று
எய்க்கும் வானவர் முதற்பல
உயிர்க்கெலாம் இரக்கம்வைத் தெமையாளும்
முக்கண் நாயகன் யோகுவிட்
டெழுந்துயிர் முழுதுமீன் றாள்தன்னை
மிக்க நல்மணம் புரிவதற்
கெணியவள் மிகுதவ முணர்கின்றான். 15

274. உணர்ந்து நற்றவ விமையபூ
தரத்தினுக் குவகையாந் தூதுய்த்தங்கு
இணங்கு நல்மணம் பேசிநல்
லோரையில் எண்ணிலா வளத்தோடும்
கணங்கள் சூழ்வர விடையிவர்ந்
தேகிநற் கவின்செய்து மலைமேவுங்
குணங்கொள் காவண மண்டப
அரியணை குறுகிவீற் றிருந்தங்கண். 16

275. முன்ன மேதனைப் புணர்ந்தியா
வையும்பெறு முதல்வியை மணஞ்செய்து
தன்னை யொப்பவ னிரசதக்
கிரியினிற் சார்ந்துநல் லுமையோடு
மன்னி வீற்றிருந் தெய்மதன்
தனைவிடு மாலயன் முதற்தேவர்
உன்னி நாணுறும் படிவினை
யாடிடு உண்மையை உரைசெய்வாம். 17

274. இமையபூதரன் - உமாதேவியின் தந்தை வரையரையன்.

வேறு

276. பாவைகளா டுவதாட்டு வான்ஆடும்
படியாடும் பண்பே யன்றி
மேவுவது வேறுண்டோ பெண்பால்ஆண்
பால்மேவும் விரக மெல்லாம்
ஆவதென்னா லெனும்வேளு மவிந்திருப்ப
உமையுடனே அண்ணல் கூடி
ஒவிலாப் பல்லுயிர்க்கும் பெரும்போகம்
பற்பலவாய் உதவு கின்றான். 18

277. வியன்மருவும் ஒளிகொள்நவ மணிகுயிற்றிப்
பசும்பொன்னால் வெள்ளி வெற்பில்
மயன்வருந்திச் செயுமனைக்கு ளுட்கட்டு
மணவறையின் மங்கை யோடு
நயமருவு தரளவடப் பொன்னூசல்
அமளியின்மேல் நலங்கள் துய்த்தும்
அயில்விழியாள் ஊடலுறச் செயுமுபசா
ரங்களெல்லாம் அன்பாற் செய்தும். 19

278. பொட்டணிந்தும் அளகபா ரங்கோதி
மலர்முடித்தும் பொற்பூ ணாரம்
வட்டமணித் தோடுமுத்து வடம்வளைபொற்
காஞ்சிபரி புரம்வார் மற்றும்
அட்டகுண முடையன்உமைக் கணிந்துபல
கால்வெவ்வே றழகு பார்த்துங்
கொட்டமுடன் பலசாந்தக் கூட்டுலே
பனந்தனங்கள் குளிரப் பெய்தும். 20

279. நெய்யாடல் நீராடல் மஞ்சள்நீ
ராடல்வளம் நிரம்பச் செய்தும்
பொய்யாகும் இடைநுடங்கப் பந்தாடல்
கழங்காடல் பொருந்திக் கண்டு
மையாரும் பொழிற்புளினத் திடையிருந்தும்
நந்தவன மலர்கள் கொய்தும்
கையாலம் மலர்தொடுத்தும் கலைதெரிந்தும்
கீதஇசைக் கவிதை கேட்டும். 21

280. இன்னிசைவீ ணைகள்வாசித் திசைபயின்றும்
பரதநட மிகவிச் செய்தும்
பன்னுமொழிக் கிளிபூவை இயம்புமொழி
கேட்டுமிகு பரிசை யில்வாழ்

276. விரகம் - காமநோய். வேள் - மன்மதன். பெரும்போகம் - பேரின்பம்

மன்னுபடைக் கலச்சிலம்பத் தொழில்புரிந்தும்
நிலைக்கண்ணாடி மகிழ்ந்து பார்த்தும்
நன்னயஞ்சேர் தென்றல்வருஞ் சாளரத்தி
னிடையிருந்து நலங்கள் துய்த்து. 22

281. பாலினுறு ரசம்போலும் பழத்தினுறு
சுவைபோலும் பரிம ளம்பூ
மேலுறுநல் நிலைபோலும் குணகுணியாய்ச்
சமவாய வியாபி யாகிச்
சாலவுமிவ் வுலகமெலாஞ் சத்திசிவாத்
மிகவடிவா தன்மை காட்டி
ஞாலமகி ழும்பரையாம் பொழுதுசிவன்
பரனாகி நயந்து சேர்ந்தும். 23

282. ஆதிசத்தி யாயிடும்போ தனந்தராய்
மிகவணைந்தும் அகலா தென்றும்
தீதகல்இச் சாஞானக் கிரியையா
யிடிற்பரம சிவமாய்ச் சேர்த்தும்
போதமிகும் விந்துவடி வாம்பொழுது
நாதமாய்ப் புணர்ந்து மிக்க
சோதிமிகு மனோன்மணியாம் பொழுதுசதா
சிவமாகித் தோய்ந்து வாழ்ந்தும். 24

283. பொருவருநல் மகேசுரியாம் பொழுதுமகே
சுரனாகிப் புணர்ந்து மிக்க
பெருகுமெழில் உருத்திரியாம் பொழுதில்உருத்
திரனாகிப் பிரியஞ் செய்தும்
திருமகள்போல் வடிவாகும் பொழுதுமுகில்
வண்ணனைப்போற் சேர்ந்தும் வாணி
மருவுமெழி லெனஉமையாள் வடிவுகொளும்
போதயன்போல் மருவல் செய்தும். 25

284. சசியுருவாம் பொழுதில்மக வான்போல
மிகமகிழ்ந்து தழுவிச் சேர்ந்து
பசியநிற இமயமயி லெண்ணரிய
பெண்ணுருவாய்ப் பரந்து தோன்றின்
நசையுடனெம் பரமனுமங் களவிலா
ஆணுருவாய் நயந்து தோய்ந்தும்

283. முகில் வண்ணன் - திருமால். அயன் - பிரமன்.

284. சசி - இந்திராணி. மகவான் - இந்திரன்.

அசைவறுநன் னவந்தருபே தங்கொளிலவ்
வுருமருவி யாடல் செய்தும். 26

285. இவ்விதமாய் விளையாடி உலகிலுறும்
உயிர்களுமிவ் விதஞ்செய் தின்பப்
பவ்வமுறப் பொதுலீலா விநோதமிகச்
செய்துண்மைப் பண்பி னாலே
நவ்விவிழி யுமைமாதோர் பிடியுருவ
மாகிநிற்ப நாதன் மோகித்து
எவ்வமிலா மதகரியாய்ப் புணரவரூஉம்
ஐங்கரனை எடுத்து மோந்து. 27

286. கங்கைவடி வுமையாள்கொண் டிடஅதனில்
எமையாள்முக் கண்ண னாறு
செங்கனலின் பொறிபோற்தன் தாதுவைச்சிந்
திடஅதுவே சிறந்த சேயாய்த்
துங்கமுடன் ஆறுருவங் கொண்டுதோன்
றுதல்கண்டு தோகை யன்னாள்
தங்கையினால் அணைக்கஅறு முகமகவாய்
விளையாடுந் தன்மை கண்டும். 28

287. இப்படியக் கயிலையினி லிருந்துமகா
லீலைகளெண் ணிலசெய் தீசன்
மைப்படியுங் கண்ணுமையே நாம்பிரம
சாரியென்று மகிழ்ந்து கூறச்
செப்பனைய முலையாள்கேட் டியானுமழி
யாதகன்னி யென்று செப்ப
அப்பணிசெஞ் சடைமுடியோ னகமகிழ்ந்து
கேட்டுமையோ டமரும் நாளில். 29

288. சாம்பரா யுருவழிந்து மாய்ந்தகாந்
தனைஎனக்குத் தாரு மென்று
பாம்பரா வல்குலுறும் இரதிவந்தங்
கடிபணியப் பரன்பார்த் திந்தத்
தேம்பெறுசொல் இரதியுரு உமையேநீ
எடாததென்கொல் செப்பென் றோத
ஓம்பருள்நா யகஇறந்த வேளுருநீ
கொள்ளாயென் றுணர்ந்த தென்றாள். 30

285. பிடி - யானை. நாதன் - சிவபெருமான். ஐங்கரன் - விநாயகன்.
286. அறுமுகமகவு - முருகன்.

289. புன்முறுவல் கொண்டநங்க னாகிவரப்
பார்த்திரதி புருட னாக்கி
மன்மதநம் ஆணைதனை மறவாமல்
முன்போலும் வாழ்போ வென்று
தொன்மைவளங் கொடுத்தனுப்பி யுட்கட்டு
மனைக்குளுமை தொடரச் சென்றான்
நன்மைமிகு மறையயன்மால் முதலேனோர்
தொடர்வரிய நம்பன் மன்னோ. **31**

எட்டாவது கயிலையில் சிவசத்தி திருவிளையாடல்
உரைசெய்த அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 289.
திருச்சிற்றம்பலம்

8. கயிலையில் சிவசத்தி திருவிளையாடல் உரைசெய்த அத்தியாயம் (சுருக்கம்)

மிதிலேசன் தவுமியமாமுனிவரை நோக்கி, கோமுத்தி நாயகனது திருவிளையாடல்கள் பற்றிக் கூற வேண்டுமெனக் கேட்க முனிவர் உரைக்கின்றார்.

திருமால், பிரமன் ஆகிய இருவரும் தனித்தனியே தேடியும் அடிமுடி காண இயலாத அருமையைக் கொண்ட விமலனார் உமையம்மையோடு இனிதிருந்து ஐந்தொழில் புரிந்துவரும் அற்புத இடம் கயிலாயம். இத்திருக்கயிலை மலையிலே எழுந்தருளியிருந்து அடியவர்களுக்கு இன்னருள் புரிந்து வருகின்றான் இறைவன்.

இக்கயிலையிலே, தேவர்களும், தானவர்களும், முனிவர்களும், கந்தருவர்களும், சித்தர்களும் நறுமலர்களைத் தூவி, இருகரம் கூப்பி, 'எம்மைப் புரந்தருள் புரிவீராக!' என்று வணங்கி, அரகர என எழுப்பும் ஒலி அகிலமெங்கும் எதிரொலிக்கும். அங்கே, அருமறையுரைக்கும் இறைவன் ஐந்து திருமுகங்களுடன் அட்ட மூர்த்தமாயிருந்து உலகங்களைக் காத்து வருகின்றான்.

அட்டமூர்த்தங்களே இறைவனுடைய திருவுருவமாக இருப்பினும் அவற்றில் சந்திரன், சூரியன், ஆன்மா, காற்று, நீர், மண் இவை மிகச் சிறந்ததல்ல. ஆகாயமும் தீயுமே மிக

289. அநங்கன் - உடலிலான், மன்மதன்.

முக்கியமானதாகும் என்று வேதங்கள் ஆராய்ந்து கூறுகின்றன. அந்த வேதங்களும் அரனுடைய திருவுருவமாகும். ஆகையால் புறத்திலுள்ள தீயில் வேதங்களில் கூறப்பட்ட மந்திரங்களை ஓதிச் சிவயாகம் செய்து அவிப்பலனை இறைவனுக்கு அளித்தால், நாம் எது வேண்டினாலும் அவற்றை இறைவன் கொடுத்தருளுவான்.

இறைவனை இகழ்ந்து செய்யும் யாகசாலை பேய்க் கூட்டங்கள் நிறைந்த சுடுகாடு ஆகுமேயன்றி யாகசாலை யாகாது.

நான்முகனுடைய மைந்தனான தக்கன் இறைவனுக்கு யாக அவியைக் கொடுக்க மாட்டேன் என்று இகழ்ந்து தேவர்களை வைத்துக் கொண்டு யாகத்தைச் செய்யவும் அத்துடன் அம்பிகையை இகழவும் செய்தான். இதைப் பொறுக்க மாட்டாத அம்பிகை தான் தக்கன் மகள் என்பதைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு இமவானிடத்தில் பெண்ணாகி வளர்ந்து தவம் செய்யக் கயிலையை அடைந்தாள்.

தக்கனின் அகந்தையைச் சிவபெருமான் தம் திருவுளத்தில் எண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்குத் தோன்றிய வீரபத்திரனை நோக்கி, நீ படைகளுடன் சென்று சிறுவிதி யாகிய தக்கன் செய்யும் யாகத்தைச் சிதைத்துத் திரும்பி இங்கு வா என்று கட்டளையிட்டார். அவ்வாறே வீரபத்திரனும் பெரும்படையாகிய பூதங்களுடன் சென்று தக்கன் முதலாக அவனுடைய சுற்றங்களையும் தேவர்களையும் யாகத்தையும் இமைப்பொழுதில் அழித்தான். தக்கனுடைய தலையையும் கீழே தள்ளி ஆடினான் வீரபத்திரன். அப்பொழுது சிவபெருமான் அவன் முன் சென்று, இனி அவர்களுக்கெல்லாம் அருள் புரிவாய் என்று கூற, அவ்வாறே வீரபத்திரனும் அருள் புரிந்தான். ஒரு செம்மறியாட்டுக் கடாவின் தலையைத் தக்கனுடைய தலையில் பொருத்தி மகிழ்ந்தான். பின்பு இறைவன் கயிலையை அடைந்தருளினார்.

கயிலைப் பிரான், சனகர் முதலிய நால்வர்கட்கும் தம்முடைய உண்மை நிலையைக் காட்டி இனிய தக்கணாமூர்த்தமாக ஆலமரத்தின் நிழலில் இருக்கும்போது, தமது சத்தியை ஒடுக்கி யோக நிலையில் இருந்ததால் உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் மனையில் விருப்பமற்ற ஓவியப் பதுமை போல அசைவற்றிருந்தன.

உயிர்கள் அனைத்திற்கும் உயிராக இருப்பவனான இறைவன் அசையாமல் ஓர் அணுவும் அசையாது என்னும் உண்மையைத் திருமால் முதல் பல தேவர்களும் அறிந்திருந்தனர். இருப்பினும் ஆணவ வலிமையினாலே அறிவில்லாமல் இறைவன் மீது மன்மதனை ஏவினர். மன்மதனும் வில்லினை வளைத்து மலர்க்கணையொன்றை விடத் துணிந்தனன். அதற்கு முன்பாக இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க மன்மதன் சாம்பலானான். அதைக் கண்ட தேவர்கள் அனைவரும் திசையெங்கும் சிதறியும் பதறியும் பயந்தும் ஓடினார்கள்.

மங்கையர் போகம் துய்க்க வேண்டும் என்று விரும்பியே தேவர்கள் இதைச் செய்தார்கள் என்பதை உணர்ந்த இறைவன், தேவர்கள் முதல் அனைத்து உயிர்களிடத்தும் கருணை கொண்டு யோகத்தினின்றும் எழுந்தருளினார். உலகம் முழுவதும் ஈன்ற உமாதேவி தவம் செய்து கொண்டிருப்பதையும் அவர் உணர்ந்து, அவளது தந்தையாகிய வரையரையன் மகிழும் படியாக அவனுக்குத் தூது அனுப்பி மணம் பேசினார். நல்லதொரு நாளில் பூதகணங்கள் புடைசூழ விடையின் மீதேறித் திருக்கல்யாண மண்டபத்தை அடைந்து, அங்கு அரியணை மீது அமர்ந்திருந்தார். முன்னமேயே இறைவனைச் சார்ந்து முழு முதல்வியாக இருந்த உமாதேவியைத் திருமணம் புரிந்தார்.

இவ்வாறு திருமணம் புரிந்த இறைவன் முதல்வியோடு கயிலையில் பல லீலைகளைச் செய்து மகிழ்வுற்றிருந்தார். மன்மதனை ஏவிய திருமால் முதலான தேவர்கள் அனைவரும் நாணமடையும்படியாக இவ்விருவருடைய திருவிளையாடல்கள் அமைந்தன.

உலகிலே ஆண், பெண் இவர்களுடைய காமநோய் களுக்குக் காரணமான மன்மதன், பொம்மலாட்டக்காரன் போன்றவனாவான். அத்தகையவன் மறைந்த வேளையில் சிவபிரான் உமையுடனே கூடி எல்லா உயிர்களுக்கும் பேரின்பம் அருளுகின்றான்.

கயிலை மலையில், பொன்னாலும் மணியாலும் இழைத்து மயனால் செய்யப்பெற்ற மணவறையில் பொன்னூசலில் இறைவனும் இறைவியும் நலங்கள் பல துய்த்து மகிழ்ந்தாடு கின்றனர். இறைவியின் ஊடலைத் தணித்தும் அன்பு

மொழிகள் பேசியும் அவளை இன்புறச் செய்கின்றார் இறைவர். அவளுக்குப் பொட்டிட்டு, தலைவாரிப் பூச்சூட்டி, பொன்னாபரணங்களையெல்லாம் வகை வகையாகப் பூட்டி அழகு பார்க்கிறார் இறைவர்.

நெய்யாடல், நீராடல், மஞ்சள் நீராடல் ஆகியவற்றுடன் பந்தாடல், கழங்காடல் போன்ற விளையாட்டுகளிலும் திளைத்திருந்தனர். சோலை வனங்களிலே களித்துலாவி, நந்தவனங்களிலே மலர்கள் கொய்து மகிழ்ந்தனர். கவிதைகள் பொழிந்து களித்தனர். இன்னிசை வீணைகள் வாசித்து இசை பயின்றும், பரதநாட்டியமாடியும், கிளி, பூவை இவற்றின் இன்மொழிகள் கேட்டும் மகிழ்ந்திருந்தனர். சிலம்பம் போன்ற விளையாட்டுகளிலும் மெய் மறந்து ஈடுபாடு கொண்ட இவர்கள், கண்ணாடி பார்த்து மகிழ்ந்து, தென்றல் வீசும் சன்னல்களிலேயிருந்து நலம் பல துய்த்தனர்.

பாலும் அதன் சுவை போலும், பழமும் அதன் சுவை போலும், பூவும் அதன் மணம் போலும் ஒன்றையொன்று விட்டு விலகாதவாறு, சிவபிரானும் உமாதேவியும் இணைபிரியா சிவசக்தி வடிவங்காட்டி, இவ்வுலகமனைத்தையும் தங்கள் வடிவமாகவே ஆக்கிச் சேர்ந்து மகிழ்ந்திருந்தனர்.

உமாதேவியானவள் ஆதிசத்தியாகும்போது இறைவன் அனந்தராகவும், இச்சாஞானக் கிரியா சத்திகளாகும்போது பரமசிவமாகவும், விந்து வடிவமாகும்போது நாதவடிவாகவும், மனோன்மணியாகும்போது சதாசிவனாகவும், மகேசுவரியாகும்போது மகேசுரனாகவும் உருத்திரியாகும்போது உருத்திரனாகவும், திருமகள் வடிவாகும்போது திருமாலாகவும், கலைமகள் உருவாகும்போது திருமாலாகவும், பிரமனாகவும், சசியுருவாகும் போது மகவானாகவும் இவ்வாறு பல உருவங்களுடன் மருவித் திருவிளையாடல்களைச் செய்கின்றார். உலகிலுள்ள மக்கள் அனைவரும் இவ்விதமே செய்து இன்பம் அடைகின்றனர்.

உமையம்மை ஓர் பிடி (பெண் யானை) உருவமாகி நிற்க, இறைவனும் ஒரு கரி (ஆண் யானை) உருவாகி அவளுடன் இணைந்தார். அப்பொழுது அவதரித்த விநாயகப்பெருமானை வாரியெடுத்து உச்சிமோந்து மகிழ்ந்தனர் இவரும்.

பின்னர், உமையம்மை கங்கை வடிவம் கொள்ள, அதில் இறைவன் ஆறு பொறிகளாகத் தம்முடைய தாதுவைச் சிந்த அவை ஆறு உருவங்களாகத் தோன்றின. அந்த ஆறு உருவங்களையும் உமையம்மைத் தம் திருக்கரங்களால் ஒன்றுசேர்க்க அறுமுகவனாய் முருகப் பெருமான் விளங்கி விளையாடும் தன்மை கண்டும் இருவரும் மகிழ்ந்திருந்தனர்.

இவ்வாறு கயிலையில் இறைவனும் இறைவியும் கூடி மகிழ்ந்து, திருவிளையாடல்கள் புரிந்திருக்கும் வேளையில், சிவபெருமான் உமையம்மையை நோக்கி 'உமையே! நாம் பிரமசாரி' என்று கூற, அதுகேட்ட உமையும் பதிலுக்கு, 'நானும் அழியாத கன்னி' என்று கூற இருவரும் அகமகிழ்ந்து அமர்ந்தருளினர்.

அப்பொழுது ஒருநாள், இரதிதேவியானவள் இறைவனிடம் வந்து வணங்கி, சாம்பராகி உருவழிந்து இறந்துப்பட்ட என்னுடைய கணவனாகிய மன்மதனை மீண்டும் உருவாக்கி எனக்குத் தரவேண்டுமெனக் கேட்டாள். அப்பொழுது இறைவன் உமையம்மையைப் பார்த்து, 'நீ இந்த இரதிதேவியின் உருவை எடுக்காதது ஏன்? என்று கேட்டார். உமையம்மையும் பதிலுக்கு, 'தாங்கள் மன்மதன் உருவை எடுக்காதது ஏன்? என்று கேட்டாள். இறைவன் புன்முறுவல் பூத்து மகிழ்ந்து, இரதிதேவி கேட்டபடியே மன்மதனை முன்போல வரச் செய்து, அவர்கள் இருவரும் மகிழ்ந்திருக்கச் செய்தருளினார்.

பின்பு, உமையம்மை தம் மனைக்குள் செல்ல சிவபிரானும் அவளைப் பின் தொடர்ந்து சென்றார்.

ஒன்பதாவது
சூது விளையாடிய அத்தியாயம்

290. அகிலமாய் வேறா யொன்றாம் அம்பிகை பாக னாடும்
தகவுறு லீலை சொன்னோம் எனுந்தவு மியப்பேர் கொண்ட
மிகுதவ முனியை நோக்கி விமலன்எம் அன்னை யோடும்
இகலறு சூதங் காடும் எழில்புக லென்றான் வேந்தன். 1

291. ஆக்கினை தவறா வண்ணம் அகிலத்தில் நிறுத்த வெண்ணிப்
பாக்கியம் பழுத்தா லன்ன பைந்தொடி உமையா ளோடும்
போக்கொடு வரவு மில்லாப் பூரணப் பொருளாய் நின்றோன்
ஊக்கமோ டாடுஞ் சூதின் உண்மையை உரைக்க லுற்றான் 2

292. வெள்ளிவே தண்ட நாப்பண் மேவுபொற் கோயில் மாடத்து
உள்ளுறு மஞ்சாங் கட்டில் ஒளிர்மணிப் பவளத் தூண்கள்
கொள்ளுமா யிரத்தின் மீதே கொழுங்கதிர்ப் பதும ராகத்
தெள்ளுமுத் திரமும் வச்சிரத் திருந்துபோ திகையுஞ் சேர்த்து. 3

293. மற்றுள மணிக ளெல்லாம் வரிசையா நிரைத்து மீது
பொற்றக டதனால் மேய்ந்து புதுவழு தொழுக மீதோர்
வீற்றிகழ் சந்திர காந்த மேனிலைப் பந்தர் செய்து
சுற்றெலாம் வாசப் பன்னீர் சொரிந்துநல் மடுவுண் டாக்கி. 4

294. அன்னமீன் ஆமை ஞெண்டோ டம்புயங் குவளை ஆம்பல்
மன்னுசெங் கழுநீர் மற்ற மலர்களும் விநோதத் தாக்கி
இன்னற வொழுகும் பூங்கா எங்கணுஞ் சூழ வைத்து
மன்னுமோர் மண்ட பத்தின் வசந்தம்வந் துலவ வங்கண். 5

295. பொன்னரி சுமக்கும் பீடம் பொருந்துபஞ் சணையின் மீது
பன்னகா பரணம் தாங்கும் படர்சடைப் பவளக் குன்றம்
கன்னலும் அமுதும் தேனும் கண்டுசர்க் கரையும் கூடும்
இன்னலம் அனைய செஞ்சொல் ஏழையோ டிருக்கும்
போது. 6

296. எண்ணில்சங் கார காலம் எண்ணிலாச் சிருட்டி காலம்
எண்ணிலாத் திதிசெய் காலம் இதனிடை விநோத மாய்த்தான்
பண்ணிய தொழிலிற் பூத பவிடிய வர்த்த மானத்து
உண்ணிகழ் கதைக ளெல்லாம் உரைத்தனன் உமையாள்
கேட்ப. 7

297. உரைசெய் மூற் கதையில் மங்கைக்
குளங்களித் துவகை பூப்பச்
சரசமாங் கதையும் பேசித்
தங்களில் மகிழும் போது
விரைசெய்பொன் னிதழித் தாரோன்
வேதநா யகியை நோக்கிக்
கரையிலா உவகை பொங்கிக்
கவிழ்வபோல் ஒன்று சொல்வான். 8

298. குமுதவாய் மயிலே! பச்சைக்
கோகிலப் பெடையே! ஓங்கும்
இமயமீன் றருள்பூங் கொம்பே!
இருதனக் குடங்கள் தாங்கும்

292. வேதண்டம் - மலை. நாப்பண் - நடு.
295. பன்னகாபரணம் - பாம்பணி. ஏழை - பெண், உமையம்மை.

சுமையினால் நூல்போற் தேய்ந்து
துளங்கிய இடைபெற் றொல்கும்
அமுதமே! நீயும் நாமும்
ஆடுவோம் சூதிங் கென்றார். 9

299. அம்மொழி கேட்ட லோடும் அழகிதென் றகம கிழ்ந்து
செம்மைமென் முலையாள் சற்றே குறுநகை முகிழ்த்து
நோக்கச்
செம்மனக் கிழவோ ரன்பிற் சேர்ந்திடும் செம்பொற் தாளான்
தம்மருட் கண்ணா லால சுந்தரர் தம்மேற் சாத்தி. 10

300. சூதுசெய் கருவி ஈங்குத் தருகெனத் தொகும்பண் டாரத்து
ஓதுபொன் னரங்கும் வட்டும் உருளுமொல்
லையிற்போய்க் கொண்டு
காதணி குழையால் முன்பு வைத்திரு கரங்கள் கூப்ப
நாதன்வந் திறைஞ்சி நிற்கும் நந்திமேற் திருக்கண் நோக்கி.
11

301. யாமும்எம் உமையும் சூதிங் காடுநல் லெழிலைக் காணத்
தோமறும் ஆசை யுள்ளோர் எவருமிவ் விடத்திற் றுன்னச்
சேமஞ்செய் யாது வாயில் விடுவது செய்யென் றேவ
ஆமென மகிழ்ந்து நந்தி அன்னதே செய்து நின்றான். 12

302. சிவகண நாத ரான செல்வரும் அயனும் மாலும்
எவமிலாத் திக்கு பாலர் எண்மரும் இருடி மாரும்
தவனரு மதியு மிக்க தகுவரிற் தலைமை யோரும்
கவின்மிகும் உரகர் விஞ்சைக் கலைஞர்கந் தருவர் மற்றும். 13

303. திருமகள் கலைமா திந்தி ராணியா தியநற் றெய்வ
வரமக ளிருமிக் கான வனம்பொரு முனிமின் னாரும்
உரகமா தர்களும் வானத் தொளிருடு மயிலன் னாரும்
வரமிகு காளி சத்த மாதர்கள் பலரு மீண்டி. 14

304. ஓகைமிகு கெழுந்து சென்றங் குமையொடு மிருக்கு ஞான
வாகனை மலர்கள் தூவி வணங்கியே சூழ்ந்து நிற்ப
வேதநா யகன்எல் லோர்க்கும் அருள்புரிந் திருக்கை ஈந்து
தோகைநல் மயிலி னோடும் சூதுநேர்ந் தாட லுற்றான். 15

305. சொற்கட்டா வகையே செய்யும் சொக்கட்டான்
தனைவி ரித்து
விற்கட்டும் பவளம் பச்சை மேதகு வயிரம் நீலம்

300. பண்டாரம் - பொக்கிஷம், சேமிப்பிடம்.
302. உரகர் - நாகர். 304. ஓகை - உவகை.

நற்கட்டு மட்டாம் வட்டு நாலிரண் டிரட்டி கொண்டு
பொற்கட்டும் அரங்கில் நான்கு திசையினும்
பொருந்த வைத்து. 16

306. பொன்னுருட் கயிறி ரண்டிற் பொறியெழுத் தொன்று மூன்று
மன்னிய நான்கு மாறும் ஒவ்வொன்றின் மருவல் பார்த்துத்
தன்னையொப் பில்லாள் தெற்குந் தான்வட திசையு மாக
இன்னலம் எவருங் கொள்ள எதிர்முக மாயி ருந்து. 17

307. மதிமுக உமையை நோக்கி மயிலன்னாய் உலக மேத்தித்
துதிசெயும் பசிய கொம்பே துலங்குபெண் ணரசே நீமுன்
கதிர்மணி யுருளு ருட்டக் கைக்கொளென் றுரைப்பச் சூதின்
விதிவிளை யாட்டோ வெற்றி யோவென விமலை
கேட்டாள். 18

308. வெற்றியே யன்றிச் சும்மா விளையாடிற் பேறென் னாகும்
கற்றைவார் குழலே யென்று கண்ணுதல் புகல மங்கை
சிற்றுநல் முறுவ லோடும் சிவன்திரு வதனம் நோக்கி
மற்றிதற் கொட்ட மியாதிங் குரைத்தியெம் மன்ன வென்றாள்.
19

309. நலமிகு சூதாட் டத்தில் அம்மைநீ வென்றா யாகில்
சுலவுநீ ருலகி னந்தம் சுயவதி கார மான
தலமதொன் றொன்றாய் நீயே சார்ந்திடத் தருவோம் இங்கே
புலனுறச் சரியாய் ஆடிற் பொருந்துவோஞ் சமமா
யென்றும். 20

310. அல்லது தோற்றா யாகில் யாஞ்சொலும் பணிக்குள் ளாகித்
தொல்லுல கத்திற் கோயில் சுதந்தரம் உனக்கொன் றின்றி
வல்லிநீ யிருத்தல் தானே பந்தய மென்ன மாது
நல்லதே என்று நேர்ந்து நற்கயி றேந்திச் சொல்வாள். 21

311. முருகவிழ் துளபத் தண்தார் முகுந்தனை மகிழ்ந்து பார்த்துக்
கருணையங் கடவுள் சொல்லும் வார்த்தைக்குக் காகுத்
தாநீ
பொருவிலாச் சாட்சி யாமென் றுரைத்திடப் புராரி யோர்ந்தே
இருபை க்குஞ் சருவ சாட்சி யாம்அல்லால் இவனோ
வென்று. 22

306. உருட்கயிற்றில் - பாச்சிக்கட்டையில்

311. முகுந்தன் - திருமால். காகுத்தன் - திருமால். புராரி - சிவபெருமான்.

312. உளத்தினிற் குற்றங் கொண்டங் கொருவரு மறியார் வாறு
களத்தினிற் கறுப்பு வைத்தோன் கருத்தினுங் கறுப்பு வைத்து
வளர்ச்சியால் மலிந்த அந்த மண்டபத் தினிலி ருந்து
உளைக்கண்ணாள் தன்னைச் சூதி னுருள்விளை
யாடென் றோத. 23

313. அப்பொழு தாண்பா லென்போர் அனைவரும்
அரன்பால் நிற்கும்
ஒப்புர வறிந்து மின்னார் அனைவரும் ஒருங்கு கூடிச்
செப்பிள முலையாள் தன்பாற் சேர்ந்தவள் திருக்கண் ணேவல்
நற்பணி புரிந்து நிற்ப நங்கையொன் றுணர்ந்து சொல்வாள்.
24

314. அன்னமென் நடைகொள் பாங்கின் அமுதன்னார்
முகத்தை நோக்கிக்
கன்னலும் அமுதும் தேனும் கண்டுமுக் கனிதேங் காயும்
மன்னுமோ தகமும் தொந்தி வயிறுகொள் மட்டு மூட்டி
என்னிப முகத்து மைந்தன் தனையிங்குத் தருக வென்றாள்.
25

315. கேட்டலும் விரைவிற் சென்று கிளிமொழி யந்த லாரோர்
கோட்டுமா முகத்துக் கன்றைக் குளிர்ந்தநீ ராட்டி யூட்டிப்
பூட்டுபொற் பணிகள் பூட்டிப் புழுகொடு சாந்த மிட்டுத்
தோட்டலர் மாலை சூட்டித் தூயபட் டரையிற் கட்டி. 26

316. மேலினி யெடுத்து வந்து கவுரிதன் குறங்கி லேற்ற
அமலவா ரணக்கன் றுச்சி மோந்தணைத் தருகில் வைத்திங்கு
எமதுகு தாடல் நோக்கித் துணையிரென் மகனே யென்று
தனதுசெங் கரத்தால் மேனி தைவந்து களிப்பில்
ஆழ்ந்தாள். 27

317. கந்தவே ளெந்தை ஈந்த கனியெனக் கீயா துண்ணும்
தந்திமா முகத்து முன்னோன் தனையெடுத் தெமைம றந்தாள்
இந்தநல் லன்னை யென்றுள் எண்ணியே விரைவி னெய்தித்
தந்தைபாற் சாரக் கங்கை தனயனை மடியில் வைத்து. 28

---

312. உளைக்கண்ணாள் - உரோமக்கண்ணாள், உமையம்மை.

314. இபமுகம் - யானைமுகம்

315. கோட்டுமாமுகத்துக்கன்று - விநாயகன்

316. குறங்கு - மடி, தொடை

317. கங்கை தனயன் - அறுமுகன்.

318. தொழுமடி யார்கட் கன்பன் தோகையை விளையா டென்னப்
பழகிய செல்வத் தோடும் பண்பையுங் கெடுக்கும் பொல்லாக்
கழகத்தின் காலிற் போகி னெனும்பொருட் காட்டு வாள்போல்
மழையுறழ் கூந்தற் செவ்வாய் மாதுசூ தாட லுற்றாள். 29

வேறு

319. மைம்மல ரோதியின் வண்டிரைந் தாடக்
கைம்மலர் மேவு கவின்குரு கார்ப்பக்
கொம்மை முலைக்கிடு கோவைகள் துள்ள
அம்மவோ வென்றிடை யாங்கு துளங்க. 30

320. சுந்தர நன்னுத லிற்துளி வேர்வை
சிந்திட நற்தள வத்திரு மூரல்
சந்திர விம்ப முகத்திடைச் சாரச்
செந்துகிர் வாய்மலர் சற்றே திறப்ப. 31

321. வள்ளையிற் சென்று குதித்து மலர்ந்த
வெள்ளிள நாசியி லேமறிந் தேறித்
துள்ளியே கட்கயல் சுந்தரன் தாங்கும்
தெள்ளுநீர்க் கங்கையிற் சென்று குதிப்ப. 32

322. காந்தள் மலர்க்கரங் கொண்டு கயிற்றைத்
தாங்கி யுருட்டியே சாற்றிடுஞ் சொல்லில்
ஏய்ந்திட பன்னிரண் டெட்டிரண் டாறிங்கு
ஆர்ந்திட வேண்டுமென் றார்த்து மொழிந்து. 33

323. கேட்டிடு தாயங் கிடைத்திட லாலே
நாட்டமோர் மூன்றுடை நாயக னாடும்
கோட்டுள காயெலாம் குற்றி யெடுத்து
வாட்டுணைக் கன்னிமுன் னேவயங் கொண்டாள். 34

324. தவளவெண் ணீறணி தாங்கிய நாதன்
சுவடுகட் டாமல்முன் தோற்றதி னாலே
புவிபுகழ் நற்சலந் தரபுரம் என்றோர்
தவநகர் ஈந்தனன் தையல் தனக்கே. 35

325. அன்னமே இன்னும் அரங்கினில் வட்டும்
அன்னிட வைத்துமுன் ஆடென வாய்ந்த
நன்னகர் ஈந்திடும் நாயக நீயே
முன்னருள் போடென மங்கை மொழிந்தாள். 36

326. அங்கணர் சூதுமுன் ஆடிட வைங்கைப்
புங்கவன் செய்த புணர்ப்பினா லங்கண்
ஒன்கயி றைந்தொடு மூன்றுட னொன்றே
தங்கின தாற்பினுந் தையல் தனக்கு. 37

327. சூதுமுன் போலவே சோடுகட் டாமல்
ஏதும் விருப்பும் வெறுப்புமொன் றில்லான்
ஆதர வாகவே ஐம்பது காற்றேற்று
ஓதிய நற்பதி ஐம்பது முய்த்தே. 38

328. ஈர்க்கிடை போகா தெழுந்து நெருங்கும்
வார்க்குட மேந்து மலைக்குயி லேஇப்
பார்க்குள்பஞ் சாசத் பீடியாம் பண்புற்று
ஆர்க்கும் வரங்கொடுத் தாண்டரு ளென்று. 39

329. பின்னும் அவள்மேற் பெருகிய அன்பால்
அன்னகூ தாடிமுன் னூறுட னைம்பது
என்னுநல் லாட்டம் இலங்குமை யாட்குத்
துன்னுகாய் கட்டியே தோற்றனன் எம்மான். 40

330. தோற்றபி னத்துணை தொல்நகர் ஈந்து
கோற்றொடி யேவலப் பாடவிடங் கொண்டு
மேற்றிற மாகிய சத்தி விளங்க
நாற்றிசை போற்றநீ நண்ணுக என்றான். 41

331. அத்திறங் கண்டவிண் ணோர்முதல் யாரும்
சத்தியே முக்கிய மென்றெணித் தத்தம்
சித்த விகாரம் செனித்தது கண்டு
கத்தனும் வேறொரு காட்சி விளைத்தான். 42

வேறு

332. முருகவேள் சாத்தர் வயிரவர்போர் வீரர்
முதலான மைந்தரொடு முக்கண் மூர்த்தி
பரிபவமா னோமென்று சற்றே யுண்ணாண்
பற்றினவர் போற்குறிகள் பலவுங் காட்டிப்
பொருசூதங் கிகலார்போற் போட அம்மன்
புன்சிரிப்புக் கொண்டுநீர் புவன கர்த்தா!
கருதினது முடியும்என்போல் வார்கள் நேரக்
கணக்குண்டோ? என்றாடாக் கருத்துக் கண்டு. 43

333. வெற்றிகொண்டோ மென்றுநீ சிரித்துக் கொண்டு
மிகவுமகிழ்ந் திருக்கநாம் விடுவோ மோ?என்று
ஒற்றைவிடைப் பெரும்பாக னாடக் கண்ட
உமைஎதுவந் தாலுங்காண் போமென் றெண்ணி
மற்றவர்கள் பிரயாசப் பட்டுக் கட்டி
வைத்தசோ டெடுத்தெறிந்து வருங்கா யெல்லாம்
குற்றியவர் தப்பாட்டம் ஆடி னாலும்
கோபமுறா தேகாய்மேற் கோபங் கொண்டு. 44

334. சாரிவருங் காயெல்லாந் துரந்து வெட்டித்
தனித்தொருகாய் பழமெடுக்கச் சாரும் போதென்
நேர்பெறுகொங் கைக்கிணைநா னென்னுஞ் சூதோ
நீயென்று சடேரென்ப தெங்குங் கேட்ப
வாரணுகு முலையுமையாள் வெட்டக் கண்டு
மாதவனை நோக்கிஅரன் மாலே! இந்த
வீரிமிகு நீலிபோல் இரக்க மின்றி
வெட்டுதல்கண் டாயோநீ யெனவி னாவ. 45

335. பராமுகமா யிருந்தேன்யா னொன்றுங் காணேன்
பகவனே எனமாய னுரைக்க, நங்கை
அராவுடனே பழகிமா லானோன் சாட்சி
யாகுமோ வெனவெகுளா அமலன் சொல்வான்;
தராதரமொன் றறியாமல் எமையி கழ்ந்தோன்
தானுமகஞ் செய்வதுபோற் தகரைக் கொன்று
சுராபானத் தொடும் ஊன்தின் பதற்காய் என்னைத்
துணிந்துவெட்டும் அதுபோலித் தோகை செய்தாள்.
46

336. கல்லிடத்திற் பிறந்தநெஞ்சுங் கல்லாம் அன்றிக்
கருணைபெறு மோவெனமுக் கண்ணர் கூற
வல்லியிதழ் துடித்துவிழி சிவப்பச் சீத
மதிமுகத்திற் துளிவேர்வை மணிபோற் சிந்த
மெல்லவெழுந் துதித்தபவச் சார்பு நோக்கி
விமலருரைத் திடுமொழியுள் வெதுப்ப வாடி
அல்லமருங் களத்தோனே சிவத்து ரோகி
அவனையுமென் பிதாவெனக்கொண் டனையோ
வென்று. 47

335. இகழ்ந்தோன் - தக்கன்.

336. சிவத்துரோகி-தக்கன்.

337. கருங்குவளை செங்குவளை போன்று முத்தங்
கான்றிடச்சொல் வாளெனைநீ கடிந்து கொண்டால்
வருங்குறைகள் சொல்லிமன மாறு தற்கோர்
மாமியிலை மாமலை என்நான் செய்கேன்!
அருந்தும்விடம் அமுதாக்கொண் டவனே! நீதான்
ஆடியதே கூத்ததுவே யலங்கா ரஞ்சீர்
பொருந்துமலை விழுந்தபுண்ணை யாற்று தற்குப்
புவியில்மருந் துண்டாமோ புகலுங் காலே! 48

338. என்றுரைத்துப் பின்னுமொரு மயிர்கட் டுற்ற
விளங்கவரி மான்போல நின்று சொல்வாள்!
கொன்றையணி சடைமீது சுமக்கும் பெண்சொற்
குழம்புப்பால் போலினிப்பக் கொள்வீர்! என்சொல்
ஒன்றுமுகக் கினிக்குமோ? கருத்து வேறிங்
குறிலமுத முங்கசப்ப துண்மை யன்றோ?
வென்றிபெற விரும்பினாற் கசக்கும் வேம்பு!
மென்கரும்பா முமக்குரிமை மிகவு மல்லேன்! 49

339. கல்லிடத்திற் பெண்ணுருவங் கொண்ட வெற்குங்
கருணையுண்டோ? பெருங்கருணைக் கடலே! உம்மை
அல்லதுவே றொருவரிடங் கருணை என்ப
தடுக்குமோ? நெட்டியிற்சா றாவ துண்டோ?
வில்லொருகைக் கொண்டுபதஞ் சிரத்திற் தீண்ட
மென்றஊன் எச்சிலிட்ட வேடன் கையைப்
புல்லியருள் புரிந்திருந்தீர்! கற்கொண் டிட்ட
புத்தனுக்கும் அரியபதம் புரிகின் றீரால்! 50

340. ஏவனுகு நெடுஞ்சிலையா லடித்த பார்த்தற்
கிரங்கிமிகு பாசுபதங் கொடுத்தீர்! வன்பில்
ஆவணம்வாங் கிக்கிழித்துப் பித்தா போவென்
றவமானஞ் செய்தவனுக் காரூர் தன்னிற்
பூவமருங் குழற்பரவை யிடத்திற் தூது
புகன்றுமணம் பொருத்திவித்தீர்! மதுரை தன்னில்
ஆவலுடன் அன்பருக்கா விறகு மண்ணும்
மலர்முடிமேற் சுமந்துபிரம் படியும் பட்டீர்! 51

341. குருமனைவி தனைப்பிடித்த மதியைக் கங்கைக்
குமரியைவைத் திடுஞ்சடைமேற் கூட வைத்தீர்!

339. வேடன்-கண்ணப்பன்.
340. பார்த்தன்-அருச்சுனன்.

கருவிடத்தை வாரியுண்டு விண்ணோர் மாதர்
கட்டியமங் கலநாண்கள் காத்துக் கொண்டீர்!
பெருகுதிரி சிரபுரத்திற் தாய்போற் சென்றோர்
பேதைக்கு மகப்பேறும் பேணிச் செய்தீர்!
ஒருவியநக் கணத்துடன்போய்ப் பிட்சை கேட்டங்
குறுமுனிமங் கையர்கலைக ளுரிந்து பார்த்தீர்! 52

342. இளமைகண்டங் கிடைமருதில் இரண்டு பெண்ணை
இருகையினா லுமெடுத்து விழுங்கு கின்றீர்!
உளமகிழ்ந்து புகலூரில் ஆண்பால் மேவு
மொருவனைக்கை உழவாரத் தோடு முண்டீர்!
நளிரடங்க வானைமா றாட்டம் பண்ணி
நரிகளினாற் குதிரையுமா றாட்டஞ் செய்தீர்!
தளருமென்பால் மட்டுமிரங் காம விந்தச்
சபையில்அய லார்போற்சொற் சாற்று கின்றீர்! 53

343. வேலிபயிர் தின்றக்கால் விளைவ துண்டோ?
விமலனே! என்றுரைத்தோர் பொற்தூ ணொன்றி
ஞாலமுழு தையுமீன்ற அன்னை நிற்ப,
நதிமதியம் புனைந்தசடை நாதன் கூறும்;
வாலையிவ ளென்றிருந்தோம்! படித்துப் பேசி
வையாமல் வைதெம்மை வாழ்த்து கின்றாள்!
சாலமகிழ் மாலேஉன் தங்கை! என்று
சாற்றிஉமை யாள்வதனந் தன்னை நோக்கி. 54

344. மாடேபோ வென்றொருசொற் சினந்து சொல்லி
மதிமுடித்தோன் எழுந்திருந்து மனையிற் சென்றோர்
பீடார்ந்த வுள்ளந்தப் புரத்துச் செம்பொற்
பீடிகையின் மீதிருப்பப் பெருங்காற் றுற்ற
கோடேந்தும் பசுங்கொடிபோற் துளங்கி மேனி
குதுகுலித்துக் கைநெரித்துக் கொங்கைக் குன்றிற்
சேடார்ந்த மைம்முகில்போற் கண்ணீர் சிந்தித்
திகைத்திருந்தாள் ஓவியம்போற் செயலொன் றில்லாள். 55

345. இத்தன்மை கண்டவர்கள் சகல பேரும்
எழுந்திருந்தங் குமையாள்போ விடர்க ளெய்திப்
பத்தியுடன் சிவசத்தி யாடுஞ் சூதின்
பான்மைபார்த் துய்யவந்த நமக்குந் துன்பம்

343. வாலை-பாலப்பெண். 345. நத்தேந்தும் கடவுள்-திருமால்.

உய்த்ததுமுன் செய்தவிதிச் சூதே யென்றங்
கொருவர்முக மொருவர்பா ராம லேகக்
கைத்தலத்தி னந்தேந்துங் கடவுள் மட்டும்
கருகியமெய் யுடனடத்தைக் காண நின்றான். 56

ஒன்பதாவது சூது விளையாடிய அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 345.

9. சூது விளையாடிய அத்தியாயம் (சுருக்கம்)

உமையொரு பாகனாகிய சிவபெருமானின் திருவிளை யாடல்களைச் சொன்ன தவுமிய முனிவரை நோக்கிய மிதிலேச மன்னன், இனி, இறைவன் அன்னையோடு சூது விளையாடும் அழகைப் பற்றிச் சொல்ல வேண்டும் எனக் கேட்கின்றான். அவ்வாறே முனிவரும் உரைக்கின்றார்.

கயிலைமலையின் நடுவிலே அமைந்துள்ள பொற்கோயில் மாடத்து ஐந்தாவது ஆவரணத்தில், நவரத்தினங்களாலும் நறுமண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட வசந்தமண்டபத்திலே, பஞ்சணை மீது, பாம்பணி தாங்கும் படர் சடையோனாகிய இறைவன், இனிமைமிக்க இறைவியுடன் அமர்ந்திருந்தார். அப்பொழுது, உமாதேவிக்கு அளவில்லாத சிருட்டி, திதி, சங்கார காலங்களில்தான், இறந்தகால, எதிர்கால, நிகழ் காலங்களில் செய்த விநோதங்களையெல்லாம் இறைவன் சொல்கின்றார். அதைக் கேட்ட தேவியானவள் உளம் மகிழ்ந்தாள். பின்னர் இருவரும் பல கதைகள் பேசிக் களிப்புற்றிருந்தனர். அப்பொழுது இறைவன் வேதநாயகியாம் இறைவியைப் பார்த்து நீயும் நாமும் சூதாடுவோம் என்றார். அன்னையும் அதற்கு மகிழ்ந்தாள். சூதாடு கருவியைத் தருவித்தருள்க என்றாள். உடனே இறைவன் நந்தியெம்பெருமானை அழைத்து, தொகும் பண்டாரத்து (பொக்கிஷத்து) உள்ள சூதாட்டக் கருவிகளையெல்லாம் எடுத்துவந்து இறைவியின்முன் வைக்குமாறு கட்டளையிட்டார். அவ்வாறே நந்தியும் கொண்டு வந்து வைத்து இருகரங் கூப்பி வணங்கினார். பின்னர், நந்தியிடம், நாமும் தேவியும் சூதாடுவதைக் காண வருபவர்களை வெளியே நிறுத்தாமல் உள்ளே அனுமதிப்பாயாக என்றும் கட்டளையிட்டார். நந்தியும் அவ்வாறே அனைவரையும் உள்ளே அனுமதித்தார்.

சிவகணநாதர்கள், அயன், திருமால், இந்திரன், திக்குப் பாலர்கள், இருடிகள், தவசிகள், உரகர், விஞ்சைக் கலைஞர், கந்தருவர் ஆகியோரும், திருமகள், கலைமகள், இந்திராணி, தேவ மகளிர், சத்தமாதர் போன்றோரும் உள்ளே சென்று மலர்கள் தூவி வணங்கி வேதநாயகனைப் போற்றினர். இறைவன் அனைவருக்கும் இருக்கை அளித்து உமையம்மையுடன் சூது ஆடத் தொடங்கினார்.

சொக்கட்டானை விரித்து, நவமணிகளால் இழைத்துச் செய்யப்பட்ட வட்டுகள் பதினாறையும் சூதாடும் அறையின் நான்கு பக்கங்களிலும் பொருந்தவைத்து உருட்கயிற்றில் ஒன்று, மூன்று, நான்கு, ஆறு, பன்னிரண்டு ஆகிய இவை உள்ளனவா எனப் பார்த்து, தேவி தெற்கு நோக்கியும், இறைவன் வடக்கு நோக்கியும் எதிரெதிராக அமர்ந்தனர்.

முதலில் நீ உருட்டுவதற்குக் காய்களைக் கையில் எடுத்துக் கொள் என உமையம்மையிடம் இறைவன் கூறினார். இறைவியும் அவ்வாறே செய்து, இது வெறும் விளையாட்டா? அல்லது பந்தயமா? என்று கேட்டாள்.

வெறும் விளையாட்டால் என்ன பயன்? பந்தயத்துக்குத் தான் ஆடவேண்டும் என்று இறைவன் கூறினார். உடனே உமையம்மை, அப்படியானால் என்ன பந்தயம்? உடன்படிக்கை எவ்வாறு எனக் கேட்டாள். அதற்கு இறைவன், தேவியே! இந்த ஆட்டத்தில் நீ வெற்றி பெற்றால், இவ்வுலகில் நம் அதிகாரத்துக்குட்பட்ட தலங்களை ஒவ்வொன்றாக உன்னுடைய சுதந்திரத்துக்கு உட்பட்டதாக அளித்து விடுகிறேன். இருவருக்கும் வெற்றி தோல்வியில்லாமல் ஆடினால் இருவரும் சமநிலையினராவோம். நீ தோல்வியுற்றால் எந்த ஆலயமும் உன்னுடைய சுதந்திரத்தில் இல்லாமல் நீ என்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். இதுவே உடன்படிக்கை என்றார்.

அன்னையானவள் இதற்கு உடன்பட்டுச் சூதாட்டக் கயிற்றைக் கையில் ஏந்திக்கொண்டு, துளபமாலை அணிந்த திருமாலை நோக்கி, நீயே எங்கள் சூதாட்டத்திற்குச் சாட்சி என்று கூறினாள். அப்பொழுது இறைவன், இம்மைக்கும் மறுமைக்கும் நாமே சாட்சி அல்லாமல் திருமாலோ சாட்சியாவான்! எனத் தம்முள் நினைத்துக் கொண்டார். சரி, சூது விளையாடு எனத் தேவியிடம் கூறினார்.

இறைவனும் இறைவியும் சூதாடத் தொடங்கினர். அப்பொழுது ஆண்களெல்லாம் இறைவன் பக்கமும், பெண்களெல்லாம் இறைவியின் பக்கமும் வந்து நின்றனர். உமையம்மை தம் பக்கத்திலுள்ள தோழிகளைப் பார்த்து, விநாயகப் பிள்ளையை அழைத்து வருமாறு கூறினாள். உடனே தோழிகள் சென்று, யானை முகத்தோனை நீராட்டி, ஆடை ஆபரணங்கள் அணிவித்து அழைத்து வந்தனர். அன்னையின் மடி மீது அமர்ந்து மகிழ்ந்த விநாயகனிடம் அன்னை, மகனே! என்னுடைய சூதாட்டத்திற்கு நீயே துணையாக இருப்பாயாக எனக் கூறி, உச்சிமோந்து அணைத்து மகிழ்ந்தாள்.

இக்காட்சியைக் கண்ட ஆறுமுகப்பெருமானுக்கு கோபம் உண்டாயிற்று. முன்பு, கனியைத் தனக்குக் கொடாமல் தானே உண்ட விநாயகனை மட்டும் வரவழைத்து வைத்துக் கொண்டு என்னை அன்னை மறந்து விட்டாளே என வேதனை கொண்டான். உடனே, விரைந்து சென்று தந்தையாகிய சிவபெருமானிடம் சென்று வணங்கினான். இறைவனும் ஆறுமுகனைத் தம் மடிமீது அமர்த்திக் கொண்டு சூதாடத் தொடங்கினார்.

முதலில் தேவி ஆடத் தொடங்கினாள். கயிற்றைக் கையில் உருட்டியபடியே பன்னிரண்டு, எட்டு, ஆறு, இங்கு வேண்டும் என்று சொல்லி உருட்டத் தாயம் கிடைத்தது. உடனே சூதாட்ட அறையிலுள்ள காய்களையெல்லாம் தரையில் குத்தியெடுத்து, அன்னை முதலிலே வெற்றி பெற்றாள். அவள் வெற்றி பெற்றதற்குச் சலந்தரபுரம் என்ற நகரை இறைவன் அளித்தார். மீண்டும் நீயே ஆடுக என இறைவன் மொழிந்தார். அதற்கு அவள், நீங்கள்தான் நகர் அளித்தீர்கள். எனவே நீங்களே இப்பொழுது ஆடுங்கள் என்று கூற இறைவனும் ஆடத் தொடங்கினார்.

வேதபிரான் சூதாடியபொழுது, உருட்டுக்கயிறானது ஐந்து, மூன்று, ஒன்று ஆக ஒன்பது என விழுந்தது. அப்பொழுது இறைவியே வெற்றிபெற்றாள். இவ்வாறு ஐம்பது முறையும் அவளே வெற்றி பெற்றதால், ஐம்பது தலங்களையும் இறைவிக்கு இறைவன் அளித்து மகிழ்ந்தார். இந்த ஐம்பது தலங்களிலும் நீ அமர்ந்திருந்து அனைவருக்கும் அருள்வழங்கி வருவாயாக! என்றும் கூறினார்.

தேவியிடத்து மிகுந்த அன்பு கொண்ட இறைவன், முந்நூற்றைம்பது முறை மீண்டும் மீண்டும் தாமே தோற்று, அவ்வளவு தலங்களையும் தேவிக்கே அளித்தார். இத்தலங் களிலெல்லாம் நான்கு திசைகளிலுள்ளவர்களும் போற்றும் படியாக விளங்குக என்றும் அருளினார். இதனைக் கண்ட தேவரும் பிறரும் சத்தியே முக்கியம் என எண்ணி மனமாற்ற மடைந்தனர். இதையுணர்ந்த இறைவன் மற்றுமொரு திருவிளையாடலை ஆடத் தொடங்கினார்.

அறுமுகன், சாத்தர், வயிரவர், வீரபத்திரர் ஆகிய மைந்தர் களுடன் விளங்கிய இறைவன், தாம் தோற்றதனால் அவமானம் அடைந்தோம் என்று வெட்கப்பட்டவர்போல, பலபல அவமானக் குறிகளைக் காட்டி வலியற்றவரைப் போல உருட்டுக் கயிற்றை உருட்டினார். உமையம்மை புன்சிரிப்புடன் தாங்களோ புவனபதி! எண்ணியது எண்ணியவாறே முடியும்! என் போன்றவர்கள் தகுதியில்லாதவர்கள் என்று கூறி சூதாடாமல் தட்டிக் கழித்தாள்.

இதைக் கண்ட இறைவன், நீ வெற்றிபெற்றுவிட்டாய் என மகிழ்ந்திருக்க வேண்டாம். அதற்கு நாம் விடமாட்டோம் என்று கூறினார். உமையம்மையும் ஆடத் தொடங்கினாள். எது வந்தாலும் பார்ப்போம் என்று எண்ணித் தான் மிகுந்த வருத்தப்பட்டுக் கட்டி வைத்திருந்த சோடுகளையெல்லாம் எடுத்து எறிந்தாள். வரும் காய்களையெல்லாம் தப்பாட்டம் ஆடி வெற்றிபெற்றவர் போல் தரையில் குத்தினாலும் இறைவன் மீது கோபம் கொள்ளாமல், அக்காய்கள் மேல் சினங்கொண்டாள். சாரியாக வரும் காய்களையெல்லாம் வெட்டி ஒரு காயைப் பழமாக எடுக்கும்போது, 'என் மார்பகத்திற்கு இணை என்கின்ற சூதோ நீ' என்று சடார் என்று ஒலியானது எங்கும் கேட்கும்படியாக அவள் வெட்டினாள்.

இதைக் கண்ட இறைவன் திருமாலை நோக்கி, நீலி போல இவள் இரக்கமின்றி வெட்டுதலைப் பார்த்தாயா என்று கேட்டார். அதற்குத் திருமால், இறைவனே! நான் பராமுகமாய் இருந்து விட்டேன், எதையும் பார்க்கவில்லை என்று கூறினார். உமையம்மை, பாம்புடன் பழகிக் கருநிறத்தை அடைந்தவன் ஒரு சாட்சியாகுமோ? என்று கேட்டாள்.

உடனே இறைவன், தகுதி அறியாமல் எம்மை இகழ்ந்து யாகம் செய்தவனைப் போலவும், ஆட்டைக் கொன்று சுரா

பானத்துடன் மாமிசம் உண்பதற்காக எலும்பைத் துணிந்து வெட்டுவதைப் போலவும் இவள் வெட்டினாள் என்று மிகுந்த சினத்துடன் கூறினார். மேலும், கல்லினிடமாகப் பிறந்தவளுடைய மனமும் கல் அல்லாது கருணையுள்ளம் படைத்தது ஆகுமா? என்றும் கூறினார்.

இவற்றைக் கேட்ட உமையம்மை நெஞ்சம் குமுறினாள். இதழ் துடிதுடித்து, கண் சிவப்பேற, முகத்திலே வியர்வை கொட்ட, மிக மிக வாடினாள். இறைவனே! சிவத்துரோகி யாகிய தக்கனையும் என்னுடைய தந்தையாகவே எண்ணி விட்டீர்களா! எனச் சினந்து கேட்டாள்.

என் அன்புக்குரியவரே! நீர் என்மீது கோபித்துக் கொண்டால் என்னுடைய குறைகளைச் சொல்லி மனம் ஆறுதல் அடைய எனக்கு மாமனும் இல்லை, மாமியும் இல்லை, நான் என்ன செய்வேன்? உம்முடைய முடி மீதுள்ள பெண்ணின் சொல் எல்லாம் உமக்கு இனிக்கும்; என்னுடைய சொல் இனிக்குமா? கருத்திலே வேற்றுமை ஏற்பட்டுவிட்டால் அமுதம்கூடக் கசக்கும்; நான் உமக்கு உரிமையில்லாதவளாகி விட்டேன்; கல்லினிடத்தே பெண்ணாகப் பிறந்ததால் எனக்கு எப்படிக் கருணை இருக்கும்? கருணைக் கடலே உம்மை அன்றி வேறு ஒருவரிடம் கருணை என்பது பொருந்துமா? நெட்டியில் சாறு வருமா? வில்லினைக் கையிலேந்தி, காலினை உம் தலைமீது வைத்து, தன்னுடைய எச்சிலுடன் கூடிய ஊனை உமக்கிட்ட வேடனாகிய கண்ணப்பனின் கரம் பிடித்து அவனுக்கு அருளினீர்! புத்தனுக்கு அரிய பதம் அளித்தீர்; வில்லால் அடித்த அருச்சுனனுக்கு இரங்கி பாசுபதம் கொடுத்தீர்; வம்புக்கு ஆவண ஓலையை வாங்கிக் கிழித்துப் போட்டுப் பித்தா போ என்று அவமானம் செய்த சுந்தரருக்குத் திருவாரூரிலே பரவையிடத்தில் தூது சென்று திருமணம் முடித்து வைத்தீர்; மதுரையில் அன்பருக்காக விறகைச் சுமந்தும் மண்ணைச் சுமந்ததுமல்லாமல் பிரம்படியும் பட்டீர்; குருவினுடைய மனைவியைப் புணர்ந்த சந்திரனைச் சடையில் வைத்துக் கொண்டீர்; கரிய நஞ்சினை உண்டு விண்ணுலக நங்கையரின் நாண்களைக் காத்தீர்; திரிரபுரத்தில் தாய்போலப் போய் ஒரு பெண்ணுக்கு மகப்பேறையும் விரும்பிச் செய்தீர்; ஆடை யில்லாமல் சென்று தாருகவனமுனி மங்கையர்களிடம் பிச்சை கேட்டு அவர்களுடைய ஆடைகளையும் கழற்றிப் பார்த்தீர்; இடை மருதில் இரண்டு பெண்களை இரண்டு கைகளாலும்

எடுத்து விழுங்கினீர்; புகலூரிலே திருநாவுக்கரசு சுவாமிகளை உழவாரத்தோடும் உண்டீர்; நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றினீர்; இவ்வளவையும் இரக்கத்துடன் செய்து என்னிடம் மட்டும் இரக்கம் காட்டாமல் இந்த அவையில் அயலார்போல் பேசுகின்றீர்! வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது உண்டாகுமோ விமலனே! என்று வருந்திக் கூறிய உமையம்மை ஒரு பொற்றூணிலே சாய்ந்து நின்றாள்.

தேவியின் சொற்களைக் கேட்ட இறைவன் வியந்தார். இவள் பாலப்பெண் என்றல்லவா நினைத்திருந்தோம். படித்தவள் போலப் பேசி எம்மைத் திட்டாமல் திட்டி வாழ்த்துகிறாளே! உம்முடைய தங்கையின் திறமையைப் பார்த்தாயா என்று அவர் திருமாலிடம் கேட்டார்.

பின்பு இறைவன் உமையம்மையின் முகத்தைப் பார்த்து 'மாடே போ' என்று சினத்துடன் கூறி உடன் எழுந்து அந்தப்புரத்திலுள்ள பொற்பீடிகை மீது அமர்ந்திருந்தார். இதைக் கேட்ட அன்னையானவள், பெருங்காற்றிலகப்பட்ட கொடி போலத் துவண்டாள். கண்ணீர் அருவியாகக் கொட்ட மிகுந்த வருத்தமுற்று, ஓவியம் போலச் செயலற்றிருந்தாள்.

இவற்றையெல்லாம் கண்டவர்கள் அனைவரும் மிகுந்த துன்பமடைந்தனர். அன்னை பெற்ற துயரங்களைத் தாமே பெற்றதாகக் கருதினர். இறைவனும் இறைவியும் ஆடும் சூதாட்டத்தைக் கண்டு இன்புற வந்த நமக்கு இத்துன்பக் காட்சிகளைக் காண நேர்ந்ததும் ஊழ்வினைப் பயனோ என்று எண்ணி ஒருவர் முகத்தை மற்றொருவர் பாராமல் வெளியே சென்றனர். அப்பொழுது திருமால் மட்டும் அங்கேயே இருந்தார்.

பத்தாவது
அம்பிகை பசுச்சாபம் ஏற்ற அத்தியாயம்

346. **சூது விரும்பவொண் ணாதெனு மாமொழி சுந்தர மாமுனியே!**
ஆதி பரம்பரை தன்னிட முந்துய ராக்கிய தற்புதமா
மாதி னிடஞ்சிவ சாபம் விளைந்துறு மாறு மதித்தறிய
ஓதி டவேண்டுமென் றேமிதி லேச னுரைத்திட ஓதுவனால்.
1

346. மாமுனி-தவமிய முனிவர்.

347. சங்கர னுள்மனை யிற்தனி யாகியே
தானே தனித்தமரப்
பங்கு விடாத வழக்குடை யாள்பொதுப்
பண்பினை விட்டரனோடு
எங்கும் வியாபக மாயிடு முண்மையி
டத்தினி னின்றுணர்வாள்
அங்கண னார்திரு வுள்ள மதித்திடும்
அற்புதம் அத்தனையும். 2

348. தன்திரு வாணை நிறுத்த நினைந்ததுஞ்
சாட்சிநீ யாமரியே
என்றுமுன் சொன்னது வேமிகு குற்றமென்
றீசனு ளெண்ணியதும்
இன்றிகழ் நுண்ணிடை யாளுணர் கின்றனள்
வேதமுங் கண்டறியான்
ஒன்றிய உள்ளுணர் வேயிவ ளாயிடி
னுள்ளுத றானரிதோ. 3

349. உள்ளது சிந்தை யுணர்ந்திடு மெல்லையி
லுற்றுநல் மாதவனும்
மெள்ள விழுந்துமை பாதம் வணங்கிநீ
வேத விழுப்பொருளாய்
எள்ளுறு மெண்ணெய்போ லெங்கும் நிறைந்திடும்
இயல்பை யுணர்ந் திலையோ
கள்ளுறு கோதைமின் னேயென அன்னையுங்
கண்ணருள் செய்துசொல்வாள். 4

350. செய்யும் வினைக்குள் வின்பொடு துன்புயிர்
சேர்ந்து புசிக்கும்வகை
பொய்யறு காந்த பசாச மொருத்தர்
பொருத்துவபோற் புணர்த்தும்
கையன லேந்தும்எம் அண்ணலே சாட்சியாய்க்
காண்கை மறந்துனைநான்
மெய்யுறு சாட்சியெ னச்சொன தேவினை
யாகி விளைந்ததிது. 5

351. ஆதலி னாலறி யாதுசெய் தோமென
அண்ணல் பதம்பணியப்
போதுக வாவென அன்னை எழுந்திடு
போதுசெவ் வேள்மதலை

351. அண்ணல்-சிவபெருமான்.

பாதம் வணங்கிமு னிற்பது கண்டிரு
பங்கய அங்கைகளாற்
கோதை எடுத்தொரு பக்க மருங்கிடை
கொண்டு நடந்தனளே. 6

352. வாரண மாமுக மைந்தர்முன் னேகநல் மாயவர் பின்புவர
வாரண நாயகி நாயகர் முன்புசென் றஞ்சலி செய்யுமுனம்
காரண நாயகன் தன்மடி மீதிரு கைதொழு தேறியிருந்து
ஏரணி மாமுகன் தந்தை முகத்தை இரங்கியே பார்த்தருள. 7

353. உச்சி முகந்திரு கண்டரு நீர்துடைத்
தோகையு டன்தழுவி
வைத்திடு போதயில் மைந்தனு
டன்சிவை மங்கை பணிந்தெழலும்
அச்சுத னங்கமோ ரெட்டுநி லத்தில
முந்தவ ணங்கியேயங்கு
இச்சை மிகுந்து புகழ்ந்துகை
கட்டிநின் றேத்துவன் இன்புறவே. 8

354. சந்திர சேகர! அம்பிகை நாயக! சங்கர! புங்கவவற்
கந்தர! இன்ப நிரந்தர! பூரண! காரண! வாரணநற்
சுந்தர! மங்கள கங்கை சுமந்தவ! தொண்டர்கள் கண்டுபுணர்
மந்திர ஞானப ரம்பரை யாதிப! வானவ! யாமபயம். 9

355. உத்தம! அற்புத முத்தப ரப்பிரம! உற்பவ! மற்றகுண
வித்தக! வெட்டுரு வுற்றுள கர்த்த! விடைக்கொடி பற்றுகர
சத்துரு வானவ! சத்துரு வானவர் சத்திய ழித்திடுசூர்
முத்தலை வேல்வலன் வைத்திடு கொற்றவ! முக்கண!
யாமபயம். 10

356. எயிலை எரித்திட முறுவல் படைத்தவ!
யமனையு தைத்தவ!பொற்
சயிலம் வளைத்தவ! மதனை யழித்தவ!
சதுர்மறை சொற்றவ!நல்
மயிலை உகைப்பவ னுடன்மிகு மத்தள
வயிறனை உய்த்தவ!வெண்
கயிலை மலைத்திரு மனையுறு சிற்பரை
கணவ! உனக்கபயம். 11

352. மாயவர்-திருமால்.

353. அச்சுதன்-திருமால்.

357. இத்துதி மாய னுரைத்திட நாதன் இரக்கமி குந்துமகிழ்ந்து
அத்த மெடுத்துள மெய்த்தப யம்புரிந் தன்பொடு நல்மொழிகள்
சித்திர ஓவிய மொத்துள நாயகி சித்தம கிழ்ச்சியுறப்
பத்தர்க ளுக்கெளி யோன்திரு மால்முகம் பார்த்திவை
கூறுவனால். 12

358. சிவபர மாகிய தற்பர மியாமிவள்
சிற்பர மாமுலகில்
உவமைக ளொன்றில தாகினு மக்கினி
சூடென வெர்த்துறுவோங்கு
அவர்கள் பொருந்துவ தின்று குணங்குணி
யாகியே காதலொடும்
பவமுறு பல்லுயிர் போற்றிட முத்திப
லித்திட வேயருள்வோம். 13

359. சராசர மாய்பொருள் தோறு மிருப்பினுஞ்
சாருயிர்த் தன்மையெமக்கு
இராவணம் எப்படி யென்னில்
வெளிப்பொரு ளெப்படி அப்படியாம்
விராவுல கைக்கன வுப்பொருள்
சாக்கிர மேவுவ போலறிவோம்
பராவிய சத்தி எமக்கிவ ளாதலிற்
பண்ணுவள் ஐந்தொழிலும். 14

360. பூமியி லுற்றுள வித்துத கத்தினாற்
போந்தெழுந் தன்மையெனச்
சேம மிகுத்துள மாயையி லுற்றிடு
சிற்றுயி ரத்தனையும்
நேம மிகுத்திவள் சித்தநி னைப்பிலு
தித்துவ ளர்ந்திறுமுப்
பான்மையி னாலெம தாக்கமும் வாழ்க்கையும்
பாக்கியமும் இவளே. 15

361. உன்ற னிடத்திலும் ஆண்பெண் தாயிவ
ளோடுநா முற்றுநிதம்
நின்றிட லாலிரு தன்மையு மாகுவை
நீயுமொர் சத்திநமக்
கென்று புகன்றுநம் ஆக்கினை யின்படி
யேவலி னின்றரியே
பொன்றிகழ் நேமிகொ டெவ்வுல கும்மளி
போவென ஏவினனால். 16

வேறு

362. மாலவ னேகும் போதுமை யின்ப மணவாளன்
சீலமு டன்தன் தேவி மகிழ்ந்த செயல்கண்டு
சால மிகும்புன் மூர லொடுந்தண் ணளிபொங்க
ஞாலம் விளங்குங் கண்க ளிரண்டால் நாடுற்றான். 17

363. கண்ணொடு கண்கள் நேருற நோக்கிக் கரமுச்சி
நண்ணி முகிழ்ப்ப நாணொடு நின்று நவில்கிற்பாள்
பண்ணவ யாவும் நீயறிந் தாடல் பான்மைத்தாம்
எண்ணிட லாமோ நின்விளை யாடல் யாவர்க்கும். 18

364. சார்வுறு நோயும் நோய்க்கு மருந்தும் தானாவை
ஆர்வமு மாவை இன்பமு மாவை அகிலத்தைக்
கோர்வை யிடுந்நன் னூல்மணி யொப்பக் கொள்கிற்பை
நேர்வ துனக்கிங் கியாதுள நீயே நிகராமால். 19

365. பெண்மதி யாலியா னெண்ணியே செய்யும்
பிழையெல்லாம்
கண்ணுத லோனே உள்ளம்வை யாமற் காவென்றாள்
ஒண்ணுதல் நீநா முடலுயிர் போல்ஒற் றுமையாகில்
நண்ணிடு துன்போ டின்பிரு வர்க்கும் நடுவன்றோ. 20

366. பின்னம தாமோ கதிரொடு பானுவின் பெற்றித்தான்
அன்னமே நீஎன் நடுவு ளிருப்பை அகலாமல்
மன்னியே நாமும் உள்நடு மேவி வாழ்கிற்பேம்
இன்னது காண்ப தன்பரல் லால்வே றெவர்காண்பார். 21

367. மாடே போவென் றுனைநாம் புகல்சொல் வசவன்று
பீடே யாகும் அப்பொருள் கொள்வோர் பிழையென்று
நாடார் பக்கப் பெயரது வென்றே நவில்கிற்பார்
நீடார் வேற்கண் ணாய்நீ பிரியா நிலையாமால். 22

368. ஆதலி னால்ஈ துட்பொரு ளாம்இவ் வகிலத்தோர்
ஓதுவ தாலே சாபமு மாய்க்கொண் டுமையேஉன்
பாத முறுந்துளாற்பரி சுத்தம் பாரெய்தக்
கோதகல் கின்ற பசுவுரு வம்நீ கொள்ளென்றான். 23

367. வசவு-இழிவுரை. பீடு-பெருமை.

369. கேட்டலும் அன்னை பிரிவினை யெண்ணிக் கிலேசித்து
நாட்ட மிரண்டு முத்த முதிர்ப்ப நவையில்லான்
தாட்டுணை பற்றிக் கொண்டெனை யாளுந் தலைவாளன்
வாட்ட மகற்றிக் கூடுவ தென்றோ வழங்கென்றாள். 24

370. தேவர்கள் தேவன் செப்புவன் நீகொண் டிடுஞ்செல்வ
ஆவினி லைந்தும் ஆடு வதற்கே அவாமிக்கேம்
பாவையே நீகோ வாய்எமை நாவாற் பரிசித்துத்
தாவறு பூசை பூதல மீதிற் தலந்தோறும். 25

371. செய்து வணங்கிப் பூவல மாகச் செலும்போதில்
எய்திடும் உன்கண் இடது துடித்தே இடப்பாத
மைதிகழ் கோதா யிடறு தலத்தின் வளர்கின்ற
மெய்தகு லிங்கத் துள்ளிருந் தெய்தி விடையேறி. 26

372. வந்தொரு தீர்த்தத் தண்புனல் தூவி வளர்கோவின்
பந்த வுருத்தீர்த் துன்னை அணைத்துப் பெருவாழ்வு
தந்திடு வோம்நாம் இவ்வுரை தான்சத் தியம்நந்தம்
அந்தமில் மைந்தர் ஆணையே ஆணை யாமென்றான். 27

373. அன்று பெறுஞ்சந் தோடமும் ஆங்கே அவள்பெற்றுப்
பொன்றிகழ் கொங்கை புளக மிகுப்பப் பொடிப்பெய்தித்
தன்துணை யாங்கைக் காந்தள் முகிழ்த்துத் தலைவன்சொல்
ஒன்று மறாதா ளேற்றனள் சாபம் உலகுய்ய. 28

பத்தாவது அம்பிகை பசுச்சாபம் ஏற்ற அத்தியாயம்
முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 373

திருச்சிற்றம்பலம்

---

369. கிலேசித்து-வருத்தப்பட்டு, நாட்டமிரண்டு-கண்களிரண்டு. முத்தமுதிர்ப்ப-கண்ணீர்த்துளிகள் சிந்த. நவையில்லான்-குற்றமில்லான். சிவபெருமான். தாட்டுணை-தாள் துணை.

370. ஐந்து-பஞ்சகவ்யம். அவா-விருப்பம்.

372. மைந்தர்-விநாயகன், முருகப்பெருமான்.

10. அம்பிகை பசுச்சாபம் ஏற்ற அத்தியாயம்

(சுருக்கம்)

தவுமிய மாமுனியே! இறைவனிடத்தில் அம்பிகை பசுச்சாபம் ஏற்ற நிகழ்ச்சி பற்றி விரித்துரைக்க வேண்டும் என மிதிலேசன் கேட்க முனிவரும் அதனைக் கூறத் தொடங்கினார்.

பரம்பொருள் தாம் நினைக்கும் அனைத்து அற்புதங்களும் நினைத்த மாத்திரத்தில் அவ்வாறே ஆணையில் நிற்கும் வல்லமையை நாம் அறிவோம். இருப்பினும் எல்லாவற்றிற்கும் சாட்சியாக உள்ளவன் அவ் இறைவனே என்று உணராமல் திருமாலைச் சாட்சி என்று கூறியது எவ்வளவு தவறு! என உமையம்மை எண்ணி வேதனையுற்றாள். யான் அறியாது செய்து விட்டேன் என்று இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்தாள். அப்பொழுது அறுமுகவன் தன்னுடைய பாதங்களை வணங்கி நிற்பதைக் கண்டு இருகரங்களால் மகனைத் தூக்கித் தன் பக்கத்தில் வைத்தார்.

ஆனைமுகத்தோன் முன்னே செல்ல, அவர் பின்னால் திருமால் வர, உமையம்மை இறைவன் முன்பு சென்று வணங்கு முன், விநாயகன் இறைவனுடைய மடியின் மீதிருந்து இருகரங்களையும் கூப்பித் தொழுது தந்தையின் முகத்தை நோக்கினார். இறைவன் விநாயகரை உச்சிமோந்து இரு கண்ணீரையும் துடைத்து ஆனந்தம் மேலிடத் தழுவினார். உமையம்மை அறுமுகவனுடன் சேர்ந்து கீழே விழுந்து வணங்கினாள். திருமாலும் வீழ்ந்து வணங்கித் துதித்தார்.

திருமாலின் துதியைக் கேட்ட இறைவன் இரக்கம் மிகுந்து அபயமருளினார். பின்னர், உமையம்மை மகிழும்படியாகத் திருமாலிடம் கூறுகின்றார்.

உமையானவள் சிவபரமாகிய தற்பரமானவள். இவ் உமையம்மைக்கு உவமை கூற வேறொன்றில்லை. எனினும், அக்கினியும் சூடும்போல நாங்கள் ஒத்திருப்போம். மேலும், குணகுணியாகியே மிகுந்த அன்போடும் பல உயிர்களுக்கு முக்தியையும் கொடுப்போம். எமக்குச் சத்தியானவள் இவள். எனவே இவளுடைய தன்மையைக் கொண்டே ஐந்தொழில் களையும் செய்வோம். பூமியிலுள்ள சிற்றுயிர்கள் அனைத்தும் இவளுடைய அருளாலேயே தோன்றி வளரும். இதன் காரணமாக எம் ஆக்கமும் வாழ்க்கையும் பாக்கியமும் இவளே ஆவாள்.

நாம், ஆண், பெண், அலி ஆகிய இம்மூன்றாய் இவளோடும் பொருந்தி, உன்னிடத்திலும் பொருத்துதலால், நமக்கு நீயும் ஓர் சத்தியாவாய் என்று சொல்லி, நம்முடைய ஆணையின்படி சக்கர ஆயுதத்தைக் கொண்டு எல்லா உலகங்களையும் காப்பாயாக! என்று திருமாலுக்கு இறைவன் கட்டளையிட்டார்.

இதைக் கேட்ட திருமால் அங்கிருந்து சென்ற பின்னர் சிவபெருமான் புன்னகையுடன் மிகுந்த களிப்போடு தேவியை நோக்கினார். அண்ணலின் அருட்கண் பார்வையில் திளைத்த தேவி தம் உச்சிமேல் கரங்குவித்து நாணமுற்றுச் சிலவற்றைக் கூறுகிறாள்.

தலைவரே! அனைத்தும் உம் திருவிளையாடலே; உம்முடைய திருவிளையாடலை யாரால் அளவிட முடியும்! தங்களுக்கு நிகரானவர் தாங்களே அன்றி வேறு ஒருவரும் உண்டோ? பெண்புத்தியின் காரணமாக நான் அறியாது செய்த பிழைகளையெல்லாம் மனதில் வைக்காமல் என்னைக் காத்தருள்வீராக! நாம் இருவரும் உடலும் உயிரும் போன்று ஒன்றாக இணைந்து இயங்குபவர்கள் என்பது உண்மையானால் நமக்கு இன்பமும் துன்பமும் சரிசமம்தானே? என்று அன்னை வினவினாள். இதற்கு இறைவன், கதிரவன், எவ்வாறு தன் ஒளிர்க்கதிர்களோடு ஒன்றி இருக்கின்றானோ அப்படி நாம் இருவரும் ஒன்றி இருக்கின்றோம். இதை நம் மெய்யன்பர்கள் நன்கு உணர்வர் என்றார். மேலும், உமையம்மையே! உன்னை நான் 'மாடே போ' என்று சொன்ன சொல் வசைச் சொல் அல்ல; அது பெருமையுடைய சொல்லேயாகும். 'மாடு' என்றால் பக்கம் என்று பொருளாகும். எனவே, நீ எப்பொழுதும் நம் பக்கமே அல்லாமல் பிரியும் நிலையை யுடையவள் அல்ல என்பது இதன் உட்பொருளாகும். உலகினர் இதை அறியமாட்டார்கள். இருப்பினும், அவர்கள் பொருள்படியே சாபமுமாகக் கொண்டாலும், நீ பசு உருவத்தை அடைவதும் பொருத்தமே. பசுவாகும் உன் பாதங்களால் ஏற்படும் தூசியினால் உலகம் பரிசுத்தம் அடையும். எனவே நீ அவ்வாறே ஆகுக! என்றும் இறைவன் கூறினார்.

இவற்றைக் கேட்ட அன்னை வருத்தமுற்றாள். இறைவனைப் பிரிய வேண்டுமே எனத் துயரமுற்றாள். கண்ணீர் பெருக இறைவனை வணங்கி, என்னுடைய துன்பம் அகற்றி ஆட்கொள்ளுவது எப்போது? என வேண்டினாள்.

இதற்கு இறைவன், அம்மையே! நீ அடையப்போகும் பசுவின் பஞ்சகவ்யம் ஆடுவதற்கு எமக்கு மிகுந்த விருப்பம். எனவே, நீ பசுவாகி உனது நாவினால் நம்மைப் பரிசித்துப் பூசை செய்து கொண்டு பூமியை வலம் வருவாயாக. அவ்வாறு வரும் பொழுது, எந்தத் தலத்தில் உனது இடதுகண் துடிக்கவும் இடதுகால் இடறவும் கூடுமோ அந்தத் தலத்தில் உள்ள இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு விடையேறி காட்சி கொடுப்போம். அத்துடன், அத்தலத் தீர்த்தத்தின் நீரை உம் மீது தெளித்துப் பசு உருவை நீக்கி எம்முடன் சேர்த்துக் கொள்வோம். இது நம் மைந்தர் இருவர் மீது ஆணை என்று கூறினார். உமையம்மை மிக்க மகிழ்வோடு இச்சாபம் ஏற்று, இவ்வுலகம் உய்ய அருளினாள்.

பதினொன்றாவது
தேவி காசியில் பசுஉரு அடைந்த அத்தியாயம்

374. நாயகிநற் சாபமுறு நலமுரைத்தேம் இனியந்தத்
தூயவள்கா சியிற்பசுவாய்த் தொல்லுலகிற் சஞ்சரித்த
மேயவளஞ் சொல்கின்றேம் மிதுலேச கேட்களனத்
தாயனைய தயவுடைய தவுமியமா முனிபுகல்வான். 1

375. மின்கொடிபோல் நுடங்குமிடை
மெல்லியலாள் தனைநோக்கிப்
பொன்கொடிபோல் நுடங்குசடைப்
புனிதன்விடை புரியுமுனம்
நன்கொடுமேல் நடக்கும்வகை
தொகையாக நவிலுவன்நீ
முன்கயிலை விட்டிமய
முதல்வன்மக ளாயுறுநாள். 2

376. தொக்கவெழிற் தேவரம்பை மாதருக்குள் சுதனான
விக்கினே சுரன்சாப மேவியதால் அவர்களெலாம்
தக்கபசு உருவாகும் சாபமுள ரவர்களுமுன்
பக்கமிகுங் கோவுருவாய்ப் பணிந்தடைவ ரவர்க்குமுனம் 3

377. ஏருறுங்கங் காநதிசூழ் காசிநகர் எல்லையிற்சென்று
ஓருமருட் பசுவுருவ மாகியே உலாவியெங்கும்
பாரிடத்தில் வாழுமுயிர்ப் பகுதியெலாம் பிழைத்துய்யச்
சீருடன்போய் வாவெனநான் மனுவீந்தான்
சிவபெருமான். 4

378. ஆமென்று மனுவுணர்ந்தங்கு அமலன்விடை பெற்றேகிப்
பூமன்றல் மொய்த்தகுழற் பூவைபுறம் போந்திடலும்
காமன்தன் னுடலெரித்தோன் கடைக்கணரு ளேவலினாற்
தாமங்கொள் நந்திமுதற் சகலர்களும் புடைசூழ்ந்து. 5

379. தாய்ப்பசுவின் முகம்பார்க்குங் கன்றுகள்போற் தாய்முகம்பார்த்து
ஏய்ப்புறுமெய் விதிர்ப்புடனே இருகண்ணீர் சொரிந்திரங்க
வாய்ப்புடைய இளையமகன் முகம்நோக்கி மைந்தாநீ
தூய்ப்புகழ்சேர் நந்தியுடன் தொகுங்கணநா தர்கள்சூழ. 6

380. கயிலைமலை தனிலிருந்தெங் காவலனுக் கேவல்புரிந்து
இயல்புடன்காத் திருவென்றே இன்னருள்செய் தேவியபின்
மயிலனையாள் சிவனருளால் வந்தவிமா னத்தேறிச்
செயலறிவிச் சைகள் மூன்றும் சிவன்பாலுற் றிடப்போந்தாள். 7

381. மூத்தமகன் தனைமடியின் முன்வைத்துத் தென்திசையைப்
பார்த்துவிமா னத்துவரும் போதுவெள்ளிப் பருப்பதத்திற்
காத்திருந்து பணிபுரிந்த கன்னியர்க ளனைவர்களும்
ஏத்துபணி விடைபுரிந்தங் கெழுந்துபுடை சூழ்ந்தனரால். 8

382. நாற்றிசைவிண் ணவரும்முனி வரும்நாக மங்கையரும்
நீற்றொளிசேர் மெய்யடியார் கூட்டமும்நல் நேசமுடன்
போற்றிவரக் கயிலையுஞ்செம் பொன்மலையுங் கடந்திப்பால்
வீற்றிருந்த இமயகிரி மருங்குவந்தாள் மெல்லியலாள். 9

வேறு

383. தேவநா யகிபோந்த செயலுணர்ந்த
மலையரசன் தேவி யோடும்
ஆவலொடுங் கிளைசூழ மிகுசிறப்புங்
கொண்டெதிர்வந் தலர்கள் தூவி
மாவனப்பு மகள்பதத்தை வணங்கிமனஞ்
சலித்துநிற்ப மாது நோக்கி
மேவருமென் அன்னையொடுநன் றிருந்தனையோ
தாதாய்நீ? எனவி னாவ. 10

384. தாயனையாய் எமதுகுலம் உயர்குலமாம்
படிக்கொருசந் ததியாய் எம்பால்

380. இச்சைகள் மூன்று - இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று சத்திகள்.

நேயமுடன் அவதரித்த நாள்முதலாக்
குறைவறுநன் னிகழ்ச்சி பெற்றேம்
காயமறா திருக்கும்எமக் குன்வடிவை
இனியொருகாற் காணு மட்டும்
தோயுநலம் உளதோஎன் றனக்குமுன
தனைக்குமெனச் சொற்றான் வேந்தன். 11

385. கோட்டமுமக் கென்பொருட்டால் வருவதென்கொ
லோஎமது கோமான் தன்னைத்
தேட்டமுடன் நினைந்தருச்சித் திருப்பதுவே
செல்வமல்லாற் செல்வம் யாதே?
வாட்டமுண்டோ பெரியதருச் சுற்றும்வல்லிக்
கொடிக்கதுபோல் வருத்தம் என்பால்
நாட்டமூன் றுடையோன்தன் கிருபையுள
தேல்வருமோ நாக வேந்தே. 12

386. எனுமுரைகேட் டகஞ்சிறிது தேறிநிற்கும்
பிதாமுகம்பார்த் திரங்கி நோக்கி
மனைவியொடும் உமதிருக்கைக் கேகென்று
விடைகொடுப்ப மகளை நோக்கித்
துனிமிகுந்து மேனைகண்ணீர் சொரிவதுகண்
டிருகையினாற் துடைத்தென் தன்னைத்
தனயையெனும் பந்தம்விடுத் துன்மருகன்
ஆக்கினையே தலைக்கொள் என்றாள். 13

387. மாறுரையொன் றுரையாம லரிதாகிப்
பிரிந்தவர்கள் மனையி லேகி
மீறுபனி மலையைவிட்டங் ககன்றுகே
தாரத்தின் மேவி அங்கண்
பேறுறுமந் தாகினியிற் புனலாடி
யுதகமுண்டு பிரியத் தோடு
மாறணிந்த கேதாரே சுரனைப்பூ
சித்துமுப்போ தமரும் போதில். 14

388. அரியயன்வான் முனிவர்முத லனைவரையும்
கருணையுடன் அமலை நோக்கி
பரிவுடையீர் நீங்களுங்கள் பதிகள் தோறும்
ஏகுமெனப் பகர்தல் கேட்டுப்

386. தனயை - மகள்.

பிரிவுணர்ந்து கவலையுற்றுத் தொழுதுவிடை
பெற்றேகப் பிராட்டி அங்கண்
கரியமிட றுடையானை நல்மலரால்
அருச்சித்துக் கவலை தீர்ந்து. 15

389. திருவருள்பெற் றுடன்மருவு மவர்சூழ
வந்துமிகு சிறப்பி னோடு
மருவளர்கற் பகவனஞ்சூ ழானந்த
கானனமாம் வார ணாசிப்
பெருநகர்க்குக் கீழ்பாலோர் பூம்பொழிற்குள்
விமானம் விட்டுப் போந்து
அருள்மருவுங் கங்கைபுகுந் தனைவரும்நீ
ராடுமென்று தானும் ஆடி. 16

390. நியமமுடன் நீறுபுனைந் தக்குமணி
மாலிகைகள் நிரம்பப் பூண்டு
பயனுறும்அஞ் செழுத்தோதி அவ்வனத்தில்
எழுந்தருளிப் பரிவி னோடும்
வியனுறுசீர்க் காமதே னுவைநினைப்ப
அக்கணத்தில் விரைந்து வந்து
நயனுறுபூங் கமலமலர்த் தாள்பணிய
வான்முகத்தை நாடிச் சொல்வாள். 17

391. உனதுருவம் எனக்கருள வேண்டுமெனத்
தேனுவுமங் குடன்பா டாகக்
கனமருவு பூங்குழலுங் கைநான்கு
மலரடியுங் கவின்கொள் மெய்யின்
வனமுழுதுங் கரந்ததிற்கோ வடிவாகி
நின்றிடலு மருங்கு நின்ற
இனமருவும் அன்பர்குழாம் அனைவர்களும்
அரகரவென் றிறைஞ்சி யார்ந்தார். 18

392. நான்குமறை யுஞ்சிலம்பாய் நற்பதத்திற்
கிடந்தொலிப்ப நறுங்கொம் பாதி
யாங்கருணை யவையவத்து ளிசைந்திடுகிம்
புரிமணிபொன் னார மாலை
பாங்குறுநற் பணிபலவு மிருநிதிசிந்
தாமணிகற் பகத்தாற் பூண்டே
ஓங்கியபே ரெழிலிலங்க நின்றகோ
நாயகியங் குவந்து பார்ப்ப. 19

389. கானனம் - காடு. 390. மாலிகை - மாலை. 391. தேனு - காமதேனு.

393. அப்பொழுது காசிவிசு வேசர்திரு
வுள்ளமறிந் தகில மீன்ற
மெய்ப்பசுவி னுருவமைந்த விசாலாட்சி
மருங்கிலுற விடைமீ தேறி
ஒப்பரிய பூதகண நாதர்களும்
தேவர்களும் உவந்தவ் வூர்வாழ்
மெய்ப்பொருள்சே ரன்பர்களு முனிவர்களும்
புடைசூழ விரும்பி வந்து. 20

394. செஞ்சடையும் கருமிடறும் மதிமுகமும்
குழைச்செவியும் திகழ்முந் நூலும்
அஞ்சல்வர தமுமழுமான் பிடித்தமலர்க்
கையுமுயிர்க் கருள்முக் கண்ணும்
மிஞ்சுமணிச் சுடிகைஅர வணிபுயமும்
புலியுடையும் விளங்கு மெய்யும்
கஞ்சமலர்ச் சேவடியும் காட்சிகொடுத்
தெதிர்நின்றான் ககன மீது. 21

395. பூவினுறும் வாசமந்தப் பூவைவிடா
திருந்துமெங்கும் புணர்தல் போல்மா
தேவனொடும் பிரியாம லிருந்துவிளை
யாடல்செயுந் தேவி யான
கோவுருவ நாயகிதன் பரிசனங்க
ளொடும்விழிகள் குளிர நோக்கி
ஆவலொடும் உள்ளுருகிப் புளகித்து
விதிர்ப்புடன்அண் ணாந்து விம்மி. 22

396. தூவுமடி பால்சுரந்து தாரையாய்
அன்பினொடுஞ் சொரிந்து போற்றப்
பாவுறுசொற் துதியினொடும் அரகரவென்
றடியர்குழாம் பணிந்தங் காட
மேவுயவைந் துந்துமியு மிகமுழங்க
மலர்மாரி விண்ணோர் பெய்யக்
காவலனங் கருள்புரிந்து களிப்பினோடும்
விடையுகைத்துக் காசி சேர்ந்தான். 23

397. கீற்றுமதிக் கொழுந்தணிவோன் கிருபைபெற்ற
கபிலையம்மன் கிளர்ந்தங் கூற்றும்
பாற்றடநற் கபிலைதா ரைப்பெயரா
யிருந்துயிர்கள் பாவம் போக்க

397. கபிலையம்மன் - உமையம்மை. கபிலைதாரை - உமையம்மையின் பசு உருவப்பெயர்.

ஆற்றல்புரிந் தவ்விடத்தி லவ்விரவெல்
லாமிருத்தவ் வமலை அன்று
மேற்றிசையிற் போனகதிர் கீழ்த்திசையிற்
தோன்றியிருள் விடியக் கண்டு. 24

398. தன்னடியா ருடனெழுந்து போய்மணிகர்
ணிகைமூழ்கித் தார கேசன்
பொன்னடிபூ சித்துமிகும் பஞ்சக்குரோ
சங்காசிப் புறமாய்ச் சூழ்ந்து
மன்னுசடை விசுவேசர் தனைவணங்கிச்
சிறிதுநாள் வாசம் பண்ணிப்
பின்னரும்பொன் மானமிசை யேறியெங்குஞ்
சஞ்சரித்தாள் பிரானார் பன்னி. 25

வேறு

399. தவுமி யப்பெய ரோனிவை சாற்றலும்
உவகை மெத்தவு முற்றுள கொற்றவன்
நவமி குத்துள நல்முனி தன்னொடும்
கவன முற்றொரு கட்டுரை சாற்றுவான். 26

400. கயிலை யிற்சிவன் விண்ணவர் கன்னியர்
இயல்பு பெற்றகோ வாயெய்து வாரெனும்
உயர்வு பெற்றுள காரணம் ஓதென
மயர்வ றுத்துள மாதவன் ஓதுவான். 27

401. பிரளை யத்தினும் கற்பம் பெறுந்தொறும்
கருணை வைத்துயிர் காப்பதற் காவுமை
மருவி யெங்கணும் பார்த்து வளர்த்திட
உருவு பற்பல கொள்வள்அவ் வுத்தமி. 28

402. இமைய மால்வரை யின்கணோர் காலமவ்
உமைக திர்க்குல மாயிர மொத்தொளி
சமையும் நல்லுருத் தாங்கி யிருந்தனள்
அமையும் பன்னிரண் டாண்டுடை யாளென. 29

403. அன்ன காலத் தசுரரிற் சும்பனும்
மன்னும் வன்கண் அசும்பனும் வந்தடர்
இன்ன லாற்றல ராய்இமை யோரெலாம்
பன்னி மாரொடும் வந்து பருப்பதம். 30

403. பன்னிமார் - மனைவியர்.

404. சூழ்ந்து நின்று தொழுதர மாதரை
வாழ்ந்த விவ்விம யத்துறு மாதுதாள்
வீழ்ந்தெ ழுந்து தொழுதுநம் வெம்பகை
போழ்ந்தி டென்றுசொல் வீரெனப் போக்கினார். 31

405. மாங்கு யிற்சொல்நல் மங்கையர் போம்பொழுது
ஆங்கொ ரூசலின் மேலிருந் தாடினாள்
வாங்கு விற்புரு வத்துவர் வாய்முகிழ்
கோங்கு பொன்முலைக் கொந்தளக் கோதையாள். 32

406. மயிலி னங்களோ ரன்னம ருங்குசூழ்ந்து
இயல்பொ டுந்தொழு தேத்துவ போல்மலைக்
குயிலின் மென்மொழிக் கோமள வல்லியைப்
பயில்வொ டுந்தொழு தேத்துவர் பாவைமார். 33

407. தேவ தேவன் திருவருள் நாயகி!
காவ லாயுல காள்கரு ணாகரி!
தாவில் சுந்தரி! சங்கரி! சாம்பவி!
பாவ கோபி! பருப்பத வர்த்தனி! 34

408. சுத்த ஞான சுகோதய பூரணி!
பத்த ரன்பிற் புதிந்தசிந் தாமணி!
முத்த மூரல் முகிழ்முலை முக்கணி!
எய்த்தி டுந்துயர் தீரென ஏத்தினார். 35

409. உங்கள் தந்துயர் யாதுரை யீரென
வெங்கண் மங்கல நாண்க ளிடருறத்
துங்க மேவிய சும்பன சும்பனென்று
அங்கி ரண்டசு ராந்தகர் தோன்றினார். 36

410. தோற்றி நின்றமர் செய்து துரத்திட
ஆற்ற லின்றி அமரர்க ளோடிவந்து
ஊற்ற மிஞ்சும் உனக்கப யஞ்சொலிப்
போற்றி நின்றன ரென்றனர் பூவைமார். 37

411. அந்த வாய்மொழி கேட்டங் கசுரரைச்
சிந்த மோதிநுஞ் செல்வம் யாவையும்
தந்து ரட்சைசெய் வோமெனச் சாற்றியே
விந்தை யஞ்சல் புரிந்திடும் வேளையில். 38

412. ஆகு வாகன மூர்ந்துவந் தைங்கரன்
தாக மோடும் பணிந்திடத் தாய்மகிழ்ந்து

ஓகை யோடணைத் துச்சி மூகந்துதன்
ஏக மைந்தனை ஏற்றினள் மாமடி. 39

413. வார்த்தை யொன்றுஞ்சொல் லாதர மங்கையர்
நேத்தி ரங்கள்தாய் நோக்கி நிகழ்த்துதல்
பார்த்தம் மின்னார் பணிந்திடாக் குற்றம்வைத்து
ஆர்த்தே பைய வடித்தொன்று சொல்லுவான். 40

414. அறிவி லாத பசுக்களோ டன்னைநீ
பிறிய மாகவே பேசுவ தென்கொலோ?
மறைகள் கண்டறி யாவுன் மகிமையை
இறையு மோர்ந்திலை யோ?என் றியம்பினான். 41

415. கொம்பொன் றேந்திய குஞ்சரக் கன்றினை
அன்பி னோடணைத்து ஐய அமரரைத்
துன்பு செய்திடு சும்பன் அசும்பனை
இம்பர் நீசென் றழித்திடர் தீரென. 42

416. நன்கீ தென்றுவி நாயக னேகலும்
புன்க ணீங்கிய புங்கவர் மாதரை
என்கொல் வேண்டுவ தின்னுமென் றோதிட
உன்கண் நீங்கா உதவிசெய் என்றனர். 43

417. கால மூன்றின் நிகழ்ச்சியுங் கண்டிடும்
வாலை சொல்வள்என் மைந்தன் பசுக்களென்று
ஏல வுங்களை எண்ணி யுரைத்தது
சால வும்முணர்ந் தேனது தப்புறா. 44

418. இன்னும் பின்வரு காலமெல் லீர்களும்
என்னு டன்பசு வாய்வரு வீரென
முன்னம் சொற்றனள் அவ்வுரு மோகமாய்
மன்னு வாரினி என்றனன் மாமுனி. 45

419. விபர மாகவே கேட்ட மிதுலனும்
சுபம் லிந்தசந் தோடத் துடனுமை
அபிம னம்பெறு காசியை விட்டகன்று
உபக ரித்தெய்தல் ஓதென ஓதுவான். 46

பதினொன்றாவது தேவி காசியில் பசுஉரு அடைந்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 419

திருச்சிற்றம்பலம்

418. எல்லீர்களும் - நீங்கள் யாவரும்.

11. தேவி காசியில் பசுஉரு அடைந்த அத்தியாயம் (சுருக்கம்)

உமையம்மை பசுச்சாபம் பெற்றதைச் சொன்னோம்; இனி அந்தத் தேவி காசியில் பசு உருவை அடைந்து உலகில் சஞ்சரித்த சிறப்பையெல்லாம் சொல்வோம் கேட்பாயாக எனத் தவுமியமாமுனி மிதிலேசனிடம் கூறத் தொடங்கினார்.

தேவி விடைபெற்றுக் கொள்ளும் முன்பாக இறைவன் சிலவற்றை இறைவியிடம் கூறுகின்றார். உமையே! நீ இமவானின் மகளாயிருக்குங் காலத்து அரம்பை முதலிய விண்ணுலக மங்கையரெல்லாம் விநாயகருடைய சாபத்தால் உனக்குப் பக்கத்தில் பசு உருவாக வந்தடைவர்; அவ்வாறு அவர்கள் வந்தடையும் முன்னர் நீ கங்கை நதி சூழ்ந்த காசிநகருக்குச் சென்று பசுஉரு அடைவாயாக! என்றார் சிவபெருமான்.

உமாதேவி இதற்கு ஆம் என்று கூறி விடை பெற்றுக் கொண்டு அவ்விடமிருந்து அகன்றாள். சிவபெருமானின் ஏவலினால் நந்தி முதலாக அனைவரும் புடைசூழ்ந்து வர, இறைவியானவள் இளைய மகன் அறுமுகவனைப் பார்த்து, மைந்தனே! நீ கயிலையில் இருந்து கொண்டு நந்தி முதலானவர்கள் உன்னைச் சூழ இறைவனுடைய ஏவலைச் செய்து கொண்டிருப்பாயாக என்று கட்டளையிட்டாள். பின்பு, சிவபிரான் திருவருளால் வந்த விமானத்தில் ஏறிக் காசியை அடைந்தாள். அப்பொழுது இறைவியின்பாலுள்ள இச்சை, ஞானம், கிரியை ஆகிய மூன்று சத்திகளும் இறைவன்பால் சென்றன.

தேவி தன் மூத்த மகன் விநாயகனைத் தன் மடியின்மேல் வைத்துத் தெற்குமுகம் நோக்கி விமானத்தில் வரும்பொழுது வெள்ளிமலையில் இருந்த கன்னியர்கள் எல்லாரும் உமையம்மைக்குப் பணிவிடை செய்து அருகிலிருந்தனர். மேலும், நான்கு திசையினரும் விண்ணவரும், முனிவர்களும், நாகமங்கையரும், மெய்யடியார் கூட்டமும் போற்றி வணங்கிவர, கயிலை மலையையும் மேரு மலையையும் கடந்து இப்பால் இமயமலையின் பக்கமாக தேவி வந்து சேர்ந்தாள்.

வேத நாயகியான உமையம்மை வந்த செய்தியை மலையரசன் அறிந்து தன் மனைவியுடன் வந்து மலர் கொண்டருச்சித்து வணங்கி நின்றான். தந்தையைப் பார்த்த உமையம்மை, என்னுடைய அன்னையும் நீங்களும் நலமாக இருக்கின்றீர்களா?

என்று கேட்டாள். அதற்கு மலையரசன், அம்மையே! எங்கள் குலம் உயர்நிலையை அடையும்படியாக வந்து நீ அவதரித்த நாள் முதல் நாங்கள் குறைவற்ற நல்ல நிலையிலேயே இருக்கின்றோம். ஆயின், உம்மை மீண்டும் காணுமளவும் எனக்கும் உம் அன்னைக்கும் நலம் என்பது உண்டோ என்று மலையரசன் கூறினான்.

இதைக் கேட்ட உமையம்மை, தந்தையே! என்பொருட்டு உங்களுக்குத் துன்பம் உண்டாகுமோ? ஆகாது. எம்முடைய தலைவனான சிவபெருமானை அருச்சித்திருப்பதுவேயல்லாமல் வேறு என்ன நிதி வேண்டும்? மிகப்பெரிய மரத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கும் கொடிக்கு வாட்டம் உண்டாகுமா? முக்கண்ணுடைய கருணை வள்ளல் எமக்குத் துணைவராக இருக்கும் வரை என்னைப் பற்றி ஏன் கவலைப்படுகின்றீர்கள் என்றாள். பின்பு, தந்தையை நோக்கி, என் அன்னையொடும் நீங்கள் உங்கள் இருப்பிடம் செல்லுங்கள் என்று விடை கொடுத்தனுப்பினாள்.

பின்னர், உமையம்மை இமயமலையைவிட்டு அகன்று கேதாரத்துக்குப் போய் அங்குள்ள மந்தாகினி நதியில் நீராடிக் கேதாரநாதரைப் பூசித்தாள். அங்கு, திருமால், நான்முகன் முதலான தேவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினாள். பிறகு, கேதாரத்திலிருந்து புறப்பட்டு வாரணாசி நகருக்குக் கீழ்ப்பக்கத்திலேயுள்ள ஒரு பூம்பொழிலில் விமானத்தை இறக்கி இறங்கினாள். அங்கு, உடன் வந்த கன்னியர்களைக் கங்கையில் நீராடச் சொல்லித் தானும் நீராடினாள். நியமமுடன் திருநீறுபூசி, உருத்திராக்க மணி, மாலைகள் நிரம்ப அணிந்து, ஐந்தெழுத்தோதி, அந்த வனத்திலே அன்புடன் காமதேனுவை நினைத்தாள். உடனே காமதேனு வந்து தோன்றி உமையம்மையைப் பணிந்து நின்றது.

காமதேனுவைப் பார்த்த உமையம்மை, உனது உருவத்தை எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டாள். உடன் காமதேனுவும் அதற்கு இணங்கி, உமையம்மையினுடைய எழிலுருவிலே பசு உருவாகி நிற்கவும், அங்கிருந்த அடியார் குழாம் அனைவரும் அரகர என்று துதித்துப் போற்றினர். அப்போது நான்கு மறைகளும் ஒலிப்ப, கொம்பு, கிம்புரி போன்ற பற்பல இசைக் கருவிகளெல்லாம் முழங்க, இருநிதியம், கற்பகம், சிந்தாமணி இவை எழிலுடன் இலங்க, உமையம்மை மிகுந்த பரவசத்துடன் நோக்கி மகிழ்ந்தாள்.

அப்போது காசி விசுவேசர் திருவுள்ளம் அறிந்து, அகிலம் ஈன்ற, பசுவினுருவமைந்த விசாலாட்சியுடன் விடையின் மீதேறி, பூதகண நாதர்களும், தேவர்களும், முனிவர்களும், மெய்யடியார்களும் புடைசூழ வந்திருந்து விரும்பிக் காட்சியளித்தார்.

செஞ்சடையும், கருத்த மிடறும், மதிமுகமும், குழையணிந்த செவியும், மார்பில் முப்புரி நூலும், அருள் வழங்கு கையும், மான் மழுபிடித்த கைகளும், முக்கண்ணும், அரவணியும், புலியுடையும், பேரெழில் மிக்க மெய்யும், மலர்ச் சேவடியும் எனப் பேரின்பக் காட்சி கொடுத்து எதிரே நிற்கும் சிவபெருமானின் திருக்கோலத்தைக் கண்டுகளித்தாள் உமையம்மை.

பூவிலுள்ள வாசம் அந்தப் பூவை விடாது இருந்து எங்கும் மணப்பது போல, மாதேவனொடும் என்றும் பிரியாமலிருந்து விளையாடல் செய்யும் தேவியான கோவுருவ நாயகி அன்புடன் நோக்கிக் களித்து, தன் மடியில் பால் சுரந்து தாரையாய் ஒழுகப் போற்றித் துதித்தாள். அடியார் குழாங்கள் அரகர என்று பணிந்தேத்த, தேவர்கள் மலர்மாரி பெய்தனர். இறைவனும் தேவிக்கு அருள்புரிந்து மகிழ்ந்து விடையேறி காசி சென்றடைந்தார்.

சிவபெருமானின் திருவருள் பெற்ற உமையம்மை கபிலை அம்மனாக, 'கபிலை தாரை' என்ற பெயருடன் இருந்து, அன்றிரவு முடிந்தவுடன் விடியற்காலையில் மணிகர்ணிகையிலே நீராடி இறைவனைப் பூசித்து வணங்கினாள். பின்பு சில நாள்கள் அக்காசியிலேயே தங்கினாள். பின்னர் தேவ மகளிராகிய பசுக்கூட்டங்களுடன் எல்லாத் தலங்களிலும் சஞ்சரித்து வந்தாள்.

தேவி காசியில் பசு உருவம் பெற்ற இந்த வரலாற்றைத் தவுமிய முனிவர் சொல்லக் கேட்ட மிதிலேசன், தேவமகளிர் பசு உருவம் பெற்ற காரணத்தைக் கூறுமாறு வேண்டினான். முனிவரும் அதனைக் கூறத் தொடங்கினார்.

பிரளய காலத்திலும் ஒவ்வொரு கற்பம் தொடங்கும் பொழுதும் உயிர்களைக் காத்தருள்வதற்காக உமையம்மை பற்பல உருவங்களை எடுக்கின்றாள்.

இமயமலையிலே ஒரு காலத்தில் ஆயிரம் கதிரவன் உதித்தாற் போன்ற ஒளியையுடைய உருவத்தையும் பன்னிரண்டு வயதுடைய வாலிபப் பருவத்தையும் உடையவளாக விளங்கினாள் உமையம்மை. அப்பொழுது, சம்பன், அசும்பன் என்னும்

இரண்டு அசுரர்கள் செய்த துன்பங்களுக்கு ஆற்றாத தேவர்கள் எல்லாரும் தம் மனைவியருடன் கயிலையை அடைந்தனர். அவர்கள் தம் மனைவியரைப் பார்த்து, நீங்கள் யாவரும் தேவியின் திருவடிகளைத் தொழுது நம்முடைய கொடிய பகைவர்களை அழிக்கும்படியாக வேண்டுக என்று கூறி அனுப்பினர். அவ்வாறே அவர்களும் அம்பிகையிடம் சென்றனர். அப்பொழுது அம்பிகை ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்க அனைவரும் தொழுது வணங்கி மகிழ்ந்தனர்.

அரம்பையர்களுடைய துயரம் யாது என வினவிய உமையம்மைக்கு அவர்கள் தம் துயரை எடுத்துரைத்தனர். எங்களுடைய மங்கல நாண்கள் துன்பம் அடையும்படியாக சும்பன், அசும்பன் என்னும் இரண்டு அசுரர்கள் தோன்றி யுள்ளனர். அவர்கள் எங்களுடன் சண்டை செய்து துரத்த, தேவர்களுடன் நாங்கள் இங்கே ஓடி வந்தோம் என அரம்பையர் கூறினர். இதைக் கேட்ட உமையம்மை, அவ்வசுரர்களைக் கொன்று உங்களையெல்லாம் காப்பாற்றுவோம் என்று அபயம் அளித்தாள். அப்பொழுது அங்கு வந்த விநாயகப்பெருமானை மகிழ்வுடன் எடுத்தணைத்த உமையம்மை தன் மகனை உச்சிமோந்து தனது மடியில் அமர்த்திக் கொண்டாள்.

அரம்பையர்கள் வார்த்தை பேசாது உமையம்மையை நோக்கி இருத்தலைப் பார்த்தும், அப்பெண்கள் தன்னை வணங்காமையை எண்ணியும் கோபமுற்றார் விநாயகப் பெருமான். பின்பு தன் தாயிடம், அன்னையே! அறிவில்லாத பசுக்களோடு நீ மிகவும் அன்புடன் பேசுவதற்கு என்ன காரணம்? கூறுவீராக என்று கேட்டார். உமையம்மை தன் அன்பு மகனை நோக்கி, விநாயகனே! தேவர்களை அச்சுறுத்தும் சும்பன், அசும்பன் ஆகிய அசுரர்களை இப்பொழுதே நீ சென்று அழித்து வருக! என்று கட்டளையிட்டாள். விநாயகரும் அவ்வாறே சென்றார்.

தேவமகளிர் இன்னும் வேண்டுவது என்ன? எனக் கேட்ட உமையம்மையிடம் அவர்கள் மேலும் முறையிட்டனர். அவர்கள் எப்பொழுதும் அம்மையோடிருந்து பணிபுரிய அருளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு உமையம்மை, என்னுடைய மைந்தனான விநாயகப்பெருமான் உங்களைப் பசுக்களென்று கூறியதை உணர்ந்தோம். அது தப்பாது, பின்பு நீங்கள் எல்லோரும் என்னுடன் பசு உருவாக வருவீர்கள் என்று கூறினாள். அதன்படியே இப்பொழுது

தேவமகளிர் பசு உருவத்துடன் அம்பிகைக்குப் பணிபுரிய வந்துள்ளனர் என்று தவமியர் மிதிலேசனுக்குக் கூறினார். இதைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து, உமையம்மை காசியை விட்டுப் போனதைப் பற்றிக் கூறவேண்ட முனிவரும் சொல்லத் தொடங்கினார்.

பன்னிரண்டாவது
அம்பிகை பூப்பிரதட்சணம் வந்த அத்தியாயம்

420. ஆதிகயி லாசவரை மீதுதன
தேவல்புரி அன்புடைய தாதியர்கள்சூழ்ந்து
ஏதமறு நற்பணிகள் செய்துவர
நான்மறை இசைந்துபுகழ் பாடிவரநீள்
சோதிவெயில் மீதுதவ மூதவகை
கொண்டல்விதா னஞ்செய்து தொடர்ந்துவரநன்
நாதவிசை ஊதுகுழல் வீணைதிரு
வாணிபுடை நண்ணிமுன் னியற்றியமர. 1

421. ஓங்கெழில் அரம்பையொடு மேனகை
திலோத்தமை உருப்பசி நடம்புரியநற்
தேங்கமமூம் வாசமொடு தென்றல்வர
வானவர்கள் செய்யமலர் மாரிபொழியத்
தாங்குகுடை குஞ்சமொடு வெண்கவரி
வீசிமிகு தாபதமின் னார்கள்பணியப்
பாங்குறு சராசர மெலாமுய
இரங்கியிரு பார்வையருள் செய்துவருவாள். 2

422. பூமிவல மாகவர வேகருணை
யால்நினைவு பூண்டுகபி லேசுரிமிகு
நேமமொடு மானமிசை கோடொருகை
கொண்டமகன் நேசமொடு முன்பமரநீள்
சேமமுறு சங்குசினத் தாரைமுன
மூதுமொலி சேணுற வனங்கள்பதிகள்
காமர்மிகு மால்வரைகண் மாநதிக
ளெங்குமிரு கால்மலர் பொருந்தவருவாள். 3

423. நைமிசவ னம்வெதிரி காவனம்
நலக்குவனம் நன்மைமிகு தாருகவனம்
பயன்மருவு சந்தவன மாலவனம்
வில்வவனம் பாதிரிவ னம்சமிவனம்

வியன்மருவு தில்லைவனம் காஞ்சிவனம்
கூதவனம் வேணுவனம் தாலவனம்நீள்
உயர்வுறு கபித்தவனம் நாகவனம்
பூகவனம் ஓங்கிய கடம்பவனமும். 4

424. பனசவனம் மகிழவனம் கோங்கவனம்
சாகவனம் பாங்குபெறு புன்குவனமும்
கனமிகு குருந்தவனம் பாலைவனம்
கொன்றைவனம் கதலிவனம் சண்பகவனம்
இனமருவு சாயைவனம் தர்ப்பவனம்
புட்பவனம் ஏர்மிகுங் களாவின்வனமும்
வனமருவு கஞ்சவனம் முல்லைவனம்
அலரிவனம் மருதவனம் மற்றவனமும். 5

425. சத்தபுரி கயிடப முருத்திர
பதாக்கியம் தனஞ்சயநீள் கௌரவமிகுஞ்
சித்தமகி ழாக்கினேயம் வீரபத்
திரமுரந் திகழ்காழி காநகரநற்
சுத்தவா மனேச்சுரம் பிராமியங்
களித்திரேச் சுராம்பஞ்ச வடிவாருணம்
பத்திதரு கிருட்டினாத் திரிவாலு
காத்திரி பராவுபுட் கராத்திரியொடும். 6

426. சோமகாத் திரிகால காலம்வீ
மேச்சுரம் தொகுமதன மதுரநகரம்
காமார்த்த மிக்கர் மேச்சுரம்நீ
பாத்திரி நற்காக புரம்லோகேச்சுரம்
தேமார்த்த கௌசலா புரம்பன்ன
கேச்சுரம் தீர்த்தபுரம் வசிட்டேச்சுரம்
தாமமிகு மாயா வயோத்திகௌ
தமபுரம் தகுபச்சி காநகரமும். 7

427. பருப்பதம்நீ லக்கிரிகா ளத்திமிகும்
அருணகிரி பரவுமுது குன்றுகழுக்குன்று
இருக்குறுமி ரத்தினகிரி ஈங்கோய்மலை
சிரகிரியி லங்குகொடு முடிசிவகிரி
மருக்கமழ் பரங்கிரிபி ரான்மலை
கொடுங்குன்று வாழ்கந்த மாதனமுடன்
திருப்பொதிய மிக்கதிரி கூடவரை
சதுரகிரி சிவசயில முதலானவும். 8

428. கங்கையொளிர் பிரயாகை யமுனைசரசு
வதியினிய கண்டகிசி ரோணநதிநற்
துங்கபத் திரிஅரித் துவாரமிகு
சரயுநதி சுகமருவு நருமதையருட்
பொங்குகோ தாவரிபொ ருந்துகிருட்
டிணவேணி பொன்முகரி பாலிநதிமெய்
நன்குமிகு பெண்ணைநதி கெடிலநதி
மணிமுத்தா நதியருள்செய் பொன்னிநதியும். 9

429. வேகவதி குண்டநதி சிந்துநதி
சித்திரநதி மிக்ககோட் டாறுகுமரி
போகமுத வுந்தனுக் கோடிபொற்
றாமைரைப் பொய்கைவளர் கமலாலயம்
வாகுமக மாடுகுளம் நீடுசிவ
கங்கைமுதல் மன்னுசிவ தீர்த்தமுழுதும்
பாகமுறு வேயிவையி லாடிவிளை
யாடியே பராபரைபொற் பாதமருவ. 10

430. சஞ்சரித்தே யினியபூப் பிரதக்கணஞ்
செய்துதர் மார்த்த காமமோட்சம்
எஞ்சலில் லாமல்மிகு சகலவுயி
ரும்பெறவே யீந்தருள் புரிந்துவந்து
மிஞ்சுபுகழ் பெறுஞ்சைய பருவதச்
சாய்கையின் றுமிகுந்தே தாக்கினிச்சேத்திரத்
தஞ்சமுறு பினாகிதீர்த் தக்கரையில்
வாசமா யங்கெழுந் தருளியம்மன். 11

431. பலாசொடுபுன் னாகம்வளர் சண்பகம்
கோங்குமிகு பாரிசா தம்கூவிளம்
விலாசமுறு கொன்றைமந் தாரைகர
வீரமல் லிகைதளவ மிகுதழைவுகொண்டு
இலாபமுற வேபுட்ப வனமாகி
நிழல்செய்ய விலகுமொரு கோவுருவமாய்
உலாவிமகிழ்ந் தங்கிருந் தனள்கயிலை
யிற்சிவனங் குற்றிடுஞ் செய்திபுகல்வாம் 12

பன்னிரண்டாவது அம்பிகை பூப்பிரதட்சணம் வந்த
அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 431

திருச்சிற்றம்பலம்

12. அம்பிகை பூப்பிரதட்சணம் வந்த அத்தியாயம் (சுருக்கம்)

ஆதி கயிலாய மலை மீதில் அன்புடைய தாதியர்கள் சூழ்ந்து பணி புரியவும், நான்மறைகள் ஒலிக்கவும், கீதங்கள் இசைக்கவும், வெயில் படாதவாறு மேகங்கள் மறைக்கவும், குழல், வீணை போன்ற இசைக்கருவிகள் முழங்கவும், கலைமகள் முன்னின்று வரவும், அரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலிய நடனமாதர்கள் சூழவும், நறுமணங்கமழும் தென்றல் வரவும், விண்ணவர்கள் மலர்மாரி பொழியவும், குடை வெண் சாமரம் முதலியவற்றைப் பணியாளர்கள் பிடிக்கவும், உலகினுள்ளோரெல்லாம் உய்திபெறும் பொருட்டு, உமையம்மையான கபிலேசுவரி பூமி வலமாக வந்தாள். அவள் முன்னே, விநாயகப் பெருமான் செல்லவும், சங்கு, சின்னம், தாரை முதலான இசைக் கருவிகள் ஒலிக்கவும், வனங்கள், பதிகள், மலைகள், நதிகள் இவைகளெங்கும் தம்முடைய் திருவடிகள் பொருந்தும்படியாகவும் தேவி வந்தாள்.

நைமிச வனம், பதரிகாவனம், நலக்குவனம், தாருகவனம், சந்தவனம், ஆலவனம், வில்வவனம், பாதிரிவனம், சமிவனம், தில்லைவனம், காஞ்சிவனம், சூதவனம், வேணுவனம், தாலவனம், கபித்தவனம், நாகவனம், பூகவனம், கடம்பவனம், பனகவனம், மகிழவனம், கோங்கவனம், சாகவனம், புன்குவனம், குருத்த வனம், பாலைவனம், கொன்றைவனம், கதலிவனம், சண்டகவனம், சாயைவனம், தர்ப்பவனம், புட்பவனம், களாவனம், கஞ்சவனம், முல்லைவனம், அலரிவனம், மருதவனம் மற்றுமுள்ள வனங்களும்;

சத்தபுரி, கயிடபம், உருத்திரபதாக்கியம், தனஞ்சயம், ஆக்கினேயம், வீரபத்திரம், காழிகாநகரம், வாமனேச்சுரம், பிராமியம், களித்திரேச்சுவரம், பஞ்சவடி, வாருணம், கிருட்டினாத்திரி, வாலுகாத்திரி, புட்கராத்திரி, சோமகாத்திரி, காலகாலம், வீமேச்சுரம், மதனமதுரநகரம், கர்மேச்சுரம், நீபாத்திரி, காகபுரம், லோகேச்சுரம், கௌசலாபுரம், பன்னகேச்சுரம், தீர்த்தபுரம், வசிட்டேச்சுரம், மாயாவயோத்தி, கௌதமபுரம், பச்சிகா நகரமும்;

பருப்பதம், நீலக்கிரி, காளத்தி, அருணகிரி, முதுகுன்று, கழுக்குன்று, இரத்தினகிரி, ஈங்கோய்மலை, சிரகிரி, கொடுமுடி, சிவகிரி, பரங்கிரி, பிரான்மலை, கந்தமாதனம், பொதியமலை, திரிகூடமலை, சதுரகிரி, சிவசயிலம் முதலானவும்;

கங்கை, பிரயாகை, யமுனை, சரசுவதி, கண்டகி, சிரோணநதி, துங்கபத்திரி, அரித்துவாரம், சரயுநதி, நருமதை, கோதாவரி, கிருட்டிணவேணி, பொன்முகரி, பாலிநதி, பெண்ணைநதி, கெடிலநதி, மணிமுத்தாநதி, பொன்னிநதி, வேகநதி, குண்டநதி, சிந்துநதி, சித்திரநதி, கோட்டாறு, குமரி, தனுக்கோடி, கமலாலயம், மகாமகக்குளம், சிவகங்கை முதலான சிவ தீர்த்தங்கள் முழுவதும் தன் பாதங்கள் மருவ உமையம்மை பூமிவலம் வந்தாள்.

இவ்வுலகிலுள்ள உயிர்களெல்லாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந்நான்கினையும் பெறும் பொருட்டு, சையபருப்பதத்தின் பக்கத்தில் உள்ள 'இரேதாக்கினி' சேத்திரத்திலுள்ள பினாகி தீர்த்தக்கரையில் கயிலையம்மனாக உமையம்மை வந்து தங்கியருளினாள்.

பலாசு, புன்னாகம், சண்பகம், கோங்கு, பாரிசாதம், கூவிளம், கொன்றை, மந்தாரை, கரவீரம், மல்லிகை, வில்வதளம் போன்றவை தழைத்து, பூஞ்சோலையாகி நிழல் செய்ய, அங்கே உமையம்மை பசு உருவத்துடன் உலாவி மகிழ்ந்திருந்தாள். அப்பொழுது கயிலையில் சிவபெருமான் இருந்த நிலையை இனிக் காண்போம்.

பதின்மூன்றாவது
கயிலையில் சிவன் அம்பிகையை நினைந்து மோகித்திருந்த அத்தியாயம்

432. அனநடைத் துவர்வாய் மயிலியற் கௌரி
அருளொடுங் கயிலைவிட் டகன்றே
இனியநற் புகழ்சேர் தென்திசை நோக்கி
இணக்கம்விட் டேகுநாள் முதலாத்
துனியுறும் விரக தாபமேற் கொளலாற்
துணைபிரி யன்றிலாண் போலத்
தனிமுதல் அமலன் தனித்திருந் தமலை
தன்னையே நினைந்துரு குவனால். 1

433. பசியகோ மளமே! சுந்தர மயிலே!
பாகம்விட் டகன்றிடாக் குயிலே!
வசிகர முதலே! எமதுயிர்த் துணையே!
வாழ்வெமக் காகிய மருந்தே!

432. கௌரி - அம்பிகை. அமலன் - சிவபெருமான். அமலை - உமையம்மை.

கசிவுகொண் டமுதங் கான்றிடு மதியே!
கயிலையி லிருந்தொளிர் விளக்கே!
உசிதமெய் யுமையே! எம்மைவிட்
டகன்றெங் குற்றனை யோ?என வுரைக்கும். 2

434. கருமைபெற் றிருண்டு நெய்த்துவார்ந் தொழுகிக்
கடைகுழன் றியல்மணம் பெருகி
வரியளி ஞிமிறும் விருந்துண வருந்தேன்
மழைபிலிற் றிடுமலர் புனைந்து
பெருகுநீர் கொழிக்கு மறலினைப் பழித்துப்
பெயல்கரு வுறுமுகிற் குலத்தை
வெருவுற முனிந்த வுன்குழற் பாரம்
விரும்பிநான் காண்பதெந் நாளோ? 3

435. சண்பக மலரின் மறிந்துவள் ளையிற்போய்த்
தாவிஎன் மார்பிடைக் குதித்துப்
பண்புறு குவளை யேர்குடி யிருந்து
பரந்தரி சிதறிமை யெழுதி
உண்பதற் கெம்பால் வந்தவெவ் விடத்தை
ஒத்திடும் உன்கயல் விழியில்
நண்புபெற் றிருகண் குளிர்ந்திட நாடி
நான்மகிழ்ந் திருக்கும்நா ளென்றோ? 4

436. கதிர்க்குநல் மதிக்கு மலர்ந்திடு மொருபூங்
கமலமொத் தெமதுகண் கதிர்க்கு
மதிக்குமொத் தலரும் வதனதா மரையும்
வனைந்திடு திலகநல் நுதலும்
பதித்திடு குமிழ்நா சியும்புரு வமும்செம்
பவளவாய் மூரலும் குழையும்
அதிற்கிடந் திலங்குங் குண்டலத் தழகும்
அகமகிழ்ந் தென்றுகாண் குவனோ? 5

437. உண்டவெவ் விடத்தை அமுதமாய் எமக்கன்று
உதவிய மங்கல நாண்சேர்
கண்டமு மலிந்த தரளமா லிகையும்
காந்தளங் கைவளைக் கவினும்
தெண்டிரை அமுத முறுமர கதச்செப்
பெனத்திரண் டிலகுபூண் முலையும்
வண்டமர் மாலை துயல்வரும் வேய்த்தோள்
வண்ணமுங் காண்பதெந் நாளோ? 6

438. உலகெலாஞ் சுமந்த வடத்தளிர் வயிறும்
உந்தியு முரோமநீ ளொழுங்கும்
அலர்கதிர் மணிமே கலைபுனை யரவம்
அமைந்தபட் டுடையுஞ்சிற் றிடையும்
நலமலி கதலித் தண்டன குறங்கும்
நளிர்முழந் தாளுநற் கணைக்காற்
சலவரா லிகழு மெழிலுமுன் காணத்
தகுந்தினம் என்றுதான் வருமோ? 7

439. அலத்தகம் புனைந்து மணிச்சிலம் பேந்தி
அம்மியின் மீதுநல் லூடற்
தலத்தினும் எமது கைப்பணிக் கிரங்கும்
தகைமைபெற் றம்புய மலரைச்
சலத்துறத் துரத்து மிருபதம் அமரர்
சிரமுடி மணிப்பர லொதுக்கும்
நலத்தகு நெறிமேல் அனமென நடந்து
நம்மிடத் தென்றுவந் துறுமோ? 8

440. எனவுரைத் திரங்கி நெட்டுயிர்ப் பெறியும்
என்செய்கோம் எனும்உமை வடிவை
முனம்வெளி யுருவிற் றோன்றிடக் கண்டு
மோகமாய்ப் புல்குமெல் லணைமேல்
அனமெனப் பொருந்தும் வாமபா கத்தை
அடிக்கடி நோக்குஞ்சித் திரத்தில்
வனமுறத் தான்முன் னெழுதும்ஓ வியத்தை
வாஉமை யேயென அழைக்கும்! 9

441. சந்தனக் குழம்பும் வெதும்புமோ வென்னுந்
தண்மலர்ப் பாயலிற் படுக்குஞ்
சிந்துர நுதலாள் தனைநினைந் தெழுந்து
சிரிக்குமித் துயரெலாந் தந்த
துந்துபொற் சூதே யெனமனத் தெண்ணும்
ஊசலைக் கழங்கைஅம் மனையைச்
சுந்தரக் கிளியைப் பூவையைப் பார்த்துத்
தோகைஎங் கேயெனக் கேட்கும். 10

வேறு

442. மந்த மாருத மலயத் தென்றல்மேற்
சிந்தை போக்கிநீ சீறும் வெம்புலிப்
பெந்த மாகினா யாம்பி டித்தடும்
அந்த வெம்புலி யல்லை யோவெனும்! 11

443. இந்து நீசெய்த குறையெண் ணாமல்யாம்
முந்த வேதிரு முடியில் வைத்தனம்
அந்த நன்றிவிட் டனல்சொ ரிந்திட
வந்த தென்கொலோ சொல்லு வாயெனும்! 12

444. வரிவில் வாங்கியே மலரம் பெய்திடு
மருவ மாரன்மெய் யழிய முன்போல்
எரிநு தற்கன லேவுவோ மெனில்
உருவ மில்லையே யடவொண் ணாதெனும்! 13

445. நங்கை நம்மிரு கண்ணை மூடுநாள்
எங்கு மாகிய இருளி தல்லநீள்
வெங்க னற்கணை விழித்து நோக்கியுந்
தங்கு திவ்விருட் தன்மை யாதெனும்! 14

446. விடத்தை யீன்றுநம் மீத னுப்பிய
கடற்குக் கண்குயி லின்றி யேகத
றிடற்குக் காரணம் விடமந் நாளெமை
அடர்த்தல் கண்டிடா தலறு தோவெனும்! 15

447. போது தண்பனி நீர்பு ணர்த்தியே
நோத லாற்றுசூந் தரரை நோக்கிமுன்
தூது சென்றுன்மாற் றுயர நீக்குமெம்
ஏதந் தீர்ப்பதிங் கிதுகொண் டோவெனும்! 16

448. இன்ன வாறரு ளீச னாருமை
தன்னை நோக்கியே தனித்து றுந்துயர்
உன்ன வொண்ணுமோ உலக மெங்கணும்
மன்னு வோன்செயல் மதிக்கற் பாலதோ! 17

449. அண்ட முற்றிடுந் தொழில னைத்தையுங்
கண்டுங் கண்டிடாத் தன்மை காட்டியே
ஒண்டொ டிக்கையா ளுறைந்த கோயிலுள்
வண்டு லாஞ்சடை வள்ளல் வைகினர்ன். 18

450. கடவு ளிப்படிக் கயிலை வெற்பினில்
இடமி குத்தகோ யிலிலி ருக்குநாட்
திடமி குத்தொரு சோமு கன்செறுத்து
அடர விட்புலத் தமரர் யாவரும். 19

444. மாரன் - மன்மதன்.

451. வெள்ளி வெற்பிடை மேவி நந்திமுன்
உள்ள வாறுரைத் தவரொ ளித்ததும்
துள்ளு கட்கயற் சுரம டந்தையர்
கொள்ளும் ஆவுருக் குணமுஞ் சொல்லுவாம். 20

பதின்மூன்றாவது கயிலையில் சிவன் அம்பிகையை நினைத்து மோகித்திருந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 451

திருச்சிற்றம்பலம்

13. கயிலையில் சிவன் அம்பிகையை நினைந்து மோகித்திருந்த அத்தியாயம் (சுருக்கம்)

அம்பிகை கயிலையை விட்டு நீங்கி, தென்திசை நோக்கி வந்தது முதல், இணைபிரியா அன்றிற்பறவை இரண்டினுள் ஆண் பறவை போன்று, தனிமுதல்வனான அமலன் தனித் திருந்து, விரகதாபத்தால் அமலையை நினைந்து உருகினான்.

பசிய கோமளமே, அழகு மயிலே, பாகம்பிரியாக் குயிலே, உயிர்த்துணையே, அமுத வாழ்வே, கயிலையொளி விளக்கே, உமையே எம்மைவிட்டு எங்குச் சென்றாயோ என வினவுகிறார் இறைவன்.

கருமை நிறம் பெற்று, இயற்கை மணமுடன், மலர் பல புனைந்து, கருமுகில் போன்று அழகிய தோற்றங்கொண்ட உம்முடைய குழற் பாரத்தை நான் காணும் நாள் எந்நாளோ? மையெழுதிய உம் கயற்கண் அழகில் நான் திளைத்திருக்கும் நாளும் இனி வருமோ? உம்முடைய அழகிய வதனமும், திலக நெற்றியும், குமிழ் நாசியும், புருவமும், செம்பவள வாயும், சிரிப்பழகும், குழையிலங்கு குண்டலத்தழகும் கண்டு நான் அகமகிழும் நாள் எந்நாளோ?

அன்று உண்ட ஆலகால விடத்தை அமுதமாய் எனக்களித்துதவிய மங்கலநாண் தவழும் கழுத்தும், காந்தள் போன்ற கைகளும், மரகதச் செப்பெனத் திரண்டிலகு பூண் முலையும், மாலை சூடிய மூங்கில் போன்ற தோள்களும், வண்ணமும் காணும் நாள் எந்நாளோ?

உலகெலாம் சுமந்த உம்முடைய தளிர் போன்ற வயிறும், உந்தியும், உரோம நீளொழுங்கும், மணிமேகலையணியும்,

பட்டுடையும், சிற்றிடையும் வாழைத்தண்டையொத்த தொடையும், வராலினையொத்த கணைக்காலும் என இவ்வழகு களை மீண்டும் நான் காணும் நாள் என்றுதான் வருமோ?

அழகிய சிலம்பணிந்து, அன்னம்போல் நடை பயிலும் உம் கால்கள் என்னிடம் என்று வருமோ? என உமையம்மையின் திருவுருவ அழகையெல்லாம் நினைந்து நினைந்து உருகினார் இறைவன்.

அம்மையைப் பிரியக் காரணமானது சூதே என்பதையும் நினைந்து, பலவாறு வருந்திய இறைவன் கோயிலினுள் இருந்தார். இவ்வாறு இருக்கும் நாளில், சோமுகன் என்னும் அசுரன் தேவருலகில் துன்பம் செய்ய, அமரர்கள் யாவரும் கயிலையை அடைந்து நந்தியெம்பெருமானிடம் கூறி ஒளித்துக் கொண்டமையையும், தேவ மங்கையர் யாவரும் பசு உருவம் அடைந்தது பற்றியும் இனிக் காணலாம்.

பதினான்காவது

சோமுகாசுரன் தேவருக்கு இடர்புரிந்த அத்தியாயம்

452. தேவிதென் திசையிற் சாபச் செயல்கொண்டு செல்லும் அந்நாள்
மேவுறு துயரங் கொண்டு விண்ணிடைச் சென்ற உம்பர்
யாவருந் தத்தம் எல்லை எய்தியங் கிருக்கும் நாளிற்
பூவுல கத்திற் சோமு காசுர னெனும்போர் வீரன். 1

453. எண்டிசை கடக்குந் தோளான் அண்டத்தை யிடிக்குந் திண்கை
கொண்டவன் கடைவாய் வைத்த கூன்பிறை எயிற்றன் ஓர்பால்
விண்டிரண் டாய்ப்பி ளந்த வெற்பெனத் திறக்கும் வாயன்
தெண்டிரைக் கடலைக் காலால் எற்றிமீன் தின்னு முணன். 2

454. எரிநிர யக்குண் டொத்தங்கு இலங்கியுட் சுழலுங் கண்ணன்
தெரியில்வெற் பெட்டு மொன்றாய்த் திரட்டிய போலு மெய்யன்
பெருகிய விடியு மஞ்சப் பிதற்றியே பிளிறுஞ் சொல்லான்
பரிவுசற் றில்லான் பாவப் படிவம்போற் றோன்று கின்றான். 3

455. தேசிகப் புகர்பாற் சென்று தெரிசித்துத் தொழுதின் றெற்குப்
பேசுசொல் லுபதே சங்கள் அருளெனப் பிரியத் தோடு
மாசறு பாலைப் பாம்பின் வாய்க்குண வருத்து வான்போற்
காசறு மனத்தான் தன்னை நோக்கியே கழற லுற்றான். 4

456. செய்திடுங் கரும மேகர்த் தாவெனத் தெளிந்து கொண்டே
எய்தியோ ரிடத்தி ருந்து தவமிக வியற்றி னாயேல்
மைதிகழ் மேனி யாய்நீ வரம்பல பெறவை யத்தால்
மெய்திகழ் செல்வ மல்க வாழென விடையும் ஈந்தான். 5

457. தம்பியர் ஐவர் ஏவல் சந்ததஞ் செய்து காப்பச்
செம்பொன்மே ருவிலோர் ஞாங்கர் சென்றிருந் தயனை நோக்கிக்
கம்பித மிலாம லுண்ணல் உறங்குதல் இன்றிக் கற்பம்
தம்பமொத் ததிக்கு ரூர தவத்தினைப் புரிந்தான் மன்னோ. 6

458. சீலமொன் றில்லா னேனும் செய்திடும் வேலைக் கேற்ற
கூலிஈந் திடுதல் ஈச னாக்கினைக் குறிப்பென் றெண்ணி
வாலிய வெகின மேறி வந்தயன் மகிழ்ந்து நோக்கி
ஏலுமா தவத்தாய் வேண்டும் வரமென்கொல் ஈய்க வென்றான். 7

459. அந்தரம் சுவர்க்கம் பூமிக் கரசுநா னாக வேண்டும்
தந்திரம் பலவும் வேண்டும் சதுரங்க பலமும் வேண்டும்
வெந்திறற் படைகள் சால வேண்டும்ஆ யுளுமிக் காகத்
தொந்தமுற் றிடவும் வேண்டும் எனத்தொழு துரைக்கக் கேட்டு.8

460. எண்ணிநீ யுரைத்த தெல்லாம் எய்துமென் றியம்பிக் கஞ்ச
விண்ணவ னேகச் சோமு காசுரன் மிகுந்த வோகை
நண்ணிவெள் ளியின்பால் வந்து நமக்கரித் தடிடே கந்தான்
பண்ணென முடியுஞ் சூட்டிப் பற்பல வாசி ஈந்தான். 9

461. சுக்கிர னருள்கொண் டேதன் தொல்நகர் தன்னில் மேவி
உக்கிர மிகுந்த சுற்றக் கிளையெலாம் உவகை பொங்க
மிக்கமந் திரிக ளோடும் விசாரமிட் டெழுக வென்றான்
அக்கிர மங்கள் செய்யும் அசுரவெள் ளத்தை யெல்லாம். 10

462. எழுந்தன தானை வெள்ளம் எழுகட லெய்து மாபோல்
எழுந்தன குதிரைப் பந்தி இருந்திரை தாவு மாபோல்
எழுந்தன கரிகள் மேகம் எங்கணும் பொருந்து மாபோல்
எழுந்தன கொடிஞ்சித் திண்தேர் எண்ணிலா மலைகள் போல. 11

---

457. ஞாங்கர் - பக்கம். கம்பிதமிலாமல் - சலிப்பில்லாமல். தம்பம் - தூண்.

458. சீலம் - ஒழுக்கம்.

459. அந்தரம் - ஆகாயம், சுவர்க்கம் - வானுலகம், சதுரங்கம் - நால்வகைப் படை. ஓகை - உவமை, மகிழ்ச்சி. வெள்ளி - குருசுக்கிராச்சாரியர்.

463. கொடிகள்ஆ காய மூடக் கோட்புலி யன்ன மள்ளர்
இடிமுழக் கதிர யானைப் பிளிறொலி எங்கும் விம்மக்
கடுவிசைப் பரிமா விள்ளுங் கலிப்பின்மண் ணதிரப் பேரி
துடிமணி முரசு சங்கந் தூரிய முழவ மார்ப்ப. 12

464. சிலைநெடு வாள்வேல் தண்டு கப்பணந் திகிரிகுந்தம்
இலையயில் சூலம்பாசம் மழுவெழு வீட்டி கட்கம்
மலைபொரு முசலம் தோட்டி கற்கவண் மற்றுமுள்ள
பலமிகு படைக ளேந்திக் குதித்தெழுந் தசுரப் பித்தர். 13

465. ஆடுவர் புயங்கள் தட்டி அங்கைகள் கொட்டி ஆர்ப்பர்
சூடுவர் தும்பை வட்டம் சுற்றுவர் பலகை வீசிப்
பாடுவர் பரிக ளேறிப் பாய்ந்துநாற் கதியுஞ் செய்வித்து
ஓடுவர் பதாதிச் செல்வக் களிப்பையார் உரைப்ப ரம்மா. 14

466. இதமுற நான்கு சேனை இவ்விதம் நடந்து சூழக்
கதமிகு தம்பி மார்பின் கடகரிப் பிடரி னெய்த
மதிரவி யங்கி மூன்றால் வகுத்தபோல் மணிகள் மொய்த்த
முதிரொளித் தேரின் மீதோர் முடங்குளை போல வேறி. 15

467. திக்கெலாம் வெல்வா னாக இந்திரன் திசையை நோக்கிப்
புக்கபோ துயர்ந்தெ ழுந்த பூழிபோய் விண்ணா டெங்கும்
மிக்கமண் ணாடே யாக்க விண்ணவ ரறிந்த டங்காத்
துக்கம துற்றுச் சார்ந்தார் இந்திரன் சபையைச் சுற்றி. 16

468. துரத்துசோ முகன்போர் வெள்ளம் தோன்றுமுன்
அணைகோ லாமல்
இருப்பதென் அரச வென்ன இந்திரன் எழுந்து வெள்ளைக்
கரிப்பிடர் மீதி லேறிக் கையில்வச் சிரவா ளேந்தி
இரைத்தெழு தேவ ரோடும் எதிர்த்துமுன் மறித்து நின்றான். 17

469. ஆர்த்துவந் தடரும் வன்கண் அசுரர்மேல் அமரர் யாரும்
தூர்த்தனர் பகழி மாரி தூண்டுபல் படையி னாலும்
ஈர்த்தனர் கைகால் சென்னி எங்கணுங் குருதி வெள்ளம்
போர்த்திட விகலி யொத்த போர்க்களத் தூடு தாக்கி. 18

470. வச்சிரப் படையோன் வெள்ளை வாரணக் கரத்திற் தண்டம்
மெச்சியே கொடுத்துத் தானும் மேற்கொண்டு வில்நா ணேற்றிக்
கைச்சுறுக் கதனா லெய்துங் களிறுதங் கையாற் காலால்
உச்சித மருப்பாற் கொன்றும் அசுரரை ஒறுக்குங் காலை. 19

470. வச்சிரப்படையோன் - இந்திரன்.

471. கால்கள்கண் டித்துங் கைகள் கண்டித்துந் தலைகள் சிந்தித்
தாலமீ துதிர்ந்துந் தேர்மாத் தந்தியச் சுடல்க ளற்று
மேலொடு கீழாய் வீழ்ந்து சேனைகள் வீயக் கண்டங்கு
ஆலகா லம்போற் சீறி அசுரர்கோன் அமரி னேற்றான். 20

472. வில்லில்நாண் எறிந்தான் அண்டம் வெடித்ததோ வென்று யாரும்
பல்லொடு பல்லுக் கிட்டிப் பதறிவீழ்ந் தலறப் பாணம்
ஒல்லையிற் றொடுத்து விட்டான் சரமழை யன்றி யொன்றும்
இல்லெனும் படிக்குத் தேவர் மீதினில் இரக்க மில்லான். 21

473. தானவப் படையும் வேல்வாள் சக்கர முதலா வுள்ள
ஊனிணைப் பொசிப்புண் வெவ்வாய்ப் படைக்கல மெங்கு முய்த்தார்
ஆனவிட் புலத்தோர் தாமும் அசுரர்போல் அநேகர் பட்டார்
மானமுற் றமர்செய் தார்முத் தினமிரு வகையா மன்னோ. 22

474. சோமுகன் கடல்க லங்கச் சுற்றுமந் தரம்போற் சுற்றிக்
காமர்வா னவர்க ளென்னுங் கடலினைக் கலக்க லாலே
ஏமுறப் பயந்துள் ளஞ்சி இந்திரன் முதல விண்ணோர்
தாமம ருடன்விண் விட்டுத் தனித்தெங்கு மிரியல் போனார். 23

475. மூடுதா னையராய்த் தேவர் அரம்பையர் முழுது முன்னே
ஓடினர் அங்கங் கேமுன் அமுதமுண் டதனா லுய்ந்தங்கு
ஈடழிந் தமர்க்க ளத்திற் கிடந்துளோர் களுமெ ழுந்து
பாடுறு துன்புக் காற்றா தோடினர் பக்க மெங்கும். 24

476. இந்திரன் தானும் வெள்ளைக் கரியும்வே றாயிரிந்தே
அந்திர மார்க்க மாக அயன்பதி புகுத வந்தச்
சுந்தரப் பதியைத் தேடி யோடிய சுரர்க ளெல்லாம்
வந்தன ரொன்றாய்க் கூடி மலரயன் முன்பு புக்கார். 25

477. மறம்பெரு கசுர ரென்னு மாருத வலியி னாலே
பறந்திடும் பூளை யொத்துப் பலதிக்குஞ் சென்ற பேரிற்
கறங்கெனத் தகுவ ரோடிச் சிலர்களைக் கட்டி வந்தங்கு
அறமிலான் முன்பு காட்டத் தளையிவர்க் கமையு மென்றான். 26

---

471. அசுரர்கோன் - சோமுகாசுரன்.

477. அறமிலான் - சோமுகாசுரன். தளை - சிறை.

478. திண்டிறல் அசுரன் பின்விண் ணகரெலாஞ் சென்று கொள்ளை
கொண்டனன் மாட கூடங் கோபுர மரங்கு தெற்றி
மண்டப மு தலா வுள்ள மனைகளு மிடித்தாண் டோர்மூன்று
எண்டிசைத் திருவுங் கொண்டங் கிருந்தனன் இப்பால்
விண்ணோர். 27

479. சத்திய வுலகந் தன்னிற் சதுர்முகப் பிரமன் தன்முன்
மொய்த்துநின் றழுது கண்ணீர் முகத்தினின் றோட வீழ்ந்து
பத்தியாற் றொழுது சோமு காசுரன் படுத்து துன்பம்
அத்தனை விதமுஞ் சொன்னார் அம்புயத் தவனுங்
கேட்டான். 28

480. கேட்டலுங் கிலேச முற்றுக் கிளருநெட் டுயிர்ப்பெ றிந்து
வாட்டமொ டிறைஞ்சி நிற்கும் மகபதி முகத்தை நோக்கிக்
கூட்டமாய் நிற்குந் தேவக் குழாங்களுங் கேட்பச் சொல்வான்
நாட்டமூன் றுடையோன் செய்யும் ஆக்கினை நடத்தை
ஈதாம். 29

481. தேவர்கள் முனிவர் ஏகா தசவுருத் திரர்கள் சித்தர்
மேவிய வசுக்கள் மற்றும் விண்ணுல கத்துள் ளோரும்
பூவுல கத்துள் ளோரும் சராசரப் பொருளி யாவும்
மூவரி லிருவ ரான முராரியும் யானும் நீயும். 30

482. இருவினை வயத்த ராகும் இன்பொடு துன்ப மத்தால்
வருமவை கயிலை நாதன் வாமபா கத்துச் சத்தி
ஒருவனோ டொருத்தி யொன்றென் னுரைக்குமுன்
னிலையா லொட்டித்
தருமவை துய்ப்ப தன்றிச் சற்றுநாம் போக்கப் போகா. 31

483. வினைசட மதனைக் கூட்டும் விதிசிவன் ஆணை யாகும்
எனதிடஞ் சிருட்டி தன்னை இசைத்தனன் விண்டு வின்பால்
மனமகிழ் திதியை வைத்தான் மற்றதும் அவன தாணை
தனையொரெள் ளளவுந் தப்பிற் தண்டமும் எமக்குண்
டாகும். 32

484. ஆனதாற் சோமு கன்செய் அருந்தவத் தினுக்கு மேற்ற
ஊனமில் வரங்கள் யானும் உதவிய வகையும் ஈசன்
ஈனமில் விதியே யன்றி என்விதி யொன்று மில்லை
வானவர்க் கரசே யென்று மலரவ னுரைப்பன் பின்னும். 33

478. நாட்டமூன்றுடையோன் - சிவபெருமான். ஆக்கினை - ஆணை.
481. முராரி - திருமால். 483. சிருட்டி - ஆக்கல் தொழில். தண்டம் - தண்டனை.

485. சருவமும் அழிப்போன் தானே சகல வல்லபமு முள்ளோன்
இறைவனும் அவனே யாகும் ஏத்தினாற் துயர்கள் தீர்ப்பன்
நறைபெறு துளபத் தண்தார் நாரண னிடத்தில் யாம்போய்
அறிகுவம் அவனா லாகும் உதவிகள் அனைத்தும் என்றான்.
34

486. சதக்கிரு தாதி தேவர் சகலரும் அதனைக் கேட்டு
மதித்திவை யுள்ள தென்றே மகிழ்ந்தயற் குரைப்பர் வன்கண்
கதித்தெழுஞ் சோமு கப்பேர்க் கண்டகன் தேடி யிங்கண்
உதிக்குமுன் கடிதிற் போவ தேநமக் குறுதி யென்றார். 35

487. ஆமென வெழுந்து வேதன் அவ்வுல கத்தை விட்டுச்
சோமுகன் வருமுன் தேவர் சூழ்வர விரைவி னெய்தி
மாமறு மார்பன் தன்னை வைகுந்த மதனிற் கண்டார்
பால்மிகு கடலில் நாப்பண் பன்னகப் பாயல் மீது. 36

488. கார்முகில் வண்ணா போற்றி! கமலச்செங் கண்ணா போற்றி!
பூமகள் கொழுநா போற்றி! புண்ணியப் பொருளே போற்றி!
தேமலி துளபத் தண்தார்த் திண்புயப் புனிதா போற்றி!
ஏர்மலி படைஐந் தேந்தும் இறைவனே போற்றி போற்றி! 37

489. என்றவர் துதித்த போதுள் இரங்கிநல் அபயஞ் செய்து
மன்றலங் கமலப் புத்தேட் இருக்கைதன் மருங்கி லீந்து
குன்றிற கரிந்தோன் தன்னைக் குறிப்பொடு நோக்கி யிந்நாள்
உன்றமக் குற்ற செய்கை உள்ளவா றுரையு மென்றான். 38

490. சோமுகன் தன்னாற் பட்ட துன்பமும் அசுர வெள்ளப்
பாமரர் வலியுந் தங்கள் பதிமுழு தழிந்த வாறும்
பூமகன் தன்னோ டிங்குப் போந்தது முரைத்து யாங்கள்
தாமரைக் கண்ணா உன்னைச் சரணமென் றடைந்தோ
மென்றான். 39

491. ஆங்கது கேட்ட மாயன் அசுரர்தங் குழாத்தை மாய்த்துத்
தீங்குறா வகையாம் காப்பேன் தியங்குதல் விடுமி னென்று
பாங்குறும் அவர்கட் கெல்லாம் பகர்ந்துபங் கயத்தோ னோடும்
ஈங்கிரு மென்று செல்ல இருந்தனர் விண்ணோ ரெல்லாம்.
40

486. கண்டகன் - அசுரன்.

487. வேதன் - பிரமன். மாமறு மார்பன் - திருமால்.

490. பூமகன் - பிரமன்.

491. பங்கயத்தான் - பிரமன்.

**492. இவ்வணம் இவர்க ளாக இந்திரன் இருக்கை முற்றும்
வவ்வியங் கிருந்த சோமு காசுரன் மலரோன் நாட்டின்
செவ்வியுங் கவர்ந்து மாயன் திருநக ரிடத்து வந்து
வெவ்விய போர்செய் தெய்தும் வெற்றியும் புகல்வன்.
மாதோ. 41**

சோமுகாசுரன் தேவருக்கு இடர்புரிந்த அத்தியாயம்
முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் - 492

14. சோமுகாசுரன் தேவருக்கு இடர்புரிந்த அத்தியாயம் (சுருக்கம்)

உமையம்மை பசுச் சாபம் பெற்றுத் தென்திசைக்குச் சென்ற நாளில் விண்ணவர்களெல்லாம் மிகுந்த துயரமடைந்து அவரவர் இடங்களுக்குச் சென்று இருக்கும்போது, பூமியில் சோமுகாசுரன் என்னும் ஒரு போர்வீரன் தோன்றினான்.

பெரும் பலத்தினையும் அச்சமான தோற்றத்தையும் கொண்ட அந்தச் சோமுகாசுரன் ஒருநாள் தம் குருவான சுக்கிராசாரியாரிடத்திற்குச் சென்று வணங்கி உபதேசம் செய்தருள வேண்டினான். அப்போது, சுக்கிராசாரியர், பாம்புக்குப் பால் வார்ப்பது போன்று அவனுக்கு உபதேசம் வழங்கினார்.

'செய்திடும் கருமமே கர்த்தா' என்று நீ தெளிந்து, ஓரிடத்திலிருந்து கொண்டு தவத்தைச் செய். இதனால் நீ பல வரங்களையும் பெறுவாய்; பின்பு செல்வங்கள் கொழிக்க நீடூழி வாழ்வாய் என்று கூறி விடையும் கொடுத்தனுப்பினார் சுக்கிராசாரியர்.

இவை கேட்ட சோமுகாசுரன், தம் தம்பியர் ஐவர் தமக்கு எப்பொழுதும் ஏவல் செய்து பாதுகாக்க, மேருமலையில் ஒரு பக்கத்திலிருந்து நான்முகனை நோக்கி, சலிப்பில்லாத உள்ளமுடையவனாகவும் உண்ணல் உறங்கல் இன்றியும், ஒரு கற்ப காலம் வரையிலும், நிலையாக இருந்து, மிகவும் குரூரமான தவத்தினைப் புரிந்தான்.

இந்த அசுரன் ஒழுக்கம் இல்லாதவனாக இருப்பினும், செய்திடும் வேலைக்கேற்ற கூலியைக் கொடுக்க வேண்டும் என்பதால், பிரமன் அவன்முன் தோன்றி அவன் வேண்டும்

492. மலரோன் நாடு - பிரமலோகம். மாயன் திருநகர் - வைகுந்தம்.

வரம் பற்றிக் கேட்டார். அப்பொழுது சோமுகாசுரனும் பிரமனை வணங்கி, ஆகாயம், வானுலகம், பூமி ஆகியவற்றிற்கு நான் அரசனாக வேண்டும். தந்திரங்கள் பலவும் வேண்டும். நால்வகைப் படைகளும் நீண்ட ஆயுளும் வேண்டும் என்று கேட்டான். பிரமனும் அவ்வாறே வரங்களைத் தந்தருளினார்.

தான் விரும்பிய வரங்களைப் பெற்ற அசுரன் மிகுந்த மகிழ்ச்சியுடன் சுக்கிராசாரியரிடம் சென்று வணங்கினான். அவரும் அசுரனுக்கு முடிசூட்டி ஆசிகள் கூறினார். சோமுகன், தன் ஆசாரியருடைய அருளைப் பெற்று, தன்னுடைய ஊருக்குத் திரும்பிச் சென்று தன்னுடைய உறவினர்களெல்லாம் மகிழ்ச்சி அடைய, அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தான். அக்கிரமங்கள் செய்து கொண்டிருக்கும் அசுரக் கூட்டங்களை யெல்லாம் எழும்படி உத்தரவிட்டான். நால்வகைச் சேனைகளும் ஒன்றாகத் திரண்டதுடன் அசுரக் கூட்டங்களும் பலவிதமான படைக்கருவிகளுடன் ஆரவாரம் செய்து கூடின.

இவ்வாறு நான்கு வகையான சேனைகள் புடை சூழவும், தம்பிமார்கள் யானைகள் மீது பின்னால் வரவும், முன்னே ஒரு தேரின் மீது சோமுகாசுரன் ஏறிக்கொண்டு, இந்திரன் திசையை நோக்கிப் புறப்பட்டான். அப்போது, தேவர்கள் எல்லாரும் இந்திரசபையை அடைந்து தேவேந்திரனைக் கண்டு முறையிட்டனர். சோமுகாசுரன் போரைத் தொடங்கும் முன்பாக அதனைத் தடுக்காமல் இருப்பது சரியல்ல என்றும் கூறினர். உடனே இந்திரனும் எழுந்து வெள்ளை யானையின் மீதேறி, வச்சிராயுதத்தை ஏந்தி, தேவர்கள் புடைசூழ, சோமுகாசுரனுடன் போரிட்டான்.

அசுரர்களும் தேவர்களும் மூன்று நாள்கள் மிகவும் கடுமையாகப் போரிட்டனர். இந்திரன் முதலான தேவர்களை யெல்லாம் சோமுகாசுரன் தோல்வியுறச் செய்தான். தோல்வி கண்டவர்கள் அனைவரும் பயந்து ஓடினர். அவர்கள் தேவ உலகையே விட்டுத் தனித்தனியே ஓடினர். அதற்கு முன்பே தேவ மகளிர் தம் இடம் விட்டு வேறிடம் ஓடினர்.

, இந்திரன் மட்டும் தனியாகவே வேறு வழியில் சத்திய லோகத்தை அடைந்தான். பின்பு தேவர்கள் பலரும் அங்கே வந்து சேர்ந்தனர். பின்பு அனைவரும் சேர்ந்து பிரமனுக்கு முன் சென்று வணங்கி முறையிட்டார்கள்.

இதற்கிடையில், அசுரர்கள் விரைந்து வந்து தேவர்களைச் சிறை பிடித்துச் சென்றார்கள். பின்னர் சோமுகாசுரன் தேவருலத்தையே கொள்ளையடித்தான். அங்கிருந்த மாடம், கூடம், கோபுரம், அரங்கு, மண்டபம் ஆகிய அனைத்தையும் இடித்து அழித்தான். இவ்வாறு அசுரன் அங்கு மூன்று ஆண்டுகள் இருந்தான்.

இந்நிலையில், பிரமன்முன் வணங்கி நின்ற இந்திரன் முதலான தேவர்கள், சோமுகாசுரன் செய்த துன்பங்களை யெல்லாம் எடுத்துரைத்தார்கள். இவற்றைக் கேட்ட பிரமன் மிகவும் வருத்தமுற்றார். பின்பு அனைவரும் கேட்கும்படியாகச் சிலவற்றைக் கூறினார்.

தேவர்கள், முனிவர்கள், ஏகாதச உருத்திரர்கள், சித்தர்கள், அட்டவசுக்கள், விண்ணுலகத்துள்ளோர், பூவுலகத்துள்ளோர், சராசரப் பொருள்கள், திருமால், நான் (பிரமன்) ஆகிய அனைவரும் நல்வினை, தீவினை என்னும் இருவினை வசப்பட்டவர்களா வோம். இன்பமும் துன்பமும் இவ்விரு வினைகளால் விளையக் கூடியவை. இறைவனால் வழங்கப்பட்ட இன்ப துன்ப விளைவை அனுபவிப்பதன்றி நம்மால் போக்க இயலாது. மேலும், வினையாவது சடம்; அவ்வினையைக் கூட்டுவிப்பது விதி. அந்த விதி சிவனது கட்டளை.

பிரமனாகிய என்னிடத்து ஆக்கல் தொழிலையும், திருமாலிடத்தில் காத்தல் தொழிலையும் இறைவன் ஆணையாக அளித்தான். இவ்வாணையிலிருந்து நாங்கள் சிறிதும் மாற இயலாது. நாங்கள் சிறு தவறு செய்தாலும் எங்களுக்கும் தண்டனையே கிடைக்கும். எனவே, சோமுகாசுரன் செய்த தவத்திற்கு நான் வரம் கொடுத்ததும் இறைவன் கட்டளைப் படியேயாம். இதில் என்னுடைய பங்கு எதுவுமில்லை என்று பிரமன் எடுத்துரைத்தார்.

எல்லாவற்றையும் அழிப்பவனும், எல்லா வலிமைகளை யுடையவனும், இறைவனும், எல்லாம் அந்தச் சிவபெருமானே ஆவான். அவனைத் துதித்துப் போற்றினால் எல்லாத் துன்பங் களையும் போக்குவான். எனவே, நாராயணனிடத்தில் நாம் எல்லோரும் சென்று வணங்குவோம். அவராலாகும் உதவிகளைக் கேட்போம் என்று பிரமன் கூறினார். அவ்வாறே தேவர்களும் புறப்பட்டனர். சோமுகாசுரன் மீண்டும் இவ்விடம் வந்து தேவர்களைத் தேடும் முன்னர் அனைவரும்

திருமாலிடம் சென்று சேர்வது நல்லது எனப் பிரமனிடம் கூறினர்.

இந்திரன் முதலான தேவர்களுடன் பிரமன் புறப்பட்டு வைகுந்தத்தில் திருமாலைக் கண்டு வணங்கினார். பிரமனின் துதி கேட்டு, அபயம் நல்கிய திருமால் தம் இருக்கையில் பிரமனை அமரச் செய்து, நடந்ததைக் கூறுமாறு இந்திரனைக் கேட்டார். இந்திரனும் சோமுகாசுரனால் அடைந்த துன்பங்களை யெல்லாம் கூறினான். அசுரனுடைய வலிமையையும், தாங்கள் நகரத்தை இழந்ததையும், நான்முகனோடு வைகுந்தம் வந்ததையும் கூறினான். தாமரைக் கண்ணனே! நீயே எங்கள் துணை எனக் கூறிச் சரணமடைந்தான்.

இவற்றையெல்லாம் கேட்ட திருமால், இந்திரன் முதலான தேவர்களும் பிரமனும் ஆகிய நீங்கள் அனைவரும் இங்கேயே இருங்கள். நான் சென்று கொடிய அசுரர்களை அழித்து, உங்களுக்குத் துன்பம் வராதவாறு காக்கிறேன். அச்சம் கொள்ள வேண்டாம் என்றார். அவ்வாறே அனைவரும் இருந்தனர்.

சோமுகாசுரன், இந்திர உலகையும் பிரம உலகையும் கவர்ந்த பின்னர் திருமால் இருக்கும் வைகுந்தத்திற்கும் வந்து போர் செய்து வெற்றி கொள்ளப் புறப்பட்டான். இவற்றைப் பற்றி இனி உரைக்கிறேன். கேட்பாயாக எனத் தவமிய முனிவர் மிதிலேசனிடம் கூறி, அவ்வரலாற்றை விளக்குகிறார்.

பதினைந்தாவது
சோமுகன் வைகுந்தத்தில் வெற்றி கொண்டிருந்த அத்தியாயம்

493. அண்டர் நாடெ லாமழித் தமர்ந்தி ருந்த சோமுகன்
பண்டு வேலை யிற்பிறந்து பாய்ந்து வந்த விடமென
மண்டு சேனை யார்ப்பரித்து வரவி ரைந்து வந்துநற்
புண்ட ரீகன் மருவுகின்ற புரம ணைந்து பார்த்தனன். 1

494. பலனு திர்த்த பழுமரத்தின் பான்மை போல அந்நகர்த்
தலமொ ருத்த ரின்றியே தனித்தி ருந்த தன்மைகண்டு
உலன்மி குத்த படைகளோடும் ஓத நீர்க்க ருங்கடற்
சலமு டைத்தல் போலவந்து சார்ந்த னன்வை குந்தவூர். 2

493. வேலை-கடல். புண்டரீகன் - திருமால். புரம் - வைகுந்தம்.
அனந்தன் - ஆதிசேடன்.

495. பார்கி ழித்த னந்த னுச்சி பதிய வோடு முருளு டன்
காரி னத்த பகடு வாசி கத்த பங்க ளீர்க்கநீள்
வார்கள் பற்றி யெண்ணி லாத மலைகள் கூடி வருவபோற்
தேரி னத்தி ரள்கள் மிக்க செல்வ மோடு மாடுற. 3

496. மலைக ளூற்று மருவி போல மும்மதமு குத்து மத்தகத்
தலைது லுக்கி வளைவு பெற்ற தந்த முன்ன லைத்துல
கலைய மிக்க கால்கள் வைத்த ரும்பொ னோடை நெற்றிசேர்
கொலைமி குத்த கரியி னங்கள் கோடி கோடி சூழ்வர. 4

497. மனமு மிக்க வளியும் பிந்த மருவி முந்து விசையுடன்
இனமி குத்த கதிகள் நான்கு இயைந்து தாவி யேமிகுங்
கனமி குத்த வசுர ரென்னுங் கடலின் வாவு திரைகள்போல்
அனும னித்து லாவி யேமுன் னளவி லாத பரிசெல. 5

498. காலி னார்த்த கழல்க ளோடு கையி னார்த்த கடகமும்
மாலி னார்த்த மின்கள் போல மரும மார்த்த பணிகளும்
தூலி யார்த்த விடையின் மீது சுற்று கச்சை யுந்தலை
மேலி னார்த்த தார்க ளுந்தோள் மீதி லிட்ட கவசமும். 6

499. துள்ளு மிக்க நடைக ளுந்து லங்கும் வாட்கள் கேடகம்
வள்ளி ருக்கும் வேல்வில் நேமி மற்று முள்ள படைகள்கைக்
கொள்ளு மிக்க கோல மோடு கூர்த்தெ ழும்ப தாதிகள்
எள்ளி ருக்கஇடம தன்றி எங்க ணுஞ்செ றிந்திட. 7

500. பேரி தாரை சங்கு தாளம் பெருகு மோசை முரசுகொம்பு
ஏரி லங்கு பூரி மத்த ளங்கள் எங்கு மேங்கவே
பாரி டங்கள் நீடி யானை பரிகள் கோடி பூண்டபொற்
தேரின் வந்து மாத வன்சி றந்த ஊர்வ ளைந்தனன். 8

501. சோமு காசு ரன்ப தாதி சூழ்ந்த செய்தி தூதர்போய்த்
தாம மேவு முதரன் மிக்க தாள்ப ணிந்து கூறலும்
நேமி சங்கு தண்டு வாள்வில் நீடு கையி லேந்திநீள்
தாம மார்பன் கருடன் மீது தாவி யேறி னானரோ. 9

502. கேச வன்போர் பொரவெ ழுந்த செய்தி கேட்ட கிளைஞரும்
வாச வன்தன் னோட மர்ந்த வான நாட்டுள் ளோர்களும்
மூசு கின்ற படைக ளோடு மொய்த்தெ ழுந்து கூடினார்
பாச மேவு பாவ மேநீள் படிவ மான அசுரர்மேல். 10

499. பதாதிகள் - காலாள்கள். 500. மாதவன் - திருமால்.
501. தாம மார்பன் - திருமால். தாம மேவுமுதரன் - திருமால்.
502. கேசவன் - திருமால். கிளைஞர் - தேவர்.

503. நான்கு திக்கும் போய டர்ந்து நாம வேல்வில் வாளிகள்
ஊன்கள் துய்க்கும் வாளெ ழுக்க ளுலவு பிண்டி சக்கரம்
தான்க தித்தெ றிந்து மீர்த்தும் வெட்டி யுந்த கர்த்தெய்தும்
கான்கொ ளுத்து மங்கி போறக னன்று போரு டற்றினார். 11

504. வயின தேயன் மீது சென்ற மரக தக்குன் றனையமால்
வயங்கும் வெண்மை மிக்க சங்க மாண்ட துப்பு வாயில்வைத்து
உயரி டிக்கு லங்கள் கோடி ஒத்தெழுந் ததிர்த்தபோல்
பயமி குப்ப வூதி னானப் பதகர் நெஞ்சு பறையுற. 12

வேறு

505. கொண்டல் மேனியான் கோதண்ட விற்குனித் தேற்றி
அண்ட மெங்கணு மதிர்ப்புற நாணெறிந் தார்த்தான்
மூண்ட கக்கரத் தாற்கணை முறைமுறை தொடுத்து
மண்டு தானவப் படையிலக் காகநாண் வலித்தான். 13

506. சோனை மாரியின் தாரைபோற் சரமழை சொரிந்தான்
வானும் வையமும் எண்திசா முகங்களு மறைப்ப
வேனி லான்தனை யீன்றவன் நாணொலி விழுங்க
ஊன வஞ்சகத் தானவர் ஆர்ப்பெலாம் ஒளித்த. 14

507. இடிகள் போற்பல கணைகள்சென் றனதடித் தெழுந்த
வடிவு போற்பல கணைகள்சென் றனவெரி வளர்ந்து
தொடர்வ போற்பல கணைகள்சென் றனவராத் தொகும்பல்
விடமெ னப்பல கணைகள்சென் றனவமர் விளைத்து. 15

508. தலைய றுத்தன கரங்களை யறுத்தன தாளின்
நிலைய றுத்தன வுடல்களை யறுத்தன நெடும்போர்ச்
சிலைய றுத்தன படைகளை யறுத்தன திரள்கை
மலைய றுத்தன ரதங்களை யறுத்தன வாளி. 16

509. குரக தத்தினை யறுத்தன கொடிகளை யறுத்த
பெருகி மொய்த்தபல் லியங்களை யறுத்தன பிசிதம்
பருகு முண்கலப் பணிகளை யறுத்தன பங்கிச்
சுருளின் வைத்திடு தும்பையு மறுத்தன தொடர்ந்து. 17

---

504. வயின தேயன் - கருடன்.

506. சோனைமாரி - பெருமழை. வேனிலான் - மன்மதன்.

508. வாளி - அம்பு.

509. குரகதம் - குதிரை. பிசிதம் - ஊன்.

510. குருதி யாற்றிடைக் குளிப்பன சிலசில குணலை
பருகி வாய்களிற் பிணங்களைக் கவ்வுவ பலபேய்
திருகி மெல்லுவ சிலசில பேய்க்கணந் தடிதின்று
அருகில் நின்றபெண் பேய்களைப் புணர்வபல் லலகை. 18

511. குறைத்த லைப்பிணங் குதித்துநின் றாடுவ கண்டு
பிறைக்கு லப்பலைக் காட்டியே சிலசிறு பேய்கள்
உறைக்குங் கைகளைக் கொட்டியொத் தாடுவ வநேகம்
நிறைக்குங் கூளிக ளிவ்வணம் நிகழ்ந்திடுங் களத்தில். 19

512. கங்கஞ் செந்தலைக் கழுகுவன் கொடியினங் கலந்து
பங்க மேவிய அசுரர்மெய் நிணங்களைப் பருகிப்
பொங்கு சோரியுள் நனைந்துசெந் நிறங்களைப் பொருந்தித்
தங்கும் வெண்குட ரிழுத்துமேற் படங்கள்போற் றயங்கும்.
20

513. இதழ திக்கிய பல்லொடுங் கிடந்திரு வீழியாற்
கதமெ ரிப்பொறி சிந்துகுற் றுயிர்களைக் கண்டு
பிதிர்சி னக்கொடுங் கூற்றுயிர் பிடிப்பதற் கஞ்சி
உதிர மீர்க்குமெய் அசுரர்ஆ வியைப்பிடித் துண்ணும். 21

514. இன்ன வாறசு ரப்படை இறந்தது கிடக்க
உன்னி மற்றதெல் லாமிரிந் தோடுதல் கண்டு
மன்னு சோமுகன் தம்பியர் ஐவரு மலைந்து
மின்னு நேமியான் தன்னுடன் வெஞ்சமர் விளைத்தார். 22

515. ஐந்து வாரணங் கூடியொன் றாயடர்ந் திடினும்
நொந்து வாடுமோ சிங்கமவ் வாறென நொடியில்
வந்த தானவர் தனித்தனி செய்தபோர் வலியைச்
சிந்தி யாங்கவ ருயிர்ப்பலி கூற்றுணச் சினந்து. 23

516. நேமி யாற்தலை யறுத்தனன் இவர்படு நிலைமை
சோமு காசுர னறிந்துவெஞ் சினத்தொடுஞ் சுறுக்காய்
சேம மாம்இர தத்தினை எதிருறச் செலுத்தித்
தாம ரைக்கண்ணி னானோடும் எதிர்ந்தனன் சமரில். 24

517. கண்ண கேளெம்பி மார்களைக் கடிந்தன மென்றும்
எண்ணி லாஇர ணியன்முதல் அசுரரை யெல்லாம்
விண்ணு ளோர்கள்மெய்த் திடஅடர்த் தோமென்றும் வீறு
பண்ணி யெய்திடில் அவரல என்பராக் கிரமம். 25

510. குணலை - கொக்கரித்தல். அலகை - பிசாசம். 511. கூளி - பேய்.
514. நேமியான் - திருமால். 516. தாமரைக்கண்ணினான் - திருமால். சமர் - போர்.
517. பராக்கிரமம் - வலி, வீரம்.

518. கண்டு பாரென எயிறுடன் எயிறினைக் கடித்துத்
திண்டி றந்தனு நாணொலி திசைசெவி டுறமுற்
கொண்டு பற்பல வாளிகள் கடுப்பினிற் கோர்த்து
மண்டு மூழிநாள் வருமழைத் தாரைகள் மான. 26

519. கருடன் மேற்கரு முகில்நிறக் கண்ணன்மேற் கடவுட்
புருடர் மேல்முனிக் கணங்கள்மேல் எண்டிசை புரப்போர்
திரட ரும்புய வரையின்மேற் திசைக்கரி களின்மேல்
அருளி லான்கணை சொரிந்துவான் வெளியெலாம்
அடைந்தான். 27

520. அரியும் வெங்கணை மாரிபெய் தவையெலாம் அறுத்து
வரிவில் நாண்மிசை ஆயிரம் வடிக்கணை தொடுத்துக்
கரியும் பாய்பரித் திரளையும் பாகர்தங் களையும்
விரியுந் தேர்முடிக் கொடியையும் அறுத்தனன் விரைவில். 28

521. சிங்க மாக்கணை தொடுத்தனன் சோமுகன் திருமால்
புங்க மார்சர பப்படை தொடுத்தவை பொறித்தான்
பங்க மார்புயங் கக்கணை தொடுத்தனன் பதகன்
சங்கன் வெங்கரு டக்கணை தொடுத்தவை தடுத்தான். 29

522. மோக மாக்கணை தொடுத்தனன் அசுரர்கள் முதல்வன்
வாகு போதமெய்க் கணையினா லதன்வலி மறைத்தான்
வேக மார்த்திடு மயன்கணை சோமுகன் விடுத்தான்
நாக மார்த்தவன் கணைவிடுத் தரியதை நசித்தான். 30

523. அழிந்த தேர்மிசை நின்றவன் மலையிழி அரிபோல்
இழிந்து கால்விசை யால்நெடுந் தண்டமொன் றேந்தி
வழிந்து வாய்வழி சோரிக ளொழுக வன்சிரசு
பிழந்தி டக்கரு டனையடித் தார்த்தனன் பிசிதன். 31

524. அயர்ந்து வீழ்ந்தனன் கருடன்அச் சுதன்நிலத் திடைச்சேர்ந்து
உயர்ந்த தண்டமொன் றெடுத்தவன் உரத்திடை யடித்துப்
பெயர்ந்து நின்றனன் இருவரு மற்பிடி பிணக்காய்
இயைந்து நின்றிடும் பொழுதுவா னவரெலாம்
இசைந்து. 32

---

518. எயிறு - பற்கள்.

519. அருளிலான் - சோமுகாசுரன்.

521. பதகன் - சோமுகாசுரன். சங்கன் - திருமால்.

522. அசுரர்கள் முதல்வன் - சோமுகாசுரன். அரி - திருமால்.

523. சோரி - குருதி. பிசிதன் - அசுரன்

525. இங்க ரிக்கொரு துணையலேம் யாமென வெண்ணித்
துங்க மாறிய கருடனைத் தூக்கியே யெடுத்துச்
செங்கண் மால்வரு வான்நம்மைத் தேடியென் றோடி
அங்கண் வான்வழி போய்மக மேருவில் அணைந்தார். 33

526. மற்பி டித்திடு மாலும்அவ் வசுரனுந் தண்டம்
முற்பி டித்தடித் திருகையில் வாள்கொடு மூண்டு
சொற்பி டித்திடு சாரிகை மாறியே சுழன்று
வெற்ப டுந்தின மூன்றுபோர் விளைத்தனர் இணையாய். 34

527. இரிந்து முன்புபோம் அசுரர்கள் புதியரோ டிரைந்து
சுரந்து வந்துசோ முகன்புடை சுற்றினர் களத்தின்
முரிந்த தேர்க்கிணை யாயொரு தேர்முனம் விடுத்தார்
பொருந்தி யேஅதி லேறினன் சோமுகன் புலிபோல். 35

528. கண்ட மால்பின்பு கருடனைப் பார்த்தனன் காணான்
மண்டு தானவச் சேனையுந் தேரையும் மதித்துக்
கொண்ட சக்கரப் படையினைச் சோமுகக் கொடியோன்
துண்ட மாய்விழும் படிக்கெறிந் தான்மிகச் சுழற்றி. 36

529. ஊழித் தீயெனக் கொடியவல் விடமென உருத்தங்
காழிக் கூற்றம்வந் தடர்வது கண்டசு ரேசன்
பாழித் தண்டுகொண் டடித்தனன் பற்பல பொடியாய்ப்
பூழிக் கொத்தன அவன்தவ வலியையார் புகல்வார். 37

530. இனித்த னித்துநிற் பதுநெறி யல்லவென் றெண்ணிப்
பனிப்பி றைச்சடை யோன்பதம் நினைந்தனன் பரிவால்
நினைப்ப வர்க்கருள் புரிபவன் கருணைநேர் படலான்
மனத்தி னுங்கடி தேகினன் மறைந்துமா தவனே. 38

531. மேரு மால்வரைப் புறத்திடை யெய்தலும் விரைவில்
நேரு லாமலர்ப் பகவனோ டமரர்க ளெதிர்போய்
நீரு லாமலர் சொரிந்தடி தொழுதுமுன் னிறைந்தார்
பாரின் மேற்கலு ழனும்விழுந் திருபதம் பணிந்தான். 39

532. தாங்கு புள்ளரசினைக்கர மலரினாற் தழீஇக்கொண்டு
ஆங்கு நின்றவிண் ணவர்க்கெலா முகமன்நன் கறைந்து
பாங்கு மேவுபொன் மேருவிற் பரமனை நினைந்தே
ஓங்கு நற்றவம் புரிந்திருந் தனர்களங் கொருங்கு. 40

526. சாரிகை - வட்டமாயோடல். 529. அசுரேசன் - சோமுகாசுரன்.
531. கலுழன் - கருடன்.

வேறு

533. இவ்வணம் இவர்க ளங்க ணிருப்ப ஞாட் பிடத்தினின்ற
மைவணக் கொடிய சோமு காசுரன் வைகுந் தத்திற்
செய்வண நினைந்து போயங் இருந்தனன் சேனை யோடும்
பைவண நாகப் பள்ளி யான்செல்வம் அனைத்தும் பற்றி.
41

534. அகிலலோ கங்க ளுக்கும் அரசுநா மெனும்ஆங் காரந்
தகநமக் கிணையில் லென்று தகுவிய ரநேகர் சூழப்
புகலருஞ் சிறப்பி னோடும் பொருந்துமந் திரிகள் தம்மை
மிகவுமின் புற்று நோக்கி மேற்செயும் வினையஞ்
சொல்வான். 142

535. பிரமநா மன்றி வேறோர் பிரமமின் றெமது வாக்கே
உரமிகு செல்வ மார்க்கும் உதவிடும் ஆத லாலே
நமையடைந் தேவல் செய்வோர் நன்னலம் பெறுவர் செய்யா
இமையவர் பகைகள் மாய்த்திங் கிருப்பதே யழகி தென்று. 43

536. உலகுறு கிருத்தி யத்துக் குதவுமக் கினிநீர் வாயு
நலமிகு தருக்கள் சந்திர சூரியர் நமன்மீன் கோட்கள்
புலன்மிகு தொழிலோர் யாவும் அசுரராற் புணர்ப்பித் தெங்கும்
நிலவிடச் செய்து வாழ்ந்தான் நெறிமுறை யறியா நீசன். 44

537. சொல்லுமிவ் வாறு விண்ணிற் சோமுக னிருக்கும் நாளில்
வல்லியிற் கால்கள் பூட்டி வைத்தவா னவர்கள் தம்மை
ஒல்லையிற் கொணர்மி னென்றான் கொணர்ந்தனர் அசுர ரந்த
நல்லியற் குணத்தோ ருள்ளம் நடுங்கவே நாடிச் சொல்வான்.
45

538. சாவது துணிவோ நந்தந் தாள்பணிந் தேவல் செய்து
மேவுதல் துணிவோ சொல்லு மென்றலும் விண்ணோர்
சொல்வார்
கோவமெம் மீதென் கொல்லோ கொள்வது யாமோ கொஞ்சர்
ஏவல்செய் துய்வோ மென்றார் செய்யுமென் றிசைந்து
விட்டான். 46

539. நீர்க்குடஞ் சுமந்தும் பொல்லா நிணஞ்சுர பான மேந்தி
யார்க்குமுண் டிடவ ளித்து மங்கையால் விசிறி வீசி
ஏர்க்குமிப் பணிகள் செய்தங்கு இருக்கும்நா ளொருநா ளந்த
வார்க்கழற் சோமு கன்தன் வாழ்வுறு களிப்பின் மூழ்கி. 47

536. கிருத்தியம் - தொழில். 539. சுரபானம் - கள்.

540. **ஆண்பெணென் பவர்க ளெல்லாம் அருங்களி யாட்டங் கொண்டங்கு**
ஊண்பெறு நிணமுங் கள்ளும் உண்டுளம் மயங்கி ஆடும்
மாண்புறு வேலை கண்டு வானவர் தப்பி வந்து
சேண்புணர் மேரு விற்தங் கிளையொடுஞ் சேர்ந்தா ரன்றே. 48

சோமுகன் வைகுந்தத்தில் வெற்றி கொண்டிருந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 540

திருச்சிற்றம்பலம்

15. சோமுகன் வைகுந்தத்தில் வெற்றி கொண்டிருந்த அத்தியாயம் (சுருக்கம்)

தேவலோகத்தையெல்லாம் அழித்த சோமுகன், அன்று பாற்கடலில் தோன்றிய ஆலகால விடம் போன்று படைகள் ஆர்ப்பரித்து வரவும், விரைந்து வந்து, திருமால் உறையும் வைகுந்தத்தை வளைத்துக் கொண்டான். இதற்கு, அவனுடைய யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை போன்ற பலவும் அவனுக்கு உதவின.

சோமுகாசுரன் வைகுந்தம் வந்தடைந்த செய்தியைத் தூதுவர்கள் திருமாலிடம் கூறினர். உடனே அவர், சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய இவற்றைக் கையில் ஏந்திக் கொண்டு கருடன் மீது அமர்ந்தார். திருமால் சோமுகாசுரனுடன் போரிடப் புறப்பட்டு விட்டார் என்ற செய்தியைக் கேட்ட தேவர்கள் அனைவரும் ஒருங்கே கூடினார்கள்.

பாவமே செய்து வாழ்ந்து வந்த அசுரர் கூட்டத்தை அழிக்க முற்பட்ட திருமால், தம் சங்கை ஊதிக் கோதண்டத்தைக் கையிலேந்திப் பல பாணங்களைத் தொடுத்து அசுரப் படைகளைப் பலவாறாகத் தாக்கிக் கொன்றார்.

அசுரப் படைகள் இறந்தது பற்றி அறிந்த சோமுகன் தம்பியர் ஐவரும் திருமாலுடன் போரிட்டனர். ஐந்து யானைகள் ஒன்றுகூடி வந்தாலும் அஞ்சாமல் எதிர்த்து நின்று போரிடும் சிங்கம் போன்று திருமால் அவர்கள் ஐவரையும் தாக்கினார். தம்முடைய சக்கரப் படையால் அவர்களுடைய தலைகளைத் துண்டித்தார்.

தம்பியர்களைத் திருமால் கொன்றதைக் கண்ட சோமுகாசுரன் மிகுந்த சினங்கொண்டான். தன் தேரினை எதிர்முகமாகத் திருப்பிச் செலுத்தித் திருமாலுடன் போர் செய்யத் தொடங்கினான்.

கண்ணனே! என்னுடைய தம்பிமார்களையும் இரணியன் முதலான அசுரர்களையும் கொன்றுவிட்டோம் என்று எண்ணாதே. அவர்களைப் போன்றவனல்ல நான். என்னுடைய வலிமையை இப்போது நீயே நேரில் பார் எனத் திருமாலைப் பார்த்துக் கூறினான் சோமுகன்.

பின்பு, பற்களை நறநறவெனக் கடித்து நாணொலி செய்து பற்பல பாணங்களையும் மழையென விடுத்தான் சோமுகன். அவனுடைய பாணங்கள், கருடன் மீதும், கண்ணன் மீதும், முனிவர் கூட்டங்கள் மீதும், திக்குப்பாலர்கள் மீதும் பொழிந்தன. இவ்வாறு கணைசொரிந்து வான்வெளியெலாம் அடைத்து விட்டான் அவ்வசுரன்.

திருமாலும் எதிர்க்கணைகளைத் தொடுத்துச் சோமுகன் விட்ட கணைக் கூட்டங்களையெல்லாம் அறுத்து எறிந்தார். சோமுகன் சிங்க மாக்கணையை விடத் திருமால் சரபப்படையை விட்டு அதனை அழித்தார். சோமுகன் சர்ப்பக் கணையைவிடத் திருமால் கருடக் கணையைவிட்டு அதனை அழித்தார். இவ்வாறு இருவரும் பலவிதமான கணைகளை விடுவதும் அழிப்பதுமாகப் போரிட்டனர்.

தேரின் மீதிருந்து போரிட்ட இருவரும் கீழே இறங்கி வந்து சண்டையிட்டனர். அப்பொழுது சோமுகன் தண்டத்தால் கருடனை அடித்தான். கருடன் அயர்ந்து கீழே விழுந்தான். உடனே திருமால் உயர்ந்த தண்டத்தால் சோமுகன் மார்பு மீது அடித்தார். இவ்வாறு இருவரும் தொடர்ந்து போரிட்ட வண்ணமிருந்தனர்.

தேவர்கள் அனைவரும் கருடனைத் தூக்கிக் கொண்டு ஓடினர். நாம் திருமாலுக்குத் துணையாக இருக்க முடியவில்லையே என அவர்கள் எண்ணினாலும், எப்படியும் திருமால் நம்மைத் தேடி வருவார் என்று நினைந்து மகாமேரு மலையை வந்தடைந்தார்கள்.

திருமாலும் சோமுகனும் மற்போர் முதலான பல போர்களையும் செய்து வந்தனர். யாருக்கும் வெற்றிதோல்வி இல்லாத இச்சண்டை மூன்று நாள்கள் நீடித்தது. கருடனைக்

காணாத திருமால் கோபமுற்றார். சக்கரப் படையைச் சோமுகன் மீது ஏவினார்; அதைப் பார்த்த சோமுகன் தனது தண்டத்தால் அந்தச் சக்கரத்தை அடித்து அதைப் பொடியாய் விழச் செய்தான். இத்தகைய அசுரனது தவ வலிமையை யார்தான் எடுத்துரைக்க இயலும்!

திருமாலானவர் இனித் தனித்திருந்து போர் செய்வது சரியல்ல என்று உணர்ந்தார். உடனே விரைந்து மறைந்தார். மதிசேர் செஞ்சடையோனாகிய சிவபெருமானை நினைந்து மேருமலையை அடைந்தார். அங்கு, இந்திரன் முதலான தேவர்கள் வந்து திருமாலை வணங்கினர். கருடன் வந்து திருமாலின் திருவடிகளை வணங்கினான். கருடனைத் தம்முடைய இருகரங்களாலும் எடுத்துத் தழுவிக்கொண்ட திருமால் தேவர்களுக்கெல்லாம் முகமன் கூறி, மேரு மலையிலேயே சிவபெருமானை நினைந்து தவம் புரிவோம் எனக் கூற, அனைவரும் அவ்வாறே தவம்புரியத் தொடங்கினர்.

இவ்வாறு திருமாலும் தேவர்களும் மேருமலையில் இருக்கும்பொழுது சோமுகன் வைகுந்தத்தில் வந்து அங்கிருந்த செல்வங்களையெல்லாம் பற்றிக் கொண்டான். சுற்றதார்களையும் அமைச்சர்களையும் பார்த்து, நானே கடவுள்; அகில உலகங் களுக்கும் நானே அரசன்; நானின்றி வேறொன்றில்லை; என் வாக்கே செல்வம் முதலான அனைத்தையும் கொடுக்கும்; என்னை அடைந்து ஏவல் செய்கின்றவர்கள் நன்னிலையைப் பெறுவார்கள், அவ்வாறு செய்யாத தேவர்களை அழித்து இங்கிருப்பதே அழகாகும் என்று கூறி அங்கேயே இருந்தான்.

மேலும், அக்கினி, நீர், வாயு, கற்பகத்தரு, சந்திரன், சூரியன், எமன், விண்மீன்கள், கோள்கள் ஆகிய இவர்களை யெல்லாம் தொழிலாளராகச் சேர்ப்பித்து எங்கணும் நிலவிடச் செய்து வாழ்ந்து வந்தான் சோமுகாசுரன்.

ஒருநாள், கால்களில் விலங்குபூட்டி வைக்கப்பட்டிருந்த தேவர்களையெல்லாம் அழைத்து வரச் சொன்ன சோமுகன், அவர்களைப் பார்த்து, நீங்கள் சாவதற்குத் துணிகின்றீர்களா? அல்லது என்னுடைய காலிலே வீழ்ந்து, ஏவல்களைச் செய்து வாழ்கின்றீர்களா எனக் கேட்டான். உடனே தேவர்கள், நாங்கள் ஏவல் செய்தே பிழைக்கிறோம். கோபம் கொள்ள வேண்டாம் என அசுரனிடம் வேண்டினர். சோமுகனும், அவ்வாறே இருங்கள் என்று கூறி, தேவர்களை விட்டுவிட்டால்.

பின்பு, அசுரர்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடிக் களித்திருந்தனர். அவ்வாறு அவர்கள் மயங்கி இருந்த வேளையில் தேவர்கள் அனைவரும் அங்கிருந்து தப்பித்து மேருமலையை வந்து சேர்ந்தனர்.

பதினாறாவது
தேவ மாதர் அம்பிகையைக் கண்டு ஆவுரு மேவியிருந்த அத்தியாயம்

541. அசுரரிற் கொடிய னான சோமுக வசுரன் வெற்றி
இசைவுறப் புகன்றோம் தேவ மாதர்ஆ வுருவ மெய்தி
வசையறு சைய வெற்பின் மருவுகா விரியின் பாங்கர்
பசுவுரு வாயுமர்ந்த பரையொடுங் கூடல் சொல்வாம். 1

542. மேருவி னிடத்திற் சேர்ந்த விண்ணவர் முன்னாள் மேவும்
வாருலாங் கொங்கை வான மாதர்க ளோடுங் கூடிச்
சீருட னிருந்து மேற்செய் விநயங்கள் தேருங் காலை
நீருலாங் கமல யோனி நிகழ்த்துவ னவர்கட் கெல்லாம். 2

543. கருங்கடல் மேவுங் காகங் கலன்பெறு கூம்பை யன்றி
மருங்குதாங் குதல்வே றுண்டென் றெண்ணுமோ மலிந்த துன்பப்
பெருங்கடல் சேர்ந்த யாரும் அரன்கழ லன்றிப் போந்திங்கு
ஒருங்குற விடம்வே றுண்டோ போவதே யுறுதி யென்றான். 3

544. கேட்டலும் அமர ரெல்லாம் ஆமெனக் கிளர்ச்சி கொண்டு
மீட்டுமொன் றுரைப்பர் நாதன் கயிலைநா மேவுங் காலை
வாட்டமோ டிருக்கு மிந்த மாதரை அசுரர் கண்டு
வீட்டிடில் என்செய் வார்கள் இவரென அவர்கள் விள்வார். 4

545. முன்னொரு காலம் சும்பன் அசும்பனை முருக்கென் றியாங்கள்
அன்னையாங் கௌரி தண்பாற் பனிவரை யடைந்த ஞான்று
மன்னுமைங் கரத்தர் சாப மருவிடப் பசுவாய் நீவிர்
என்னுடன் கூடும் என்றங் கிசைந்தனள் அந்நாள் இந்நாள். 5

542. விநயங்கள் - தருமங்கள்.

543. கூம்பு - பாய்மரம்.

545. ஐங்கரத்தர் - விநாயகன்.

546. அன்னதே செய்துள் ளேமென்று
அரம்பையர் புகல நன்கென்று
உன்னியே போமென் றும்பர்
அரன்பத முறுதற் குற்றார்
பொன்னணி சுமந்து வீங்கும்
பொம்மல்மென் முலையி னார்கள்
மன்னுதென் திசையை நோக்கி
வந்தனர் மயில்கள் போல. 6

547. காவதம் பலவு நீங்கித் தண்டகா ரணியங் கண்டங்கு
ஆவலிற் திங்க ளொன்றங் கலைந்துதே டியுங்கா ணாமற்
பார்வளர் சயிலூ டத்திண் பருப்பத மதனில் வந்து
தேவியை அங்குந் தேடிக் கண்டிலர் திகைக்கும் போது. 7

548. நான்மறை பயிலுஞ் செல்வ நாரதர் தம்மைக் கண்டு
கான்மலர் வணங்கித் தேவ கன்னிய ரெல்லாம் நோக்கித்
தேன்மலி இசையாழ் ஏந்தும் தெய்விக முனியே நீர்எம்
பான்மிகு கிருபை செய்து பகருவ தொன்றுண் டென்றார். 8

549. நாரதர் கேட்டு மிக்க நலந்திகழ் ஆசி கூறி
வாரணி முலையீர் ஆண்பால் இன்றிநீர் வந்த தென்ன
காரண முரைமின் என்னக் காலமூன் றுணர்ந்த நீர்எம்
சீருறு சிந்தை எண்ணம் தெரிந்திடா திருப்ப துண்டோ. 9

550. ஆயினுஞ் சொல்வேம் தேவர் அனைவரும் அரன்பா லெய்த
நாயகி தன்னை யாங்கண் நாடியே கண்டு போற்றற்கு
ஏயினம் அன்னை வைகும் இருப்பிடஞ் சொல்ல வேண்டும்
தாயினும் இனிய இன்பத் தாபத முனியே! என்றார். 10

551. சச்சிதா னந்த ரூபி சராசர மெங்குந் தானாய்
மெச்சிய பூவின் மேவும் விரையென நிறைந்து நிற்கப்
பொச்சநுண் ணிடையீர் தேடிப் புறப்பட்ட தென்கோ லோநீர்
இச்செயல் புரிதற் கேக தேசியோ இறைவி என்றான். 11

552. செப்பிய முனியை நோக்கித் தேவரம் பையர்கள் சொல்வார்
எய்ப்புறு தாகத் தாற்தண் ணீர்எங்கே உண்டென் பாருக்கு
அப்பெனும் பூதம் எங்கும் வியாபக மாம்உண் மீரென்று
ஒப்பவே சொன்னா லொக்கும் நீர்சொன்ன உறுதி
என்றார். 12

547. காவதம் - காதம். 551. ஏகதேசி - ஓரிடத்திருப்பவள்.

553. பின்னுமம் முனியை நோக்கிப் பேசுவார் பெரியோர் நீரென்று
உன்னியாய் கேட்க ஞான உபதேசம் உரையா நின்றீர
சன்னியா சியரும் இந்தச் சரசங்கள் பேச லாமோ
என்னவே கோபங் கொண்டங்கு ஏகுத றனைய றிந்து. 13

554. வீணைமா முனியு முன்போய் மிகுமுப சாரம் பேசி
வாணுதல் மடவீர் உங்கள் மதித்திறம் அறிய வேண்டிப்
பேணியிவ் வார்த்தை சொன்னோம் பெருமைசேர்
உமையாள் தன்னைக்
காணும்நன் மார்க்கம் சொல்வேம் கருதிநீர் கேண்மின்
என்றான். 14

வேறு

555. இப்பெரும் பருப்பதத் தினுக்குப் பச்சிமத்து
அப்புற காவிரி அடித்து வாரமாம்
எப்பய னுந்தரும் இடங்கள் வாய்த்துள
வைப்பதாய்ச் சையநீள் மலையொன் றுண்டரோ. 15

556. அம்மலை மருங்குபுட் பார ணீயமென்று
இம்மெனும் அருவியி னோசை ஏய்ந்துநீள்
நன்மைசேர் பலாசுபுன் னாக மற்றுள
செம்மைசேர் வனங்களுஞ் செறிந்தி ருப்பதில். 16

557. பஞ்சினும் மெல்லடிப் பரம நாயகி
சஞ்சரித் திருந்தனள் ஆவின் தன்மையாய்க்
குஞ்சர முகவனுந் தாதிக் கூட்டமும்
எஞ்சலி லாதுகாத் திருப்பர் எங்கணும். 17

558. அங்குநீர் செலினும தபீட்டம் யாவையும்
செங்கணாள் நோக்கியே தருவள் சித்திரம்
பொங்கிய பூண்முலைப் பூவை யன்னநீர்
சங்கையி லாதுபோய்ச் சார்மின் என்றனன். 18

559. வானநாட் டரம்பையர் மனம கிழ்ந்துகேட்டு
ஆனவெம் பிழைபொறுத் தருளு வீரென
ஞானநாட் டத்தனை நயந்து போற்றிப்பின்
தேனுநா யகிபதஞ் தேடிச் சென்றனர். 19

560. கண்டனர் குறிவழி கருதிப் போய்மிகும்
பண்டைநான் மறைதொழும் பரம நாயகி

---

554. வீணைமாமுனி - நாரதர். 555. பச்சிமத்து - மேற்கே.
558. அபீட்டம் - விரும்பப்பட்டது. 559. தேனுநாயகி - உமையம்மை.

கொண்டகோ உருவினைக் கன்றின் கூட்டமொத்து
அண்டர்மின் னார்தொழுது அமுது அரற்றினார். 20

561. சுற்றினர் சூழ்ந்தனர் துளங்கி நற்பதம்
பற்றினர் பைப்பயப் பதத்தைக் கண்களில்
ஒற்றினர் உகிரினால் உரசிக் கைகளாற்
பொற்றுணர் மலர்கடுஉய்ப் புகழ்ந்து பாடுவார். 21

562. செய்வினைத் தொடர்பறத் தேகப் பற்றறப்
பொய்வினை மலவிருள் புலர்ந்து போய்விட
மெய்வினைப் பரபத மேவ அன்புடன்
சைவவான் நாயகி சரணம் போற்றுவாம். 22

563. உயர்ந்திடும் பகையெலாம் ஒழிந்து மாய்ந்திடப்
பயந்திட வருங்கொடும் பழிகள் மாறிட
மயங்கிட மருவுநோய் மடிய ஞானமாய்த்
தயங்குகோ நாயகி சரணம் போற்றுவாம். 23

564. விரும்புமெய்ஞ் ஞானமும் மிகுந்த நன்மையும்
பெரும்புகழ் வாழ்க்கையும் பெரும்வல் வீரமும்
வருந்தவ உறுதியும் வளரும் நேசமும்
தரும்பசு உருவினாள் சரணம் போற்றுவாம். 24

565. என்றுநற் துதிபுகன்று இறைஞ்சு மாதர்மேற்
தன்திருக் கண்மலர் சாத்தி உள்மகிழ்ந்து
அன்றெதிர் நின்றஐங் கரனை நோக்கினாள்
கன்றினை நோக்கும்ஆ அனைய காட்சியாள். 25

566. அப்பொழுது அருட்குறிப் பறிந்த ஐங்கரன்
எப்பொழு தும்பிரி யாம லேமகிழ்ந்து
ஒப்பறு பணிபுரி வோரைப் பொன்னைநற்
துப்பிதழ் வாணியைச் சசியைச் சூழ்ந்துறும். 26

567. சிந்துர நுதற்திரு அரம்பை மாதரைத்
தந்திரு மலர்க்கணாள் நோக்கிச் சாபநன்
மந்திர நினைந்திடக் கோவின் வண்ணமாய்ச்
சுந்தரி யுடன்கலந் தெங்குஞ் சூழ்ந்தனர். 27

568. அரம்பைய ராகிய ஆன்கள் சூழ்ந்திடப்
பரம்பொருள் பங்குறை பசுவுங் கன்றதாய்

565. ஐங்கரன் - விநாயகன்.
566. வாணி - சரசுவதி, சசி - இந்திராணி.

நிரம்பருட் கணேசனும் நெடிய குன்றினும்
வரம்புறு நதியினும் வளர்ந்த கானினும். 28

569. பசியபுல் லருந்திநீர் குடித்தும் பைந்துணர்க்
குசையுறு வாலுகக் குன்றி டத்தினும்
இசைவுறு பூம்பொழி லிடத்துஞ் சீதளங்
கசிவுறு சந்திர காந்தத் திட்டினும். 29

570. படுத்தும்வா யசைத்துநற் பதம்பெ யர்த்தும்வந்
தடுத்திடத் தென்றல்கா வலர்கள் தூற்றிட
நடித்திட மயில்கள்கோ கிலநற் பாண்செயக்
குடப்பெரு மடிப்பசுக் குழாங்கள் வாழ்ந்ததே. 30

தேவமாதர் அம்பிகையைக் கண்டு ஆவுரு மேனியிருந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 570.

திருச்சிற்றம்பலம்

16. தேவமாதர் அம்பிகையைக் கண்டு ஆவுரு மேவியிருந்த அத்தியாயம் (சுருக்கம்)

அசுரர்களில் மிகவும் கொடியவனான சோமுகாசுரன் வெற்றி அடைந்ததைக் குறித்துச் சொன்னோம். இப்பொழுது, தேவமாதர்கள் பசு உருவம் அடைந்து அம்பிகையோடு கூடியதைச் சொல்லுகிறோம் கேட்பாயாக என்று தவமியர் மிதிலேசனுக்குக் கூறத் தொடங்கினார்.

முன்பு, மேருமலையை அடைந்த தேவர்களும் தேவ மாதர்களும் ஒருங்கே கூடி இனிமேற் செய்யவேண்டியது பற்றி ஆலோசித்தனர். அப்போது திருமால், துன்பக்கடலில் மூழ்கியுள்ள நமக்கெல்லாம் சிவபெருமானுடைய திருவடிகளே புகலிடமாம். எனவே, நாம் அனைவரும் அவ்விறைவனிடமே செல்வோம் என்று அனைவரிடமும் கூறினார். இதைக் கேட்ட தேவர்கள், நாம் எல்லோரும் கயிலை போகின்ற நேரத்தில் தேவமாதர்களை அசுரர்கள் பார்த்து அழிவு செய்தால் இம்மாதர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்டனர். அதற்குத் திருமால் பின்வருமாறு பதில் கூறினார்.

முன்னொரு காலத்தில் சும்பன், அசும்பன் என்னும் இரண்டு அசுரர்களால் துன்பம் ஏற்பட்டபொழுது, கயிலையை

அடைந்து அம்பிகையிடம் முறையிட்டபொழுது விநாயகப் பெருமானால் இம்மாதர்கள் சாபம் பெற்றனர். அம்பிகை அப்போது நீங்களும் பசு உருவத்துடன் என்னை அடையுங்கள் என்று கூறியிருக்கின்றாள். அந்த நாளை இந்த நாளாக அடையுங்கள் என்று தேவமாதர்களுக்குத் திருமால் கூறினார். அவ்வாறே தேவர்களும் அரம்பையர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினர். பின்பு அனைவரும் கயிலைக்குச் சென்றனர்.

தேவமாதர்களும் தென்திசை நோக்கிப் பல மாதங்கள் கடந்து தண்டகாரண்ணியத்தை அடைந்தனர். அங்கு ஒருமாத காலம் அலைந்து தேடியும் அம்பிகையைக் காணாது வருந்தினர். அப்பொழுது அங்கு நாதமுனி வரக்கண்டார்கள். அவரை வணங்கிய மாதர்கள், இனிய இசை யாழ் ஏந்தும் தெய்வீக முனியே! நீவிர் எம்பால் மிகுந்த கிருபை செய்து ஒன்று சொல்ல வேண்டும் என்று வேண்டினார்கள்.

நாரதரும் அவர்களுக்கு ஆசி கூறி, மாதர்களே! நீங்கள் உங்கள் ஆடவர்கள் இல்லாமல் இங்கு வந்த காரணம் என்ன? என்று கேட்டார். அதற்கு அம்மாதர்கள், முனிவரே! முக்காலமும் உணர்ந்த தாங்கள் எங்களுடைய எண்ணங்களை அறியாதவரில்லை. இருப்பினும் கூறுகிறோம். தேவர்கள் யாவரும் சிவபெருமானைக் காணக் கயிலாயம் சென்றனர். நாங்கள் அம்பிகையைத் தரிசிப்பதற்காக இங்கு வந்தோம். அம்பிகை இருக்கும் சரியான இடத்தைத் தாங்கள்தான் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். உடனே நாரதமுனிவர், சச்சிதானந்த வடிவான அம்பிகை எல்லாச் சராசரங்களிலும் பூவின் மணம் போல ஏகமாய்க் கலந்திருக்கிறாள். அப்படியிருக்க நீங்கள் அவளைத் தேடிப் புறப்பட்டது என்ன அதிசயம்! இவ்வாறு தேடுவதற்கு அவள் ஏகதேசியா? (ஓரிடத்திருப்பவளா) என்று கேட்டார்.

நாரதர் இவ்வாறு வினவக் கேட்ட தேவமாதர்கள், முனிவரே! தாங்கள் கேட்பது வியப்பாக உள்ளது. தாகமுடைய ஒருவன் நீர் எங்கே இருக்கிறதென்று கேட்க, அப்பு என்கிற பூதமானது எல்லா இடங்களிலும் விரவி இருக்கிறது உண்பீர்கள் என்று சொல்வதைப் போல் தாங்கள் கூறுகிறீர்கள். தாங்கள் பெரியவர் என்று எண்ணி மதித்துக் கேட்டோம். ஆயின், தாங்களோ ஞானோபதேசம் பண்ணுகிறீர்கள். துறவிகள் இவ்வாறு பரிகசித்துப் பேசலாமா? என்று சினந்து கூறினர்.

தேவ மகளிரின் உண்மையான சினத்தினை உணர்ந்த நாரதர், மாதர்களே! உங்களுடைய அறிவுக்கூர்மையை அறியவே நான் அவ்வாறு கூறினேன். நீங்கள் விரும்பியபடியே அம்பிகையைக் காணும் வழியைச் சொல்லுகின்றேன் வாருங்கள் என்று மேலும் கூறினார்.

இந்தப் பெருமலைக்கு மேற்கே காவிரிநதியின் பக்கத்தில் பல வளமான பகுதிகள் உள்ளன. அவற்றுள் சையபருப்பதம் என்னும் ஒரு மலை உள்ளது. அம்மலையின் அருகில் புட்பாரணியம் என்னும் ஒரு வனம் உள்ளது. அந்த வனத்தில் அம்பிகை பசு உருவத்தோடு விநாயகனும் தாதியர்களும் உடனிருக்க உலாவிக் கொண்டிருக்கிறாள். நீங்கள் அனைவரும் அங்குச் சென்றால் அம்பிகையின் அருளால் அனைத்தும் கிட்டும். சென்று வாருங்கள் என்று தேவமாதர்களை அனுப்பி வைத்தார்.

நாரதர் கூறிய வழியே சென்ற தேவமாதர் புட்பாரணியத்தில் அம்பிகையைக் கண்டு வணங்கினர். பலர் ஆனந்தத்தால் அழுது அரற்றினர். பலர் அம்பிகையைச் சுற்றிச் சூழ்ந்தனர். அவள் பாதங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டனர். மலர் தூவிப் புகழ்ந்து பாடி ஆடினர். செய்வினைத் தொடர் பறவும், உடற்பற்றறவும், மலமாயை இருள் அகலவும், அம்பிகையைச் சரண் அடைவோம்; தீய பகையெலாம் ஒழிந்து தொலைந்திடவும், கொடிய பழிகள் தீரவும், பற்பல நோய்களெல்லாம் தொலையவும் ஞானமயமான அம்பிகையைப் போற்றுவோம்; மெய்ஞ்ஞானமும், நன்மைகள் பலவும், புகழ்மிக்க வாழ்வும், வலிமைமிக்க வீரமும், தவஉறுதியும், வளர்கின்ற நேசமும் அளிக்கவல்ல அம்பிகையைப் போற்றிப் பணிவோம்; என இவ்வாறு பல நற்றுதிகளைக் கூறி தேவமாதர்கள் அம்பிகையை வணங்கினர்.

தேவ மாதர்களின் துதிகளைக் கேட்ட அம்பிகை மிகவும் மகிழ்ந்து தன் எதிரிலிருந்த விநாயகப் பெருமானைப் பார்த்தாள். அப்பொழுது தேவியின் அருட்குறிப்பை அறிந்த ஐங்கரன் தேவமாதர்களை நோக்கி, முன்புரைத்த சாபநன் மந்திரம் நினைந்திட, அம்மாதர்கள் அனைவரும் பசு வடிவை அடைந்து அம்பிகையுடன் கலந்து சூழ்ந்தனர்.

அரம்பையராகிய பசுக்கள் சூழ்ந்திடப் பரம்பொருள் பங்குறையும் தேனுநாயகி பசுவாகவும், விநாயகன் கன்றாகவும்

இருந்து, மலை, நதி, காடு இவற்றிலுள்ள சோலைகளில் பசும்புல்லை உண்டு, நீர் குடித்து, குன்றுகளிலும், பூம்பொழில் களிலும், சந்திரகாந்தக் கல்லிலும் படுத்தும், அசையிட்டும், நடைபெயர்ந்தும் மிகுந்த மகிழ்ச்சியோடு பசுக்குழாங்களாய் வாழ்ந்தனர் - வாழ்ந்தன.

பதினேழாவது
தேவர்கள் கயிலை அடைந்த அத்தியாயம்

571. மிதில பூப!கோ வுறுசெயல் விரித்தனம் இனிமேல்
முதிரு மேருவி லமர்ந்ததே வர்கள்செயல் மொழிவேம்
மதிகொ ளும்படி கேளெனத் தவுமிய வரதன்
இதமி குந்தசெம் பவளவாய் திறந்திவை இசைப்பான். 1

572. செம்பொன் மேருவை விட்டிழிந் தருந்துயர்த் தேவர்
சம்பு ஐந்தெழுத் தேதுணை யாய்மனந் தரித்துத்
துன்ப நீக்கும்வெண் ணீறும்அக் கழுமெயிற் துலங்க
நம்பன் வாழ்கயி லைக்கிரி நாடியே நடந்தார். 2

573. அக்கி ரிப்பிர தக்கண மாகவந் தமரர்
தெக்க ணத்திரு வாயில்முன் னிலங்குபொற் சிகரிப்
பக்க மிக்கஅன் பொடுபணிந் தெழுந்துசோ பானச்
செக்கர் விற்திகழ் மணிப்படி யேறிமேற் சென்று. 3.

574. உம்பர் எவ்வளவு அவ்வளவு உயர்ந்தஉப் பரிகைச்
செம்பொன் முன்முகப் பாகிய சிறந்தமண் டபத்தில்
விம்ப வச்சிரக் கண்ணடி சூழ்ந்த வேதிகையில்
அன்பி னாற்கண நாதர்கள் சூழ்ந்தபடி பரவ. 4

575. வெயிலி லங்குபூ ணணிந்தநாற் புயமும்வெண் ணீறும்
மயிலி லங்கிடு சுரிகையும் பிரம்பும்அக் கமும்நல்
இயல்கொள் முக்கணும் மதிமுகக் கருணையும் இலங்கக்
கயிலை காத்தருள் நந்தியைக் கண்டடி தொழுதார். 5

576. சங்க ரப்பிரதி விம்பசங் கரவிதா ரூப
பொங்கு நற்தயா பரபர போகபூ தேச
துங்க நற்சிவ காரிய துரந்தர கருணை
பொங்கு சற்குண நந்திகே சுரஎனப் புகழ்ந்து. 6

577. யாங்கள் சொல்லும்விண் ணப்பமொன் றுளதுகேள்
இந்நாள்
ஓங்கு மாபலச் சோமுகன் எங்களுக்கு உமைகோன்

பாங்கி னாற்தரு பதிகளும் செல்வமும் பறித்துப்
போங்கள் என்றெமைத் துரத்தினன் அடித்தனன்
பொருது. 7

578. சகல லோகமும் தன்வசப் படுத்தினன் அவனோடு
இகலும் வல்லபம் எங்களுக்கு இல்லைஎன் செய்வோம்?
புகலெ மக்கும்உம தடியலாற் போக்குவே றுளதோ!
அகில நாயகற் கறிக்கைசெய் தாட்கொளென் றறைந்தார். 8

579. நந்தி நாயகன் கேட்டலும் இரங்கிநான் முகனைப்
பைந்து ழாய்ப்புயப் பாம்பணை மூர்த்தியைப் பலவாம்
இந்தி ராதிவிண் ணவர்களை முனிவரை யெல்லாம்
சிந்து நல்லருட் கண்ணினாற் பார்த்திவை செப்பும். 9

580. கால வேற்றுமை யுண்டர நியதியாற் கட்டுண்
மாலு மாருயிர்க் குள்ளதே கூட்டுவன் மதிக்கிற்
கோல வல்லசு ரர்க்கிது காலமாம் கொடிகள்
மேலு றும்பகல் வெலும்இராக் கூகையே வெல்லும்! 10

581. உங்க ளுக்கிது காலமன்று! ஊழையார் தடுப்பார்?
சங்க ரற்கிவை புகன்றிடுஞ் சமயமும் அன்றாம்
பங்கி லுற்றிடும் உமைபசு ரூபமாய்ப் பிரிந்தாள்
எங்கள் அத்தனும் வேறொன்றும் விசாரியா திருந்தான். 11

582. முன்னுந் தெக்கணா மூர்த்தியாய் இருந்திடும் பொழுதெம்
அன்னை யைப்பிரிந் திருத்தலால் வருந்துய ரனைத்தும்
உன்னி லுங்களுக் கும்அநு போகமே உளதால்
இன்னும் அன்னையைக் கூடியே இரட்சைசெய் திரங்கும். 12

583. அன்று சூதினாற் பிரிவுறல் யாவரும் அறிவீர்
தென்றி சைக்கணீர் போயிருந் தன்னையைத் தெரிசித்து
ஒன்றும் எண்ணுறா தரன்திருத் தாளையே உணர்ந்து
நன்றி சேர்தவம் புரிந்திடில் நாதன்வந் தருள்வான். 13

584. ஆத லாற்பருப் பதங்களிற் குகைகளில் அமர்ந்து
தீதி லாச்சிவ விரதங்கள் அநுட்டித்துத் தினமும்
போது கொண்டரன் பொன்னடிப் பூசைசெய் திரும்போம்
தீது றாதுமக் கென்றனன் தேவர்கள் கேட்டு. 14

---

578. வல்லபம் - வல்லமை. அகிலநாயகன் - சிவபெருமான்.
அறிக்கை - அறிவித்தல். 579. பாம்பணை மூர்த்தி - திருமால்.

581. சங்கரர் - சிவபெருமான். 582. அநுபோகம் - அனுபவம்.

584. போது - மலர்.

585. வேறு வார்த்தையொன் றுரைப்பதற் கிடமின்றி விண்ணோர்
ஆற ணிந்தவற் கிடமறிந் தெம்வர வறிவித்து
ஏறும் இத்துயர் தீர்ப்பதுன் கடனென இறைஞ்சி
மீறும் உட்கவ லையினொடு மேருவின் மீண்டார். 15

586. மேரு விற்சில நாளிருந் தவ்விடம் விட்டு
நீரு லாவுசீர்ச் சையமா பருப்பதம் நிலையிற்
சீரு லாவுபி னாகினி தீர்த்தவுத் தரத்தில்
ஏரு லாவுதே தாக்கினி எனும்வனத் திடையில். 16

587. வந்து கண்டனர் தெய்வவான் பசுநிரை வடிவைப்
பந்த மின்றியே சுற்றினர் தொழுதனர் பரிவால்
அந்த மற்றிடு பசுக்களி னாப்பணை ங் கரனைக்
கந்த னைத்தருங் கோவினைக் கண்டுகண் களித்து. 17

588. துள்ளி னார்கண்ணில் நீர்துள்ளி துள்ளியாய்ச் சோரத்
தெள்ளு நான்மறைச் சிலம்பணி சேவடித் துகளை
அள்ளி னார்தமது உடலெலாம் நீறுபோல் அணிந்தார்
உள்ளும் அன்புடன் உச்சிமேற் கைகுவித்து உரைப்பார். 18

589. போத நாயகி! புராதன நாயகி! புகழ்சேர்
சோதி நாயகி! சுந்தர நாயகி! தொகுமான்
சாதி நாயகி! சதுர்மறை நாயகி! தசைசேர்
ஆதி நாயகி! அஞ்சினேம் யாங்கள்உன் அபயம்! 19

590. இராவ ணம்பெறு சோமுகன் துயரினா லிடைந்தேம்
பராவு கின்றஎங் களையுமிப் பசுப்பகு தியையும்
திரோத மாய்மறைத் தசுரர்கண் தெரிவுறா வண்ணம்
விராவி நின்றுநீ காத்திட வேண்டுமென் றிரந்தார். 20

591. அக்க ணத்திலா னாயகி சிரமசைத் தருள
மிக்க வானவர் உடற்புள கிதமுற விழுந்து
பக்க மெங்கணும் தொழுதுபோய்ப் பருப்பத விடத்திற்
புக்கு வேடமா றாடியே இருந்தனர் புணர்ப்பால். 21

வேறு

592. இவ்வ ணங்க ரந்து வானு ளோர்க ளங்கி ருந்திட
மைவ ணம்பொ ருந்து சோமு காசு ரன்வை குந்தமுற்று
துய்வ ணஞ்சொ லாவ மைச்சர் தம்மை நாடி நம்மிடத்து
ஐவ ணங்கொள் கற்ப கங்கள் அனைத்தும் ஈயும் என்றனன். 22

585. ஆறணிந்தவர் - சிவபெருமான்.
586. உத்தரத்தில் - வடக்கில் 590. இராவணம் - ஆரவாரித்தல்.

593. அவ்வு ரைக்க மைச்சர் சொல்வர் ஐந்தருக்கள் வானிலுஞ்
செவ்வி தான பூவின் மேவு தேவி ருந்த வூரிலும்
இவ்வை குந்த உலக மீதும் இருப்ப தின்று விண்ணவர்
வவ்வி யேகி னார்க ரந்து வைத்தி ருப்ப ரென்றனர். 23

594. அச்சொல் சோமு கன்செ விக்குள் அழல்பு குஞ்ச லாகையை
வைச்ச தென்ன மருவும் வேளை வாயை மென்று சினமிகுந்து
இச்சொ லின்று காறும் நீர்சொ லாத தென்கொ லெனமுனிந்து
உச்சி முற்று கதிரை யொத்து ருத்த மூன்று சொல்லுவான். 24

595. மண்ட லத்தில் நீவிர் மிக்க சேனை யோடு மருவியே
அண்ட ரெங்கி ருக்கி னும்அ டர்ந்து கொல்லும் அவர்களுக்கு
உண்டி டப்பல் வேள்வி செய்தங் கூட்டு மாதி வருணரைக்
கண்டி டத்தெ லாம டுங்கள் கழறும் வேத புருடரை. 25

596. பிடித்து வாரும் கற்ப கங்கள் பேணி வைத்த விடமறிந்து
எடுத்து வாரும் என்று சொல்லி ஏவி னான்முன் னிவையறிந்து
அடுத்த கற்ப கங்க ளைந்தும் அமலை யுள்ள டக்கிநாற்
தடத்தும் வேத நூபு ரந்த ரித்த தன்மை யுணர்கிலான். 26

597. அசுரன் மிக்கிவ் வாறு ரைப்ப ஆணவக்கு ணங்கள்நற்
பசுவி னத்தை மூடு கின்ற பான்மை போலப் பாதகர்
விசையின் மொய்த்து வந்து பாரின் மேவி யெங்கு மனுடர்கட்கு
இசைவு பெற்ற தரும முற்றி ராத வாற ழித்தனர். 27

598. காம தேனு வடிவ மான கன்னி மேவு மலையயற்
சேம மாயி ருந்த வுற்க நகர்சி றந்த காம்பிலி
நாம மேவு காமநன் னகர மாள வம்முதற்
தூம மேவும் அங்கி வாதை செய்து சூறை யாடினார். 28

599. செபத வங்க ளரிய வோமஞ் செயுமி டங்கள் வேள்விசெய்
சுபவி டங்கள் வேத நான்கு சொலுமி டங்கள் அறவர்சேர்
சபையி டங்கள் இல்லை யென்னுந் தன்மை செய்து தானவர்
விபரி தங்கள் கொலைகள் செய்து மேவு போது சோமுகன். 29

600. இன்னு நம்மி டத்தி லேகு தகுவர் வந்தி லார்களென்று
துன்னி யேபு விக்கண் மீது குத்த சேனை யுடனுதித்து
அன்னை தேவ ருக்க ளித்த வரம றைப்ப தறிகிலான்
பன்னு வேத மொடுத ருக்கள் பற்ற வென்று தேடினான். 30

596. அமலை - அம்பிகை. 599. விபரிதங்கள் - விபரீதம் - மாறுபாடுகள்.

601. கண்டி டாத வகையி னாற்க னன்று சோமு காசுரன்
பண்டை வேதம் அந்த ணாளர் பகரு நாவில் வைகும்விண்
அண்டு கற்ப கங்க ளைந்தில் அருளுங் காம தேனுவிங்கு
உண்டெ னும்ப சுக்கு லத்தில் உற்றி ருக்கும் என்றெணி. 31

602. பாவச் சன்ம முற்ற பாவி பசுவி னங்க ளுக்குநற்
தேவ பூசு ரர்க்கு மீங்கி சைதொ ழிற்கள் செய்துகொண்டு
ஆவற் சிந்தை கொண்டு வைகுந் தத்தின் மேவி னான்விணோர்
ஓவிச் சென்று விந்த மூடொ ளித்தி ருந்து செய்குவார். 32

603. மான மான தழியில் ஆவி வைத்தி ருக்க லாகுமோ
கான மேவு தேவ வான்க ணங்கள் வைகு மவ்விடத்து
ஊனர் வந்து லாவி லாங்கொ ளித்தி ருந்து கொல்வதே
ஆன தென்று முனிவர் தேவர் அந்த ணாளர் அவரொடும். 33

604. பிரமன் மாயன் ஆதி யோர்கள் பேசி யேயவ் வாறுசெய்து
இரவி னோடு பகலெ லாம்வே டங்கள் மாறி யேதிரிந்து
அரனை மேக நாடு சாத கங்கள் போல அனுதினம்
வரவு நோக்கி யேதி யான மதிகொ டங்கு வைகினார். 34

605. அருண்மி குந்த கவுரி மீதில் அரிய தாக மோகமாய்த்
திருமி குந்த கயிலை மீதி ருந்து சிந்தை செய்திடும்
பொருளி லங்கு மறையி னுச்சி புணர்ப தப்ப ராபரன்
கருணை கொண்டவ் ஆனி னங்கள் காண வந்த
துரைசெய்வாம். 35

தேவர்கள் கயிலையடைந்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 605

திருச்சிற்றம்பலம்

17. தேவர்கள் கயிலை அடைந்த அத்தியாயம் (சுருக்கம்)

மிதிலேசனே! தேவமாதர்கள் பசு உருவம் எய்திய வரலாற்றை விரிவாகக் கூறினோம். இனிமேல், தேவர்கள் கயிலையிலிருந்த செயல்களைப் பற்றிச் சொல்லுகின்றேன் கேட்பாயாக எனத் தவுமிய முனிவர் கூறத் தொடங்கினார்.

தேவர்கள் அனைவரும் மேருவை விட்டு நீங்கி, இறைவனுடைய ஐந்தெழுத்தையே துணையாக மனதிற்

கொண்டு, துன்பத்தை நீக்கவல்ல வெண்ணீற்றையும் அக்கமணி களையும் உடம்பிலே அணிந்து கொண்டு, சிவபெருமான் எழுந்தருளியுள்ள கயிலையை நோக்கி நடந்தனர். அவர்கள் வலமாக வந்து தெற்கு முகமாக விளங்கும் கோபுரத்தை வணங்கி எழுந்து சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடத்திற்குப் படியின் வழியாக மேலே சென்று நந்தியெம்பெருமானை வணங்கித் துதித்தனர்.

நந்தியெம்பிரானே! மிகுந்த பலசாலியான சோமுகாசுரன் எங்களுடைய இருப்பிடங்களையும் செல்வங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு, எங்களையும் அடித்துத் துரத்திவிட்டான். எங்கள் உலகங்களையும் தன்வசமாக்கிக் கொண்டான். அவனுடைய வலிமைக்கு முன்னால் நாங்கள் போரிட்டு வெல்லவும் முடியவில்லை. நாங்கள் என் செய்வோம்; இப்பொழுது உமது திருவடியே எங்கட்குப் புகலிடமாம். எங்களுடைய இந்தப் பரிதாப நிலையை இறைவனிடம் தெரிவிப்பாயாக என்று தேவர்கள் விண்ணப்பித்தனர்.

இவற்றையெல்லாம் கேட்ட நந்தியெம்பிரான் மனமிரங்கி அனைவரையும் அருளுடன் நோக்கிக் கூறத் தொடங்கினார்.

இறைவனுடைய கட்டளையினால் காலவேற்றுமை யானது உண்டு; அந்தக் கட்டுப்பாட்டில் மயங்குதல் என்பது உயிர்கட்கு இயற்கையேயாகும். அந்த இயற்கையில்தான் இறைவன் சேர்ப்பிப்பன்.

இப்பொழுது அசுரர்களுக்குக் காலமாகும். உங்களுக்கு இது காலமன்று. ஊழ்வினையை யாரால் தடுக்க முடியும். சிவபெருமானிடம் இவற்றைத் தெரிவிக்கும் சமயமும் இப்போது இல்லை. ஒருடலாயிருந்த இருவரில் உமையம்மை பசு வடிவம் பெற்றுப் பிரிந்துள்ளார். எனவே, சிவபெருமானும் எதையும் விசாரியாமல் இருக்கிறார்.

முன்பு இறைவன் தட்சிணாமூர்த்தியாய் இருந்தபொழுதும் அம்பிகையைப் பிரிந்திருந்தார். அந்தத் துயரமான நிலைகளைப் பற்றியும் தாங்கள் எல்லோரும் அறிவீர்கள். இன்றும் அம்பிகையைக் கூடிய பின்னரே உங்களுக்கு இறைவன் அருள்புரிவார். எனவே, நீங்கள் தென்திசைப்பக்கம் சென்று அம்பிகையைத் தரிசித்து வேறொன்றும் நினையாமல் சிவபிரானுடைய திருவடிகளையே உணர்ந்து தவம் செய்யுங்கள்.

இறைவன் காட்சிதந்து அருள் புரிவார். மலைகளிலும் குகை களிலும் அமர்ந்து, சிவ விரதங்கள் இருந்து, நாள்தோறும் மலர்களால் இறைவன் திருவடிகளை அர்ச்சித்துப் பூசை செய்யுங்கள். உங்களுக்கு எந்தத் தீங்கும் வராது என நந்தியெம்பெருமான் கூறினார்.

தேவர்கள் இவற்றைக் கேட்ட பின்னர், தங்களுடைய நிலையை இறைவனிடம் தெரிவிக்குமாறு கூறிவிட்டுக் கயிலை யிலிருந்து திரும்பினர். சைய பருவதத்திலுள்ள பினாகினி தீர்த்தத்திற்கு வடக்கேயுள்ள தேதாக்கினி என்னும் வனத்தில் வந்து சேர்ந்தனர். அவ்வனத்தின் நடுவில் பசு வடிவான அம்பிகையைத் தேவர்கள் தரிசித்தார்கள். கைகூப்பித் தொழுது வணங்கினார்கள். பசுக்களினிடையேயுள்ள விநாயகனையும் கந்தவேளையும் கண்ணால் கண்டு களித்தார்கள்.

பின்பு அம்பிகையை வணங்கி, தேவியே! நாங்கள் உன் அபயம். சோமுகாசுரன் செய்த துன்பங்களால் பெரிதும் துயரமுற்றோம். துதிக்கின்ற எங்கள் தேவ கூட்டங்களையும் இப்பசுக்கூட்டங்களையும் மறைத்து அசுரர்கள் அறியாதவாறு காத்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். இதற்கு, அம்பிகையும் தலையசைத்து அருள் செய்தாள். தேவர்களும் மாறுவேடத்தில் அந்தப் பசுக்கூட்டத்துடனே இருந்தனர்.

தேவர்கள் இவ்வாறு மறைந்திருக்க, சோமுகாசுரன் தன் அமைச்சர்களை அழைத்து நம்மிடம் உள்ள கற்பகங்களை வரவழையுங்கள் எனக் கட்டளையிட்டான். உடனே அமைச்சர்கள், ஐந்து கற்பகத் தருக்களும் தேவர் உலகத்தும், சத்திய உலகத்தும், இந்த வைகுந்தத்தும் இல்லை; தேவர்கள் கொண்டு சென்று மறைத்து வைத்துள்ளனர் என்று கூறினர். இதைக் கேட்ட சோமுகன் மிகுந்த சினமடைந்தான். நீங்கள் அனைவரும் உடனே செல்லுங்கள். தேவர்கள் எங்கிருந்தாலும் அவர்களைக் கொல்லுங்கள். அவர்கள் உண்ணும்பொருட்டு பல வேள்விகளைச் செய்து உணவளிக்கும் வருணரைப் பார்த்த இடத்திலேயே அழியுங்கள். வேத புருடரைப் பிடித்து வாருங்கள். கற்பகங்களைக் கொண்டு வாருங்கள் என்று அசுரர்களை ஏவினான்.

இவையனைத்தையும் அறிந்த அம்பிகை கற்பகங்கள் ஐந்தையும் தன்னுள் அடக்கி, வேதங்களை நூபுரமாகத் தரித்துக் கொண்டாள். இவை யாவும் சோமுகாசுரனுக்குத் தெரியாமலிருந்தன.

ஆணவ மலமானது நல்ல ஆத்மாக்களின் அறிவையும் மூடுகின்ற தன்மை போல, பாதகர்களாகிய அசுரர்கள் வேகமாக வந்து பூமியிலே பொருந்தி மனிதர்களுக்குத் தருமமே பொருந்தாதபடி அழிவுசெய்யத் தொடங்கிடனார்கள். காமதேனுவின் வடிவமான அம்பிகையுள்ள மலைக்குப் பக்கத்தில் பாதுகாப்புடன் இருந்த இடத்தையும் தீயினால் கொளுத்திச் சூறையாடினார்கள்.

மேலும், செபம், தவம், ஓமம், முதலியன செய்கின்ற இடங்களையும், வேள்வி செய்யும் இடங்களையும், நான்மறைகள் ஓதுமிடங்களையும், நீதி செலுத்துமிடங்களையும், இல்லாமல் செய்து, அசுரர்கள் விபரீதங்கள் செய்தனர். கொலைகள் செய்தனர்.

சோமுகாசுரன், போன அசுரர்கள் இன்னும் திரும்பவில்லையே என நினைத்து, சேனைகளுடன் பூமியில் வந்து வேதம், தருக்கள் போன்றவற்றைப் பற்றிக்கொள்ளத் தேடினான். அம்பிகை தேவர்களுக்கு அளித்த மறைவை அவன் அறியாதவனாகவும் இருந்தான்.

ஒன்றையும் காணமுடியாதவனாய்ச் சினம் மிகுந்த சோமுகன், கற்பகங்கள் காமதேனு ஆகியவை இப்பசுக்கூட்டங்களுடன் இருக்குமென்று கருதி வைகுந்தத்தை அடைந்தான். தேவர்களும் இரவு பகல் எல்லாக் காலங்களிலும் வேடம் மாறித் திரிந்து கொண்டு, சிவபெருமானைத் துதித்தும் அவன் வரவை எதிர்பார்த்திருந்தனர்.

அம்பிகை மீது மிகுந்த மோகமாகி அவளையே நினைத் திருந்த இறைவன் ஆனினங்களைப் பார்க்க வந்த வரலாற்றை இனி உரைப்போம்.

பதினெட்டாவது
கயிலைநாதன் கபிலைகளுக்குக் காட்சி கொடுத்த அத்தியாயம்

606. வெள்ளிவெற் பிடத்திற் பாக மங்கைதன் விரக மிஞ்சி
உள்ளெழின் மாட மொன்றின் உவந்திருந் தருளும் அண்ணல்
கள்ளவிழ் கோதை மாதின் கபிலையா னுருவு காணக்
கொள்ளுமுள் ளாசை பொங்கிக் கோயில்விட்
டெழுந்தா னன்றே. 1

---

606. அண்ணல்-சிவபிரான்.

607. வாயிலின் புறத்து மேவக் காண்டலும் வணங்கி நந்தி
சேயபூங் கமல பாத பீடிகை யடியிற் சேர்த்தித்
தாயனான் கமலக் கையைத் தன்கையாற் தாங்கி நிற்பத்
தூயவன் புடைய தொண்டர் யாவருந் தொழுது
சூழ்ந்தார். 2

608. காண்டவர் தங்கட் கெல்லாங் கருணைநோக் களித்து நந்தி
மாண்டகு வதனம் நோக்கி வணங்குநற் கணங்க ளோடும்
பூண்டசீருமையை யென்றும் போலஎம் இடது பால்வைத்து
ஈண்டுநாம் எய்துங் காறும் கயிலைகாத் திருநீ என்று. 3.

609. மற்றொரு கயிலை முன்பு வந்துநின் றதுபோல் நின்ற
வெற்றிவெள் விடையின் மீது மேவிவிண் மீது தோன்றச்
சுற்றினர் அநேக கோடி சுந்தரப் பூத நாதர்
பற்றொடும் வீர பத்திரர் பரவுசீர்க் கேத்திர பாலர். 4

610. அன்புறு சாலோ கத்தோர் அழகுசா மீபம் பெற்றோர்
இன்புறு சாரூ பத்தோர் இரண்டற நேய முற்றோர்
பொன்புரை சடிலம் பூதி சாதனப் பொலிவி னோடும்
பின்புற முன்பு செவ்வேள் பிணிமுக மீது போத. 5

611. பஞ்சதுந் துமிகள் சின்னம் பணிலங்கள் தாரை பேரி
எஞ்சலி லியங்கள் எங்கும் எழுமொலி யின்றி யெய்த
விஞ்சையர் பாட லின்றி வீணையாழ் சுமந்து செல்ல
வஞ்சநன் னடையா ராடல் இன்றியே யமைந்தாங் கேக. 6

612. மாகதர் புகழ்த லின்றி மறைகளேத் தொலியு மின்றிச்
சேகறு கணங்க ளார்த்துச் செருக்கொடுங் குதிப்ப தின்றி
ஏர்கெழு மணிப்பூ ணாரம் எழிற்கழல் சிலம்பு தண்டை
பாகுகொள் களபஞ் சாந்தம் பைந்தொடை யணித லின்றி. 7

613. விரிந்திடு சடையும் மெய்யி லணிந்திடு நீறும் அக்கும்
பொருந்துமான் மழுவு நாகப் பூணொடு புரிமுந் நூலும்
வரிந்துவெம் புலித்தோல் சாத்து மருங்குலும் உமையாள்
தன்னைப்
பிரிந்திடு மெலிவுங் காட்டிப் பிஞ்ஞகன் தென்பால் நோக்கி. 8

614. சத்த மொன் றின்றி ஞானச் சமுத்திர மேரு மாபோல்
வித்தக வுதர குண்டன் மேற்பிடித் திடுங்கு டைக்கீழ்

610. பிணிமுகம்-மயில். 612. மாகதர்-பாணர்.

அத்திர விரைவிற் செல்லும் ஆன்விடை யூர்ந்து சென்றான்
பத்தியெண் கண்ட நீங்கிப் பாரத கண்டத் தெல்லை. 9

615. இமயமால் வரையை நோக்கி எம்மையாள் ஐயன் எய்தும்
அமையம்வெற் பரசன் வந்தங்கு அடிதொழ அன்பி னாடித்
தமைமதித் தம்பொன் மேருத் தன்னுட னிகலி நீண்டு
கமையுறும் விந்த வெற்பின் கண்ணயல் வந்தா னன்றே. 10

616. ஆங்குசோ முகனுக் கஞ்சி அமர்ந்தவிண் ணோர்க ளெல்லாம்
தூங்குநீர் மேகங் கண்ட தோகைமா மயில்க ளேபோற்
தேங்குசோ பங்கள் தீர்ந்து சிந்தையுள் மகிழ்ந்து வந்து
பாங்குசூழ்ந் தண்ணல் பாத பங்கயந் தொழுதெ ழுந்து. 11

617. எழுந்தருள் குறிப்பு நோக்கி இடர்களொன் றியம்பா ராகிச்
செழுந்தர ளங்கள் சிந்துஞ் செய்கைபோற் கண்ணீர் சிந்தித்
தொழுங்கர முச்சி சேர்த்தி நின்றிடுஞ் சுரர்கட் கின்பப்
பழம்பொரு ளானோன் செங்கைப் பங்கய அபயம் ஈந்து. 12

618. தேவருந் தொடர்ந்து சூழச் சேவுகைத் தமலன் சென்று
மேவருந் தவஞ்செய் சைய வெற்பயன் மருவும் போது
காவிடத் துயர்ந்த குன்றிற் காவலன் வரவு பார்க்கும்
கோவினம் அண்ணல் கொற்றக் குடையினைக் கண்ட
தன்றே. 13

619. உவாமதி தனைக்கண் டார்க்கு முத்திபோற் கதறி அண்ணாந்து
அவாவுடன் பார்க்கக் கண்ட அண்ணலும் அடுத்து நோக்கக்
கவான்மடுப் பால்கள் சிந்தக் கண்கள்நீர்த் தாரை சிந்தத்
தவாதநீர் மயங்கள் சிந்தச் சம்புவை நோக்கிற் றன்றே. 14

620. எண்ணிலாப் பசுக்க ணாப்பண் எண்ணிலா வுலகை யீன்ற
வண்ணவான் தன்னை நோக்கும் வண்ணமங் கரனு நோக்கி
உண்ணெகிழ்ந் தொத்து நின்ற தன்மையார் உரைக்கற் பாலார்
கண்ணுதற் பரனும் அந்தக் கவுரியும் அறிந்த தல்லால். 15

621. அப்பொழு தரவென் றார்த்தங்கு அன்பர்பூ மாரி பெய்தார்
மெய்ப்பொடு கருணை நோக்கம் விமலன்கோ வினத்துக் கீந்து
செப்புவன் எவர்க்கும் இந்தத் தெய்வவான் பசுக்கள் தந்த
ஒப்பருங் கோம யத்தி னுதிப்பது வில்வ மாகும். 16

---

619. உவாமதி - பூரணைச்சந்திரன்.

620. நாப்பண் - நடுவில்.

622. கோசல மதனி னெற்குங் கிலியமுற் பலஞ்சந் தாதி
வாசநற் பொருள்க ளெல்லாம் வந்திடுஞ் சொரிந்த பாலும்
தேசுறு புவிமேற் பாலி யாறெனச் செல்லு மென்று
நேசமோ டிதனா லெம்மை நிருமித்த குறியின் மீது. 17

623. பஞ்சகவ் வியஞ்செய் தாட்டிப் பைந்தளிர் வில்வஞ் சூட்டி
மிஞ்சவே தூபதீப மிகுநிவே தனஞ்செய் தன்பாய்
அஞ்செழுத் தோதி யென்றும் அருந்துதி புகல்வோர்க் கெல்லாம்
வஞ்சவெம் பவநோய் தீர்த்து மலரடி சேர்த்து மன்றே. 18

624. புண்ணியம் எவைக்கு மூலப் பொருள்பசு வினமே யாகும்
நண்ணுமவ் உருவி லென்றும் நாம்குடி இருப்ப துண்மை
திண்ணிய உயிர்நோய் தீர்க்கும் தெய்வவெண் ணீறு மிவ்வான்
வண்ணநீள் கோம யத்தின் வரிலிதற்கு இணையிங்கு
யாதே! 19

625. என்றுசொல் வதுகேட் டன்பர் கோமய மெடுத்து முன்னம்
குன்றெனக் குவிப்ப நாதன் நுதற்கண்தீக் கொளுத்தி நீற்ற
வென்றிநீ றாதல் கண்டு விரைந்துசுந் தரர்போய் வாரித்
துன்றுபூ திப்பை சேர்த்துச் சோதிநா யகன்பா லேந்த. 20

626. உயிர்கள்நோய் தீரும் வண்ணம் தாய்மருந் துணல்போல் நீறு
பயில்வுறப் பூசி யன்னோன் பைந்தொடை கட்டும் இன்பச்
செயிரறு வில்வத் தாமம் சென்னிதோள் மார்பெங் கெங்கும்
நயமுறச் சூடி நிற்ப நாதனை விடையின் மீது. 21

627. அரிஅயன் ஆதி விண்ணோர் அருமறை முனிவர் அன்பாய்ப்
பரிவுடன் இலிங்க பூசை பண்ணிவந் தடிகள் தாழ
வரியர வசைத்தோன் கையால் வன்தொண்ட ரேந்து நீற்றை
உரிமையோ டள்ளி ஈய வாங்கியுட் கொண்டு பூசி. 22

628. அனைவரும் உய்ந்தோம் உய்ந்தோம் யாங்களென்
றாடிப் பாடச்
சினவிடைப் பாகன் அந்தத் தேசுறும் அடியா ரோடும்
தனைமுக நோக்கி இன்பச் சலதியின் மூழ்கி நின்று
மனமகிழ் பசுக்கள் தம்மை வலஞ்செய்து மகிழ்ந்த போது. 23

629. வேண்டிய வடிவங் கொள்ளும் வேழமா முகத்தோன் வந்தே
ஆண்டடி தொழுது நிற்ப அரன்கையாற் தழீஇத் தைவந்து
மாண்டகு முன்தா யின்ப மருங்குகாத் தருள்போ வென்ன
ஆண்டகை யோனும் ஆன்கன் றாகியே தாய்பாற் சேர்ந்தான். 24

623. பஞ்சகவ்வியம் - கோமயம், கோமூத்திரம், தயிர், நெய், பால் என்பன.

630. **தேவர்க ளுள்ளத் துன்பம் திருவுள மதனிற் கண்டங்கு**
ஏவலை நோக்கி நின்ற வீரனை யினிது நோக்கிப்
பூவில்வந் திடுக்கண் செய்யும் அசுரரைப் பொடித்திங் குற்ற
ஆவினைக் காத்து நம்பால் வருகென அண்ணல் கூறி. 25

631. **இரசதக் கிரியி னின்றும் கூடவந் திடுவோர் தம்மில்**
பரசிமுன் நிற்கும் வீர பத்திர ருடனே சில்லோர்
மருவியங் கிருப்ப மற்ற மனமகிழ் தொண்ட ரோடும்
கருணையெம் பெருமான் விண்ணிற் கரந்தனன்
துறைசை நாடி. 26

பதினெட்டாவது
கயிலைநாதன் கபிலைகளுக்குக் காட்சி கொடுத்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 631

திருச்சிற்றம்பலம்

18. கயிலைநாதன் கபிலைகளுக்குக் காட்சி கொடுத்த அத்தியாயம் (சுருக்கம்)

அம்பிகையினிடத்தில் வேட்கை மிகுந்து அவளது கபிலை உருவத்தைக் காண்பதற்காகக் கயிலையை விட்டுப் புறப்பட்டார் சிவபெருமான். அப்பொழுது அடியார் கூட்டங்கள் அடிபணிந்து வணங்க அவர்களுக்கு இறைவன் அருள்புரிந்தார். பின்பு, நந்தியெம்பிரானைப் பார்த்து, அம்பிகையை நாம் எப்போதும் போல இடது பாகத்திலே வைத்துக் கொண்டு இங்கு வருகின்ற வரையில் நீ கயிலையைக் காத்து வருவாயாக என்று கூறியருளினார்.

மற்றொரு கயிலைமலை வந்தது போன்று வந்து நின்ற வெள்விடை மீது அமர்ந்து இறைவன் புறப்பட்டார். கணநாதர்கள், வீரபத்திரர், க்ஷேத்திர பாலர்கள் முதலானவர்கள் புடைசூழ்ந்து வர அவர் தென்திசையை நோக்கி வந்தார். அவ்வாறு வரும்பொழுது, விந்தமலையின் பக்கமாகச் சோமுகனுக்குப் பயந்து ஒளிந்திருந்த தேவர்களெல்லாம் வெளியே வந்து, நம் துன்பங்கள் தீர்ந்தன என மகிழ்ந்து அரன்முன் வந்து வணங்கினர். இறைவனும் அவர்கள்

631. இரசதக்கிரி - கயிலைமலை.

அனைவருக்கும் அருள்புரிந்து அவர்களையும் உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

இறைவன் இவ்வாறு சையவெற்பின் பக்கமாக வருகின்ற போது, கோவினங்கள் சிவபெருமானின் வெண்கொற்றக் குடையினைக் கண்டதும் பூரண சந்திரனைக் கண்டது போன்று மகிழ்ந்து நோக்கின. சோலையினிடத்துள்ள பசுக் கூட்டங்களையெல்லாம் இறைவனும் நோக்கினார். இவ்வாறு பார்த்ததும் பசுக்களெல்லாம் தங்கள் மடியிலிருந்து பாலைச் சொரிந்தன. கண்களில் ஆனந்தக் கண்ணீரைப் பொழிந்தன.

எண்ணற்ற பசுக்கூட்டங்களின் நடுவே காட்சியளித்த அம்பிகையான கபிலபசுவானது இறைவனை நோக்க, இறைவனும் கபிலபசுவை நோக்கினார். இவ்வாறு இவ்விருவரும் உள்ளம் ஒன்றி நின்ற அருமையை அவர்கள் இருவர் அல்லாமல் வேறு யாராலும் எடுத்துரைக்க இயலாது. இந்நிலையில், அடியார்களெல்லாம் அரகர என்னும் பேரொலி செய்து பூமாரி பொழிந்தார்கள். இறைவனும் அருள் நோக்கம் கொண்டு அவர்களின் துதிகளை ஏற்றருளினார்.

பின்பு, அங்கிருந்த தேவர்கள் அனைவருக்கும் இறைவன் பின்வருமாறு கூறியருளினார். இந்தத் தெய்வத்தன்மை பொருந்திய பசுக்களினுடைய கோமயத்திலிருந்து உதிப்பது வில்வமேயாகும். கோசலத்திலிருந்து குங்குலியம், நீலோற்பலம், சந்தனம் முதலிய வாசனைப் பொருள்களெல்லாம் உண்டாகும். சொரியப்பட்ட பாலும் பூமியில் பாலியாறாக ஓடும். நாமாக இருக்கின்ற இலிங்கத்தின்மீது பஞ்சகவ்யத்தால் நீராட்டி, வில்வம் சூட்டி, தூப தீபம் நிவேதனமாகிய இவற்றைக் காட்டி, ஐந்தெழுத்து ஓதி என்றும் அருந்துதி செய்வோர் களுக்குப் பிறவிநோயைத் தீர்த்து நம்முடைய திருவடிகளிலே சேர்ப்போம் என்றார் இறைவன்.

மேலும், புண்ணியங்கள் எல்லாவற்றிற்கும் மூலப்பொருளா யுள்ளது பசுக்கூட்டமேயாகும். அப்பசுவின் உருவத்திலே நாம் குடியிருப்பது உண்மை. ஆன்மநோயைத் தீர்க்கும் படியான திருவெண்ணீறும் இப்பசுவினது கோமயத்தினின்று உண்டாவதால் இதற்கு நிகராக வேறு எதுவுமே இல்லை என இவ்வாறு இறைவன் கூறினார்.

இவற்றைக் கேட்ட மெய்யன்பர்கள் கோமயத்தை எடுத்துக்கொண்டு வந்து இறைவன் முன்பாக மலைபோலக் குவித்தனர். சிவபிரான் தமது நெற்றிக் கண்ணால் அக்கோமயத்தை நோக்கினார். உடனே அது நீராகியது. இதனைக் கண்ட அணுக்கத் தொண்டரான சுந்தரர் திருநீற்றை விபூதிப் பையிலே அடைத்து இறைவன் பக்கத்தில் ஏந்தி நின்றார். இறைவன் அவ்விபூதியைத் தமது திருமேனி முழுவதும் பூசி வில்வமாலையைத் தரித்து அனைவருக்கும் காட்சியளித்தார்.

அங்கிருந்த திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள் ஆகிய அனைவரும் அன்புடன் இலிங்க பூசை பண்ணினர். பின்பு இறைவனது திருவடிகளை வணங்கினர். சிவபிரான் அனைவருக்கும் திருநீற்றை வழங்கினார். விபூதி பிரசாதம் பெற்ற அனைவரும் உட்கொண்டும் மேலே பூசியும், நாங்கள் உய்ந்தோம் உய்ந்தோம் என ஆடியும் பாடியும் பரவசமடைந் தார்கள்.

வெள்விடை மீது அமர்ந்த சிவபிரான் அங்குள்ள மெய்யடியாரோடும் மகிழ்வுடன் பசுக்களை வலம் வந்தார். அப்பொழுது, வேண்டிய வடிவங் கொள்ளும் விநாயகப் பெருமான் வந்து தந்தையின் திருவடிகளைத் தொழுது நின்றார். சிவபிரான் தம் கையால் மகனைத் தழுவித் தடவி மகிழ்ந்தார். உன்னுடைய தாயாகிய அம்பிகையின் பக்கத்தி லிருந்து பாதுகாப்பாயாக என்று கூறினார். வேழமா முகத்தோனும் பசுக்கன்றாகி அன்னையின் பக்கத்தை அடைந்தார்.

பின்னர், தேவர்கள் அடைந்துள்ள துன்பத்தைத் திருவுளங் கொண்ட சிவபிரான் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தம் ஏவலுக்குக் காத்திருந்த வீரபத்திரரைப் பார்த்த சிவபிரான், தேவர்களுக்குத் துன்பம் செய்யும் அசுரர்களை அழித்து, இங்குள்ள பசுக்களைக் காத்து வருவாயாக என்று கட்டளை யிட்டார்.

கருணையெம்பெருமான் கயிலையிலிருந்து வரும்போது உடன்வந்த சில கணங்களை வீரபத்திரருடன் உதவிக்கு இருக்கச் செய்துவிட்டு, மனமகிழ் தொண்டர் கூட்டத்தோடு புறப்பட்டு துறைசையில் எழுந்தருள வந்தார்.

பத்தொன்பதாவது
முத்திச் சேத்திரத்தில் அசுவத்தவனம்
தோன்றிய அத்தியாயம்

632. விண்ணின் மறைந் தேகும்விம லன்செய்விளை யாடல்
உண்ணிகழும் நேயமொடு ரைத்தருளென் றோது
மண்ணன்மிதி லேசனக மன்பொடு களிப்பத்
தண்ணளி மிகுந்தவுமி யப்படிவன் சாற்றும். 1

633. ஆவுருவி லேதெரிவு றாதுநிறை யும்பால்
தூவுமுலை யின்வழிசு ரந்திடுதல் போல
மேவுமுல கந்தனில்நி றைந்தவிம லன்சீர்த்
தேவர்தொழு முத்திநக ரச்சிவலிங் கத்துள். 2

634. வாசமுறு மாசிலா மணிப்பெயரி னோடு
நேசமிகு கோவடிவு நீக்கிஉமை தன்னைத்
தேசுற அணைத்தருள்செ யுங்கிருபை தாங்கிப்
பாசமற வான்வரவு பார்த்தினி திருந்தான். 3

635. சத்துருவ மானஅவன் சத்தியை நினைக்கில்
எத்தொழிலு மாகுமென எண்ணியது தானோ
சித்துவிளை யாடல்புரி யுஞ்செயலோ தேரேம்
உத்தமிபீ சாக்கர முதிக்குமனு வொன்றை. 4

636. ஏழுதரம் ஓதமனு ஏழுதரு வித்தாய்
வாழ்வுபெற வேஅரன்ம லர்க்கைமிசை தோன்றப்
போழுமதி வைத்த சடி லப்புனித னத்தில்
ஆழமுற மண்ணையடி அங்குலியாற் கல்லி. 5

637. சுத்ததலம் ஏழினும் முதற்தலம தான
முத்திநக ரத்தின்மணி மூர்த்திமுனோர் வித்தைச்
சித்தமகிழ்ந் திட்டதனிற் செஞ்சடையில் நீரை
அத்தமலர் கொண்டுமிக அள்ளியதில் வார்த்து. 6

638. மற்றவிதை யாறையுமவ் வாறுபுடை மன்னும்
நற்றலமொ ராறினும் நலங்கொள் தருவாகி
உற்றிட அளித்தனன்முன் தோகை யொடு மிட்ட
சிற்றுருவ மைந்தவிதை சீர்த்துறைசை யின்கண். 7

---

635. சத்துருவம் - உண்மை வடிவு.

636. அங்குலி - விரல். கல்லி - தோண்டி.

639. முக்கண்மணி நல்லருள்மு ளைத்தெழுதல் போல
வக்கணறி லத்தினிலங் குரித்து முளையாகிச்
செக்கர்நிற மேவுதளி ரீன்றிலை சிறப்ப
மிக்ககொழுந் தானதுமி குந்துபடர்ந் தெங்கும். 8

640. கப்பொடு கவர்ப்பணைக ளாகியே கவிந்தங்கு
ஒப்பறவு டுக்கணமீ தாம்வகை யுயர்ந்தே
அற்புதவீ மூன்றியநே கமுருவு கொண்டு
பொற்புறசு வத்தவன மாயது பொலிந்தே. 9

வேறு

641. இப்படி யெழுந்த பிப்பி லாரணி யத்தி னென்றும்
ஒப்பற விளங்கு மாசி லாமணி இலிங்கத் துற்று
மெய்ப்பரன் இருந்தா னென்று விளம்பிய முனியை நோக்கித்
தப்பிலா அரசன் சத்த தலத்தின் பேர் சாற்றென் றானே. 10

642. கோமுத்திச் சேத்தி ரம்தென் குரங்காடு துறைஎ வர்க்கும்
மாமுத்தி அருளு கின்ற மங்கலக் குடிவிண் மேவும்
கார்மொய்த்த பொழில்சூழ் கின்ற மாந்துறை கஞ்ச னூர்நற்
சீர்மொய்த்த திருக்கோ டிக்கா திருவாலங் காடு மாகும். 11

643. இத்தலம் ஏழுஞ் சுற்றி இன்பொடு வலஞ்செய் துண்மைப்
பத்தியால் ஈசர் பாதம் பணியுமெய்த் தவர்கள் பேறு
புத்தியால் மதிப்ப தன்று கஞ்சனூர் ஆள்வார் போந்து
சத்திய முத்தி பெற்றார் தங்கிளைக் கூட்டத் தோடும். 12

644. இவ்வெழு தலத்தும் ஈசன் இடும்விதை அரசி லஞ்சி
செவ்விய பனசம் சூதம் திகழ்பலா சொடுமா லூரம்
அவ்விய மிலாத ஆலம் ஆகியே அமர்ந்த தின்றும்
எவ்வமில் அசுவத் தத்தின் அற்புதம் இயம்பக் கேள்நீ. 13

645. வைகுந்த மதனிற் சோமு காசுரன் வதிந்திங் கேவ
உய்கின்ற வேத நீதிப் பசுப்பிரா மணர்கட் கூறு
செய்கின்ற அமைச்சர் சேனை யோடும்பன் னிருவர் சேர்ந்து
கைகொண்ட வனத்தை வீர பத்திரன் கணங்க ளோடும். 14

640. அசுவத்தவனம் - அரசவனம். உடுக்கணம் - நட்சத்திர மண்டலம்.

641. சத்த தலம் - ஏழு தலங்கள்: கோமுத்திச் சேத்திரம் (துறைசை). தென்குரங்காடு துறை (ஆடுதுறை), திருமங்கலக்குடி, திருமாந்துறை, கஞ்சனூர், திருக்கோடிகா, திருவாலங்காடு.

646. தேவர்க ளோடுஞ் சென்று வளைந்துநற் செருச்செய் போது
பாவமெய் அசுர ரெல்லாம் பரந்துவந் திகலி யேற்றுக்
கோவமோ டயில்வேல் கட்கம் வில்கணை கொடிய தண்டம்
தாவிலா வெழுக்கள் ஈட்டி சக்கரம் வீசி ஆர்த்தார். 15

647. கணங்களுந் தங்கள் தங்கள் கைப்படை அனைத்துங் கொண்டு
பிணங்கிய அசுரர் சேனை பிணமலை யாகி வீழத்
துணங்கையிட் டலகை யாடச் சோரிநீர் வெள்ளம் ஓட
வணங்குறும் அமரர் மெய்ப்ப அமர்விளை யாட லுற்றார். 16

648. அசுரர்கள் மாயக் கண்ட அசுரமந் திரிகள் ஆர்த்து
விசையொடும் அம்பு மாரி மேகங்க ளொத்துத் தூவத்
துசவிடை வீர னேவுந் தொகுங்கணப் படைவீ ரர்க்குள்
வசையறு சன்ம தர்ச்சந் தருச்சந்தர் மறுகி சாம்பர். 17

649. சாம்பகர் சுமுகர் கொக்கினர் கடகர்சங் கரதூ தர்மிக்
காம்புகழ் தண்டர் நேர்ந்தங் கசுரன்மந் திரிக ளான
வீம்புறு போக காலன் தேவரி விதுர்மு கன்வெம்
பாம்புறழ் எக்ஞ பீடன் பகர்தன்ம நாசன் பாவன். 18

650. சடன்குரு ரன்மா யாவி நிசிசரன் தகுதுன் மூர்க்கன்
படுநிசிப் பவனா மப்பேர்ப் பன்னிரு வரையுங் கட்க
நெடியவேல் சூலம் பிண்டி மழுவெழு நேமி யான
படைகளாற் கைகால் சென்னி யறுத்திமன் பதியிற்
சேர்த்தார். 19

651. பாரிடத் தறத்தைத் தின்ற பாவிகள் வீர மெல்லாம்
பாரிடத் தலைவர் தின்ற பண்பினை அமரர் கண்டு
பேரிடர்த் தலையி னின்றும் பிரிந்துதம் முயிரைப் பெற்றுப்
பேரிடத் தந்தா ரன்றே பிரசநன் மலர்தூஉய் ஆர்த்தார். 20

652. வீரனு மகிழ்ந்தா னப்பால் விண்ணுளீ ரேகு மென்று
பாருறு பூத ரோடும் பசுநிரைக் காவ லாக
வேருறு முலகர் காணா வகைமறைந் திருந்தா னிப்பாற்
காருறு மேனிச் சோமு கன்வரு வானென் றஞ்சி. 21

653. சீருறும் அமர ரெல்லாம் திசைமுகன் தன்னை நோக்கி
வீரனிங் கில்லை காக்கச் சோமுகன் விரைவில் வந்தால்
ஆரெதிர்ந் தளிப்பர் நீபோய் அரன்திருக் கயிலை மேவி
நேரறிந் தீசற் கிந்த நிலைசொலி மீடி யென்றார். 22

654. நல்லதென் றரன்வே தண்டத் திருப்பனென் றயனும் நண்ணச்
செல்லமர் விந்த வெற்பின் தெக்கணந் தேவர் வைகப்
பல்லுறுப் பமைந்த வெல்லா அசுரரும் பட்டா ரென்று
சொல்லுவோம் வைகுந் தத்தென் றிருவராய்த் துலங்கு
கின்ற. 23

655. தூதுவர் ஓடிச் சென்று சோமுகன் அடியில் வீழ்ந்து
பூதர்கள் சிலபேர் வந்துன் புந்திமந் திரிக ளோடும்
தீதுறா அசுர வெள்ளச் சேனைகள் முற்றும் கொன்றார்
தாதையே நாங்கள் மட்டும் தப்பிவந்து உய்ந்தோம்
என்றார். 24

656. சொன்னது கேட்ட லோடும் துடித்தன புருவ மேறிப்
பன்னக முயிர்க்கு மாபோற் பருக்கவே விழித்துச் சீறி
என்னது வலிநன் றாக இருந்தெவ் றெயிற்றுப் பேழ்வாய்
தன்னையே திறந்து நக்கான் உலகுயிர் நிலைதள் ளாட. 25

657. கண்கள்தீப் பொறிப றக்கக் கைகளை முறுக்கி வாயைப்
புண்கொளக் கடித்து ரப்பிப் பொங்கிய வால மென்ன
உண்குகோ வுலகை யென்பன் உயர்ந்தவெற் பெட்டு மின்னே
மண்கொளும் பூழி யாக வாரிமுன் பிசைகோ வென்பன். 26

658. பூதரா நமது சேனை பொடிபடச் செய்த தேவர்
சாதிகள் அனைத்தும் வாரித் தின்றன்றோ தாகந் தீர்வன்
கோதறு சேனை முற்றும் எழுகெனக் கூறி ஆர்த்தான்
நீதிசேர் அமரர் யாரும் அவன்வரு நிலைமை ஓர்ந்தார். 27

659. அஞ்சியென் செய்வோம் என்றே அரவிந்த இலைநீர் போலத்
தஞ்செயல் அழிந்து மிக்க தலைதடு மாற்ற மெய்திச்
செஞ்சடை அண்ணல் பாதம் சிந்திக்கும் போது விண்ணில்
அஞ்சல் என் றெழுசொற் கேட்டார் அரசவூர் சேர்க என்றே.
28

660. படுதுயர் அறிந்து நம்மேல் பசுபதி கிருபை செய்தான்
அடிமைகள் படைத்தோர்க் கென்றும் மாள்வது கடனே
அன்றோ?
திடமொடும் போதிக் கானஞ் சேர்வதே உறுதி யென்று
கடுவினை அசுர னெய்து முனமுருக் கரந்து சென்றார். 29

661. பிப்பிலா ரணியந் தேடிப் பெருகிநீ ரோடும் பொன்னி
ஒப்பிலா நதியின் பாங்கர் ஒருமையாற் போந்து கண்டார்

659. அரசவூர் - துறைசை.

அற்புத மான போதி வனத்தையும் அதனில் வாழும்
தற்பர மான மாசி லாமணி தனையும் மாதோ. 30

662. களிப்பொடும் தொழுது சூழ்ந்து கண்கள்நீர் ததும்ப நின்று
விளித்துநற் தோத்தி ரங்கள் விளம்பியே எங்கள் தம்மை
அளித்திட வேண்டும் பொல்லா அசுரரை ஒறுக்க வேண்டும்
உளத்தினுக் குயிராய் நின்ற ஒருவனே என்னக் கேட்டு. 31

663. காலமுன் றையுமு ணர்ந்திக் காலம்வல் லசுரர்க் கான
தாலிவர் தம்மை யெல்லாம் அரசிடத் தொளிக்க வேண்டும்
ஏலவே யென்று ளத்துள் எண்ணிஎம் பரமன் அந்த
மாலொடும் அமரர் தம்மை மந்திரித் தாவா கித்தே. 32

664. அசுரர்கள் காணா வண்ணம் அரசமா வனமே யாக
விசைவுறும் அமரர் தம்மை யாக்கலும் அமர ரெல்லாம்
பசுபதி யான்நே மித்த படிஅடி மரம்வேர் கொம்பு
நிசமுறும் இலைகாய் ரூபம் ஆகவே நிறைந்து நின்று. 33

665. நாகபூ டணனைப் போற்றி நாடொறும் போதி வண்ணம்
ஆகிநன் முத்திச் சேத்தி ரத்தினில் அமர்ந்தார் இப்பாற்
தாகசோ முகன்பார் மேவிச் சமரில்வீ ரனுக்காற் றாமல்
வேகவே லையினில் வேதன் வேதங்கொண் டொளித்தல்
சொல்வாம். 34

பத்தொன்பதாவது
முத்திச் சேத்திரத்தில் அசுவத்த வனம் தோன்றிய
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் - 665
திருச்சிற்றம்பலம்

19. முத்திச் சேத்திரத்தில் அசுவத்தவனம் தோன்றிய அத்தியாயம் (சுருக்கம்)

விண்ணில் மறைந்து சென்ற சிவபிரானின் திருவிளையாடல்களைச் சொல்லுவீராக என மிதிலேசன் கேட்கவும், தவுமிய முனிவர் அவற்றைக் கூறத் தொடங்கினார்.

பசுவினுடைய உடலெங்கும் நிறைந்திருக்கும் பாலானது பசுவின் முலை வழியே மட்டும் சுரந்திடுவது போன்று. அகில உலகமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவபெருமான்

664. நேமித்த - நியமித்த, ரூபம் - வடிவு. 665. வேலை - கடல்.

இம்முத்திநகரச் சிவலிங்கத்துள் மாசிலாமணியீசர் என்னும் திருநாமத்தோடு அருள்பாலித்து வருகின்றார். இங்கு இவர்,

அம்பிகையின் பசு உருவை நீக்கித் தம்மோடு இணைத்துக் கொள்ளும் கிருபையுடனே தேவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

சத்துருவமான அரன் சத்தியை நினைக்கில் எத்தொழிலும் ஆகும் என எண்ணியது தானோ சித்து விளையாடல் பல புரிந்தார். முன்பு ஒருமுறை இறைவன் தேவியின் பீசாக்கர மந்திரம் ஒன்றை ஏழுமுறை ஓத அம்மனு ஏழு மரங்களின் வித்துக்களாய் இறைவனுடைய திருக்கரத்தில் தோன்றின. உடனே இறைவன் பூமியின் மண்ணைத் தம் திருவடி விரலால் தோண்டி ஏழு தலத்திலும் முதல் தரமான முத்தி நகரமான துறைசையில் ஓர் விதையை இட்டார். அதில், செஞ்சடையிலுள்ள கங்கை நீரைத் தம் கைகளால் அள்ளி வார்த்தார். மற்ற ஆறு விதைகளையும் பிற ஆறு தலங்களில் இட்டார்.

துறைசையின்கண் அம்பிகையுடன் இறைவன் இட்ட விதையானது முக்கண்மணி நல்லருள் முளைத்தெழுதல் போல, அக்கணமே முளைத்துச் சிவந்த தளிராகி, வளப்பத்துடன் எங்கும் பரந்து கிளையாகி ஓங்கி, நட்சத்திர மண்டலத்தினும் உயர்ந்து, விழுது விட்டு அநேக உருவைக் கொண்டு அரச வனமாகப் பொலிவுற்றது. இவ்வாறு தோன்றிய அவ்வனத்தில் மாசிலாமணியீசர் என்னும் திருநாமத்துடன் விளங்கும் இலிங்கத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருந்தார் என்று தவுமிய முனிவர் கூறினார். அதுகேட்ட மிதிலேசன், இறைவன் வித்தினை விதைத்த ஏழு தலங்களின் பெயர்களைக் கூறுமாறு வினவினான்.

1. கோமுத்திச் சேத்திரம் (திருவாவடுதுறை), 2. தென்குரங்காடு துறை (ஆடுதுறை), 3. திருமங்கலக்குடி, 4. திருமாந்துறை, 5. கஞ்சனூர், 6. திருக்கோடிகா, 7. திருவாலங்காடு ஆகிய ஏழுமே அந்தச் சத்தத் தலங்களாகும்.

இந்த ஏழு தலங்களையும் வலம் வந்து பக்திநெறியோடு எம்பெருமானின் திருவடிகளைப் பணிந்து வணங்கும் அடியவர்கள் அளவற்ற பெரும்பேறுகளை அடைவார்கள்.

இந்த ஏழு தலங்களிலும் இறைவன் இட்ட விதையானது அரசு, இலஞ்சி, பனசம், மா, பலாசு, வில்வம், ஆல் என ஏழு

தருக்களாகி இன்றும் விளங்குகின்றன. இவற்றுள், அசுவத்தம் என்னும் அரசமரத்தின் அற்புதத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக என்று தவுமிய முனிவர் சொல்லத் தொடங்கினார்.

வைகுந்தத்திலிருந்து சோமுகாசுரனால் அனுப்பப்பட்ட அவனுடைய அமைச்சர்கள், சேனைகளுடன், பன்னிரண்டு அசுரர்கள் சேர்ந்து கைப்பற்றிய இடத்தை மீட்க வீரபத்திரர் போரிட்டார். அவர் தமது கணங்களோடும் தேவர்களோடும் சேர்ந்து அவ்விடங்களை வளைத்துக்கொண்டு போரிட்ட போது அசுரப்படைகள் அழிந்து பிணங்களாக வீழ்ந்தன. இரத்த வெள்ளம் ஆறாக ஓடியது.

அசுர சேனைகள் அழிவதைக் கண்ட சோமுகாசுரனுடைய அமைச்சர்கள் ஆரவாரித்து, விரைவாக அம்பு மாரிகளைப் பெய்தனர். அப்பொழுது, வீரபத்திரர் ஏவிய படையுள் சன்மதார்ச்சன், தநுச்சந்தர், மநுகிசாம்பர், சாம்பகர், சுமுகர், கொக்கினர், கடகர், சங்கரதூதர், தண்டர் ஆகிய பலரும் ஒன்று சேர்ந்து போரிட்டனர். இவர்கள், சோமுகாசுரனுடைய அமைச்சர் களான போககாலன், தேவரி, விதுர்முகன், எக்ஞபீடன், தன்மநாசன், பாவன், சடன், குரூரன், மாயாவி, நிசிசரன், துன்முர்க்கன், நிசிபவன் ஆகிய பன்னிருவர்களையும் படைகள் பலவும் கொண்டு கை, கால், தலை இவற்றை அறுத்து அழித்தார்கள்.

வீரபத்திரரும் அவருடைய கணங்களும் அசுரர்களை அழித்ததைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து வீரபத்திரரை மலர்களால் அருச்சித்து வணங்கினர். அவரும் அவர்களை ஏகும்படியாகக் கூறித் தமது கணங்களுடன் பசுக்கூட்டங்களைக் காவல் செய்து வந்தார்.

போரில் தப்பிய இரண்டு அசுரர்கள் சோமுகனிடம் ஓடிச்சென்று, எல்லா அமைச்சர்களும் அசுரர்களும் இறந்த செய்தியைக் கூறினார்கள். இதனைக் கேட்ட சோமுகாசுரன் மிகுந்த கோபங் கொண்டான். அசுரப் படையின் வல்லமையைப் பற்றி ஏளனமாகக் கூறிச் சிரித்தான். சினத்துடன் கத்தினான். அசுரப் படைகளை அழித்த தேவர்களையெல்லாம் வாரியெடுத்து நம் பசி தீரச் செய்வோம் எழுந்திருங்கள் என்று ஆரவாரம் செய்தான். சோமுகனின் இந்நிலையை அறிந்த தேவர்கள் அச்சமுற்று நடுங்கித் தடுமாறினர். செஞ்சடை யண்ணல் திருவடிகளைச் சிந்தித்து வணங்கி நின்றனர்.

அப்பொழுது விண்ணிலிருந்து 'அஞ்ச வேண்டாம்' என்று ஓர் ஒலி எழுந்தது. அனைவரும் 'அரசவூர்' சென்று சேருங்கள் என்ற இத்திருவாக்கைக் கேட்டதும் அனைவரும் மகிழ்ந்தனர். பசுபதியாகிய இறைவன் நம்மீது கிருபை செய்தான். சோமுகாசுரன் வரும்முன் போதிவனத்தை நாம் அடைவோம் என்று கூறி அனைவரும் அங்குச் சென்று மாசிலாமணிப் பெருமானை வணங்கித் துதித்தனர்.

பொன்னி என்னும் காவிரி நதி பாயும் அற்புதமான தலமாகிய பிப்பிலாரணியம் என்னும் துறைசையம்பதியில், போதி வனத்தையும் அங்கு வாழும் மாசிலாமணியீசரையும் மகிழ்ந்து வணங்கிய தேவர்கள், பொல்லா அசுரரை ஒறுக்க வேண்டும் என்று இறைவனை வேண்டினார்கள்.

முக்காலமும் உணரவல்ல இறைவன், இக்காலம் அசுரர்களுக்கு என்பதால், தேவர்களையெல்லாம் அரச மரத்திலே ஒளித்து வைக்கவேண்டும் என்று திருவுளங் கொண்டார். திருமால், பிரமன் போன்ற எல்லாத் தேவர்களையும் மந்திரித்து ஆவாகித்து, அசுரர்கள் காணாதவாறு அரசு வனமாகச் செய்தருளினார். இறைவன் நியமித்தவாறே எல்லாத் தேவர்களும் அரச மரத்தின் அடி, வேர், கொம்பு, கிளை, இலை ஆகிய இவ்வுருவமாகவே நிறைந்து விளங்கினார்கள்.

பின்பு, சோமுகாசுரன் பூமியில் வந்து வீரபத்திரனுடன் போரிட்டதில் தோற்றுப்போனான். அவன் வேதங்களைக் கவர்ந்து சென்று கடலில் ஒளித்த வரலாற்றை இனியுரைப்போம் எனத் தவுமிய முனிவர் கூறினார்.

இருபதாவது
சோமுகன் மறைகவர்ந்து வாரிதி மறைத்த அத்தியாயம்

666. தான வப்படைச் சேனைநால்
விதத்தொடுஞ் சமர்பொரு மிகல்வேட்டு
வானை விட்டுமண் டலத்தினிற்
சோமுகன் வந்துகல் மலைதோறும்
கானி டத்தினும் பதிதொறும் தேவரைக்
கணங்களை மிகத்தேடி
ஏனை மற்றிடம் எங்கணும் கண்டிடாது
எய்தினன் உயர்சையம். 1

667. சைய மாமலைப் புறமெலாம்
வளைந்துதே டிடுகின்ற சமயத்தில்
ஐயை யோடமர் தேவவா
னினத்தொலி கேட்டலும் ஆன்முற்றும்
வெய்ய வெம்பசிக் குணவெனக்
கருதியே விரைந்தெழு வதுகண்டு
செய்ய மேனியன் வீரபத்
திரன்கணத் திரளொடு மலைந்தேற்றான். 2

668. சங்கம் எங்கணும் ஆர்த்தனர்
பூதர்கள் தானவப் படைமீது
பொங்கு வெங்கணை மாரிகள்
சொரிந்தனர் புயச்செருக் குடனெண்ணில்
சிங்க மானவை வாரணத்
திரளினிற் சென்றடு மாபோலப்
பங்கி யைப்பிடித் தறுத்தனர்
உடைத்தனர் பற்களைச் சிலபூதர். 3

669. கால்க ளைக்கரங் களைச்சிரங்
களைச்செறுங் கண்களைப் புயந்தோளை
மேல்க ளைக்கவு ளைச்செவி
மடல்களை விற்களைத் தொடுநாணைத்
தோல்க ளைக்கதிர் வாள்களை
வேல்களைத் துண்டமாய் விழத்தாக்கிச்
சால்க ளைப்பொரும் வயிற்றினைக்
கிழித்தனர் தருக்கொடும் சிலபூதர். 4

670. இரதத் தால்இர தத்தினை எடுத்துடைத்து இரைத்தனர் சிலபூதர்
கரட மும்மதக் கரிகளைக் குற்றியே கவிழ்த்தனர் சிலபூதர்
துரக தத்தினைக் காலினால் எற்றியே துவைத்தனர் சிலபூதர்
விரவி மொய்த்திடு கொடிபறித்து எரித்தனர் விறகெனச் சிலபூதர். 5

671. கையி லாயுதம் எடுத்தெதிர் ஏற்பவ ரின்றியே களமெங்கும்
பெய்யு நீள்குரு திக்கடன் மீதினிற் பிணங்களாய் மிதந்தூர்ந்தார்
வெய்ய பேய்க்கணம் கழுகுசே னங்கொடி மிகுந்திடு நரியோரி
கொய்யும் ஊன்கள்உண் டாடின பாடின குதித்தன களித்தம்மா! 6

672. தானும் தேருமாய் நின்றனன் சோமுகன்
தன்படைத் திரள்காணான்
ஊனு றும்பிணக் குவைகளே கண்டனன்
உளறினன் பெருவாயால்
வானு றும்பெரு வில்லெனத் தோன்றுமோர்
தனுவினை வளைத்தேற்றிக்
கானு றுந்தொடைப் பூதர்மேல் வந்தனன்
கண்டனன் விறல்வீரன். 7

673. அன்ன காலையின் ஆவுரு நாயகி
அருட்கயி லையி னின்று
மன்னு பூப்பிர தக்கணம்
வந்திட வந்திருந் திடுமானந்
தன்னை நோக்கின ளதுதிறல்
வீரன்முன் சார்ந்திடத் தொழுதேறித்
துன்னு பூதர்கள் பின்னுற முன்னுறத்
தோன்றிநின் றனன்நேர்ந்து. 8

674. கொல்ல வேண்டிடில் இமைப்பினிற்
கொல்லுவன் கொடியசோ முகன்தன்னை
வல்ல வாறவன் செயுந்திறங்
கண்டிட மதித்தெதிர் மலைந்துற்றான்
அல்லின் மேனியன் சரமழை
பெய்துதிக் கனைத்தையும் அடைத்தார்த்து
வெல்லும் வீரன்மே லுஞ்சில
வடிக்கணை விடுத்தனன் விரைவோடும். 9

675. பனியை மாய்த்திடும் பரிதியின்
கதிரெனப் பற்பல கணைஏவித்
தினையின் மாத்திரத் தவையெலாம்
அறுத்தனன் சிவன்நுதற் கணின்வந்தோன்
முனிவு கொண்டுநா கக்கணை
ஏவினன் மூர்க்கன்புள் ளரசின்கோன்
தனைவி டுத்துவைப் புரியெனப்
பிரித்தனன் சங்கரன் தருமைந்தன். 10

676. பிரமன் மாக்கணை தொடுத்தன
னிசிசரன் பிரமனைத் தளையிட்ட
முருகன் மாப்படை தொடுத்ததை
அறுத்தனன் முதிர்கணப் படைநாதன்

அரிய முற்கணை தொடுத்தனன்
தன்பெயர் அம்பினால் அதைமாய்ப்பத்
திருகு வெஞ்சினச் சோமுகன்
மாயையின் சிலீமுகப் படைவாங்கி. 11

677. பூசை யாற்றிமந் திரஞ்செபித்
துயரும்விற் பூட்டிவல் விசையோடும்
வீசி யார்த்திரு தோள்கொட்டி அண்டமும்
வெடித்திடக் குதிர்த்தார்த்தான்
மூசி முன்புமாய்ந் திடும்படை
அசுரரு முதிர்கரி பரிதேரும்
காய்சி னப்புலி யெண்கரி
யேனநாய் கட்கம்வே விடிமின்கள். 12

678. சண்ட மாருதங் கள்மழை
மண்மழை தழல்விழிக் கொடும்பேய்கள்
மண்டி எங்கணும் சூழ்ந்திட
உலகெலா மறைந்தெதிர் வரக்கண்டே
அண்டர் நாயகன் அஞ்செழுத்
தோதியோ ரம்பினைத் தொடுத்தெய்தான்
முண்ட கன்பெறு தக்கனுக்
கொருதகர் முகச்சிரங் கொடுக்கின்றோன். 13

679. உமைக்கு நாயகன் தேசிக வடிவமாய்
உரைத்தஉண் மையைப் பற்றித்
தமைப்ப ரத்தொடொன் றாக்கிநிற்
பவர்களைச் சார்ந்திடா மலம்போல
நமச்சி வாயஅம் பெதிர்த்துமா
யப்படை நல்கிய மயக்கெல்லாம்
இமைப்பி னிற்புகுந் தறுத்திட
விரவிமுன் இருளென மாய்ந்தன்றே 14

680. ஏது செய்வமென் றசுரர்கோன்
எண்ணுமுன் னிலையயிற் சூலத்தை
நாத னேவலுஞ் சென்றவன்
தேரினை நான்குதிக் கினுஞ்சிந்த
மோதி யீர்த்திடுஞ் சகத்திரம்
பரியையு முதிர்வல வனையுங்கொன்று
ஆதி நாயக னிடத்தினில் வந்திட
அசுரனு மிதுசெய்தான். 15

681. அழிந்த தேரினின் றொருவயி ரக்கதை
அசலம்போ லெடுத்தொல்லை
இழிந்து வந்துவீ ரன்விமா னத்தினில்
இருகையும் எடுத்தோச்சக்
கழிந்தி றும்படி தண்டையோர்
கையிற்பிடித் தொருகையாற் கன்னத்தில்
பொழிந்து வாய்வழி யுதிரநீர்
பொங்கிடப் புடைத்தனன் அடியொன்று. 16

682. வீரன் கையடி பட்டசோ
முகன்விசை யரற்கிறு கிறுத்தோடித்
தூர மைங்குரோ சத்தெல்லை
வீழ்ந்தனன் துஞ்சினா னவன்என்றே
பாரி டங்களும் களிப்புடன்
வீரனைப் பணிந்தனர் உமையாளும்
சீர ருட்கண்நோக் கருளினள்
பசுவெலாம் செழித்துளம் மகிழ்கின்ற. 17

683. சோமுக னென்போன் றுஞ்சின னோவின் றோவென்றே
காமரு பூதர் தேடியே சேருமுன் காயத்துட்
போமுயிர் மீண்டும் வந்து புகுந்தாற் போலன்னோன்
சாமுகங் கொண்டே மூர்ச்சை தெளிந்து தடுமாறி. 18

684. ஓடின னச்சம் பின்புபி டித்துந் தச்சென்றே
நீடிய வெதிரி காச்சிர மத்து நிறைகானிற்
தேடின னங்கே முனிவர்கள் காணான் சினமோடும்
பீடுறு மாங்கோர் சூழலி ருந்தான் பேசாமல். 19

685. பாவியிவ் வாறங் கெய்தி யிருப்பப் பரமேசன்
மேவுநல் வெள்ளிக் குன்றுறும் வேதன் விடையோனை
ஆவலொ டுங்கண் டுறுதுயர் சொல்லா னாய்மீண்டு
தேவர்கள் பால்வந் துறுவதற் கெய்துஞ் செயல்
கொண்டே. 20

686. ஏறிடும் அன்ன வூர்தியு மின்றி இயல்வேத
மூறிடு நான்கு முகமு மறைத்தோர் முகங்கொண்டு
காறடு மாறக் கிழவுரு மேவிக் கைத்தண்டொன்று
ஆறிடை யூன்றி யோர்மறை யோன்போல்
ஆங்கெய்த. 21

687. கண்டு மறித்தா னசோமுகன் நீயார் கழறென்றே
தண்ட மெடுத்தா னுன்தவங் கண்டே தகும்பேறு
பண்டு கொடுத்தோன் நானென வுள்ளம் பயமெய்தி
விண்டிடு சொற்கேட் டானதி னாலுன் உயிர்விட்டேன். 22

688. உன்னிடம் மேவும் ஆரணம் அங்கம் உபவேதம்
தன்னையுஞ் சத்த கோடி மனுக்கள் தமையுந்தந்து
இன்னிலம் விட்டே யேகுதி என்றான் என்செய்வான்
சொன்னது தந்தேன் கொள்ளென ஈந்தான் துணையில்லான்.
23

689. காரண வேதம் ஆனுமை கால்நூ புரமாகிச்
சீருடன் மேவக் காரிய மாகித் திகழ்கின்ற
வாரண வேத மாயிரத் தோடுமற் றதுமுண்டு
பாரணஞ் செய்தே வயிறுநி றைத்தான் பழிகொள்வான்.
24

690. வேதனை நீபோ வென்று விளித்தே விரைவோடு
மோதமி கும்வே லைக்குண்மை நாகத் துடன் மேவித்
தீதுறும் வஞ்சச் சோமுக னார்க்குந் தெரியாமற்
சாதக மாயை யாற்கரந் துற்றான் தனியாகி. 25

691. சிவன்விளை யாடற் செய்தியி தென்றே தெளிவெய்திப்
புவிபெறு தந்தை விந்த வரைக்கண் போய்த்தேவத்
தவர்களை நேடிக் கண்டிட லின்றிச் சையத்திற்
பவவினை மாற்றும் வீரனை யுற்றே பணிவுற்றான். 26

692. மறைகள் பறித்துச் சோமுகன் செல்லும் வகைசொல்ல
இறைமகன் வீரன் சற்று ளிரங்கி ஈசன்பால்
முறையிடு போவென் றுரைசெய வந்தான் முதிர்பொன்னித்
துறைபெறு தென்பாற் போதிவனத்திற் துதியோடும். 27

693. தேன்மலர் கொன்றைச் செஞ்சடை நாதன் திருவுள்ளம்
நான்முகன் மேவுந் தன்மை யுணர்ந்தோர் நல்வாக்காற்
கான்மிகு போதிக் காவுறு தேவர் கணத்தோடு
மான்மக னேசே ரென்றது கேட்டே மருவுற்றான். 28

694. முத்தி நகர்ச்சோ திக்கக நேச முயல்வோடுஞ்
சித்த மகிழ்ந்தே நான்முக னுந்தே வர்கள் கூடப்
பத்தி மிகும்போ திக்குளி ருந்தான் பரிந்திப்பாற்
சுத்தமி குஞ்சாத் தாவுதை யஞ்செய் தொழில் சொல்வாம். 29

694. சாத்தா - அரியரபுத்திரன்

இருபதாவது
சோமுகன் மறை கவர்ந்து வாரிதி மறைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 694

20. சோமுகன் மறை கவர்ந்து வாரிதி மறைத்த அத்தியாயம் (சுருக்கம்)

வைகுந்தத்தை விட்டுப் பூவுலகம் வந்த சோமுகாசுரன் நால்வகைப் படையுடன் மலைகளிலும் காடுகளிலும் தேவர் களைத் தேடி அலைந்தான். இவ்வாறு அவன் சையமலையை அடைந்தபொழுது, பசுக்கூட்டங்களின் ஒலி கேட்டான். இப்பசுக்கள் எல்லாம் நம்முடைய பசிக்கு நல்ல உணவாகும் என்று எண்ணி விரைந்து எழுந்தான். இதனைக் கண்ணுற்ற வீரபத்திரர் தமது பூதப்படைகளுடன் போர் செய்யப் புறப்பட்டார்.

வீரபத்திரரின் படைகள் சங்கநாதம் ஒலித்தனர். அசுரப் படைகள் மீது வெங்கணை மாரி சொரிந்தார்கள். சிங்கமானது யானைக் கூட்டத்தில் சென்று போரிடுவது போன்று போரிட்டனர். அசுரர்களின் மயிரைப் பிடித்து அறுத்தனர் சில பூதர். அவர்களுடைய பற்களை உடைத்தனர் சிலர். இன்னும் சில பூதர்கள் அசுரர்களுடைய கால்கள், கரங்கள், தலைகள், கண்கள், தோள்கள், செவிகள் ஆகியவற்றையும், அவர்களுடைய நாண்கள், வாள்கள், வேல்கள் ஆகியவற்றையும் துண்டு துண்டாக்கி விழும்படி அடித்துச் சிதைத்தனர். அசுரர்களின் சால்கள் போன்ற பெரிய வயிறுகளைக் கிழித்தனர். மேலும் இரதங்களை உடைத்தும், யானைகளைக் குத்திக் கீழே தள்ளியும், குதிரைகளைக் காலால் உதைத்தும் போரிட்டார்கள்.

அனைத்து அசுரர்களும் இறந்த பின்னர், சோமுகாசுரன் தானும் தேரும் மட்டும் எஞ்சி இருக்கத் தனியே நின்றான். தன்னுடைய படைகளெல்லாம் பிணக்குவியல்களாய் விழுந்து கிடப்பதைக் கண்டு அலறித் துடித்தான். பின்னர் தன்னுடைய பெரிய வில்லை வளைத்து நாணேற்றினான். சோமுகாசுரனின் இந்நிலையை வீரபத்திரர் கண்டார். அப்பொழுது கயிலையி லிருந்து வந்த விமானத்தில் வீரபத்திரர் ஏறி, பூதர்கள் முன்னும் பின்னும் வரப் புறப்பட்டார்.

சோமுகாசுரனைக் கொல்ல வேண்டுமாயின் வீரபத்திரரால் இமைப் பொழுதில் கொன்றிருக்க முடியும். அவ்வாறு செய்யாமல் அவனுடைய வீரத்தைப் போற்றவே அவனெதிரே நின்றார். சோமுகாசுரனும் மிகுந்த கோபத்துடன் பலவிதமான பாணங்களை வீரபத்திரர் மீது ஏவினான். வீரபத்திரரும் பதிலுக்குப் பலவிதமான கணைகளை ஏவி அவற்றை அறுத்தெறிந்தார்.

சோமுகாசுரன் நாகக்கணையை விட்டான்; வீரபத்திரன் கருட பாணத்தை விட்டு நாகக்கணையை அறுத்தார். அசுரன் பிரமன் மாக்கணையை விட்டதும் வீரபத்திரர் அறுமுகவனின் கணையை விட்டு அதை அறுத்தார். பின்பு. சோமுகன் மாயா அத்திரத்தைப் பூசித்து வில்லினிற் பூட்டி வீசி அண்டமெல்லாம் அதிரும்படியாகக் கர்ச்சனை செய்தான். அக்கணையானது இறந்த அசுரப்படைகளையெல்லாம் உயிர்பெற்று எழும்படி யாகச் செய்துவிட்டு வீரபத்திரரை நோக்கி வந்தது. வீரபத்திரர் ஐந்தெழுத்து மந்திரம் ஓதி ஓர் அம்பினைத் தொடுத்து எய்தார். உமைநாயகனைப் பற்றி நின்றோரை மலங்கள் சூழாதது போன்று, அந்நமச்சிவாயக் கணை அசுரரின் மாயா அத்திரத்தின் மயக்கச் செயல்களையெல்லாம் அறுத்து அக்கணையையும் அழித்தது.

இனி என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றான் சோமுகாசுரன். அப்பொழுது வீரபத்திரர் ஒரு சூலத்தை ஏவினார். அது சென்று, அசுரனுடைய தேரை நான்கு திசைகளிலும் சிதறி விழச்செய்து, தேர்க் குதிரைகளையும் கொன்று மீண்டு வந்தது.

அழிந்த தேரினின்று கீழே இறங்கிய சோமுகாசுரன் மலைபோன்ற ஒரு வயிரக்கதையைத் தன் இரு கைகளாலும் எடுத்து வீரபத்திரரின் விமானத்தின் மீது ஓங்கினான். உடனே வீரபத்திரர் தம் ஒரே கையினால் தண்டாயுதத்தைப் பற்றிக் கொண்டு, மற்றொரு கையினால் கோமுகாசுரனின் கன்னத்தில் அறைந்தார். அவன் வாய்வழியே இரத்தம் பெருகியது. அதனால் அவன் மயங்கி ஐந்து குரோசதூரம் போய் விழுந்தான். மண்ணுலகத்தவர் அனைவரும் மகிழ்ச்சியால் வீரபத்திரரைத் துதித்துப் போற்றினர். அம்பிகையும் திருவருட் பார்வைச் செலுத்தினாள். பசுவெல்லாம் செழித்துளம் மகிழ்ந்தன.

சோமுகாசுரன் இறந்தானா இல்லையா என்று பூதகணங்கள் சென்று பார்த்தனர். அதற்கு முன் அவன், மீண்டும் உயிர்

பெற்றெழுந்து, செத்த முகம் கொண்டு, மயக்கம் தெளிந்து அச்சத்துடன் தடுமாறி ஓடினான். பதரிகாச்சிரமத்தின் காட்டில் புகுந்து, எதுவும் செய்யத் தெரியாமல் அங்கேயே ஒரு இடத்தில் பேசாமல் அமர்ந்திருந்தான்.

இந்நிலையில், கயிலையில் இறைவனைக் கண்டு தனது துன்பங்களைச் சொல்ல இயலாத நான்முகன், தேவர்களைக் காண்பதற்காக வந்தார். அன்னவாகனம் இன்றி, நான்கு முகங் களையும் மறைத்து, ஒரு முகத்துடன், கால்கள் தடுமாறும் படியான ஒரு கிழ உருவத்துடன், கையில் ஒரு தடியுடன், ஊன்றி வந்த, அந்தண உருவத்திலிருந்த பிரமனைக் கண்டான் கோமுகாசுரன். அவரை மறித்து நீ யார்? என்றும் கேட்டான். உன் தவத்தைக் கண்டு அளவற்ற வரங்களை முன்பு உனக்கு அளித்த பிரமன் நான் என்று நான்முகன் சொன்னார். உடனே சோமுகாசுரன், நீ பயத்துடன் கூறியதால் உனது உயிரை விட்டேன். உன்னிடம் இருக்கும் ஆரணம், அங்கம், உபவேதம், சப்தகோடி மகாமந்திரங்கள் எல்லாவற்றையும் என்னிடம் கொடுத்துவிட்டு இங்கிருந்து ஓடி விடு என அச்சுறுத்தினான். அதன்படியே பிரமனும் வேறு வழியின்றி அனைத்தையும் கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றார்.

காரணமான வேதங்களானவை அம்பிகையின் திருவடி களிலே நூபுரமாகி முன்னமே பொருந்திவிட்டன. காரியமாகி விளங்கும் ஆயிரம் வேதங்களுடனும் மற்றவைகளையும் உண்டு தன் வயிற்றை நிறைத்த கோமுகாசுரன் மிகவும் வேகமாகப் புறப்பட்டு, யாருக்கும் தெரியாமல் கடலில் சென்று ஒளிந்து கொண்டான்.

இவையனைத்தும் சிவபெருமானுடைய திருவிளை யாடல்களே என உணர்ந்த பிரமன் விந்தமலைக்குச் சென்று தேவர்களைப் பார்க்காமல் சையமலைக்கு வந்து வீரபத்திரரைக் கண்டு வணங்கினார். சோமுகாசுரன் வேதங்களைப் பறித்துச் சென்றதை வீரபத்திரரிடம் கூறினார். அதற்கு அவர், இதனை இறைவனிடம் சென்று கூறி முறையிடுக என்று கூறினார். உடனே, பிரமனும் போதிவனத்திற்குப் புறப்பட்டார். இறைவன், திருவுளப்படியே பிரமனும் அப்போதிச் சோலையிலே தேவர்கணத்துடன் சென்று தங்கியிருந்தார்.

இனி, அரியரபுத்திரனான சாத்தா தோன்றிய வரலாற்றினைக் காண்போமாக.

இருபத்தொன்றாவது
சாத்தாவைப் பிறப்பித்துக் காவல்தொழில் கொடுத்த அத்தியாயம்

695. மிருகன் என்றொரு இராக்கதன் மிகுபல சாலி
திருகு சிந்தையன் அருளிலான் ஆணவத் திறத்தான்
கருகு மேனியன் பிறைஎயிற் றினன்கனற் கண்ணன்
தருமம் என்பது கண்டிடில் உண்டிடும் தகையன். 1

696. வஞ்ச கத்தினாற் பசுவுரி போர்த்தவல் லியம்போல்
எஞ்ச லிற்பெருந் தவஉருக் கொண்டுநின் றெரியும்
பஞ்ச அக்கினி நடுவுள்நின்று அருந்தவம் பயின்றான்
துஞ்ச லின்றிஈ சானரை நோக்கியே துணிந்து. 2

697. உத்த ரம்புணர் கீழ்த்திசை மூலையி லுரித்தாய்
அத்தர் போல்மழு மான்பெறு கரத்தொடும் அமர்ந்தோர்
பத்தொ டொன்றெனும் எண்பெறுஈ சானரிற் பரிவுள்
வைத்த சங்கர ரெனும்பெயர் தரித்தவோர் வரதர். 3

698. விடையின் மீதுநாற் புயமுமுக் கண்ணும்வெண் ணீறும்
உடைகொள் வெம்புலித் தோலுமார் பரவமும் ஒளிரத்
தடையி லாமிரு கன்செயுந் தவத்தினிற் சார்ந்து
கடையன் மாமுகம் பார்த்தருட் கருணையாற் கழறும். 4

699. மிருக உன்தவம் கண்டுநாம் மகிழ்ந்தனம் மிகவும்
மருவு நல்வரம் வேண்டுவ கேளென வஞ்சன்
உரைசெய் வான்என தொருகர விரலைவை தொடினும்
எரிகொள் சாம்பராய் வெந்திட வரமருள் என்றான். 5

700. அன்ன தேஉனக் காகவென் றறைந்தனன் அடர்நோய்
தன்னை நீக்கினோன் தனைஉணத் துணிந்தசார்த் தூலம்
என்ன வேயந்தப் பதகன்ஈ சானனைத் தொட்டுச்
சொன்ன அவ்வரம் சோதனை பார்த்திடத் துணிந்தான். 6

701. ஈன ருக்குஅறி யாதுஉப காரம்செய் திட்டால்
ஆன பேறிது வோவென அஞ்சிஈ சானன்
ஊன வஞ்சகன் குறிப்பறிந் தெடுத்தனன் ஓட்டம்
சூனி யக்கொடு மிருகனும் தொடர்ந்தனன் துரத்தி. 7

696. வல்லியம் - புலி. ஈசனார் - பதினோரு உருத்திரருள் ஒருவர்.
700. சார்த்தூலம் - புலி. பதகன் - மிருகன்.

702. சங்க ரப்பெயர் உருத்திரன் துறைசையிற் தனித்தோர்
பொங்கர் மேவிய இதழிமா வனம்புகுந் தொளிப்ப
எங்கும் தன்னடி யார்க்குஇடர் மேவுமுன் இரங்கும்
அங்க ணன்திரு மாசிலான் திருவுளத் தறிந்து. 8

703. அரசன் மூலமே வியதிரு மாறனை அழைத்து
விரைவில் நீசென்று மிருகனை அழியென விளம்பக்
கரையி லாக்கொடும் பாவிஎய் திடும்வழிக் கரையிற்
பொருவி லாதஓர் மோகினி யாகிமால் போந்தான். 9

704. கன்னி கைஉரு வாகிய படிவத்தின் கவினை
உன்னி யேஉரை செய்திடில் உவமையொன் றிலதாம்
என்னி னும்சில உரைப்பது கேள்மிது லேச
பன்னு கின்றபா தாதிகே சத்துறும் பண்பு. 10

வேறு

705. பரிபுரம் சதங்கை பாடகம் புனைந்து
பார்மிசை உலவுபங் கயம்போற்
கருதரும் பிடியின் மென்நடை வாய்ந்து
களியுறு ஞமலிநாக் கவின்கொண்டு
அருமணி நிறுக்கும் சிறுதுலைப் பரடும்
அலத்தகப் பந்தன குதியும்
விரிதரு வயிரம் பதித்தென உகிர்சேர்
விரலும்ஏந் தியபதம் விளங்க. 11

706. மன்மதன் முதுகிற் சேர்த்ததூ ணியும்நீர்
மறிவரா லிணையுமெற் கிணையோ
வென்மதி பொருந்திக் கவிஞர்சொல் லினரென்
றெழில்நகை செயுங்கணைக் காலும்
பொன்மய வலவ னிரண்டுள வாகிற்
பொருமெமக் கெனுமுழந் தாளும்
நன்மைகொள் ஈனாக் கதலியின் தண்டு
நமக்கரித் திடும்இரு குறங்கும். 12

707. அரசிலை அரவ படமணித் தேர்த்தட்டு
அதற்கதற் கொப்புவும் விளங்கிப்
பரவிய கீரை வித்துறும் பொற்தட்
டெனமிளிர் பருமவல் குலும்கண்

703. திருமாறன் - திருமால். 706. தூணி - அம்புக்கூடு, கதலியின் தண்டு வாழைத்தண்டு, குறங்கு - தொடை. 707. மருங்குல் - இடை

மருவுறாக் கால நுட்பமே யனைய
மருங்குலும் வடதளிர் வயிறும்
ஒருபுனற் சுழிநா பியும்எறும் பூரும்
ஒழுங்கன வயின்மயி ரொழுங்கும். 13

708. அமுதகும் பத்தோர் விரனுழை வாயில்
அடைத்திடு மரகத மணிபோல்
விழுமிரு தனத்தின் மீதுகண் கறுத்த
விளக்கமும் பூககந் தரமும்
உமிழ்திரை உததி தருமுவா மதிபோல்
ஒளிர்தரு வதனமும் இனிய
குமுதவாய் மலரும் உயிர்களை உருக்கும்
கோதிலா முருந்தன நகையும். 14

709. செந்துகிர் பழுத்தா லனையவாய் இதழும்
செழுங்குமிழ் நாசியும் குழைசேர்ந்த
உந்துபொன் னூசல் அனையவார் காதும்
ஒளிபெறும் ஆடிபோற் கவுளும்
அந்திவான் பிறைநேர் நுதலும்வில் லிரண்டை
அணைத்தபோற் குனிபுரு ரமும்நற்
கொந்தலர் குவளை யெனக்குமிழ் மறிந்து
குழைபுகுந் துலவு சேல்விழியும். 15

710. இருள்குடி யிருந்து களங்கனி எழில்பெற்று
இயற்கைநன் மணம்பொதிந் திருண்டு
கருமுகி லினத்தை அந்தரம் புகுத்திக்
கடைகுழன் றொழுகிவார்ந் தறநெய்த்து
அரியினந் துதைந்து தகரநெய் யிழுகி
அலர்பொதிந் தழகுவீற் றிருக்கும்
சுருள்பெறு குழலுக் கிணையது வல்லாற்
சொலவும் ஒருபொருள் உளதோ. 16

711. வெண்மதிக் குடைக்குக் காம்பிட மதனன்
விரும்புறு பசியவேய்த் தோள்மேற்
தண்மணித் தரள மாலிகை பொற்பூண்
தார்மிகத் தாங்குசுந் தரமும்
பண்மிகப் பயிலியாழ் பிடித்திடு குடங்கைப்
பங்கய முன்கைமேற் பொருந்தும்

708. கந்தரம் - கழுத்து.

709. செந்துகிர் - பவளம். கவுள் - கதுப்பு. புருரம் - புருவம்.

எண்மணிக் கடகம் சரிவளை கிலுங்கும்
எழிலுமொல் கியநிலை உருவும். 17

வேறு

712. கண்ட கண்களைத் திரும்பவாங் காவகை கவரக்
கொண்டு நின்றனன் மிருகனும் அவ்வழி குறுகிப்
பெண்ட கைக்குள்மேம் படும்எழில் மோகினி பிறழும்
கெண்டை யங்கண்நீள் வலையினிற் சிக்கினன் கிடைத்தே. 18

713. துரத்தி வந்தஈ சானனை மறந்தனன் துரக்கும்
சரத்தி னான்மதன் உடலினைத் துளைத்திடத் தரியான்
கருத்தில் வந்தெழு விரகவெவ் விடத்தினாற் கலங்கி
விருத்த மின்றியே மோகினி பதத்தின்மேல் விழுந்தான். 19

714. இருகை கூப்பிநின்று அன்னமே என்னுயிர்த் துணையே
உரிமை யாயெனை யாள்வதற்கு இரங்கிடில் உனைநான்
பிரிகி லேன்விணாட் டரம்பையர் வாழ்வெலாம் பிடுங்கித்
தருகு வேனுனக்கு என்னுயிர் நீதரல் வேண்டும். 20

715. கொவ்வை வாயமு தத்தினைக் கொடுத்தியான் கொண்ட
எவ்வ நோயினை அகற்றவே வேண்டுமென் றிரப்ப
கவ்வு மீன்தனை இழுத்திடும் தூண்டில்போற் கண்ணால்
வவ்வி னாள்அவன் கண்ணையும் மனத்தையும் மகிழ்ந்து. 21

716. மிருகன் தன்னைநேர் நோக்கிவாய்ப் புன்னகை விளங்க
உரைசெய் வாள்என துரைதவ றாவகை ஒழுகின்
மருவு வேன்எனப் புகறலும் மலைமிசை ஏறி
உருளு கென்றுநீ உரைக்கினும் அதுசெய்வேன் உண்மை. 22

717. என்று ரைத்தலும் விஞ்சையர் கன்னிகை யான்நீ
ஒன்று தற்குரி யாயலை அரக்கனாய் உதித்தாய்
இன்று சுத்திசெய் மந்திரம் இயம்புவ னதனால்
நின்று நீஅங்க நியாசஞ்செய் வாயென நிகழ்த்த. 23

718. கொலைஞர் தீயடுப் பேற்றுநீ ராமையின் குணங்கொண்டு
உலைவின் மந்திரம் உரையென உன்கர விரலாற்
தலைமு தற்தொடு மிடமெரி யெரியென்று தரிக்கில்
நலமு தித்திடும் புணர்குவன் உன்னைநா னென்றாள். 24

713. விருத்தம் - அறிவு

717. அங்கநியாசம் - அநுட்டான முறைமைகளில் ஒன்று. அது இதயம் முதலிய இடங்களிலே மந்திரத்தோடு கையாற்தொடுதல்.

719. காமக் கள்ளினை நுகர்பவர் உறுதிகாண் குவரோ
ஏமக் கண்ணினாள் சொலுமுறை மெய்யென இசைந்து
தீமைக் கைவிர லால்மநுச் சொல்லிச் சிரந்தொடலும்
பூமிக் கண்ணுடல் எரிந்துவீழ்ந் தனன்வெறும் பொடியாய். 25

720. அண்ட ரோடொளித் திருந்தஈ சானரும் அவர்போற்
கொண்ட மெய்யினர் பதின்மரும் மலர்கள்தூஉய்க் குழுமி
விண்டு மோகினி யைத்துதித் தார்அங்கண் விமலன்
தொண்ட ருக்கருள் புரிந்திடும் பொருட்டுமுன் தோன்றி. 26

721. மாசி லாமணி மார்பிடு நூலும்மா சுணமும்
தேசு லாம்சடைக் கங்கையும் சிறுபிறைக் கொழுந்தும்
காய்சி னப்புலி யுரிவையும் நாககங் கணமும்
மூசு வண்டலர்த் தார்கொள்நாற் புயமும்முக் கண்ணும். 27

722. காள கண்டமும் சங்கவெண் குழைதிகழ் காதும்
தாளும் நூபுரத் தழகுமான் மழுவினைத் தாங்கு
நாள லர்க்கம லக்கையும் இலங்குபுன் னகையும்
மாளு மன்பருக் கருட்கதிர் பூத்தவா னனமும். 28

723. வேத பாதுகை மீதுநின் றவர்க்கெலாம் விளங்கச்
சோதி நல்லுருக் காட்டலும் துள்ளியார்த் தாடி
ஓது மின்னிசைத் துதிபல பாடிஉச் சியின்மேற்
போது லாங்கம லக்கரம் குவித்துமுன் போற்றி. 29

724. பொங்க ராவணி திண்புயா! போதிநீ ழலில்வாழ்
சங்க ரா!எமை ஆண்டருள் புரிந்திடு தகையோய்!
மங்கு சோமுகன் வேதங்கள் அனைத்தையும் வாரி
நுங்கி யேகினன் ஆதலாற் செயலற நொந்தேம். 30

725. கருணை வைத்துநன் மறையருள் புரியெனக் கழற
அருணம லர்க்கரம் அமைத்துமா முடியினை அசைத்துத்
தருண மோகினி உமைவடி வமைவுறுந் தகையாற்
புரண நாயகன் பாவகப் பரிசினாற் புணர்ந்தான். 31

726. அங்கு நின்றவர்க் கறிவுறாது அரிமனம் அறியப்
பொங்கு சிற்சுகம் காட்டியே தாதுவைப் புரியச்
செங்கை யிற்தரித் தேந்தலும் ஒருசிறு மகவாய்த்
துங்க மேவுநற் சாத்தாவந் துதித்தனர் சுடர்போல். 32

721. மாசுணம் - பாம்பு.

727. அரிக ரத்தினில் அரன்திருத் தாதுவா லங்கம்
மருவ லான்மிகும் அரியர புத்திர வடிவாய்த்
திருநி லத்தினில் விடுமுனம் புயபலத் திறல்சேர்ந்து
ஒருக ரத்தினிற் சூலமும் ஒருகைசக் கரமும். 33

728. வீசும் வாளொடு கேடகம் இருகையும் விளங்கத்
தேசு மிக்கதோர் காளையாய்த் திகழ்ந்துதா தையின்பொன்
வாச மென்மலர்க் கழலிணை வணங்கலும் மலர்க்கை
நேச மோடவன் மேனிதை வந்தரன் நிகழ்த்தும். 34

729. அய்ய இப்புவி அனைத்தையும் காவல்கொண்டு அறத்தை
மெய்யு றத்தினம் காத்திட வேண்டும்ஈண் டுனக்குச்
செய்யும் வன்திறற் பூதமா சேனையும் களிறும்
கொய்யு ளைப்பரித் திரள்களும் வேண்டுவ கொடுத்தேம்.
35

730. அரக்கர் தானவர் பேய்கள்நோய் அனைத்தையும் அடர்ந்து
புரக்கும் இப்புவிப் பதிதொறும் ஆலயம் பொருந்தி
இரக்கம் வைத்துஉயிர் யாவையும் காவென இயம்பித்
திருக்கண் நோக்கினால் நோக்கிஓர் உண்மையும்
செப்பும். 36

731. உண்மை யாதெனில் எத்தலத் தினும்நமக் குண்மை
தண்மை சேர்முத்திச் சேத்திர முதல்எழு தலமாம்
வண்மை யாய்ப்புறக் காவல்எத் தலத்தினு மருவி
எண்மை சேர்சத்த தலத்துண்மைக் காவலாய் இரும்நீ. 37

732. இன்னும் ஒருரை கேள்மறை அந்தணர் இமையோர்
பன்னும் ஆனினம் மூன்றையுங் களைகணாய்ப் பரித்து
மன்னு பூரண புட்கலை தன்னொடும் வாழ்தி
பொன்னி யாற்றினுக் குத்தரங் கோடிகாப் புலனில். 38

733. இனைய நல்வரம் அருளிய தந்தையை இறைஞ்சிக்
கனைக டல்வணக் காரியொன் றுரைப்பன்சங் கரநீ
பனைநெ டுங்கர யானைகள் பலஎமக் களித்தாய்
தினம வையுணும் புசிப்புமீந் தருளெனச் செப்ப. 39.

734. முத்தி மாநக ரத்தில்ஈ சானமூ லையில்நீ
சுத்த மேவிய கோயில்கொண் டிருந்துநீ டுதிக்கை
மத்த யானைகட் கரசினி லுதிரிலை வழங்கிப்
பத்தி யாய்முத்தித் தலத்தையும் அரசையும் பரிநீ. 40

735. என்னு நல்வரங் கொடுத்தெழில் மாசிலா இலிங்கத்து
ஒன்றி னான்அருட் சந்திர சேகர உமைகோன்
துன்று சீர்க்கசா ரணியமென் றொருபெயர் துதித்தே
அன்று தொட்டுவா னவரும்அவ் வனத்திடை அமர்ந்தார். 41

736. தேவர் இவ்வணம் இருப்பமுன் திருச்சைய வரையில்
ஆவி னத்தொடும் அமர்ந்தகோ நாயகி அதைவிட்டு
ஓவி நற்திருக் காவிரி நாட்டினி லுற்றுப்
பூவ னத்திருக் குளம்பியம் சேர்வகை புகல்வாம். 42

இருபத்தொன்றாவது
சாத்தாவைப் பிறப்பித்துக் காவற்தொழில் கொடுத்த
அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 736

திருச்சிற்றம்பலம்

21. சாத்தாவைப் பிறப்பித்துக் காவல் தொழில் கொடுத்த அத்தியாயம் (சுருக்கம்)

மிருகன் என்னும் ஓர் இராக்கதன் இருந்தான். அவன் மிகுந்த பலமுள்ளவன்; மாறுபட்ட மனங்கொண்டவன்; அன்பு இல்லாதவன்; ஆணவம் மிகுந்தவன்; கரிய மேனியுடையவன்; பிறை போன்ற பற்களையுடையவன்; கனல் போன்ற கண்களை உடையவன்; தருமத்தை அழிப்பவன் ஆவான். பசுவுரி போர்த்த புலி போன்ற வஞ்சம் நிறைந்தவன் இவன்.

இத்தகைய மிருகன் ஒருமுறை தவ உருக்கொண்டு எரியும் பஞ்சாக்கினியின் நடுவே நின்று கடுந்தவம் செய்தான். சிவபெருமானைப் போன்று மான் மழு ஏந்திய கரமுடையவரா யிருக்கும் பதினொரு உருத்திரருள் ஒருவரான சங்கரன் என்னும் பெயர் கொண்ட ஈசானர் மூன்று கண்களும், வெண்ணீறும், புலித்தோலும், நாகஅணியும் விளங்க இடப வாகனத்தில் வந்து மிருகன் முன் தோன்றினார். அவனைக் கருணையுடன் நோக்கி, மிருக! உன்னுடைய கடுமையான தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம்; நீ வேண்டும் வரம் யாது? கூறுவாயாக என்று ஈசனார் கேட்டார். அதற்கு மிருகன், என்னுடைய ஒரு கைவிரல் எவை தொடினும் அவை எரிந்து சாம்பலாக வேண்டும். அத்தகைய வரமே வேண்டும் என்று கேட்டான். அப்படியே ஆகுக! என்று ஈசானரும் வரமளித்தார்.

இவ்வாறு வரம்பெற்ற மிருகன், வரமளித்த ஈசானாரையே தொட்டுச் சோதிக்கத் துணிந்தான். அவனுடைய எண்ணத்தை அறிந்த ஈசனார் ஓட்டமெடுத்தார். மிருகனும் துரத்தினான். ஈனருக்கு அறியாது உதவி செய்தால் இப்படியான பயனே கிட்டும் என்பதை நன்கு உணர்ந்த ஈசானர் பலவிடங்களிலும் சென்று ஒளிந்தார். பின்பு துறைசையில் தனித்து ஒரு சோலை யிலுள்ள கொன்றை வனத்தில் புகுந்து ஒளிந்து கொண்டார். எப்பொழுதும் அடியார்கட்குத் துன்பம் நேரும்முன் காத்தருளும் மாசிலாமணிப் பெருமான், இவற்றை நன்கு அறிந்தார். அங்கு, அரசின் வடிவமாய் இருக்கும் திருமாலை அழைத்து, நீ விரைவிற் சென்று கொடும்பாவியாகிய மிருகனை அழிப்பாயாக என்று கட்டளையிட்டார். திருமாலும் மோகினி உருவம் கொண்டு புறப்பட்டார்.

மிருகன் ஈசானரைத் தேடிக் கொண்டு வந்த வழியில் அழகான மோகினியைக் கண்டான். அவன் அழகில் மயங்கினான். மோகினியின் பாதாதிகேச அழகினைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தான். அவளைக் கண்ட கண்கள் வேறு எதையும் காணாத கவர்ச்சியில் தன்னை மறந்து நின்றான் மிருகன். மோகினியின் கண் வலையில் சிக்கினான். தான் துரத்தி வந்த ஈசனாரையும் மிருகன் மறந்தான். மன்மதபாணம் துளைக்க, விரக தாபத்தால் கலங்கினான். மோகினியின் காலில் வீழ்ந்து, இருகை கூப்பி நின்றான். அன்னமே! என் உயிர்த் துணையே! உரிமையாய் என்னை ஆள்வதற்கு மனம் இரங்குவாயானால் உனை நான் என்றும் பிரியேன். தேவ உலக அரம்பையர் வாழ்வையெல்லாம் கைப்பற்றி உனக்குத் தருவேன். உன் அழகில் மயங்கி விரகதாபத்தால் மெலிந்த எனக்கு நீயே உயிர் கொடுக்க வேண்டும் என்று இரந்து வேண்டினான்.

கவ்வும் மீன்தனை இழுத்திடும் தூண்டில் போல் மோகினி தன் கண்களால் மிருகனின் கண்களையும் மனத்தையும் கவர்ந்தாள். அவன் கூறிய சொற்களையெல்லாம் கேட்டு நகைத்தாள். மிருகனை நோக்கி, என்னுடைய சொல்லைத் தவறாது அதன்படி நடப்பாயானால் நான் உன்னைக் கூடுவேன் என்றாள். உடனே மிருகன், மலைமேல் ஏறி உருள்க என்று நீ கூறினும் அதனைச் செய்வேன். எது செய்ய வேண்டுமென்று உடனே சொல் என்றான். மோகினி, நான் விஞ்சையப் பெண்; நீயோ அரக்கன்; எனவே நீ என்னைச் சேர்தல் தகாது; நீ உன்னைச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். இப்போது

நான் ஒரு மந்திரம் சொல்கிறேன். அதைக் கொண்டு நீ அங்கந்நியாசம் செய்வாயாக என்று மிருகனிடம் கூறினாள். உன் தலையை முதலில் எரி எரி என்ற மந்திரம் கொண்டு தொட்டால் உடனே சுத்தியாகி நலமுண்டாகும், அதன்பின் நான் உன்னைச் சேருவேன் என்றாள்.

காமக் கள்ளினை நுகர்பவர் மனதில் உறுதி தோன்றாது என்ற பழமொழிக்கேற்ப மிருகன் மோகினியின் பேச்சில் மயங்கினான். அவள் கூறியவாறே செய்தான். உடல் எரிந்து வெறும் பொடியாகித் தரையில் வீழ்ந்தான். தேவர்களோடும், ஏனைய பத்து உருத்திரர்களோடும் மறைந்திருந்த ஈசனார், மிருகன் அழிந்ததைக் கண்டார். அனைவரும் மலர் தூவி மோகினியைத் துதித்தனர்.

அப்பொழுது அங்கே மாசிலாமணியீசர் அடியவர்கட்கு அருள்புரியத் தோன்றினார். தேவர்கள் அனைவரும் ஆடியும், பாடியும், துதிபல கூறியும் உச்சிமேல் கரம்குவித்து வணங்கினர். இறைவனே! போதி நீழலில் வாழும் சங்கரனே! எங்களைக் காக்கும் தகையோய்! சோமுகாசுரன் எல்லா வேதங்களையும் வாரி எடுத்துக் கொண்டு கடலிலே சென்று ஒளிந்துள்ளான். அதனால் நாங்கள் பெரிதும் துன்புற்றுள்ளோம். எங்கள் மீது கருணை கொண்டு மறைகளைத் திரும்பப் பெற அருள்புரிய வேண்டும் என்று விண்ணப்பித்தனர். சங்கரனும் அன்புடன் தலையசைத்து அபயம் கொடுத்தருளினார்.

பின்பு, சங்கரன் மோகினி வடிவாயுள்ள திருமாலை நோக்கினார். உமையம்மையின் திருவடிவம் நினைவுக்கு வரவே அவருடன் பாவனையால் புணர்ந்தார். இந்நிகழ்ச்சி அங்கிருந்தவர்கள் அறியாமல், திருமாலுக்கு மட்டுமே அறியும்படி ஞானசுகத்தைக் காட்டினார் சங்கரன். அப்பொழுது சிந்திய தாதுவை மோகினி தமது கையில் ஏந்தினாள். அத்தாது ஒரு சிறு குழந்தையாய், 'சாத்தா'வாகத் தோன்றி, சுடர் மிகுந்து விளங்கினார்.

திருமாலின் கரத்திலே சங்கரனது வீரியத்தால் உடலாகப் பொருந்துதலால் அரியர புத்திர வடிவமாகப் பூமியில் விடும் முன்னர் ஒரு கையில் சூலமும், ஒருகையில் சக்கரமும், ஒரு கையில் வாளும், ஒரு கையில் கேடயமும் ஆக நான்கு கைகளிலும் நான்கு ஆயுதங்களைத் தாங்கி, ஒளிமிக்கதொரு காளையாய்த் தன்னுடைய தந்தையின் திருவடிகளை

வணங்கினார் சாத்தா. இறைவனும் தம் அருமை மைந்தனைத் தடவியருளினார்.

அய்யப்பனே! இந்தப் பூவுலகம் முழுவதையும் நீ காவல் புரிந்து அறத்தை உண்மையாகக் காத்திடல் வேண்டும். உனக்குத் துணையாகப் பூத சேனைகளையும் யானைகளையும் குதிரைகளையும் மற்றும் வேண்டியவற்றையெல்லாம் கொடுத்துள்ளோம். அரக்கர்கள், அசுரர்கள், பேய்கள், நோய்கள் அனைத்தையும் கொன்று உலகைக் காப்பாயாக. இப்புவியில் தலங்கள்தோறும் ஆல்யம் பொருந்தி, எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டு காப்பாற்றுவாயாக என்று இறைவன் கூறி, திருக்கண் சாத்தி மேலும் செப்பலானார்.

ஐயனே! ஓர் உண்மையைக் கூறுகின்றேன். எல்லாத் தலங்களைக் காட்டிலும் மேன்மையானவை கோமுத்திச்சேத்திரம் முதலான ஏழு தலங்களாகும். எனவே நீ மற்றத் தலங்களில் புறக்காவலாகப் பொருந்தி, இந்த ஏழு தலங்களிலும் உண்மைக் காவலாக இருப்பாயாக. மேலும், மறை அந்தணர்கள், தேவர்கள், ஆனினங்கள் ஆகிய இம்மூவரையும் பாதுகாத்துக் கொண்டு திருக்கோடிகாவில் உனது துணைவியான பூரண புட்கலையுடன் வாழ்வாயாக என்று இறைவன் கூறியருளினார்.

இவ்வாறு வரமருளிய தந்தையை வணங்கிய சாத்தா அவரிடம் மேலும் ஒன்றினைக் கேட்டு வேண்டினார். தந்தையே! தேவரீர் யானைகளை அளித்தீர்! நாள்தோறும் அவை உண்ணும் பொருட்டு உணவையும் அருள்வீராக என்று கேட்க, இறைவன், முத்திச்சேத்திரத்திலே ஈசான மூலையில் நீ கோயில் கொண்டிருந்து, யானைகளுக்கும் அரசின் உதிர் இலைகளைக் கொடுத்து, மிகுந்த பக்தியுடன் முத்தித் தலத்தையும் அரசையும் காத்து வருவாயாக என்றருளினார். பின்பு, அங்குள்ள மாசிலாமணி இலிங்கத்துள் அருட்சந்திர சேகர உமைகோனாக ஒன்றினார்.

அன்றுமுதல் கசாரணியம் என்றொரு பெயரும் துறைக்கு உண்டாயிற்று. தேவர்களும் அவ்வனத்தில் வந்திருந்தனர்.

இவ்வாறு தேவர்கள் இருக்க, முன்பு சைய மலையில் பசுக்கூட்டத்துடன் இருந்த கோநாயகி அதைவிட்டுத் திருக்காவிரி நாட்டினில் வந்து திருக்குளம்பியம் சேர்ந்த வரலாற்றை இனிப் புகல்வோம்.

இருபத்திரண்டாவது கோவுருவ நாயகி சோணாட்டில் திருக்குளம்பியம் சேர்ந்த அத்தியாயம்

737. கயிலைமலை தனிலிருந்து கருணைதிரு வுருவானோன்
சயிலபதி யெனநீண்ட சையபருப் பதமேவி
நயமருவும் அருட்காட்சி நல்கியகன் றேகியபின்
பயன்மருவு பசுவுருவப் பராபரநா யகிமகிழ்ந்து. 1

738. தேவஆ னினங்களொடும் திருமலையை விட்டிறங்கித்
தாவிலருட் பாலியாற் றங்கரையின் சார்வாய்ப்போந்து
ஆவலொடும் பெண்ணையாற் றங்கரைமீ தருட்துறையின்
நாவலர்கோன் தனையாண்ட நாயகனைத் தொழுதிறைஞ்சி. 2

739. திருக்கெடில நதிமேவித் திகழதிகை வீரட்டர்
மருக்கமழ்பொற் பதந்தொழுது மணிமுத்தா நதிக்கரையின்
இருக்குமிருக் கறியானை எழில்மேவு பழமலையை
உருக்கமுடன் தொழுதங்கோர் உயர்ந்தபூம் பொழிலினிடை.
3

740. பசுக்குலங்க ளுடன்தானும் படுத்திருக்கும் வேளைதனில்
இசைக்குரிய யாழ்கரத்தில் ஏந்துநா ரதமுனிவன்
விசித்தசடை முடிதுலங்க வெண்ணீற்று மெய்யிலங்க
வசித்திடுகண் டிகைமாலை மார்பின்மிசை கிடந்துருள. 4

741. கற்றோய்செந் துகிலுடையும் கங்கையுறு கமண்டலமும்
பற்றேது மில்லாமற் பார்த்திரங்கும் அருள்விழியும்
உற்றேயங் குறுவதுகண் டொருகொம்பு மாமுகத்தோன்
புற்றோயு மரைப்பிரம சாரியென முன்போந்து. 5

742. நாரதர்நன் னீராடி நயிட்டிகநே மங்கள்முடித்து
ஆரணங்க ளோதிஅரன் தாள்தொழும்போ தம்மட்டும்
காரணங்காட் டாமல்முனே கண்டுநிற்ப முனிநோக்கி
யாருரைநீ யெனஇவ்வூர் அரசன்மகன் யானென்றான். 6

743. வந்திங்ஙன் நீபோகா வகைநின்ற தென்கொலென
உந்திவிர லுளருன்னியா ழிசைகேட்க உற்றோமென்று
அந்திவண்ணன் தந்தமக னுரைத்திடலும் அவன்கேட்டுச்
சிந்தைசெயிர்த் தரியமறைச் சிறுவனுடன் உரைபுகல்வான். 7

741. ஒரு கொம்பு மாமுகத்தோன் - விநாயகன்.

744. பிரமவங் கிடத்திலுறப் பிறந்தபிறப் பினைமறந்திங்கு
அரசன்மகன் யானென்னும் அவமதியோய் அகிலமெலாம்
பிரையுறுபால் நெய்யெனவே பிறங்கிநின்று நால்வேத
உரைகடந்து பெருங்கருணைத் தாயாகி உயிர்புரக்கும். 8

745. வாட்கணுமை இருசெவியால் மதுரஅமு தெனப்பருகிக்
கேட்கவிசை புரியுமென்கைக் கிளர்புரிமா டகமகதி
யாட்கருவி யிசைநீயோ கேட்பாயென் றிகழ்ந்திடச்செங்
கேட்கமல மனையபதன் கிருமையொடும் இவைபுகல்வான்.
9

746. பிஞ்சுமதிச் சடைப்பெருமா னிடத்திலுறும் பிணையனையாள்
அஞ்சுகமென் மொழியினிலும் அதிகமோ உன்னிசையாழ்
எஞ்சலிலா மறைமுனியே இங்ஙனுறும் பசுக்குலங்கள்
உஞ்சுதியாழ்க் கிரங்கிலெழில் உமைகேட்ட
தொக்குமென்றான். 10

747. அவ்வுரைகேட் டிவ்வினய மொழிபுகலும் அருட்சிறுவன்
செவ்வியநல் முதுகிரிசேர் சிவனோஜங் கரனோநற்
கொவ்வையிதழ் வள்ளிபுணர் கொண்கனோ வென்னாமுன்
எவ்வமிலான் ஐங்கையொடும் இபமுகங்கொண்
டெதிர்நின்றான். 11

748. குட்டினான் தன்சிரத்திற் குதித்துநின்று கூத்தாடிக்
கட்டினான் இருகமலக் காலையெடுத் திருகணுற
ஓட்டினான் குவித்தகரம் உச்சிமேல் வைத்துமுனி
மட்டிலா மகிழ்ச்சியொடும் வாரணக்கன் றினைப்புகழ்வான்.
12

749. மூடிகவா கன!சூர்ப்ப கன்ன!மோ தகப்பிரிய!
பீடுபெறு பிரணவ!பீ டிகைவிடலைப் பெருவிரக!
கோடுமொரு கோடுறுகுஞ் சரமுகவ! ஐங்கர!நல்
வீடருள்விக் கினவிநா யக!நமஎன் றேதுதித்தான். 13

750. துதிக்கையுடை முனியைநெடுந் துதிக்கையுடை
யோன்மகிழ்ந்து
மதிக்கும்வரம் வேண்டியது கேளெனமா முனியுரைப்பான்
விதிக்கும்மறைப் பொருளான விமலஉன்தாள் என்மனத்திற்
பதிக்குமிது தனிலுமேம் படுபொருளுண் டோவென்று.
14

744. பிரமவங்கிடம் - பிரம வமிசம்

751. கண்டுதரி சித்திடுமென் கண்கவரு மினியவெழில்
கொண்டுபடுத் திருக்குமிந்தக் கோக்குலமியா தெனவினவ
வண்டருல குடையுமின்னா ராம்புடைசூழ் பசுவனைத்தும்
பண்டெனைஈன் றெடுத்தஉமைப் பசுவதுவா மெனச்சுட்டி.
15

752. காட்டிடநா ரதர்மனத்திற் கரையிறந்த பேருவகை
ஈட்டமுறத் தொழுதெழுந்து வலஞ்சூழ்ந்தங் கெதிர்நின்று
நாட்டமணி முத்துதிர்ப்ப நற்புளக முடல்பெருகக்
கோட்டமிலா யாழினிசை கூடமா டகமுறுக்கி. 16

753. புரிநரம்பில் விரல்நகத்தைப் பொருத்திநற்பண்
தனையெழுப்பித்
திருமிடற்றில் எழுமிசையு மொன்றாக்கிச் சிவகானம்
பரிவொடுநற் சராசரங்கள் கனிந்துருகப் பாடுதலும்
அருளுடையாள் ஆனினத்தோ டெழுந்திசைகேட்
டகமகிழ்ந்து. 17

754. திருமுதுகுன் றினைப்பணிந்து தென்திசையை நோக்கியெழப்
பொருவருநா ரதருமுனம் புகழ்க்கானஞ் செய்துவர
வருகினிற்தா யுடன்குழக்கன் றாய்க்கணே சருமுறநற்
பெருகுதிறல் வீரனுமெண் டிசைக்காவல் பெற்றணைய. 18

755. நாரதரியா ழிசைவடிவாய் நாயகிபோந் திடும்அமையம்
சீருறுமிந் திராணிமட்டும் திருமுதுகுன் றுடையானை
நேருறக்ககண் டிறைஞ்சிநெடு நேரமங்கு நின்றுவந்து
பேருறும்ஆ னிரையினொடுங் கூடினள்ஆற் றூரினிற்பின். 19

வேறு

756. ஆனு டம்புறும் அம்பிகை இன்பொடும்
ஊனம் நீங்கிய வெண்ணதி யுற்றதின்
றான மேவரன் றொடொழு தேயகன்று
ஈன மில்லா அறத்துறை எய்திமுன். 20

757. கண்டு நாதன் கழலினை போற்றியுட்
கொண்டு சென்று குலவுபொன் னம்பலத்து
அண்டர் கோன்களித் தாடல் பணிந்தகன்று
எண்டி சாமுகம் ஏத்துசீர்க் கொள்ளிடம். 21

758. தாண்டி வந்துசம் பந்தர்க்கு ஞானப்பால்
ஊண்ட கத்தன் முலைசுரந் தூட்டிடும்

755. அமையம் - சமயம், காலம். 758. காழி - சீகாழி.

நீண்ட நற்புகழ்க் காழி நிமலனைப்
பூண்ட அன்பொடும் போற்றி நெறியினில். 22

759. மேவு கின்ற தலந்தொறு மேவிவாழ்
காவ லன்கழல் கண்டு வணங்கிவந்து
ஆவல் மேவுநல் ஆனினந் தம்மொடும்
தாவில் காவிரித் தண்துறை சேர்ந்தனள். 23

760. நீர்கு டித்துநன் னீர்குடைந் தாடிநல்
ஏர்க லித்திடு தென்கரை ஏறிவந்
தார்கொ ளத்தனைத் தான்மயி லாயிறைஞ்
சூர்க ளிப்புற அங்கங் குலாவியே. 24

761. துலாம கத்துவஞ் செய்யருட் சோதியை
நிலாமு கிழ்த்த சடையனை நேர்பணிந்
துலாவி மிக்க தலங்களு முற்றுவந்
திலாப முற்ற துருத்திபெற் றொய்தினாள். 25

762. தூய வுத்தர வேதீ சுரனடி
நேய முற்று நினைந்தகன் றெய்தினள்
ஆய மெய்ப்பு கழ்த்தே ரழுந்தூரினில்
மாயை யிற்செயு மாவிளை யாடலாள். 26

763. அந்த வேளையில் ஆய னுருக்கொடு
சுந்த ரப்பெரு மான்துறை சைப்பன்
தந்த வேவ றலைக்கொடவ் வான்கண்முன்
வந்து தோன்றினன் மால்குழல் வாயொடும். 27

764. காம தேனுரு வான கவுரியை
நேம மோடுமு னின்று பணிந்தெழத்
தாம மேவுத ரன்களி தாங்கிடக்
கோம ளத்தன் னருட்கண் கொடுத்தனள். 28

765. பெற்று மாயன் பெருங்களிப் புற்றுநின்
உற்ற தீங்குழ லூதினன் பொற்பொதுப்
பற்றி யாடுமை யன்செவிப் பாங்குற
வற்ற மில்லாஆ னாயர்நின் றூதல்போல். 29

766. கோவிந் தப்பெரு மாள்குழ லோசையும்
மேவு பொற்புள நாரதர் வீணையிற்
கூவு நாத இராகமுங் கூடியங்கு
ஆவி னச்செவிக் காரமு தாயுற. 30

767. நாதன் நல்லுரு வாகிய நாதமே
போத மாகப் பொருந்துகோ நாயகி
ஏதம் நீங்கிய கோவின் இனத்தொடும்
தீதி லாததென் மேற்குத் திசையினுள். 31

768. இகல கன்றவோர் காவத வெல்லையுட்
திகழு முத்திநற் சேத்திரத் தென்னரு
ககலி டங்கொ ளரிய தலத்தினுட்
சகல ஆனொடுஞ் சஞ்சரித் துற்றனள். 32

769. ஆங்கு நாட்பல வாக அமர்ந்துழி
ஓங்கு மோர்பக லுள்ளுறு காதலைத்
தாங்க லாது தனிமுத லானவன்
தீங்கி லாமுத்திச் சேத்திரத் துள்ளறும். 33

770. மாசி லாத மணியி லிருந்தொரு
தேசு மிக்க சிவக்குறி யாய்மிகு
நேச மொடுகோ நாயகி நின்றுறும்
வாச மேவு தலத்தினுள் மன்னியே. 34

771. கரத்தி ருந்தனன் கண்ணுதற் சாமியவ் விடத்திற்
திருந்தி டுங்கதிர்ச் செல்வனு மேல்கடற் சேர்ந்தான்
பொருந்து கங்குல்மன் னுமையரன் கண்ணிணைப் புதைப்ப
விருந்த வற்றைநாட் போலவந் திறுத்ததை யன்றே. 35

772. அற்றை நாளிர வானருள் நாயகி எழுந்தங்கு
உற்றி டுந்திரு நந்தன வனத்திடை உலவக்
கற்றை வார்சடைக் கண்ணுதற் கடவுள்நல் முடிமேற்
பற்றி யேபதிந் ததுதிருக் குளம்பிலோர் பாதம். 36

773. சோரி சோர்ந்திடத் துலங்கியோர் லிங்கமாய்த் தோன்றிப்
பாரின் மீதெழுந் திருந்தனன் கருணையம் பகவன்
நேரின் மைக்கரி யுரியகற் றியஉருத் திரன்போற்
காரி ருட்பிழம் பகற்றியே எழுந்தனன் கதிரோன். 37

774. அந்த வேளையிற் கண்டனள் ஆனிறக் கவுரி
சுந்த ரத்திரு லிங்கமுஞ் சோரியுந் துளங்கி
வந்து நாவினாற் துடைத்தருங் குருதியை மாற்றிச்
சிந்தை யுள்ளுரு கிக்கத றித்திரு மடியில். 38

775. சுரந்து நான்முலை வழியினுந் தாரையாய்ச் சொரிபால்
கரந்தெ ழுந்தநா யகன்திரு முடிமிசைக் கவிழ்ந்தே

பரிந்து நின்றபி டேகமங் காட்டிடப் பரமன்
சிரந்த னிற்குளம் பழுந்திய தழும்பொன்றுந் தெரிய. 39

776. கம்பை யாற்றின்மா வினிற்தனக் குவட்டொடுங் கட்டி
அன்பி னோடணைத் திடும்பொழு தங்கத்தின் மறுப்போல்
எம்பி ராட்டிகை வளைத்தழும் பேற்றவிச் சையினுஞ்
செம்பொன் நூபுரக் காற்தழும் பிருத்தினன் சிரத்தில். 40

777. இருக்க றிந்திடா முடியிலான் குளம்பிருந் ததனாற்
திருக்கு ளம்பியம் என்பர்கள் அத்தலத் திருப்பேர்
உருக்க மேவுகோ நாயகி தழும்புகண் டுருகி
அருத்தி யோடுபால் சிலபகல் ஆட்டியங் கமர்ந்தாள். 41

778. மற்றை ஆன்களும் பால்சொரிந் தாட்டிமுன் வணங்கிக்
கற்றை வேணியான் கிருபைபெற் றிருந்தது கவின்சேர்ந்து
உற்ற பிப்பிலா ரணியவா சிகளெனும் உம்பர்
பற்றி னாற்கண பதிபதம் பூசித்தல் பகர்வாம். 42

இருபத்திரண்டாவது
கோவுருவ நாயகி சோணாட்டில் திருக்குளம்பியம் சேர்ந்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 778

22. கோவுருவ நாயகி சோணாட்டில் திருக்குளம்பியம் சேர்ந்த அத்தியாயம் (சுருக்கம்)

கயிலை மலையிலிருந்து சைய மலையை அடைந்த சிவபெருமான் அம்பிகைக்கு அருட்காட்சியருளினார். பசு உருவம் கொண்ட பராபர நாயகி மகிழ்ந்திருந்தாள். பின்பு தேவமகளிரான பசுக்கூட்டங்களுடன் சையமலையை விட்டு இறங்கிப் பாலி ஆற்றின் கரையைக் கடந்து பெண்ணை யாற்றங்கரை மீதுள்ள அருட்துறையில் நாவலர்கோனுக்கு அருளிய இறைவனை வணங்கினாள். பின்பு, திருக்கெடில நதியை அடைந்து திருவதிகை வீரட்டரைப் பதந்தொழுது, மணிமுத்தா நதிக்கரையில் எழுந்தருளியுள்ள பழமலைநாதனைத் தொழுதாள். அங்குள்ள ஓர் அழகிய பூஞ்சோலையில் பசுக் கூட்டத்துடன் அம்பிகை படுத்திருக்கும்போது, யாழேந்திய

776. கம்பையாறு - காஞ்சிபுரத்திலுள்ள ஒரு நதி.

நாரதமுனி அங்கு வந்தார். அவரைக் காண விநாயகப் பெருமானும் அங்கு வந்தார்.

நாரதமுனிவர் நீராடி நியமங்கள் முடித்து வேதம் ஓதி இறைவனைத் தியானிக்கும் வரையில் தம் உருவைக் காட்டாமல் மறைத்திருந்த விநாயகப் பெருமான், நாரதர் பார்க்கும்படி யாகப் பிரமசாரி உருவில் வந்து நின்றார். முனிவர் அவரைப் பார்த்து, நீ யார் என வினவ, நான் இவ்வூர் அரசன் மகன் என்று விநாயகர் கூறினார். இங்கு இவ்வளவு நேரம் ஏன் இருக்கின்றாய்? என்று நாரதமுனி கேட்க, உமது யாழின் இசையைக் கேட்கவே இங்கு வந்தேன் என்று விநாயகர் கூறினார். முனிவர் வியப்பு மேலிட்டு, பிராமண குலத்தில் பிறந்து, அப்பிறப்பினையும் மறந்து அரசன் மகன் என்று கூறிய அவமதியை உடையவனே! மறைகளுக்கு எட்டாது பெருங்கருணையுடனே அன்னையாகி அடியார்களைக் காக்கும் அம்பிகை தம்மிரு செவிகளாலும் மதுரமான அமுதம்போலக் கேட்கும்படி வாசிக்கும் இம்மகதி யாழின் இசையை நீயோ கேட்கவல்லவன்! என்று இகழ்ச்சியாகக் கேட்டார்.

இவை கேட்ட விநாயகப் பெருமானாகிய பிரமசாரி, இறைவனுடைய வாமபாகத்தில் பிரியாமல் இருக்கும் அம்பிகையின் மெல்லிய மதுரமான மொழியைவிட உமது யாழிசை சிறந்ததோ! இங்குள்ள பசுக்கூட்டங்கள் உம்முடைய யாழுக்குச் செவி சாய்க்குமேயானால் அம்பிகை உம் யாழைக் கேட்டதற்கு இணையாகும் என்று நாரத முனியிடம் கூறினார்.

பிரமசாரியின் இவ்வுரையைக் கேட்ட நாரதர், இவர் சிவன் தானோ! விநாயகனோ! கந்தவேளோ! என்று சிந்தித்தார். அவர் எண்ணும் முன்பே ஐந்து கரங்களோடும் யானை முகங்கொண்ட விநாயகப் பெருமான் நாரதமுனி முன்பு காட்சியருளினார். ஆனந்தப் பரவசமடைந்த நாரதர் தம் தலையில் குட்டிக் கொண்டு, கரங்கள் குவித்து வணங்கினார்.

இவ்வாறு துதிகள் பல செய்த நாரதரைக் கண்ட விநாயகப் பெருமான், முனிவர் வேண்டிய வரங்களை வழங்க விழைந்தார். நாரதரோ, வேதப் பொருளாய் விளங்கும் விமல! உம் திருவடிகளை என் உள்ளத்தில் எப்போதும் பதித்திருக்க வேண்டும். இதைக் காட்டிலும் மேம்பாடுடைய பொருள் வேறு உளவோ! என வணங்கினார். பின்னர், இங்கே படுத்துள்ள பசுக்கூட்டங்கள் எல்லாம் யாவை? என்று நாரதர்

கேட்டார். சுற்றிப் படுத்திருக்கும் இந்தக் கோக்குலங்கள் யாவும் தேவமாதர்கள் ஆவர். நடுவே படுத்திருப்பது என்னை ஈன்ற உமையம்மை கோவுருவ நாயகியாவார் என்றார் விநாயகர். அம்பிகையைத் தரிசித்த நாரதர் மிகுந்த மகிழ்ச்சியோடு வணங்கி வலம் வந்து யாழை எடுத்து வாசித்தார். சிவகானம் கேட்ட அம்பிகை அகமிக மகிழ்ந்தாள்.

பின்பு திருமுதுகுன்றனை வணங்கித் தென்திசை நோக்கி எழுந்திருந்து நாரதர் முன்னே கானம் செய்து வந்தார். விநாயகப் பெருமானும் வீரபத்திரரும் காவலாக உடன் வந்தனர். இவ்வாறு உமையம்மை இன்பமுடன் வந்து திருவறத்துறையை அடைந்தார். அங்குள்ள பெருமானைத் தரிசித்த பின்னர் சிதம்பரம் வந்து இறைவன் திருக்கூத்தினைக் கண்டுகளித்தார். பின்பு கொள்ளிடம் தாண்டி வந்து சீகாழிப் பெருமானைப் போற்றி அருகிலுள்ள பல தலங்களையும் தரிசித்தார். வழியில் காவிரியில் நீராடி, மயிலாடுதுறையில் பெருமானை வணங்கி மகிழ்ந்தார்.

அங்கிருந்து திருத்துருத்தியாகிய குற்றாலத்தை அடைந்தார். அங்குள்ள இறைவனைப் பணிந்து, மற்றுமுள்ள பல தலங்களையும் தரிசித்தார். பின்பு தேரெழுந்தூருக்கு வந்து, ஆனினத்தோடும் தென்மேற்குத் திசையில் காததூரம் உள்ள ஒரு நந்தவனத்தில் இரவிலே உலாவும்போது, கோவுருவ நாயகியின் திருக்குளம்பினையுடைய ஒரு பாதமானது இறைவனுடைய திருமுடிமேல் பதிந்தது. விடிந்ததும் அம்பிகை பார்த்தபொழுது இரத்தம் சொரிய ஓர் இலிங்கம் இருக்கக் கண்டார். உடனே, இரத்தத்தையெல்லாம் தமது நாவினால் துடைத்து அழுதார். மடியிலிருந்து பாலைச் சொரிந்து திருமுடியில் அபிடேகம் செய்தார். அப்போது இறைவன் திருமுடியில் குளம்பு அழுந்திய தழும்பு ஒன்று தெரிந்தது.

முன்பு, காஞ்சிபுரத்திலுள்ள கம்பையாற்றின் கரையில், மாவடியில், இறைவனைக் கட்டித் தழுவிய இறைவியின் மார்புத் தழும்பும் வளைத்தழும்பும் தம்முடைய அங்கத்தில் பதிய ஏற்றருளிய இறைவன் இப்பொழுது கோவுருவ நாயகியின் திருக்காற் தழும்பினைச் சிரத்தில் தாங்கினார். இவ்வாறு இறைவனுடைய திருமுடியிலே குளம்பு அழுந்திய தழும்பு தெரிய வந்ததால் இத்தலத்திற்குத் திருக்குளம்பியம் என்றே பெயர் வழங்கலாயிற்று. அம்பிகையும் சில நாள்கள் அங்கிருந்து

இறைவனை வழிபட்டு வந்தார். இவ்வாறே மற்ற ஆனினங்களும் இத்தலத்திறைவரை வணங்கி வழிபட்டு வந்தன.

இனி, பிப்பிலாரணிய வாசிகளான தேவர்கள் கணபதியின் பாதம் பூசித்ததைப் பற்றிப் பகர்வோம்.

இருபத்து மூன்றாவது
தேவர்கள் கணபதி பூசை செய்த அத்தியாயம்

779. சுருடி ரைக்கட லூடு சோமுகன்
சுருதி கொண்டுபோம் நாள்முதற்
தரும முந்தகு வேள்வி யுந்தவ
தானமுஞ் செய்வோ ரின்மையாற்
கருமு கிற்குல நீர்வ றந்துவன்
கடிய தானவர்க் கஞ்சிவிண்
மருவ லின்றி யொளித்த லான்மிகும்
வற்க டம்புவிக் காயதே. 1

780. விசும்பின் நீர்த்துளி வீழி னல்லது
மேதி னித்தல மீதுறும்
பசும்புன் முற்தலை காண்ப திங்கரி
தென்னும் பான்மை பதிந்துளங்
கசிந்து நற்கட வுளர்கள் கூடியோ
சனைகள் செய்துகா சினியின்மீது
இசைந்த நற்பசு வினங்கள் துய்ப்பவும்
எழில்கொள் போதியா தியவனம். 2

781. தழைய வும்பசுங் கூழ்த ளிர்க்கவும்
தான பானநீர் வேண்டியும்
மழைபெய் நல்வரம் வேண்டி மும்மத
வார ணக்கண பதியையுட்
குழையு மன்பொடு பூசை செய்தருட்
கொள்ள வெண்ணியே மகிழ்வொடும்
பழுதி லாவரி மாத பூருவ
பக்க மேவுச துர்த்தியில். 3

782. புலரி யிற்பொனி யூறு தீர்த்தம்
பொருந்தி யாடிநல் நியமமுற்று
இலகு கண்டிகை சாத்தி நீறணிந்
தினிய அஞ்செழுத் தெண்ணிமா

779. வற்கடம் - பஞ்சம். 780. விசும்பு - ஆகாயம்.

மலர்கள் நற்தளிர் பலவெ டுத்துநல்
மன்றல் மாலைகள் வகைவகை
பலதொ டுத்துப கரண மற்றதும்
பாங்கி னோடுகொண் டாங்கவர். 4

783. ஆல யச்சினகரம திற்கணம் அமர்ந்து தெக்கணா மூர்த்திபோல்
வால விக்கிரக ரூப மேவி வயங்கு வாரண முகவனைச்
சீல முற்றிடும் விரத மோடு திரண்டு வானவர் முனிவர்கள்
சால மொய்த்திடு தொண்ட ரன்பர்கள் சகல ரும்பல
பணிசெய்து. 5

784. பட்டி னால்நவ ரத்தின மாலைகள் பலவி னாற்பொனால்
மலரினாற்
கட்டு முன்விதா னங்கள் செய்தருங் கதலி பூகங் கனித்தொடர்
மட்டி லாதன கொண்டு நல்லெழில் மருவ மாணவ குத்தபின்
இட்ட மான பொன் மணிவி ளக்கொளி எங்கும் ஏற்றினர்
இன்பொடும். 6

785. சதுர்மு கத்தினன் பூசை செய்திடச் சகல ரும்பரி சாரகம்
இதமொ டுய்த்திட வெண்ணெய் நெய்பல சார மூக்கனி
இக்குநீர்
மதுர முற்றிடும் இளநீர் பால்தயிர் மன்னும் ஐந்தமு தம்குளங்
கதிர்கொள் நித்தில மூரற் தேன்கருப் பூரம் சந்தனம் களபநீர். 7

786. ஆக மப்படி மந்தி ரத்தொடு முறைமை யாய்அபி
டேகமுய்த்து
ஓகை பெற்றிட நற்பொ னாடையு டுத்து நூலிடு மார்பினில்
வாகு பெற்ற பதக்க நித்தில மாலை பொற்பணி மன்னுவித்து
ஆக முற்றும்இ ரத்தி னாங்கி அமர்த்தி நீள்முடி யேற்றியே. 8

787. செம்பொ னாற்திரு வாசி மீதுசெ
றித்து மல்லிகை முல்லைநற்
தும்பை யார்த்தளி ரறுகெ ருக்கலர்
துளிர்கொள் வில்வமந் தாரை கோங்கு
அம்பொ னாரிதழ்க் கொன்றை மத்தம்வெள்
ளலரி பச்சைநல் மருக்கொழுந்து
இம்பர் மேவுசண் பகம்ப னீர்வனி
யிருங்க ரந்தைநல் வெட்டிவேர். 9

785. பரிசாரகம் - ஏவல் வேலை. இக்குநீர் - கரும்புச்சாறு.

788. பங்க யத்தொடு முற்ப லங்கமு நீர்மு தற்பல தார்களால்
எங்கு மொய்த்திட வேஅ லங்கரித் தின்ப மான்மதச் சேறணிந்து
அங்க ருக்கிய பாத்தி யம்முத லான நல்லுப சாரமும்
இங்கி தத்தொடு செய்து மிக்கறி வேத ணங்கள் இதம்பெற. 10

789. பொற்கலன்களி லிட்ட போனகம் பொங்கல் பால்தயிர் நெய்மது
கற்கண் டிக்கொடு சர்க்க ரைத்திரள் கதலி நற்பழ மாங்கனி
பற்ப லாக்கனி வெதிரி யின்கனி பராரை நாவல்வி ளாங்கனி
வற்க மெட்பொரி யுண்டை தண்டுல மன்னவற் பரமானமும். 11

790. விடலை யாயிர கோடி முன்னமெ றிந்து டைத்துவி ரித்துநற்
கடலை அப்பம்மு றுக்கு மோதகம் கவின்கொள்
தோசையொ டப்பளம்
அடுப ருங்கொழுக் கட்டை பிட்டிவை யாதி யாகிய உண்டிகள்
குடவ யிற்றில்நி ரம்ப வூட்டிநற் கோத கல்முக வாசநீர். 12

791. தூவி நல்லடை காய்கொ டுத்தருந் தூப வாச மணித்தொனி
மேவு தீபம னைத்து மேந்தி விளங்கு கண்ணாடி சாமரை
தாவி லாதபொன் னால வட்டம்நீள் சத்தி ரம்மலர் விசிறியும்
ஆவ லாற்பணி மாறி யிவ்வகை அணிகொள் கோபுரத்
தென்புறம். 13

792. தூய கோவடி வான தாயொடு துணைவ ருங்கண பதியையும்
நேய மோடுபூ சித்த பின்திரு நெடிய மாலயன் முதல்விணோர்
ஏயுந் தெக்கண மூர்த்தி யாகியி ருந்து பூசைகொள் மாமுகன்
மேய நல்லெழில் கொண்டி ருந்துவி ளங்கு மேன்மையை
நாடினார். 14

வேறு

793. இன்புற எமது கண்கட் கடங்கிடா எழில்கொள் ஐய
அன்புடன் எமையாட் கொள்ளும் அழகிய பிள்ளை யாரே
உன்பெய ரென்னச் சொல்லி உரோமமெய்ப் புளகங் கூர
முன்புநின் றினிய செங்கை முகிழ்த்தருந் துதிகள் சொல்வார். 15

794. சங்கர ஞான புத்திர! சயிலமா தருள்கு மார!
துங்கவேள் முன்பு வந்த சுந்தர! சூர்ப்ப கர்ண!
பொங்கர வணிந்த தோள! புங்கவ! புனித போத!
ஐங்கர நாத! சோதி அழகிய கணேச போற்றி! 16

790. விடலை - சூரைக்காய்.

795. மூடிக வாக னா!நல் மோதக அத்த! வேத
பீடிக! ஏக தந்த! பிரணவா சன!சை யோக
ஓடுமும் மதவி லாச! உயர்சதா ரவிப்பிர காச!
ஆடவர் திலக! யோக அழகிய கணேச போற்றி! 17

796. இந்துசே கர!முக் கண்ண! இலகுசோ டசக ணேச!
தொந்திகொ ளுதர! நீண்ட துளைபெறு துதிக்கை நாத!
சிந்துரா னனவி லாச! தேவநா யக!அ மோக!
அந்தமி லாத இன்ப அழகிய கணேச போற்றி! 18

797. கிம்புரித் தந்த! நால்வாய்க் கிளர்புகர் வதன! வீர!
நம்பினோர்க் கருள்செ யுங்கிரு பாகர! நாத கீத!
செம்பொன்மா மணிச்சி லம்பு கிண்கிணி சிறந்த பாத!
அம்பர வுருவ! மிக்க அழகிய கணேச போற்றி! 19

798. பாரத மேரு வென்னும் பருப்பத ஏட்டிற் கொம்பே
கூரெழுத் தாணி யாக்கொண் டெழுதிய குழக! போரின்
நேருறுங் கசான னத்து நிசிசரன் தனையட் டியார்க்கும்
ஆரருள் புரிந்து காத்த அழகிய கணேச போற்றி! 20

799. சந்திரன் சாபநீசத் துவஞ்சதுர்த் தியில்லைத் தாண்ட
மந்திர வடிவ! காக வுருவமாய் மருவி மிக்க
செந்தமிழ் முனிக்க மண்ட லத்துநீர் சிந்திப் பொன்னி
அந்தமில் நதிய மைத்த அழகிய கணேச போற்றி! 21

800. தகவொடு கவுரி தன்மேற் தரித்தசந் தனந்தி ரட்டு
மகவுரு வான தன்சீர் வடிவினை யழித்த முக்கட்
பகவனுக் கிணையா முக்கண் படைத்ததேங் காயு
டைப்போர்க்கு
அகமகிழ்ந் துதவும் இன்ப அழகிய கணேச போற்றி! 22

801. இருங்கடம் பணியுந் தம்பி எழில்மயில் மீதி லேறிப்
பெருந்திருக் கயிலை சுற்றி வருமுனம் பிதாவைச் சுற்றித்
திருந்துள மகிழ்ச்சி கூரச் செய்தவர் திருக்கை யீந்த
அருங்கனி வாங்கி நூங்கும் அழகிய கணேச போற்றி! 23

802. முப்புரம் எரிக்கு ஞான்றும் உன்றனை நினையா தங்கு
மெய்ப்பொடுஞ் செய்த தேரை விழவொடித் தளவி லாத
துய்ப்பொடு பூசை கொண்டு சுகித்தபின் அரற்கு வெற்றி
அப்பொழு தளித்து நின்ற அழகிய கணேச போற்றி! 24

803. செக்கர்மே னியனே! மிக்க சித்திமுத் திகட்கு வித்தாம்
விக்கின விநாய காய நமவென விளம்பிப் பூசித்து
எக்கணுள் ளோரும் ஏன்ற மாத்திரம் ஏத்து வாரேல்
அக்கணம் முன்னின் றாளும் அழகிய கணேச போற்றி! 25

வேறு

804. இன்ன வாறுது தித்தி றைஞ்சியெ
முந்து நின்றவிண் ணோர்கள்மேல்
மன்னு மாரருள் நோக்கம் நல்கிம
கிழ்ந்து வேண்டுவ தும்முளம்
உன்னு கின்றது தருகு வோமுரை
மின்க ளென்றுரை செய்திடக்
துன்னு நீண்முடி அமர ரோடுறுந்
துளப மாலிவை சொல்லுவான். 26

805. பாரு யும்படி மழைசொ ரிந்திட
வேண்டும் அம்பிகை பரனுடன்
சேரு மங்கல வடிவு கண்டு
திகழ்ந்த இன்புற வேண்டும்நீள்
ஏரி லங்குகோ உமையு டன்தொடர்
இமைய மங்கையர் பசுவுருப்
பேரும் வண்ணமும் வேண்டும்
இன்னமும் பெறுவ ரங்களு முண்டுகேள். 27

806. சோமு காசுர னாதி தானவர்
துஞ்ச வேண்டும்நல் மறைகளும்
நேம மாயெமை யடைய வேண்டும்விண்
ணிலைமை யும்பெற வேண்டும்நீள்
காம நற்பொரு ளோட றந்திகழ்
கதியும் வேண்டும்முக் கண்ணுடைச்
சோம சேகரன் தாளி லன்பதுந்
துன்ன வேண்டும் எமக்கெனா. 28

807. கேட்ட போதிவை யாவும் நீங்கள்
கிடைத்து வாழ்வது திண்ணமென்று
ஈட்டு நல்வரம் நாதன் ஈதலும்
இன்ப மேவுவிண் ணவரெலாம்
கூட்ட மாய்ச்சட சடென வேதலை
குட்டி நின்றுகூத் தாடினார்
மீட்டு மோர்வரம் வேண்டு மென்று
விளம்பு வார்கள்க ணேசன்முன். 29

808. யாங்க ளின்று துதித்த இத்துதி
பத்தும் யாவர்க ளேனுமுன்
பாங்கு நின்று துதித்து ளோர்மிகும்
பத்தி யாயே படித்துளோர்
தீங்கு நீக்கியா ளென்ன அன்னதே
செய்து மியாமென வுரைசெய்தான்
ஆங்கு நல்விடை பெற்று விண்ணுளோர்
அரசி ருக்கையுள் மேவினார். 30

809. தேவர் போனபின் திகழ்தன் சத்திகள்
சித்தி வித்தையை நோக்கி
தாவி லாமுகி லுருவ மாகிநற்
சலப திப்புனல் பருகிவந்து
ஆவல் மேவுமிப் புவிகு ளிர்ந்திட
அமுத தாரைகள் பெய்யுமென்று
ஏவி னான்அவை சென்று நன்னீரெ
டுத்து வந்து பொழிந்தவே. 31

810. மண்கு ளிர்ந்தன விண்ணு ளோர்கள்
மனங்கு ளிர்ந்தன மானுடர்
எண்கு ளிர்ந்தன மிகுச ராசரம்
எங்க ணுங்குளிர் கின்றன
உண்கு மோதன மெங்கு மிக்குள
தாவி ளங்கின உலகெலாம்
தண்கு ளிர்ச்சிகொண் டரச மாவன
முந்த ழைந்தன தாழ்வற.
32

811. இரையி லாதர சினைமு றித்துணும்
யானை யிந்திர ளதுசெயாது
அரசின் வீழுதி ரிலைக ளாதிய
உணவு பெற்றமர் கின்றன
பரையு டன்திகழ் ஆவி னங்களும்
பைம்பு லாதிகள் மேய்ந்துபால்
வரைவி லான்திரு வுளங்கு ளிர்ந்திட
மடிசு ரந்துபொ ழிந்தவே. 33

வேறு

812. கணபதி யருளால் வையங் கவின்பெற விளங்கக் கண்டு
துணைவரு மகனை நோக்கிச் சுந்தரப் பசுத்தாய் மெய்யில்

அணைவுகொண் டுச்சி மோந்துள் அகமகிழ்ந்
தன்பி னோடும்
புணர்குளம் பியத்துள் ளானைப் பூசித்தங் கிருந்தாள்
மன்னோ. 34

813. கருணையாற் சிலநாட் பின்னர் காதலான் விடைபெற்
றிப்பால்
உரிமையாஞ் சிவத லத்து ளூற்றரன் தனைப்பூ சித்துத்
திருமலிந் திலகு ஞானத் திருவிடை மருதூர் வைகிச்
சுரர்மகிழ் சத்த தானம் தொழுதுறும் பெருமை சொல்வாம். 35

இருபத்து மூன்றாவது
தேவர்கள் கணபதி பூசை செய்த அத்தியாயம் முற்றிற்று
ஆகத்திருவிருத்தம் 813
திருச்சிற்றம்பலம்

23. தேவர்கள் கணபதி பூசை செய்த அத்தியாயம் (சுருக்கம்)

சோமுகன் வேதங்களைக் கொண்டு போய்க் கடலில் ஒளித்து வைத்த நாள் முதலாக, பூமியில் தருமமும் வேள்வியும் தானமும் செய்பவர்கள் இல்லாமையாலும், மேகங்கள் நீர்வற்றி அசுரர்களுக்குப் பயந்து விண்ணை அடையாமல் ஒளித்துக் கொண்டமையாலும் மிகுந்த பஞ்சம் தோன்றியது.

விண்ணிலிருந்து 'நீர்த்துளி வீழின் அல்லால் பூமியில் பசும்புல்லைக் காண்பது அரிது' என்பதற்கேற்ப அமைந்து விட்டதால், தேவர்கள் ஒன்றுகூடி விவாதித்தனர். பூமியில் பசுக்கூட்டங்கள் உண்ணவும், போதிவனம் தழைத்திருக்கவும், பயிர்களெல்லாம் தளிர்க்கவும், மெய்யடியார்கள் மனம் மகிழவும் மழைபெய்ய வேண்டி விநாயகப் பெருமானை வணங்கி பூசை செய்ய முடிவு கொண்டனர்.

ஆவணி மாத பூர்வபட்ச சதுர்த்தியன்று விடியற்காலையில் காவிரியாற்றில் நீராடி, நியமம் முடித்து, வெண்ணீறு உருத்திராக்கம் ஆகியவற்றை அணிந்து, ஐந்தெழுத்து ஓதி, நறுமண மலர்மாலைகள் தொடுத்து, மற்ற உபகரணங்களையும் கொண்டு ஏற்பாடுகளைச் செய்தனர். ஆலயத்தினுள்ளே தட்சிணாமூர்த்தி போல வால விக்கிரக வடிவமாக உள்ள விநாயகப் பெருமானை விரதத்துடன் பூசிக்க முற்பட்டனர்.

வானவர், முனிவர், தொண்டர்கள் என அனைவரும் சேர்ந்து இறைபணிகளைச் செய்தனர். அனைவரும், தோரணங்கள், விதானங்கள், வாழைமரங்கள், பாக்குமரங்கள், பழவகைகள் என இவற்றைக் கொண்டு அலங்காரங்கள் பல செய்து, பொன்மணி விளக்கேற்றி வைத்தனர்.

நான்முகன் பூசை செய்திட மற்ற எல்லோரும் பரிசாரகர் களாய் எண்ணெய், நெய், முக்கனி, கரும்புநீர், இளநீர், பால், தயிர், பஞ்சகவ்வியம், தேன், பச்சைக்கற்பூரம், சந்தனம் போன்ற வற்றை ஆகமப்படி மந்திரத்தொடு முறைமையாக அபிடேகம் செய்தனர். பின்பு, பொன்னாடை, பூணூல், பதக்கம், முத்துமாலை ஆகியவற்றை அணிவித்தனர். இரத்தினாங்கி அமர்த்தி, நீள்முடி மீது வைத்து, செம்பொன்னால் திருவாசி மீது செறித்து வைத்தனர். மல்லிகை, முல்லை, தும்பை, வில்வம், மந்தாரை, கோங்கு, கொன்றை, வெள்ளலரி, மருக்கொழுந்து, சண்பகம், பன்னீர், கரந்தை, வெட்டிவேர், தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர் முதலிய மாலைகளைச் சூட்டினர். அருக்கியம், பாத்யம் போன்ற உபசாரமும் செய்தனர். பலவிதமான சித்திரான்னங்களும் பழவகைகளையும் படைத்தனர். சூரைக்காய் ஆயிரம் எறிந்தனர். கடலை, அப்பம், முறுக்கு, மோதகம், தோசை, அப்பளம், கொழுக்கட்டை, பிட்டு ஆகியவற்றைக் குடவயிறு நிறைய ஊட்டினர். முகவாசம் தூவினர். வெற்றிலை பாக்குத் தந்தனர். தூப வாசனை காட்டினர். மணி அடித்து, தீபங்கள் எல்லாவற்றையும் காட்டினர். கண்ணாடி, சாமரம், குடை, ஆலவட்டம், நீள்சத்திரம், மலர்விசிறி ஆகிய உபசாரங்களையும் காட்டிப் பூசித்தனர்.

பின்பு, திருமால், நான்முகன் முதலான தேவர்கள் அனைவரும் யானைமுகத்தோன் நல்லெழில் கண்டு மகிழ்ந்தனர். எங்கள் கண்களுக்கு அடங்கிடாத எழில்கொண்ட ஐயனே! அழகிய பிள்ளையாரே! உம்மைத் துதிக்கின்றோம் எனப் பலவாறு போற்றித் துதித்தனர்.

இவ்வாறு துதித்து வணங்கி எழுந்து நின்ற விண்ணோர்கள் மீது அருள் நோக்கம் நல்கிய விநாயகப் பெருமான், 'நீங்கள் விரும்பியவற்றைக் கேளுங்கள்; தருகின்றோம்' என்றார். உடனே, தேவர்களுடனான திருமால் சொல்லத் தொடங்கினார். உலகம் உய்யும்படியாக மழை பொழிய வேண்டும். அம்பிகை அரனுடன் சேர்ந்த மங்கல வடிவுகண்டு எப்பொழுதும்

இன்புற வேண்டும். கோவுருவ நாயகியும் தேவ மங்கையர் களாகிய பசுக்களும் உருமாறும்படியாக வேண்டும்.

மேலும், சோமுகன் முதலான அசுரர்கள் அழிய வேண்டும். வேதங்களெல்லாம் மீண்டும் எங்களை வந்தடைய வேண்டும். தேவருலகம் மீண்டும் பழைய நிலையை அடைய வேண்டும். இன்பங்களோடு நாங்கள் வாழவேண்டும். முக்கண் பரமனான சோமசேகரன் மலரடி நினைந்து இருக்க வேண்டும் என இவ்வாறு கேட்டார் திருமால்.

இவற்றைக் கேட்ட விநாயகப் பெருமான், நீங்கள் கேட்டவை அனைத்தும் கிடைத்து மகிழ்ச்சியோடு வாழ்வீர்கள், இது உறுதி என்றார். உடனே தேவர்கள் எல்லாரும் தலையில் குட்டிக் கொண்டு கூத்தாடினர்.

பின்பு, தேவர்கள் மேலும் ஒரு வரம் கேட்டனர். ஐயனே! இப்பொழுது நாங்கள் துதித்த இந்தப் பத்துத் துதிப் பாடல் களையும் பாடுவோர் அனைவரும் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு பெற வேண்டும் என வேண்டினர். அவ்வாறே செய்வோம் என்று அருளினார் விநாயகப் பெருமான்.

தேவர்கள் அனைவரும் விடைபெற்று அரசவனம் அடைந்தனர். பின்பு, கணபதி தமது சத்திகளாகிய சித்தியையும் வித்தையையும் பார்த்து, நீங்கள் இருவரும் உடனே மேக உருவாகி பூமி குளிரும்படியாக மழையைப் பெய்யச் செய்யுங்கள் என்று ஆணையிட்டார். அவ்வாறே அவ்விருவரும் வந்து மழையாகப் பொழிந்தார்கள்.

மழை பொழிந்ததும் மண் குளிர்ந்தது. விண்ணுளோர் மனம் குளிர்ந்தனர். மானுடர் மகிழ்ந்தனர். சராசரம் எங்கும் குளிர்ந்தன. உண்ணும் உணவும் மற்றெல்லாப் பொருள்களும் எல்லா இடங்களிலும் நிறைந்தன. அரசவனம் தழைத் தோங்கியது. அரசினை முறித்துண்ணும் யானைகள் இருந்த இடத்திலிருந்தே உதிர்ந்த அரசிலைகளை உண்டு மகிழ்ந்தன. கோவுருவ நாயகியுடன் உள்ள ஆவினங்கள் பசும்புற்களை வயிறார உண்டு பால் சுரந்து பொழிந்தன.

கணபதி அருளால் அனைத்துலகமும் சிறப்பாக விளங்கக் கண்ட அம்பிகை விநாயகப் பெருமானை அணைத்து, உச்சி மோந்து, உள்ளம் மகிழ்ந்தாள். அன்போடு திருக்குளம் பியத்துள்ள சிவபெருமானைப் பூசித்துக் கொண்டு அங்கு

இருந்தாள். சில நாட்களுக்குப் பின்னர் அங்கிருந்து விடை பெற்று, திருவிடைமருதூர் வந்து அங்குள்ள சப்ததானத்தைத் தொழுத பெருமைகளையெல்லாம் இனிக் கூறுவோம்.

இருபத்து நான்காவது
கோவுருவ நாயகி சத்ததலம் தரிசித்த அத்தியாயம்

814. திருக்குளம் பியத்துள் மேவுஞ் சிவனருட் பெற்றுத் தேவி
உருக்கமோ டானினங்கள் உடனெழுந் துலக மேத்த
இருக்குமேற் திசையி லங்கங் கிலகிய தலங்கள் தம்மில்
மருக்கமழ் சடையி னானை வந்தித்து வணங்கி வந்து. 1

815. அருள்மிகும் திருப்பட் டீச்ச ரத்துறும் அரனைப் பூசித்து
ஒருமையான் பட்டி நாம மதற்குல கேத்த நாட்டித்
தருமலி ஆவூர் மேவிச் சங்கரன் தனைப்பூ சித்துப்
பெருமைசேர் ஆவூ ரென்னும் பெயரதற் கிட்டு நீங்கி. 2

816. வலஞ்சுழி மருவி அண்ணல் மலர்ப்பதம் போற்றிக் கீழ்பாற்
துலங்கிய குடமூக் குக்கீழ்க் கோட்டமுந் தொழுது போந்து
நலந்திக ழுலக மேத்தும் திருவிடை மருதூர் நண்ணிப்
பொலன்கொள்நல் மறுகின் மேவிப் புரம்வல மாக வந்து. 3

817. மகரபூ சத்தி லிந்த வையகத் துயர்கட் கெல்லாம்
சுகமுறு முத்தி யீந்து துலங்கயி ராவ ணத்திற்
சகமெலாம் ஈன்ற அன்னை சாற்றுமான் குழுவி னோடும்
தகவுறு தீர்த்த மாடித் தனிமுதல் கோயில் நண்ணி. 4

818. மருதிடங் கொண்ட நாதன் மலரடி வணங்கிப் போற்றி
அருள்பெறு மின்ப மோடும் ஐந்திரா வதனில் வைகிப்
பெருகுமன் புடனி ருக்கும் வேளையிற் பிறங்கு முத்தித்
திருநகர் மருவு மாசி லாமணி செப்பும் வாக்கு 5.

819. அரிஅயன் முதல தேவர் அன்பர்கள் யாரும் முன்போய்
வரிசையா யழைத்து வம்மின் என்றெழும் வாணி கேட்டுப்
பரிவொடும் எவரு மெய்திப் பராபரை பதத்திற் தாழ்ந்து
நிரைமலர் தூவி யேத்த விழியருள் நோக்கஞ் செய்தாள். 6

820. ஆரண முதலா யுள்ளோன் அரசமா வனத்தின் மேவும்
காரண னருளிப் பாடு கொண்டுனைக் காண வந்தோம்
பூரண மயிலே நாளைப் போந்துசத் தத்தா னத்திற்
பாரணங் கின்ப மெய்தப் பதமலர் பதித்தாள் என்றார். 7

821. இடைமரு ததற்குக் கீழ்பால் இலகுகா விரிவே ணிக்கு
வடகரை நான்குந் தெற்கு மருங்கினில் மூன்று மாகத்
திடமுற மருவு சத்தத் தலத்துளோர் தேவி யெய்தும்
அடைவினை யுணர்ந்து தத்தம் அணிநகர்க் கழகு செய்வார். 8

822. பாதைநேர் படுத்தி நீள்பூம் பந்தர்க ளொழுங்கிற் செய்வார்
சீதள வாசப் பன்னீர் தெளித்திரு மருங்குந் தேர்கள்
சோதிமா மணிப்பிர காசம் துலங்கிட அமைப்பார் வாசப்
போதுகு பாரி சாதப் பொங்கர்க ளிருபால் வைப்பார். 9

823. மகரதோ ரணங்கள் நாட்டி மான்மயிர்க் கவரி சேர்ப்பார்
பகரமாய்த் தெருக்க ளெங்கும் படீரகுங் குமக்கு ழம்பு
மிகவும்விட் டிலங்க நன்றா மெழுகுவார் விதானஞ் செய்து
தொகுமணிக் கொடிகள் நாட்டித் தூங்குபைங் கனிகள்
கோர்ப்பார். 10

824. பழக்குலைக் கதலி நாட்டிப் பசுங்கமு குதவு செங்காய்
கழிப்பிலா நாவிகேரக் காயிள நீர்கள் சேர்ப்பார்
தழைத்தமாந் தளிரி னாலுந் தங்குதோ ரணஞ்சூழ் வித்துக்
குழைத்தமான் மதங்கள் நீவும் கோதறு வேதி தோறும். 11

825. அட்டமங் கலங்கள் தீபம் அமுதகும் பங்கள் வைப்பார்
இட்டமா கியமு ளைப்பா லிகைகளும் இசைப்பார் கோல
மட்டிலா மாட கூட மண்டப மெங்குந் தீட்டிச்
சட்டமாய் நடிக்கு மெந்தி ரம்பல சமைப்பர் மீது. 12

826. ஆடவர் பலருஞ் சத்த புரியினி லமர்ந்து வாழும்
ஏடவிழ் மலர்ப்பைங் கூந்தல் ஏந்திழை யாரு மிக்காய்த்
தேடருஞ் சிறப்புச் செய்து தெரிசனை விரும்பி நிற்பக்
கோடுறுந் தெய்வ ஆனின் குழாத்தொடு மறுநாட் காலை. 13.

827. நான்மறைச் சிலம்ப லம்பு நற்பதம் பாரிற் தோயத்
தேன்மலர்த் தார்நி றைந்த திருவுருத் தேசி லங்கக்
கான்மலர் மாரி சிந்திக் கைதொழு தமரர் வாழ்த்த
ஆன்மய வுருவங் கொண்ட அம்பிகை போந்தா ளன்றே. 14

வேறு

828. அங்கோதை பெறும்பூத கணநாதர் அன்பினொடுஞ்
சங்கோதை முழக்கநெடுந் தாரையியம் பலதொனிப்பப்
பொங்கோதை பெறுந்தேவ துந்துமிகள் புடைகுமுறக்
கங்காநன் னதித்திரைபோற் கவரியிரு புறம்வீச. 15

829. தும்புருநா ரதர்விபஞ்சி யாழ்நரம்பு தொடுமிசைகள்
இன்பமுட னிருசெவிக்கு நிறைப்பஇமை யோர்களெலாம்
பைம்பொன்விடைக் கொடிமுதற்கே தனங்குடைகள் பல
பிடிப்ப
அன்பொடும்வேய்ங் குழலூதி அச்சுதனோர் மருங்கிலுற. 16

830. நான்முகனு முனிவர்களு நலமிகும்அந் தணர்பலரும்
கான்மருவும் வேதசுரு திகள்படிப்பக் கன்றுருவாய்க்
கூன்மருப்பொன் றுடையமதக் குஞ்சரமா முகமைந்தன்
ஆன்மகிழுந் தாயினொடும் அருந்துணையாய் முன்போத. 17

831. வயிரவரும் வீரரும்நல் மதிபெறுகா ரியுமகிழ்ந்து
சயமருவு திசைக்காவல் சார்ந்துவர அவ்வவர்கள்
வியன்மருவு வாகனமும் விமானமுமுன் போகமிகு
நயமுறுநா தாந்தமிசை நடமிடுநா யகிபோந்து. 18

832. குரங்காடு துறைமருவக் கோதிலரு மறையவரும்
பரங்கூடத் தவம்புரிந்து பணிவிடைசெய் பத்தர்களும்
இரங்கார்வ முடனெதிர்போய் ஏத்தியிரு மலர்சிதறிச்
சிரந்தோள்கை பதமார்பு சேர்ந்துநில முறப்பணிந்து. 19

833. கண்முத்தம் பனிப்பஇரு கைசிரமேற் குவித்தெழக்கண்டு
எண்முத்தி யருள்புரிந்தங் கெழில் மறுகி னூடேகி
விண்மிக்க தேனுவொடும் வீதிவல மாய்ப்போந்து
தண்முத்தம் போலுடுவைத் தாங்குகோ புரங்கடந்து 20

834. திருக்கோயில் தனைச்சூழ்ந்து திருவாயில் முன்புவர
அருட்கோல மிகும்ஆபச் சகாயர்முக மைந்தினொடு
மருக்கோல மதிச்சடையும் வரதமுநல் லபயமும்போர்த்
தருக்கேறு மழுமானைத் தாங்குதிருக் கைமலரும். 21

835. முன்னூல்மார் பமுந்தோளும் மொய்த்திலங்கு பணித்திரளும்
பன்னான்கோ டொன்றெனுங்கட் பார்வையுந்தோ
டுங்குழையும்
நன்னீலப் புள்ளிவரித் தோலுடையும் நன்மையுளந்
தன்னூடு முளைத்தலருந் தாமரையும் எதிர்காட்ட. 22

836. கண்ணிறைந்து கருத்தூடு போய்நிறைந்து கருணை வெள்ளம்
எண்ணிறைந்து புறம்பொசிய இருவிழியாற் கண்டிறைஞ்சி
உண்ணிறைந்த ஆசையொடும் உருகியெதிர் நிற்பதுகண்டு
அண்ணலுமந் நிலைகாண்டற் கரிதாகி மறைந்திருந்தான். 23

837. இலிங்கத்தி னிடைமறைய இறைஞ்சிவிடை பெற்றெழுந்து
நலம்பெற்றுத் தொழுமெவரும் நல்லாவின் குழுவுமுடன்
பலன்பெற்றுச் சூழ்ந்துவரப் பாதைவழி யாக்குறுகிச்
சலந்தத்தும் பொன்னிநதி தாண்டிவட திக்செய்தி. 24

838. திருமேவு திருமங்க லக்குடியிற் சிறந்துவளர்
பெருநீர்மை முனிவர்களும் சித்தர்களும் பிராமணரும்
பொருண்மேவும் அடியவரும் பூரணகும் பத்தினொடும்
அருண்மேவும் அட்டமங்க லங்களுங்கொண் டெதிரணைந்து.
25

839. பராபரைக்கோ வெழிலுருவப் பயன்பெற்றுக் கண்களிப்பத்
தராதலத்தில் விழுந்துகரங் குவித்துநின்று சயசய வென்று
அராவெனுநல் லொலியெழுப்பி அன்புறுகண் ணீர்பொழிந்து
விராவுமன்போ டெதிர்நிற்ப விமலையருள் மிகக்கொடுத்து.
26

840. மணிமறுகி னூடுவலம் வந்துகோ புரவாயிற்
பணிவொடும்போய்க் கோயில்வலம் பாங்கொடும்போந்
தெதிர்நின்றே
அணிமிகுந்தன் பிராணநா யகனடியை நோக்குதலும்
தணிவிலருள் மணக்கோலந் தருங்காட்சி கொடுத்தருள. 27

841. மணிமௌலித் திருமுடியும் வளைமகரக் குழைக்காதும்
துணைவிழியும் மதிமுகமும் துலங்குநுதற் கண்மறைத்தங்கு
அணிதிருநீற் றொளியுமன்ற லமர்வரைமார் பமும்கரமும்
தணிவில் செம்பொற் பட்டுடையும் தமனியநூ புரப்பதமும்.
28

842. கண்டுபர வசமாகிக் கனிவாயில் நீரொழுகப்
பண்டணைந்த திருக்கோலப் படிவமோ என்றெண்ணித்
தண்டரளம் விழிசிதறத் தாழ்ந்துபணி வதுகண்டு
கொண்டலன கண்டனுமுற் கோலநினைந் துள்மறைந்தான்.
29

843. ஆங்குதொழு தருள்விடைபெற் றம்பிகையுள் ளகமகிழ்ந்து
பாங்குபரி சனஞ்சூழப் பசுத்துணையி னொடும்போந்து
தூங்குமலர் நறவுயிர்க்கத் தும்பிபாட் டயர்பொழிலின்
மாங்குயில்கள் மிகக்கூவு மாந்துறையூர்க் கருகணைந்தாள்.
30

844. மாந்துறையின் மேவுகின்ற மறைஞான முனிவர்களும்
ஆய்ந்தசிவ பணிக்குரிய அன்பர்களும் மாதர்களும்

போந்தெதிர்வந் தடிதொழுது பொன்மலர்தூஉ யேத்துதலும்
சாந்தமிகு திருநோக்கத் தண்ணளியீந் தூர்புகுந்து. 31

845. பேரெழில்சேர் புரப்பிரதக் கணமாகப் பிரியமொடும்
பூரணநா யகிபோந்து பொன்னெழிற்கோ புரவாயிற்
சேருமள வினிலெதிரே செஞ்சடையுங் கருமிடறும்
ஆரணமோ தியவாயும் அருள்பொழிமா மதிமுகமும். 32.

846. நாற்புயமுங் கரமலரும் நகைமழுவு மறியுமழ
கேற்பவிளங் கியபுலித்தோ லிசைகலிங்கத் திருவுடையும்
காற்பதுமத் திலங்குமணி நூபுரமும் காட்டிவிடை
மேற்பரிந்தட் சயநாதன் மிகுங்காட்சி தரத்தொழுது. 33

847. பெருங்கருணைத் திருநோக்கம் பெற்றுவிடை பெற்றுமையாள்
மருங்கடியார் கூட்டமுடன் வரும்போது கஞ்சனூர்
நெருங்குமடி யார்களுஞ்சீர் நிறைந்தவருட் பெருந்தவரும்
அருங்குலவே தியர்களுமற் றுளவருணத் தவர்களுமுன். 34

848. உவாமதிநீர்க் கடலிரைந்து வருவதுபோ லுவந்தெதிர்வந்து
அவாவொடுநல் மறைமுதலா தியதுதிசெய் தலர்தூவிச்
சிவாகமநா யகிபாதத் திருத்தூள்சென் னியிற்பொருந்தத்
தவாதுபெரு கண்பினொடுந் தாழ்ந்துபணிந்
தெழுந்திடலும். 35

849. சிரமசைத்துத் திருநோக்கஞ் செய்துநகர் வலம்போந்து
மருமலியும் பலாசுவனத் தமர்ந்தருளு மறைமுதலைக்
குருமணிக்கோ புரங்கடந்து கோயில்வலஞ் சூழ்ந்தெதிர்போய்ப்
பரங்கடலைப் பரங்கடல்முன் பணிவதுபோற்
பணிந்தெழுந்தாள். 36

850. அப்பொழுதக் கினியிலிங்கத் தமர்ந்தருளக் கினியீசர்
செருப்பருமா யிரக்கோடி தினகரரொன் றாயெழுந்தால்
எப்படியோ அப்படிமுன் பெதிர்தோன்றக் கண்டுமையாள்
ஒப்பருந்தன் னுருவுமதற் குள்ளிருப்பப் பார்த்துவந்து. 37

851. செங்கனல்போற் திருமேனி திகழ்ந்தொளிருந் திருவடிவும்
பங்கயமங் கியிற்பூத்த பரிசெனவே யதிற்தோன்று
மங்கையுநூ புரப்பதமும் மலர்முகமுங் கண்டுமகிழ்ந்து
அங்கணீர் ததும்பியங்கத் தடைரோமாஞ் சிதம்பெருக. 38

852. நாயகிநிற் பதுகண்டு நாயகனும் பரவசமாய்
ஏயுமருட் கருணைபுரிந் திலிங்கத்தி னிடைமறையத்

தாயனையாள் பேரின்பந் தழைத்ததிருக் கூட்டமுடன்
போயினாள் திருக்கோடி காவெனும் பொன் னகர்ப்பாங்கு. 39

853. கோடிகா மேவுகின்றோர் கோவுருவ நாயகிமுன்
பீடுறுபிள் ளைகள் பெண்கள் பெருங்கிளைஞ ருடன்நான்கு
நீடுவரு ணத்தவரும் நிகரிலருந் தவர்களுடன்
ஆடியெதிர் வந்துநின்று நன்குறுசோ பனம்பாடி. 40

854. அளவிலா வுபசாரம் பலபுரிந்தங் கடிபணிய
அளவிலா வரமவர்கட் கருள்புரிந்தங் கவர்பதியில்
அளவிலா மகிழ்ச்சியுடன் அணிமறுகி னூடேகி
அளவிலா கருணையன்வாழ்ந் தமர்கோயி லுட்புகுந்தாள். 41

855. திருக்கோயிற் புடைசூழ்ந்து திருக்கம்பத் திடைமருவி
அருட்கோல நோக்குதலும் அளவிலாக் கருணையினால்
இருக்கோல மிட்டேத்தும் எழில்மிகுகோ டீச்சுரர்நல்
விருப்போடு மெங்குநிறை விச்சுவரூ பங்கொண்டு. 42.

856. முடியனந்தம் முகமனந்தம் முச்சுடர்முக் கண்ணனந்தம்
வடிவனந்தம் குழையனந்தம் மலர்க்குமிழ்நா சிகையனந்தம்
விடமுறுகந் தரமனந்தம் விளங்கெழிற்தோள் மலையனந்தம்
படைபயில்செங் கரமனந்தம் பணியணிமார் பகமனந்தம். 43

857. ஆற்றல்மிகுந் திடுபுலித்தோ லார்த்ததிரு மருங்கனந்தம்
கூற்றுதைத்த பரிபுரப்பொற் கோகனகத் தாளனந்தம்
பாற்றிருநீற் றொளிமருவு படிவங்க டொறுமிடத்தில்
வீற்றிருக்கும் பசுங்கொடிபோல் விளங்கருள்மெல்
லியனந்தம். 44

858. காட்டிடநற் கோவுருவக் கவுரியுளங் களிசிறப்ப
நாட்டமிரண் டினிற்தனையும் நாதனையும் கண்டுகளித்து
ஈட்டமிகும் அன்புருவாய் எதிர்நிற்கும் போதிலரன்
மீட்டுமிலிங் கத்தினிடை மிகமகிழ்ந்து மறைந்திடலும். 45

859. பயன்மருவும் அடியரொடும் பாலலோ சனிபோந்து
நயமிகுபொன் னித்துறையில் நணுகியிட வெதிர்கொண்டு
வயமருவு திருவாலங் காட்டில்மிக வாழுகின்ற
வியல்புறுமா தவர்கள்வட கரையினில்வந் திறைஞ்சியிட. 46

860. கண்டுதிரு நோக்கருளிக் காவிரித்தென் கரைமேவி
அண்டர்தொழும் வடவனத்தில் அவருமம்மை யப்பர்தமைத்

தொண்டரொடுந் திருமறுகு சூழ்ந்துகோ புரங்கடந்து
மண்டுமெழிற் கோயில்வலம் வந்துமுனின் றிறைஞ்சுதலும்.
47

861. ஆற்றவிசிற் றென்முகமாய் அன்றிருந்த திருக்கோல
மேற்றிசையிற் கோவுருவாய் மேவியமெல் லியல்காண
நாற்றுதிருச் சடைவிரிவு நறுநுதல்நல் நீற்றொளியும்
போற்றுமரைக் கோவணமும் புலித்தோலி னுடையழகும். 48

862. கருணைபொழி திருமுகமுங் கண்மலருங் கரம்நான்கும்
பொருவில்வர தாபயமும் போதமும்சின் முத்திரையும்
வரியரவத் திருமார்பும் மலரடியுங் காட்டியருட்
பெருகுதிருக் காட்சிசெயப் பிராட்டிதிரு வுளமகிழ்ந்து. 49

863. கயிலையில்முன் காணாத திருக்கோலங் காட்டினர்முன்
பயிலுமது மணம்புரிதற் கேதுவாம் பான்மையென
வியலுமுக்கோ லுமுமினியோர் மணம்புரிதற் கேதுவென
அயில்விழியம் பிகைநினைந்தங் கடிதொழுதாள் பரவசமாய்.
50

864. குறிப்பறிந்து கொண்டதுளங் கொண்டுகுறு மூரலுடன்
சிறப்பருள்செ யிலிங்கத்திற் சென்றுமறைந் திருந்திடலும்
அறப்பெருஞ்செல் வியுமருள்ஆ னினங்களொடு
மகன்பொன்னித்
துறைக்கரையின் மேல்பாற்பூஞ் சோலையில்வந்
தமர்ந்தருள. 51

865. அன்றுபகல் விளக்காகி அரும்பணிசெய் கதிரோனும்
துன்றுமிளைப் பாறுதற்குத் துயில்கொள்ளப் பள்ளியின்மேற்
சென்றவிழு வான்போல்மேற் கடல்சேர்ந்தான் செறிந்திருளும்
என்றுவினை மறைத்திடுங்கே வலம்போல்வந் திறுத்தனவே.
52

866. சகமுழுதும் போர்த்தொளிருந் தண்ணருளா கியவெள்ளம்
இகலறுமோர் பசுவுருக்கொண் டிருப்பதுகண் டிடத்துறைசை
நகர்மருவு ஞேயவா னந்தவெள்ளம் நடந்துவர
மிகவதனிற் குமிழியென விண்ணெழுந்த தொண்மதியே. 53

867. அகிலவுல கமுமீன்ற அன்னைபொன்னித் தென்கரையிற்
தகவுறுபூங் காவனத்திற் தங்கியிருந் தகைகண்டு
மகவுலக மாகியமே லுலகுடையோர் மகிழ்ந்திறைப்ப
உகுமலர்கண் நகுவனபோல் உடுவினம்விண் பூத்தனவே.
54

868. கதித்தலைவி தன்னிடத்திற் கருத்துமகிழ்ந் திருப்பதனை
மதித்துநறுங் குவளைவிழி மலர்ந்துகண்ணீர் சொரிந்துருகிப்
புதுக்குமுத வாய்திறந்து பொன்னிநதி துதித்திரங்கி
எதிர்த்தலைக்கை யாற்றொழஅங் கிருந்தனள்அன்
றிராமுழுதும். 55

869. உடன்திகழ்கோ வினங்களொடும் உம்பன்முகக்
கன்றினொடும்
குடம்பொருநல் மடியுமையாள் கோதறுமுத் தித்தலத்திற்
தடம்பெறுமோர் மண்டபத்துட் சயனித்தங் கெழுந்தருள
விடிந்திடும்பின் னடந்தசெய்தி விளம்புவன்கேள் மிதுலேச.
56

இருபத்து நான்காவது
கோவுருவநாயகி சத்ததலம் தரிசித்த அத்தியாயம்
முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 869.
திருச்சிற்றம்பலம்

24. கோவுருவ நாயகி சத்ததலம் தரிசித்த அத்தியாயம் (சுருக்கம்)

கோவுருவ நாயகியாகிய அம்பிகை, திருக்குளம்பியத்தில் இருக்கும் சிவபெருமானிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, பசுக்கூட்டங்களுடன் எழுந்து, உலகம் புகழும்படியாக மேற்குத் திசையில் ஆங்காங்கு இருக்கின்ற தலங்களிலுள்ள பெருமானை வந்தித்து வணங்கினாள். பின்பு, திருப்பட்டீச்சுரத்திலுள்ள இறைவனைப் பூசித்துப் பட்டிநாமம் அதற்குரியதாணதை விளக்கி, ஆவூரை அடைந்து அங்குள்ள சங்கரனைப் பூசித்து அவ்வூரையும் விளங்க வைத்தாள்.

பின்பு திருவலஞ்சுழியை அடைந்து அங்குள்ள சிவபெருமானைத் தொழுதாள். குடமூக்குக்கீழ்க் கோட்டத்தைப் பணிந்தாள். திருவிடைமருதூர் தலத்தை வலமாக வந்து, திருக்கோயிலை அடைந்து மருதிடங் கொண்ட பெருமானை வணங்கித் துதித்தாள். ஐந்து இரவு அந்த மருதூரில் தங்கியிருந்தாள். அப்பொழுது முத்தித் திருநகரில் உள்ள மாசிலாமணிப் பெருமான், திருமால், நான்முகன், தேவர்கள் அன்பர்கள் ஆகிய அனைவரும் கேட்கும்படியாக, 'நீங்கள் அனைவரும் சென்று பசுவடிவான பராபரையை அழைத்து வாருங்கள்' என்று அசரீரியாகக் கூறினாள்.

தேவர்கள் அனைவரும் அவ்வாறே சென்று அம்பிகையின் திருவடிகளில் வணங்கி மலர்தூவி வணங்கி, அரசவனத்திலுள்ள பெருமானின் ஆணைப்படி தங்களைத் தரிசிக்க வந்தோம்! பூரண மயிலே நாளை சத்தத்தானத்திற்குப் புறப்பட வேண்டும் என்று பணிந்து வேண்டினார்கள்.

இடைமருதுக்குக் கிழக்கே ஓடும் காவிரியின் வடகரையிலுள்ள நான்கு தலங்களில் உள்ளவர்களும், தெற்குக் கரையிலுள்ள மூன்று தலங்களில் உள்ளவர்களும் என ஏழு தலங்களிலுள்ள அனைவரும், அம்பிகை தங்கள் தலத்திற்கு வரும் செய்தி அறிந்து தத்தம் நகரை அழகுபடுத்தத் தொடங்கினார்கள்.

அம்பிகை தம் பசுக்கூட்டத்துடன் புறப்பட்டாள். சங்கு, தாரை, துந்துமி முதலான வாத்தியங்கள் முழங்கின. பிரமன், முனிவர்கள், அந்தணர்கள் போன்றோர் வேதம் ஓதவும், விநாயகப் பெருமான் அம்பிகைக்கு முன்னே காவலாக வரவும், வயிரவர் வீரபத்திரர் ஆகிய இருவரும் திசைக்காவல் புரியவும், அம்பிகை பின்னே வந்து குரங்காடு துறையை அடைந்தாள். அங்குள்ள மறையவர்களும் அடியார்களும் எதிர்போய் வணங்கி நின்றனர்.

அம்பிகையானவள் அன்பர்களுடன் வீதிவலம் வந்து திருக்கோயிலை அடைந்தாள். அங்குள்ள ஆபத்சகாயர் ஐந்து முகமும், மதிச்சடையும், வரதமும், அபயமும், மழுவும், மானும், முப்புரி நூலும், பதினைந்து கண்களும், தோடும், குண்டலமும், புலித்தோலாடையும் விளங்கிய திருவடிவழகை அம்பிகையின் முன்னே காட்டினார். அதுகண்ட அம்பிகை உள்ளம் மகிழ்ந்து திளைத்து நிற்பதைக் கண்ட பெருமானும் மனமுருகி இலிங்கத்தினிடத்து மறைந்தருளினார். பின்பு, கோவுருவநாயகி இறைவனை வணங்கி விடைபெற்று எழுந்து, பசுக்கூட்டங்களுடன் காவிரியாற்றைத் தாண்டி வடதிசையை அடைந்து திருமங்கலக்குடிக்கு வந்தாள்.

திருமங்கலக்குடியில், முனிவர்களும், சித்தர்களும், அந்தணர்களும், அன்பர்களும் பூரண கும்பத்துடனும், அட்டமங்கலங்களும் கொண்டு எதிர்வந்து வணங்கினர். பராபரையானவள் கோவுருவமாய் வந்ததைக் கண்டு அனைவரும் பரவசமெய்தினர். கரங்கள் குவித்து, அர அர, செய செய என ஒலியெழுப்பி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

அவர்கள் அனைவருக்கும் அம்பிகை அருள்கொடுத்து, நகர்வலம் வந்து கோபுர வாயிலில் போய், கோயிலை வலம் வந்து இறைவனை வணங்கினாள். இறைவன் திருமணக் கோலக் காட்சியை அம்பிகைக்குக் காட்டியருளினார். அதுகண்டு அம்பிகை வணங்கி மகிழ்ந்தாள்.

அங்கிருந்து விடைபெற்ற அம்பிகை திருமாந்துறையின் பக்கம் வந்து சேர்ந்தாள். அங்குள்ள பெருமானின் அருட்கோலங் கண்டு தொழுது, கஞ்சனூர் வந்து சேர்ந்தாள். அங்கு பலாச வனத்திலுள்ள பெருமானது கோயிலுள் புகுந்து வலமாக வந்து எதிர்சென்று பணிந்து வணங்கினாள். அப்பொழுது இறைவன் ஒளிவடிவாகக் காட்சி தந்தார். அவ் ஒளிக்குள்ளே தம் உருவமும் இருப்பதைக் கண்ட அம்பிகை பரவசமடைந்தாள். இறைவனும் புளகாங்கிதம் அடைந்து இலிங்கத்தில் மறைந்தருளினார்.

பின்பு, திருக்கோடிகாவுக்குச் சென்ற அம்பிகை அங்குள்ள திருக்கோயிலின் முன்பு வணங்க, இறைவன் விச்சுவரூப தரிசனம் தந்தருளினார். பின்பு அம்பிகை காவிரித்துறையை அடைந்தாள். திருவாலங்காட்டில் உள்ளவர்கள் வடகரைக்கு வந்து அம்பிகையை வணங்கினர். அவர்களுக்குரிய தேவி அவர்களுடன் காவிரித் தென்கரையை அடைந்தாள். அங்கு வடவனத்தில் எழுந்தருளியுள்ள அம்மையப்பரின் முன்நின்று வணங்கினாள். அன்று, ஆலமரத்தடியில் தட்சிணாமூர்த்தி யாகக் காட்சியளித்ததை அம்பிகை காணும்படியாகச் செய்தார். அம்பிகையும் கண்டும் திருவுளம் மகிழ்ந்தாள்.

முன்பு கயிலையிலே இறைவன் காட்டிய திருக்கோலம் முன்பு திருமணம் செய்வதற்கு ஏதுவாகிய தன்மையாக இருந்தது. அவ்வாறே இப்பொழுது இறைவன் காட்டிய திருக்கோலமும் இனி ஒருமணம் புரிவதற்கு ஏதுவாயாயிருக்கும் என்பதை நினைத்த அம்பிகை மிகுந்த மகிழ்ச்சியுற்றாள். இதைக் குறிப்பாலுணர்ந்த இறைவன் இலிங்கத்தினிடமாக மறைந்தருளினார்.

பின்பு, அம்பிகையும் பசுக்கூட்டங்களுடன் காவிரிக்கரையின் மேல் பாகத்தில் ஒரு பூஞ்சோலையில் தங்கினாள். அப்பொழுது கதிரவனும் மறைந்தான். அகில உலகமும் ஈன்ற அன்னையானவள் பொன்னியாகிய காவிரியாற்றின் தென்கரையில் இவ்வாறு தங்கியிருப்பதைக் கண்ட தேவலோகத்தவர் பூமாரி பொழிவது போன்று கருவானில் விண்மீன்கள் பூத்துக் குலங்கின. பசுக்

கூட்டங்களோடும் விநாயகப் பெருமானுடனும் அச்சோலையிலே அம்பிகை துயில் கொண்டு விடியலில் எழுந்தருளினாள்.

இருபத்தைந்தாவது
கோவுருவ நாயகி மாசிலாமணியைத் தரிசித்த அத்தியாயம்

870. அருள்முத்திச் சேத்தி ரத்துள் அலர்பொன்னிக் கரையின் பாங்கர்
மருமலர்ச் சோலை சூழ்பொன் மண்டபத் துமையாள் காண
இருளிர அவள்தன் பாதம் ஏத்துவோர் மலம்போல் நீங்க
ஒருவுயிர் பிறந்தாற் போல்வந் துதித்தனன் குணபால்
வெய்யோன். 1

871. புலரியி லெழுந்து பொன்னித் துறையினிற் பொருந்தி நின்று
பலபசுக் குழுவி னோடும் பரைநல்நீர் படிந்து வந்து
நலமிகு நியமத் தோடும் நாதன்அஞ் செழுத்தும் உன்னிக்
கலனணி சிறப்பி னோடும் காதலன் தன்னைக் காண. 2

872. தென்முக மாக நோக்கித் திருவடி வைக்கும் போது
தன்மண வாளன் வெள்ளிப் பொருப்பினிற் சாற்றும் வண்ணம்
நன்மலர் பொரும்இ டக்கண் துடித்துநன் னெறிமேல்
வைக்கும்
நின்மலர்ப் பாதஞ் சற்றே இடறிடும் நிமித்தங் கண்டாள். 3

873. அண்ணலன் றுரைக்கும் இன்பக் குறியின்றிங் கடுத்த தென்னா
உண்ணிறை மகிழ்ச்சி யோடும் குறிபெறும் உண்மை
யோர்ந்தாள்
நண்ணுகால் இடறுந் தன்மை நமக்கிவ்ஆ னுடல்விட் டேகும்
கண்ணிடந் துடித்த தாலே கணவனை அணைவோ மென்று. 4

874. அகத்தினுள் நினைந்து முத்திச் சேத்திர மாட்சி யான
மகத்துவம் தரும்இங் கென்றும் வாழ்வுபெற் றிருப்போமென்று
சுகத்தொடுங் கெசமார்க் கத்தாற் றுறைசைநன் னகரை நாடிச்
சகத்தினுக் குயிராம் அன்னை தன்னக மகிழ்ந்து சென்றாள்.
5

875. அப்பொழு தெதிர்கொண் டவ்வூர் அருமறை முனிவர் தாமும்
செப்புநான் மறையு ணர்ந்த தெய்வஅந் தணரும் நேயத்

870. குணபால - கிழக்கே. வெய்யோன் - சூரியன்.
871. காதலன் - சிவபெருமான். 872. நிமித்தம் - குறி.
875. பூதிசாதன வேடத்தோர் - சைவத் துறவிகள்.

துப்புறு துறவின் மேவித் தூயமெய்ச் சைவ மார்க்கம்
மெய்ப்புற வளர்க்கும் பூதி சாதன வேடத் தோரும். 6

876. இல்லறத் தொழுகி யன்பர் ஏவலிற் சிவதன் மங்கள்
ஒல்லுமெய் வகையாற் செய்யும் உறுதிகொள் தொண்டர் தாமும்
மெல்லியற் கற்பு மின்னார் மிக்கநால் வருணத் தோரும்
சொல்லுநல் லணைபி தாவைத் தொழுநெறி மைந்தர் தாமும். 7

877. பூரண கும்பங் கொண்டு போமவர் சிலரும் வேத
பாரண முரைத்துச் செல்லும் பண்பரும் வாச மேவு
தாரொடு மலர்க ளேந்திச் சார்பவர் பலரும் இன்பம்
நேருறு பணிகட் கேற்ற நிமந்தங்கள் கொடுபோ வாரும். 8

878. சோபன முரைத்துச் செல்லும் தொழிலுடை யோரு மிக்க
ஏர்பெறு கவிதை நாதம் இசைத்திடு வோரு மாகக்
கார்பெறு மயிலி னங்கள் களிப்பபோற் களித்து முன்போய்
நேர்பெறப் பணிந்து சூழ்ந்து நினைந்தபல் பணியும் செய்து. 9

879. வருமவர் தம்மை யெல்லாம் மலர்க்கணால் நோக்கி அன்னை
அருள்கொடுத் தெய்தல் கண்டங் கற்புதம் மிகவு மெய்தி
இருமையும் பெறுமெய் யின்பம் ஈபவள் வந்தா ளென்று
பொருவிலா உவகை பொங்கிப் பொழிவபோற் புகழ்ந்து சொல்லுவார். 10

880. என்னமா தவஞ்செய் கின்ற தித்தலம் என்பார் இவ்வூர்
மன்னுமே லுலகுக் கெல்லாம் மகத்துவம் பெற்ற தென்பார்
அன்னையைத் தினமும் கண்டிங்கு அடிபணிந் திடலாம் என்பார்
உன்னிய வெல்லாம் இந்த உத்தமி தருவாள் என்பார். 11

881. விழிகளெண் ணிலாத வேண்டும் விமலையைக் காண என்பார்
பழிபடு பவநோய் முற்றும் பறிந்தன நமக்கிங் கென்பார்
வழிபடு தொழிலே நம்தம் மயக்கறு மருந்தாம் என்பார்
வழியடி யோங்க ளுய்ய வளர்க்குந்தாய் இவளே என்பார். 12

876. சிவதன்மங்கள் - தெய்வ புண்ணியங்கள்
877. நிமந்தங்கள் - நிபந்தங்கள்

882. செல்வமிக் குதவும் காம தேனுவோ இவள்மெய் என்பார்
மல்குநல் மணிப்பூ ணெல்லாம் மற்றநாற் தருவோ என்பார்
பல்வடி வுடைய இந்தப் பசுவினம் பதுமை யாதி
நல்வளம் பெறும்விண் ணாட்டு நங்கையர் தாமோ என்பார். 13

883. எழில்பெறு தாய்முன் போம்இக் கன்றுதான் இனிய நம்மூர்
அழகிய பிள்ளை யாரோ ஆகுமென் றறைவார் சூழ்ந்து
குழைவொடும் பணிசெய் தெய்தும் கோதிலிக் குழாங்க ளெல்லாம்
வழிவழி அடிமை இந்த மாதுமைக் கென்றும் என்பார். 14

884. மாசிலா மணிவந் திந்த ஆன்பசு வுருவை நீக்கி
ஆசிலாக் கரத்தாற் கட்டி அணைத்திடும் இனிமேல் என்பார்
தேசுறும் இருவர் கூடும் செயலென்று காண்பேம் என்பார்
பேசியிவ் வாறெல் லாரும் பின்வர முன்பு போந்து. 15

885. பூகயி லாச மாகப் பொலிந்தெழில் சிறந்தி லங்கும்
வாகுறு நகரி னான்கு மணிமறு கழகுங் கண்டு
மோகமாய் வலங்கொண் டெய்தி முன்புதன் னிச்சா தீர்த்தத்து
ஓகையாய் மூழ்கி நின்றங் கொளிர் வெண்ணீ றணிகள் தாங்கி 16

886. அரகர வென்னு மோசை ஆழிக ளேழு மொன்றாய்
வருவபோல் முழங்கச் சென்று வான்தொடு சிகரி வாயிற்
திருநெறி யூடு போந்து திருவர சுடனே மிக்க
பெருகருட் கோயில் முக்காற் பிரியமாய்ச் சூழ்ந்து வந்து. 17

887. சன்னிதி யெதிர்போய் நின்ற தலைவனே போற்றி! போற்றி!
மின்னவிர் சடையாய் போற்றி! வேதநா யகனே போற்றி!
கன்னல்வில் மதனைக் காய்ந்த கண்ணுதல் நாதா போற்றி!
என்னையாள் இறைவ போற்றி! ஈசனே போற்றி! போற்றி! 18

888. உனைப்பிரிந் திருத்த லாற்றேன்
உரிமைதந் தருள்வாய் போற்றி!
தினைப்பொழு தேனும் வேண்டேன்
தேகத்தின் தன்மை போற்றி!
வினைப்பிணிப் பறவே உன்னை
விரும்பினோர் தமக்கும் போற்றி!
மனத்தினுக் கதீத மாமென்
மாசிலா மணியே போற்றி! 19

வேறு

889. அடியவருக் கெளியவனே பரதேசி
காவலனே அருளா யென்று
படியின்மிசை உமைபணிய இறையுமனந்
தரியாது பரிவு கூர்ந்து
நெடியதிரு வருளுருவ நிமலையிரு
கண்களிப்ப நேரே தோன்றிக்
குடிலையையீன் றருள்ஞான குருமணியிற்
காட்சிமிகக் கொடுப்ப தானான். 20

890. பாலைவிடாச் சுவைபோலப் பராபரையோ
டொன்றாகும் பான்மை காட்டிச்
சீலமிகும் பொன்மணியாய்ச் சேர்ந்தாலும்
மாற்றொன்றாய்ச் சேரு மாபோற்
கோலமுறைஞ் சத்தியிலுந் தானொன்றாய்ச்
சேர்ந்துநிற்குங் குறியுங் காட்டி
ஏலவே பரைதருமிச் சாஞானக்
கிரியைவடி வெழிலுங் காட்டி. 21

891. உடலினுட னொற்றுமையாய்க் கூத்தாடி
பலவேட முறுமா போலச்
சடவடிவாம் இருமாயை உருமேவு
நவபேதச் சார்புங் காட்டி
இடமிகுமித் தலம்தீர்த்தம் மூர்த்திஇச்சா
திகளென்னும் இயல்புங் காட்டிப்
படருலக வுயிர்முழுதும் அகரவுயிர்
போலிருக்கும் பரிசுங் காட்டி. 22

892. ஆகாய மென்மொழியா லுமைகேட்கப்
புகல்வன்உனை அனுப்போ தேனும்
பாகார்ந்த சொல்லாய்நாம் பிரிந்ததிலை
சத்தமியிற் பசுமெய் நீக்கி
வாகாய்நீ யிருக்குமிடம் தருவேம்அவ்
வெல்லைமட்டும் மகிழ்ந்துன் பாலாற்
போகாதி சயமுறநம் உடல்குளிர்
வாட்டி இங்ஙன் பூசியென்று. 23

893. திருவாணி முதலான் தேவஆ
னினங்களுக்குந் திருக்கண் நோக்கப்
பெருவாழ்வு கொடுத்துநமைப் பிப்பிலமூ
லக்குறியிற் பிரிய மோடு

முருகார்வத் தொடுநும்பா லாட்டியே
பூசித்திங் குமையா ளோடும்
அருள்கூர விருந்துநந்தங் கணபதியாற்
பசுச்சாபம் அகல்வீ ரென்றான். 24

894. இத்தகைய திருவாக்குக் கேட்டுமகிழ்ந்
தளவிலா இன்ப மெய்திச்
சுத்தன்விடை பெற்றகன்று வடமறுகுக்
குத்தரமோர் சோலை தன்னுள்
சித்திரமா மயன்நிரு பித்தமணி
மண்டபத்திற் றிகழா னோடும்
சத்திமகிழ்ந் திருந்தனள்அவ் வானந்தப்
பூங்காவின் தன்மை சொல்லில். 25

895. கற்பகா டவியென்றும் சிவஞானச்
சோலையென்றும் கதிக்கா னென்றும்
சொற்பயிலா னந்தவன மென்றும்பேர்
புவிபுகலும் தொகுமெய்ப் போதப்
பொற்புடைய நவகோடி சித்தர்கணம்
எந்நாளும் பொருந்தி வாழ்வர்
அற்புதமாம் அவ்வனத்தின் பெருமைபன்னாள்
உரைத்திடினும் அடங்கா தன்றோ. 26

896. மந்தாரம் பாரிசா தங்கமழ்சந்
தனம்சூதம் வகுளம் நெல்லி
கொந்தாரும் பாதிரிவேய் நாவல்பலா
சஞ்சமிநற் கோங்கு தெங்கு
செந்தாது மிகுசெருந்தி கமுகுதா
லம்பனசந் திகழு ஞாழல்
இந்தாரு மருதரசால் வில்வம்விளாக்
கொன்றைபல விலங்கும் எங்கும். 27

897. மல்லிகைநல் முல்லைபிச்சி மருக்கொழுந்து
கரவீரம் மாது ளங்கம்
நல்லிணர்ப்பன் னீர்நந்தி யாவர்த்தம்
கரந்தைஎலு மிச்சை நாரம்
அல்லலறு தும்பைபயறு கார்பவள
மல்லிகைநீ ராவி தோறும்
புல்லுமிதழ்க் கமலமலர் ஆம்பல்கழு
நீர்குவளை பொருந்தும் எங்கும். 28

898. கிள்ளைகளும் பூவைகளும் தமிழ்க்கீத
இசைகள்பல கிளக்கும் எங்கும்
கொள்ளுமெழில் உமையாடல் இன்னிசைபோற்
குயிலினங்கள் கூவும் எங்கும்
அள்ளிருள்நேர் குழலுடையாள் சாயைபோற்
தோகைமயி லாடும் எங்கும்
மெள்ளஅவள் நடைபயிலும் சீடர்போல்
நடந்தனங்கள் விளங்கும் எங்கும். 29

899. வண்டொடுதேன் சுரும்புஞிமி றேழிசைரா
கமும்பாடி மருவும் எங்கும்
தண்டரள நகையழகு கேட்டிரந்து
தளவலர்ந்து தயங்கும் எங்கும்
விண்டநறுங் கனியுதிர்த்துக் கவியினங்கள்
குதித்துவிளை யாடும் எங்கும்
ஒண்டிரைநீர்ப் பூநிலப்பூப் பலவுமலர்ந்
தினியமணம் உலவும் எங்கும். 30

900. இன்னவளம் பொருந்துபூங் காவினிடை
யுகையிருப்ப இமையோ ராதி
நன்னலங்கொள் தொண்டரெலாம் அவரவர்கள்
தானங்கள் நணுக வீர
மன்னவனும் அந்நகருத் தரதெருவிற்
கோயில்கொடு வதிந்தா னன்று
பொன்னனைய கதிரவனு மேற்றிசைமின்
னாள்மனையிற் புகுந்தா னன்றே. 31

901. அன்றுநிசி யின்கண்நிகழ் கின்றதிது வாகும்இனி
அம்பிகைம கிழ்ந்து மறுநாள்
என்றுமுட னாகியிரும் மாசில்மணி நாயகனை
இன்பொடுபூ சித்த வகையும்
துன்றரசின் மூலமதில் வானுறுமின் னாரினிய
தொண்டொடுசெய் பூசை யதனைப்
பொன்றிகழ்ச டாதரன்இ லிங்கவடி வாய்அபிடே
கங்கொள்இயல் பும்புகலுவாம். 32

---

898. கிள்ளை - கிளி. பூவை - குயில். அனங்கள் - அன்னப் பறவைகள்.
899. சுரும்பு - வண்டு. ஞிமிறு - வண்டு.

இருபத்தைந்தாவது
கோவுருவ நாயகி மாசிலாமணியைத் தரிசித்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 901

திருச்சிற்றம்பலம்

25. கோவுருவ நாயகி மாசிலாமணியைத் தரிசித்த அத்தியாயம் (சுருக்கம்)

பேரருளை வழங்கும் முத்தித் தலமாகிய துறைசையில், காவிரிக் கரையிலுள்ள மலர்ச் சோலைகள் சூழ்ந்துள்ள பொன் மண்டபத்தில் உள்ள அம்பிகை காணும்படியாகக் கிழக்கே சூரியன் தோன்றினான். அதற்கும் முன்பாக, விடியற்காலையிலே எழுந்த அம்பிகை காவிரிக்கரையை அடைந்து, பசுக் கூட்டங் களுடன் நீராடி, நியமத்தோடு ஐந்தெழுத்து ஓதி, இறைவனைக் காணத் தெற்கு முகமாக நோக்கித் திருவடியை வைத்தாள். அப்பொழுது, தம்முடைய நாயகனான சிவபெருமான் முன்பு கயிலையில் கூறியவாறே இடது கண் துடித்தது. அத்துடன் இடது பாதம் சற்றே இடறுதலையும் அவள் கண்டாள்.

சிவபெருமான் அன்று கூறிய இன்பக் குறிகள் இங்குத் தோன்றின என்னும் மகிழ்ச்சியுடன் இச்சகுனத்தை ஆராய்ந்தாள் அம்பிகை. இவ்வாறு கால் இடறுந் தன்மையால் நமக்கு இப்பசுவுருவம் நீங்கும்; இடது கண் துடித்ததால் பிரிந்த நாயகனை அடைவோம் என்று உள்ளத்தில் நினைந்தாள். முத்தி நகரானது மிகவும் மாட்சிமை பெற்றதாகும்; எனவே, இங்கு எப்போதும் நல்வாழ்வு பெற்றிருப்போம் என்று அம்பிகை துறைசையை நாடி மகிழ்ந்து சென்றாள்.

அம்பிகை துறைசையை அடைந்தபொழுது, அங்குள்ள முனிவர்கள், அந்தணர்கள், சைவத் துறவிகள், இல்லறத் தொண்டர்கள், கற்பறம் பூண்ட மாதர்கள், நால்வருணத் தோர்கள், தாய் தந்தையை வணங்கி மகிழும் மைந்தர்கள் ஆகிய இவர்களெல்லாம் சேர்ந்து பூர்ணகும்பம் கொண்டும், வேத பாராயணம் ஓதியும், மலர்மாலைகளை ஏந்தியும், மற்றப் பணிகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டும், மங்களம் பாடியும், கவிதைகளைப் பாடியும், அம்பிகை முன்பு சென்று பணிந்து சூழ்ந்து பல பணிகளையும் செய்தனர்.

இவ்வாறு வரும் அடியவர் அனைவருக்கும் அம்பிகை தம் அருள்நோக்கினால் அருளமுதம் வழங்கினாள். இதைக் கண்டோர் மிக மகிழ்ந்து, நமக்கு இருமையும் இன்பம் கொடுக்கும் அன்னை வந்துவிட்டாள் என்று புகழ்ந்து கூறினர். இக்கோமுத்தித்தலம் என்ன மாதவம் செய்ததோ! தேவர் உலகத்தைவிட இந்தத் தலம் மகத்துவம் பெற்றதாகும். நாம் அம்பிகையை நாள்தோறும் தரிசித்துத் திருவடிகளை வணங்கி மகிழலாம். நாம் எண்ணியவற்றையெல்லாம் அவள் தருவாள் என்று அனைவரும் கூறினர்.

விமலையாம் அம்பிகையைக் காண எண்ணற்ற கண்கள் வேண்டும்; இவ்வன்னையை வழிபட்டால் நம்முடைய பிறவிநோய் முற்றும் தீரும்; நாம் வழிவழியாகப் பிழைப்பதற்கு இவளே நம்மைக் காப்பாற்றும் தாயாவாள்; இவ்வன்னையின் உடலே காமதேனுவோ! அல்லது கற்பகத் தருவோ! இப்பசுக் கூட்டங்களெல்லாம் விண்ணாட்டு மாதர்களோ! தாய் முன்னே செல்லும் இக்கன்று நம்மூர் அழகிய பிள்ளையாரோ! என்று இவ்வாறு அன்பர்கள் பலர் அம்பிகையைப் புகழ்ந்து பேசிக்கொண்டு சூழ்ந்து வந்தனர்.

இறைவி முன்னே சென்று துறைசை மாநகரின் நான்கு வீதிகளையும் வலம் வந்து, இச்சா தீர்த்தத்தில் மூழ்கி, வெண்ணீறணிந்து, அரகர என்னும் ஓசை ஏழுகடல்கள் ஒன்றாக வருவதுபோல முழங்க, விண்ணைத் தொடும் கோபுர வாயிலை அடைந்து, திருவரசுடனே கோயிலையும் மூன்று முறை வலம் வந்தாள்.

சந்நிதி எதிர்போய் நின்ற அம்பிகை, தலைவனே! மின்னவிற் சடையாய்! வேத நாயகனே! மதனைக் காய்ந்த கண்ணுதல் நாதா! எனையாள் இறைவனே! ஈசனே! உம்மைப் பிரிந்திருத்தல் ஆற்றேன்! முன்பு போலவே உம்முடன் இருக்கும் உரிமை தந்தருள்வாய்! தினைப்பொழுதேனும் இத்தேகத்தை விரும்பி வேண்ட மாட்டேன்! வினைப்பிணி தீர வேண்டும் எளியோருக்கும் நீர் அருள வேண்டும்! மனதிற்கெட்டாத மாசிலா மணியே! எனப் பலவாறு போற்றித் துதித்தாள்.

அம்பிகையின் துதி கேட்ட இறைவன் உமைக்குக் காட்சி கொடுத்தருளினார். ஆகாயத்திலிருந்து மெல்லிய ஓசையால் உமையவள் கேட்கும்படியாகக் கூறினார். 'உன்னை அனுப் பொழுதும் நாம் பிரிந்ததில்லை; சப்தமியிலே உன்னுடைய

பசு வடிவை நீக்கி, உனக்கு உரிமையான நமது இடப்பாகத்தை அருளுகின்றோம்; அதுவரையிலும் உன்னுடைய பாலினாலே நம் உடல் குளிரும்படியாக அபிடேகம் செய்து நாள்தோறும் பூசிப்பாயாக' என்றருளினார்.

மேலும், திரு வாணி முதலான பசுக்கூட்டங்களுக்கும் திருக்கண்ணோக்கம் செய்து அரசவனத்தடியிலே நம்மை அன்போடும் உங்களுடைய பாலால் அபிடேகம் செய்து பூசித்து உமையுடனே இருங்கள்; விநாயகப் பெருமானாலே நீங்கள் அனைவரும் பசுச்சாபத்தினின்றும் அகல்வீர் என்றும் இறைவன் கூறியருளினார்.

இத்தகைய திருவாக்குக் கேட்டு மகிழ்ந்து எல்லையற்ற இன்பமடைந்தாள் அம்பிகை. பின்பு இறைவனிடம் விடைபெற்று, வடக்கு வீதிக்கு வடபாரிசத்தில் உள்ளதான ஓர் சோலையினுள்ளே மயனாலே அமைக்கப்பட்ட அழகிய மணி மண்டபத்திலே பசுக்கூட்டங்களுடன் அம்பிகை மகிழ்ந்திருந்தாள்.

கற்பகாடவி, சிவஞானச்சோலை, கதிக்கான், ஆனந்தவனம் எனப் பல நாமங்களால் அழைக்கப்பெறும் அந்தச் சோலை வனத்திலே நவகோடி சித்தர்கணம் எந்நாளும் பொருந்தி வாழ்வர். அத்தகைய அற்புதமான வனத்தின் பெருமையை உரைக்க எவராலும் இயலாது. மந்தாரம், பாரிசாதம், சந்தனம், சூதம், வகுளம், நெல்லி, பாதிரி, மூங்கில், நாவல், பலா, கோங்கு, தெங்கு, செருந்தி, கமுகு, தாலம், பனசம், ஞாழல், மருது, அரசு, ஆல், வில்வம், விளா, கொன்றை போன்ற பல மரங்களும்; மல்லிகை, முல்லை, பிச்சி, மருக்கொழுந்து, கரவீரம், மாதுளங்கம், பன்னீர், நந்தியாவர்த்தம், கரந்தை, எலுமிச்சை, நாரத்தை, தும்பை, பவளமல்லிகை, தாமரை, ஆம்பல், கழுநீர், குவளை போன்ற நறுமண மலரினங்களும் இச்சோலையெங்கும் காணப்பெறும்.

கிளிகளும் குயில்களும் இங்கே இன்னிசை பயிலும். மயிலின் ஆட்டமும் அன்னத்தின் நடையழகும் மாதர்தம் சாயலாகும். குரங்குக் கூட்டங்கள் கனிகளைத் தின்று குதித்து விளையாடும். இவ்வாறு பல்வகை வளமும் நிறைந்து காணப் பெறும் சோலையிலே அம்பிகை இருக்கவும், சூரியன் மேற்குத் திசையிலே மறைந்தான். மறுநாள் விடிந்ததும் அம்பிகை மாசிலாமணி நாயகனை அன்பொடு பூசித்த வகையை இனிக் காண்போம்.

இருபத்தாறாவது
தேவி மாசிலாமணியைப் பூசை செய்த
அத்தியாயம்

902. ஐந்தருவ ணிந்துருவு கொண்டபசு நாயகிமெய்
அன்பொடுசெய் பூசை யதனைப்
புந்தியொடு கண்டுமிகு யின்பநுக ராசையொடு
பொங்குகுண திக்கி லிரவி
வந்துறுமவ் வெல்லையினி லானினொடெ முந்திமைய
மங்கையுள் மகிழ்ச்சி யுடனே
முந்துதன திச்சையொரு தீர்த்தமடு வாயமர்தல்
முன்னியதை நாடி யணுகி. 1

903. நீரிடை யிறங்கிஅரன் நாமமுள்நி னைந்துவளர்
நின்மலநீ ராடி வெளியிற்
சீருறுவின் மாதரொடும் வந்துகரை நின்றுதிரு
நீற்றினொடு குங்கு மமுதற்
தாரிலகு கண்டிகைபொற் தூசுமணி பூணெழில்கள்
தாங்கிநிய மத்தி னொடுபோய்
ஏரணுகு பொற்சினக ரத்துளுறு மாசிலா
யிலிங்கவரு குற்று மிகவும். 2

வேறு

904. மான தத்தொடும் ஆகம விதியால்
மாசி லீசனை மனமகிழ்ந் தினிய
ஞான பூசனை முன்செய்த பின்பு
நல்கு தன்திருப் பாலினா லாட்டித்
தூந லம்பெறு கிரிகையாற் பூசை
தொடங்க வேண்டிநற் துலங்குசங் கற்ப
மான தன்பொடு கொண்டுவிக் கினங்கள்
அணுகி டாமலைங் கரனையுள் நினைந்து. 3

905. சுத்த மானபஞ் சாக்கர மதனாற்
துதித்த ரும்பரா னந்தசா கரத்துட்
சித்த சுத்தியாய் மூழ்கிமும் மலமும்
தெசிக்க ஆசம னஞ்செய்து திருநீறு
ஒத்த சிற்பரை வடிவினாற் சாத்தி
உண்மை ஞானஅத் திரபுரோட் சணஞ்செய்து

904. விக்கினங்கள் - இடையூறுகள்.

அத்த மிஞ்சுதத் துவத்திரை யத்துக்கு
அஞ்செழுத்தினாற் சுத்தியா சமித்து. 4

906. சிவத்தொ டொன்றிய பிரணவ பிராணா
யாமஞ் செய்துநற் றிகழிச்சா திகளாய்
உவப்பொ டுங்கர சுத்திஅஞ் செழுத்தால்
உணர்ந்து செய்தங்க கரநியா சங்கள்
நவத்து திருவெழுத் தைந்தையு மாறி
நண்பி னால்நிசித் துலகுகா லங்கள்
எவப்ப டக்கழித் தஞ்செழுத் தையுந்தன்
இனிய சத்திக ளாய்த்தியா னித்து. 5

907. ஏக பூரண சத்தியாய்த் தானே
எவைக்குஞ் சாட்சியாய் நிற்பதை நினைந்து
மோக மற்றவோர் காலமே யாக்கி
முழுதும் அங்கறி யாசம்அஞ் செழுத்தாற்
தாக மோடுசெய் தங்கைநீர்க் கும்ப
சலத்தி னாலபி டேகஞ்செய் ததன்பின்
வாகு பெற்றிடு திரோதமு மலமும்
மார்ச்ச னம்அக மருடணத் தகற்றி. 6

908. அருண மண்டல பரைக்குமேற் சிவனை
அறிந்து நல்லருக் கியம்புரிந்த தறிவால்
மருவு தூலசூக் குமவுட லுடனே
மந்திர தேகமு ஞானமாம் வடிவாய்
இருள றுஞ்சக ளீகர ணஞ்செய்
தினிய அர்ச்சனை செய்வது கருதிப்
பொருவி லாதநல் முத்திஅஞ் செழுத்தாற்
புண்ணிய அருக்கிய முன்தாபித்து. 7

909. அந்த ஞானநன் னீர்கொடெவ் விடமும்
அருட்சி வபரி பூரண மாகச்
சிந்தை யாற்புரோட் சித்தெழுத் தைந்தாற்
திரிவி தங்கொள்தத் துவமெலா மகற்றும்
இந்த நன்னிலை தானமாய்ப் பிரவே
சித்த ரும்பரை யெனுந்துவா ரத்துள்

907. அகமருடணம் - அகமர்ஷணம். நீருக்குள்ளே நின்று செபித்துப் பாவத்தை போக்கச் செய்யும் ஒரு மந்திர செபம்.

908. அருண மண்டலம் - சூரியமண்டலம்

909. திரிவிதம் - மூன்று விதம்.

வந்து முற்திரோ தத்தொடு மலத்தால்
மன்னும் விக்கின மறாவுறா தகற்றி. 8

910. வாயி றந்தநல் லிச்சையா திகளை
மகிழ்ந்து டன்வழி பட்டருட் பூமி
ஆயநல் வாஸ்த்து பதியும்அன் புடனே
அருச்சித் தாகம மறையருட் குருவாய்
மேய நற்சதா சிவரைஅஞ் செழுத்தால்
விதிப்படி அருச்சித் தைந்து கலையும்
தூய அஞ்செழுத் தங்கியாற் தேகித்துத்
துலங்கு பூதசுத் திகள்செய்தஞ் செழுத்தில். 9

911. வகர மென்னுநல் லம்பல மதனில்
மன்னி நற்சிக ரஞ்செயு நடனம்
தொகுமெய் யன்பொடு கண்டருச் சித்தே
சுத்த அஞ்செழுத் தால்விசே டார்க்கியம்
அகம கிழ்ந்துகற் பித்தெழுந் தைந்தாய்
அனைத்துங் கண்டுநற் திரவிய சுத்தி
மிகவுஞ் செய்துமேற் சிவத்திலொன் றாக
மேவும் ஆன்மசுத் தியுஞ்செய்து விளங்கி. 10

912. நாவி னாற்சொலா தஞ்செழுத் துணர்வை
நாடி மந்திர சுத்திசெய் தெங்கும்
தாவு மைங்கிருத் தியமெனும் நின்மா
லியங்க ழித்தருந் தற்பர மதனோடு
ஓவி டாமலே சலனமற் றொன்றாய்
உறுவ தேலிங்க சுத்தியு மாக்கி
ஆவ னற்திரு மஞ்சனம் பஞ்சத்
திரவி யம்பஞ்ச அமுதமும் அருளாய். 11

913. உலக வாதனை யதனிலொன் றாகா
தொளிரு ஞானவொற் றாடையுஞ் சாத்தி
நலமி குந்தனை ஆதன மாக
நல்கி நீடருள் மூர்த்தியும் அருளாய்
நிலவு ஞேயமாஞ் சிவபரி பூர
ணத்தை மூர்த்திமா னாகவும் நிறுத்தி
இலகு நாயகன் தனைப்பிரி யாமல்
இருக்கும் நித்தியந் தனக்குலா பமுமாய். 12

910. அங்கி - அக்கினி 913. ஆதனம் - ஆசனம்

914. தன்னில் வேறற இருந்திடும் ஐக்கியம்
தாப னம்சந்தி தானம்சந் நிரோதம்
என்ன வேசெய்து சுகந்தபுட் பங்கள்
இலங்கு வஸ்த்திரா பரணநற் தூப
மன்னு தீபமெல் லாம்பர ஞான வடிவை
அஞ்செழுத் தோதிமுன் கொடுத்துப்
பின்னி வேதனம் பானீயம் அடைகாய்
பெருகுந் தன்னறி வதைநிவே தித்து. 13

915. அருளெ னும்முக வாசவுண் டையினால்
அமலன் தன்திரு வாய்மலர் பூசிப்
பொருவி லாதஅஞ் செழுத்தின்மூ வெழுத்தாற்
பொங்கு நன்மணி யசைத்திரண் டெழுத்தாற்
பெருகு தூபதீ பங்கள்செய் தென்றும்
பிறங்கு கின்றநல் லருள்நிறை வதனைத்
தருவெண் ணீறுடன் ஆடிபொற் குடைவெண்
சாம ரைதிரு விசிறியாய்த் தாங்கி. 14

916. பரனுந் தானுமொன் றாகிய ஐக்கியம்
பாத்திய மாகவும் பரன்தனக் கினிய
உருவ மாவதா சமனமா கவுமீ
தோங்கு நற்சுகம் அர்க்கிய மெனவும்
அருளு டன்கொடுத் துறுபசுத் துவம்விட்
டகல வேநமக் காரமும் அருளிப்
பொருவி லாதஅஞ் செழுத்தையுட் செபித்துப்
புரிந்த பூசனைத் தத்தமு முதவி. 15

917. மிகவு மூவலம் வந்துமுன் வணங்கி
விந்து நாதகுண் டத்தினில் விளங்கும்
தகவு றும்பரை அக்கினி யிடத்திற்
தங்கும் அவ்வுட லாகுதி யளித்து
மகப லத்தையுஞ் சிவநிவே தனமாய்
மதித்து யானென தறும்பவுத் திரமும்
திகழும் அன்பொடு செய்தட்ட மலர்கள்
செலுத்தி அஞ்சலி செய்துள மகிழ்ந்து. 16

918. மாசி லாமணி தன்னைஇவ் வகையாய்
மதித்து ஞானபூ சனைசெய்த பின்னர்
தேசு லாங்கிரி யாவிதி யனைத்தும்
திகழு மன்பொடு செய்திட நினைந்து

915. ஆடி - கண்ணாடி. 917. மகபலம் - யாகபலம்.

நேச மோடுதன் மடிசுரந் தொழுகு
  நிமல நற்திருப் பால்மணி முடிமேல்
ஆசி வாதஅஞ் செழுத்தையு மோதி
  ஆயி ரங்குடப் பாலபி டேகம். 17

919. சுரந்த பால்முலை நேர்பட நிறுத்தித்
  துலங்கு தன்முகத் தொடுமிலிங் கத்தைப்
பொருந்த வேயனைத் திரங்கிஅன் புடனே
  பொழியும் ஆயிரந் தாரைகொண் டாட்டிப்
பரிந்த அன்பில்வா யூறுநீ ராலும்
  பார்த்த கண்பொழி நீர்வெள்ளத் தாலும்
விரிந்தி டும்படி யுதகநீ ராட்டி
  விமல மானதன் மேனியி லமைந்த. 18

920. ஐந்த ருக்களும் நினைந்தவெல் லாந்தந்
  தருள அன்பொடும் அளவில்பல் மலரும்
கந்த நற்கள பங்கன கப்பூண்
  கதிர்மணிப் பணியா டைபோ னகமும்
இந்து சேகரற் கணிந்துநி வேதித்
  தெவையும் ஆகம விதிப்படி பூசித்து
உந்து நன்மறை யாற்துதித் திறைஞ்சி
  உள்ம கிழ்ந்தனள் என்னையா ளுடையாள். 19

921. ஆசி லாமுத்திச் சேத்திரத் தமர்ந்த
  அரிய மாசிலா மணியைஆ னுமையாள்
நேச மொடுபூ சிப்பது கண்டு
  நின்ற தேவஆ னினங்களுங் களித்துப்
பேசொ ணாப்பர இன்பமுற் றதுநற்
  பிப்பி லத்துறுந் தேவரா தியரும்
ஓசை கொள்அர வெனுமொலி பெருக்கி
  உய்ந்த தெங்கள்தம் முயிரென உவந்தார். 20

922. காம தேனுநா யகிசெய்பூ சையினாற்
  களித்து ளங்குளிர் மாசிலா மணியார்
சேம மாந்திரு வரசின்மூ லத்திற்
  தேவ ஆன்கள்செய் பூசைகொண் டருள
நேம மோடொரு சிவலிங்க வடிவாய்
  நிகழ்ந்தி லங்குதல் கண்டத னருகே
தாம ஆனுரு உமையெழுந் தருளச்
  சகல கோவினங் களுமுடன் சார. 21

921. ஆனுமையாள் - கோவுருவநாயகி.

923. பூசை நீவிர்செய் திடுமென உமைகண்
பொருந்து நோக்கருள் பெற்றுள் மகிழ்ந்து
தேசு மேவிய திருவும் வாணியும்நற்
செல்வ மேவுஅயி ராணியும் திசையில்
வாச மேவிய கடவுள்மா தரும்பின்
மற்று முள்ளவான் மடவி யர்களும்நற்
தூசு லாமல்குல் முனிவர்மங் கையரும்
துலங்கு வெள்ளிவெற் பேவல்மங் கையரும். 22

924. சித்தர் மாதரும் வித்தியா தரர்கள்
செல்வ மாதரும் கருடர்கந் தருவர்
மொய்த்த கின்னரர் கிம்புரு டர்கள்தம்
மோக மாதரு முதிரும்அன் புடனே
சுத்த சித்தமோ டன்பொடு முறையாற்
சுரந்த பாலினா லாட்டியங் கருச்சித்து
அத்தர் சீர்புகழ்ந் தன்பொடும் பணிய
அளவி லாதபா லாழிபோற் பெருகி. 23

925. பிப்பி லத்திரு வனமெங்கும் நிறைந்த
பெருமை கண்டகோ முத்திநா யகனும்
ஒப்பி லாவுள மகிழ்ச்சிபெற் றருள
உரிய தேவருங் கண்டுள மகிழ்ந்தார்
அப்பொ ழுதுகோ வினத்தொடும் உமையாள்
அண்ண லாரருள் பெற்றெழுந் தருளிச்
செப்பும் அந்நக ரெல்லைகள் முழுதும்
திருக்கு ளம்புற உலவியே வந்து. 24

926. நாடொ றும்பல தேவரும் நரரும்
நலமதார்நவ கோடிசித் தர்களும்
நீடு மன்பொடு பணிந்திட மகிழ்ந்து
நிரும லானந்தக் காவிடை மருவி
கூடுங் கோவின நற்குழாத் துடனும்
குலவும் ஓர்மருப் புடையகன் றுடனும்
தேட ருஞ்சிவ மாசிலா மணியைத்
தேவி ஆண்டொன்று பூசைசெய் திருந்தாள். 25

---

923. அயிராணி - இந்திராணி.
926. நரர் - மனிதர். ஓர் மருப்புடைய கன்று - விநாயகப்பெருமான்.

927. இன்ன வாறுபன் னிருதிங்கள் அமலன்
இனிய பூசனை கொண்டக மகிழ்ந்து
மன்னு கின்றநல் மகரமா தத்தில்
வளருஞ் சத்தமி மருவிய தினத்தில்
பின்ன மற்றதன் தேவிகோ வுருவம்
பிரித்த ணைந்துபின் அமரர்க ளுடனே
பன்னு மாதர்கள் தமையுஞ்சேர்த் தருள்செய்
பண்பு தன்னையும் விரித்தினிப் பகர்வாம். 26

இருபத்தாறாவது
தேவி மாசிலாமணியைப் பூசை செய்த அத்தியாயம்
முற்றிற்று.
அநாதிமுத்திச் சேத்திர காண்டமாகிய முதற்காண்டம்
முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 927
திருச்சிற்றம்பலம்.

26. தேவி மாசிலாமணியைப் பூசை செய்த அத்தியாயம் (சுருக்கம்)

அம்பிகை செய்யவிருக்கும் பூசையைக் காணும் விருப்பத்துடன் வருவது போன்று கீழ்த்திசையிலே சூரியன் தோன்றினான். அப்பொழுது பசுக்கூட்டங்களுடன் அம்பிகை எழுந்து தமது இச்சையினால் உண்டாக்கிய இச்சா தீர்த்தத்தை அடைந்து நீராடினாள். கரையிலே நின்று வெண்ணீறு, குங்குமம், கண்டிகை, பொன்னாடை, ஆபரணங்கள் போன்ற வற்றை அணிந்துகொண்டு நியமத்துடன் சென்று மாசிலாமணி இலிங்கத்தின் அருகில் இருந்து, மானசீகத்தோடும் ஆகம விதிப்படி ஞானபூசையை முதலில் செய்தாள்.

பின்பு, கிரியா பூசையைச் செய்வதற்காகச் சங்கற்பம் செய்து, இடையூறு அணுகாவண்ணம் விநாயகனை வணங்கி முதலில் ஞானபூசையினைத் தொடங்கினாள்.

மேன்மையான ஆனந்தசாகரத்தில் சித்த சுத்தியுடன் மூழ்கி, மும்மலமும் கெடும்படியாக ஆசமனம் செய்து, திருநீறணிந்து, உண்மை ஞானமான அஸ்திர புரோட்சணத்தையும் செய்து, பிரணவ மந்திரத்தினால் பிராணாயாமம், கரசுத்தி, கரநியாசம்,

927. மகர மாதம் - தை மாதம்.

அங்கநியாசம் ஆகியவற்றைச் செய்தாள். பஞ்சாக்கரத்தைத் தன் சக்திகளாய்த் தியானித்து ஏகபூரண சக்தியாய்த் தாமே எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருப்பதை நினைந்து, மோகமற்ற ஓர் காலமேயாக்கி முழுதும் அங்கநியாசத்தை அஞ்செழுத்தால் செய்து, கைநீரால் அபிடேகம் செய்தாள்.

அதன்பின் திரோதத்தையும் மலத்தையும் மார்ச்சனம், அகமர்ஷணம் போன்றவற்றால் அகற்றி, சூரிய மண்டல பரைக்குமேல் இறைவனை அறிந்து அர்க்கியம் கொடுத்து, அறிவுடன் பொருந்தியுள்ள தூல சூக்குமமான இந்த உடலோடு மந்திர உடலும் ஞான வடிவும் பெற்று, இருள் அறும்படியாகச் சகளீகரணம் செய்து, அருச்சனை செய்ய நினைத்து முத்தி பஞ்சாட்சரத்தால் அர்க்கியத்தை இறைவன் முன்பே வைத்து, அந்த அர்க்கிய நீரால் எவ்விடமும் அருட்சிவ பரிபூரணமாகும்படி மனதினாலே பாவித்துப் புரோட்சித்து, ஐந்தெழுத்தினாலே மூன்று விதம் கொண்ட தத்துவங்களை அகற்றும் இந்த நன்னிலையையே இடமாகப் பிரவேசித்து, அரும்படை யென்னும் துவாரத்துள் வந்து, திரோதத்துடன் மலங்களால் வரும் இடையூறுகளை அகற்றி இச்சை யாதிகளை வழிபட்டு, பூமியாகிய வாஸ்துபதியையும் அர்ச்சித்தாள்.

பின்பு, சதாசிவரையும் அருச்சனை செய்தாள். பஞ்ச கலைகளையும் ஐந்தெழுத்தாகிய அக்கினியினால் தசித்து, பூத சுத்தி செய்து, ஐந்தெழுத்தில் 'வ' என்னும் அம்பலத்திலே நின்று, 'சி' என்னும் நடனத்தைக் கண்டு அருச்சித்து, பஞ்சாட்சரத்தால் விசேட அர்க்கியத்தைக் கற்பித்து, எல்லாம் பஞ்சாட்சரமாகவே கண்டு திரவியசுத்தி செய்து, சிவத்துடன் ஒன்றாகும் ஆத்மசுத்தியும் செய்தாள்.

அஜபா மந்திரத்தை யுணர்ந்து மந்திரசுத்தி செய்து, பஞ்ச கிருத்தியம் என்று சொல்லும் நிர்மாலியத்தைப் போக்கி இலிங்கசுத்தியும் செய்து, திருமஞ்சனம், பஞ்சத்திரவியம் பஞ்சகவ்வியம், போன்றவற்றால் அபிடேகம் செய்தாள். ஞானத்திருவெற்றாடை சாத்தி, தன்னையே ஆசனமாகவும், திருவருளையே மூர்த்தியாகவும், சிவபரிபூரணத்தையே மூர்த்திமானாகவும் நிறுத்தி, இறைவனைப் பிரியாமலிருக்கும் நித்தியத்தைத் தனக்கு லாபமாய் தன்னினின்றும் வேறாக இல்லாமல் ஒன்றான ஐக்கியம், தாபனம், சந்நிதானம், சந்திரோதனம் ஆகியவைகளைச் செய்தாள்.

பூக்கள், ஆடை, ஆபரணம், தூபம், தீபம் இவைகளையும் செய்து, பின்பு நிவேதனம், பானீயம், அடைகாய், முகவாசம் இவற்றையும் தந்து, மணியடித்து, மீண்டும் தூபதீபங்காட்டி, திருவெண்ணீறு, கண்ணாடி, குடை, சாமரம், விசிறி முதலிய உபசாரங்களையும் காட்டினாள். பரனும் தானும் ஒன்றாகிய ஐக்கியமானது பாத்யமாகவும், ஆசமனமாகவும், அர்க்கியமாகவும் கொடுத்து பசுத்துவம் நீங்கும்படியாக வணங்கினாள்.

பின்பு, பஞ்சாட்சரம் ஓதி பூசனைத்தத்தமும் கொடுத்து, மூன்று முறை வலம் வந்து, முன்னே வணங்கி, விந்துநாத குண்டலத்தினில் விளங்கும் பரையாகிய அக்கினியிடத்தில் உடலாகிய ஆகுதியை வளர்த்து, யாகபலத்தையே நிவேதனமாக மதித்து, எண்மலர் சாத்தி, அஞ்சலி செய்து மனமகிழ்ந்து மாசிலாமணிப் பெருமானை உள்ளே தியானித்தாள்.

இவ்வாறு அம்பிகை ஞானபூசனையைச் செய்த பின்பு கிரியாவிதியாக அனைத்தையும் செய்யும் பொருட்டு, தமது மடியிலிருந்து சுரந்த பாலால் தமது மடிக்காம்புகளை இலிங்கத்தின் மேல் பொருந்த வைத்து அபிடேகம் செய்தாள். தமது முகத்தால் இலிங்கத்தை அணைத்து மலர்களால் அருச்சித்து, ஆபரணம் பூட்டி ஆடை சாத்தினாள். போனகம் அளித்து ஆகமப்படி பூசித்தாள். இறைவனைத் துதித்து வணங்கிய அம்பிகை அளவற்ற மகிழ்வெய்தினாள்.

முத்தித் தலமாகிய துறைசையிலே அமர்ந்தருளியுள்ள மாசிலாமணிப் பெருமானைப் பசுவுருவாகிய அம்பிகை அன்புடன் பூசித்ததைக் கண்ட தேவ பசுக்களும் மகிழ்ந்து ஆனந்தப் பெருக்கில் திளைத்தன.

தேவ பசுக்கூட்டங்களின் பூசையை ஏற்க ஓர் சிவலிங்க வடிவமாக அரச மரத்தடியில் இறைவன் விளங்குவதைக் கண்டு அதனருகே அம்பிகையும் சென்றாள். உடன் மற்ற பசுக்களும் சென்றன. அவற்றையும் பூசை செய்யுமாறு அம்பிகை பணித்தாள். கலைமகள், திருமகள், இந்திராணி ஆகிய இவர்களுடன் மற்ற மாதர்களும் அன்புடன் தங்கள் தங்கள் மடிகளில் சுரந்த பாலினால் அபிடேகம் செய்தனர். அப்பாலானது கடல்போலப் பெருக்கெடுத்து பிப்பிலவனத்தில் எங்கும் நிறைவுற்றதைக் கண்டு இறைவன் மகிழ்ந்தார். தேவர்களும் இக்காட்சியைக் கண்டு இன்புற்றனர்.

இப்பூசைகளையடுத்து, அம்பிகை தம் இனத்தோடும் புறப்பட்டு துறைசை மாநகர் முழுவதும் தமது திருக்குளம்பு படிய உலாவி வந்தாள். நாள்தோறும் தேவர்கள் பலரும், மானிடர் பலரும், நவகோடி சித்தர்களும் வணங்கி மகிழும் படியாக அச்சோலையிலேயே தங்கி ஓர் ஆண்டு முழுவதும் மாசிலாமணிப் பெருமானைப் பூசித்து வந்தாள்.

இவ்வாறு பன்னிரண்டு மாதங்கள் அம்பிகை பூசை செய்ய இறைவன் அகமிக மகிழ்ந்து தை மாதத்து வளர்பிறைச் சப்தமியில் அம்பிகையின் பசுவுருவைப் போக்கித் தம்முடன் சேர்த்துப் பின்பு தேவர்களோடு தேவ மகளிரையும் சேர்த்தருளிய வரலாற்றை இனிக் காண்போம்.

இரண்டாவது
ஆவடு துறைசைக் காண்டம்

இரண்டாவது காண்டத் தோத்திரக்கவி

928. நாவலர்க ளாய்க்கலைகள் தெரிந்து பாடல்
நவில்புலமைப் பிறபலரும் நவிலும் செஞ்சொற்
பூவுலகில் எவர்களுக்கும் இன்பம் ஈயப்
புகலுமருஞ் சிறப்புடைய புனிதர் தாமும்
ஏவலர்கொள் மதனழகுந் தோற்கும் ஏர்பெற்
றெழில்வாணாள் வீரமுறும் இயல்புள் ளோரும்
ஆவடுதண் துறைசையில்வாழ் கோமுத் தீசர்
அடியிணையை நினைந்தொருபூ அருச்சித் தோரே. 1

ஆகத் திருவிருத்தம் 928

இருபத்தேழாவது
தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்ற அத்தியாயம்

929. கடிகொள் பூங்குழற் கவுரிவான் கன்னிய ருடனே
மடுவெ னுங்குடப் பாலினால் மாசிலா மணியை
நெடிய அன்பொடும் பூசிக்கும் நாள்நிகழ் மகரத்
தொடிவில் வெங்கதிர்ச் சூரிய னுறுந்திங்க ளுதிப்ப. 1

930. பனிமி குத்தவத் தைமக ரத்தினிற் பரிவோடு
இனிய நல்மகத் தானஞ்செய் தினியபூ சனையும்

கனியு மன்பொடு செய்துநல் லுத்தரங் கதிரோன்
தனியு ருட்பெறுந் தேரினைத் திருப்புசத் தமியில். 2

931. இற்றை நற்தினம் பசுத்துவம் நீங்குநா ளெனவே
நற்ற வக்கொடி தேவமங் கையரொடு நணுகி
உற்ற தன்துணைக் கன்றினைப் பிடித்துவப் போடும்
பற்றி டுந்தன திச்சைநீர்த் தடத்தினிற் படிந்து. 3

932. தேறுந் தேவகோ வினத்தொடும் படிமிசை சென்றே
நீறு நெற்றியிற் தரித்துநற் கண்டிகை நெடும்பூண்
நூறு கண்மலர்த் தாமமற் றதுமுவந் தணிந்து
கூறும் அஞ்செழுத் துண்மையை நாவின்மேற் கொண்டு. 4

933. நேய நாயகன் வடிவினை மனத்தினுள் நினைந்து
தூய மேற்திசைச் சினகர நோக்கலுந் துணைவன்
ஏயும் அன்பொடுங் கயிலையி லிருந்துதோன் றுதல்போல்
நாய கிக்கெதிர் தோன்றினன் உளத்துறு நயப்பால். 5

934. செம்பொன் மாமணிக் கும்பமே வியசின கரமே
பம்பு தூநிறக் கயிலையாய்க் கொடுமுடி பரப்பி
இம்பர் தோன்றிடக் கோபுர மாயிர மிலக
உம்பர் மீதுறும் பொன்னெயில் நீண்டுசூழ்ந் தொளிர. 6

935. பிப்பி லாரணி யந்தரு வனங்களாய்ப் பிறங்க
ஒப்பி லாதபுண் ணியநதி யாவுமங் குலவச்
செப்பு மாமணி மண்டப வீதிகள் திகழ
வெப்பொ ருட்பகு தியுமத னிடையிருந் திலக. 7

936. வேத நன்னெறி வாய்மையிற் பயின்றுள விரதர்
கோத கல்முனி யீசுரர் கோடிமேற் கோடி
நாத மேவிய சுருதிபா ராயணம் நவிலப்
போத மேவிய பூதநா யகர்பலர் புகழ. 8

937. உண்மை யாகிய சரியைநற் கிரியைமெய் யோகம்
தண்மை மேவிய ஞானபா தங்களிற் சரிக்கும்
எண்ணி லாதசித் தாந்தநல் முத்தியில் இயைவோர்
பண்ணி னோடுமெய்த் தோத்திரம் புகன்றெங்கும் பரவ. 9

938. ஆகு வாகன மீதினில் அழகிய பிள்ளை
மோக மாகமுன் போந்திட அறுமுக முருகன்
பாக மாய்த்தகர் வாகன மீதுறப் பரிவாய்
வாகு பூதமேல் வீரபத் திரப்பரன் வயங்க. 10

938. ஆகு வாகனம் - மூஷிக வாகனம்.

939. வேத ரூபனாய் மீதெழில் வயிரவன் விரவப்
போத கத்தின்மேற் கொடிகரக் காரியும் பொருந்த
நீதி சேருருத் திரகண நாதர்கள் நிரையிற்
சோதி வெள்விடைப் பாகராய் எண்ணிலர் சூழ. 11

940. உட்டி றப்பணி புரிபரி வாரவொண் பூதர்
மட்டி லாதநல் வரிசைகள் கொண்டுடன் மருவ
அட்ட மூர்த்தியர் யுருவுகொள் மாசிலா அமலன்
இட்ட மானவோர் வேதவெள் விடையின்மீ தேறி. 12

941. வான மூடறுத் தொளிருமுட் கோபுர வாயிற்
தான மேவிய பொழுதுபொற் சின்னங்கள் தாரை
ஞான நாயகன் அம்பிகை நாயகன் ஞாலத்து
ஊனம் நீக்கிஆண் டருளவந் தானென்றங் கூத. 13

942. கார்மு ழங்கிடக் கேட்டிடு மயில்கள்போற் களித்தங்கு
ஏர்மி குந்தவிண் ணவர்களும் முனிவரும் யாரும்
நேர்முன் னெய்திவீழ்ந் திறைஞ்சியே நிமலனைத் துதித்துப்
பார்ம கிழ்ந்திடும் பணிசில புரிந்தனர் பரிவால். 14

943. திருவி னாயக னடைப்பைகை யேந்தினன் திருமால்
அருளு நாயகன் விசிறிவீ சினன்விண்ணுக் கதிபன்
மருவு கின்றகா ளாஞ்சிகைக் கொண்டனன் வருணன்
பொருவி லாதபன் னீர்பனித் துவலையாய்ப் பொழிந்தான். 15

944. அங்கி வாசனைத் தூபமுன் பேந்தினன் அசைந்து
தங்கு கற்பக வாசமும் புனிதசீ தளமும்
எங்கும் வந்திடத் தென்றலாய் இசைந்தனன் வாயுப்
பொங்கு நன்னிதி மாரிபெய் தான்வட புலத்தோன். 16

945. தருமன் செய்யசெங் கோல்கொண்டு வந்தனன் தகைசேர்
பொருபி னாகவி லேந்தியே நிருதியும் போந்தான்
பருதி வானவ ரிளங்கதிர் பரப்பியே பணிந்தார்
கருது சோமனுஞ் சீதள வெண்குடை கவித்தான். 17

946. இடபம் ஏறும்ஈ சானர்பன் னொருவரும் இருபால்
மடல விழ்ந்தபூந் தார்மல ரேந்தியே வணங்கத்
திடமி குந்தநந் தீசுரர் கட்டியஞ் சிறப்பித்து
அடையும் நன்னெறி நெருக்குறா வகைபிரம் பசைப்ப. 18

944. வடபுலத்தோன் - குபேரன்

947. கவரி நீர்க்குடங் கண்ணாடி தோட்டிநல் முரசம்
நவம தார்மணி விளக்குபொற் பதாகைநற் கயல்கள்
உவகை மிக்குள வசுக்கள்எண் மரும்பரித் துலவத்
தவம ருத்துவர் ஏவலாட் பணிசெய்து தயங்க. 19

948. வீணை கின்னரி யாழ்சர மண்டலம் விபஞ்சி
நீண ரம்புறு மாடக முறுக்கிநேர் படுத்திப்
பாணி லங்கவே தும்புரு நாரதர் பயின்று
வாணி கொண்டசங் கீதத்தின் வகைபல வழங்க. 20

949. சித்தர் வித்தியா தரர்திகழ் கருடர்கந் தருவர்
மத்த ளம்கர தாளம்தித் திகள்வகை வகையாய்
ஒத்தி சைப்பநற் திலோத்தமை ஊர்வசி அரம்பை
புத்தி யுற்றமே னகைமுதற் சிலர்நடம் புரிய. 21

950. வாணர் நற்குட முழவதிர்த் திடமதிச் சங்கம்
பேணும் அன்பொடும் பானுகம் பரும்பிடித் தூதக்
காணும் ஐந்துதுந் துமிகளுந் தனித்தனி கறங்க
வேணு நாதமோ டியம்பல முழக்கொலி மிகுப்ப. 22

951. பெருவி டைக்கொடி வீரகுண் டோதரன் பிடிப்ப
மருவு ருத்திராக் கக்குடை ஆயிரம் மகிழ்ந்து
பொருவி லாதநற் பிருங்கியா தியபல பூதர்
அருகு கொண்டுறத் திருக்குளக் கரையில்வந் தமலன். 23

952. அரிய காட்சிதந் திடஅருட் கவுரிஉள் ளடங்காப்
பெருகும் அன்புடன் தனைமறந் திடமேற் பிறங்கும்
கருணை நாயகன் வடிவெலாங் கண்களாற் கவர்ந்து
பருகி னாள்அங்ஙன் ஏர்படுந் தன்மையார் பகவார். 24

953. மின்கொ டித்திரள் வளைந்தெனச் சிறந்தவே ணியும்நற்
பொன்கொ ழித்திடு கொன்றையும் கங்கையின் பொலிவும்
மன்க லைச்சிறு திங்களங் குழவியூர் வனப்பும்
நன்க மைத்தபைப் பணிகளும் நகுதலை நலமும். 25

954. சாய்ந்தி லங்குகொக் கிறகும்பூ மத்தமுந் தரளம்
வாய்ந்த கொத்தெனத் திகழ்தலை மாலைகொள் வடிவும்
காய்ந்து சித்தசன் தனைவென்ற கண்ணுதற் கவினும்
ஏய்ந்த புண்டரக் குறியின்மேற் திலதமா ரெழிலும். 26

955. கருப்பு வில்லிரண் டிந்துவிற் சாத்திய கவின்போல்
இருக்கும் நற்திருப் புருவமும் அடியவ ரிடும்பூ
மருக்கொ ளுங்குமிழ் நாசியும் குண்டல மகரந்
தரித்தி லங்குவார் காதும்பொற் கவுடரு தகவும். 27

956. கருணை பூத்தரு ளொழுகிஎன் போல்பவர் கருத்துள்
மருவு மும்மலம் இரிந்திட நோக்கிவாழ் விழியும்
பிரண வந்தரு விந்துநா தத்தினைப் பிரித்துப்
பொருண யம்பெறச் சுருதியா கமஞ்சொல்வாய்ப்
பொலிவும். 28

957. ஆல காலம்அன் றமரரை விழுங்குமுன் அதனைச்
சாலும் அன்புடன் வாரியுள் விழுங்கிமேற் தரித்த
நீல கண்டமும் இருமக மேருவை நிகர்த்து
ஞாலம் என்பவை யாவையுந் தாங்குதோள் நலனும். 29

958. அடைக்க லம்புகும் உயிர்கள்அஞ் சாமலே அமைத்த
தடக்கை யும்கதி காட்டுநல் வரதமும் தனிமான்
பிடித்தி டுங்கையு மலத்தினுக் கெதிரியாய்ப் பிறங்கிப்
படைக்க லத்தொழில் பயில்மழுத் தாங்குபங் கயமும். 30

959. இறுதி தங்குகா லங்களின் மாய்ந்திடும் இருவர்
மறுவில் வெண்டலை மாலைகள் தாங்குதிண் மார்பிற்
பெறும்பொன் முப்புரி நூலும்பன் றியின்பிறைக் கோடும்
உறுங்கண் மாலையும் நாகமும் கச்சபத் தோடும். 31

960. ஆரம் கண்டிகை பதக்கம தாணியம் கதம்பொன்
வீர சங்கிலி நவமணிப் பூண்விதம் விதமாய்ச்
சீரி லங்குமான் மதக்கல வைத்திருச் சாந்தின்
நேரி லங்குமங் கந்துபாங் கங்களா மெழிலும். 32

961. தொந்தி யுந்திரு வுந்தியும் புலியத ளுடைமேற்
பந்த மானபொற் றூசுடை யரையுமேற் படரும்
முந்தும் ஐந்தலை நாகபட் டிகையொடுங் காஞ்சி
மைந்தி லங்குநல் நவமணிக் கோவையின் வளமும். 33

962. வீரப் பொற்கழற் பதத்தின்மேல் விளங்குகிண் கிணியும்
சீரைப் பெற்றிடும் அருமறைச் சில்லொலிச் சிலம்பும்
ஆரப் பத்திசெய் தரியிடந்த தணிந்தஅம் புயமும்
சாரத் தக்கமெய்ப் பத்தர்க ளிட்டபூந் தழையும். 34

963. கோடி மன்மத ரூபமொன் றாகவே குழுமி
நீடி ருந்திரு வழகுசெய் மேனியை நேர்கண்டு
ஏட விழ்மலர்த் தாருமை பரவச மெய்தி
நாட நாதனும் பரவச மாகியே நாடி. 35

964. இடப வாகன மதனைவிட் டிறங்கியே இமையப்
பிடியன் னாள்பெறும் கோவுருச் சாபத்தைப் பிரிக்கப்
படியின் மேற்பது மப்பதம் படநடந் திறங்கிக்
கடிகொள் பூம்பொய்கைத் தீர்த்தத்தி னுடன்கங்கை நீரை. 36

965. பிஞ்சு வெண்மதிச் சடையினு ளெடுத்தொன்றாய்ப் பெருக
மிஞ்ச வார்த்ததை நோக்கியே விரும்பிஅப் புனலை
அஞ்சல் செய்கையால் அள்ளிமுக் காலும்அன் புடனே
செஞ்சொ லாள்வரப் பசுத்துவம் நீங்கெனத் தெளித்தான். 37

966. காம தேனுவாம் உருவிட்டு நீங்கிடக் கருணைச்
சேம நாயகி திருவருள் நாயகி செழும்பூந்
தாம நாயகி சதுர்மறை நாயகி தலைவர்
வாம நாயகி பழஉமை வடிவமாய் வந்தாள். 38

967. தேவ ரம்பையர் பசுத்துவ சாபம்நீ தீரென்று
ஏவ நற்துதிக் கையினால் நீரெடுத் திறைத்தே
ஆவி னத்துரு ஐங்கரன் நீக்கஅம் பிகைபால்
பூவை யன்னவிண் மாதருஞ் சூழ்ந்தெதிர் புகழ்ந்தார். 39

வேறு

968. அரனார்கர மலர்நீருற அணைகோவுரு விடுபோது
ஒருவாதவ ரிடமேவுநல் உமையாய்வரும் இமையாள்
கருதார்புர நகையாலடு கருணாகரன் எதிர்போய்
மருவார்நறு மலர்தூஉயொரு மயில்போலடி பணியா. 40

969. கயிலாயநல் மலைமேல்மிகு களிவொடுமுன் னமர்நாள்
பயில்காதல னுடனாடிய பருவத்துறு பணியும்
இயல்மாலையு மணிசந்தமும் இலகுந்துகி லுடையும்
நயமேவுகோ மளமேனியும் நலமேதர மகிழ்வால். 41

970. மடநாணொடு பயிர்ப்பச்சமுள் மருவக்கர வளையைத்
தொடுவாளென வெழிலோடொரு துவள்கொம்பென நின்றே
இடமேவுதிண் புயமீதிரு விழிவேலெறி வதுகண்டு
அடர்மால்விடை யுடையான்மிகும் அருளோடிவை
மொழிவான். 42

971. தேனோ!மர கதமோ!திரள் கனியோ!திக ழுமையாள்
தானோ!அவ ளலவோஇவள்! தகைசேர்பத மலர்தான்
கானாரிரு கமலம்பரி புரமோடுறு கவினோ!
வானோ!விடை யொருநூலினை வகிர்செய்தது தானோ! 43

972. நிதம்பத்தொடை யணிகாஞ்சியின் நீலத்தெழு கதிரொன்று
இதம்பெற்றெதி ருறுமேர்கொள்ஆ லிலையோவயி
றெழில்தான்!
ததைந்துற்றபைந் தொடிமொய்த்தகை தளம்பெற்றவா
ரிசமோ!
பதம்பெற்றிசை யெழுநற்களம் பகர்சங்கமோ! கமுகோ! 44

973. குமுதந்தள வொடுபூங்குமிழ் கொளுந்தண்மதி முகமோ!
அமுதந்திகழ் விடமோ!விழி அமர்வள்ளைகள் குழையோ!
விமலம்பெறு பிறையோ!நுதல் மிகுபன்மலர் தகரங்
கமழுங்குழ லறலோ!கரு முகிலோ!களங் கனியோ! 45

974. ஏதென்றுரை செய்வோம்இவள் எழிலென்றெணி மகிழும்
நாதன்திரு மாசொன்றிலா நன்மாமணி யனையான்
சீதம்பெறு களபங்கமழ் திரள்கொங்கையை நாடி
ஓதும்பல உவமைக்கிடம் ஒன்றின்றியே மயலாய். 46

975. அகமுற்றெழு விரகத்தொடும் அகிலத்தவர் அறியத்
திகழொப்பிலா முலையேயெனத் திருநாமமிட் டழைத்தே
மகிழ்வுற்றகை மலராலெடுத் தணைத்தோர்புறம் வைத்தங்கு
இகலற்றிடும் அவளோடுசென் றிருந்தான்மழ விடைமேல். 47

976. ஆர்த்தாடினர் விண்ணோர்அர கரவென்றுநல் முனிவர்
பார்த்தாடினர் அடியார்கர பதுமங்களை முடிமேற்
சேர்த்தாடினர் கரணம்பல செய்தாடினர் பூதர்
ஏர்த்தாயுறு சுகங்கற்பமும் எய்தும்படி யெனவே. 48

977. ஆமாறுறு பணிசெய்துகற் பகமைந்துமுன் நின்றே
பூமாரிகண் மணிமாரிகள் பொன்மாரிகள் பொழிந்த
தேமார்குழ லரமங்கையர் திருவோடும்வந் தொருபாற்
பாமேவிய பல்லாண்டுகள் பலகூறியே பணிந்தார். 49

978. ஐந்துந்துபி விண்மீதெழும் அதிர்வோடுமும் முரச
சந்தந்திகழ் முழவும்பல தனிவாத்திய இசையும்
பந்தம்பெறு சின்னம்பணி லந்தாரைகள் பலவும்
முந்துங்கட லெனவேயொலித் துலகேழுமுண் டனவால். 50

979. இன்போடகல் பொய்கைக்கரை இனினின்றுமை யாளை
அன்போடணைத் தெழுநாயகன் அலர்க்கண்ணருள் பரப்பி
முன்பாகநின் றிறைஞ்சுஞ்சக லரையுமுகம் நோக்கப்
பொன்பாவிய புயமால் முதற் புலவோர்புகழ்ந் துரைப்பார். 51

வேறு

980. கீற்றிளம் பிறையொளி கிடந்த சென்னிமேல்
ஆற்றையுஞ் சூடிய அழகன் ஆதியான்
ஏற்றின்மேல் வரும்அணைத் தெழுந்த நாயகன்
கூற்றுதை சேவடி குலாவிப் போற்றுவாம்! 52

981. பாலலோ சனன்செழும் பவள மேனியன்
ஆலகா லந்திகழ் அழகு கந்தரன்
ஏலவோ தியைஅணைத் தெழுந்த நாயகன்
கோலமா ரெழில்நலங் கும்பிட் டேத்துவாம்! 53

982. சுந்தர நாயகன் சுடர்கொள் முக்கணன்
கந்தனை யீன்றநற் கருணைக் குன்றனான்
இந்துவே ணியன்அணைத் தெழுந்த நாயகன்
பந்தம்நீக் கிடும்புகழ் பகர்ந்து வாழ்த்துவாம்! 54

983. திரிபுர மெரிசெய்த சிலையன் காமனை
ஒருகனல் விழியினால் உருவ ழித்தவன்
இருபதந் தரும்அணைத் தெழுந்த நாயகன்
அருள்நினைந் துருகிநல் லன்பு செய்குவாம்! 55

984. ஆரண முடிமிசை அமர்ந்த சோதியான்
காரண னாயுல கீன்று காப்பவன்
ஏரணைந் திடஅணைத் திருந்த நாயகன்
பூரண வடிவினைப் புகழ்ந்தி றைஞ்சுவாம்! 56

985. அப்பணி சடையினான் அணைப்ப வோர்புறம்
துப்பிதழ் மாவெனத் துலங்கு வாள்தனை
இப்பவ மறஎமக் கிரங்கி ஆண்டருள்
ஒப்பிலா முலைபதம் உவந்து போற்றுவாம்! 57

986. மாவடு வகிர்விழி மயிலை ஐங்கரக்
கோவினை அருளிய குயிலைக் கோதிலாச்
சேவினி லான்அணைத் திருக்குஞ் செல்வியை
ஆவடு துறைசைவாழ் அனையைப் போற்றுவாம்! 58

987. பகிர்நில வணிசடைப் பரமன் பங்கினிற்
துகிர்கொள்வாய்க் கிளியெனத் தோன்று மங்கையை
அகிலகா ரணியைஅம் பிகையை அன்னையை
நிகரிலாத் தனத்தியை நினைந்து வாழ்த்துவாம்! 59

988. மறைபுகழ் மரகத மணியை மாதவர்க்கு
இறைவியை இமையம்ஈன் றெடுத்த கன்னியைப்
பிறையணி அரனிடம் பெறும்பி ராட்டியைத்
துறைசைவாழ் இறைவியைத் தொழுதி றைஞ்சுவாம்!
60

989. கதிமுத லாங்கயற் கருணைக் கண்ணியைப்
பதிமுத லோடுறும் பரையைப் பைந்தருப்
பொதியுரு வெழிலைஅம் புவியிற் காட்டிய
அதுலகு சாம்பிகை அடியை ஏத்துவாம்! 61

990. என்றுவிண் ணோர்முதல் ஏனை யோர்களும்
நன்றுறு துதிசெய்து நாடி நிற்றலும்
மன்றலங் கொன்றையான் மகிழ்ந்து நோக்கிநற்
துன்றுசெஞ் சடைமுடி துளக்கிச் சொல்லுவான். 62

991. அவரவ ரிடங்களில் அகம கிழ்ந்துபோய்
அவரவர் மனையொடும் அமர்ந்து நாடொறும்
அவரவர் போகபோக் கியங்க ளாதரித்து
அவரவர் புசிப்பதற் ககலு மென்றனன். 63

992. அம்மொழி கேட்டக மகிழ்விண் ணோர்களிற்
செம்மைசேர் நான்முகன் செங்கை கூப்பிநின்று
எம்மையாள் இறைவநீ எமக்க ளித்திடும்
சொன்மறை கொண்டுபோம் சோமு கன்தனை. 64

993. வதைத்தருஞ் சுருதியை வழங்கு வாயென
விதத்தொடும் புகழ்ந்திரந் தேத்திக் கேட்டலும்
நதிச்சடைப் பரமர்மை யமைத்து நல்மணி
பதித்தமார் பரியைமுன் பார்த்துப் பேசுவான். 65

994. மாயவன் நீமக ரால யத்தினுள்
ஏயுமோர் மச்சமாய் எய்திச் சோமுகன்
காயவாழ் வழித்தருங் கலைகள் யாவையும்
போயிவண் கொடுவரு கெனப்பு கன்றனன். 66

995. செப்பியபணிவிடை செய்துய் வேனென
ஒப்பினன் மாலும்பின் உம்பர் யாவரும்
மெய்ப்பரும் விருப்பினால் விமலன் முன்னமோர்
அற்புத நல்மொழி அறைய லுற்றனர். 67

996. இமையமால் வரையின்முன் இறைவி தன்னைநீ
அமைவொடு மணம்புரிந் தருளுந் தன்மைபோற்
சமையும்இவ் ஆவடு துறையிற் தாழ்விலா
உமையைநல் மணஞ்செய்தின் புதவுக என்றலும். 68

997. உண்மகிழ்ந் துரைசெய்வான் ஒப்பி லாமுலைப்
பெண்மணி தனைமிகு பிரியத் தோடுநாம்
தண்மைகொள் மேடமா தத்திற் தங்குநும்
கண்மணி குளிரப்பக்கல் யாணஞ் செய்குதும். 69

998. அனைவரும் வருகவென் றறைந்த பின்புநல்
வனமுறு கோமுத்தி நகர்வ லங்கொடு
சினவிடை யுகைத்துநீள் தெருவிற் போந்துநாள்
நனைமலர்க் குழலொடுங் கோயில் நண்ணியே. 70

வேறு

999. முன்பொரு மண்டபத்தின் முகப்பிலோர் அரியின் பீடத்து
அன்பொடும் வீற்றி ருந்தங்கு அமரர்கள் முனிவர் யார்க்கும்
இன்புறும் விடைகள் நல்கி இறைவியி னுடன்கோ வாகப்
பின்புறும் அமரர் மாதர் தமக்கெலாம் பெருமை நல்க. 71

1000. திருமகள் வாணிஇந்தி ராணியா தியநற் செல்வ
வரமக ளிர்கள் இன்புற் றரனடி பணிந்து பின்னர்
முருகமர் குழலொப் பில்லா முலையடி பரவ நோக்கிக்
கருணையாய் அவர்கள் வேண்டும் வரமெலாங்
களிப்பின் நல்கி. 72

1001. விடையருள் புரியத் தத்தம் விண்ணுல கிடங்கள் தோறும்
திடமுற மகிழ்ந்து யாருஞ் சென்றனர் துணையாய் வந்த
கடகரி முகவன் தந்தை தாயடி கனிந்து போற்றி
நெடியகோ புரத்திக் தெற்கோர் நிலைமணிக் கோயில்
சேர்ந்தார். 73

1002. தலத்துறுந் தேவர் யாருந் தமதிடச் சார்பிற் சார்ந்தார்
நலத்துடன் பணிசெய் தியாவும் நல்குமைந் தருவை நாடி

நிலத்தினில் வானில் நின்று நீவிர்நம் அடியார் வேண்டும்
பலத்தினை இவள்தன் ஏவற் படிபுரிந் திருத்தி ரென்று.
74

1003. செப்பிய பின்னர் மாசி லாமணிச் சிவலிங் கத்துள்
ஒப்பிலா முலையி னோடும் உலகுய்ய இருந்தா னென்றும்
அப்பொழு தினிய முத்திச் சேத்திரத் தருள்செய் காட்சி
எப்படி யிருந்த தந்தப் படியெழுந் தெவருங் காண. 75

1004. கயிலைமால் வரையி டத்துங் கருணையோ டிமய மீன்ற
மயிலொரு புறத்தி ருப்ப மால்விடை மீது தோன்றிப்
பயில்புகழ் நந்தி யாதி பத்தருக் கின்பம் நல்கி
எயில்புடை சூழுங் கோயில் இடத்தமர்ந் திருந்தா
னன்றே. 76

1005. நவந்தரு பேத மாக நாடகம் நடிக்கும் ஞானச்
சிவன்திரு விளையாட் டின்சீர் யாவரே தெரிக்கற் பாலார்
உவந்தவ னிடத்தில் வாழும் உமைமுத்திச் சேத்தி ரத்திற்
தவம்புரிந் திருத்தல் போலத் தரணியிற் தலங்கள்
தோறும். 77

1006. சூதுமுன் ஆடி வென்று சுந்தரன் அருளாற் பெற்ற
நீதிசேர் ஞான யோக பீடமா தியினும் நீங்கா
தாதிதன் வலப்பா லுங்கொண் டனவர தமும்நீங் காமல்
மேதகும் இடப்பா லும்பெற் றிருந்தனள் விளங்கி
யெங்கும். 78

1007. தேவரும் விடைபெற் றேகிச் சிறந்தவை குந்த மாதி
தாவிலாத் துறக்க மெய்தித் தகவுபெற் றிருந்தார் முன்னாள்
நாவுறு மறையைச் சோமு கன்கொடு நடந்த பின்பு
சோர்விலாத் தரும தேவ வதைக்குறுஞ் செய்தி சொல்வாம்.
79

இருபத்தேழாவது
தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்ற அத்தியாயம்
முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 1007

திருச்சிற்றம்பலம்

2. ஆவடு துறைசைக் காண்டம்

27. தேவி பசுத்துவம் நீங்கிப் பாகம் பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

கவுரியாகிய அம்பிகை தேவகன்னியர்களுடனே தம் மடியில் சுரக்கும் பாலால் மாசிலாமணிப்பெருமானை மிகுந்த பக்தியுடன் பூசித்து வந்தாள். அத்தகைய நாளில், மகர ராசியில் சூரியன் உதிக்கின்ற திங்களாகிய தைமாதம் வந்தது. அம்மாதத்தில் சூரியனானவன் வடக்குப் பக்கமாகத் தனது தேரைத் திருப்பும் நாளான சப்தமி வந்தது. இந்த நாள் பசு உருவம் நீங்கும் நல்ல நாள் ஆகும் என்று அம்பிகை எண்ணினாள். தேவ கன்னியருடன் சேர்ந்து கன்றாகிய விநாயகப் பெருமானையும் பற்றிக் கொண்டு, தமது இச்சா சத்தியாகிய இச்சா தீர்த்தத்திலே நீராடிக் கரையிலே போய் நெற்றியில் திருநீறு பூசி, கழுத்தில் மலர்மாலைகள் அணிந்து, ஐந்தெழுத்தை நாவால் கூறிக் கொண்டு, சிவபெருமானின் திருவடியினை மனத்தினுள் நினைந்து, கோபுரத்தைத் தரிசித்தாள்.

அப்பொழுது வேத பாராயணம் செய்யும் அந்தணர்களும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களில் சஞ்சரிக்கும் சித்தாந்த முத்தியில் பொருந்துபவர்களும் தோத்திரம் செய்தனர். ஆகு வாகனத்தில் விநாயகப்பெருமானும், ஆட்டுக்கடா வாகனத்தில் முருகனும், பூத வாகனத்தில் வீரபத்திரரும், மற்றும் வயிரவர் உருத்திர கணநாதர்கள் ஆகியோர் பல வரிசைகளைக் கொண்டு புடைசூழ்ந்து வந்தனர். அட்டமூர்த்தமாகிய மாசிலாமணிப் பெருமான் வெள்விடையின் மீதேறிக் கோபுர வாயிலின் வழியாக வந்தார்.

'ஞான நாயகன் வந்தான்', 'அம்பிகை நாயகன் வந்தான்' என்று திருச்சின்னங்களும் தாரைகளும் ஒலித்தன. தேவர்களும் முனிவர்களும் அடியார்களும் இறைவன் சந்நிதானத்தை அடைந்து வீழ்ந்து வணங்கினர். பலரும் பல பணிகளைச் செய்ய முற்பட்டனர். திருமால் அடைப்பையைக் கையிலே ஏந்தினார். பிரமன் விசிறி வீசினான். இந்திரன் காளாஞ்சியைக் கையில் ஏந்தினான். வருணன் பன்னீர் தெளித்தான். குபேரன் இரத்தின மழையைச் சொரிந்தான். இயமன் செங்கோலைத் தாங்கினான். நிருதி பினாகமென்ற வில்லைத் தாங்கினான். சூரியன் தன் கிரணங்களைப் பரப்பினான்.

சந்திரன் வெண்கொற்றக்குடையைப் பிடித்தான். விடை மீது வரும் ஏகாதச உருத்திரர்கள் இருபுறமும் மலர் மாலைகளை ஏந்தி வந்து வணங்கினர். நந்தியெம்பெருமான் கட்டியம் கூறிக் கொண்டு, பிரம்பால் கூட்டங்களை ஒதுக்கி வந்தார்.

சித்தர் வித்தியாதரர் ஆகிய இவர்களது கைத்தாளங் களுக்கு ஏற்ப திலோத்தமை, ஊர்வசி, அரம்பை, மேனகை முதலான தேவ மங்கையர் நடம் புரிந்தனர். மத்தளம், வெண்சங்கம், துந்துபிகள் போன்ற வாத்தியங்கள் ஒலித்தன. இடபக்கொடியைக் குண்டோதரன் பிடித்து வந்தான். ஆயிரம் உருத்திராக்கக் குடைகளைப் பிருங்கியர் முதலிய பூதகணங்கள் பிடித்து வந்தனர்.

இத்தகைய கோலாகலமான காட்சிகளுடன் இறைவன் திருக்குளக் கரையில் வந்து தரிசனம் தந்தருளினான். அம்பிகை மிகுந்த அன்புடன் தன்னை மறந்து இடபவாகனப் பெருமானை, மாசிலாமணிப் பெருமானைக் கண்டு பரவசமானாள். இத்தகைய எழில்மிக்க காட்சியை விளக்க எவராலும் இயலாத தாகும். கோடி மன்மத வடிவங்கள் ஒன்றானது போன்ற இறைவனுடைய அழகுமேனியை நேரில் கண்ட உமையம்மை பரவசம் எய்தியது போன்றே நாதனும் அம்மையைக் கண்டு பரவசமானார்.

இடபவாகனத்தினின்றும் கீழே இறங்கிய இறைவன் இறைவியின் பசுச் சாபத்தை நீக்கும் பொருட்டு, பூமியின் மீது தமது செம்மலர்ப்பாதம் படும்படியாக நடந்து வந்து, இச்சா தீர்த்த நீரை எடுத்தார். அத்துடன் தம்முடைய வெண்மதிச் சடையிலுள்ள கங்கை நீரையும் எடுத்துச் சேர்த்தார். இறைவியின் பசுத்துவம் நீங்கக் கடவது என்று மூன்று முறை கூறி அந்நீரை இறைவி மீது தெளித்தார். காமதேனு உருவிலிருந்த கருணை நாயகியாம் வாம நாயகி, பழைய உமை வடிவமாய் மாறினாள்.

இறைவன் விநாயகரைப் பார்த்து, 'தேவ மாதர்களின் பசுத்துவத்தை நீ தீர்ப்பாயாக' என்று கூறி அருளினார். அவ்வாறே அந்நீரை எடுத்து ஐங்கரன் தெளிக்க தேவமாதரும் பசுவுருவை விட்டுப் பழைய உருவங்களைப் பெற்று அம்பிகையின் அருகில் இருந்து மகிழ்ந்தனர்.

பசு உருவம் நீங்கப்பெற்ற உமையவள், இறைவனுடைய சந்நிதானத்திலே நின்று மலர்தூவி பணிந்து வணங்கியபோது அழகுமிகு ஆடை ஆபரணங்களுடன் விளங்கினாள். அம்மையின் எழில் உருவைக் கண்ட இறைவன் வியந்து நின்றார். அவளோ இவள் என மயங்கினார். அவளுடைய ஒவ்வொரு உறுப்பையும் நோக்கி ஒப்புமை கூற இயலாது பருகி மகிழ்ந்தார். அம்பிகையின் தனத்தைப் பார்த்து, இதற்கு உவமை சொல்ல ஒன்றுமேயில்லை என்று மயங்கியவராய், 'ஒப்பிலா முலையாள்' என அழைத்து, அவளை அணைத்து, இடப்பாகத்தில் வைத்து, வெள்விடை மீது அமர்ந்தருளினார்.

அம்மை அப்பரின் இத்தகைய எழில்கோலத்தைக் கண்ட தேவர்களும், முனிவர்களும், பூதகணங்களும் அரகர என்று ஒலித்து ஆனந்தக் கூத்தாடினார்கள். ஐந்து கற்பகங்களும் வேண்டிய பணிகளைச் செய்து முன்னே நின்று பூமாரியையும் இரத்தின மாரியையும் பொன்மாரியையும் பொழிந்தன. தேவமங்கையர் பல்லாண்டு கூறினர். இசைக்கருவிகள் பலவும் முழங்கின.

அம்பிகையை அணைத்துக் கொண்டு காட்சியருளிய இறைவரைத் திருமால் முதலான தேவர்களும் பலவாறு துதித்துப் போற்றினார்கள். இவர்களுடைய துதிகளைக் கேட்ட இறைவன், 'நீங்கள் யாவரும் உங்கள் துணைவியரோடு போக போக்கியங்கள் அனைத்தையும் அனுபவித்து மகிழ்ந்திருங்கள் எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவனின் அருள்மொழிகேட்ட பிரமன், அவரை வணங்கி, தேவரீர் எமக்கு அருளிய வேதங்களை அபகரித்துச் சென்ற சோமுகாசுரனை அழித்து, அவற்றை மீண்டும் தந்தருள வேண்டும் என விண்ணப்பித்தான். இறைவன் உடனே திருமாலைப் பார்த்து, 'மாயவனே! நீ ஓர் மீன் உருவம் அடைந்து சோமுகனை அழித்து, வேதங்களையும் சாத்திரங் களையும் மீட்டுக் கொண்டு வருக' என்று ஆணையிட்டார். அதற்குத் திருமாலும் இசைந்து வணங்கினார்.

பின்னர், தேவர்கள் அனைவரும் இறைவனை வணங்கி, 'ஐயனே! இமயமலையிலே இறைவியைத் தேவரீர் திருமணம் செய்து கொண்டதைப் போன்று இந்தத் திருவாவடுதுறையிலும் உமாதேவியைத் திருமணம் செய்து காட்சி தந்தருள வேண்டும்

என்று வேண்டினர். இறைவனும் இதைக் கேட்டு மகிழ்ந்து, ஒப்பிலா முலையாளை இத்தலத்திலே மிகுந்த அன்புடன் சித்திரை மாதத்தில் அனைவரும் காணும்படியாகத் திருமணம் செய்து கொள்வோம் என்று கூறியருளினார்.

பின்பு, வெள்விடை வாகனமேறி கோமுத்தித் தலத்தை வலமாக வந்து, கோயிலை அடைந்த இறைவன், முன்னுள்ள மண்டபத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருந்து, தேவர் முனிவர் அனைவருக்கும் விடை கொடுத்தருளினார். பசுவுருவாகி யிருந்த தேவ மகளிர்க்கும் வரங்களை அளித்தருளினார். அனைவரும் ஒப்பிலாமுலையம்மையையும் வணங்கினர். அம்மையப்பரின் அருளுடன் அனைவரும் அவரவர் இருப்பிடங்களுக்குச் சென்று இன்புற்றிருந்தனர்.

விநாயகப்பெருமான் தம் தாய் தந்தையரை வணங்கிக் கோபுரத்தின் தெற்கே ஓர் நிலையான அழகிய கோயிலை அடைந்திருந்தார். பின்பு, ஐந்தருக்களைப் பார்த்த இறைவன், 'நீங்கள் பூவுலகிலும் தேவருலகிலும் நம்முடைய அடியார் களுக்கு வேண்டியவைகளை இறைவியின் ஏவலின்படி பணிபுரிந்திருங்கள்' என்று ஆணையிட்டருளினார்.

ஒப்பிலா முலையம்மையுடன் மாசிலாமணிச் சிவலிங்கத் துள்ளே எழுந்தருளி உலக உயிர்கள் உய்யும்படியாகக் காட்சி தந்தருளினார். திருக்கோயில் எழிலும் சிறப்பெய்தியது. நவந்தரு பேதமாக நாடகம் நடிக்கும் ஞானச்சிவன் திருவிளையாடலை முழுவதும் விளக்கவல்லார் எவருமில்லை.

அம்பிகையானவள் சூது ஆடி வென்று இறைவனது அருளினால் அடைந்த ஞான யோகபீடம் முதலான இடங்களில் நீங்காமல் வலப்பக்கம் கொண்டும், எப்போதும் நீங்காமல் இருக்கும் இடப்பக்கம் கொண்டும் எங்கும் விளங்கியருளினாள்.

தேவர்களும் விடைபெற்றுச் சென்று வைகுந்தம் முதலான சுவர்க்கத்தை அடைந்து இன்புற்றிருந்தனர்.

முன்னாள் மறையைச் சோமுகன் கொண்டு சென்ற பின்பு தரும தேவதைக்கு உற்ற செய்தியை இனிச் சொல்வோமாக.

இருபத்தெட்டாவது
வேதபுத்திரனாகிய தருமதேவதைக்கு இடபவாகனப் பேறு அருளிய அத்தியாயம்

1008. மலரவ னிடத்தி ருந்த மறையினைக் கவர்ந்து கொண்டு
சலமிகு கடற்குட் சோமு காசுரன் சார்நாள் தொட்டிவ்
உலகினில் வருணம் நான்கில் உதித்திடு மனுட ரெல்லாம்
அலர்வுறு தரும தானம் யாகமாச் சிரந்த வங்கள். 1

1009. சாந்திநல் விரதம் கன்ம யோகங்கள் சரிப்ப தின்றி
வாய்ந்தமந் திரங்க ளின்றி வழிபடு நெறியு மின்றித்
தேர்ந்துப தேசஞ் சொல்லும் தேசிக வொழுங்கு மின்றிப்
போந்ததால் மம்மர் மிக்குப் பொலிந்தறி விழந்த தாலே. 2

1010. சதுர்மறை யிடத்திற் தோன்றும் தருமதே வதைக்குத் தாபம்
அதிகமாய்க் கவலை மேவி அறம்பொருள் காம மோட்சம்
விதிபெறு சிறப்பு மின்றி விண்ணவர்க் குவகை யின்றி
அதிர்முகில் பொழிதல் குன்றி யிருத்தலால் அகத்துள்
நொந்து. 3

1011. ஒருசிறு பிரம சாரிப் பூசுர வுருவங் கொண்டு
திருமலி கயிலை தன்னிற் சிவபெரு மான்போ முன்னர்
அருண்மிகு நந்தி பாற்சென் றடிபணிந் துரைத்துக் கேட்பத்
தருமதே வதையை நோக்கித் தகனவொடும் இதனைச்
சாற்றும். 4

1012. நீயுளங் கவலேல் வேத நீதிமுன் னருள்செய் கின்ற
நாயகன் தனைக்கண் டேத்தின் நன்மைகள் பலவு முண்டாம்
தூயவே தமும்அ ழைத்துத் துலங்கவே உபதே சிப்பன்
நேயமோ டுனக்கு வேண்டும் நிலைமையும் அளிப்பன்
நின்னே. 5

1013. போயவன் பதங்கள் தாழென் றுரைத்தலும் பொருவி லாத
நாயகன் எங்குற் றானென் றுரைத்திட நங்கை கொண்ட
தூயஆ னுருவம் நீக்கத் தொடர்ந்தனன் துறையை யூரில்
ஆயரு ளர்அருவ மிங்கும் அருவுரு உருவம் அங்கும். 6

1014. காட்டிஅங் கிருக்கின் றான்அங் கெய்தெனக் கழறக் கேட்டுத்
தாட்டுணை பணிந்து நீங்கித் தருமர்கா சியினில் வந்து

1009. மம்மர் - மயக்கம்.

சேட்டருள் வடிவாய் கங்கைத் திருநதி படிந்து சென்று
நாட்டமூன் றுடைய காசி நாதனைப் பணிந்தங் கேத்தி. 7

1015. முத்திமண் டபத்தில் வந்து முனிவர்கள் சொலும்பு ராணம்
பத்தியாய்க் கேட்கும் போது பரமன்கோ முத்திச் சேத்திரச்
சத்திய விசிட்டஞ் சொல்லுந் தன்மைகேட் டுவந்து மிக்க
புத்தியோ டத்த லம்விட் டெழுந்துநற் புண்ணிய ரூபன். 8

1016. தென்திசை நோக்கி வந்து சிவதலம் எங்குஞ் சென்று
பொன்திகழ் சடையி னானைப் போற்றிவந் தினிய பொன்னி
நன்றிசேர் நதிநீ ராடி நவில்முத்திச் சேத்தி ரத்திற்
துன்றிய அரசைக் கண்டு சூழ்ந்துவீழ்ந் திறைஞ்சி யப்பால்.
9

1017. கோயில்முக் காற்சூழ்ந் துச்சி குவித்தகை யுடன்அட் டாங்க
மாய்விழுந் திறைஞ்சி மிக்க அழகிய பிள்ளை முன்போய்த்
தூயநல் விடலை மோத கந்தொகுங் கனிஇக் காதி
நேயமாய் நிவேதித் தேத்தி நிறைந்தஅன் புடனே வாழ்த்தி.
10

1018. என்னுளக் கருத்து முற்றும் நீ இடர்வா ராமல்
முன்னின்று காத்தி யென்று முகமன்கள் பலவும் பேசிப்
பின்னுஞ்செவ் வேளை அன்பாற் பேணிமுன்
வணங்கிப் போந்து
சன்னிதி எதிர்நின் றின்பத் தாணுவைப் புகழ்ந்து சொல்வாம்.
11

வேறு

1019. செப்போதி வலியிகழ்ந்து களபந் தோய்ந்து
தெருளமுதந் தனைமடுத்துத் தெருட்சி காட்டி
முப்போது முகையாகி ஒப்பி லாத
முலையையொரு பாலிருத்தி முடிவி லாத
அப்போது சடாடவியிற் தரித்து வானோர்க்கு
அருள்மாசி லாமணியே ஐயா உன்னை
எப்போது தெரிசிப்பேன் என்றே நொந்தேன்
கண்டுகொண்டேன் இனிஏதுங் குறைவி லேனே! 12

1020. புண்ணியனே தென்துறைசைப் பொருளே போற்றி!
புரமெரியப் புன்னகைசெய் புனிதா போற்றி!
எண்ணுமுயிர்க் குயிராகி அறிவாய் இன்பாய்
எங்குமாய் நிறைந்துநின்ற இறைவா போற்றி!

கண்ணொருமூன் றுடையஅருட் கனியே போற்றி!
கருதுவார் இருளகற்றும் கதிரே போற்றி!
பண்ணமர்சொல் ஒப்பிலா முலையாள் மேவும்
பங்கனே போற்றி!பரா பரனே போற்றி! 13

1021. புளகமுற உளமுருகக் கண்ணீர் வாரப்
போற்றும்அடி யாரிடத்திற் புணர்வாய் போற்றி!
எழில்மதியும் சுரநதியும் பாம்பும் அக்கும்
என்பும்அணிந் திலகியசெஞ் சடையாய் போற்றி!
களபமலிந் திறுமாந்து பனைத்து விம்மிக்
கதித்தஒப்பி லாமுலையாள் கணவ போற்றி!
வளர்புகழ்சேர் ஆவடுதண் துறையி லென்றும்
மருவியருள் மாசிலா மணியே போற்றி! 14

1022. வேதநெறி தழைத்தோங்க அருள்வாய் போற்றி!
மிகுசைவத் துறைவிளங்க அருள்வாய் போற்றி!
நீதிமிகுந் தருமநெறி அருள்வாய் போற்றி!
நின்னடிமைத் திறம்விளங்க நினைவாய் போற்றி!
ஏதமற நாயேனை உனக்கெந் நாளும்
இடபவா கனமாய்க்கொண் டருள்வாய் போற்றி!
மாதவர்கள் போற்றுதிருத் துறைசை மேவி
வளருமருள் மாசிலா மணியே போற்றி! 15

1023. என்னுமயிர்ப் புளகமுற விழிநீர் சிந்த
இதையமனன் மெழுகாக உருகி ஏங்கி
நின்றுதட்ட மிட்டுநடித் தோடிப் பாடி
நெடிதுயிர்த்தா னந்தபர வசனா யெய்த்துக்
கொன்றையணி சடைப்பரன்முன் நின்ற போது
குலவுமொரு திருவாக்குக் குறிப்பி னோடு
நன்றிமிகு தருமநீ வருத லிங்கு
நன்றெனவே மொழிந்துபின்னும் நவிலக் கேட்டான். 16

1024. உன்னினைவின் படிகேட்ட வரமி யாவும்
ஒப்பிலா முலையினொடும் உவந்து வந்து
நன்னலமுன் தனக்குளதாம் படிக்குப் பின்பு
நல்குதும்பிப் பிலத்திருந்து நமைப்பூ சித்து
மன்னுதவம் புரிந்திருநீ என்னக் கேட்டு
வாக்கினுக்கெட் டாதஉள மகிழ்ச்சி எய்திதீ
தன்னிகரி லாத்தருமன் விடைபெற் றேகிச்
சார்ந்தனன்நற் போதிவனந் தன்னி லன்றே. 17

1025. எதிரிலங்கு பகற்பாதி போக அன்று
கங்குல்வரும் பாதியிரா விடியுங் காறும்
மதியினுடன் கண்படைகொண் டெழுந்து மிக்க
வைகறையிற் சென்றுகோ முத்தி தீர்த்தத்து
அதிமதுர மாய்ச்சிவன்நா மங்கள் பாடி
ஆடிநீ றணிந்தனுட்டா னஞ்செய் தன்பாய்
முதிரும்அக்கு மணிசிரத்திற் களத்திற் கையில்
மொய்ம்பினணிந் தைந்தெழுத்து மொழிந்துட் கொண்டு.
18

1026. ஆசாரம் ஒழுக்கம்அரு ளுறவு சீலம்
அறிவுதிடம் பொறுமைதவம் அன்பு தூய்மை
தேசாரும் பத்திவயி ராக்கியம் பாசத்
தேகஉப ரதிவாய்மைத் திறம்அஞ் சாமை
பாசானு பவர்பழக்கம் விடுதல் நேயப்
பதமருவும் அடியவர்சொற் பணியே கேட்டல்
வாசாம கோசரமாம் அரன்மே லாசை
வாய்க்கும்இரு வினையொப்பு மனத்த னாகி. 19

1027. கோபுரத்தைத் தொழுதுதுணை வந்த ஞானக்
குஞ்சரத்தி னடிபரவிக் கோயி லெய்திச்
சீர்பெறுநற் திருவலகா லெங்குந் தூர்த்துத்
திருமெழுக்கிட் டரசினுக்குஞ் செழுநீர் வார்த்துத்
தாபமற நந்தவனப் பணியுஞ் செய்து
தகுஞ்சரியைத் தொழில்முழுதுந் தானே போற்றி
ஏர்பெறுநற் கிரியையினால் அரனைப் பூசித்
திடும்பணிக்குங் காலத்தி னியறப் பாமல். 20

1028. பூம்பிடகை கொண்டுநந்த வனத்தி லெய்திப்
பொதியவிழ்நல் மலர்சுரும்பு பொருந்து முன்னம்
காம்புபழு தறநீக்கி நிலப்பூ நீர்ப்பூ
கமழ்கொடிப்பூ வொடுகோட்டுப் பூவுங் கொய்தங்கு
ஓம்புமனக் காதலொடும் பசிய வில்வம்
ஒளிரமர கதநிறத்தாய்க் கவர்மூன் றுண்டாய்த்
தேம்பொழியும் தளங்கள்பல வெடுத்துக் கொண்டு
சினகரஞ்சேர்ந் திருந்துமலர்க் கண்ணி சேர்த்து. 21

1029. மல்லிகைமென் முல்லைஇரு வாட்சி பிச்சி
மருக்கொழுந்து கொன்றைநல்மந் தாரம் கோங்கு
நல்லலரி சண்பகம்பன் னீர்செருந்தி யோடே
நந்தியா வர்த்தம்நறுந் துளசி தும்பை

அல்லிமலர்க் குவளைகஞ்சம் கழுநீர் மற்றும்
அன்பினொடுஞ் சரம்பிணைய லார மிண்டை
புல்லுமணித் தோடுகட்டு மாலை வர்க்கம்
போதவே சமைத்துமிகு புனிதத் தோடும். 22

1030. அந்தமிலா அபிடேகத் திரவி யங்கள்
ஆன்பால்நெய் தயிர்பஞ்சா முதநல்ல வெண்ணெய்
நந்தலிலாச் சருக்கரைதேன் இளநீர் கன்னல்
நலம்பெறுமுக் கனிமுதலாம் பழங்கள் நன்னீர்
சந்தனமான் மதம்கருப்பூ ரம்ச வாது
தகைபெறுகோ ரோசனையா தியவா சத்தின்
கந்தமிகு குழம்பிலே பனநல் லன்னம்
கமழ்தூபம் தீபம்இவை கனமாய்க் கொண்டு. 23

1031. தந்திரமந் திரகலையா கமத்தில் ஈசர்
சாற்றும்விதிப் படியேசங் கற்ப முன்னி
முந்துசிவ மூலத்தால் ஐந்து சுத்தி
முதிரும்அன்பி னாற்புரிந்து மோகத் தோடும்
சிந்திஆ சனம்மூர்த்தி மூர்த்தி மானைத்
தியானித்தா வாகித்துச் சிவமாய் நின்றங்கு
அந்தமிலா மாசிலா மணியை மிக்க
அபிடேக மனுமுறையால் ஆட்டிப் பின்னர். 24

1032. இலேபனச்சந் தனக்கலவை யணிந்து பொற்பட்டு
இரும்பொன்மணிப் பூண்பலவும் இசையச் சாத்தி
நிலாவிலகு முடிமேற்பூந் தாம மெல்லாம்
நிறைவுபெற அலங்கரித்து நிவேதித் தன்னம்
குலாவும்விரைத் தூபதீ பங்கள் மற்றும்
குடைகவரி கண்ணாடிநற் குளிர்கால் வட்டம்
உலாவுசோ டசவுபசா ரத்தி னோடும்
உளமகிழ்ந்து பூசித்தங் குவந்து பார்த்து. 25

1033. ஆயிரநா மத்திருமந் திரத்தி னால்வில்
வார்ச்சனைசெய் தட்டாங்க பஞ்சாங் கத்தால்
நேயமொடும் விழுந்திறைஞ்சி யெழுந்து பாடி
நிகழுமனு போகசுக நிருத்தஞ் செய்து
தூயசெம்பொற் கோயில்வலஞ் சுற்றி யைங்கைச்
சுந்தரன்தா ளையுமலர்தூஉய்த் தொழுது பூசித்து
ஏயுமருட் கிரியைமுடித் தினிய போதி
யிடத்தில்வலஞ் சுற்றிவந்தங் இருந்தின் போடும். 26

1034. சிவயோகத் தொழில்புரிதற் கங்க மெட்டுஞ்
செய்துவரு முற்பழக்கத் தெளிவை யெண்ணி
நவமார்பத் மாசனத்தின் வடபால் நோக்கி
நன்கமைய இருந்துவிழி நாசி வைத்துப்
பவமேவு புலனடக்கி வளியி ரண்டிற்
பரவாது நடுநாடி பயில ஏற்றி
உவகையொடுஞ் சலிப்பறவோர் கம்பம் போலுற்று
ஒளிருநாற் சதுரமுத லுறும்ஆ தாரம். 27

1035. அறுவகையும் அதிலுறுமெய்ப் பொருளுங் கண்டங்கு
அணைந்துபோய் மேலேறி அலர்மதிமண் டலத்தில்
நறுமமுத முடன்நிறையத் தேக்கி நின்றங்கு
ஒளிர்பெருஞ்சோ தியுளடங்கி உமையா ளோடு
மறுவறுமெய்ஞ் ஞானவடி வாகித் தோன்றும்
மாசிலா மணியைஅன்பால் மகிழ்ந்து போற்றி
பெறுமருளா னந்தசுகம் வளர்சா ரூபப்
பேறுகொண்டு விழித்ததற்பின் பெருமை யோடும். 28

1036. சன்மார்க்க ஞானசா தகத்தை யெண்ணிச்
சற்குருவாய் வந்துபதே சித்த தன்மை
நன்மார்க்கத் தாற்பசுபா சப்போ தத்தில்
நண்ணாமற் தரிசனசுத் தியிலே நண்ணிப்
புன்மார்க்க உயிர்ப்போத மொடுங்க ஞான
பூரணத்தி லேயழுந்திப் புணர்ஞே யத்துள்
முன்மார்க்க மலமறத்தா னொன்றா தொன்றி
முழுமுதலா கியலாபம் முதிரப் பெற்று. 29

1037. ஞாதிருஞா னத்தினொடு ஞேய நாடா
நன்னலம்போற் சரியைமுன் மூன்றும் நாடி
மேதகுநற் சிவதரும வடிவ மானோன்
மிகுந்தநாற் தொழிலினுக்கும் உரிய னாகி
ஆதரவாற் பணிபுரிந்தங் கிருக்கும் நாளில்
அதுலதனத் தாளொடுநல் லரனே காந்தப்
போதலர்பூஞ் சயனத்தி லிருக்கும் போது
புனிதமக வானவிநா யகன்முன் போந்து. 30

1038. தந்தைதாய் மலர்ப்பதத்தை வணங்கக் கண்டு
தாயெடுத்து மடியில்வைத்துத் தைவந் தன்பாய்
வந்தவகை என்கொலென இருவர் நோக்கு
மதிமுகத்தி னெழில்நோக்கி மகிழ்ந்து கூறும்

பந்தமிலாச் சிவதரும வடிவாய் நித்தம்
பணிபுரியுந் தருமனைநீர் பரிவாய் இங்கே
உய்ந்திடும்வெள் விடையாக்கி ஊர்தல் வேண்டும்
ஒடுங்கிடும்நாள் ஏறும்விடை உருவம் போல. 31

1039. இவ்வரம்நீர் கொடுத்தருள வேண்டும் என்ன
எங்கள்நினை வின்படிநீ யும்நினைத்தா யென்று
செவ்வியகை யாலணைத்து முத்த மிட்டுத்
திங்கள்வா ரத்தின்அத்த நிசியிற் தேவன்
நவ்விவிழி ஒப்பிலா முலைகை தாங்க
நான்மறைப்பீ டிகைமிதித்து நடந்து சென்றங்கு
அவ்வியமில் லாஅரசின் நீழல் மேவி
அருட்துரியா தீதஇன்பத் தணைந்து தூங்கும். 32

1040. தருமனுடன் முதுகுகர மலரால் நீவத்
தனதுணர்வி னுடன்கூடித் தழைத்த அன்பால்
அருமறைக ளறியாத பதத்தை முன்னே
அசிந்திதனாய்க் கண்டவன்சிந் திதனாய்க் கண்டங்கு
உருகுமுளத் தொடும்பதறி யெழுந்து நின்றே
உமையொடும்சே யொடும் தோன்றும் ஒருவன் தன்னை
இருவிழிகள் குளிர்ந்திடக்கண் டளவி லாத
இன்பினொடு மறைமொழியால் ஏத்தக் கண்டு. 33

வேறு

1041. மதிபு னைந்திடும் மாசிலா மணியுளம் மகிழ்ந்து
துதிபு கன்றிடும் தருமன்மேற் பாவகம் தொகுத்துக்
கதித ருஞ்சிவ தீக்கையின் முறையெலாங் கணித்துப்
பதியு நல்லுருச் சேவிணி யாகெனப் பகர்ந்தான். 34

1042. செய்ய வாய்மலர் திறந்துரை பகர்ந்தஅத் தினத்திற்
துய்ய வெள்விடை யாகியே தருமன்முன் தோன்ற
மெய்யெ லாந்திருக் கண்ணினால் நோக்கிவெண் ணீற்றைக்
கையி னாலெடுத் தணிந்துதை வந்துளங் களிப்ப. 35

1043. ஆதி நான்மறைச் சுருதிகள் புகலுநல் லறத்தைச்
சோதி மாமணிக் கலன்களாய் நிரூபித்துத் துலங்க
நாதன் கையினா லெடுத்தருள் நந்திநா யகன்மேற்
போத வேயெழில் விளங்கிடக் கலன்பல பூட்டும். 36

1044. மருப்பி ரண்டினும் நவமணிக் கிம்புரி வனைந்து
விருப்பு டன்மணிச் சுட்டிநன் நெற்றிமேல் விதித்து
திருச்செ வித்துணைக் கிருமர கதப்பணி செறித்து
குருச்செய் நித்திலக் கொத்திரு புறத்தினுங் குயிற்றி. 37

1045. கந்த ரத்தினிற் பருமணி யொருமுறை கவிதை
தந்தி ரத்தொடும் புனைந்ததின் கீணிரை தயங்க
சுந்த ரத்திரு மணிவட மாறுறக் சூழ்வித்து
உந்து நற்பத மீதுபொற் சிலம்புநான் குதவி. 38

1046. ஆறு பத்துநாற் கலையுமெல் லணைகளாய் மத்தித்
தேறு நற்சிறு மணிவடம் வாற்புறஞ் செறித்து
மீறு கொங்கையாள் மகனொடு மகிழ்வுற மிகுநற்
பேறு கொண்டநல் நந்தியைப் பார்த்திவை பேசும். 39

1047. உன்னை யாவரா கினும்பணிந் துன்மன மகிழப்
பன்னு நாண்மல ராலருச் சித்துநற் பணிகள்
மன்னும் அன்பொடு செய்துநற் துதிகொடு வழுத்தில்
என்னை அன்பொடும் பூசிக்கும் பேறளித் திடுவேம். 40

1048. சித்தி ரைத்திரு விழவினில் உமைமணச் சிறப்பிற்
பத்தி யாயுல கத்துளோர் யாவரும் பணியச்
சுத்த மேவும்உன் மீதுஉமை பாகமாய்த் தோன்றி
இத்த லத்திரு வீதியில் வருவதற் கிசைந்தேம். 41

1049. ஆத லாலின்று தொட்டுநீ இடபவா கனமாய்ப்
போதி நீழலிற் கோயில்கொண் டெம்மருள் பொருந்தி
நீதி யாகநேர் தரிசித்திங் கமர்கென நிகழ்த்திப்
பாதி யாளொடுங் கோயில்சென் றிருந்தனன் பரமன். 42

1050. ஆனை நல்முகத் தழகிய பிள்ளையும் அவற்கு
ஞான நோக்கமும் புத்தியும் வித்தையும் நல்கி
மான லம்பெறுங் கோயிலிற் றென்திசை மருவி
ஏனை யோர்களும் பணிந்திடக் கனிந்துகந் திருந்தான். 43

1051. இடப வாகனந் தருமனாம் வகைசிறி திசைந்தேந்
திடமி குந்திரு மாலொரு மீனுமாய்ச் சென்று
கடலி னிற்புகுந் தொளித்தசோ முகன்தனைக் கடிந்து
படருஞ் சொன்மறை அரன்முனங் கொடுவரல்
பகர்வாம். 44

இருபத்தெட்டாவது
வேத புத்திரனாகிய தருமதேவதைக்கு இடபவாகனப் பேறு அருளிய அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1051

திருச்சிற்றம்பலம்

28. வேத புத்திரனாகிய தருமதேவதைக்கு இடபவாகனப் பேறு அருளிய அத்தியாயம் (சுருக்கம்)

நான்முகனிடத்திலிருந்த மறைகளைக் கவர்ந்துகொண்டு கடலுக்குள்ளே சோமுகாசுரன் மறைந்த நாள் முதலாக, இவ்வுலகில் நான்கு வருணங்களில் தோன்றிய மாந்தரெல்லாம் தருமம், தானம், யாகம், ஆச்சிரமம், தவம், சாந்தி, விரதம், கர்மம், யோகம் ஆகிய இவற்றைச் சரியாக நடத்தாமலிருந்தனர். மந்திரங்கள், வழிபடுகின்ற சமயங்கள், உபதேசஞ் சொல்லும் ஆசாரியனது ஒழுக்கங்கள் ஆகிய இவையும், மயக்கம் மிகுந்து அறிவை இழந்ததால் இல்லாமல் போயின. இதனால், வேதனிடத்தில் தோன்றிய தருமதேவதைக்குக் கவலை மிகுந்தது.

அறம், பொருள், இன்பம், வீடு இவற்றிற்குச் சிறப்பு இல்லாமலும், தேவர்களுக்கு மகிழ்ச்சி இல்லாமலும், மழை வளம் இல்லாமலும் இருத்தலால் மனவருத்தமடைந்த தரும தேவதை ஒரு பிராமண பிரமசாரியின் வடிவம் கொண்டு கயிலையில் சிவபெருமான் முன்பு சென்றார். அதற்கு முன்பு நந்திதேவரது திருவடிகளைப் பணிந்து குறைகளைக் கூறினார். நந்திதேவர் தருமதேவதையைப் பார்த்து, 'நீ கவலைப்படாதே! வேதநீதியை முன்பு அருளிச்செய்த இறைவனைப் பார்த்துத் துதித்தால் பல நன்மைகளும் உண்டாகும்; வேதங்களையும் வரவழைத்து விளங்க உபதேசிப்பார்; வேண்டும் வரங்களும் அளிப்பார்' என்று கூறினார்.

தருமதேவதை நந்தியெம்பெருமானிடம் இறைவன் எங்கே இருக்கிறார் என்று கேட்டார். அதற்கு அவர், அம்பிகை கொண்டுள்ள பசு உருவத்தை நீக்குவதற்காக இறைவன் துறைசையை அடைந்துள்ளார்; இத்துறைசையில் அவர் அருவுருவாயும், உருவாயும், இங்கு கயிலையில் அருவாயும் இருக்கின்றார் என்று கூறினார்.

நந்தியெம்பெருமானை வணங்கி விடைபெற்ற தருமதேவதை காசிக்கு வந்து கங்கையில் நீராடிக் காசிநாதனை வணங்கித் துதித்து, முத்தி மண்டபம் வந்து, அங்கு முனிவர்கள் சொல்லும் புராணத்தைப் பக்தியுடன் கேட்டார். இறைவன் எழுந்தருளி யுள்ள கோமுத்தித் தலத்தின் பெருமையினைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். காசியைவிட்டு எழுந்து தென்திசையை நோக்கிப் புறப்பட்டு எல்லாச் சிவதலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கித் துதித்தார்.

பின்பு காவிரிநதியில் நீராடிக் கோமுத்தித் தலத்தில் நெருங்கிய அரசவனத்தைக் கண்டு வலம்வந்து வீழ்ந்து வணங்கினார். ஆலயத்தை மூன்று முறை வலம்வந்து கைகளைத் தலைமேல் குவித்து அட்டாங்க பஞ்சாங்க வணக்கங்களைச் செய்தார். பின்னர், விநாயகப் பெருமான் முன்சென்று விடலை, மோதகம், பழங்கள் ஆகியவற்றைப் படைத்துத் துதித்தார். என்னுடைய உள்ளக் கருத்துக்கு இடர் வராதபடி நீ முன்னின்று காத்தருள்வாயாக என்று வேண்டினார். முருகனையும் அன்புடன் துதித்து வணங்கினார்.

மாசிலாமணிப் பெருமானின் சந்நிதியில் சென்ற தருமதேவதை அவரைப் பலவாறு பாடித் துதித்தார். அப்பொழுது 'தருமனே! உன்னுடைய வேண்டுதலின்படியே கேட்ட வரங்களெல்லாம் ஒப்பிலா முலையாளுடன் வந்து உனக்கு உளதாம்படிக்குப் பின்பு அளிக்கின்றோம்; நீ பிப்பில வனத்திலிருந்து நம்மைப் பூசித்துத் தவம் புரிவாயாக' என்று வானொலி எழுந்தது. இதைக் கேட்ட தருமர் மகிழ்ச்சியுற்றார். போதிவனத்திலே பாதி பகல் கழிய இரவு கண் துயின்றார். விடியற்காலையில் போய் கோமுத்தித் தலத்தில் நீராடினார். வெண்ணீறணிந்து அநுட்டானம் முடித்து, அக்கமணி அணிந்து, ஐந்தெழுத்து ஓதி, ஆசாரம், ஒழுக்கம், கருணை, சீலம், அறிவு, திடம், பொறுமை, தவம், அன்பு, தூய்மை, பக்தி, வைராக்கியம், உடலினிடத்துள்ள பாசத்தை நீக்குதல், வாய்மை, அஞ்சாமை, பாசத்திலே உழல்பவருடன் பழகும் பழக்கத்தை விடுதல், அடியவர் சொல்லும் பணி கேட்டல், அரன்மீது அன்பு வைத்தல் ஆகிய இவையாவும் இருவினையொப்புக்கு அடிப்படைகளானதால் இவற்றையுடைய மனத்தினனாய், துணை வந்த விநாயகப் பெருமான் திருவடி வணங்கினார்.

பின்பு, கோயிலை அடைந்து திருவலகும் திருமெழுக்கு மிட்டு, அரச மரத்துக்கும் தண்ணீர் ஊற்றி நந்தவனப் பணியையும் செய்தார். மலர்மாலைகள் தொடுத்து, சுத்தத் தோடும் அபிடேகத் திரவியங்கள். பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம் ஆகியவற்றையும் முக்கனிகளையும் திரட்டினார். ஆகமத்தில் கூறியபடி, சங்கற்பம் செய்து, ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் ஆகியவற்றைத் தியானித்து ஆவாகித்தார். சிவோகம் பாவனை செய்து, மாசிலாமணியை மிக்க அபிடேக மனுமுறையால் ஆட்டி, சந்தனம் ஆடை ஆபரணங்கள் இவற்றைச் சாத்தினார். மலர்மாலைகளால் அலங்கரித்து, அன்னம் படைத்தார். தூப தீபங்களும் உபசாரங்களும் காட்டி மகிழ்ந்தார்.

பின்பு, ஆயிர நாமத் திருமந்திரத்தினால் வில்வ அர்ச்சனை செய்தார். அட்டாங்க பஞ்சாங்க வணக்கங்களைச் செய்து இறைஞ்சியெழுந்து பாடினார். கோயிலை வலம்வந்து விநாயகரைப் பூசித்தார். போதிமரத்தை வலம்வந்து அங்கிருந்து, பத்மாசனமிட்டு வடதிசையை நோக்கியிருந்து, கண்களை நாசி நுனியில் வைத்துப் புலன்களை அடக்கி, காற்றை இடகலை பிங்கலைகளில் புகவொட்டாது நடுநாடியாகிய சுழுமுனையிலே ஏற்றி அசையாமல் இருந்து, ஆறு ஆதாரங்களுள் வகை வகையாயுள்ள உண்மைப் பொருளையும் கண்டு மேலேறி, சந்திர மண்டலத்தில் அமுதத்தை நிறையத் தேக்கி நின்று, அங்கு ஒளிவிடும் சோதியிலே அடங்கி, அம்பிகையோடு உண்மை ஞான வடிவாகி விளங்கும் மாசிலாமணியை அன்போடு மகிழ்ந்து போற்றினார்.

இறைவனின் அருளானந்த சுகத்தைப் பெற்று, சாரூபப் பேற்றையும் கொண்டு விழித்து, சன்மார்க்க ஞான சாதகத்தை எண்ணி, சற்குருவாய் வந்து உபதேசித்ததன்படி பசு பாச ஞானத்தில் நண்ணாமல் தரிசன சுத்தியிலே நண்ணி, ஆன்ம போதம் ஒடுங்கப் பூரண ஞானத்திலே அழுந்தி, ஞேயத்துள்ளே தான் பொருந்தாது பொருந்தி முழுமுதலாகிய இலாப முதிர்ச்சியை அடைந்து ஞாதுரு ஞானத்தோடு ஞேயம் நாடாது சரியை, கிரியை, யோகம், ஞானம் இவற்றை நாடி, சிவதரும வடிவ மானவராகிய தரும தேவர் நான்கு தொழிலினுக்கும் உரியவராகி அன்போடு பணியைச் செய்து கொண்டு அங்கு இருந்தார்.

அப்பொழுது, அம்பிகையோடு இறைவன் ஏகாந்தப் பூஞ்சயனத்தில் இருந்தார். அச்சமயத்தில் விநாயகப் பெருமான்

இறைவன் முன்பு வணங்க, அம்பிகை அவரை எடுத்து மடியில் வைத்து மகிழ்ந்தார். 'இங்கு வந்த காரணம் என்ன' என்றும் கேட்டார். அதற்கு விநாயகர், அம்மை அப்பரைப் பார்த்து, சிவதரும வடிவத்தோடு நாள்தோறும் பணிசெய்யும் தருமனை, தேவரீர் அன்போடு இங்கே உய்ந்திடும் வெள்விடையாக்கி, அதில் அமர்ந்து வரவேண்டும், இதுவே யான் வேண்டும் வரம் என்று கூறி வணங்கினார். நாங்களும் அவ்வாறே நினைத்தோம் எனக் கூறிய உமைபங்கன் விநாயகரைக் கையால் அணைத்து மகிழ்ந்தார்.

திங்கட்கிழமையன்று நடுநிசியில் சிவபெருமான் ஒப்பிலா முலையம்மையுடன் அரச மரத்தின் நிழலிலே துரியாதீத இன்பத்திலே தூங்குகின்ற தருமனுடைய முதுகைத் தம் கரத்தால் தடவினார். தருமன் பதறியெழுந்து, இறைவன் திருவுருவம் கண்டு வணங்கினார். மாசிலாமணிப் பெருமானும் தருமன் துதி கேட்டு மகிழ்ந்து சிவதீக்கை அளித்து 'இடபமாகுக' எனக் கட்டளையிட்டார். தருமனும் வெள்விடையாக மாறினார்.

மறைகளில் சொல்லிய நல்லறத்தை இறைவன் ஆபரணங் களாக்கி, அவற்றைத் தமது கையால் எடுத்து நந்தியின் மீது அணிவித்து, 'உன்னை யாராவது பணிந்து மலரால் அருச்சித்து, ஆபரணங்களை அணிவித்து, துதி செய்வார்களானால், அவர்களுக்கு என்னை அன்போடு பூசித்த பேற்றினை அளித்திடுவோம்; மேலும், சித்திரைத் திருவிழாவில் திருமணம் செய்து கொண்டதும் அகிலத்திலுள்ளோர் அனைவரும் வணங்க உன் மீது உமையொரு பாகனாய்த் தோன்றி இத்தலத்துத் திருவீதியில் வருவதற்கும் இசைந்துள்ளோம்; எனவே, இன்றுமுதல் நீ இடபவாகனமாய் அரசின் நிழலில் கோயில் கொண்டு, எம்முடைய அருளையும் பெற்று நீதியாக - தருமமாக எமக்கு நேரே தரிசித்து இவ்விடத்தில் அமர்வாயாக' என அருளினார்.

விநாயகப் பெருமானும் தருமதேவதைக்கு ஞான நோக்கமும், நல்புத்தியும், வித்தையும் நல்கியருளினார்.

தருமன் வெள்விடையாய் அமர்ந்ததை இதுவரையில் கூறினோம். இனி, திருமால் மீனமாகி, கடலில் ஒளிந்த சோமுகாசுரனைக் கொன்று மறைகளை மீட்ட வரலாற்றைக் கூறுகிறோம்.

இருபத்தொன்பதாவது சோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்த அத்தியாயம்

1052. ஆவ டுந்திருத் துறைசைநா யகன்திரு வருளாற்
தேவர் யாவரும் அவரவர் இடங்களிற் செறிந்து
தாவி லாவளம் பெற்றுவீற் றிருந்திடத் தகைசேர்
பூவ னும்திருச் சத்திய உலகினிற் புகுந்தான். 1

1053. கருட வாகன மீதிலைம் படைபெறுங் கடவுள்
மருவி யேமலர் மகளொடுஞ் சென்றுவை குந்தத்து
உரக சாயியாய் எண்ணில்பல் வளத்தொடு முகந்து
பெருகு காவல்செய் தொழிலொடும் இருந்தனன் பேணி. 2

1054. புரந்த ரன்புலோ மிசையொடும் பொன்னகர் பொருந்திச்
சுரந்த நல்லமு தாசனஞ் சுரரொடுந் துய்த்து
வரம்பெ றும்அயி ராவதப் பிடர்மிசை வதிந்து
உரம்பெ றும்அம ராபதி மறுகிடை உலவி. 3

1055. கற்ப காடவி நீழலிற் கடவுளர் பணியப்
பொற்பு றும்அரி யாசனத் தவிசிடைப் பொருந்தி
அற்பு தத்திரு விழிகளா யிரத்தினு மவிடத்து
உற்ப வித்தபல் வளங்களும் கண்டுவந் துகந்தான். 4

1056. உம்பர் யாவரும் இவ்வித முற்றுறு நாளில்
அம்பு விக்கண்நல் அந்தணர் அருமகம் புரிந்து
பம்பு சொல்மறை மந்திரத் தாலஅவிப் பாகம்
நண்பொ டுங்கொடுப் பாரின்றி இருப்பதால் நலிந்து. 5

1057. தேயு வாதிய தேவரு முனிவருஞ் சென்று
தோயு நல்அயி ராணிநா யகன்முனந் துன்னி
ஓயுந் தங்கட முளத்துறு கவலைகள் உரைப்ப
வாயு நல்மனத் துடனெழுந் தக்கண மகவான். 6

1058. அமரர் தங்களோ டயனுல கடைந்துநான் முகனைக்
கமல பீடிகை மீதினிற் கண்டடி தொழுது
சமையுந் தங்கடன் அவர்வினை யுரைத்திடத் தவள
விமலை நாயகன் அவரொடும் இவையிவை விளம்பும். 7

1052. பூவன் - பிரமன். 1053. உரகசாயி - திருமால்.
1057. அயிராணி நாயகன் - இந்திரன்

1059. உயிரி லாவுடல் போல்மறை பயின்றிடா உடல்கொண்டு
அயிலும் போகமும் போகமோ அன்றத னாலே
சயில நாயகி தலைவன்ஆக் கினைகொள்சக் கிரியான்
முயலு நாமெலாம் போதுமென் றெழுந்துநான் முகத்தோன். 8

1060. அன்ன வாகன மீதிவர்ந் தாங்கவ ருடன்போய்ப்
பன்ன காசலப் பாயலிற் துயில்பரந் தாமன்
முன்ன ரெய்தியே தொழவர வுணர்முகில் வண்ணன்
பொன்னன் மாதொடுங் காட்சியீந் தருள்மொழி புகல்வான். 9

1061. கால தாமதஞ் செய்ததென் னோவெனக் கழறிச்
சீல மேவிய துறைசைநா யகன்அருட் திறத்தால்
வேலை யூடுபோய் அருமறை கொணர்ந்திட வேண்டும்
சால எம்மொடும் அனைவரும் வருகெனச் சாற்றி. 10

1062. தண்டு சக்கரம் சங்குவில் வாள்கையிற் தாங்கி
ஒண்டி றற்கலு ழன்மிசைப் பலபடை உடைய
அண்டர் சூழ்வர வந்தர துந்துமி யார்ப்பக்
கொண்டல் போலமுன் னியம்பல வதிர்ப்பொடுங் குமிற. 11

1063. அரம்பை யாதிய மாதர்கள் நல்நட மாட
நிரம்பு மாமுனி இருடிகள் ஆசிகள் நிகழ்த்த
நரம்பு வீக்கிய யாழிசை விஞ்சையர் நவில
வரம்பு பெற்றிடு வேலைவாய் மருவினன் மகிழ்ந்து. 12

1064. சலப திக்கிறை யாகிய வருணனைத் தயவோடு
இலகு தாமரைக் கண்களால் நோக்கிஇக் கடலுள்
புலன்மி குத்திடு சுருதிகொண் டொளித்தபுன் மலத்தோன்
நிலவு தானமெவ் விடத்தென மேற்றிசை நிருபன். 13

1065. அறைகு வானிதற் காயிரம் யோசனைக் கப்பால்
நிறையு நீர்க்கடற் கயஞ்சத யோசனை நிலத்துள்
உறைமை நாகவெற் பிடத்திலோர் புறத்தினி லொளித்து
மறையி னோடிருந் தானெனக் கேட்டுநல் மாயன். 14

வேறு

1066. வாரிதி கலக்கிய மந்த ரத்தினும்
பாரமு முயரமும் பதின்ம டங்குபோல்

1061. வேலை - கடல். 1066. மந்தரம் - மந்தரகிரி.

ஏருறு மகரமாய்க் குதித்தி டம்பெறும்
ஆரிருங் கடலினுள் அமிழ்ந்திச் சென்றனன். 15

1067. வாலடி நீர்த்துளி வான்மு கட்டுறக்
காலுறு மூச்சினாற் கலங்கிப் புற்பத
மேலுறத் திமிங்கில மாதி மீனினம்
சூலொடு மயங்கிட வளைந்து சுற்றினான். 16

1068. ஏயெனும் பொழுதினிற் கடுப்பி னெய்திநீள்
வாயுறும் அலகுபல் வாளி னாலறுத்
தாயமை நாகவெற் பகட்டி னூடுபோய்த்
தூயமா மறைகொளுஞ் சோமு கன்தனை. 17

1069. களமிரு துணிபடக் கடித்தெ றிந்தவன்
உளமுறு நெஞ்சினைக் கீறி யுள்ளுறும்
வளர்புகழ் மறையெலாம் வாங்கி நாவில்வைத்து
இளநில வனையபல் லிலங்க ஆழிமேல். 18

1070. மிதந்துவல் விரைவொடு நீந்தி வேகமாய்க்
கதந்தவி ராமலே கரையின் மேவலும்
இதந்தரும் அயன்முதற் தேவர் யாவரும்
முதிர்ந்தசீர் மச்சமா முகில்வண் ணன்தனை. 19

1071. கண்டுகண் களித்திரு கரங்கள் கூப்பிநற்
புண்டரீ காட்சபொற் பூம டந்தைசேர்
கொண்டல்வண் ணாஅருட் கோவிந் தாஎன
விண்டுசொற் துதிசொலி விழுந்து போற்றியே. 20

1072. அருமறை கொணர்ந்தெம தாவி தந்தனை
ஒருவரும் இனியுனக் கொப்புண் டோவெனப்
பெருமையோ டமரர்கள் பேசும் போதுளம்
அருளொடும் பிருகுசா பத்தின் வாய்மையால். 21

1073. முன்னுள அறிவெலா மறந்து முக்கணான்
தன்னையு மறந்தவன் தலைமை யும்மறந்து
என்னது யானெனும் அகந்தை எய்தினான்
மன்னுசேல் வடிவுறு மயக்க மிஞ்சவே. 22

1074. அக்குண மறிந்திடா தமரர் போற்றிநின்று
இக்குண மீனுரு விடுத்தெம் மோடுநீ
செக்கர்மே னியனடி சேர்க வாவென
உக்கிர மோடுபார்த் துரைத்தல் மேயினான். 23

1067. சூல் - கரு.

1075. உலகெலாங் காக்கும்நான் ஒருவ னன்றிமேற்
தலைவரும் உளர்கொலோ வேதத் தன்மையை
நிலவுல கத்தினில் நிறுத்தி வேண்டிய
பலனுமக் கருளுதும் பணிமின் என்றனன். 24

1076. அவ்வுரை கேட்டலும் அமரர் அச்சமுற்று
இவ்வித மென்கொலென் றெண்ணி ஒப்பிலாக்
கொவ்வைவா யுமைபுணர் கோமுத் தீசனைச்
செவ்விய வுளத்தினிற் சிந்தை செய்தலும். 25

1077. உயிர்க்குயி ராகியே உளக்கண் மேவிநின்று
இயற்கையா லறிந்தருள் இறைவ னாதலாற்
செயிர்க்குண மாலுறுஞ் செய்கை யும்விணோர்
அயர்ப்பிலா நினைப்புமங் கறிந்து செய்குவான். 26

1078. சந்திர சேகரத் தாணு ரூபமாய்ச்
சுந்தரப் பூதர்கள் சூழ ஏற்றின்மேல்
அந்தரர் போற்றுதே ரமுந்தும் ஊரினில்
வந்திருந் தருள்வயி ரவரை நோக்கியே. 27

1079. இக்கணங் கணங்களோ டேகி யாந்தரும்
கைக்கொள்சூ லத்தினாற் கண்ணன் மேவிய
மிக்கசே லுருவினை மாற்றி வேதநூல்
ஒக்கநீ கொணர்கென உரைத்தல் கேட்டலும். 28

1080. சென்றனன் வடுகனும் சிவந்த கண்ணொடும்
வென்றிகொள் படையொடும் வீரப் பல்லொடும்
குன்றன புயத்தொடும் குலவு பூணொடும்
என்றுறழ் குழையிரண்டு இலகு காதொடும். 29

1081. ஆழியின் கரையினில் அணுகி யஞ்சல்விணி
வாழும்விண் ணவர்க்கெலாம் வழங்கி மீனிரு
போமுறச் சூலவேல் பொருத்திக் கையினால்
ஏழிசைச் சுருதியும் எடுத்துக் கொண்டபின். 30

1082. சேலினார் செலுவினை யிடந்து செங்கையாற்
சூலியா வுடற்பணி யாகச் சூடிநன்
மாலினார் தம்மையும் வரவ ழைத்திட
நீலமே னியினொடு நின்றி றைஞ்சியே. 31

1083. பண்டைநல் லுணர்வொடும் பகரு வான்முனாள்
கொண்டஎன் சாபநோய் தீர்த்துக் கோதிலா

அண்டர்நா யகஉனக் கடிமை யாக்கினாய்
உண்டுகொல் யான்கைமா றுனக்கி யற்றவே. 32

1084. எனமிகு துதிபல இயம்பக் கேட்டலும்
மனமகிழ்ந் தரிக்குள மகிழ்ச்சி செய்துபின்
புனிதமா கியமறைப் புனிதர் தம்மொடும்
கனமிகு மான்முதற் ககனர் தம்மொடும். 33

1085. வந்தரன் மலரடி வணங்க யாரையும்
சந்திர சேகரன் தளிர்க்கை அஞ்சல்செய்து
உந்துமா மறையினை வாங்கி ஓகையாய்த்
தந்திருப் பதத்தினிற் தரித்துக் கொண்டனன். 34

வேறு

1086. அப்பொழுதில் அமரர்களும் அந்தணரும்
அடியவரும் அரவென் றார்த்து
மெய்ப்பொருளா கியபரமன் மலரடிமேற்
பலகாலும் விழுந்து போற்றி
எப்பிழைகள் செய்திடினும் பொறுத்தருள்செய்
பெரியோனே! யாங்கள் எய்தும்
பொய்ப்பவநோய் தீர்க்குமறை போதித்தாள்!
என்றுசொலிப் புகழ்தல் செய்வார். 35

1087. பிணைத்தமலர்த் தொங்கலிடும் அன்பருளம்
பிரியாத பிரானே! முன்னாள்
இணைத்தசரா சரங்களெல்லாம் ஈன்றுகாத்
தருள்புரியும் இறைவா! மிக்க
பணைத்தெழும்பூண் அதுலதன உமைபாகா!
தென்துறைசைப் பரனே! மானை
அணைத்தசந்திர சேகரஉன் பரிபுரத்தாள்
கமலமலர் அகத்துள் வைப்பாம்! 36

1088. மருளகற்றி இருள்புரக்கும் கருணையினாற்
தேவியொடும் மைந்த ரோடும்
தெருளுமருட் பூதகணச் செல்வரொடும்
சந்திரசே கரரு பங்கொண்டு
இருளகல்வித் தெமையாள் மாசிலா
மணிவடிவி லிருந்திங் கெய்தி
அருள்மிகுத்த தேரழுந்தூர் வந்திருந்தோன்
இருமலர்த்தாள் அகத்துள் வைப்பாம். 37

1089. இவ்வகைமா லயன்முதலோர் துதித்தருள்நூல்
வேதநெறி யாங்க ளெய்த
நவ்விமழு வேந்துசெங்கை நாதனே
அருள்செயென்று நவிலக் கேட்டுத்
திவ்வியசீ ரருள்நோக்கஞ் செய்துபிற்றை
நாளுமக்குத் தெரியும் வண்ணம்
எவ்வமில்லா மறைதருதும் எனவுரைத்தான்
எங்கும்நிறைந் திருக்கும் ஈசன். 38

1090. என்றுதவு மியருரைப்பக் கேட்டமிது
லேசன்மிகும் இறும்பூ தெய்தித்
துன்றுமயிர்ப் புளகமுறத் தொழுதுபர
வசனாகித் துதித்துச் சொல்வான்
குன்றனைய தவப்பெரியோய் பிருகுசா
பந்திருமால் கொண்ட செய்தி
இன்றெனக்கிங் கறியும்வகை யுரைத்தருள்செய்
யெனமுனியும் இயம்பு கின்றான். 39

1091. முன்னொருகா லத்திலொரு தானவனோ
டரியிகலி மூதிர்போர் செய்ய
அன்னவனாற் றாமன்மிகு தானையெல்லாம்
படக்கொடுத்தங் கஞ்சி யோடப்
பொன்னுறுமார் பினன்துரத்திச் செலும்போதில்
அவன்விரைந்து பொருவி லாத
பன்னியொடும் பிருகுமுனி மருவுபன்ன
சாலையினிற் பயந்து புக்கான். 40

1092. அப்பொழுது பிருகுமுனி ஆச்சிரமம்
விட்டகன்றோர் ஆற்றின் மூழ்கித்
தற்பணஞ்செய் வதற்கேக அக்காலை
மாயவனுஞ் சாலை புக்கு
முற்புகும்வல் லசுரனைத்தே டலும்வெருக்கொண்
டவன்பிருகு முனிவன் மேவும்
ஒப்பறுங்கற் புறுதேவிக் கடைக்கலமென்
றிடஅவனை உருக்கத் தோடும். 41

1093. அச்சுதன்கா ணாதவகை மந்திரத்தால்
வயிற்றில்அவள் அடக்கிக் கொள்ளத்
துச்சொடுமெண் ணாமலகங் காரமிகு
மதிகொடுதண் துளவோன் கையில்

நச்சியிடும் நேமியையே வலும்வயிற்றை
யீர்ந்தவனை நலிந்த போதிற்
பொச்சவிடைத் தேவியும்அங் கிறந்தனள்அக்
காலைமுனி புனிதத் தோடும். 42

1094. தண்டுகமண் டலம்பிடித்துக் குசையேந்திப்
போந்துதிகழ் சாலை மேவி
வண்டுறுபூங் குழல்மனைவி வயிறுகீண்
டுயிரிழந்த வடிவும் பாங்கிற்
துண்டமுறக் கிடந்திறந்த அசுரனையும்
நோக்கிமுனி துளக்க மெய்தி
அண்டமெலாம் வெந்துபொடி யாம்படிக்குக்
கோபஅனல் அகத்துட் கொண்டான். 43

1095. அதுகண்டு பயந்துடலம் நடுங்கிமா
யவனோட அறிந்து சீறி
மதிகொண்ட செஞ்சடையோன் தனையன்றி
ஒருவரையு மதியாத் தன்மை
பதிகின்ற தேஎனக்கு மெய்யாகில்
இதுசெய்தோன் பத்துச் சன்மம்
பொதிகொண்ட ஊனுடலம் எடுத்தலைக
எனச்சாபம் புகன்ற பின்னர். 44

1096. கரகநீர் தனைக்கரத்தி லள்ளிஅரன்
திருநாமம் கருத்தி லுன்னிப்
பொருவிலாப் பிருகுமுனி மாய்ந்துகிடந்
திடுமுடல்மேற் பொருந்தும் வண்ணம்
திருவருள்நோக் கால்நோக்கித் தெளித்திடலும்
உயிருறுநற் தேகம் பெற்று
மருவுதிருப் பன்னியெழுந் தடிபணிய
அரக்கனுமுன் வணங்கிப் போனான். 45

1097. செய்யாத செயல்புரிந்த மாலவனும்
முனிசாபஞ் செப்பக் கேட்டு
மையாரும் உடல்பதறிப் பயந்துவீழ்ந்
துரையொன்றும் வழங்கா னாகிப்
பொய்யாத உரைதரும்இச் சன்மதுக்கம்
வாராமற் போக்க வேண்டி
எய்யாமல் நெடுங்காலஞ் சிவனடியை
நினைந்துதவம் இயற்ற லுற்றான். 46

1098. அருந்தவமா லுறுவதுகண்டு ஐமுகச்செஞ்
சடைக்கடவுள் அவன்பா லெய்திப்
பொருந்துதவத் தோய்உனக்கு வேண்டும்வரம்
என்கொலென்று புகலப் போற்றித்
திருந்துதவம் பிருகுமுனி தருசாபம்
அகற்றெனவே செப்பக் கேட்டு
முருந்துநகை உமைகணவன் புகலுவான்
அருட்பிருகு முனிவன் நம்பால். 47

1099. பத்திமிகுந் திடும்அன்பன் ஆகையினால்
அவன்முனிந்து பகர்ந்த சாபம்
பொய்த்தகலா தனுபவிக்க வேண்டுமென
மால்கேட்டுப் புகல்வான் மிக்க
மத்தமுறும் பத்துருவங் கொண்டுதுய
றுற்றலகின் மயங்கி டாமல்
ஒத்திடும்அப் பவந்தொறும்நீ உடலகற்றி
ஆண்டருளென் றுரைப்பக் கேட்டு. 48

1100. நரருருவாய் ஐந்துபவம் நணுகிநமைப்
பணியவரும் நல்கு வேமைந்து
உருவமெமை யிகழ்விலங்காய் மருவிடஅவ்
உடலையுருத் துனக்கு நன்மை
தருகுவமென் றுரைத்துமுக்கட் தலைவனகன்
றிடஅவனாக் கினைதப் பாமற்
திருமறுமார் பன்பிறந்து வாமனனாய்
மாவெலிபாற் சென்று தானம். 49

1101. மூவடிமண் கேட்டிரந்து கொடுத்தநன்றி
விடுத்துலக முழுதுங் கொண்டு
மாவெலியைச் சிறையில்வைத்த தோடமறைக்
காட்டானை வணங்கித் தீர்ந்து
மேவுபல ராமவடி வாகியோ
கத்திருந்து விமலன் தன்னை
ஆவலுடன் கண்டுபணிந் தருள்பெற்றும்
பரசுடனே அவனி மீதில். 50

1102. இரேணுவயிற் றினிற்பரசு ராமராய்ப்
பிறந்துதந்தை இயம்புஞ் சொற்கேட்டு
அராகமொடு தாயையொறுத் தரசர்களைப்
பரசினால் அறுத்த பாவம்

புராதனநா யகனடியைப் பூசித்துத்
தீர்ந்தினிய போகம் பெற்றும்
பராவுபுகழ்த் தசரதற்கு ராமராய்ப்
பிறந்தவன்சொற் படிபோய்க் கானில். 51

1103. தாடகையைக் கரதூட ணாதிகளைக்
கலந்தனைமா ரீசன் தன்னைக்
கோடுறும்விற் சரத்தாற்கொன் றிராவணன்சீ
தையைச்சிறையிற் கொடுவைப் பப்போய்
பாடுறவா லியைவதைத்துப் பின்வருஞ்சுக்
கீரிவனுக்குப் பதியை ஈந்து
நீடுபுகழ்த் தம்பிஇலக் குவனொடும்வா
னரங்களொடும் நெடுநீர் வாரி. 52

1104. கரையணுகித் தூதுபோய் இலங்கையிற்றீக்
கொளுத்திவந்த காற்றின் சேயாற்
புரையறுங்கற் புறுஞ்சனகி இருத்தலறிந்
தணைகடல்மேற் பொருந்தச் செய்து
விரைவொடும்போய்க் கிளையினொடும் இராவணனைக்
கொன்றுதம்பி வீட ணற்கங்கு
அரசுகொடுத் தருட்சீதை யுடன்மீண்டு
சேதுவில்வந் தவரைக் கொன்ற. 53

1105. பிரமகத்தி தீரும்வகை கந்தமா
தனகிரியிற் பிரியத் தோடும்
பரமனைநற் திருமணலால் இலிங்கம்அமைத்
தருட்பூசை பரிவாற் செய்து
வரமிகக்கொண் டயோத்திநகர் தனிற்பொருந்தி
வாழ்ந்துபின்வை குந்தஞ் சேர்ந்தும்
பொருவரிய கிருட்டினனாய்ப் பிறந்துபெரும்
பாரதத்தைப் போக்க வேண்டி. 54

1106. பஞ்சபாண் டவர்களுக்கோர் தூதனாய்ச்
சகாயியாய்ப் பரிவு செய்து
வெஞ்சமரிற் துரியோத னாதியரைக்
கன்னனைவீட் டுமனை மற்றும்
தஞ்சமுறு படைமுழுதும் வெவ்வித்துப்
பூபாரந் தன்னை நீக்கி
இச்சொலுடன் துவரையிலெண் ணிரண்டுசகத்
திரமடவார் இன்புற் றப்பால். 55

1106. துவரை - துவாரகை.

1107. போகவெறுப் பொடுசித்த சுத்திமிகுந்
தரனடிபூசிக்க வேண்டிப்
பாகமிகும் அக்கமணி தரித்துநீ
றணிந்துசிவ பத்த னாகி
மோகமொடும் உபமனியர் தமைப்பணியக்
குருவாகி முன்பி ருத்தி
ஆகமுடன் ஆவிபொருள் மூன்றையுங்கொண்
டருவினைநோய் அகல நோக்கி. 56

1108. சிரத்தினிற்கை யமைத்துமிகும் அஞ்செழுத்தின்
உபதேசஞ் செவியிற் செப்பி
மருக்கமழும் பதமுடிமேல் வைத்துமிகும்
அருட்தீக்கை வழங்கப் பெற்றே
உருக்குமணி யுடன்கூடி நல்மகப்பெற்
றுலகினில்வாழ்ந் தும்பர் சேர்ந்தான்
அருட்குணஞ்சேர் மிதுலேசர் மற்றவைந்தின்
உருவகையும் அறையக் கேள்நீ. 57

1109. இரணியன்என் றோர்அரன் கனகநிறத்
துடன்வரத்தால் எவையும் பெற்று
முரணுறுமண் டங்களெல்லாம் ஆளும்போ
தாணவத்தின் மூர்க்கத் தாலே
பிரமம்யான் எனப்பிதற்றப் பிரகலா
தனன்எனுமோர் பிள்ளை தோன்றி
அரியலால் நீயலவென் றிகலஅவன்
எங்குளன்என் றறைத லோடும். 58

1110. எங்குமுளன் இத்தூணி னிடையுமுளன்
எனக்காட்ட எழுந்து சீறி
அங்கையினாற் றூணையடித் திடலும்நர
சிங்கமாய் அதனிற் தோன்றித்
துங்கமிகும் இரணியனைப் பிடித்துமா
லைப்பொழுது துடைமே லேற்றிப்
பங்குமுறக் கைநகத்தால் வயிற்றினைக்கீண்டு
உதிரமெல்லாம் பருகிற் றன்றே. 59

வேறு

1111. இரத்தம்நுகர் பொழுதுவெறி யுளத்தின் மிக்காய்
எழுந்திடவன் நரசிங்கம் இரைந்து பொங்கி
உரத்தினொடும் இருகையினால் அண்டப் பித்தி
உடைத்துழறி அமரர்முத லுயிரை யெல்லாம்

துரத்தியெடுத் துள்ளியள்ளி விழுங்கக் கண்டு
சோர்ந்துடலம் நடுங்கியுயிர்த் தொகுதி யெல்லாம்
புரத்தையெரித் துயிர்புரந்தோய் காவா யென்று
பொருமியழு தபயமிடப் புனித னோர்ந்து. 60

1112. விறல்வீர பத்திரன்தன் முகத்தை நோக்கி
விரைந்துநர சிங்கவுடல் வீட்டி வாவென்று
அறையுமுன மண்டமுக டிடிக்கு மெய்யும்
அங்காந்த வாயும்அனற் சிந்து கண்ணும்
மறையவிரு திசையடைக்குஞ் சிறகு நீண்டு
வளர்கழுத்தும் பூத்தலையு மலர்ந்த காதும்
திறன்மிகு மென் காலுமுள்ள சிம்பு ளாகிச்
சேணினிடை பறந்தெழுந்தான் தேவர் போற்ற. 61

1113. அதிகசினத் துடன்போய்மெய்ப் பொருளென் றோர்ந்தே
அப்பனையும் இழந்துநின்ற பிரக லாதன்
துதியினொடும் போற்றநர சிங்கந் தன்னைத்
தூக்கியெடுத் துதறியுடல் துடிப்பக் கொத்தி
முதிருநெடும் பகிரண்ட முகட்டில் வைத்து
மூளையுறு தலையறமெய் மூக்காற் கீறிச்
சிதறிவிழ ஊனையெல்லா மகற்றி யந்தச்
சிங்கத்தின் தோலுரித்துச் சிறப்பாய்ப் போர்த்து. 62

1114. நரசிங்க வுடல்மயக்கந் தீர்ந்து நின்ற
நாராய ணன்பரவ நன்மை கூறி
உரகசய னாபோவென் றனுப்பி வீரன்
உருக்கமொடு வந்துமைகோன் உபய பாதத்
திருவளர்பூங் கமலமலர் பரவ நோக்கிச்
சிந்தைமகிழ்த் தருட்கிருபை செய்தா னிப்பால்
மருமருவுந் துளபமுகில் கடலிற் கூர்ம
வடிவுகொண்ட வகைசிறிது வகுப்பக் கேள்நீ. 63

1115. துருவாசர் அரனடிபூ சித்துச் சாத்தும்
சுகந்தமலர் மாலையினைத் துலங்கு நாற்கோடு
உறுமயிரா வதப்பிடரிற் பவனி போதும்
உம்பர்கோன் கையில்மகிழ்ந் துதவ வாங்கிச்
செறிமதவெள் ளானைகையிற் கொடுப்பக் கீழே
சிந்திமிதித் திடமுனிவன் சீறிப் பார்த்துப்
பொறியில்லா உனதுசெல்வக் களிப்பெல் லாம்போய்ப்
புணரிபுக வெனச்சாபம் புகன்றிட் டானே. 64

1116. இலையுதிர்த்த மரம்போல்விண் வறுமை யெய்த
இந்திரனும் அமரர்களும் இரங்கி யோடிக்
கலைமிகுந்த வேதனொடுஞ் சென்ற மாயன்
கழல்வணங்கி அவையுரைப்பக் கண்ணன் கேட்டுப்
பலமிகுத்த மந்தரத்தை வயின தேயன்
பறித்துவர வாசுகியைப் பிணித்துத் தாம்பாய்
அலைமிகுத்த கடல்கலக்கி அமுத மாதி
அனைத்துமெடுத் திடநினைந்தோர் ஆமை யாகி. 65

1117. கடலினுக்குள் அடைகல்லாய் மலையைத் தாங்கக்
கடவுளரும் அசுரர்களும் கடையும் அந்நாள்
படம்விரித்தாற் றாமல்விடம் பாம்பு கக்கப்
பயந்தெவரும் அரற்கபயம் பகரக் கேட்டுக்
கடுவெடுத்து விழுங்கிஅவ ருயிரைக் காத்துக்
கடைந்தமுதம் எடும்போமென் றருளக் காவற்
திடமிகுத்தோன் பின்னுமந்த ஆமையாய்க்கீழ்ச்
சென்றுமலை யெடுத்தேந்தத் தேவ ரெல்லாம். 66

1118. கடைந்திடும்போ தமுதமுதற் செல்வ மெல்லாம்
கடலின்மீ தெழவெடுத்துக் கமட மாலும்
கடர்ந்தசடை யோனுதவி மறந்து நானே
பாரினுக்கா தாரமென்று பகர்ந்து கூர்ம
உடம்பொடும்விண் ணோர்களுடன் அகந்தை பேசி
உளறும்போ துமைபாக னுணர்ந்து மிக்க
தடம்படுநீள் விகடசக்கர மகவை யேவித்
தகர்த்தாமை யோடெடுத்துத் தரித்தா னன்றே. 67

1119. எழுதலமும் ஓரசுரன் கொடுபோ மந்நாள்
இரும்பன்றி யாய்மால்போய் எதிர்த்துக் கொன்று
பழுதறுநற் தலமுழுதுங் கொம்பி லேற்றுப்
பண்டுபோல் நிறுவிவிண்ணோர் பணிய யானே
தொழுதுலகம் இறைஞ்சநின்ற சோதி யென்னத்
துண்டமதிச் சடையுடைய சுவாமி யோர்ந்து
வழுவறுகா ரியையேவ வேட னாய்ப்போய்
வராகத்தைக் கொன்றதன்கூர் மருப்பை வாங்கி. 68

1120. கூன்பிறைத்தா மம்போலக் கோர்த்து முன்னே
கொண்டுவந்து வைத்திருகை குவித்து நிற்பத்

1116. வயினதேயன் - கருடன். 1118. கூர்மம் - ஆமை
1119. காரி - வயிரவர் 1120. தாமம் - மாலை. பரி - குதிரை - கல்கி.

தேன்பிலிற்றுங் கொன்றையணி மார்பன் வாங்கிச்
செழும்பூணாய்த் தரித்தனன்சேல் செய்தி சொன்னோம்
ஊன்பொருந்தும் பவமொன்ப தகற்றி மாலும்
உளங்களித்தான் இனிப்பரியா யுறுவ னுற்றான்
மான்பிடித்த கரக்கடவுள் என்செய் வானோ
மன்னனே எனவுரைப்ப மிதுலன் கேட்டு. 69

வேறு

1121. சிந்தையுள் மகிழ்ந்து தவுமிய ரான
தேசிக நாதனே இனிநீ
சந்திர மௌலி நூபுரத் தணிந்த
சதுர்மறைப் பொருளினை விரித்துச்
சுந்தர மலரோன் மால்முதல் எவர்க்குஞ்
சொல்லிய வகைஇயம் பென்னப்
பந்தமி லாத முனிமிது லேசன்
பண்பொடுங் கேட்டிடப் பகர்வான். 70

இருபத்தொன்பதாவது
சோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1121

திருச்சிற்றம்பலம்

29. சோமுகனைச் சங்கரித்து வேதம் வரவழைத்த அத்தியாயம் (சுருக்கம்)

துறைசையில் எழுந்தருளியுள்ள மாசிலாமணிப் பெருமான் திருவருளினால், திருமால், நான்முகன் மற்றுமுள்ள தேவர்கள் அனைவரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று எல்லா வளங்களையும் அடைந்து மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது, பூவுலகில் அந்தணர்கள் யாகம் செய்து வேத மந்திரத்தால் அவிர்ப்பாகம் கொடுப்பாரில்லாமல் இருப்பதைக் கண்ட தேவர்கள் மிகுந்த வருத்தமுற்றனர்.

அக்கினி முதலான தேவர்களும் முனிவர்களும் இந்திரனிடம் சென்று தத்தம் துன்பங்களை எடுத்துக் கூறினர். இந்திரன் அனைவருடன் பிரமனுலகை அடைந்து பிரமனிடம் உரைத்தான். பிரமனும் இந்திரனைப் பார்த்து, 'உயிரில்லாத உடம்பைப் போல வேதம் பயிலாத உடல்கொண்டு அநுபவிக்கும்

போகமும் ஒரு போகமா? அல்ல; எனவே, இறைவனுடைய ஆணையைக் கொண்ட திருமால் இதற்கு முயற்சி செய்வார். நாம் அவரிடம் சென்று முறையிடுவோம்' என்று கூறினார். அவ்வாறே அனைவரும் திருமாலைக் கண்டு வணங்கினர்.

தேவர்களின் வேண்டுகோளைக் கேட்ட திருமால், 'இவ்வளவு காலதாமதம் ஏன் செய்தீர்கள். மாசிலாமணிப் பெருமான் திருவருளால் கடலினுள்ளே சென்று மறைகளை வெளியே கொண்டு வரவேண்டும்; அனைவரும் என்னுடன் வாருங்கள்' என அழைத்து, சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள் இவற்றைக் கைகளில் ஏந்தி, கருடன் மீதேறி, கடற்கரையை வந்தடைந்தார்.

அங்கு, வருணனை அழைத்த திருமால், 'இக்கடலுள் வேதங்களைக் கொண்டு ஒளித்திருக்கும் சோமுகாசுரன் எங்கு ஒளிந்திருக்கிறான்' என்று கேட்டார். ஆயிரம் யோசனைக்கப் பாலுள்ள நூறு யோசனை தூரமுள்ள நிலத்துக்குள்ளேயுள்ள நாகமலையின் ஒரு பக்கத்தில் மறைகளுடன் சோமுகாசுரன் ஒளிந்திருக்கின்றான் என்ற செய்தியை வருணன் திருமாலிடம் தெரிவித்தான்.

இதனைக் கேட்ட திருமால், கடலைக் கலக்கிய மந்தர மலையைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான கனமும் உயரமும் கொண்ட ஒரு மீன் உருவாய்க் கடலுள் குதித்து அமிழ்ந்து உள்ளே சென்றார். அப்பொழுது அம்மீனின் வாலினால் அடித்த நீர்த்துளிகள் ஆகாயத்தின் முகட்டை அடைந்தன. மூச்சுக் காற்றால் நுரையானது - குமிழியானது மேலே கிளம்பவும், திமிங்கிலம் முதலான மீன்கூட்டங்கள் கருவுடன் மயங்கும்படியாகவும் வளைந்து உள்ளே சுற்றியது அம்மீன்.

இவ்வாறு மிகுவேகமாகச் சென்ற மச்சமாகிய திருமால், சோமுகாசுரன் இருப்பிடத்தை அடைந்தார். மீன் தன் கூர்மையான பற்களால் நாகமலையை அறுத்து, உள்ளே சென்று சோமுகாசுரன் கழுத்தைத் துண்டித்து, நெஞ்சைக் கீறி, உள்ளே இருந்த மறைகளையெல்லாம் எடுத்துத் தன் நாவினில் வைத்து, கடலின் மீது மிதந்து கரையை அடைந்தது. நான்முகன் முதலான தேவர்கள் அனைவரும் மகிழ்ந்து வணங்கித் துதித்தனர். 'தாமரைக் கண்ணா! பூமகளைக் கூடிய மேக வர்ணா! கோவிந்தா! மறைகளைக் காத்து எடுத்து வந்து

எங்களைக் காப்பாற்றினாய்! இனி உமக்கு ஒப்புமை கூறவும் முடியுமோ? என்று புகழ்ந்து கூறி மகிழ்ந்தனர்.

தேவர்களின் புகழ்ச்சி மிகுந்த பேச்சுக்களால் திருமால் உள்ளத்தில் மயக்கம் மிகுந்தது. மேலும், முன்பு பிருகு முனிவர் அளித்த சாபத்தால் உண்மையறிவும் மறந்து அழிந்தது. அவர் இறைவனையும் மறந்து 'நான்', 'எனது' என்னும் அகந்தையை அடைந்தார். தேவர்கள் அனைவரும் திருமாலைப் பார்த்து, 'மச்ச உருவை விடுத்து வாரும், இறைவன் திருவடி வணங்குவோம்' என அழைத்தனர். ஆயின், திருமால் மயக்க மிகுதியால் சினமுற்றார்.

''எல்லா உலகங்களையும் காத்தருளுகின்ற நான் ஒருவனே அல்லாமல் எனக்கு மேல் ஒரு தலைவரும் உள்ளாரோ? மறைகளை இப்பூமியிலே நிலைநிறுத்தி உங்களுக்கு வேண்டிய பலனையும் அருளுகின்றோம். எல்லாரும் என்னை வணங்குங்கள்'' என்று திருமால் தேவர்களைப் பார்த்துக் கூறினார்.

திருமாலின் சொற்களைக் கேட்ட தேவர்கள் மிகுந்த அச்ச முற்றனர். அவர் இப்படிக் கூறியதன் காரணம் என்ன என எண்ணி வியந்தனர். கோமுத்திநாதனை எண்ணித் துதித்தனர். இறைவனும் திருவுளங் கொண்டு, இடபவாகனமேறி, பூதர்கள் சூழந்துவர தேரழுந்தூருக்கு வந்தார். அங்குள்ள வயிரவரைப் பார்த்து, 'இப்பொழுதே பூதகணங்களுடன் சென்று யாம் கொடுக்கும் சூலத்தினால் திருமாலின் மச்ச உருவை மாற்றி மறைநூல்களைக் கொண்டு வருக' என ஆணையிட்டார்.

இறைவனுடைய ஆணையின்படி வடுகனும் சிவந்த கண்களோடும் படையோடும் சூலத்துடனும் சென்று, கடற்கரையை அடைந்து அம்மீனைச் சூலத்தால் பிளந்து மறைகளையெல்லாம் எடுத்தார். பின்பு, மீனினுடைய செதில் களைக் கிழித்துக் கொடியாகச் சூடினார். பின்னர், திருமாலும் பழைய நல்லுணர்வோடும் நீலமேனி வண்ணனாகத் தோன்றினார்.

திருமால் தம் சாபநோயைத் தீர்க்க வேதநாயகனே முன் வந்து ஆட்கொண்டதை எண்ணி இறைவனைப் பலவாறு துதித்தார். வயிரவரும் கேட்டு மகிழ்ந்தார். அனைவரின் துதிகளை அன்புடன் ஏற்று சந்திரசேகரனாகிய இறைவன் மறைகளைத்

தம் திருவடிகளிலே தரித்துக் கொண்டார். தேவர்களும் அந்தணர்களும் அடியார்களும் அரகர ஒலியுடன் சிவபெருமானுடைய திருவடிகளிலே விழுந்து வணங்கினர். இறைவனும் அவர்களுக்கு அருளாசி வழங்கினார்.

இவ்வாறு தவுமிய முனிவர் கூறியதைக் கேட்ட மிதிலேசன், பிருகு சாபத்தினைத் திருமால் கொண்ட வரலாற்றை விளக்குமாறு அவரிடம் வேண்டினான். முனிவரும் அதைக் கூறத் தொடங்கினார்.

முன்பொரு காலத்தில் திருமால் ஓர் அசுரனுடன் போரிட்ட போது, அவன் அஞ்சி ஓடினான். திருமால் அவனைத் துரத்திச் சென்றார். அசுரன் பிருகு முனிவரின் பன்னகசாலையில் புகுந்தான். அப்போது முனிவர் நீராடச் சென்றிருந்தார். அசுரன், அங்கிருந்த பிருகு முனிவரின் மனைவியிடம் அடைக்கலம் புக வேண்டினான். அம்முனி பத்தினியும் மந்திரத்தால் அவனைத் தன் வயிற்றில் அடக்கி மறைத்தாள். அசுரனைத் தேடி வந்த திருமாலுக்கு இது தெரிந்து, முனிவரது மனைவியின் வயிற்றைத் தம் சக்கராயுதத்தால் பிளந்து, அவ்வசுரனையும் கொன்றார். இதனால் அம்முனிபத்தினியும் இறந்தாள்.

நீராடிவிட்டு வந்த பிருகுமுனிவர் தம் மனைவியும் அசுரனும் இறந்து கிடப்பதைக் கண்டார். இதற்குக் காரணம் திருமால் என அறிந்ததும் மிகுந்த கோபமுற்றார். இதனால் திருமால் மிகவும் நடுங்கினார். பிருகுமுனி சாபங் கொடுக்க முனைந்தார். 'சிவபெருமானை அன்றி வேறு ஒருவரையும் மதியாத் தன்மையை நான் அடைந்திருப்பது உண்மையானால், இச்செயலைச் செய்தவன் பத்துப் பிறவிகள் எடுத்து அலையக் கடவன்' என்று சபித்தார். பின்பு, இறைவனைத் துதித்துக் கமண்டல நீரை இறந்த உடல்கள் மீது தெளித்த முனிவர் தம் மனைவியையும் அவ் அசுரனையும் உயிர் பெற்றெழச் செய்தார்.

முனிவருக்கு இழைக்கக்கூடாத செயலைச் செய்துவிட்ட திருமால் அதற்காக வருந்தினார். சிவனடியைச் சிந்தித்து சாப விமோசனம் தேடினார். அதற்காக இறைவனை வேண்டினார். 'பிருகுமுனிவரின் கோபமும் சாபமும் பொய்க்காது எனவே அதை அநுபவித்தேயாக வேண்டும் என இறைவனும் திருமாலிடம் எடுத்துரைத்தார். இதைக் கேட்ட திருமால், அவ்வாறு தாம் பத்துப் பிறவிகள் எடுத்து உலகில் துன்பப்

படும்பொழுது இறைவனே வந்து தம்மை ஆட்கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தார். அதற்கு இறைவனும், 'மனித உருவாய் ஐந்து பிறவியும், விலங்காய் ஐந்து பிறவியும் எடுப்பாய்; அப்பொழுது உன்னை ஆட்கொள்வோம்' என அருளினார்.

இவ்வாறு இறைவனுடைய ஆணை தப்பாமல் திருமால் பத்துப் பிறவிகள் எடுக்கலானார். வாமனாவதாரமாக மகாபலி யினிடத்திற் சென்று மூன்றடி மண் இரந்து, அவன் கொடுத்த நன்றியை விடுத்து, உலக முழுவதும் பெற்று, மாவெலியைச் சிறையில் வைத்த பாவமானது திருமறைக்காட்டானை வணங்கினமையால் தீர்ந்தது.

திருமால் பலராமர் வடிவாகி யோகத்திருந்து இறைவனைக் கண்டு பணிந்து அருள் பெற்றார். பரசுராமராய்ப் பிறந்து தந்தைசொற் கேட்டுத் தாய் இரேணுகாவை வெட்டி அரசர் களையும் பரசினால் கொன்ற பாவம் இறைவனடியைப் பூசித்துத் தீர்ந்து இனிய போகம் பெற்றார்.

இராமனாகப் பிறந்து, தந்தை தசரதர் சொற்படி காட்டிற்குச் சென்று, கரதூடணர்களைக் கவர்ந்தும் மாரீசனைக் கொன்றும், வாலியைக் கொன்றும், வானரங்களோடு இலங்கை சென்று இராவணனைக் கொன்றும், விபீடணனுக்கு அரசு கொடுத்தும், சீதையை மீட்டு வந்தார். இராவணனாதியர்களைக் கொன்ற பிரமகத்தி தோடம் தீரக் கந்தமாதனகிரியில் பரமனை மணலால் இலிங்கம் அமைத்துப் பூசை செய்து பெரும் வரம் பெற்றார். பின்பு அயோத்தியில் வாழ்ந்து வைகுந்தம் அடைந்தார்.

கண்ணனாகப் பிறந்து பஞ்ச பாண்டவர்களுக்குத் தூதனாகவும் உதவியாகவும் இருந்து துரியோதனன், கர்ணன், பீஷ்மன் மற்றும் படையையும் கொன்று குவித்துப் பூமி பாரத்தைப் போக்கினார். துவாரகையில் பதினாயிரம் ஆண்டு இன்பமுற்று, பிறகு போகத்தில் வெறுப்படைந்து, சித்த சுத்தி யுடன் அரனடியைப் பூசிக்கப் பக்குவமடைந்து, அக்கமாலை, வெண்ணீறு இவை தரித்து சிவபக்தனாகி உபமன்யு முனிவரை ஆசாரியனாக அடைந்து ஐந்தெழுத்து உபதேசம் பெற்றார். பின்பு உருக்குமணிதேவியுடன் சேர்ந்து கூடி நன்மகவையும் பெற்று பலகாலம் வாழ்ந்து விண்ணுலகு அடைந்தார்.

மேற்கூறிய ஐந்து மனித உருவான அவதாரங்களேயன்றி மேலுமுள்ள ஐந்து பிறவிகளைப் பற்றியும் கூறுகிறோம் எனத் தவுமியர் தொடர்ந்து கூறினார்.

இரணியன் என்ற ஓர் அசரன் தவத்தால் வரம் பெற்று அண்டங்கள் எல்லாவற்றையும் ஆண்டான். ஆணவ மிகுதியால் யானே பிரமம் என்று அனைவரையும் அடக்கி ஆண்டான். அவனுடைய மகனான பிரகலாதன் 'திருமாலே அல்லாமல் நீ இறை அல்ல' என்று மாறுபடக்கூற, 'அவன் எங்குளன்' என்று இரணியன் கேட்டான். 'அவன் எங்கும் இருக்கின்றான். இத்தூணினிடையிலும் உளன்' என்று பிரகலாதன் கூறினன். உடனே சினமுற்ற இரணியன் சீறித் தூணை உதைத்தான். அக்கணத்தில், தூணிலிருந்து திருமால் நரசிங்கமாய் வெளிப்பட்டு, இரணியனைப் பிடித்து, மாலைப்பொழுதிலே தம் துடையில் வைத்து, தம் கை நகங்களால் வயிற்றைக் கிழித்து, இரத்தம் எல்லாவற்றையும் குடித்தார். இதனால் வெறிமிகக் கொண்ட நரசிங்கத்தைக் கண்டு அனைவரும் அச்சமுற்றனர். இறைவனிடம் உயிர்கள் தஞ்சம் புகுந்தன.

இறைவன் உடனே வீரபத்திரரை அழைத்து, நரசிங்கத்தை அழித்து வர ஆணையிட்டார். உடனே அவர், அண்டத்தை முட்டும்படியான உடலையும், திறந்த வாயையும், நெருப்புக் கனல் பறக்கும் கண்களையும், சிறகுகளையும், நீண்ட கழுத்தினையும், எட்டுக்கால்களையும் கொண்ட சரபப் பறவையாக மாறி, நரசிங்கத்தைக் கொன்று அதன் தோலை யுரித்துப் போர்த்தருளினார்.

ஒருமுறை துருவாச முனிவர் இறைவனைப் பூசித்துச் சாத்திய மலர் மாலையை, இந்திரன் வெள்ளை யானையின் மேலே பவனி வரும்போது அவன் கையில் கொடுத்தான். அவன் அதை வாங்கி ஐராவதத்தின் கையில் கொடுத்தான். அது, அம்மாலையைக் கீழே சிந்தி மிதித்தது. இதைக் கண்ட முனிவர் கோபமுற்றார். இந்திரனைப் பார்த்து, 'உன்னுடைய செல்வக் களிப்பெல்லாம் போய் கடலில் அமிழ்ந்து கிடக்கட்டும்' என்று சாபமிட்டார். இதனால் தேவருலகம் வறுமையை அடைந்தது. தேவேந்திரனும் தேவர்களும் ஓடிச்சென்று திருமாலை வணங்கினர். உடனே திருமால், மந்தரமலையைக் கருடன் பறித்து வரும்படிச் செய்து, வாசுகியைக் கயிறாகப் பிணித்துக் கடலைக் கலக்கி, அமுதம் முதலான எல்லாவற்றையும் எடுக்க

முற்பட்டார். தாமே ஓர் ஆமை உருவமாகிக் கடலுக்குள்ளே அம்மந்தர மலையைத் தாங்கி நின்றார். தேவர்களும் அசுரர்களும் கடையும்போது வாசுகியானவன் தாங்க மாட்டாமல் நஞ்சினைக் கக்கினான். அதுகண்டு அனைவரும் பயந்து நடுங்கி இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். இறைவன் அந்த நஞ்சை எடுத்து உண்டு, அவர்களை யெல்லாம் காத்தார். பின்பு அமுதம் முதலான செல்வங்கள் எல்லாம் கடலின் மீதே வர அவற்றை எடுத்துக் கொண்டு ஆமையாகிய திருமால் மகிழ்ச்சியால் மயக்கம் மிகுந்தார். இறைவனுடைய உதவியை மறந்தார். தாமே இவ்வுலகத்துக்கு ஆதாரம் என்று தேவர்களிடம் அகந்தை யாகப் பேசினார். இதனை அறிந்த இறைவன் விகடசக்கர விநாயகனை விடுத்து அந்த ஆமையைக் கொன்று அதன் ஓட்டை எடுத்து அணிந்து கொண்டார்.

ஒரு முறை ஏழு உலகங்களையும் ஓர் அசுரன் கொண்டு போனபோது, திருமால் பன்றி உருவமாகிச் சென்று அந்த அசுரனைக் கொன்று அவ்வேழு தலங்களையும் தம்முடைய கொம்பிலே ஏற்றிக் கொண்டு வந்து நிறுத்தினார். அது கண்டு தேவர்களெல்லாம் துதித்தனர். இதனால் அகந்தை அடைந்த திருமால், நானே உலகத்தவர் வணங்கும் ஒளிவடிவானவன் என்று கூறினார். இதை அறிந்த இறைவன் வயிரவரை வேடனாக அனுப்பி அப்பன்றியைக் கொன்று அதன் கொம்பை எடுத்து வந்து அணிந்து கொண்டார்.

இவ்வாறு திருமால் ஒன்பது அவதாரங்களையும் எடுத்து இறைவன் அருளால் நீங்கப் பெற்று மனம் மகிழ்ந்தார். இனி, கல்கி (குதிரை) அவதாரமாவார் என்று தவுமிய முனிவர் கூறினார். இனி, இறைவன் தமது திருவடிகளில் அணிந்த வேதங்களை விரித்துத் திருமால் முதலிய அனைவருக்கும் உரைத்ததைக் கூறுங்கள் என மிதிலேசன் கேட்கவும் தவுமிய முனிவர் சொல்லத் தொடங்கினார்.

முப்பதாவது
சந்திரசேகரர் வேதாத்தியானம் உரைத்த அத்தியாயம்

1122. வேதன்மால் மகவான் முதலிய சுரரும்
மிகுமுனிக் கணங்களு முலகத்து
ஆதிமா மறையோ ரனைவரும்
அழுந்தூர் அமலர்சந் நிதியின்முன் குழுமிப்
போதனே நென்னல் வேதமின் றெமக்குப்
புகலுது மென்றருள் புரிந்த
நீதிசேர் கருணை மொழிப்படி நிகழ்த்தி
நெறியெமக் களித்தியென் றிரப்ப. 1

1123. இலிங்கத்தி லிருந்தோர் உபாத்தியார் வடிவாய்
இலங்குமுந் நூற்றிரு மார்பும்
கலிங்கவென் கோம னுடையுமுத் தரிகக்
கவினுஞ்சந் திரோதைய முகமும்
பொலன்குழைச் செவியுஞ் சிகையுங்கண் டிகையும்
புத்தக மேந்துபூங் கரமும்
துலங்குவெண் ணீற்று நெற்றியும் திலகச்
சோதியும் சிறந்தபுன் னகையும். 2

1124. பாதுகை மீது பதிந்தசெங் கமலப்
பாதமும் கருணைநோக் கமுங்கொண்டு
ஓதுவிப் பவர்போல் வந்தொரு மணிமண்
டபத்தினில் உயர்ந்தஆ சனத்தின்
மேதக விருந்து பார்த்தபேர்க் கெல்லாம்
வேறுவே றுருவங்கள் காட்டிக்
கோதிலான் தனித்து விதிக்குமுன் பறிக்கக்
கொடுத்தவே தங்களும் அருளி. 3

1125. சத்தியோ சாத முகத்தினா லவற்குத்
தனிலவு கீகஞா னமுமீந்து
அத்தமுஞ் சிரத்தில் வைத்தபின் மாலை
அன்புடன் வரவழைத் தவற்குச்
சுத்தமாய் வாம தேவநல் முகங்கொண்
டிருந்துநற் சுருதியும் அருளிப்
பத்தியார் கின்ற வைதிக ஞானம்
பகர்ந்துகைம் மலர்சிரம் பதித்து. 4

1123. உபாத்தியார் - ஆசாரியன்.

1126. இந்திரன் முதல்வா னவர்களுக் கயன்மால்
இருவராற் சுருதிமந் திரங்கள்
தந்திர மாகப் பகர்ந்திட வனுக்கை
சாற்றிநற் தவமுனி வருக்குச்
சிந்தைசெய் திடஅத் தியாத்மஞா னத்தைச்
சிலர்க்கயோ ரத்தினாற் சனிப்பித்து
அந்தமி லாத்தற் புருடத்தாற் சிலருக்கு
அதிநெறி ஞானத்தை அருளி. 5

1127. ஆகம நெறிசேர் பாகமுற் றுடைய
அருளுறுஞ் சத்திநி பாதர்க்கு
ஓகையோ டிருபத் தெண்கொளா கமத்தின்
உற்றுள மூவகைக் கலையும்
தாகமோ டாறுட் சமயிகட் கருளித்
தகுங்குரு பரம்பரை கொடுத்துப்
போகமும் வீடும் சுருதியா கமத்திற்
பொருந்தினோர்க் கீவதும் புகன்று. 6

1128. அங்கமோ ராறு மிருதிநற் புராணம்
அனைத்துமெண் ணென்கலை யதுவும்
பொங்கிய வேதா கமவழி சார்பாய்ப்
பொலிந்திட யாவர்க்கும் அருளி
எங்கும்நல் லாணை நியதியும் நிறுத்தி
இகபர பலன்களும் உதவிச்
சங்கரன் எழுந்து லிங்கத்தில் மறைந்து
சந்திர சேகர வடிவாய். 7

1129. காளைவா கனத்தின் மீதுகந் தினிய
கவுத்துவ மணிப்புயன் தனைப்பார்த்து
ஆளுமன் பொடுநம் ஒப்பிலா முலைகோ
வாய்அரம் பையரொடும் வருநாள்
நீளிருங் குழலி னிசைபயின் றதனால்
நீஇங்குங் கோயில்கொண் டிருந்து
நாளுமா மருவி முகுந்தனாய் வாழ்கென்
றறைந்துநல் அமரர்க ளுடவே. 8

1130. தேரழுந் தூரிற் தானிறைந் திருக்குஞ்
செய்கையு முரைத்துவெள் விடைமேல்
நீருறு தடஞ்சூழ் கோமுத்தி நகரில்
நேசமொ டெழுந்துவந் திருந்தான்

1128. எண்ணெண்கலை - அறுபத்து நான்கு கலை.

ஆரணம் அருளா கமவிதி முதலாம்
அனைத்தும்யா வருமுணர்ந் ததனாற்
தாரணி முதலெவ் விடத்தும்நன் னெறிகள்
தழைத்திடச் செய்தனர் தவங்கள். 9

1131. சத்தியோ சாத முகத்தினா லுபதே
சம்பெறு சிலதவ முனிவர்
சித்திசெய் திடும்நற் தவத்தொடுங் கங்கா
தீரத்திற் சரித்தனர் அகோர
மெய்த்திரு முகத்தாற் கேட்டபேர் சிலர்கள்
வெதிநிகாச் சிரமத்திற் தவஞ்செய்து
ஒத்திருந் தனர்தற் புருடநல் முகத்தா
லுறுமறை கேட்டுளோர் சிலர்கள் 10

1132. காணுறும் பஞ்ச வடியிடத் திருந்தார்
கலைகள்வா மந்தரக் களித்தோர்
தேனுறு மினிய பொழில்புடை சூழ்ந்து
சிறந்தகே தாரமுற் றனர்கள்
ஈனமில் கோதா வரியமு னைஈ
சானத்திற் பெறுமவ ரிசைந்தார்
வானுறு மவரு மவரவ ரிடத்தில்
வதிந்தனர் மறைவழி வழாமல். 11

1133. காவிரி வேக வதிசிந்து நதியா
தியதலஞ் சேர்கலை மறையோர்
சோர்விலா உபதே சம்பெறும் பொழுது
சுருதிக ளறுபதா வர்த்தி
ஆவதா லதிலொன் றொன்றிலா யிரம்பேர்க்கு
அனுக்கிரக கஞ்சொலும் படிக்குத்
தாளிலா நெறிகொண் டிருந்தனர் இனிய
தவத்தொடுஞ் சந்ததித் தொடர்பாய். 12

1134. ஆகம முறையாற் சிவாலய முழுதும்
அருநிவே தனமபி டேகம்
சேகறு விழவு முதலிய சிறப்பும்
சிவனடி யார்களுக் கிதமும்
பாகமார் மறையோர்க் கறுதொழில் நடக்கும்
பண்பும்நற் குடிகளோம் புதலும்
ஊகமோ டரசர் மனுநெறி வழாமல்
உஞற்றலால் மிகுசிறப் புடைத்தாய். 13

1131. வெதிநிகாச்சிரமம் - பதரிகாச்சிரம்.

1135. அசுவமே தமுஞ்சீரி ராசசூ யமும்நல்
அக்கினிட் டோமவா குதியும்
பசுவுறு சோம யாகமெய் வாசு
பேயநற் பவுண்டரீ கத்தோடு
இசைவுள யாக வனியங்கா ருகபத்
தியமிகு தென்திசை யங்கி
நசையொடுந் தேவர் முனிவர்மா னுடர்கள்
நாள்தொறும் முறைநெறி நடாத்த. 14

1136. சோடச தான மிகுந்திடச்
சோம வாரமே முதலிய விரதம்
பீடுறச் சைவ சமயநன் னெறிகள்
பெருகிடச் சாத்திக குணமே
நீடுறு நவபுண் ணியந்தழைத் தோங்க
நித்திய நயிட்டிகம் வளரத்
தேடறும் பூதி சாதன மலியத்
தேவர்கள் பூசனை சிறப்ப. 15

1137. ஆதுல ரோது வோர்சிறை யுறுவோர்
அறுசம யிகள்கன மருத்தன்
நீதிசேர் பசுவின் வாய்க்குறை கொடுத்தல்
நிகழறப் பிணஞ்சுடு வித்தல்
பேதையர் கருவுக் குதவல்தா யில்லாப்
பிள்ளைகள் வளர்த்தல்பால் கொடுத்தல்
ஓதுகண் மருந்து நோய்மருந் துதவல்
ஓலைகண் ணாடி எண்ணெய் உதவல். 16

1138. பிறரறங் காத்தல் மணம்புரி வித்தல்
பிறங்குதண் ணீர்ப்பந்தல் மடங்கள்
குறைவறு தடாகங் கூவல்கா வியற்றல்
குணமொடு சாலைக ளமைத்தல்
கறவையா னுரிஞ்சு தறிவிலங் குணவு
புரிகுதல் காளைகள் விடுத்தல்
நிறைபொருள் கொடுத்துக் கொலையுயிர் விடுத்தல்
நிகழ்கலை சத்திரம் அளித்தல். 17

1139. தூசொலிப் பவரை மயிர்வினை ஞரைநற்
சுகமுறக் காத்ததின் பண்டம்
ஆசற விச்சித் தோர்களுக் குதவல்
ஆதிய அறங்கள்செய் திடுதல்

பேசுபொய் களவு கொலைகள்ளு நுகர்தல்
பேரருட் குருநிந்தை முதலாம்
மாசுறு தீமை செய்திடா தொழுகி
மன்னும்இல் லறங்கள்செய் திருத்தல். 18

1140. தென்புலத் தவர்கள் தேவர்நல் விருந்து
திகழ்தரு மொக்கல்தா னைந்தும்
இன்புற ஓம்புந் தலைமைபெற் றிடுதல்
ஈசன்மெய்த் தொண்டர்க ளேவல்
அன்புடன் புரிந்து சிவதரு மங்கள்
அவர்சொன்ன படிபல இயற்றல்
மன்பெரு முலகின்மிகுத்தலாற் செல்வ
மலிந்துவான் பெயல்களு மலிந்து. 19

1141. அவமிருத் தருநோய் வறுமையா தியதுன்
பகன்றிட யாவரும் மகிழ்ந்து
சிவனருள் மறையா கமநெறி நடந்து
திகழிரு மையுஞ்சுக மருவிப்
பவமக றவமே பெருகிவாழ்ந் தனர்மேற்
பண்புறு துறைசைநன் னகரிற்
கவின்மிகும் அமரர் சித்திரை விழவு
களிப்புறச் செயும்வகை உரைப்பாம். 20

முப்பதாவது
சந்திரசேகரர் வேதாத்தியானம் உரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1141

திருச்சிற்றம்பலம்

30. சந்திரசேகரர் வேதாத்தியானம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

நான்முகன், திருமால், இந்திரன், தேவர்கள், முனிவர்கள் மற்றும் உலகிலுள்ள ஆதி சைவ அந்தணர்கள் போன்ற அனைவரும் தேரழுந்தூரில் எழுந்தருளியுள்ள இறைவனின் சந்நிதியில் கூடி, வேதத்தை உபதேசித்தருளுமாறு இறைவனிடம் வேண்டினர்.

இறைவன் இலிங்கத்திலிருந்து ஓர் ஆசாரிய வடிவத்துடன் வந்து ஓதுவிப்பாரைப் போன்ற தோற்றம் கொண்டு,

அழகியதோர் மண்டபத்திலுள்ள ஓர் உயர்வான இருக்கையில் அமர்ந்தருளினார். பிரமனுக்குத் தனியே வேதங்களை உபதேசித்து, சத்தியோசாத முகத்தினால் அப்பிரமனுக்கு இலெளகீக ஞானமும் அளித்துத் தம் கையை அவர் தலையில் வைத்தருளினார்.

பின்னர், இறைவன் திருமாலை அன்புடன் அழைத்து வாமதேவ முகத்துடன் இருந்து சுருதியை அருளிச் செய்து வைதிக ஞானத்தையும் உபதேசித்துத் தம் கையை அவர் தலையில் வைத்தருளினார். அடுத்து, இந்திரன் முதலான தேவர்களுக்குச் சுருதி மந்திரங்களைத் தந்திரமாகக் கூறி திருக்கரத்தைச் சாத்தினார்.

தவமுனிவர்களுக்கு இறைவன் அகோர முகத்தால் அத்தியாத்ம ஞானத்தையும், சிலருக்குத் தத்புருடமுகத்தால் அறநெறி ஞானத்தையும் உபதேசித்தருளினார். பின்பு, ஆகம நெறியினை அதன்படி ஒழுகும் பக்குவமும் திருவருளும் உடைய சத்திநிபாதர்க்கு அருளினார். இருபத்தெட்டு ஆகமத்திலுள்ள மூவகைக் கலைகளையும், தன்மை வாய்ந்த குரு பரம்பரை யினையும் ஆறு உட்சமயிகளுக்கும் அருளிச் செய்தார்.

அடுத்ததாக, ஆறு அங்கங்களையும், சுமிருதி, புராணம் ஆகியவற்றையும், அறுபத்து நான்கு கலைகளையும் வேதாகம வழியே விளங்கிட மற்ற அனைவருக்கும் இறைவன் உபதேசித் தருளினார். நல்லாணையின் நியதியையும் நிலைநிறுத்தி, இகம் பரம் இவைகளுடைய பலன்களையும் அருளி இறைவன் இலிங்கத்தில் மறைந்தருளினார்.

பின்பு, இடப வாகனத்தில் வந்த சந்திரசேகரர் திருமாலைப் பார்த்து, முன்பு தேரழுந்தூரில் அம்பிகை அரம்பையரொடும் பசு உருவத்துடன் வந்திருந்த பொழுது நீ குழலோசையை எழுப்பியதால் இங்கும் கோயில் கொண்டு முகுந்தனாக வாழ்வாயாக என்று கூறியருளி கோமுத்தி நகரில் வந்து அமர்ந்தருளினார்.

இவ்வாறு வேதம் ஆகமம் இவற்றின் விதிகளை யாவரும் அறிந்ததனால் பூவுலகம் முதலான எல்லா இடங்களிலும் சன்மார்க்கங்கள் தழைக்கும்படியாக எல்லாரும் தவம் புரிந்தார்கள். சத்தியோசாத முகத்தினால் உபதேசம் பெற்ற சில தவமுனிவர்கள் கங்கா தீரத்திலும், அகோர முகத்தினால் உபதேசம் பெற்றவர்கள்

பதரிகாச்சிரமத்திலும், தத்புருட முகத்தால் உபதேசம் பெற்றவர்களில் சிலர் பஞ்சவடியிலும், வாமதேவ முகத்தினால் உபதேசம் பெற்றவர்கள் கேதாரத்திலும், ஈசான முகத்தினால் உபதேசம் பெற்றவர்கள் கோதாவரிக் கரையிலும் யமுனைக் கரையிலும் தவம் செய்து வாழ்ந்து வந்தனர்.

எல்லாச் சிவ ஆலயங்களிலும் ஆலய விதிப்படி அபிடேகம் நிவேதனம் திருவிழா போன்றவையும், சிவனடியார்களுக்கு இதமும், பிராமணர்களுக்கு ஆறு தொழில்கள் நடக்கும் பண்பும், நல்ல குடிகளைப் பாதுகாத்தலும் ஆகியவற்றைச் செய்து மநுநெறி தவறாதபடி மன்னர்களும் ஆட்சி செய்தனர்.

முனிவர்கள், அசுவமேதம், இராசசூயம், அக்கினிட்டோமம், சோமயாகம், வாஜபேயம், பவுண்டரீகம் போன்ற வேள்விகளைச் செய்தனர்.

சோடசதானம் மிகுந்திடவும், சோமவாரம் முதலிய விரதங்கள் பெருமையடையவும், சமய நன்னெறிகள் பெருகிடவும், சாத்வீக குணமே நிலைத்திருக்கவும், புண்ணியங்கள் தழைத் தோங்கவும், நித்திய நைமித்திகங்கள் ஆலயங்களில் வளர்ச்சி யடையவும், ஐஸ்வரிய சாதனங்கள் பெருகவும், தேவ பூசைகள் சிறக்கவும், வறுமையாளர்கள், அத்தியனம் செய்பவர்கள், சிறையிலுள்ளவர்கள் போன்றவர்களுக்கு உணவு அளித்தலும், பசுவுக்கு உணவிடுதலும், திக்கற்ற பிணங்களைச் சுடுவித்தல், கருவுற்ற பெண்களுக்கு உதவுதல், தாயில்லாப் பிள்ளைகளை வளர்த்துப் பால் உதவுதல், பிணியாளர்களுக்கு மருந்து அளித்து உதவுதல், பிறர் செய்யும் அறங்களைக் காத்தல், திருமணம் செய்வித்தல், தண்ணீர்ப்பந்தல், மடங்கள், தடாகங்கள் ஆகியவற்றை உண்டாக்குதல், சாலைகளை அமைத்தல், பசுக்கள் உராய்ந்து கொள்ள கல் நட்டுவைத்தல், ஆலயத்திற்கு எருதுகளை விடுத்தல், பொருள் கொடுத்துக் கொலைக்கென வரும் உயிர்களை விடுவித்தல், கலாசாலை அமைத்தல், உணவுப் பொருட்களை விரும்பியவர்களுக்கு உதவுதல் போன்ற அறங்களைச் செய்தலும்; பொய், களவு, கொலை, கள்ளுண்ணல், குரு நிந்தை செய்தல் போன்ற தீமைகளைச் செய்திடாது நல்லொழுக்கத்துடன் இல்லறங்களை நடத்துதலும்; பிதுருக்கள், தேவர்கள், விருந்தினர்கள், சுற்றத்தார்கள், தான் ஆகிய ஐவரையும் ஓம்புதலும்; அடியார்கட்குத் தொண்டு செய்திருத்தலும் ஆகிய இத்தகைய அறங்களெல்லாம் உலகில்

மிகுந்திருத்தலால், மழை, செல்வம், இவை பெருகி, உயிரிழப்பு வறுமை போன்ற துன்பங்கள் எல்லாம் நீங்க இன்பமடைந்து, இறைவன் அருளிய ஆகம விதிப்படி நடந்து இம்மையிலும் மறுமையிலும் சுகம் அடைந்து, தவநிலையிலேயே அனைவரும் வாழ்ந்தனர்.

துறைசைநகரில் தேவர்கள் சித்திரைப் பெருவிழாவைக் களிப்புடன் செய்யும் வகையை இனிச் சொல்வோமாக.

முப்பத்தொன்றாவது
தேவர்கள் சித்திரை விழாச் சிறப்பு நடத்தித் தரிசித்த அத்தியாயம்

1142. வேதநன் னெறிகள் யாவரு முணர்ந்து
மிகுதவ வொழுக்கமே மலிந்து
பூதல மதனிற் களித்துறு நாளிற்
பொருவிலா மால்முதற் தேவர்
நீதிசேர் துறைசை நகரினின் மேவி
நிமலன்நல் லருள்பெறும் நந்தி
பாததா மரைகள் வணங்கிவாய் புதைத்துப்
பண்பொடு நின்றிவை புகல்வார். 1

1143. தேவர்கள் தேவ! நந்திநா யக!இச்
சித்திரைத் திங்களிற் சிறந்த
மாவடு வகிர்க்கண் ஒப்பிலா முலையை
மணம்புரி திருவிழா அடியேம்
ஏவலா ளுனக்காய்ப் பணிசெயக் கடவேம்
இதற்கருள் வாங்கிஈ கென்னத்
தூவிடைப் பாகற் கதனைவிண் ணப்பஞ்
சொற்றருள் வாங்கியே கொடுப்ப. 2

1144. செயும்பணி கிடைத்த அரிஅயன் புரந்தன்
ஆதிதே வர்களுளம் மகிழ்ந்து
நயம்பெறு மினிய ஒற்றரைக் கூவி
நாடிநீர் பாதலம் வானம்
பயன்பெறும் வரையா திகள்தனி லுள்ள
பத்தருக் கிவ்வுரை பகர்ந்து
வியன்பெறும் ஓகை புரியுமென் றனுப்பி
மிகுபுகழ் மயன்தனை யழைத்து. 3

1144. புரந்தன் - இந்திரன்.

1145. இமையமால் வரையில் முன்புநம் மிறைவன்
உலகெலாம் ஈன்றருள் புரியும்
உமையைநல் மணஞ்செய் ததுவெனத் துறைசை
ஊரினுஞ் செயஉளம் இசைந்தான்
அமையநீ அன்றங் கியற்றிய சிறப்பிங்கு
அமையவும் இயற்றென உரைப்பத்
தமதெழிற் கிளைஞ ரொடுமயன் மகிழ்ந்து
தகுமண வளம்பல சமைப்பான். 4

வேறு

1146. ஆயிர மணித்தூ ணாட்டி அருநிதி மணியாற் பொன்னால்
மாயிரு ஞாலம் போற்ற மணஞ்செய்மண் டபமொன் றின்பம்
ஏயுநற் சிற்ப நூலுக் கியைந்திடச் சமைத்து நாப்பண்
தூயவே திகையுஞ் சிங்கா தனமுமேற் துலங்கச் சேர்ந்து. 5

1147. மாமணித் தாமமுத்து மாலிகை பவளத் தொங்கல்
பூமலர்த் தெரியல் பூம்பட் டாதிய பொருந்தத் தூக்கிக்
காமர்நீள் பத்தி முற்றும் களபவெண் சுதைகள் நீவி
ஏர்மிகும் ஓவி யங்கள் இலங்கிடத் தீட்டிப் பின்னர். 6

1148. ஒப்பிலா முலைத்தா யென்றும் உவந்துவாழ் கோயி லொன்று
செப்பரு மணியாற் பொன்னாற் சிறப்பொடுந் தென்பால் நோக்கி
அற்புத மாகச் செய்தங்கு அணிகொள்மண் டபமு கப்பும்
பொற்புற வியற்றி யின்பம் புணர்மண வறையுஞ் செய்து. 7

1149. செம்பவ ளக்கால் நாலிற் செறித்தபொற் பலகை மீது
பம்புமா ணிக்க மாதி பல்மணி குயிற்றி வச்சிரத்
தம்பமேற் தூக்கு முத்தின் தாமமார் பரியங் கத்தின்
வம்புலாம் அமளி ஐந்தும் வளமுற அடுக்கி வைத்து. 8

1150. நாற்றிசை யினுங்கண் ணாடி நிறுத்திநன் னாகரத்னம்
வீற்றுறும் விளக்கு மேற்றி மேதகு விமானஞ் செய்து
போற்றுநல் மணிக்க பாடம் பொலிவுற அமைத்து வாயிற்கு
ஆற்றல்சேர் துவார பால மாதரும் அமைத்தி ருத்தி. 9

1151. கோபுரந் தெற்றி முற்றம் கோயில்மா ளிகைஅ ரங்கு
சீர்பெறும் யாக சாலை திகழ்மடைப் பள்ளி வந்தோர்க்கு
ஏர்பெற விருக்குந் தானம் காவணம் இவைக ளெல்லாம்
பார்புகழ்ந் திடவே செய்து பசும்பொன்இஞ் சியுஞ்சூழ் வித்து. 10

1152. திருத்தமண் டபமும் போதி யம்பல நிலையும் மிக்க
திருத்திகழ் திருவி ழாமண் டபங்களுஞ் சிறப்பாச் செய்து
மருத்தகு மணிவி மானம் வாகனந் திருத்தேர் மற்றும்
விருப்பொடு மியற்றி நான்கு வீதியும் விளக்க மாக. 11

1153. திருநிலைத் தேர்க ளாடுஞ் சித்திரப் பதுமை பக்க
மருவுபூம் பந்தர் வாடா மணிவிளக் கெங்குந் தோன்றும்
குருமணி மகரக் கொத்துக் குலவுதோ ரணங்கள் மற்றும்
இருளறப் புரிவித் தான்கண்டு இமையவர் மகிழ்ச்சி
கொண்டார். 12

1154. வளர்புகழ்த் துறைசை மேவு மைந்தர்கள் மாத ரெல்லாம்
களிமிகுத் தமலன் செய்யும் கடிமணக் காட்சி காண
விளையுமுட் காத லோடும் வீதிகள் மனைகள் மற்றும்
ஒளிமிகுத் தழகு பொங்க உவகையாற் சிறப்புச் செய்வார். 13

1155. குங்கும நீலம் வெள்ளை சிவப்பொடு கறுப்புக் கொண்ட
பொங்கெழிற் பஞ்ச வண்ணம் பொலிவுற மெழுகிக் கோலம்
எங்கணும் விளக்கி மிக்காய் இலகும்ஓ வியங்கள் தீட்டிக்
கொங்கலர் மாலை தூக்கிக் குளிர்பழக் கதலி நாட்டி. 14

1156. பூவிரி கமுகு செய்ய பொற்பழுக் காய்தேங் காய்நற்
காவெலு மிச்சை தந்த கனிகளுந் தூக்கி இக்குத்
தாவில்பொற் தூண்கள் சேர்த்துத் தமனியப் பட்டம் நாற்றி
மாவுறு தழைகொள் பச்சைத் தோரண மருங்கி னார்ந்து. 15

1157. மரகத வேதி தோறும் வளர்முளைப் பாலி தீபம்
பொருவில்பூ ரணநீர்க் கும்பம் பொருந்துமங் கலங்க ளெட்டும்
வரிசையாய் நிறுத்தி மிக்க மணிமுன்றில் மறுகெங் கெங்கும்
திருமலி களபப் பன்னீர் தெளித்துவீ திகள்வி ளக்கு. 16

1158. ஆடவர் மாதர் தங்கள் அழகினுக் கழகு செய்யும்
பூடணம் பலவும் பூண்டு பொற்புற விளங்கு மேல்வை
நீடிய தேவ தூதர் போய்மணம் நிகழ்த்தக் கேட்டுக்
கூடுநல் மாத ரோடும் குலவுசீர் மக்க ளோடும். 17

1159. சித்தர்கள் அமரர் வித்தி யாதரர் அவுணர் செல்வச்
சுத்திகொள் தகுவர் பூதர் தொகுமுனி வரர்கள் நாகர்
ஒத்தகந் தருவர் காந்தர்ப் பர்களுறுங் கருடர் இன்பப்
பத்திசேர் வசுக்கள் மிக்க மருத்துவர் பரிதி இந்து. 18

1160. உருத்திர உலகத் துள்ளோர் உகந்தவை குந்தத் துள்ளோர்
திருத்தகு சத்திய லோகச் செல்வர்கள் திக்கு பாலர்
மருத்தகுந் தருநாட் டுள்ளோர் மருவுமந் தரநாட் டுள்ளோர்
பொருப்பிடந் தன்னில் வாழ்வோர் பொருந்துபா தலநாட்
டுள்ளோர். 19

1161. சத்ததீ வினிலு முள்ள தகைமையர் நவகண் டத்தோர்
பத்திசேர் ஐம்பத் தெட்டு மண்டலம் பரிப்போர் யாரும்
உத்தம முத்திச் சேத்தி ரத்தில்வந் துவகை யோடு
மொய்த்திட மேடத் திங்கள் முந்திய பக்கந் தன்னில். 20

1162. சித்திரைப் பருவ மேவும் திதிக்குமுன் மருவு நாளில்
வித்தகச் சாத்தர்க் கைந்தும் வீரமா காளிக் கைந்தும்
அத்திமா முகவற் கைந்தும் அறுமுகப் பிள்ளைக் கைந்தும்
உத்தம விழாந டாத்தி உகந்தபிற் பத்து நாளும். 21

1163. மாசிலா மணிக்கும் ஒப்பி லாமுலை மயிற்கு மிக்க
தேசுலாம் விழவு செய்யச் சிறந்தநல் லோரை தன்னில்
ஆசிலாச் செம்பொற் கம்பத் தருட்கொடி இடபம் ஏற்றிப்
பூசுரர் முறையின் வேதா கமவிதி பொருந்திச் செய்ய. 22

1164. முதற்றிரு விழவில் நாதன் முகிழ்முலை ஒப்பி லாளோடு
உதித்திடும் இரவி போல ஒளிர்பொற்கே டகத்துப் பிற்றை
மதித்தபூ தத்தும் அன்ன வாகன மீது மூன்றிற்
கதித்திடு நான்கின் மானங் கயிலாயம் சிங்க மீதும். 23

1165. அளவிலாச் சிறப்பு மீற அணிநகர் மறுகிற் போந்து
களிமிகுத் துலகம் போற்றக் காட்சியீந் தைந்தாம் நாளிற்
துளிமதுப் பெறுபூங் கூந்தற் துணைமுலை ஒப்பி லாளோடு
இளநிலா முடிக்கும் வேணி நாயகன் இடபம் மீது. 24

1166. எங்குமி லாப்பே ரின்பம் யாவர்க்குங் கொடுக்க வேண்டி
பொங்குபே ரெழிலி னோடும் போதியின் நீழல் வைகும்
துங்கநற் தரும ஏற்றிற் தொழுதுவா னவர்கள் போற்ற
மங்கையோர் பாக மாக மகிழ்ந்துட னேறி நாதன். 25

1167. நவமணிச் செம்பொன் மோலி நல்மணி முடிமேற் சாத்தித்
தவளவெண் ணீற்று நெற்றி தனிற்றில தமுமொன் றேற்றிச்
செவியில்நல் மணிக்கு ழைகள் சிறந்தொளி வீசச் சேர்த்துக்
குவவுத்தோ ளணிகே யூரங் கோவைநித் திலத்தி னோடும்.
26

1161. மேடத்திங்கள் - சிததிரை மாதம்.

1168. வச்சிரப் பதக்க மற்ற மாணிக்க முதலா் வுள்ள
உச்சித மணியாற் செய்த ஒளிகொள்பொற் பணிகள் யாவும்
இச்சைகொள் அன்பர்க் கின்பம் இசைந்திட அணிந்து மார்பில்
நச்சமை பூந்தார் மாலை நன்குற அமைத்துச் சாந்தம். 27

1169. அணிந்துபட் டிகைபொற் காஞ்சி அழகுகோ சிகப்பொற்
தூசார்ந்து
இணங்கிட மருங்கிற் சேர்த்தம் போருக விருபொற் தாளிற்
பணிந்துநற் சுருதி பாடும் பசும்பொன்னூ புரமும் பூண்டு
குணம்பெறு வீர கண்டா மணியுமேற் குலவ வீக்கி. 28

1170. மறிமழுக் கரத்தி னோடும் வரதமோ டபயந் தாங்கிச்
செறிவுறும் அடியா ரின்பத் தீபமா ராதித் தேத்த
உறுமனக் களிகொண் டன்போ டொப்பிலா
முலையாள் நேரே
அறிவுறுஞ் சுருதி யேற்றின் மிசைவர வாகு மீதில். 29

1171. அழகிய பிள்ளை முன்போந் திடமயில் அதனிற் பின்னே
பழமறை துதிக்குஞ் செவ்வேள் பண்பொடும் வரநற் தண்டி
எழிலொடும் பின்வந் தெய்த இந்திர னமைத்த செம்பொன்
மழைதிகழ் பூஞ்சப் பிரத்துள் மாசிலான் மாதி னோடும். 30

1172. இடபவா கனமூர்ந் தின்பம் இசையுங்கோ முத்திச் சேத்திரத்து
தடமிகு மறுகி னூடு தகுமூலா வலங்கொள் போதிற்
திடமுறும் அயன்மால் ஆதி தேவரு மற்று ளோரும்
அடிமைகொள் மாசி லானுக் காம்பணி செய்ய லுற்றார். 31

வேறு

1173. ஆர ணன்மறைப் புருடரா யிரவர்க ளோடும்
ஏரி ணங்குநற் சாமவே தத்துதி யிசைத்தான்
ஆர ணனிரும் பாகடை நல்கின னயந்து
பூர ணப்புனற் குடங்கொண்டு முனிவர்முன் புகழ்ந்தார். 32

1174. அனில னுங்கடற் கிறைவனுங் கவரிகள் அசைத்தார்
புனித நன்னிதி மாரிபுட் பகத்திறை பொழிந்தான்
வனியும் அட்டநா கமுமணி விளக்கெங்கும் வகுத்தார்
இனிய நல்லிட பக்கொடி இந்திரன் எடுத்தான். 33

1175. குடையெ டுத்தனர் சிலர்சிலர் கேதனங் கொளுங்கை
அடைவு பெற்றனர் சிலர்மணி விசிறிகொண் டடுத்தார்
படையெ டுத்தனர் சிலர்சிலர் பூமழை பணித்தார்
புடையின் மொய்த்துநல் வீணையி னிசைசிலர் புகன்றார்.
34

1176. முரசு துந்துமி பேரிகா களமுழா முதிர்சங்கு
உரைகொள் தாரைசின் னந்தவில் மத்தளம் ஒலிசேர்ந்து
இரையுங் கைமணி மொந்தையா தியவொலி இசைப்பப்
புரையி லாவெழி லரம்பையர் சிலர்நடம் புரிய. 35

1177. பூவின் மேவிரு மாதர்க ளுடன்விண்ணிற் பொருந்தும்
தேவ மாதரும் நாககன் னியர்களுந் திகழ்பார்
மேவு மாதரும் வெற்புறு மாதரு மிகுந்து
பாவி னாற்புகழ்ந் தினியபல் லாண்டிசை பகர. 36

1178. போதி நீழல்வாழ் தருமதே விடபத்திற் பொருந்தி
நாதன் ஒப்பிலா முலையொடு நற்சிறப் புடனே
தீதி லாத்திரு வாவடு துறைத்திரு மறுகிற்
கோதி லாச்சிவ தரிசனம் யாவர்க்குங் கொடுத்து. 37

1179. ஐந்து நற்றின விழவுகொண் டருளியா றினிலு
முந்து மச்சிறப் பொடுமுதிர் கற்பக நிழலில்
இந்து சேகரன் காட்சியா வர்க்குமீந் தருளிச்
சுந்த ரச்சின கரம்புகுந் திருந்தனன் சுகமாய். 38

1180. திரும ணம்புரி மற்றைநாட் புலரியிற் தேவி
மருவு தேவரம் பையரொடு மஞ்சள்நீர்க் குளித்தூர்க்கு
அருண்மி குந்திரு வளத்தொடும் வருஞ்சிறப் பறைவேம்
பொருவி லாத்தவ மிதுலகே ளெனமுனி புகல்வான். 39

முப்பத்தொன்றாவது தேவர்கள் சித்திரை விழாச் சிறப்பு
நடத்தித் தரிசித்த அத்தியாயம்

முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1180

திருச்சிற்றம்பலம்

31. தேவர்கள் சித்திரை விழாச் சிறப்பு நடத்தித் தரிசித்த அத்தியாயம் (சுருக்கம்)

வேத ஆகம நன்னெறிகளை யாவரும் உணர்ந்து மிகுந்த தவ ஒழுக்கமே மலிந்து பூவுலகில் மகிழ்ச்சியுற்று வாழ்ந்து வரும் நாளில், திருமால் முதலான தேவர்கள் துறைசை நகரை அடைந்து, இறைவனது அருள்பெற்ற நந்தியின் திருவடிகளை வணங்கி நின்றனர். தேவர்கள் தேவனே! நந்தி நாயக! சித்திரை மாதத்தில் ஒப்பிலா முலையம்மையைத் திருமணம் புரியும்

திருவிழா நடத்திக் காண யாவரும் முடிவு செய்துள்ளோம். இவ்விழாவிற்கு இறைவனிடம் அருளாணை வாங்கி உதவுவீராக என வேண்டினர். நந்தியும் அவ்வாறே இறைவனிடம் தெரிவித்து அருள் பெற்றுத் தந்தார்.

பின்பு, அனைவரும் மனமகிழ்ந்து ஒற்றர்களை அழைத்தனர். அவர்களிடம் தேவலோகம், பாதாளம், மலையிடங்கள் போன்ற எல்லா இடங்களிலுள்ள அடியார்களுக்கு இறைவன் திருமண விழாவைச் சொல்லச் செய்தனர். தேவ தச்சன் மயனை அழைத்து, முன்பு இமய மலையில் இறைவன் திருமணக் கோலம் கொண்டபோது செய்தது போலவே, இப்பொழுது துறைசையிலும் திருக்கல்யாண மண்டபத்தை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். மயனும் அவ்வாறே ஒப்புக்கொண்டு செய்தான்.

சிற்பநூல் முறைப்படி ஆயிரம் இரத்தினத் தூண்களை நிறுத்தி, இரத்தினம் பொன் இவற்றால் இழைத்துச் செய்யப்பட்ட மண்டபம் ஒன்றை அமைத்தனர். அதன் நடுவில் வேதிகையும் அதன்மேல் சிங்காதனமும் விளங்கும்படியாகச் செய்தனர். இரத்தின மாலைகள், முத்துமாலைகள், பவள மாலைகள், பூமாலைகள் ஆகியவற்றைத் தொங்கவிட்டு, அழகிய பத்திகளில் களபம் கலந்த சுதைகளைப் பூசினர். அதில் ஓவியங்களை எழுதினர். ஒப்பிலா முலையம்மை எப்போதும் எழுந்தருளி யிருக்கும் படியாக மணியினாலும் பொன்னாலும் ஆகிய கோயிலைத் தெற்கு முகமாக அழகுபெறச் செய்து அவ்விடத்தில் முகப்பு மண்டபம் அமைத்து மணவறையும் விளங்கச் செய்தனர்.

பள்ளியறை சிறப்பாக அமைக்கப் பெற்றது. பவளக்கால்கள் தாங்கிய பொற்பலகை மீது மாணிக்கம் முதலிய ஒன்பது இரத்தினங்களைப் பரப்பினர். வஜ்ரத் தூண்களுக்கு மேலே மேல்கட்டியாக முத்துமாலை நிரப்பிக் கட்டிலிலே ஐவகையான படுக்கையையும் வளப்பமாக அடுக்குடன் அமைத்தனர். கட்டிலின் நான்கு பக்கங்களிலும் நிலைக் கண்ணாடிகளை நிறுத்தி, நாகரத்தின தீபத்தையும் ஏற்றினர். விமானம் மற்றும் இரத்தினக் கதவை அமைத்தனர். வாயில் காவல் செய்யும் துவாரபால மாதர்களையும் அமைத்து வைத்தனர். கோபுரம், திண்ணை, முகப்பு, மாளிகை, அரங்கு, யாகசாலை, மடைப்பள்ளி, தங்கு மிடங்கள், பந்தல் இவை எல்லாவற்றையும் அழகுபட அமைத்தனர். பசும் பொன்னாலான சுற்று மதில்கள் செய்யப்

பட்டன. ஆடல்மண்டபம், போதியம்பலம், திருவிழா மண்டபம் போன்றவையும் அமைத்து, மணிவிமானம், வாகனம், தேர் போன்ற பலவற்றையும் மயன் மேற்பார்வையில் செய்து முடித்தனர்.

துறைசை மாநகரமே விழாக்கோலம் பூண்டது. ஆண்களும் பெண்களும் இறைவன் திருமண விழாவை முன்னிட்டு மிகுந்த மகிழ்ச்சியோடு வீடுகளையும் வீதிகளையும் அலங்கரித்துச் சிறப்பித்தனர். அழகாக மெழுகி, குங்குமம், நீலம், வெள்ளை, சிவப்பு, கருப்பு ஆக இந்த ஐவகை வண்ணங்களாலும் கோலமிட்டனர். ஓவியங்களைத் தீட்டினர். மலர்மாலை, வாழைக்குலை, பாக்குப் பழக்குலை, தேங்காய்க் குலை, எலுமிச்சம் பழக்கொத்து இவற்றைக் கட்டியும் தொங்கவிட்டும் அலங்கரித்தனர். கரும்புச் சோலைகளைத் தூண்களில் கட்டினர். மாந்தழைகளைத் தோரணமாக அதன் பக்கத்தில் கட்டினர். மரகத வேதிகைகளில் முளைப்பாலி, விளக்கு, பூரணகும்பம், அட்டமங்கலங்களாகிய கண்ணாடி, பூரணகும்பம், இடபம், இரட்டைச் சாமரங்கள், ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், சங்கு, தீபம் ஆகியவற்றை வரிசையாக நிறுத்தினர். வாயிலிலும் வீதிகளிலும் பன்னீர் தெளித்து அழகுபடுத்தினர்.

ஆண்களும் பெண்களும் ஆபரணங்கள் பல அணிந்து மகிழ்ந்தனர். தேவ தூதர்கள் வந்து திருமணம் பற்றிச் சொன்னார்கள். இல்லறத்தார், சித்தர்கள், தேவர்கள், வித்தியாதரர், அசுரர், பூதர், முனிவர், நாகர், கந்தருவர், கருடர், வசுக்கள், மருத்துவர், சூரியன், சந்திரன், உருத்திர உலகத்தவர், வைகுந்தத்திலுள்ளவர், சத்திய உலகத்தவர், திக்குப் பாலகர், கற்பக நாட்டினர், மந்தர நாட்டினர், மலைவாசிகள், பாதாள நாட்டவர், ஏழு தீவில் உள்ளவர்கள், நவகண்டத்தவர்கள், ஐம்பத்தெட்டு மண்டலங் களை ஆட்சிசெய்யும் மன்னர்கள் ஆகிய அனைவரும் தத்தம் துணைவியர்களுடன் முத்தித் தலமாகிய துறைசைநகர் வந்து குழுமினார்கள்.

சித்திரை மாதத்துச் சுக்கிலபட்சத்திலே சித்திரா பௌர்ணமிக்கு முன்னாளில் சாத்தர்க்கு ஐந்து நாளும், வீரமாகாளிக்கு ஐந்து நாளும், விநாயகருக்கு ஐந்து நாளும், அறுமுகவருக்கு ஐந்து நாளும் திருவிழா நடத்தினர். பின்பு, மாசிலாமணிப் பெருமானுக்கும் ஒப்பிலா முலையம்மைக்கும் பத்துநாள் திருவிழா நடத்தத் தொடங்கி, முதலில் நல்ல ஓரையில் இடபக்கொடி ஏற்றினர்.

திருவிழாவின் முதல்நாள் இறைவன் ஒப்பிலா முலை யாளுடன் பொன் கேடகத்தில் திருவீதியுலா வந்தருளினார். இரண்டாம் நாள் பூத வாகனத்திலும், மூன்றாம் நாள் அன்ன வாகனத்திலும், நான்காம் நாள் கைலாய வாகனத்திலும் சிங்க வாகனத்திலும், ஐந்தாம் நாள் இடப வாகனத்திலும் வீதியுலா வந்து காட்சி தந்தருளினார். விநாயகர் முன்னே செல்லவும், இறைவனும் அம்பிகையும் தரும விடையிலேறி திருவுலா வந்தனர். தேவர்கள் துதிக்க, அனைவரும் பேரின்பம் பெற்றனர். திருமால், பிரமன், இந்திரன், முனிவர்கள், தேவர்கள் பலவிதமான உபசாரங்களைச் செய்தனர்.

ஆறாவது நாள் கற்பக நீழலில் இறைவன் அனைவருக்கும் காட்சியருளி, கோயிலுள் சென்று அமர்ந்தருளினார்.

இனி, அம்பிகை தேவ மங்கையருடன் மஞ்சள்நீர் குளிக்கும் சிறப்பைச் சொல்லுகிறேன் கேட்பாயாக எனத் தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறுகின்றார்.

முப்பத்திரண்டாவது தேவி மஞ்சள் நீராடல் சிறப்புரைத்த அத்தியாயம்

1181. சத்தமி கழித்த பிற்றைஉத் திரத்தில்
தகுமதி இரவின்நல் லோரை
ஒத்துற முகூர்த்தந் திருக்கலி யாணம்
ஒப்பிலா முலைக்கெனக் கணிதர்
சுத்திகண் டுரைப்ப அமரர்கள் மகிழ்ந்து
சுந்தர மாசிலான் கோயில்
பத்திசேர் மணிமண் டபத்தின்முன் குறுகிப்
பரமனைப் பணிந்தடீ துரைப்ப. 1

1182. கேட்டலு மகிழ்ந்து நாதன்ஒப் பில்லாக்
கிளர்தனப் பூவையை நோக்கிக்
கோட்டும்விற் புருவக் கோதைநீ கதலி
குளித்துவிண் மங்கையர் குழாத்தோடு
ஈட்டுநல் மணஞ்செய் மண்டபத் தெய்தென்று
இயம்பலும் இசைத்தெழுந் திருந்து
தாட்டுணை தொழுது போந்தனள் கோயிற்
தமனிய முன்றிலின் புறத்து. 2

1181. கணிதர் - சோதிடர்.

1183. அப்பொழு தகலா துடனமர்ந் தேவல்
அனவர தமும்புரிந் தொழுகும்
செப்பிணை பொருவு கனதன அயிற்கட்
சிந்துர நுதற்சிறு மருங்குல்
முத்தவெண் ணகையோ கினிகளும் வீர
முதிர்இடா கினிகளும் இலகு
துப்பிதழ்ச் சூரி துர்க்கைபத் திரைநற்
சுந்தரி கமலினி முதலாம். 3

1184. சத்திக ளளவி லாரடி தொழுது
தத்தமக் கிசைந்திடும் பணிகள்
மொய்த்துநின் றியற்ற வயிணவி வராகி
முதிர்பிர மாணிஇந் திராணி
சித்திசேர் கவுரி மாரிமா யேசுரி
திகழுமா காளியா மெழுவர்
பத்திசெய் தெஃகஞ் சூலமா தியபல்
படைக்கலப் படையொடுஞ் சூழ. 4

1185. அற்புதப் பதுமா சனத்துவந் தரிமார்
பகத்துறு திருவும்அம் புயத்தோன்
ஒப்பிலாச் சுருதி நாவில்வாழ் வெள்ளை
உருவுறு வாணியு மகவான்
திப்பிய மிகுந்த சகத்திர விழிக்கும்
தெவிட்டிடா அழகுசெய் சசியும்
துப்பிதழ் மயில்போல் மற்றுமேழ் திசையிற்
துணைவரோ டிணங்குகன் னியரும். 5

1186. கீற்றிள மதிபோற் தோற்றுநன் னுதல்சேர்
கின்னரர் மகளிரு மதியிற்
கூற்றிருந் தனைய விழிகொள்கிம் புருடர்
குலமட வியர்களும் புகலும்
மாற்றநல் லமுதாற் சித்தர்கட் கின்பம்
வழங்குமா தருமட வன்னம்
போற்றிகழ்ந் தணைந்து வித்தியா தரர்க்குப்
போகமீ பூவையர் பலரும். 6

1187. குங்குமக் கொங்கை யெனஇரு கனகக்
குடம்பெறு கருடகந் தருவர்
மங்கையர் குழாமு மளகைநன் னகர்வாழ்
வளமிகும் எழிற்றகு வியரும்

துங்கமே இமைய முதலிய மலையிற்
தோகைமா மயிற்குல மெனவே
தங்குபா வையரும் ஏழ்பெருந் தீவிற்
சஞ்சரித் திடும்வனி தையரும். 7

1188. தனிநவ கண்டத் தமுதமென் மொழியாற்
றருக்குலந் தழைத்திடப் பேசி
இனிமைஅன் பருக்கீந் துலவுதோ கையரும்
எழில்கொள்பார் மண்டலத் தியைந்து
பனிமதி முகத்தால் நுதலினா லலர்ந்த
பதுமத்தைப் பிறையினைப் பழிக்கும்
குனிசிலைப் புருவக் கொடியிடைக் கயற்கட்
குமுதவாய்க் கோதையர் குழுவும். 8

1189. பொருந்துநல் லமுத மொழிகளுந் தரளப்
புன்முறு வலுமதி முகமும்
திருந்துகுன் றனைய புளகிதக் களபத்
திரண்முலை சுமக்கலாற் றாது
வருந்துசிற் றிடையு மமைபொரு தோளு
மருவுமா னினமென விளங்கும்
அருந்ததி லோபா மித்திரை முதலாம்
அரியகற் பிருடிமங் கையரும். 9

1190. அசுபதி முதலாந் தாரகை மடவார்
அனைவரு மலர்கதிர்ப் பரிதிக்கு
இசையுமன் புடைய மனைவியர் பலரும்
இலகுபா கீரதி யமுனை
திசைமகிழ் கோதா வரிதுங்க பத்திரி
திகழ்சிந்து காவிரி முதலாம்
வசையிலா நதிமங் கையர்களு மகிழ்ந்து
வந்தடி தொழுதுவாழ்த் தெடுப்ப. 10

1191. சத்திகள் பரிக்கும் தனிமணித் தரளத்
தமனியச் சிவிகைமீ தேறி
முத்தனி திகழும் ஒப்பிலா முலைமான்
முதிர்சிறப் பொடுமெழுந் தருளிச்
சுத்திகொள் ஈசா னத்திசை தனில்முன்
சுரிகுழற் றிருவமைத் திட்ட
பத்திகொள் பத்மி தீர்த்தநல் மருங்கு
பரிந்தவ ளியற்றுமண் டபத்துள். 11

1192. மருமலர்க் கூந்தற் துவரிதழ் வேய்த்தோள்
மான்விழிக் கொடியிடைத் தரளக்
குருமணி முறுவற் கலைமதி வதனக்
குயில்மொழித் தாதியர் சூழப்
பரிவொடு பலரும் போற்றவீற் றிருப்பப்
பாங்குறு பரிசனத் தொடும்வந்து
உரிமைகொள் மகள்சீர் இமயவெற் பரசன்
உவந்துமுன் வைத்தடி பணிவான். 12

வேறு

1193. பைம்பொன்மணிச் சிலம்புசிறு சதங்கை தண்டை
பாதகட கங்காஞ்சி பதக்கம் ஆரம்
செம்பொனிர தனந்தொங்கல் கடகம் சுட்டி
திகழ்வளைகுண் டலம்பட்ட மவுலி யுட்கட்டு
உம்பர்தொழு கோசிகம்வெண் கலிங்க மங்கி
ஒளிர்மணிக்கச் சேகாச மொளிர்மூக் குத்தி
இன்பமிகு மதாணியிலம் பகங்க ரோடி
இரத்னமணிக் கோவைவிரற் கிலகு மாழி. 13

1194. கமழ்வாசத் தயிலநறுந் தகர மிக்க
கதலிமஞ்ச ளரைத்தவிரைக் களபச் சுண்ணம்
சமைசாந்தக் குழம்புதற் கோலங்கற் பூரம்
தகுமேல யிலவங்கம் சாதிக் காய்நல்
அமைவுபெறு பாகடைமான் மதங்கத் தூரி
அணிசவா தஞ்சனமா சனப்பொற் பீடம்
குமைதிலகச் சிந்துரம்குங் குமம்பொற் சிக்கம்
கோதறுமம் மனைகழங்கு குலவு மூசல். 14

1195. சுகந்தமிகு மந்தாரம் பாரி சாதம்
தொகுதளவம் சண்பகத்தார் துணர்ப்பூங் கைதை
உகந்திடுகண் ணாடிகுஞ்சம் நிறைநீர்க் கும்பம்
ஒளிர்முரசு பதாகைவிளக் கோங்கு தோட்டி
மிகுந்தவினைக் கயன்மணிப்பொற் பாவை பந்து
விளங்குபரி யங்கஞ்சாந் தாற்றி பிச்சம்
தகுஞ்சிவிறி பாதுகையாழ் பொற்க ளாஞ்சி
தகுமடைப்பை பெட்டகம்பூந் தட்டு வள்ளம். 15

1196. முத்துவிதா னச்சிவிகை முதலா வுள்ள
முதிர்வரிசை பலவுமுன்பு முறையா வைத்துப்

பத்தியுறு மேனையொடும் பணியக் கண்டு
பவளவாய் முகமனுரை பலவும் பேசி
வித்தகநற் காமதே னுவைமுன் னோக்கி
மேதகுநற் தருவினொடும் விளங்கும் நீவீர்
இத்தகைமா மணங்காண்போர் எவைகேட் டாலும்
ஈயுமென அருள்புரித்தங் கிணையொப் பில்லாள். 16

1197. எண்ணெய்மஞ்சட் காப்புமுதற் சிறப்பு யாவும்
யாவருக்கு மகிழ்ந்தளித்தங் கேடி மார்கள்
மன்னுமர கதமணியைக் கழுவுவார் போல்
மலர்க்கூந்தற் கெண்ணெயிட்டு வாங்கச் சென்று
பண்ணுறுசொற் தேவமின்னார் பலர்க ளோடும்
பத்மிதீர்த் தப்புனலுட் படிந்து மூழ்கி
நண்ணுமலர்த் திருமுதல்மின் னார்க ளெல்லாம்
நறும்புனலிற் குளித்துவிளை யாட வேவி. 17

1198. சைவலம்போற் கூந்தல்மயி ரசைந்து லாவத்
தாமரைபோல் மலர்முகங்கள் தயங்கக் கொங்கைச்
செவ்வியபொற் குடமமிழ்த்தி நீந்து வாரும்
செழுங்குவளை யெனவிழிகள் சிறப்பக் காட்டித்
திவ்வியவன் னப்பெடைபோல் மிதந்து லாவித்
திரிவாரு நித்திலம்போற் றெண்ணீர் வாரிக்
கைவலியா லொருவர்மிசை யொருவர் வீசிக்
கலப்பவரு மாயாடுங் களிப்புக் கண்டு. 18

1199. புனல்விளையாட் டுடனாடிக் கரையி லேறிப்
பொன்னூசல் மிசையிருப்பப் புயல்போற் கூந்தல்
நனையீரம் புலர்ந்துவர வகிர்ந்து வீசி
நலந்திகழும் தோழியர்கள் நன்மை வாய்ப்பத்
தனியொளிக்கண் ணாடியெதிர் முன்னே வைத்துத்
தார்பொதிந்து குழல்செருகிச் சுட்டி சாத்தி
இனமணிநித் திலக்கோவைத் தொங்கல் சூட்டி
எழிற்பிறைநன் னுதற்திலக மிலங்கத் தீட்டி. 19

1200. வரிவிழிக்கஞ் சனமெழுதிக் குழையின் மிக்க
மாணிக்கத் தோடணிந்து மகரஞ் சேர்த்திக்
குருமணிமுக் குத்தியமைத் தமைத்தோள் மீது
குலவுமெழிற் தோள்வளைகள் குணமாய்ச் சேர்த்துத்
திருமலிகந் தரத்தின்முத்து வடங்க ளார்த்துச்
செங்காந்தட் கையில்வளை சிறப்பித் தாழி

புரியவிரற் கனிந்துதிரு மார்பி லாரம்
ஒளிர்பதக்க முதற்பணிக ளுலவப் பூட்டி. 20

1201. ஈர்க்கிடைபு காதுபணைத் தெழுந்து விம்மி
இலகுகொங்கை மீதுதொய்யி லெழுதிப் பூங்கச்
சார்ந்துதர பந்தியமைத் தொல்கி நூல்போல்
அசைந்தொசியு மருங்கினிற்பட் டாடை வீக்கிக்
கூர்த்தமணி யிரதனம்பொற் பட்டம் பூட்டிக்
கோவைமணிக் காஞ்சியெழிற் குறங்கின் மேவப்
பார்த்திருபொற் பதத்தின்மணிச் சிலம்பு தண்டை
பாடகங்கிண் கிணியணிந்து பஞ்சி யூட்டி. 21

1202. மாந்தளிரொத் திலகுதிரு மேனி யெங்கும்
வளர்களபக் கலவைச்செஞ் சாந்து பூசி
ஏந்தழகுக் கழகுசெய்வா ராகி ஒப்பித்
திடுமணக்கோ லத்தொடும்ஒப் பில்லா மங்கை
பூந்தவிசு செறிதரளச் சிவிகை மீது
பொற்பினொடும் வீற்றிருப்பப் புகழ்ந்து போற்றிக்
காந்தளங்கை குவித்துவிண்மங் கையரு மற்றக்
கன்னியருஞ் சூழ்ந்துதொழக் கமல மாது. 22

1203. பனிமலர்கொண் டருச்சித்துக் கனிபா லன்னம்
பணிகாரம் பலவுநிவே தித்துப் பாங்காய்
இனமணித்தூ பந்தீப மிகவு மேந்தி
ஏத்தியடி பணிந்துமகிழ்ந் திரண்டு பாலும்
அனநடைவா ணியினுடன்வெண் கவரி வீச
அயிராணி அடைப்பைபிடித் தருகில் மேவப்
புனையிழைமின் னார்சிலர்கா ளாஞ்சி குஞ்சம்
பொருந்துமெழில் விசிறிகொண்டு போற்றல்
செய்ய. 23

1204. குயிலினங்கள் கூவுதல்போற் சிலர்பல் லாண்டு
கூறிவரச் சோபனங்கள் குணமாப் பாடி
மயிலினம்போற் சிலமடவா ரருகில் மேவ
மகரயாழ் வீணைகள்கின் னரிவி பஞ்சி
நயமருவ வாசித்துக் கீதம் பாடி
நன்மறிபோற் சிலமடவார் நணுகத் தெய்வப்
பயன்மருவு சிலர்வளைக்கை விரித்து நன்றாப்
பரதவித நடத்தொழில்கள் பயின்று காட்ட. 24

1205. ஐந்துவிதத் துந்துமிநல் முரசு சின்னம்
அணிமுழவ முதலியவாத் தியங்க ளார்ப்பக்
கந்தமிகு மலர்மாரி அடியா ருள்ளங்
களித்திறைப்பச் சிவகணங்கள் கணிந்து பாடச்
சிந்தைமகிழ்ந் தருமறையோர் வேத கீதம்
செப்பிவர முனிவர்கணம் திரண்டு போற்ற
இந்திரன்மால் அயன்முதல்எண் திசைகீழ் மேலோர்
யாவர்களும் பரவசமாய் இறைஞ்சி வாழ்த்த. 25

1206. துலங்குசெய்பொற் குடைஆல வட்டம் பிச்சம்
துவளிடபக் கொடிபலவுஞ் சூழ்ந்து மொய்ப்ப
இலங்குமொளித் தீவர்த்தி விளக்குப் பந்தம்
எழிற்பகவர்த் திகளனந்தம் இசைந்து மின்னப்
பொலன்சிவிகை பரிப்பவர்மெய்க் காட்சி யார்க்கும்
பொருந்தும்வகை உயர்த்தெடுத்துப் போதப்
பொற்பூண்
கலன்சிறப்ப இலகுதமூ வணைமேற் சாய்ந்து
கயற்கண்அருட் பார்வைஎங்குங் கலப்ப நோக்கி. 26

1207. மணமிகுபூங் காவணத்து டெய்தி மிக்க
வளம்பெறுநற் துறைசைநகர் வலமாப் போந்து
குணமிகுதே வர்கள் மயனாற் பணிசெய் வித்த
குலவுமெழி லிலகுசெம்பொற் கோயில் மேவி
இணையறுநாற் பத்துமுக்கோ ணப்பொற் பீடத்து
இணைமலர்ப்பொற் தாளமர்வித் திருந்தா ளின்பத்
துணைவர்மணக் கோலங்கண் டுடனாய் வாழத்
துணிந்தஒப்பி லாமுலையாந் தோகை யம்மா. 27

முப்பத்திரண்டாவது
தேவி மஞ்சள் நீராடல் சிறப்புரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1207.

திருச்சிற்றம்பலம்

32. தேவி மஞ்சள் நீராடல் சிறப்புரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

சத்தமி கழித்த பின்பு உத்திரத்தில், இரவில் நல்லோரையில் ஒப்பிலா முலையம்மைக்குத் திருக்கல்யாணம் செய்யத் தக்க காலம் எனச் சோதிட கணிதர் கூறினர். தேவர்கள் மகிழ்ந்து மாசிலாமணிப் பெருமானிடம் சென்று திருக்கல்யாண நாள்

குறித்த செய்தியைத் தெரிவித்தனர். இறைவனும் மகிழ்ந்து அம்பிகையைப் பார்த்து, கோதையே! நீ மஞ்சள் குளித்துத் தேவமங்கையருடன் திருக்கல்யாண மண்டபத்தை அடைவாயாக என அருளினார். அம்பிகையும் இறைவன் திருவடிகளை வணங்கிக் கோயிலில் வாயிற்புறம் சென்றாள்.

அப்பொழுது, எப்பொழுதும் நீங்காமல் உடனிருந்து ஏவல் செய்யும் யோகினிகள், இடாகினிகள், துர்க்கை, சூரி, பத்திரை, சுந்தரி கமலினி சத்திகளும்; வைணவி, வராகி, பிரம்மாணி, கவுரி, மாரி, மாகேஸ்வரி, மாகாளி போன்றவர் களும், சூலம் முதலிய பல படையொடும் சூழவும்; இலக்குமி, வாணி, இந்திராணி ஆகியவர்களும்; மற்றும் கின்னர மகளிர், கிம்புருடமகளிர், சித்தமாதர், வித்தியாதரமகளிர், கருடகந்தர்வ மங்கையர், அளகாபுரி மடந்தையர், மலைப்பாவையர், ஏழு தீவுகளில் வாழும் மங்கையர், நவகண்டத்தில் உள்ள மகளிர், பூலோக மங்கையர், அருந்ததி, உலோபமுத்திரை முதலான கற்புள்ள இருடிமங்கையர், அசுபதி முதலான நட்சத்திர மங்கையர், சூரியனின் மனைவியர், கங்கை முதலான நதி நங்கையர் ஆகிய இவர்கள் எல்லோரும் வந்து இறைவியினுடைய திருவடிகளைத் தொழுது வாழ்த்துக் கூறினர். ஒப்பிலா முலையம்மை இரத்தினச் சிவிகையில் எழுந்தருளி ஈசான திசையில் முன்பு ஆவுருவாய் இருந்தபோது அமைத்த பத்மி தீர்த்தத்தின் பக்கத்திலுள்ள மண்டபத்தில் தாதியர்கள் சூழ வீற்றிருந்தாள். அப்பொழுது, இமவான் வந்து, பல பரிசனங் களுடன் சீர்வரிசைகள் ஏந்திக்கொண்டு, மகள் என்ற உரிமையோடு பணிந்து வணங்கினான்.

பொன்மணிச் சிலம்பு, சதங்கை, தண்டை, பாதகடகம், காஞ்சி, பதக்கம், ஆரம், கடகம், சுட்டி, தொங்கல், வளைகுண்டலம், கோசிகம், வெண்கலிங்கம், மூக்குத்தி, மதாணி, இரத்தின மணிக்கோவை போன்ற பலவிதமான ஆபரணங்களும்; வாசனைத் தயிலம், நறுந்தகரம், கதலிமஞ்சள், களபச்சுண்ணம், சாந்தக்குழம்பு, தக்கோலம், கற்பூரம், ஏலம், இலவங்கம், சாதிக்காய், மான்மதம், கத்தூரி, சவ்வாது, அஞ்சனம், சிந்தூரம், குங்குமம் போன்ற பல வாசனைத் திரவியங்களும்; மந்தாரம், பாரிசாதம், சண்பகம் முதலான மலர்களும்; கண்ணாடி, நிறைகுடம், முரசு, பதாகை, விளக்கு போன்ற மங்கலப் பொருட்களும்; முத்துவிதானச் சிவிகை முதலாகவுள்ள வரிசைகள் பலவும் கொண்டு வந்து வைத்த இமவானும் மேனையும்

இறைவியை வணங்கினர். இறைவி அவர்கட்குப் பல முகமனுரைகளைக் கூறினாள். பின்பு, காமதேனுவைப் பார்த்து, கற்பகத் தருவோடு நீங்கள், இத்திருக்கல்யாணத்தைப் பார்க்க வந்தவர்கள் - வருபவர்கள் எவைகளைக் கேட்டாலும் அவற்றைக் கொடுங்கள் என்று கூறியருளினாள்.

பின்பு, ஒப்பிலாமுலையம்மை எண்ணெய், மஞ்சள், காப்பு முதலியவைகளைப் பலருக்கும் கொடுத்து நீராடச் செய்து, தாமும் அவர்களுடன் நீராடிக் கரையிலேறி, பொன்னூஞ்சல் மீதிருந்தாள். தோழியர்கள் அம்பிகையின் கூந்தலை உலர்த்தி வடுவெடுத்துக் கண்ணாடியை முன்வைத்து, பூமாலையைச் சூட்டிக் குழல் முடித்தனர். சுட்டியை அணிவித்துப் பொட்டிட்டுக் கண்ணுக்கு மையெழுதினர். இரத்தினத் தோடை அணிவித்தனர். மூக்குத்தியை அமைத்து வாகுவலயங்களையும் பொருத்தினர். கழுத்தில் முத்துவடங்களைப் பொருந்தச் செய்தனர். கைகளில் வளையல்களை அணிவித்து, விரல்களில் மோதிரங்களை அணிவித்தனர். மார்பில் பதக்கம் முதலானவற்றைப் பூட்டினர். திருவடிகளில் ஆபரணங்களைப் பூட்டினர்.

இவ்வாறு இறைவிக்குப் பல அழகுகளைச் செய்து பொற்சிவிகையில் அமர்வித்துப் புகழ்ந்து போற்றித் தம் இருகரங்குவித்து, தேவமங்கையரும் மற்றப் பெண்களும் சூழ்ந்து வணங்கினர். இலக்குமி மலர்கொண்டு அருச்சித்துப் பழம், பாலன்னம், பணியாரம் போன்றவற்றைப் படைத்தாள். தூப தீபம் காட்டி, திருவும் வாணியும் இருபுறமும் வெண்சாமரை வீசினர். இந்திராணி கையிலே அடைப்பை ஏந்தி வந்தாள். மற்றுமுள்ள பெண்கள் காளாஞ்சி. குஞ்சம், விசிறி இவை கொண்டு வந்தனர். சில பெண்கள் பல்லாண்டு சோபனம் பாடினர். சிலர் யாழ் வாசித்தனர். சிலர் கீதம் பாடினர். நடன மாதர் நடனம் புரிந்தனர். சின்னம், காளம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன.

அந்தணர்கள் வேதம் ஓதவும், முனிவர்கள் துதி பாடவும், திருமால், அயன் முதலானவர்கள் வணங்கித் துதிக்கவும், பூதகணங்கள் குடை, ஆலவட்டம், இடபக்கொடி போன்ற பல விருதுகளைப் பிடிக்கவும், தீவர்த்தி, பந்தம் போன்ற வற்றையும் பலர் எடுத்துச் சென்றனர். இத்தகைய கண்கொள்ளாக் காட்சிகளுடன், இறைவி அருள் நோக்குடன் அனைவருக்கும் அருள்பாலித்துத் துறைசை நகரை வலம்வந்தாள். மயன்

செய்த மணப்பந்தருக்குள் சென்று, ஸ்ரீசக்கரமாகிய நாற்பத்து முக்கோண பீடத்தில் பொற்தாள்களைப் படியவைத்து அரியணை மீது அமர்ந்தருளினாள்.

முப்பத்து மூன்றாவது
திருக்கலியாணச் சிறப்புரைத்த அத்தியாயம்

1208. இன்னெறிஅம் பிகையிருப்ப எழில்ஞானக் கருணையுறு
மன்னுதிரு மாசிலா மணிநாதன் மகிழ்சிறப்ப
பொன்னணிநல் மணக்கோலம் புனைந்துமண மண்டபத்துள்
கன்னல்மொழி உமையையருட் கடிமணஞ்செய்
வகையுரைப்பாம். 1

1209. அரிசனநீர் விளையாடல் அரம்பையர்க ளுடனாடித்
தரிசனைஇன் புயிர்களுக்குத் தாவிலா வகைபுரிந்து
வரிசையொடும் பூங்கோயில் மருவும்ஒப்பி லாமுலையாள்
பரிசனங்கள் தமைஏவிப் பந்திவைத்தங் கமுதளிப்ப. 2

1210. நால்வகையா கியஉண்டி நலங்கொள்அறு சுவையினொடும்
சால்புறும்ஆ டவர்மகளிர் சகலரும்நற் கிளைஞரொடு
மேல்வகையா னுகர்ந்துகளித் திணங்குசந்த மாலையணி
மால்வகைசெய் தூரசடைகாய் வளங்களிணங் குவதரித்து. 3

1211. உண்டிவினை யாவர்களும் உகந்துவகை யுடனிருத்தல்
கண்டுதிரு வுளக்கருணை கரையிலாப் பெருங்கடற்போற்
கொண்டுதிருக் கோகழியாள் குருமணிபொற் கோயில்முக
மண்டபச்சிங் காசனத்தில் வந்திருந்தான் மணங்குறித்து. 4

1212. அக்காலத் தரிஅயனா தியஅமர ரருள்முனிவர்
முக்கால முங்கடந்த முதல்வனடி தொழுதேத்த
மிக்கான மங்கலதூ ரியஞ்சங்க மிகுந்தார்ப்ப
மைக்கோதைக் கழல்மடவார் மகிழ்ந்துபல்லாண்
டிசைமுழக்க. 5

1213. திருமணத்துக் கிசைந்தஉப கரணமெலாஞ் சிலரெடுப்ப
மருமருவும் அகிற்புகையு மகப்புகையு மணங்கலிப்ப
அரசிலையுந் தருப்பையுங்கொண் டந்தணர்கள்
மிகநெருங்கத்
தெருள்முனிவர் மலர்பொதிநீர்ச் செழும்பொன்மணித்
தசும்பேந்த. 6

1214. தனதன்மலர்க் கைலாகு தரத்திருப்பா துகைமீது
புனையும்விதா னத்திருமஞ் சனசாலைப் பொற்பீடத்
தினிதுநடந் தெழுந்தருளி யிருந்துமறைச் சடங்குவிதி
மனுவுரைப்பக் கங்கைமுதல் மஞ்சனநீர் மகிழ்ந்தாடி. 7

1215. மணிவிளக்கு மலிந்தமகா மண்டபச்சிங் காசனத்திற்
குணமிகுநற் கிருபையொடுங் கொலுமுகமா யெழுந்தருளப்
பணிபுரிகை வினைஞரொடும் பண்புறசுந் தரத்தோழர்
அணுகிமுன்னின் றினியமண வணிதிருமே னியிலமைப்பார்.
8

1216. வரிப்புலித்தோற் திருவரையின் வையமெலாம்
விலையிடினும்
பொருத்துமொருநூற்கும்விலை போதாவெண் பூத்துகிற்பட்டு
அருத்தியொடு முடுத்தினிய வேகாச மழகுறுசீர்
இருத்துகடி சூத்திரம்பொன் னிரதனமே லிசைத்திறுக்கி. 9

1217. பன்னீரிற் சந்தனமும் பசுங்கற்பூ ரப்பொடியும்
நன்னீர்கொள் மான்மதமும் நறுங்கூட்டுக் கலவைகளும்
பொன்னாரும் நறுஞ்சுண்ணப் புதுவிரையுங் கலந்துகுழைத்து
என்னாளும் இயற்கைமணம் இசைதிருமே னியிற்திமிர்ந்து.
10

1218. வெண்டிருநீற் றுத்திரிபுண் டரம்பால மிசைச்சாத்தித்
தண்டரளச் சுட்டிநுதற் தனிவிழிதோன் றாதமைத்து
மண்டுகத்தூ ரித்திலகம் வளர்புருவத் திடைநிறுத்தி
இண்டைமலர்ச் சடைமேல்முத் திலகுசெம்பொன் முடிசூடி. 11

1219. மாணிக்க மணிமகர குண்டலம்வார் குழைக்கேற்றி
ஆணிப்பொன் மிசைகுயிற்றும் அழகுமுத்துக் கண்டசரி
பேணிக்கந் தரத்தணிந்து பெருகொளிவச் சிரவலையப்
பூணழகார் நாற்புயமும் பொருந்துமெழில் செயப்பூட்டி. 12

1220. பிறைவடமுங் கொத்துமுத்துக் கண்டிகையும் பிறங்குமணி
நிறைவடமுஞ் சரப்பணியும் நீலமர கதப்பதக்கம்
முறைபெறுபொற் பணித்தாரும் முந்நூலுஞ் சிரப்பணியும்
பொறைகொள்மதா ணியுமார்பிற் பொருந்துமொழுங்
குறப்புனைந்து. 13

1221. நாகபடப் பட்டிகையு நல்லுதர பந்தனமும்
வாகுதரும் அக்குமணி மாலைகளும் மிகப்புனைந்து
சூகரமால் கண்டறியாத் துணைத்தாளின் மணிச்சிலம்பும்
சேகறுபொற் சதங்கையுமேற் திருக்கழலு முறத்தரித்து. 14

1222. கைக்குமுத்துத் தண்டைசரி கடகமணிக் காப்பணிந்து
மிக்கதிருப் பௌத்திரங்கள் விரற்கேற்றிக் கற்பகப்பூ
மொய்க்குமெழிற் திருத்தாம முருகலர்வா சிகைசாத்திச்
செக்கர்நிறத் திருமேனித் தேசெவருங் கண்டுதொழ. 15

1223. செய்வண்ணச்சிறப்பெவையுஞ் செய்துதிருப் பணிமுடித்துக்
கைவண்ணச் செழும்படிமக் கலனேந்தித் தொழுமவருக்கு
உய்வண்ணத் திருநோக்கம் உதவிஉமை மணவாளன்
மெய்வண்ணக் காட்சிகொடுத் தரியணைமேல்
வீற்றிருந்தான். 16

வேறு

1224. வலம்புரிச் சங்க மார்ப்ப மகரயாழ் முழங்க எங்கும்
இலங்குதுந் துமியு மிக்க வியம்பல வொலிப்ப எங்கும்
நலந்திகழ் தாரை சின்னம் நவிலொலி பெருக எங்கும்
கலன்பெறு மகளிர் பாடும் சோபனங் கலிப்ப எங்கும். 17

1225. பூமழை பொழிதல் எங்கும் பொன்மழை சிதறல் எங்கும்
மாமணத் தூபம் எங்கும் மங்கலக் குரவை எங்கும்
தூமுளைப் பாலி எங்கும் சுண்ணவெண் பொரிகள் எங்கும்
காமரும் தருப்பை தோய்த்த கலசநீர்த் திவலை எங்கும். 18

1226. வேதகீ தங்கள் எங்கும் விரைஇளந் தென்றல் எங்கும்
நாதகீ தங்கள் எங்கும் நாடகம்நடிப்போர் எங்கும்
சோதிவெண் கொடிகள் எங்கும் சுடர்விளக் கேந்தல் எங்கும்
கோதிலா முனிவர் எங்கும் குவித்தகைத் தொண்டர்
எங்கும். 19

1227. ஆகிய பெருஞ்சி றப்பின் அழகெங்கு மலிய இந்து
சேகரன் திருமுன் மாயன் தேவர்கள் குழாத்தோ டெய்தி
வாகுபொன் மலர்கொண் டர்ச்சித் தருக்கிய மலர்த்தாட் கீந்து
போகநி வேத னங்கள் பொருந்தவே நிவேதித் தன்பால். 20

1228. அருங்கருப் பூரா லத்தி யெடுத்தடி பணிய யாரும்
பெருங்களிப் பொடும்வ ணங்கப் பேரருளாளன் மாறன்
கரம்பிடித் தெழுந்து பைம்பூங் காவணத் தூடு வாசம்
பொருந்துபா வாடைமீது பொன்னடி பெயர்க்கும் போது. 21

1229. திருக்கலி யாண மண்டப பத்தினுட் செலுமுன் தண்பூ
மருக்கமழ் இமைய மேவும் வனமுலை மேனை வந்து
பொருத்துபா துகைமேல் நிற்கும் பொன்னடி புனிதப்பாலால்
விருப்பொடுங் கழீஇநன் னீரால் விளக்கியுட்
கொண்டுபோம்பின். 22

1230. தேவமா துருவங் கொண்டு திகழெழிற் காம தேனு
ஒவிய மனைய ஒப்பி லாமுலை உதையந் தன்பால்
மேவிய தன்மை யாலே யாவரும் வியப்ப வந்து
தாவிறன் பாலால் நீராற் தாளிணை விளக்கி மற்றும். 23

1231. கற்பக மலர்கள் தூவிக் கமழ்நறுஞ் சாந்தம் நீவிப்
பொற்புறு நிதியி ரண்டாற் புணர்சிந்தா மணியாற் பூசித்து
அற்புத அருள்பெற் றேக ஆவடு துறைசை நாதன்
விற்பெறு மணித்தூண் பத்தி மிகு மண மண்ட பத்துள். 24

1232. மாணிக்க மணியாற் செய்த வளமிகு வேதி தன்னுள்
ஏணுற்ற பவளத் தூண்மீ தெழில்முத்து வடத்திற் கோர்த்த
ஆணிப்பொன் னிலகு சப்பிர மஞ்சஊ சலிற்சென் றன்பாய்ப்
பாணிக்கி ரகஞ்செ யார்வம் பரித்துவீற் றிருந்த போதில். 25

1233. தாரைகள் சின்னம் சங்கு காகளம் தாள மார்ப்பப்
பேரிகை யொலிப்ப மற்ற வியத்தொனி பெருக வம்பொற்
சீருறு கோயி னின்றும் திருமணக் கோலத் தேவி
பேருறு சடங்கு யாவும் இயற்றிஇந் திரைகை தாங்க. 26

1234. வாணிஇந் திராணி காந்தள் மலர்க்கையாற் கவரி வீசப்
பேணுபைங் கிள்ளை பூவை பிரசமா லிகையாழ் செம்பொற்
பூணுடன் கலவை மற்றும் பூவையர் ஏந்திச் சூழக்
காணும்அன் புடையோர் யார்க்கும் கண்கொள்ளாக்
காட்சி ஈந்து. 27

1235. சீறடிக் கமலம் மேவும் செஞ்சிலம் பொலிப்பக் கொங்கை
வீறொடு மடர்க்க வொல்கி மெலிநுசுப் பிடையிற் சாத்தும்
கூறரு மணிப்பொற் காஞ்சிக் கோவைமு விதமு மார்ப்ப
வேறுபூங் குழற்றார்க் கள்ளுண் டிரைந்துவண் டுகள்பண்
பாட. 28

1236. அகிலங்க ளனைத்து மீன்ற அம்பிகை வந்தாள் யார்க்கும்
புகலிட மான ஞான பூரண அன்னை வந்தாள்
உகந்தரன் பாகம் நீங்கா ஒப்பிலா முலையாள் வந்தாள்
சகம்புரந் தாள வந்தாள் தானெனச் சின்னம் ஊத. 29

1237. அன்னத்தின் தூவி மீதில் அனிச்சமென் போது தூவும்
வன்னப்பூந் தவிசின் மீது மலர்ப்பதஞ் சிவப்ப வந்து
மின்னொத்த மணிப்பூண் மஞ்சம் மீதுறு நாதன் பாங்கு
கன்னற்பா கனைய தீஞ்சொற் கவுரிவீற் றிருந்தா
ளன்றே. 30

1238. மங்கள கீதம் பாடி மலர்மகள் முதல்வான் மாதர்
இங்கிதத் துடன்சூழ்ந் தேத்த இசைந்துபல் லியங்க ளார்ப்பச்
சங்கரன் முன்பு வேதன் தகுமெழு முனிவ ரோடும்
பொங்குநல் மறைகள் கூறிப் போற்றிமுன் னிருந்து
செய்வான். 31

1239. போதிநல் வனமீந் திட்ட பொற்பர சிலைத ருப்பை
மீதுற நன்னூல் சுற்றி விடலைவைத் திடுபொற் கும்பம்
சீதநீ ரொடுநற் செந்நெற் திரவியம் பரப்பும் பீடத்து
ஓதுமந் திரத்தாற் தாபித் துறுமநீர் தூவி முன்னர். 32

1240. சைவவை திகநூல் சாற்றும் சமாவருத் தனத்தின் பான்மை
மெய்விதி விளங்க ஓம குண்டத்தின் விளங்கு மங்கிச்
செவ்வியைச் சிவமாப் பாவித்து எட்பொரி சிதறி நெய்தூஉய்
எவ்வமில் சமிதை யால்நல் எரிமிக வளர்ப்பப் பொங்கி. 33

1241. மந்திராக் கினியெ ழுந்து வலஞ்சுற்றி வணங்க வேதன்
சுந்தரக் கரக நீராற் தூவிமுக் காற்சூழ் வந்து
சிந்துர நுதலி னாட்கும் சிவபரஞ் சுடர்க்கும் அங்஖ன்
தந்திர மணத்துக் கேற்ற சடங்குகள் பலவும் செய்ய. 34

1242. பூவைபோல் நிறங்கொள் மேனிப் புங்கவன் வந்து போற்றி
மேவருங் களிப்பி னோடும் விமலன்கை மலரின் மீது
மாவகிர்க் கண்ணி காந்தள் மலர்க்கையை வைத்து நன்னீர்
ஆவலோ டுகுத்துத் தத்தம் ஆக்கலும் அரவென் றெங்கும்.
35

1243. வானவர் ஆர்த்தார் மிக்க மாமுனிக் கணங்கள் ஆர்த்தார்
தானவர் ஆர்த்தார் பூதத் தலைவர்கள் ஆர்த்தார் வையத்து
ஊனுறும் உயிர்கள் யாவும் உவகைகொண் டுருகி ஆர்த்த
ஏனைய வியங்கள் ஆர்த்த எழுகடல் ஆர்த்த மாதோ. 36

1244. ஆதியோ டந்த மில்லான் அநாதியாய் நித்த மாகி
மாதுமை களத்திற் தங்கும் மங்கல நாண்மேற் செங்கை
காதலா லமைத்துப் பூதிக் காப்பணிந் தவள்பொற் காந்தட்
போதலர்ச் செங்கை பற்றிப் பொற்பொடு மிருந்த போது. 37

1245. அரிஅய னாதி தேவர் அருமறை முனிவர் அன்பர்
மருமலர் அறுகு தூவி மணஞ்செய மகிழ்ந்து நோக்கிப்
பரிவுறு மனையா ளோடும் பங்கயக் கையால் வாரிப்
பொரிகள்தூஉய்த் தனைத்தான் சூழ்வ போலெரி
வலமாப் போந்து. 38

1246. ஓதுநான் மறைக ளேத்தும் ஒப்பிலா முலையாள்
செம்பொற்
பாததா மரையைச் செம்பொற் பங்கய மதனாற் தூக்கிச்
சோதிசூழ் அம்மி மேல்வைத்து அருந்ததி காட்டித் தூங்கும்
சீதமெல் லணைமேல் மிக்க திருமண அறையிற் சேர்ந்து. 39

1247. ஆயிர கோடி தேவர் அரம்பைய ரயினித் தீபம்
நேயமோ டெடுத்துப் போக நிறைமணிச் செம்பொற்
தட்டத்து
ஏயும்நல் லமுது பால்தேன் கனிபணி யாரம் ஏந்தித்
தூயநற் தேனு வைப்பத் துணைவிநின் றூட்ட உண்டு.
40

1248. செம்பழுக் காய்தாம் பூலந் திகழ்முக வாசங் கொண்டு
பம்புபூ விதான மண்ட பப்பரி யங்க மீதில்
இன்பமோ டெழுந்து வந்தங் கிருந்தரி யாதி தேவர்
நம்புமெய் யடியார் யார்க்கும் நவையறு சிறப்பு நல்கி. 41

1249. திருவுலா மறுகி னூடு திருநகர் வலமாச் சூழ்தற்கு
அருள்மன முயற்சி கூர அப்பொழு தரசின் நீழல்
மருவுறு தரும நந்தி மதமுகு கரட நால்வாய்ப்
பருநெடு நாற்கோட் டோடைப் படர்செவி யானை யாகி. 42

1250. அருமறைக் கண்டை யேங்க அறமுப்பா னிரண்டு
மெய்யிற்
பெருகொளிப் பூணாய் மின்னப் பிறங்குநாற் கதியுந் தாளிற்
பரிபுர மாகி ஆர்ப்பப் பகர்சரி யாதி நான்கும்
அருள்மிகுந் திடுபொற் சப்பிர மாகமேற் கொண்டு வந்து. 43

1251. தாளினை பணிய நந்தித் தவளமா கரிமீ தேறி
வாளுறு விழிசேர் பக்க மங்கையா யிருந்து மெம்மை
ஆளுநல் லனையாம் ஒப்பி லாமுலை அலங்கா ரஞ்செய்
கோளறு சிவிகைப் பொற்தண் டிகையின்மேற்
கொண்டு நேரே. 44

1252. மருவநல் ஆகு வாகும் வாகன மேறி முன்பு
பெருகருட் பிள்ளை போகப் பிறங்கயிற் கரத்துச் செவ்வேள்
பொருவரு மயில்மேற் கொண்டு போந்திடத் தண்டி பின்பு
திருமலி யான மீது திகழ்ந்துறச் சிறப்பி னோடும். 45

வேறு

1253. கோதறு தேவர்முப் பத்துமுக் கோடிய ருந்தொழ நன்முனி
மாதவர் நாற்பத்து நான்கின்மேல் மன்னுறு கோடியும் வாழ்த்திடப்
பூதல மாதிய ஏழுல கத்தவ ரும்புகழ் பேசிடச்
சோதி விளக்கொளி யெண்ணிலாத் தொண்டர்கள் கொண்டுமுன் சூழ்ந்திட. 46

1254. வானிட மெங்கும் நிறைந்துநீள் மால்விடை யாதிய வண்கொடி
தூநறும் பலகுடை தோன்றிடத் துந்துமி சங்க மியம்பல
கானமி ரங்கியாழ் வங்கியங் காகளந் தாரை முழங்கிடத்
தேனலர் மாரி சொரிந்திடத் தேவ னெழுந்தருள் போதினில். 47

1255. பேதைய ராதிய ஏழ்வகைப் பெண்படை மூவுல கத்துளும்
மேதக வுற்றுளோர் யாவரும் வீதிகள் மண்டபம் தெற்றிகள்
கோதறு மேடைகள் பந்தர்கள் யாவும் குழாங்கொடு மொய்த்து நின்று
ஆதியொ டந்தமி லானெழில் ஆர்மணக் கோல மிறைஞ்சிட. 48

1256. கூந்தலில் மாலைகள் சூட்டுவார்
கோதறு சிந்துரம் தீட்டுவார்
மாந்தளிர் மெய்க்கணி பூட்டுவார்
வாள்விழிக் கஞ்சனம் தீட்டுவார்
சாந்தணி கொங்கையில் நித்திலத்
தாழ்வடம் சாத்துவார் நற்கரக்
காந்தளிற் பொற்றொடி கோர்த்துநீள்
காதினிற் குண்டலம் ஏற்றுவார். 49

1257. சில்லரிக் கிண்கிணி நூபுரம்
சேவடி சேர்ப்பர்பொன் னாடைகள்
வல்லி நுசுப்பில் வனைந்துமேல்
வார்மணி மேகலை போர்ப்பர்தாள்
மெல்ல நடந்து பணிந்துயாழ்
வீணையின் மெல்விரல் நாட்டியே
நல்லிசை பாடிமுன் னாடுவார்
நவ்வி யினங்கள்போற் கூடுவார். 50

1258. தோகை மயிற்குலஞ் சூழ்வபோற்
சுற்றுவர் சுந்தரன் முன்புபோய்க்
கோகில நற்குரல் போல்மொழி
கூறி வணங்குவர் பைப்பயப்
போகுதல் வேண்டுமென் றியானையைப்
போற்றுவர் மெய்ப்புள கம்பொடித்து
ஏகுத லின்றிநிற் பார்சிலர்
எண்ணில்கண் வேண்டும்என் பார்சிலர். 51

1259. சங்கர னல்லவென் பார்சிலர்
சங்கர னென்றுரைப் பார்சிலர்
இங்கவ னேயெனில் வேணியும்
ஏந்தழற் கண்ணுமுன் மாலயன்
மங்கிடு நாட்புனை யுஞ்சிர
மாலையும் வெம்புலித் தோலையும்
கங்கணப் பன்னக முங்கறைக்
கண்டமுங் காட்டும்என் பார்சிலர். 52

1260. மோக மிகுந்துநம் ஒப்பிலா முலையை மணஞ்செயு மாசையுள்
ஆகு மணங்கொடு நித்தகல் யாண சவுந்தர மேவிய
தாகமி தென்றுரைப் பார்சிலர் சந்ததம் இவ்வடி வாகுமேல்
வாகுறு முன்னுரு வெந்தநாள் மன்னவ என்றுரைப்
பார்சிலர். 53

1261. கண்டவர் சிந்தை கவர்ந்திடுங்
காமரு மாசிலா நாயகன்
கொண்ட மணத்திருக் கோலமக்
கோதையல் லாலெவர் கூடுவார்
மண்டனி னாமயல் கொண்டிடில்
வாழ்வுள தோவென வெண்ணியே
தண்டர ளம்விழி சோர்ந்திடத்
தாகமு டன்சிலர் வாடுவார். 54

1262. மாரனை யுஞ்சரம் பூவல வாளர மென்றுரைப் பார்சிலர்
சீருறு மிந்தல வீதுகத் தீயென வேசிலர் செப்புவார்
ஏருறு மாதர்கள் மையல்கொண் டிவ்வண மாயிடு
மெல்லையிற்
சாருமோர் பேதை கரும்பிளந் தன்மை யுறும்பரு
வத்தினாள். 55

1263. ஆல மடக்கிடும் வித்தென வாக மடக்கிய கொங்கையாள்
காலனோர் பாலக னாயுறுங் காட்சி மலிந்திடு கண்ணினாள்
பாலுணும் அஞ்சுகம் போல்மொழிப் பண்பு பயிற்றிடு நாவினாள்
ஏல வியற்றிய சிற்றில்விட் டின்றுள தாயொடும் வந்துமுன். 56

1264. அன்னை யுரைத்திடு சொற்படிக்
கன்பொடு மேத்தி யிறைஞ்சிநற்
பன்னக பூடண நாதனைப்
பார்த்திவர் ஆரென ஒப்பிலா
மின்னை மணம்புரி நாயகன்
என்றலும் ஈங்கிவர் வேட்பதற்கு
என்னையு மீந்திடு மென்றுநின்
றேங்குதல் கண்டர னன்பொடும். 57

1265. நல்லருள் செய்துமுன் வேழமப்
பானடத் தும்பொழு தங்கணோர்
புல்லுப் பெதும்பைகண் வாள்குழைப்
பொற்புறு சாணையிற் தீட்டுமான்
வல்லி மருங்குலை வாட்டவுள்
வைத்த சினக்குறி மார்பிடை
மெல்ல முகத்தினிற் காட்டியுள்
வீங்கி யெழுந்த தனத்தினாள். 58

1266. பொற்கழங் காடுதல் விட்டிணைப்
பூவைய ரோடுமுன் வந்துநின்று
அற்புத நாயகன் பொற்பினை
அள்ளி விழுங்குவாள் போல்விழித்து
எற்கிணை யாவரு மில்லைநீர்
என்னையும் புல்லுமென் றேசொலிப்
பக்கம துற்றிடு மாதெழில்
பார்த்துளம் வெள்கியே நாணினாள். 59

1267. அப்புற மும்ப னடாத்திநல்
ஆரண நாயகன் வீதியிற்
பொற்பொடு போம்பொழு தங்கணோர்
போதரிக் கண்மட மங்கைநற்
செப்பிணை யொத்திடு கொங்கையாள்
சிற்றிடை யாள்மதி போல்முகத்
துப்பித ழாளறற் கூந்தலாள்
சுந்தரப் பேடனம் போன்றுளாள். 60

1268. கந்துக மாடுதல் விட்டுநற்
காதல்மின் னாரொடும் வீதியில்
வந்துவெள் ளானையிற் போந்திடு
மாசிலா நாயகன் மார்பினிற்
பந்த முறக்குவ ளைக்கணின்
பார்வையை வைத்திரு செங்கையைச்
சிந்துர நன்னுத லிற்குவித்
தாள்செய லற்றனள் என்செய்வாள். 61

1269. மாரன் மலர்க்கணை தைப்பவுள்
மாலொடு நின்றன ளப்புறம்
நாரணன் கண்டறி யாப்பத
நாயகன் யானை நடாத்திமேற்
தோரண வீதிசெப் போதினிற்
தோகை மயிற்பெடை போலவோர்
காரணு குங்குழ லாளயிற்
கண்கொள் மடந்தை களிப்பொடும். 62

1270. காம கலைக்கல்வி கற்றுளாள்
கண்வலை யாள்மதன் தன்னையும்
சேம முறப்பிடித் தாள்பவள்
செவ்விள நீரிரண் டேந்துமோர்
கோமள நல்லெழில் பெற்றபூங்
கொம்பென வொல்கு நுசுப்பினாள்
தாமரை போலிரு கைகளும்
தாள்களும் பெற்றிடு தன்மையாள். 63

1271. தண்டர ளத்திரு வூசல்மேற்
தான்விளை யாடுதல் விட்டுநற்
கண்டுறு சொல்லியர் பின்வரக்
கையினில் வீணை பிடித்துவந்து
அண்டர் பிரான்தனை வீதியில்
அன்பொடு கண்டடி போற்றிநின்று
ஒண்டொடி மேவுசெங் கைவிர
லூற்று நடத்திய வீணையில். 64

1272. இன்னிசை யூறு சுரத்தொடும் ஏழிசை யுங்கள மீதெழு
நன்னய மோடரன் மெய்ப்புகழ் நாவில் நவிற்றிடு போதினிற்
தன்னிரு கண்வழி யுள்மனஞ் சார்ந்தழ கிற்புணர் தன்மையாற்
கொன்னி மிகக்குழ றிக்கரங் கொண்ட வளைக்குலஞ் சிந்தினாள்.
65

1273. அப்புற மைய னணைந்துறும்
அங்கரி வைப்பரு வத்தினாள்
செப்பினை யைப்பழித் தற்புதத்
தேமல் படைத்துநல் நித்திலப்
பொற்புறு கச்சுத றிக்கிரி
போன்று பணைத்தெழு கொங்கையாள்
மைப்புய லோதியின் மொய்த்துறும்
வண்டெனத் துள்ளுகண் வாய்த்துளாள். 66

1274. அன்னமின் னாரொடும் அம்மனை
யாடுதல் விட்டணி வீதியிற்
பொன்னணி நூபுரந் தண்மலர்
பூண்டு புலம்ப நடந்துவந்து
என்னல முந்தரு நாதன்முன்
னெய்தி யிறைஞ்சிநல் ஒப்பிலா
மின்னனை யுஞ்சிவி கைக்கெதிர்
மேவி வணங்கினள் மெய்ப்பொடும். 67

1275. பெண்ணர சாமுமை மெய்யுறும்
பேரழ கைக்கணி னாற்புசித்து
எண்ணம்வே றென்கொல்இம் மாதினுக்
கேற்றிடு நாயக னேயிவன்
விண்ணுறு கற்சிக ரத்தின்மேல்
மேவிய தேன்முட வன்பிடித்து
உண்ண விரும்புவ தொக்கும்நாம்
உத்தமன் மேலுறும் ஆர்வமும். 68

1276. என்று மனத்தினி லெண்ணினாள்
ஏது முரைத்திலள் அண்ணல்முன்
வென்றிவில் வேடன் மலர்க்கணை
மெய்புக வாடியோர் மானென
நின்றனள் தன்னை மறந்தனள்
நேரிழை யார்கொடு போகினார்
குன்றவில் லாளியப் பாற்செலுங்
கொள்கைகண் டோர்தெரி வைக்குயில். 69

1277. நீல நிறக்கடு நள்ளுற நீடு புறத்துறு பாற்கடற்
போல விழித்திடு கண்ணினாள் பொங்கரவப்பட அல்குலாள்
ஞால மிகுத்தடி போற்றிட நற்றலை சற்றே அசைத்திடும்
கோல மணித்திரள் மொய்த்துறுங் கோடு நிகர்த்துள
கொங்கையாள். 70

1278. மல்லிகை முல்லை யணைத்துநல்
மாலை தொடுத்திடு போதெழில்
நல்லியல் புற்றிடும் வீதியில்
நாயக னெய்துதல் கண்டுடன்
மெல்லிய லார்புடை சூழ்வர
மெல்ல நடந்தெதிர் சென்றுநின்று
அல்லி மலர்க்கணை வேடொட
அங்கை குவித்தனள் அன்பொடும். 71

1279. பாலையே யொத்திடு சொல்லையோர்
பாலையே வைத்திடு பண்பஉன்
மாலையே பெற்றிட வேண்டியுள்
மாலையே பெற்றன னுன்மலர்க்
காலையே யுட்கொளு மென்னையிக்
காலையே தொட்டணை யென்றுமுன்
சேலையே யொத்திடு கண்ணினாள்
செப்பி விழுத்தினள் சேலையே. 72

1280. கண்டிகு ளைத்திரு மாதர்கள்
கையணை யிற்கொடு போகமுன்
மண்டு சிறப்பொடு நாயகன்
வாரண மப்புற மெய்தநற்
பெண்டகை யிற்பெரி தாமெழிற்
பேரிளம் பெண்ணெனு மோர்மயில்
கொண்டலை யொத்திடு பூங்குழற்
கோல்வளைக் கைம்மலர்க் கொம்பனாள். 73

1281. முத்த மெனப்பவ ளத்துள்வாழ்
முரலி னாளமு தத்திடை
வைத்திடு நீல மெனத்திகழ்
வாள்விழி யாள்சுமை யாள்மருங்கு
எய்த்துள தோவில தோவெனா
வெட்டியுள் நோக்கிய கொங்கையாள்
அத்த னெழிற்பட மீதுநல்
அர்ச்சனை செய்திடு போதினில். 74

1282. வீதியுள் நாத னெழுந்தருள்
மேன்மை யறிந்தெதிர் போய்முனம்
நீதியொ டைந்துறுப் பங்கமும்
நீணிலந் தோய்ந்திட வேபணிந்து

ஆதி யெழிற்கடல் மூழ்கிநின்
றங்கம் விதிர்த்தனல் வெண்ணெய்போற்
காதல் மனத்தை யுருக்கிநீர்
கண்பொழி கின்றது கண்டரன். 75

1283. **உள்ள மகிழ்ந்தரு ளீந்துலா**
ஓகை யுடன்திரு வீதியில்
மெள்ள வலஞ்செய்து கோயிலுள்
மேவிநம் ஒப்பிலா மென்முலைத்
தெள்ளமு தத்தொடுஞ் சேக்கையிற்
தேனொடு பாலெனச் சேர்ந்திருந்து
எள்ளலி லாப்பரி மற்றைநாள்
இன்புறு தேர்நவ நற்றினம். 76

1284. **ஏறிநல் வீதி யுலாவிவந்**
தின்ப முயிர்த்தொகு திக்கெலா
மீறும் வகைக்கருள் செய்துபின்
மேவுபத் தாந்தின மேற்றினிற்
கூறுறு மங்கை யுடன்விழாக்
கொண்டுதீர்த் தங்கொடுத் தின்பொடு
மாறு படாவருட் கோயிலுள்
மன்னி யிருந்தனன் மாதொடும். 77

முப்பத்து மூன்றாவது
திருக்கலியாணச் சிறப்புரைத்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் *1284.*

33. திருக்கலியாணச் சிறப்புரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

மாசிலாமணிநாதன் மணக்கோலம் கொண்டு மணமண்டபத் துள்ளே அம்பிகையைத் திருமணங் கொண்டருளியதை இனிக் காண்போம்.

பரிசனங்களைக் கொண்டு அம்பிகையானவள் அனைவருக்கும் பந்தி வைத்து அமுதளிக்க நால்வகை உண்டியினை அறுசுவைகளுடன் ஆண்களும் பெண்களும் தம் சுற்றத்தார்களோடும் உண்டு களித்தனர். சந்தனம், மாலை இவற்றை அலங்கரித்துக் கொண்டு, வெற்றிலைப் பாக்குத் தரித்து, மகிழ்ச்சியுடன் இருந்தனர். இதைப் பார்த்திருந்த அம்பிகை அகமிகக் கருணை கொண்டாள். அப்பொழுது,

மாசிலாமணி நாதன் திருமணங் குறித்து பொற்கோயிலின் முக மண்டபத்துச் சிங்காசனத்தில் வீற்றிருந்தார்.

திருமால், பிரமன் முதலான தேவர்களும், முனிவர்களும் இறைவனடியை வணங்கித் துதித்தனர். மங்கல வாத்தியங்கள் முழங்கின. பெண்கள் பல்லாண்டு கூறினர். மணவினைக்கு வேண்டிய சாமக்கிரியைகளையெல்லாம் சிலர் எடுத்து வைத்தனர். சில அந்தணர்கள் அரசிலையும் தருப்பையும் கொண்டு நெருங்கினர். முனிவர்கள் சிலர் பூரண கும்பங்களை ஏந்தினர். கைலாகுடன் பாதுகை மீது திருவடி வைத்து விதானத்துடன் பொற்பீடத்திலிருந்து திருமஞ்சன சாலைக்கு நடந்தருளி, அங்கு மனு முறைப்படி கங்கை முதலான நீரில் திருமஞ்சனம் ஆடினார்.

பின்னர், மணிவிளக்குகள் நிறைந்த மகாமண்டபத்திலுள்ள சிங்காசனத்தில் கிருபையுடன் வீற்றிருந்தார். பணி ஆட்களுடன் தோழனாகிய சுந்தரர் இறைவனை அணுகி முன்நின்று, திருமண ஆபரணங்களை இறைவனுக்கு அணிவிக்கத் தொடங்கினார்.

புலித்தோல் அணிந்த திருஅரையில் உயர்ந்த பட்டாடை யையும் பொன் அரைஞாணையும் இசைத்தார். பன்னீரிலே சந்தனம், பசுங்கற்பூரம், மான் மதம் முதலிய கூட்டுக்கலவை களையும் வாசனைத் திரவியங்களையும் கலந்து குழைத்து திருமேனியில் சாத்தினார். வெண்ணீற்றுக் கீற்றைத் திரிபுண்டரமாக நெற்றியில் இட்டார். முத்துச்சுட்டியால் நெற்றிக்கண் புலப்படாது மறையச் சாத்தினார். பொட்டு அணிவித்தார். இண்டை மாலையை முடிமேல் சாத்தினார். மணிமுடியைச் சூட்டினார். மாணிக்க மகர குண்டலத்தைக் காதிலும், முத்தாலான கண்ட சரசத்தைக் கழுத்திலும், வஜ்ரத்தாலான வாகுவலயங்களை நான்கு புயங்களிலும் பூட்டினார். பிறைவடம், முத்துக் கண்டிகை, இரத்தினமாலை, நீலம், மரகதம் இவற்றாலான பதக்கம், முந்நூல் ஆகியவற்றை மார்பினில் அணிவித்தார். விரல்களில் மோதிரங்களை அணிவித்தார். மலர்மாலைகளைப் பூட்டினார். இவ்வாறு யாவரும் காணுமாறு அழகுக்கு அழகு செய்தார் சுந்தரர். இவ்வழகை வணங்கி மகிழ்ந்தவர்கட்கு அருட்பார்வை நல்கினார் மணவாளனாகிய மாசிலாமணிப் பெருமான்.

அரியணையில் வீற்றிருந்த மணவாளன் முன்பு திருமால் தேவர் கூட்டத்துடன் வந்து மலர் கொண்டு அருச்சித்தார்.

அர்க்கியம் கொடுத்து நிவேதனங்களை நிவேதித்து கற்பூர ஆலத்தி எடுத்து எல்லோரும் அடிபணிந்தனர். இறைவன் திருமாலின் கரம் பிடித்து எழுந்து காவணத்திலிருந்து பாவாடை மீது நடந்து வந்து திருக்கல்யாண மண்டபத்துள் செல்வதற்கு முன்னர், இமவானின் மனைவியான மேனை வந்து இறைவனின் திருவடியினைப் பாலினால் கழுவி நன்னீரால் விளக்கி அதனை அருந்திச் சென்றாள். பின்பு, காமதேனு வந்து, ஒப்பிலா முலையம்மை தன்னுருவம் கொண்ட தன்மையாலே இறைவனுடைய பொன்னடியைப் பாலினாலும் நீராலும் விளக்கிக் கற்பக மலர்களைத் தூவி, சந்தனம் தடவி, இருநிதி களாலும் சிந்தாமணிகளாலும் பூசித்துத் திருவருள் பெற்றது.

மணமண்டபத்துள்ளே அமைக்கப்பட்டிருந்த சப்ரமஞ்ச ஊஞ்சலில் இறைவன் எழுந்தருளினார். அவ்வமயம் தாரகை, சின்னம், சங்கம், காகளம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. மணக்கோலம் கொண்ட ஒப்பிலா முலையம்மையானவள் இலக்குமியின் கையைப் பிடித்துவர, வாணியும் இந்திராணியும் சாமரை வீசினர். பல பெண்கள் பல பொருள்களை ஏந்தி வந்தனர். அப்பொழுது, 'எல்லா வுலகங்களையும் பெறாது பெற்றெடுத்த இறைவியானவள் வந்தாள்', 'எல்லோருக்கும் புகலிடமான ஞானபூரணத் தாய் வந்தாள்', 'இறைவன் பக்கம் நீங்காத ஒப்பிலா முலையாள் வந்தாள்', 'உலகைக் காத்து ஆட்சி செய்பவள் வந்தாள்' என்று சின்னங்கள் ஒலித்தன. அன்னத்தின் தூவியும் அனிச்சப்பூவும் பாவாடையாக ஆசனமாக விரிக்கப் பட்டதில் தம் மலர்ப் பாதங்கள் சிவக்கும்படியாக வந்து ஊஞ்சலில் நாதனருகே ஒப்பிலாமுலையாள் எழுந்தருளினாள்.

மணச்சடங்குகளைச் சப்தரிஷிகளோடும் பிரமன் செய்தார். வேதங்களைச் சொல்லித் துதித்து, அரசிலை, தருப்பை, தேங்காய் இவை வைத்த பொற்கும்பத்தில் நூல் சுற்றி, மந்திரங்கொண்டு தாபித்தார். கும்பத்திலுள்ள நீரைச் சுற்றிலும் தெளித்து, புண்யாகவாசனம் செய்தார். ஓமகுண்டத்திலே அக்கினியை வளர்த்து அதனைச் சிவமாகப் பாவித்து, நெய், எள், பொரி இவற்றை அவ்வக்கினியில் சொரிந்தார். சமிதையால் நன்றாக அக்கினியை எரியவிட, அது மிக்கு எழுந்து வலம்வந்து வணங்க, பிரமன் கமண்டல நீரால் தெளித்து மூன்று முறை வலம்வந்தார். இறைவிக்கும் இறைவனுக்கும் திருமணச் சடங்குகள் பலவற்றையும் செய்தார். திருமால் வந்து துதித்து மகிழ்ந்து நாதன் கரத்தின் மீது ஒப்பிலா முலையம்மையின்

கரத்தை வைத்து நீருடன் தத்தம் செய்தார். அரகர ஒலி எங்கும் ஒலித்தது. இறைவன் அம்பிகையின் கழுத்திலிருந்த மங்கல நாணின் மீது தம் திருக்கரத்தால் திருநீற்றை இரட்சையாக அணிவித்தார். அம்பிகையின் கரத்தைப் பற்றினார்.

திருமால், பிரமன், தேவர்கள், முனிவர்கள் மலர்தூவி வணங்கினர். இறைவனும் தம் கையினால் பொரிகளை வாரித் தூவி, அக்கினியை வலமாக வந்து அம்மையின் பாதத்தைத் தம் கரத்தினால் தூக்கி அம்மியின் மீது வைத்து, அருந்ததி காட்டினார்.

பின்பு, திருமண அறையிலேயுள்ள மெல்லணையை இறைவனும் இறைவியும் அடைந்தனர். சோறு, தீபம் இவற்றை அரம்பையர்கள் எடுத்துச் சென்றனர். அமுது, பால், தேன், கனி, பணியாரம் இவற்றைக் காமதேனு பள்ளியறையில் வைத்தது. இவற்றை இறைவி இறைவனுக்கு ஊட்டினாள். இறைவன் களித்து உண்டு, தாம்பூலம் தரித்து, கட்டிலின் மீதிருந்தார். திருமால் முதலான தேவர்களுக்குத் திருவுலாக் காட்சிதர இறைவன் திருவுளங் கொண்டார்.

அங்கு அரசின் நீழலில் இருக்கின்ற தருமநந்தி யானையாகி இறைவனுடைய திருவடிகளைப் பணிந்தது. இறைவன் அதன் மீதேறி, அம்பிகை சிவிகையிலும், விநாயகர் பெருச்சாளி வாகனத்திலும், முருகன் மயில் வாகத்திலும் வர, சண்டேசுரர் பின்னால் வர, திருமணக் கோலக்காட்சி தந்தருளினார். தேவர் முதலானவர்கள் அரகர ஒலி எழுப்பி மகிழ்ந்தனர்.

இவ்வாறு மாசிலாமணிப் பெருமான் திருமணக் கோலத்துடன் திருவீதியுலா வரும்போது பெண்கள் எல்லாம் காம மேலீட்டால் பலவாறு மயங்கித் தவித்தனர்.

கண்டார் மனங்கவர்ந்திடும் மாசிலாமணிநாதன் திருமண அழகை ஒப்பிலா முலையம்மை அல்லாமல் எவர் அடைவர்; பூமியில் பிறந்த நாம், அவரது அழகைக் கண்டு மயங்கினால் நமக்கு வாழ்வு உண்டாகுமா என எண்ணிச் சோர்ந்து வாடினர் சிலர். மன்மதன் விடும் அம்பு வெறும் மலர் அல்ல, கொடிய அரம் என்று சிலர் கூறினர். இது நிலவு அல்ல பிரளய காலத்தீ என்றனர் சில பெண்கள்.

இளம்பருவப் பெண் ஒருத்தி தன் தாயுடன் வந்து இறைவனைத் துதித்தாள். மணக்கோலத்திலுள்ள நாயகன்

யார் எனத் தாயிடம் கேட்க, அவள், இவர் ஒப்பிலா முலையம்மையை மணந்த மாசிலாமணிப் பெருமான் என உரைத்தாள். அதற்கு அவ்விளம்பெண், இவர் விரும்புவதற்கு என்னையும் கொடுத்து வருவாயாக என்று தாயிடம் கெஞ்சி நின்றாள். இறைவன் அப்பெண்ணுக்கு அருள் கொடுத்து உதவினார்.

மற்றொரு அழகிய பெண் தன் தோழியருடன் கழங்கு ஆடுதலைவிட்டு இறைவன் முன்னே நின்று அவர் அழகினை வாரி விழுங்குபவளைப் போல் பார்த்தாள். என் அழகினுக்கு எவரும் ஈடு இல்லை. என்னையும் கூடுவீராக எனக்கூறிய அவள் ஒப்பிலா முலையம்மையைப் பார்த்ததும் நாணத்தால் வெட்கத்துடன் ஒதுங்கினாள்.

மற்றொரு பெண் பந்தாடுதலை விட்டுவந்து எம்பெருமானைப் பார்த்து மயங்கிச் செயலற்று நின்றாள். வேறொரு பெண் ஊஞ்சலாடுவதை விட்டுக் கையில் வீணையைப் பிடித்துக் கொண்டு, இறைவன் திருவடியை வணங்கினாள். வீணையில் இசையை எழுப்பிப் பாடும் பொழுது, இறைவனின் அழகில் மயங்கி திக்கிக் குழறினாள். காமத்தினால் அவள் கைகளிலிருந்த வளையல்கள் கழன்றன. வேறொரு அரிவையானவள், அம்மனை ஆடுவதை விட்டு, இறைவன் திருவீதியுலாவைக் கண்டு வணங்கினாள். ஒப்பிலா முலையம்மையின் பேரழகைக் கண்டு வியந்தாள். 'இம்மாதினுக்குத் தகுந்த அழகு நாயகன் இம்மாசிலா மணியே' என்றாள். நாமெல்லாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை கொண்டது போலத்தான் என்று காம மேலீட்டால் அரற்றினாள்.

இவ்வாறே, தெரிவைப் பெண்ணொருத்தி, பூமாலையைத் தொடுத்துக் கொண்டிருக்கும்போது, இறைவன் திருவீதியுலாவைக் கண்டு மயங்கினாள். ஒப்பிலா முலையம்மையை ஓர்பாகம் வைத்திருக்கும் பண்பாளரே! உம்முடைய பேரன்பில் திளைக்க விழைந்தேன், என்னையும் ஆட்கொண்டு அருள்க என்று கூறி விரக தாபத்தால் தன் சேலையை இழந்து மயங்கி விழுந்து வணங்கினாள்.

இறைவனை வீட்டிலே பூசித்துக் கொண்டிருந்த ஒரு பேரிளம் பெண் இறைவன் திருவீதியுலா வருவதை அறிந்தாள். உடனே வந்து வணங்கினாள். நாதனின் பேரழகில் மூழ்கி நின்றாள். அனலில் இட்ட மெழுகானாள். அவளுக்கும் இறைவன் திருவருள் பாலித்தார்.

பின்பு, இறைவனும் இறைவியும் பள்ளியறை சேர்ந்து, தேனோடு கலந்த பாலாகத் திளைத்திருந்தனர். அடுத்து, ஒன்பதாம் நாளில் திருத்தேரில் உலா வந்தனர். பத்தாம் நாளில் இருவரும் திருவிழாக் கொண்டு தீர்த்தம் கொடுத்தனர். இவ்வாறு இறைவன் இறைவியுடன் இக்கோயிலுள்ளே எழுந்தருளியிருந்தார் எனத் தவுமியர் உரைத்தார்.

முப்பத்து நான்காவது போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்த அத்தியாயம்

1285. சித்திரைநற் திருவிழவிற் தென்துறைசை நன்னகரில்
மத்தமுடித் திடுஞ்சடில மாசிலா மணிநாதன்
எத்திசையும் போற்றிடநல் இன்பமணஞ் செய்தவகை
மெய்த்துரைசெய் தேமினிநல் விமலர்புரி நடம்புகல்வாம். 1

1286. மேடபரு வத்தின்மண மேவுவிழா மிகநடத்தி
நாடுசிவ போகவமு துண்டிடப நல்மதியிற்
பீடுபெறு வசந்தவிழாப் பெருஞ்சிறப்பி னொடும்புரிந்து
தேடரிய சிவபெருமான் திருவருள்பெற் றுளமகிழ்ந்து. 2

1287. வாகுபெறு நன்மிதுன மாதத்தின் மால்பிரமன்
போகிமுதல் அமரரெலாம் போதியம் பலத்தில்அரன்
மோகமிகும் ஒப்பிலா முலைகாண நடம்புரியும்
சேகறுபே ரானந்தத் தெள்ளமுதம் அருந்துதற்கு. 3

1288. கருத்திலடங் காதபெருங் காதல்மிகுத் திடவெவரும்
திருத்தமுடன் தலைக்கூடிச் சிந்தனைசெய் துலகீன்ற
மருத்தகுபூங் குழலுமையாள் மலரடிதாழ்ந் திடுதுரைத்தாற்
குருத்துமதிச் சடையானுக் கவளுணர்த்திற் கூடுமென. 4

1289. மாசறகாட் சியில்மதித்து மலமகற்றி உயிர்களுக்குப்
பேசரிய நிரதிசயப் பெரும்போக மிகவருளும்
தேசுறுஞா னச்சுடராஞ் செல்வஒப்பி லாமுலையைக்
காசறுபொற் கோயிலிற்போய்க் கண்டுமலர்க்கழல்பணிந்து. 5

1290. தாயின்முகம் பெறுமகவின் தன்மையென மனங்களித்துத்
தூயமலர் கரந்தூவத் துணைவிழிகள் மணிதூவ
வேயுமுடற் புளகமுற விரந்துருகிப் பரவசமாய்
வாயினிசை யொடுமினிய மதுரமொழித் துதிபுகல்வார். 6

1286. மேடபருவம் - சித்திரைப் பருவம். இடப நல்மதி - வைகாசி மாதம். மிதுன மாதம் - ஆனி மாதம்.

வேறு

1291. தெரிவரிய பரையாகி விமலை யாகிச்
செப்பரிய இன்பவருட் செல்வி யாகி
விரியுமுயிர்த் தனுகரண புவன போக
மேவவருட் காரணியாய் விண்ணோர் போற்ற
வருமிமைய மடமகளாய்த் தேவி யாகி
வலியஎமைக் கருணையினால் வந்தாட் கொண்டெம்
உரியமன மொருகணமும் பிரிய மாட்டா
ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம். 7

1292. மலமகலத் தனுவாதி யுடனே யொன்றாய்
மருவுமிரு வினைப்பயனும் வழாது கூட்டி
நிலவுசரி யாதியொரு நான்குந் தானாய்
நின்றுசெய்வித் துளத்தைவெளிப் படுத்தி மிக்க
பலன்மருவு பதமூன்று மருளி யொத்த
பரிபாகங் கண்டுசிவ பாதம் நல்கி
உலகவுயிர்க் குயிராயைந் தொழில்செய் தாளும்
ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம். 8

1293. வாக்குமனா தீதகோ சரமாய்ச் சத்தாய்
மனோலயத்தி லளவிலின்ப மயமாய்த் தோன்றிப்
போக்குவர வற்றுயிர்தா னாகி நிற்கும்
பூரணத்தின் திருநடங்கட் புலனாற் கண்டு
தேக்கிமகப் பிணிக்குமருந் தன்னை யுண்டு
திரள்முலைப்பால் வழியூட்டித் தீர்க்கு மாபோல்
ஊக்கமிகு மெங்கள்மல நோய்தீர்த் தாள
ஒப்பிலா முலைமயிலை யுரைத்து வாழ்வாம். 9

1294. என்றுநடக் குறிப்புரைத்து வழுத்தி யேத்தி
இமையவர்கள் கோகழிஈ சுரர்பொற் கோயில்
முன்றில்மரு வுதற்குமுனம் ஒப்பி லாள்தன்
மோகநா யகனையங்கை முகிழ்த்துப் போற்றிப்
பொன்றிகழும் போதியம் பலத்து ளென்றும்
பொற்சபையி லாடுகின்ற பொலிவு போலத்
தென்றுறைசை நாயகநீ யாட வேண்டும்
தேவர்கள்கண் டிடவேண்டு மென்று செப்ப. 10

1295. கேட்டுமகிழ்ந் தளவுபடாக் கிருபை பொங்கிக்
கிளர்மதிக்கீற் றணிசடிலந் துளக்கும் போது
கூட்டமிகுந் தமரர்குழாம் பாடி யாடிக்
கோயில்முன்பு வந்துநின்று கும்பிட் டேத்திப்

பாட்டளிசேர் பொன்னிதழித் தார்கொள் மார்ப
பரிவுகொள்மா தாண்டவம்எம் பவநோய் தீரக்
காட்டிடஉன் திருக்கருணை இரங்க வேண்டும்
எனும்போது கடவுள்மொழி ககன மீது. 11

1296. ஆனியுத்தி ரப்புலரிப் போது போதி
அம்பலத்து ளாடுதுமென் றெழுதல் கேட்டுத்
தேனினங்க ளினியமதுக் கடலி னோசை
செவிப்புலனுற் றிடக்களிக்குஞ் செய்கை போல
வானவர்கள் களித்துடல்பூ ரித்து மிக்க
மகிழ்ச்சியுடன் தொழுதுவலம் வந்து போதிக்
கானிடத்தின் மழைவரவு பார்க்குஞ் சாத
கங்களென நோக்கிமனக் காத லோடும். 12

வேறு

1297. தாமரைக் கண்ணன் கஞ்சத் தவிசினில் வாழ்வோன் விண்ணிற்
தேமலர்த் தருவின் மேவுஞ் சதக்கிரு தாதி தேவர்
மாமருத் துவர்வ சுக்கள் மதிகதிருடுக்க ணாகர்
காமவிஞ் சையர் தயித்தியர் கருடர்காந் தருவர் யாழோர். 13

1298. அத்திரு நாட்டில் வாழும் அரம்பைய ராதி மாதர்
பத்திமிக் குடைய ஞானப் பதஞ்சலி வியாக்கிர பாதர்
சத்திய ஞான மேவும் உபமன்னியர் சரியை யாதி
முத்திகொள் சித்தி மேவு முதிர்நவ கோடி சித்தர். 14

1299. சனகாதி முனிவர் வாம தேவர்சீர் தகுவி யாசர்
சினமாறு சுகர்ப ரத்து வாசர்நா ரதர்த தீசி
வனமேவு கும்ப யோனி வசிட்டர்கண் ணுவர்மார்க் கண்டர்
கனமேவு மூலர் போகர் கதித்தமா ளிகைத்தே வானோர். 15

1300. உருத்திர கணத்தோ ரேகா தசவுருத் திரர்கள் மிக்க
அருட்பெறு சங்குகன்னர் அழகுகூர் மாண்டர் காளர்
வருத்தமில் சாத்தர் வீரர் வயிரவர் சத்த மாதர்
பருத்தவே தாள கூளிப் பலபடைப் பூத நாதர். 16

1301. ஆண்டய னத்தி னோடும் அறுபரு வங்கள் திங்கள்
காண்டகு பக்கம் வாரம் யோகநற் கரண மென்று
மூண்டெழு பகலி ராநன் னாழிகை கணமுக் கால
மாண்டகு கடல்கள் மிக்க மாநதி திக்கு வெற்பு. 17

1302. திக்கய நாக மஞ்சு திகழ்பூத மத்து வாக்கள்
தக்கவே தாக மங்கள் சாத்திரங் கலைபு ராணம்
தொக்கநற் போக போக்கியம் சுகவிந்து நாதந் தன்ம
மிக்கநற் காம மோட்ச மிகுசரி யாதி மார்க்கம். 18

1303. அனைத்துமன் புருவத் தோடும் ஆவடு துறையின் மொய்த்து
வினைத்துய ரகற்று மிக்க கோமுத்தித் தீர்த்தம் மேவிப்
புனற்படிந் தெழுத்தஞ் சோதிப் புண்ணிய நீறு பூசி
மனத்துணை யான மாசி லாமணி மலர்த்தாள் போற்ற. 19

1304. மிகுத்திடும் வினையொப் பன்று மேவுயிர்க் கெல்லா முண்டாய்
அகத்திருள் விடிந்து ஞான அருட்கதி ருதித்த லாலே
வகுத்தவுத் திரத்திற் போதி மன்றில்மா தாண்ட வஞ்செய்து
இகத்தினிற் சீவன் முத்தி யாவர்க்கு மீய வேண்டி. 20

1305. மாசிலா மணியி னின்றும் வளருமுச் சுடர்கள் கோடி
தேசுருக் கொண்டொன் றாகித் திரண்டெழு கின்றாற் போலப்
பேசொணா வதீத ஞானப் பிறங்குபே ரொளியி னோடும்
ஆசிலாக் கோமுத் தீசர் அரசவம் பலத்திற் றோன்றி. 21

1306. மலரடி நகர மாக வயிறுநன் மகர மாகக்
கலன்மிகு தோள்சி காரங் கமலவாள் முகம்வ காரம்
நலமிகு முடிய கார மாகமெய் நமச்சி வாயம்
நிலைபெறு சகள ஞான நிருமல வுருவங் கொண்டு. 22

1307. சிகரமே துடியாய் வீசு செழுங்கரம் வகர மாக
அகமகிழ் அபயச் செங்கை அகரமா அகரமா யொருகை யங்கி
நகரமாய் மகர மான நவையறு முயல்மேல் நின்று
தகுபிர ணவஓங் காரத் தனித்திரு வாசி சூழ. 23

1308. துடியினி லான்ம ரூபம் தோன்றிடச் செய்த மைப்பிற்
திடமுறத் திதித்தோர் செங்கைத் தீயினால் மலசங் காரம்
படவுனித் திரோத மூன்று பதத்தினால் நீக்கிக் குஞ்சித்
திருபதந் தன்னில் முத்தி யென்றுகை வீசிக் காட்டி. 24

1309. ஆயுமேற் றரம்பெற் றின்ப ஆடல்கண் டிடுமான் மாக்கள்
மாயையை யுதறி மிக்க வல்வினை யதனைச் சுட்டுத்
தோயுமா ணவத்தைச் சாய வமுக்கிமேற் றூக்கு தாளால்
ஏயுமா றெடுத்தா னந்தத் தழுத்திட இரக்கங் கொண்டு. 25

வேறு

1310. வானுறுதுந் துமிமுழங்கப் பேரிகைமத்
தளங்காள மணிசே கண்டி
ஊனமில்பொற் றாரைசின்னம் துடிமுழவ
முதலியங்க ளொலிப்ப வின்பக்
கானமிகு விபஞ்சியாழ் கின்னரிதும்
புருவீணை கலிப்ப வின்பத்
தேனமுத விசையினொடும் வேதமா
யிரம்வகையாத் திகழ்ந்து பாட. 26

1311. ஆயிரந்தா மரைமலர்மேல் ஆயிரம்வெள்
ளோதிமஞ்சேர்ந் தரற்று மாபோல்
ஆயிரமா முகத்தினும்ஆ யிரஞ்சங்கம்
வாய்தொறும்வைத் தன்பி னோடு
மேயுமிரண் டாயிரங்கை யாற்பிடித்தோ
மெனுநாத மெங்குங் கேட்ப
ஏயுமருட் பானுகம்ப ரின்பநடத்
தேனுகர்ந்தங் கெதிர்நின் றூத. 26

1312. பொன்மலர்த்தா மரைமுகக்கண் டரளமழை
பொழியவுடல் புளகம் போர்ப்ப
நன்மலர்த்தாள் நடித்திடமா தாண்டவஞ்செய்
பரமர்திரு நடத்துக் கேற்பக்
கன்முகத்தின் தோள்களாயி ரமுடைய
வாணன்மணிக் கடகக் கையாற்
பன்முகத்த குடமுழாத் தாளகதி
யுடன்முழக்கிப் பணிந்து பாட. 27

1313. வானவர்கள் கற்பகப்பூ மழைபொழிய
முயல்மேலோர் மலர்த்தா ளூன்றித்
தேனுகுமோர் மலர்ப்பாதந் தூக்கியொரு
கரம்வீசிச் செங்கை யொன்றில்
ஆனகன லகலேந்தி யொருகை யமைத்
தொருகைதம ருகங்கொண் டன்பாற்
பானுவின்மண் டலங்கோடி யுதித்ததென
வெழிற்சோதி பரந்து தோன்ற. 29

1314. விரித்தசடை புறத்தாட முடித்தபிறைக்
கொழுந்தாட விமலக் கங்கை
தரித்ததிரைத் துளிமீது குதித்தாடப்
பணியாடத் தயங்கு காதிற்

பொருத்துசங்கைக் குழையாடக் கருணைமதித்
திருமுகப்புன் முர லாடப்
பரித்தகொன்றைப் புயத்தார்கள் பரந்தாடச்
சுரும்புகள்பண் பாடி யாட. 30

1315. மானாட மழுவாடத் திரிசூல மருங்காட மலர்க்கை யாட
ஊனாரும் அரிபிரமா திகளுடைய சிரமாலை யுரமீ தாடக்
கானாரும் வரிப்புலித்தோ லரையாட வரியரவக் கச்சை யாடத்
தேனாரு மலர்க்கழல்மேற் கழலாடக் கிண்கிணியுஞ்
சிலம்பு மாட. 31

1316. அண்டகோ டிகளாடக் கீழாட மேலாட வருந்திக் காடத்
தெண்டிரைநீர்க் கடலாட மலையாடப் பூதபவு திகங்க ளாட
மண்டுதிரி சுடராடச் சேடன்முடி அசைந்தாட வானோ ராடத்
தண்டுளவ முகிலாட அயனாட உலகசரா சரங்க ளாட. 32

1317. மாசிலா மணியீசர் நடம்புரிமா
தாண்டவத்தின் வடிவு கொண்ட
தேசொளிகட் புலனொளியைத் தடுப்பதனால்
முனிவரயன் திருமா லாதி
நேசமிகுந் தேவரெல்லாந் தொழுதேத்திச்
சிவனேஉன் நிருத்தம் எங்கள்
பாசபசு ஞானமறக் கண்டுதொழுஞ்
சிவஞானம் பாலி யென்று. 33

1318. வேண்டுதலு மிடப்பால்சேர் ஒப்பிலா
முலைமயிலை விரும்பி நோக்கத்
தாண்டவர்நோக் குங்கருணைக் குறிப்புணர்ந்து
சகலவுயிர் தனையும் பார்த்துக்
காண்டகுநற் பரஞானக் கண்கொடுப்ப
அனைவருங்கண் களிப்ப நோக்கிப்
பாண்டரங்கன் திருநடஞ்செய் பரமசுகா
னந்தவெழிற் படிவங் கண்டார். 34

1319. படர்பவளச் செஞ்சடையும் கங்கையும்திங்
களும்பாம்பும் பணியும் தாரும்
கடகமலர்க் கையும்உமையை நோக்கும்அருட்
கண்ணும்நுதற் கவினும் நீறும்
மடலவிழும் பூங்கமல வதனமும்புன்
முறுவலும்நன் மலர்ச்செவ் வாயும்
புடைமருவு குமிழ்மூக்கும் புரூரமுந்தோ
டுடன்மணிப்பூண் பொருந்து காதும். 35

1320. விரிநீலக் கருமிடறும் தோள்நான்கும்
அமைப்பொடுமுன் வீசு கையும்
பொருவரா கக்கோடும் கூர்மமும்பைங்
கட்டலையும் புரிநூன் மார்பும்
திருவுதர பந்தியும்நா பியும்புலித்தோ
லுடைமருங்கிற் திகழுங் கச்சும்
இருதிறலூ ருவுஞ்சிலம்பும் நின்றதிரு
வடிமலரும் எடுத்த தாளும். 36

1321. பஞ்சூட்டு செம்பதுமப் பரிபுரப்பா
டகமலரும் படமார்ந் தொல்கும்
வஞ்சிமருங் குலுந்தரித்த மணிக்காஞ்சித்
துகிலுடையும் வயிறும் கொப்புள்
மிஞ்சுதிருச் சுழியழகும் ஒப்பிலாத்
திரள்முலைமேல் விளங்கு பூணும்
கஞ்சமலர்க் கரமுமணிக் குருகுமொரு
கரத்துறுசெங் கழுநீர்ப் பூவும். 37

1322. வேயுறுதோ ளும்பூகக் கந்தரமங்
கலநாணும் மிளிர்மா ணிக்கம்
தோயுமிரு குழைக்காது மதிமுகமும்
முத்தநகைத் துமிர்ச்செவ் வாயும்
ஏயுமெண்ணா சியும்விழியும் புருவமுஞ்சிந்
துரநுதலும் மிருண்டு தேன்மொய்த்து
ஆயுமலர்க் குழலுமுறும் ஒப்பிலா
முலைமான்முன் னமர்ந்து காண. 38

1323. காரைக்கா லம்மைமலர்க் கழல்நிழற்கீழ்
நின்றிருகைத் தாள மொத்தச்
சீருற்ற நவநிதிப்போ திச்சபையின்
மாசிலாச் சிவன்நின் றாடும்
ஏருற்ற திருவழகு கண்டுபரா
னந்தவமு தின்ப முண்டு
பாருற்ற பதஞ்சலியும் புண்டரிகத்
தாள்முனியும் பரிவு கூர்ந்த. 39

1324. அருள்முனிவ ரனைவர்களும் நாரணனும்
பிரமனும்வா சவனு மாசைத்
திருவுறுபா லகரும்விண்ணோர் தொகுதியுந்தொண்
டருங்கமலத் திருவுஞ் செஞ்சொற்

பொருடருவா ணியுஞ்சசியும் அரம்பையரும்
புவியிலுள்ள பூவை மாரும்
பரவசமா யுருகவிரு டிகள்புகழ்ந்தட்
டகம்பாடிப் பரவ லுற்றார். 40

வேறு

1325. ஆதி யந்தமி லாத சுந்தர அங்கணாபரி பூரணா
நாத விந்துவை யுங்க டந்தருள் நாத மெய்க்கிரு பாகரா
வேத மந்திர ரூபதந்திர வீர பூத கணாதிபா
மாது பங்குறை போதியம்பல மாசி லாமணி நாயகா. 41

1326. நாக பூடண நாக கங்கண நாத சீத மனோகரா
வேக மன்மத கோடி ரூபநல் விடப வாகன கேதனா
சாக ரந்தரு நீலநஞ்சு தழைத்தி ருண்டொளிர் கந்தரா
வாகு கொண்ட பினாக மேந்துகை மாசிலாமணி நாயகா. 42

1327. முப்பு ரத்தை யெரிப்ப வோர்குறு மூரல் கொண்ட புராந்தகா
வெப்பெ ழுந்து கரிந்து மன்மதன் வேக நோக்கும் விலோசனா
செப்பு நான்மறை யுட்பொ ருட்சன காதி பர்க்கருள் தேசிகா
மைப்பு யற்குழல் ஒப்பி லாள்புணர் மாசி லாமணி நாயகா.
43

1328. கயிலை மாமலை மேவு காவல கங்கை நாயக மங்களா
சயில மாமரு காபு விக்குயர் சதுர்ம றைப்பொருள் தந்தவா
அயில்கொள் நற்திரி சூல மேந்துகை யைமு கப்பர மேசுரா
மயல்கெ டுத்தரு ளுயிர்பு ரக்கும்நன் மாசி லாமணி நாயகா. 44

1329. ஐங்க ரக்கர டக்க டாம்பொழி யழகு குஞ்சரம் ஈன்றவா
செங்கை யுற்றிடு முகிரி னாலயன் சிரம றுத்த செகாதிபா
துங்க வுக்கிர நீள்வ ரிப்புலின் தோலு டுத்திய உத்தமா
மங்கை யுற்றிடு பங்க நற்சிவ மாசி லாமணி நாயகா. 45

1330. சோமு காசுரன் தனைய டர்ந்தருட் சுருதி தந்திடு தூயவா
காம தேனுவி னுருவ கற்றிநற் கவுரி யையிப்புணர் காதலா
தேம லர்க்கர மாத வத்தினர் சித்த முற்றிடு பூசிதா
மாம மூப்பொறி மான்பி டித்தகை மாசி லாமணி நாயகா. 46

1331. சந்திர சேகர கங்கை சூடு சடாத ராகரு ணாகரா
சிந்து ரத்துரி கொண்ட போர்வைகொள் தேவ தேவம கேசுரா
கந்த னைத்தரு பால லோசன கால காலதிரி யம்பகா
மந்த ரப்புயம்நான்கு கொண்டநன் மாசி லாமணி நாயகா.
47

1332. அரியி டந்துகண் மலர்பு னைந்தடி பணிய ஆழி கொடுத்தவா
விரத மங்கையர் துகில்ச ரிந்திட விரக மீந்த திகம்பரா
பொருவில் மாமுனி மகவி னுக்கழி யாத மெய்யருள் புண்ணியா
மருவும்ஆவடு துறைசை வாழ்திரு மாசிலாமணி நாயகா. 48

1333. காவெ னப்புகழ்ந் தட்டகத்துதி
கடவுள் மாமுனி வோரெலாம்
ஆவ லுற்றுரை செய்து போற்றிட
அகம கிழ்ந்தருள் நாயகன்
மேவு மித்துதி யால்ம கிழ்ந்தனம்
வேண்டும் நல்வரம் யாதெனாத்
தாவில் மெய்த்தவ மீறுநற்பதஞ்
சலிப ணிந்திது சாற்றுவான். 49

1334. கனக மன்றினில் நடனங் கொண்டுயிர்க்
கரிச றுத்தருள் கருணைபோற்
பனக பூடண போதி மன்றினும்
பவுரி கொண்டுயிர்க் கின்பம்நீ
தினமும் நல்கிட வேண்டு மென்றுரை
செய்தி டச்சிர கம்பிதம்
அனகன் கொண்டிசை மொழிபு கன்றிட
ஆடி ஆர்த்தனர் அமரரே. 50

1335. அரிமு தற்பல தேவர் பன்னக
அரசி னைப்புகழ்ந் தன்பொடும்
பொருவி லாச்சிவ னவநி திச்சபை
பொலிய நன்னட மிடுமலர்ச்
சரண முற்றிட மிகுச கத்திர
நாம வர்ச்சனை தயவொடும்
பரிவு பெற்றிடு மினிய கற்பக
பாரி சாதநன் மலரினால். 51

1336. தீது நீக்குமந் திரம தற்குநற் தேவ மாமகே சுரமுனி
வேதஞ் சந்தசு வேய ணுட்டுபு மிகுமு கம்மது லத்தன
மாது நற்கண பதிசி ரஞ்சிகை யிடப மாபூத மிருதையம்
ஈதி சைந்தசங் கற்ப மாகவே ஏத்தி அர்ச்சனை செய்திட. 52

1337. வேண்டு நல்வர மென்கொ லென்று
விளம்பு நாதன்முன் விண்ணவர்
தாண்ட வம்புரி நாத வித்தலந்
தன்னி லென்றுமுன் தாள்பணிந்து

ஆண்ட நிற்கடி மைத்தி றம்வழு
வாமலே செயு மன்புதந்து
ஈண்டு காத்தரு ளென்று கேட்டிட
ஈந்து கோயிலுள் எய்தினான். 53

1338. இன்ன நன்னட மேத்து மந்திரம்
யாவ ரோதினும் வீடெளிது
உன்னு முன்னம்வந் துற்றி டும்மிஃது
உண்மை யாகுமீ தையமன்று
என்ன நற்தவு மியனு ரைத்திட
அரச னுள்மகிழ்ந் திமையவர்
பன்னு மாயிர நாம மும்பக
ரென்று ரைத்தடி பணிதலும். 54

1339. மிதுலை நன்னக ராளு மன்னவ
விண்டு வாதிய தேவர்கள்
மதுர மாயுரை புகல்ச கத்திர
மந்தி ரத்தினால் மலர்கள்தூஉய்க்
கதித ரும்பர சிவன ருட்பத
கமல அர்ச்சனை புரிபவர்
சதம கம்பல கோடி செய்பயன்
சார்வ ரென்றது சாற்றுவான். 55

முப்பத்து நான்காவது
போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1339.

திருச்சிற்றம்பலம்

34. போதியம்பலத்துள் மகாதாண்டவம் புரிந்த அத்தியாயம் (சுருக்கம்)

துறைசை நகரில், சித்திரைத் திருவிழாவிலே, மாசிலாமணிப் பெருமான் அம்பிகையைத் திருமணம் செய்த வகையைக் கூறினோம். இனி, இறைவன் செய்த திருநடனம் பற்றிச் சொல்கிறோம்.

சித்திரைப் பருவத்தில் திருமண விழாவினைச் செய்து, அன்பர்கள் சிவயோக அமுதத்தினை நுகரும்பொருட்டு திருவருளைப் பெற்று மனமகிழ்ந்து, ஆனி மாதத்தில் திருமால்,

பிரமன், இந்திரன் முதலான தேவர்களெல்லாம் கூடினர். போதி அம்பலத்திலே இறைவன் ஒப்பிலா முலையம்மை காணும்படி திருநடனம் செய்வதைத் தரிசிப்பதற்கு மிகுந்த ஆவலுடன் கூடி ஆலோசித்தனர். அம்மையின் திருவடிகளை வணங்கித் தெரிவித்தால் அவள் இறைவனிடம் தெரிவிப்பாள் எனத் துணிந்து கோயிலுக்குள் சென்று மலர்கள் தூவி வழிபட்டனர். பலவாறு வாழ்த்தி வணங்கினர். அதற்கும் முன்பாகவே இறைவி இறைவனிடம் இதுபற்றிக் கூறலுற்றாள்.

இறைவ! கனகசபையில் ஆடுவதைப்போல எப்போதும் இத்துறைசையிலுள்ள போதியம்பலத்துள் ஆடவேண்டும் என்று விண்ணப்பித்தாள். இறைவனும் இதற்கு இசைந்து சிரம் அசைத்தருளினார். தேவர்களும் வேண்டி வணங்கினர். ஆகாயத்திலே அசரீரியாக, ஆனிமாத உத்திர நட்சத்திரத்தன்று விடியற்காலத்திலே இந்த அரச அம்பலத்துள் ஆடுவோம் எனக் கேட்டது. தேவர்கள் அனைவரும் மகிழ்ந்து பூரித்து வணங்கி இறைவன் திருநடனம் காண வந்து சூழ்ந்திருந்தனர்.

அனைத்து உயிர்களுக்கும் வினையொப்பு உண்டாகி அகத்திலேயுள்ள இருளெல்லாம் அகன்று, திருவருள் ஞானப் பிரகாசம் தோன்றும்படியான அந்த உத்திர நன்னாளிலே போதிமன்றத்தில் தாண்டவம் செய்து எல்லோருக்கும் இம்மையிலேயே சீவன் முத்திநிலையை அருள மாசிலாமணிப் பெருமான் விரும்பினார். வளர்கின்ற முச்சுடர்களும் கோடிப் பிரகாசம் கொண்டு ஒன்றாகித் திரண்டு எழுகின்றதைப்போல, பகர்தற்கரிய அதீத ஞானப்பிரகாசத்தோடு கோமுத்தீசுவரர் அரச அம்பலத்தில் தோன்றினார்.

இறைவன் திருவடி நகாரமாகவும், வயிறு மகாரமாகவும், தோள் சிகாரமாகவும், முகம் வகாரமாகவும், முடி யகாரமாகவும், சரீரம் நமசிவாய சகலஞான உருவத்தைக் கொண்டும்; சிகாரம் உடுக்கை; வீசியகரம் வகாரம்; அபய கரம் யகாரம்; அங்கி நகாரம்; மகாரம் முயலகன், இதன்மேல் நின்று பிரணவ ஓங்காரமாகிய திருவாச்சி சூழவும்; துடியில் ஆன்ம உருவம் தோன்றுபடியாகச் செய்து, அபய கரத்தில் அருளிச்செய்து, தீயினால் மலத்தைச் சுட்டு, திரோதத்தை ஊன்றிய திருவடியினால் நீக்கி, தூக்கிய திருவடியில் முத்தி என்று காட்டியும் ஆடியருளினார்.

திருநடனத்தைக் கண்ட ஆன்மாக்களது மாயைதனை உதறி, கொடிய வினையைப் பொசுக்கி, ஆணவ மலத்தினைக் கீழே அமிழ்த்தி, மேலே தூக்கிய திருவடியால் பேரானந்தத்திலே அழுந்தச்செய்ய, மாசிலாமணிப் பெருமான் ஆடல் புரிந்தருளினார். அப்பொழுது, துந்துபி, மத்தளம், பேரிகை முதலான வாத்தியங்கள் ஒலித்தன. ஆயிரம் தாமரை மலர்மேல் ஆயிரம் வெண்மையான அன்னப் பறவைகள் சேர்ந்து ஒலி எழுப்புவது போன்று பானுகம்பன் தன்னுடைய ஆயிரம் முகத்திலும் ஆயிரம் சங்குகளை வைத்து, இரண்டாயிரம் கைகளாலும் பிடித்து 'ஓம்' என்னும் ஒலியுடன் ஊதினான்.

எம்பெருமானின் திருநடனத்திற்கேற்ப, ஆயிரம் தோள்களையுடைய வாணன் மத்தளத்தைக் கையால் அடித்துக் கொண்டு பாடினான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இறைவன் முயலகன் மீது ஒரு திருவடியை ஊன்றி, ஒரு திருவடியைத் தூக்கி, ஒரு கையை வீசி, ஒரு கையிலே அனல் ஏந்தி ஒரு கையால் அபயம் தந்து ஒருகையில் உடுக்கை தாங்கி, கோடி சூரியவொளி போல விளங்கினார்.

விரித்த செஞ்சடைகள் பின்புறம் ஆடவும், முடித்த திருச்சடையிலே பிறைச்சந்திரன் ஆடவும், கங்கையின் திவலைகளானவை குதித்தாடவும், பாம்பாடவும், காதிலே சங்குக் குண்டலங்கள் ஆடவும், திருமுகத்திலே புன்முறுவல் ஆடவும், கொன்றை மாலைகள் மார்பில் ஆடவும், மழு ஆடவும், திரிசூலம் ஆடவும், மலர்க்கை ஆடவும், அரிபிரமன் ஆதிகளுடைய சிரமாலைகளானவை மார்பில் ஆடவும், அரவக்கச்சை ஆடவும், ஊன்றிய கழலுக்குமேல் தூக்கிய கழல் ஆடவும், கிண்கிணியும் சிலம்பும் ஆடவும், அண்டங்கள், திக்குகள், கடல்கள், மலைகள், பூதபௌதிகங்கள், முச்சுடர்கள், ஆதிசேடனுடைய முடிகள் ஆகியவை ஆடவும், பிரமன் திருமால் இவர்கள் ஆடவும், சராசங்களெல்லாம் ஆடவும் மாசிலாமணிப் பெருமான் போதியம்பலத்துள் ஆடியருளினார்.

இறைவனின் திருநடனத்தின் வடிவுகொண்ட பேரொளியானது கட்புலனைத் தடுப்பதனால் முனிவர்கள், பிரமன், திருமால் முதலான தேவர்கள் அனைவரும் தொழுது வணங்கினர். சிவனே! தேவருடைய திருநடனத்தால் எங்களுடைய பசுஞானங்களும், பாச ஞானங்களும் நீங்கத் திருநடனங்கண்டு

வணங்கும் சிவஞானத்தை அருள்வாயாக! என்று வேண்டி வணங்கினர்.

மாசிலாமணிப் பெருமான் உடனே ஒப்பிலா முலையம்மையை நோக்க, இறைவியும் இறைவனுடைய கருணைக் குறிப்பை உணர்ந்து, எல்லா உயிர்களையும் நோக்கி, மேலான ஞானக் கண்களைக் கொடுத்தருளினாள். இறைவனுடைய திருநடன பரம சுகானந்த எழில் உருவத்தைக் கண்டு மகிழ்ந்து அனைவரும் அட்டகம் பாடிப் பரவினர். எம்பெருமானும் மகிழ்ந்தருளினார். அவர்கள் வேண்டும் வரங்களையும் கேட்டருளினார்.

இறைவன் கனகசபையிலே திருநடனம் புரிந்து உயிர்களினுடைய குற்றங்களைப் போக்கிக் கருணை புரிவது போல் இப்போதிமன்றிலும் நடனங்கொண்டு உயிர்களுக்குத் தினமும் இன்பத்தைக் கொடுக்க வேண்டும் என்று பதஞ்சலி முனிவர் வேண்டினார். இறைவனும் இசைந்து அவ்வாறே அருளினார். தேவர்கள் மகிழ்ந்து அரகர என ஒலித்து வணங்கி மகிழ்ந்தனர்.

திருமால் முதலிய தேவர்கள் இறைவனைப் புகழ்ந்து அன்போடும் சகஸ்ரநாம அர்ச்சனை செய்தனர். அவர்கள் தயவோடும் பாரிஜாத மலரினால், குற்றங்களை நீக்கும் மந்திரம்; அதற்குத் தேவர் மாமகேசமுனி; வேதம்; சந்தசு அநுட்டுப்பு; அதுலத்தன மாது; கணபதிசிரம்; சிகை இடபம்; மாபூதம் இருதயம்; இவை அமைந்த சங்கற்பமாகவே ஏத்தி அருச்சனை செய்தனர். இறைவனும் மகிழ்ந்து, அவர்கள் விரும்பும் வரம் என்ன என வினவினார். அதற்கு அவர்கள், இத்தலத்திலே எப்பொழுதும் நின் திருவடிகளைப் பணிந்து அடிமை செய்யும் அன்பைக் கொடுத்தருள வேண்டும் என்று வேண்டினர். இறைவனும் அவ்வாறே அருளித் திருக்கோயில் வந்து எழுந்தருளினார்.

இத்தகைய இறைவன் திருநடனத்தைத் துதிக்கும் மந்திரத்தை யாவர் சொன்னாலும் திருவடிப்பேறு எளிதில் கிட்டும் எனத் தவுமியர் கூறினார். உடனே மிதிலேசன், தேவர்கள் புரிந்த சகஸ்ரநாமத்தைத் தமக்கும் கூற வேண்டுமென வணங்க முனிவரும் பகரலுற்றார்.

முப்பத்தைந்தாவது
சகத்திர நாமம் உரைத்த அத்தியாயம்

1340. ஆசார மொடுபுனித அஞ்செழுத் தோதிநீ
றணிந்தக்கு மாலை மிகவும்
ஆரத்தமார் போதியம் பலத்தாடு மண்ணல்பதம்
அர்ச்சிக்கும் நாம மதுமேய்த்
தேசோம யாயநம மூலபூ தாயநம
திரிநேத்தி ராய நமஓம்
சீர்கொள்ளிநீ தாயநம விநதாயநம மிக்க
தீர்க்கதரிசி காய நமஓம்
வாசாம கோசா சதாசிவ நடேசநம
மாசர்த்துவ பதயே நமஓம்
வளர்மிக்க காவேரீ தீர சரணாயநம
மன்னும்ஆக் கிருந்தயே நமஓம்
போசார்ந்த பக்திஞானப் பிரதேசு ராயநம
பெறுசார தாய நமஓம்
பெருநிசோவே நமநல்ரூப மாயா நமமெய்ப்
பிரகாச மணிநாத நமஓம். 1

1384. வேதாத் தியாயிநேநம மகாவே தாந்த
தாத்பரிய வேத்தி யாய நமஓம்
மிகுச ரியறில யாயிநம சுமகா
வைதிகப் பிரியவிம லாய நமஓம்
வேத கம்மி யாயநம சரணி யாயநம
திருணமிகு ரட்ச காய நமஓம்
வேதைக மாநசா யேநம தற்பிர
காசவிசு வேசு ராய நமஓம்
தீதில்பூ கைலாச சகிதேசு ராயநம
திருமா சிலாமணி ஈச நமஓம்
திகழ்பிப் பிலார ணியநா தாயநம
அர்த்தத்தி யாகரா சாய நமஓம்
அதுல தனனிகா நாதநம கோமுத்
திச்சேத் திரநா தாய நமஓம்
வரதகா வேரீ தடரூ பாயநம
சிறீமத்கோ முத்தீசு ராய நமஓம். 45

வேறு

1385. இவ்வகை யான சகத்திர மந்திரார்ச் சனைசெய்தே
செவ்விய மாலய னாதிய தேவர்கள் சிவபோக
மெய்வழி யுற்றிட வின்பநு கர்ந்து வேண்டியதெய்தி
வவ்விய முன்னை வினைக்கடல் நீந்திநல் வாழ்வுற்றார். 46

1386. சிந்தைசெய் திந்தமெய் மந்திரங் கொண்டு சிவன்தாளில்
வந்தனை செய்பவர்க் கேயருள் முத்திகை வசமாகும்
பந்தம றும்வினை மாய்ந்திடும் வேண்டிய பயனெய்தும்
அந்தமு மாதியுங் கற்றரிச் சிக்கினும் அருள்பேறாம். 47

இவையுடனே மூலபாடத்திலிருப்பது கவி 47

முப்பத்தைந்தாவது

சகத்திர நாமம் உரைத்த அத்தியாயம் முற்றியது.

ஆக அத்தியாயம் 35-க்கு விருத்தம் 1386.

திருச்சிற்றம்பலம்

35. சகத்திர நாமம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

திருமால் முதலான தேவர்கள் மிகுந்த ஆசாரமொடு புனித ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லி, திருநீறு அணிந்து, உருத்திராட்ச மாலை அணிந்து, போதி அம்பலத்தாடும் அண்ணல் பதம் போற்றி, பின்வரும் ஆயிரம் நாமங்களைக் கொண்டு அர்ச்சனை புரியலுற்றார்கள்.

ஓம் தேஜோமயாய	நம:	ஓம் காவேரீதீர சரணாய	நம:
ஓம் மூலபூதாய	நம:	ஓம் ஆக்ருந்தயதே	நம:
ஓம் த்ரிணேத்ராய	நம:	ஓம் ப்ரஹ்மநிச்சயாய	நம:
ஓம் விநீதாய	நம:	ஓம் பக்தக்ஞானப்ரதாய	நம:
ஓம் விநதாய	நம:	ஓம் ஈச்வராய	நம:
ஓம் தீர்க்கதர்சிநே	நம:	ஓம் சாரதாமயாய	நம:
ஓம் வாசாமகோசராய	நம:	ஓம் உத்தமாய	நம:
ஓம் சதாசிவாய	நம:	ஓம் ப்ரகாசமணிநாதாய	நம:
ஓம் நடேசாய	நம:	ஓம் அமலாசாராய	நம:
ஓம் மாஸர்த்துபதயே	நம:	ஓம் த்ரிதிவேச்வராய	நம:

குறிப்பு: ஏடு எண் 196-இல் உள்ளது.

"முப்பந்தைந்தாவது சகத்திரநாம அர்ச்சனைக்கவி, திருவாவடு துறைசைக் கோயில் அறையிலிருக்கும் மூலபாடத்தில் எழுதிய கவி 47-இல் இப்பொத்தகத்தில் ஆதியிலொன்றும் அந்தத்தில் மூன்றும் எழுதியது. வரலாறு".

ஓம் வராமலாங்காய	நம:
ஓம் அமலாத்மநே	நம:
ஓம் கணஸ்ரீதாய	நம:
ஓம் த்ரிதிவேட்யாய	நம:
ஓம் விமர்சநாய	நம:
ஓம் தயாசிந்தவே	நம:
ஓம் விலாஸநே	நம:
ஓம் விராகக்ஞானதாயகாய	நம:
ஓம் ஸாக்ஷிணே	நம:
ஓம் க்ருசாய	நம:
ஓம் அநேஹஸே	நம:
ஓம் தயாகாராய	நம:
ஓம் தயாநிதயே	நம:
ஓம் தயாகராய	நம:
ஓம் சாந்தாய	நம:
ஓம் ப்ரபவாய	நம:
ஓம் சம்பவே	நம:
ஓம் க்ஷமாபராய	நம:
ஓம் உமாதயாஸாராய	நம:
ஓம் அத்வயாய	நம:
ஓம் தயாமயாய	நம:
ஓம் விபவே	நம:
ஓம் தயாவதே	நம:
ஓம் தாந்தாய	நம:
ஓம் விஷ்வக்ரூபாய	நம:
ஓம் சர்வாய	நம:
ஓம் சிதாகாராய	நம:
ஓம் ஸமாய	நம:
ஓம் ஸமவர்த்திநே	நம:
ஓம் கல்யாணச்சரியே	நம:
ஓம் ஏகஸ்மை	நம:
ஓம் காச்யபாய	நம:
ஓம் அத்ரிகோடி நிஷே விதாய	நம:
ஓம் பாவய	நம:
ஓம் அத்ரிகோடி ஸ்துதாய	நம:
ஓம் அசுபத்வம்ஸிநே	நம:
ஓம் அபுவே	நம:
ஓம் காச்யபாசார்யாய	நம:
ஓம் மயோபவே	நம:
ஓம் அநேகஸ்மை	நம:
ஓம் ஸ்ரீமதே	நம:
ஓம் மஹயோகிநே	நம:
ஓம் வத்சரகோடிவிநுதாய	நம:
ஓம் கோடி நைத்ருவ ஸம்வேத்யாய	நம:
ஓம் அத்ரிகோடிஸ்து திக்ரீதாய	நம:
ஓம் இஜ்யாரூபாய	நம:
ஓம் ஓகத்ரயஜநஸ்தோம சேவிதாய	நம:
ஓம் ச்ரேஷ்டரைப்யவந்திதாய	நம:
ஓம் கோடி காச்யப பூஜிதாய	நம:
ஓம் கோடி நைத்ருவஸம் சேவ்யாய	நம:
ஓம் கோடி நைத்ருவ மார்க்கணாய	நம:
ஓம் கோடி நைத்ருவ பாரகாய	நம:
ஓம் கோடிரைப்யசதாவ்ருதாய	நம:
ஓம் மஹாரைப்யகோடி சதஸ்துதாய	நம:
ஓம் கோடிரைப்யை கவிநுதாய	நம:
ஓம் கோடி சாண்டில்ய பாத்ரே	நம:
ஓம் சாண்டில்ய சதசுந்தராய	நம:
ஓம் மஹாயோகிநே	நம:
ஓம் சாண்டில்ய ரக்ஷகாய	நம:
ஓம் மஹாமாநிநே	நம:
ஓம் மௌநிநே	நம:
ஓம் சாண்டில்ய சதபூஜிதாய	நம:
ஓம் மஹாமநஸே	நம:
ஓம் மஹாகர்மிணே	நம:
ஓம் ரேபநுதாய	நம:
ஓம் ரேபாநேகசதாவ்ருதாய	நம:
ஓம் மகாஸ்துதயே	நம:
ஓம் சாண்டில்யஸ்தோம விநுதாய	நம:
ஓம் மஹாபூதாய	நம:
ஓம் மஹாமுநயே	நம:

ஓம் அநேககோடி சாண்டில்ய
சஹஸ்ர கணரக்ஷகாய நம:
ஓம் மகாவர்மணே நம:
ஓம் மகாப்ரபவே நம:
ஓம் மகாக்ரபூதாய நம:
ஓம் மகாதேஜஸே நம:
ஓம் மகாதீராய நம:
ஓம் மகாசுந்தராய நம:
ஓம் மகாதக்ஷாய நம:
ஓம் மகாமாயாய நம:
ஓம் மகாமந்த்ராய நம:
ஓம் மகாபாஹவே நம:
ஓம் மகாசித்தயே நம:
ஓம் மகாதீவ்ராய நம:
ஓம் மகாகாந்தாய நம:
ஓம் மகாமந்த்ராய நம:
ஓம் மகாயந்த்ராய நம:
ஓம் மகாக்ஞாநிநே நம:
ஓம் மகாதாந்தாய நம:
ஓம் மகாதந்தராய நம:
ஓம் மகாநிதயே நம:
ஓம் மகாமஹஸே நம:
ஓம் மகாவித்யாய நம:
ஓம் மகாஸத்வவதே நம:
ஓம் மகாலயாய நம:
ஓம் மகாநாதாய நம:
ஓம் மகோச்ரயாய நம:
ஓம் மகாக்ரதவே நம:
ஓம் மகாக்கரணயே நம:
ஓம் மகாசார்யாய நம:
ஓம் மகாகர்மணே நம:
ஓம் அத்புதாய நம:
ஓம் மகத்பக்ஷாய நம:
ஓம் மகாச்வத்தாக்ரகாய நம:
ஓம் ஸத்ரிணே நம:
ஓம் மந்த்ரக்ராமவிபூஷணாய நம:
ஓம் கோட்யாகமநுதாய நம:
ஓம் க்ரமாய நம:
ஓம் கோட்யௌஷதாய நம:
ஓம் கோடீய சிவக்ரதவே நம:
ஓம் வேதஸத்ரிணே நம:
ஓம் க்ஷீத்ர சாஸ்த்ர சதாகீர்ணாய நம:
ஓம் கோடி ஸ்திரீக்ருத வேதாய நம:
ஓம் கோடி காமப்ரபூரகாய நம:
ஓம் கோடிபிஷஜே நம:
ஓம் வக்ராய நம:
ஓம் அநகாய நம:
ஓம் வ்யாக்ராய நம:
ஓம் கோடிசாஸ்த்ர சதாவ்ருதாய நம:
ஓம் காமக்நாய நம:
ஓம் நிகமகோடி சதாவ்ருதாய நம:
ஓம் ஸத்ரிகண்டாய நம:
ஓம் ஸத்ரிவிலோசநாய நம:
ஓம் கோடிவ்யாஸைகவிநுதாய நம:
ஓம் க்ருதாய நம:
ஓம் அத்யுக்ராய நம:
ஓம் கோடிகந்தர்ப்பவரதாய நம:
ஓம் ஷட்சாஸ்த்ரகோடி விநுதாய நம:
ஓம் க்ஞாநிநே நம:
ஓம் சப்தகோடி மகாமந்த்ரவிநுதாய நம:
ஓம் க்ஞாநவித்தமாய நம:
ஓம் ஸ்த்யாங்காய நம:
ஓம் நீசசைன்யகதக்ஷ பணசீர்ஷகாய நம:
ஓம் வஸ்த்ரீகாய நம:
ஓம் க்ஞாந யுக்தாய நம:
ஓம் சரக்சந்த்ர நிபாக்ருதயே நம:
ஓம் பூதிதாய நம:
ஓம் சதஸத்ரிஸத்ராய நம:
ஓம் பூதிபூஷிதஸர்வாங்காய நம:
ஓம் சங்காரயே நம:
ஓம் பூதிபாவநாய நம:
ஓம் ஸ்திரீதராய நம:
ஓம் ப்ருஹ்மக்ருபாய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் பாலிதாகிலகீர்வாண
பக்தவிச்வ சிவத்விஜாய நம:

ஓம் காருண்யதிவ்யலாவண்யதாருண்யா மோதசேவதயே நம:
ஓம் சச்சிதாநந்த லக்ஷணாய நம:
ஓம் ப்ருஹ்மிபூஷிதமாநஸாய நம:
ஓம் ப்ருஹ்மீக்ருதாகிலா சாராய நம:
ஓம் அகௌக பய தாயகாய நம:
ஓம் மேகசுக்ல கலாபாய நம:
ஓம் நராய நம:
ஓம் ககாய நம:
ஓம் மேயாய நம:
ஓம் வ்யாஸாய நம:
ஓம் கஸ்மை நம:
ஓம் பவநௌகாய நம:
ஓம் நயாய நம:
ஓம் காலாக்நிருத்ராய நம:
ஓம் அவநயாய நம:
ஓம் ஜயாய நம:
ஓம் த்யாநாய நம:
ஓம் விதாநாய நம:
ஓம் அசராய நம:
ஓம் த்யேயாய நம:
ஓம் அவநயாய நம:
ஓம் ஓஜஸ்தாராய நம:
ஓம் நச்வராய நம:
ஓம் விஷதராய நம:
ஓம் யஸ்மை நம:
ஓம் நவீநமகாய நம:
ஓம் க்ருபகோடி நிஷேவிதாய நம:
ஓம் பலிகோடிக்ருதஸ் தோத்ராய நம:
ஓம் கோடி காகுஸ்த பூஜிதாய நம:
ஓம் பலிகோடி சதாவ்ருதாய நம:
ஓம் கோடிகந்தர்ப்பவாரகாய நம:
ஓம் பலிகோடி ப்ரபூஜிதாய நம:
ஓம் கோடி கந்தர்ப்ப-மாரகாய நம:
ஓம் மாருத்யநேக கோடீட்யாய நம:
ஓம் கோடி கந்தர்ப்பலாவண்யாய நம:
ஓம் அச்வத்தாமசதாகீர்ணாய நம:
ஓம் கோடிகந்தர்ப்பதாரகாய நம:

ஓம் மாருதிஸ்துதி பாத்ரகாய நம:
ஓம் காகுஸ்தசத கோடீட்யாய நம:
ஓம் கோடிக்ருஷ்ண நிஷேவிதாய நம:
ஓம் க்ருஷ்ண கோடி சதா கீர்ணாய நம:
ஓம் கோடி பலராமௌ கவந்திதாய நம:
ஓம் கோடீபலசதஸ்துத்யாய நம:
ஓம் யக்ஞப்ரியாய நம:
ஓம் மாருதஸ்துதிபாத்ரகாய நம:
ஓம் யமாய நம:
ஓம் யக்ஞரூபாய நம:
ஓம் யக்ஞாங்காய நம:
ஓம் விபூஷணப்ரதாய நம:
ஓம் யக்ஞவாஹாய நம:
ஓம் அநேககோடி பரசுராமைப்ரபூஜிதாய நம:
ஓம் யக்ஞகம்யாய நம:
ஓம் ராமவிநுதாய நம:
ஓம் யக்ஞபலாய நம:
ஓம் யக்ஞபூஷிதாய நம:
ஓம் ரதிகோடி வரப்ரதாய நம:
ஓம் யக்ஞரம்யாய நம:
ஓம் யக்ஞபூஷிதாய நம:
ஓம் ரதிகோட்யௌகவிநுதாய நம:
ஓம் யக்ஞாய நம:
ஓம் யக்ஞக்ஞேயாய நம:
ஓம் யக்ஞவந்த்யாய நம:
ஓம் யக்ஞபாத்ராய நம:
ஓம் யக்ஞபாலகாய நம:
ஓம் அயமாய நம:
ஓம் யக்ஞபராய நம:
ஓம் தத்ஞாய நம:
ஓம் காவேரிதீர வாஸிநே நம:
ஓம் லோபாமுத்ராகோடி விநுதாய நம:
ஓம் காவேரி சதபூஜிதாய நம:
ஓம் லோபாமுத்ராசதாவ்ருதாய நம:
ஓம் கடோத் பவசதஸ்துதாய நம:
ஓம் அச்வப்ரியாய நம:

ஓம் அஸ்மை நம:
ஓம் கடோத்பவசதாகீர்ணாய நம:
ஓம் அச்வவந்திதாய நம:
ஓம் அமுஷ்மை நம:
ஓம் தைவக்ஞமாநஸ்வரூபகாய நம:
ஓம் யௌவநப்ரதாய நம:
ஓம் ஜயஸம்வேத்யாய நம:
ஓம் யமாரயே நம:
ஓம் ஸௌஜ்வநே நம:
ஓம் ரேபவந்த்யாய நம:
ஓம் யம்யாய நம:
ஓம் தஸ்மை நம:
ஓம் ஆதித்யாய நம:
ஓம் ஆதித்யசதபூஷிதாய நம:
ஓம் ஆதயே நம:
ஓம் ஸதயப்ரியாய நம:
ஓம் வேதஸத்மநே நம:
ஓம் யக்ஞிநே நம:
ஓம் ஆதிமதே நம:
ஓம் ஸத்யதர்மாய நம:
ஓம் யக்ஞபுஜே நம:
ஓம் ஸத்யாய நம:
ஓம் அநாதயே நம:
ஓம் ஸதயசங்கல்ப்பாய நம:
ஓம் கோட்யாதித்யௌக வந்திதாய நம:
ஓம் ஸத்யசம்வேத்யாய நம:
ஓம் ஆதித்ய கோடிவரேட்யாய நம:
ஓம் ஸதயகாமாய நம:
ஓம் ஸத்யரூபாய நம:
ஓம் ஸத்யபராய நம:
ஓம் ஸத்யசராய நம:
ஓம் அஸத்யாய நம:
ஓம் ஸநாதநாய நம:
ஓம் ஈச்வராய நம:
ஓம் ஸத்யரதாய நம:
ஓம் ஸத்யகாரகாய நம:
ஓம் ஸத்யேட்யாய நம:
ஓம் ஸத்யதந்த்ராய நம:
ஓம் ஸத்யகர்மணே நம:
ஓம் ஸதாச்ரயாய நம:
ஓம் ஸர்வேச்வராய நம:
ஓம் ஸத்யவாசே நம:
ஓம் ஸப்ததந்தவே நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸதா சிவாய நம:
ஓம் ஸர்வஹராய நம:
ஓம் நிர்விகல்ப்பாய நம :
ஓம் கதாங்குராய நம :
ஓம் தக்ஷயக்ஞவிநாசகாய நம :
ஓம் நித்யாய நம :
ஓம் தக்ஷாய நம :
ஓம் ஸர்வபூதஸ்துதாய நம :
ஓம் நிராதாராய நம :
ஓம் தக்ஷகாரகாய நம :
ஓம் தக்ஷவாசே நம :
ஓம் நிராச்ரயாய நம :
ஓம் தக்ஷபாராய நம :
ஓம் ஸர்வபாலாய நம :
ஓம் மஹாதக்ஷாய நம :
ஓம் அதிதக்ஷாய நம :
ஓம் ஸம்சயக்நே நம :
ஓம் நிராநந்தாய நம :
ஓம் நிர்ப்பேதாய நம :
ஓம் அநேககோட்யுபநிஷத் ப்ருந்தஸம்ஸ்துத பதாங்குலயே நம :
ஓம் அநோககோடி ருஷய நிஷாதப்ருந்தஹஸ்த பத்மாங்குலிசயாய நம :
ஓம் மநோந்மநாய நம :
ஓம் கோடி காண்டர்ஷி வந்திதாய நம :
ஓம் அநேககோடி ஸூர்யேட்யாய நம :
ஓம் கண்டர்ஷிகோடி விநுதாய நம :
ஓம் பேதக்நே நம :
ஓம் நிர்த்துவந்த்வாய நம :

ஓம் நிர்ப்பவாய நம :
ஓம் நிமயே நம :
ஓம் அநேககோடி குருக்ருதே நம :
ஓம் குருகோடி சதாவ்ருதாய நம :
ஓம் கோடிப்ரஹ்மஸ்துதாய நம :
ஓம் நூதநகுணாகராய நம :
ஓம் அநேககோடிபுதக்ருதே நம :
ஓம் புதகோடி நிஷேவிதாய நம :
ஓம் தர்ப்பத்வதூஷகாய நம :
ஓம் நித்யாய நம :
ஓம் நாசரகிதாய நம :
ஓம் வந்த்யவேத்யாய நம :
ஓம் தர்ப்பத்வம்ஸகராய நம :
ஓம் நிர்நாசாய நம :
ஓம் மந்தாய நம :
ஓம் குருகோடிஸ்துதாய நம :
ஓம் மஹாகௌராய நம :
ஓம் வந்த்யவந்த்யாய நம :
ஓம் அநந்தநுதாய நம :
ஓம் மந்தகோடி நிஷேவிதாய நம :
ஓம் மந்தகோடி சதாகீர்ணாய நம :
ஓம் நிர்மதாய நம :
ஓம் மதக்நே நம :
ஓம் சந்த்ரகோடிஸமாக்ருதயே நம :
ஓம் வந்த்யாவந்த்யாய நம :
ஓம் கோடிசந்த்ரப்ரபூஜிதாய நம :
ஓம் குருகோடி வரப்ரதாய நம :
ஓம் சந்த்ரகோடி சதாகீர்ணாய நம :
ஓம் ராகுகோடி சதாவ்ருதாய நம :
ஓம் தாராய நம :
ஓம் இரம்மதாய நம :
ஓம் மதக்நே நம :
ஓம் வந்திதாய நம :
ஓம் கோடிசூர்யப்ரதீகாசாய நம :
ஓம் தர்ப்பத்வதூஷிதாய நம :
ஓம் கோடிசூர்யவிதூஷகாய நம :
ஓம் நாத்யாய நம :
ஓம் ஸ்துதாய நம :

ஓம் புத்தாய நம :
ஓம் கோடிசூர்யசதாகீர்ணாய நம :
ஓம் பௌமகோடி சதாகீர்ணாய நம :
ஓம் கோடிசூர்யப்ரபூஜிதாய நம :
ஓம் புதரக்ஷகாய நம :
ஓம் க்ருதாய நம :
ஓம் கோடிபௌமவரப்ரதாய நம :
ஓம் குருக்நே நம :
ஓம் மஹேசாய நம :
ஓம் குருமத்கோடி வரதாய நம :
ஓம் குருராஜே நம :
ஓம் குஹாச்ரயாய நம :
ஓம் கோடி புதஸ்துதாய நம :
ஓம் பௌத்தக்நே நம :
ஓம் கம்புகண்டாய நம :
ஓம் காகக்நே நம :
ஓம் கோத்ரவாஸாய நம :
ஓம் கோத்ரதராய நம :
ஓம் ஸாராய நம :
ஓம் ஆகமேட்யாய நம :
ஓம் ச்ரேஷ்டாய நம :
ஓம் கங்காரூபாய நம :
ஓம் அதர்மநாசகாய நம :
ஓம் சராய நம :
ஓம் ஹராய நம :
ஓம் கண்டகக்நே நம :
ஓம் கஜகுரவே நம :
ஓம் ஈஹிதார்த்ததாய நம :
ஓம் பாராவாராய நம :
ஓம் சத்ராகாராய நம :
ஓம் ஜடிலாய நம :
ஓம் கண்டபரசவே நம :
ஓம் ஹராய நம :
ஓம் வக்ரதராய நம :
ஓம் போக்த்ரே நம :
ஓம் தர்மாய நம :
ஓம் பித்ரே நம :
ஓம் ஈசேசாய நம :

ஓம் வியந்நேத்ராய நம :
ஓம் பாத்ரே நம :
ஓம் போக்த்ரே நம :
ஓம் விமலபீஜாய நம :
ஓம் ஜகத்ப்ரபவே நம :
ஓம் ஹோத்ரே நம :
ஓம் மந்த்ரிணே நம :
ஓம் ஜலந்தராரயே நம :
ஓம் சிவாய நம :
ஓம் பூதாய நம :
ஓம் ஸமாகாரய நம :
ஓம் சதமந்யவே நம :
ஓம் கார்யாய நம :
ஓம் காரணாய நம :
ஓம் ஈட்யேட்யாய நம :
ஓம் ஸாத்யாய நம :
ஓம் க்ருபாய நம :
ஓம் நிகமநாய நம :
ஓம் உக்ராய நம :
ஓம் சந்த்ரபூஷ்ணாய நம :
ஓம் யதயே நம :
ஓம் விசங்கடாய நம :
ஓம் ஸர்ப்பக்ருதே நம :
ஓம் பவ்யாய நம :
ஓம் கோடிகேதுக்ருதஸ் தோத்ராய நம :
ஓம் கோடிகேதுப்ரபாலகாய நம :
ஓம் புதகோடிநிஷேவிதாய நம :
ஓம் அநேககோடி புதக்ருதே நம :
ஓம் காவ்யகோடி சதாகீர்ணாய நம :
ஓம் காவ்யகோடி நிஷேவிதாய நம :
ஓம் நித்யோத்பவாய நம :
ஓம் அமலாய நம :
ஓம் நிர்ப்பயாய நம :
ஓம் பவிஷ்யதே நம :
ஓம் நித்யநித்யாய நம :
ஓம் ஸாதவே நம :
ஓம் ஸாதகாய நம :
ஓம் க்ரீடாபராய நம :
ஓம் சுகிநே நம :
ஓம் புருஹூதாய நம :
ஓம் மதிமதே நம :
ஓம் கணாக்ரண்யாய நம :
ஓம் ப்ரத்யக்ராய நம :
ஓம் ஸமக்ராய நம :
ஓம் புருஷ்டுதாய நம :
ஓம் ஷண்முகேச்வராய நம:
ஓம் புரந்தராய நம :
ஓம் கலாதராய நம :
ஓம் மருத்ஸகாய நம :
ஓம் தநஞ்ஜயஸ்துதாய நம :
ஓம் காலகாலாய நம :
ஓம் தர்விந்த்ர சதாகீர்ணாய நம :
ஓம் கோடீந்த்ர வரபூஜிதாய நம :
ஓம் இந்த்ரகோடி சதாவ்ரிதாய நம :
ஓம் அக்நிகோடி சதாகீர்ணாய நம :
ஓம் ஸ்வாமிநே நம :
ஓம் மஹாஸ்வாமிநே நம :
ஓம் மஹாமருத்வகோடீட்யாய நம :
ஓம் கோடிமருத்வவந்திதாய நம :
ஓம் வாயுவிக்ரஹாய நம:
ஓம் வருணப்ராணரக்ஷகாய நம :
ஓம் வாயுரூபாய நம :
ஓம் வாயுகோடீட்யாய நம :
ஓம் ப்ருத்யகோடி நிஷேவிதாய நம :
ஓம் வ்யாளரூபாய நம :
ஓம் கோடிஸ்ரீதேவிப்ரபூஜிதாய நம :
ஓம் வாயுவாயவே நம :
ஓம் குபேரமித்ராய நம :
ஓம் அருணேட்யாய நம :
ஓம் வாயுகோடிநிஷேவிதாய நம :
ஓம் மித்ரகோடி ப்ரபூஜிதாய நம :
ஓம் வாயுகோடி சதாகிர்ணாய நம :
ஓம் வாயுதாய நம :
ஓம் வந்ஹிவந்ஹயே நம :
ஓம் மஹாவருணதாய நம :

ஓம் மித்ரச்ரியே நம :
ஓம் மஹாபயங்கராய நம :
ஓம் ஸுர்யஸுர்யாய நம :
ஓம் சந்த்ரசந்த்ராய நம :
ஓம் காமகாமாய நம :
ஓம் ஸ்வாஹாய நம :
ஓம் அபாம்பதிஸஹஸ்ரேட்யாய நம :
ஓம் ப்ரக்ருதாய நம :
ஓம் ப்ரஹர்த்ரே நம :
ஓம் சூர்ய கோடிப்ரதீகாசாய நம :
ஓம் சந்த்ரகோடி ஸுசீதளாய நம :
ஓம் சுகப்ப்ரும்மப் ருஹ்மணே நம :
ஓம் ரேஷ்ம்யாய நம :
ஓம் வாமதேவாய நம :
ஓம் ஆருத்ரருத்ராய நம :
ஓம் ராஜராஜாய நம :
ஓம் அக்ந்யக்நயே நம :
ஓம் அநலாய நம :
ஓம் விஷ்ணுவிஷ்ணவே நம :
ஓம் சிஷ்யசிஷ்யாய நம :
ஓம் ஹர்யச்வாய நம :
ஓம் ப்ரியப்ரியாய நம :
ஓம் க்ரூரக்ரூராய நம :
ஓம் ஜ்யேஷ்டாய நம :
ஓம் விபுவிபவே நம :
ஓம் அலஸாய நம :
ஓம் ஸாலாய நம :
ஓம் அண்டநிலயாய நம :
ஓம் மித்ரமித்ராய நம :
ஓம் அநந்தாநந்தாய நம :
ஓம் அக்நிகோடிமஹத்தாம்நே நம :
ஓம் கோடிப்ரம்மாண்டசரணாய நம :
ஓம் அண்டாந்தாய நம :
ஓம் ஹிடிம்பிநிஷேவிதாய நம :
ஓம் லேசலேசாய நம :
ஓம் அண்டகாரகாய நம :
ஓம் காமகோடிப்ரகாசகாய நம :
ஓம் இஷ்டாய நம :

ஓம் அண்டச்ரியே நம :
ஓம் கோடிஹிடிம்பிஸம்வேத்யாய நம :
ஓம் மஹாஜாலந்தரஸ்துதாய நம :
ஓம் அந்த்யமித்ராய நம :
ஓம் ஸ்ரீசகோடிஸமாய நம :
ஓம் ஸ்ரீசகோடிகோடி
சதாவ்ருதாய நம :
ஓம் அண்டரூபதராய நம :
ஓம் கோடிப்ரும்மாண்ட நாயகாய நம :
ஓம் காண்டாய நம :
ஓம் அஞ்சிதாக்ருதயே நம :
ஓம் சிந்தகாய நம :
ஓம் வேதவேத்யாய நம :
ஓம் ருத்ரகோடிவந்திதாய நம :
ஓம் அசிச்சிதே நம :
ஓம் லவலவாய நம :
ஓம் யாமயாமாய நம :
ஓம் சிரந்தநாய நம:
ஓம் சராசராக்ருதயே நம :
ஓம் ஹ்ருதச்சிதே நம :
ஓம் சராதிபூதிதாய நம :
ஓம் விச்வவிச்வாய நம :
ஓம் இதரேட்யாய நம :
ஓம் வேதகாய நம :
ஓம் நச்யநச்யாய நம :
ஓம் மஹாப்ரபவே நம :
ஓம் ஏகைகாய நம :
ஓம் கநாகநாய நம :
ஓம் ப்ருஹத்ப்ரஹதே நம :
ஓம் ஸத்யஜிதே நம :
ஓம் ப்ரஸந்நேக்ஷணாய நம :
ஓம் ம்ருத்யும்ருத்யவே நம :
ஓம் ஸக்யை நம :
ஓம் ஸேநாந்யை நம :
ஓம் ச்யேநஜித்கோடி வந்திதாய நம :
ஓம் வந்த்யமித்ராய நம :
ஓம் தாத்ரே நம :
ஓம் ஸுஷேணஜிதே நம :

ஓம் ஸுஷேணஜித்வந்திதாய நம :
ஓம் ஸைந்யஸித்தயே நம :
ஓம் தேவாதிபதயே நம :
ஓம் வ்ருஷபத்வஜாய நம :
ஓம் ச்யேநசிதயே நம :
ஓம் தருணாய நம :
ஓம் ஸ்தால்யாய நம :
ஓம் தல்ப்யாய நம :
ஓம் வந்த்யமித்ரக்நே நம :
ஓம் தத்கோடிப்ருந்த சதஸ்துதாய நம :
ஓம் ஹிதார்யரயே நம :
ஓம் ஹிதார்யரிகோடி கோடி சதாவ்ருதாய நம :
ஓம் சுகவிதர்த்த நேசசதா வ்ருதாய நம :
ஓம் சதகோடி ஸப்யவந்திதாய நம :
ஓம் சதசப்யாய நம :
ஓம் ஸப்யஸமாக்ருதயே நம :
ஓம் பிக்ஷுரூபாய நம :
ஓம் ஸப்யேசாய நம :
ஓம் அக்நிஹோத்ராய நம :
ஓம் வந்ஹிரூபவிக்ரஹாய நம :
ஓம் ஸத்பார்யாய நம :
ஓம் கபாலசத இஷ்டச்ரியே நம :
ஓம் சூர்ப்பாக்ருதயே நம :
ஓம் சம்யாக்ருதயே நம :
ஓம் கபாலவிந்மாநஸாய நம :
ஓம் ஸத்த்ருநாதாய நம :
ஓம் உபலஸாதகாய நம :
ஓம் கபாலசதமாநஸாய நம :
ஓம் ஸேநாக்ரண்யை நம :
ஓம் முஸலாக்ருதயே நம :
ஓம் க்ருஷ்ணாஜிநப்ரியாய நம :
ஓம் க்ருஷ்ணாஜிநரூபாய நம :
ஓம் சுப்ரசூர்ப்பகோடி வந்திதாய நம :
ஓம் யக்ருபூதிமதே நம :
ஓம் சூர்ப்பஸ்வரூபவதே நம :
ஓம் மஹாசம்யாய நம :
ஓம் இஷ்டகாக்ருதயே நம :
ஓம் சுப்ரோலூகலஸுவிக்ரஹாய நம :
ஓம் உலூ கலிசதாராத்யாய நம :
ஓம் ஸ்வங்குலயே நம :
ஓம் ஸுபெதாய நம :
ஓம் சம்யாவரகோடி வந்திதாய நம :
ஓம் ப்ரதுபாஹவே நம :
ஓம் முஸலிநே நம :
ஓம் ஸோமஸம்வேத்யாய நம :
ஓம் உபப்ருத்கோடிசதபூஜிதாய நம :
ஓம் உபப்ருத்ஸாதநாய நம :
ஓம் உபப்ருத்விக்ரஹாய நம :
ஓம் ஸுபொக்ருதயே நம :
ஓம் ஸுபிஸ்துத்யாய நம :
ஓம் த்ரிஸர்க்காய நம :
ஓம் த்ருஷத்வேஷாய நம :
ஓம் சுக்ரியஸ்தாய நம :
ஓம் சுக்ரியாரூபாய நம :
ஓம் த்ருஷத்வத் கோடி வந்திதாய நம :
ஓம் த்ருவாக்ருதயே நம :
ஓம் மஹாஜுஹெவெத்கண வந்திதாய நம :
ஓம் ஜுஹெவொக்ருதயே நம :
ஓம் பவ்யாக்ருதயே நம :
ஓம் வேதரூபாய நம :
ஓம் தூர்வாஸஸே நம :
ஓம் வேதக்ருதே நம :
ஓம் அநந்தாக்ருதயே நம :
ஓம் ப்ரணீதிபரிராக்ஷகாய நம :
ஓம் த்ருவாவரகோடி விநுதாய நம :
ஓம் பஹ்வ்ருக்ரூபாய நம :
ஓம் த்ருவாவரகோடி ரக்ஷகாய நம :
ஓம் பஹ்வ்ருஷிமத்கோடி பாய நம :
ஓம் த்ருவாவரகோடி சரணாய நம :
ஓம் ப்ரணீதிவிநுதபதாய நம :
ஓம் மஹாபஹ்வ்ருஷிமத் கோடிக்நாய நம :
ஓம் ப்ருக்வங்கிரஸவிக்ரஹாய நம :
ஓம் த்ருவாவரகோடி ஸ்மாரகாய நம :

ஓம் ப்ரணீதிசதவந்திதாய நம :

ஓம் பாதரிபாத்ராய நம :

ஓம் பாத்திரீவதே நம :

ஓம் ப்ருக்வாங்கிரஸஹஸ்ரப்ர பூஜிதாய நம :

ஓம் வேதஸாதகாய நம :

ஓம் வேதபாய நம :

ஓம் இடாபக்ஷண ஸம்ப்ரீதாய நம :

ஓம் இடாரூபாய நம :

ஓம் வேதிஸமாச்ரயாய நம :

ஓம் பாத்ரிவிநுதாய நம :

ஓம் இதமாக்ருதயே நம :

ஓம் வேதீயபதவந்த்யாய நம :

ஓம் சமஸாக்ருதயே நம :

ஓம் இளாரூபாய நம :

ஓம் மஹாபஹ்வ்ருஷிமதீநுதாய நம :

ஓம் ருக்மாக்ருதயே நம :

ஓம் இடாகாயாய நம :

ஓம் இடாவரபாய நம :

ஓம் இடாஸ்தாநாய நம :

ஓம் இடாபக்ஷணவிசக்ஷணாய நம :

ஓம் க்ராவ்ணே நம :

ஓம் க்ராவப்ரியாய நம :

ஓம் இடாவிநுதபாதகாய நம :

ஓம் இத்மாதாராய நம :

ஓம் அநலபதாய நம :

ஓம் இடாவரகோடிவந்திதாய நம :

ஓம் ருக்மபாத்ராய நம :

ஓம் மகாதிஷ்ண்ய விக்ரஹாய நம :

ஓம் மகாச்ம கோடிபாய நம :

ஓம் மகாதிஷ்ண யஸம்வீதாய நம :

ஓம் அக்ராஸிநே நம :

ஓம் மஹாதிஷவணேச்வராய நம :

ஓம் வேதிவத்கோடிபத வந்திதாய நம :

ஓம் மகோபலவிக்ரஹாய நம :

ஓம் சமஸாக்ருதயே நம :

ஓம் க்ராவவிக்ரஹாய நம :

ஓம் மகாதிஷவணநித்யாய நம :

ஓம் ஸ்ருமகோடிவந்திதாய நம :

ஓம் மஹோபவீதஸம்வீதாய நம :

ஓம் வாயவ்யஸாதகாய நம :

ஓம் மஹாத்ரோணவிராஜ ச்க்ரியே நம :

ஓம் ஸ்ருவரூபாய நம :

ஓம் க்ராவஸாதகாய நம :

ஓம் வாயவ்யஸஹஸ்ர நிஷேவிதாய நம :

ஓம் ஸ்ரீமதே நம :

ஓம் ஸோமஹாத்ரோண விக்ரஹாய நம :

ஓம் அக்நீத்ரவிக்ரஹாய நம :

ஓம் க்ரஹபவித்ராய நம :

ஓம் ஸோமஹாதப நீயாங்காய நம :

ஓம் ஸோமஹாதபநீயகாய நம :

ஓம் க்ருஹ்யாய நம :

ஓம் ஸ்வாஹாகாராய நம :

ஓம் ஸோமஹாபூதரப்ருதே நம :

ஓம் க்ராஹ்யாய நம :

ஓம் க்ரஹாக்ருதயே நம :

ஓம் ஸோமஹாவரப்ரதா காராய நம :

ஓம் புராணாய நம :

ஓம் பூதபூதாய நம :

ஓம் ஸ்ரக்விதே நம :

ஓம் க்ரஹாராதயே நம :

ஓம் க்ரஹக்ரஹாய நம :

ஓம் ஸோமஹாதபநீயாங்காய நம :

ஓம் ஸதோரூபாய நம :

ஓம் ஸதஸ்தாநாய நம :

ஓம் ஸோப்ரஜேசாய நம :

ஓம் சுசயே நம :

ஓம் ஸதோமித்ராய நம :

ஓம் ஸத:காயாய நம :

ஓம் வேதவேட்யாய நம :

ஓம் ஸத:பாத்ராய நம :

ஓம் சிராதிகாய நம :

ஓம் தக்ஷிணாக்நிரூபாய நம :

ஓம் க்ரஹராஜாய நம :

ஓம் தேவகோடிபாய நம :

ஓம் கார்ஹபத்யாக்ருதயே நம :

ஓம் பூஷ்ணே நம :

ஓம் சிபிவிஷ்டாய நம :

ஓம் ஸ்தோதராய நம :

ஓம் ஸ்தாகதயே நம :

ஓம் புரோடாசாச்ரயாய நம :

ஓம் பயஸே நம :

ஓம் சாத்வாலரூபாய நம :

ஓம் மந்த்ரஜிஹ்வாய நம :

ஓம் ப்ரஜாபதயே நம :

ஓம் புரோடாஸமஹாபோக்த்ரே நம :

ஓம் ஓங்சுகோடீட்யாய நம :

ஓம் சாத்வாலஸம்ஸ்தாய நம :

ஓம் மந்த்ராச்ரயாய நம :

ஓம் ராயஸ்போஷாய நம :

ஓம் சதவீர்யாய நம :

ஓம் வைச்வதேவாய நம :

ஓம் மஹாசாலமுக்யாய நம :

ஓம் இரம்மதாய நம :

ஓம் மந்திரஸாராய நம :

ஓம் தாத்ரே நம :

ஓம் அசுராதீசாய நம :

ஓம் மத்ஸ்யாய நம :

ஓம் மத்ஸ்யாதிநே நம :

ஓம் அர்யம்ணே நம :

ஓம் வருணாய நம :

ஓம் ஸுந்தராகாராய நம :

ஓம் ஆகதாய நம :

ஓம் ஸுப்ரதீக்யாதாய நம :

ஓம் ஹவிர்ப்பூதாய நம :

ஓம் அதிபதயே நம :

ஓம் ச்ரியச்ரியெ நம :

ஓம் விச்வப்ரியாய நம :

ஓம் கீதாய நம :

ஓம் அநுக்ஷணாய நம :

ஓம் உபநிஷத்பக்ஷாய நம :

ஓம் ஆசவே நம :

ஓம் திவ்யசதச்ரியே நம :

ஓம் ஆஹுதாய நம :

ஓம் ஸோமப்ரியாய நம :

ஓம் ந்ருஷத்ஸாரோஜ்வலநாய நம :

ஓம் அத்புதாய நம :

ஓம் ஸூத்ரஸங்கதாய நம :

ஓம் பப்லுசாய நம :

ஓம் தீபாகாராய நம :

ஓம் ஸோமபோக்த்ரே நம :

ஓம் த்ருப்தாய நம :

ஓம் ச்வேதரூபவதே நம :

ஓம் ஸோமாக்ருதயே நம :

ஓம் ஸ்வராகாராய நம :

ஓம் ஸுமஹாசுபகாரகாய நம :

ஓம் ஸலிலாய நம :

ஓம் க்லிச்யமாநாய நம :

ஓம் நித்யகர்மைகபலதாய நம :

ஓம் நித்யகர்மப்ரியாய நம :

ஓம் தாத்ரே நம :

ஓம் ஸமுத்ராய நம :

ஓம் ஸௌம்யாய நம :

ஓம் க்ஷராய நம :

ஓம் க்ரௌர்யாய நம :

ஓம் க்ரீதாய நம :

ஓம் ஹவிர்முகாய நம :

ஓம் ஹூயமாநாய நம :

ஓம் நீலவர்ணாய நம :

ஓம் நித்யகல்யாணசரணாய நம :

ஓம் அருணாய நம :

ஓம் அபாபப்ரியாய நம :

ஓம் நித்யகல்யாணஸம்பந்நாய நம :

ஓம் அங்கஹோமஸ்ரீகராய நம :

ஓம் நித்யகல்யாணகாரகாய நம :

ஓம் ஹ்ருத்ரோகரஹிதாய நம :

ஓம் கவயே நம :

ஓம் நித்யகல்யாணரூபவதே நம :

ஓம் விசங்கடாய நம :

ஓம் சித்ராய நம :
ஓம் பக்ததர்சிதலாஸ்யச்ரியெ நம :
ஓம் க்ருஷ்ணாய நம :
ஓம் ச்வேதாய நம :
ஓம் பாத்ரிஹ்ருதயாய நம :
ஓம் க்ருஷ்ணாய நம :
ஓம் ச்வேதாய நம :
ஓம் பக்ததர்சிதந்ருத்தச்ரியே நம :
ஓம் சிவாப்ரியாய நம :
ஓம் ஸ்வதந்த்ராய நம :
ஓம் பவ்யமண்டபமத்யகாய நம :
ஓம் கல்யாணாக்ருதயே நம :
ஓம் சிவரூபாய நம :
ஓம் ஸர்வாநந்தைகஜநகாய நம :
ஓம் அதிகோமளாய நம :
ஓம் ஸர்வாதாராய நம :
ஓம் ஸர்வவரதாய நம :
ஓம் வர்ணிரூபாய நம :
ஓம் ஸமதாண்டவராஜாய நம :
ஓம் ஸர்வதர்சிதகல்யாணாய நம :
ஓம் ஸர்வா பீஷ்டப்ரதாயகாய நம :
ஓம் ஸர்வதர்சிதமங்களாய நம :
ஓம் ஜப்தஸர்வமஹாமந்த்ராய நம :
ஓம் க்ருதபூஷாய நம :
ஓம் ஓங்காரவபுஷே நம :
ஓம் ஓங்காராய நம :
ஓம் த்ருதகௌரீ புஜாந்தராய நம :
ஓம் மஹாஜபபல்ப்ரதாய நம :
ஓம் ஸௌர்ம்யரூபாய நம :
ஓம் கல்யாணகாரகாய நம :
ஓம் இஷ்டதாய நம :
ஓம் த்ருதமாத்ருகாய நம :
ஓம் மஹாதாண்டவபண்டிதாய நம :
ஓம் தேவதர்சிததாண்டவராய நம :
ஓம் கௌரீப்ரதர்சித மஹா தாண்டவாய நம :
ஓம் ஸர்வபூததாம்நே நம :
ஓம் மஹாகல்யாண நிகேதஸ்தாய நம :

ஓம் தண்டுமா நஸாய நம :
ஓம் ஸர்வதர்சிதநாட்யகாய நம :
ஓம் க்ருதப்ரம்மோத்ஸவச்ரியெ நம :
ஓம் ஸகலாபந்நிவாரகாய நம :
ஓம் க்ருததிவ்யமஹோத்ஸவாய நம :
ஓம் ஸ்மேராநநாய நம :
ஓம் லஸத்தாஸ்யாய நம :
ஓம் ப்ரபத்த்யாய நம :
ஓம் ந்ருத்தகௌரீதிவ்ய லாஸ்யப்ரதாய நம :
ஓம் பலப்ரமதநாய நம :
ஓம் பவித்ரகரஸௌந்தராய நம :
ஓம் தர்ப்பசயாய நம :
ஓம் புத்ரவாக்யக்ருதாசேஷ நம :
ஓம் பக்ததர்மாதிவாக்யகாய நம :
ஓம் பூதவாரிதயே நம :
ஓம் லீலாபராய நம :
ஓம் பூதவாஹநாய நம :
ஓம் தத்வாக்யஸ்தாபித மஹாபூதவர்யாய நம :
ஓம் வாமதேவாய நம :
ஓம் கல்யாணாஸநஸம்ருடப்ரியாதக்ஷிணபாககாய நம :
ஓம் ஸத்யோஜாதாய நம :
ஓம் தஸ்யாஸ்ரீகந்தபாக்யாய நம :
ஓம் ஸ்தாபிதாசேஷகல்யாண தைவதாய நம :
ஓம் மஹாச்ரயாய நம :
ஓம் துர்த்தராய நம :
ஓம் லக்ஷ்மிசகோச்ரயாய நம :
ஓம் நாயகாச்ரயாய நம :
ஓம் துந்துப்யாய நம :
ஓம் ஸ்தாபிதாசேஷ நிதிகாய நம :
ஓம் மருதே நம :
ஓம் கோராதிகாய நம :
ஓம் தத்புருஷாக்ருதயே நம :
ஓம் அஷ்டச்ரியே நம :
ஓம் குஹாச்ரயாய நம :

ஓம் மஹஸே நம:
ஓம் அஷ்டச்சீகாரகாய நம:
ஓம் கோராய நம:
ஓம் ஸ்தாபிதா சேஷ கல்யாண தைவதாய நம:
ஓம் கோத்ரதராய நம:
ஓம் ஸ்மஸ்தவிபுதா சேஷ தைவதாய நம:
ஓம் பவோத்பவாய நம:
ஓம் ஆவாஹிதாசேஷ பவ்ய நாயகாய நம:
ஓம் ச்ரேஷ்டாய நம:
ஓம் ச்ரேஷ்டதமாய நம:
ஓம் பலவிகரணாய நம:
ஓம் ஸ்வாஹ்ருதா சேஷதே வௌகஸ்துதிக்ரீதாய நம:
ஓம் கலவிகரணாய நம:
ஓம் மநோந்மநாய நம:
ஓம் அகோராய நம:
ஓம் இரிண்யாய நம:
ஓம் ஜாதரூபாய நம:
ஓம் ஸதைகபுவே நம:
ஓம் பவாய நம:
ஓம் ஹ்ருதய்யாய நம:
ஓம் பதிகாசாராய நம:
ஓம் இரிணாக்ருதயே நம:
ஓம் ஸேவ்யாய நம:
ஓம் க்ஷயணாய நம:
ஓம் கிங்சிலாய நம:
ஓம் ஸாராய நம:
ஓம் வாபீகாராயா நம:
ஓம் புருஷாய நம:
ஓம் புலஸ்த்யாய நம:
ஓம் பூரவே நம:
ஓம் தரணாய நம:
ஓம் ரேஷ்ம்யாய நம:
ஓம் ஈசாநகாய நம:
ஓம் க்ருஹ்யாய நம:
ஓம் தல்ப்யாய நம:
ஓம் க்ரஹோத்பவாய நம:
ஓம் க்ருஹரூபாய நம:
ஓம் புருஹூதாய நம:
ஓம் கேஹ்யாய நம:
ஓம் காட்யாய நம:
ஓம் புருஷ்டுதாய நம:
ஓம் நிவேஷ்ப்பாய நம:
ஓம் ராகரஹிதாய நம:
ஓம் ஹரித்யாய நம:
ஓம் ராஜ்யாய நம:
ஓம் அமரேட்யாய நம:
ஓம் உலப்யாய நம:
ஓம் அபிக்நதே நம:
ஓம் ஊர்ம்யாய நம:
ஓம் லோப்யவிக்ரஹாய நம:
ஓம் த்ரயீவர்ணாட்யாய நம:
ஓம் சைவாய நம:
ஓம் வர்ணஸத்யகாய நம:
ஓம் தராய நம:
ஓம் அபிக்நதே நம:
ஓம் அபிக்நாய நம:
ஓம் கூல்யாய நம:
ஓம் வர்ஷ்யாய நம:
ஓம் அபிக்நகோடி நிஷேவிதாய நம:
ஓம் வாஸ்துபாய நம:
ஓம் வாத்யாய நம:
ஓம் கீர்த்திதாய நம:
ஓம் சிவதராய நம:
ஓம் ஹிரண்யபாஹவே நம:
ஓம் பார்யாய நம:
ஓம் சிசுரூபாய நம:
ஓம் சஷ்ப்யாய நம:
ஓம் ஈத்ரியாய நம:
ஓம் ஆதார்யாய நம:
ஓம் தூராய நம:
ஓம் உத்தரணாய நம:
ஓம் ப்ரவாஹ்யாய நம:
ஓம் நிஷங்கிணே நம:

ஓம் ஸ்வாயுதாய	நம :	ஓம் பரிசுத்தாக்ருதயே	நம :
ஓம் ஹந்த்ரே	நம :	ஓம் ஸூதாய	நம :
ஓம் வந்யரூபாய	நம :	ஓம் லாஸ்தவ்யாய	நம :
ஓம் அவார்யரூபாய	நம :	ஓம் சாயிநே	நம :
ஓம் ப்ரக்க்கிததே	நம :	ஓம் ஆதப்யாய	நம :
ஓம் ஸூதந்வநே	நம :	ஓம் த்ரஸதாய	நம :
ஓம் தீக்ஷ்ணேஷவே	நம :	ஓம் க்ஷேத்ரபதயே	நம :
ஓம் கூப்யாய	நம :	ஓம் ரேஷ்ம்யவேஷாட்யாய	நம :
ஓம் ஆலாத்யாய	நம :	ஓம் சசபிஞ்சராஜத் விக்ரஹாய	நம :
ஓம் பிஷக்ராஜாய	நம :	ஓம் விவ்யாதிநே	நம :
ஓம் க்ரந்தநாயகாய	நம :	ஓம் ரோஹிதாய	நம :
ஓம் ஸிகத்யாய	நம :	ஓம் ஸத்வாய	நம :
ஓம் க்ருத்ஸ்நவீதாய	நம :	ஓம் ஹரிகேசாய	நம :
ஓம் கதாதராய	நம :	ஓம் வநஸ்பதயே	நம :
ஓம் ப்ராணாய	நம :	ஓம் ஸேநாந்யே	நம :
ஓம் தீக்ஷ்ணாய	நம :	ஓம் ஸ்தபதயே	நம :
ஓம் வாஸ்துபாய	நம :	ஓம் உபவீதவதே	நம :
ஓம் சர்மாக்ருதயே	நம :	ஓம் மந்த்ரவிக்ரஹாய	நம :
ஓம் தூத்யகர்மவிசாரதாய	நம :	ஓம் ஸத்வரூபபதாதிக்நே	நம :
ஓம் தூதக்ஞாய	நம :	ஓம் கக்ஷாச்ரிதாய	நம :
ஓம் சாந்தைர் நிரதபூஜிதாய	நம :	ஓம் வாணிஜாய	நம :
ஓம் ஸ்வாந்தாய	நம :	ஓம் ஸாரதிக்நே	நம :
ஓம் அவட்யாய	நம :	ஓம் கக்ஷநாதபரிஷ்டுதாய	நம :
ஓம் நாத்யாய	நம :	ஓம் சிகித்ஸகாய	நம :
ஓம் ஸூக்லாக்யாய	நம :	ஓம் தத்வக்ருதே	நம :
ஓம் கூப்யாய	நம :	ஓம் உச்சைர்க்கோஷாய	நம :
ஓம் சைவந்தாய	நம :	ஓம் தர்க்கதூஷகாய	நம :
ஓம் நாப்யாய	நம :	ஓம் தர்க்கதத்வைககண்டநாய	நம :
ஓம் நிராச்ரயாய	நம :	ஓம் ஹரிபஸ்து தவர்ஷ மேட்யாய	நம :
ஓம் ரவ்யத்ரிவாஸாய	நம :	ஓம் பக்தசிந்தாமணியே	நம :
ஓம் ஆத தாயிநே	நம :	ஓம் நீசகோஷாய	நம :
ஓம் ரவ்யாக்ருதயே	நம :	ஓம் மஹாகோஷாய	நம :
ஓம் அவர்ஷ்யாய	நம :	ஓம் பக்தகம்யாய	நம :
ஓம் அவாத்யாய	நம :	ஓம் அத்யாபகாய	நம :
ஓம் மேக்யரூபாய	நம :	ஓம் பக்திமதர்ச்சிதாய	நம :
ஓம் விதுத்யநிக்ரஹாய	நம :	ஓம் வேதாத்யாயிநே	நம :
ஓம் ஸூத்யாய	நம :	ஓம் மஹாவேதாந்ததாத்பர்ய	
ஓம் லாஸ்யரூபாய	நம :	வேதநாய	நம :

ஓம் சர்யாநிலயாய	நம :	ஓம் பூகைலாசஹிதேச்வராய	நம :
ஓம் ஸுமஹாவைதிகப்ரியாய	நம :	ஓம் நிஷ்க்கல்மஷமணீஸ்வராய	நம :
ஓம் வேதகம்யாய	நம :	ஓம் பிப்பலாரண்யநாதாய	நம :
ஓம் சரண்யாய	நம :	ஓம் அர்த்தத்யாகராஜாய	நம :
ஓம் த்ருணரக்ஷகாய	நம :	ஓம் அதுலஸ்தநிகா நாதாய	நம :
ஓம் வேதைகமா நஸாய	நம :	ஓம் வரதகாவேரீதடரூபாய	நம :
ஓம் ஸ்வயம்ப்ரகாச தேவேசாய	நம :	ஓம் ஸ்ரீமத் கோமுத்தீஸ்வர ஸ்வாமிநே	நம :

இவ்வகையான ஆயிரநாம மந்திரார்ச்சனையைச் செய்த திருமால், அயன் முதலான தேவர்கள் சிவபோக மெய்வழி அடைந்து, மிகுந்த இன்பமுடன் தத்தம் வினைக்கடல்களைக் கடந்து நீடித்த நல்வாழ்வு பெற்றனர்.

இத்தகைய மந்திரார்ச்சனையை முறைப்படி செய்து சிவனடி போற்றுவோர்க்கு முத்தியும் கைகூடும்; உலக பந்தங்கள் நீங்கி தீவினைகள் அகலும்; வேண்டியன பெறலாம் ; அருள்பேறு அத்தனையும் கிட்டும்.

முப்பத்தாறாவது
ஒப்பிலா முலையம்மன் ஆடிப்பூரத் திருவிழாக் கொண்டருளிய அத்தியாயம்

1387. ஆரணம் ஓது சகத்திர நாமார்ச் சனைசொன்னோம்
சீருறு தேவமின் னார்கள்பூ சித்திடு திருவாடிப்
பூர விழாமிகும் ஆவடு தண்துறை பொலிவெய்த
வாரணி மென்முலை ஒப்பிலாள் கொண்டருள்
வகைசொல்வாம். 1

1388. கற்கட கத்திரு நல்மதி யிற்திகழ் கவின்மேவு
நற்கம லத்திரு நீள்புவி மாதுநல் நாமாது
சொற்குழல் மேவு புலோமிசை யாதிய சேல்மாதர்
அற்கிணை யோதிகொள் மாமுனி மாதர்விஞ் சையர்மாதர். 2

1389. நாகமின் னார்தரை மாதர்கள் யாவரும் நற்பூரச்
சேகறு நல்விர தம்புரி யன்பு திகழ்ந்தின்ப
மோக முடன்திரு ஒப்பிலா நாயகி முன்வந்து
பாகுறு சொற்துதி செய்து பணிந்திது பகர்கிற்பார். 3

1387. ஆரணம் - வேதம். சகத்திரம் - ஆயிரம்.

1388. கற்கடகத்திரு நல்மதி - ஆடி மாத பௌர்ணமி. கமலத்திரு - இலக்குமி. புவிமாது - பூமிதேவி. நாமாது - சரஸ்வதி. புலோமிசை - இந்திராணி.

1390. பூமண மேஅமு தேஎமை யாண்டருள் புரிபச்சைக்
கோமள மேஉமை யேஇமை யந்தரு குயிலேஇச்
சீர்மிகு திங்களில் மேவுபூ ரத்திரு விழவிந்தப்
பார்மகி ழும்படி கொண்டரு ளென்று பணிந்தேத்தி. 4

1391. பொற்புறு நற்றின முற்றநல் லோரையிற் பொற்கம்பத்து
அற்புத நல்லிட பக்கொடி முன்புற அமைவித்து
முற்பல நல்மணிப் பொற்திருப் பாலிகை மொய்த்தேந்திக்
கற்புறு மங்கையர் யாவரும் நோன்புறு கவினோடும். 5

1392. மண்பெறு முப்பத் திரண்டற மென்றும் வளர்க்கின்ற
நண்புறும் ஒப்பிலா நாயகி செங்கையால் நவதானியம்
பண்பொடு கொண்டுநல் லங்குர மோங்கியே பாரிப்பக்
கண்பெறு பாலிகை மீதுதெ ளித்துமங் கலமாக. 6

1393. அம்பிகை மீதவர் அன்பு வளர்ந்திடும் அதுபோல
வம்பிடு கொங்கையர் வைத்து வளர்ந்திடு முளைவாய்ப்ப
நம்ப ரிடம்பிரி யாளொடும் பொன்னிநல் நதியாடி
இம்பரில் ஐயிரு நாள்மிகு நல்விழா எழில்செய்வார். 7

1394. வால சவுந்தர ரூபநல் ஒப்பிலா முலைமாது
சாலவே கொண்டிடல் கண்டு மகிழ்ந்து தயாவோடு
நீல வுடம்புறு மாலய னாதி நெடுந்தேவர்
சீல வருந்தவர் யாவரும் செங்கை சிரத்தேந்தி. 8

1395. போற்றி மகிழ்ந்து துதித்தவர் வாழ்புவ னத்துள்ள
தோற்ற மிகுந்த சிறப்பெலாம் ஆவடு துறைமுற்றும்
வீற்றிருந் தின்பம் விளங்க விழாவணி மிகவுய்ப்ப
ஊற்ற மிகும்புவி யோர்தரி சித்துய உமைமின்னாள். 9

1396. காலை விழாவினில் மாகமின் னாரொடு காவேரிச்
சீல நதிப்புன லாட மிகுந்த சிறப்பொடு
மேலு மலர்க்கன கச்சிவி கைக்கு ளிருந்தேகிச்
சால வளந்தரு பொன்னி நதிக்கரை சார்ந்தங்கண். 10

1397. மாவகு ளங்கமழ் கோங்கு செருந்திநல் மந்தாரம்
தாவறு பாதிரி மல்லிகை முல்லை தகும்புன்னை
தூவு மதுக்கர வீரமென் தாதகி தொகுங்கைதை
பார்வளர் கூவிளம் சண்பகம் கொன்றைபன் னீர்மற்றும். 11

1398. மேவிய பூம்பொழில் நந்த வனத்திடை மென்போது
தேவமின் னாரொடுங் கொய்து மகிழ்ந்து சிலம்பார்ப்பக்
கூவு குயிற்பெடை போல்மிகு வாலுகக் குன்றேறி
ஆவல் மிகுந்திடு மாயம் வணங்கிட அன்புற்று. 12

1399. அம்மனை பந்து கழங்குசொல் மாதுநல் அலர்மாது
தம்முட னாடி யெழுந்து வளந்திகழ் சையத்தின்
மைம்மலி மேக மடர்ந்து பொழிந்து வரும்பொன்னிச்
செம்மை யுறும்புது வெள்ளநீ ராடிடச் செல்போதில். 13

1400. சந்தகில் நித்திலம் பொன்மணி பன்மலர் தாள்மீது
சிந்தி வணங்கி யிரங்கி மிகுந்த திரைக்கையால்
வந்தனை செய்துகா வேரி தழீஇக் கொளமகிழ்வெய்தி
அந்தமி லாவருள் செய்துநீ ராடிடும் அவ்வெல்லை. 14

1401. ஆம்பல்வெள் ளம்புது வெள்ள மதிற்புகுந் தார்த்தாடி
ஏயுமு கங்கரங் கால்விழி வாய்நதி யிடமெங்கும்
தோயு மலர்க்கம லங்களும் காவியும் தொகும்ஆம்பற்
சேயநல் மாமலர் போலவும் காட்டுவர் சிலமாதர். 15

1402. சங்குகள் போற்சிலர் கந்தரங் காட்டுவர் தகுஞெண்டின்
அங்க மெனச்சிலர் நல்முழந் தாள்கள் அசைத்தூர்வார்
துங்க வராலினம் போர்க்கணைக் கால்களின் தொகைகாட்டிப்
பொங்கெழி லோதிகள் சைவலம் போற்சிலர்
பொலிவிப்பார். 16

1403. அன்ன மெனச்சிலர் தோற்றுவர் ஆதலின் அரமாதர்
தன்னுரு வென்பது காண்பரி தாகவே தகுபொன்னி
நன்னதி பொற்புன லாடுதல் கண்டுபுன் னகைகொண்டு
கன்னல் மொழிக்கரு ணாகரி மிக்க களிப்போடும். 17

1404. பொற்புறு நற்கரை யேறிவெண் தூசு புனைந்தாகத்து
அற்புத லேபன மெய்க்கள பந்திமிர்ந் தாரங்கள்
பற்பல பொற்பணி தாங்கி நுதற்குறி பாரித்துச்
சொற்பொரு கூந்தல் முடித்தலர் மல்லிகை திகழ்வித்து. 18

1405. வேரி மலர்த்தொடை யாலு மணித்திரள் வெயிலாலும்
சீரிய பட்டு விதான முதற்செய் சிறப்பாலு
மேருறு சித்திர மண்டப மேவியி ருந்தின்பாய்த்
தாரணி வாழ்களண் ணான்கறம் அன்பொடு தான்செய்து. 19

1406. நன்மயில் நற்குயில் நன்மறி நல்லன நல்மின்கள்
பன்மை யுருக்கொடு வந்து பணிந்திடு பான்மைத்தாய்த்
தொன்மை அரம்பையர் எண்ணிலர் சூழ்ந்து தொழல்போந்து
பொன்மலி யான முவந்துகோ முத்திபு ரஞ்சேர்ந்து. 20

1404. வெண்தூது - வெண் பட்டாடை.

வேறு

1407. சங்க மாதி யியங்க டழங்கிடப்
பொங்கு மாதவ ராசி புகழ்ந்தெழக்
கொங்கு லாவிய கூந்தல்மின் னார்சிலர்
மங்குல் மின்போற்சா மரைக ளிரட்டுற. 21

1408. ஆல வட்ட மணிக்குடை ஆர்ந்திடச்
சீல நல்லிட பக்கொடி முன்செலக்
கால யோகினி காளி இடாகினி
சூலி துர்க்கை பிடாரிகள் சூழ்வர. 22

1409. மாம லர்த்திரு மங்கையும் வாணியும்
காம ரப்பண் கனிந்தெழு பாடல்கள்
ஏர்ம லர்க்கையாழ்ப் பண்ணொ டியம்பியே
தேம துப்போற் செவிக்குண வூட்டிட. 23

1410. விஞ்சை மாதர்பல் லாண்டு விளம்பிடத்
தஞ்ச மென்றடி யார்கள் தனித்தனி
இன்சொல் நற்பதி கத்தமிழ் எங்கணும்
அஞ்ச லிக்கைய ராய்ப்படித் தாடிட. 24

1411. சுத்த யோகிகள் ஞானிகள் சோர்விலாச்
சித்தர் வானவர் எண்டிசைச் செல்வர்கள்
பத்தர் மன்னவர் பான்மொழி மங்கையர்
ஒத்த நல்வரங் கேட்டங் குலாவிட. 25

1412. ஞாலம் போற்றெழில் நற்துறை சைப்பதிக்
கோல நல்மறு கிற்குல வும்விழாக்
காலை யிவ்வகை கொண்டிராக் காலநல்
வால ரூபம னோன்மணி கோயில்முன். 26

1413. பத்தி பத்தியாய்ப் பல்மணி யால்விதா
னித்த மண்டபத் துள்நிக ழுங்கதிர்
முத்து மாலிகை மொய்த்தபொற் சப்பிரத்து
ஒத்த சிங்கா சனத்தி லுகந்துடன். 27

1414. செய்ய பூங்கம லத்திரு நாயகி
கையி னாற்பொற் கலையும் களபமும்
துய்ய நித்தில மாலையும் சுட்டியும்
வைய மேத்து மதாணியும் பட்டமும். 28

1415. கொந்த ளச்செம்பொன் கொண்டையும் குச்சும்நற்
சந்திர ரப்பிறை யும்குழை யும்தகு
சுந்த ரத்துணைக் கொப்புமுக் குத்தியும்
கந்த ரத்திடு கட்டு வடங்களும். 29

1416. காஞ்சி மேகலை யும்கை வளையும்நற்
பூஞ்சி லம்பும்மெய் யிற்பொலி வித்தெழும்
வாஞ்சை யோடுநல் மாலிகை சூட்டிநின்று
ஆஞ்ச லித்தல ரர்ச்சித் தருளொடும். 30

1417. ஓத னங்கள் நிவேதித் துபசரித்து
ஏத மில்மணித் தீபம் எடுத்திரு
பாத பூசனை பண்ணிப் பணிந்துளக்
காத லோடுங் கசிந்துகண் ணீர்வர. 31

1418. அஞ்ச மே! அமு தே!அழ கே!அருட்
புஞ்ச மே!வால சுந்தரப் பூவையே!
வஞ்சி யே!ஒப்பி லாமுலை மங்கையே!
தஞ்சம் உன்பொற் சரணபங் கேருகம். 32

1419. என்று தோத்திரஞ் செய்திட இன்பமுற்று
அன்று போற்றினம் அன்பொ டிராவிழா
மன்ற நற்சிறப் போடு மறுகுசூழ்ந்து
ஒன்று காட்சியின் பார்க்கு முதவவே. 33

1420. கேட கத்தும் கிளர்ந்தபூ தத்தினும்
நாடு சிங்கத்து நல்விமா னத்தினும்
தோட லர்ப்புய வேற்றும் சுகத்தினும்
ஈடி லாவெகி னத்தும்பல் லக்கினும். 34

1421. எண்டி னத்தும் எழுந்தரு ளித்திகழ்ந்து
அண்டர் நாடும் அவனியும் போற்றிடத்
திண்டி றற்திருத் தேர்விழா ஒன்பதின்
மண்டு சீரொடுங் கொண்டு மகிழ்ந்துபின். 35

1422. போற்று நற்தசத் திற்திருப் பூரநாட்
தோற்று மன்றுவிண் தோகையர் தம்மொடும்
தேற்று காவிரித் தீரநீ ராடியங்கு
ஆற்று நல்லறம் யாவுஞ்செய் தன்புடன். 36

1417. ஓதனங்கள் - சித்திரான்னங்கள்.

1423. தேவ மானத்தின் மேற்திரு வீதிசூழ்ந்து
ஆவ லோடும் அடிபணிந் தோர்க்கெலாம்
மேவும் இம்மையும் அம்மையும் வேண்டுவது
ஓவி டாமல் உதவிப்பொற் கோயிலுள். 37

1424. மாசி லாத மணிஇட மேவினால்
தேசு லாமணம் பூவொடுஞ் சேர்தல்போற்
பூசு சாந்தம் புணர்ஒப்பி லாமுலைக்
காசி லாமலர்க் கற்பகக் கொம்பனாள். 38

1425. அரிஅ யன்இந்தி ராதிவிண் ணோரெலாம்
திரும கள்முதற் செல்வமின் னாரொடும்
பிரிவி லாத பெருவரம் பெற்றெய்தி
உரிய நாடுற் றுகந்தனர் வாழ்வொடும். 39

முப்பத்தாறாவது
ஒப்பிலா முலைஅம்மன் ஆடிப்பூரத் திருவிழாக்
கொண்டருளிய அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 1425
இரண்டாங் காண்டம் முற்றுப் பெற்றது.
திருச்சிற்றம்பலம்

36. ஒப்பிலா முலையம்மன் ஆடிப்பூரத் திருவிழாக் கொண்டருளிய அத்தியாயம் (சுருக்கம்)

அருமறைகள் ஓதுகின்ற ஆயிரம் நாமங்கள் அர்ச்சனை பற்றிக் கூறினோம். இனி, விண்ணுலக மாதர்கள் பூசிக்கின்ற ஆடிப்பூர விழாவைத் திருவாவடுதுறையில் விளங்கும்படியாக ஒப்பிலாமுலையாள் கொண்டருளிய வகையைக் கூறுகின்றோம்.

ஆடிமாதம் பௌர்ணமியில் திருமகள், பூமகள், கலைமகள், இந்திராணி முதலிய தேவமாதர்கள், இருடி மாதர்கள், விஞ்சை மாதர், நாகலோகப் பெண்கள், பூலோகப் பெண்கள் முதலிய யாவரும் நல்ல பூரத்தில் நோன்பு கொள்வதில் அன்புகொண்டு ஒப்பிலாமுலை நாயகியின் திருமுன்பு வந்து வணங்கித் துதித்தனர்.

பூவின் நல்வாசம் போன்றவளே! அமுதே! கோமளமே! இமவான் பெற்றெடுத்த குயிலே! இந்த ஆடி மாதத்தில் பொருந்திய பூரத் திருநாளன்று இவ்வுலகம் மகிழும்படியாக விழாவைக் கொண்டருள்க எனப் பணிந்தனர். இம்மாதர்களின் வேண்டுகோளை அம்பிகையும் ஏற்றருளினாள்.

அழகிய நல்லதின ஓரையில் கொடிமரத்தில் இடபக் கொடியை ஏற்றினர். எல்லாப் பெண்களும் பொன்னாலாகிய பாலிகைகளை ஏந்திக் கொண்டு வந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கின்ற ஒப்பிலாமுலையாளின் திருக்கரத்தால் நவதானியங்களைப் பாலிகைகளில் இட்டனர். அம்பிகையின் மீது தேவமாதர்களின் அன்பு வளர்ந்திடுவது போல பாலிகைகளில் இட்ட நவதானிய முளைகள் வளர்ந்தன. அம்பிகையோடும் தேவமாதர்கள் காவிரி நதியில் நீராடினர். பத்து நாள்களும் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றன.

ஆடிப் பூரத்தன்று காலை விழாவை ஏற்க ஒப்பிலா முலையம்மை வருகின்றாள். தேவமாதர்களுடன் காவிரியில் நீராடுவதற்காகக் கனகசிவிகையில் ஏறிப்போய், காவிரிக்கரையை அடைந்தாள். அங்கு, மா, மகிழம், கோங்கு, செருத்தி, மந்தாரம், பாதிரி, மல்லிகை, புன்னை, அலரி, ஆத்தி, தாழை, கூவிளம், சண்பகம், கொன்றை, பன்னீர் மற்றும் பல பொருந்திய சோலை சூழ்ந்த நந்தவனத்திலுள்ள பூக்களைத் தேவமாதர்களோடும் கொய்து மகிழ்ந்தாள். ஆற்றுமணலிலிருந்து அம்மனை, பந்து, கழங்கு ஆகியவற்றைத் திருமகளுடனும் கலைமகளுடனும் ஆடினாள். பின்பு காவிரி நதியில் நீராடினாள்.

அம்பிகை காவிரியில் நீராடும்பொழுது, சில பெண்கள் நீரில் புகுந்து நீராடி முகம், கை, கால், விழி இவற்றிற்கு உவமானமாகிய தாமரை, நீலோற்பலம், ஆம்பல் போன்ற மலர்களைப் போலவே தோன்றினர். சில மாதர்கள் சங்குகளைப் போலத் தங்கள் கழுத்துக்களையும், நண்டின் அங்கம் போன்றதான முழந்தாள்களை அசைத்து நீரில் ஊர்ந்து சென்றனர். சிலர், வரால் போன்ற தங்கள் கால்களையும் காட்டினர். சிலர், அன்னப் பறவை போன்றே தோற்றமளித்தனர்.

இவ்வாறு இறைவி மிகுந்த மகிழ்ச்சியோடு, நீரிலிருந்து கரையிலேறி, வெண்பட்டணிந்து, உடலெங்கும் களபம் பூசினாள். ஆரங்கள் பல அணிந்தாள். நெற்றித்திலகம் தரித்தாள். அழகிய கூந்தலை முடித்து அதில் மல்லிகையைச் சூடினாள். சித்திரமண்டபத்தில் எழுந்தருளியிருந்து இவ்வுலகோர் வாழும்படியாக முப்பத்திரண்டு அறங்களையும் செய்தாள்.

பின்பு, மயில், குயில், மான், அன்னம், விண்மீன்கள் இவை அனைத்தும் பலவுருக்கொண்டு வந்தாற்போல அளவற்ற தேவமகளிர் சூழ்ந்து வணங்கினர். சங்கு முதலான வாத்தியங்கள்

ஒலித்தன. சில பெண்கள் சாமரை வீசினர். சில பெண்கள் ஆலவட்டம், குடை இவை பிடித்தனர். சிலர் இடபக்கொடிகளைப் பிடித்தனர். காளி, காலயோகினி, இடாகினி, சூலி, துர்க்கை, பிடாரிகள் ஆகிய சத்திகள் சூழ்ந்து வந்தனர். திருமகளும் கலைமகளும் சீகாமரப் பண்களால் பாடல்களை யாழில் அமைத்துப் பாடினர். விஞ்சை மாதர்கள் பல்லாண்டு கூறினர். அபயம், அபயம் என அடியார்கள் சொல்லி, இருகரம் கூப்பி விழுந்து வணங்கி, ஆனந்தக் கூத்தாடினர். இத்தகையதொரு ஆரவாரமான சூழலில் அம்பிகை ஆலயம் வந்தடைந்தாள்.

பின்பு, இராக்கால விழாவிற்காக ஒப்பிலா முலையம்மை எழுந்தருளினாள். கோயில் முன்பு வரிசையாகப் பலமணிகளால் மேற்கட்டுக் கட்டிய மண்டபத்துள் பொன்னாலாகிய சப்பரத்திலுள்ள சிம்மாசனத்தில் மகிழ்ச்சி பொங்க எழுந்தருளினாள். பொன்னாடை, களபம், முத்துமாலை, சுட்டி, மலர்ப்பதக்கம், பொற்கொண்டை, குச்சு, சந்திரப்பிரபை, குண்டலம், கொப்பு, மூக்குத்தி, கழுத்துவடங்கள், ஒட்டியாணம், கைவளைகள், காற்சிலம்பு, பூமாலைகள் ஆகிய இவற்றை யெல்லாம் திருமகள் தன் கைகளால் அம்பிகைக்குச் சூட்டி மகிழ்ந்தாள். அருகே நின்று அஞ்சலி செய்து, அருச்சனை புரிந்தாள். சித்திரான்னங்கள் பலவற்றையும் படைத்து, உபசாரங்களைச் செய்து, தூப தீபம் காட்டினாள். பாதபூசை செய்து வணங்கினாள்.

இத்தகைய எழிற்கோலத்துடன் நாள்தோறும் இராவிழாவைச் சிறப்புடன் ஏற்ற அம்பிகை வீதியுலா வந்து அனைவருக்கும் அருள்பாலித்தாள். கேடகம், பூதவாகனம், சிம்மவாகனம், விமானம், பல்லக்கு என எட்டு நாள்களிலும் எட்டு வாகனங்களில் எழுந்தருளினாள். ஒன்பதாம் நாள் தேர் விழாக் கொண்டு, பத்தாம் நாளாகிய பூர நாளில் அம்பிகை தேவமகளிருடன் காவிரியில் நீராடினாள்.

தேவ விமானத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு இம்மை யிலும் மறுமையிலும் வேண்டுவனவற்றையெல்லாம் அள்ளி வழங்கியருளினாள். பின்பு, பூவோடு சேர்ந்த மணம் போல அழகிய கோயிலுள்ளே எழுந்தருளியுள்ள மாசிலாமணிப் பெருமானின் இடப்பாகத்தைச் சேர்ந்தாள். திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் திருமகள் முதலான தேவ மங்கையரோடு பிரிவிலாத பெருவரம் பெற்று தத்தமக்குரிய நாட்டினை அடைந்து இன்புற்றனர்.

மூன்றாவது
தியாகேசுரபுரக் காண்டம்

மூன்றாவது காண்டத் தோத்திரக்கவி

1426. மூவுலகுஞ் சயங்கொண்டு மகுடந் தாங்கி
முறைபரப்பிக் கோலோச்சு முதல்வர் தாமும்
தாவிலரும் புலனடக்கிக் கலைகள் யாவும்
தகுதிபெற உணர்ந்ததபோ தனர்கள் தாமும்
யாவர்களும் பெறவரிய ஞான வீட்டில்
இறுமாந்திங் கின்பவெள்ளத் திருக்கின் றோரும்
பாவலனுக் காயிரம்பொன் துறைசை வாழ்ந்து
பரிசளித்த தியாகேசன் பதங்கண் டாரே. 1

ஆகத் திருவிருத்தம் 1426

முப்பத்தேழாவது
முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளைவரத்துக்கு வந்த அத்தியாயம்

1427. இன்னவகை பூரவிழா ஒப்பிலா
முலையுமையாள் இன்ப மாகப்
பொன்னுலவும் தென்துறைசைப் புரந்தழையக்
கொண்டருளும் பொலிவு சொன்னோம்;
மன்னர்தொழு முசுகுந்தன் அரசுரிமை
மகப்பெறுநல் வரங்கேட் டிந்தத்
தொன்னகரிற் போந்துபணி செய்தவகை
மிதுலைமன்னா சொல்லக் கேண்மோ. 1

1428. தாதவிழு மலர்ச்சோலைக் கயிலாய
மலைப்புறத்தோர் தடத்தின் பாங்கர்
கோதறுகூ விளவனத்தி லுலவுமொரு
முசுகளித்துக் குதித்து நாளும்
சீதவில்வத் தளிர்பறித்துச் சிந்துவபோல்
ஒரிரவு சிந்த ஆங்கோர்
மேதகுநற் சிவலிங்க மிருக்குமதன்
திருமுடிமேல் வீழ்ந்த தன்றே. 2

1426. மூவுலகு - மூன்றுலகம். அவை பூமி, அந்தரம், சுவர்க்கம். சயம் - வெற்றி, தபோதனர்கள் - முனிவர்கள். பாவலன் - திருஞானசம்பந்தன். தியாகேசன் - துறைசை நாயகன் மாசிலாமணியீசன்.

1428. தடம் - இடம். கூவிளவனம் - வில்வவனம். முசு - குரங்கு

1429. அன்றிரவு சிவநிசிநா ளாதலினாற்
பெருங்கருணை அமல னுள்ளத்து
ஒன்றுபெரு மகிழ்ச்சியுறக் கருணைசுரந்து
அம்முசுவின் உருவை நீக்கி
வன்றிறல்சேர் அரசுருவம் நல்கியணி
பெருகுசக்கர வர்த்தி யாக்கி
வென்றியுறு மூவுலகு மாளும்வரம்
உதவஅடி மீது தாழ்ந்து. 3

1430. மிருகமாய்த் திரியுமெனக் கருள்புரியக்
கிருபைவைத்த வேத நாதா!
மருவுநன்றி மறவாம லிம்முசுவின்
முகமும்உன்தாள் மறவா அன்பும்
அருளிமெய்வீ டடையும்நெறி யருளுகெனக்
கேட்டலும்அப் படியே ஈயத்
திருமருவு முசுகுந்தச் சக்கரவர்த்
தித்தலைமைச் செல்வ னாகி. 4

1431. அரனருளால் மூவுலகுங் காக்குமுடி
சூடிஅர சானா நாளிற்
பொருதிறல்சேர் வலாசுரனென் றொருபகைஞன்
விண்மருவு புலவோர்க் கெல்லாம்
பெருகுதுயர் செயமகவான் தேவரொடும்
வெள்ளானைப் பிடரி னேறிச்
செருமலைந்தங் கவனுடன்ஆ யிரமாண்டு
போர்புரிந்துஞ் செயமில் லாமல். 5

1432. கவலையுற்றுப் பூதலத்தில் வரவெதிர்போய்
முசுகுந்தன் கண்டு போற்றி
இவணடைந்த கருமமென்கொ லெனவினவ
வலாசுரன்போர்க்கிடைந்த செய்தி
அவனுரைப்பக் கேட்டிளையோர் எண்மருடன்
இந்திரனோ டளவில் சேனை
உவகையொடும் புடைசூழச் சென்றுசினந்து
அசுரனுட னுடன்று ஞாட்பில். 6

1429. சிவநிதி - சிவராத்திரி. அமலன் - இறைவன். அடிமீது - இறைவன். திருவடிமேல்.

1431. புலவோர் - தேவர்கள். மகவான் - இந்திரன். செயம் - வெற்றி.

1433. செருக்கினொடு மெதிரசுரக் கடல்சுவறக்
கணைசொரிந்து சின்னா பின்னம்
உருக்களுற அசுரர்களை யரிந்துவலா
சுரனையுமாய்த்து உவகை யோடு
மருக்கமழ்பூங் கற்பகநா டிந்திரனுக்
குதவவந்த மகிழ்ச்சி யாலே
கருக்கொள்முகி லூர்திமுசு குந்தரா
சனைநோக்கிக் கழற லுற்றான். 7

1434. அய்யநீ செயுமுதவிக் கியற்றுகைமா
றிலதெனினும் ஆன மட்டும்
செய்யும்அவா வுடையேன்நான் ஆனதினால்
எனக்குளதாம் செல்வந் தம்முள்
உய்யுமுயி ரனையசசி யுடன்அயிரா
வதமிரண்டு மொழிய மற்றத்
துய்யபொருள் தமிலெதுவேண் டினுமதும
றாதீவன் சொல்க வென்றான். 8

1435. மனைப்போக மேபொருளாய் நினைந்துமல
மயக்கத்தால் மகவா னென்றும்
தனக்குயிரா கியபூசைத் தியாகவிடங்
கனைமறந்த தன்மை தன்னை
அனைத்துயிர்க்கு முயிராகும் அரன்முசுகுந்
தனுக்குணர்த்த அறிந்து மயன்
உனக்குதவுந் தேபூசைச் சிவனையெனக்
கருள்நீயென் றுரைத்தல் கேட்டு. 9

1436. மதிமயங்கி யுரைமறா வகைநினைந்தென்
செய்வதென மனதிற் றேர்ந்து
பதியினிற்தன் மனையிலந்தப் புரத்தில்மயன்
தனையழைத்திப் பரிசு பேச
விதிமகனா கியவிசுவ கன்மன்விடங்
கேசருரு விதிப்பக் கொண்டு
கதியுறுநன் முசுகுந்தன் கைக்கொடுப்ப
வாங்கிமிகு களிப்பி னோடும். 10

1434. சசி - இந்திராணி. ஆயிராவதம் - வெள்ளையானை.

1436. விசுவகன்மன் - மயன்

1437. அன்றிரவு பூசித்துத் துயிலும்போது
அவன்கனவில் அமலன் சென்றிங்கு
உன்றனக்கு மகவானின் றுதவுசிவன்
யானலனென் றுரைத்துப் போக
வென்றிபெறு முசுகுந்தன் விடிந்தெழுந்து
வாசவற்கிவ் வினையம் பேசக்
கன்றுமனத் துடன்பின்னு மவ்வகைஐந்
தீசருருக் கற்பித் தீந்தான். 11

1438. அவ்வகைய ஐந்துருவு நானலனென்று
அரனுணர்த்தி ஆறா நாளிற்
செவ்வியமெய்க் கனவினில்முட் செவ்வந்தித்
தோடணிந்த தியாகர் நானென்று
உய்வகைவந் துணர்த்தியிட அப்படியே
அடையாளம் உரைத்துக் கேட்பப்
பொய்வகைக்கங் கிடமின்றிப் பூசைதனைக்
கொணர்ந்தீந்தான் புனித னம்மா. 12

1439. சத்தவிடங் கேசரையு மாழித்தேர்
மிசைகொணர்ந்து தரையில் வந்து
சுத்தமிகு காரோணங் கோளிலிநற்
திருவாய்மூர் சுருதிக் கான
முத்திதரு நள்ளாறு காறாயில்
ஆறிடத்து முதிர்பொற் கோயில்
சித்தமகிழ் மயனாற்செய் தெழுந்தருளப்
பண்ணிமிகு சிறப்புச் செய்து. 13

1440. வீதிவிடங் கத்தியா கேசரைநல்
வன்மீக விமல ரென்றும்
ஆதிபிரு திவிலிங்கத் தருளுருவாய்
அமர்ந்ததிரு வாரூர் தன்னிற்
சோதிமணி யிலகுசெம்பொற் பூங்கோயில்
சமைப்பித்துத் துணைவி யோடும்
சீர்திகழ்சந் திரகாந்தச் செம்பொன்மணிச்
சப்பிரத்துட் திகழ்பீ டத்தில். 14

1437. வாசவர் - இந்திரன். வினையம் - விஷயம்.

1438. புனிதன் - இந்திரன்.

1439. தரையில் - பூமியில். சுருதிக்கானம் - வேதாரணியம்.
காறாயில் - திருக்காரவாயில்.

1441. எழுந்தருளப் பண்ணிமுட்செவ் வந்தித்தோ
டணிந்துமுடி இலங்கச் சாத்திச்
செழுங்கழுநீர்த் தாருமுத்து மாலிகையு
மணிப்பூணும் திகழ்வித் தின்பம்
வழங்குமருள் வீரகட்க மெனுமிருசெங்
கோலிலங்க மருங்கு நேர்வைத்து
ஒழுங்குறுவே தாகமத்தின் படியறுகா
லமும்பூசை யுறச்செய் வித்து. 15

1442. நித்தவிழா மாதவிழா நிறைபணியா
தியவிழவு நிகழு மீன
உத்திரத்தி லாடரவக் கிண்கிணிக்கால்
காட்டிநடித் துயர்ந்த இன்ப
முத்திதொழு வோர்க்கருளி யாழித்தேர்
கொண்டருளு முதிர்வி ழாவும்
பக்தியுடன் நடத்திமுசு குந்தரா
சேந்திரன்பார் பரிக்கும் நாளில். 16

1443. உலகுமுல கத்திலுறு போகமுந்தே
கமுங்கரண வுதவி யாவும்
நிலையிலதாய் நீர்க்குமிழி போறறோன்றி
அழியுமெனும் நிலைமை யோர்நாள்
புலனுறுநற் திருவருளா லுணர்ந்துவீ
டடையும்நெறி பொருந்த வேண்டிக்
கலைநிலவு நிலவணிசெஞ் சடைவிடங்கத்
தியாகர்முன்போய்க் கரங்கள் கூப்பி. 17

1444. பொங்கரவச் செஞ்சடையாய் செங்கண்மால்
அயனறியாப் புனிதா என்மேற்
தங்குபூ பாரமெலாஞ் சுமப்பதற்கோர்
புத்திரனைத் தந்தென் தன்னைத்
துங்கமா தவஞானச் சிவபத்த
ரினங்களொடும் துணையாய்க் கூட்டி
இங்கெனையாட் கொண்டருள வேண்டுமெனத்
தொழுதுதொழு திரந்து போற்றி. 18

1445. அன்றிரவு துயில்கூரும் பொழுதுகன
வினிலவன்முன் ஆரு ரண்ணல்
கொன்றைமலர்ச் சடைமுடியும் நாற்புயமும்
முக்கணும்பூண் குலவு மார்பும்

1442. பார்பரிக்கும் - அரசாளும்.

பொன்றிகழ்மான் மழுக்கரமும் புலித்தோலுந்
தரியமுமம் புயப்பொற் தாளும்
இன்றிகழு மிடையாளோர் பாகமுமாய்
விடைமீது வெளியாய்த் தோன்ற. 19

1446. கண்டுபர வசமாகி விழுந்துதொழு
தெழுந்துநின்று கைகள் கூப்பத்
தொண்டனைநேர் நோக்கிமதி முடிதுளக்கி
உவகையொடுஞ் சொல்வன், மன்னா!
கொண்டவுன தகக்குறிப்போர்ந் தனமந்தப்
படிமகவுங் கொடுத்தாட் கொள்ள
உண்டுகொலுன் னாலின்னும் யாம்கொள்ளும்
பணியதுகேள் உண்மை யாக. 20

1447. ஐந்துபடை யேந்துசெங்கை யாயிமையோ
ரொடும்பூர்வ மசுரர் பீடை
சிந்தும்வரம் வேண்டியாம் அநாதிமுத்தித்
தலமாகச் சேர்ந்து வாழும்
கொந்தலர்ப்பூம் பொழில்புடைசூழ் பிப்பிலா
ரணியத்திற் குறுகி நம்மை
வந்தனைசெய் தர்ச்சித்து வழிபடயாம்
அவர்கேட்ட வரங்கள் நல்க. 21

1448. வேண்டியபோ கங்களெலாம் பெற்றவர்கள்
இடங்கள்தொறும் மேவு மந்நாள்
கோண்டகுபன் னகமீது பயோததியிற்
துயில்கூருங் கொண்டல் வண்ணன்
காண்டகுதண் துறைசையிலியா மாசிலா
மணியிடத்திற் காட்சி யீந்த
மாண்டகு சுந்தரவடிவை மறவாமல்
அநுதினமும் மனத்தி லோர்ந்தான். 22

1449. அன்புமிகு தியினாற்சென் றவன்மனத்திற்
தியானவுரு வாகத் தோன்றிப்
பொன்புணரும் அவன்மார்பில் நடம்புரிந்தோம்
அரிமகிழ்ந்து பூசை செய்ய

1447. அநாதிமுத்தித்தலம் - துறைசை. பிப்பிலாரணியம் - துறைசை.
1448. பன்னகம் - ஆதிசேடன்.

இன்பமிகு பெரும்போகம் அவற்கீந்து
பின்புவிண்மே லிமையோர்க் கெல்லாம்
துன்பகற்ற வேண்டியரி யரிக்கீய
அருள்மிகுந்து சுரர்நா டெய்தி. 23

1450. இந்திரன்செய் பூசனைகொண் டவ்விடம்விட்டு
இவ்வுலகி லிருக்கு மாக்கள்
உய்ந்திடவு னன்புவழி யாரூரில்
வந்திருந்தோம் உண்மை யாகச்
சந்ததமிவ் வாரூர்போ லாவடுதண்
துறையிலுமியாஞ் சார்த லாலே
அந்தநகர் தனில்நீபோய்ப் பணிவிடைசெய்
திடிற்கேட்ட தளிப்போ மாங்கு. 24

1451. ஆதலாற் கோமுத்திச் சேத்திரத்துக்
கேகெனத்தென் னாரூ ரண்ணல்
ஓதியருட் பூங்கோயிற் கெழுந்தருள
விழித்தரச னுமைகோன் வந்து
காதலாற் கனவிலுரைத் திடுமொழியோர்ந்
துளத்தடங்காக் காதல் கொண்டு
போதுவிடி புலரியிற்செய் கடன்முடித்துக்
கோயிலிற்போய்ப் போது தூவி. 25

1452. அடியனேன் குறைமுடிக்கக் கனவிலெழுந்
தருளியருள் செய்தாய் போற்றி!
முடிவிலாப் பழம்பொருளாய் ஆரூரின்
மேவியமுக் கண்ணா போற்றி!
நெடியமா லயனறியா தழலுருவாய்
வெளிமுழுது நிமிர்ந்தாய் போற்றி!
துடியிடைமா தொருபாகா வீதிவிடங்
காதியாகத் துரையே போற்றி. 26

வேறு

1453. இன்ன னந்துதி செய்து நல்விடை
பெற்றி சைந்துவந் தின்பொடும்
பொன்னி லங்கிர தத்தின் மீது
பொலிந்தி ருந்தெழு போதினிற்

1451. போது - மலர்.

பன்னு நால்வகைத் தானை வீரரும்
படையு மந்திரி மார்களும்
மின்னு பொன்முடி யரசர் யாவரும்
வேலை யேழ்புடை சூழ்வபோல். 27

1454. வந்து சூழ்ந்திட முரசு பேரிகை
மணிமு ழாக்குழல் மத்தள
முந்து காகளம் தாரை சின்னம்நல்
முருகி யந்தவில் சங்கொலி
உந்து பொற்துடி பம்பை மற்றுமி
யங்க ளெங்கு மொலிப்பநீன்
அந்த ரத்திடை மின்கள் போறபல
வாடு பொற்கொடி சூழ்வர. 28

1455. வெற்றி மேவு புலிக்கொ டித்திரள் மீன
மீன கேதனங் காவிடாள்
சுற்று முற்றிட வீணை யாழிசை
துள்ள மாதர் நடஞ்செயக்
கற்ற மாந்தர் துதித்து நற்கவி
மாலை சூடமுன் கட்டியங்
கொற்ற நற்பிரம் பேந்து கஞ்சுகக்
கொள்கை யோர்பலர் கூறிட. 29

1456. மின்னி னங்கள்போ லருகில் நின்றுவெண்
கவரி மாதர்கள் வீசிட
மன்னு தம்பிய ரிரத மீதுபொன்
மலையி னைத்தொடர் மலைகள்போற்
பின்னு றக்கர டக்க டாம்பொழி
பிறைம ருப்புவா ரணம்பல
துன்ன வேலையின் திரைகள் போறபல
துரக தந்துள்ளி முன்செல. 30

1457. வேனெ டும்படை வாள்மின் னேமிகள்
மிக்க தோமரங் கப்பணம்
ஊனி ணங்கமழ் முசல முத்தலை
வேள்மு தற்பல வாயுதம்
ஆன கொண்டு களித்து மள்ளர்கள்
ஆர்ப்ப ரித்தெழு கடல்கள்போற்
தேனி னங்கமழ் தும்பை யார்த்த
செருக்கி னோடுமுன் சேர்ந்தெழ. 31

1458. கொய்யு ளைப்பரி பூண்டு பொற்கொடி
குலவு தேர்மிசை குருமணிச்
செய்ய பொற்பணி யணிபு யத்துறு
தெரியல் மீதுபல் மாதர்கள்
மையயு ணற்களி வண்டு மொய்த்திட
மணிமு டித்திகி ரிக்கரத்து
அய்யன் வந்துகோ முத்தி நன்னகர்
அமருமெல் லையுள் மருவினான். 32

1459. பொன்னு ருட்பெறு மிரதம் விட்டிழிந்
தங்க மெட்டும்பொ ருந்தவீழ்ந்து
உன்னு நட்பொடுங் கோபு ரத்தெழில்
கண்டி றைஞ்சிமெய் யுவகைபூத்து
இன்ன தித்தொகை யென்ப தற்கரி
தாகு மெண்ணிப்பல் சேனைகள்
தன்னை யங்க ணிறுத்தி அன்புறு
தகைமை யோரொடும் தமரொடும். 33

1460. வந்து நல்முசு குந்த ராசன்ம
கிழ்ந்த ருட்பரை யிச்சையால்
முத்து தீர்த்தம தாயு தித்தகோ
முத்தி நன்மடு வுற்றதிற்
சிந்தை யன்பொ டிறைஞ்சி வாழ்மனை
யாளு டன்திகழ் நீர்படிந்து
அந்தி வண்ணனை யுன்னி நீறணிந்து
அஞ்செ ழுத்துமு ணர்ந்தபின். 34

1461. அங்க மாறுடன் நான்கு வேதமும்
ஆக மங்களு மாய்ந்து ணர்ந்து
எங்கு மாய்நிறை யும்ப ரம்பொருட்
கிச்சை வைத்திடும் வேதியர்
தங்க ளுக்கும்வெண் பூதி சாதனம்
தாங்கு அன்பர்த மக்குமுட்
பொங்கு காத லடங்கு மாறுபொற்
றான மாரி பொழிந்துபின். 35

1462. கன்னல் முக்கனி நாளி கேரப
லஞ்ச ருக்கரை கண்டுபாகு
அன்ன நற்பணி கார வர்க்கமோ
தகமொ டென்பொரி பயறவல்

பின்னு மற்றுள வுண்டி வர்க்கமு
முன்ப டைத்தனை பின்புமுன்
மன்னு நற்துணை வந்த கற்பக
வார ணத்தை வணங்கியுள். 36

1463. மாக மஞ்சு குலாவு கோபுர
வாயி னோர்வழி சென்றுநீள்
சாகை கொண்டு படர்ந்த டர்ந்துத
ழைத்தி டுந்திரு வரசினைப்
பாக மிஞ்சுமெய் யன்பு டன்வலம்
வந்து நின்று பணிந்தழ
காக வங்கண மர்ந்த நந்திபொன்
னடியி றைஞ்சியுள் மகிழ்வொடும். 37

1464. கோதி லாதகோ முத்தி யீசர்பொற்
கோயில் முன்பெய்து போதுநல்
ஆதி யானமெய்ஞ் ஞான நோக்கநல்
லரச னுக்களித் தவனெதிர்
பேத மின்றிநல் மாசி லாமணி
பெருகு வன்மீக லிங்கமாய்
நீதி சேர்திரு வாரு ரேயருள்
நிறையும் ஆவடு துறையதாய். 38

1465. கோயில் கோபுர மண்ட பங்குளம்
யாவும் அந்நகர்க் கொள்கையாய்
நாய கன்திருக் காட்சி நல்கிநல்
நிருந்த மண்டப நாப்பணின்று
ஆதி வீதிவி டங்க ராய்நடித்
தழகு மேவுபூங் கோயிலுட்
தூய மாசிலா மணியி லிங்கநற்
சோதி யுட்கரந் துற்றிட. 39

1466. கண்டு தன்னை மறந்து வீழ்ந்திரு
கைகள் கூப்பி யெழுந்துயிர்
மண்டு நற்சுக வாரி யிற்படிந்
தவச மாயிட மயிர்சிலிர்த்
துண்ட மெய்ப்பர் போகங் கண்வழி
யுகுவ போற்புனல் சொரியநின்று
அண்டர் நாயகன் திரவி யத்தியா
கேச னைத்துதித் தாடுவான். 40

வேறு

1467. நிரந்தநாற் சுருதி தேரும் நின்மல பகவ போற்றி!
வரந்தர விருந்து வாழும் மாசிலா மணியே போற்றி!
பொருந்தலர் புரமூன் றட்ட புண்ணியக் கடவுள் போற்றி!
திருந்துதென் துறைசை வாழுந் திரவியத் தியாக போற்றி! 41

1468. காவிவேல் விழிக ளொப்பி லாமுலை கணவ போற்றி!
தாவில்செங் கழுநீர் மாலை தரித்தருள் புயத்தாய் போற்றி!
தூவுகட் பொழில்செவ் வந்தித் தோடணி குழையாய்
போற்றி!
ஆவடு துறையுள் மேவும் அழகுபொற் தியாக போற்றி! 42

1469. உகம்பல புரப்பாய் போற்றி! உயிர்க்குயி ரானாய் போற்றி!
நகங்கொடு மலரோன் சென்னி நறுக்கிய நாத போற்றி!
மகம்புரி தக்கன் மீதோர் மறிமுகம் படைத்தாய் போற்றி!
சகம்புகழ் துறைசை ஊரிற் சார்செம்பொற் தியாக
போற்றி! 43

1470. துளங்குவெண் மதியும் கொன்றைத்
தொடையலும் அணிந்தாய் போற்றி!
களங்கமி லறிவோர் நெஞ்சங்
கலந்திடு தலைவ போற்றி!
இளங்கொடி உமையாட் கென்றும்
இன்பனே போற்றி! நாளும்
விளங்குதென் துறைசை வீதி
விடங்கனே போற்றி போற்றி! 44

1471. போதகம் புரிவாய் போற்றி! போதியம் பலத்தாய் போற்றி!
மாதவர்க் கரசே போற்றி! மாசிலா மணியே போற்றி!
கீதமோ டுறையும் நாகக் கிண்கிணிச் சரணா போற்றி!
மேதகு துறைசை வீதி விடங்கனே போற்றி போற்றி! 45

வேறு

1472. மாங்குயிலுந் திறையளிக்கு மதுரமொழி
மலைமகளை மருவி யோர்பால்
தேங்கமழ்செங் குவளையணி தியாகேசா!
ஆரூர்வாழ் தேவ தேவே!
ஈங்கொருகால் நினையாத வெளியேற்கா
மாலயனு மெய்த வொண்ணாப்
பூங்கமலத் தாள்தந்தாய் ஆவடுதண்
துறைவந்தாய் புகழ்தந் தாயே. 46

1469. மறிமுகம் - ஆட்டு முகம்.

1473. என்றுமுசு குந்தரா சேந்திரன்முன்
துதித்திறைஞ்சி ஏத்தும் போது
கொன்றைமுடி யோன்மாசி லாமணியாய்
மெய்க்காட்சி கொடுத்தா காயத்து
ஒன்றியெழும் வாணியினாற் புத்திரசம்
பத்தளித்தோம் உனக்கு ஞானம்
பின்றருதும் பணிபுரிந்தித் தலத்தில்நமைப்
பூசியென்று பேசக் கேட்டு.. 47

1474. கருத்திலடங் காதபெருங் களிப்புடன்பல்
காற்பணிந்து கவலை தீர்ந்து
விருப்பமுடன் கோயில்வலஞ் சூழ்ந்துதெட்ச
ணாமுகமாய் விளங்கு ஞானப்
பொருப்பைஅழ கியபிள்ளை யாரைஅடி
பணிந்துதண்டி பொற்றாள் போற்றி
அருத்தியொடும் அமைச்சர்செய்வித் திடுந்திருமா
ளிகைபுகுந்தான் அரசர் கோமான். 48

முப்பத்தேழாவது
முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளைவரத்துக்கு வந்த
அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 1474
திருச்சிற்றம்பலம்

37. முசுகுந்தச் சக்கரவர்த்தி பிள்ளை வரத்துக்கு வந்த அத்தியாயம் (சுருக்கம்)

ஒப்பிலா முலையுமையாள் கொண்டருளிய ஆடிப்பூர விழாவைப் பற்றிக் கூறினோம். இனி, முசுகுந்தச் சக்கரவர்த்தி அரசுரிமைக்காகப் பிள்ளைவரங் கேட்டதும், திருஆவடுதுறை வந்து பணி செய்த வகையையும் கூறுகின்றோம். மிதிலை மன்னனே கேட்பாயாக எனத் தவுமியர் சொல்லத் தொடங்கினார்.

மலர்ச் சோலைகள் நிறைந்த் கயிலாயமலைப் புறத்து ஒரு இடத்தின் பக்கத்திலுள்ள வில்வ வனத்தில் உலாவும் ஒரு குரங்கானது, மகிழ்ச்சியுடன் குதித்து ஒவ்வொரு நாளும் வில்வத் தளிரைப் பறித்து சிந்தி வந்தது. அவ்வாறே ஒருநாள் இரவு சிந்த, அவ்விடத்திலுள்ள சிவலிங்கத்தின் முடிமேல்

1473. புத்திரசம்பத்து - பிள்ளைப்பேறு.

1474. தெட்சணாமுகம் - தெற்கு முகம். அருத்தியொடும் - ஆசையொடும்.

அவ்வில்வத் தளிர் விழுந்தது. அன்று சிவராத்திரியான்தால் இறைவன் பெருமகிழ்ச்சி கொண்டான். மிகுந்த கருணையுடன் அக்குரங்கின் உருவத்தை நீக்கி, அரச உருவத்தைக் கொடுத்துச் சக்கரவர்த்தியாக்கி, மூன்று உலகங்களையும் ஆளும்படியான வரத்தையும் தந்தருளினார். அப்போது, முசுகுந்தச் சக்கரவர்த்தி இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

மிருக உருவத்துடன் திரியும் அடியேனுக்கு அருள்புரியக் கருணை வைத்த வேத நாதனே! அடியேன் இந்த நன்றி மறவாமல் இருக்க இக்குரங்கின் முகமும், உமது திருவடிகளை மறவாத அன்பும் அருளி, பேரின்ப வீட்டை அடையும்படியான வழியையும் காட்டியருள்வீராக என்றும் கேட்டான். இறைவனும் அவ்வாறே அருள்புரிந்தார். முசுகுந்தனும் மூவுலகங்களையும் ஆண்டு வந்தான்.

ஒருமுறை 'வலாசுரன்' என்ற ஓர் அசுரப் பகைஞன் தேவர்களுக்கு மிகுந்த கொடுமைகளைச் செய்து வந்தான். இந்திரன் முதலான தேவர்கள் அந்த அசுரனுடன் ஆயிரம் ஆண்டுகள் போரிட்டும் தோல்வியுற்றே வந்தனர். பின்பு, இந்திரன் பூமியில் வர, முசுகுந்தன் அவர்கள் முன்பு சென்று வணங்கினான். வலாசுரனுக்கும் தனக்கும் நடந்துவரும் போரைப் பற்றி இந்திரன் முசுகுந்தனிடம் தெரிவித்தான். உடனே முசுகுந்தன் தன்னுடைய எட்டுச் சகோதரர்களுடனும், இந்திரனோடும், படைகளோடும் சென்று அந்த அசுரனைப் போரிட்டுக் கொன்று வெற்றிபெற்றான். கற்பக நாட்டினையும் இந்திரனுக்குப் பரிசளித்தான். முசுகுந்தன் செய்த உதவிக்காகத் தான், இந்திராணி, வெள்ளை யானையைத் தவிர்த்து வேறு எவை கேட்டாலும் தருவதாக இந்திரன் வாக்களித்தான்.

இந்திரனானவன் மதிமயக்கத்தால், தன் உயிருக்குயிராகிய தியாக விடங்களை மறந்த தன்மையினை இறைவன் முசுகுந்தனுக்கு அறிவித்தார். அதன்படி, முசுகுந்தன் இந்திரனிடம் அவன் பூசித்துவந்த சிவனைத் தனக்கு அளிக்குமாறு கேட்டான். மனக்கலக்கம் கொண்ட இந்திரன் மயனிடம் சென்று ஆலோசித்தான். மயன் விடங்கேசர் திருவுருவை வேறொன்று உண்டாக்கித் தந்தான். இந்திரன் அதை முசுகுந்தனிடம் தந்தான். முசுகுந்தனும் மகிழ்வுடன் அதை வாங்கிப் பூசித்தான். இரவில் முசுகுந்தன் கனவில் இறைவன் தோன்றி, அவன் இந்திரனிடம் பெற்ற சிவன் - வீதிவிடங்கன்

தான் அல்ல என்று கூறி மறைந்தார். முசுகுந்தன் எழுந்து, இந்திரனிடமே இதைப் பற்றிக் கேட்டான். உடனே இந்திரன் அதோபோன்று ஐந்து ஈசர் உருவை உண்டாக்கி முசுகுந்தனிடம் அளித்தான். அவற்றிலும் தான் இல்லை என்பதை இறைவன் முசுகுந்தனுக்கு உணர்த்தினார். நுண்மையானதும் செம்மை யானதுமான தோடணிந்த தியாகேசரே உண்மையான நான் என்றும் உணர்த்தியருளினார். இதற்கு மேலும் ஏமாற்ற இயலாத இந்திரன் பூசைக்குரிய சிவனைக் கொண்டு வந்து முசுகுந்தனிடம் அளித்தான். இவ்வாறு கிடைத்த சப்தவிடங்கேசரையும் தேரில் வைத்துப் பூமியில் கொண்டு வந்தான் முசுகுந்தன்.

திருநாகைக் காரோணம், திருக்கோளிலி, திருவாய்மூர், வேதாரணியம், திருநள்ளாறு, திருக்காரவாயில் (திருக்காறாயல்) ஆகிய ஆறு இடங்களிலும் கோயில்களை அமைத்த பின்னர், வீதிவிடங்கத் தியாகேசரைத் திருவாரூரில் பொற்கோயில் உண்டாக்கி அங்கு எழுந்தருளச் செய்தான் முசுகுந்தன்.

இறைவனை இறைவியோடும் செம்பொன்மணிச் சப்பரத்துள் விளங்குகின்ற பீடத்தில் எழுந்தருளச் செய்வித்த போது, செவந்தித்தோடு, இரத்தினகிரீடம், செங்கழுநீர் மாலை, முத்துமாலை, பூணூல் ஆகியவற்றை விளங்க அணிவித்தான் முசுகுந்தன். வீரகட்கம் என்ற இரு செங்கோல்களை இலிங்கத்தின் பக்கத்திலே வைத்தான். ஆகம முறைப்படி ஆறுகால பூசையையும் செய்வித்தான். நித்திய விழா, மாத விழா, நிறைபணி விழா, பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று ஆடரவக் கிண்கிணிகால் காட்டிய நடனவிழா, வணங்குகின்றவர்களுக்கு இன்ப முத்தியருளும் தேர்விழா ஆகியவற்றைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தான் முசுகுந்தன்.

பின்பு, உலகும் உலகத்திலுள்ள போகங்களும் உடலும் கரணங்களும் நிலையற்றனவாய் நீர்க்குமிழி போலத் தோன்றி அழியும் தன்மையைத் திருவருளாலே உணர்ந்தான் முசுகுந்தன். மேலாம் வீட்டை அடையும் நெறியை அடைய விரும்பினான். விடங்கத் தியாசேகர் சந்நிதியில் சென்று வணங்கி, பொங்கரவச் செஞ்சடையாய்! மாலும் அயனும் அறியாத புனிதா! என்மேல் இருக்கும் பூபாரத்தையெல்லாம் சுமப்பதற்கு ஒரு மகனை அடியேனுக்கு அருள வேண்டுமென விண்ணப்பித்தான். அன்று இரவு அவன் கனவில் தியாகேசப் பெருமான் தோன்றினார். அவன் விரும்பியவாறே பிள்ளைவரம் தருவதாகவும் கூறியருளினார்.

ஆரூரில் கோயில் கொண்டருளியுள்ளது போன்றே துறைசையிலேயும் தாம் இருப்பதை உணர்த்திய இறைவன், முசுகுந்தன் இத்தலம் சென்று பணி செய்திருக்கவும் கட்டளையிட்டார். அங்கு வந்து பிள்ளைவரம் பயன் கிடைக்க ஆவன செய்வதாகவும் அருளினார். அவ்வாறே முசுகுந்தனும் இந்தக் கோமுத்திநகர் வந்து இறைவனை தரிசித்தான். மாசிலாமணிப் பெருமானே வன்மீக இலிங்கமாகவும், திருஆரூரே அருள் நிறைந்த துறைசையாகவும், துறைசையிலுள்ள கோயில், கோபுரம், மண்டபம், குளம் ஆகியவை திருவாரூரைப் போலவே காட்சி கொடுத்தருளி, நர்த்தன மண்டபத்தின் நடுவில் நின்று வீதிவிடங்கராக நடித்து மாசிலாமணி இலிங்கஜோதியுள் மறைந்தருளினார். அப்பொழுது முசுகுந்தன் தன்னை மறந்து, வீழ்ந்து வணங்கிப் போற்றிப் பலவாறு துதித்தான். மாசிலாமணிப் பெருமான் காட்சியருளி பிள்ளைப்பேறும் நல்கினார்.

இறைவனின் அருளாணையின் வண்ணம் முசுகுந்தன் இத்துறைசையிலே திருப்பணிகள் பல செய்து கொண்டு, கவலைகள் மறந்து, துணைவந்த விநாயகரை வணங்கி வழிபட்டு வந்தான்.

முப்பத்தெட்டாவது
திரவியத் தியாகேசர் தைத்திருவிழாக் கொண்டருளிய அத்தியாயம்

1475. அன்புமிகு முசுகுந்தன் வந்துசிவ
  தரிசனைசெய் தருள்பெற் றுய்ந்தது
இன்பமொடு முரைசெய்தே மிதுலேசா
  இனியவனிவ் வுலக முய்யப்
பொன்புரைசெஞ் சடிலமுடித் திரவியப்பொற்
  தியாகர்விழாப் புணர்தை மாதம்
இன்பொருநன் மணிமாடத் துறைசையிற்செய்
  வித்தவெழில் விளம்பக் கேண்மோ. 1

1476. தேவமயன் நிருமித்த வரமனையிற்
  சென்றன்று தேவி யோடும்
பூவணையிற் துயின்றெழுந்து புலரியிற்கா
  விரியாடிப் பொருந்து நேமம்
ஆவலுடன் முடித்துநீ றணிந்தக்கு
  மாலைபல அணியாப் பூண்டு
மேவுமரன் கோயிலிற்சென் றடிபணிந்து
  வெளியில்வந்து விரகி னோடும். 2

1477. மல்குகொலு மண்டபத்தி லரியணையில்
வீற்றிருந்து மறையோர் ஞானம்
புல்குதவ முனிவர்மிகும் ஆதிசைவர்
சாத்திரநூற் புலமை யோர்கள்
பல்கிளைஞர் மந்திரிகள் சேனைமன்னர்
முதற்சான்றோர் பலருஞ் சூழ
அல்குதலில் லாஅறிவால் அவரவருக்
கேற்றஇன்சொல் அறைவ தானான். 3

1478. மாசிலருட் தியாகேசன் தைவிழாக்
கொண்டருளும் வண்ணம் நீங்கள்
ஆசையொடும் பணிபுரிக வேண்டுவவெல்
லாமளிப்பே மன்பாற் கொண்டு
பூசனைகள் திருப்பணிகள் வாகனம்தேர்
விதானநகர்ப் பொலிவு யாவும்
நேசமொடுஞ் செய்யுமென முகமனொடு
முரைபகர்ந்து நிருபர் கோமான். 4

1479. பதினெண்சொற் பேதமுறும் ஐம்பத்தெண்
மண்டலங்கள் பரிப்போர்க் கெல்லாம்
கதியுதவு தியாகர்விழாக் காண்பதற்கு
வருகவெனக் கரணர் கையால்
முதிர்நியதி மொழிவரைந்த முடங்கலொற்றர்
பாற்போக்க முகம னோடு
மதிமருவும் அரசரெலாம் திருமுகம்வாங்
கிப்பரிவால் வணங்கி யோர்ந்து. 5

1480. அருந்திறைகள் வேண்டுவவெல் லாம்பரிக்கு
மாக்கள்மிசை யமர்வித் தொல்லை
பெருந்திருவி னுடனிரத கசதுரக
பதாதியெலாம் பெயர்ந்து வந்து
திருந்துபுகழ் முசுகுந்தச் சக்கரரா
சன்சமுகஞ் சென்று கண்டு
பொருந்துதிறை முன்குவித்து வணங்கிடவந்
தியாதுதித்துப் புகல்வ தானார். 6

1481. கலைவளமும் கொடைவளமும் புயவளமும்
சயவளமும் கருணைச் செங்கோல்
நிலைவளமும் புகழ்வளமும் எழில்வளமும்
படைத்துலகாள் நிருப ரேறே

1479. கரணர் - இராயசம்.

மலைவளமும் கடல்வளமும் வனவளமும்
நாட்டிலுள வளமும் கொண்டு
தலைமைபெறு வளமுடைய முடியரசர்
உனதுகழற் தாள்மேல் வீழ்ந்தார். 7

1482. வங்கரிவர் மதகரிவர் மராடரிவர்
உமணரிவர் மருவு சீனர்
கொங்கரிவர் கவுசலர்சா வகர்துளுவர்
இவரிவர்கோ சலத்தர் மிக்க
சிங்களநாட் டரசரிவர் கலிங்கர்சோ
னகரிவர்நற் சிந்து நாடர்
அங்கரிவர் காம்போசர் திராவிடர்பப்
பரர்களிவ ராகு மன்றே. 8

1483. தனபதியும் கசபதியும் அசுவபதி
நரபதியும் சார்ந்தா ரீந்த
கனதிறைகள் நிதிமலையு மணிமலையும்
பணிமலையும் கலைப்பூம் பட்டும்
வனமருவு சந்தமகில் கருப்பூர
மிருகமதம் வளர்கத் தூரி
இனமருவு நிமந்தபதார்த் தங்களிவை
யெனக்காட்ட இயைந்து நோக்கி. 9

1484. நன்னலஞ்சேர் சோணாட்டி விருந்துலக
முழுதாளும் நாத னான
துன்னுபுகழ் முசுகுந்த ராசேந்திரன்
மகிழ்ந்துசிரந் துளக்கி வந்த
மன்னருக்கெல் லாமுவகைச் சிறப்பீந்து
தியாகர்விழா வளங்கள் யாவும்
பொன்னுலவு துறைசைசிறப் புறப்பணிநீர்
புரியுமெனப் புகல்மேற் கொண்டார். 10

வேறு

1485. குணமேவு குன்றனையான் முசுகுந்தன் புகலேவல்
கணமேனு முள்மறவா தவரவர்செய் பணி கருதித்
துணையாமுமை யொடுமாசறு சுகவாரிதி யமரு
மணமாளிகை யழகாகநன் மணியாலெழில்
புனைவார். 11

1485. மணமாளிகை - திருக்கல்யாண மண்டபம்.

1486. செம்பொற்றியா கேசன்திகழ் திருமாளிகை முழுதும்
பண்புற்றிடு நவரத்தின மாலைத்திரள் பலசேர்த்து
இன்பத்தொடு கனகத்தக டிசைவித் திரசதபீ
டம்பொற்புற மணிவாசிகை யணிவித்தெழில் சொரிவார். 12

1487. பொன்னால்மர கதத்தாலிர சதத்தாற்பொரு வில்லா
மின்னார்வயி ரத்தாற்பவ ளத்தால்விரி கதலித்
தென்னார்கமு கம்பூவிரி செய்தெங்குமண் டபங்கள்
நன்னாகரி கந்தோன்றிட நடுவார்விளக் கிடுவார். 13

1488. களபச்செழுஞ் சாந்தங்கமழ் விப்பார்மதி லெங்கும்
வளர்சித்திர மணிவார்பல மணிதங்குபொற் கதவிற்
புழுகுய்ப்பர்கண் மேற்கட்டிகள் புணர்ப்பா ரகிற்புகைகள்
உழையிற்பல மணிமண்டபத் துறவெங்கணு மமைப்பார்.
14

1489. விண்ணாடரும் மண்ணாடரும் வெளிநாடரு மறியக்
கண்ணார்துகிற் கொடியோங்குபொற் கதிர்க்கோபுர மெங்கும்
எண்ணார்ந்தசைந் துலவத்தொகு விப்பாரெழிற் தீப
நண்ணார்களு நண்ணத்திசை நான்குந்தெரி விப்பார். 15

1490. திருவீதிகள் விளக்கிச்செழுஞ் செங்குங்கும மெழுகி
அருகாகநித் திலப்பந்தர்செய் தலங்கற்றொடர் புனைவார்
மருமாலிகை தளவத்தொடை வளர்பொற்றக டணிகள்
பிரியாதுபொன் னால்நூற்றிடு பெருத்தோரண மிடுவார். 16

1491. எண்டிக்கினு நிலைத்தேர்கன கத்தாலியை வித்துக்
கொண்டற்திர ளெனவேகொடி குலவப்புரி விப்பார்
தண்டுற்றிடு குலைவாழைகள் பூகத்திர டரளம்
விண்டுற்றிடு மொழியிக்குவே திகைதோறும் விதிப்பார். 17

1492. அனசத்திர மணியாடரங் கலர்தெற்றிகண் மேல்வீடு
இனமுற்றசா ளரமுற்றமோ டெழில்வீதிகள் யாவும்
புனைவித்திடு மெழில்கண்டெழிற் பொலன்மேகலை மடவார்
மனதிற்களி யொடுசித்திர மயிலொத்திட மெங்கும். 18

1493. பஞ்சுற்றிடு பதநூபுர மிரையப்பணி யசைய
வஞ்சிக்கொடி யிடைநற்றன மலையைச்சுமந் தொசிய
நஞ்சுற்றிடும் விழிவேலிளை ஞோர்மார்பிடை நாட்டிக்
கொஞ்சிச்சிலர் திரிவாரவர் குலவுமொழில் கண்டு. 19

1490. நித்திலப்பந்தர் - முத்துப்பந்தல்.

1494. வெவ்வேறு திசைச்சொல்மொழி மின்னடர்சிலர் பேச
அவ்வாசகப் பொருளின்னதென் றறியாமலர் சிலர்கள்
செவ்வாயுறு மொழியோஇது செங்கைக்கிளி மொழியோ
எவ்வாறறி வோமென்றுபின் னெய்திச்சிலர் திரிவார். 20

1495. மறுகுற்றிடு மெழிலைச்சில மடவாரிமை யாமற்
பிறிதற்றுடன் காணச்சிலர் பிரசத்தொடை யரசர்
கறையற்றிடு மதில்போல்முகங் காட்டுமிவர் வானத்து
உறைபொற்பர மடவார்கொலோ வெனவுற்றெதிர்
தொழுவார். 21

1496. திருக்குக்குழல் மின்னார்சிலர் திரள்செப்பினை முலையூடு
உருக்கத்தொடு மிருகண்களை யுறவிட்டது வாங்கத்
தருக்கற்றிரு மலையூடுறு மதயானைகள் தடையாய்
நெருக்குற்றிடு மதுபோற்சிலர் நிற்பாரசை யாமல். 22

1497. அலரும்பட அரவானது நிலவின்கலை யதனை
உலகந்தனில் மறைக்கும்வகை கண்டோம்உம திடைசேர்
நிலவின்கலை அரவத்தினை மறைக்கின்றஇந் நிலைமை
சொலுமென்றிளை ஞோர்பற்பலர் சிலமாதர்பின்
தொடர்வார். 23

1498. கூற்றோவிழி அமுதோ மொழி குன்றோமுலை மதியின்
கீற்றோநுதல் முகிலோகுழல் கிளர்கிஞ்சுகம் இதழோ
ஆற்றாமயல் தருமிம்மட வார்கட்கிடை அறியேம்
தோற்றாமலெங் கொளித்தார்கொலோ வென்றேசிலர்
சுழல்வார். 24

1499. இவ்வாறிளை ஞோர்மாலுற இளங்கொங்கைநன் மடவார்
செவ்வாய்முகம் வெயர்ப்பச்சிலர் சிலம்பார்ப்புற நடிப்பார்
பெய்வார்பனி நீர்குங்குமம் பெருகச்சிலர் மறுகில்
நெய்வார்த்தொளிர் தீபத்திரள் நிரைப்பார்சில ரெங்கும். 25

1500. அருந்துஞ்சுவை யமுதத்தொடு நெய்பால்தயிர் கருணை
திருந்தும்அறு சுவைகொண்டசிற் றுண்டிச்சுவை கனிகள்
விருந்தென்றுவந் திடுவோர்க்கெலா மிகவுள்மகழ்ந்
தெதிர்போய்ப்
பொருந்துங்குண முடனேயழைத் தூட்டிச்சிலர்
புகழ்வார். 26

1497. அரவு - இராகு.

வேறு

1501. இத்தகை வளங்கோ முத்தி நகரிட மெங்கு மல்கத்
தத்தைமென் மொழியார் மோகன் முசுகுந்தத் தலைவ னுள்ளம்
மெத்தவு மகிழ்ந்து கோயில் மண்டப மேவி யாதிச்
சுத்தசை வத்தி னோர்கள் முதற்திருப் பணியுட் செய்வோர்.
27

1502. வேதவே தியர்கள் சைவா கமர்வியா கரணர் யோக
சாதகர் பரிச னங்கள் தவநெறி முனிவ ரங்கம்
ஓதுபூ சுரர்கள் சுற்றும் பலதொழி லுஞற்று வோர்கள்
ஆதிநா யகன்வி ழாவுக் கரும்பணி புரிவோர்க் கெல்லாம்.
28

1503. பொன்னிதி மணிப்பூ ணாடை கோசிகம் போக வர்க்கம்
என்னவேண் டினுமீந் தின்ப மாசிலா ஈசற் கென்றும்
மன்னுபூ சனைகட் கேற்ற நிமந்தங்கள் வளங்க ளோங்கும்
துன்னுபண் டாரப் பண்டி யறையெங்குந் தொகுத்தின்
போடும். 29

1504. ஆனபூ சனைநி வேத னம்பல அபிடே கங்கள்
தேனகு மாலை தீபம் அலங்கார மிகவுஞ் செய்வித்து
ஊனமில் பெரியோர்க் கெல்லாம் உத்தம தான மன்ன
தானமெண் ணிலாம டங்கள் சத்திரந் தோறும் நல்கி. 30

1505. புகழ்மிகு துறைசை காக்கும் புண்ணியச் சாத்தர் துர்க்கைக்கு
இகலறு பத்து நாளும் இபமுகப் பிள்ளை கந்தர்க்கு
அகமகிழ் பத்து நாளும் மணிவிழா நடாத்திப் பின்னர்
தகவுறு மகர மாத விரதசத் தமிக்கு முன்னாள். 31

1506. சகம்புகழ் கின்ற சந்திர சேகரப் பட்டஞ் சூடி
மகிழ்ந்துசெம் பொற்தி யாகர் வளமிகு துறைசை வீதி
உகந்துலா வரப்பொற் கம்பத் துயர்கொடி இடப மேற்றித்
தகுந்திரு விழாநாள் நான்குந் தமனியக் கேட கத்தும். 32

1507. பூதவா கனத்தும் வெள்ளிப் பொருப்பினும் விமானம் மீது
மேதகும் உமையா ளோடும் வீதிவந் தைந்தாம் நாளிற்
கோதறு போதி நீழற் குலவுவெள் விடையின் மீது
சோதிமா மணிப்பூஞ் சப்பிரத்து ஒப்பிலாத் துணைவி
யோடும். 33

1503. நிமந்தங்கள் - கட்டளைகள்.
பண்டாரப் பண்டியறை - பொக்கிஷ அறை.

1508. எண்ணிலாச் சிறப்பு மல்க இடபவா கனத்தின் காட்சி
மண்ணுல கத்தோர்க் கெல்லாம் மகிழ்வுறக் கொடுத்து வீதி
நண்ணிமற் றையநாள் மூன்று நல்விபந் தருமா மேவி
அன்னலார் காட்சி யீந்த தன்றியும் ஐந்தாம் நாளில். 34

1509. வசந்தமண் டபத்தி லாட மகிழ்ந்துபூங் கோயில் விட்டுக்
கசிந்தமெய்ப் பத்தர் போற்றக் கதிதரு செம்பொற் தியாகர்
அசைந்தசைந் தாடி நிர்த்த மண்டப மதனில் வந்து
துசம்பெறு மயிலின் பீலி சுற்றினுந் துள்ளி யாட. 35

1510. வட்டவா சிகைமே லாட மதிமுடிச் சடில மாடக்
கட்டகு மலர்த்தா ராட கங்கணப் பணிக ளாடச்
சுட்டிநன் னுதல்வேர் வாடத் தூக்குநித் திலக்குச் சாடச்
சிட்டர்கள் தொழும்வார் காதிற் செவ்வந்தி மலர்த்தோ
டாட. 36

1511. வெட்டிவேர்க் கொழுந்து மொய்த்த விசிறிகள் விளங்கி யாடப்
பட்டிகை யுதர பந்தம் பதக்கம்பொற் பணிக ளாட
உட்டொடை யாட வேங்கை யுரியத ளாடை யாடக்
கட்டுகிண் சிணித்தா ளாடக் களபமெய்க் கவினின் றாட. 37

1512. செங்கைமான் மழுவு மாடத் திரள்முலை யொப்பி லாளோர்
பங்கினின் றாட வைங்கைப் பகவனுஞ் சேயு மாடக்
கங்கைமா தாடப் பானு கம்பர்சங் கிசையோ டாடக்
கொங்கலர்த் தோள்வா ணேசன் குடமுழா முழக்கி யாட. 38

1513. ஐந்துதுந் துமியார்த் தாட அரியயன் அமர ராடச்
சந்திரன் இரவி மிக்க தாரகைக் கணங்க ளாடச்
சிந்துரத் திசைமா வாடத் திரைக்கடல் மேரு வாடப்
பைந்துணர்த் தருக்க ளாடப் பல்சரா சரங்க ளாட. 39

1514. துடியிடை மடவா ராடத் துதிக்குநா வலர்க ளாட
அடியவர் குழாங்க ளாட அந்தணர் முனிவ ராடக்
கொடிமிசை யிடப மாடக் கொடிகள்கே தனங்க ளாடத்
திடமிகு புவிகொண் டாடத் திரவியத் தியாக ராடி. 40

1515. கோயிலை வலமாச் சூழ்ந்து கோபுரத் தூடு போந்து
வாயிலைக் கடந்து போதி வனத்தினின் றுலாவி யாடி
ஞாயிறா யிரம்போற் தோன்று நவநிதி யம்ப லத்துட்
தோயுநற் தென்றல் வீசச் சுந்தர நடனஞ் செய்து. 41

1516. அரியணை மீதில் ஒப்பி லாமுலை அரிவை யோடும்
பரிவுடன் வீற்றி ருந்து பலவுப சார பூசை
மருவவுள் மகிழ்ந்து தீபா ராதனை மகிழச்சி யோடும்
திருமலி யாதி சைவர் செய்திடக் கருணை கூர்ந்து. 42

1517. எண்டிசை அரச ரோடும் எதிர்நின்று வணங்கி நேரே
கண்டகண் டரளஞ் சிந்தக் கசிந்துள முருக மேனி
கொண்டெழு புளகம் பொங்கக் குழறிவாய் துதிகள் பாட
முண்டகக் கரங்கள் கூப்பு முசுகுந்தன் தன்மீ தன்பாய். 43

1518. கருணைநோக் களித்து வேண்டும் கதிதொழு வோர்கட் கெல்லாம்
பெருகவே யருள்செய் தின்பப் பிராட்டியோ டெழுந்து சென்று
மருமலி பூங்கோ யிற்குள் மருவிநற் றியாக நாதன்
திருமலி கருணை யோடுந் திகழ்ந்திருந் தொன்பான் நாளில். 44

வேறு

1519. ஆழித்தேர் வித்தகராய் ஆரூரிற்
திருத்தேர்கொண் டருளு மாபோல்
ஊழிக்கா லமுமழியாத் துறைசைநகர்
மறுகினிற்பொன் னுருளு ராழிக்
காழுற்ற ரதமேறித் துணைவியுமைந்
தருமுன்பின் கனக வெற்பைச்
சூழுற்று வருமலைபோ னாகிரத
மேறிவரச் சுகமாய்ப் போந்து. 45

1520. திருவுலாச் சூழ்ந்தருளிப் பல்லுயிர்க்கும்
பெருங்கருணைச் செல்வ மீந்து
பொருவிலா மகிழ்ச்சியொடு நீணிலத்திற்
போந்துநடம் புரிந்து சென்று
மருவுலா மலர்நெடுங்கா வணத்தூடு
போய்க்கோயில் மருவிப் பின்னும்
அருளுருவா மணியிலிருந் தணைத்தெழுந்த
நாயகரா யருளி னோடும். 46

1521. பன்னுபத்தா நாளிரத சத்தமியில்
உத்தரா யணத்திற் பானு
மன்னுசீர் வைகறையில் மண்ணாடர்
விண்ணாடர் மற்றி யார்க்கும்

பொன்னுலாங் கமலமலர்க் கோமுத்தி
தீர்த்தமருள் புரிய வேண்டி
மின்னகுபொற் பணியிலகும் வெள்விடையின்
மீதேறி வெளியிற் போந்து. 47

1522. செக்கர்நிறச் சடைமுடியு மணிநீலத்
திருமிடறுந் திரள்தோள் நான்கும்
முக்கணுமா மதிமுகமுங் குழைச்செவியும்
மான்மழுவு முளரிக் கையும்
அக்கணியுந் திருமார்பும் புலியுடையும்
சிலம்பணியம் புயப்பொற் தாளும்
பக்கமுற உமையாளை அணைத்திடுகோ
லமுங்காட்டிப் பரிவி னோடும். 48

1523. அணைத்தெழுநா யகக்காட்சி கண்டுலகத்து
உயிர்முழுது மருள்பெற் றுய்யத்
துணைத்திருநோக் கருள்புரிந்து மாமணிப்பொற்
கோயிலிற்பெண் துணையோ டெய்திப்
பணைத்தெழுகொங் கையினொடும்பி னந்நாள்மா
லைப்பொழுது பண்பாய்ப் போந்தங்கு
இணைத்தபந்தர்க் காட்சிகொடுத் தியாவருக்கும்
போரின்ப மீய வேண்டி. 49

வேறு

1524. செம்பொன்மா லிகைநன் முத்துத் தாமஞ்செம் மணியின்
கோவை
பம்புபூந் தெரியல் மற்றப் பல்விதா னத்தி னாலும்
இன்பமார் கனிவர்க் கங்கள் இலகுபொற் பட்டி னாலும்
அன்பணிந் தலங்கா ரித்து வைத்தபே ரமுகு யாவும். 50

1525. நந்திடா திலங்கு ஞான நவநிதி யம்ப லத்துள்
மந்திர அபிடே கங்கொண் டருளிவண் போதிக் காவிற்
சுந்தர நடனத் தோடுந் துலங்குபூம் பந்தர் மேவி
ஐந்தலை அரவ மாடும் அழகுகிண் கிணிக்கால் காட்டி. 51

1526. பாரிடத் துயிர்கள் கண்ணாற் பருகியா னந்த வெள்ள
வாரியுட் புகுந்து லாவ மகிழ்ந்துசூழ்ந் துலாவி யாடி
ஏருறத் தென்றல் வீசும் இலங்குபூங் கோயில் சேர்ந்து
சீருறத் தேவி யோடும் தியாகர்வாழ்ந் திருந்தார்
மாதோ. 52

வேறு

1527. ***தைமகர சத்தமியிற் தியாகர்விழாக்***
கொண்டருளுந் தகைமை சொன்னோம்
மைமலிபூம் பொழில்மிதுலை மன்னாநீள்
மனுகுலத்தின் வந்த வீரன்
பைமலிந்த வரவேந்தும் பார்பரிக்கும்
இருதோளான் பகைஞர் சிங்கம்
செய்மலிதண் துறைசையில்நன் முசுகுந்தன்
சிவார்ச்சனைசெய் செய்தி சொல்வாம். **53**

முப்பத்தெட்டாவது
திரவியத் தியாகேசர் தைத் திருவிழாக் கொண்டருளிய
அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 1527.
திருச்சிற்றம்பலம்

38. திரவியத் தியாகேசர் தைத் திருவிழாக் கொண்டருளிய அத்தியாயம் (சுருக்கம்)

திருவாவடுதுறை வந்த முசுகுந்தன் சிவனருளால் மகப்பேறு பெற்றதைச் சொன்னோம்; இனி, தியாகேசருக்குத் துறைசையிலே அவன் தைத்திருவிழாச் செய்வித்ததைக் கூறுகின்றோம் கேட்பாயாக எனத் தவுமியர் மிதுலேசனிடம் சொல்லத் தொடங்கினார்.

தேவமயன் நிருமாணித்த மாளிகையில் தேவியோடு துயில் கொண்டு, விடியற்காலையில் எழுந்த முசுகுந்தன் காவிரியில் நீராடி நியமங்களை முடித்து நீறணிந்து, அக்கமாலை புனைந்து கோயிலுக்குச் சென்று மாசிலாமணியீசரை வணங்கினான். பின்பு, கொலுமண்டபத்திலுள்ள சிம்மாசனத்திலிருந்து கொண்டு, மறையோர், தவமுனிவர்கள், ஆதிசைவர்கள், புலவர்கள், மந்திரிகள், பல மன்னர்கள், சான்றோர்கள் போன்ற பலரும் புடை சூழ்ந்திருக்க, அவரவர்களுக்கு ஏற்ற முகமன் சொல்லிப் பின்பு கூறத் தொடங்கினான்.

மாசிலருட் தியாகேசருக்குத் தைத் திருவிழாக் கொண்டாடுவதற்கு நீங்கள் எல்லாரும் பணிபுரிய வேண்டும்; உமக்கு வேண்டுவன எல்லாவற்றையும் அளிப்போம்; அவற்றை ஏற்றுக்கொண்டு பூசைகள், திருப்பணிகள், வாகனங்கள், தேர், விதானம், நகர அலங்காரம் ஆகியவற்றைச் செய்யுங்கள்

என்று பொன்னையும் மணிகளையும் வாரி வழங்கினான் முசுகுந்த சக்கரவர்த்தி.

பின்பு, பதினெண்சொற் பேதங்களைக் கொண்ட ஐம்பத்தெட்டு மண்டல அரசர்களுக்கெல்லாம் மடல் அனுப்பினான். தியாகேசரின் தைவிழாவைக் காண எல்லாரும் வாருங்கள் என்று இராயசம் என்னும் கரணர் கையால் எழுதிய முடங்கல் (ஓலை) களைத் தூதுவர்கள் மூலமாக அனுப்பினான். அவர்களும் அந்தத் திருமுகத்தை வாங்கிப் பார்த்து, கப்பங் களையும் பிற பொருள்களையும் குதிரைகளின் மீது ஏற்றினர். அவரவர் தம் மனைவிமார்களோடும் படைகளோடும் புறப்பட்டு வந்து முசுகுந்தனைக் கண்டு வணங்கினர். கொண்டு வந்த பொருள்களையும் காணிக்கையாக்கி மகிழ்ந்தனர். முசுகுந்தனும் மனமகிழ்ந்து வந்துள்ள மன்னர்களுக்கெல்லாம் இன்மொழிகள் கூறினான். அனைவரும் இறைவன் திருப்பணி செய்ய முழுவதுமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

முசுகுந்தன் கூறிய ஏவலை மறவாமல் மன்னர்கள் அனைவரும் அவரவர் பணிகளை மேற்கொண்டனர். சிலர், அம்பிகையுடன் இறைவன் எழுந்தருளும் திருக்கல்யாண மண்டபத்தை இரத்தினங்களால் அழகுபடச் செய்வித்தனர். சிலர், தியாகேசன் கோயில் கொண்டுள்ள திருமாளிகை முழுவதும் நவரத்தின மாலைத் திரள்களாலும் பொற்தகடு களாலும் அணிபெறச் செய்வித்து, வெள்ளியினாலான பீடத்தையும் இரத்தினங்களாலான திருவாசியையும் செய்வித் தார்கள். சிலர், வாழை, கமுகு, கரும்பு போன்றவற்றை அழகாக நாட்டி விளக்குகளையும் ஏற்றி வைத்தனர். சிலர், மதிலிடங்களிலெல்லாம் சித்திரங்களைத் தீட்டியும், கதவுதோறும் புனுகுகளை மெழுகியும், களபத்தாலும் சந்தனத்தாலும் வாசனையையும் எழுப்பினர். சிலர், விண்ணுலகத்தாரும், மண்ணுலகத்தாரும், அயல் நாட்டாரும் அறியும்படியாகக் கொடிகளைக் கோபுரங்களில் எங்கும் அசையும்படி கட்டினர். வேறு சிலர், திருவீதிகளை அலகிட்டுச் செங்குங்குமத்தால் மெழுகினர். முத்துப் பந்தலிட்டு அதில் மாலைகளையும் கட்டுவித்தனர்; மருக்கொழுந்து மாலை மற்றும் பொற்கயிற்றில் கோக்கப்பட்ட பொன் தகடுகளாலாகிய தோரணங்களினாலும் அழகு செய்தனர்.

இத்தகைய அலங்காரங்களையெல்லாம் காண வந்த பெண்கள் வீதிகளிலே மயில்களைப் போலத் திரிந்தவண்ணம்

இருந்தார்கள். இப்பெண்களின் அழகிலே ஆடவர் பலர் மயங்கினார்கள். சில பெண்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசித் திரிந்தனர். அவற்றின் பொருள் உணரா ஆடவர் சிலர் அப்பெண்களது வாயிலிருந்து வருவது சொல்லா? அல்லது கிளியின் மொழியா? என மயங்கி அவர்கள் பின்னே திரிந்தனர். சில பெண்கள் தைத்திருவிழா அலங்காரங்களை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த சில மன்னர்கள் அவர்கள் தேவ மகளிர் என நினைத்து அவர்களை வணங்கினர்.

அங்கு வந்த அழகிய பெண்களுடைய தனங்களில் உருக்கத்துடன் தங்கள் கண்களைப் பொருந்த வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த மன்னர்கள் சிலர், மீண்டும் தங்கள் கண்களைத் திருப்புதற்கு வன்மை இழந்தனர்; அவர்கள் அசைவற்றும் நின்றனர். இது, இரண்டு மலைபோன்ற பெரிய கற்பாறைகளுக்கிடையே சென்ற மதயானைகள் வெளிவர முடியாது தடைபட்டு நிற்பது போன்று இருந்தது.

வேறு சில இளைஞர்கள் அங்கிருந்த பெண்களைப் பார்த்து, பெரிய படத்தினையுடைய இராகு என்ற பாம்பானது சந்திரனின் கலையை மறைக்கும் விதத்தை இவ்வுலகத்திலே கண்டிருக்கிறோம்; உம்முடைய இடையிலே சேர்ந்த ஆடையென்னும் கலையானது அல்குலாகிய அரவத்தினை மறைத்து நிற்கின்ற இந்நிலைமையைச் சொல்லுங்கள் என்று அவர்கள் பின்னே தொடர்ந்து சென்றனர்.

ஆடவரில் சிலர் மகளிர் அழகில் மயங்கித் திரிந்தனர். உங்களுடைய விழிகள் கூற்றோ? மொழிகள் அமுதமா? முலையானது மலையா? நெற்றியானது சந்திரனின் கீற்றா? கூந்தலானது மேகமோ? உதடானது முருக்கம்பூ இதழோ? என அவர்களிடமே கேட்டனர். இத்தகைய அழகான பெண்கள் தம் இடையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறார்கள்? இடையைக் காண இயலவில்லையே என மயங்கினர் சில ஆடவர்.

இவ்வாறு ஆடவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பெண்கள் பலர் பாடியும் ஆடியும் ஆரவாரம் செய்து அழகிய விளக்குகளை ஏற்றி மகிழ்ந்தனர். வந்த விருந்தினர்களுக் கெல்லாம் அறுசுவை உண்டியளித்து உபதேசித்தனர். பின்பு, முசுகுந்தன் எல்லா அலங்காரங்களையும் கண்டு மனமகிழ்ந்தான். கோயிலின் மண்டபத்தை அடைந்து அனைவருக்கும் சிறப்புச்

செய்தான். சைவப் பெருமக்கள், திருப்பணி செய்வோர், வேதியர்கள், சைவாகமர், வியாகரணர், யோகசாதகர், பரிசனங்கள், முனிவர்கள், பூசுரர்கள், தொழிலாளர்கள் போன்ற அனைவருக்கும் பொன், நவரத்தின ஆடை முதலானவற்றை வழங்கினான். மாசிலாமணிப் பெருமானுக்கு என்றும் பூசனை நிகழும்வண்ணம் கட்டளைகளையும் நிதிகளையும் நியமித்து மகிழ்ந்தான். பூசை, நிவேதனம், பல அபிடேகங்கள், அலங்காரங்கள், விளக்குகள் ஆகியவற்றை ஏற்படுத்தி, பெரியவர்களுக்கெல்லாம் தானங்கள் தந்தான். மடங்கள், சத்திரங்களில் அன்னதானங்கள் தடைபடாது நிகழச் செய்தான்.

இத்தலத்தைக் காவல் புரியும் புண்ணியச் சாத்தர், துர்க்கை ஆகியோருக்குப் பத்துநாள் திருவிழாவும், விநாயகன், முருகன் இவர்களுக்குப் பத்துநாள் திருவிழாவும் செய்வித்தான். பின்பு, தை மாதத்தில் இரத சப்தமிக்கு முன்தினம் சந்திரசேகரப்பட்டம் சூடி, தியாசேகர் துறைசை வீதியிலே உலா வருவதற்குக் கொடி ஏற்றினர்.

நான்கு நாள் திருவிழாக்களிலும் முறையே கேடயம், பூதவாகனம், கயிலாய வாகனம், விமானம் இவற்றில் அம்பிகையொடு இறைவன் வீதியில் வந்து காட்சி கொடுத்தான். ஐந்தாம் நாள் போதி நிழலிலுள்ள விடையில் வந்து சப்பரத்திலே ஒப்பிலா முலையம்மையுடன் வீதியுலா வந்து காட்சி தந்தான். பக்தர்கள் போற்றத் தியாகேசர் அசைந்து ஆடினார்; நிருத்த மண்டபத்தில் வந்து திருநடனம் ஆடினார்; இவ்வாறு ஆடிக்கொண்டே கோயிலை வலமாக வந்து, கோபுரத்தின் வழியாகச் சென்று உள் வாயிலைக் கடந்து, அரசவனத்திலிருந்து உலாவி ஆடினான். பின்பு நவநிதியம்பலத்துள்ளும் ஆடல் புரிந்து அனைவரையும் மகிழ்வித்தான்.

ஒப்பிலா முலையம்மையுடன் இறைவன் சிம்மாசனத்தில் வீற்றிருக்க, ஆதிசைவர்கள் தீபாராதனைகளையும் பல உபசார பூசைகளை ம் செய்தனர். இறைவன் கருணை கூர்ந்து முசுகுந்தன் மீது திருவரு பார்வை நல்கினான். வணங்கிய அடியார்க்கெல்லாம் அருளினான் இறைவியுடன் கோயிலிலும் எழுந்தருளினான். ஒன்பதாம் ந ரில் திருவாரூரில் திருத்தேர் விழாக் கொள்வதைப் போல ஊழிக்காலத்தும் அழியாத துறைசை நகர் வீதியிலே தேர்விழாக் கொண்டு திருக்கோயிலில் மாசிலாமணியாகவும் அணைத்தெழுந்த நாயகராகவும் காட்சி தந்தான்.

பின்பு, பத்தாம் நாளில் இரதசப்தமியில் உத்தராயணத்தில் விடியற்காலை மன்னர்கள், தேவர்கள், மற்றும் அனைவருக்கும் தீர்த்தம் அருள் புரியும் நிமித்தம் இடபவாகனத்தின் மீது அமர்ந்து வெளியிலே வந்தான் இறைவன். அணைத்தெழு நாயகனது காட்சியை அனைவரும் தரிசித்து அருள் பெற்றனர். மாலையிலே தியாகேசன் இறைவியோடும் எல்லோருக்கும் பேரின்பம் கொடுத்தற்பொருட்டுப் பந்தர்க் காட்சியையும் அருளி, ஒப்பிலாமுலையம்மையோடும் திருக்கோயில் சேர்ந்தான்.

இவ்வாறு தைமாத சப்தமியிலே தியாகேசன் விழாக் கொண்டருளியதைச் சொன்னோம்; இனி முசுகுந்தன் சிவார்ச்சனை செய்ததைக் கூறுகின்றோம் கேட்பாயாக எனத் தவுமிய முனிவர் மிதிலேசனிடம் சொல்லத் தொடங்கினார்.

முப்பத்தொன்பதாவது
முசுகுந்த சக்கரவர்த்தி சிவார்ச்சனை செய்து முத்திபெற்ற அத்தியாயம்

1528. செல்வமிகு முசுகுந்தன் சினகரத்துக்கு
உத்தரபா ரிசத்திற் செய்த
பல்வகைய வெழில்மருவும் அரசமா
ளிகையினிற்பல் மணிப்பொற் கோவை
எல்விரிநல் மண்டபத்தில் அரியணையிற்
கொலுமுகமா இருந்து வந்து
நல்வளங்கொண் டடிபணிந்த எண்டிசைமன்
னவர்களுக்கு நன்மை நல்கி. 1

1529. மந்திரிமார் தளவீரர் தமர்கள்முதல்
எவர்களுக்கும் வரிசை நல்கித்
தந்திரமா தவர்மறையோர் அருச்சகர்நூற்
கலைஞர்பரி சனங்கட் கெல்லாம்
அந்தமிலா வளங்களளித் தவரவர்க
ளிடம்புகுத வனுப்பிப் பின்னர்
சுந்தரநா யகன்மாசி லாமணிகோ
யிலிற்பூசை சுகமாய் மல்க. 2

1530. மாதவிழாச் சித்திரைநல் மதியின்விழா
வசந்தவிழா மற்று மற்று

1528. சினகரம் - கோவில். உத்தர பாரிசம் - வடதிசை.
1530. தண்டலை - சோலை, பூந்தோட்டம். சகத்திர மாறிரண்டு - பன்னீராயிரம்.

நீதமுறும் விசேடதின மாதிகட்கு
மிகுஞ்சிறப்பு நிகழ நாளும்
சாதனமாய் நித்தியமாய் விளைநிலமும்
பதிகளுந்தண் டலைப்பூங் காவும்
மேதகுபொன் சகத்திரமா றிரண்டுளதாய்
நடக்கும்வகை விதித்துப் பின்னர். 3

1531. பன்மணிப்பூ டணங்களும்பொற் பட்டுவிதா
னங்களும்பா சனமுஞ் செல்வ
நன்மைதரு மிரசதம்பொன் னாற்பலவுந்
தானிகர்பா னல்கி அன்பாய்ப்
பொன்மகள்நேர் மனைவியொடுஞ் சிலதர்சிவ
தியரேவல் புரிய உண்மைத்
தன்மையர்க ளொடுமிருந்து சிவார்ச்சனைசெய்
வதற்குமனந் தன்னி லெண்ணி. 4

1532. உத்தரநீள் மறுகினுக்குத் தெற்குறவோர்
சினகரமுண் டாக்கு வித்துச்
சித்தமகிழ் ஆகமதே சிகராலோர்
சிவலிங்கச் செல்வர் தம்மைப்
பத்தியொடு நற்தினத்திற் பிரதிட்டை
செய்துசைவப் பணிமேற் கொண்டு
சுத்தமிகு கும்பாபி டேகமுதற்
பலகிரியை துலங்கச் செய்து. 5

1533. நாடொறுங்கோ முத்திநீர் படிந்துநீ
றணிந்துநகு நற்தண் முத்தம்
ஊடேறும் அக்குமணித் தாமமிகப்
புனைந்தெழுத்தஞ் சோதி வந்து
பீடேறும் இனியதிரு மஞ்சனஞ்சாந்
தந்தூபம் பெருகு தீபந்
தோடேறு பல்மலர்நல் லமுதுமுதற்
கொண்டுபஞ்ச சுத்தி செய்து. 6

1534. மாசறுநற் சிவக்குறியி லஞ்செழுத்து
முதற்பதினோர் மந்தி ரத்தால்
ஆசனமா சனமூர்த்தி மூர்த்திமான்
தனைப்பாவித் தாவா கித்து

1531. பூடணங்கள் - ஆபரணங்கள். சிலதர்சிலதியர் - ஏவல் செய்வோர்.

1534. ஆவாகித்தல் - தாபித்தல்.

நேசமுறுந் தியாகேசன் தனைத்தியா
னித்துருகு நெஞ்சத் தோடும்
பூசனைசெய் துபசாரம் பலபுரிந்து
வணங்கிநின்று புகழ்ந்து பாடி. 7

1535. கோயிலிற்சென் றீசனடி பணிந்துவந்து
சிவனடியார் கூட்டத் தோடும்
தூயவமு தறுசுவையோ டருந்தியவர்
அவர்வேண்டும் சுபங்கள் நல்கி
நாயகன்சீர் புகன்றருளும் புராணகதை
இனிமையொடு நயந்து கேட்டு
நேயமுட னொருதினம்போ லாண்டொன்று
பூசைசெய்து நிகழும் நாளில். 8

1536. திருவாரூர் தனில்மருவி வீதிவிடங்
கேசரைச்சே விக்கு மன்பு
பெருகார்வத் தொடுமொருநா ளகத்திலெழுந்
தன்மையொடும் பிறங்கு லிங்கத்து
அருள்மேவு திரவியப்பொற் தியாகேசன்
தனைநினைந்தர்ச் சிக்கும் போது
மருமேவு பூஞ்சடிலக் கோமுத்தீ
சுரனுணர்ந்து மகிழ்ச்சி யோடும். 9

1537. அத்திருலிங் கத்தலிருந் தருட்குருவின்
வடிவாகி அருட்கண் நோக்கம்
சுத்தமிகு பரிபாக மிகுமுசுகுந்
தர்க்களித்துத் தூய்மை செய்து
மத்தகத்திற் கையமைத்து மும்மலத்தின்
தொடர்பகற்றி மலர்ப்பொற் றாளீந்து
ஒத்தவினைப் பருவத்தி லெழுமருளில்
உயிர்பிறக்கும் உணர்வுண் டாக்கி. 10

1538. கேவலத்தி னொடுசகல வாதனையற்
றுளமொடுங்கக் கிருபை செய்து
மேவுசுத்த நிலைய்தனிற் சாக்கிரா
தீதநிலை விளக்கு வித்துப்
பாவனையால் நிருவாண தீக்கையளித்
திடவரசன் பணியற் றென்றும்
தாவறுபே ரின்பசுகா தீதமுறும்
சீவன்முத்தித் தன்மை யெய்தி. 11

1539. ஆனந்த பரவசனாய்ப் பூரணா
னந்தவடி வாகி நின்று
தேனுந்து மலர்சொரிந்தர்ச் சித்தசிவ
லிங்கபர சிவனை நோக்கி
ஊனொன்றும் எனைஞான வடிவாக்கும்
சிவஞான முடையா ரோவென்று
ஈனந்தீர்ந் தெழுமுணர்வாற் பலகாலும்
பணிந்துபணிந் தேத்த லுற்றான். 12

வேறு

1540. சச்சிதா னந்த ரூப சதாசிவ முதலே போற்றி!
பிச்சனேன் தனையாட் கொண்டு பிழைபொறுத்
தாண்டாய் போற்றி!
செச்சைமா மலர்ப்பொன் மேனிச் சிவஞான முடையாய்
போற்றி!
நச்சர வணிபொற் தியாக நாதனே போற்றி! போற்றி! 13

1541. இவ்வகைத் துதிசெய் தேத்த எழில்மிகு திருவா ரூருக்கு
உய்வகை யுணர்வீந் தாண்ட ஒளிர்முடி முசுகுந் தர்க்கங்கு
அவ்விய மிலாத செல்வ அருள்விடை கொடுத்து மிக்க
திவ்விய விலிங்க நாப்பண் சிவன்மறைந் திடவேள் மன்னன்.
14

1542. கோயிலிற் சென்று தாழ்ந்து வலம்புரி கொள்கை யோடும்
வாயிலிற் போந்து முக்கால் மண்ணுறத் தாழ்ந்தெ ழுந்து
தூயநல் லமைச்ச ராதி நால்வகைத் தானை சூழ
ஏயுநல் முரச மார்ப்ப எழில்மணி இரதம் ஏறி. 15

1443. செல்லுறழ் கூந்தற் தேவி தன்னொடுந் திருவா ரூர்சேர்ந்து
அல்லுறு கண்டர் கோயில் அணுகிவீழ்ந் திறைஞ்சிச் சூழ்ந்து
பல்லுயிர்க் குதவும் வன்மீ கரைப்பணிந் தேத்திப் பாங்கு
வில்லுமிழ் மணிப்பூங் கோயில் மேவிய விமலர் தம்மை. 16

1544. செய்யனே போற்றி! செல்வத் திருவாரூர் அரசே போற்றி!
அய்யனே போற்றி! தென்ஆ வடுதுறை அமுதே போற்றி!
துய்யனே போற்றி! ஞானச் சுகமளித் தென்னை யாண்ட
மெய்யனே போற்றி! தியாக விடங்கனே போற்றி! என்று. 17

1545. துதித்திரு கண்ணீர் வாரத் தொழுதுவீழ்ந் தெழுந்து நின்று
மதித்தர னுதவு மின்ப வாரியிற் படிந்து போந்து
பதிப்பணி புரியு மன்பர் பண்டிதர் மறையோர்க் கெல்லாம்
விதிப்படி முறைமை செய்து விளங்குதன் கோயில் மேவி. 18

1546. நானில முழுதுஞ் செங்கோல் நடாத்திவாழ்ந் திருக்கும் நாளில்
வானுறு வடமீன் கற்பு மனைவிதன் வயிற்றில் ஈசன்
தானருள் வரத்தால் மைந்தர் சந்திரோ தையம்போல் நேரே
தேனுகு குதலைச் செஞ்சொற் சேய்களெண் மர்கள்வந்
தெய்த. 19

1547. கலைவடி வழகு வீரம் கருணையொப் புரவஞ் சாமை
நிலைபெறு மறிவோ டூக்கம் நிறைபொறை
கொடைவாய்த் துள்ள
தலைமகன் தனக்கு மோலி சூட்டித்தன் தோளிற் தாங்கும்
அலையெறி கடல்சூழ் வையம் அனைத்தையும்
அவன்பால் நல்கி. 20

1548. சிறப்பிலார் சேவை நீங்கிச் சிவபத்த ரினத்திற் சேர்ந்து
கறைக்களத் தமலன் தாளிற் கருத்தினை யொடுக்கி நிட்டை
உறப்புரிந் தருளாய் ஞேயத் தொன்றிரண் டறக்க லந்து
பிறப்பறத் திருவா ரூர்வாழ் பிஞ்ஞகன் கழல்சேர்ந்
துய்ந்தான். 21

முப்பத்தொன்பதாவது
முசுகுந்த சக்கரவர்த்தி சிவார்ச்சனை செய்து முத்தி பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1548

திருச்சிற்றம்பலம்

39. முசுகுந்த சக்கரவர்த்தி சிவார்ச்சனை செய்து முத்தி பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

சகலவிதமான செல்வங்களும் நிறைந்த முசுகுந்தன், கோயிலுக்கு வடபாரிசத்திலேயுள்ள அரச மாளிகையிலே அமைக்கப்பட்ட மண்டபத்தின்கண் சிம்மாசனத்தில் கொலுவிருந்தான். பலவகைப் பொருள்களைக் கொண்டுவந்து அளித்து அடிபணிந்த மன்னர்களுக்கெல்லாம் சிறப்புக் களைச் செய்தான். அமைச்சர்கள், தளவீரர்கள், சுற்றத்தார்கள் ஆகிய எல்லோருக்கும் வரிசைகளை வழங்கினான். அந்தணர்கள், அருச்சகர்கள், கலை வல்லுநர்கள், பரிசனங்கள் ஆகியோருக் கெல்லாம் வளங்கள் பல அளித்தான். அவரவர்கட்கு அனுப்புக் கொடுத்து அனுப்பிப் பின்பு மாசிலாமணிப் பெருமானுக்கு மாதவிழா, சித்திரைவிழா,

1547. மோலி - மௌலி - முடி.

வசந்தவிழா மற்றும் சிறப்பு நாட்களுக்குச் சாதனமாக நித்தியமாய் விளைநிலங்களும், கிராமங்களும், சோலைகளும், பன்னீராயிரம் பொன்னும் ஆகிய இவற்றை யெல்லாம் ஏற்படுத்தினான். மேலும், ஆபரணங்கள், மேற்கட்டுகள், வெள்ளி, பொன் முதலானவைகளையும் கொடுத்து மனைவியுடனும், தன்மை யர்களுடனும் இருந்து சிவார்ச்சனை செய்ய ஏற்பாடுகளைச் செய்தான். வடக்கு வீதிக்குத் தென்பக்கமாக ஒரு கோயிலை யுண்டாக்கினான். ஆகமம் உணர்ந்த ஆசாரியரால் ஒரு சிவலிங்கத்தினை நல்ல நாளிலே பிரதிட்டை செய்வித்தான். சைவப் பணியை மேற்கொண்டு குடமுழுக்கு முதலான பல கிரியைகளையும் செய்வித்தான்.

நாள்தோறும் கோமுத்தித் தீர்த்தத்திலே நீராடி, வெண்ணீறணிந்து முத்துமணிகளை இடையிடையே கோக்கப்பட்ட அக்குமணிகளை மாலையாக அணிந்தான். ஐந்தெழுத்து ஓதி, திருமஞ்சனம், சந்தனம், தூபம், தீபம், பூ முதலானவைகளைக் கொண்டு பஞ்சசுத்தி செய்தான். சிவலிங்கத்தில் ஐந்தெழுத்தாலும் பதினொரு மந்திரங்களாலும் (பஞ்சப்பிரமம் 5, ஷடங்கம் 6 = 11) ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் இவற்றைப் பாவித்து ஆவாகனம் செய்தான். தியாகேசனைத் தியானித்துப் பூசை செய்தான். பல உபசாரங் களைச் செய்து வணங்கிப் புகழ் பாடினான். கோயிலுக்குள் சென்று மாசிலாமணிப் பெருமானின் திருவடிகளைப் பணிந்தான். சிவனடியார் திருக்கூட்டத்தோடும் அறுசுவையுள்ள அமுது அருந்தி, அவரவர்கட்கு வேண்டியவற்றைக் கொடுத்து, இறைவனுடைய சிறப்புக்களைக் கூறும் புராணக் கதைகளைக் கேட்டு மிகுந்த விருப்புடன் ஒருநாள் செய்தது போன்றே ஓராண்டு பூசை செய்து வந்தான்.

அப்பொழுது ஒருநாள், திருவாரூரை அடைந்து வீதிவிடங்கப் பெருமானைத் தரிசிக்கும் அன்பு முசுகுந்தன் மனத்தில் தோன்றியது. அருச்சனையின் இடையே இவ்வாறு தோன்றியதை இறைவனும் உணர்ந்து மகிழ்வுடன் இலிங்கத்திலிருந்து அருட்குருவின் வடிவோடு அருள்நோக்கம் செய்தான். பரிபாகத்தை முசுகுந்தனுக்கு அளித்துப் பரிசுத்த மாக்கினான். முசுகுந்தனது தலையிலே தமது திருக்கரத்தை வைத்தான். மும்மலங்களினுடைய தொடர்பை நீக்கித் திருவடி தீட்சை செய்தான். இருவினையொப்புப் பருவத்தில் எழுகின்ற அருளில் உயிர் பிறக்கும் உணர்வையும்

உண்டாக்கினான். கேவலம் சகலம் இவை வாசனையற்ற உளமானது ஒடுங்கும்படிக்கும் கிருபை செய்தான். இவ்வாறு சுத்த நிலையிலே சாக்கிராதீத நிலையை விளக்குவித்துப் பாவனையினாலே நிர்வாண தீட்சை செய்ய, முசுகுந்தன் செயலற்றவனானான். எப்போதும் பேரின்ப சுகாதீதமாகிய சீவன் முத்தி நிலையை அடைந்தான். ஆனந்தபரவசனாகப் பூரணானந்த வடிவாகி நின்று இறைவனை நோக்கி, உணர்ச்சியால் பலமுறையும் பணிந்து துதித்தான்.

இவ்வாறு திருவாரூரின் உணர்வை உண்டாக்கி, குருவாக வந்து ஆட்கொண்ட இறைவன் முசுகுந்தனுக்கு விடைகொடுத்து, மாசிலாமணி இலிங்கத்தின் நடுவே மறைந்தருளினார். பின்னர், முசுகுந்தன் கோயிலுள் சென்று மும்முறை வணங்கினான். அமைச்சர் முதலாகப் படைகள் புடைசூழ தேர் ஏறித் தன் மனைவியோடும் திருவாரூர் சேர்ந்து, கோயிலை அடைந்து வன்மீகநாதரையும் தொழுது வணங்கினான். இன்பக் கடலிலே மூழ்கித் திளைத்தான்.

இவ்வாறு இன்பமாக முசுகுந்தன் அரசு புரிந்துவரும் நாளில், தன் மனைவியின் வயிற்றில் இறைவன் திருவருளால் எட்டுச் சேய்கள் வந்தடையப் பெற்றான். வடிவழகு, வீரம், கருணை, நடுவுநிலைமை, கலை, அஞ்சாமை, அறிவு, ஊக்கம், பொறை, கொடை இவை அனைத்தும் பொருந்தி மூத்த மகனுக்குப் பட்டாபிடேகம் செய்வித்து, தான் செய்து வந்த அரசாட்சி முழுவதையும் அவனிடம் தந்துவிட்டு, அடியார் கூட்டத்தில் சேர்ந்து இறைவனது திருவடிகளிலே கருத்தைச் செலுத்தி நிட்டை கூடி ஆரூர் வாழும் சிவபெருமான் திருக்கழல் சேர்ந்து உய்தி பெற்றான்.

நாற்பதாவது
சாத்தர் அசோமுகியின் கையறுத்த அத்தியாயம்

1549. திரவியத் தியாக நாதர் திருவருள் பெற்று மிக்க
முருகலர்த் தார்கொள் மார்பன் முசுகுந்தன் முத்தி சேர்ந்த
உரிமைசொற் றனமிந் திராணி தனையசோ முகியோர் காலங்
கருதிவந் தெடுப்பச் சாத்தா கையறுத் திடுஞ்சீர்
சொல்வாம். 1

1550. அசுரர்கட் கிறைவன்சூர பன்மனோர் காலம் ஆர்த்துத்
திசைதொறும் அமரர் அஞ்சிச் சிந்தவெம் போர்செய் தின்பம்

இசையுமா யிரத்தெட் டண்டத் தரசனா யிருக்கும் நாளில்
வசையறு தேவ ரோடும் இந்திரன் மண்ணில் வந்து. 2

1551. சூரனுக் கஞ்சி வேடம் மாறிநற் சுரர்க ளோடும்
ஏருறு முருவம் வெவ்வே றிசைந்துகா விரிம ருங்கு
சீருறு மெழிற்கோ முத்திச் சேத்திர முதலே ழூரிற்
பேரருள் புரிந்து வாழும் பிஞ்ஞக னடிகள் போற்றி. 3

1552. காளத்தி காஞ்சி அண்ணா மலைகழுக் குன்றம் இன்பக்
கேழுற்ற முதுகுன் றாதி தலங்கிடைத் திறைஞ்சிப் போந்து
போழுற்ற மதியஞ் சூடும் புண்ணியன் தில்லை போற்றிக்
காழிக்குள் வந்து தோணிக் கடவுள்பொற் கழல்க ளேத்தி.
4

1553. புள்ளுடன் மறைவேள் போற்றும் பொருவிலா
வயித்திய நாதர்
கள்ளுலாம் பொழில்சூழ் செல்வக் கடிநக ரடைந்து வாழ்த்தித்
தெள்ளுசீர்த் தேவ ரோடுஞ் சிலபக லிருந்து பின்னர்
வள்ளலா ரஞ்ச லோடும் வாழுமா யூர மேவி. 5

1554. ஆங்கர னடிதாழ்ந் துள்ளன் புடனதிற் சிலநாள் வைகிப்
பாங்கொடு மூவல் நாதன் பதம்பணிந் திப்பாற் போந்து
தேங்கமழ் பொழில்சூழ் கின்ற திருத்துருத் தியினில் வந்து
கோங்குறழ் முலையாள் பாகன் குரைகழல் வணங்கி
வாழ்த்தி. 6

1555. சசியொடும் அமர ரோடும் தகுமக பதியவ் வூரிற்
பிசிதவூ ணர்களுக் கஞ்சிப் பெருமுகில் மதியம் போல
இசைவொடு மிருக்கும் நாளில் இகலுறு சூரன் தம்பி
பசையிலா நெஞ்சன் மிக்க கிரவுஞ்சப் பதியில் வாழ்வோன் 7

வேறு

1556. தாரு கப்பெயர் கொண்டு ளோன்மிகு
தறுகண் வீரரை நோக்கிநீள்
பாரி டத்துறு தேவர் முற்றுநீர்
பற்றி வம்மினென் றேவமைக்
காரி ருட்திரள் போன்ற தானவர்
கண்ண ருட்சிறி தின்மையார்
சேரு மெய்ப்பொடு மெண்ணி லார்புவி
சேர்ந்து தேடிமற் றெங்கணும். 8

1557. அங்கி லாமை யறிந்து தேவர்கள்
அமர்த லத்துற வஞ்சியே
பொங்கு காவிரி வடக ரைப்புறம்
போந்தொர்மூங் கில்வ னத்திடை
எங்கு மேவி யொளித்தி ருந்தனர்
அஃத றிந்தெழு நிசிசரர்
வன்க ணோடுமவ் வேய்வ னத்தினை
வந்து சுற்றிவ ளைத்தனர். 9

1558. வயிர வாட்படை யோனு மாகரும்
வானரம் பையர் யாவரும்
வியன்மி குத்திடு மிவ்வ னத்தினில்
மேவ லுற்றன ரென்றுரைத்
தெயிலெ னப்பெரு வலைவ ளைத்திடு
மீர்த்தி டுங்கடம் வெளியுறப்
பயிலும் அக்கினி யிடுமெ னக்கொடும்
பதகர் மொய்த்தனர் அவருடன். 10

1559. தாரு காசுர னுடன்பி றந்திடு
தங்கை யென்னுமோர் பாதகி
பேரு மோஅச முகியெ னச்சொலும்
பெண்ணு ருப்பெறு கூற்றனாள்
காரை யொத்திடி போல ஏற்றிடு
காள வாயினுள் வண்டில்போற்
சோரும் அக்கினி கக்கு கண்ணனள்
சூல மேந்திய கையினாள். 11

1560. பிறையெ யிற்றி னள்குட வயிற்றினள்
பெருகு தூண்முலை யசைவினாள்
கறைமி குத்தெழு செய்ய பங்கியள்
காலின் முந்துறு கதியினாள்
இறையு முட்டய வின்மை யாளச
மென்ன நீள்முக முற்றுளாள்
நிறைய மத்திய பான முண்டவள்
நீல வெற்பென நின்றனள். 12

1561. அந்த வேளையில் வெய்ய வன்குட
பால ணைந்தும றைந்திட
வந்த டர்ந்திடு கங்கு லங்குறும்
வன்க ணார்கடங் கண்களை

1558. வயிரவாட்படையோன் - இந்திரன். ஆகர் - தேவர். பதகர் - சண்டாளர்.
1561. குடபால் - மேற்கு.

முந்த வுண்டிட வுயிரை யாணவ
முடுகி யுண்டிட யாவரும்
பந்த மோடுமுன் துஞ்சல் கண்டயி
ராணி யோடரி படர்ந்தநல். 13

1562. வேணு நீள்வனம் விட்ட கன்றுவி
ரைந்து தென்திசை நோக்கியே
காணு றாவகை போக அங்கது
கண்டு கொண்டச முகிதொடர்ந்து
தாண லம்பெறு மாசை யால்வலிந்
தங்க ணந்திரள் மேனியைப்
பாணி கொண்டு பிடித்து மார்புறப்
பற்றி வீழ்த்தி அணைத்தனள். 14

1563. ஆங்க வன்றனு மேவு தாது
அனைத்தும் அல்குலின் வாயினால்
வாங்கி னாள்கரும் புண்ட சக்கைபோல்
வாச வன்தனைத் தள்ளியே
ஓங்கு கையினா லிந்தி ராணியை
ஓடி யேபிடித் தீர்த்தனள்
வீங்கு திண்புயத் தாரு கண்கொள
விடுவ னிக்கண மென்றரோ. 15

1564. அஞ்சி யுள்ளம் நடுங்கி யேஅயி
ராணி ஒப்பிலாள் தாள்மலர்
நெஞ்சி லுன்னினள் அக்க ணங்கலை
நிகழ்வி னுக்குத வியகைபோற்
தஞ்ச மென்றருட் கோடி காவுறு
சாத்தர் வந்தச முகிகையை
வெஞ்சி னங்கொடு வாளி னால்விழ
வெட்டி னார்விழுந் தலறினாள். 16

1565. பெண்ணெ னக்குறித் தாவி கொண்டிலன்
பிளிறி யேயெழுந் தோடினாள்
அண்ண னைக்குறித் தவள்வ யிற்றில்
அணைந்த விந்துவுஞ் சோர்ந்துநீள்
மண்ணில் முத்தி னிலத்தின் வீழ்ந்தொரு
மகளு ருக்கொள அதனையும்
கண்ண யப்பற விட்டு நீங்கினள்
கதிருங் கீட்டிசை தோன்றிற்றால். 17

1563. வாசவன் - இந்திரன். 1565. ஆவி - உயிர்.

1566. ஐயன் பொற்பாதம் வீழ்ந்து போற்றிநின்று
அண்டர் கோனும்நல் மனைவியும்
உய்யு மாறெமைக் காத்த தற்குமா
றுதவி யேதென வுரைசெயப்
பைய ராவணி வேணி யான்தரு
பால னஞ்சல் பகர்ந்துபோம்
பொய்யர் தங்களை யடுது மென்றிடப்
போற்றி மேவினர் போதியில். 18

வேறு

1567. பெண்ணல மேவிய அயிராணிப்
பிரச மலர்க்குழல் மயிலோடும்
கண்ணகல் பிப்பில வனமேவக்
ககனரும் வந்ததன் கண்ணுற்றார்
மண்ணில் அசோமுகி கரமற்றே
மன்னிட முங்கர கண்டப்பேர்
நண்ணிய திப்பொழு துங்காரி
நண்ணல ரைக்கொலும் வகைசொல்வாம். 19

1568. மூங்கில் வனப்புற மதில்மொய்த்தே
முதிரிரு ளுற்றிடு நிசிமுற்றும்
தாங்கி விழித்தெழு படைமள்ளர்
துட்ட அசோமுகி யைக்காணாது
ஏங்கி யடிச்சு டினைநோக்கி
யாவருந் தென்திசை யினிலொல்லை
ஓங்கு சினத்தொடும் வருபோதில்
ஓர்ந்தனன் கோடிகா வுறுமையன். 20

1569. பூதர்க ளுக்குளோர் படைவீரப்
புகழ்பெறு காளனை முகநோக்கி
தீதுறு தாருகன் படைமுற்றுஞ்
சென்று வதைத்துவா வெனஏவ
மோது பரிப்படை யவரோடு
முடுகி வளைந்தசு ர்கள்தம்மை
ஓது மரைக்கண முறுபோதில்
ஒள்ளமர் செய்தகல் களமீது. 21

1570. வாள்பெறு வோர்களை வாள்கொண்டும்
வன்சிலை யினரைவில் வலிகொண்டும்
நீளயி லோர்களை வேல்கொண்டும்
நிகழிகல் செய்துபேய் நரியுண்ணத்

தாளரை கைதலை துணிபட்டுத்
தரையற வீழ்த்தினர் பரிவீரர்
கோளுறு நெஞ்சர்சி லர்தப்பிக்
கோநக ரோடினர் கொலைசொல்ல. 22

1571. ஆங்கவர் முன்அச முகிசென்றே
அதிபல முள்ளதா ருகன்முன்னர்
தீங்குறு கையறு குறையோடுஞ்
சென்று விழுந்தனள் சிறையற்று
வீங்கு பருப்பதம் விழல்போலே
விம்மி யரற்றினள் தரைமீதில்
ஓங்கி யுருண்டனள் அண்ணாவோ!
உன்னுடன் வந்தபே றிதுவேயோ? 23

1572. என்றழு தங்கையின் கைகண்டே
இடிவிழும் அரவென அதிர்வுற்றுக்
குன்றன தாருகன் கிரவுஞ்சக்
குலகிரி வாழுர் அழுசத்தம்
ஒன்றையு முணர்வுறா துன்மத்தர்
ஒத்தொரு நாழிகை யுணர்வற்றான்
பொன்றிடும் அசுரரி லேதப்பிப்
போந்திடும் அசுரரும் போய்நின்றார். 24

1573. தாருக னோக்கிய வமையத்திற்
தாளினில் வீழ்ந்தழு திதுசொல்வார்
பாரிடை யாங்கள்போம் பொழுதாங்கோர்
படர்வெதிர்க் கானிடை மகவானும்
சீருறு சசியுமங் குறல்கண்டே
சென்று வளைந்தனம் இரவின்கண்
காரிருள் நள்விடை அவர்தப்பக்
காணுமுன் தங்கையின் கடிதோடி. 25

1574. வாசவன் தன்னையோ ரடிவைத்தே
மண்ணில் விழுத்தியிந்திரைதன்னை
நேசமோ டுன்தனக் காமென்றே
நேர்ந்து பிடித்தனள் அப்போது
காய்சின மோடுசாத் தன்வந்து
கையை அறுத்தனன் பின்னுந்தன்
வாசமி குத்தபூ தரைவிட்டுன்
மறவரை யுங்கொலை புரிகின்றான். 26

1575. என்றவர் சொல்லுதீ மொழிகேட்டங்்கு
எரிவிழி சிந்திட நகைசெய்தே
நன்றெம தாண்மையின் வலியென்று
நற்பொனின் கையவட் கீவுற்றுக்
குன்றன திண்புயன் விரைவோடும்
கோளுறும் வாயிலி னிடையெய்தி
நின்றுதன் சேனையை யெழவென்றான்
நிசர்பறை சாற்றினர் சிலநீசர். 27

1576. பறையறை வித்திடு மொலிகேட்டே
படைக ளெழுந்திட அவையோடும்
பொறையறு தாருகன் சமர்வேட்டுப்
புவியினி லுற்றிட அவனோடு
நிறைபெறு சாத்தர்முன் னெதிர்கொண்டே
நின்றிகல் செய்தவன் தனைவென்று
குறைவறு வாகை புனைந்துற்ற
கொள்கையு மேலுரை செய்கிற்பாம். 28

நாற்பதாவது
சாத்தர் அசோமுகியின் கையறுத்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1576.
திருச்சிற்றம்பலம்

40. சாத்தர் அசோமுகியின் கையறுத்த அத்தியாயம் (சுருக்கம்)

திருவாரூர்த் தியோகேசப் பெருமானுடைய திருவருளைப் பெற்று முசுகுந்தச் சக்கரவர்த்தி முத்தி அடைந்ததைப் பற்றிச் சொன்னோம். இனி, இந்திராணியை அசோமுகி சமயம் பார்த்து வந்து எடுக்க, சாத்தர் அசோமுகியின் கையை அறுத்தது பற்றிச் சொல்கிறோம் எனத் தவமுனியர் கூறத்தொடங்கினார்.

அசுரர் தலைவனாகிய சூரபதுமன், ஒரு சமயம் தேவர்களெல்லாம் பயந்து ஓடும்படியாகப் போர் செய்து, ஆயிரத்துஎட்டு அண்டங்கட்கும் அரசனாக இருந்தான். அப்பொழுது, இந்திரன் தேவர்களோடும் பூமியில் வந்து சூரனுக்கு பயந்து உருமாறி வாழ்ந்து வந்தான். வெவ்வேறு உருவத்துடன் காவிரியின் பக்கத்திலுள்ள கோமுத்தித்தலம் முதல் ஏழு தலங்களுக்கும் போய் இறைவனுடைய திருவடிகளைத் தியானித்தான். பின்பு, காளத்தி, காஞ்சி, அண்ணாமலை,

திருக்கழுக்குன்றம், திருமுதுகுன்றம் முதலான பல தலங்களையும் தரிசித்தான். பிறகு தில்லையை வணங்கி, சீர்காழி வந்து தோணியப்பரை வணங்கினான். வைத்தியநாதரையும் தரிசித்தான். அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தான். பின்பு மாயூரத்தை இவர்கள் அடைந்தனர். அங்குள்ள இறைவனை வணங்கி மகிழ்ந்தனர். அடுத்து, மூவலூரிலுள்ள பெருமானை வணங்கித் திருத்துருத்திக்கு வந்து உமைபாகனைத் தொழுதிருந்தனர். இந்திராணியோடும் தேவர்களுடனும் இந்திரன் அத்திருத்துருத்தியில் அவுணர்களுக்குப் பயந்து வாழ்ந்திருந்தனர்.

இவ்வாறு இவர்கள் இருக்கும் நாளில், கிரௌஞ்சகிரியில வாழ்பவனாகிய சூரனுடைய தம்பியான தாருகன், வீரர்களை நோக்கிப் பூவுலகத்துள்ள எல்லாத் தேவர்களையும் பிடித்து வாருங்கள் என்று கட்டளையிட்டான். அதற்கு அந்த அசுரர்கள் தேடியும் எவரும் கிடைக்கவில்லை. இதையறிந்த தேவர்கள் அங்கு இருப்பதற்குப் பயந்து காவிரியின் வடகரைப்பக்கம் போய் ஒரு மூங்கில் காட்டில் வந்து ஒளிந்திருந்தனர். இதையறிந்த அசுரர்கள் மூங்கில் வனத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். இந்திரனும் தேவர்களும் அரம்பையர்களும் மூங்கில் காட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் வெளிவரும்படியாக இந்தக் காட்டைத் தீயிட்டுக் கொளுத்துங்கள் எனக் கூச்சலிட்டு நெருங்கினார்கள்.

தாருகாசுரன் தங்கையான 'அசோமுகி' அசுரர்களுடன் சேர்ந்து நின்றாள். பெண் பேய் போன்றிருந்த அவள் தோற்றம் மிகுந்த அச்சம் தருவதாக இருந்தது. அப்போது சூரியன் மேற்கே மறைய இரவு வந்தது. அசுரர்கள் தூங்குவதைக் கண்ட தேவர்கள் இந்திரன் ஆகிய அனைவரும் இந்திராணியுடன் மூங்கில் காட்டைவிட்டு நீங்கித் தெற்குப் பக்கமாக யாவரும் காணாதபடி சென்றனர். அப்போது அசோமுகி அவர்களைப் பார்த்துத் தொடர்ந்தாள். அவள்தன் காமமேலீட்டால் இந்திரனைப் பிடித்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு கீழே வீழ்த்தினாள். இந்திரன் உடலிலுள்ள தாதுக்கள் அனைத்தையும் தமக்குள்ளே வாங்கிக் கொண்டு, பிழிந்தெடுத்த சக்கைபோல் அவ்விந்திரனைத் தள்ளிவிட்டாள்.

பின்பு, இந்திராணியைப் பிடித்து இழுத்து, இவளைத் தாருகன் அனுபவிக்கும்படியாக இப்போதே விடுவேன்

என்று கர்ச்சனை செய்தாள். இந்திராணி பயந்து மனம் நடுங்கினாள். ஒப்பிலாமுலையம்மையினுடைய திருவடிகளை மனத்திலே நினைத்துத் தியானித்தாள்; உடனே திருக்கோடிகா விலுள்ள சாத்தர் வந்து அசோமுகியின் கையை வாளால் வெட்ட அவள் கீழே விழுந்து அலறினாள்.

அசோமுகி ஒரு பெண் என நினைத்து சாத்தர் அவள் உயிரை வாங்கவில்லை. பின்பு அவள் எழுந்து அண்ணனை நோக்கி ஓடினாள். அப்போது அவள் வயிற்றிலிருந்த இந்திரன் விந்துவும் சோர்வு அடைந்து பூமியிலே முத்தித் தலமாகிய நிலத்திலே வீழ்ந்து ஒரு மகள் உருவம் அடைந்தது. அதனையும் பார்க்காமல் அவள் அவ்விடம் விட்டு நீங்கினாள். சூரியனும் உதயமானான். பின்பு, இந்திரனும் இந்திராணியும் சாத்தாவினுடைய திருவடிகளிலே வீழ்ந்து துதித்தனர். எங்களைக் காத்ததற்கு என்ன கைம்மாறு செய்யப் போகின்றோம் என்று வணங்கினர். சாத்தர் இந்திரனைப் பார்த்து நீ போ அஞ்ச வேண்டாம்; பொய்யர்களாகிய அசரர்களைக் கொல்லுவோம் என்று சொன்னார். பின்பு, அனைவரும் சாத்தாவை வணங்கி, போதி வனத்தை அடைந்தனர்.

இங்கே பூமியில் அசோமுகியின் கரம் துண்டித்த இடம் இப்போதும் 'கரகண்டம்' என்றே வழங்கி வருகிறதைப் பார்க்கிறோம்.

மூங்கில் காட்டின் பிறத்திலே இரவு முழுவதும் தூங்கிக் காலையில் விழித்தெழுந்த அசுரப்படைகள் அசோமுகியைக் காணாமல் ஏங்கி, அவளது அடிச்சுவடுகளைப் பார்த்துக் கொண்டே தென்திசைப் பக்கமாக வந்தன. இதைச் சாத்தர் அறிந்தார். உடனே தமது பூதப் படைகளுள் ஒரு புகழ்பெற்ற படைவீரனான 'காளன்' என்பவனுடைய முகத்தைப் பார்த்து, நீபோய் தாருகனது படை முழுவதையும் வதைத்துவிட்டு வா என்று சாத்தர் கட்டளையிட்டார்.

காளனும் குதிரைப்படைகளுடன் வேகமாகச் சென்று வளைத்து அசுரர்களை அரைக்கணத்தில் போர் செய்து தரையில் விழும்படிச் செய்தான். அசுரர்கள் சிலர் தப்பித்துத் தாருகனிடம் இதைச் சொல்லத் தேவருலகம் ஓடினர். அதற்கு முன்னே அசோமுகி சென்று தாருகன் முன்னே அறுபட்ட கையோடும் போய் வீழ்ந்து விம்மி அரற்றினாள். அழுது

புரண்டு உருண்டாள். அண்ணாவே! உன்னுடன் நான் பிறந்த பயன் இதுதானா! என்று கூவி அழுதாள். உடனே அவன் அவள் கையைப் பார்த்து இடிபோல முழங்கினான். உணர் விழந்திருந்தான்.

பின்பு, தப்பிவந்த அசுரர் தாருகனிடம் பலவாறு முறையிட்டனர். ஐயனே! பூமியில் நாங்கள் செல்லும்போது அங்கு ஒரு படர்ந்த மூங்கில் காட்டில் இந்திரனும் இந்திராணியும் ஒளிந்திருப்பதைக் கண்டோம். அவர்கள் தப்பிப் போவதைக் கண்ட அசோமுகி இந்திரனை நெருங்கி அவனை வீழ்த்தினாள். இந்திராணியை நேசமாக உனக்கு ஆகுமென்று பிடித்தாள். அப்பொழுது, சாத்தன் சினத்துடன் வந்து உன்னுடைய தங்கை அசோமுகியின் கையை அறுத்தான்; மேலும் தனது பூதர்களை ஏவி உனது படைகளையும் கொலை செய்து கொண்டிருக்கின்றான் என்று சொன்னார்கள்.

இவற்றையெல்லாம் கேட்ட தாருகன் சினம் கொண்டு சிரித்தான். என் ஆண்மையின் தன்மை நன்றாக உள்ளது என்று கூறி பொன் போன்ற அழகிய கையை அசோமுகிக்குக் கொடுத்து அரண்மனை வாயிலை அடைந்து, படைகளை எழுப்பினான். சாத்தருக்கு முன் நின்று போரிடத் தொடங்கினான்.

இனி, தாருகனைச் சாத்தன் வென்று வாகை சூடிய தன்மையைக் கூறுவோம்.

நாற்பத்தொன்றாவது
சாத்தர் தாருகனைச் செயங்கொண்டு வெற்றி மேவிய அத்தியாயம்

1577. மாமாயை யுறுங்கிர வுஞ்சமலைக்
கோமானொடு கோளரி யேறனையார்
சாமாறுண ராவிதி தள்ளியிடப்
பார்மீது பரந்தனர் பல்படைஞர். 1

1578. காரொத்திடு மெய்யினர் கைப்படையர்
ஈரத்தய வற்றிடு நெஞ்சினர்போர்
வீரக்கழல் கட்டிய காலர்மிகுந்
தேரிற்சிலர் மொய்த்தனர் சீறுகணார். 2

1577. கிரவுஞ்சமலைக் கோமான் - தாருகன்.

1579. பரிமீதுறு வோர்பலர் பாய்மதமார்
கரிமீதுறு வோர்பலர் கானடையிற்
திரிவோர்பல ராகிய சேனைவெள்ளம்
அருகோர்சத மாழியி னார்த்தெழமுன். 3

1580. புரவித்திர ளாயிரம் பூண்டவுருள்
இரதத்தினி லேறி எதிர்ந்தனன்நீள்
அரசிற்கரு காயுறு மையனெதிர்
வரிவிற்கையன் தாருகன் மானமொடும். 4

1581. கயமாமுக னெய்துதல் கண்டுதிறல்
வயமேவிய காரிம கிழ்ந்துசமர்
இயல்பாய்விளை யாடவெ ழுந்தனன்திண்
புயமேவிய பூதர்கள் தம்முடனே. 5

1582. அரசாரணி யத்துறும் ஆனைகளின்
கரமீது கதித்திடு தண்டுகொடுத்து
உரமாகவே முன்புற விட்டெணிலாப்
பரிவீரர்கள் சுற்றும் வரப்பரிவாய். 6

1583. அயிராவத மானவெள் ளானையின்மேல்
நயமாகவே யேறி நடாத்தியெதிர்
கயமாமுக னெல்லை கடந்துறுமுன்
வியன்மேவணி கொண்டெதிர் மேவினனே. 7

1584. அணையைக்கட வாதசு ரப்படைகள்
குணில்கற்கழு முட்கொலை வான்முசலம்
பிணிசக்கரம் வேல்கணை பெய்துகரப்
பணிலத்தை முழக்கினர் பாரதிர. 8

1585. தோள்கொட்டுவர் சுற்றுவர் சாரியொடும்
வாள்கைக்கொடு விதிர்ப்பர்கள் வாய்குழறித்
தாள்முற்பட வைப்பர்வன் தாருகனுக்கு
ஆளுற்றிடு தானவ ரப்பொழுது. 9

1586. ஐயன்தன தானைகள் செய்திடுபோர்
மெய்கண்டிட வேவினன் வேழமெலாம்
கைகொண்டிடு தண்டொடு காரசுரர்
மெய்யொன்று களத்திடை மேவியதே. 10

1582. அரசாரணியம் - அரசவனம்.

1587. ஊழிக்கெழு காலென வுற்றசுரர்
பாழிப்புயந் தேர்கரி பாய்பரிகள்
வீழத்தடி யால்மிகு மந்தரமுற்று
ஆழிக்கட லைச்சுட வித்ததுபோல். 11

1588. கருந்தா னவவாரி கலக்குதலும்
பொருந்தார் முழுதும்முயிர் பொன்றுதலால்
விரிந்தார்குரு திப்பெரு வேலையலாற்
தெரிந்தானலன் தாருகன் சேனைகளை. 12

1589. என்கொல்லிது மாயமெ னப்பதறித்
தன்கைவிலை நாடுமுன் தண்டமொடுங்
கொன்கொண்மருப் புற்றிடு குஞ்சரம்போய்
முன்கண்டகண் மூடிவி ழிக்குமுனம். 13

1590. கொடித்தேரொடு சூதனை யுங்குலவி
அடுத்தூர்குதி ரைத்திரள் அத்தனையும்
ஒடித்தேயவன் மீதுகை ஓச்சுதலும்
விடுத்தோடினன் தாருகன் மேதினிமேல். 14

1591. பரிவித்தகர் சுற்றி வளைப்பதுகண்டு
அரிகைக்குறு புத்திர னத்தமமைத்து
ஒருசத்த முரைத்தனன் மேல்வருநம்
முருகர்க்குறும் வேற்கிரை யாய்முடிவான். 15

1592. முன்கண்டிடு சூர்கிளை யோடுமிவன்
வென்கண்டது போதுமிவ் வென்றியுடன்
நன்கொன்றிய நம்மிட மெய்துமெனப்
பின்கண்டனர் போந்தனர் பிள்ளைமுனம். 16

1593. அதுகண்டவிண் ணோர்கள் மகிழ்ந்தையன்மேல்
மதுவொன்றுபூ மாரிசொ ரிந்துஅருந்
துதிகொண்டனர் அந்தர துந்துமியும்
விதிகொண்டு முழங்கின வான்மிசையே. 17

1594. வருதாருக வென்றியின் வாகைபுனைந்து
உருகார்வமொ டும்பரு டன்கருணைக்
குருவார்மணி யைப்பர விக்குணமோடு
அருகாக அமர்ந்தனன் அப்பதியில். 18

1592. பிள்ளை - சாத்தர்.

1595. போர்வெற்றிசெய் குஞ்சர மும்புகழ்சேர்
ஏர்பெற்றிடு போதிவ னத்திடைசேர்ந்து
ஆர்வத்தொ டமர்ந்தது பூதரெலாம்
பார்பெற்றிடு காவல் பரித்தனரே. 19

1596. படைமுற்று மிழந்து பயங்கொடுபோங்
கடையுற்றிடு தாருகன் நீள்ககனத்
திடையுற்றிடு கின்றநெ றிக்கணிரிந்
தடைவுற்றன னன்றில் வரைப்பதியில். 20

1597. வானோர்பெறு சார்புமை யன்வலியும்
ஏனோர்பொரு வீரமும் யானைகளேய்ந்து
ஊனோடுயிர் கொள்ளைகொ ளுக்கிரமும்
தானோர்ந்தது சாற்றினன் அண்ணனொடும். 21

வேறு

1598. காவல் பெருகத் திருக்கோடி
காவின் மருவு காரிதிறம்
ஆவ லொடுசொல் லியதவுமி
யரைப்பார்த் தறங்கொண் மிதுலேசன்
தேவர் தொழுசெவ் வேள்சூர்மேற்
சென்றவ் வசுரர் கிளையறுத்து
மேவு பெருமை தனைச்சுருக்கி
விளம்ப வேண்டுமெனத் தொழுதான். 22

1599. அருமா மறைதேர் தவுமியரங்கு
அறைவார் மாயை யெனுமசுரி
குருவாம் புகரே வலினாற்போய்க்
கோதி லாமெய்த் தவம்புரியும்
பெருமா தவனா கியகாசி
பரையோர் மாயப் பெண்ணுருவாய்
வரிவேல் விழியால் மயக்கியவன்
மணப்பப் புணர்ந்தாள் ஓரிரவில். 23

1600. சூரன் தனைமுன் பீன்றுபினுந்
தோன்றும் யாமந் தொறுஞ்சிங்கன்
தாரு கப்பே ரசுரன்அச
முகியை யீன்று தகுவரெனும்

1597. அண்ணன் - சூரபதுமன். 1598. காரி - ஐயனார்.

வீரப்படைக ளொருகோடி வெள்ள
மளித்து மேரு வின்பாற்
பாரிற் பெருகு தவமியற்றப்
பண்ணி னாளப் படியேபோய். 24

1601. சூர னரிய மகமதுசெய்
துடலை யறுத்துத் தூஉய்ப்பின்பு
தீர முடன்வேள் வியில்வீழ்ந்து
சாம்ப ராகச் சிங்கமுகன்
கோர மகம்பின் செயஈசன்
தோன்றி வரங்கொள் கெனத்தமையன்
வீர முடன்தோன் றிடக்கேட்ட
வரமு மீய வேண்டுமென. 25

1602. அந்தப் படியே செய்தரனார்
சூரன் வேண்டும் வரமளித்து
வந்தித் தமரர் தொழுகயிலை
புகுத மயேந்திரப் பதியிற்சேர்
அந்தக் குருநல் முடிசூடச்
சூர பன்மன் ஆயிரத்தெட்டு
உந்தற் புதப்பே ரண்டங்கள்
அனைத்துங் கட்டி யுடனாண்டான். 26

1603. தொட்டி லதனிற் பருதிதனைத்
தொடர்ந்து பிடித்துப் பின்கட்டாய்க்
கட்டும் பானு கோபன்முதற்
பிள்ளை பலவுங் கண்டுமகிழ்ந்து
இட்ட முடனே அரிமுகனும்
அவ்வா றிருப்பக் கயமுகனை
மட்டி லாச்சீர்க் கிரவுஞ்ச
மலையி லிருக்கப் பணித்தபினர். 27

1604. பானு கோபன் தனையழைத்துப்
படைகள் மிகவுங் கொடுத்தெங்கும்
வானி லுறுந்தே வரைப்பிடித்து
வம்மி னெனவே யேவஅவன்

1599. குரு - சுக்கிரன்.

1601. சிங்கமுகன் - சிங்கமுகாசுரன்.

1603. அரிமுகன் - சிங்கமுகாசுரன்.

1604. மகபதி - இந்திரன். தானம் - தேவ உலகம்.

ஈன முறநல் மகபதியோ
டிகலி யடர ஆற்றாராய்த்
தான மதனை விட்டிந்தத்
தரையிற் கரந்து வைகினரால். 28

1605. அமரா பதியை அழித்தவனங்கு
அகப்பட் டிடும்வா னவருடனே
இமையோர்க் கதிப னாகியஇந்
திரன்தன் மகனாம் சயந்தனையும்
குமைய வடித்துப் பிடித்துவந்து
கொடிய சூர்முன் விடஅவரைக்
கமையார் தளையிற் பூட்டி
மிகுங்காவல் செய்வீ ரெனப்பணித்து. 29

1606. மாரி புவியிற் பெயாதவகை
மறித்துத் தாரு கனைநோக்கிப்
பாரி லொளித்த தேவர்களைப்
பற்றி வம்மி னெனப்பணித்தான்
தாரு கனுமப் படிசெய்தான்
சமர்செய் தவரை யறுத்துமிகுங்
காரி வசியா லசோமுகிதன்
கையு மறுத்தான் அதுவறிந்து. 30

1607. மேனி வெதும்பிச் சூரிருக்கும்
நாளில் வேதந் தனைக்கவர்ந்து
போன சோமு காசுரனைப்
பொன்ற வறுத்து மறைகொணர்ந்து
ஞான வடிவா கியவுமைகொ
ணற்கோ வடிவு மரம்பையர்கொள்
தேனு வடிவு மகற்றிமிகுஞ்
செல்வ முத்திச் சேத்திரத்தில். 31

1608. ஒப்பி லாத முலையுமையை
உம்பர் முதலோர் தொழமணஞ்செய்து
அப்பும் அரவும் கூன்பிறையும்
அணிமா சில்லா மணிநாதன்
செப்புந் துறைசைப் பதிதனிலுஞ்
செல்வ மிகுந்த செழுங்கயிலை
வெற்பி னிடத்துந் தேவியுடன்
விருப்போ டிருக்குங் காலமுற. 32

1606. காரி - சாத்தா. 1607. சூர் - சூரபதுமன், தேனு - காமதேனு.

1609. அன்னாட் சூர னிகற்குடைந்த
அமரர் போதி வனம்விட்டுத்
தன்னே ரில்லான் கயிலையினிற்
சார்ந்து நந்திக் கியம்பஅவன்
முன்னோன் முன்பு விடச்சென்று
முக்கண் முதல்வன் தாள்தொழுது
நன்னே யத்தோ டுரைசெய்வார்
நாரா யணனா தியஅமரர். 33

1610. இடுக்கண் புரிந்த சோமுகனால்
எய்துந் துயர்தீர்த் தனைஇந்நாள்
அடுக்குஞ் சூரன் துயர்தீரென்று
அபய முரைப்ப வைமுகத்துக்
கடுத்தங் கியகந் தரன்நினைப்பக்
கந்தன் தந்தை கனற்கண்ணில்
மடுக்கும் அங்கிப் பொறியாறாய்
வந்து தோன்ற வானோர்கள். 34

1611. ஆறு பொறியின் சோதியினால்
அஞ்சி யகன்று தேறியபின்
நீறு புனைந்தோன் பொறியாறு
நின்ற கனலி வாயுவின்மீது
ஏறும் படிசெய் திவைகங்கை
இடத்தி விடுக வெனச்செப்ப
ஈறில் லார்கள் கொடுபோயங்கு
இட்டார் கங்கை கொண்டேகி. 35

1612. ஓங்கு திரைசேர் சரவணத்தில்
உய்ய அரன்விந் துறுபொறிகள்
ஆங்கு மகவோ ராறாகி
அறுமீன் பாலுண் டமர்ந்திருப்பப்
பாங்கு பரன்போய்ப் பணிப்பஉமை
பதுமக் கையா லாறுருவும்
வாங்கி யணைத்தோர் உருவாக்க
மகவாய் ஆறு முகன்தோன்றி. 36

1613. வெள்ளிப் பொருப்பிற் தாய்தந்தை
மிகவு மகிழ உடன்போந்து
வள்ளல் நுதற்கட் பொறிப்பிரபை
வயங்கும் போதில் உமைநடப்பத்

துள்ளி யடிப்பொற் சிலம்புதிர்த்த
சோதி மணியொன் பதிலுமுதித்து
உள்ள தம்பி மார்வீர
வாகு முதலொன் பதின்மர்களும். 37

1614. கூடி விளையா டிடஅழகு
குலவு கந்த மாதனத்திற்
பீடு பெறவீற் றிருந்துதனைப்
பேணா அயனைப் பிடித்துமலர்
சூடுந் தலையிற் சூட்டிவிலங்
கிட்டுச் சிருட்டித் தொழில்நடத்தி
நாடும் பிதாவுக் குபதேசம்
நல்கி அயற்கு நலமீந்து. 38

1615. முனிவர் வேள்வி தனிற்பிறந்த
முறுகு மருப்புத் தகரேறிப்
புனித மிகுலீ லைகளுடனே
புவன முழுதும் போயுலவித்
தனிவெள் விடையோன் சத்திகொடுத்
தேவப் பூதத் தானையுடன்
குனிவிற் கரத்தா னவர்வேட்டை
யாடப் போந்து குவலயத்தில். 39

1616. தாரு கனையும் கிரவுஞ்சந்
தனையும் வேலாற் றறித்திப்பாற்
சீருண் மருவும் பொன்னிவட
கரையிற் சேய்ஞ லூர்ச்சிவனை
யாரு மலரிட் டருச்சித்தங்
ககன்று பரங்குன் றினின்மேவி
நீருண் மருவு சடிலனையுள்
நினைந்து பூசை செய்துபினர். 40

1617. தெற்குக் கடல்நீ ரலைவாய்சேர்
செந்தூர் மருவித் தேவர்குரு
வற்கு நிகர்மெய்ச் சூரன்வலி
யனைத்து முரைப்பக் கேட்டுமகிழ்ந்து
ஏற்கொள் வடிவா ளேந்துமிளை
யோனாம் வீர வாகுவினை
முற்கண் தூதாச் சூரனுக்கு
முன்னி யனுப்ப அவன்மகிழ்ந்து. 41

1617. சூரன் - சூரபதுமன்.

வேறு

1618. தாவி னான்கடல் தன்னையே
மேவி னான்மிகு சூரன்முன்
பேர்வில் வேள்விடு பீடமேல்
ஆர்வ மோடிருந் தறைகுவான். 42

1619. எடாவிண் ணோர்சிறை யீதியோ?
கடாவு வேலவன் கைஅயில்
படாமு னுன்னுயிர் படுதியோ?
தடாது சொல்லெனச் சாற்றினான். 43

1620. விதியின் வண்ணமாய் வீகுவான்
அதிக கோபமாய் அண்ணலைக்
கதியி னாற்பிடி கட்டுமென்று
உதறி மைந்தரொ டுரைசெய்தான். 44

1621. பட்டி னத்தினும் படரெரி
இட்டெ ரித்துயர் மனையெலாந்
தட்டி வாயிலோர் தம்மையும்
அட்டி வந்தனன் அயிலன்முன். 45

1622. வீர வாகுவும் வெளியில்வந்து
ஆர வாரமாய் வந்தடர்
சூரன் மைந்தர்கள் சுற்றினோர்
ஆரை யும்மவித் தப்புறம். 46

1623. சாத லேதுணிந் தானென
ஓதி யேபணிந் தானதோர்ந்து
ஆதி நாயகன் அறுமுகன்
ஏதன் மேற்படை எய்தியே. 47

1624. அளவி லாஅசு ரரையெலாம்
இளவல் வீரரா லிறுதிசெய்து
ஒளிகொள் வேலினால் உமைமகன்
களிகொள் சிங்கனைக் காய்ந்துபின். 48

1625. வலிய சூரபன் மன்செயும்
கலிகொள் மாயை யெல்லாங்கடிந்து
உலைவு வேபொரு துரமெலாம்
மெலிய வேசெயும் வேளையில். 49

1626. ஆற்ற லான்கரந் தாழியில்
ஊற்ற மாமர வுருவமாய்த்
தோற்று போதுட னேதொடர்ந்து
ஏற்ற வேள்விடும் எஃகுபோய். 50

1627. கூறி ரண்டு படக்குறித்து
ஏறு போதுகொக் கிற்றுவீழ்ந்து
ஊறி லாமயி லொன்றுமோர்
வேறு சேவலு மாய்விழ. 51

1628. கண்டு கந்தவேள் மயிலின்மேற்
கொண்டு கோழியின் கொடிபிடித்து
அண்ட மாள்சயந் தன்சிறை
விண்டு நீங்கிட வேவரம். 52

1629. ஈந்து தேவர்கள் யாவரும்
சூழ்ந்து பூமழை சொரியவந்து
ஆர்ந்த தேவர்சே னாதிபங்
கூர்ந்து தென்பரங் குன்றினில். 53

1630. மொய்வ லாரிமுன் றந்திடத்
தெய்வ யானைதோள் சேர்ந்துபின்
மைவி லோசன வள்ளிமேல்
மெய்வி ராவுமால் மிகவுமாய். 54

1631. பொருவி லாஅயன் பூசைசெய்
பிரம னூரினிற் போந்துவந்து
அரனை அர்ச்சனை செய்துநற்
பெருகு தேவர்கோன் பெண்ணொடும். 55

1632. அமரர் பூசனை யாற்றிடச்
சமையுங் கோயிலிற் தங்கிவாழ்ந்து
உமைம கன்மயி லூர்திமேற்
கமலை சேர்விடைக் கழியினில். 56.

1633. வந்து வானவர் வான்புக
முந்து நல்விடை முகமனோடு
அந்த மாலயன் ஆதியோர்
சிந்தை யார்வுறச் செய்துபின். 57

1634. கொண்ட லார்குழல் வள்ளியைக்
கண்டு கானிடை கள்ளமாய்
விண்டு கான்மிசை வீழ்ந்தவள்
தொண்டை வாயமு துண்டுசூழ். 58

1635. குறவர் மேவு குறிச்சியில்
உறவி னால்மண உரிமைகொண்டு
அறுமு காதிபன் அருளொடும்
பெறுமொ ராறிடம் பேணினான். 59

நாற்பத்தொன்றாவது
சாத்தர் தாருகனைச் செயங்கொண்டு வெற்றிமேவிய
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1635
திருச்சிற்றம்பலம்

41. சாத்தர் தாருகனைச் செயங்கொண்டு வெற்றி மேவிய அத்தியாயம் (சுருக்கம்)

கிரவுஞ்சமலைத் தலைவனாகிய தாருகனுடன் பல படைவீரர்கள் போர்க்களத்திலே வந்து நின்றனர். வீரர்களில் சிலர் தேர்கள் மீதும், சிலர் குதிரைகள் மீதும், சிலர் யானைகள் மீதும், பலர் கால்நடையாலும் வந்தனர். இத்தகைய படை வெள்ளம் புடைசூழத் தாருகன் ஆயிரம் குதிரைகள் கட்டிய தேரில் ஏறி வில்லேந்திய கைகளுடனே சாத்தருக்கு முன் வந்து நின்றான்.

சாத்தரும் தாருகனுடன் போரிட முற்பட்டார். தமது பூத கணங்களுடன் எழுந்தார். பின்பு, அரசவனத்திலுள்ள யானைகளின் துதிக்கைகளிலே பெரிய தண்டங்களைக் கொடுத்து அவற்றை முன்னேவிட்டு, அளவற்ற குதிரை வீரர்கள் சுற்றிலும் வர வெள்ளை யானை மீது விருப்புடன் ஏறி நடத்தி, தாருகன் எல்லையைக் கடப்பதற்கு முன்பே எதிரே வந்து நின்றார். சேனைகளின் அணியைத் தாண்டவொட்டாமல் அசுரப் படைகளெல்லாம் வில், கவண், உலக்கை, சக்கரம் ஆகிய வற்றை ஏவித் தமது கைகளிலேயுள்ள சங்குகளை அகிலம் அதிரும்படியாக ஊதினர். அசுரப்படைகள் தோள்களைக் கொட்டியும், வலசாரி இடசாரியாகச் சுற்றியும், வாள்களைக் கைகளிலே கொண்டும் சண்டையிட்டனர்.

சாத்தர் தம் யானைகளை ஏவினார். அவற்றுள் ஒரு யானை அசுரருடைய போர்க்களத்திலே சென்று, பிரளய காலத்திலே எழுகின்ற காற்றைப் போன்று பாய்ந்தது. அசுரனுடைய தேர், யானை, குதிரை இவை யாவும் விழும்படியாகத் தடியாலடித்துக்

1635. ஆறிடம் - ஆறு திருப்பதிகள்.

கலக்கியதும் போர் செய்ய முடியாமல் எல்லாப் படைகளும் மடிந்தன. எங்கும் இரத்த வெள்ளம். இது என்ன மாயம் எனத் தாருகன் பதறினான். அவன் தன் வில்லை எடுக்கும் முன் மற்றொரு யானை அவன் முன்னே நின்றது. அது அவனுடைய படைகள் எல்லாவற்றையும் அழித்தது. தாருகன் மீது துதிக்கையை வீசியதும் அவன் போர்க்களத்தை விட்டு ஓடத் தொடங்கினான். அப்போது அவனை சாத்தாவின் படைகளான குதிரை வீரர்கள் சுற்றி வளைத்தனர். உடனே சாத்தா அவர்களை அடக்கி, இனிமேல் வரும் நமது முருகப்பிரானுடைய கையிலுள்ள வேலாயுதத்துக்கு இரையாக முடிவான் என்று கூறினார். மேலும், அசுர சேனைகளுடன் இவனையும் வெற்றி கொண்டது போதும்; நம்மிடம் வாருங்கள் என்றார். குதிரை வீரர்களும் சாத்தர் முன் வந்து நின்றனர். விண்ணோர் பூமாரி பொழிந்தனர். தேவதுந்துபி வானில் முழங்கியது. தேவர்கள் மாசிலாமணிப் பெருமானைத் துதித்தனர். திருக்கோடி காவலில் ஐயனார் அமர்ந்தார். வெற்றிகொண்ட யானைகள் அரசவனத்தில் அமர்ந்தன. பூதகணங்கள் காவல் தொழிலை மேற்கொண்டன.

தோல்வி கண்டு ஓடிய தாருகன் நடந்தவற்றைப் பற்றி மூத்தவனாகிய சூரபதுமனிடம் முறையிட்டான்.

இவ்வாறு திருக்கோடிகாவலிலுள்ள ஐயனாரின் திறத்தைக் கேட்ட மிதிலேசன், சூரபதுமன் முதலான அசுரர்களை முருகவேள் அழித்த பெருமைகளைச் சொல்ல வேண்டுமெனக் கேட்கத் தவுமியரும் கூறத் தொடங்கினார்.

மாயை என்னும் ஓர் அசுரி சுக்கிரனுடைய ஏவலால் சென்று உண்மைத் தவம் புரியும் காசிபரை மயக்கி ஓர் இரவில் புணர்ந்தாள். அதனால் சூரபதுமனை முதலில் பெற்றாள். பின்பு, சிங்கமுகாசுரன், தாருகன், அசோமுகி ஆகியோரை ஒவ்வொரு யாமத்தும் ஒவ்வொருவராகப் பெற்றாள். ஒருகோடி வீரர்களையும் அளித்து, சூரபதுமனாதியர்களை மேருமலையில் சென்று தவம் இயற்றும்படிச் செய்தாள்.

முதலில் சூரபதுமன் யாகத்தைச் செய்து உடலை அறுத்து யாக எரியிலே தூவிப் பின்பு தீரத்துடன் வேள்வியிலேயே வீழ்ந்து சாம்பலானான். பின்பு, சிங்கமுகாசுரன் மிகக் கடுமையான யாகத்தைச் செய்ய இறைவன் வெளிப்பட்டு வேண்டும் வரம் யாது எனக் கேட்டருளினார். அச்சிங்கமுகனும்

தலைமையனான சூரபதுமன் எழுந்திருக்கவும் அவன் கேட்கும் வரங்களையும் தந்தருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அவ்வாறே இறைவனும் அருளினான். சூரபதுமன் எழுந்து இறைவனைத் தொழுதான்.

இறைவன் கயிலையை அடைய, சூரபதுமனும் மயேந்திரப்பதியைச் சேர்ந்து குருவாகிய சுக்கிரனால் முடிசூட்டப் பெற்று ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாண்டு வருகிற நாளில், பானுகோபன் முதலான பல பிள்ளைகளைப் பெற்றான். சிங்கமுகனும் அவ்வாறே மகிழ்ந்திருந்தான். பின்பு, கயமுகனையும் கிரௌஞ்சகிரியில் இருக்கும்படிச் செய்தான்.

ஒருமுறை சூரபதுமன் பானுகோபனை அழைத்து அனைத்துப் படைகளையும் கொடுத்து, தேவர்கள் அனைவரையும் பிடித்து வரும்படிக் கட்டளையிட்டான். பானுகோபனும் படைகளுடன் தேவலோகம் சென்று, இந்திரன் முதலான தேவர்களுடன் போர் செய்தான். தேவர்கள் தோல்வியுற்று தேவலோகத்தைவிட்டுப் பூமியில் வந்து வசித்தனர். பானுகோபன் இந்திரன் மகன் சயந்தரனைப் பிடித்துவந்து சூரபதுமனிடம் விட்டான். சயந்தரனையும் மற்ற தேவர்களையும் சூரபதுமன் சிறையிலிட்டான். மேலும், பூமியில் மழைபெய்யாதபடித் தடுத்து, அங்குள்ள தேவர்களைப் பிடித்து வரும்படி தாருகனுக்குக் கட்டளையிட்டான். தாருகனும் அவ்வாறே செய்தான்.

முன்பு சாத்தாவானவர் அசோமுகியின் கையை அறுத்ததை அறிந்த சூரபதுமன் மேலும் சினம் கொண்டான். வேதங்களைக் கொள்ளை கொண்டு போன சோமுகாசுரனை இறைவன் அழித்து அவ்வேதங்களை மீட்டதையும் அறிந்தான். அம்பிகை பசுவுருவம் கொண்டதையும், அரம்பையர்கள் பசுவுருவம் கொண்டதையும், அவர்கள் இவ்வடிவத்தை நீக்கிக் கோமுத்திச் சேத்திரத்திலே திருவருள் பெற்றதையும் அறிந்தான். ஒப்பிலாமுலையம்மையைத் திருமணம் செய்துகொண்ட மாசிலாமணிப் பெருமான் துறைசையிலும் கயிலையிலும் அம்பிகையுடன் விருப்புடன் எழுந்தருளியிருக்கும் காலத்தில் சூரபதுமனுடைய போருக்குப் பயந்த தேவர்கள் கயிலையை அடைந்து நந்திபெருமானுக்குத் தெரிவித்தனர். அவர் இறைவன்பால் அழைத்துச் சென்றுவிட்டார். திருமால், இந்திரன் முதலான தேவர்கள் இறைவனைத் தொழுது முறையிட்டனர்.

இறைவா! முன்பு துன்பம் செய்த சோமுகாசுரனால் நாங்கள் அடைந்த துயரத்தைப் போக்கினாய்; இப்போது சூரபதுமன் செய்யும் துன்பத்தையும் போக்குவீராக! என்றும் வேண்டினர். உடனே இறைவன் அவர்களுக்கு அபயம் கொடுத்துத் தம்முடைய நெற்றிக் கண்ணினின்றும் ஆறு பொறிகள் வந்து தோன்றச் செய்தான். பின்பு, அந்த ஆறு பொறிகளையும் அக்கினி, வாயு இவர்களிடத்தில் கொடுத்து, கங்கையிலே சேர்க்கும்படிச் சொன்னான். அவ்வாறே அவர்களும் இட்டனர்.

அப்பொறிகள் ஆறினையும் கங்கையானது சரவணத்தில் கொண்டு போய்விட, ஆறு பொறிகளும் ஆறு மகவாகி, ஆறு மீன்களிடத்தில் பாலுண்டிருந்தன. இதனை இறைவிக்கு இறைவன் உணர்த்த, அம்பிகையானவள் தம் கையால் ஆறு உருவத்தினையும் வாங்கி அணைத்து ஓர் உருவாக்கினாள். ஆறுமுகப்பிரான் தோன்றினான். பின்பு, வெள்ளியங்கிரியிலே தாய் தந்தையர் மகிழ, வீரபாகு முதலான தம்பியர் ஒன்பதின்மருடன் சேர்ந்து விளையாடினான். கந்தமாதனத்திலே, தன்னை வணங்காத பிரமனைப் பிடித்துச் சிரசில் குட்டி விலங்கிட்டான். சிருட்டித் தொழிலைத் தானே நடத்தினான். தந்தைக்கும் உபதேசம் செய்து பிரமனுக்கும் வரமளித்தான். முனிவர் வேள்வியிலே உண்டான ஆட்டுக்கிடாவின் மேலேறி, உலகம் சுற்றி வந்தான். இறைவன் அளித்த சத்தி ஆயுதத்தைப் பெற்றுப் பூதசேனைகளுடன் அசுர வேட்டைக்குச் சென்றான்.

கிரௌஞ்சத்தையும் தாருகனையும் வேலால் சங்கரித்தான். பின்பு, காவிரியின் வடகரையிலுள்ள திருச்சேய்ஞ்ஞலூரில் எழுந்தருளியுள்ள சிவபிரானை அருச்சித்தான். பின்பு, திருப்பரங்குன்றம் அடைந்து அங்கும் இறைவனைப் பூசை செய்தான். அடுத்து, திருச்செந்தூரை அடைந்து சூரபதுமனுடைய வலிமையை அறிந்தான். வீரபாகுவைச் சூரபதுமனிடம் தூது விட்டான். தூது வந்த வீரபாகுவைச் சூரபதுமன் சிறையிட முயன்றான். அங்கிருந்த அசுர வீரர்களை அழித்த வீரபாகு அறுமுகப்பிரான் முன்பு வந்து நின்று, சூரபதுமன் அழிவதற்குத் துணிந்துவிட்டான் என்று கூறினார்.

அறுமுகப்பெருமான் அசுரர் கூட்டத்தையும் சிங்கமுகாசுரனையும் கொன்றார். பின்பு, சூரபதுமன் செய்த மாயா ஜாலங்களையெல்லாம் அழித்தார். சூரபதுமன் மறைந்து

மாமர உருவமாகத் தோன்றினான். அறுமுகப்பெருமான் வேலாயுதத்தை விட்டதும் அது சென்று மரத்தை இரு கூறாகப் பிளந்தது. அப்போது, அம்மாமரம் வேரற்ற ஒருபாகம் மயிலாகவும், மற்றொரு பாகம் சேவலாகவும் வீழ்ந்தது. உடனே அறுமுகவன் மயிலின்மீது ஏறிக்கொண்டு கோழிக் கொடியைப் பிடித்துச் சயந்தனைச் சிறையினின்றும் விடுவித்து அவன் வேண்டிய வரங்களைத் தந்தருளினார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இந்திரன் தன் மகள் தெய்வயானையை அறுமுகப்பிரானுக்குத் திருமணம் செய்துதர அவரும் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார்.

பின்பு, அறுமுகப்பிரான் வள்ளிநாயகி மேலும் மிகவும் மயக்கம் கொண்டார். தெய்வயானையுடன் எழுந்தருளி யிருந்த அறுமுகவன், மயிலூர்தியில் திருவிடைக்கழியினில் வந்து தேவர்களுக்கெல்லாம் விடை கொடுத்தனுப்பினார். பின்பு வள்ளியை மணம்புரிந்து ஆறு திருப்பதிகளிலும் காட்சி தந்தருளினார்.

நாற்பத்திரண்டாவது
அசோமுகி மகள் கிருத்திகைக்கு
அருள்புரிந்த அத்தியாயம்

1636. என்று நல்மிது லேசன் இன்புற
விலகு வேற்கர முருகவேள்
குன்று போலெதிர் சூரை மாய்த்திடு
கொள்கை பேசிய தவுமியர்
வென்றி சேர்திற லையன் கையற
வெட்ட வோடும சோமுகி
அன்று பெற்றெறி யுங்கி ருத்திகை
அருள்பெ றுஞ்செய லுரைசெய்வான். 1

1637. புரவ லர்க்கிறை யான நன்மிது
லேச கேள்!புன்கி ருத்தியப்
பெருவி ருப்பொடு புனிதனைப் புல்கு
பிறையெ யிற்தச முகியுநல்
அரிய ரற்குறு சேய்க ரத்தினை
அரியு மப்பொழு தலறியுட்
கருவி னிற்பவ முறுங்கி ருத்தியைக்
கடிதி னீன்றெறிந் தோடினான். 2

1638. எறிகி ருத்திகை பிப்பிலாரணி
யத்தில் வீழ்ந்தெழு பசியினாற்
செறியுங் கற்கள்பொ றுக்கி மென்றரன்
சினக ரத்தினை நோக்கிநல்
அறிவு பெற்றிரு கைகு வித்துவீழ்ந்து
அடிப ணிந்தழு போதினிற்
கறைத ரித்தொளிர் கந்த ரத்தியா
கேசர் நோக்கிய கருணையால். 3

1639. எடுத்து மென்றிடு கற்கள் யாவும்நல்
லமுத மாயிட இன்பொடும்
அடுத்தி டும்பசி தணிய வுண்டுநல்
லரசில் மேவுபோ தொருதினம்
கடுத்த தும்பிய கண்ட ரைத்தொழ
மேவு சாத்தர்முன் காரெனத்
தடித்த மெய்யினள் வந்து போற்றலும்
யாரை நீயெனச் சாற்றுவாள். 4

1640. கறைத ரித்தவாள் கொண்டு நீகர
கண்டஞ் செய்தஅ சோமுகி
பெறவு தித்திடு புதல்வி தேவர்பி
ரான்த னக்குமோர் மகள்யான்
அறிவு றுத்தியென் பசித ணித்தனை
அருள்பி தாமகிழ்ந் தாண்டனன்
பொறைமி குந்திடும் ஐய இன்னுமென்
புன்சொற் கேட்டருள் புரிதியால். 5

1641. அகோர ரூபமும் இருபி றைக்கிணை
யான தந்தமும் ஆடையின்
சகாவி லாநிரு வாண மும்மெரி
தங்கு நோக்கொடு பங்கியும்
விகாத மாகிய அசுரி யாகநான்
மேவ லாலெனைக் கண்டபேர்
மகாப யங்கர முறஇம் மண்ணிடை
வாழ்கி லேன்தவ மருவுவேன். 6

1642. ஆத லாலென துருவு கண்டிடா
வகைம றைந்தர னடியிணைப்
போது சிந்தைசெய் யிடமும் என்பசி
பொங்கி டாதுனும் உணவும்நீ

சீத வெண்பிறை மருவு செஞ்சடி
லத்தி யாகர்சே யாதலால்
ஓதி யுந்தைபால் வேண்டி நல்வரம்
உதவெ னப்பணிந் துரைசெய்தாள். 7

1643. அய்ய னவ்வுரை கேட்டு மெத்தவும்
அகம கிழ்ந்திவள் அசுரியாய்
மெய்யு றும்பவ மேவி னுந்தவ
மேவு நல்லுணர் வுற்றனள்
செய்ய மாசிலா மணித லத்திடை
சென்ம முற்றிடு நன்மையால்
உய்யு மெய்யருள் பெற்ற தாமென
உன்னி யெய்தினன் கோயிலுள். 8

1644. ஞான நாயகன் முன்பு சென்று
நமக்க ரித்தொரு பக்கமாய்
மாந லங்கொடு நின்றொர் வாசக!
மாசி லாமணி நாயகா!
நீந யந்திரு செவியி லேற்றரு
ளென்று நின்று நிகழ்த்தினான்
ஊன மின்றியவ் வசுரி பேசிய
உரையெ லாமகிழ்ந் துண்மையாய். 9

1645. கேட்டு நற்திரு வுளம கிழ்ந்தெழு
கிருபை யோடுமா றுரைசெய்வான்
நீட்டு முற்தவ முடையள் ஓர்குறை
யால்அ சோமுகி யிடைப்பிறந்து
ஊட்டு தாயறு குழவி யாய்ப்பசி
யுற்றி ரங்கி உயிர்த்தெமைத்
தேட்ட முற்று வணங்கி யேயெழுஞ்
செய்கை கண்டனை போலும்நாம். 10

1646. கருணை வைத்தவள் வாயில் வைத்திடு
கல்லெ லாம்அமு தாக்கியே
மருவு முட்பசி நோய கற்றிநல்
மதியு மீந்தனம் இனியவள்
தரையி னுற்றெழு காவி ரிப்புனல்
தங்கு சங்கமு கம்பெறும்
பரவை யிற்புகுந் தவள்நி னைத்திடும்
படிம றைந்துத வஞ்செய்வாள். 11

1647. ஆழி யிற்புகுந் தாடு தீர்த்தமுள்
ளனவெ லாமவள் காவலாம்
வாழ வக்கட லாடி நற்பலன்
மருவ வேண்டிய மானுடர்கள்
ஏழு கற்கடல் மீத வட்குண
வாயெ றிந்தினி தாகவே
பாழ கற்றுநல் மந்தி ராஞ்சலி
பண்ணி மூழ்கிட வேண்டிடும். 12

1648. மந்தி ரத்தொடு கல்வி லாதவர்
மணலெ டுத்தெறிந் தாகினும்
தந்தி ரத்தொடு மூழ்கி யேகரை
சார வேண்டும்இ தன்றியே
முந்த வுற்றதில் மூழ்கி னோர்பலன்
பாதி கொள்ளுவள் முத்தியும்
அந்தி யத்தினி லவள்த னக்கருள்
புரிகு வோமிஃது அறியநீ. 13

1649. செப்பி யேகுண கடல்பு கும்படி
செய்வி யென்றரன் உரைசெய
அப்பு றுஞ்சடை யையர் தாள்தொழு
தையன் வந்தச முகிமகட்கு
ஒப்ப வேயுப தேச மாயஃது
உரைசெய் தானவள் உள்மகிழ்ந்து
இப்ப தம்பெற என்கொ லோதவம்
என்றி றைஞ்சியெ ழுந்துபோய். 14

1650. அற்பு தத்தொடு காவி ரிப்புனல்
ஆழி யிற்புகு மெல்லையுள்
மற்பொ ருந்துரு வந்தெ ரிந்திடா
வகைம றைந்துமெ யன்பொடும்
பொற்பு மிஞ்சுசா யாவ னத்துறை
புனித னைத்தினம் போற்றியாங்கு
உற்ப வம்பிரி யத்த வம்புரிந்து
உளம கிழ்ந்திருந் தாளரோ. 15

1651. பிப்பி லாதி சமுற்பன் னே!பெருங்
கிருத்திய! லோக பயங்கரி!
கற்பொ ருந்துண வாக வேபிற
கற்பி தஞ்செய்தோம் உண்ணென

1650. புனிதன் - இறைவன்.

நற்பொ டுஞ்சொலி யஞ்ச லித்தெழு
கல்லெ றிந்து நறுந்திரை
அப்பு மோதுபெ ருங்க டற்புகுந்து
ஆட வேண்டும்நல் லறிவுளோர். 16

நாற்பத்திரண்டாவது
அசோமுகி மகள் கிருத்திகைக்கு அருள்புரிந்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1651
திருச்சிற்றம்பலம்

42. அசோமுகி மகள் கிருத்திகைக்கு அருள்புரிந்த அத்தியாயம் (சுருக்கம்)

அசோமுகியானவள் சாத்தனாரால் கை வெட்டப்பட்டு ஓடும்போது பெற்றெடுத்து வீசியெறிந்த கிருத்திகையானவள் அருள்பெற்ற செயலைத் தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறலுற்றார்.

மிதிலேசனே! கேட்பாயாக : இந்திரனைப் புணர்ந்த அசோமுகியானவள் சாத்தாவால் கை வெட்டப்பட்டபொழுது அலறி ஓடும் சமயம், கருவுற்ற கிருத்திகையை ஈன்று எறிந்துவிட்டு ஓடினாள். அக்குழந்தை பிப்பிலாரணியத்தில் வீழ்ந்து மிகுந்த பசியினால் கற்களைப் பொருக்கி மென்று தின்றது. திருக்கோயில் கோபுரத்தைத் தரிசித்து நல்ல அறிவைப் பெற்று இருகரம் கூப்பி வணங்கியது. தியாகேசரின் கருணையால், அக்குழந்தை எடுத்து மென்ற கற்களெல்லாம் அமுதமாக இன்புடன் பசியும் அகன்றது.

போதி வனத்தில், மாசிலாமணிப் பெருமானைத் தொழ வந்த சாத்தருக்கு முன்பு, கருநிறமுடைய கிருத்திகையானவள் வந்து வணங்கினாள். நீயார்? எனச் சாத்தர் கேட்டார். அதற்கு அவள் 'தேவரீர் வாளாயுதம் கொண்டு கரத்தைத் துண்டித்த அசோமுகியின் மகள் நான்; தேவர்பிரானுக்கும் மகளாவேன்; அடியேனுக்கு நல்லறிவைக் கொடுத்து என் பசியையும் தணித்த உம்முடைய தந்தையான சிவபிரான் மகிழ்ந்து என்னை ஆட்கொண்டார். ஐயனே! அகோரமான உருவமும், வக்கிர தந்தமும், ஆடையில்லாது நிர்வாணமும், அக்கினியைக் கக்கும் கண்களும் உடைய அசுரியாக நான் பிறந்ததால் என்னைப் பார்ப்பவர்கள் பயப்படும்படியாக இப்பூமியில்

நான் வாழ விரும்பவில்லை. தவத்தையே நான் விரும்புகிறேன். எனவே, என்னுடைய உருவை மற்றவர்கள் காணாதவாறு மறைந்து இறைவனைத் தியானிக்கும் இடம்வேண்டும். என் பசி மிகாமல் இருக்கும் உணவும் வேண்டும். இவ்வரங்களைத் தியாகேசரிடம் புதல்வராகிய நீவிர் பெற்று எனக்கு உதவுக என்று சாத்தனாரைப் பணிந்து வணங்கினாள்.

கிருத்திகையின் மொழி கேட்ட சாத்தா மகிழ்ச்சியுற்றார். இவள் அசுரியானாலும் தவவொழுக்கத்திலே நாட்டம் கொண்டுள்ளாள். கோமுத்திச் சேத்திரமானதால் இந்நற்பேறு இவளுக்குக் கிடைத்தது போலும் எனவும் எண்ணினார். பின்பு, அவள் கேட்டுக் கொண்டபடியே மாசிலாமணிப் பெருமானிடம் விண்ணப்பித்தார். இறைவன் அதுகேட்டு மகிழ்ச்சி அடைந்து கூறினார். ஐயனே! முன்பு அவள் தவமுடையவளே; ஒருகுறைபாட்டினால் அசோமுகிபால் பிறந்து ஊட்டுவிக்கின்ற தாய் இல்லாமல் பசியுற்று எம்மைத் தெளிந்து வணங்கினாள். நாமும் அவள் உண்ட கற்களை அமுதமாகச் செய்தோம். இனி, அவள் காவிரி சங்கமம் ஆகும் கடலிலே புகுந்து அவள் விரும்பியவண்ணம் தவம் செய்வாள். கடலில் சென்று சேரும் தீர்த்தங்கள் எல்லாம் அவளது காவலாம். கடலில் நீராடி நல்வாழ்வு பெற விரும்புவோர் ஏழு கற்களை அவளுக்கு உணவாகக் கடலில் எறிந்து மந்திராஞ்சலி செய்து நீராட வேண்டும்; கல் இல்லாதவர்கள் மணலை எடுத்தெறிந்து நீராட வேண்டும். அவ்வாறு மூழ்கினவர்கள் பெற்ற பலனில் பாதியை அவள் அடைவாள். முடிவில் முத்தியையும் அடைவாள். இதையெல்லாம் அவளுக்குச் சொல்லிக் கிழக்குக் கடலை அடையும்படிச் செய்க என்று இறைவன் கூறியருளினார்.

சாத்தரும் கிருத்திகைக்கு எல்லாவற்றையும் கூற, அவள் மகிழ்ந்து வணங்கினாள். கடலிலே காவிரி கலக்கும் எல்லையுள் தன் உருவம் தெரியாது மறைந்து, சாயாவனத்திலே எழுந்தருளி யிருக்கும் இறைவனைப் போற்றித் தவம் செய்து வந்தாள்.

எனவே, கடலிலே நீராடுபவர்கள், பிப்பிலவனத்தில் தோன்றியவளே! கிருத்திய! லோக பயங்கரி! கற்களை உனக்கு உணவாகக் கற்பித்தோம்; உண்ணுவாயாக! என நட்புடனே சொல்லி அஞ்சலி செய்து ஏழு கற்களை எறிந்து கடலில் நீராட வேண்டும்.

நாற்பத்து மூன்றாவது
சலந்தரனைச் சக்கரம் படைத்தறுத்த அத்தியாயம்

1652. கிறுத்தி கைக்கருள் புரிவகை கிளத்தினம் இனிக்கேள்
அறத்தி றந்தெரி மிதுலைநா யகவிட ரமரர்க்கு
உறப்பு ரிந்திகல் செயுஞ்சலந் தரனைநஞ் சுண்டு
கறுத்த கண்டர்சக் கரம்படைத் தறுத்தநற் காதை. 1

1653. முன்னம் ஓர்அயன் முடிந்துமற் றோரயன் முகுந்தன்
பொன்னந் தாமரை நாபியில் வந்தவன் புணர்ப்பான்
மன்னு நீர்த்திரை வாரியி லுற்பவித் துதித்தோன்
அன்ன வன்தனக் குறும்பெயர் சலந்தர னாமால். 2

1654. கோர மெய்யினன் கோபமே குணமெனக் கொண்டோன்
பார மேருவுக் கெண்மடங் குறுநெடும் படிவன்
சோரு மக்கினிக் குண்டமொத் தெரிசுழல் கண்ணன்
பாரை யோர்கையாற் பாயெனச் சுருட்டுமோர் பதகன். 3

1655. அசுர ருக்கிறை யாகிய தறுகண னவன்தான்
இசையு முக்கிரத் தானவப் படைகளெண் ணிலர்கள்
விசையொ டுற்றிர தங்கரி பரியொடு மிடைந்து
திசைய டைப்புற வார்த்துடன் வந்திடச் சென்றே. 4

1656. சதம கன்பெறும் அமரர்நாட் டினுஞ்சதுர் முகத்தோன்
இதமி குந்தசத் தியவுல கத்தினு மெழிற்பொன்
பதம்பு னைந்ததிண் புயமுகி லுலகினும் படர்ந்து
கதமி குந்தடர்ந் தெய்தினன் கண்டுளங் கலங்கி. 5

1657. அரிய யன்மக வான்முதற் தேவர்க ளரியின்
உருவங் கண்டிடு கரியின மெனப்பயந் தோடி
மருவு பிப்பில வனத்திடை வந்துமொய்த் தபயம்
புரிச டைக்கரு ணைக்கடல் கேட்டிடப் புகன்றார். 6

1658. அடைக்க லம்புகன் றிடுமவர் வாய்மொழி யதனை
விடைத்தி ருமுகங் கொண்டநந் தீசுரர் வினவி
உடற்றும் வெஞ்சமர்ச் சலந்தரன் செய்திபோ யுரைப்பப்
புடைக்கண் மேவுக ணேசனைப் பார்த்திவை புகல்வான். 7

1652. *கிறுத்திகை - கிருத்திகை.*

1659. அடரு மும்மதத் தைங்கரத் தழகிய பிள்ளாய்!
இடர்மி குந்தப யஞ்சொலும் அமரர்கள் இடுக்கண்டு
அடைப டும்படி பூதர்கள் தம்மொடுஞ் சார்ந்து
தொடர்ச லந்தரன் வலியெலா மகற்றெனச் சொற்றான். 8

1660. அன்ன தேசெய்கு வேனெனத் தொழுதருள் விடைபெற்று
உன்னு தற்கரி தாங்கண நாதர்க ளுடன்சீர்
மன்னு பூதவீ ரப்படை சூழ்ந்திட வந்து
மின்னு நீள்மணித் தேர்மிசை யேறினன் விரைந்து. 9

1661. அடிப ணிந்துவீழ் தேவர்கள் தமக்கெலாம் அபயம்
திட்மு றப்புரிந் தசுரர்கோ னெய்திடுந் திசைக்கண்
இடிமு ழங்குதல் போற்பல போர்முர சிரைப்பக்
கொடிகள் பற்பல சூழ்ந்திட வான்வழி குறுகி. 10

1662. உம்பர் கோன்பதி புகுந்தவ னுறைந்ததா னவரைப்
பம்பு பூதரை யேவிமாய்த் தப்புறம் படர்ந்து
நம்பு நான்முக னுலகினிற் சென்றவன் நகரிற்
துன்பு றுத்திய அசுரர்கள் கிளையெலாந் தொலைத்து. 11

1663. மாத வன்திரு வைகுந்த நகரிடை மருவிப்
பூத ராலவ னுறுநிசி சரருடல் பொடித்து
ஆதி நாயகன் தருகண பதிபுவி யடைந்து
தீது சேர்சலந் தரன்தனைத் தேடிடும் பொழுது. 12

1664. கயிலை வெற்பினுக் கருகுகீழ்த் திசையினிற் கதமோடு
அயிலு டைக்கரச் சலந்தரன் அடைந்ததை அறிந்து
சயமி குத்தபூ தப்படைத் தலைவர்க ளுடன்போய்
எயில்வ ளைத்தென வளைந்த னழகிய முகத்தோன். 13

1665. ஆர்த்த தெங்கணும் சங்கினம் பேரிகை அமலை
வேர்த்த தெங்கணும் வீரர்மெய் சினத்தினால் மிகுபோர்
போர்த்த தெங்கணும் எறிபடை நெடுங்கனற் பொறிகள்
ஈர்த்த தெங்கணும் துணிபடு பிணங்களை இரத்தம். 14

1666. விற்கள் எண்ணில வளைத்தனர் சொரிந்தனர் விசிகங்
கற்கள் எண்ணில வெறிந்தனர் கணிச்சிவேல் கைவாள்
எற்கொள் நேமிதண் டிலகுதோ மரம்பிண்டி பாலம்
பற்கள் மென்றெறிந் துலவினர் சாரிகை பலகால். 15

1667. கால்க ளற்றன கைகளற் றுதிர்ந்தன களமற்று
ஓல மிட்டெழு தலைபல உருண்டன உடல்கள்
மாலை யொத்துநீள் குடர்பல மார்பிடை மருவ
நீல வெற்பெனக் கிடந்தன பற்பல நிலத்தில். 16

1668. இன்ன தாயிட அசுரரோ டிகல்பொரு களத்தின்
மின்னு வேற்கரச் சலந்தரன் தளகத்த வீரர்
துன்னு மற்புயச் செருக்கொடுங் கணேசனைச் சூழ
அன்ன வர்க்கெதிர் வயிரவர் அநேகர்போ யடர்த்து. 17

1669. எக்கிஞ கோபனைக் கையினாற் பிழிந்தனர் எரிநேர்
உக்கி ரப்பெரு வியாக்கிர முகத்தனை உதைத்துக்
கக்கி வாய்வழி சோரிகான் றிடக்கழுத் தறுத்தார்
பிக்கு றும்மிரு கோதர னுடல்பிளத் தெறிந்தார். 18

1670. கரடி வத்திரன் திரிமுகன் சக்கரக் கண்ணன்
மிருக ராக்கதன் கூர்மன்ஆ தியபல வீரர்
பொருதி றத்தினை மாற்றிமா காளர்கள் புயத்தின்
பெருவ லித்திறத் தாலறுத் தெறிந்தனர் பிணமாய். 19

1671. கொன்றி ராக்கதப் படையெலாம் பூதர்கள் குவிப்ப
நின்ற வேற்கரச் சலந்தரன் கண்டுநே ரணுகித்
துன்று வெஞ்சிலை நாணெறிந் தார்த்தனன் துளங்கிப்
பொன்றி னாரெனப் பூதர்கள் ஓடினர் புலம்பி. 20

1672. கருதும் வானவர் அரவினைக் கண்டகா ரெலிபோல்
ஒருவி யோடியெத் திசைதொறும் பரந்துபோ யொளித்தார்
செருவு றுங்களத் தொருவனாய் நின்றனன் சிவன்சேய்
நிருத னுந்தனி யாகிவந் தெதிர்த்தனன் நேர்ந்தார். 21

1673. வான விந்திர வில்லென இருவர்வில் வளைத்துச்
சோனை மாரிகள் சொரிவபோற் சரமழை சொரிந்தார்
தான வன்பிர மாத்திரந் தொடுத்தெயத் தடக்கை
யானை மாமுகன் குகன்கணை தொடுத்ததை யறுத்தான். 22

1674. நாக பாசம்வன் சலந்தரன் தொடுத்திட நாதன்
சோக மற்றநல் லஞ்செழுத் தரும்படை தொடுத்து
வேக மோடதை யறுத்திடச் சலந்தரன் வெகுண்டோர்
ஏர்கொள் வச்சிரத் தண்டுகைப் பிடித்துவந் தெதிர்த்தான். 23

1675. பருக்கை மீதுபா சாங்குச தரனொரு பாரப்
பொருப்பை யொத்திடு தண்டினை யேந்திநேர் பொருந்தி
விருப்ப மானது கதைவிளை யாட்டின்மேல் மிஞ்ச
விருப்ப னாகிலு மவனுடன் மலைந்தன னடர்போர். 24

1669. எக்கிஞ கோபன், வியாக்கிரமுகத்தன், மிருகோதரன் - அசுரப் படைகளின் தளகர்த்தர்கள். 1671. பொன்றினார் - அழிந்தார்கள். 1672. அரவு - பாம்பு. சிவன்சேய் - கணேசன். 1673. தானவன் - அசுரன்.

வேறு

1676. கிட்டி னார்கதை யொன்றொ டொன்று
கிடைத்த னற்பொறி சிந்திடத்
தட்டி னார்மிகு சாரி வந்து
தருக்கி னாற்பெருந் தோள்களைக்
கொட்டி னார்திசை யெட்டுஞ் சென்று
குலால சக்கரம் போற்சுழன்று
ஒட்டி னார்பொரு ஞாட்பில் வானவு
டுக்கள் சிந்திட இருவரும். 25

1677. கதமு ளங்கொளா வகைக டாம்பொழி
கரிமு கன்விளை யாடல்போல்
அதம மிஞ்சுச லந்த ரப்பெயர்
அசுர னோடிகல் பொழுதினிற்
பதிமெய் யன்புறு மனைவிபி ருந்திகைப்
படைஞர் பற்பல ருதவியாச்
சதமி குத்தெழு வெள்ள மேவிய
தன்மை யோர்ந்துமை நாயகன். 26

1678. கயிலை வெற்பி னிருந்து பூதக
ணத்தின் வெள்ளமொ ராயிரம்
அயிலு கைத்தெழு குமர னோடும
கிழ்ந்த னுப்பிய போழ்தினில்
அயிலை யுற்றகை முருகன் மிக்கவ
மர்க்க ளம்புகுந் தைங்கரப்
புயலை யுற்று வணங்கி நின்றவப்
போது தானவர் சேனையும். 27

1679. வந்து சூழ்ந்து சலந்த ராசுர
வன்க ணான்புடை மொய்த்தனர்
முந்து சேனையோ ரீரி டத்து
முதிர்ந்த பாசறை செய்தவன்
உந்து சண்டை யொழிந்தி ருந்தனர்
உம்பன் மாமுகன் தம்பியாம்
கந்த நாயகன் தன்னை யங்கண்றி
றுத்தி யேகினன் கயிலையில். 28

1674. சாரி - வலசாரி, இடசாரி.
1677. கதம் - கோபம்.
1678. அயில் - வேலாயுதம்.

1680. அந்த வேளையி லஞ்சி யோடிய
அரிமு தற்பல அமரரும்
வந்த ருட்கண பதிப தந்தொழு
துடன ணைந்திட வாயில்சேர்ந்து
இந்து சேகர னுள்ள ழைத்திட
எய்தி ஐங்கரப் பிள்ளைநற்
தந்தை பாதம் வணங்க நாதன்த
ழீஇயெ டுத்தரு கீந்தனன். 29

1681. மற்ற மாலய னிந்தி ராதிபர்
வாழ்த்தி வீழ்ந்து வணங்கநேர்
கற்றை வேணியர் நோக்க மீந்திடக்
கைகள் கட்டிமு னின்றனர்
உற்ற காரண மென்கொ லென்றிட
உரக சாயியு ரைப்பனியாம்
பெற்றி டுந்துயர் கூற வேண்டிடிற்
பிப்பி லாரணி யத்திலும். 30

1682. வெள்ளி வெற்பிலு மன்றி வேறிட
மின்மை யால்விரைந் துற்றன
முள்ள முற்ற கருத்து நீயறி
யாத தும்முள தோஅருள்
வள்ள லே!கொடி தாஞ்ச லந்தர
வஞ்ச நஞ்சினுக் கஞ்சினோம்,
எள்ளு நஞ்சமுண் டன்று காத்தல்போல்
இன்றுங் காத்திடென் றேத்தினான். 31

1683. கேட்டி ரங்கிநல் லழகு குஞ்சரக்
கிருபை மைந்தனை நோக்கலும்
கோட்டு வெண்படை கொண்ட கையினன்
கூறு வான்சலந் தரனுடன்
ஈட்டும் வன்சமர் செய்து வேண்டிய
படைய முத்தியு மிற்றிலான்
நாட்ட மூன்றுடை நாய கா!இதற்
கென்கொ லோவவ னற்றவம். 32

1684. அறிந்தி டும்படி அருள்செ யென்றலும்
அமல நாயக னுரைசெய்வான்
பிறுந்தி யென்றொரு மனைவி நற்றவம்
பெருகு கற்புடை யாளவள்

1681. உரகசாயி - திருமால்.

சிறந்த தெய்வந்தொ ழாள்மி குங்கொழு
நற்றொ ழுந்தகை சேர்ந்துளாள்
உறுந்து ணைப்பெருந் தலைவி யாச்சலந்
தரன்த னக்குரித் தாயினாள். 33

1685. ஆத லால்அழி கின்றி லான்அவள்
கற்ப ழிந்திடல் அழிவனென்று
ஓதி விண்டுவை நோக்கி நீமுனம்
ஓங்கு முப்புரத் துட்புகுந்து
ஏத மாங்குரு வாய ழித்திடு
மாறு போலுமிப் போதுபோய்ப்
பேத மாம்படி கற்ப ழித்துவா
வென்று பேசிட மாயனும். 34

1686. ஆக்கி னைப்படி போய்ப்பி ருந்திதான்
அமர்ச லந்தர புரமதிற்
சாக்கி யப்பெரும் புத்த தேசிகத்
தன்மை கொண்டுநன் னெறியழித்து
ஊக்க மிஞ்சுபல் சீட ரோடுமு
லாவி மாயையி னாற்பொலா
மார்க்க மாய்ச்சலந் தரனு ருக்கொடு
மருவி னான்பிருந் தியைதனை. 35

1687. அதுவ றிந்திடா அசுரர் கோன்மிகும்
அறுமு கத்திரு முருகனோடு
எதிரெ ழுந்தமர் புரிய வந்துறும்
எல்லை யிற்கயி லைப்பரன்
கதுமெ னப்பொரு விடையின் மீதிவி
வர்ந்து பூதக ணத்தொடு
முதிர்ப றந்தலை சென்று நின்றிட
முன்பு நின்று சலந்தரன். 36

1688. தேக்க மழ்ந்திடு கொன்றை மாலிகை
சேர்ச டாதர முஞ்சுடர்
நோக்க முங்கர சூல மும்புய
நூலும் வெம்புலித் தோலுடை
ஊக்க முஞ்சத கோடி சூரியர்
உதைய மேனியுங் கண்டிவண்
காக்க வந்தனை யோஉன் மைந்தரை
யென்று நின்றுரை கழறினான். 37

1685. விண்டு - திருமால். 1686. ஆக்கினை - கட்டளை.

1689. ஆண வத்திரள் போலெ ழுந்துறும்
அசுர உன்வலி யதனைநாம்
காண வுற்றன மென்று நாயகன்
கழற என்னுடன் பொருதியேற்
தோண லுற்றிடு மென்பு யத்திற
மென்று சொற்றிட வின்றியாந்
தாணு திப்பெரு விரலி னாற்தரை
மீது கீறிய சக்கரம். 38

1690. பேர்த்தெ டுத்திட வல்லை யேலுனக்கு
ஒப்பு மிக்கிலை; பின்புயாம்
போர்த்தி றத்திலுன் னோடொர் காலமும்
பொருவ தின்றென உரைசெயப்
பார்த்தி டிற்பெரி தோஇ தென்றவன்
பகர முன்பரன் கீறினான்
ஆர்த்தெ டுத்தவன் தலையில் வைத்திட
ஆழி யாய்அவ னுடலினை. 39

1691. கீறி யேஇரு கூற தாய்ப்புவி
மேற்பி ளந்து கிடத்திடப்
பாறி யேயுயிர் பொன்றி னான்மிகு
பதக னான சலந்தரன்
தேறு தேவர்பூ மாரி பெய்து
திகழ்ந்து முன்சய சயவெனக்
கூறி யேகளித் தாடி னார்கரங்
கொட்டி யாடினர் பூதர்கள். 40

1692. தான வப்படை யாவுங் கைப்படை
தன்னை விட்டெறிந் தோடினார்
வான வர்க்கிறை முதலி னோர்களை
வாழ்வி டத்துற வேவிநற்
தேன லர்த்தொடை தங்கு செஞ்சடைச்
செல்வர் சேர்ந்தனர் கயிலையில்
ஏனை நற்கரி முகவன் பூகயி
லாச மேவி இருந்தனன். 41

1692. தானவப்படை - அசுரப்படை. கரிமுகவன் - விநாயகன்.
பூகயிலாசம் - திருவாவடுதுறை.

1693. ஆவி போன சலந்த ரன்சவ வுடலி னைத்திரும் பசுரர்கள்
மேவி யேயெடுத் தேகி னார்பிருந் திகையி ருந்த வியன்பதிக்
கோவி யேகயி லைக்கண் நின்று பவுத்த தேசிக வுருவமாய்ப்
பூவ னைப்பெறு மால்ச லந்தர புரமு றுஞ்செயல் புகலுவாம். **42.**

நாற்பத்து மூன்றாவது
சலந்தரனைச் சக்கரம் படைத்தறுத்த அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 1693.
திருச்சிற்றம்பலம்

43. சலந்தரனைச் சக்கரம் படைத்தறுத்த அத்தியாயம் (சுருக்கம்)

இறைவன் கிருத்திகைக்கு அருள்புரிந்த வரலாற்றைக் கூறினோம். இனி, தேவர்களுக்குத் துயர் செய்து வந்த சலந்தரனைச் சக்கரம் படைத்து அறுத்த கதையைக் கூறுகிறோம் கேட்பாயாக என மிதிலேசனுக்குத் தவுமியர் சொல்லத் தொடங்கினார்.

முன்பு, ஓர் அயன் இறந்துபட்டு மற்றோர் அயன் திருமாலின் நாபிக் கமலத்திலே தோன்றினான். அப்பிரமனுடைய சேர்க்கையால் கடலில் 'சலந்தரன்' என்னும் ஓர் அசுரன் தோன்றினான். கோரமான உடலும், கோபமே குணமாகவும், அக்கினிக் குண்டமொத்த எரிசுழல் கண்களும் கொண்டு பூமியையே பாயாகச் சுருட்டும் ஒரு பெரும் அசுரர் தலைவனாக அவன் விளங்கினான்.

அஞ்சாநெஞ்சம் கொண்ட அச்சலந்தரன் பல படைகளுடன் தேவ உலகம், சத்திய உலகம், வைகுந்தம் ஆகிய மூவுலகத்திலும் படர்ந்து அடைந்தான். திருமால், அயன், இந்திரன், தேவர்கள் ஆகிய அனைவரும் சிங்கத்தின் உருவத்தைக் கண்ட யானைக் கூட்டங்கள் போலப் பயந்து ஓடிப் பிப்பிலவனத்தில் வந்து நெருங்கினர். நந்தியெம்பெருமானிடத்தில் முறையிட்டனர். அவரும் இறைவனிடம் செய்தியை எடுத்துரைத்தார். இறைவன் கணபதியை அழைத்து, பூதகணங்களுடன் சென்று சலந்தரனை வென்று வருமாறு பணித்தருளினார்.

1693. பூவன் - பிரமன்.

சலந்தரனை அழிக்க முற்பட்ட விநாயகரைத் தேவர்கள் அனைவரும் வணங்கினர். பின்பு, தேவ உலகம் சென்ற விநாயகர் அங்கு அசுரர்களை அழித்தார். சத்திய உலகம் சென்று, அங்கிருந்த அசுரர்களையெல்லாம் அழித்தார். பின்பு, வைகுந்தத்தை அடைந்து, பூதப்படைகளால் அரக்கர்களை அழித்தார். பூவுலகம் அடைந்த விநாயகர் சலந்தரனைத் தேடினார். அவன் கயிலை மலைக்குப் பக்கத்திலே ஒளிந்திருப்பதை அறிந்து, பூதப்படைகள் கொண்டு சுற்றி வளைத்தார். அசுரப்படைகளை அழித்தார். சலந்தரனது வீரர்கள் விநாயகரைச் சூழ்ந்து கொண்டனர். அப்பொழுது அநேக வயிரவர்கள் நெருங்கி, அசுரப்படைகளின் தளகர்த்தர் களான எக்ஞகோபன், வியாக்கிரமுகத்தன், மிருகோதரன், கரடிவக்த்ரன், திரிமுகன், சக்கரக்கண்ணன், மிருகராக்கதன், கூர்மன் போன்றோரது வலிமையை மாற்றி மாகாளர்களது புயவலிமையினால் பிணமாகும்படி அறுத்து எறிந்தனர்.

பூதப்படைகள் இராக்கதப் படைகளைக் கொன்று குவித்தன. சலந்தரன் நாணை விடுத்து ஒலி எழுப்பினான். தேவர்கள் அழிந்தனர் எனப் பூதப்படைகள் அஞ்சி ஓடினர். தேவர்கள் யாவரும் பாம்பைக் கண்ட எலிப்போலப் பயந்து பல திசைகளிலும் ஓடினர்.

கணேசனும் சலந்தரனும் தனியே நின்று போரிட்டனர். அசுரன் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்துவிட கணேசர் குகன் கணையை விட்டு அதை அறுத்தார். சலந்திரன் நாகபாசாஸ்திரத்தை ஏவ கணேசர் பஞ்சாட்சர அஸ்திரத்தை விட்டு சோகம் அறும்படியாக அக்கணையை அறுத்தார். சலந்திரன் மிகக் கோபங்கொண்டு வஜ்ஜிரத்தண்டைக் கையில் ஏந்தி வந்து எதிர்த்தான்.

கணேசர் பாசங்குசமுடன் தண்டினை ஏந்தியும் சலந்தரனுடன் போர் செய்தார். இருவரும் மல்யுத்தமும் செய்தனர். இவ்வாறு இருவரும் போரிட்டபோது, சலந்தரனுடைய மனைவி பிருந்தை நூற்றுக்கணக்கான படைஞர்களை உதவிக்காக அனுப்பினாள். இதை அறிந்த சிவபெருமான், கயிலையிலிருந்து ஆயிரம் பூத கணங்களைக் குமாரக் கடவுளுடன் அனுப்பினார். குமாரக்கடவுள் வந்தபின் அவரை அங்கு நிறுத்திவிட்டுக் கயிலைக்குப் புறப்பட்டார் கணேசர்.

கயிலையில் திருமால் முதலான எல்லாத் தேவர்களும் கணேசரைத் தொழுதனர். இறைவனையும் தொழுதனர். தாங்கள் அடைந்த துயரங்களையெல்லாம் எடுத்துக் கூறினர். சலந்தரனிடமிருந்து காப்பாற்றும்படியும் வேண்டினர். கணேசரும் தாம் சலந்திரனை வெல்ல முடியாதது பற்றிக் கூறினார். இதன் காரணம் என்ன? சலந்தரன் செய்த நற்றவம்தான் என்ன? என்று கேட்டனர். அதற்கு இறைவன், தவத்தில் மேம்பட்ட கற்புக்கரசியான பிருந்தையை மனைவியாகப் பெற்றதன் காரணமாகவே சலந்தரனுக்கு அழிவில்லை. அவளது கற்பு அழியுமானால் சலந்தரனும் அழிவன் என்று கூறினார். பின்பு திருமாலைப் பார்த்து, நீ முன்பு முப்புரத்துள் போய் அங்கு உருவெடுத்து அழித்ததுபோல் இப்போதும் உருவெடுத்துப் பிருந்தையின் கற்பை அழித்து வா என்று கட்டளையிட்டார்.

சலந்தரபுரத்தில் சென்ற திருமால் புத்ததேசிகத் தன்மை கொண்டு பல சீடர்களோடு உலாவி, மாயையினால் சலந்தரன் உருக்கொண்டு பிருந்தையைப் புணர்ந்தான். இதைச் சலந்தரன் அறியவில்லை. அவன் குமாரக்கடவுளுடன் போர் புரிந்துவந்த சமயத்தில் இறைவன் விடையேறி பூதகணத்துடன் சென்று போர்க்களம் அடைந்தார். இறைவனைப் பார்த்த சலந்தரன், உன் மைந்தரைக் காக்க வந்தனையோ என்று கேட்டான். உடனே இறைவன், அசுரனே! உன்னுடைய வலிமையைக் காணும் பொருட்டு வந்துள்ளேன் என்று கூறி, கால் பெருவிரலால் ஒரு சக்கரத்தைக் கீறினார். அதைப் பெயர்த்து எடுத்து விட்டால் சலந்தரனுக்கு மேம்பட்டவரே இல்லை என்றும் கூறினார். உடனே அசுரன் வேகவேகமாக அதனைப் பெயர்த்து எடுத்துத் தன் தலையில் வைக்க அது சக்கரமாகி அசுரனது உடலைக்கீறி இருபிளவாகப் பிளந்து கீழே தள்ள அவன் அழிந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். பூதர்கள் ஆடி பாடினர். அசுரப்படைகள் அஞ்சி நடுங்கி ஓடின. இந்திரன் முதலானவர்கள் தத்தம் வாழ்விடங்களுக்குச் சென்றனர். விநாயகரும் பூகைலாசமாகிய துறைசை அடைந்திருந்தார். இறந்துபட்ட சலந்தரனது பூதவுடலை அசுரர்கள் எடுத்தேகினர்.

திருமால் பவுத்ததேசிக உருவமாய்ச் சலந்தரபுரத்துக்குச் சென்றதை இனிக் கூறுவோம்.

நாற்பத்து நான்காவது
விட்டுணுவுக்குத் துளபமாலை கொடுத்துப் பிருந்தை மயல் அகற்றிய அத்தியாயம்

1694. நதிமதி முடித்த வேணி நாயகன் கயிலை தன்னுள்
பதிவிர தத்தை மாய்ப்பப் பிருந்திகை பாற்போய் வாவென்று
அதிமது ரச்சொல் பேசி அரனருள் பணித்த வண்ணம்
விதியுறச் செய்வே னென்று விடைகொடு போந்த மாயன். 1

1695. உடலினைச் சீவ ரத்தால் மூடிவேற் றுருவந் தாங்கிக்
கடலுறு மகர தந்தப் பாசிகள் கழுத்திற் பூண்டு
பிடகநூற் சாத்தி ரங்கைப் பிடித்துநற் சீடர் பின்பு
தொடர்வுறச் சென்று மாயப் பவுத்ததே சிகனாத் தோன்றி. 2

1696. சலந்தர புரத்திற் சென்றோர் நதிக்கரை தன்னிற் சார்ந்து
பொலன்தகு மண்ட பத்திற் புகுந்திருந் தங்கு வந்தோர்
கலங்குற மாயை தன்னாற் கருத்தினை மயக்கி முத்தி
இலங்குகைக் கனிபோ லிங்கே காட்டுவ னென்று பேசி. 3

1697. சிலர்கள்தம் குருடு தீர்த்தும், சிலர்தமைச் செவிடு தீர்த்தும்,
சிலர்கள்கால் முடங்கள் தீர்த்தும், சிலருடற் கூன்கள் தீர்த்தும்,
சிலர்களை மூங்கை நீக்கித் திடமுறப் பேசு வித்தும்,
சிலர்பல நோய்கள் தீர்த்தும், சிலர்மதி மயக்கம் தீர்த்தும். 4

1698. வந்திகள் பிள்ளை ஈன மந்தர முரைத்து மைந்தர்க்கு
எந்தநல் மாதர் வேண்டு மெனினும்வந் திணங்கச் செய்து
புந்தியில் விரும்பு கின்ற புருடரை மாதர்க் கீந்து
முந்தமாய்ந் திடுந்தாய் தந்தை முன்வர மயக்கஞ் செய்து. 5

1699. இவ்வணம் புரிதல் கண்டவ் வூரினி லிருப்போர் யாரும்
உய்வணம் புரியு மிக்க குருவென உணர்ந்து நம்பிச்
செய்வண உபதே சங்கள் செப்புமென் றுரைப்ப உங்கள்
மெய்வண அரச னுத்தா ரம்பெற வேண்டு மென்றான். 6

1700. அரசினிங் கில்லை முக்கண் அரனுடன் சண்டை செய்ய
மருவினனென்றா ரன்னோன் மனைவியாகினும்வந் தெம்பால்
உரையுறு முறுதி யோர்ந்தால் அவளுட னுங்கட் கெல்லாம்
பெருகிய வாழ்வுண் டாகு மென்றனன் பேசக் கேட்டோர். 7

1694. மாயன் - திருமால்.

1695. சீவரம் - புத்த சந்நியாசிகள் அணியும் துவர் ஆடை.

1698. வந்திகள் - மலடிகள். 1699. உத்தாரம் - உத்தரவு.

1701. சலந்தரன் மனைவி பாற்சென் றுரைத்திடச் சந்தோ டத்தோடு
இலங்குபொற் சிவிகை யேறி வந்துமுன் இறைஞ்சி நிற்ப
மலர்ந்தசெங் கமலம் போன்ற வதனமு மழகு நோக்கி
அலந்தவ னமுதங் கண்டா லொத்தவட் கறைவ தானான். 8

1702. உன்னுடை மனத்தின் வேட்கை உள்ளன வெல்லா மீவோம்
என்னுடன் கரவில் லாமற் சொல்லென வென்பா லன்பு
மன்னுமெங் கணவன் தேவர் தமைவென்று வருதற் காகப்
பொன்னகர் நீங்கிச் சென்றான் பிரிவினாற் புலம்பு கின்றேன். 9

1703. கதுமென வெற்றி கொண்டு வரும்வகை கருணை செய்யென்று
இதமொடு பேச இப்போ தெய்திடான் மிகுநாட் செல்லு
முதிருமுன் கற்புக் காக விரவிலோர் முகூர்த்தம் வந்து
மதியொடும் புணர்ந்து போக மந்திரஞ் செபிப்போ மென்றான். 10

1704. அப்படி யேயா னுய்யும் வகையரு ளையா வென்ன
மைப்படி கண்ணாய்! நாளை இராமுதல் வந்துபோவான்
செப்பவொண் ணாதிம் மார்க்கம் பிறரறிந் திடிற்சேர் கில்லான்
ஒப்புடன் நீகொள் முன்னை உபதேச மெல்லாம் நீங்க. 11

1705. எம்முடை மதத்துப் போதி நாதன்மந் திரத்தை யெண்ணி
மெய்ம்மைகொண் டிருப்போ வென்று விடைகொடுத் தனுப்பச் சென்றாள்
அம்முறை இரவு தோறும் அவள்புரு டனைப்போற் சென்று
கொம்மைமென் முலையாள் போகங் கோவிந்தக் கள்வன் கொண்டான். 12

1706. பிறுந்தியின் கற்பை மாயன் பேதிப்பச் சலந்த ரன்போல்
அறிந்திடா வகைபு ணர்ந்து மாயைகொண் டமரும் நாளில்
மறந்திகழ் செருக்க ளத்தின் மதிமுடி யரன்செய் நேமி
செறிந்திரு பிளவாச் செய்த தேகத்தைச் சுமந்து கொண்டு.13

1707. மாண்டிடு மசுரர் போக மற்றவர் வருதல் நோக்கிப்
பூண்டகு பதியி லுள்ள புருடர்பெண் பால்மற்று யாரும்
கூண்டெழும் அழுகைச் சத்தங் குழறியே எங்கும் ஆர்ப்பக்
காண்டனள் வெளியில் வந்து பிருந்திகா தலன்கா யத்தை. 14

1706. பிறுந்தி - பிருந்தை. செருக்களம் - போர்க்களம்.

1708. தேவர்வஞ் சகத்தால் மாயைத் திருமறு மார்பன் வந்து
பாவகம் வேறு செய்து பவுத்ததே சிகனா யேய்த்துக்
காவலும் அழித்து நந்தம் கற்பையும் அழித்துக் காதற்
கோவையும் அழித்தான் முன்செய் கொடுமையிப்
படியோவென்று. 15

1709. கருத்தினி லோர்ந்து வீந்த சலந்தரன் களேப ரத்தைப்
பொருத்துமிந் தனத்தி லேற்றி நெருப்பினைப் புணர்த்தித்
தானும்
அருத்தியி னுடனே கூட அனல்புகுந் தவிர்ந்தாள் பிருந்தி
உருப்புணர் மாய னத்தை யறிந்துள மயக்க முற்று. 16

வேறு

1710. தன்னையு மறந்து திருவையு மறந்து
தரைமகள் தன்னையும் மறந்து
மன்னும்வை குந்த வாழ்வையு மறந்து
மதிமுடி மன்னையும் மறந்து
பொன்னுறு பிருந்தி கொங்கையை நினைந்து
பொருமதன் கணையினால் மயங்கி
அன்னவள் உடலம் வெந்தழி சுடலை
அடலையிற் கிடந்துருண் டனனே. 17

1711. இன்னணந் திருமால் சுடலையிற் கிடப்ப
எகினவா கனனுமிந் திரனும்
பொன்னுல குறுந்தே வருந்திரு மகளும்
பூதல மாது மற்றுள்ள
கன்னல்மென் மொழிசேர் அரம்பையர் பலரும்
கருமுகில் வண்ணனைத் தேடி
மன்னுபூம் பொழில்சூழ் சலந்தர புரத்தில்
வந்தெங்கும் நோக்கிய பொழுது. 18

1712. அப்பதி மருவும் அசுரர்கள் அரசன்
அன்றியே யிருப்பதற் கஞ்சி
ஒப்புட னெங்கு மிரிந்ததாற் பேயும்
ஓரியும் கூகையும் நிறைந்து

1708. திருமறு மார்பன் - திருமால். காதற்கோ - கணவன் சலந்திரன்.

1711. எகினவாகனன் - பிரமன்.

1712. ஓரி - நரி. கூகை - பருந்து.

மொய்ப்பதை நோக்கி நிற்கும்விண் ணவர்க்கு
முன்புமா லுடன்வரு சீடர்
எய்ப்பொடு மெதிர்ந்து சுடலையிற் கிடக்கும்
எழில்முகில் வண்ணனைக் காட்ட. 19

1713. அனைவருங் கண்டு வணங்கிட வொன்றும்
அறிந்திடா உன்மத்தர் போல
நினைவொன்று மின்றிப் பிருந்தியின் வடிவாய்
நிமலனோ டிரண்டறப் புணர்ந்து
தனைமறந் திருக்குஞ் சாக்கிரா தீதத்
தன்மையர் போற்பொடிப் புனைந்து
புனல்விழி வழிய மௌனமா யிருந்தான்
புங்கவர் கவலையுற் றிரங்கி. 20

1714. என்செயக் கடவோ மிப்பெரு மயக்கம்
இடர்வரும் நாடொறும் புரந்து
தன்சர ணளிக்கும் பிப்பிலா ரணியத்
தாணுவே போக்கிட வேண்டும்
பொன்சடை முடியான் அஞ்செழுத் தோதிப்
புகழ்வமென்று யாவரும் போற்ற
மின்செய்நுண் ணிடைஇந் திரையும்பார் மகளும்
மிகுதியுங் கிலேசமுற் றமுது. 21

1715. ஒப்பிலா முலையே! எங்கள்மங் கலநாண்
உதவென இரந்திரந் துரைத்துப்
பொற்பொடு முளத்தில் நினைந்துகை குவிப்பப்
புவிக்கெலா முயிர்க்குயி ராகும்
துப்பித ழுமையாள் அறிந்தணைத் திருந்த
சுந்தரக் கருணைநா யகனை
அற்புதத் துணைத்தாள் வணங்கிமால் மயக்கம்
அகற்றுதற் கிரங்கென உரைத்தாள். 22

1716. திருவுள மிரங்கி மாசிலாக் கருணைச்
செழுஞ்சுடர் தேவியி னுடனே
பொருவிடை மேற்கொண் டடியவர் சூழப்
பொருவிலா வியம்பல முழங்கக்
குருமணித் தரளத் தண்குடை நீழற்கீழ்க்
கோதறு சுருதிவாழ்த் தெடுப்பக்
கருமுகில் வண்ணன் கிடந்திடுஞ் சுடலைக்
காட்டின்மேற் ககனத்திற் தோன்ற. 23

1713. உன்மத்தர் - பைத்தியம்.

1717. செஞ்சடை முடியும் அருள்பொழி விழியும்
திருவெணீ றிலகுநல் நுதலும்
நஞ்சணி மிடறும் சங்கவெண் குழையும்
நகுசிறு முறுவல்வாள் முகமும்
அஞ்சல்செய் கரமும் வரதமும் மழுமான்
அமர்ந்தபங் கயமும்நூல் மார்பும்
பஞ்சடி உமையாள் பாகமும் கமல
பாதமும் தெரிவுறக் கண்டார். 24

1718. அரகர வெனநின் றார்த்தவ னியின்மேல்
அயன்முதல் அமரர்கள் விழுந்து
சரவண பவனை ஈன்றருள் பரம
தாமரை நாயகி கொழுநன்
மருள்மய லகற்றி ஆண்டரு ளென்று
வணங்கிட வளர்சடை முடிக்குட்
கருவென முன்னாட் சராசரம் படைக்கக்
கட்டிவைத் திட்டவித் ததனில். 25

1719. பூகயி லாசத் துறைசைவாழ் கருணைப்
புண்ணியன் இருவிதை யெடுத்துத்
தாகமாய்ப் பிருந்தி வெந்திடுஞ் சுடலைச்
சாம்பரிற் போட்டுவா னதிநீர்
ஓகையோ டிறைப்ப முளைத்தொரு வித்திவ்
உலகெலாம் போற்றும்ஆ மலக
வாகுறு வனமாய்ச் சிறப்பவோர் வித்து
வளர்துழாய் வனத்திர ளாகி. 26

1720. பிறுந்திகை தேக வாசமாய் மணத்துப்
பிராணவா யுவின்வழி முகுந்தன்
சிறந்தநா சியினிற் புகுதலும் விழித்துச்
சிவன்தனைக் கண்டுவீழ்ந் திறைஞ்சி
மறந்தநல் லுணர்வும் பெற்றுள முருகி
வணங்கிடுமுன் நிற்பமா யனைப்பார்த்து
உறைந்துயிர் முழுதும் நிறைந்திடுங் கருணை
உம்பர்நா யகனிவை புகல்வான். 27

1721. மலர்மகள் பூமி தேவிபோற் துளசி
மங்கையும் உனக்கொரு மனையாய்
நலமிகு போகம் புரிந்திடப் புயத்தி
னாடொறுந் தாமமாய்ப் புனைந்து

நிலமுறு பிருந்தி காவனப் பிரிய
னாகிநீ நெல்லிமா வனத்திற்
புலனுறு வனபோ சனமெவர் செயினும்
புண்ணியங் கொடுத்துவாழ்ந் திடுதி. 28

1722. துளபமா லிகைநந் தமக்கணிந் திடலாம்
துலங்குகூ விளமுனக்கு யாரும்
உளமகிழ்ந் தணியத் தகாதுநன் னெல்லி
உறுவன போசனம் நமக்கும்
களியுறு மனத்தாற் கார்த்திகைக் கதிர்வா
ரத்தினிற் கருதியார் செயினும்
விளைவுறு வனவெ வாமகிழ்ந் தளிப்பேம்
ஆதலால் விண்ணவ ரொடும்நீ. 29

1723. ஆவடுதுறையாம் நகரில்வந் தினிய
அருள்மிகு கார்த்திகைத் திங்கள்
மேவிடு சோம வாரம்நல் விரதம்
விதிப்படி இயற்றியத் தலத்திற்
தாவிலா இலிங்கப் பிரதிட்டை புரிந்து
தனித்தனி இரவெலாம் பூசித்து
ஓவறு வனபோ சனங்களுஞ் செய்மின்
என்றுரைத் துறும்விடை யுகைத்து. 30

1724. போதியம் பலத்துச் சினகர மதனுட்
புகுந்தனன் உமையொடும் புனிதன்
நீதியாய் அவன்சொல் வழாஅதுளம் நினைந்து
நீலமா லயன்திசா திபர்கள்
நாதர்வாழ் திருவா வடுதுறை மருவி
நற்சிவக் குறிபல அமைத்து
மேதகு சோம வாரபூ சனைநல்
விதிமுறை செயும்வகை புகல்வாம். 31

நாற்பத்து நான்காவது
விட்டுணுவுக்குத் துளபமாலை கொடுத்துப் பிருந்தை மயல்
அகற்றிய அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1724

திருச்சிற்றம்பலம்

44. விட்டுணுவுக்குத் துளபமாலை கொடுத்துப் பிருந்தை மயல் அகற்றிய அத்தியாயம் (சுருக்கம்)

கயிலையில் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட திருமால் சலந்தரபுரம் வந்தார். புத்த சந்நியாசி போல ஆடை அணிந்து பௌத்த ஆகம நூலாகிய பிடக சாத்திரத்தைக் கையிலேந்திக் கொண்டு, சீடர்கள் பலர் பின்தொடர வந்தார். அங்குள்ள ஒரு நதிக்கரையிலுள்ள மண்டபத்தில் அமர்ந்து, அனைவருக்கும் முத்திநெறி காட்டுவதாகவும் கூறி, கூன், குருடு, செவிடு, மூடம், ஊமை இவை போன்றவைகளையும், இன்னும் பற்பல நோய்களையும், அறிவு மயக்கத்தையும் தீர்த்து வந்தார். மலடிகள் பிள்ளை பெறும்படிச் செய்தார். இளைஞர்கள் விரும்பும் பெண்களை அடையுமாறு செய்தார். பெண்கள் விரும்பும் ஆடவர்களை அவர்களுக்குக் கொடுத்தார். இறந்தவர்களை மீண்டும் உயிருடன் வரச்செய்தார். இவற்றை யெல்லாம் கண்ட அவ்வூர் மக்கள் அவரைத் தங்கள் குருவாக எண்ணி வணங்கினர்.

இப்புத்த சந்நியாசியிடம் உபதேசம் கேட்க விரும்பிய மக்களிடம் அவர், அரசினது உத்தரவு பெறவேண்டும் என்று கூறினார். அதற்கு அவர்கள், அரசன் முக்கண்ணனாகிய சிவபிரானுடன் போர் செய்யப் போயுள்ளது பற்றிக் கூறினர். உடனே புத்த சந்நியாசி, சலந்தர மன்னனது மனைவியாவது நேரில் வந்து பேசினால் அனைவருக்கும் நல்வாழ்வு உண்டாகும் என்று கூறினார். அவர்களும் சென்று பிருந்தையிடம் செய்தியைக் கூற அவளும் சிவிகை ஏறி வந்து புத்த சந்நியாசியை வணங்கினாள்.

பிருந்தையைக் கண்ட புத்த சந்நியாசி, அவள் மனத்தில் உள்ள விருப்பங்களைக் கூறுமாறு கேட்டார். அதற்கு அவள், போருக்குச் சென்றுள்ள தன் கணவன் விரைவில் வெற்றிபெற்று வரும்படியாகக் கருணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். உடனே புத்த சந்நியாசி, உன் கணவர் இப்போது வரமாட்டார். நீண்ட நாட்களாகும். ஆனால், உனது கற்பிற்காகத் தினந்தோறும் இரவிலே ஒரு முகூர்த்த நாழி வந்து உன்னுடன் சேர்ந்து இன்பத்தை அனுபவித்துப் போக மந்திரம் செபிக்கிறோம் அல்லது உபதேசம் செய்கிறோம் என்று கூறினார். இதை யாரிடமும்

சொல்லக்கூடாது என்றும் கூறினார். அவளும் அவ்வாறே போனாள்.

இவ்வாறு கூறியதற்கேற்பத் திருமாலானவர் தினமும் இரவில் அவள் கணவனைப்போலப் போய் அவளுடன் கூடி இருந்து வந்தார். இவ்வாறு இருக்கையில், போர்க்களத்தில் சக்கரத்தால் மாண்ட சலந்தரனுடைய உடலைச் சுமந்துகொண்டு சில அசுரர்கள் வந்தனர். இதனைக் கண்ட பிருந்தை மிகுந்த துயரம் கொண்டாள். தேவர்களது வஞ்சத்தால் தான் ஏமாற்றப்பட்டதையும் திருமாலானவர் தன் கணவர் போல வந்து தன்னுடைய கற்பை அழித்ததையும் நினைந்து நினைந்து அரற்றினாள். சலந்தரனது உடலைத் தீயிலிட்டுத் தானும் உடன்கட்டை ஏறினாள். பிருந்தையினிடம் கொண்ட மயக்கம் திருமாலுக்கு மேலும் தீவிரமானது. வைகுந்த வாழ்வையும் மறந்து, அவள் இறந்த சுடுகாட்டிலே அவளது சாம்பலில் கிடந்து உருண்டார். திருமாலைத் தேடிவந்த பிரமன், இந்திரன், திருமகள், பூதேவி மற்றும் தேவர்கள் அவருடைய நிலையைக் கண்டு வருந்தினர். பிப்பிலாரணிய இறைவனிடம் முறையிட்டனர்.

இலக்குமியும் பூமிதேவியும் தங்கள் திருமாங்கல்யங்களைக் காக்கும்படியாக ஒப்பிலா முலையம்மையிடம் வேண்டினர். அம்பிகையின் அருட்கண் பார்வையின் காரணமாக மாசிலாமணிப்பெருமானும் திருமாலுக்கு மயக்கம் தீர்த்து அருளினார். தேவர்கள் துதி பாடி மகிழ்ந்தனர்.

இறைவன் தன்னுடைய சடைமுடிக்குள்ளே முன்பு அண்டசராசங்களைப் படைப்பதற்காகக் கட்டி வைத்திருந்த இரண்டு விதைகளைப் பிருந்தை வெந்த சுடலைச் சாம்பலில் போட்டார். கங்கை நீரைப் பாய்ச்சினார். அவ்வித்துக்களில் ஒன்று நெல்லிவனமானது. மற்றொன்று துளபக் காடானது. துளபக் காடானது பிருந்தையினது உடல் வாசனையான மணத்துடன் பிராண வாயுவின் வழியாகத் திருமாலினுடைய நாசியிலே புகுந்ததும் அவர் விழித்தெழுந்தார். இறைவனைக் கண்டு வீழ்ந்து வணங்கினார். பின்பு, இறைவன் திருமாலைப் பார்த்துப் பின்வருமாறு கூறியருளினார்.

முகுந்தா! உமக்கு இலக்குமியும் பூமிதேவியும் மனைவியாக இருப்பது போன்றே இனித் துளபமங்கையும் ஒரு மனைவியாகி போகம் அனுபவிக்க உமது தோள்களிலே நாள்தோறும்

இருப்பாள். துளபமாலையை அணிந்து பிருந்திகா வனப் பிரியனாய் நீ இருப்பாய். நெல்லிவனத்திலே யாரொருவர் போஜனம் செய்கின்றார்களோ அவர்களுக்கு நீ புண்ணியத்தைக் கொடுத்து வாழ்வாயாக! மேலும், துளபமாலையை எமக்கு அணிவிக்கலாம். ஆனால், வில்வமாலையை உமக்கு யாரும் அணிவிக்கக்கூடாது. நெல்லிவனத்தில் கார்த்திகை மாதத்து ஞாயிற்றுக்கிழமையில் வனபோசனத்தை யார் செய்யினும் எல்லாப் பேறுகளையும் அவர்களுக்கு அளிப்போம். எனவே, தேவர்களுடன் ஆவடுதுறை வந்து, கார்த்திகை சோமவார விரதம் இருந்து, இலிங்கப்பிரதிட்டை செய்து பூசிக்கவும் எனக் கூறியருளினார். பிறகு, இறைவன் போதியம்பலத்தே புகுந்தார்.

திருமால், பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் இத்துறைசை மாநகர் வந்து சிவலிங்கங்களைப் பிரதிட்டை செய்து சோமவார பூசை செய்த வகையை இனிச் சொல்வோமாக.

நாற்பத்தைந்தாவது
தேவர்கள் கார்த்திகைத் திங்கள் சோமவார பூசை செய்த அத்தியாயம்

1725. கருடவா கனமீ தேறிநற் துளபக்
கண்ணிநீள் முடிபுயங் கரந்தோள்
மருவுறப் புனைந்து திருவொடு மிகுபார்
மகளொடு மாயவன் மருவப்
பொருவறும் எகின மீதிலம் புயத்தார்
பூண்டுநா மகள்திரு வாணி
அருள்மிகு காயத் திரியொடும் பிரமன்
அருட்சதுர் முகத்தொடும் அணுக. 1

1726. வெண்ணிறக் கரட மும்மத நால்வாய்
விளங்குகிம் புரிமருப் போடை
நண்ணுநல் நுதல்சேர் புகர்முகத் தயிரா
வதமிசை நறைகமழ் தருவின்
கண்ணிதோள் மருவப் புலோமிசை யுடன்மெய்க்
கண்களோ ராயிரம் விளங்கப்
புண்ணியப் புரவி மகஞ்சதம் புரிந்த
புரந்தரன் சுரரொடும் புகுத. 2

1727. துங்கவெங் கனலோன் தகர்மிசை யிவர்ந்து
சுதாசுவா காவெனும் இருநல்
மங்கைய ருடனே வரயமன் பகட்டின்
மனைவியோ டெழவ்வி நிருதி
செங்கணார் கூளிப் புயமிசைத் தோன்றத்
திகழ்சுறா மீதினில் வருணன்
பொங்குசீர் மனையோ டுறவளி கலையிற்
போந்திடத் தனதன்புட் பகத்தில். 3

1728. தானவர் சூழத் தகுவிய ருடனே
சாரசு சானர்பன் னொருவர்
மானவெள் விடைமே லிவர்ந்துருத் திரநல்
மடந்தைய ருடன்வர மற்றும்
ஏனைய முப்பால் மூன்றுவர்க் கத்துள்
இயைந்திடு தேவர்கள் யாரும்
ஆனபொன் விமான மூர்ந்துநற் துணையாம்
அரம்பைய ருடன்மிகுந் தடர. 4

1729. கற்பகத் தருவும் காமதே னுவும்முன்
கண்வழி ஏவல்கேட் டுடனே
பொற்பொடுஞ் சூழ்ந்து வரமிகு குழாமாய்ப்
புவியினிற் போந்துமா யூரத்து
அற்புதத் துலாகா விரியின்முப் பானா
ளறுபதி னாயிரங் கோடி
நற்பெருந் தீர்த்தத் துடன்வரு பொன்னி
நதிப்புன லாடியங் கமர்ந்து. 5

1730. மயிலுரு வாய்ப்பூ சனைபுரி அஞ்சல்
நாயகி மருவுமா யூரக்
கயிலைநா யகனைத் தொழுதுபோந் தினிய
கடவுளர் யாவரு முயர்பொன்
எயில்புடை சூழ்நற் பிப்பிலா ரணியத்
தின்பொடு மருவியுள் மகிழ்ந்து
குயில்மொழி ஒப்பி லாமுலை யுடன்வாழ்
கோதிலா மணிபதம் பணிந்தே. 6

1731. நலமிகு கார்த்தி கைத்திருச் சோம
வாரநல் விரதசங் கற்பம்
நிலவுமன் பொடுபூண் டவரவர்க் கிடங்கள்
நிறைமணி மலர்விதா னத்தால்

1727. வளி - வாயு. தனதன் - குபேரன்.

இலகெழில் விளங்கச் செய்துபூ சனைகட்கு
ஏற்றிடு முபகர ணங்கள்
அலகிலா வகைகொண் டரிமுதற் தேவர்
விசுவகன் மனைஅழைத் தன்பாய். 7

1732. சிற்பசாத் திரத்தின் விதிப்படிக் கினிய
சினகரஞ் சிவக்குறி பலவும்
பொற்பொடும் இயற்றென் றுரைத்தவ னமைத்த
பொலிவுகண் டுளமிகக் களித்துக்
கற்புறு மனைவி மாரொடும் புலரிக்
காலையிற் காவிரி படிந்து
தற்பண முதலா கியநிய மங்கள்
தவமலிந் திடப்புரிந் தெவரும். 8

1733. தலைத்திருச் சோம வாரத்தி னன்று
தகுமுப வாசமா யிமைய
மலைக்கொடி பதத்தை நினைந்துகோ முத்தி
மடுவினில் மாலைநீ ராடி
நிலைத்தசீர்ப் பிரகற் பதியுப தேசம்
நிறைவொடு நியமமுற் றினிய
பலத்தினை யுதவு மந்திரக் கிரியா
பாவனை விதிகள்தப் பாமல். 9

1734. அனாதிமுத் தீச மாசிலா மணியார்க்கு
அமைநிவே தனமபி டேகம்
வினாவுறு மாதி சைவவே தியரால்
விளங்குநான்கு யாமத்தும் விழித்தங்கு
இனாவக லுபசா ரத்தொடும் பூசித்
திடவிதித் தாலய மெங்கும்
பொனார்மணித் தீப மெண்ணிலாக் கோடி
பொலிபொடும் விளங்கிட அமைத்து. 10

1735. தெரிசனை செய்து வந்தவ ரவர்செய்
சினகரங் களிற்சிவ லிங்கம்
மருவிடத் தாபித் தகும்பொனீர்க் கும்ப
மந்திர வோமநல் வளத்தோடு
உரிமைகொள் உபசா ரத்தொடு மியற்றி
உம்பர்நா யகர்க்குள மகிழப்
பரிவொடும் அபிடே கங்கள்செய் தினிய
பசுங்கள பந்திமிர்ந் தணிகள். 11

1736. நவமணி குயிற்றும் பொற்பணித் திரளால்
நலமுற அலங்கரித் தினிய
கவின்மிகு பாரி சாதமந் தாரக்
கண்ணிகள் சூடிநல் லமுதச்
சுவையுறு நிவேத னங்களை யளித்துத்
தூபதீ பங்கொடுத் தெமது
பவமறுத் தருளென் றருமறைத் துதிகள்
பாடிவீழ்ந் திறைஞ்சி அர்ச்சித்து. 12

1737. முதிர்விருச் சிகத்திற் தினம்பகற் பூசை
முடித்துமற் றுந்தினங்கள் நான்கும்
இதமுற முதற்றிங் களிற்செயும் பணிபோல்
இரவுநாற் சாமமும் பூசித்து
அதிரசத் துடன்நல் அமுதபோ சனம்ஆ
மலகம்நீ ழலிற்சிவ னடியார்க்கு
உதவிஇவ் வண்ணம் அரிஅயன் மகவான்
உம்பர்க ளனைவரும் உவந்து. 13

வேறு

1738. கார்த்திகைச் சோம வாரக் கவினுறு விரதம் பூண்டு
கூர்த்தமெய் யுணர்வால் விண்ணோர் கோமுத்தீச் சுரத்தின் ஞான
மூர்த்தியைப் பூசை செய்த முதிர்சிவ லிங்கம் மேவும்
சீர்த்திகொள் ளிடங்கள் சொல்வேம் கேளென முனிவன் செப்பும். 14

1739. நான்மறை நான்கி லிங்கம் நலங்கொள்கோ முத்தி தீர்த்தப்
பான்மிகு திசைகள் நான்கிற் பரிவொடர்ச் சித்த தாகும்
தேன்மலி பத்மி தீர்த்தத் தருகுகீழ்த் திசையிற் செங்கேழ்
ஆன்மலி யருக்க ரோர்பன் னிரண்டுறற் கன்பு செய்தார். 15

1740. அத்திருத் தீர்த்தத்திற்கு நிருதிமூ லையிலா தித்த
மெய்த்திருத் தீர்த்தஞ் சந்திர தீர்த்தமுண் டதன்பால் மிக்க
உத்தம மான ஏகா தசருத் திரர்கள்தாம்பூ
சித்தநல் இலிங்க மான சிவம்பதி னொன்றுண் டாமால். 16

1741. ஏதமில் மூல லிங்கத் தினுக்குமேற் கிடப தீர்த்தம்
ஆதியி லுளதா மாங்கே அமர்ந்தட்ட வசுக்கள் போற்றும்
நீதிசேர் இலிங்க மெட்டும் நிறைந்திடு மதற்குப் பூர்வ
மாதவ ரெழுவர் பூசை மாலிங்க முண்டா மப்பால். 17

1742. அக்கினி திக்கி லிந்திர தீர்த்தமுண் டதனி லோர்பால்
மிக்கஇந் திரன்பூ சித்த விமலருண் டதனைச் சூழத்
திக்குபா லகர்கள் பூசைச் சிவமுறு மதற்கு மேற்கே
துக்கமி லாத வேதன் பிரதிட்டை தோன்று மன்றே. 18

1743. அதற்குமேற் காக மால்பூ சித்தநல் லமலன் மேவும்
கதித்தமுப் பால்முக் கோடிக் கடவுளர் பூசை லிங்க
மதித்திடி லினிய முத்தித் தலமெங்கு மருவும் பார்க்கில்
உதித்திடு மணல்க ளெல்லாம் உறுசிவ லிங்க மாமால். 19

1744. இச்சிவ லிங்கந் தோறும் எட்குறு வெண்ணெய் போல
நச்சுறு களத்து மாசி லாமணி நாதன் மேவி
அச்சுறும் அமரர் பூசை அன்பொடும் உவந்து வேண்டும்
மெய்ச்சுக முடன்நற் போக விதமெலாம் அவர்கட் கீந்தான். 20

1745. செங்கம லத்தின் மேவு திசைமுகக் கடவு ளாதி
புங்கவர் மகிழ்ந்து நாதன் பொற்பதம் புகழ்ந்து போற்றித்
தங்குதம் பதிகள் மேவத் தண்துழாய் முகுந்தன் மட்டும்
மங்கைய ரிருவ ரோடு மனங்கசிந் துருகி நிற்ப. 21

1746. பூசித்த சிவலிங் கத்திற் பூகயி லாச நாதன்
தேசுற்று வளரொப் பில்லாத் திரள்முலை யொடுமுன் தோன்றி
வாசித்த துளபத் திண்தோள் மாயனை மகிழ்ந்து நோக்கி
நேசித்த உனக்கு வேண்டும் வரமென்கொல் நிகழ்த்துகென்ன. 22

1747. மலர்மகள் கொழுநன் கேட்டு மலரடி வணங்கி வாழ்த்தி
நலமிகு செம்பொற் தியாக நாயகா! மாசி லானே!
சலமிகு சலந்த ரன்தன் னுடலினைத் தடிந்த வாழி!
உலகுகாத் திடுதற் கென்பால் உதவென இரந்து கேட்ப. 25

1748. கேட்டருட் கோமுத் தீசர் கிருபையோ டரியை நோக்கிப்
பாட்டளிக் கமலப் போதா யிரங்கொடு பரசி நம்பொற்
தாட்டுணைக் கமல மீது சாத்திநல் மிழலை தன்னுட்
தேட்டமுற் றெமைப்பூ சித்தால் அருளுது மென்று செப்பி. 24

1749. இலிங்கத்தின் மறைந்தான் அப்போ திறைஞ்சியுள் மகிழ்ந்து மாயன்
துலங்குற்ற வயின தேயன் தோள்மிசை போந்து மிக்க
நலம்பெற்ற மிழலை மேவி நாதர்பொற் தாளின் மீது
தலம்பெற்ற கமலப் போது சகத்திர மெடுத்தர்ச் சித்து. 25

1747. மலர்மகள் கொழுநன் - திருமால். 1748. மிழலை - திருவீழிமிழலை.
1749. வயினதேயன் - கருடன்.

1750. பூசனை செயுநாள் தன்னில் ஒருபகற் புனிதன் மிக்க
வாசனைக் கமல மொன்றை மறைத்துமற் றப்போ தெங்கும்
தேசுறு மூலகி லுண்டாம் படிதிரு வுளத்தி லெண்ண
வாசறு முகுந்த னத்தை அறிந்திடா தொருபூ வின்றி. 26

1751. கரையிலா அன்பு பொங்கும் கருத்தினாற் றனது கண்தா
மரையென உணர்ந்தோர் கண்ணை மலர்கையா
லிடந்து நாதன்
குரைகழற் பதத்திற் கஞ்சம் ஆயிரங் குறையா வாறு
விரைவொடுஞ் சாத்திப் போற்ற விமலர்முன் மகிழ்ந்து
தோன்றி. 27

1752. கைமல ருச்சி மீது கவினுறச் சாத்தி வேலை
மைமலி களத்த னுள்ளம் மகிழ்ந்துசக் கரமாற் கீயக்
கொய்மலர்த் துளபத் திண்தோள் குரிசில்பெற் றுவகை மிக்கு
மெய்மயிர் சிலிர்ப்ப வீழ்ந்து விரைமலர்த் தாள்கள்
போற்றி. 28

1753. அருள்விடை பெற்று நேமி அங்கையிற் றரித்துப் போந்து
பெருகுபாற் கடலிற் பின்னை யொடும்பெரு வாழ்வு பெற்றுக்
கருதலர் பகைகள் மாய்த்துக் களைகணா யுலகங் காத்தான்
திருவிழி மிழலை யாகிச் சிறந்ததப் பதியின் பேரும். 29

1754. எனமுனி யுரைப்பக் கேட்டுள் இறும்பூது பெருகி மிக்க
சனகனா மிதுலன் சொல்வன் சக்கரம் இதற்கு முன்னம்
கனமுறு கரிய மேனிக் கண்ணனுக் கிலையோ வென்று
வினவிடத் தவுமி யப்பேர் மிகுமுனி யுரைப்ப தானான். 30

1755. திரிநய னன்தாட் கன்பாஞ் சிவமுனி ததீசி யோடும்
அரியிகல் கொண்டோர் காலம் அமர்புரிந் திகல மாலை
வரமுனி பிடித்த டித்து மருவிறை மருவு லாவும்
திருமலி கமலை நாதா நீயலை சிவனே யென்று. 31

1756. மாலெறிந் திட்ட நேமிப் படையினை வயிற்றில் வைத்தோர்
ஆலவெம் படைப டைத்தன் றரிபட வெறிந்து பின்னும்
சீல மோ டெழுப்ப அந்நாட் சிவமுனி யெனுந்துர் வாசன்
நீலமார் பிடைமி தித்து நிறுத்துகாற் றழும்பு தன்னால். 32

1757. திருமறு மார்ப னாகித் திருமகள் பிரியா வாறு
பரமுனர் முனிவன் பாதம் பட்டிடஞ் சுத்த மென்று
கருதிமார் பினிலி ருத்திக் களித்தனன் அவன்கை நேமி
அரியமா தவன்முன் னுண்டங்கு அழிந்ததா லாழி யின்றி. 33

1753. திருவிழிமிழலை - திருவீழிமிழலை. 1755. திரிநயனன் - முக்கண்ணன்.

1758. **இருந்தனன் நெடுநாட் கண்ணை இடந்தப்பி அரன்தாள் பூசித்து**
உரம்பெறு திகிரி நாதன் உதவிடப் பெற்றா னென்று
பெருந்தவ முனியு ரைத்துப் பின்னுமம் மிதுலன் கேட்ப
அருந்தவம் புரிந்த செவ்வாய்க்கு அருள்புரி பெருமை சொல்வான். 34

நாற்பத்தைந்தாவது
தேவர்கள் கார்த்திகைத் திங்கள் சோமவார பூசை செய்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் *1758*
திருச்சிற்றம்பலம்

45. தேவர்கள் கார்த்திகைத் திங்கள் சோமவார பூசை செய்த அத்தியாயம் (சுருக்கம்)

திருமால் இலக்குமி மற்றும் பூமாதேவியோடு கருட வாகனத்தில் ஏறியும்; நான்முகன் நாமகள், வாணி, காயத்திரி ஆகியோருடன் அன்ன வாகனத்தில் ஏறியும்; இந்திரன் இந்திராணியுடன் தன் அயிராவதத்தில் ஏறியும்; அக்கினி தேவன் சுவதா சுவாஹா என்னும் இரண்டு மங்கையர் களுடனும்; இயமன் தன் மனைவியுடன் எருமைக்கடாவில் ஏறியும்; நிருதி கூளியின் தோள்மீது ஏறியும்; வருணன் சுறா மீது ஏறியும்; வாயு கலையின் மீதேறியும்; குபேரன் புட்பக விமானத்தில் ஏறித் தானவர்கள் புடைசூழ மனைவியருடனும்; பன்னிரு ஈசானவர் உருத்திர மங்கையருடன் வெள்விடை மேலேறியும்; ஏனைய முப்பத்து மூன்று கோடி தேவர்களும் அரம்பையர்களுடன் பொன் விமானங்களில் ஏறியும்; ஆக அனைவரும் பூமியில் வந்து சேர்ந்தனர்.

பூமியில் வந்த அனைவரும் மாயூரத்திலுள்ள துலாக் காவிரியில் நீராடி, மயிலுருவான அஞ்சல்நாயகியுடன் கூடிய இறைவனைத் தொழுதனர். பின்பு, பிப்பிலாரணியத்தை அடைந்தனர். அங்கு, ஒப்பிலா முலையம்மையுடன் திகழும் மாசிலாமணியீசரை வணங்கினர். கார்த்திகை மாதத்துச் சோமவார விரத சங்கற்பம் செய்து, மலர் அலங்காரங்கள் பல செய்து, பூசனைக்கு வேண்டியவற்றையெல்லாம் அரியும் பிரமனும் செய்தனர். பிறகு, விசுவகன்மனை அழைத்து,

சிற்ப சாத்திர முறைப்படி கோபுரம் சிவலிங்கம் போன்றவற்றை அமைக்கச் செய்தனர்.

விசுவகன்மா செய்தளித்ததைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். அனைவரும் தத்தம் துணைவியருடன் நீராடி, நியமங்கள் செய்தனர். முதல் சோமவார தினத்தன்று உபவாசத்துடன் அம்பிகையின் திருவடிகளை நினைந்தனர். மாலையில் கோமுத்தித் தீர்த்தத்தில் நீராடினர். பிரகஸ்பதியின் உபதேசப்படி நியமத்துடன், மந்திரம், கிரியை, பாவனை ஆகியவற்றை முறையாகச் செய்தனர். மாசிலாமணிப் பெருமானுக்கு அபிடேகம், நிவேதனம் ஆகியவற்றை ஆதிசைவ வேதியர்களால், நான்கு யாமத்தும் கண்விழித்து உபசாரத்தோடும் பூசனை செய்விக்கப்பட்டது. கோவில் முழுவதும் அழகிய தீபங்களால் அலங்கரித்தனர். அவரவர் தாபித்த சிவலிங்கங்களுக்கு தாபனம், ஓமம் முதலிய உபசாரத்தோடும் இறைவன் திருவுளம் மகிழச் செய்தனர்.

இறைவனுக்கு அபிடேகம் செய்து களப கத்தூரிகளையும், ஆபரணங்களையும் அணிவித்தனர். திவேதனம் அளித்து, தூபதீபம் காட்டினர். பிறவிநோய் தீர்க்க வேண்டினர். துதிபல பாடி அருச்சனைகள் செய்தனர். இவ்வாறே மற்ற நான்கு சோமவாரங்களிலும் பூசித்து, அதிரசத்தோடு நல்ல அமுத போசனத்தையும் நெல்லிவன நிழலில் சிவனடியார்களுக்கு அளித்து மகிழ்ந்தனர்.

இவ்வாறு, திருமால், நான்முகன் முதலானவர்கள் மகிழ்வுடன் பூசித்த சிவலிங்கம் பொருந்தியுள்ள இடங்கள் மிகச் சிறப்பானவையாம். அவையாவன:

நான்கு வேதங்களும் பூசித்த நான்கு இலிங்கங்கள் கோமுத்தித் தீர்த்தத்தின் நான்கு திக்குகளிலும் உள்ளன. பத்மி தீர்த்தத்தின் பக்கத்தில் கீழ்த்திசையில் பன்னிரண்டு சூரியர்களும் பூசித்த பன்னிரண்டு இலிங்கங்கள் உள்ளன; அந்தப் பத்மி தீர்த்தத்திற்கு நிருதிமூலையில் ஆதித்த (சூரிய) தீர்த்தமும், சந்திர தீர்த்தமும் உள்ளன; அவைகட்குப் பக்கத்தில் ஏகாதச (பதினோரு) உருத்திரர்களால் பூசிக்கப்பெற்ற இலிங்கங்கள் பதினொன்றும் உள்ளன. மூல இலிங்கத்திற்கு மேற்கே இடபதீர்த்தம் என்பது ஆதியிலேயே உள்ளது. அங்கு அட்ட வசுக்கள் பூசித்த எட்டு இலிங்கங்கள் உள்ளன; அவற்றின் கிழக்கே சப்தகன்னிகைகள் பூசித்த மாலிங்கம் உள்ளது.

அக்கினி திசையிலே இந்திர தீர்த்தம் உள்ளது; அதனுடைய ஒரு பக்கத்தில் இந்திரன் பூசித்த இலிங்கம் உள்ளது; அதனைச் சூழ்ந்து திக்குப் பாலகர்கள் பூசித்த இலிங்கங்கள் உள்ளன இவற்றுள் மேற்கே பிரமன் பிரதிட்டை செய்து பூசித்த சிவலிங்கம் உள்ளது; அதற்கு மேற்கே திருமால் பூசித்த இலிங்கம் உள்ளது; முப்பத்துமுக்கோடி தேவர்கள் பூசித்த சிவலிங்கங்கள் இந்த முத்தித் தலமாகிய துறைசையெங்கும் உள்ளன.

இவ்வாறு இத்தலத்துள்ள எல்லாச் சிவலிங்கங்களிடத்திலும் எள்ளினுள் எண்ணெய் இருப்பதுபோலப் பொருந்தி இருந்து தேவர்க்ள் செய்த பூசையினால் இறைவன் உளமகிழ்ந்து அவரவருக்கான சுக வாழ்வுகளை நல்கியருளினார்.

பின்பு, தேவர்கள் அனைவரும் இறைவனைப் போற்றி அவரவர் இருப்பிடம் அடைந்தனர். திருமால், இலக்குமி, பூமாதேவியோடு வணங்கி நின்றார். திருமாலால் பூசிக்கப்பட்ட இலிங்கத்திலிருந்து மாசிலாமணிப்பெருமான் அம்பிகையோடு வெளிப்பட்டுத் திருமால் வேண்டும் வரம் யாது என வினவினார். அதற்குத் திருமால், ‘பெருமானே! சலந்தரனுடைய உடலைப் பிளந்த அந்தச் சக்கரத்தை, உலகத்தைக் காக்கும் பொருட்டு அருள வேண்டும்’ எனக் கேட்டார். உடனே இறைவன், ‘தாமரை மலர்கள் ஆயிரம் கொண்டு நீ திருவீழிமிழலை சென்று எம்மைப் பூசிப்பாயானால் உனக்குச் சக்கரம் அளிப்போம்’ என்றருளினார்.

திருமால் மனமகிழ்வுடன் கருடவாகனம் ஏறித் திருவீழி மிழலையை அடைந்தார். அங்கு இறைவன் திருவடிகளில் ஆயிரம் தாமரைகளை வைத்து அருச்சித்துப் பூசை செய்து வந்தார். ஒருநாள், இறைவன் ஒரு மலரை மறையும்படித் திருவுளம் பற்றினார். அவ்வாறே ஒரு பூக்குறையவும் திருமால் வருந்தினார். உடனே திருமால் தம் கண் ஒன்றினைக் கையால் பெயர்த்து இறைவனுடைய திருவடிகளிலே சாத்தித் துதித்தார். இறைவன் மகிழ்ந்து திருமாலுக்குத் தரிசனம் தந்தார். திருக்கரத்தைத் திருமாலின் தலை மீது வைத்துச் சக்கராயுதத்தை அவருக்கு அளித்தார். சக்கராயுதம் பெற்ற திருமால் பெரிதும் மகிழ்ந்தார். பாற்கடலில் இலக்குமியுடன் பெருவாழ்வு பெற்று, பகைவர் பலரை அழித்து, உலகத்தைக் காப்பாற்றினார். அன்றுமுதல், திருவிழிமிழலை என்னும் தலப்பெயரும் சிறந்ததாயிற்று.

இவ்வாறு தவுமியர் சொல்ல, அதைக் கேட்ட மிதிலேசன், சுவாமி! திருமாலுக்கு அதற்கு முன்பு சக்கரம் இல்லையா? என வினவ, தவுமியரும் கூறத் தொடங்கினார்.

சிவபெருமானுக்கு அன்பராகிய ததீசி முனிவருடன் திருமால் பகை கொண்டு போரிட்டபோது ததீசி மீது சக்கரப்படையை ஏவினார்; அது அம்முனிவருடைய வயிற்றில் அடைக்கப் பட்டுவிட்டது. அதனால் சக்கரம் இல்லாமலே திருமால் நீண்டநாள் இருந்தார் எனத் தவுமியர் மிதிலேசனுக்குக் கூறினார். பின்பு, மாசிலாமணிப் பெருமான் செவ்வாய்க்கு அருள்செய்த வரலாற்றைக் கூறுகின்றார்.

நாற்பத்தாறாவது
செவ்வாய்க்கு அநுக்கிரகம் செய்த அத்தியாயம்

1759. சோமுகன் அயன்பால் மேவும் சுருதிகொண் டொளித்த அந்நாள்
பூமியில் மழையில் லாமற் புல்முதல் உயிர்கள் யாவும்
ஏமுறு துயரால் வாடும் இடரறிந் தெழிற்கோ முத்திச்
சீர்மலி நகரம் மேவு சிவனுளத் திரக்க மெய்தி. 1

1760. வாரியி லொளித்த சோமு காசுரன் தனையு மாய்த்துச்
சீரிய மறையும் வாங்கித் தேசிக னாகி வேதம்
பாருளோர்க் குபதே சித்துப் பற்சனி வருணன் இந்திரன்
ஏருறு மூவர் தம்மால் எழில்முகி லெங்கும் தோன்றி. 2

1761. மாரிபெய் திடவாஞ் ஞாபித் தினியமால் விடையின் மீது
சீருறு மெழிற்கோ முத்தித் திருநகர்க் கேகும்போது
நீருறு சடையி னான்தன் நிருமல அடியிற் றோன்றும்
ஏருறு வேர்வை நீரோர் துளியிரு நிலத்தில் வீழ்ந்து. 3

1762. சேயுரு வாயி ரத்த வடிவொடுந் திகழப் பூமி
தாய்வடி வாய ணைத்துத் தயவுடன் வளர்ப்ப நன்னூல்
ஆயுமுள் ளுணர்வி னோடும் வளர்ந்தருட் துறைசை ஊரில்
ஏயுநற் றவவே டங்கொண் டெய்திநற் கோயில் முன்னர். 4

1763. இச்சைமா நதியில் மூழ்கி இபமுகத் தழகர் பாதம்
மெச்சிநற் பூசை செய்து விடையினைத் தொழுதொப் பில்லாக்
கச்சுறு முலையா ளோடும் கண்ணுதல் பாதம் போற்றி
நச்சிநற் போதி தன்னுள் நற்றவம் புரியு மேல்லை. 5

1761. ஆஞ்ஞாபித்து - கட்டளையிட்டு.

1764. மேதினி தன்னில் மேகம் மிகுவரு டங்க ளாகச்
சீதநீர் பொழியக் கண்டு செகத்துளோர் துன்ப மெய்த
மாதவர் வெதிரி காவில் மகம்புரி வதுவிட் டெய்தித்
தாதவிழ் கடுக்கை வேணிச் சங்கரன் கோயில் மேவி. 6

1765. ஆரண முதலே யிந்த அதிவிருட் டியைநீக் கென்று
சீரணு கநாதி முத்தச் சிவனடி பரவ அப்போது
ஏரணி யரசுள் மேவி இருந்தவ மியற்று கின்ற
தாரணி வளர்த்த மைந்தன் தனையழைத் தருட்கண் நோக்கி. 7

1766. நவக்கிர கத்துட் செவ்வா யாகிநல் மாரி பெய்தற்கு
அவப்பிர திபந்த னாகி அதிவிருட் டிகளைப் போக்கி
உவப்பொடும் இதமாய்ப் பெய்தற்கு ஒத்திருந் துலகந் தன்னிற்
தவத்தொடு மிருந்து வாழ்போ வெனஅரன் சாற்றக் கேட்டு. 8

1767. கூற்றுதைத் திட்ட செய்ய குறைகழற் கமலப் போது
போற்றிவீழ்ந் திறைஞ்சி மிக்க பூமகன் விடைபெற் றென்றும்
ஏற்றிகழ் விண்ணில் மேவி விதுவுறு தினத்தின் பின்பு
தோற்றுநா ளுடைய வாகித் துலங்குவக் கிரப்பேர் பூண்டு. 9

1768. மாரிபெய் மிகுதம் போக்கி மதித்திடு கிரகத் தொன்றாய்ச்
சீரிய வுருவம் பெற்றுச் சிறந்தன னவன்ற னாளிற்
கூருணர் வாலே அன்னங் கொடுப்பவர் விரதங் கொள்வோர்
ஏருறு மனதி லேதேது எண்ணினும் எளிதிற் சேர்வார். 10

1769. ஆவடு துறையிற் செவ்வாய்க் கிழமையில் அன்ன தானம்
கூவிநல் லடியார்க் கீயிற் கோடிபங் கதிக மாகும்
தூவிடை மாசி லாற்குந் துணைமுலை யொப்பி லாட்கும்
மேவுமங் களவா ரத்து விரதத்தின் மகிழ்ச்சி மிக்காம். 11

1770. இன்னதாஞ் செவ்வாய்க் குற்ற பேறினி யெழிற்கோ முத்தி
மன்னுசீர்த் தலத்திற் போதி வனத்துறு தரும நந்தி
முன்னகத் தியர்வந் தன்னோன் மொழிந்திடு முறுதி கேட்டுத்
துன்னுமெய்த் தொழுநோய் தீர்ந்து சுகம்பெறும் இயல்பு சொல்வாம். 12

நாற்பத்தாறாவது
செவ்வாய்க்கு அநுக்கிரகம் செய்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1770

1764. வெதிரிகா - மூங்கில் வனம். கடுக்கை வேணிச்சங்கரன் - கோமுத்தீசுவரர்.

46. செவ்வாய்க்கு அநுக்கிரகம் செய்த அத்தியாயம் (சுருக்கம்)

நான்முகனிடமிருந்து வேதங்களைச் சோமுகாசுரன் கவர்ந்து சென்று கடலிலே ஒளிந்த நாள் முதலாகப் பூமியில் மழை பெய்யவில்லை. புல், பூண்டு, உயிர்கள் யாவும் துன்புற்று வாடின. இதனைக் கோமுத்தி நகரில் எழுந்தருளியுள்ள இறைவன் கண்டு இரங்கினார். கோமுகாசுரனை அழித்து, வேதங்களைப் பெற்று, ஆசாரியனாகி வேதத்தை உலகோர்க்கு உபதேசித்தருளினார். பின்பு, சனி, வருணன், இந்திரன் ஆகியோரால் மேகங்களை உண்டாக்கி மழைபெய்யச் செய்தார். இவ்வாறு இறைவன் இடபவாகன மீது ஏறி கோமுத்தி நகருக்குப் போகும்பொழுது, இறைவனது திருமேனியில் தோன்றிய வேர்வை நீரின் ஒரு துளி பூமியில் விழுந்தது. உடன் அத்துளி ஒரு குழந்தை வடிவானது. சிவப்பு நிறத்துடன் கூடிய அக்குழந்தையைப் பூமிதேவி எடுத்து அன்புடன் வளர்த்து வந்தாள்.

தவவேடம் தாங்கிய அக்குழந்தை துறைசையிலே இச்சா தீர்த்தத்திலே நீராடி, துணைவந்த விநாயகரை வணங்கி அம்மையப்பரைத் துதித்து அரச வனத்தில் தவம்புரிந்து வந்தது. அப்போது பூமியில் அதிகமான மழை பொழிவதைக் கண்ட உலகோர் மிகவும் துன்புற்றனர். பெரிய தவசிகளும் யாகம் முதலானவற்றை விட்டுக் கோமுத்தீசுவரரைத் தரிசித்து முறையிட்டனர். மிகுந்த மழையை நீக்குமாறு வேண்டினர். உடனே இறைவன், அரச வனத்தில் தவம்செய்யும் பூமாதேவி வளர்த்த மைந்தனை அழைத்து, நீ நவக்கிரகங்களுள் செவ்வாய்க் கிரகமாகி, அதிக மழை பெய்வதற்கு இடையூறாகி, மிதமாகப் பெய்யச் செய்வாய் எனவும் அருளினார்.

அவ்வாறே அம்மைந்தனும் விடைபெற்று விண்ணை அடைந்து, வக்கிரன் என்னும் செவ்வாய்ப் பெயருடையவனாகி அதிக மழையைப் போக்கி, நவக்கிரகங்களுள் ஒன்றாகி உருவமும் பெற்று விளங்கினான். அவனுடைய நாளாகிய செவ்வாய்க்கிழமையில் விரதம் இருந்து அன்னதானம் செய்பவர்கள் தாம் நினைப்பனவெல்லாம் எளிதில் நிறைவேறும். இவ்வாறு ஆவடுதுறையில் செவ்வாய்க்கிழமைகளில் அன்னதானம் செய்தால் கோடி பலன் மிகும். இதை ஒப்பிலா முலையம்மை உடனுறையும் மாசிலாமணிப் பெருமானும்

விரும்பி ஏற்பர். இவ்விருவரும் செவ்வாய்க்கிழமை விரதத்தால் மிகமிக மகிழ்வர் என்பர்.

இனி, அகத்தியர், தருமநந்தியின் திருமுன்பு வந்து தம் தொழுநோய் தீர்ந்து சுகம்பெற்ற வரலாறு கூறப்பெறும்.

நாற்பத்தேழாவது
பிப்பிலவனத்தில் அகத்தியர் தருமநந்தீசுரரைத் தரிசித்த அத்தியாயம்

1771. தென்பொதி யத்தில் ஈசன் ஏவலாற் திசைநேர் நிற்க
முன்பொரு காலம் வந்து முகிழ்முலைப் பன்னி யோடும்
அன்புட னமர்ந்து வாழும் அகத்திய முனிவன் ஓர்நாள்
இன்புறு சிவத்த லங்கள் எங்கணுந் தரிசித் தேத்த. 1

1772. உள்ளத்தி லார்வம் பொங்கி உலோபாமுத் திரையி னோடும்
வள்ளற்கா ருண்ணிய நாதன் வாழ்பதி யெங்கு மேவிய
பிள்ளைத்தண் மதியஞ் சூடும் பிரானடி தொழுது வண்டு
கொள்ளத்தேன் சொரியுஞ் சோலைக் கோடிகா வதனுள்
வந்தான். 2

1773. அத்திருப் பதியில் மேவும் அம்பிகை பாகன் பாதம்
சித்தசுத் தியினாற் போற்றித் தினந்தொறும் பூசை செய்து
பத்தியோ டிருக்கும் நாளிற் பரனருள் ஞானம் பெற்ற
உத்தமர் அநேக ரந்தத் தலத்தினில் உறுவோர் தம்மை. 3

1774. பணிந்துப சாரஞ் செய்யா தவர்செயும் பணிகள் கொண்டு
தணிந்தசிந் தையினோர் வேதம் சாற்றுதற் கிகழ்ச்சி பேசித்
துணிந்துயான் எனதுஎன்று எண்ணும் தொடர்மல
வாசஞ் சற்றே
அணைந்திட அதனோ டோர்நாள் அரனைஅர்ச் சிக்கும்
போது. 4

1775. இரண்டற உயிரின் மேவும் எழிற்பரஞ் சோதி அந்த
முரண்டனை அகற்ற வேண்டி முதிர்சிவ லிங்கத் தின்கண்
இரண்டகக் கையர் கோடி அகத்தியர் கடிதிற் தோன்றி
அரண்டகு தன்தாள் மாதோடு அர்ச்சிக்கும் புதுமை காட்ட. 5

1776. தமிழ்முனி கண்டு வெள்கித் தன்னறி யாமை நோக்கி
அமிழ்தென உடல மெல்லாம் வெளுத்தயர்ந் தவச மாகிக்

1772. கோடிகா - திருக்கோடிகா.

கமழ்நறுங் கொன்றை சூடும் கடவுள்தாள் தொழுது கண்ணீர்
அமர்வுற இரங்கி யேங்கி அகத்தெனுங் குறைகள்
சொல்வான். 6

1777. அகத்தியன் மயக்கால் என்போல்
அகத்தியர் இல்லை யென்றும்
இகத்தினில் உலோபா முத்திரை
காவிரி உருவோ டெய்தி
மகத்துவங் கொடுத்துத் தன்மம்
வளர்க்கின்றா ளென்று முன்தாள்
புகழ்பெறும் அடியார்க் கெள்ளல்
புகன்றுமிப் புன்மை கொண்டேன். 7

1778. தலத்தொடு மூர்த்தி தீர்த்தம் மூன்றும்நீ தானே யாகி
நலத்தொடு மலங்கள் தீர்க்கும் நன்மையும் மறந்தேன் அன்பர்
மலர்க்கழல் பணிந்து தீய மலமகற் றென்று சொன்ன
பலத்தையும் மறந்தேன் உன்பாற் பத்தியுள் ளேன்போல்
நின்றேன். 8

1779. கெறுவபங் கந்தீர் தற்காக் கேடிலா என்போற் கோடி
உறும்அகத் தியருங் கோடி உலோபாமுத் திரையுங் காட்டித்
திறமுறும் இலிங்க நாப்பண் ஒளித்தனை யான்செய் குற்றம்
அறும்வகைக் கருள்செய் துள்நோய் அகற்றென அழுது
வீழ்ந்து. 9

1780. பரவிடும் போதோர் வாக்கு பண்பொடுஞ் சென்று நந்தம்
திருவர சமரு முத்திச் சேத்திரத் துற்றா லுன்மேல்
மருவிடுங் குற்ற மெல்லாம் மாறிநற் றெருட்சி யுண்டாம்
விரைவினிற் போவென் றாகா யத்தினில் விளம்பக் கேட்டு.
10

1781. கோடிகா மருவுங் கோடீ சுரனடி குலவிப் போற்றி
நீடருள் விடைபெற் றின்பம் நிறைமலர்ப் பொன்னி மூழ்கித்
தேடரு மனைவி யொடும் திகழ்வெள்ளை யுருவி னோடும்
ஆடக மதில்சூழ் போதி ஆவடு துறையில் வந்து. 11

1782. பெருந்திரு வீதி சூழ்ந்து பிறங்குகோ முத்தி தீர்த்தத்து
அரும்புன லாடி வெண்ணீறு அணிந்துநல் நியமம் செய்து
சுரந்தரு ளெவர்க்கும் ஈயும் துணைவந்த பிள்ளை பாதம்
மருங்குறப் பணிந்து போதி வலம்வந்து
நந்திமுன்னர். 12

1783. அங்கமெட் டவனி தோய அடிபணிந் தெழுந்த போது
சங்கரன் தனைமேற் தாங்கும் தருமநந் தீசர் நோக்கிப்
பொங்குநற் கருணை யோடும் புகழ்ந்துநல் முகமன் பேசி
இங்குநீ விகாரத் தோடும் எய்துமா றெவன்கொ லென்ன. 13

1784. உள்ளவா றெல்லாம் கும்ப முனியுரைத் துவந்து போற்றி
வள்ளலே நந்தி நாதா மகிழ்ந்தெனக் குறுதி கூறித்
தெள்ளுசீர்க் கருணை யாலே தெருட்டியித் தலத்தில் யான்செய்
விள்ளரும் பணிகள் ஈதென்று அறிந்திட விளம்பு கென்றான். 14

நாற்பத்தேழாவது
பிப்பிலவனத்தில் அகத்தியர் தரும நந்தீசுரரைத் தரிசித்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1784
திருச்சிற்றம்பலம்

47. பிப்பில வனத்தில் அகத்தியர் தருமநந்தீசுரரைத் தரிசித்த அத்தியாயம் (சுருக்கம்)

பொதியமலையில் தம் மனைவியுடன் வாழ்ந்து வந்த அகத்தியர் ஒருமுறை, எல்லாச் சிவ தலங்களையும் தரிசிக்க விரும்பினார். சிவபெருமான் எழுந்தருளியுள்ள பல இடங் களுக்கும் சென்று வழிபட்டுவிட்டு, திருக்கோடிகாவை வந்தடைந்தார். அங்குள்ள இறைவனை நாள்தோறும் பூசை செய்து வந்தார். அப்போது அத்தலத்திலிருந்த உத்தமர்களிட மிருந்து உபசாரங்களை ஏற்றுக்கொண்ட அகத்தியர் அவர்களை மதிக்கவில்லை. மாறாக, அவர்கள் வேதம் ஓதுதலையும் இகழ்ந்து பேசினார். அவருக்கு யான், எனது என்ற பழைய மலவாசனை இருந்ததை உணர்ந்த இறைவன், அதை அவருக்கு உணர்த்த விரும்பினார். ஒருநாள் அகத்தியர் இறைவனை அர்ச்சிக்கும்போது, சிவலிங்கத்தினிடத்தில் கமண்டலத்தைக் கையிலேயுடைய கோடி அகத்தியர்கள் விரைவில் தோன்றி உலோபமுத்திரைகளுடன் இறைவனை அர்ச்சிக்கும் புதுமையைக் காட்டியருளினார். இதனால், அகத்தியர் மிகுந்த வெட்கமடைந்தார். அவருடைய உடலெல்லாம் வெளுத்து அயர்ச்சியடைந்தது. இவ்வாறு மயங்கிய அகத்தியர் மாசிலாமணிப் பெருமானைத் தொழுது வணங்கி முறையிட்டார்.

'ஐயனே! என்னுடைய சிறுமையால் - மயக்கத்தால் அடியார்களை இகழ்ச்சியாகப் பேசினேன். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றும் நீயேயாகி ஆன்மாக்களுடைய மலங்களைத் தீர்க்கின்ற நன்மையையும் நான் மறந்தேன்; அடியார்களைப் போற்றும் மரபையும் மறந்தேன்; பொய் வேடம் கொண்டேன்; எனக்கும் நல்லறிவு புகட்டினீர்; அடியேனுடைய குற்றங்களைப் பொறுத்தருளுவீராக என அகத்தியர் இறைவனிடம் வேண்டினார். இறைவனும் மகிழ்ந்து, கோமுத்தித்தலம் வருமாறு பணிந்தருளினார்.

திருக்கோடிகாவில் கோடீச்சுரரின் திருவடிகளை வணங்கி விடைபெற்ற அகத்தியர் தம் மனைவியுடன் திருவாவடுதுறை வந்தடைந்தார். இங்கு முறைப்படி நீராடி, துணைவந்த விநாயகரை வணங்கி, அரசமரத்தை வலம் வந்து, நந்தியெம்பெருமானை வணங்கினர். அகத்தியரின் அருவருக்கத்தக்க உருவத்திற்கான காரணத்தை நந்தியெம்பெருமான் கேட்க, அகத்தியர் நடந்தன வற்றைக் கூறினார். பின்பு, இத்தலத்திலே தாம் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் தெரிவிக்குமாறு அகத்தியர் வேண்டினார்.

நாற்பத்தெட்டாவது
நந்தீசுரர் அகத்தியருக்குத் தலமகத்துவம் உரைத்த அத்தியாயம்

1785. மான லம்பெறு போதி வனத்தினுள்
வாழும் நந்தியை மாமலை யத்துறும்
தேன லம்பெறு தண்டமிழ் மாதவன்
சென்று கண்ட துரைத்தனஞ் செஞ்சடைக்
கோன யந்துறை யுந்திரு வாவடு
தண்து றைப்புகழ் கும்ப முனிக்குநற்
பான லம்பெறு வெள்விடை நாயகன்
பண்பொ டும்புகல் பான்மை விளம்புவாம். 1

1786. பொதிய மாமலை மேவு புராதனப்
புனித கேளென்று புண்ணிய மாமறை
உதவு தன்மநந் தீசர் உரைப்பரிவ்
உத்த மத்தலத் தின்திறம் ஓதிட

1785. மாமலையம் - பொதிய மலை. மாதவன் - அகத்தியன்.
1786. ஏன்றது - இயன்ற அளவு.

விதியொ ராயிர கோடிபே ராயிர
கோடி நாவால் விளம்பினு முற்றுறாது
இதனை யான்சிறிது ஏன்றது மாத்திரம்
இயம்பு வன்மகிழ்ந் தின்பொடு கேட்டியால். 2

1787. பஞ்சகி ருத்தியம் பண்ணும் பராபரன்
பண்பொ டாதியிற் பார்படைக் குந்தொறும்
தஞ்ச மாந்தன திச்சைஞா னந்தொழிற்
சத்தி யாற்திருத் தீர்த்தமு மூர்த்தியும்
மிஞ்சு சீர்த்தல் மும்படைத் திப்பதி
மேவி யென்றும் விரும்பி யிருத்தலாற்
துஞ்ச லின்றி அநாதிமுத் தித்தல
மாகி என்றுந் துலங்கிடும் இத்தலம். 3

1788. அருட்ப ராபரை ஆனுரு வைப்பிரித்து
அன்பி னோடணைத் தார்கயி லாசமாய்த்
திருக்க ணாலுமை கண்டிட மாசிலாச்
செல்வ நாயகன் காட்டிய தன்மையாற்
தருக்கு லம்புடை சூழ்திரு வாவடு
தண்து றைப்பெயர் பூகயி லாசமாய்
இருக்கும் இயம்பிடு மாதலால் இத்த
லத்துக்கி ணைஎங்கும் இல்லையால். 4

1789. கவலை யுற்று வருஞ்சுரர் கட்கெல்லாங்
கருணை ஈந்தசு ரக்கிளை யைக்களைந்து
உவகை யுற்றநல் வேத மழைத்தலால்
உலகில் வேதபு ரப்பெயர் கொண்டதாம்;
சிவன்ம லர்க்கையி னால்விதை யிட்டுநற்
செஞ்ச டைப்புனல் விட்டு வளர்த்தலாற்
புவன மித்தலந் தன்னைநற் புண்ணியப்
போதி மாவன மென்றும் புகலுமால். 5

1790. அரிய யன்மக வான்முதற் தேவர்கள்
யாரும் இந்த அரசுரு ஆனதால்
திரும லிந்தஇப் பிப்பில மாவனம்;
தேவ தாருவ னம்என்றும் செப்புவர்;
மரும லர்க்குழற் பூரணை புட்கலை
மாதர் நாயகன் வாரண மேவலாற்
பொருவி லாதஇப் போதிவ னம்கசா
ரணியம் என்றும் புகல்வர் மிக்கோரெலாம். 6

1791. அப்ப ணிந்திடு செஞ்சடை மாசிலா
அமலன் ஒப்பிலா மென்முலை காணநின்று
இப்பெ ருந்திருப் பிப்பில மாவனத்து
இன்ப மார்நவ நன்னிதி யும்புதைத்து
ஒப்ப றுந்திருக் கூத்துநின் றாடலால்
உலகுள் ளோர்மகிழ்ந் தோங்கு நவநிதிப்
பொற்பு றுஞ்சபை யென்றுமா தாண்டவப்
போதி யம்பல மென்றும் புகல்வரால். 7

1792. அன்பி னாற்பணிந் தேத்தி வணங்கிடும்
அரச னாம்அருள் சேர்முசு குந்தனுக்கு
இன்ப மேவுநல் ஞானமும் கட்டளை
யிட்டு நல்மகப் பேறு மளித்துமுற்
துன்பம் நீங்கிடச் சுந்தரத் தாண்டவம்
தூய போதிச் சபையில்நின் றாடலாற்
பொன்ப ராவும்இக் கோமுத்தி நன்னகர்
புகழத் தியாக புரமென்று மாயதே. 8

1793. என்னை ஊர்தற் கிடபம தாக்கிமெய்
இன்ப மீந்திங் கிருத்திய நன்மையால்
மன்னு நந்தீ சுரபுர மென்னவும்
வையம் போற்றும்இம் மான்கர மாசிலான்
உன்னை யும்இனி யாண்டிங் கிருத்துதற்கு
உன்ன லால்இவ் உயர்பதி யென்றும்நற்
பொன்னு லாம்எழில் மேவும் அகத்திய
புரம தென்றும் புகழ்ந்திடற் பாலதே. 9

1794. அகிலம் போற்றும்இவ் ஆவடு தண்துறைக்கு
அமலன்ஈயும் திருப்பெய ரானது
நிகழுங் காலம்இந் நாட்பன் னிருபெயர்
நின்ற தாம்எதிர் காலமென் னெய்துமோ!
துகள றத்தவஞ் செய்திவ ணெய்திய
தூய மாமுனி யேமுன்னு மித்தலத்து
இகல றத்தவஞ் செய்துவீ டுற்றுளோர்க்கு
இலக்கம் இவ்வள வென்றனற் பாலதோ. 10

1795. எண்ணி லாத்திரு மால்பிர மாதிகள்
இந்தி ராதி இமையவர் தானவர்
எண்ணி லாத்தவ மாமுனி ஈசர்கள்
இயக்கர் கின்னரர் கிம்புரு டாதிகள்

எண்ணி லாக்கதி ரிந்து மருத்துவர்
இலகு டுக்கண் மனுக்கண்மாந் தாதிகள்
எண்ணி லாவரு ணத்தவர் இத்தலத்
தெய்தி ஈறிலா இன்பவீ டுற்றுளோர். 11

1796. ஆதி யந்தமி லாதஅஞ் ஞானமும்
அருவி னைத்துய ரும்உடற் துன்பமும்
மாது யர்க்கிட மாம்எம தண்டமு
மன்னு மாயை அவமிருத் துக்களும்
பேத மாங்கொடுஞ் சாபமும் தாபமும்
பின்னு மற்றப் பிறப்புறு நோய்களும்
தீதி லாதகோ முத்தித்த லத்தையார்
சிந்தை செய்கினும் தீர்வது சத்தியம். 12

1797. இன்ன தாமித் தலத்தின் மகத்துவம்
என்று தன்மநந் தீசர் குறுமுனிக்கு
உன்னும் அன்போ டுரைத்தபின் அக்கினிக்
குற்ற நோயும் குருத்துரோ கத்தையும்
மன்னும் இத்தலத் துற்றிடு முன்திரு
மாசி லாமணி நாயகன் தீர்த்துநற்
துன்னும் இன்ப மளித்திடு காரணம்
சொற்ற னனது வுஞ்சொலக் கேட்டியால். 13

நாற்பத்தெட்டாவது
நந்தீசுரர் அகத்தியர்க்குத் தல மகத்துவம் உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1797
திருச்சிற்றம்பலம்

48. நந்தீசுரர் அகத்தியருக்குத் தலமகத்துவம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

திருவாவடுதுறையின் பெருமையை அகத்தியருக்கு நந்தீசுரர் சிறப்பாக எடுத்துரைக்கின்றார். சிறப்புகள் பல பொருந்திய இத்தலப் பெருமைகளை ஆயிரம் கோடி பிரமர்கள் ஆயிரம்கோடி நாக்குகளால் சொன்னாலும் முடிவு பெறாது; இருப்பினும், இயன்ற வரையில் கூறுகிறேன் கேட்பீராக.

இறைவன் முதலில் உலகத்தைப் படைத்தபோது, தமது இச்சை, ஞானம், கிரியை என்ற சக்திகளால் தீர்த்தம், தலம், மூர்த்தி என்னும் இம்மூன்றையும் படைத்து, இத்துறைசையிலே

என்றும் விரும்பியிருந்தலால் 'அநாதி முத்தித்தலம்' என்று இப்பதி பெயர்பெறும்.

அம்பிகையின் பசு உருவைப் போக்கி, அன்போடணைத்துக் கயிலாயமாகவே தம்முடைய திருக்கண்ணால் உமையானவள் பார்க்கச் செய்த இறைவனின் தன்மையாலும், கற்பத்தரு காமதேனு முதலியவை ஆன் உருவத்தில் முன்பு அம்பிகையைப் புடைசூழ்ந்து இருந்ததாலும் இத்துறைசையானது 'பூகைலாசம்' எனப் பெற்றது. நான்கு வேதங்களும் முறையிடுவதால் இத்தலத்திற்குச் சமமானது எங்கும் கிடையாது.

அசுரர்களை அழித்து, தேவர்களுக்காக அருளி, கோமுகாசுரனிடமிருந்து வேதங்களை மீட்டதால் இத்துறையானது 'வேதபுரம்' என்ற பெயர் கொண்டது.

இறைவனே தமது திருக்கரத்தால் அரசின் விதை இட்டு, சடையிலுள்ள கங்கை நீரை வார்த்து வளர்ச்சி பெறச் செய்ததால் இத்துறைசையைப் 'போதிவனம்' என்றும் அழைப்பர்.

திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள் ஆகிய அனைவரும் அரச மரத்தின் உருவமாக ஆனதால் இத்தலத்தைப் 'பிப்பிலவனம்' என்றும், 'தேவதாருவனம்' என்றும் கூறுவர்.

பூரணை, புட்கலை என்னும் மாதர்தம் நாயகனான விநாயகன் எழுந்தருளியிருத்தலால் இத்தலத்தைக் 'கஜாரணியம்' என்றும் அழைப்பர்.

இத்தலத்தில் ஒப்பிலாமுலையம்மை காணும்படி மாசிலாமணிப் பெருமான் திருக்கூத்து ஆடுதலால் இதைப் 'பொற்சபை' என்றும், 'போதியம்பலம்' என்றும் புகல்வர்.

முசுகுந்தனுக்கு ஞானத்தையும் மகப்பேற்றையும் அளித்து, போதிச் சபையிலே அழகிய தாண்டவத்தை ஆடலால் இத்தலமானது 'தியாகபுரம்' என்றும் அழைக்கப்பெறும்.

நந்தீசரை இடபமாக்கியருளிய காரணத்தால் 'நந்தீசபுரம்' என்றும், அகத்தியருக்கு அருள்செய்து இங்கேயே நிலைபெறச் செய்ததால் 'அகத்தியபுரம்' என்றும் இத்தலத்தை அழைப்பர்.

இவ்வாறு, திருவாவடுதுறைக்கு இறைவன் கொடுத்த பெயர்கள் மொத்தம் பன்னிரண்டாகும். இவை இப்போது உள்ளன. இனி, எதிர்காலத்தில் இன்னும் என்னென்ன பெயர்களை அடையுமோ அறியோம்.

முற்காலங்களில் இத்துறைசையிலே தவம் செய்து வீடுபேறு அடைந்தவர்களின் எண்ணிக்கையும் அறுதியிட்டுக் கூற இயலாது. திருமால், நான்முகன் முதலான தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், இயக்கர்கள், கின்னரர், கிம்புருடர்கள், சூரியர்கள், சந்திரர்கள், நட்சத்திரக்கணங்கள், பல வருணத்த வர்கள் ஆகிய இவர்களெல்லாம் இத்தலத்திற்கு வந்து வணங்கிப் பேரின்ப வீட்டைப் பெற்றுள்ளனர்.

இத்திருவாவடுதுறைத் தலத்தை யார் நினைத்தாலும், அஞ்ஞானம், வினைத்துன்பம், உடல்துன்பம், எமதண்டனை, அவமிருத்து, சாபம், பிறவிநோய் ஆகிய அனைத்தும் நீங்கிவிடும். இது சத்தியமாம்.

இவ்வாறு இத்தலத்தின் பெருமைகளை அகத்தியருக்கு நந்தீசர் அன்புடன் உரைத்தார்.

அடுத்து, அக்கினிக்கு ஏற்பட்ட நோயையும் குருத்து ரோகத்தையும் இறைவன் தீர்த்தருளிய வரலாற்றையும் தவுமியர் மிதிலேசனுக்குக் கூறத் தொடங்கினார்.

நாற்பத்தொன்பதாவது அக்கினி பகவானுக்குக் குருத்துரோகம் தீர்த்த அத்தியாயம்

1798. என்று நல்மிது லேசனுக் கின்புறத்
துன்று பாசத் தொடர்பறுத் தைம்புலன்
வென்ற ஞானத் தவுமிய வேதியன்
பின்றை யுங்கன லோன்கதை பேசுவான். 1

1799. அகத்தி யக்குறு மாமுனிக் கன்புடன்
மகத்து வந்தரு போதியுள் மண்ணிவாழ்
மிகுத்த வெள்விடைத் தன்மர் விருப்பொடும்
வகுத்த நற்கதை யின்வளங் கேட்டியால். 2

1800. முன்போர் காலம் முதிர்கிரு தத்தினில்
மன்பு ராதன கற்ப மருவுநாள்
மின்ப ராவும் வெதிரிகா மாவனத்து
இன்ப மேவும் இருடிகள் யாவரும். 3

1801. தேசுற் றோங்கு பரம சிவனை உத்
தேசித் தேபன்னி ரண்டு வருடமுன்
மாசற் றோங்கு மகங்கள் வளர்த்திட
யோசித் தேமனை யாரொடு முற்றவண். 4

1802. யூபத் தம்பமும் ஓமகுண் டங்களும்
தாபித் தோங்கும் சமிதைத் திரவியம்
சோபித் தெங்கும் விளங்கத் தொகுத்தவி
யாபத் தின்றி அமரர்கள் உண்டிட. 5

1803. மந்தி ரத்தோ டழைத்துநல் மாதவர்
தந்தி ரத்தொடு பாக சமர்ப்பித
முந்து நற்கிரு தத்தொடு மூட்டிநெய்
சிந்தி யோமத்தி றஞ்செயும் வேளையில். 6

1804. இருடி மங்கையர் ஏந்திளங் கொங்கையும்
முருகு தங்கு முகில்மலர்க் கூந்தலும்
கரிய நஞ்சுறழ் கண்களும் தண்மதி
பொருவு கின்ற வதனமும் பூண்களும். 7

1805. தெரிவு றாதொல்கு சிற்றிடை யும்சிலைப்
புருவ மும்பிறை போன்ற நுதல்களும்
மருவு மாந்தளிர் மேனியும் மாமணிக்
குருகு தாங்குகை யும்கொவ்வை வாய்களும். 8

1806. கஞ்ச மாமலர்ச் சீறடி யும்கவின்
மிஞ்சும் அன்ன நடையும் விளங்கிடக்
கொஞ்சும் அஞ்சுகம் போற்குயிற் போற்கனிந்து
அஞ்சொற் பேசிஅங் கடையும் இயல்பினை. 9

1807. கண்டு காதல் மிகுத்தெழு காமநோய்
கொண்டு வன்னி குலவவிப் பாகவூண்
உண்டு ரத்ததி னாலுண் மதியினை
மண்டு மம்முனி மாதர்மேல் வைத்தனன். 10

1808. எவ்வி தத்தும் இவர்புண ராவிடின்
உய்வ தற்கிட மின்றென உன்னியுள்
அவ்வி யத்தொடும் அக்கினி நொந்துடற்
செவ்வி யற்றுவிண் ணோர்சிரிப் பாரென. 11

1809. வெள்கி வேள்வியை விட்டு மறைந்துபோய்
உள்கி மேருவி லோரிடத் துற்றுநைந்து

1801. மகங்கள் - யாகங்கள்.

எள்கு நெஞ்ச மிடைந்தியா கத்தினுண்
கொள்கி லாதிருந் தான்முனி வோர்குழாம். 12

1810. எரிவ ளர்த்திடும் ஓமகுண் டத்திடை
கருதும் அக்கினி தேவனைக் கண்டிடா
துரிமை வேள்விசெய் யாதுயர் தேவரோடு
எரியை தேடி யடைந்தனர் எங்கணும். 13

1811. கண்டி டாது கவலையுற் றோய்ந்தனர்
மண்டு தீவசு வின்மனை மாதர்கள்
தொண்டை வாய்ச்சுதா வென்னும்நற் தோகையும்
பெண்ட கைச்சுவா காவெனும் பேதையும். 14

1812. திசைக ளெங்கணும் தேடிநல் மேருவில்
இசையு மோர்குகை யிற்கண் டிறைஞ்சிமெய்த்
தசைக ளின்றிஎன் பாயுறுந் தன்மைகண்டு
அசிகை யோடழு தேங்கி அரற்றினார். 15

1813. அங்கி யும்விழி நீருகுத் தன்புறு
மங்கை மார்களை நோக்கஇம் மங்கையர்
எங்கள் நாயக! என்கொலி தென்றலும்
அங்க ணொன்றுஞ் சொலாதஞ ருற்றனன். 16

1814. தேவி மார்க ளிருவரும் தேவர்கள்
மேவு கின்ற இடத்தில் விரைந்துவந்து
ஆவி போமுன் எமக்கினி அன்பனை
நீவிர் காவுமென் றேங்கி நிகழ்த்தினார். 17

1815. மேவு நோயை விலக்க அசுவனி
தேவர் தம்மை அழைத்துடன் சென்றுகண்டு
ஆவ லோடும்அவ் அக்கினி கொண்டநோய்
யாவு மாறதற் குள்மருந் தூட்டினார். 18

1816. வருடம் மூன்று வயித்தியஞ் செய்யவும்
ஒருவி டாமல் உயர்வது கண்டவர்
எரிகொள் உள்ளத்து நோயிதென் றெண்ணியே
மருவும் அங்கி மனைவியர் தம்மொடும். 19

1817. ஆந்த ரங்க மறிந்தனன் நோயைநீர்
சாந்த மாக்கிற் தவிர்ந்திடு மென்றுரைத்து
ஏய்ந்த வானகத் தெய்தினர் எய்ப்பொடும்
காந்தன் தன்னைஅக் கன்னியர் கேட்பரால். 20

1811. சுதா - சுவதா.

1818. உள்ள செய்தி உரைக்கிலெம் மந்திரத்
தெள்ளு செய்கையி னர்ச்சித்தி யாம்படி
வள்ள லே!வரு வித்திடு வோம்அவை
மெள்ள வேயுரை யென்று வினாவலும். 21

1819. முனிவர் மங்கையர் மோக மயக்கினாற்
துனிமி குத்துடல் சோர்ந்தனன் மாதரீர்!
இனிஎன் ஆவி இருப்ப தரிதெனத்
தனதி லச்சை விடுத்திது சாற்றினான்; 22

வேறு

1820. இதுவரையு முரையாம வித்துயரம்
வீணினிலுற் றிருந்த தென்னே?
கதுமெனவெம் மந்திரத்தா லவரையெல்லாம்
வலியவரக் காட்டு கிற்பேம்;
பதியினில்வா வென்றழைத்து வைத்தவரை
அழைத்துவரும் பான்மை போலப்
புதுமையொடுஞ் சுதாதேவி முனிமடவார்
போல்வேடம் பூண்டு கொள்ள. 23

1821. சுவாதேவி யழைத்துவந்து வேற்றுமைதோன்
றாமலவர் சொருபங் காட்டி
அவாவுடையாய் இவள்தான்கல் யாணிஇவள்
அனசூயை அணத்திரி யாகும்
தவாதஇவள் சுகேசிஇவள் சந்திரமதி
இவர்மற்றத் தவமின் னராம்
திவாவினுக்கோர் பெண்ணாக அனுபவியென்
றுரைத்துவிடத் தேயுக் கூடி. 24

1822. காமநோய் சிலதீர்ந்து மனங்களித்தோர்
பகற்போது கனலோன் அந்த
மாமயில்நேர் இருவரையும் பார்த்துமிக்க
அருந்ததி வாராத தென்னே?
தேமருவு மலர்க்குழலீர்! அவளையுமிங்
கழைத்துவிடிற் தீரும் என்நோய்
போய்மயக்கிக் கொடுவாரும் எனவுரைப்ப
இருவர்களு மப்பாற் போந்து. 25

1819. லச்சை - வெட்கம்.

1821. திவா - நாள்.

1823. இரும்பெருங்கற் பருந்ததிபோல் வேடமுறு
வதற்கவர்மந் திரத்தி னாலே
பொருந்தும்வகை தந்திரமெத் தனைபுரிந்துஞ்
சாலியெழில் புணர்தல் காணார்
வருந்திஇனி என்செய்வோ மெனத்தேயு
விடத்தில்வந்து மன்னா! அந்த
அருந்ததிகற் புக்கரசி ஆத லினால்
எய்தாளென் றறையக் கேட்டு. 26

1824. விள்ளற்கோர் மொழியின்றிப் பழையபடி
மயக்கமுற மின்னார் சொல்வர்
உள்ளத்தால் உள்ளலும்தீ தேபிறர்கள்
தம்பொருளை உபாயத் தாலே
கள்ளத்தாற் கொள்வமெனல் இஃதறியாது
அனலோய்நீ கற்பு ளோர்மால்
கொள்ளத்தான் தகுவதோ? எனத்தெருட்ட
நாணாலக் கொள்கை விட்டான். 27

1825. அருத்தியினா லக்கினிகற் புடையகுரு
மனைவிதனை அணைதற் கெண்ணும்
குருத்துரோ கப்பயனால் உடலமெலாம்
புண்ணாகிக் கொடுநோய் மிஞ்சி
வருத்தமுடன் வாயின்வழி நீரொழுகச்
சலமொழுக வயிறு வீங்கி
உருத்தெவரும் பேசாமற் றூடணிப்பக்
கிடந்தகிடை யுறுவ தானான். 28

1826. இருடிகளும் தேவர்களும் அக்கினிபால்
வந்தவன்மெய் யிடர்க்கண் டுந்தம்
புருடனுக்கிந் நோய்வந்த காரணமெவ்
விதத்தான்நீர் புகலு மென்னத்
தெருளுறுநற் சுதைசுவா தேவியுள்ள
படிசெப்பத் தேவர் கேட்டுப்
பெருவலியூ மூறிலார்தான் தடுப்பரென
இரங்கியிவை பேச லுற்றார். 29

1827. மொய்த்திடுமிப் பாவவினை எத்தலத்திற்
சென்றாலு முடிவ தின்றாம்
சித்திதரு பூலோக கயிலாச
மாகுமுத்திச் சேத்தி ரத்திற்

புத்தியொடும் போய்ச்சிவனைத் தரிசிக்கிற்
தீருமன்றிப் போமா றுண்டோ?
எத்தனைமா பாதகஞ்செய் திடினுமந்தத்
தலம்நினைக்கில் எரிசேர் பஞ்சாம். 30

1828. ஆதலினால் இருவீரும் பைப்பையத்தீ
யவனைஅன்போ டழைத்துக் கொண்டு
மாதவர்கண் மருவுபிப்பி லாரணியத்
தலத்தினிற்போய் மாசி லாத
சோதியடி பணியுமென்று சொல்லியகன்
றனரிதுவே துணிவென் றெண்ணி
வேதனைதீ ரும்பொருட்டுக் கனலோனும்
மனைவியரும் விரைவிற் போந்து. 31

1829. தேங்கமழ்பூஞ் சோலைபுடை சூழ்திருவா
வடுதுறைசைத் திசையில் வந்து
பாங்குறநின் றெழில்மணிக்கோ புரந்தரிசித்
தவனியுறப் பணிந்த போதில்
ஓங்குமுடற் பிணிபாதி நீங்கவுள
மகிழ்ச்சி யெய்திஉம்பர் போற்றும்
வாங்குதிரைக் காவிரிநீர் படிந்துவந்து
கோமுத்தி மடுநீ ராடி. 32

1830. தீர்க்கமுற நீறணிந்து கண்டிகைமா
லிகைசூடிச் செங்கை கூப்பி
மார்க்கசகா யக்களிற்றின் மலரடியைத்
தொழும்போது வன்னி மெய்நோய்
மூர்க்கமெலாம் விட்டகலக் குருத்துரோ
கமுந்தீர்ந்து மூத்த னாகிக்
கார்க்குழல்மின் னாரொடும்பிப் பிலவனத்தைச்
சூழ்ந்துநந்தி கழற்றாள் போற்றி. 33

1831. ஒப்பிலா முலைமயிலைத் தொழுதுபிர
தக்கணமா யுள்ளே சென்று
பொற்புறுசந் நிதிக்கெதிர்நின் றிறைஞ்சிவல
மாப்போந்து பொருவி லாத
கற்பகவி நாயகனைக் கன்னிமூ
லையிற்றொழுது கருணை ஞானத்
துப்பனைய திருமேனி அழகியபிள்
ளையின் திருத்தாள் தொழுது வாழ்த்தி. 34

1830. மார்க்கசகாயக் களிறு - துணைவந்த விநாயகர்.

1832. தவளநகைக் குறமாது தனமழுந்து
புயக்குரிசி தாளில் வீழ்ந்து
நவநிதியம் பலத்துள்நின்று நடம்புரிச
பேசர்பதம் நயந்து போற்றிக்
கவினுறுநல் மாசிலா மணியைஇரு
கண்குளிரக் கண்டு தாழ்ந்து
பவமகலக் கருணைபுரி அணைத்தெழுநா
யகர்பதத்தைப் பணிந்துட் கொண்டு. 35

1833. சந்திரசே கரரிருபொற் றாமரைப்பூங்
கழல்பணிந்து தகவி னோடும்
வந்துநவ மணியொளிர்பூங் கோவிலுக்குள்
உமையினுடன் மகிழ்ந்து வாழும்
சுந்தரப்பொற் தியாகேசர் பதம்பணிந்து
தண்டியடி தொழுது போற்றிக்
கந்தமலி வீதிவிழாக் கொண்டருளும்
பெருஞ்சிறப்புங் கண்டு நாளும். 36

1834. தரிசனைசெய் திவ்விதம்ஆண் டொருமூன்று
தகவாசஞ் செய்து ஞானப்
பெருமிதமும் எக்கிஞாதி காரமுமெய்ப்
பிரகாசப் பேறும் இன்ப
மருவுதென்கீழ்த் திசைப்பதமுந் தேவருக்குள்
மேம்படுநல் வாழ்வும் பெற்றுத்
தருமருவு காவிரித்தென் கரைக்கருகக்
கினிலிங்கந் தாபித் தன்பாய். 37

1835. சிவலோக தீர்த்தநதித் துறையதனிற்
பன்மலராற் சிவனைப் பூசித்து
உவகையொடும் வேண்டும்அபீட் டங்களெலாம்
பெற்றவன்த னூரில் மேவிக்
கவலையற வாழ்ந்தனனென் றுரைத்துமிகு
தருமநந்தி கடலை யுண்ட
தவமுனிமெய்த் தொழுநோய்போய் படிக்கிரங்கி
யுறுதிசில சாற்று கின்றான். 38

1833. தண்டி - சண்டேசன்.

1834. எக்கிஞாதிகாரம் - யாகாதிகாரம்.

1835. அபீட்டங்கள் - மிகவும் விருப்பப்பட்டவைகள்.

1836. **கோதிலாத் தமிழ்முனியே! இத்தலத்திற்**
கோகழிநா யகன்தா ளூட்கொண்டு
ஏதம்றத் தவம்புரிந்திங் கிருந்திடின்மெய்த்
துயரமெல்லாம் எரிசேர் வித்தாம்
போதமும்பே ரின்பமும்பெற் றிடுவையெனப்
புகன்றிடலும் பொதிய மேவு
மாதவன்நந் தீசரடி வணங்கியஃ
தேபுரியு மகிழ்ச்சி கொண்டான். 39

நாற்பத்தொன்பதாவது
அக்கினி பகவானுக்குக் குருத்துரோகம் தீர்த்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1836
திருச்சிற்றம்பலம்

49. அக்கினி பகவானுக்குக் குருத்துரோகம் தீர்த்த அத்தியாயம் (சுருக்கம்)

கிருதயுகத்தில் மூங்கில்மாவனத்து முனிவர்கள் சிவபெருமானைக் குறித்துப் பன்னிரண்டு ஆண்டுகள் யாகங்கள் செய்ய முற்பட்டனர். முனிவர்கள் தத்தம் மனைவியருடனே, யூபத்தம்பம், ஓமகுண்டம் இவற்றைத் தாபித்து, சமித்து ஓமதிரவியம் இவற்றையும் சேகரித்து அவிர்பாகத்தை எவ்வித இடையூறுமின்றி, தேவர்கள் உண்பதற்காக மந்திரம் சொல்லி, அக்கினியை மூட்டி நெய்யினால் ஓமம் செய்தனர். அப்போது, அழகுமிக்க முனிவர்களின் மனைவியர்கள்பால் அக்கினியானவன் காதல் கொண்டான். அப்பெண்களைச் சேராவிட்டால் தான் உயிர்வாழ இயலாது என்று காமநோயால் மெலிந்தான் அக்கினி. மனம்கெட்டு அழகும்போன அக்கினி வெட்கத்தால் நாணி வேள்வியை விட்டு மறைந்துபோய் மேரு மலையில் சென்று ஒளிந்து கொண்டான்.

ஓமகுண்டத்தில் அக்கினி தேவனைக் காணாத முனிவர்கள் திகைத்தனர். தேவர்களோடு சேர்ந்து அக்கினியைத் தேடினர். அவர்கள் எங்கு தேடியும் அக்கினி அகப்படவில்லை. அக்கினி தேவனின் மனைவியர்களான 'சுவதா', 'சுவாகா' என்னும் இருவரும் எல்லாத் திசைகளிலும் தேடினர். இறுதியாக மேருவிலுள்ள ஒரு குகையுள்ளே அக்கினியைக் கண்டனர். உடல் மெலிந்து எலும்பாகிப்போன அக்கினியைப் பார்த்துக்

கண்ணீர் விட்டனர். அவனும் கண்ணீர் சிந்தினான். இதுபற்றித் தேவர்களிடம் முறையிட்ட அம்மங்கையர் அக்கினி தேவனைக் காக்க வேண்டினர்.

அசுவனி தேவர்கள் வந்து அக்கினி தேவனின் நோயைப் போக்க உள்ளுக்கு மருந்தை அளித்தனர். மூன்று ஆண்டுகள் மருந்தளித்தும் நோய் குணமாகவில்லை. இது மனநோயே என்றும் அசுவனி தேவர்கள் கண்டறிந்து, இதற்குத் தக்க பரிகாரம் செய்யும்படி அக்கினியின் இரு மனைவியரிடமும் தெரிவித்தனர். இரு மனைவியரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அக்கினி தேவன் தனக்கு ஏற்பட்ட நோயின் காரணத்தைக் கூறினான். முனிவர்களுடைய மனைவியர் மீது மோகம் கொண்டதை அப்படியே கூறினான்.

அக்கினி தேவனின் மனைவியர் இருவரும் தங்கள் தந்திரத்தால் முனிவர் மனைவியரை அக்கினி தேவனிடம் வருமாறு செய்வதாக வாக்களித்தனர். சுவதா தேவியானவள் முனிமங்கையர்களைப் போல வேடம் பூண்டு கொண்டாள். சுவாகா தேவி அம்மங்கையரை அழைத்து வரும் நங்கையானாள். இவள் கல்யாணி, இவள் அனுசூயை, இவள் சுகேசி, இவள் சந்திரமதி என முனிபத்தினிகள் பெயர்களைக் கூறி, நாளொன்றுக்கு ஒவ்வொரு பெண்ணாக அனுபவிப்பாயாக என்று சொல்லி அக்கினி தேவனிடம் விட்டனர். அவனும் அம்மங்கையர் களைக் கூடி களிப்புற்றிருந்தான்.

இவ்வாறு பல மனைவியரையும் கூடிக் களித்த அக்கினிதேவன், அருந்ததியையும் சேர விரும்பினான். அவள் மட்டும் ஏன் வரவில்லை. அவளையும் அழைத்து வாருங்கள் என்றான். அவனுடைய மனைவியர் பல மந்திர தந்திரங்களைச் செய்தும் அருந்ததியின் உருவம் வரவில்லை. அருந்ததியானவள் கற்புக்கரசியானதால் அவள் பொய் உருவமாகக்கூட வரமாட்டாள் என்பதை அக்கினி தேவனுக்கு அவன் மனைவியர் உணர்த்தினர். இவ்வாறு அடுத்தவர் மனைவியை - பொருளை மனத்தினாலே நினைத்தலும், கள்ளத்தனத்தால் பறிக்க எண்ணுதலும் தீதாகும் என்பதையும் எடுத்துரைத்தனர். அக்கினி தேவனும் தன் நிலை உணர்ந்து அம்மோகத்தை விட்டான்.

குருவின் மனைவி என்றும் பாராது காமமேலீட்டால் அருந்த்தியைக்கூட நினைத்த குரு துரோகத்தின் காரணமாக

அக்கினி தேவனின் உடலெங்கும் இரணமானது; வாய் நீர் ஒழுகியது; வயிறு வீங்கிப் படுக்கையில் கிடந்தான். இதைக் கண்ட முனிவர்கள் வருந்தினர். விதியின் கொடுமையை எண்ணிக் கலங்கினர். முடிவாக, முத்தித் தலமாகிய துறைசையை நினைந்தனர். இத்துறைசையை அடைந்து மாசிலாமணிப் பெருமானை தரிசித்தால் அக்கினிதேவனின் பாவங்கள் தீரும் என அம்முனிவர்கள் அக்கினிதேவனின் மனைவியரிடம் கூறினர்.

அக்கினியும் அவனது மனைவியர் இருவரும் விரைந்து துறைசையை அடைந்தனர். கோபுர தரிசனம் செய்தனர். காவிரியிலும் கோமுத்தித் தீர்த்தத்திலும் நீராடி, சிவவேடம் தரித்தனர். துணைவந்த விநாயகரை வணங்கியபோதே அக்கினி தேவனுடைய உடல் நோயெல்லாம் நீங்கின, குருத் துரோகமும் நீங்கியது. ஒப்பிலாமுலையம்மையையும் மாசிலாமணிப் பெருமானையும் வணங்கிய இவர்கள், கற்பக விநாயகரையும், அழகிய பிள்ளையாரையும், சுப்பிரமணியரையும், சபேசரையும், அணைத்தெழுந்த நாயகரையும், சந்திரசேகரரையும், தியாகேசரையும், சண்டேசனையும் தொழுது களித்தனர். இவ்வாறு மூன்றாண்டுகள் இங்கேயே தங்கி, காவிரியின் தென்கரைக்குப் பக்கத்தில் அக்கினி இலிங்கத்தையும் தாபித்து அன்புடனே பூசித்தனர். இதனால் சித்திகள் அனைத்தும் பெற்று மகிழ்ந்தனர்.

இனி, அகத்தியருக்குள்ள தொழுநோய் நீங்கும் விதத்தை நந்திநாதன் சொல்லத் தொடங்குகிறார்.

ஐம்பதாவது
அகத்தியருக்கு வெண்ணோய் அகற்றி அருள்புரிந்த அத்தியாயம்

1837. அகத்திய முனிவன் தன்ம நந்திசொல் அகத்துட் கொண்டு
மகத்துவந் தருங்கோ முத்தி மாதலத் தமர்ந்து வாழும்
புகழ்ச்சிவ மாசிலாநற் புண்ணிய மணியைப் போற்றித்
திகைப்புறு வெண்ணோய் தீர்ந்து தேசுபெற் றிருத்தல்
சொல்வாம். 1

1838. புலரியிற் சென்று சீதப் பொன்னிநீர் மனையோ டாடித்
திலதருப் பணத்தோ டர்க்கிய முதலிய செய்து வந்து
நலமிகுத் திடுகோ முத்தி நற்புனல் படிந்து செய்ய
கலையுரி யுடுத்து வெண்ணீ றணிந்துகண் டிகைத்தார்
பூண்டு. 2

1839. கோபுரத் தருகில் மேவும் குஞ்சரக் கன்றைப் பூசித்து
ஏர்பெறு பழந்தேங் காய்மோ தகங்கரும் பிளநீ ராதி
சீர்பெறு நிவேத னஞ்செய் வித்தடி பணிந்து சென்று
தாபர அரசாம் போதித் தருவினைச் சூழ்ந்து போற்றி. 3

1840. நற்றிரு வரசின் மூலத் துகந்தகோ முத்தி நாதன்
பொற்றிரு வடிக்கு நல்ல புதுமல ரிட்டுத் தாழ்ந்து
மற்றுமத் தருவின் நீழல் வாழ்கண பதியைக் கண்டு
கற்றிடுந் துதிகள் பேசிக் களிப்புறப் பூசை செய்து. 4

1841. நந்திதே வருக்கு மிக்க நறும்பணி யார வர்க்கம்
கந்தமூ லங்கள் தேங்காய் கனியமுதாதி யூட்டி
முந்திய தூப தீபம் முகமனோ டியற்றிப் போற்றிப்
புந்தியுள் மகிழ்ந்து பீடப் பூதர்தாள் பூசித் தேத்தி. 5

1842. நவநிதி யம்ப லத்துள் நன்னடம் புரிச பேசற்கு
உவகையாய்ப் புழுகு நெய்க்காப் பணிந்துப
சரித்தர்ச் சித்தங்கு
அவிர்மணித் தூப தீபம் அழகுறப் புரிந்து தாழ்ந்து
கவினுறு கன்னி மூலைக் கணேசனுக் கன்பு கூர. 6

1843. பூசனை மகிழ்ந்து செய்து போற்றியுள் ளன்பி னோடும்
ஆசக லுபசா ரத்தோடு அழகிய பிள்ளை யாரை
நேசமோ டருச்சித் தேத்தி நெறியொடு மேல்பால் நிற்கும்
தேசிக முருகர் தாள்மேற் செழுமலர் சொரிந்து தாழ்ந்து. 7

1844. ஆசறு சினக ரத்துள் அன்பொடு சென்று மிக்க
மாசிலா மணியைச் செங்கண் மணிகுளிர்ந் திடக்கண் டோங்கும்
நேசமுள் ளகத்த டங்கா தெழுந்துநன் னிலத்திற் பொங்கித்
தேசொடும் வடியு மாபோற் செழுங்கணீர் சிந்தப் போற்றி. 8

1845. சோடச வுபசா ரத்தோ டபிடேகந் தூப தீபம்
பீடுறு சந்தங் கந்தப் பிரசநல் மலராற் பூசித்து
ஆடக மணிப்பூண் சாத்தி அமுதுநி வேதித் தன்பாய்
நீடுமுத் தளிர்கொள் வில்வ நிகழ்சகத் திரநா மத்தால். 9

1846. அருச்சனை செய்து வேதத் துதியொடும் அளவி லாச்சீர்
உருத்திர மனுவு மோதி உறுந்தமிழ் மாலை சாத்தி
முருக்கிதழ் உமையாள் பங்கா! காவென முகமன் கூறி
நிருத்தமும் ஆடித் தட்டம் இட்டுமுன் நிற்கும் போது.
10

1847. அணைத்தெழு வடிவும் போதி அம்பலத் தாடு கின்ற
துணைச்செழும் பதமுஞ் சந்திரத் துண்டஞ்சார் முடியும் நான்கு
பணைப்புய வாகுங் கையும் பவளவாய் முகமும் கண்ணும்
மணிச்சிவ லிங்கத் தூடு மாசிலான் காட்டக் கண்டு. 11

1848. அங்கணா போற்றி! என்னை ஆண்டருள் அமல போற்றி!
செங்கணா போற்றி! வேதச் சிரப்பரம் பொருளே போற்றி!
கங்கண நாகச் செங்கைக் காதணி குழையாய் போற்றி!
மங்கையோர் பங்க போற்றி! மாசிலா மணியே போற்றி! 12

1849. என்றுமுன் துதிசெய் தேத்தி எழிற்சிவா னந்த வெள்ளத்து
ஒன்றிரண் டறக்க லந்துள் உருகியன் புருவ மாகி
நின்றுவாய் குழறிக் கண்ணீர் நித்திலஞ் சொரியப் போற்றும்
தென்றமிழ் முனிவன் காணச் செழுஞ்சுட ருருவாய்ப் பின்னும். 13

1850. கண்டனக் கடங்காக் கோடி கதிரெனத் தோன்றி நிர்த்த
மண்டபத் தெய்திக் கும்ப மாமுனி காண நின்று
தெண்டிரைக் கடுவுண் கண்டத் திரவியத் தியாக ரூபம்
கொண்டுசுந் தரக்கூத் தாடிக் கோயிலைச் சூழ்ந்து சென்று. 14

1851. தெக்கணா மூர்த்தி யாகிச் சினகரத் தென்பால் மேவி
மிக்கவன் முயல்மே லோர்தாள் மிதித்தொரு தாள்மடக்கி
அக்கணி புயமும் புற்தோல் ஆடையுஞ் சடிலக் காடு
முக்கணும் வதன முஞ்சின் முத்திரைக் கரமுந் தோன்ற. 15

1852. இருந்தகத் தியர்தன் மெய்யில் இலங்குவெண் தொழுநோய் மாற்றித்
திருந்துடற் கருவி யெல்லாம் சிவகர ணங்க ளாக்கிப்
பரிந்தருட் கண்ணும் நல்கிப் பவத்தொடர் பகற்றிக் கீழ்பாற்
பொருந்தழ கியவே ழத்தின் புதல்வனை நோக்கிச் சொல்வான். 16

1853. அழகிய மைந்தா! நந்தம் அகத்திய முனிவன் கேட்பப்
பழமறை முடிவில் யாமுன் பகர்ந்தசித் தாந்த மெல்லாம்
மழலைமென் மொழியாற் கூறி மயக்கறத் தெருட்டி உன்பால்
எழிலுறு சீட னாக்கி இருத்திவாழ்ந் திடுதி என்றான். 17

1852. அழகிய வேழம் - அழகிய விநாயகர்.

1854. அவ்வுரை கேட்ட லோடும் அகத்தியன் ஆடிப் பாடிச்
செவ்விய கமலத் தாள்தன் சிரமுறப் பணிந்து வந்து
கொவ்வைவாய் உமையாள் ஈன்ற குஞ்சரக் கன்றைப்
போற்றி
உய்வகை யெனையாட் கொண்டின் புதவெனப்
பணிந்த போது. 18

1855. திருக்கணாள் நோக்கிச் செங்கை சென்னிமீ தழுத்தி வாக்காற்
பொருட்பட உபதே சித்துப் பொருந்துபா வகமுஞ் செய்து
கருத்துறு மிகுநூற் பண்பும் காட்டியோ கத்தி ருத்தி
அருட்குரு பரன்தா னாகி அவுத்திரி அனைத்துஞ் செய்து. 19

1856. வலப்புற மிருக்கை நல்கி மகிழ்ந்தகத் தியரை நோக்கி
நலத்தினை யுதவும் பஞ்சாக் கரப்பெரு மையினை நாவாற்
புலப்பட உணர்த்து கின்றான் அதனையாம் புகலக் கேட்டி
நிலத்தினைப் பரிக்குந் திண்தோள் மிதுலநீ என்று
சொல்வான். 20

ஐம்பதாவது
அகத்தியர்க்கு வெண்ணோய் அகற்றி அருள்புரிந்த
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1856

திருச்சிற்றம்பலம்

50. அகத்தியருக்கு வெண்ணோய் அகற்றி அருள்புரிந்த அத்தியாயம் (சுருக்கம்)

அகத்தியர் தம் துணைவி உலோபாமுத்திரையுடன் அதிகாலையில் காவிரியில் நீராடித் திலதருப்பணத்துடன் அர்க்கியம் முதலியவற்றைச் செய்து வந்து, கோமுத்தித் தீர்த்தத்திலும் நீராடினார். மான்தோலாடையும் வெண்ணீறும் அக்கமாலையும் அணிந்தார். துணைவந்த விநாயகரைப் பூசித்து, பழம், தேங்காய், மோதகம், கரும்பு, இளநீர் இவற்றைப் படைத்து வணங்கினார். அரசினடியில் வீற்றுள்ள கோமுத்தி நாதரை மலரிட்டுத் தொழுதார். அங்குள்ள விநாயகரை வணங்கினார். நந்திதேவருக்குப் பணியாரவர்க்கம், கந்தமூலங்கள், தேங்காய், பழம் ஆகியவற்றைப் படைத்தார். தூப தீபம் காட்டி வணங்கித் துதித்தார்.

1855. அவுத்திரி - அவுத்திரி தீட்சைகள்.

நவநிதி அம்பலத்துள் நடம்புரியும் சபேசர்க்கு மகிழ்வுடன் புனுகு, நெய்க்காப்பு இவை சாத்தி அருச்சனை செய்தார். கன்னிமூலையிலுள்ள விநாயகரையும் அழகிய பிள்ளையாரையும் துதித்தார். மேற்கிலுள்ள சுப்பிரமணியப் பெருமானையும் வணங்கினார். பின்பு, உள்ளே சென்று மாசிலாமணிப் பெருமானைக் கண்குளிரக் கண்டு, கண்ணீர் மல்கிப் போற்றித் துதித்தார். அபிடேகத்துடன் தூபதீபம் காட்டிச் சந்தனம் ஆபரணம் அணிவித்தார். சோடசோபசாரத்துடன் ஆராதனைகள் செய்தார். தாமரை மலர்கொண்டு அருச்சித்தார். திருவமுது நிவேதித்தார். வில்வதளத்தால் ஆயிர நாமங்கள் சொல்லித் துதித்தார். வேத மந்திரம், உருத்திரம், மனு தேவார திருவாசகங்கள் ஆகியவற்றை ஓதினார். பின்பு கைகொட்டி நடனமாடி சந்நிதானத்தில் நின்றார்.

அப்போது, அணைத்தெழுந்த வடிவையும், போதியம் பலத்துள் ஆடுகின்ற திருவடிகளையும், சந்திரனை அணிந்த முடியையும், நான்கு கரங்களையும், பவள வாயினையும், முகத்தையும், முக்கண்ணையும் சிவலிங்கத்தினிடமாக மாசிலாமணிப் பெருமான் காட்டியருள அவைகளைக் கண்டு தரிசித்து மகிழ்ந்தார். சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி, மனமுருகி அன்பே உருவமாகி வாய்குழறிக் கண்ணீர் சொரிந்து நின்றார்.

மாசிலாமணிப் பெருமான், நிருத்த மண்டபத்தில் அகத்தியர் காணும் வண்ணம் திரவியத் தியாகேசர் உருவங்கொண்டு சுந்தரக் கூத்தாடினார். பின்பு, இறைவன் கோயிலை வலமாகப் போய், தட்சிணாமூர்த்தமாகித் தெற்குப் பக்கத்தில் முயலகன் மீது ஒரு கால் மிதித்து, ஒரு காலை மடக்கி, அக்கமணி அணிந்த புயமும் புலித்தோலாடையும் சடையும் முக்கண்ணும் வதனமும் சின்முத்திரைக் கையும் காட்டியருளினார். அகத்தியருடைய உடலிலுள்ள வெண் தொழுநோயை அகற்றினார். உடற்கருவி களையெல்லாம் சிவகரணங்களாகச் செய்தார். திருவருட் பார்வை நல்கிப் பிறவித் தொடர்பகற்றினார்.

பின்பு, இறைவன் அழகிய பிள்ளையாரைப் பார்த்து 'முன்பு நாம் வேதமுடிவிலே சொன்ன சித்தாந்தமெல்லாம் உனது மழலைச் சொல்லாய் அகத்தியருக்குச் சொல்வாயாக. அவருடைய மயக்கம் அறுத்துத் தெளிவுகொள்ளச் செய்வாயாக' என்று கூறினார். இம்மொழி கேட்ட அகத்தியர் ஆடிப்பாடி மகிழ்ந்து இறைவனடி தொழுது அழகிய பிள்ளையாரை வணங்கினார்.

அழகிய விநாயகர் அருட்பார்வை செய்து தமது திருக்கரத்தை அகத்தியரின் தலைமீது வைத்து, திருவாக்கால் உபதேசித்துப் பாவகமும் செய்தார். சாஸ்திர தீட்சை, யோக தீட்சை செய்து, குருபரனாகி, ஆசாரியனாய் அவுத்திரி தீட்சைகள் செய்து, தம்முடைய வலப்புறத்தில் அகத்தியருக்கு இருக்கையும் தந்தார். பின்பு, பஞ்சாக்கர மகிமையைத் தம் திருவாய் மலர்ந்தருளினார்.

ஐம்பத்தொன்றாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குப் பஞ்சாக்கர மகத்துவம் உபதேசித்த அத்தியாயம்

1857. இருவினை யொப்பி னோடும் இருள்மல பாக மேவத்
திருவருட் சத்திநி பாதம் தீவிர தரமாய்ச் சேர்ந்த
பொருவறு பொதியம் மேவு புனிதமா முனிவன் ஞானக்
கருணையங் கடலைத் தெக்க ணாமுகக் கணேசன் தன்னை. 1

1858. ஆர்வமோ டபிடே காதி செய்துபூ சித்த ருச்சித்து
ஏர்வளர் சந்த மாலை வத்திர மிலங்கு பொற்பூண்
சார்வுறப் புனைந்து பாகந் தகுமமு தருத்தி யேத்திச்
சீர்வளர் தூப தீப மாதிய செய்து போற்ற. 2

1859. சென்னியிற் கமல பாதம் சேர்த்திநற் திருத்தோள் மாலை
மன்னுசீர் முனிவன் தோளின் மருவுறச் சாத்தி நன்னீறு
அன்னவன் தனக்கு நல்கி அகமகிழ்ந் திருந்து கேட்ப
உன்னுபஞ் சாக்க ரத்தின் உண்மைமுன் னுரைப்ப
தானான். 3

1860. ஆரண மாக மங்கள் அறுவகைச் சாத்தி ரங்கள்
ஏருறு மிருதி எண்ணெண் கலைபுரா ணங்க ளெல்லாம்
சீருறும் அஞ்செ ழுத்தின் பெருமையே செப்பும் நீலக்
காருறு கண்ட னுள்ளக் கருணையு மஃதே யாமால். 4

1861. இன்புறு முத்தி வீட்டுக் கெய்திடும் ஏணி யாகும்
துன்பவெம் பவக்க டற்குத் தோணியாம் வினைவ னத்தை
அன்புட னெரிக்கும் அங்கி யாகும்ஆ ணவவி ருட்குப்
பண்புறும் அஞ்செ ழுத்து பருதியு மாகு மன்றே. 5

1861. பருதி - பரிதி - சூரியன்.

1862. ஐம்பத்தோ ரக்க ரம்போல் அன்றெழுத் தஞ்சு மாயை
துன்புரு அவைக ளாகும் இதுஅரு ளுருவா யேய்ந்து
இன்பற உயிர்கள் தோறும் சுகவடி வாகி நிற்கும்
பொன்புரை சடையார்க் கென்றும் பூரண வடிவே யாமால். 6

1863. நிட்கள வடிவ மாகி நிகழும்அஞ் செழுத்தின் சத்தி
கட்கினி தாமி லிங்கத் திடத்தினுங் கனற்குண் டத்து
முட்கரு ணையினால் ஈசன் உவந்திருப் பதுபோ லென்றும்
எட்கணார் நெய்போற் றூல நகராதி எழுத்தில் நிற்கும். 7

1864. பவமறுத் துயிர்கட் கின்பம் பதித்குநிட் களத்தைப் பேசிற்
சிவமரு ளுயிர்தி ரோத மலமத்து விதமாய்ச் சேரும்
நவமொடிவ் வெழுத்துத் தூல சூக்கும வெழுத்தில் நண்ணி
உவகையோ டுலகம் போற்ற உதிப்பதும் உரைப்பன்
கேண்மோ. 8

1865. பெருகெழுத் தைம்பத் தொன்றி லகரத்திற் பிரமன் மெய்யாய்
வருமெழுத் தெண்ணி ரண்டுங் கழித்துமா யவனு காரத்து
உரிமையாய்ப் பிறந்த வையைந் தெழுத்தினி லுளதாய்த்
தோன்றும்
அருநம வெழுத்தைக் கூட்டி அரிநமக் கரிப்ப தாக்கி. 9

1866. உருத்திரன் மகேசன் மிக்க சதாசிவாங் கிசமா யுற்ற
திருத்தகு மகர விந்து நாதத்திற் செனித்த பத்தின்
மருத்தகு சிவாய மாமூன் றெழுத்துமே லாக வைத்தே
அருத்திகொள் நமச்சி வாய வெனுமெழுத் தாக்கி யஞ்சில்.
10

1867. சிவாங்கிச வெழுத்து மூன்றும் சிவவடி வாக மற்றை
நவிலெழுத் திரண்ட யன்மால் நமக்கரித் திடுவ தாகப்
புவிபுகழ் மறைகள் நான்கும் புகலுமிவ் வெழுத்தோ ரைந்து
பவமறப் புவன மெல்லாம் படைத்தளித் தழிக்கு மன்றே. 11

1868. தூலநவ் வாதி யைந்தும் தூலவவ் வாதி தோயும்
சீலமார் கின்ற சூக்குமச் சிகராதி யைந்தெ ழுத்து
மேலதாஞ் சூக்கும மான நாதாதி மேவி நிற்கும்
சாலவே தூல சூக்க வெழுத்துறுந் தன்மை யீதாம். 12

1869. சிதைவில்சூக் குமசி காரா தியற்சிவஞ் சத்தி யான்மா
மதியுறு திரோத மிக்க மலமிவை யைந்து மன்றே
அதிகசூக் குமமாய் வாக்கும் அனாதிகட் கதீத மாகிப்
பதிபசு பாச மூன்றாய்ப் பதிந்தத்து விதமாய்ப் பாரில். 13

1863. நிட்கள - உரு இல்லாத. 1869. சிகாராதியில் - சிவாய நம என்பதில்.

வேறு

1870. நகாரங்கீழ்ப் பீடநடுக் கண்ட மவ்வாய்
நற்சிகர மேற்பீட மாக மீதே
வகாரமிகுங் கல்லபத் திரம தாக
மருவுசிவ லிங்கமே யகார மாக,
அகாரமொடு மிகுமுகர மகர விந்து
நாதவோங் காரத்து ளமலன் மேவி
விகாரமறப் பூசாபி டேகங் கொண்டு
விளங்குதற்கும் அஞ்செழுத்தே மேனி யாமால். 14

1871. பிரமனைநல் நகாரமுமா றனைம கார
வெழுத்துமதிட் டிக்குமுருத் திரரைப் பேணி
உரமருவு சிகாரமுநல் மகேசர் தம்மை
உணர்வரிய வகாரமுஞ்சேட் டிப்பித் தோங்கும்
பரவடிவாஞ் சதாசிவனே யகார மாகிப்
பஞ்சாதி காரசத்தி தனைந டாத்தும்
அரனுருவாம் ஐவருக்குத் தொழிலைந் திற்கும்
அதிகாரி யாவதுமைந் தெழுத்தே யாமால். 15

1872. மண்ணாதி ஐம்பூத வடிவு மாகி
மருவுகந்த மாதியஐங் குணமு மாகிக்
கண்ணாதி யாஞானேந் தியமு மாகிக்
கருதுகன்மேந் தியமுமாய்க் கடினஞ் சீதம்
எண்ணாரும் வெம்மைகலிப் பிடமா மைந்து
பூதகுணிக் குயிராகி யிருந்தெங் கெங்கும்
நண்ணுவதுந் தூலபஞ்சாக் கரம தான
நகராதி ஐந்தெழுத்தின் நலமே யாமால். 16

1873. ஐந்தாகும் பூதகன்ம பலன்கள் கட்டுப்
படும்பிரதிட் டாதிகலை யைந்து மாகி
ஐந்தாங்கீ ழவத்தைகளைத் தரிசிப் பிக்கும்
சுத்தவித்தை யாதியவைந் தாகி மிக்க
ஐந்தாகுஞ் சத்தியோ சாத மாதி
அருள்முகமு மாகியைந்து தொழிலு மாகி
ஐந்தாகி விளங்குசாதாக் கியமு மாகி
அகிலமுமாய் நிற்பதுமைந் தெழுத்தே யாமால். 17

1874. சத்தியோ சாதமுகத் துவார மாதி
தன்னிலுறும் வியோமமமே பாசுபதம் அகோரம்
சுத்தசுரி காத்திரஞ் சிவாத்திர மென்று
சொல்லுமைந் தத்திரமும் இருதையஞ் சிரசோடு
ஒத்திசிகை கவசநேத் திரமா மைந்தும்
உறுஞ்சுத்த மாயைசூக் குமாதி யைந்தும்
நித்தபஞ்ச கஞ்சுகமாங் கலாதி யைந்தும்
நிகழ்த்திடுபஞ் சாக்கரத்தின் நிலையே யாமால். 18

1875. நகரமுதற் றூலவெழுத் தைந்தும் பெத்த
நடத்துநெறி யீதாகு முத்தி தன்னிற்
பகரருட்சூக் குமபஞ்சாக் கரம தாகப்
பயில்சிகர முதலெழுத்தஞ் சுயிர்கள் தம்மை
இகலறுசா லோகாதி தனில்வைத் தின்பம்
ஈயுமதில் மூன்றுபத மொன்று முத்தி
புகலரிய விதிப்படிக்கஞ் செழுத்து ஞானப்
புண்ணியதே சிகனருளாற் பொருந்தல் வேண்டும். 19

1876. ஓங்காரங் கூட்டியெழுத் தைந்து மூன்று
பதமுத்தி யுறுபவருச் சரித்தல் வேண்டும்;
நீங்காத சுத்தபஞ்சாக் கரஞ்சா யுச்சிய
நிலையுறுவோர் புருவநடு நினைந்து நின்று
பாங்கான மதியருக்கன் தனைச்சேர் கின்ற
பாம்புபோற் றோன்றுமருட் பரனோ டொன்றாய்
ஆங்கார மற்றடங்கி யிருத்தல் வேண்டும்
ஐந்தெழுத்தைக் குறைத்தோதில் அமலன் சேரான். 20

1877. ஆனந்தத் திருக்கூத்துச் சிகார மாகும்
அதையுதவுஞ் சிதம்பரமா கியவ காரம்
தானந்த மாயகர வுயிரா னந்தந்
தனைநுகரு மலமருளிற் சாரா வாறு
மோனந்த மாய்நகர மறைத்து நிற்கும்
முழுதுமுயி ரானந்த மயமாய் வாழத்
தானந்தச் சத்திகெடு மகர மிந்தத்
தாண்டவஞ்செய் திடுவதுமைந் தெழுத்தின் சார்பாம். 21

1878. தமருகமாம் பராசத்தி சிகரம் வீசும்
தனிக்கரமிச் சாசத்தி வகர மஞ்சற்
கமர்மலர்க்கை ஞானசத்தி யகர மங்கி
யாங்கிரியை நகரமல முயல்மேல் நின்ற

1874. சுரிகாத்திரம் - க்ஷுரிகம். சிவாத்திரம் - சிவம். 1878. தமருகம் - உடுக்கை.

கமலபத மாதிசத்தி மகர மிந்தக்
கருணைவடி வாய்நடித்துக் களங்கம் நீக்கி
அமலவடி வாக்கியுயிர்க் கின்ப மீவது
அன்புறுசூக் குமபஞ்சாக் கரமே யாமால். 22

1879. பிறவஞ்ச மெலாஞ்சிவமாய்ச் சிகார நிற்கப்
பெருகுமதன் தோற்றரவு வகார மாக
உறவிரண்டற் றுயிராகி யகர மேவ
ஓங்குதிரி புடிவகுப்புத் தோன்றா வாறு
திறமருவு திரோதமாய் நகர மேவத்
திகழ்ந்தவெலாஞ் சிவானுபவ மேலீ டாக்கி
அறமலத்தை யொழித்துநிற்றல் மகர மாக
அமர்வதுஞ்சூக் குமபஞ்சாக் கரமே யாமால். 23

1880. சிவானுபவ முதித்திடநற் சிருட்டி செய்தும்
சிறந்ததுநீங் காதுநிற்கத் திதித்து மந்தத்
தவாதவனு பவமோங்க உயிர்ப்போ தத்தைச்
சங்கரித்துஞ் சுகம்பிரிந்து தோன்றா வாறு
சுவானுபவ உயிர்மறைத்துஞ் சுகமே வீடே
துலங்குமனுக் கிரகமாய்த் தோன்றி யென்றும்
அவாவுறுநற் சிகாராதி யான சூக்கும
ஐந்தெழுத்தே ஐந்தொழில்செய் தருளாய் நிற்கும். 24

1881. சுத்தசாக் கிராதீத முத்தி மேவும்
சுவானுபவ முறுசீவன் முத்தர்க் கெங்கும்
பத்திதரு சிவமொன்றுந் தோன்ற மற்றப்
பசுபாசந் தோன்றாமல் மறைத லாலே
பெத்தமுறுந் தூலபஞ்சாக் கரநவ் வாதி
தானும்பே தப்பொருளாய்ப் பிரியா தொத்து
முத்திபஞ்சாக் கரவடிவாய்த் தோற்றி நிற்கும்
மூலமலத் தினர்க்குலகாய் முதிர்ந்தே தோன்றும். 25

1882. தூலபஞ்சாக் கரமுமிகு முத்தி யீயும்
சூக்குமபஞ் சாக்கரமுஞ் சொன்னோ மித்தைச்
சீலமுறு சைவதே சிகரால் மிக்க
தீக்கைவிதிப் படிகேட்டுச் செபித்தல் வேண்டும்
ஞாலமிசை அபிடேக மில்லார் தம்பால்
நணுகியுப தேசமுற லாகா தியார்க்கும்
சாலவும்வெண் ணீறணிந்தா சாரத் தோடும்
தங்குமவர்க் கேகுருவுஞ் சாற்றல் வேண்டும். 26

1879. பிறவஞ்சம் - பிரபஞ்சம்.

ஐம்பத்தொன்றாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குப் பஞ்சாக்கர மகத்துவம்
உபதேசித்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1882
திருச்சிற்றம்பலம்

51. அழகிய விநாயகர் அகத்தியருக்குப் பஞ்சாக்கர மகத்துவம் உபதேசித்த அத்தியாயம் (சுருக்கம்)

இருவினையொப்புடன் மலபாகமும் பொருந்த திருவருட் சத்திநிபாதம் தீவிரதரமாய்ச் சேர்ந்த அகத்திய முனிவன், தெற்குமுகம் நோக்கியிருக்கும் அழகியபிள்ளையாரைப் பூசித்து, அலங்கரித்து, நல்ல திருவமுதையும் படைத்துத் துதித்து, தூபதீபம் காட்டி வணங்கி நின்றார். அப்போது, விநாயகர் அகத்தியருக்குத் திருவடி தீட்சை செய்து, தாம் அணிந்திருந்த மாலையைத் தோளில் சாத்தித் திருநீறு கொடுத்து உளம் மகிழ்ந்து பஞ்சாக்கர உண்மையினை உபதேசிக்கத் தொடங்கினார்.

வேதங்கள், ஆகமங்கள், ஆறு சாத்திரங்கள், மிருதிகள், அறுபத்து நான்கு கலைகள், புராணங்கள் ஆகியவை யெல்லாம் ஐந்தெழுத்தின் பெருமையினையே கூறுகின்றன. இறைவனுடைய திருவுளக் கருணையும் ஐந்தெழுத்தேயாகும்.

ஐந்தெழுத்தானது, பேரின்பத்தைக் கொடுக்கும் மோட்ச வீட்டை அடைவதற்கு ஏறிச் செல்லும் ஏணியாகவும், கொடிய பிறவிக் கடலிலிருந்து கரையேற்றும் தோணியாகவும், வினைக் காட்டை எரிக்கும் நெருப்பாகவும், ஆணவமல இருளுக்குச் சூரியனாகவும் ஆகும்.

ஐந்தெழுத்தானது ஐம்பத்தொரு அட்சரங்களைப் போல அல்ல; ஆயின், இந்த ஐந்தெழுத்து, அருள் உருவாய்க் கலந்து துன்பம் நீங்க உயிர்கள் தோறும் சுகவடிவாகி நிலைபெற்று நிற்கும். இறைவனது முழு உருவமும் இந்த ஐந்து எழுத்தேயாம்.

சிவலிங்கத்தினிடத்தும் அக்கினிகுண்டத்திலும் கருணை யோடு இறைவன் மகிழ்ந்திருப்பது போல, உருவில்லாத வடிவமாகி விளங்குகின்ற ஐந்தெழுத்தின் சக்தியானது, எள்ளுக்குள் எண்ணெய் போலத் தூலமான 'ந'வை, முதலாக உடைய எழுத்தால் நிற்பதாகும். (நமசிவாய என்பதாம்).

பிறவியை அழித்து ஆன்மாக்களுக்கெல்லாம் இன்பத்தை நிலை நிறுத்தும் நிட்களத்தைச் சொல்லுமிடத்து, சிவம், அருள், ஆன்மா, திரோதம், மலம் இவற்றுடன் அத்துவிதமாகச் சேருகின்ற 'ந' முதலாக உடைய இந்த ஐந்தெழுத்துக்கள் தூலம், சூக்குமம் ஆகிய இவ்விரண்டையும் அடைந்து உலகில் உள்ளவர்கள் செபிக்கத்தக்கதாகத் தோன்றுவதைச் சொல்லக் கேட்பாயாக.

ஐம்பத்தொரு அட்சரங்களில், அகரம் பிரமனும், உகரம் திருமாலும், இத்துடன் ஐந்தெழுத்தில் இருக்கும் 'நம' என்னும் எழுத்தைக் கூட்டி, இவை சேர்ந்தவை திருமாலைத் துதிப்பதாகும். (ஓம் நம).

உருத்திரன், மகேசன், சதாசிவன் இவர்கள் பங்காகப் பொருந்திய, மகரம், விந்து, நாதம் இவற்றில் உண்டான 'சிவாய' என்னும் எழுத்தைச் சேர்த்து, ஆகக்கூடிய ஐந்தில் (நமசிவாய), 'சிவாய' என்னும் மூன்றெழுத்துக்களும் சிவவடிவமாகவும், மற்றைய (நம) இரண்டும் பிரமனையும் திருமாலையும் வணங்கு வதற்காகவும் என்று மறைகளும் கூறுகின்றன. இவ்வைந்து எழுத்துக்களும் பிறவிகெட எல்லா ஆன்மாக்களையும் படைத்துக் காத்து அழிப்பதாகும்.

தூலபஞ்சாட்சரமாகிய 'ந' முதலான ஐந்தெழுத்துகளும் 'வ' முதலானவைகளிலே பொருந்தி நிற்கும் 'நமசிவாய' - 'யநமசிவ' - 'வயநமசி' என்பதாகும்; சூக்கும பஞ்சாட்சரமாகிய 'சி' முதலான ஐந்து எழுத்துக்களும் நாதம் விந்து மகரம் முதலியவற்றுடன் கூடிய 'ய' வ்வாதிகளிலே பொருந்தி நிற்கும்; 'சிவாய நம' - 'மசிவாயந' ஆகிய இவையே தூலசூக்குமத்திலுறும் தன்மையாகும்.

சூக்குமமான சிகாராதியில் (சிவாயநம என்பதில்) சிவம் (சி), சத்தி (வா), ஆன்மா (ய), திரோதம் (ந), மலம் (ம) என்பதாம். இவையல்லாமல், ஆதிசூக்குமமாக வாக்கு, மனம் இவைகட்கு அதீதமாகி பதி, பசு, பாசம் இம்மூன்றும் பொருந்தி அத்துவிதமாகவும் இருக்கும்.

'ந' காரம் கீழ்ப்பீடம்; மத்தியபாகம் 'ம' காரம்; 'சி' காரம் மேற்பீடம்; 'வ' காரம் கல்லபத்திரம் ஆகப் பொருந்திய சிவலிங்கமே ய'காரம்'. அகரம் உகரம் மகரம் விந்து நாதம் ஆகிய ஓங்காரத்தின் உள்ளே இறைவன் பொருந்தி எந்தவித

விகாரமும் இல்லாமல், பூசை, அபிடேகம் இவற்றை ஏற்றுக் கொண்டு விளங்குவதால் ஐந்தெழுத்தே இறைவனுடைய திருமேனியாகும் என்பதாம்.

பிரமனை 'ந' காரமும், திருமாலை 'ம' காரமும், உருத்திரரைச் 'சி' காரமும், மகேசுரரை 'வ' காரமும் சேட்டிப் பித்து விளங்கும் பரவடிவாகிய சதாசிவம் 'ய' காரமாகி, பஞ்சாதி கார சத்தியை நடத்தும் இறைவன் உருவமாகிய, ஐவருக்கும் ஐந்தொழிலுக்கும் ஐந்தெழுத்தே அதிகாரியாம்.

மண், தீ, நீர், வளி, ஆகாயம் என ஐம்பூத வடிவாயும்; ஓசை, பரிசம், உருவம், சுவை, நாற்றம் என்னும் குணங்களாயும்; மெய், வாய், கண், மூக்கு, செவி (சுரோத்திரம், துவக்கு, சட்சு, ஜிஹ்வா, ஆக்கிராணம்) என்னும் ஞானேந்திரியமாயும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியமாயும்; கடினம், சீதம், வெம்மை, சலிப்பு, இடம் என்னும் பூதகுணியாயும் ஆகிய இவைகளுக்கெல்லாம் உயிராக இருந்தும், எல்லா இடங்களிலும் பொருந்துவதுமாகிய தூலபஞ்சாட்சரமான 'ந' முதலான ஐந்தெழுத்தின் தன்மையாகும்.

ஐந்துபூத கன்ம பலன்கள் கட்டுப்படும் பிரதிட்டாகலை முதலிய ஐந்துமாகியும்; ஐந்தாகிய கீழ்அவத்தைகளைத் தரிசிப்பிக்கின்ற சுத்தவித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என்னும் ஐந்தாகியும்; சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம் என ஐம்முகங்களாகியும்; ஐந்து தொழில் களாகியும்; ஐந்தாகி விளங்கும் சாதாக்கியமாகியும் நிற்பது இந்த ஐந்தெழுத்தேயாகும்.

சத்தியோசாதம் முதலான முகங்களில் பொருந்தும் வியோமம், பாசுபதம், அகோரம், க்ஷுரிகம், சிவம் ஆகிய ஐந்து அஸ்திரங்களும், இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் ஆகிய ஐந்தும், சுத்தமாயை சூக்குமாதி ஐந்தும், பஞ்ச கஞ்சுக மாகிய கலைகள் ஐந்தும் ஐந்தெழுத்தின் நிலைகளேயாகும்.

'ந' காரம் முதலான தூலபஞ்சாட்சரம் பெத்தநிலையை நடத்தும் நெறியாகும்; 'சி'காரம் முதலான சூக்கும பஞ்சாட்சர மானது முத்தி நிலையில் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகிய இவற்றில் உயிர்களை வைத்துப் பேரின்பத்தைத் தரும். சாலோகம், சாமீபம், சாரூபம் ஆகிய முதல் மூன்றும் பதவிகள்; சாயுச்சியம் முத்திநிலையாம்.

சொல்லுதற்கரிய ஐந்தெழுத்தானது முறைப்படி ஆசாரியன் அருளால் அடைய வேண்டும்.

மூன்று பதமுத்தியை அடைபவர்கள் 'சிவாயநம' என்பதோடு முதலில் 'ஓம்' காரத்தையும் சேர்த்து 'ஓம் சிவாயநம' என்று உச்சரிக்க வேண்டும்; சாயுச்சிய நிலையை அடைபவர்கள் சுத்த பஞ்சாட்சரத்தைப் (சிவாய நம) புருவநடுவில் வைத்து நினைத்து இறைவனோடு ஒன்றாக வேண்டும். மேலும், ஐந்தெழுத்தைக் குறைத்து ஓதினால் இறைவனை அடைய முடியாது.

ஆனந்தத் தாண்டவம் 'சி' காரமாகவும், அந்தத் தாண்டவத்துக்கு இடமாகிய சிதம்பரம் (ஞானாகாயம்) 'வ' காரமாகவும், ஆனந்தத்தை நுகரக்கூடிய ஆன்மாவானது 'ய' காரமாகவும், திரோதம் 'ந' காரமாகவும், எப்போதும் ஆன்மா வானது மேலாம் வீட்டில் ஆனந்தமாக வாழும்படியாகச் செய்வது 'ம' காரமாகவும் அமைந்து தாண்டவம் செய்வதும் இந்த ஐந்தெழுத்தேயாம்.

உடுக்கையாகிய பராசத்தியானது 'சி' காரமாகவும், வீசிய தனிக்கரமானது இச்சாசத்தியாகி 'வ' காரமாகவும், ஞானசத்தி யாகிய அபயகரமானது 'ய' காரமாகவும், அக்கினியானது 'ந' காரமாகவும், முயலகன் மீது நிற்கும் ஆத்திசத்தியாகிய பதமானது 'ம' காரமாகவும் இருந்து கருணை உருவாக நடித்து மலத்தைப் போக்கி நிர்மல வடிவாகச் செய்து ஆன்மாக்களுக்கு இன்பத்தைக் கொடுக்க வல்லது இச்சூக்கும பஞ்சாட்சரமாகும்.

பிரபஞ்சமெல்லாம் சிவமாக 'சி' காரமும், அவ்வுலகின் தோற்ற ஒலி 'வ'காரமும் பொருந்த, இரண்டற்ற உயிராக அத்துவிதமாய் 'ய' காரம் பொருந்த, ஞாதுரு ஞானம் ஞேயங் களாகிய திருபுடியின் பேதம் தோன்றாதபடி திரோதமாய் 'ந' காரம் தோன்ற எல்லாம் சிவானுபவ மேலீட்டாக்கி மலத்தை ஒழித்து நிற்றல் 'ம' காரமாகப் பொருந்துவது சூக்கும பஞ்சாட்சரமேயாகும்.

சிவானுபவமானது தோன்றும்படியாகச் சிருட்டித்தும், அச்சிவானுபவமானது நீங்காமல் காத்தும், சிவானுபவமானது ஓங்க ஆன்ம போதத்தைச் சங்கரித்தும், சுகமானது பிரிவுற்று மீண்டும் தோன்றாதவாறு சுவானுபவ உயிரை மறைத்தும், மேலோங்கிய சுகமே அநுக்கிரகமாகவும் தோன்றி நிற்பது 'சி'

காரம் முதலான சூக்கும பஞ்சாட்சரமே ஐந்தொழிலையே செய்து நிற்கும்.

சுத்த சாக்கிராதீத முத்தியை அடையும் சுவாநுபவம் பெற்ற சீவன் முத்தர்களுக்கு எங்கும் எல்லாம் சிவமாகத் தோன்ற, ஏனைய பசு பாசங்கள் தோன்றாமல் மறைதலால் பெத்தநிலையைத் தரும் தூல பஞ்சாட்சரமான 'ந' வ்வாதியும் பேதப்பொருளாய் பிரியாது ஒத்து (சமமாய்) முத்திபஞ்சாட்சர வடிவாகத் தோற்றி நிற்கும். மூல (ஆணவ) மலத்தினர்களுக்கு (எல்லாம் சிவமாகத் தோன்றாது) உலகமாகவே தோன்றும்.

தூல பஞ்சாட்சரத்தையும், முத்திகொடுக்கின்ற சூக்கும பஞ்சாட்சரத்தையும் இதுவரை சொன்னோம். இதை ஆசாரியனிடத்தில் விதிப்படி தீக்கை பெற்று செபித்தல் வேண்டும். ஆசாரியாபிடேகம் இல்லாதவரிடத்தில் உபதேசம் பெறுதல் கூடாது. வெண்ணீறணிந்து ஆசாரத்தோடு இருப்பவர்களுக்கே ஆசாரியனும் உபதேசம் செய்தல் வேண்டும்.

இவ்வாறு அகத்திய முனிக்கு அழகிய விநாயகர் ஐந்தெழுத்தின் உண்மையைச் சொல்லியருளினார்.

ஐம்பத்திரண்டாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சைவத்திறம் உரைத்த அத்தியாயம்

1883. **என்று கணேசர் அகத்திய மாமுனிக் கின்போடு**
நன்றிகொள் அஞ்செழுத் துண்மை நவிற்றிய நலமீதாம்
துன்றுசை வத்திற மோதிய தன்மையுஞ் சொல்வேம்கேள்
வென்றிகொள் வேன்மிது லேசவெ னத்தவு
மியர்விள்வார். 1

1884. **சுத்தசை வத்திறங் கேளென அம்பிகை சுதனாகும்**
அத்திமு கத்துவி நாயக னின்பொடு மறைகிற்பான்
சத்திய மானசி வத்துட னேயுறு சம்பந்தம்
பத்தி மிகுத்தவர் சைவமெ னச்சொல்வர் பண்போடும். 2

1885. **ஐம்புல னாகிய பற்றுறு பாச மறுத்தின்பச்**
செம்பொருள் காட்டுமுண் மைச்சரி யாதியிற்
சேர்ந்தென்றும்
நம்பனை யன்பொடு மர்ச்சனை செய்துநன் னலமேவித்
தும்பற வாழ்வது சைவமெ னச்சொல்வர் தூயோரே. *3*

1886. பந்த மிகுத்துள பாசம் வளர்த்திடு பணிமேவும்
புந்திகொள் இச்சையோ டர்ச்சனை செய்து பொதுவாகும்
மந்த தரத்தொடு மந்தமு மாம்பொது வளருண்மைத்
தந்திர வர்ச்சனை தீவிரம் தீவிர தரமாமால். 4

1887. ஆர்க்கு மிலந்துற வாமிரண் டிற்செயு மறம்வேறாய்த்
தீக்கை செபஞ்சிவ பூசைதி யானமெய்ந் நூலோதல்
ஊகக முடன்பிற ருக்குரை செய்குத லொன்றாயும்
ஏற்க வுறும்பலன் வேறுவே றாகியே இசைவாகும். 5

1888. போகி விரத்தர்க ளுட்சம யம்புணர் வுற்றாலும்
பாகமி ரண்டுசெய் வித்திடும் பண்புறு சரியாதி
யாகமு றுங்கரு மம்பரி பாகம தாம்போகிக்
கூடிக முறுந்துற வோர்க்குள தாமல முறுபாகம். 6

1889. தாக முடன்தனு வாதியி லிச்சை தருங்கன்ம
பாகமவ் வாசை அறுத்திடு நல்மல பரிபாகம்
ஏர்கெழு மங்கைய ராசை மிகுப்பர்க ளில்லத்தோர்
தோகையோர் பங்கன்மே லாசை மிகுப்பர்கள் துறவோரே. 7

1890. ஆசைவஞ் சத்தின் மிகுத்தரன் மேற்சிறி தமர்வோர்கள்
பேசுல கத்தரு மணியென வேபெயர் பெறுவார்கள்
சீசியெ னப்பிர பஞ்சம் வெறுத்தரன் மேற்சித்த
மாசற வைத்தவ ரேசிவ தருமணி யெனவாழ்வார். 8

1891. வேசைய ராசை மிகுத்திடு வோரனை மேற்பூணும்
கூசலு றாதவர்க் கீந்திட வாங்கியுள் கொடுபோவர்
பாச மிகுத்திடு மாதர்க ளாசை பருத்துள்ளோர்
தேசுறு நற்பர மன்பொரு ளுங்கொடு செல்வாரே. 9

1892. கடுந்தொழில் வன்கொலை கோபம் உவப்பொடு களவின்கண்
உடந்தை புரிந்தத னாற்பொருள் வந்துகை யுற்றாலும்
இடம்பெறு மெய்த்துற வோர்சிவன் தன்பணிக் கேயீந்து
தடங்கொடு வாழ்வரல் லாதுமின் னாரிடை சேராரே. 10

1893. தவம்பிற ருக்குரை செய்தவஞ் செய்பவர் தவவேடம்
உவந்து சுமப்பத னாற்பிர யோசன மொன்றில்லை
பவந்த முறப்பல புல்லூரி மேனியிற் பந்தித்து
நவம்பெறு புட்கவர் வோர்களை யொப்பர்கள் நலமெய்த. 11

1887. இலம் - இல்லறம். 1893. பிரயோசனம் - பலன்.

1894. வாதனை யற்றர னைத்தியா னித்திடில் மனம்நிற்கும்
வாதனை யாற்சிவ னைத்தியா னித்திடில் மனம்நில்லா
வாதனை யற்றவ ரேதுற வுற்றவர் மனையுற்றும்
வாதனை யுற்றவ ரேதுற வற்றவர் மனைவிட்டும். 12

1895. இல்லோ டிருந்துமில் வாதனை தீர்ந்தா னின்பெய்தல்
நல்லோர் மிகுந்துமுன் செய்தவ மேலிடு நலமாகும்
பல்லோர்க ளுக்கும துற்றிடு தன்மைகள் பலியாவாம்
பொல்லாத வாதனை தீர்துற வெய்தலே புகழாமால். 13

1896. ஆதலால் மெய்த்துற வுற்றிடு போதக ஆசான்பாற்
தீதறு தீக்கை பெறிற்பய னொல்லையே சித்திக்கும்
சாதக முற்றவ னேவலில் நிற்பதே தவமாகும்
ஏதமில் லாதசை வத்திற மாவதும் இஃதேயாம். 14

1897. மின்மினி யுற்கம் விளக்கொளி பந்தம்விண் மீன்போன்ற
தன்மையர் பற்றுறு தேசிகர் பற்றறு சார்புற்றே
மம்ம ரகற்றிடு தீக்கை யளிப்பவர் மதிபோல்வர்
அம்மையு மிம்மையி லாக்குவோர் ஞானசூ ரியராமால். 15

1898. ஊனுகர் வோருவர்ப் பின்றி யுரைப்பரவ் வூன்தன்னை
ஊனுக ரார்வெறுப் புற்றுவர்ப் பாகவே யுரைசெய்வார்
ஞானமில் லார்பிர பஞ்சம னைத்தையும் நலனென்பார்
ஞானமுள் ளார்பிர பஞ்சம னைத்தையும் நரகென்பார். 16

வேறு

1899. கருடனைத்தா னாகாப்பா விக்குஞ் சித்தி
கைவந்தோர் பார்த்திடுகண் பார்வை யார்க்கும்
பெருகுவிடந் தலைக்கொளினுந் தீர்த்திங் குய்யும்
பேறளிக்குங் கருடனைப்பே ணாதார் கண்கள்
அருகினிலுற் றாயிரங்கண் நோக்கி னாலும்
அற்பமெனி னும்விடந்தீ ராது ஞானக்
குருபரன்கட் பார்வையினா லன்றி முன்னைக்
கொடியமலம் பிறர்பார்க்கிற் குறையா தன்றே. 17

1900. பாசத்திற் பற்றுமிகுத் தரன்பாற் சற்றே
பற்றுடையோர் தீக்கைதரும் பயனைப் பார்க்கிற்
தேசுற்ற காட்டுமருந் ததனை நாசி
செவிகண்நாக் கினிற்செலுத்திக் குடோரி யாலே

1896. ஒல்லையே - விரைவிலேயே.

1899. ஞானக்குருபரன் - ஞானாசாரியன்.

1900. குடோரி - கத்தி. அங்கி - நெருப்பு.

ஆசற்ற மெய்யையறுத் தங்கி யாற்சுட்டு
அருவிடந்தீர்த் திடுவதுபோ லாகு மென்று
நேசத்தா லவரவர்கன் மத்தின் சார்பால்
நிச்சயமுங் குருவிடத்தில் நிகழ்வ தாகும். 18

1901. பாவனையாற் செயல்ஞான தீக்கை யாகும்
பகர்கரும தீக்கைகளோ மத்தாற் செய்தல்
நேர்வழியாஞ் சத்தியநிர் வாணஞ் சுத்தா
வத்தையறி வித்தருளில் நிறுத்த லாகும்
ஆவலுடன் அவத்தையுணர்த் தாது செய்யும்
அதுவசத்திய நிருவாண மாகுஞ் சுத்தம்
ஏவிடுநற் தத்துவசுத் தியினோ டான்ம
சுத்தியுறு முயிரேவீட் டின்ப மெய்தும். 19

1902. அகளமயஞ் சகளமய மாகி நின்றே
அம்பலத்தி லாடுமணி யாசா னாகி
நிகளமல மறுத்திடுவ தன்றி யார்தான்
நீக்குவரிப் பவத்துயரை நேரே தீக்கை
மிகவுறுபா தகத்தினொடும் பெற்றுத் தூய
உடல்பொருளா விகள்மூன்றும் விமலற் கீந்து
சுகமுறுதல் நற்சீடர் தொழிலா முள்ளச்
சுத்தியிலார் வினைஅவரே துய்ப்ப ரென்றும். 20

1903. நிலவுசிவ ஞானகுரு வருளுந் தீக்கை
நெறிபொருந்தித் திரிபையம் விகற்பம்நீங்கி
இலகியஞா னத்தொழிலோர் கையிற் தானம்
எள்ளளவு செயினுமொரு சனனத் தின்கண்
நலமருவு முத்தியெளி தாகு மாயின்
நற்பொருளோ டுயிர்தேக நவையி லாசாற்கு
அலருமனத் துடனீவோர் தேகத் தோடிங்கு
அருள்முத்தி பெறுவததி சமமோ வன்றே. 21

1904. தன்மகவுக் குறுநோய்தீர்த் திடுவோர் கூலி
தான்வாங்கி யோதீர்ப்பர் அதுபோற் தன்பால்
நன்மையுறுந் தீக்கையிலுற் பவித்தோர்க் கூனும்
ஞானமுமெய்ஞ் ஞானகுரு நல்கிக் காப்பன்
புன்மலத்தோ ரிடங்கூலி வாங்கித் தீக்கை
புரிந்தந்தப் பொருளாலிற் புரப்போர் ஈயார்
இன்மருவு மவர்தமிலு மடியார்க் கீவோர்
ஏகதே சத்திலுண்டா யிருப்ப ரன்றே. 22

1902. அகளமயம் - அருவ மயம். சகளமயம் - உருவமயம்.
பவத்துயர் - பிறவித் துன்பம்.

1905. சாதிதனைக் குறித்திறுமாந் திருப்பர் சில்லோர்
தனப்பெருக்கி னாலிறுமாந் திருப்பர் சில்லோர்
கோதில்குரு வென்றிறுமாந் திருப்பர் சில்லோர்
குருமகவென் றேயிறுமாந் திருப்பர் சில்லோர்,
சாதியுட லுயிர்க்கிலைநற் பண்பே சாதி,
தனப்பெருக்கங் குடங்கவிழ்நீர் தனைப்போல் மாயும்,
கோதில்குருச் சிவனையன்றி உயிரா காது
குருமகவூ னலஉயிராங் குறிக்குங் காலே. 23

1906. ஆக்கையுயி ரலவெறும்பொய் யாகு மென்றே
ஆய்ந்தகற்றிச் சற்குருவி னருளாற் பெற்ற
தீக்கைமற வாமல்மே லவத்தை மற்றும்
சிவநேச ரேசிவமாய்ச் சிறந்து வாழ்வர்;
ஆக்கையைத்தா னென்றகங்கா ரித்தாய் வின்றி
ஆசற்ற ஆசான்பொன் னடிபோற் றாமற்
தீக்கையிழந் தேகீழா லவத்தை பற்றும்
சிவநேச மற்றவரே சடமாய்ச் சேர்வர். 24

1907. மருணீக்குந் தீக்கைவகை நான்கு முற்று
மாசிலான் மூன்றுருவு மனம்பற் றாமற்
பொருணோக்கம் புவிநோக்கம் மாதர் நோக்கம்
பொருந்தியலை வோர்முத்தி பொருந்தா ராகும்;
குருநோக்கம் சிவநோக்கம் அடியார் நோக்கம்
குறித்துவணங் கிப்பணிசெய் குணமுற் றோர்கள்
அருணோக்க முடையவராய்த் தீக்கை மார்க்கம்
அறியார்க ளெனினுமன்பால் அடைவர் முத்தி. 25

1908. நித்தியமாம் அறுபொருளு முணர்ந்து பாசம்
நீங்கிநிற்போர் சிவத்தினிலுற் பவித்தோ ராகும்
அத்தைமறந் தநித்தியத்தை நித்த மென்றாய்ந்து
அரும்பாசக் கட்டிலகப் படுவோ ரெல்லாம்
பித்துறுபொய்ம் மலத்தினிலுற் பவித்தோ ராகும்
பெருமலமற் றோரறிவாய்ப் பிறங்கி வாழ்வர்;
தொத்துமல மறாதவர்கள் சடமா யோனித்
துளைகள்தொறும் நுழைந்தலைவர் சுகமெய் தாரே. 26

1905. உயிர் - ஆன்மா.

1906. ஆக்கை - உடல். பொய்யாகும் - அழியுந் தன்மையாகும்.

1907. மருள் - மயக்கம்.

1909. *ஒழுக்கமுடன் அன்பருளா சாரம்சீலம்*
உறவுபசா ரந்தானம் உறுதி வாய்மை
வழுக்கறுநற் தவம்சிவனை அருச்சித் தேத்தல்
வணங்கல்சின மகற்றலருள் மதிநூ லோதல்
அழுக்கறுநற் துறவடக்கந் தொழில்நல் வாக்கோடு
அறிவொருமூன் றும்சிவனுக் காக்கி வாழ்தல்
இழுக்கிலாத் திறமருவும் அறமாம் சைவத்
திறமுமிவை யாகுமென இசைதல் வேண்டும். **27**

ஐம்பத்திரண்டாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சைவத்திறம் உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1909.

52. அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சைவத்திறம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

உண்மையான - அழியாததான சிவத்தினது சம்பந்தம் சைவம் என்று சொல்லுவர் பக்திமிக்கோர். மேலும், ஐம்புலன் களின் வழியாகக் கொண்ட பாசத்தை அறுத்து, இன்பமான உண்மைப் பொருளைக் காட்டும் சரியையாதி வழிகளில் சேர்ந்து எப்பொழுதும் சிவபெருமானை அன்புடன் அருச்சித்து இன்பத்தையடைந்து துன்பம் நீங்க வாழ்வது சைவம் என்று பெரியோர் கூறுவர்.

பந்தத்தை மிகுவிக்கும் பாசத்தை வளர்க்கும் உலக விஷயாதிகளில் இச்சையுடன் அர்ச்சனை செய்வது பொதுவாகும். அது மந்ததரம் மந்தம் ஆகிய இரண்டுமாகும்; உண்மையான ஆகம முறைப்படி அர்ச்சனை புரிவது தீவிரமும் தீவிர தரமுமாம்.

இல்லறம், துறவறம் என்னும் இந்த இரண்டிலும் செய்யும் தருமம் வேறாகி தீக்கை, செபம், சிவபூசை, தியானம், உண்மை நூல்களை ஓதல், பிறருக்கு உரை செய்தல் ஆகிய இவை ஒன்றாகவும், அடையும் பலன்கள் மட்டும் வேறு வேறாகவும் பொருந்தும்.

போகி விரக்தர் ஆகிய இவர்களுள் சமயம் சேர்ந்தாலும் இரண்டு பாகங்களாகச் செய்வித்திடும். சரியை முதலானவை களும் யாகாதி கருமங்களும் போகிக்குப் பக்குவ முதிர்வும்,

துறவோர்க்கு அறியுந் தன்மையும் உண்டாகும். மலமுறு பாகமானது, வேட்கையுடன் உடல் முதலியவற்றில் விருப்பத்தைக் கொடுக்கும்; கன்மபாகமானது அவ்விருப்பத்தை அறுக்கும் நல்ல மலபரிபாகமாகும். இல்லறத்தவர்கள் பெண்கள் மீது விருப்பத்தை மிகுதிப்படுத்துவர்; துறவறத்தார் இறைவன் மீதுள்ள பக்தியை (விருப்பத்தை) மிகுதிப்படுத்துவர்.

ஆசையானது, கொடுமை பொய் இவற்றில் மிகுதியாகி, இறைவனிடத்தில் சிறிது அன்பு வைப்பவர்கள் அல்லது சிறிது நேரம் தியானிக்கின்றவர்கள் 'உலக தர்மணி' என்று பெயர் பெறுவர். சீ சீ என்று உலகத்தை வெறுத்து இறைவனிடத்தில் எப்போதும் மாசற்ற மனத்தை வைப்பவர்கள் - இடைவிடாது தியானிக்கின்றவர்கள் 'சிவதர்மணி' என்று பெயர் பெறுவர்.

விலைமாதரிடம் விருப்பம் அதிகமாக உடையவர்கள், தம் தாய் அணிந்துள்ள ஆபரணங்களையும் கூசாமல் கேட்டு வாங்கிச் சென்று அவர்களுக்குக் கொடுப்பர்; மங்கையரிடம் பாச மிகுதியினால் அதிக ஆசையை உடையவர்கள் இறைவனுடைய பொருளாயினும் அதனைக் கொண்டு சென்று அவர்களுக்குக் கொடுப்பர்.

கடுந்தொழில், கொடிய கொலை, கோபம், மகிழ்ச்சி, களவு இவைகட்கெல்லாம் உடந்தையாயிருந்து அதனால் வருகின்ற பொருள்கள் தன்வசமானாலும் அவற்றை உண்மையான துறவிகள் இறைவன் பணிக்கே கொடுத்து வாழ்வார். அவ்வாறின்றி மகளிரிடத்தில் சேரமாட்டார்கள்.

தவத்தைப் பிறருக்குபதேசித்துத் தான் பாவம் செய்பவர்கள் தவவேடத்தைத் தாங்கிச் சுமப்பதனால் ஒரு பயனும் கிடையாது; அவர்கள், உருவத்தைப் புல்லால் செய்து வைத்துப் புட்களைப் பிடிக்கின்றவர்களை ஒப்பர்.

மலவாதனை அற்று அரனைத் தியானித்தால் மனம் ஒருப்படும்; வாதனையுடன் தியானித்தால் மனம் ஒருமைப்பாடு அடையாது. மனையிலிருந்தும் வாதனை அற்றவர்களே துறவிகள்; மனைவியை விட்டும் வாதனை உற்றவர்கள் துறவுநிலையை அடையாதவர்களாவார்கள்.

இல்லறத்திலிருந்தும் அம்மலவாதனை நீங்கப் பெற்று இன்பமடைதலாவது: அவனது முன்னோர்கள் செய்த தவமேலீட்டின் நன்மையாகும். எல்லோருக்கும் அந்தத்

தன்மைகள் பலிக்காது, கொடிய மலவாசனை நீங்க, துறவு அடைதலே புகழ்ச்சியாகும். ஆதலால், உண்மைத் துறவடைந்த ஆசாரியனிடத்தில் தீக்கை பெற்றால் விரைவில் பயன்கிட்டும்; பயிற்சியடைந்து அவன் ஏவலில் நிற்பதே தவம். இதுவே சைவத்திறமாம்.

மாமிசம் உண்பவர்கள் வெறுப்பில்லாமல் அந்த ஊனைச் சிறப்பித்துக் கூறுவர்; மாமிசம் உண்ணாதவர்கள் வெறுப் படைந்து அவ்வூனை இகழ்ச்சியாகவே கூறுவர்; அதுபோல, ஞானம் இல்லாதவர்கள் உலகனைத்தும் இன்பம் பயக்கக் கூடியதென்று உரைப்பர்; ஞானமுடையவர்கள் உலகை நரகம் என்பர்.

கருடபாவனையால் (கருடனைத் தானாகப் பாவித்தல்) சித்தி பெற்றவர்கள் பார்க்கின்ற பார்வையில் நஞ்சு தலைக்கேறினாலும் உடனே தீர்ந்துவிடும்; கருடனைப் பாவிக்காதவர்கள் - அப்பாவனையில் சித்தி பெறாதவர்கள் அருகிலிருந்து ஆயிரம் கண்கொண்டு பார்த்தாலும் நஞ்சு நீங்காது. அதுபோல, ஞானாசாரியனுடைய ஞானக்கண் பார்வையினால் அல்லாமல் பழையமலம் நீங்காது.

பாசத்தில் பற்று மிகுந்து இறைவனிடத்தில் சிறிது பற்றுடைய ஆசாரியன் செய்யும் தீக்கையினது பயனை ஆராயுமிடத்து, காட்டிலுள்ள மூலிகையை மூக்கு, காது, கண், நாக்கு இவற்றில் செலுத்திக் கத்தியினாலே உடலை அறுத்து நெருப்பாற் சுட்டு நஞ்சைத் தீர்ப்பது போலாகும். அவரவர்களது கன்மத்தின் சார்பாக ஞானாசாரியனது பார்வையினாலேயே நிச்சயம் மலம் நீங்குவது நிகழ்வதாகும்.

பாவனையால் செய்யும் தீக்கை ஞானதீக்கையாகும். ஓமம் முதலியவற்றால் செய்வது நேர்வழியாகிய கரும அல்லது கிரியா தீட்சையாகும்; சுத்தாவத்தையை அறிவித்து, அருளில் ஆன்மாவை நிறுத்தல் சத்திய நிர்வாண தீக்கையாகும்; அவத்தையை உணர்த்தாமல் செய்யும் தீக்கையானது அசத்திய நிர்வாண தீக்கையாகும். தத்துவ சுத்தியுடன் ஆன்ம சுத்தி பெறுகின்ற உயிர்களே, மோட்ச இன்பத்தை அடையும்.

அருவ மயமாகியும் உருவ மயமாகியும் திருவம்பலத்திலே ஆடுகின்ற இறைவன் ஆசானாகி, விலங்கு போன்ற மலத்தை அறுப்பதல்லாமல் மிக்க கொடிய இப்பிறவித் துன்பத்தை எவர்தான் நீக்க வல்லார்? இறைவனிடம் நேரே தீக்கை

பெற்று, பரிசுத்தமான உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் இறைவனுக்குக் கொடுத்துச் சுகம்பெறுதல் நல்ல சீடனுடைய தொழிலாகும். மனத்தூய்மை இல்லாதவர்கள் அவர்களது வினையை எப்போதும் அவர்களே அனுபவிப்பவர்களாவார்கள்.

சிவஞான அருளை ஆசாரியன் செய்த தீக்கை முறையிலே இருந்து திரிபு, ஐயம், விகற்பம் இவை நீங்கப்பெற்று ஞானத்தொழிலாராகிய ஆசாரியனிடத்தில் ஒரு சிறிது தானம் கொடுத்தாலும் அது ஒரு பிறவியில் முத்தியை அடையவெகு எளிதாகுமானால், பொருள், ஆவி, உடல் இந்த மூன்றையும் இறைவனாகிய ஞானாசாரியனுக்கு மலர்ந்த மனத்தோடு கொடுக்கின்றவர்கள் உடலுடனே அருள் முத்தியை அடைவது ஒன்றும் வியப்பில்லை.

தம் குழந்தைக்கு நோயைத் தீர்ப்பவர்கள் கூலி வாங்கிக் கொண்டு தீர்ப்பதில்லை. அதுபோல, தம்மிடத்தில் தீக்கை பெற்றவர்களுக்கு ஊனும் மெய்ஞ்ஞானமும் சற்குருவே அளித்துக் காப்பார். அன்பர்களிடம் கூலிவாங்கித் தீக்கை செய்து, அந்தக் கூலிப்பொருளைக் கொண்டு இல்லத்தைக் காப்பாற்றும் ஆசாரியர்கள் சீடர்கட்கு ஊனையும் ஞானத்தையும் அளிக்க மாட்டார்கள். இத்தகைய இல்லறம் நடத்தும் ஆசாரியர் களுக்கு உதவுவதை விட்டு அடியவர்கட்குக் கொடுப்பவர்களும் ஏகதோத்திரத்தில் உள்ளனர்.

சிலர் உயர்ந்த குலம் என்று நினைத்து இறுமாப்பு உடையவர்களாயும், சிலர் தனவந்தர் என்ற இறுமாப்புடைய வர்களாயும், சிலர் நாம் ஆசாரியபுருடர்கள் என்ற இறுமாப்புடையவர்களாயும், வேறு சிலர் ஆசாரிய புத்திரர் என்ற இறுமாப்புடையவர்களாகவும் இருப்பர்; சாதி என்பது உடல், உயிர்களுக்கு இல்லை; நற்பண்பே சாதியாம். தனப் பெருக்கமானது குடத்திலே உள்ள நீரானது குடம் கவிழ்ந்த போது இல்லாமையாகுமாபோல் அழியும். ஆசாரியன் என்பது இறைவனையல்லாமல் உயிர்வர்க்கம் ஆகாது. குருபுத்திரன் என்பது, மாமிசத்தாலாகிய உடல் அல்ல; ஆன்மாவேயாம்.

உடலானது உயிரல்ல; பொய்யாகும். அது அழியுந் தன்மையாகும் என்று ஆராய்ந்து சற்குருவின் திருவருளால் அடைந்த தீக்கையை மறவாமல், மேலாம் அவத்தையையுடைய சிவநேசர்களே சிவமாந்தன்மையை அடைந்து இன்புற்று வாழ்வர். உடலைத்தான் என்று அகங்கரித்து, ஆராயாமல்

ஆசாரியனது திருவடிகளை வணங்காமலும் தீக்கை பெறாமலும் கீழ் அவத்தையைப் பற்றுகின்ற சிவநேசமில்லாதவர்கள் சடமாம் தன்மையை அடைவர்.

மயக்கத்தைப் போக்குகின்ற நான்கு வகை தீட்சைகளைப் பெற்றும் இறைவனது திருவுருவத்தில் மனம் வைக்காமல் பொருளாசை, மண்ணாசை, பெண்ணாசை இவற்றில் மனத்தை வைத்து அலைகின்றவர்கள் முத்தியை அடைய மாட்டார்கள்; குருலிங்க சங்கம பக்தியில் ஈடுபட்டு வணங்கித் தொண்டு செய்கின்ற குணமுடையவர்கள் தீக்கை வழியைத் தெரியாத வர்களாயிருந்தாலும் திருஅருட் பார்வை உடையவர்களாய் அன்பினாலே முக்தி அடைவர்.

நித்தியமான ஆறு பொருள்களையும் தெரிந்து பாசத்தினின்றும் விடுபட்டு இருக்கின்றவர்கள் சிவத்தினில் உற்பவித்தவர்களாவார்கள்; அப்பொருளை உணராமல் அநித்தியத்தை நித்தியமாக உணர்ந்து பாசத்திலே கட்டுண்டு இருப்பவர் அனைவரும் மயக்கத்தைத் தரும் மலங்களிலே உற்பவித்தவர் ஆவர். மலமற்றவர்கள் அறிவுடையவர்களாக விளங்கி வாழ்வர். மலநீக்கம் பெறாதவர் சடமாய்ப் பிறவிகளை அடைந்து அலைவர். பேரின்பத்தை அடைய மாட்டார்கள்.

நல்லொழுக்கம், ஆசாரம், நல்லிணக்கம், உபசாரம், தானம், உறுதி, உண்மை, நற்றவம், சிவனை அருச்சித்து வணங்கல், கோபம் அடக்கல், திருவருளைக் கொடுக்கும் அறிவுநூல் ஓதல், துறவு, அடக்கம், பொறுமை, நற்பணி ஆகிய இவற்றையும் காயம், வாக்கு, மனம் இம்மூன்றையும் அன்பர்கள் சிவனுக்காக்கி வாழ்தல் குற்றம் இல்லாத சைவத் திறத்தின் அறமாகும் என இவ்வாறு அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சைவத்திறம் பற்றி உரைத்தருளினார்.

ஐம்பத்து மூன்றாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்கு ஞானநூற்திறம் உரைத்த அத்தியாயம்

1910. **இன்னிலை மருவு தவத்தினர் சன்மார்க்**
கத்தினி லிசைந்துநல் முத்தி
மன்னுதற் குணர வேண்டுமெய்ந் நூல்தான்
யாதென வினவிடின் மலையத்

1910. குஞ்சரக்கன்று - அழகிய விநாயகர்.

தென்னெடுங் கிரிவாழ் முனிவகே ளென்று
சிவனருள் குஞ்சரக் கன்று
பன்னுசீர் மொழியு முணர்த்துவ மன்னா
கேளெனத் தவுமியன் பகர்வான். 1

1911. வேலைநீர் முழுதுங் குடங்கையால் வாரி
விழுங்கிய முனிவகேள் விமலன்
பாலரை யுணர்த்து மேலவர் போலப்
பகர்ந்தநூ லளவில அதனில்
மூலமா கியவே தாகம மிரண்டு
முதல்வழி சார்புமற் றெல்லாம்
சீலமார் வேத நூல்பொது வாகும்
திகழ்சைவா கமஞ்சிறப் பாமால். 2

1912. உலகமார்க் கர்க்குஞ் சத்திநி பாதம்
உறுமவர் தமக்குமோ தியதாம்
நிலவுமிந் நூலின் பரம்பரை யுணரார்
அவரவ ரறிந்திடு நினைவாற்
பலபல சமயம் பலபல நூல்கள்
பண்ணியொன் றொன்றையொவ் வாமற்
குலவிட நிறுத்திப் பிணங்குவர் வேதா
கமப்பொருட் குறியறி யாமல். 3

1913. திரிபதார்த் தத்தின் வகைதெரி வதுவும்
தெரிந்திடா வகையுமாய்ச் செப்பி
விரிதரு பூத மோகினி யளவில்
மேவிய புவனபோ கத்திற்
கருவியு முடலு மாயுயிர் நிற்கும்
கதியினை யுதவலால் மறையோடு
அரியசாத் திரநல் மிருதியா திகளைப்
பாசநூ லெனமுன்னோ ரறைந்தார். 4

1914. காதலால் வேதப் பொருள்சிறி தறிந்து
கதியென மயங்குமா யையைவிட்டு
ஓதியொன் றொன்றா யுணருயிர் பிரமம்
எனவுரைப் பதுபசு ஞானம்
ஏதமாம் பாசப் பிணிப்புறா தெங்கும்
இசைந்துபல் லுயிர்களை வினையைத்
தீதற அறிந்து வினைக்குறு பலனைச்
சேர்ப்பது வேசிவ ஞானம். 5

1911. வேலை நீர் - கடல் நீர். *1912.* பிணங்குவர் - முரண்படுவர்.

1915. அச்சிவ ஞான மேயுயர் ஞானம்
அதையறி வித்திடு ஞான
மெய்ச்சிவா கமமா மதுவுமூன் றாகி
மிகுதந்திர கலைமந்திர கலையோடு
உச்சித மருவும் உபதேச கலையென்
றாகுமவ் உபதேச முடிவை
நற்சிவன் நந்திக் குயர்சிவ ஞான
போதமாய் நல்கினன் நயந்து. 6

1916. அத்திரு முன்னூல் வழிபுடை யெனும்நூ
லாகியும் விரிந்திடு மூலகிற்
புத்திபூ ருவமாய்ப் பரம்பரை யாகிப்
புரையற வருங்குரு வருளாற்
பத்தியோ டுருகிப் பணிந்துகேட் டுணர்வோர்க்
கன்றிஅந் நூல்முறை பதியாது
எத்தனை நூல்கற் றறியினும் கடல்நீர்
எடுத்தெடுத் தருந்தினோர்க் கிணையாம். 7

1917. வடமொழி யினிலும் தென்மொழி யினிலும்
அருத்தமொன் றாகியே வழங்கும்
திடமிகு சரியை கிரியையோ கஞ்செய்
துற்றநற் தவர்களே தெளிவர்
இடமிகு சைவா கமமிரு பானெட்
டினிலுமிவ் வுண்மையே இயையும்
படர்நெறி பலவே யாயினும் சென்றோர்
பதியினுக் குறுவதொத் திடுமால். 8

1918. இவ்வுப தேசப் பனுவலே தாயாம்;
ஈன்றிடு மகவுயி ராகும்;
செவ்விய செவிலித் தாய்வடி வாகித்
தேசுற வளர்க்குந் தேவாரம்;
உய்விதந் திருவா சகமுயிர் களிப்ப
ஊட்டுதா தியாகியே சிறக்கும்;
சைவமெய்த் தொண்டர் புராணமே யன்பு
தந்துபா ராட்டுதாய் வடிவாம். 9

1917. இருபானெட்டு - சைவாகமங்கள் இருபத்தெட்டு.

1919. சிவபரம் பொருளுக் கன்புறு முணர்வைச்
செப்பிடா மற்றநூ லனைத்தும்;
உவகையோ டுலக நெறியறிந் திடுதற்கு
உதவிடு கருவிநூ லாகும்;
அவையெலாம் பூர்வ பக்கமா யறிந்து
கழித்தென்றும் அறிந்திட வேண்டும்;
தவமுடை யோர்கள் திரிபதார்த் தத்தைச்
சாற்றுநன் னூற்திறந் தனையே. 10

1920. ஒண்டிறற் பாம்பின் கடுவிடம் உலகா
யதன்கலை யாமென உணர்க
மண்டுசொற் புத்தன் பிடகநூல் சிந்தா
மணிமணி மேகலை முதலாக்
கண்டநூல் கண்கள் கழுவிடா துதிக்கு
முன்புலா லுடனுணுங் களியன்
விண்டிரு நூலென் றறிகவத் திநாத்தி
விளம்பிடுஞ் சாணமா தியநூல். 11

1921. தலைமண்டை மயிரைப் பறித்துடை யகற்றிச்
சாவதே தவமென வுரைக்கும்
நிலையிலா ஊத்தை வாய்ச்சமணர் கள்சொல்
லாமென வறிந்துநீங் கிடுக;
பலகரு மங்கள் செயச்சயி மனிபட்
டாசரி யனுக்குரைத் திடுநூல்
தலைவனாஞ் சிவனை இகழ்ந்துவே தத்தைச்
சுயம்புவென் றுரைத்திடுந் தவறே. 12

1922. சத்தமே பிரம னெப்பொரு ளிகழ்ந்தோன்
சாற்றிய நூலையு மிகழ்க;
மத்தமா மாயா வாதநூல் மறையின்
அந்தமென் றுரைப்பது மயக்காம்;
பொய்த்ததன் னறிவால் மயக்குவோன் புகன்ற
புரையென அறிகஅந் நூலைக்
கத்திவீ டுறல்முக் கோம்புறு மலட்டுக்
காகத்தின் குஞ்சுணல் கடுக்கும். 13

1919. திரிபதார்த்தம் - முப்பொருள்.

1920. கலை - சாத்திரம். அத்திநாத்தி - அஸ்தி - நாஸ்தி (உண்டு - இல்லை) சாணம் - சாணகம் முதலிய நூல்கள்.

1921. சயிமனி - ஜைமினி, 1922. கத்தி - படித்து.

1923. மறந்துபாற் கரியன் மறைமுடி வெனும்பொய்
வார்த்தையும் நிரீச்சுர சாங்கி
அறைந்திடு மூலப் பிரகிரு தியினா
லதுவுமுன் னுரைத்ததே யாகும்
பறைந்திடும் பாஞ்ச ராத்திரி கீதைப்
பயன்திரி புரத்தினுள் மாயன்
உறைந்துமுன் பவுத்தா சிரியனா யுரைத்த
உண்மையு மொருதன்மைத் தாமால். 14

1924. நிகழ்ந்தசித் தாந்தச் சிவன்திருக் கடைக்கண்
சேர்த்திமும் மலத்தையுங் கழுவி
மகிழ்ந்துமுத் தாந்தப் பதத்தின்கீ ழுயிரை
வைத்தின்பங் கொடுக்குமெய் வழியை
இகழ்ந்துபொய்ச் சமயப் பெரும்பிதற் றுறுவோர்
இன்பமும் இன்புறும் உயிரும்
புகழ்ந்துரைத் திடினுமு ணர்ந்திடார் பித்தம்
பொருந்துநா சுவையறிந் திடுமோ. 15

1925. அறிவுறு கும்ப முனிவமெய்ஞ் ஞான
நூற்றிறம் அறைந்தனம் முத்தித்
திறமினி யுரைப்பேம் கேளெனத் துறைசைச்
சிவகண பதியுரைத் ததனை
முறைதவ றாம லுரைத்திடக் கேள்நீ
மிதுலைவாழ் முதல்வவென் றினிய
மறைமுடி வுணர்ந்த தவுமியப் பெரிய
வரமுனி உணர்த்துவன் மகிழ்ந்தே. 16

ஐம்பத்துமூன்றாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்கு ஞானநூற்திறம் உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1925.

53. அழகிய விநாயகர் அகத்தியருக்கு ஞானநூற்திறம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

சைவத்திறத்தோடு ஒழுகும் தவத்தினர் சன்மார்க்கத்தில் பொருந்தி முத்தியை அடைவதற்கு வேண்டிய ஞானநூல் திறத்தையும் அழகிய விநாயகர் அகத்தியருக்குக் கூறுகின்றார்.

1924. நா - நாக்கு.

இதை மிதிலேசனுக்குத் தவுமிய முனிவர் பின்வருமாறு உரைக்கின்றார்.

கடல்நீரை உள்ளங்கையில் அடக்கி விழுங்கிய அகத்தியரே! கேட்பீராக. சிறுவர்களுக்கு மேலோர் போதிப்பதுபோல, இறைவன் அருளிய நூல்கள் அளவற்றன. அவற்றுள் மூலமாகிய வேதம், ஆகமம் என்னும் இரண்டும் முதல்நூல், வழிநூல், சார்புநூல் மற்றும் எல்லாம் ஆகும். இவற்றுள் வேதம் பொது; ஆகமம் சிறப்பு ஆம்.

இவையனைத்தும் உலக மார்க்கத்தாருக்கும், சத்திநிபாதர்க்கும் ஓதியதாகும். இந்நூல்களின் உண்மை வழியை உணராதவர்கள், அவரவர் நினைத்தபடி பற்பல சமயங்களையும் பற்பல நூல்களையும் செய்து ஒன்றுக்கொன்று பொருந்தாமல் வேத ஆகமங்களில் சொல்லிய இலக்கை அறியாதபடி தமக்குள்ளே வேறுபடுவார்கள்.

சிவஞானம் என்பது, பாசப்பிணிப்புறாமல் எங்கும் நிறைந்திருக்கும் பல ஆன்மாக்களின் வினைகளைத் தெரிந்து அவ்வவ் ஆன்மாக்கள் அடைந்த வினைக்கு ஏற்ற பலனைக் கூட்டுவிப்பதுவேயாகும். இச்சிவஞானமே உயர்ஞானமாகும். அதை அறிவிப்பது உண்மைச் சிவாகமம் ஆகும். அவ்வாகமமும் தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூன்று ஆகும். அந்த உபதேசத்தின் முடிவை இறைவன் நந்திபெருமானுக்குச் சிவஞானபோதமாக உபதேசித்தருளினார்.

அந்தச் சிவாகமம் முதல்நூல், வழிநூல், சார்பு நூல்களாகி உலகில் விரிந்து கிடக்கின்றன. புத்திபூர்வமாக பரம்பரையாய் வருகின்ற ஆசாரியனுடைய திருவருளால், பக்தியுடனும் பணிவுடனும் கேட்டுத் தெரிந்து கொள்வோருக்கல்லாமல் ஏனையோர்களுக்கு அந்நூல்முறை மனதில் பதியாது. எவ்வளவு நூல்களைக் கற்றறிந்தாலும் அது, கடல்நீரைக் கையால் அள்ளி அள்ளி அருந்துகிறவர்களுக்கு ஒப்பாகும்.

வடமொழியிலும் தென்மொழியிலும் பொருள் ஒன்றேயாகி விளங்குகின்ற சரியை, கிரியை, யோகம் இவற்றைச் செய்யும் நல்ல தவசிகளே தெளிந்தவர்களாவர். இருபத்தெட்டுச் சைவ ஆகமங்களும் இவ்வுண்மையே கூறுகின்றன.

இந்த உபதேச நூலே தாய்; அந்தத் தாய் பெற்ற குழந்தையே ஆன்மா; அந்த ஆன்மாவாகிய குழந்தையைச்

செவிலித் தாயாக வளர்ப்பது தேவாரம். அக்குழந்தை உய்யும் படியாகப் பால் ஊட்டிக் களிப்படையும்படிச் செய்வது திருவாசகம். குழந்தையிடம் அன்புகாட்டிப் பாராட்டும் தாயே திருத்தொண்டர் புராணம் ஆகும். பிற நூல்களெல்லாம் பரம்பொருளிடத்தில் அன்புணர்ச்சியைச் சொல்லாமல், உலக நெறியைத் தெரிந்துகொள்ளுவதற்கு உதவியாக உள்ள கருவி நூல்களாகும். எனவே, அவற்றையெல்லாம் நீக்கி, தவமுடைய வர்கள் எப்போதும் முப்பொருள்களை விளக்கிச் சொல்லும் நன்னூற் திறனையே அறிதல் வேண்டும்.

உலகாயதனுடைய சாத்திரமானது பாம்பினுடைய நஞ்சாம். பௌத்த ஆகமாகிய பிடகம், சிந்தாமணி, மணிமேகலை முதலிய பௌத்த நூல்களெல்லாம் மயிற்கண்களையுடைய பீலித்தோகையைக் கையிற்கொண்டு உதயத்திற்கு முன்னர் புசிக்கும் களியன் சொன்ன நூலென அறிக. அஸ்தி - நாஸ்தி (உண்டு - இல்லை) என்று விளம்பும் சாணகம் முதலிய நூல்கள், தலைமயிரைக் கையால் பறித்து ஆடையை அகற்றி இறப்பதே தவம் என்று சொல்லும் சமணர்களுடைய சொல்லாம் என்று அறிந்து அவற்றையும் நீக்குக. பல கருமங்களைச் செய்யும்படியாக ஜைமினியானவன் பட்டாசாரியனுக்கு உரைத்திடும் நூலானது, சிவனை இகழ்ந்து வேதத்தைச் சுயம்பு என்று சொல்லுகின்ற குற்றமுடையதாகும்.

சத்தமே பிரமம் என்று வஸ்துவை இகழ்ந்தவன் கூறிய நூலையும் ஒதுக்குக. மாயாவாதமானது வேதத்தின் அந்தம் என்று கூறுவதும் மயக்க உணர்வாகும். அந்த மயக்க உணர்வினால் பிறரையும் மயக்குவோன் கூறிய குற்றம் என அறிக. அவ்வேதாந்த நூலைப் படித்து வீடுபெற முயற்சித்த லானது, மூக்கினால் வளர்க்கப்படும் - உணவூட்டும் மலட்டுக் காக்கையின் குஞ்சானது உணவை உண்பது போலாகும்.

சித்தாந்தத்திலுள்ள சிவன், திருக்கடைக்கண் சேர்த்து, மும்மலங்களையும் நீக்கி, மகிழ்ச்சியுடன் முத்திப் பதத்தின்கீழ் ஆன்மாவை வைத்து இன்பம் கொடுக்கின்ற வழியை, இகழ்ச்சியுடன் பொய்ச் சமயத்தோர் பெறும் இன்பமும் அந்தப் பொய்யின்பத்தை அடையும் ஆன்மாக்களும் எவ்வளவு புகழ்ச்சியுடன் கூறினும் உணர மாட்டார்கள். இது, பித்தத்தை யுடைய நாக்கு நல்ல சுவையையும் அறியமாட்டாதது போன்றதாம்.

இவ்வாறு ஞான நூற்திறனை அழகிய விநாயகர் அகத்தியருக்குக் கூறியருளினார்.

ஐம்பத்துநான்காவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சித்தாந்த முத்தி உரைத்த அத்தியாயம்

1926. கலைத்தமிழ் முனிவ கேள்முத்தித் திறஞ்செம்
புறுகளிம் பென்னஆ ணவமுன்
நிலைத்தமூ வகையா ருயிர்களி னொன்றாய்
நின்றுள மறைத்துறு மயக்கால்
அலைப்புறு விருப்பம் புசிப்பின்மே லுறலால்
அரும்பசி தனிப்பதற் காகத்
தலத்தினிற் பிறந்தைம் புலன்புசித் திறந்து
சார்ந்திடும் நரகொடு சுவர்க்கம். 1

1927. பாவபுண் ணியத்தால் நரகொடு சுவர்க்கம்
பற்றினும் பல்லுயிர்க் கெல்லாம்
மேவுநல் லின்ப விருப்பலாற் துன்ப
விருப்பிலை; இருள்மல மயக்காற்
தாவிடுந் துன்ப வேதுவைப் புரிந்து
தடுப்பருந் துயரினில் மூழ்கும்
ஆவதாற் சற்றே நல்லுணர் வுறும்போது
அறத்தினைச் செயுஞ்சுக மடைய. 2

1928. அறம்புரி பொழுதும் அமுதொடு கலக்கும்
நஞ்சுபோல் ஆணவம் பொருந்தி
மறம்பொருந் திடவே செய்திடுங் கொடிய
மலம்சிவ புண்ணிய மதனாற்
புறம்புறு மளவும் இருவினைக் கீடாம்
புசிப்பொடு தேகமெவ் வுயிர்க்கும்
நிறைந்திடுங் கருணை யாற்சிவன் கூட்டி
முடிப்பன்ஈ தறிந்திடா நிலையோர். 3

1929. பித்துறுங் குணத்தோர் பிதற்றிடும் பொழுதோர்
நற்சொலும் பேசிடும் அதுபோற்
கத்துநூ லதனாற் சுகம்விரும் புயிர்க்குக்
கதியெனப் பற்பல விதமா

1926. மூவகையாருயிர்கள் - விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என்னும் இம்மூவகையால் நிலைபெற்ற உயிர்கள்.

1929. பித்து - பயித்தியம்.

வைத்தன ரெழுதி யதைப்பல வுயிர்மெய்
யெனவருந் திடுநிதி மலையைக்
கைத்தல மதனாற் கடலினுட் தடவிக்
கண்டிட வீழ்ந்தலை பவர்போல். 4

1930. இறைசிவ னவன்சொல் ஞானமற் றெல்லாம்
ஈனஞா னங்களாம் அவைதான்
சிறையுறு புனல்பேய்த் தேரென அழியும்;
தேர்ந்திடும் பொழுதஃ துணராக்
கறையுறு மனத்தோர் வேதனைப் பிறப்பிற்
கட்டுண்டு வினைசெயு முயிரை
மறைமுடி வறியாப் பரமெனத் தொடர்வர்
வறியரைத் தொடர்ந்திரப் பவர்போல். 5

வேறு

1931. பூதமே தெய்வ மென்று புலம்புல காய தன்தான்
மாதர்தோள் புணர்த லேநல் முத்தியென் றுரைப்பன் மாதர்
ஏதமாய்க் கூனி முற்றற் குரங்கென விருப்ப தோரான்
சாதியில் லாச்ச வுந்தி ராந்திகன் யோகா சாரன். 6

1932. மாத்துமி கன்வை பாடி மதியற இருபத் தொன்றாய்ச்
சாத்தியுள் ளிருக்கும் புத்தர் தமைத்தெய்வ மென்று சொல்லி
மோத்தைபோ லைந்து கந்த மறக்கெடல் முத்தி யென்பன்
ஆர்த்திடுஞ் சுகமீ வானும் அனுபவிப் பானு மின்றாம். 7

1933. நீதியில் மாயா வாதி நிரீச்சுர சாங்கி யன்பொய்
வாதிபிர பாக ரன்மீ மாஞ்சகன் முதலோர் தெய்வம்
ஏதகு பிரம மென்றும் விவேகத்தாற் பிரமம் நானென்று
ஓர்தலே முத்தி யென்றும் உரைப்பர்சிற் றுயிர்தே வாமோ. 8

1934. வைகாந சன்மா பேத வாதிசாங் கியன்மற் றோரும்
பொய்காணாச் சடத்தோ டொன்றும் புருடதத் துவந்தே
வென்று
மெய்காணாக் குருடன் தோளின் மேவிய முடவன் போல்வர்
கைகாலு முடல்மேற் தூக்கி வைத்தவன் தனைஎண் ணாரே. 9

1935. பட்டாசா ரியனுஞ் சத்தப் பிரமவாதி தியும்பண் போடும்
கட்டானவேதந் தெய்வ மென்பரக் கலைமுன் சொன்னோன்
எட்டான மூர்த்தி யென்று மவன்தெய்வ மென்று மேத்தார்
நெட்டார்பொய்ச் சமண வர்சீ வகனொடு நிகண்ட வாதி. 10

1931. பூதம் - பஞ்சபூதங்கள்.
1932. மோத்தை - வெள்ளாட்டுக்கிடா.

1936. அருகனைத் தெய்வ மென்றும் வினையெலா மறப்பு சித்து
மருவுதல் முத்தி யென்றும் வருந்துவர் வயிணை வன்தான்
பொருவறும் விரையாற் றிற்போய் முழுகிவை குந்தம் போதல்
இருளறு முத்தி யென்பன் இறுதியி லழிவ தெண்ணான். 11

1937. அவுடத வாதி யான்ம வாதிநீள் கன்ம வாதி
உவகையார் தெய்வம் ஆன்மா உடலுயி ரென்று மாய்வன்
தவனமாய் வாமம் காளா முகமிச்சிர சைவஞ் சார்ந்தோர்
பவமுறு சத்தி பேதம் பரவுதே வென்பர் பற்றி. 12

1938. சந்திர வாதி சூரிய வாதியோ டசுத்த சைவர்
உந்திடு சகளந் தன்னைத் தெய்வமென் றுரைப்பர் மிக்க
பந்தமா விரதர் பாசு பதர்கள்நிட் களந்தே வென்று
வந்தனை புரிவர் சுத்த சைவத்தில் வாழ்வோ ரெல்லாம். 13

1939. நிட்கள சகளந் தெய்வ மெனநிகழ்ந் திடுவர் யோகர்
உட்கொளும் விந்து நாதம் தெய்வமா யுரைப்ப ரெங்கும்
எட்கொளு மிடம்வே றின்றிச் சிவனிவை யாவும் வேறாய்
மட்குறு நீரு மெங்கு மருவும்விண் போல நிற்பன். 14

1940. அருவமோ டுருவ மிக்க அருவுருத் தானு மல்லன்
திரிகுணங் களுக்கு மெட்டான் அடையாளஞ் சிறிது மில்லான்
பொருவிலா னந்த மாகி அன்பர்பாற் புகுவன் தோன்றான்
இருள்மல ரகித னோரா தாரமு மில்லா னென்றும். 15

1941. அசைவிலா ஞான பூர ணப்பொரு ளாகி யைந்து
வசையறு மின்ப சத்திக் கிறைவனாய் மன்னி வாழ்வன்;
இசையவோ ருவமை யில்லான்; இதமகி தங்க ளில்லான்
நிசவுயிர்க் குயிராய் நித்த மாய்திரு மலமா யொன்றாய். 16

1942. பரைமுதற் சத்தி யைந்து சதாக்கியம் பஞ்ச கர்த்தாத்
திரமுறு மனந்த ராதி யட்டவித் தீசர் மூல
மருவுமத் திராதி சத்த கோடிமா மந்திரங்கள்
இருளறு சீகண் டேச ராதிநூற் றொருபத் தெட்டாம். 17

1943. மந்திரே சுரர்கள் காலாக் கினியுருத் திரமன் னாதி
உந்திய இரண்டு நூற்றோ டிருபத்து நான்கு ருத்திரர்
சந்திரா தித்த ரங்கி தயங்கிடு முடுக்க ணங்கள்
அந்தமி லட்ட நாகர் அரும்பன்னொன் றாமீ சானர். 18

1933. தேவு-தெய்வம். 1940. திரிகுணம்-முக்குணம். அடையாளம்-குறி. மலரகிதன்-மலங்கள் ஏதும் இல்லாதவன்.

1943. உடுக்கணங்கள் - நட்சத்திரங்கள்.

1944. அட்டவித் தியேச ரட்ட வசுக்களச் சுவினி தேவர்
இட்டமா மிருபத் தெட்டுக் கோடிமா தவரி யக்கர்
சிட்டராக் கதர்காந் தர்வர் சித்தர்விஞ் சையர்கள் பூதர்
உட்டிகழ் வேதா ளங்கள் உலப்பிலாப் பசாசு வர்க்கம். 19

1945. கிம்புரு டர்கள்மிக் கான கின்னரர் நாத மேவும்
தும்புரு நார தாதி யோர்கள்மா னுடர்தொ குத்த
பண்புறு மிருக மாதி பசுபட்சி தாவ ரங்கள்
எண்பெறு யோனி பேத உயிர்க்கெலாம் உயிரா யேய்ந்து. 20

1946. எத்தெய்வ மெவர்கொண் டாலும் இரங்குமெய்க் கருணை யோடும்
அத்தெய்வ மாகிச் சென்றங் கவரவர் செய்திக் கேற்ற
புத்திமுத் திகளை ஈவன் முத்திகள் பூதத் துள்ளும்
வித்தையி னுள்ளும் சுத்த மாயையி னுள்ளும் மேவும். 21

1947. இவையுறு போக மெல்லாம் ஐம்புல விடய மேயாம்
அவமுறு முத்தி யல்லால் அழிவறு முத்தி யன்று
சிவனடிக் கீழ்சேர் முத்தி யேமுத்தி யதிற்சென் றுற்றோர்
பவமுறார் சர்வ சங்கா ரத்தினும் பரத்துள் வாழ்வார். 22

1948. அத்திரு வருள்முத் திக்குச் செலுநெறி நான்க தாகும்
சுத்தமாஞ் சரியை யொன்று துகளறு கிரியை யொன்று
சத்திய யோக மொன்று சன்மார்க்க ஞான மொன்றாம்
பத்திக ளறிந்து நான்கு பதமிதற் கருள்வன் ஈசன். 23

1949. அனுக்கிர கஞ்செய் மூர்த்த அருளுரு மூன்றா மூன்று
தனக்குமெய்ப் பணிசெ யின்பே சாலோக மாக ஈசன்
சனித்திடு பூசை யின்பஞ் சாமீப மாகச் சேர்ப்பன்
இனிப்புறு தியான ரூப இன்பமியோ கத்துக் கீவன். 24

1950. சென்றுறு மின்ப முத்தி மூன்றினுந் தேக முண்டாம்
என்றுஞா னத்திற் தேக மில்லையா னந்த மாகத்
துன்றுமான் மாத்தா னாகித் துலங்குவன் ஈசன் வேறற்று
ஒன்றுமவ் வுயிர்சே ரின்பம் உரைத்திடற் கரிதா மன்றே. 25

1951. சைவசித் தாந்த முத்தி இஃதென்றா கமங்கள் சாற்றக்
கவ்விய மலசங் கற்பத் தாற்சிலர் கருத்து வேறாய்
எவ்வமில் சைவத் துற்றும் இத்திற முத்தி சேராது
உய்வித மில்லா முத்தி உரைப்பர்கள் அதுவே தென்னில். 26

1947. பரத்துள் - மோட்சத்துள்.

1952. நீரொடு நீர்சேர்ந் தாற்போல் நிமலனோடுயிரொன் றாமென்று
ஆரறி விலாவ யிக்க வாதிக ளறைவா ராவி
ஏருறு சிவனோ டொன்றாய் இசையுமோ சாதி வேறாம்
பாரினி லுறங்கு வோர்பொற் பாடாணன் புகலு கின்ற. 27

1953. முத்திகே வலமாம் பேத வாதிகள் மொழியு முத்தி
சித்திசெய் குளிகை வேறு செம்பறு பொன்வே றென்பர்
நித்தனோ டுறாதே யாகில் மலத்தொடு நிற்கும் சீவன்
சுத்தமாய்த் தனித்து நில்லான் சமவாதி சொல்லு முத்தி. 28

1954. சிவமெனச் சமமா யைந்து தொழிலுயிர் செய்யு மென்பன்
அவவுட றனினின் றைந்து மொன்றொன்றா யறியுஞ் சீவன்
எவணமைந் தொழில்கள் செய்யு மாழிநா ழியினு ளேயாம்
பவமுறு சங்கி ராந்த வாதிகள் பகரு முத்தி. 29

1955. அளத்துறு புற்போ லாவி அருளிற்சேர்ந் தழியு மென்பன்
இழப்புயி ராத லாலே இன்புறு வாரொன் றின்றாம்
தளிர்த்துறு மரத்தின் நீழற் சார்பவர் போலச் சீவன்
வழுக்கறு மென்பான் ஈசு ரவிகார வாதி மன்னோ. 30

1956. அவிகாரி ஈச னாகில் அறிவுயிர்க் கீவா ரில்லை
சிவனிலும் உயிரை மேலாய்ச் செப்பிடல் பாவ மாகும்
உவகையாற் சிவமே யெல்லாம் உயிர்க்கறி வில்லை
யென்பன்
கவினறி விலாநி மித்த காரண வாதி மாதோ. 31

1957. அறிவிலா வுயிர்க்கின் பெய்தா தருள்பெறு வாரு மின்றாம்
பிறிவிலா அருளாய்ப் போவ தன்றியே பேரின் பத்தில்
உறுவதற் குயிரில் லென்றே உரைப்பர்கள் சைவ ரானோர்
பெறுமவ னருளாய் மாயிற் பேறுமின் றாகு மன்றே. 32

1958. ஆனந்தம் பெறுதற் காவி யில்லையேல் யார்தான் முத்தித்
தேனுண்டு களிக்க வல்லார் இவரெலாந் தெளிவி லாராம்
மோனந்த மானஞேய முறுதலே முத்தி யாகும்
தானந்த மாகா தாகித் தனைமறந் திருப்பர் சார்ந்தோர். 33

1959. தெரிசனை சுத்தி லாப மெனுந்திரி விதமு ஞானக்
குருபர னிடத்திற் பெற்றுக் கோதறு ஞானம் பற்றி
மருவுதற் பணியை நீத்து மன்னுநே யத்த ழுந்து
மருளுடை யவரே சாயுச் சியமனு பவிக்கும் நீரார். 34

1955. அளம் - உப்பளம்.

1960. இதனின்மேல் முத்தி யில்லை இச்சீவன் முத்தி யேநற்
பதமுறு பரம முத்தி யாம்பகுப் பின்று பாக
முதிருமன் புடைய ராகி முகிழ்முலை யுமையி னோடும்
பதியுறு மூன்றும் போற்றிப் பண்பொடும் வாழ்தல்
வேண்டும். 35

1961. சித்தாந்த ஞான முத்தித் திறமுரைத் தனம்வே தாந்தச்
சுத்தானு பவமா கின்ற தெளிவுமேற் சொலுதுங் கேளென்று
ஒத்தார்நல் வினைபெற் றுய்ந்த அகத்தியர்க் கொப்பிலாத
முத்தார்மென் முலையா ளீன்ற முன்னவ னுரைப்ப தானான்.
36

ஐம்பத்துநான்காவது
அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சித்தாந்தமுத்தி உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1961
திருச்சிற்றம்பலம்

54. அழகிய விநாயகர் அகத்தியருக்குச் சித்தாந்தமுத்தி உரைத்தருளிய அத்தியாயம் (சுருக்கம்)

மெய்ஞ்ஞான நூற்திறன் பற்றிக் கூறிய அழகிய விநாயகர் இனி முத்தித்திறத்தைப் பற்றி விளக்கியதை மிதிலேசனுக்குத் தவுமிய முனிவர் எடுத்துரைக்கின்றார்.

செம்பிற் பதிந்துள்ள களிம்புபோல ஆணவ மலமானது, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் இம்மூவகையால் நிலைபெற்ற உயிர்களினுடன் நின்று மனத்தை மறைத்து, அலையுந் தன்மையையுடைய ஆசையானது போகம் அநுபவித்தலில் பொருந்துதலால், அப்பசியைத் தணிக்கும் பொருட்டு உலகில் பிறந்து ஐம்புலன் வழியாக இன்பம் நுகர்ந்து பின் இறந்து நரக சுவர்க்கங்களை அடையும்.

பாவ புண்ணியங்களால் நரகம் சுவர்க்கம் இவைகளை அடைந்தாலும் எல்லா உயிர்களுக்கும் இன்பமே விருப்ப மில்லாமல் துன்பத்தில் விருப்பமில்லை. இருள் தன்மையுடைய மலமயக்கத்தால் வரும் துன்ப காரணத்தைப் புரிந்து தடுத்தற்கரிய துயரத்தில் மூழ்கும். எனவே, சற்று நல்லுணர்வு பெறுகின்ற பொழுது சுகம் அடைய அறத்தினைச் செய்யும். அறத்தினைச்

செய்கின்ற காலத்திலேயும் அமுதோடு சேர்கின்ற நஞ்சைப் போல ஆணவமலமானது, பாவத்தைச் செய்யும்படியே பொருந்தும். கொடிய ஆணவமானது சிவ புண்ணியத்தால் வெளியாகும். அதுவரை இருவினைக்கீடாக அனுபவிக்கும் உடல்களை எல்லா உயிர்களுக்கும் முழுமையான கருணையினால் இறைவன் கூட்டிமுடிப்பன்.

இதை அறியாத நிலையினையுடையவர்கள், பித்தினை யுடையவர்கள் பேசும்பொழுது ஓர் நல்ல சொல்லினையும் பேசுவார்கள். அதுபோல, சுகம் அடைய விரும்பும் உயிர்களுக்குக் கத்துகின்ற நூலினால் நற்கதி உண்டு என்று பலப்பலவிதமாக எழுதி வைத்துள்ளனர். இவற்றை மெய்யெனப் பல உயிர்களும் உணர்ந்து வருந்திடும். அது எவ்வாறு எனின், நிதிமலையைக் கையினால் கடலினுள் தடவிப் பார்க்க வீழ்ந்து அலைபவர் களைப் போல.

இறைவன் சொன்ன சொல்லே உயர்ஞானமாகும்; மற்றவைகளெல்லாம் இழிந்த ஞானங்களாகும். அவை பேய்த்தேர் போல அழிவுடையனவாம். தெளிவடையும்போது அதை உணராது இருளுற்ற மனத்தவர்கள் துன்பத்தைத் தரக்கூடிய மறைப்பில் கட்டுண்டு, தொழில் செய்யும் உயிரை இறைவனென்று தொடர்வர். இது எதுபோல எனில், வறியவர்களைப் பின்பற்றி யாசிப்பவர்களைப் போலவாம்.

பஞ்சபூதங்களே தெய்வம் என்று சொல்லும் உலகாயதன், மாதர்தோள் சேர்தலே நல்முத்தி என்று கூறுவான். அம்மாதர்கள் குற்றம் பொருந்திய வளைந்த கிழக்குரங்கைப் போன்றிருப்பதை உணரமாட்டான். சாதியில்லாத சவுந்திராந்திகன், யோகசாரன், மாத்துமிகன், வைபாடிகள் ஆகிய இவர்கள் அறிவின்றி இருபத்தொரு தத்துவங்களைச் சொல்லி அந்தத் தத்துவங்கள் உள்ளிருக்கும் புத்தரைத் தெய்வம் என்று சொல்லி, வெள்ளாட்டுக் கிடாபோல் அலைந்து, பஞ்சகந்தங்கள் கெடுவதே மோட்சமென்று சொல்லுவர். பொருந்துகின்ற சுகத்தினைக் கொடுப்பவனும் அனுபவிப்பவனும் இல்லையென்றாகும்.

நீதியில்லாத மாயாவாதியும், நிரீஸ்வரவாதியும், சாங்கியனும், பிரபாகரனும், மீமாம்சகனும் தெய்வமானது பிரமம் என்றும், 'பிரமமே நான்' என விவேகத்தால் அறிதலே மோட்சம் என்றும் கூறுவர். சிற்றறிவுடைய உயிர் தெய்வமாகுமா? ஆகாது. வைகாநசன், பேதவாதி மற்றும் ஏனையோரும்

சடத்தோடு பொருந்துகின்ற புருடதத்துவமே தெய்வம் என்று கூறுவர். இவர்கள், தம் உடலையே காணாத குருடன் தோள் மீது முடவன் இருப்பது போல்வர்.

பட்டாசாரியனும் சத்தப்பிரமவாதியும் வேதமே தெய்வம் என்று கூறுவர். அந்த வேதத்தை, முன்பே அருளிய அட்ட மூர்த்தியாகிய இறைவனைத் தெய்வமென்று வணங்கமாட்டார்கள். சமணர், சீவகன், நிகண்டவாதி ஆகிய இவர்கள் அருகனைத் தெய்வம் என்றும், வினைகளெல்லாம் அற அனுபவித்திருத்தலே மோட்சம் என்றும் கூறி வருத்தத்தை அடைவர். வயிணவன் விரையாற்றில் மூழ்கி வைகுந்தமடைதலே இருளற்ற மோட்சம் என்று கூறுவான். முடிவில் அழிவதை எண்ணமாட்டான்.

அவுடதவாதி, ஆன்மவாதி, கன்மவாதி ஆகிய இவர்கள் தெய்வம், உடல், ஆன்மா, உயிர் இவை எது என்று ஆய்வர். வாமம், காளாமுகம், மிச்சிரசைவம் ஆகிய இம்மதத்தைச் சார்ந்தவர்கள் சத்தியின் பேதங்களே தெய்வம் என்பர்.

சந்திரவாதி, சூரியவாதி, அசுத்தசைவர் ஆகிய இவர்கள் மாயா ரூபத்தையே தெய்வம் என்று கூறுவர். மாவிரதர், பாசுபதர் ஆகியவர்கள் உருவமின்மையையே தெய்வம் என்று கூறுவர்.

சுத்த சைவத்தில் இருப்பவர்கள், நிட்கள சகளத்தையே தெய்வம் என்று கூறுவர். யோகியர்கள், விந்துவையும் நாதத்தையும் தெய்வம் என்பர். எல்லாவிடத்தும் வேறு ஒரு சிறிதும் இல்லாமல் சிவனானவன் இவைகட்கெல்லாம வேறாகி, குடங்களிலுள்ள நீரில் பொருந்தும் ஆகாயம் போல எங்கும் நிற்பான்.

அருவமும் அல்லன்; உருவமும் அல்லன்; அருவுருவமும் அல்லன்; முக்குணங்கட்கும் எட்டாதவன்; அடையாளம் (குறி) சிறிதும் இல்லாதவன்; ஆனந்த மயமாகி அடியவர்கள்பால் புகுந்திருப்பவன்; ஒரு ஆதாரமும் இல்லாதவன்; எப்பொழுதும் அழிவில்லாத ஞானபூரணப் பொருளாகி ஐந்து சத்திகளுக்கு இறைவனாய்ப் பொருந்தி வாழ்பவன்; உவமையில்லாதவன்; இதம் அகிதங்கள் இல்லாதவன்; உயிருக்கு உயிராகி நித்தமாய், நிர்மலமாய், ஏகவத்துவாய்; பரை முதலாகிய ஐந்து சத்திகள்; சாதாக்கியம்; பஞ்சகர்த்தர்கள்; அத்திரங்கள்; அனந்தர் முதலான அட்டவித்தியேசுரர்கள்; சப்தகோடி மகா மந்திரங்கள்;

ஸ்ரீகண்டேசர் முதலான மந்திரேசுரர் நூற்றுப் பதினெண்மர்கள்; காலாக்கினி உருத்திரர் முதலான இருநூற்று இருபத்துநான்கு உருத்திரர்கள்; சந்திர சூரியர்; அக்கினி; நட்சத்திரங்கள்; அட்ட நாகர்கள்; ஏகாதச உருத்திரர்கள்; அட்ட வசுக்கள்; அசுவினி தேவர்கள்; இருபத்தெட்டு கோடி மாதவர்கள்; இயக்கர்கள்; இராக்கதர்கள்; காந்தர்வர்கள்; சித்தர்கள்; விஞ்ஞையர்கள்; பூத வேதாளங்கள்; பசாசு வர்க்கங்கள்; கிம்புருடர்கள்; கின்னரர்கள்; தும்புரு நாரதர்கள்; மானுடர்கள்; மிருகம், பசு, பட்சி, தாவரங்கள் ஆகிய யோனி பேத உயிர்களுக்கெல்லாம் உயிராய்ப் பொருந்தி, எந்தத் தெய்வத்தை எவர் கொண்டாலும் உண்மைக் கருணையுடன் இரங்கி அந்தந்தத் தெய்வமாகச் சென்று அவரவர்களுடைய வினைகளுக்கு ஏற்றபடி போக மோட்சங்களைக் கொடுத்தருளுவான். முக்திகள், பூதத்துள்ளும் வித்தையினுள்ளும் சுத்தமாயையினுள்ளும் பொருந்தும்.

இவை அடைந்த போகங்களெல்லாம் ஐம்புலன்களுக்கு விஷயமாக உள்ளவையே; பாவம் பொருந்திய முத்தியே யல்லாமல் அழிவற்ற நிலையான முத்தியல்ல; இறைவனது திருவடி நிழலை அடையும் முத்தியே முத்தியாகும். அதில் போய் அடைந்தவர் மீண்டும் பிறவி அடைய மாட்டார்கள். சர்வ சங்கார காலத்திலும் மோட்ச நிலையிலே இருப்பார்கள்.

அப்படிப்பட்ட திருவருள் முத்திக்குச் செல்லும் வழி நான்காகும். அவை: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். பக்தி நிலையை அறிந்து இறைவன் நான்கு பாதங்களை உயிர்களுக்கு அருளுவான். இறைவன், தனக்கு உடலாலான பணியைச் செய்தால் சாலோகப் பதவியை அளிப்பன். கிரியையாகிய பூசையைச் செய்யின் சாமீபமாகச் சேர்ப்பன். யோகத்தைச் செய்யின் சாரூபம் அளிப்பான். இவ்விதம் அடைந்த இன்பமுத்தி மூன்றிலும் தேகம் உண்டாம். ஞானத்தால் அடைந்த முத்திக்குத் தேகமில்லை. ஆதலால் ஆன்மாவானது சிவனாகி விளங்கும். அந்த நிலையில் ஆன்மா வேறு சிவன் வேறு என்ற நிலை அற்று ஒன்றாகும். அப்போது அந்த உயிர் அடையும் இன்பமானது சொல்லுதற்கு அரியதாகும்.

சைவசித்தாந்த முத்தியானது இப்படிப்பட்டதென்று ஆகமங்கள் சொல்ல, பற்றியிருக்கும் மல சங்கற்பத்தினால் சிலருடைய கருத்து மாறுபட்டு, சைவத்திலுற்றும் இவ்விதம் முத்திசேராது, உய்யும் வகையில்லாத முத்தியைக் கூறுவார்கள். அது எது எனில், நீரோடு நீர் சேர்வது போல, இறைவனோடு

உயிர் பொருந்தும் என்று ஐக்கியவாதி கூறுவான். உயிர் சிவனோடு ஒன்றாக இசையுமோ? சாதி வேறாகும்.

பாடாணவாதி, முக்தி கேவலமாம் என்று கூறுவான். பேதவாதிகள் சொல்லும் முத்தியாவது; சித்தியைச் செய்யும் குளிகை வேறு, செம்புத்தன்மை போன பொன் வேறு என்று சொல்வர்; நித்தனாகிய இறைவனுடன் பொருந்தாதாயின் ஜீவன் சுத்தமாய்த் தனித்து நிற்க மாட்டான்.

சமவாதி சொல்லுகிற முத்தியாவது; முத்தியை அடைந்த உயிர் சிவனோடு சமமாக ஆவதால், சிவம் போன்ற ஐந்தொழிலைச் செய்யும் என்று சொல்லுவான். ஆன்மா உடலில் நின்று ஐம்பொறிகளையும் ஒவ்வொன்றாக அறியுமல்லது இறைவனைப் போன்று எல்லா அறிவையும் பெறமுடியாது. இந்த நிலையில் எப்படி அது ஐந்தொழிலைச் செய்ய முடியும்? ஒரு நாழி அளவுள்ள பாத்திரத்தில் ஆழியின் நீர் அனைத்தும் பெறமாட்டாதது போல.

சங்கராந்தவாதி சொல்லும் முத்தியாவது, உப்பளத்தில் போட்ட புல்லைப்போல ஆன்மாவும் தனது உண்மைநிலை கெட்டு அருட்சொரூபமாக விளங்கும் என்று கூறுவான். கெட்டொழியும் தன்மையாலே பேரின்பத்தை உயிர் அடையும் என்பது இல்லை.

வெய்யிலில் மணல்வெளியில் நடந்தவன், அந்தத் துன்பத்தை நீக்க மரத்தின் நிழலிலே தங்க விரும்புவதுபோல, ஆன்மாவும் இறைவனது திருவடி நிழலைப் பொருந்தி, பிறவித் துன்பத்தைப் போக்கிக் கொண்டிருக்கும் என்று ஈசுவர அவிகாரவாதி சொல்வான். அவிகாரி ஈசனாகில் அறிவை ஆன்மாக்களுக்குக் கொடுப்பார் இல்லையாகிவிடும். சிவத்தைக் காட்டிலும் ஆன்மாவை மேலாகச் சொல்லுதல் பாவமாய் முடியும்.

நிமித்தகாரணன் கூறுவதாவது: சிவத்துக்கு வேறாக உள்ள பசுவுக்கு அறியுந்தன்மை கிடையாது என்பான். அறிவு இல்லாத உயிருக்கு அருளாமற் போனால் அருளைப் பெறுவாரும் இல்லாமற்போகும். வேறான அருளாகப் போவதல்லாமலும் பேரின்பமாகிய முத்தியை அடைவதற்கு ஆன்மாக்கள் இல்லை யென்றே சைவராக உள்ளவர்கள் கூறுவர். பெறுகின்றவன் அருளேயென்று மயங்கினால் பேறும் இல்லையாம்.

ஆனந்தத்தை அடைவதற்கு உயிர்கள் இல்லாவிடின் எவர்தான் முத்தித் தேனை உண்டு களிப்படையவல்லார்? மேற்சொன்னவர்கள் எல்லாரும் தெளிவு இல்லாதவர்களே ஆவார்கள். மோனநிலை அறியப்படுதலே முத்தியாகும். இந்த நிலையில்தான் முடிவிலாதாகி - அழிவிலாதாகி - தன்னையே மறந்திருப்பர். தரிசனை, சுத்தி, லாபம் என்னும் மூன்றையும் ஞானாசாரியனிடத்தில் பெற்று, அன்பிலே அழுந்தும் திருவருளை உடையவர்களே சாயுச்சிய பதவியில் அநுபவிக்கும் தன்மை யுடையவர்களும் ஆவார்கள். இதற்கு மேல் முத்தி இல்லை; இந்தச் சீவன் முத்தியே மேலாம் பரமமுத்தியாம்.

இவ்வாறு சித்தாந்த ஞானத் திறனை அழகிய விநாயகர் அகத்தியருக்கு உரைத்தருளினார்.

ஐம்பத்தைந்தாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்கு
வேதாந்தத் தெளிவு உரைத்த அத்தியாயம்

1962. மிக்கசைவ சித்தாந்த முத்திதனை வேதாந்தம்
ஒக்குமெனத் திருமூலர் முதலாஞ்சித் தர்களுரைத்து
முக்கணன்தா ளடைந்தார்க ளியோகத்தின் முதிர்ச்சியினால்
அக்கதியின் திறமுமழ கானைமுக னுரைத்தபடி. 1

1963. உரைத்திடுவன் உபநிடதத் துட்பொருள்மா வாக்கியத்தைக்
கருத்தடங்கு மிதுலேச கேளென்று கருணையினாற்
திருத்தமுறு தவமுடையோன் சிவபாத மலருளத்திற்
தருத்தருளுந் தவுமியமா முனிநாதன் சாற்றுவனால். 2

1964. இருக்கெசுர்நற் சாமமதர் வணமென்று சிவனுரைத்த
திருத்தகுநற் சுருதிகளு மிரண்டுவகை யாய்த்திகழும்
அருட்கொளற்ப சுருதிபிர பலசுருதி யாகுமதில்
உரைக்குமற்ப சுருதிகன்ம காண்டத்தை உரைத்திடுமால். 3

1965. பிறபலநற் சுருதிஅத்தி யான்மிகத்தைப் பேசுமதில்
உறுபொருள்முப் பத்திரண்டாய் உபநிடத மெனவிளங்கி
அறனுறுநால் வாக்கியத்தைப் பிரதிவா திக்குமவை
திறனுறுமெய்த் தேசிகனால் உபதேசஞ் செப்புவதாம். 4

1963. மாவாக்கியம் - மகாவாக்கியம்.

1964. சுருதி - வேதம்.

1965. பிரதிவாதம் - எதிர்வாதம்.

1966. அன்னாலு வாக்கியத்தி லொன்றுமுன் றரும்பதமாம்
முன்னான்முன் றும்மந்தப் பொருளாகி யேமுடியும்
பன்னாருந் தொம்பதந்தற் பதமோட்சி பதமவையாம்
முன்னாமுப் பதமுமது நீயானாய் எனவுரைக்கும். 5

1967. அதுவென்றல் பரநீயென் றதுசீவ னானாயென்
பதுதானவ்விரண்டினுடை யயிக்கியமெனப் பகர்வதுவோ
மதுவென்னும் பரத்திலுறு முபாதியப ரோட்சமதாம்
உதவுநீ யெனும்பதத்தின் உபாதிபரோட் சமதாமால். 6

1968. அபரோட்ச மந்நியகா ரணமாகும் பரோட்சமது
உபகரண காரியமா யொன்றாகி யேயுதிக்கும்
நிபமாவிவ் விரண்டுபா தியும்நீக்கி அயிக்கமுறும்
விபரமது தான்மூன்றி லக்கணையா யேவிளங்கும். 7

1969. விட்டவிலக் கணையென்றும் விடாதவிலக் கணையென்றும்
இட்டமுறும் விட்டுவிடா விலக்கணை யென்றும்பெயராம்
சிட்டரிதைச் சங்குசர்க்க வாக்கியமென் றுஞ்சிறப்பார்
மட்டறுநல் விசிட்டவாக் கியமென்று மற்றொன்றை. 8

1970. அகண்டவாக் கியமென்றும் அறைந்திடுவ ரிம்மூன்றின்
மிகுசங்கு சர்க்கவாக் கியவிட்ட லக்கணைதான்
திகழ்கின்ற மச்சுக்கூப் பிடுதென்றுந் திரைமோது
மிகுகங்கை கோஷுக்கு தெனவும்விளம் பிடுமிடத்தில். 9

1971. ஓசைசட மச்சுக்கூப் பிடுமோஓர் புருடனுற்றுப்
பேசுகிறா னென்றும்இடைச் சேரிகங்கைப் பெருங்கூரையில்
ஏசறவே யிருந்திரையுஞ் சத்தமல்லால் இடைச்சேரி
மாசறுகங் கைக்குளிரா தெனவுமதித் திடுவதுவாம். 10

1972. விட்டவிலக் கணையினால் விடுவதே மூபாதியதாம்
இட்டமுறு மனவதேகம் இந்திரிய மனம்புத்தி
உட்டகுமாங் காரத்தி னொடுசித்தம் பிராணனிவை
திட்டமுற என்னிதெனச் செப்புமவன் வேறாகும். 11

1973. இவைவேறாய்க் கண்டவுயிர் தனைக்காணா தேமயங்கி
அவமுறும்போ தாசிரியர் அறிவிப்ப ராற்றி னுள்ளே
கவனமொடு பத்தாவான் இறங்கிப்போய்க் கரையேறி
உவகையுறு பத்துருவல் ஒன்பதுபே ரையுமெண்ணி. 12

1968. மூன்றிலக்கணை - விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை என மூன்று.

1974. தனையெண்ணா தொருவனாற் றுடன்போனான் எனத்
தவித்துத்
துனிமேவி அழும்போதில் அயலொருவன் தொட்டெண்ணிக்
கனமேவு பத்தாவான் நீயென்று காட்டுவபோல்
அனையனைய சிவனேவந் தாவியைக்காட் டுவனருளால். 13

1975. இதுவிட்ட லக்கணையாம் இனிவிடா விலக்கணையின்
முதிர்பரனுக் கன்னியமாய் மொழிகுவரே மூபாதியவை
சதிர்மருவு சர்வஞ்ஞ சர்வகா ரியமென்றுஞ்
சிதைவிலாச் சர்வேந்திரி யாமிசர்வ சிருட்டியென்றும். 14

1976. சறுவதிதி சர்வசங்கா ரஞ்சர்வே சுரமென்று
மறைபுகழு மேழுபா தியுமற்று மாசற்ற
அறிவுவடி வாய்விளங்கும் அதுபரமாம் அதுவேதன்
குறியறியா உயிரைமுன்பு காட்டவந்த குருபரனாம். 15

1977. விசிட்டவாக் கியப்பரமும் குருவும்வே றல்லவென
விசைப்பரிதற் குவமைசிவப் புக்குதிரை வெண்பசுவாம்
அசைத்தசிவப் பும்புரியும் வெண்ணிறமும் ஆன்வடிவும்
நிசத்தையுணர் வோர்க்கென்றே யாமதுபோல்
நிலைபெறுமால். 16

1978. இயம்பகண்ட வாக்கியமாம் விட்டுவிடா விலக்கணைதான்
சுயந்தேவ தத்தாவென் றுரைக்குமதைச் சொலுமிடத்தில்
உயர்ந்தபரி பூரணமா யொன்றான சுகசொரூபம்
வியன்கொள்பர மாய்க்குருவாய் விளங்குமென
வுரைப்பரது. 17

வேறு

1979. ஒருபுருட னோரிடத்திற் பிரம சாரி
ஓரிடத்தி லிராசாவோ ரிடஞ்சந்நி யாசித்
திரிவடிவா யுறினுமுன் றிடத்து முள்ள
தேகவே டம்பிரித்துச் சிறந்து பார்க்கின்
மருவியவே டக்குறிமாத் திரம்போய்த் தேக
மட்டும்வே றறவிளங்கு மாறு போல
ஒருவிடாச் சிவனொன்றாய்த் தோன்றி நிற்பன்
உணர்வோர்க்குத் தேவதத்த னொன்றா மாபோல்.
18

1978. சுகசொரூபம் - இன்ப வடிவம்.

1980. சிவனுடனே உயிர்கலந்து நிற்கு மாறு
செப்பிடின்முன் தனையிழந்து தியங்கு வோனுக்கு
உவகையுட னாற்றிலறி வித்தோன் போல
உயிரையறி வித்தகுரு உணர்வோ டொன்றி
அவமுறுதே காதியா மேமு பாதி
அறநின்றே ஐந்தொழில்செய் தஞ்ஞா னங்கள்
தவிரஅரு ளுதவுபர னடியிற் கூடித்
தகுசர்வஞ் ஞாதியுபா தியுஞ்சா ராமல். 19

1981. திறிபுடிதோன் றாமற்தற் போத மற்றுச்
சிவனுடனொன் றிரண்டறச்சேர்ந் தின்ப மாகி
நிறைபிரம அத்துவித முத்தி மேவல்
நிலையான அசிபதமாய் நிகழ்த்த லாகும்
இறைவனருள் வேதாந்தத் தெளிவீ தாகும்
இறைபிரமம் உயிரடிமை யென்று மெங்கும்
குறைவிலருள் முதல்வனுட னடிமை நேரோ?
கோதாகும் நான்பிரம மெனவே கூறல். 20

1982. பண்டைமறை களும்அதுநா னானே னென்று
பாவிக்கச் சொல்வதுமிப் பண்பே யாகும்;
தொண்டினொடு கசிந்துருகிச் சிவனைத் தன்னிற்
சோகம்பா வகஞ்செய்து சுகத்துள் மேவி
மிண்டுறும்அஞ் ஞானமெலாங் கருட னாலே
விடும்விடம்போ லகன்றேக விமல மாகித்
தெண்டிரைசேர் அப்புமுப்பும் படியொன் றாம்போற்
சிவனுடனொன் றாய்க்கலத்தல் சீவன் முத்தி. 21

1983. சுவானுபவ மறைமுடிவீ தென்று மிக்க
சுந்தரஜங் கரக்களிறு சொல்லக் கேட்டே
உவாமதிநாட் கடல்களிக்கு மாறு போல
உவகைமிகுந் தகத்தியருள் ளுருகி யின்புற்று
அவாவுடனே யிருபதமுங் கண்ணி லொற்றி
அகத்தினிலுஞ் சிரத்தினிலு மழுத்தி ஞானத்
திவாகரனே எனையாளும் அழகு தொந்திச்
சிவக்கொழுந்தே யெனத்துதிப்பத் திருக்கண் நோக்கி. 22

1984. வேண்டியசித் திகளுமருள் புரிந்து மேல்பால்
வலப்புறமாய் மேவுகவென் றிருக்கை யீந்தான்
மாண்டகுதென் தமிழ்ப்பொதிய முனிவன் ஞான
வாரிதியின் மூழ்கியின்ப வடிவ மாகி

காண்டகுநல் மாசிலா மணியை நாளும்
கண்குளிர மனங்குளிரக் கண்டு போற்றிப்
பாண்டகுசொல் ஒப்பிலா முலைபொற் பாதம்
பணிந்துதுறை சையிலிருந்தான் பண்போ டென்றும். 23

ஐம்பத்தைந்தாவது
அழகிய விநாயகர் அகத்தியருக்கு வேதாந்தத் தெளிவு
உரைத்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 1984.

55. அழகிய விநாயகர் அகத்தியருக்கு வேதாந்தத் தெளிவு உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

மேன்மைமிக்க சித்தாந்த முத்திக்கு வேதாந்தமானது சமமாகும் என்று திருமூலர் முதலான சித்தர்கள் தம் யோக அனுபவத்தால் தெளிந்து உரைத்து இறைவனது திருவடி நீழலை அடைந்தனர். அந்த வேதாந்தத்தின் திறனை அழகிய பிள்ளையார் அகத்தியருக்கு உபதேசித்தபடியே, உபநிடத்து உட்பொருளாகிய மகாவாக்கியக் கருத்து அடங்கியதைக் கூறுகிறேன்; மிதிலேச! கேட்பாயாக என்று தவுமியர் கூறத் தொடங்கினார்.

சிவபெருமானால் அருளப்பெற்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் இரண்டு வகையாகும். அவை, அற்பசுருதி என்றும் பிரபலசுருதி என்றும் இருவகைத் தாகும். அதில், அற்ப சுருதியானது கன்ம காண்டத்தைக் கூறுவதாகும். பிரபல சுருதியானது அத்தியான்மிகத்தைச் சொல்லுவதாம்; அதிலுள்ள பொருள் முப்பத்திரண்டாகி உபநிடதம் என்று விளங்கி நான்கு மகாவாக்கியத்தை எதிர்வாதம் செய்யும். அவை ஆசாரியனால் உபதேசிக்கத் தக்கவையாம்.

அந்த நான்கு மகாவாக்கியத்திலும் (தத்துவமஸி, அகம்பிரம்மாஸ்மி, பிரஞ்ஞானம்பிரம்ம, அயமாத்மாபிரம்ம) மூன்று அரும்பதமும் (தத்பதம், 'தொம்பதம், அசிபதம்) பொருந்தும். முன்கூறிய அந்த நான்கு வாக்கியமும் மூன்று பதமும் முப்பத்திரண்டு பொருளாகியே முடியும். தத்பதம், தொம்பதம், அசிபதம் ஆகிய முப்பதமும் அது நீ ஆனாய் என்று சொல்லும். 'அது' என்றது பரம்-இறை அல்லது பிரமம்; 'நீ' என்றது ஜீவன்; 'ஆனாய்' என்றது 'பரம்' 'ஜீவன்

இவ்விரண்டினுடைய ஐக்கியமென்று சொல்வதாகும். 'அது' என்கின்ற பரத்தில் அடையும் உபாதியானது (செய்கை - பயப்பது) நேரில் அறிகின்ற அறிவாம். 'நீ' என்கின்ற பதத்தின் உபாதியானது அதிரிசியமானதாகும் - பரமஞானமாகும்.

அபரோட்சமானது அந்நிய காரணம் ஆகும்; பரோட்சமானது உபகரண காரியமாய் ஒன்றாகியே தோன்றும். இவ்விரண்டு காரண உபாதிகளை நீக்கி, அயிக்கியமுறும் விபரம் மூன்று இலக்கணைகளாலே விளங்கும். அவை விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை என்று பெயருடையவை ஆகும். இம் மூன்றையும் முறையே, 'சங்கு சர்க்க வாக்கியம்' என்றும் 'விசிட்ட வாக்கியம்' என்றும், 'அகண்ட வாக்கியம்' என்றும் பெரியோர் கூறுவர்.

இம்மூன்றில் சங்குசர்க்க வாக்கியமாகிய விட்ட இலக்கணை யானது; 'மச்சுக் கூப்பிடுது' 'கங்கை கோஷிக்குது' என்று சொல்லுமிடத்து, ஓசையானது சடம்; மேல் மாடியாகிய இடம் கூப்பிடுமா? ஒரு புருடன் அந்த மேல்மாடியிலிருந்து கூப்பிடுகிறான் என்றும், இடைச்சேரியானது கங்கையினது பெருங்கரையிலிருந்து அச்சேரியிலுள்ள மக்கள் சப்திக் கின்றார்களே அல்லாமல், இடைச்சேரியானது கங்கைக்குள் இருக்காது என்றும் மதித்திடுவதாகும்.

விட்ட இலக்கணையால் விடுவது ஏழு உபாதிகள் ஆகும். அவை தேகம், இந்திரியம், மனம், புத்தி, ஆங்காரம், சித்தம், பிராணன் என இந்த ஏழும் என்னுடையதென்று சொல்லுகிறவன் வேறாவான். இவை ஏழையும் தனக்கு அந்நியமாகக் கண்டவன் ஆன்மாவை (தன்னை) காணாது மயங்குகிறபொழுது ஆசாரியன் அவனுக்கு அறிவிப்பான். எது போல எனில்? ஆற்றில் பத்து நபர்கள் இறங்கிக் கரையேறி, பத்தாவது நபர் ஒன்பது பேரை எண்ணித் தன்னை எண்ணாமல் ஒருவன் ஆற்றோடே போய்விட்டான் என்று தவித்து அழும் பொழுது அயலில் இருந்த வேறொருவன் எல்லோரையும் எண்ணிப் பத்தாவது நபர் நீ என்று காட்டுவதுபோல, இறைவனே வந்து திருவருளால் உயிரைக் காட்டுவான். இது விட்ட இலக்கணையாம்.

இனி, விடாத இலக்கணையில் பரனுக்கு வேறாக ஏழு உபாதிகளைச் சொல்வார்கள். அவை சர்வக்ஞத்துவம், சர்வகாரியம், சர்வேந்திரியாமி, சர்வசிருட்டி, சர்வதிதி,

சர்வசங்காரம், சர்வேச்வரம் என்பனவாம். இவ்வேழும் நீங்கி அறிவுவடிவாய் எது விளங்குகின்றதோ அதுவே பரமாம். அப்பரமே, தன்னையறியாத உயிரைக் காட்டவந்த குருமூர்த்தி யாகும். விசிட்ட வாக்கியமான பரமும் ஆசானும் வேறல்ல என்பதற்கு உவமையாவது, சிவப்புக் குதிரையும் வெண்பசுவும் ஆகும். உண்மையை உணர்கின்றவர்கள் சிவப்பும் குதிரையும் வெண்ணிறமும் பசுவும் ஒன்றேயாகுமாறு போன்ற தன்மை யுடையதாகும்.

அகண்ட வாக்கியமாகிய விட்டுவிடா இலக்கணையானது, 'சுயந்தேவதத்தா' என்று சொல்வதைப் பார்க்குமிடத்து, மேலாம் பரிபூரணமான ஒரே வஸ்துவான இன்ப வடிவானது பரம் அல்லது இறையாகவும் குருவாகவும் விளங்கும் என்பர். அது, ஒரு புருடனானவன் ஓரிடத்தில் பிரமசாரியாகவும், ஓரிடத்தில் இராஜாவாகவும், ஓரிடத்தில் சந்நியாசியாகவும் ஆக மூன்று வடிவாக இருந்தாலும் மூன்றிடத்திலும் உள்ள உடல் வேடத்தைப் பிரித்துச் சிறப்பாகப் பார்க்குமிடத்து, பொருந்தியுள்ள வேடத்தின் அடையாளம் மட்டும் அழிந்து, தேகமாத்திரம் ஒன்றாக விளங்குவதுபோல, உணர்கிறவர்கட்குத் 'தேவதத்தன்' ஒன்றாமாபோல சிவன் ஒன்றாகவே தோன்றி நிற்பான்.

சிவனோடு உயிரானது கலந்து நிற்கும் விதத்தைச் சொல்லுமிடத்து, முன்பு தன்னை எண்ணாமல் ஒன்பது நபர்களை மாத்திரம் எண்ணித்தியங்கின அவனுக்கு ஆற்றில் அறிவித்தவன் போலவும் உயிரை அறிவித்த குருவினது உணர்வோடு கலந்தும் தேகாதியாகிற ஏழு உபாதிகள் நீங்க நின்றும், ஐந்தொழில் செய்தும், அஞ்ஞானங்கள் நீங்க அநுக்கிரகிக்கும் திருவடியில் கூடியும், சர்வக்ஞாதி உபாதியும் சாராமலும், ஞாதுரு ஞானம் ஞேயங்களாகின்ற திரிபுடி தோன்றாமலும், தற்போதம் அற்றும், சிவனுடன் இரண்டறக் கலந்து இன்ப வடிவாயும், பூரணப் பிரம அத்துவித முத்தியை அடைதல் நிலையான 'அசி' பதமாகச் சொல்லுதலாகும். இறைவனால் அருளப்பட்ட வேதாந்தத்தின் தெளிவு இதுவாகும். இறை அல்லது பிரமம் தலைமை; உயிர் அடிமை என்று கொள்ள வேண்டும் அல்லது உணர வேண்டும். எவ்விடத்தும் பூரணமாக விளங்கும் இறைவனுக்கு அடிமையான உயிர் சமமாகுமா? 'நான் பிரமம்' எனச் சொல்லுதல் குற்றமாகும்.

வேதங்களும் 'அது நான் ஆனேன்' என்று பாவிக்கும் படிச் சொல்வதும், மேற்கூறியபடி குற்றமேயாகும். அடிமைத் தன்மையுடன் மனங்கசிந்து உருகிச் சிவனைத் தன்னிடத்துச் சோகம்பாவனை செய்து, சுகத்தையடைந்து அஞ்ஞானங் களெல்லாம், கருடபாவனையினாலே விடம்போகச் செய்வது போல அகன்று போக, மலவாதனையற்ற, கடலில் சேர்ந்த நீரும் உப்பாமாறுபோல ஒரு தன்மைத்தாகி, சிவனொடு ஒன்றாய்க் கலத்தல் சீவன் முத்தியாகும்.

சுவானுபவ வேதாந்தமானது இப்படிப்பட்டதாம் என்று அழகிய விநாயகர் கூறக்கேட்டு, அகத்தியர் மகிழ்ந்து வணங்கினார். பிள்ளையாரும் கடைக்கண்ணருளினார். சித்திகளை அருளி, மேற்குப் பக்கத்தில் வலப்புறமாயிரு என்று தமது அருகில் இருக்கை அளித்தார். மாசிலாமணிப் பெருமானையும் ஒப்பிலா முலையம்மையையும் வணங்கிய அகத்தியர் துறைசையிலேயே மகிழ்ந்து வாழ்ந்திருந்தார்.

ஐம்பத்தாறாவது
நவகோடி சித்தாதிகட்கு அட்டமா சித்தி
அருளிய அத்தியாயம்

1985. அகத்தியர்க் கழகு முக்கண் அம்பிகை புதல்வன் சொன்ன
மகத்துவ முரைத்தோ மிக்க மிதுலைவாழ் மன்னா வின்னுஞ்
சுகத்தினை யருள்சித் தாந்தஞ் சுருதியி னந்த மெல்லாம்
பகுப்பற வுணர்ந்த சித்தர்க் கருள்புரி பண்பு சொல்வாம். 1

1986. ஆகம முடிவும் வேத முடிவுமாய்ந் துணர்ந்த மேலோர்
மோகமுள் மயக்கங் காமம் வெகுளியா தியமு னிந்தோர்
பாகமுட் பரிவு தூய பண்பொடொப் புரவு பத்தி
வாகுசொல் லுறுதி தண்மை வணக்கமா தவம்வாய்த்
துள்ளோர். 2

1987. கண்டிகை நிறைந்த மார்பர் கவின்செய்குண் டலஞ்சேர் காதர்
வெண்டிரு நீற ணிந்து விளங்குதே சுடைய மெய்யர்
புண்டர மிலங்கு நெற்றிப் புண்ணியர் செங்கற் தூசு
கொண்டகோ வணவே டத்தர் கொடியெனப் படர்கோ டீரர். 3

1988. சிவயோக முதிர்ச்சி மிக்கோர் சிவனடி யன்றிப் பேணா
நவகோடி சித்தர் நாளும் நற்கயி லையில்வாழ் வுற்றோர்
பவமாய மயக்க நீங்கும் பண்பினர் கூடி யோர்நாட்
தவமேவு மிமய மங்கை தலைவனைப் பணிந்து சொல்வார். 4

1989. கருணையங்கடலே!முக்கட் கடவுளே!யெமையாட் கொண்ட
அருணபங் கயப்பொற் றாளா! அம்பிகை பாகா! எங்கட்கு
இருண்மல மகற்றி யாண்ட இத்திருக் கயிலை போல
ஒருதலம் புவியின் கண்ணும் உவகையோ டிருந்து வாழ. 5

1990. அருள்செய வேண்டு மென்றங்கு அன்பொடும் புகலக் கேட்டுப்
புரிசடை முடியோன் சொல்வன் புவியிலிக் கயிலைச போல்நாம்
மருமலர்க் குழலி யோடும் வாழ்பதி யொன்றுண் டந்தத்
திருமலி பதிகோ முத்திச் சேத்திர மாகு மன்றே. 6

1991. புவிமீதி லதுதான் மிக்க பூகயி லாச மென்றும்
சிவலோக புரம தென்றும் சிறப்புறு முரிமை யாய்நாம்
குவிமுலை ஒப்பி லாநற் குயிலொடு மிருந்து வாழ்வேம்
தவமுற நீவி ரெல்லாம் சாருமத் தலத்தி லென்றான். 7

1992. அத்திரு மொழிகேட் கின்ற அருள்நவ கோடி ஞானச்
சித்தர்கள் பணிந்து மிக்க சிவனருள் விடைபெற் றெய்திப்
பத்தியோ டெழிற்கோ முத்திப் பதியினில் வந்து போற்றிச்
சத்திய முத்தி ஈயும் தலமிதென் றுள்ம கிழ்ந்து. 8

1993. காவிரி நதியு முத்திக் கானமும் போதிக் காவும்
பூவிரி புனற்கோ முத்திப் பொய்கையின் வளமும் திங்கள்
மேவுகோ புரமும் சூழ்ந்து விளங்குபொன் னெயிலும் தன்மச்
சேவின்மெய் யழகும் வீதிச் சிறப்புமண் டபத்தின் சீரும். 9

1994. நவநிதிச் சபையும் நிர்த்த மண்டப நலனும் மிக்க
கவினுறு கனகத் தூபிக் கதிர்விமா னமும்பொற் சோதி
அவிரொளி பரப்பு மாட மாளிகை அழகுங் கண்டு
புவிபுகழ் சித்தர் முற்றும் புந்தியிற் களிப்புப் பொங்கி. 10

1995. உலகநா யகியா கின்ற ஒப்பிலா முலைபொற் பாதம்
தலமுற வணங்கிக் கோயில் தனைவலஞ் சூழ்ந்து ஞானக்
கலையருள் கணேசன் கந்தன் கழலிணை வழுத்தி இன்ப
மலையென விளங்குஞ் செல்வ மாசிலா மணியைக் கண்டு. 11

1996. கயிலையில் மருவுங் கோலங் காட்டிடக் களித்துப் போற்றி
இயல்பொடுஞ் செம்பொற் தியாகர் இணையடி யிறைஞ்சும் போது
நயமுறு சிவபோ கங்கொள் நவகோடி சித்தர் கேட்பப்
பயிலுமா காய வாக்காற் பரமன்ஈ துரைப்ப தானான். 12

1997. போதிமா வனத்துள் நீவிர் பொருந்தியோ கத்தா னம்பொற்
பாததா மரைத்தே னுண்டு பரிவொடும் வாழ்மின் உங்கட்கு
ஏதமில் சித்தி முத்தி இரண்டும்யாம் ஈந்தோ மென்று
கோதிலா நாத னன்பாற் கூறிடக் கேட்டெல் லோரும். 13

1998. இச்சையால் யாங்கள் கேட்க வேண்டிய பொருளி யாவும்
மெச்சிநீ வலிய முன்னே கொடுத்திட வேண்டிற் றோவென்று
உச்சியில் முகிழ்க்கை யேற உடல்புள கிதங்கண் மீறச்
செச்சைமே னியனே! செம்பொற் தியாகனே! யென்று
செப்பி. 14

1999. அரவெனு மோசை யண்டம் அதிர்ந்திட வுரைத்துக் கண்ணீர்
சொரிதரத் தட்ட மிட்டுத் துள்ளிநல் நிருத்த மாடிப்
பரிவொடும் புகழ்ந்து பாடிப் பண்புறு சித்தர் முற்றும்
விரிபொழிற் போதி நீழல் மேவியோ குற்றா ரன்றே. 15

2000. யோகமெட் டங்க மாகும் உறுதிசே ரியம நேம
மாகமே வாத னம்பிரா ணாயாமம் பிரத்தியா காரம்
வாகுதா ரணையோ கஞ்ச மாதிய வெட்டின் மன்னு
பாகமா மியமம் வேதா ககம்பகர் பண்பின் நிற்றல். 16

2001. நியமநித் தியகல் மானுட் டானமா நினைந்து நாளும்
முயலுமா தனநற் பத்மா சனமுதற் பலவு மாகும்
நயமுறு பிராணா யாமம் நடுநாடி வழியிற் காலைப்
பயில்வொடு நிறுத்த லாகும் பகர்பிரத் தியாகா ரந்தான். 17

2002. ஐம்புலன் வழிசுற் றாமல் மனத்தினை அடக்க லாகும்
பம்புதா ரணையா றாதா ரப்பொருள் பற்றி நோக்கல்
இன்பமா ரியோகந் சந்திர மண்டலத் திசைந்து நின்று
சம்புவின் சோதி ரூபந் தனைநினை தியான மாமே. 18

2003. சமாதியெண் ணெய்போ லெங்கும் தயங்குபூ ரணசொ ரூப
உமாபதி பதத்து ளொன்றி இன்பமுற் றொன்றி ரண்டற்ற
அமோகமாய்த் தற்போ தத்தி னிகழ்ச்சியற் றழுந்த லாகும்
புமான்றெரி யாம்இம் மார்க்கம் புணர்ந்திடு நிட்டை
தன்னுள். 19

2004. அவரவர்க் கிசைந்த ஆச னத்தினில் அரசுள் மேவும்
நவகோடி சித்த ருள்ளந் தொறுந்தியா கேசன் நண்ணிச்
சிவமிகு போக மாகிச் சிறந்துடன் கலந்து பின்னும்
உவகையோ டெட்டுச் சித்தும் உதவிடப் பெற்றா ரன்றே. 20

2005. இத்திரு முத்தி சித்தி எய்துயிர்க் காரி யங்கள்
பத்தென மொழிவ ரித்தைப் பகர்ந்திடில் இச்சை ஞானம்
ஒத்திடுங் கிரியை மூன்றும் உருவமாஞ் சொருப மத்தால்
மெய்த்துயா னெனதென் றெண்ணல் மிஞ்சுத லாஞ்சு
பாவம். 21

2006. கூடின கருவி யோடும் பற்றுகை குணந்தா னின்ப
விடருள் நாத னெங்கு மறிவிக்க வுனல்வி சேடம்
பாடுறு கருவி யைக்கீழ்ப் படுத்திமே லாகித் தோன்றல்
ஊடெழும் வியாத்தி மிக்க பரிசமட் டுலாவ லாகும். 22

2007. சாதனை மிகும்வ சிப்பு வியாபகஞ் சாற்றுங் காலை
நாதனல் லருளால் அட்ட சித்தியும் நணுக லாகும்
மீதினி லணிமாச் சூக்கு மத்தினுஞ் சூக்க மாக
ஓதலா மகிமா மேருப் போல்வடி வுறுத லாமே. 23

2008. நொய்தாக வடிவு கொள்ளல் இலகிமா வென்பர் நூலோர்
மைதாவு கிரிமா வொன்றி னாலசை யாது மன்ன
றுய்தாமீ சத்து வந்தான் சொற்தேவர் கேட்ப மேவல்
பொய்தாவா வசித்து வம்பல் லுயிர்கள்போ தவுமுண்
டாக்கி. 24

2009. உலகுகீழ் மேன்மேல் கீழா யுற்றிடச் செய்து காட்டல்
இலகுநற் பிராத்தி யாவ தெல்லாப்போ கமுமுண் டாக்கல்
அலர்பிரா காமி யந்தான் அநேகமா தரையுண் டாக்கி
புலனுறக் கால மொன்றிற் புணர்வதாம் புகலுங் காலே. 25

2010. சிறந்திடு நிறங்கிஞ் சிஞ்ஞ னாகுநற் தெரிச னந்தான்
பறிந்திடு பசுபா சங்கள் நீங்கித்தண் பணியொன் றின்றி
உறஞ்சிவன் செயலாக் காண்கை உண்மைநற் சுத்தி யாவது
அறிந்ததற் போதம் நீங்கச் சிவபோகத் தழுந்த லித்தில். 26

2011. அட்டமா சித்தி பெற்றும் அதிலாசை யின்றி யன்னோர்
இட்டமார் தெரிச னத்தோடு இலகுசுத் தியுமேய்ந் தென்று
நட்டமே யிலாத லாப நிட்டையின் நயப்போ டுற்று
மட்டிலா அருட்கோ முத்தித் தலத்தினில் வசித்தா ரன்றே. 27

ஐம்பத்தாறாவது
நவகோடி சித்தாதிகட்கு அட்டமாசித்தி அருளிய
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2011
திருச்சிற்றம்பலம்

2008. நொய்தாக - சிறியதாக.

56. நவகோடி சித்தாதிகட்கு அட்டமாசித்தி அருளிய அத்தியாயம் (சுருக்கம்)

சித்தாந்தம் வேதாந்தம் ஆகியவற்றை முழுதும் அறிந்த சித்தர்களுக்கு அருள்புரிந்த தன்மையை மிதிலேசனுக்குத் தவுமிய முனிவர் கூறுகின்றார்.

ஆகம முடிவையும் வேதமுடிவையும் ஆராய்ந்து உணர்ந்த மேன்மையாளரும்; காமம், வெகுளி, மயக்கம் இவற்றைக் காய்ந்தவர்களும்; பக்குவம், அன்பு, தூய்மை, ஒழுங்கு, பக்தி, வாய்மை, சாந்தம், பணிவு இவை வாய்க்கப் பெற்றவர்களும்; உருத்திராக்கம் அணிந்த மார்பை உடையவர்களும்; குண்டலத்தை அணிந்த காதினை உடையவர்களும்; திருநீறு அணிந்த மெய்யினை உடையவர்களும்; நீர்க் காவி படிந்த கோவணத்தை உடையவர்களும்; கொடி போலும் படர்ந்த சடையை உடையவர் களும்; சிவயோகத்தில் முதிர்ச்சி அடைந்தவர்களும்; சிவனது திருவடிகளே அல்லாது மற்றவர்களது திருவடிகளை வணங்காத வர்களும் ஆன திருக்கயிலையில் வாழும் நவகோடி சித்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒருநாள் இறைவனைப் பணிந்து, கருணைக்கடலே! முக்கண் இறையே! எங்களை ஆட்கொண்ட செந்தாமரையன்ன திருவடி உடையவரே! உமையொரு பாகனே! எம் இருள் மலமாகிய ஆணவ மலத்தைப் போக்கி ஆண்ட இக்கயிலையைப் போல, பூவுலகிலும் ஒரு தலத்தில் மகிழ்வுடன் வாழ எங்களுக்கு அருள வேண்டும் என முறையிட்டனர்.

இவ்வேண்டுகோளைக் கேட்ட இறைவன், பூமியில் இக்கயிலையைப் போல நாம் அம்பிகையோடு வாழும் தலம் ஒன்று உள்ளது. அது கோமுத்தித் தலம் ஆகும். பூமியில் அது பூகயிலாயமென்றும் சிவலோகபுரம் என்றும் பெயர் பெற்று விளங்கும். அங்கு, ஒப்பிலாமுலை அம்பிகையோடு நாம் உரிமையுடன் வாழ்வோம். நீங்கள் எல்லாரும் அந்தத் தலத்திற்கு வந்து சேருங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே நவகோடி சித்தர்களும் கோமுத்தித் தலத்தை அடைந்தனர்.

முத்தியினைக் கொடுக்கும் தலம் இதுவாகும் என்று எண்ணி, மனமானது மகிழ்ச்சியுற, காவிரி நதியும், அழகிய காடும், அரசமரச் சோலையும், கோமுத்தித் தீர்த்தமும், ஓங்கி உயர்ந்த கோபுரமும், சூழ்ந்த மதிலும், தர்ம விடையினது அழகும், திருவீதியின் சிறப்பும், மண்டப வரிசையும், நவநிதிச்

சபையும், நடன மண்டப அழகும், அழகிய தூபியும், மாடமாளிகைகளின் அழகும் ஆகிய இவைகளையெல்லாம் கண்டு சித்தர்கள் அனைவரும் மனக் களிப்படைந்தனர். ஒப்பிலாமுலையம்மையினுடைய திருவடிகளை வணங்கி, திருக்கோயிலை வலமாக வந்து, கணேசர் முருகன் ஆகிய இவர்களது பாதங்களையும் வணங்கினர்.

மாசிலாமணிப் பெருமானைச் சித்தர்கள் தரிசித்தபொழுது, கயிலையிலுள்ள திருக்கோலத்தின்படியே அப்பெருமான் அவர்களுக்குக் காட்சியளித்தார். அப்போது ஆகாய வாக்கும் தோன்றியது. 'அரச வனத்திலே நீங்கள் அனைவரும் இருந்து யோகத்தினாலே நம் திருவடித் தேனை உண்டு அன்போடும் வாழுங்கள்; உங்கட்குக் கெடுதலில்லாத சித்தி முத்தி ஆகிய இரண்டையும் அளித்தோம்' என்று மாசிலாமணிப் பெருமான் கூறி அருளினார். இதைக் கேட்ட அனைவரும் போற்றி வணங்கினர். 'செம்மேனியனே! செம்பொற் தியாகனே! எனத் துதித்து, அரகர என்று சொல்லி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கூத்தாடினர். பின்பு எல்லாச் சித்தர்களும் போதி நிழலிலேயிருந்து யோகத்தைச் செய்திருந்தனர்.

யோகமானது; எட்டு அங்கங்களை உடையது. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, யோகம், சமாதி என்பனவாம்.

இயமமாவது: வேதாகமங்கள் வகுத்த வழியில் நின்று ஒழுகுவதாகும்.

நியமமாவது: நித்தியகர்ம அநுட்டானங்களை நாள்தோறும் தவறாது நினைந்து செய்தலாகும்.

ஆசனமாவது: பத்மாசனம் முதலிய பல ஆசனங்களைச் செய்வதாம்.

பிராணாயாமமாவது: நடுநாடி (சுழுமுனை) வழியில் காற்றைக் (பிராணவாயுவை) கிரமப்படி நிறுத்துதலாகும்.

பிரத்தியாகாரமாவது: மனத்தை ஐந்து புலன்களின் வழியே விடாமல் அடக்கலாகும்.

தாரணையாவது: ஆறாதாரப் பொருள் பற்றி நோக்கு தலாகும்.

யோகமாவது: சந்திரமண்டலத்து இசைந்து நின்று சம்புவினது ஜோதி வடிவைக் காண்டலாகும்.

தியானமாவது: அவ்விறைவனது வடிவை இடைவிடாது நினைப்பதாகும்.

சமாதியாவது: எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் விளங்கும் பரிபூரண சொரூபமான இறைவன் திருவடியில் கலந்து, இன்பத்தோடு இரண்டற்று ஒன்றாகி, ஆசையெல்லாம் இழந்து தற்போதத்தால் (ஆன்ம ஞானத்தால்) நிகழ்ச்சிகள் எல்லாம் அழிந்து நிற்பதாகும்

அசுத்த தத்துவம் தெரியாத இம்மார்க்கத்தைச் சேர்ந்திடும் நிட்டையுள், அவரவர்கட்கு இசைந்த ஆசனத்தில் அரச மரத்தடியில் தவம் செய்யும் நவகோடி சித்தர்களுடைய ஒவ்வொரு உள்ளத்திலும் தியாகேசன் அடைந்து சிவ போகமாகிச் சிறப்புடன் கலந்து, பின்னும் அட்டமா சித்திகளையும் அருள, அச்சித்தர்கள் அவற்றை அடைந்தனர்.

இம்முத்தியையும் சித்தியையும் அடைந்த உயிர்களினது காரியங்கள் பத்து என்பர். இச்சை, ஞானம், கிரியை இம் மூன்றும் உருவமாகிய சொரூபத்தால் உண்மையாகி யான் எனது என்று அதிகமாக நினைத்தல் 'சுபாவம்' ஆகும்.

கூடிய கருவியோடும் பற்றுகையானது குணம் ஆகும். இன்ப வீட்டை அருளுகின்ற இறைவன் எல்லா இடங்களி னின்றும் அறிவிக்க அறிதலானது 'விசேடம்' ஆகும். கருவியைக் கீழ்ப்படுத்தி உயர்ந்து தோன்றுதல் வியாத்தி அல்லது எங்கும் நிறைதல் ஆகும். ஸ்பரிசமாத்திரமிருக்கும் சாதனையானது - மிக்க வசிப்பானது வியாபகமாகும்; சொல்லு மிடத்து இறைவனருளால் அட்டமாசித்திகளும் அடைதலாகும். இவற்றுள்,

'அணிமா' என்பது: சூக்குமத்திலும் சூக்குமமாகும்.

'மகிமா' என்பது: மேருமலையைப் போன்ற மிகப் பெரிதான வடிவை அடைதலாகும்.

'லகிமா' என்பது: அற்பமான - சிறிய வடிவு கொள்ளலாகும்.

'கிரிமா' என்பது: யாதொன்றினாலும் அசைக்க முடியாது நிலைபெற்று இருத்தலாகும்.

'ஈசத்துவம்' **என்பது:** தேவர்களும் தன் சொற்படி ஏவல் செய்வதாகும்.

'வசித்துவம்' **என்பது:** எல்லா உயிர்களையும் தன்வசம் ஆக்கலும், உலகைக் கீழ்மேலாகவும் மேல்கீழாகவும் அடையும்படி செய்து காட்டலும் ஆம்.

'பிராத்தி' **என்பது:** எல்லாப் போகங்களையும் உண்டாகுபடி செய்தலாகும்.

'பிராகாமியம்' **என்பது:** அநேக மாதர்களை உண்டாக்கி ஒரே காலத்தில் புணர்வதாகும். இவற்றையெல்லாம் சிற்றறிவுடையவனானவன் நல்ல தரிசனத்தால், பசுபாசங்கள் நீங்கப் பெற்று, தன் செயல் ஒன்றின்றி, சிவன் செயலாகக் காணுதலாகும்.

நற்சுத்தியாவது தற்போதம் நீங்கச் சிவபோகத்தில் அழுந்துதல் ஆகும்.

அட்டமா சித்திகளைப் பெற்றும் அதில் ஆசையில்லாமல் அச்சித்தர்கள் தரிசனத்தோடு நற்சுத்தியையும் அடைந்து என்றும் அழிதலில்லாத நிட்டையில் விருப்பத்தோடிருந்து கோமுத்தித் தலத்தில் வாழ்ந்திருந்தனர்.

ஐம்பத்தேழாவது
திருமூல தேவரைத் தடுத்தாட் கொண்ட அத்தியாயம்

2012. இதுவாகும் ஆவடுதண் துறைசையிலுற் றெந்நாளும்
நதிமேவு சடைமாசி லாமணிநா யகனருள்பெற்று
அதிமாத வத்துடன்வாழ் சித்தர்செய லினியவருள்
மதிமேவு திருமூலர் வந்தபரி சுரைத்திடுவாம். **1**

2013. எண்ணில்பல ஊழிக்கா லங்களெலாம் ஈசனடிக்கு
அண்ணியனா யிருந்துபணிந் தளவிலாத் தவம்மேவும்
புண்ணியன்முக் காலமுணர் புனிதனருள் பொழிவிழியன்
தண்ணளியே பரிணமித்துத் தயங்குதிரு வுருவானோன். **2**

2014. பூமிசா தனவேடப் பொலிவினாற் கண்டவுயிர்க்
கோதலா மகற்றுமெழிற் குறியுடைய தேசுடையன்
வேதமுடி வாகமத்தின் மெய்ப்பொருளின் நுட்பமெலாம்
நாதனருள் நந்தியரு ளாற்பெற்ற நலமுடையோன். **3**

2015. எண்வகைச்சித் தியுமேய்ந்த சிவயோகி யொருவனின்பப்
பண்மருவு மொழிபாகன் பதியெனுநற் கயிலையைவிட்டு
அண்மையுறப் பொதியமலைக் கணுகிஅகத் தியமுனியைக்
கண்மகிழத் தரிசிக்குங் கருத்துடைய னாயொருநாள். 4

2016. பசுபதிபொற் பதம்பணிந்து விடைபெற்றுப் பரிவொடுந்தென்
திசையினிற்போந் திலகுமிமா சலங்கடந்து சென்றுகதி
வசையறுவோர்க் கருள்கேதா ரம்பணிந்து வந்துகங்கை
இசைவொடுசூழ் காசிவிசு வேசரடி தொழுதேத்தி. 5

2017. திரிவேணிப் பிரயாகை சென்றாடி யமுனைகடந்து
அருண்மேவு நருமதைநீ ராடியமர் வாணலிங்கப்
பெருமைகண்டு தொழுதுகோ தாவிரிநற் பெருங்கரையில்
மருவிநீர் படிந்துபருப் பதம்பணிந்து வந்திப்பால். 6

2018. இடபநந்தி வளர்கிருட்ண வேணிவீ மேசுரர்தாள்
படியுறத்தாழ்ந் தருள்நீலப் பருப்பதமுந் தொழுதேத்தித்
திடமருவு பொன்முகலி சூழ்திருக்கா ளத்தியில்வந்து
அடல்மருவு திண்ணர்கட்போ தணிந்தவரைப்
புகழ்ந்திறைஞ்சி. 7

2019. ஆலவனத் தினிற்காளி யுடனாட வெடுத்தபதம்
சீலமுடன் பணிந்துதிருக் காஞ்சிமா வடிநிழலிற்
பாலனைய மொழியுமையாள் பயோதரம்பாய்ந்
திடக்குழைந்த
சூலபா ணியின்மலர்த்தாள் துதித்திறைஞ்சிப்
போந்திப்பால். 8

2020. அன்னமும்வெண் பன்றியுமாய் அயனும்அரி யுந்தேட
இன்னமுங்கண் டிடற்கரிதாய் இருந்தஅடி முடியுடைய
மின்னவிர்செஞ் சடையருள்நே சரைத்தொழுது விருத்தகிரிப்
பொன்னனைய திருமேனிப் புண்ணியனைப்
புகழ்ந்தேத்தி. 9

2021. அருட்டுறையுங் கெடிலவீ ரட்டமுநற் கழுக்குன்றம்
பொருட்டிறஞ்சேர் நெல்வாயில் அரத்துறையும்
புகழ்ந்தேத்தி
இருட்டறவெவ் வுலகினுக்கும் ஒளிபரப்பி இலகுபொற்கோ
புரப்பொன்வரை நான்குடைய பொற்சபைநல்
நடம்பணிந்து. 10

2022. மலருமருட் டிருத்தோணி புரம்பணிந்து வயித்தீசர்
குலவுதிருத் தாளிறைஞ்சிக் கடவூர்மன் குங்கிலியக்
கலையருக்கு நிமிர்ந்தசடை யப்பர்கழல் தொழுதுபொன்னி
இலகுநதி மூழ்கிச்சென் றிடைமருதர் அடிபோற்றி. 11

2023. காவிரியின் தென்கரைமேற் போம்பொழுது கவின்மேவு
பூவிரிபூம் பொழில்சூழும் சாத்தனூர்ப் பூசுரர்கள்
ஆவலுடன் புரிமகத்துக் கைந்துதவும் ஆனினமேய்த்து
ஏவல்புரி வானொருவன் ஆயர்குலத் தினிற்பிறந்தோன். 12

2024. அப்பதிக்கு வடபால்சேர் ஆவடுதண் துறைஅரனுக்கு
ஒப்பிலா வுட்பத்தி யுடையனெழில் மிகுமுருவன்
செப்புதிரு மூலனெனுந் திருப்பெயர்பெற் றிடுதவத்தோன்
ஒப்பறுநல் முனிவன்வரு நெறியிலுறு புறவதனில். 13

2025, பசுநிரைமேய்த் திடும்பொழுது பழவினைமுற்
பான்மையினால்
அசைவுறுதே கத்தில்விட மயக்கமுற அயர்ந்துவிழுந்து
இசைவுறுமோர் மரநிழலிற் கிடந்துமரித் திறையருளால்
வசையறுநற் சிவலோக மடைந்தனனம் மண்மீதில். 14

2026. தூலவுடற் பாம்புரித்த சட்டைபோற் துலங்குதல்கண்டு
ஓலமிட்டா னினங்களெலாம் உடல்தனைமோந் துளங்கசிந்து
வாலைநிமிர்த் துடல்பதற இருகண்ணீர் வழிந்தொழுகச்
சீலமுறு குழக்கன்றுக் கிரங்குதல்போற் றிகழ்ந்தலறி. 15

2027. துன்புறுத லந்நெறியிற் றோன்றுசிவ யோகமுனி
அன்பொடுகண் டுருகினிற்போய் ஆவியறக் கிடந்தவுடற்
தன்பரிசு மாவினங்கள் தன்முகம்பார்த் தலறுவது
முன்புறுக்கண் டருட்கருணை முதிர்ச்சியினாற் றரியானாய்.
16

2028. இன்னிரைகள் மேய்த்தஇவன் எழுந்திருந்தாற் பசுக்கள்துயர்
அன்னியமா மல்லதுமற் றொன்றாலும் அகலாதென்று
உன்னியங்ஙன் தன்னுடலை ஒருபொதும்ப ரினிலொளித்து
மன்னுபர காயப்பிர வேசஞ்செய் வகையதனால். 17

2029. பிராணவளி யுடன்கரணப் பெருமையெலாங் கொடுமூலம்
விராவுமுடல் நாசிவழி புகுந்துமெய் யெலாம்நிறைந்து
பராபரனை யுணர்முனிவன் பசுமேய்ப்பான் தனைப்போலத்
தராதலமீந் தானிரையின் சஞ்சலந்தீர்த் திடவெழுந்தான். 18

2028. பரகாயப்பிரவேசம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல். அது, கலைஞானம் அறுபத்து நான்கினொன்று.

2030. உறங்கியெழுந் தவன்போல் மூலனுணர் வொடுமெழக்கண்டு
இறந்தனனென் றரற்றிஆ னினங்களெலாம் இன்பமுடன்
நிறைந்தமடுப் பால்பீர்விட் டோடநிலத் தினிற்குதித்துச்
சிறந்ததிரு மூலனைக்கண் டுளங்களித்துத் திரிந்தனவால். 19

2031. உளங்களித்த ஆனினம்போற் தானுமுளங் களித்துமுனி
வளந்திடுநீர் பசுக்கள்குடித் திடவருத்தி வயிறார
இளந்தளிர்ப்புல் மேய்த்தந்தி எய்திடுங்காற் பசுவையெலாம்
விளங்குபுகழ்ச் சாத்தனூர் மனைகள்தொறும் புகவிடுத்து. 20

2032. அப்பதியிற் புறத்திலொரு பொதுமடத்தில் அணைந்திருப்ப
ஒப்பறுதன் கணவனினும் உற்றிலனென் றவன்மனைவி
செப்பமுற மடத்தினிற்போய்க் கண்டிலத்திற் சேராமல்
இப்படிநீர் இருப்பதென்னோ என்றழைப்பப் பேசாமல். 21

2033. விடலருமியோ குற்றிருத்தல் கண்டுவிரை வுடனேகி
உடல்பழகு முறவுடைய சுற்றத்தா ருடன்தனது
தொடர்புடைய கணவனுறுந் தொழில்சொல்லி
யழைத்துடன்வந்து
இடமருவு மடத்தினிற்போய் எல்லாரும் அழைத்திடலும். 22

2034. எமையறியீ ருமதுதொடர்பு எமக்கில்லை போமெனவே
அமைவினொடு மூலருரைத் திருப்பதுகண் டவர்களெலாங்
கமைவொடுமுன் பழகுகுறி கண்டிலேம் இம்மாயை
நமதறிவால் அறியவொணா தெனநழுவிப் போயினரால். 23

2035. கதிர்மறைந்து கங்குல்வரக் கண்டதனால் மூலரந்த
முதிர்மடத்தி லமர்ந்துதுயில் புரிந்திடக்கோ முத்தீசர்
பதனமுற அவர்பொதும்ப ரொளித்தவுடற் படிவத்தை
இதமுறுநற் பூதகணத் தாலெடுத்துஆ வடுதுறையில். 24

2036. போதிவனத் தினில்வடமேற் புறத்திலருட் பூரணத்தில்
ஏதமறக் கலப்பித்தங்கு இருத்தியிட விடிந்தபின்பு
நாதரடி புணர்ந்ததிரு மூலரந்த விடம்நணுகிச்
சோதியுடல் தனைத்தேடிக் கண்டிலராய்த் துயர்மிகுந்து.
25

2037. திரும்பிவந்து வேலையொடு முன்பமர்ந்த திருமடத்திற்
பொருந்திமிகு சிவயோகம் புணர்ந்திருக்கும் போதருளால்
விரும்புசிவ மாசிலா மணிநாதன் வியாபகமாய்ப்
பரந்ததிரு மூலரறி வினிற்பதிந்தீ துணர்த்துவனால். 26

வேறு

2038. பந்த வுடலைத் துறைசையெனும்
பதிப்போ தியினிற் பதுக்கினோம்
மைந்த வுனக்கு மூலனுடல்
மருவு பவமுண் டாதலினால்
இந்த வுடலே யுன்க்கழகாம்
இதனோ டெம்மை நினைந்தென்றும்
அந்த மிலதாய் நித்தியமாய்
அமர்ந்து நமதா வடுதுறையில். 27

2039. இருந்திவ் வுலகத் தோருணர்ந்தெம்
இன்ப மருவும் படிக்கினிதாய்த்
திருந்து சீலாங் கச்சுருதி
யாகுந் திருமந் திரமுரைத்துப்
பொருந்தல் வேண்டும் கயிலாயப்
பொருப்பும் போதி வனமாகும்
வருந்த லின்றி நவகோடி
சித்த ரொடும்நீ வாழ்ந்திடுதி. 28

2040. கும்ப முனிவன் தனையுமிங்கே
காண லாகுங் கோமுத்திப்
பண்பு மிகுநற் தலத்தில்வசித்
திருவா வென்று பரனுணர்த்தச்
சம்பு வடிக்கீழ்ப் புணர்ந்திருந்த
மூலர் யோகந் தனிலுணர்ந்து
நம்பு மூவகை யுடன்மகிழ்ந்து
நவின்ற படிக்குஆ வடுதுறையில். 29

2041. வரும்போ தெதிர்கொண் டகத்தியரு
மதிசேர் போகர் முதலான
பெருஞ்சீர் யோக வித்தகசித்
தரும்போய்ப் பிரிய முடன்கண்டு
பொருந்து முகமன் பலபேசிப்
போற்றி யழைப்ப வுடன்போந்து
சுரும்பார் பொழில்சூழ் ஆவடுதண்
துறையின் மருவித் திருமூலர். 30

2042. அருட்கோ முத்தித் தீர்த்தநீ
ராடித் திருநீ றணிந்துமெய்யில்
உருத்தி ராக்க மணிவடங்கள்
பூண்டு காவி யுடையுடுத்துச்

செருக்கி னொடும்போய்ப் போதிமுதற்
திகழ்பொற் கோயில் தனைச்சூழ்ந்து
விருப்ப முடன்முன் றாயிடன்
வியந்து வருங்கன் றடிபணிந்து. 31

2043. தரும நந்தி பதம் போற்றித்
தயங்கும் போதி யம்பலத்துட்
கருணை நடஞ்செய் பரனடியைக்
கண்டு வணங்கி ஒப்பில்லாக்
குருநன் மணிப்பூ ணிலகுமுலைக்
கோதை பாதந் தொழுதழகு
கருணை மகவி னடிபணிந்து
கந்தன் மலர்ப்பூங் கழலேத்தி. 32

2044. முத்தித் திருமா தேந்திவிளை
யாடு மலர்ச்செண் டெனமுளைத்துப்
பத்திக் கடற்குள் விளையமுதின்
பாகந் திரண்ட தெனவிளங்கும்
சுத்தக் கருணைப் பிரகாச
மணிநா யகனைத் தொழும்போது
பத்தர்க் கெளிய பரஞ்சோதி
பணியு முலர் குறிப்பறிந்து. 33

2045. கயிலை மலையிற் குருவடிவாய்க்
கமலத் திருத்தாள் முடியில்வைத்துப்
பயிலும் ஞானச் சிவதீக்கை
பண்ணு நந்தி தனைப்போலத்
தயவி னொடுமெய்க் காட்சியளித்
தருளக் கண்டு தனைமறந்து
செயலற் றுயரா னந்தவெள்ளத்
தமிழ்ந்திப் புளகஞ் சிலிர்ப்பெய்த. 34

2046. கண்கள் தரள மழைபொழியக்
காயம் விதிர்ப்பக் கைமுகிழ்ப்பப்
பண்க ளுடன்சொல் மொழிகுழறப்
பண்டை வசம்போய்ப் பிரவசமாய்
எண்கொள் சுருதிக் கெட்டாத
இறைவன் முன்பு விழுந்தெழுந்தே
ஒண்கண் நுகர்ந்த சுரும்பினைப்போல்
உயர்ந்து குதித்தா டித்துதிப்பான். 35

2047. எனையும் பொருளாய்த் தடுத்தாட்கொண்
டின்ப மருள்செய் எழில்மலையே!
பனிவெண் திங்கட் கொழுந்துதவழ்
படர்செஞ் சடைக்கா டுடையானே!
புனிதம் பெருகும் அதுலதனப்
பூவை கணவா! ஏனமுமோர்
அனமுங் காணாக் குருமணியே!
அய்யா! யானுன் அடைக்கலமே!

2048. என்று துதித்துத் திருவருள்பெற்று
இறைவ னேவற் பணிதலைக்கொண்டு
ஒன்று முளத்தன் பொடும்போதி
வனத்து ளொருமண் டபத்தெய்தித்
துன்று பெருமா ருதத்திசையிற்
குணபால் நோக்கிச் சுகாசனத்திற்
குன்று மனைய தவமூலக்
குரிசில் யோகங் குறித்தமர்ந்து. 37

2049. கைக ளிரண்டு மடியிலுறக்
கண்கள் மூக்கி னுதிமருவ
மெய்கம் பிதற்முற் றசையாமல்
இருப்பப் பிராண விசையடங்கச்
செய்கை யிழந்து தற்போத
மருளி லொடுங்கச் சிவத்தினொடும்
பொய்கொள் மும்மை மலரகித
னாகிப் புணர்ந்து கலந்தனனால். 38

2050. இவ்வா றிருந்தாண் டினுக்கொருகால்
விழித்துக் கருணை இசைவினொடும்
செவ்வாய் மொழியாற் சரியைமுதல்
நான்குந் திருமந் திரமாக
உய்வா ரெல்லா முணர்ந்தறியத்
தமிழ்ப்பா வாக ஒவ்வொன்றாய்
மெய்வாய் மையினா லொருமூவா
யிரமும் விளம்ப அவையெல்லாம். 39

2051. அறிவால் மிகுந்த சித்தர்குழாம்
இலேகத் தெழுதி அவரவரே
நெறியா லுணர்ந்து களித்துலக
முழுது முணர நிரப்பினர்கள்

பிறியாச் சிவபோ கம்புசிக்கும்
மூலர் இன்னும் பிரானடியிற்
செறிவாம் யோகுற் றிருந்தனர்நீ
டூழி பலவுஞ் சென்றனவால். 40

2052. சுத்த மார்திரு வாக்கினாற் றொகுத்தபா வதனில்
அர்த்த மானது சிறிதியா முரைத்தல்கே ளரச!
முத்தி யார்திரு மந்திர முதல்மொழி அதனுட்
பத்தி யாய்ப்பதி யிலக்கணம் பகர்ந்தனன் அதுதான். 41

2053. ஒன்ற வன்திரு வருளிரண் டாமுரு மூன்றாய்
நின்ற னன்மறை நான்குணர்ந் தானென்று நீங்கி
வென்ற னன்மல மைந்தையும் ஆறங்கம் விரித்தான்
சென்ற னன்னெழு புவிநின்றா னெட்டெனச் செப்பி. 42

2054. நந்தி பாலருள் பெற்றவர் நந்திகள் நால்வர்
பந்த மில்சிவ யோகமா முனிபதஞ் சலிநற்
புந்தி சேர்வியாக் கிரமர்தன் னுடனெண்மர் புகன்றான்
சிந்தை மேவுசந் தானத்தின் முறையெங்குந் தெரிய. 43

2055. சேர்ந்தி ருந்தனன் சிவன்திரு வாவடு துறையிற்
சேர்ந்தி ருந்தனன் போதியின் நீழலிற் றினமும்
சேர்ந்தி ருந்தனன் மாசிலாச் சிவன்திரு வடியிற்
சேர்ந்தி ருந்தனன் அடியரு ளென்பதுந் தெரித்தான். 44

2056. சிவனொ டொத்திடுந் தேவெவர் தேடினு மில்லை
அவனொ டொப்பவ ரியாவரு மில்லையச் சிவன்தான்
புவனம் யாவையுங் கடந்தவன் பொன்னொளிர் சடையன்
தவள நீற்றின னெனஅடை யாளமுஞ் சாற்றி. 45

2057. அறிவில் மிக்கவன் பிறப்பிலி யாருமி லாதான்
உறைதல் காட்டக முண்பது பிச்சையொன் றில்லாத்
துறவ னாகிலும் நம்பினோர் பிறவியைத் துடைக்கும்
இறைவ னொப்பிலாக் கருணைய னென்பது மிசைத்தான்.
46

2058. மெய்வி ளம்புநால் வேதத்தின் முடிவுவே தாந்தம்
சைவ மேவுமெய்ஞ் ஞானத்தின் தலைமைசித் தாந்தம்
உய்வு ளோருக்கிவ் விரண்டுநூல் விதியுமே உண்மை
நைவி லாதிவை யுணர்வதே அழகென நவின்றான்.
47

2059. வேட மெய்யினைக் கடந்துநல் விகிர்தன்தாள் மேவி
ஆடு கின்றவுள் ளாசையா டம்பர மறுத்துப்
பாடு கொண்டபா சம்பசுப் பாழ்படப் பவத்தைச்
சாடு கின்றபோ தகர்சுத்த சைவராய்ச் சாற்றி. 48

2060. உரையி றந்திடு மொன்றினை யுரைசெய லாமோ
கரையி றந்தவொன் றைக்கரை காண்பவர் யாரே
திரையி றந்தநீர் போற்சிந்தை தெளிவுற நிற்கிற்
புரையி றந்துமுன் தோன்றுவ னரனென்றும் புகன்றான். 49

2061. பதியு டன்பசு பாசமுன் றெனப்பகர் மூன்றிற்
பதியெ னப்பல பசுக்களும் பாசமு மநாதி
பதியி னிற்சென்று பசுபாசம் அணுகிடா வுயிரிற்
பதியு றிற்பசு பாசநில் லாவெனப் பகர்ந்தே. 50

2062. ஆகுந் தத்துவந் தொண்ணூறொ டாறுமே பொதுவாம்
ஆகுஞ் சைவதத் துவமுப்பத் தாறுவே தாந்திக்கு
ஆகு மேழுநான் கறுநான்கு வயிணவற் கையைந்
தாகுந் தத்துவ மாயைவா திக்கென்று மறைந்தான். 51

2063. ஞானிக் குச்சிவ காயமஞ் ஞானிக்குக் காயம்
ஊனிற் குஞ்சட மாமியோ கிக்குறுங் காய
மேனிற் கும்விந்து நாதமா மெய்த்தனு ஞேய
மோனிக் கென்றுமுப் பாழ்கெடு முத்தியாய் மொழிந்து. 52

வேறு

2064. இருவினை நேரொப் பாம்போ தின்னருட் சத்தி தானே
குருவென வந்தஞ் ஞானக் குணம்பல நீக்கி அன்பாற்
தருஞ்சிவ ஞானத் தாலே தன்னியல் பற்று மிக்க
பெருமலம் போக்கிச் சுத்தம் பெறுமுயிர் பிறவா தென்றும். 53

2065. ஆறாறா மாயை தானே அகம்புற மாகி நிற்கும்
ஆறாறு மண்ட பிண்ட மாகியே பலவாய்த் தோன்றும்
ஆறாறு தத்து வத்துக் கப்பாலா மருளிற் சேரில்
ஆறாறும் விட்டு நீங்கி அதிசுத்த மாகு மென்றும். 54

2066. சுத்தத்திற் சுத்த மாகும் தொல்சிவ அருளாய் நிற்றல்
சுத்தத்திற் சகல மாகுந் துரியவி லாச மிக்காம்
சுத்தத்திற் கேவ லந்தான் சுகவுப சாந்த மாகும்
சுத்தத்தில் இந்த மூன்றும் சொல்லிட லாகு மென்றும். 55

2067. என்பினை விறக தாக்கி இறைச்சியை அறுத்திட் டென்றும்
பொன்புரை நெருப்பி லிட்டுப் பொரிந்திட வறுத்திட் டாலும்
அன்பொடு முருகி மிக்காய் அகங்குழை வார்கட் கன்றி
என்பொன்மா மணிபொற் பாதம் எய்திட வொண்ணா
தென்றும். 56

2068. அன்பொடு சிவமி ரண்டாய் அறைகுவர் அறிவி லாதார்
அன்புநற் சிவம தாவ தறிகிலர் அனுபோ கத்தால்
அன்பினைச் சிவம தாக அறிந்தக லாமல் நிற்கில்
அன்புநற் சிவமே யாகி அமர்ந்தருள் புரியு மென்றும். 57

2069. நீங்காத ஞேய வானந் தத்தினின் றிடுவோர்க் கென்றும்
பாங்கான பாசம் வந்து படர்ந்திடா படர்ந்திட் டாலும்
ஆங்காரம் நீக்கி யந்த அருள்நிலை பிரியா நிற்கில்
நீங்காநன் முத்தி யான நிலைபெற லாகு மென்றும். 58

2070. செத்திலென் சீவித் தாலென் செஞ்சந்த மணிந்தாற் றானென்
மத்தகத் துளியை நாட்டி மறிக்கிலென் மதியுள் மேவும்
வித்தக நந்தி கூட்டும் விதிவழி யென்று மிக்க
தத்துவ ஞான முற்றோர் தன்மைகுன் றார்க ளென்றும். 59

2071. மெய்கலந் தார்க ளோடு மெய்கலந் தொன்றாய் மேவிப்
பொய்கலந் தார்க ளுள்ளம் புகுந்திடாப் புனிதன் தன்னை
ஐகலந் துடல்விட் டாவி அகல்பொழு தண்ணல் பாதம்
கைகலந் தவர்க்கே முத்திக் கருத்துற லாகு மென்றும். 60

2072. உருவன்றி யெங்கும் நின்றே உருவங்கள் தமைப்பு ணர்த்திக்
கருவன்றி யெங்கும் நின்றே கருவினை யாக்கி யொன்றின்
மருவன்றித் தனியாய் நிற்கும் மாயநற் சிவபி ரானைக்
குருவன்றி யெவர்க்கா னாலும் கூடவொண் ணாதே
யென்றும். 61

2073. இறையடி மலரைத் தாழ்ந்தை வணக்கமு மேய்ந்து நின்று
குறையுள வெல்லாங் கூறிக் குணமிகக் கொண்டு போற்றிச்
சிறையுடல் நீக்கித் தன்னைக் காட்டிநற் சிவத்தோ டாக்கும்
அறிவுபெற் றிதுமிக் கென்பொ னானசன் மார்க்கி யென்றும்.
62

2074. திருவடி பெறுத லேநற் சிவமாகு மெனவுந் தேரிற்
திருவடி பெறுத லேநற் சிவலோக மாகு மென்றும்
திருவடி பெறுத லேசெல் கதியது வெனவு மிக்க
திருவடி பெறுத லேநற் தஞ்சமாந் தெளிவோர்க் கென்றும். 63

2075. சாக்கிரந் தனில தீதந் தலைப்படு நெறியி னோரை
ஆக்கிடு முடிவி னின்ற வசிந்தித வானந் தந்தான்
நோக்கும்பொய்ப் பவம்விட் டேகு நோன்முத்தி சித்தி யாகும்
வாக்கொடு மனாதி சற்று மருவல்செய் யாவே யென்றும்.
64

2076. பரஞ்சோதி யாகிநின்ற பதியினைப் பற்றப் பற்றப்
பரஞ்சோதி யென்னுள் வந்து படிந்தற்ற பின்னை ஞானப்
பரஞ்சோதி தன்னுள் யானும் பைப்பயப் படியும் போது
பரஞ்சோதி தானென் றன்னைப் பரையொடுண் டரனே
யென்றும். 65

2077. ஆறாறு தத்து வங்கள் ஐந்தவத் தையினும் நீங்கல்
வேறாகத் தன்னைக் காண்டல் வியன்பெறு சுத்தி சேர்தல்
கூறான சாக்கிரா தீதங் கூடல்மெய்க் குருப ரன்தாட்
பேறாகும் வியாத்த மேவல் பிறமுப சாந்த மென்றும். 66

2078. ஒழிந்தேனால் வகையின் மேவு பிறவியு முறவாம் பாசம்
கழிந்தேனற் கடவுள் தானும் யானுமொன் றானேன் கானல்
அழிந்தாங்கு வருதல் போற்சே ராக்கமும் வேண்டேன் மிக்க
செழுஞ்சால்பை யுடைய ஞானச் சிவனைக்கண் டேனா
னென்றும். 67

2079. தொம்பத தற்ப தத்திற் தோன்றனுப் பரமி ரண்டும்
இன்பமா மசிப தத்தேய்ந் தெழுங்கணு வொன்றிலாத
சம்புவாஞ் சிவத்தோ டொன்றாய்க் கலந்திடிற் தகுபால்
தேன்போற்
துன்பறத் துணையாய் வாக்கற் றிடுமிடந் தோன்று மென்றும்.
68

2080. அறிவாகி அறிவி னுக்குள் ளறிவுமா யறிவுக் கெட்டாக்
குறியாகிக் குறியி றந்து குறித்திடுங் குறியு மாகிச்
செறிவாகிச் செறிந்து வாழும் உயிர்க்குயிர்ச் செயலு மாகிப்
பிறியாமல் நிற்கும் மிக்க சிவானந்தம் பேசி லென்றும். 69

2081. ஓங்காரத் துள்ளே யென்றும் உதித்தன வைம்பூ தங்கள்
ஓங்காரத் துள்ளே யென்றும் உதித்தன சராச ரங்கள்
ஓங்காரத் துள்ளே யென்றும் உயிர்மூன்று முற்று நிற்கும்
ஓங்காரப் பொருளே சீவ பரசிவ வுருவ மென்றும். 70

2082. முன்புயா னெனதென் கின்ற தறிந்திடா மூடம் போலப்
பின்புமியா னெனதென் கின்ற தறிந்திடா வகையே தித்தான்
அன்புமா யகண்ட மாகி ஞானஞே யமுமா யாண்டும்
என்புல னறிவுக் கெட்டா இணையடி நந்தி யென்றும். 71

2083. புளித்தனைக் கண்ட பேர்க்குப் புனல்வாயி லூறு மாபோற்
களிக்குமா னந்தக் கூத்துக் கண்டவர்க் கெல்லாங் கண்ணீர்
துளிக்குங்கம் பித்து மேனி சோருநெஞ் சுருகு மிக்க
ஒளிக்குளா னந்த மான அமுதூறும் உள்ளத் தென்றும். 72

2084. திண்டாடி வீழ்வா மிக்க சிவானந்த மதுவை யன்பால்
உண்டார்கள் குணமு முண்ட உன்மத்தர் சித்தம் போலக்
கொண்டாடு மன்றுள் நின்று குனித்திடு நிருத்த இன்பம்
கண்டார்கள் குணங்கெட் டார்க்கு மொக்குங்கா தலிக்கி
லென்றும். 73

2085. ஞானத்து ஞான மேநா னன்றர னென்ற லாகும்
ஞானத்து யோகந் தன்னை நாடிடுஞ் சிவம தாக்கல்
ஞானத்துக் கிரியை தன்னை நவிற்றினுட் பூசை யாகும்
ஞானத்துச் சரியை நாதன் நற்பதம் போற்ற லென்றும். 74

2086. பாத்திர மொன்றின் மிக்க பரத்தினை யுணர்மெய்ஞ் ஞான
வாத்தனுக் கியாவ ரேனு மகமகிழ்ந் திடும்பொ ருள்கள்
மூர்த்திகள் மூவ ருக்கு மூவெழு குரவ ருக்குந்
தீர்த்தம தாகு மித்தைத் தேர்ந்துகொள் வீரே யென்றும். 75

2087. துன்பவெம் பவக்க டற்குட் டோய்ந்திடு முயிர்க ளெல்லாம்
இன்பமுற் றிடுநல் முத்திக் கரையினி லேறு மாறிங்கு
அன்பொடு நந்தி ஈந்த அனுபவ ஞான மெல்லாம்
தன்பெருந் தயவால் மூலர் சாற்றிவீற் றிருந்தா ரன்றே. 76

ஐம்பத்தேழாவது
திருமூல தேவரைத் தடுத்தாட்கொண்ட
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2087
திருச்சிற்றம்பலம்

57. திருமூலதேவரைத் தடுத்தாட்கொண்ட அத்தியாயம் (சுருக்கம்)

அளவற்ற பல ஊழிக்காலங்கள் இறைவனுக்கு அருகே யிருந்து வணங்கி எண்ணற்ற தவத்திலிருந்த புண்ணியனும், முக்காலமும் உணரும் புனிதனும், அருளைப் பொழியும் கண்களை உடையவனும், கிருபையே பரிணாமமாகி விளங்கும் திருவுருவானவனும், விபூதி உருத்திராக்கம் முதலிய வேடப் பொலிவினால் எல்லா உயிர்களின் குற்றங்களையெல்லாம்

போக்கும் திவ்விய தேஜஸையுடையவனும், வேதம் சிவாகமம் இவற்றின் உண்மைப் பொருளை நந்தியின் திருவருளால் அடைந்த தன்மையுடையோனும் ஆகிய எண்வகைச் சித்தியும் பெற்ற சிவயோகி சுந்தரநாதன் ஆவான்.

திருக்கயிலையைவிட்டு வந்து பொதியமலையை அடைந்து அகத்தியமுனியைத் தரிசிக்க எண்ணங்கொண்ட சுந்தரநாதன் ஒருநாள், சிவபிரானது திருவடிகளை வணங்கி விடைபெற்று அன்பொடு தெற்குப் பக்கமாக வந்தான். இமாசலம், கேதாரம் இவற்றை வணங்கி, கங்கை சூழும் காசிவிசுவநாதரை வணங்கித் துதித்தான். திரிவேணி, பிராயாகையில் நீராடி யமுனையைக் கடந்து நருமதையில் படிந்து, அங்கு வாணலிங்கத்தின் பெருமையையும் கண்டான். பின்பு கோதாவரியில் நீராடி, பருப்பதத்தையும் வணங்கி வந்து இடபநந்தி, கிருஷ்ணவேணி, வீமேசுரர் ஆகிய இவர்களை தரிசித்தான். நீலப்பருப்பதத்தையும் தொழுது, பொன்முகரி நதி சூழும் திருக்காளத்திக்கு வந்து, அங்குள்ள திண்ணனாரையும் குடுமித் தேவரையும் புகழ்ந்து வணங்கினான்.

பின்பு, திருவாலங்காட்டில் காளியுடன் ஆடிய நடராஜப் பெருமானையும் வணங்கினான். காஞ்சியில் மாவடி நீழலின் கண் உமையாளின் முலைத்தழும்புடன் வீற்றிருக்கும் ஏகாம்பரத்தின் திருவடிகளைப் பணிந்தான். அன்னப்பறவையும் பெண் பன்றியுமாக அயனும் அரியும் தேடிக் கண்டுகொள்ள அரிதாயிருக்கும் அருணேசரை அண்ணாமலையிலே தொழுதான். விருத்தாசலத்தில் விருத்தகிரிநாதரையும் பணிந்தான். திருவருட்டுறை, கெடிலவீரட்டம், கழுக்குன்றம், நெல்வாயிலரத்துறை, சிதம்பரம் சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில், திருக்கடவூர் முதலிய தலங் களையும் வணங்கினான். காவிரியில் நீராடி, திருவிடைமருதர் திருவடிகளைப் போற்றிக் காவிரியின் தென் கரையில் போகும் போது, சோலை சூழ்ந்த சாத்தனூரிலுள்ள பிராமணர்கள் செய்யும் யாகத்துக்குப் பஞ்சகவ்வியத்தை உதவுகின்ற பசுக் கூட்டங்களையெல்லாம் மேய்த்து பிராமணர்களது ஏவலைச் செய்யும் ஆயர்குலத்தில் பிறந்தவனும் அந்தச் சாத்தனூருக்கு வடக்கிலுள்ள திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள மாசிலாமணிப் பெருமானிடத்தில் பக்தியுடையவனும் அழகு வாய்ந்தவனுமாகிய 'மூலன்' என்னும் பெயரைக் கொண்ட இடையன் ஒருவன், அம்முனிவர் வரும் வழிக்குப் பக்கத்தில் பசுக் கூட்டங்களை மேய்த்துக் கொண்டிருந்தான். அப்போது,

பழவினையின் காரணமாக உடலிலே விஷமயக்கம் ஏறி மூர்ச்சித்து வீழ்ந்து, ஓர் மரநிழலில் இறந்து, இறைவன் திருவருளால் சிவலோகம் அடைந்தான்.

மூலனுடைய தூலவுடல் பாம்பு உரித்த சட்டைபோல விளங்குவதைப் பார்த்த பசுக்கூட்டங்களெல்லாம் ஓலமிட்டன. அவன் உடலை மோந்து, உளங்கசிந்து, வாலை நிமிர்த்தி, உடல் பதற கண்களில் நீர் ஒழுக, அலறின. இதனை அவ்வழியே சென்ற சிவயோக முனிவர் கண்டார். அருகிலேயே போய் மூலனது தன்மையைக் கண்டபோது பசுக்கூட்டங்கள் அவரைப் பார்த்துக் கதறின. மூலன் உடல் உயிர்பெற்று எழுந்தால் மட்டுமே அப்பசுக்கூட்டங்களின் துயரம் நீங்கும் என்பதை முனிவர் உணர்ந்தார். உடனே அவர்தம் உடலை ஒரு மரப்பொந்தில் ஒளித்து வைத்துவிட்டு, கூடுவிட்டு கூடுபாயும் முறையில் அம்மூலனுடைய உடலிலே புகுந்து எழுந்தார். அழுத பசுக்கூட்டங்கள் மகிழ்ந்து பாலைச் சொரிந்தன. முனிவரும் மகிழ்ந்து பசுக்கூட்டங்களை மேய்த்து, மாலையில் அதனதன் வீட்டில் சேர்த்தனர். தாம் மட்டும் சாத்தனூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு மடத்தில் தங்கியிருந்தனர்.

மூலனுடைய மனைவி தன் கணவன் வீடுவந்து சேராதது அறிந்து துன்புற்றாள். மூலன் தங்கியுள்ள மடத்திற்குச் சென்று, வீடுவந்து சேராமல் இப்படி இருப்பது ஏன் என்று கேட்டு அழைத்தாள். அதற்கு மூலன் வாய்பேசாது இருப்பது கண்டு துயருற்றாள். சுற்றத்தார்களிடத்திலே சென்று முறையிட்டாள். அவர்கள் எல்லாரும் சேர்ந்து சென்று மூலனை வீட்டிற்கு அழைத்தனர். ஆனால், மூலன் அவர்களைப் பார்த்து 'எம்மை நீங்கள் அறியமாட்டீர்கள்; உங்களுடைய சம்பந்தம் எமக்கு இல்லை; எல்லாரும் போங்கள்' என்று யோகத்தில் ஆழ்ந்தான். இம்மாயையை நம் அறிவால் அறிய முடியாதென்று அனைவரும் அங்கிருந்து அகன்று சென்றனர்.

பின்பு, மூலரானவர் அம்மடத்திலேயே தங்கி துயில் கொள்ளும்பொழுது, கோமுத்தீசுரர் முன்னர் யோகியானவர் மரப்பொந்தில் ஒளித்துவைத்த உடலைப் பக்குவமாகப் பூதகணத்தால் எடுத்துவரச் செய்து திருவாவடுதுறையில் போதிவனத்தின் வடமேற்குப் பக்கத்தில் அருட்பூரணத்தில் கலப்பித்து அங்கு இருக்குமாறு செய்தார். பின்பு, திருமூலர் தம் தூலவுடலைக் காணாது துயரமடைந்தபோது இறைவனே

அவருக்கு உண்மையை உணர்த்தினார். உனக்கு மூலனுடைய உடலிலே பொருந்துகின்ற பிறவி இருக்கின்றபடியால் இவ்வுடம்பே அழகாகும். இவ்வுடம்போடு நீ எம்மை நினைந்திருந்து, இவ்வுலகத்திலுள்ள மக்கள் அனைவரும் இன்பம் அடையும்படியாக, இனிதான 'திருமந்திரம்' வழங்க வேண்டும் எனப் பணித்தருளினார். கோமுத்தித் தலத்திலே வந்து தங்குமாறும் உணர்த்தியருளினார்.

இறைவன் விதித்தபடியே திருவாவடுதுறைக்கு வந்த திருமூலர் அங்கு அகத்தியர், போகர் முதலான யோக வித்தக சித்தர்களையும் சந்தித்தார். கோமுத்திநாதரை முறைப்படி வணங்கித் துதித்தார். இறைவனும் குருவடிவாய்த் திருவடிதீட்சை செய்து, ஞானச் சிவதீக்கையும் செய்து அருளினார். திருமூலரும் ஆனந்த மேலீட்டால் வணங்கி மகிழ்ந்தார். போதிவனத்திலே மண்டபத்தில் சுகாசனத்திலிருந்து யோகத்தில் அமர்ந்து, சிவத்தோடு கலந்திருந்தார். ஓராண்டிற்கு ஒருமுறை விழித்து ஒரு திருமந்திரச் செய்யுளை விளம்பினார். இவ்வாறு மூவாயிரம் ஆண்டுகளாக மூவாயிரம் செய்யுள்களையும் உரைத்தார். அவற்றையெல்லாம் அறிவிற்சிறந்த சித்தர்கள் வெள்ளேட்டில் எழுதித் தெளிந்தனர். உலகத்திலும் பரப்பினார்கள். இன்றும் திருமூலர் எம்பிரான் திருவடியில் யோகுற்று விளங்குகின்றார்.

இவ்வாறு திருமூலர் மொழிந்த திருமந்திரச் செய்யுட்களின் உட்பொருள்கள் பலவாகும். அவற்றுள் சில வருமாறு:

திருமந்திரத்தில் முதலில் கூறப்பெற்றது பதி இலக்கணமாகும். அது:

ஒன்று பரமசிவம்; திருவருள் இரண்டென்பது; அப்பரமசிவமும், அப்பரமசிவத்தின் இன்னருளும்; உருமூன்றென்பது; பிரமன், விஷ்ணு, உருத்திரன் என உரு மூன்றும்; மறை நான்கு உணர்ந்தான் என்பது; உலகினை இறந்து நிற்றலும், உலகெலாம் தன் உருவில் தோன்றி ஒடுங்க நிற்றலும், உலகுக்கு உயிராய் நிற்றலும், உலகாய் நிற்றலும் ஆகிய நான்கு நிலைகளாக உணரப்படுபவரும் (விஸ்வாதிகன், விஸ்வகாரணன், அந்தர்யாமி, விஸ்வரூபி என்ற நான்காக உணரப்படுபவன் என்பது கருத்து); ஐந்து பொறிகளும் தன் புலன்களிற்சென்று பற்றாமல் வென்று அடக்கியவனும்; ஆறு ஆதாரங்களிலும் விளங்குகின்ற விநாயகர் முதலான மூர்த்திகளாக விரிந்தவனும்; மேலே கூறிய ஆறு ஆதாரங்கட்கும்

அப்பாற்பட்ட ஏழாவதாகிய துவாத சாந்தத்தில் விளங்குபவனும்; மண், புனல், அனல், காற்று, வெளி, சூரியன், சந்திரன், இயமானன் என்னும் அட்டமூர்த்தி சொரூபமாயும் உள்ளவன்.

திருநந்திதேவரது அருளைப்பெற்ற சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் என நால்வரும்; சிவயோக முனிவரும்; பதஞ்சலிமுனிவரும், வியாக்கிர பாதரும்; யானும் (சுந்தரநாதனாகிய திருமூலரும்) ஆகிய எண்மர் சந்தானத்தின் (பரம்பரையின்) முறையாகும்.

திருவாவடுதுறையிலே சிவமயமான படர் அரசின் கீழ் கோமுத்திநாதரின் திருநாமங்களை ஓதிக்கொண்டு இருப்பேன்; சிவபிரானோடு ஒத்த தெய்வம் எங்குத் தேடினும் இல்லை; அவ்விறைவனோடு ஒப்பாவார் யாவருமில்லை; அச்சிவன் எல்லா உலகங்களையும் கடந்தவன்; பொன் போன்று ஒளிவீசும் சடாமுடியை உடையவன்; வெண்ணீற்றை அணிந்தவன்; அறிவில் மேம்பட்டவன்; பிறப்பு இறப்பு இல்லாதவன்; ஒருவரும் இல்லாதவன்; வசிக்குமிடம் காடு; பிச்சை யெடுத்துண்பவன்; பற்றற்ற துறவியானாலும் தம்மை நம்பினவர்களுடைய பிறப்பை அழிக்கும் தலைவன்; கருணையே வடிவமானவன்.

உண்மையைக் கூறும் நான்கு வேதங்களின் முடிவே வேதாந்தம்; சைவத்தினது உண்மை ஞானத்தின் தலைமையே சித்தாந்தம்; இவ்விரண்டு நூல்களது விதியே உண்மையுடைய தாகும். எனவே, கெடுதலில்லாத இந்நூல்களை உணர்ந்து கொள்வதே சிறப்பாகும்.

வேடங்களையெல்லாம் கடந்து இறைவன் தாளை அடைந்து, மனதிலே சஞ்சரிக்கும் ஆசை ஆடம்பரம் இவற்றை நீக்கி, பாசம் பசுத்தன்மை ஆகிய இவற்றையும் பாழ்படச் செய்து பிறவியை ஒழிக்கின்ற ஞானிகளே சுத்தசைவர் ஆவர்.

அலையுடன் கலந்த நீர்போலச் சிந்தை தெளிவுற்று நின்றால், முன்னே இறைவன் தோன்றுவன். பதி, பசு, பாசம் ஆகிய இவற்றில், பதியைப் போலவே பசு பாசங்களும் அநாதியேயாகும். பசுபாசங்கள், பதியைச் சென்று அடைய மாட்டாது; பசுவில் பதியானது வந்தடைந்தால் பசுவும் பாசமும் நில்லாது தன்மை கெட்டு ஒழிந்து போகும்.

தொண்ணூற்றாறு தத்துவங்கள் பொதுவானதாகும். சைவசித்தாந்திகளுக்குத் தத்துவம் முப்பத்தாறும்; வேதாந்திக்குத்

தத்துவம் இருபத்தெட்டும்; வைணவர்க்குத் தத்துவம் இருபத்து நான்கும்; மாயாவாதிகட்குத் தத்துவம் இருபத்தைந்தும் ஆகும்.

ஞானிக்குச் சரீரம் சிவசொரூபம் ஆகும்; அஞ்ஞானிக்குச் சரீரம் ஊன் நிறைந்த சடமாகும். யோகிக்குச் சரீரம் விந்துவும் நாதமும் ஆகும்; மோனிக்குச் சரீரம் முப்பாழும் கெட்ட முத்தியே ஆகும்.

இருவினையொப்புக் காலத்திலே திருவருட்சத்தியானது ஆசாரியனாக வந்து அஞ்ஞானக் குணங்களையெல்லாம் நீக்கி, அன்பினால் அருளும் சிவஞானத்தினால் தன்னியல்புகெட மும்மலங்களையும் போக்கி, அதனால் சுத்தத் தன்மையை அடையும் உயிரானது மீண்டும் பிறவாது.

எலும்பை விறகாக்கித் தசையை அறுத்துப் பொன் போன்ற நெருப்பிலிட்டுப் பொரியும்படியாக வறுத்தாலும் அன்போடு மனமுருகி அகங்குழைவார்க்கல்லாமல் இறைவனது திருவடிகளை அடைய முடியாது.

அன்பும் சிவமும் வேறு வேறு என்று ஞானமில்லாத வர்கள் கூறுவர்; அன்பே சிவமாம் என்பதை அறிய மாட்டார்கள். அநுபோகத்தால் அன்பையே சிவமாக அறிந்து அதனின்றும் நீங்காமல் நிற்கில் அன்பே சிவமாகி இருந்து அருள் புரியும்.

உருவில்லாமல் எங்கும் இருந்து உருவங்களைச் சேர்த்தும், கருவில்லாமல் எங்குமிருந்து கருவினை உண்டாக்கியும், ஒன்றிலும் பொருந்தாமல் தனித்து நிற்கின்ற இறைவனைக் குருவினது அருளில்லாமல் எவராலும் அடைய முடியாது.

இறைவனது திருவடியை அடைதலே சிவமாந்தன்மை; திருவடியை அடைதலே சிவலோகம்; திருவடியை அடைதலே ஒருவன் அடையும் கதி; திருவடியை அடைதலே தஞ்சமாகும்.

ஐம்பூதங்களும் ஓங்காரத்துள்ளே தோன்றின; சராசரங்கள் அனைத்தும் ஓங்காரத்துள்ளே உதித்தன; அகார உகார மகாரங்களும் ஓங்காரத்துள்ளே நிற்கும்; சீவபரசிவ உருவங்கள் ஓங்காரப் பொருளே ஆகும்.

புளியைக் கண்டவர்கட்கு வாயில் நீர் ஊறுவதுபோல, ஆனந்தக் கூத்தைக் கண்டவர்கட்கெல்லாம் கண்களில்

ஆனந்தநீர் சொரியும்; சரீரம் கம்பித்துச் சோரும், நெஞ்சம் உருகும், உள்ளத்தில் அமுதானது ஊறும்.

ஞானத்தில் ஞானமாவது நான் சிவன் அல்ல என்பதாகும்; ஞானத்தில் யோகமாவது தன்னை நாடியவர்களைச் சிவமாக்குதலாகும்; ஞானத்தில் கிரியையாவது இறைவனை உட்பூசையாகச் செய்தலாகும்; ஞானத்தில் சரியையாவது இறைவனது திருவடிகளை வணங்கலாகும்.

துன்பமாகிய பிறவிக்கடலுள் உழல்கின்ற உயிர்களெல்லாம் இன்பமாகிய முத்திக்கரையில் ஏறும்வண்ணம் அன்புடனே நந்தி அருளிய அநுபவஞானம் எல்லாவற்றையும் மிக்க தயவுடன் திருமூலரானவர் மேற்கூறியபடி அருளிச்செய்து திருவாவடுதுறையில் வீற்றிருந்தருளினார்.

ஐம்பத்தெட்டாவது திருமாளிகைத்தேவர் மகத்துவம் உரைத்த அத்தியாயம்

2088. இவ்வித மூவா யிரந்திரு மந்திரம்
இகபர மோட்சத்தி னியல்பைச்
செவ்விதா யுரைத்த மூலதே வரின்நற்
செய்கைசொற் றனமினித் திறல்சேர்
மெய்வகை யுணர்ந்த மாளிகைத் தேவர்
மிகுதிரு வாவடு துறையுள்
உய்வகை யருள்பெற் றமர்வகை உரைப்பேம்
கேளெனத் தவுமியன் உரைப்பான். 1

2089. ஆரண முடிவு மாகமத் திறனும்
அறிந்தக லாமலா னந்தப்
பூரணப் பொருளைக் கைநெல்லிக் கனிபோற்
புணர்போக நாதராஞ் சித்தர்
ஏரணு கலர்த்தண் பொழில்புடை சூழ்நல்
ஆவடு துறைசையி லினிய
சீரணு கருள்மெய்ச் சீடரெண் ணிலர்கள்
சூழ்ந்திடத் திருவர சதனுள். 2

2090. சீலமெய்ஞ் ஞான யோகசா தனைசெய்
திறத்தொடு மகிழ்ந்துநாள் தோறும்
பாலலோ சனநல் மாசிலா மணியைப்
பணிந்துநற் பணிபல புரிந்து

சாலவு மருள்பெற் றிருந்திடும் நாளிற்
தலைமையாஞ் சீடரில் அநேகர்
மாலறு சைவ சமயத்துட் சிலரும்
வாமத்துட் சிலர்களும் வசித்தார். 3

2091. சைவநற் சமயத் துறைந்தவர் தம்முட்
சாலவுங் குருபத்தி யினராய்
மைவளர் பாசத் தொடர்பெலாம் அகற்றி
மாசிலாத் தேசொடும் பொலிந்து
பைவளர் நாகப் பணியணி சடிலப்
பரமர்தாட் பங்கயம் பொதிகட்
தெய்வவா ரமுதே யுண்டுவாழ் திருமா
ளிகைத்தேவ ரென்றுள ரொருவர். 4

2092. வாமநற் சமயத் தமர்ந்தவர் தம்முள்
வளர்பசு பாசத்தின் மயக்கற்று
ஆமைபோல் ஐந்தும் அடக்கிஆ னந்த
அருட்கடற் குட்படிந் தமலச்
சோமவா ரமுத மாஞ்சுர பானம்
துய்த்துளங் களித்தரன் துணைத்தாட்
தாமரைச் சுரும்பொத் திசைபுரி கருவூர்ச்
சித்தரென் றுளரொரு தலைவர். 5

2093. இவரிரு வர்களில் மாளிகைத் தேவர்க்கு
எழிற்திரு வம்பலத் தாடும்
சிவனடிக் கமல பூசனை புரியும்
செயல்கொடுத் தருட்பரா சத்திக்கு
உவகைகொள் பூசை செயுமுப தேசம்
உறுதவ மிகுகரு வூரர்க்கு
அவிர்சடைச் சிவன்தாள் உணர்ந்திடு போகர்
அருளினர் அருளிய படிக்கு. 6

2094. திகழுமன் புடனே இருவரும் ஞான
பூசனை செய்துறு நாளிற்
புகழுறு திருமா ளிகைக்கட வுட்தம்
பூசைநின் மாலிய மதனை
மகிழ்வொடுங் கருவூர்ச் சித்தருக் கருள
வாங்கியுண் டகமகிழ்ந் தொருநாள்
துகளறு திருமா ளிகைக்கட வுளுக்குச்
சுதந்தரத் தொடுங்கரு வூரர். 7

2095. தமதுபூ சனைநின் மாலியங் கொடுப்பச்
சம்மதித் ததனைவாங் காமற்
கமைவொடுந் திருமா ளிகைத்தேவ ரிருப்பக்
கருவூரர் சலிப்பொடும் போகர்
அமைவுறு மிடத்திற் போய்ப்பணிந் திதனை
யுரைத்திட அதனையுள் மதித்துக்
குமைவுறு மனத்தி னயர்வற வவர்க்குக்
குறிப்பொடுங் குருபர னுரைப்பான். 8

2096. அலகிலாச் சமயந் தம்முள்மிக் கான
சைவமே யதிகமாம் அரனை
இலகுமா சாரத் துடன்புரி பூசை
யேசிறப் பாகுமா தலினாற்
தலைமையாஞ் சைவ மாளிகைத் தேவர்
தருவது கொள்வதே தகும்நீ
நலமிகு மவர்க்கீ வதுதகா தென்று
நவிற்றிடத் தெளிந்துளம் மகிழ்ந்து. 9

2097. சேட்டராய் விளங்கு மாளிகைத் தேவர்
சேவடி பணிந்துதே சிகர்பொற்
தாட்டுணை தொழுதங் கவருடன் துறைசை
தனில்மகிழ்ந் திருக்கும்நாள் தனிற்சோ
ணாட்டினில் வருகா விரிப்புனல் முழுதும்
நலந்திகழ் வலஞ்சுழிப் பிலத்துட்
கீட்டுவா ரத்தின் வழிபுகுந் திடலாற்
கிலேசமுற் றெழுந்துசோ ழேசன். 10

2098. கொட்டையூர் மருவும் ஏரண்ட முனிபாற்
சென்றுகும் பிட்டஃ துரைப்ப
விட்டமார் முனிகேட் டரசனா கிலுமோர்
முனிவனா கிலுமதி விறந்தால்
ஊட்டுவா ரமுமங் கடைபடும் பொன்னி
நதியும்பார் மிசையுறு மென்ன
மட்டவிழ் மலர்த்தார்ச் சோழரா சன்கேட்
டதில்விழு மனத்தனாய்ப் போந்து. 11

2099. மைந்தனை இறைவ னாக்கிவைத் ததிற்போய்
விழுந்திடத் துணிந்திடு மதியைச்
சிந்தைசெய் தெழில்மந் திரியுட னுரிமைத்
தேவியம் முனியிட மருவி

2097. சேட்டர் - சிரேஷ்டர். தேசிகர் - குருநாதராகிய போகர்.

வந்தனை புரிந்து வணங்கிட முனிவன்
மகிழ்ந்துசோ ழன்திருத் தேவி
சுந்தர முகம்பார்த் தரசனும் நீயும்
சுகமொடு வாழ்ந்திரென் றுரைப்ப. 12

2100. இந்தவா சிறுவர் தந்தவ றாமோ
எனதுநா யகன்வலஞ் சுழிநீர்ப்
பொந்திடை விழுந்தே யிறுந்திடத் துணிந்தான்
எவ்வணம் வாழுவன் புகல்நீ
இந்துசே கரன்தாள் உணரும் ஏரண்ட
முனிவநீ இயம்பிய வாய்மை
தந்தென்மங் கலநாண் காவென இரந்து
தரைமிசைப் பணிந்திடக் கண்டு. 13

2101. முனியவட் கஞ்சல் புரிந்துதா னிறைக்கு
மொழிந்தசொல் லுணர்ந்தெழுந் துடன்போய்
மனுநெறிச் சோழன் தனைவிழா வண்ணம்
மறுத்ததிற் றான்விழ மதித்துப்
புனிதநற் சிவப்பிர திட்டைநான் கெமக்காப்
புவிமிசை இயற்றென விளம்பித்
தனியனாய்ப் புனல்போம் பிலத்தில்வீழ்ந்
தடைத்தான் காவிரி தரைமிசைப் படர. 14

2102. அம்முனி யுரைத்த படிசிவா லங்கள்
அழகுற இயற்றியவ் வரசன்
இம்மையின் பளிக்குந் தஞ்சையின் கண்ணும்
இராசரா சேச்சரத் தலத்தும்
செம்மைசே ரினிய திரிபுவ னத்தும்
சிவப்பிர திட்டைமுன் றியற்றி
மெய்ம்மைசேர் கங்கை கொண்டசோ ழீச்ச
ரத்தினில் மிகுசிவ லிங்கம். 15

2103. பிறதிட்டை செயும்போ தட்டபந் தனஞ்சே
ராதது கண்டுபே தலித்துத்
திறமுறு சோழன் மயங்கியே யுணர்வற்
றிருந்திடு செய்கைகண் டவன்முன்
உறுநடத் தொழில்செய் மாதரி லொருபெண்
ணுவமையில் லாவெழி லுடையாள்
நறுமலர்ப் பொழில்சூழ் துறைசையிற் போந்து
போகரை நயனொடு மருவி. 16

2104. அச்செயல் முழுதும் புகன்றிட அரசன்
அன்பறிந் தடியிணை பரவும்
இச்சைகொள் கருவூ ரரையழைத்து அவண்போய்
எழில்மிகு சிவலிங்கம் இறுக
விச்சைகொ ளட்ட பந்தன மியற்றி
விரும்புநம் பாற்புக லூர்க்கு
நச்சுமன் புடன்வா வெனவிடை கொடுத்து
நண்பொடும் அனுப்பிய பின்னர். 17

2105. மாளிகைத் தேவர் பிரிவினால் வருந்தா
வகைதம தடியிணை மலர்சேர்
காழுறு மணிப்பொற் பாதுகை யருளிக்
கவினொடும் பூசைசெய் தெவர்க்கும்
ஊழ்வினை யகற்று மாசிலா மணியோடு
ஒப்பிலா முலைபதம் பணிந்திங்கு
ஏழைகட் கருள்செய்து ஆவடு துறையுள்
என்றும்நீ அமர்கென வியம்பி. 18

2106. கோயிலிற் புகுந்து மாசிலா மணிபொற்
கோகன கப்பதந் தொழுது
நேயமோ டனுப்பு மருள்விடை பெற்று
நிமலர்வாழ் திருப்புக லூர்க்குப்
போயரன் பணிசெய் திருந்தனர் போகர்
புண்ணிய மிகுகரு வூரர்
ஆயுமெய்ப் புகழ்சேர் கங்கைகொண் டமர்சோ
ழீச்சரம் அணுகியன் புடனே. 19

2107. வாகுறு சோழன் மனமகிழ்ந் திறைஞ்ச
வளமிகு மாவுடை யாளோடு
ஏர்கெழு சிவலிங் கம்புணர்ந் தருள
எழில்பெறும் அட்டபந் தனநற்
பாகிலை சுவைத்த பசையினை யுமிழ்ந்து
பண்பொடு மிறுகுறப் பயிற்றி
மோகமோ டரச னாக்கிய வமுத
முழுதுமுண் டுயிர்தொறும் நிரப்பி. 20

2108. அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
வெனுமிசைப் பாவறைந் ததனுள்
மன்னுமுன் னடியே னுண்டவூ னுணக்காம்
வகையென துளங்கலந் தருள்வாய்

உன்னருங் கங்கை கொண்டசோ ழீச்ச
ரத்துறு சோதியே யென்று
பன்னுசொல் லுண்மை யொருகுரீஇ
யிடத்துப் பார்த்திப னறிந்திட வுணர்த்தி. 21

2109. அரசனுக் கருளீந் தகன்றுவந் தெழிற்பொன்
னம்பலத் தாடல்கண் டிறைஞ்சித்
திருவளர் திருச்சிற் றம்பல மெனவே
திருவிசைப் பாமொழிந் தினிதாய்ப்
பெருகுமன் புடன்போந் தெழிற்றிரி லோக்கிய
சுந்தரப் பிரான்தனைப் பாடித்
தருவளர் சோலைத் திருவிடை மருதூர்
சார்ந்தரன் திருவடி வணங்கி. 22

2110. வந்தணு காது நுணுகியுள் புகுந்தான்
மருவிடந் திருவிடை மருதென்று
உந்துதெள் ளமுத மெனவிசைப் பாவங்
குரைத்துய ரிஞ்சியின் மிசைநல்
இந்துசேர் தஞ்சை ராசரா சீச்ச
ரம்புகழ்ந் தெழில்செய்கீழ்க் கோட்டூர்ச்
சுந்தரன் தனையுந் துதித்துநீர் வையைத்
துறைவளர் பூவணம் பொருந்தி. 23

2111. அம்மல ரோதிப் பொன்னனை யாள்முத்
தம்மிடும் அரன்மிசை யளிகள்
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயென்று
இம்மையோ டம்மைக் கின்பரு ளிசைப்பா
இயம்பிநற் தாம்பிர வேணிச்
செம்மணி சிதறுந் திருப்புடை மருதூர்த்
தெருவினுக் கருகும் போது. 24

2112. மருதுறை அமல னினியகற் பகப்பூ
வாசனைத் தென்றல்முன் னேவி
ஒருபுறஞ் சாய்ந்து பார்த்திடக் கருவூர்
உத்தமன் மகிழ்ந்தெனக் கின்பந்
தரவமர் கருணை நாறும்பூ வோநீர்
சாய்திரு மேனியோ வென்று
கரையிலா அன்போ டுரைசெய ஆமா
மெனஇரு விசைஅரன் கழற. 25

2113. கேட்டகங் களித்துத் துதித்தடி பணிந்து
கிளரொளிக் கனகமா மதில்சூழ்
வாட்டமில் புகழ்சேர்ந் திலகுநெல் வேலி
மருவியங் கெருக்கற வீசன்
கேட்டமில் பெருமை யுடன்தினம் வாழ்க
வெனச்சொலிக் குழகனைப் பணிந்து
தேட்டமோ டிருக்கும் பொழுதுநற் போகர்
திருமுகங் கொண்டொரு காகம். 26

2114. வணங்கிமுன் கொடுப்ப வருகவென் றெழுதும்
பாசுர மனமகிழ்ந் தோர்ந்து
குணந்திகழ் குருவின் தெரிசனைக் கன்பு
கொண்டெழுந் தெய்திமெய்ச் சித்தர்
கணம்புடை சூழத் திருவீழி மிழலை
கண்டுநற் திருவிசைப் பாவில்
இணங்குமுன் மொழியில் ஏகநா யகனென்
றெடுத்துநற் துதிபுகன் றிறைஞ்சி. 27

2115. ஆதித்தேச் சரமுஞ் சாட்டியக் குடியும்
அருண்மிகு முகத்தலை யூரும்
நீதிச்செந் தமிழ்சேர் திருவிசைப் பாவால்
நிலைனைப் பாடிமுன் தொழுது
சோதித்தா றத்து வாவையு மகற்றிச்
சுகோதையத் திருவருள் தனக்குச்
சாதித்தாண் டருளும் போகர்போம் வீதி
தனிற்செயுஞ் சித்தனைப் புகழ்ந்து. 28

2116. காடிடை வாழை பழுத்தன வென்றுங்
கழுவினிற் கிடந்தவ னிறங்கி
ஓடின னென்றுஞ் சித்திர முயிர்பெற்
றொன்றொடொன் றிகலின வென்றும்
வீடுகள் வேன லூறின வென்றும்
வெந்தமீன் பிழைத்தன வென்றும்
நீடுசொற் பூளை யோதின வென்றும்
நிகழ்த்தியுள் மகிழ்வொடும் போந்து. 29

2117. திருப்புக லூரிற் போகதே சிகர்தாள்
சிறப்பொடும் பணிந்திடப் போகர்
உருக்கமார் கருவூ ரரைமிகத் தழுவி
உவகைதன் மொழிபல சாற்றிப்

பொருப்புவிற் பரனை நாள்தொறும் பணிந்து
போற்றியங் கிருந்தன ரிப்பால்
மருக்கமழ் பொழில்சூழ் ஆவடு துறைசை
வாழ்திரு மாளிகைத் தேவர். 30

வேறு

2118. தேசிகர் பணித்த வண்ணஞ் செய்கைதப் பாமற் பேணி
மாசிலா மணிபொற் பாதம் நாள்தொறும் வணங்கி மிக்க
நேசமோ டாசான் செம்பொற் திருவடி நேர்வைத் தர்ச்சித்து
ஆசையோ டடியார்கூட் டத்துடன்கலந் தமர்ந்தெந் நாளும்.
31

2119. திருக்கூட் டச்சிறப்பி னோடுஞ் செபந்தவந் தியானம் நிட்டை
உருக்கமோ டிருந்து செய்தற் காகும்நல் விடமா யோங்கும்
பொருப்புறழ் விமானக் கோயிற் கருகுதென் புறத்தின் மேவ
வருத்தியி னொடுமிக் கான திருமட மொன்றுண் டாக்கி. 32

2120. நவகோடி சித்தர்க் கெல்லாம் இடங்கள்நன் கமையப் பண்ணிச்
சிவசம யத்தை நாளும் வளர்த்துநற் செய்கை யோடும்
தவமலி நீற்றின் சார்பு தழைத்திடச் சமாதி யோகம்
உவகையோ டியற்றி மூல வெழுத்தைந்து மோதி யென்றும்.
33

2121. ஆவடு துறைசை மேவி அமர்ந்திடு நாளி லோர்நாள்
ஏர்வளர் சேந்த ரோடும் பெரும்பற்றப் புலியூர்க் கெய்தித்
தேவர்கள் தேவ னாடற் திருவமு துண்டு வாழ்ந்து
நாவினாற் திருவி சைப்பா நாதனுள் மகிழ்ச்சி பொங்க. 34

2122. ஒளிவளர் விளக்கே யென்றா தியிலெடுத் துணரு மாறும்
தெளிவுறப் பாடு மாறும் திருப்பணி செய்யு மாறும்
அளிபெறு மெனது காய மனநாவால் நீசெய் தாளென்று
இளகுமன் புடனே பாடிப் பின்புமோ ரிசைப்பா வின்கண்.
35

2123. உயர்கொடி யாடை யென்றா தியிலெடுத் துமையாள் காண
நயமொடு திருந டஞ்செய் நாதனுள் மகிழ்ந்து கேட்ப
மயர்வற மலர்த்தா ளென்றன் மனத்துள்வைத் தருள்வா
யென்றும்
இயல்புறு முனது பொற்றாட் கீழெனை துயிர தென்றும்.
36

2124. இதமிகு கணைக்கால் தன்னை
நினைந்துநெஞ் சொழிந்த தென்று
மதியினை யுமையாள் போற்று
மணிக்குறங் கடைத்த தென்றும்
புதியபுல் லதளின் கச்சு
நூலதென் புகல தென்று
முதவருள் வயிற்றி னுந்தி
வளைப்புண்டுள் மகிழ்ந்த தென்றும். 37

2125. உறுமுரு வடந்தொ டர்ந்து கிடந்ததென் னுணர்வ தென்றும்
அறிவுநின் முறுவற் செவ்வாய்ச் சோதியு ளடங்கிற் றென்றும்
கறையறு கருத்துள் கஞ்ச முகமலர் கலந்த தென்று
நிறைபுனல் மதிவாழ் வேணி நிறந்ததென் மனத்து
ளென்றும். 38

2126. பூமல ரடிக்கீழ்ப் புராண பூதங்க ளெனது புன்சொல்
ஆமெனப் பொறுப்ப ரென்றும் அன்புறு நிட்டை பாடிக்
காமர்வண் டமர்க டம்பன் திருவிடைக் கழியின் மேவிச்
சேமநன் னிதிபோற் சேந்த ராற்திரு விசைப்பாச் செப்பி. 39

2127. ஆவடு துறையில் வந்தெம் அமலனைப் பணிந்து நின்று
பாவுறு மனிய பண்பஞ் சமமதாற் திருவி சைப்பா
மேவுமன் புடன்பொய் யாத வேதியா வெனவெ டுத்து
நாவினுக் கினிக்க வுள்ள நயப்புறப் பத்தும் பாடி. 40

2128. தேனேநல் லமுதே யென்றன் சித்தமே சிவலோ கத்துக்கு
ஆனநா யகமே செல்வ அமலனே அலம்பு பொன்னிக்கு
ஆனார்நன் னதிசூழ் கின்ற ஆவடு துறைக்கண் வாழ்வோர்
கோனேயன் பர்கள் கருத்து முடிக்குங்குன் றேயென்
றேத்தி. 41

2129. திருவருட் துறைப்பேர் கொண்ட திருமட மேவி யண்ணன்
மருமலர்ப் பாத பூசை வளமுறச் செய்து மிக்க
உரிமைபெற் றிடுமெய் யன்பர் உடனமர்ந் திருக்கும் நாளிற்
பொருவில்கா விரிநீ ராடிப் பொற்புறும் பூந்தார் கொண்டு.
42

2130. ஒருதினம் புனிதத் தோடும் பூசனைக் குரிய தெண்ணீர்
பொருவில்பொற் பாச னத்தில் ஏந்தியே போகும் போதில்
மரணமா மொருபி ரேதங் கொடுவர வழிக்கு மேல்பாற்
கருணையோ டமரு கின்ற கணபதி தன்னைப் போற்றி. 43

2131. ஆசூச முறாமல் மாளி கைத்தேவ ரதனுக் காவி
கூசாம லிந்து முன்பு கொட்டுசாப் பறையை நீத்துத்
தேசார்மஞ் சனங்கொண் டேகி னாரந்தச் சிவக்கன் றின்று
காசார்கொட் டுத்த விர்த்த கணபதி யெனப்பேர் கொண்டார்.
44

2132. பொன்னிமா நதியி டத்தும் பூமலி வனத்து நாதன்
சன்னிதி யிடத்து நன்னீர்த் தடாகத்துஞ் சஞ்ச ரித்துக்
கன்னல்வில் மதனை வெல்லும் கவினொடுந் துறைசை தன்னில்
மன்னிவாழ் மாளி கைத்தே வரைக்கண்ட மாதர் தம்முள். 45

2133. ஆர்வமுற் றவரை நித்தம் அகத்தினுள் நினைத்த நேகர்
பேர்விலாக் கருப்பங் கொண்டு பெறுமக வில்லா மிக்க
சீர்வளர் மாளி கைத்தே வுருவெனச் சிறத்தல் கண்டவ்
ஊர்வளர் மறையோ ரெல்லாம் உளத்தினில் ஐய முற்று. 46

2134. நரசிங்க னென்னுங் காவல் நரபதி யிடத்திற் சென்று
கரவின்கண் ஒருவ னெங்கள் காதலி மார்கள் கற்பை
ஒருவிடும் படிசெய் தானென்று உரைப்பது கேட்டம் மன்னன்
அருகுநின் றிடுந்தன் ஏவ லாளர்கள் முகத்தை நோக்கி. 47

2135. இக்கணம் நீவிர் சென்றங் கிவர்சொன் னோன் தன்னை இங்கே
மற்கொடுங் கயிற்றாற் கட்டி வாருமென் றநேகர் தம்மை
உக்கிரத் துடனே ஏவ அவர்கள்சென் றுரவோன் தன்னை
அக்கொடு மையினான் சொன்ன படிசெய அணுகும் போது.
48

2136. மூவித மான காலம் முறையுணர் மாளி கைத்தேவு
ஏவலா ளாகி வந்த மள்ளரை இகழ்ந்து நோக்கி
ஏவிடா வகைநீர் கட்டிப் போதுமென் றுரைப்ப அன்னோர்
காவலா யொருவர் தம்மை யொருவர்வன் கயிற்றாற்கட்டி.
49

2137. பிணக்கொடு மயங்கி மன்னன்
முன்புபோய்ப் பிதற்றக் கண்டு
குணக்குறு மனத்தான் பின்னுங்
கொடும்படைத் தலைவர் தம்மை

2134. காதலிமார்கள் - மனைவிமார்கள்.

இணக்கமொ டேவி யன்னோன்
தனைவெட்டிக் கொண்டேன் பானீர்
துணுக்கென வாரு மென்று
சொற்றனன் அவரும் போனார். 50

2138. கேடகத் தொடுவாள் கையிற் கிடைத்தவர் வரும்வே கத்தை
ஆடநற் துறைசை மேவு மாளிகைத் தேவர் நோக்கி
வீடவந் திடுநீர் தாமே வெட்டிமாய்ந் திடுமி னென்னக்
கூடினோ ரொருவர் மெய்யை ஒருவரே குறைக்க லுற்றார். 51

2139. சிந்தியங் கவர்கள் மாய்ந்த செயல்நர சிங்கன் கேட்டுத்
தந்திரத் துடனே மிக்க சதுரங்க சேனை யோடு
மந்திரி யுடனு மிக்க மாளிகைத் தேவர் மீது
முந்துகோ பத்தி னோடும் வருதல்முன் னுணர்ந்து தேவர். 52

2140. சிறுமக வன்னை முன்போய்ச் சலுகைசெப் புதல்போ லென்றும்
உறுபெருங் கருணைத் தாயாம் ஒப்பிலா முலைமுன் சென்று
மறநர சிங்க னெய்தும் வகைதனை விளம்பக் கேட்டுப்
புறமுறச் சூழ்ந்த செம்பொன் மதில்மிசைப் பொருந்து கின்ற. 53

2141. புண்ணிய வடிவ மான பொருவிடைக் கன்றை யெல்லாம்
நண்ணிமுன் வரவ ழைத்து நற்கையாற் தடவி மிக்க
திண்ணிய தரும நந்தி தேகத்தி லயிக்க மாக்கிப்
பண்ணமர் மொழியாள் நீபோய்ப் பகைதவிர்த் தெய்தென் தேவ. 54

2142. காரணி யருளாற் தன்னுட் கலந்தபல் விடையை யெல்லாம்
பூரணத் தரும நந்தி பூதராய்ச் சிருட்டித் தொக்க
வாரணம் பரிதேர் காலா ளுடன்வரு மன்ன னேர்போய்
ஓரணுக் காலந் தன்னுட் படையெலா முருள மாய்த்து. 55

2143. நரசிங்கன் தனையு மன்னோன் மந்திரி தனையும் நாடிச்
சிரபங்கம் பண்ணா வாறு சிக்கெனப் பிடித்து வந்து
மருமலிந் திலகு போதி வனத்தினுட் கோயில் முன்பு
தருமநந் தீச ரன்னோர் தமைத்தளை பூட்டி வைத்தார். 56

2144. மாதவ ருடனே மிக்க மாளிகைத் தேவர் போதி
நாதனை யுணர்ந்து ஞான நிட்டையுள் நணுகி முன்பு
கோதிலாக் குருவின் பாதம் கும்பிடுங் கொள்கை யோடும்
ஏதகு திரும டத்தின் மேவிவீற் றிருந்தா ரென்றும். 57

ஐம்பத்தெட்டாவது
திருமாளிகைத்தேவர் மகத்துவம் உரைத்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2144
திருச்சிற்றம்பலம்

58. திருமாளிகைத்தேவர் மகத்துவம் உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

வேதாந்தத்தையும் ஆகமச் சிறப்பையும் அறிந்து ஆனந்தமான பூரண வஸ்துவை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்த போகநாதர் துறைசையிலே எண்ணற்ற சித்தர் குழாமுடன் ஞானயோக சாதனை செய்து, நாள்தோறும் மாசிலாமணிப் பெருமானை வணங்கி வந்திருந்தனர். அப்போது, தலைமைச் சீடர் பலருள், சைவ சமயத்தில் சிலரும், வாமத்தில் சிலரும் உடனிருந்தனர். இவருள், திருமாளிகைத் தேவர் குறிப்பிடத்தக்கவர். இவர் குருபக்தி மிக்கவர். பாசத் தொடர்பு அற்றவர். இறைவனுக்கு அர்ப்பணிக்கும் திருவமுதையே உண்டு வாழ்ந்தவர்.

வாமசமயத்தில் இருந்தவர்களுள் பசு பாசத்தின் மயக்கத் தினின்றும் விடுபட்டு ஐந்து புலனையும் அடக்கி ஆனந்தமான திருவருட் கடலுட் படிந்து, சோமபானம் அருந்தி உளங்களித் திருக்கும் கருவூர்ச் சித்தர் இவ்வாறே தலை சிறந்திருந்தார்.

இவ்விரண்டுபேரில், திருமாளிகைத்தேவர்க்கு, அம்பலத் தாடும் நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்யும் செயலையும், பராசத்திக்குப் பூசை செய்யும் செயலைக் கருவூரர்க்கும் போகசித்தர் உபதேசம் செய்திருந்தார். அவ்வாறே இவ்விருவரும் செய்து வந்தனர். திருமாளிகைத்தேவர், தாம் பூசை செய்யும் நிர்மாலியத்தைக் கருவூர்ச் சித்தருக்குக் கொடுக்க அவர் அதனை வாங்கி உண்டு மகிழ்ந்தார். ஒரு நாள் கருவூர்ச் சித்தரானவர் தம்முடைய பூசனை நிர்மாலியத்தைத் திருமாளிகைத் தேவர்க்குக் கொடுக்க அதனை அவர் வாங்காமல் அமைதியுடன் இருந்தார். அதுகண்ட கருவூரர் சலிப்புடன் போகரிடம் சென்று இதனைக் கூறினார். அதற்குப் போகநாதர் பின்வருமாறு கூறினார்.

''எல்லாச் சமயங்களுள் மேன்மையானது சைவ சமயம் ஆகும். இறைவனை ஆசாரத்துடன் பூசிப்பதே சிறப்பானதாகும். எனவே, திருமாளிகைத் தேவர் தரும் நிர்மாலியத்தைப்

பெற்றுக் கொள்வதே உனக்குத் தகும். நீ அவருக்குத் தருவது தகாது''. இவ்வாறு போகர் சொல்லக் கேட்ட கருவூரார் மனமகிழ்ந்து தெளிந்து, திருமாளிகைத் தேவரை அடிபணிந்து வணங்கினார். துறைசையிலேயே வாழ்ந்திருந்தார்.

இவ்வாறு இருக்கும் நாளில், சோழ நாட்டிலே வரும் காவிரிநீர் முழுவதும் திருவலஞ்சுழிப் பிலத்துளுள்ள கீழ்த்துவாரத்தின் வழியாகப் புகுந்துவிடுதலால் மேலே பரவி ஓடமுடியாமையாயிற்று. அதுகண்டு சோழ அரசன் மனத்துயர மடைந்து கொட்டையூரிலிருக்கும் ஏரண்ட முனிவரிடத்தில் போய் வணங்கி அச்செய்தியைச் சொன்னான். ஏரண்ட முனிவர் அதைக் கேட்டு, அரசனாவது அல்லது ஒரு முனிவராவது அப்பிலத்தில் வீழ்ந்து இறந்தால் பிலத்துள் இருக்கும் துவாரம் அடைந்துவிடும். அப்போது காவிரிநீர் முழுவதும் பூமியில் பரவி ஓடும் என்று கூறினார். இதைக் கேட்ட சோழ மன்னன் தாமே அப்பிலத்தில் வீழ்ந்துவிட நிச்சயித்தான். தன்னுடைய மகனை அரசனாக்கிவிட்டுத் தான் போய் பிலத்தில் விழும் எண்ணத்தைத் தன் மனைவியிடத்தும் மந்திரியிடத்தும் சொன்னான். இதைக் கேட்ட சோழன் மனைவி துயரமுற்றாள். உடன் ஏரண்ட முனிவரிடம் சென்று முறையிட்டாள்.

முனிவரே! இத்தகைய செயலைப் பெரியவர்கள் செய்யலாமா? என்னுடைய கணவர் வலஞ்சுழி நீர்ப்பொந்தில் வீழ்ந்து இறப்பதற்குத் துணிந்தால் நான் எப்படி வாழ்வேன்? கூறுங்கள். தாங்கள் கூறிய ஆசிமொழி பொய்க்காதபடி எனது திருமங்கலநாணைக் காப்பீராக! எனப் பணிந்து வணங்கினாள்.

அரசியின் உண்மை நிலையை உணர்ந்த ஏரண்ட முனிவர் சோழனைப் பிலத்தில் விழாதபடி தடுத்தார். பிலத்தில் தாமே விழ முற்பட்டார். நான்கு சிவலிங்கங்களைப் பூமியிலே பிரதிட்டை செய்யும்படி அரசனுக்குக் கட்டளையிட்டார். பின்பு காவிரி செல்லும் வலஞ்சுழிப் பிலத்தில் வீழ்ந்து காவிரி நீரானது பூமியின் மேலே செல்லும்படியாக உள்துவாரம் அடையும்படிச் செய்தார். காவிரியும் மேலே பரவி எங்கும் ஓடியது.

முனிவர் கூறியவாறே மன்னன் தஞ்சையிலும், இராஜராஜேச்சுரத்திலும், திருபுவனத்திலும் சிவாலயங்களை அமைத்து, சிவலிங்கங்களையும் அவற்றில் பிரதிட்டை செய்தான். கங்கைகொண்ட சோளேச்சுரத்தினிலும் சிவாலயம்

அமைத்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்யும் சமயத்தில், அட்டபந்தனமானது பொருந்தாதது கண்டு உணர்விழந்து மயங்கியிருத்தலை நடனமாது ஒருத்தி பார்த்துத் துறைசையை அடைந்து போகரிடத்திலே போய் எடுத்துரைத்தாள். உடனே போகர் கருவூர்ச் சித்தரை அழைத்து, கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் போய் சிவலிங்கமானது இறுகும்படியாக அட்டபந்தனத்தைச் செய்துவிட்டு, புகலூருக்கு வந்து சேருமாறு பணித்தார். பிறகு திருமாளிகைத்தேவரிடம் தம் பாதுகையைக் கொடுத்த போகர் இத்திருவாவடுதுறையிலேயே இறைவனைப் பூசித்து வணங்கியிருக்குமாறு கட்டளையிட்டார். பின்பு திருப்புகலூருக்குச் சென்று இறைபணியில் ஈடுபட்டிருந்தார்.

கங்கைகொண்ட சோளேச்சுரத்தை அடைந்த கருவூர்ச் சித்தரைச் சோழ மன்னன் வணங்கி மகிழ்ந்தான். பின்பு, கருவூரர், சிவலிங்கமானது ஆவுடையாருடன் சேர்வதற்கு, அட்டபந்தனத்தில் வெற்றிலைபாக்கு சுவைத்த பசையினை உமிழ்ந்து இறுகும்படிச் செய்தார். அரசன் செய்தளித்த அமுதம் முழுவதையும் உண்டார். ''அன்னமாய் விசும்பு பறந்து அயன் தேட'' என்கின்ற திருவிசைப்பாவைச் சொல்லி, அதனுள் ''மன்னுமுன் அடியேன் உண்ட ஊன் உனக்காம் வகையெனது உளங்கலந் தருள்வாய் - உன்னருங் கங்கை கொண்ட சோழீச்சுரத் துறு சோதியே'' என்ற உண்மையை அரசன் அறிந்திட உணர்த்தியருளினார். பின்பு, பொன்னம்பலத்தில் திருநடனம் தரிசித்து அங்கு ''திருவளர் திருச்சிற்றம்பலமே'' என்னும் திருவிசைப்பாவை அருளினார்.

திரிலோக்கிய சுந்தரப்பிரானையும் பாடி, திருவிடை மருதூரை அடைந்து இறைவனை வணங்கி, ''வந்தணுகாது நுணுகி உள்புகுந்தான் மருவிடம் திருவிடை மருதே'' என்ற திருவிசைப்பாவை இசைத்தார். ''உயர் இஞ்சியின் மிசை நல் இந்துசேர் தஞ்சை இராஜராஜேச்சர''த்தையும் புகழ்ந்தார். கீழ்க்கோட்டூர் சுந்தரன்தனையும் வணங்கியபின்பு திருப்பூவணம் வந்தடைந்தார். ''பொம்மென முரலும் ஆவண வீதிப் பூவணம் கோயில் கொண்டாய்'' என்னும் திருவிசைப்பாவை அருளினார்.

தாமிரபரணி நதியானது சூழ்கின்ற திருப்புடை மருதூர்த் தெருவுக்குப் பக்கமாகப் போகும்போது, திருப்புடைமருதூரில் எழுந்தருளியுள்ள இறைவன், இனிமையான கற்பகப்பூவின் மணத்தைத் தென்றலின் முன்னாக அனுப்பி, தான் ஒரு

பக்கமாகச் சாய்ந்து பார்க்க, கருவூர்ச் சித்தர் மனம் மகிழ்ந்து எனக்கு இன்பந்தருவதற்கு அமர்ந்த கருணையானது மணம் வீசும் மலரோ அல்லது நீர் சாய்ந்த திருமேனியோ என்று அளவிலாத அன்புடன் கேட்டார். அதற்கு இறைவன் ஆம் ஆம் என்று இருமுறை சொல்ல, அதனைக் கேட்டு மனமகிழ்ந்து துதித்து வணங்கி விடைபெற்றுத் திருநெல்வேலி சென்று அங்குள்ள நெல்லையப்பரைப் பணிந்து 'தினம் வாழ்க' என வணங்கினார்.

அப்போது, போகருடைய திருமுகத்தைக் கொண்டு வந்த ஒரு காகமானது கருவூர்ச் சித்தரை வணங்கி அவர் முன்பு கொடுத்தது. வருக என்று எழுதிய அப்பாசுரத்தைப் படித்துத் தெளிந்து மனமகிழ்ந்து, குருவினது தரிசனத்துக்கு அன்பு கொண்டு எழுந்தார் கருவூரார். திருவீழிமிழலையை அடைந்த அவர், "இணங்குமுன் மொழியில் ஏகநாயகன்" என்ற திருவிசைப்பாவால் துதித்தார். ஆதித்தேச்சரத்தையும், சாட்டியக் குடியையும், முகத்தலையூரையும் பாடினார். திருப்புகலூரை அடைந்து போகரை வணங்கினார். இருவரும் இறைவனை வணங்கி இணைந்திருந்தருளினர்.

திருவாவடுதுறையிலுள்ள திருமாளிகைத் தேவரானவர், குருநாதர் போகருடைய கட்டளையின்படியே மாசிலாமணிப் பெருமானை வணங்கி, ஜபம், தவம், தியானம், நிட்டை இவை செய்து, திருமடம் அமைத்து, சிவசமயத்தை மேலும் மேலும் வளர்த்து வந்தார். ஒருநாள் சேந்தநாயனாரோடு சிதம்பரத்தை அடைந்து திருநடனம் தரிசித்து மிக்க மகிழ்வுடன் திருவிசைப்பாவை "ஒளிவளர் விளக்கே" என்று ஆதியில் எடுத்து உணருமாறும், தெளிவுறப்பாடுமாறும், திருப்பணி செய்யுமாறும், எனது காயம் மனம் நாக்கு இவை கருணை பெறுமாறும் என்னை ஆட்கொள்வாயாக என்று அன்புடன் பாடிப் பின்பும் ஒரு திருவிசைப்பாவிலே 'உயர்கொடியாடை' என்று எடுத்து "உமையாள்காண நயமொடு திருநடஞ் செய்நாதன் உள் மகிழ்ந்து கேட்ப, மயர்வற மலர்த்தாள் என்றன் மனத்துள் வைத்தருள்வாய்" என்றும், "இயல்புறும் உனது பொற்றாட்கீழ் எனது உயிரானது" என்றும் பாடினார். மாசிலாமணிப் பெருமானை வணங்கிநின்று பஞ்சமப்பண்ணினால் "பொய்யாத வேதியா" என்று தொடங்கி, பத்துப் பாக்களைப் பாடினார். பின்பு, திருவருட்துறையில் திருமடத்தில் தங்கி இருந்தார்.

ஒருநாள் திருமாளிகைத் தேவர், காவிரியில் நீராடி மலர்மாலைகளை எடுத்துக் கொண்டு புனிதத்துடன் பூசைக்குரிய அபிடேக நீரையும் கொண்டு வந்தார். அப்போது மரண மடைந்த ஒரு சவத்தைச் சிலர் சுமந்து வருவதைப் பார்த்தார். உடனே வழியில் மேற்குப் பக்கத்தில் கருணையுடன் அமர்ந்துள்ள விநாயகரைத் துதித்தார். தாம் அசுத்தமாகாமல் இருக்கும்படியாக அச்சவத்துக்கு உயிரைக் கொடுத்தார். சாவுக்கு அடிக்கும் பறையையும் விலக்கித் திருமஞ்சனத்தைக் கொண்டு போனார். (அந்த விநாயகருக்கும் இன்றும் 'கொட்டுத் தவிர்த்த கணபதி' என்று பெயர் வழங்கி வருகிறது.)

பிள்ளைப் பேறு இல்லாத சில அந்தண மாதர்கள் தங்கள் மனதில் திருமாளிகைத் தேவரை நினைத்ததும் கருப்பமுற்றனர். அவர்கள் பெற்ற குழந்தைகளெல்லாம் திருமாளிகைத்தேவரைப் போன்றே இருந்தன. இதனால் அந்தணர்களெல்லாம் சந்தேகம் கொண்டனர். நரசிங்கன் என்கிற அரசனிடத்தில் சென்று 'மறைவாக ஒருவன் எங்கள் மனைவிமார்களுடைய கற்பெல்லாம் கெடும்படிச் செய்தான்' என்று முறையிட்டனர். அதைக் கேட்ட அரசன், ஏவலர்களைப் பார்த்து, இக்கணமே சென்று நீங்கள் அனைவரும் இவர்கள் சொன்னவனைக் கயிற்றால் கட்டி இங்கே கொண்டு வாருங்கள் என்று மிகக் கோபத்துடன் அனுப்பினான். அவ் ஏவலாளர்கள் அரசனுடைய ஆணைப்படியே சென்று திருமாளிகைத் தேவரைச் சந்தித்தனர். அவர்களைப் பார்த்த தேவர், 'நீங்கள் கட்டிச் செல்லுங்கள்' என்று சொல்ல, அவ்வேவலாளர்கள் மதி மயங்கி, தங்களுக் குள்ளேயே ஒருவரையொருவர் கயிற்றினால் கட்டிச் சென்றனர். இதனைக் கண்ட அரசன் கோபம் கொண்டு படைத்தலைவர் களைப் பார்த்து, திருமாளிகைத் தேவரை வெட்டிக் கொன்று விட்டு வருமாறு பணித்தான்.

'வெட்டவந்த நீங்களே வெட்டிக் கொண்டு மாய்வீர்களாக' என்று திருமாளிகைத் தேவர் கூறவும் படைகள் ஒருவரை யொருவர் வெட்டிக் கொண்டு இறந்தனர். இதைக் கேட்ட நரசிங்க மன்னன் மந்திரியுடன் சேர்ந்து தேவரைக் கொல்லப் புறப்பட்டான். உடனே, திருமாளிகைத் தேவர் ஒப்பிலா முலையம்மையிடம் முறையிட்டார். இறைவியானவள், புறமதில்மேல் இருக்கின்ற புண்ணிய வடிவமான இடபக் கன்றுகளை அழைத்து, தருமநந்தியைப் பார்த்து நீ போய் பகைவர்களை அழித்துவா என்று சொல்லி அனுப்பினாள்.

தருமநந்தியும் தன்னுள்ளே கலந்திருக்கும் பல விடைக்கன்று களையெல்லாம் பூதர்களாகச் சிருட்டித்து, சேனைகளுடன் வரும் மன்னனுக்கு நேரே சென்று, ஓர் அணுக்காலத்துள் அரசனை படைகளையெல்லாம் அழித்து நரசிங்கனையும் அவனது மந்திரியையும் கொல்லாது பிடித்து வந்து அரசவனத்துள் கோயிலின் முன்பு அவர்களைக் கட்டி வைத்தார். திருமாளிகைத் தேவர், மாசிலாமணிப் பெருமானை நினைந்து ஞானநிட்டை யடைந்தும், குருவை நினைந்தும் திருமடத்தில் தங்கியிருந்தார்.

ஐம்பத்தொன்பதாவது கொங்கண சித்தர் சிவபூசை செய்து அருள்பெற்ற அத்தியாயம்

2145. அருட்டுறைமே வியதிருவா வடுதுறைமா ளிகைத் தேவர்
பொருட்டிறமெய்ப் பயனுணர்ந்து பொருந்துமியல் புகன்றனமேற்
திருத்தகுகொங் கணரினிய சிவலிங்கார்ச் சனைமிகுந்த
உருக்கமொடுஞ் செய்தவகை உணர்த்துவன்கே ளெனவுரைப்பான். 1

2146. போகர்பெறு சீடர்களிற் புகழ்மிகுசித் துடையவராய்ப்
பாகமிகு பரிவினராய்ப் பலகலைநூல் தெளிந்தவராய்த்
தாகமுடன் சிவனடியே தழீஇக்கொள்ளுந் தகையினராய்
யோகபயிற் சியின்மிகுந்த உத்தமரா யுளரொருவர். 2

2147. கொங்கணரென் றுயர்நாமங் கொண்டதிறற் சித்தரவர்
செங்கனக மாய்இரும்பைச் செயுமிரத வாதத்திற்
தங்குவிருப் புடன்வாம சமயத்துட் புகுந்து பன்னாட்
பொங்குசுர பாணிகளாய்ப் பொருந்துபல கூட்டமுடன். 3

2148. மலைக்குகைகள் தமிலிருந்து வளர்யோக சாதனையாற்
கலப்புறுசித் தியிற்சிறிது கைவந்து கிடைத்துமிகு
மலைக்கொடிகற் பிதபேத வகையிலொரு சத்திதனை
அலைப்பறுநல் மனத்தினொடும் அருச்சனைசெய் தமர்ந்திடும்நாள். 4

2149. ஆவடுதண் துறைமேவி அமருமருள் மூலர்முதற்
தேவர்பிரான் தனையருச்சித் திடுஞ்சைவத் திறத்தினர்கள்
மேவுநெறி தனைக்கண்டு மாளிகைத்தே வரைமிகவும்
பூவலர்கொண் டருச்சித்துப் புகழ்ந்திடஅங் கவர்மகிழ்ந்து. 5

2147. சுரபாணிகள் - கள்ளுண்பவர்கள்.

2150. திருவெண்ணீ றள்ளியளித் தருகிருத்தித் தேசிகர்பால்
மருவுறா திவணடைந்த வகையென்கொ லெனக்கேட்பப்
பொருவில்புக லூர்மருவிப் போகர்பதந் தொழுவவருன்
அருகுபோய்ப் பணித்தபணி விடைகேளென் றருளினதால். 6

2151. உன்னிருதாள் மலர்பணியப் பெற்றேனென் றுரைசெய்ய
மன்னுமருள் நோக்களித்தெம் மால்வேண்டும் வகையென்கொல்
பன்னுமெனத் திருமாளி கைத்தேவர் பகர்வதுகேட்டு
அன்னபுகழ்க் கொங்கணசித் தரும்புகல்வ தாயினார். 7

2152. வாமத்திற் சைவத்தில் வருமுத்திப் பயனெனக்கு
நேமித்திவ் வகையென்று நிகழ்த்தியிட வேண்டுமுமைத்
தார்மொய்த்த புயப்போகர் சாதகா சாரியராய்க்
காமித்து வைத்ததனாற் கருணையொடும் புகலுதியால். 8

2153. எனக்கேட்பக் கொங்கணருக் கியம்புவர்சத் தியின்பேதம்
தனைக்கூறி லறுகோடி மாயாசத் திகளுளதாம்
அநித்தியமாஞ் சித்திபல அருள்புரியுஞ் சிலசத்தி
துனிக்கிடமா கியபோகஞ் சிலசத்தி தொகுத்திடுமால். 9

2154. பாசுபசு மயக்காமிச் சமயம்பா கர்க்காகா
தாசறுநற் சுத்தமாம் அருட்சத்தி யஞ்சைவர்
பூசைபுரி சரியாதி நான்கினிலும் பொருந்திநின்று
நாசமிலாச் சிவபோக நல்முத்தி ஈந்திடுமால். 10

2155. ஆதலினா லித்தலத்தில் அமர்ந்தொப்பி லாமுலையை
மாதவர்கள் தொழுதேத்து மாசிலா மணியரனை
நீதிமிகு சைவத்தின் நிலைநின்று பூசிக்கில்
வேதனைவெம் பிறவியற இம்மையில்வீ டுறலாமால். 11

2156. என்றுரைத்த உண்மைதெளிந் தெழில்மிகுமா ளிகைத்தேவர்
முன்றுதியி னொடுமிறைஞ்சி மொழிந்தபடி யெனையாளென்று
ஒன்றுமுளத் தன்பினொடுங் கொங்கணர்போற் றிடவுவந்து
பொன்றலிலாச் சமயாதி மூன்றுதீக் கையும்புரிந்து. 12

2157. சரியைகிரி யாயோகத் தன்மையும்நற் சன்மார்க்க
உரிமையுறு ஞானமுமங் குபதேசித் திடமகிழ்ந்து
மருமலியு மவர்பாத மலர்குடி நாள்தோறும்
திருவுறுகோ முத்தித்தீர்த் தந்தோய்ந்து நீறணிந்து. 13

2158. அக்குமணி நிரம்பவணிந்து அருட்காவி உடைதரித்து
மிக்கதுணை வருவிநா யகன்பாதம் வீழ்ந்திறைஞ்சிப்
புக்கரசைச் சூழ்ந்தழகு புகர்முகயா னையைப்பணிந்து
முக்கனியை ஒப்பிலா முலைத்தாயைத் தொழுதேத்தி. 14

2159. நவநிதியம் பலத்தாடும் நற்பாத மலர்பணிந்து
சிவையையொரு பாலணைத்த செல்வரையும் பூங்கோயிற்
தவளமணிப் பீடமிசை தங்குதிர வியத்தியாகர்
கவினுறுபொற் தாளிணையுங் கண்டுதொழு துளங்களித்து.
15

2160. அருள்மாசி லாமணியை அன்புருகக் கண்டுவிழித்
தரளநீர் மணியுதிரத் தழுதழுத்து நாக்குழறப்
பெருகுரோ மஞ்சிலிர்ப்பப் பேரானந்த தக்கடலுள்
மருவுமனத் துடன்பணிய ஆகாய வாக்கதனால். 16

2161. ஈசானந் தனில்பத்மி தீர்த்தவெழிற் கரைமேல்பாற்
தேசான சிவலிங்கந் தாபிதஞ்செய் தெமைப்பூசித்து
ஆசார முடன்வாழ்தி யெனக்கூறக் கேட்டந்த
வாசாம கோசரன்சொல் வகைதலைமேற் கொடுபோந்து. 17

2162. திருமகளம் மனைப்பூசித் திடுமந்தத் தலந்தன்னிற்
பெருகுமெழில் மணிக்கோயில் பிறங்குமதிற் கோபுரநற்
பொருவில்திரு மாளிகைமண் டபம்புனித முறவியைவித்து
அருள்மருவு சிவலிங்கம் அம்பிகையி னுடனிருத்தி. 18

2163. அட்டபந் தனஞ்சாத்தி ஆகமத்தில் விதித்தபடி
சட்டமுடன் புரிகிரியா விதியெல்லாந் தகவமைத்து
மட்டவிழ்பூங் கடம்பனுமும் மதக்களிற்று முகவனும்நல்
இட்டமுறு நந்தியும்தண் டியுஞ்சூழ இனிதிருத்தி. 19

2164. கும்பாபி டேகமடி யார்கூட்டத் துடன்சிறப்பாய்ப்
பண்பாகப் புரிவித்துப் பாங்கிருந்து நாள்தோறும்
நண்பாமைஞ் சுத்தியொடு நாதனுளங் களிகூர
ஒண்பால்நெய் தயிர்முதலாம் அஞ்சனமன் புடனாட்டி. 20

2165. கலவைலே பனந்திமிர்ந்து கலைகனகப் பணிமாலை
பலவுமெழி லுறச்சாத்திப் பரிவுறுநல் லமுதுமுதற்
குலவுசுவை யுறுநிவே தனங்கொடுத்தர்ச் சனைபுரிந்து
நலமுறுதூ பந்தீப முடனேநல் லுபசாரம். 21

2166. செய்துதுதித் தடிதொழுது தினந்தினமன் பதிகமுற
உய்திறஞ்செய் சிவபூசை உலப்பிலா நாளிருந்து
மெய்தகுகொங் கணரருச்சித் தருள்வெளியில் மிகக்கலந்து
பொய்தவிர்நற் சிவயோகம் புணர்ந்தின்பம் புசித்தனரால். 22

2167. கொங்கணே சுரரெனப்பேர் கொண்டந்தச் சிவபெருமான்
மங்கையொடும் அமர்ந்தருளி வரமெவர்க்குங் கொடுத்திருந்தார்
திங்கள்குல மிதுலேசா இனித்திருவா வடுதுறையில்
வந்துதிரு வாதவூர் வரதர்பெறும் அருள்புகல்வாம். 23

ஐம்பத்தொன்பதாவது
கொங்கண சித்தர் சிவபூசை செய்து அருள் பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2167
திருச்சிற்றம்பலம்

59. கொங்கண சித்தர் சிவபூசை செய்து அருள்பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

போகநாதருடைய சீடர்கள் பலர். அவருள் புகழ்மிக்க சித்துடையவராயும், பரிபக்குவம் மிகுந்தவராயும், பல நூல்களை ஆராய்ந்து தெளிந்தவராயும், சிவனடியை மறவாமல் சிந்திக்கும் தன்மையுடையவராயும், யோகப் பயிற்சியில் மிக்க உத்தமராயும் உள்ள 'கொங்கணர்' என்ற சித்தர் குறிப்பிடத்தக்கவராவார். இவர், இரும்பைப் பொன்னாக்கும் இரசவாதத்தில் விருப்போடு வாதசமயத்தை அடைந்து, பல நாட்களாகப் பல கூட்டத்துடன், கள்ளுண்பவர்களாய் மலைக் குகைகளிலிருந்து யோக சாதனையினாலே சித்தி கைவரப்பெற்று, சக்தியினால் கற்பிக்கப்பட்ட பேத வகையிலே ஒரு சத்தியை நிலைபெற்ற மனத்துடன் அருச்சனை செய்து வந்தார்.

கொங்கணர் ஒருநாள் திருவாவடுதுறையை அடைந்த பொழுது திருமாளிகைத் தேவரைக் கண்டு வணங்கினார். அவருக்குத் திருவெண்ணீற்றை அளித்தருளிய தேவர், அவர் இங்கு வந்த காரணம் பற்றி வினவினார். போகரின் கட்டளைப்படியே தாம் இங்கு வந்து திருமாளிகைத் தேவரை வணங்குவதாகவும் கொங்கணர் கூறினார். மேலும், வாமத்திலும் சைவத்திலும் வருகின்ற முத்திப்பயன் இவ்வகையென்று எனக்கு நியமித்துச் சொல்லவேண்டும்; உம்மை போகரானவர்

சாதகாசாரியராக விரும்பி வைத்ததனால் கிருபையுடன் சொல்லுவீராக! என்று கொங்கணர் கேட்க, அவருக்குத் திருமாளிகைத் தேவர் பின்வருமாறு கூறலுற்றார்.

சத்தியின் பேதங்கள் ஆறு கோடி மாயா சத்திகளாகும். அவற்றுள் சில சத்திகள் அநித்தியமாகிய சத்திகள் பலவற்றை அருள்புரியும்; சில சத்திகள் துன்பத்திற்கு ஏதுவான மாதர் போகம் ஆகியவற்றைக் கொடுக்கும். பாசத்தினால் ஆன்மா மயக்கம் உறும். இது பக்குவர்களுக்கு உண்டாகாது.

குற்றமற்ற சுத்தமான திருவருட்சத்தியானது சைவர்கள் பூசை செய்யும் சரியையாதி நான்கிலும் பொருந்தியிருந்து அழிவில்லாத சிவபோகமான நல்ல முத்தியினைக் கொடுக்கும். எனவே நீ இத்துறைசையிலே இருந்துகொண்டு ஒப்பிலா முலையம்மையையும் மாசிலாமணிப் பெருமானையும் சைவ நிலையிலிருந்து பூசை செய்க. துன்பம் தரக்கூடிய பிறவி நீங்கும். வீடுபேறும் பெறலாம் என்றார்.

திருமாளிகைத் தேவரைத் துதித்து வணங்கிய கொங்கணருக்கு, சமயம் விசேடம் நிர்வாணம் ஆகிய மூன்று தீட்சைகளையும் செய்து, சரியை கிரியை யோகம் ஞானம் ஆகியவற்றின் தன்மைகளையும், சன்மார்க்கம் அடையும் படியான ஞானத்தையும் அவர் உபதேசித்தார். கொங்கணரும் அவர் அருகிருந்து ஆலயம் தொழுது வந்தார். ஒருநாள் அவர் இவ்வாறு வணங்கியிருந்தபோது ஓர் அசரீரி தோன்றியது. ஈசானதிக்கிலுள்ள பத்மி தீர்த்தத்தின் கரையின் மேற்குப் பக்கத்தில் சிவலிங்கத்தைத் தாபித்து எம்மைப் பூசித்து ஆசாரத்துடன் வாழ்வாயாக என்று கூற, அவ்வாறே கொங்கணர் அவ்விடத்திலே அழகிய கோயில், மதில், கோபுரம், திருமாளிகை, மண்டபம் இவை அமைத்தார். சிவலிங்கத்தை அம்பிகையுடன் தாபித்தார். அடியார் குழாத்துடன் திருக்குடமுழுக்கினையும் செய்வித்தார். தினமும் பஞ்ச சுத்தியுடன் இறைவன் திருவுளம் குளிரும் படியாகப் பால், தயிர், நெய் இவற்றால் அபிடேகம் செய்தார். கலவைச் சந்தனம் பூசி, ஆடை, பொன்னாபரணம் அணிவித்தார். திருவமுதம் நிவேதித்தார். அருச்சனையுடன் தூபதீபம் காட்டித் தோத்தரித்தார். சிவபூசையில் ஆழ்ந்து, அருள்வெளியிலே கலந்து சிவயோகம் செய்து பேரின்பம் கொண்டார்.

இறைவனும் கொங்கணேசுரர் என்று பெயர் கொண்டு இறைவியோடு அமர்ந்து அருள்பாலித்தார்.

அறுபதாவது
திருவாதவூரருக்கு அருள் புரிந்த அத்தியாயம்

2168. பாண்டித் திருநா டதிற்கூடற்
பதிக்குக் குணபாற் பார்புகழும்
நீண்ட வைகைக் கரையருகில்
நிகழும் வாத வூரதனில்
வேண்டற் குரிய சிவசமயப்
பைங்கூழ் வளர்க்கு மேகமென
ஈண்டுற் பவித்தார் ஆமாத்தியர்தங்
குலத்தி லொருவர் இரவியென. 1

2169. தேடற் கரிய மணியெனவே
ஈன்றோ ரவர்க்குத் திருநாமம்
நாடிப் பலரு முரைத்துய்ய
நவின்றார் வாத வூரரென்றே
ஆடற் பெருமான் இனியபெயர்
ஆமைந் தெழுத்துங் கொள்கொம்பாய்
நீடிப் படர்ந்து மூவுலகும்
நிறைந்த தந்தப் பெயரம்மா. 2

2170. வேதா கமமா றங்கமனு
நீதி மிருதி முதற்கலைகள்
போதா ரன்ன நீர்பிரித்துப்
புனித அமுதுண் பதுபோலக்
கோதார் பொருள்கள் தமைநீக்கிக்
கொள்ளுங் கலைகள் மிகவுணர்ந்து
தாதார் கமலத் தார்மார்பர்
ஈரெட் டாண்டு தனையடைந்தார். 3

2171. யூகத் திறனு மெழிற்திறனும்
உயிர்கட் கிரங்கும் அருட்திறனும்
தாகத் தொடுபாண் டியனறிந்து
தகவோ டழைத்து வரிசைகளீந்து
ஓகைத் தலைமை மந்திரியாய்
வைப்ப அரச னுரிமையுடன்
பாகத் திருநற் சைவநெறி
படர வுலகம் பரித்தளித்து. 4

2168. பைங்கூழ் - பயிர். இரவி - சூரியன்.

2172. முன்னை யறிவின் தொடர்ச்சியினால்
முழுதும் புவிபொய் யெனவுணர்ந்து
தன்னை வினையைத் தலைவனையீ
டறியுந் தன்மை தழைத்தோங்க
மன்னன் கருமம் வாளாடுங்
கூத்தர் விழிபோல் மதித்தியற்றித்
தென்னன் பிரம ராயரெனத்
திருப்பேர் கொண்டு வாழ்ந்திடுநாள். 5

2173. பந்திப் பரிகள் முதிர்ச்சியுற்றுப்
பார்வைக் கிணங்கா வகைகண்டு
சிந்தித் தரசன் வாதவூர்ச்
செல்வர் தம்மை மிகவழைத்துச்
சொந்தத் திரவி யங்கள்முடிப்
பநேகங் கொடுத்துத் துரகதங்கள்
வந்துற் றிடும்வா ரிதித்துறையின்
மருவிச் சிறந்த வாசிகள்நீர். 6

2174. வாங்கி வாரு மெனவனுப்ப
வாத வூரர் மனவிடைபெற்று
ஓங்கு கருணைப் பரமர்திரு
வால வாயி னுட்புகுந்து
நீங்கற் கரிய அருள்கொடுத்தென்
றனையாள் அய்யா வெனநிகழ்த்திப்
பாங்கு பெறவீழ்ந் திறைஞ்சிமலர்ப்
பாத முளத்திற் பதித்தேகி. 7

2175. தனிப்பொற் சிவிகை மீதேறித்
தரளக் குடைமேல் நிழற்றவியந்
தொனிப்பத் தானை புடைசூழத்
தோன்று முன்போய் மதுரைநகர்ப்
பனித்தண் பிறைச்செஞ் சடையர்வழி
பார்த்துக் குருந்தின் நிழல்மேல்
இனிக்குங் கலைகள் அடியவருக்கு
இயம்பி யிருந்தார் பெருந்துறையில். 8

2176. மண்டு புகழ்சே ரந்நகரின்
வந்து கதிர்சேர் கிழியீடு
கண்டு வறியன் பெறுவதெனக்
கருணைக் கடலைக் கண்டுபணிந்து

2176. கிழியீடு - பொற்காசு.

அண்டர் பெருமான் திருநோக்கால்
அநாதி மலம்போய் வினைசமமாக்
கொண்டு நின்று பரவசமாய்க்
கும்பிட் டுருகுங் குறிப்புணர்ந்து. 9

2177. ஆறத் துவாவும் விட்டகல
அமல ஞானத் தீக்கையளித்து
ஈறற் றெங்கும் பூரணமாய்
இருக்குஞ் சுபாப நிலையதனுள்
வேறற் றிருக்கும் உபதேசம்
விளம்பக் கேட்டி யானெனதற்று
ஊறற் றசலத் தருவியென
உகுநீர்க் கண்ணி னுடன்பணிந்து. 10

2178. அடியே னுடைய உடல்பொருளோ
டாவி நினதே யானதினாற்
படிமீ தினிதா நீயருளும்
பணியான் செய்தற் குரியனலால்
உடையே னல்லேன் ஒன்றினுக்கும்
உடலை யுயிர்நின் றியக்குதல்போற்
கொடியேன் தனையு முன்பணிக்காட்
கொண்டாண் டருள வேண்டுமென. 11

2179. வாத வூரர் பணிந்துபுகல்
வார்த்தை கேட்டு மலர்க்குருந்துச்
சோதி யுரைப்பால் நீகொணர்ந்த
துகள்தீர் செம்பொன் நிதிகளெலாம்
நீதி மருவு நமதுதிருப்
பணிக்கும் அடியா ருறுநிலைக்கும்
ஏத மறநீ செலவழித்திங்கு
இருத்தி யென்று பணித்தனனால். 12

2180. அவ்வா றிலகும் ஆலயங்கள்
மடங்கள் குளங்கள் அழகுபெறச்
செவ்வா யியற்றி அருட்பணிசெய்
திருக்கும் நாளிற் றென்னவனுக்கு
ஒவ்வா மார்க்கர் இவணிகழ்ந்த
செய்தி யுரைப்ப வுருத்தெழுதி
இவ்வா றுமக்குத் தகாதுவந்த
மனித ருடனிங் கெய்துமென. 13

2181. அனுப்பு முடங்க லுரையுணர்ந்து
வாத வூரர் அங்கணர்க்குச்
சினப்பா யரசன் அனுப்புமொழிச்
செய்தி யுரைப்பக் கேட்டருளி
இனிப்போ யவர்க்கா வணிமூலத்
தினத்தி லெய்தும் பரிகளென்று
கனப்பா யுரைத்தங் கிருவெனச்சொற்
கழறி யனுப்ப மந்திரிபோல். 14

2182. வேடந் தாங்கிக் கூடல்நகர்
மேவி மீனக் கொடியானுக்கு
ஆடும் புரவி வருஞ்செய்தி
அறைந்தின் மருவி அவரிருப்ப
நீடுஞ் சிலமந் திரிகளிது
நிசமன் றென்று சொலக்கேட்டு
வாடும் படிக்குக் காவலிட்டு
மறித்தான் வாத வூரர்தமை. 15

2183. அதனை யறிந்து பெருந்துறையில்
அமரு மையர் புவித்தொடர்பு
சிதைய நீக்கும் வகைநினைந்து
திகழுங் காட்டு நரியையெலாங்
கதிகொள் பரியின் வடிவாக்கிக்
கடுகும் பூதர் சேவகராய்க்
குதிரை மீது வரவேதக்
குதிரை மீது தாமேறி. 16

2184. சிங்க மாதந் தனில்மூலத்
தினத்தின் மதுரைத் திருவீதி
எங்கும் பரிகள் தமைநடத்தி
எய்த அரசன் மிகமகிழ்ந்து
தங்கும் வாத வூரர்தமை
அழைத்துத் தயவி னொடுமிருப்பத்
துங்கப் புரவி யிலக்கணங்கள்
தொகுப்போர் பார்த்துத் துதிசெய்து. 17

2185. வள்ளற் குணத்தென் னவனிதிக்கெண்
மடங்கு விலைகள் மதிப்பவரன்
துள்ளும் பரிகள் தமைநிறுத்தித்
தொழுவோ ருள்ளங் கவருவதாய்

2184. சிங்க மாதம் - ஆவணி மாதம்.
2185. வெள்ளைக் கலிங்கம் - வெண் பட்டுடை.

வெள்ளைக் கலிங்கத் திருவுடையு
மிகுவெண் திருமுண் டத்தழகும்
பள்ளித் திருக்குப் பாயமுநற்
பரிமேற் காட்டி யெதிர்நிற்ப. 18

2186. மாறன் மகிழ்ந்தோர் பொற்றூசு
வழங்க வடராச் சியமுறையாய்க்
கூறை பெற்றுக் குதிரைகளைக்
கயிறு மாறிக் கொடுத்தவர்தாம்
ஏறி வருந்தே சியினுடன்மீண்டு
ஏகு வார்போல் மாயையினால்
நீறு புனைவோர் திருவால
வாயில் புகுந்து நிறைந்தனரால். 19

2187. அரசன் பழைய பரிப்பந்திக்கு
அருகி லிந்தப் பரியையெலாம்
விரவும் படிக்குக் கட்டுமென
விளம்பி வாத வூரரையும்
பிரிய முடன்போம் படியனுப்பித்
தானும் பெருநீள் மணிக்கோயில்
மருவி லிருந்தா னவ்விரவில்
வரத னருளால் வந்தபரி. 20

2188. நரிக ளாகிப் பிணிப்பாசம்
நறுக்கிக் குதித்து நகர்முழுதும்
வெருவக் குரல்செய் தெதிர்த்தருகில்
மேவும் பழைய பரியையெலாங்
குருதி பருகிக் கொலைபுரிந்து
கோட்டை யேறி மனைகள்தொறும்
பருகு வனவெல் லாங்கவர்ந்து
பழைய படிகான் படர்ந்தனவே. 21

2189. ஓரிக் குரலு நகர்மாக்கள்
ஒலியும் பழைய பரிக்குடரை
வாரிப் புதிய மாக்களுண்ட
வகைசொல் வோர்வாய் வழங்கொலியும்
தீரக் காய்ந்த நாராசம்
செவியின் மடுத்தாற் போற்கேட்டு
வீரக் கழல்மீ னவன்வெகுளி
மீக்கொண் டொல்லை வெளிமேவி. 22

2186. மாறன் - பாண்டியன். 2189. ஓரி - நரி. மீனவன் - பாண்டியன்.

2190. இந்த மாயா வித்தைபடித்
திடுதற் கெமது நிதிகவர்ந்து
சிந்தை கலங்கா தெதிர்வந்திக்
கேடு புரிந்தோன் தனைச்சினந்து
நந்தம் பொருள்க ளுள்ளவெலாம்
வாங்கு மென்றே நயப்பில்லாப்
புந்தி யுறுமே வலர்களைப்பார்த்
துரைத்தான் பொருநைத் துறைவேந்தன். 23

2191. அன்ன வகையன் பரையவர்செய்
துயரம் அறிந்தம் பிகைபாகன்
பொன்னஞ் சடிலக் கங்கைதனை
வைகை நிறைந்து போம்படிக்குத்
தன்ன தகத்தில் நினைந்திடலுங்
கணத்திற் சலதிப் பிரளயம்போல்
மன்னும் வேக வதிபெருகி
வந்து மதுரை புகுந்ததுவே. 24

2192. அங்க தறிந்து மாறனதி
யடைத்தற் கவண்சென் றார்க்குடிக்குப்
பங்கு பிரித்துக் குரம்புசெயப்
பணித்த போதிற் பிட்டுவிற்கும்
பொங்கு முதிய நரையாட்டி
நேச மரன்பாற் புணர்குணத்தால்
தங்குந் தனது பங்கடைத்தற்
காளில் லாமற் தடுமாறி. 25

2193. ஆல வாய்முன் போயெனையாள்
ஐயா! கூலி யாளிலையே!
சீல மில்லா ரெனைத்தண்டிப்
பாரே யென்று செப்புமுனம்
வேலை விடமுண் டுயிர்காத்த
விமலன் கூலி யாளாகி
நீல நிறக்கோ வணமசைய
நின்றான் கொட்டுங் கூடையுமாய். 26

2194. ஆரப் பாவென் றிடக்கூலி
யாள்நா னம்மே யெனக்கேட்டுப்
பூரித் துண்ணும் பிட்டிடுவேன்
என்பங் கடைவா புதல்வவென

நேரொத் திசைவு புகன்றுதிர்ந்த
பிட்டு வாங்கி நின்றருந்திச்
சோர்வற் றிடும்பிட் டமுதுபின்னும்
வாங்கி முடிந்து தோள்போட்டு. 27

2195. வந்தி பங்கு காட்டிடநான்
அடைப்பேன் நீபோ வெனவசனித்து
அந்த முதியாள் போயபின்னர்
ஆடிப் பாடி மண்தோண்டி
இந்து முடிக்குஞ் சடைமுடிமேல்
எடுத்துச் சுமந்து கரைமேலிட்டு
உந்தும் விநோத விளையாட்டி
னுடனங் கொன்றுஞ் செய்யாமல். 28

2196. கூடை கவிழ்த்துத் தலைமேல்வைத்
துறங்கு வார்போற் குணங்காட்டி
நீடுந் துணிமேற் படுத்திருக்கும்
பொழுது நிம்பத் தார்வேந்தன்
மேடு படுநீர்க் கரைபார்த்து
வந்தவ் விடத்தின் நிலைநோக்கி
ஓடும் புனலிப் பங்கடையார்
யாவ ரென்றங் குரைவினவ. 29

2197. உள்ள வாறங் கருகில்நின்றோர்
உரைப்பக் கேட்டுச் சினங்கொண்டு
கள்ள னாகி உயிர்கள்தொறுங்
கரப்போன் தன்னைக் கைப்பிரம்பாற்
தள்ளி அடிப்ப அவ்வடிஎண்
ணில்லா அண்டச் சராசரங்கள்
கொள்ளு முயிர்கள் தொறும்படலாற்
குமரித் துறைவன் மிகப்பயந்து. 30

வேறு

2198. கூடையுங் கொட்டும் பீறற் கூறையுங் கொண்டு நின்ற
வாடகச் சிலைவில் யானை நோக்கலுங் காணா னாகிக்
கூடலங் கயற்கண் பாகன் கோதிலன் பருக்காச் செய்த
அடலோ இதுவென் றெண்ணி அவசமுற் றழுது விம்மி. 31

2197. குமரித்துறைவன் - பாண்டியன்.

2198. பீறற்கூறை - கிழிந்த துணி.

2199. ஒல்லைதன் கோயில் மேவி வாதவூ ரரவோன் தன்னை
எல்லையில் புகழ்ச்சி கூறிப் பணிந்துயான் செய்த குற்றம்
நல்லமெய்ஞ் ஞான நாதா பொறுத்தஞ்சல் நல்க வேண்டும்
புல்லியல் புடையேன் இன்சொற் போற்றிவாழ்ந்
திடுவே னென்றான். 32

2200. அம்மொழி கேட்ட லோடும் அரசனுக் கன்பு நல்கி
இம்மையி லிச்சை யில்லேன் இறையமர் தலங்கட் கெய்தச்
செம்மையுத் தரம்நீ என்பாற் செய்திட வேண்டு மென்ன
நன்மையாம் நெறிநீர் சேர்தல் நான்செயுந் தவமே
யென்றான். 33

2201. வாதவூ ரடிகள் கேளா மகிழ்ந்தரன் கோயி லெய்திச்
சோதியைத் தீது நீக்குஞ் சுந்தரக் கடவுள் தன்னைப்
பாதபங் கயங்க ளுள்ளம் பதிந்திடப் பணிந்து போற்றிச்
சீதவார் பொழில்சூழ் ஞானத் திருப்பெருந் துறையைச்
சேர்ந்தார். 34

2202. நிறைமலர்க் குருந்து மேவும் நிருமலக் கடலைக் கண்டு
சிறைமுறி நீர்போற் கூடிச் சேர்ந்துதன் செயலற் றொன்றாய்
மறைமுடி வறியாப் பாத மலர்தொழு துருகி நிற்பப்
பிறையணி சடிலப் பெம்மான் பேரருள் கொடுத்துச்
சொல்வான். 35

2203. மாணிக்க வாச கச்சொல் மலர்த்தொடை நம்பாற் சாத்திப்
பேணிப்பண் பொடுநா மேவுந் தலமெலாம் போற்றிப் பின்னர்
ஆணிப்பொன் னம்ப லத்துள் வாவென அருளித் திங்கட்
கோணற்பிஞ் சணியும் வேணி குருபரன் கோயில்
புக்கான். 36

2204. அவ்வுரை தலைமேற் கொண்டு வாதவூ ரடிகள் போந்து
மைவிழி யுமைகோன் வாழும் உத்தர கோச மங்கைச்
செவ்விசேர் நகருள் மேவிச் சிவபரம் பொருளைப் பாடிச்
சைவமா தவர்வாழ் மற்றத் தலமெங்குஞ் சென்று போற்றி.
37

2205. ஆவடு துறையின் மேவி அமலனை இறைஞ்சும் போது
தேவர்கள் தேவன் மாசி லாமணிச் செல்வன் மிக்க
பூவமர் குருந்தின் மேவும் புண்ணியக் கோலக் காட்சி
மாவடு வகிர்க்கண் ணோடு மகிழ்ந்துமுன் காட்டக்
கண்டு. 38

2206. பரவச மாகிப் போற்றிப் பணிந்துவீழ்ந் தெழுந்து யிர்த்துக்
கரகம லங்கள் கூம்பக் கண்கள்நீர்த் தாரை சோர
விரவுமா னந்த ஞான வெள்ளத்துள் வீழ்ந்து மூழ்கி
அரகர வென்று தட்ட மிட்டுநின் றாடிப் பாடி. 39

2207. திருவருட் துறைம டத்துட் சென்றெழுந் தருளியங்கு
மருவிப்பன் னாளி ருந்து வாசக முரைத்த வெல்லாம்
பொருவறு மொழுங்கிற் சேர்வை செய்தந்தப் புனிதச் செஞ்சொல்
அருள்மணிப் பாவின் மிக்கா வடிநடு வந்தந் தம்முள்.
40

2208. பாகுறு மின்சொற் தேவி பசுவுருக் கழித்த வாற்றாற்
கோகழி யென்னும் நாமம் கோமுத்தி நகர்க்குக் கூறி
மோகமாய்ச் சிவபு ராண அகவலின் முதன்மொ ழிக்கண்
வாகுறு நமச்சி வாய வாழ்கவென் றெடுத்த சொற்பின்.
41

2209. அருள்மாசில் மணியை வாழ்த்தி அழகுகோ கழியை யாண்ட
குருமணி வாழ்க வென்று கூறிப்பின் குயிற்பத் தின்கண்
தருகவ னின்பங் கொம்பிற் தங்குகூக் குயிலே யிங்ஙன்
மருவுகோ கழியுள் ளானை வருகநீ கூவா யென்றும். 42

2210. பண்டாய வெனும்வெண் பாவிற் பண்பிலென் றனையு மாளாக்
கொண்டாளு கின்ற மிக்க கோகழி யெங்கோ மாற்கும்
உண்டாமோ நெஞ்சே கைம்மா றுரையென்றும் புகழ்ந்து பாடித்
தொண்டாய தன்மை கூறித் துதித்தனர் வாத வூரர். 43

2211. இவ்வித மிருந்து சின்னாள் மாசிலா மணியை யேத்தித்
திவ்விய ஞானச் செல்வச் சீரெலா மருளப் பெற்று
நவ்விசே ரங்கை நாதன் நல்விடை பெற்றுப் போந்து
மெய்வளர் சிதம்ப ரத்தின் மேவிநல் லாடல் கண்டு. 44

2212. வடபெருந் துறையின் மேவி வைகும்நாள் ஈழ மன்னன்
படர்மிகு புத்தர் கூட்டத் துடனுரை பகராப் பெண்ணும்
உடன்வரத் தில்லை யுற்றுச் சிவசம யத்துள் ளோரைப்
பிடகநூற் தருக்கம் பேசி வெலுமுறை பிதற்றக் கேட்டு.
45

2206. தட்டமிட்டு - கைகொட்டி.

2213. தில்லையந்தணர்கள்செம்போற்சபேசர்முன்செப்பித்தங்கள்
நல்லெழில் மனையில் நண்ணி நறுந்துயில் கொள்ளும் போதில்
ஒல்லையம் பலத்து ளாடும் உம்பர்கோன் கனவிற் சென்று
சொல்லுவன் நீவிர் நாளைத் துகளறுங் காலை சென்று. 46

2214. வாகுறும் அருள்மா ணிக்க வாசகர் தம்மைக் கூவிச்
சேகுறு புத்தர் தம்மைச் செயங்கொளு மென்று செப்பி
ஓகையோ டம்ப லத்துள் உறைந்தனன் விடிந்த பின்பு
மோகமாயவர்போய் நாதன் மொழிப்படி யழைப்ப வந்து. 47

2215. ஆங்கொரு மண்ட பத்தில் அமர்ந்தவர் தமைய ழைப்பித்து
ஈங்குநீர் வந்த செய்தி என்கொலென் றியம்பப் புத்தர்
ஓங்குமெஞ் சமய மன்றி மற்றுள சமய மெல்லாம்
ஏங்குறத் தருக்கத் தால்வென் றிருந்திட வந்தோ மென்றார்.
48

2216. உங்கடந் தேவும் பெத்த முத்தியும் உரைமி னென்ன
வெங்கடந் தேவன் யோனி வழியின்றிப் பிறந்த புத்தன்
பொங்குபோ தியிலைங் கந்தம் பொருந்தாம லிருந்தோ
னாகும்
தங்குமைங் கந்தஞ் சந்தா னத்தழி வதுதான் பந்தம். 49

2217. ஐந்துகந் தங்கள் முற்றும் அறக்கெடல் முத்தி யென்றார்
முந்துமுங் கடவுள் தாயை முளைக்குமுன் கொன்ற பாவி
எந்தவா றுலக நாத னாகுவன் பந்த மென்பது
ஐந்துங்கா ரியமா மத்தின் காரண மறியீ ராகும். 50

2218. அறக்கெடல் முத்தி யாகில் மோட்சத்தி லடைவா ரின்றாம்
இறப்பிலா முத்தி தானும் இன்னதென் றறியீ ரென்றே
மறுத்தனர் புத்தர் கேட்டு மன்னுநுஞ் சமயத் தன்மை
சிறப்பெனிற் சொல்லு மென்ன அந்தகர் செல்லு மார்க்கம்.
51

2219. பாங்குறச் சொலிற்காண் பாரோ வாயினும் பகர வேண்டில்
மூங்கையு முடன்வந்தாளே மொழிகுவள் கேண்மி னென்றங்கு
ஆங்கவள் தன்னை நோக்கி அம்பலத் தண்ணல் உண்மை
ஈங்குச்சொல் லேடீ யென்னச் சாழலோ வென்றம் மாது.
52

2220. சகலமு முரைப்பக் கேட்டுத் தலைவனாம் ஈழ மன்னன்
மிகவுமற் புதமாய் வாத வூரர்தாள் மிசைவி ழுந்து
புகலும தடியே யல்லால் வேறிலை யென்று போற்றத்
தகவொடு நீறு நல்கிச் சங்கரற் கடிமை யாக்கி. 53

2219. மூங்கை - ஊமை.

2221. புத்தரை வென்று மீண்டு போந்துதம் மிருக்கை மேவி
அத்தர்தாள் நினைந்து வாத வூரரங் கிருக்கும் நாளிற்
தத்துவா தீத ரான சபேசரந் தணர்போற் சார்ந்து
முத்தராம் வாத வூரர் முன்புசென் றிருக்கப் போற்றி. 54

2222. எங்கிருந் துற்றீ ரையா வெனமது ரையிலி ருந்தே
இங்குமைக் காண வந்தோம் இத்திரு வம்ப லத்திற்
அங்கரன் மீது கோவைத் தமிழுரைத் தருள வேண்டும்
பொங்குமின் சொற்பா நாமிங் கெழுதியே போதல்
வேண்டும். 55

2223. என்றவர் சொல்லக் கேட்டுள் ஈசனா ரருளீ தென்றே
நன்றென வியந்து கோவை நானூறு முரைப்ப அண்ணல்
தன்றிருக் கையா லேடு தாங்கியே யெழுதி யீற்றில்
மன்றுளோ மெழுதி னோமா ணிக்கவா சகர்சொல் மாலை. 56

2224. எனத்திரு வெழுத்து மிட்டன் றிரவுசிற் றம்ப லத்துட்
தனிப்பட வெழுது மேடு தன்னைவைத் தமர்ந்தார் மற்றைத்
தினத்தினிற் தில்லை வாழந் தணர்கண்டு செங்கை தாங்கி
மனத்துவ கையினோ டெய்தி வாதவூ ரரைக்கண் டேத்தி. 57

2225. இத்திருப் பாடல் மேவும் பொருளெமக் கியம்பீ ரென்ன
மெய்த்தவ ரெழுந்து வந்து மேதகும் அம்ப லத்துள்
நித்திய நிருந்த மாடும் நிறைபொருள் பொருளா மென்று
பத்தியோ டுரைத்துப் போந்து பரத்தினுட்
கலந்தொன் றாகி. 58

2226. ஆனந்த பூர ணத்துள் அமிழ்ந்தியின் புருவ மானார்
தேனுந்து செஞ்சொல் வாத வூரர்தஞ் செய்கை ஈதாம்
வானுந்து தேவர் நாளும் வணங்குகா ழியிற்பி றந்து
ஞானமுண் டவர்க்குச் செம்பொன் நல்கிய வகைமேற்
சொல்வாம். 59

அறுபதாவது
திருவாதவூரருக்கு அருள் புரிந்த அத்தியாயம் முற்றிற்று
ஆகத் திருவிருத்தம் 2226
திருச்சிற்றம்பலம்

2221. சபேசர் - நடராஜப் பெருமான்.
2226. காழி - சீர்காழி. ஞானமுண்டவர் - திருஞானசம்பந்தர்.

60. திருவாதவூரருக்கு அருள் புரிந்த அத்தியாயம் (சுருக்கம்)

பாண்டி நாட்டில் மதுரைக்குக் கிழக்கே, வைகைக் கரையின் அருகில் உள்ள திருவாதவூரில், சிவசமயமாகிற பயிரை வளர்க்கும் மேகம் போன்றும், ஆமாத்தியர் குலத்திற்குச் சூரியன் போன்றும் திருவாதவூரர் தோன்றினார். இவர்தம் பதினாறாம் வயதுக்குள் வேதம், ஆகமம், ஆறங்கம், ஸ்மிருதி முதலான கலைகளையும் ஓதியுணர்ந்தார். இயற்கையில் ஊகித்து அறியும் திறமையினையும், அழகுத் திறனையும், ஏனைய உயிர்களுக்கு இரங்கும் கருணைத் திறனையுமுடைய வாதவூரரைப் பாண்டிய மன்னன் அறிந்து, அவரை அழைத்து அமைச்சர் பதவியைக் கொடுத்து மரியாதை செய்தான். வாதவூரரும் சைவநெறி கொண்டு தம் கடமையாற்றி வந்தார்.

திருவாதவூரர், முற்பிறவியின் ஞானத் தொடர்பால் உலகம் பொய்யென்று அறிந்து தம்மையும் கர்மத்தையும் இறைவனையும் அறிகின்ற தன்மையானது மேன்மையுற, அரச காரியங்களை, வாட்போரை நிகழ்த்துபவரது கண்கள் போலக் கவனிப்புடன் நடத்தி, 'தென்னவன் பிரமராயன்' என்ற திருப்பெயரையும் பெற்றுத் திகழ்ந்தார். அவ்வாறு இருக்கும் நாளில், மன்னன் புதிய படைக் குதிரைகள் வாங்க விரும்பி, அதை வாதவூரரிடம் தெரிவித்து, மிகுந்த பண முடிப்புக்களை அவரிடம் தந்து அனுப்பினான்.

பாண்டிய மன்னனிடம் பணமுடிப்புக்களைப் பெற்ற திருவாதவூரர் விடை பெற்றுச் சென்றார். திருவாலவாயி னுள்ளே சென்று, இறைவனிடம் 'அருள்புரிந்து அடியேனை ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டி வீழ்ந்து வணங்கி இறைவன் திருவடிகளை மனத்தே பதித்துப் புறப்பட்டார். வாதவூரர் மதுரையை விட்டு வெளியேறும் முன்பு, இறைவன் அவருடைய வருகையை எதிர்பார்த்திருந்தார். திருப்பெருந்துறையில் குருந்தின் நீழலில் குருவடிவில் அடியவர்கட்குச் சாத்திரங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அவ்விடம் சேர்ந்த வாதவூரர் கருணைக் கடலாகிய ஞானாசாரியனின் திருவருட் பார்வையினாலே அநாதிமலம் கழிந்து இருவினையொப்பு அடைந்து பரவசமானார். இறைவன் அவருக்கு அத்துவ சோதனை செய்து, ஞான தீக்கையினையும் அருளி, துவைத நிலையற்று எங்கும் பரிபூரணமாயிருக்கும்

நிலையில், அநந்நியமாயிருக்கும் உபதேசத்தினையும் செய்தருளினார். அதைக் கேட்டு, யான் எனது என்கின்ற இருபற்றினையும் அற்று, கண்ணீர் மல்கி, உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கே யாக்கிப் பணிந்து வணங்கினார் வாதவூரர்.

இறைவனின் கட்டளையின்படியே வாதவூரர் தாம் கொண்டு வந்த நிதிகளையெல்லாம் திருப்பெருந்துறை ஆலயத் திருப்பணிக்கும், அடியவர்கள் தங்கியிருக்க மடத்திற்கும் செலவழித்தார். இதனைச் சிலர் பாண்டிய மன்னனுக்குத் தெரிவித்தனர். மன்னன் கோபங் கொண்டு மடல் அனுப்பினான். 'இப்படிச் செய்வது உனக்குத் தகாது; இவ்விடமிருந்து வரும் ஆட்களுடன் இங்கு வந்து சேர வேண்டியது' என்று ஓலை எழுதி அனுப்பினான். வாதவூரர் உண்மையை இறைவனிடம் கூறி முறையிட்டார். அதற்கு இறைவன், அரசனிடம் ஆவணி மூல நாளில் குதிரைகள் வந்து சேரும் என்று சொல்லி அவ்விடமே இருப்பாயாக என்று அருளியனுப்பினார். வாதவூரரும் மந்திரி போல் வேடந்தரித்து மதுரையை அடைந்து பாண்டியனுக்குக் குதிரைகள் வரும் செய்தியைச் சொல்லி அவ்விடம் இருந்தார். அப்போது சில மந்திரிகள், இது உண்மையல்ல என்று அரசனிடம் கூறினர். அதைக் கேட்ட மன்னன் வாதவூரரைச் சிறையிலிட்டான்.

இறைவன் வாதவூரருக்காக உதவ முனைந்தார். காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கினார். பூதர்களையெல்லாம் குதிரைச் சேவகர்களாக்கினார். வேதக் குதிரை மீது தாம் ஏறிக் கொண்டு ஆவணி மூல நாளில் மதுரை வீதிகளில் குதிரைகளை நடத்திக் கொண்டு அரண்மனையை அடைந்தார். மன்னன் மகிழ்ந்தான். வாதவூரரை அழைத்து வந்து புகழ்ந்தான். குதிரை இலக்கணம் அறிந்தவர்கள் குதிரைகளைப் பார்த்துப் பாராட்டினர்.

மன்னன் கொடுத்த தொகைக்கு மேல் எண் மடங்கு விலை மதிக்கத்தக்க குதிரைகளையெல்லாம் நிறுத்திய இறைவன் அம்மன்னனுக்கும் காட்சியளித்தார். கலிங்கதேசத்து வெண்பட்டு உடையும், திருவெண்ணீறும், அழகிய சட்டையும் கொண்டு காட்சி தந்த இறைவனுக்குப் பாண்டியன் பொன்னாடையைப் பரிசாக அளித்தான். அதைப் பெற்ற இறைவன், தம் குதிரையில் ஏறி, திருவாலவாயிற் கோயிலுள் போய் மறைந்தருளினார். அன்று இரவில் இறையருளால் குதிரைகளெல்லாம் நரிகளாகி

ஓடின. பழைய குதிரைகளையெல்லாம் கொன்று குவித்தன. மதில்களைத் தாண்டி காட்டிற்குள் ஓடி மறைந்தன.

நரிகளின் ஓலமும் மக்களின் கூச்சலும் மன்னன் செவியில் நாராசம்போல் பாய்ந்தன. கோபத்தால் பாண்டியன் திருவாதவூரரைப் பழித்தான். ஏவலாளரை ஏவி அவரைத் துன்புறுத்தினான். உடனே இறைவன் தன் முடியிலுள்ள கங்கையை வையை ஆற்றில் பிரவாகம் எடுத்துப்போம் படிக்குத் திருவுளம் கொண்டார். வேகவதியானது பிரளயம்போலப் பெருக்கெடுத்து மதுரை நகருக்குள் புகுந்தது. பாண்டிய மன்னன் இதையறிந்து கரையை அடைக்கும்படி அனைவருக்கும் கட்டளையிட்டான்.

இறைவனிடத்தில் அன்பு கொண்ட பிட்டு விற்கும் ஒரு முதியவள், ஆலவாய் அண்ணலிடம் சென்று, 'அடியேனை ஆண்டு அருள்புரிவாயாக; கூலி ஆள் கிடைக்கவில்லையே; ஒழுக்கமற்ற மன்னனது ஆட்கள் என்னைத் துன்புறுத்து வார்களே' என வேண்டினாள். உடனே இறைவன் கூலியாளாகி, கோவணத்துடன் கூடையைத் தோளில் ஏந்தி வந்தான். முதியவள் பிட்டைக் கூலியாகக் கொடுக்க அதையும் ஏற்றான். உதிர்ந்த பிட்டுகளைத் துணியிலே முடிபோட்டுத் தோளிலே கொண்டு வந்தான். முதியவள் தன் பங்கை அவனுக்குக் காட்டினாள். அவ்விடத்துக் கரையைத் தாம் அடைப்பதாகக் கூறிய அக்கூலியாள், வந்தியாகிய அந்த முதியவளையும் அவளிடம் திருப்பி அனுப்பினான். பின்பு, அவன் ஆடியும் பாடியும் விளையாடியும் சும்மா இருந்தான்.

கரை அடைக்கும் பணியை மேற்பார்வை பார்த்து வந்த மன்னன் இக்கூலியாள் வேலை செய்யாதிருப்பது கண்டு கோபம் கொண்டான். தனது கைப்பிரம்பால் அவனை அடித்தான். அவ்வடியானது அண்ட சராசரங்களிலுள்ள எல்லா உயிர்கள் மீதும் பட்டது. மன்னன் நடுங்கினான். கூலியாளாக வந்த இறைவன் மறைந்தான். வாதவூரருக்காகப் இறைவனே இவ்வாறு திருவிளையாடல் புரிந்ததை உணர்ந்த மன்னன் வாதவூரரைப் பணிந்து வணங்கினான். வாதவூரரும் மன்னனிடம் அன்பைப் பொழிந்து, தாம் சிவத்தலப் பயணம் மேற்கொள்ள விருப்பதைப் பற்றிக் கூற, மன்னனும் மகிழ்ந்து தக்க ஏற்பாடுகளைச் செய்தளித்தான்.

ஆலவாய்ப் பெருமானை வணங்கிய வாதவூரர் திருப்பெருந்துறையை அடைந்து அண்ணலைத் தொழுதார். பின்பு உத்தரகோசமங்கையையும் பிற தலங்களையும் தரிசித்தார். திருவாவடுதுறையை அடைந்தபோது இறைவன், இறைவியுடன் குருந்த மர நீழலில் காட்சியைக் காட்ட, வாதவூரர் ஆடிப்பாடி மகிழ்ந்தார். அருகிலுள்ள திருவருட்துறை மடத்தில் பலநாள் தங்கியிருந்து தம் திருவாசகங்களையெல்லாம் ஒழுங்குபெறச் செய்தார்.

திருவாசகப் பாக்களின் முதல் இடை கடைகளுக்குள், அம்பிகை பசுவுருவத்தை நீக்கிய தன்மையால் 'கோகழி' என்ற திருநாமத்தைத் துறைசைக்குச் சொன்னார். சிவபுராண அகவலிலே முதலிலே 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கிய சொல்லுக்குப் பின்பு, மாசிலாமணிப் பெருமானை வாழ்த்தி, ''கோகழியாண்ட குருமணி வாழ்க'' என்று கூறினார். குயிற்பத்தில், ''தருகுவன் இன்பம் கொம்பிற்தங்கு கூக்குயிலே, இங்கன், மருவு கோகழியுள்ளானை வருக நீ கூவாய்'' என்றும், ''பண்டாய'' என்னும் வெண்பாவில், ''பண்பில்லாத என்னையும் ஆளாக்கொள்கின்ற மிக்க கோகழியெம் கோமாற்கும் உண்டாமோ நெஞ்சே உரை'' என்றும் புகழ்ந்து பாடித் துதித்தார்.

இவ்வாறு துறைசையிலிருந்தபொழுது ஞானச் செல்வங்களை இறைவனால் அருளப் பெற்ற திருவாதவூரர் சிதம்பரம் சென்று திருக்கூத்தையும் தரிசித்தார். இவர் வடபெருந்துறையை அடைந்து வசிக்கும் நாளில் அங்கு வந்த புத்தர்களை இறையருளால் வெற்றி கொண்டார். தில்லைவாழ் அந்தணர்களது கனவில் தோன்றிய இறைவன் திருவாதவூரரை அழைத்து வந்து புத்தர்களை வெல்லுமாறும் பணித்தருளினார்.

புத்தர்களை வாதுக்கழைத்த திருவாதவூரர், உங்களுடைய தேவனது நிலையையும் பெத்த நிலையினையும் முத்தி நிலையினையும் சொல்லுங்கள் என்று கூறினார். அதற்கு அவர்கள், யோனியின் வழியாக இல்லாமல் பிறந்த எங்களுடைய தேவன் புத்தபிரானாவான்; போதியின் கீழ் இருப்பவன்; பஞ்ச கந்தங்களும் பொருந்தாமல் இருப்பவனும் ஆவான்; பொருந்துகின்ற பஞ்சகந்தங்களும் சந்தானத்து அழிவதுவே பந்தமாகும்; பஞ்சகந்தங்கள் முழுவதும் கெடுதலே முத்தியாகும் என்றனர். இதற்கு மணிவாசகர் பின்வருமாறு மொழிந்தார்.

உங்கள் கடவுள் தோன்றுவதற்கு முன்பே தனது தாயைக் கொன்ற பாவிக்கு ஒப்பாவான்; அப்படிப்பட்டவன் எப்படி உலகுக்கு இறைவனாவான்? பந்தம் என்பது ஐந்தும் காரியமாகும்; அதனுடைய காரணத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். ஐந்தும் அறக்கெடுதல் முத்தியானால் மோட்சத்தில் அடைபவர்கள் ஒருவரும் இல்லையாகும். இறப்பு இல்லாத முத்தியை இன்னது என்று நீங்கள் அறியமாட்டீர்கள் என இவ்வாறு புத்தர்களை மறுத்துரைத்தார் வாதவூரர்.

பின்பு, புத்தர்கள் வாதவூரரை நோக்கி சைவ சமயத் தன்மையைக் கூறும்படி வினவினர். அதற்கு அவர், புத்தர்கள் அழைத்து வந்துள்ள ஊமைப் பெண்ணே சொல்லுவாள் எனக் கூறி அப்பெண்ணை நோக்கி, அம்பலத்தில் ஆடும் பெருமானது உண்மையை இங்கு சொல்வாயடி! என்று சொல்ல, 'சாழலோ' என்ற பதிகத்தால் அந்த ஊமைப்பெண் யாவற்றையும் கூறினாள். இவற்றைக் கேட்ட ஈழமன்னன் மகிழ்ந்து வாதவூரரை வணங்கினான். அவனைச் சிவனடியருள் ஒருவராக வாதவூரர் பக்குவப் படுத்தியருளினார். பின்பு சிதம்பரத்தில் தம் இருப்பிடம் சென்று நடராஜப் பெருமானைத் துதித்து மகிழ்ந்திருந்தார். அப்போது அந்தணர் வடிவாக அங்கு வந்த இறைவன், வாதவூரர் கோவைத்தமிழ் பாட வேண்டுமென்றும் அதைத்தாம் ஓலையில் எழுதிப் போக வேண்டுமென்றும் கேட்டார். இதுவும் இறைவன் திருவருளே என எண்ணிய வாதவூரர் அவ்வாறே பாடினார். திருக்கோவையார் பாடல் நானூறும் வாதவூரர் பாடவும் இறைவன் தமது கையால் ஏட்டைத் தாங்கி எழுதினார். முடிவில் 'மன்றுளோம் எழுதினோம்' 'மாணிக்கவாசகர் சொன்மாலை' என்று கைச்சாத்துமிட்டு அன்றிரவு சிற்றம்பலத்தில் எழுதிய ஏட்டை வைத்தருளினார்.

அடுத்த நாள், தில்லைவாழ் அந்தணர்கள் அதனைப் பார்த்து, கையில் கொண்டு வந்து வாதவூரரிடம் தெரிவித்து வணங்கினர். இத்திருப்பாடல்களின் பொருளைக் கூறுமாறும் வேண்டினர். அதற்கு வாதவூரர், இதற்குப் பொருள் அம்பலத்தில் நித்திய நடனமிடுகின்ற பூரணப்பொருளே பொருளாகும் என்று கூறினார். பின்பு, சிவத்துடன் கலந்து ஒன்றாகி ஆனந்தபூரணத்துள் அமிழ்ந்து இன்புருவமானார்.

அறுபத்தொன்றாவது திருஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி அருளிய அத்தியாயம்

2227. பொன்னி மாநகர் நீர்வளம்
பெருகிய பொருவில்சீர்ச் சோணாட்டின்
மன்னி வாழ்பிர மாபுர
மென்னும்நல் வளநக ரதுதன்னுட்
பன்னு நான்மறைச் சிவபாத
விருதையர் பரமனைப் பணிந்தேத்தித்
துன்னும் அந்நிய சமயத்தை
அழிக்குமோர் சுதன்பெறத் தவம்நோற்றார். 1

2228. கண்ணு தற்பர னருளினால்
அவர்மனைக் காதலி வயிற்றின்கண்
புண்ணி யந்தலை யெடுப்பநான்
மறைக்கடல் பொங்கியார்த் தெழச்சைவ
மண்ணி னிற்தழைத் தோங்கவோர்
அருட்திரு மைந்தன்வந் துதித்தின்பத்
தண்ணி லாக்கொழுந் தெனப்பிறந்
தரும்பெறற் தந்தையாய் மகிழ்வெய்த. 2

2229. வளர்ந்து மூன்றுநல் லாண்டுறு
நாளையில் மாதவ மிகுதந்தை
விளங்கு பொய்கைநீ ராடுதற்
கெய்துபோ துடன்விர கொடுமெய்த
விளங்கு ழந்தையைக் கரையினில்
நிறுத்திநீ ரிருங்குளம் புகுதாதை
களஞ்சி ரந்தெரி யாவகை
முழ்கிடக் கண்டிடா தயர்வெய்தி. 3

2230. எம்மை யாளுடை யாளொடுந்
தோணியி லிருப்பவன் தனைநோக்கி
அம்மை யேஅப்ப வென்றழைத்து
அழுதிட அக்கணம் விடைமீது
செம்மை வான்மிசை நின்றுதன்
திருநிலைத் தேவிவாள் முகம்நோக்கிக்
கொம்மை மென்முலைப் பால்கறந்
தூட்டெனக் கோதிலாள் அருகெய்தி. 4

2227. சுதன் - மகன்.

2231. செம்பொன் வள்ளத்திற் பால்கறந்
தமுதமாய்த் திருவருள் குழைத்தூட்டி
அம்பொன் வட்டிலுங் கைக்கொடுத்
தும்பரி னண்ணல்பால் அவளெய்தப்
பம்பு நீரினிற் படிந்திடு
தந்தையார் பரிவொடுங் கரையேறித்
தம்பெ ருந்திரு மைந்தனார்
உறுநிலைத் தன்மைகண் டிதுசெய்வார். 5

2232. மிச்சி லுண்பதற் கூட்டின
ரார்சொலென் றதட்டிமென் சிறுமாற்றால்
அச்சு றுத்தலு மொருவிரற்
கட்டியோர் தாள்மடித் தசைந்தாடிக்
கொச்சை மேவுதோ டுடையநற்
செவியன்வெண் கோதிலா மதிசூடி
இச்சை சேர்பிர மாபுரம்
மேவும்எம் மான்இவ னெனக்காட்ட. 6

2233. கேட்டு ளற்புத மெய்தியா
னந்தமெய்க் கிளர்ச்சியொ டெடுத்தேந்தித்
தேட்ட மோடுநற் திருவருட்
தோணியிற் சென்றுவீற் றிருந்தோனை
நாட்ட நீர்த்துளி யெய்திடத்
தொழுதுபோந் தினியநல் மனைமேவப்
பாட்ட ளிக்குரல் மிகுமலர்க்
குழலினாள் பயோதரத் தமுதுண்டோன். 7

2234. மற்றை நாட்டிருக் கோலக்கா
விறைஞ்சலும் வரதர்நல் லருளாலஞ்
சுற்ற நல்லெழுத் துறுபொற்தா
ளம்இரண் டுலகுய அமுதுண்ட
சிற்ற டித்திரு ஞானசம்
பந்தர்கைச் செம்மலர் தனில்மேவப்
பற்றி யன்பொடுந் தாளவொத்
திசையெழப் பாடினர் பதிகங்கள். 8

2235. நீல கண்டயாழ்ப் பாணர்வந்
தடிதொழ நிலவுநண் பவர்க்கீந்து
சூல பாணியை மதங்கசூ
ளாமணி யுடன்வரத் துதிக்கின்ற

சீல மேவியா ழிசையுணர்ந்
துவகையாய்ச் சிறப்பவர்க் கருள்செய்து
கால காலன்றின் றாடும்அம்
பலந்தொழக் கருதியே யெழலுற்றார். 9

2236. தாதை தோள்மிசை அமர்ந்தருட்
தொண்டர்கள் சயசய வென்றேத்தச்
சீத வார்பொழிற் தில்லையிற்
தாமுணுந் திருவருட் சபைதன்னுட்
போத ஞானத்து ளெழுந்ததம்
ஆனந்தப் பொருள்நடஞ் செயக்கண்டு
காத லாற்தொழு தாடினர்
பாடினர் களித்துகுத் தனர்கண்ணீர். 10

2237. அங்க கன்றுயாழ்ப் பாணர்தம்
எருக்கத்தம் புலிப்பதி யணைந்தன்போடு
இங்கி தப்பதி கம்புகன்
றங்குள வெழில்திகழ் தலமெல்லாம்
பொங்கு நற்றமிழ் பாடிநல்
வாயில்சே ரரத்துறை புகுந்தேத்திச்
சங்க ரன்மணிச் சிவிகையுங்
குடையும்பொற் சின்னமும் தரப்பெற்று. 11

2238. மாது பாகனைப் பதிகநற்
துதிகொடு வாழ்த்திநித் திலயான
மீது மிக்கநற் தண்டர
ளக்குடை நீழலின் மிகமேவி
நாத மேவுபொற் சின்னமுன்
பூதநற் காழிமா நகர்நண்ணிக்
கோதி லாதநா வுக்கரை
யரைக்கண்டு குலவுநட் பொடும்வைகி. 12

2239. வாக்கி னுக்கர சகன்றபின்
மேற்திசைத் தலமெலா மகிழ்ந்தேத்தி
ஊக்க மார்திருப் பாச்சிலாச்
சிராமமுற் றுயர்கொல்லி வளவன்தன்
ஆக்க மாகிய மகண்முய
லகன்வலிப் பகன்றிடத் தமிழ்பாடித்
தீர்க்க மோடுஞ்சென் றார்கொடி
மாடச்செங் குன்றெனுந் திருவூரில். 13

2240. அத்த லத்தமர்ந் திருக்கும்நாட்
குளிர்மிகுந் தடியவர் குழாமெல்லாம்
மொய்த்தி டுஞ்சுர நோயுறக்
கண்டுநல் மொழியுறு பதிகத்திற்
கைத்தி ருப்பணி செயுமடி
யேம்வினை நுகர்வது கடனன்றாம்
இத்து யர்ப்பிணி தீர்த்தருள்
வாய்திரு நீலகண் டம்மென்றே. 14

2241. பாடி மெய்யடி யவர்வினை
போக்கிப்பின் பிறபதி பலபோற்றி
நீடு மெய்ப்புகழ் மருவுபட்
டீச்சுர நேருற வரும்போது
தேடு தற்கரி தாமுத்துப்
பந்தர்நற் சிவனருள் செயப்பூதர்
பீடு றத்திருச் சிவிகைமேற்
கொடுவந்து பிடித்திடக் கண்டன்பால். 15

2242. சிவிகை விட்டிழிந் திறைஞ்சிநித்
திலப்பந்தர் பூதர்பாற் சிலர்கொள்ளக்
கவிகை நீழலிற் சென்றுபட்
டீச்சுரர் கழல்தொழு தருள்பெற்றுப்
புவிசி றப்புற ஞானபோ
னகமுண்ட புண்ணியர் புகழ்மேவு
நவமு றுஞ்சிவ தலம்பல
பணிந்துவந் தாவடு துறைநண்ண. 16

வேறு

2243. ஆவடு தண்துறை மேவுமெய் யன்பர்கள் அனைவோரும்
தேவி தனம்பொழி பால்நுகர் மைந்தர்முன் சென்றெய்தி
ஆவ லொடுந்தொழ முன்னவ ருந்தொழு தவரோடும்
பூவணி மேவுநல் வீதி பணிந்து புறஞ்சூழ்ந்தே. 17

2244. பொன்திகழ் கோபுர முன்பு பணிந்துட் புகுந்தின்ப
மன்றொடு போதியு டன்திரு மாளிகை வலமாய்வந்து
என்று முயிர்க்குயி ராய்வளர் மாசிலா மணிஈசர்
முன்திக ழன்பொடு கண்டு பணிந்தனர் முதிர்செல்வர். 18

2245. ஆடினர் பாடினர் அங்கம் விதிர்ப்புறும் ஆர்வத்தோடு
ஏடவிழ் கஞ்ச மலர்க்கரம் உச்சியின் மிசையேற்றிப்
பீடுறு மெய்ப்புள கம்பெரு கக்கணீர் பெய்தின்பத்
தூடமர் வுற்றகல் பூரண மாய்த்திகழ்ந் துரையற்றார். 19

2246. அங்க ணவர்க்கு நிகழ்ந்ததை ஆரறிந் தறைகிற்பார்
இங்க ணவர்க்குமிவ் வண்ண மெனச்சொல இசைவாமோ
பொங்கும் அருட்சுக வாரி படிந்தவர் புலன்மேவிச்
சங்கர சங்கர வென்றுரை செய்தனர் தயவோடும். 20

2247. நல்லருள் பெற்றுயர் ஞானசம் பந்தர் நலத்தோடு
மெல்ல நடந்து வெளிப்புற மேவிமெய் யடியாரோடு
அல்லறு ஞான அருட்துறை மாமட மதில்மேவி
எல்லுறு நாட்சில வங்க ணமர்ந்தனர் இயல்போடும். 21

2248. இவ்வித மங்ங னமர்ந்திடும் நாளையில் எழில்மேவும்
செவ்விய தாதை மகம்புரி தற்கருந் திகழ்செம்பொன்
உய்வித மிங்ங னெமக்குத வென்றிட உமைமைந்தர்
அவ்வியல் போர்ந்துநற் சந்நிதி முன்புசென் றறிவிப்பார். 22

2249. ஈவ தெமக்கிலை யேல்எமை யாளுமா றீதோவுள்
மேவிடர் சாரினும் உன்னடி நான்மற வேனென்றே
ஆவலி னோடுநற் காந்தார பஞ்சமம் அழகாகச்
சீர்வளர் ஆவடு தண்துறை யாயருள் செய்யென்று. 23

2250. நாலடி மீதி விரண்டடி வைத்திசை நலமாகச்
சீல முடன்திரு நற்பதி கம்புகல் செயுமெல்லை
சால மகிழ்ந்துசெம் பொற்றியா கேசுரர் தயவோடும்
பாலமு தம்பிகை யூட்ட நுகர்ந்தசம் பந்தர்க்கு. 24

2251. தொந்தி மிகுத்திரு தாள்குறு கிச்சூழல் விழியோடும்
சிந்தை களித்துமுன் நிற்குமோர் செஞ்சடி லப்பூதத்து
அந்தமில் சென்னியில் ஆயிரம் பொன்குறை யாதென்றும்
தந்திடு செம்பசும் பொன்னுல வாக்கிழி தனைவைத்து. 25

2252. கொண்டுபோய் ஈந்துவா வென்றுரை செய்தத னுடன்கூடத்
தண்டுகொள் பூதரோர் மூவர் செலும்படி தானேவத்
தொண்டுறு பூதமோர் தட்டினில் மீதுசு மந்தெய்தித்
தண்டமிழ் நற்பதி கம்புகல் கின்றவர் தம்முன்பு. 26

2253. சிங்கவண் பீடத் துச்சியின் மீது சிறப்போடும்
பொங்குல வாக்கிழி வைத்துமக் கெங்கள்தம் பொற்றியாகர்
இங்கருள் செய்தனர் கொள்கவென் றோர்விர லாற்சுட்டிப்
பங்கமில் பூத ருரைத்திட வேற்றனர் பாலுண்டார். 27

2253. பாலுண்டார் - திருஞானசம்பந்தர்.

2254. தாதைகை மீது கொடுத்தித்து வேள்விகள் சதமேலும்
போதவே செய்யினும் பொன்குறை யாமலே பொலிவெய்து
நீதி யுடன்கொடு செல்லுமென் றேவிநல் நேசத்தோடு
ஆதியை ஆவடு தண்துறை மேவிய அரன்தன்னை. 28

2255. காதலி னோடு புகழ்ந்து பணிந்து களிப்பெய்தி
ஆதர வாகிய நல்விடை பெற்றருட் சம்பந்தர்
மேதகு பற்பல நற்தல மேவி மிகத்தாழ்ந்தே
நாதர் மகிழ்ந்திடு தருமபு ரம்பதி நணுகுற்று. 29

2256. மாதர் மடப்பிடி பாணர் மதித்திடா வகைபாடிச்
சீத வயற்புடை சூழ்மரு கற்பதி சென்றெய்திக்
கேத முறப்பணி கவ்விட மாண்டு கிடந்தோனைக்
கோதறு நற்பதி கம்புகன் றாவி கொடுத்தங்கண். 30

2257. தந்தையை விட்டவன் தன்மரு கன்துணை யாச்சார்ந்து
வந்திடு கன்னியை மாய்ந்து பிழைத்தெழும் வணிகற்குச்
சிந்தை மகிழ்ந்து மணம்புரி வித்தவர் தேசத்துக்
குந்திட நல்விடை ஈந்துபின் தென்புக லூர்எய்தி. 31

2258. ஆர்வ மிகுத்திடு முருகர் மடத்தினில் அமர்போதில்
நாவர சுற்றிடல் கேட்டெதிர் சென்றிட நல்லாரூர்ச்
சீர்வளர் மெய்த்திரு வாதிரை மேவு சிறப்போத
ஏர்வளர் சொற்திரு ஞானசம் பந்தர்கேட் டங்கெய்தி. 32

2259. ஆரூர் அமர்ந்தருள் அங்கணர் தந்திரு வடிபோற்றிச்
சீருறு தென்புக லூரினில் மீண்டு சிறுத்தொண்டர்
ஏருறும் அப்ப ருடன்திரு நீலநக் கடியோடும்
காருறு கண்டர் அருட்திறங் காதல் கலந்தோதி. 33

வேறு

2260. நாவுக் கரசர் திருத்தொண்டக்
குழுவி னொடுமுன் புறநண்ணச்
சேவிற் திகழ்வார் திருவீழி
மிழலைப் பதியிற் சென்றெய்திப்
பாவுற் றிடுநற் பதிகமிரு
வருமங் கரனைப் பணிந்தோதி
மேவுற் றிடுநாள் வற்கடம்வந்
துறதல் கண்டு மெலியாமல். 34

2260. வற்கடம் - பஞ்சகாலம்.

2261. இருபொற் காசங் கிருவருக்கும்
வீழி யழகர் ஈந்திடப்பெற்று
ஒருமை யுடன்யா வருமுண்ண
அமுது நல்கி உவந்தின்பம்
மருவு முகில்பெய் துலகெல்லாம்
மகிழ்வுற் றிடுநா ளெய்துதல்கண்டு
அருள்பெற் றரனார் விடைமேற்கொண்
டப்பாற் போந்து மறைக்காட்டில். 35

2262. அண்ணல் மலர்த்தாள் தொழுதுமுன்னாள்
அருமா மறைபூ சித்தடைத்த
வண்ண மணிப்பொற் கதவுஅப்பர்
திறக்கும் படிவண் பதிகச்சொல்
எண்ணஞ் சலித்தி டாதுபத்திற்
திறக்கப் பாடி எழில்ஞானம்
உண்ணும் பிள்ளை தனையடைக்கப்
பாடு மென்றங் குரைத்திடலும். 36

2263. முதற்பா வதனிற் கதவடைக்கப்
பாடிப் பதிகம் முடித்திடலும்
விதிர்ப்புற் றச்சம் வாகீசர்
கொண்டன் றிரவு விழிதுயிலா
துதிக்கு முனம்வாய் மூரடிக
ளுடன்போய்க் கோயில் தனிற்புகுந்து
மதிச்செஞ் சடிலர் தமைக்காணா
வகையங் கிருப்ப விடிந்திடலும். 37

2264. உலகம் ஈன்றாள் திருமுலைப்பால்
உண்டோர் அப்பர் தமைக்காணாது
அலகில் அடியார் புடைசூழத்
திருவாய் மூர்வந் தணுகியங்குச்
கலமில் கருணை யுடன்அப்பர்
தமைக்கண்டு இன்ப முறப்பேசி
மலரும் அருள்வாய் மூர்அடிக
ளாடும் நடங்காட் டிடமகிழ்ந்து. 38

2265. நாவுக் கரசும் உடன்தொழுது
மீண்டு மறைக்கா டதில்நண்ணி
மேவிப் பணிசெய் தமர்ந்திடுநாள்
மிகுசீர் மதுரை தனிலிருந்து

கோவைத் துவர்வாய்ப் பாண்டிமா
தேவி அருளாற் குலச்சிறையார்
ஏவற் குரியார் வந்துபணிந்து
இலகு மொழிப்பத் திரம்ஈய. 39

2266. வாங்கிப் புகறற் குரியோர்கள்
வாசித் திடலுஞ் சமண்மயக்கம்
தாங்கித் தென்னன் இருப்பதுவும்
சைவா கமத்தின் திறனருகி
ஓங்கிக் கலதி அமணருரை
தமிழ்நா டொக்க வழங்குவதும்
பாங்கி னொடுசம் பந்தரறிந்து
ஆல வாய்க்குப் பரிவினொடும். 40

2267. அப்பர்க் குறுதி சொலிநிறுத்தி
அருள்வே யுறுதோ ளியைப்புகன்று
மெய்ப்புற் றிடுங்கூ டற்பதிக்கு
விரைவி னொடுநற் சிவிகையின்மேல்
ஒப்பற் றிடுநற் திருக்கூட்டத்
துடன்வந் துறலு மெதிர்கொண்டு
பொற்புற் றிடுமந் திரியார்வந்
திறைஞ்சி அழைப்ப உடன்போந்து. 41

2268. ஆல வாயில் அமர்ந்தருளும்
அருட்சுந் தரரைப் பணிந்தங்கண்
வால மயில்போல் வந்துதொழும்
வளர்நல் லெழில்மங் கையர்க்கரசிக்கு
ஏலு முவகை யுறமுகமன்
இயம்பிப் பரவு குலச்சிறையார்
சாலப் பணிசெய் திலகுமடங்
காட்டச் சண்பைத் தனித்தலைவர். 42

2269. தொண்டர் திருக்கூட் டத்தொடெழுந்
தருளிப் பதிகத் தொனிமுழங்க
அண்டர் பெருமான் தனைப்புகழ்ந்தங்
கிருக்கும் பொழுதில் அமணரெலாம்
கண்டு பொறாமை யாய்க்கைதவ
னுதவி கொண்டு கனல்மடத்திற்
கொண்டு வந்து கொளுத்திடலும்
உணர்ந்து ஞானக் கொழுந்தனையார். 43

2270. தென்னன் மீதிற் பையப்போய்ச்
சேரென் றேவத் தீக்கனல்போய்
மன்னன் மீதிற் கொடுஞ்சுரமாய்
மருவி யுடலை மிகவாட்ட
இன்னற் கொடிய துயர்தாங்கா
னாகி மிகவு மிடருற்றுத்
தன்னை யறியா தேமயங்கிக்
கிடந்தான் நிம்பத் தார்வேந்தன். 44

2271. பீலி கொண்டு சமண்பேயர்
தடவத் தீரா ததுகண்டு
சீல மேவு பாண்டிமா
தேவி யுண்மைத் திறஞ்செப்பி
ஆல முண்டோர் அருள்ஞான
முண்டோர் தம்மை அழைப்பப்போய்த்
தூல அமணர் பாதியுடற்
துயர்தீர்ப் போமென் றவர்பார்ப்ப. 45

2272. பாதி யுடலி லட்டாலைத் திருநீ றிட்டுப் படர்நோயைத்
தீது பகர்வோர் பார்க்குமுடற் பாதி சேரும் படிஞானச்
சோதி யருள்சேர் சம்பந்தர் செய்தோர் பங்கு சுகங்காட்டி
நீதி மருவு நாள்நேர்பட் டதனால் நிருபன் தொழுதிறைஞ்சி. 46

2273. பகுவாய்ச் சமணர் தமையப்பாற்
போக்கிப் பாதி யுடல்தனிலும்
இகல்தீர்த் தருளுங் காழிநகர்க்
கிறைவர் திருநீ றிடப்பெற்றுத்
தொகுநோய் தீர்ந்து முன்னிருந்த
கூனுந் தீர்ந்து சுகமருவிப்
புகல்வே றில்லை உமதடியே
என்னும் நம்பும் புகழ்பெற்றான். 47

2274. கண்டு கலங்கிச் சமணரெலாங் கனலில் வாது செயக்கருதிப்
பண்டு படித்த மந்திரங்கள் எழுதித் தீயி லிடப்பஞ்சு
மண்டி எரியு மாறதுபோல் எரிந்து கருக வளர்காழிக்
கொண்டல் போக மார்த்தபூண் முலையாள் எனக்கூ
றியபதிகம். 48

2275. வாங்கி அனலி லிடநீரில் நனையும் பச்சை வடிவுறலும்
ஆங்கு திருக்கை யாலெடுத்துக் காட்ட அரசன் அதிசயித்துப்
பாங்கி லாத சமணரேநீர் தோற்றீர் போம்போ மெனப்பகரத்
தாங்கும் பொறாமை யாலினித்தண் ணீரில்வெல்
வோமெனச் சாற்ற. 49

2276. கோதில் லாத குலச்சிறையார்
தோற்றாற் செய்யுங் குணங்கூறி
வாது செய்வீ ரெனக்கேட்டு
மதிசோர்ந் தவர்கள் கழுவின்மிசை
பேத முறுநீ போடுவியென்
றுரைப்பக் கழுக்க ளிசைவிப்பத்
தீதில் லாத வைகைநதிக்
கரையிற் சென்று சமண்தீயர். 50

2277. அத்தி நாத்தி யென்றெழுதும்
ஏடு வைகை யாற்றிலிடக்
கத்து முரைகள் காணாமற்
கடலே கதியென் றதுபோகச்
சித்த மகிழ்ந்து பாசுரத்திற்
சிவனே பரமென் றுரைதோன்றச்
சுத்த மருவுங் காழிநகர்த்
தோன்றல் எழுதி ஆற்றிலிட. 51

2278. எதிர்த்து நீர்மேல் விரைவினொடும்
ஏடோர் காதம் எய்துதலும்
மதிச்செஞ் சடிலர் ஏடகத்து
வள்ளல் நிறுத்த மந்திரிபோய்த்
துதித்துச் சிரமேற் கொடுவந்து
துகள்தீர் தென்னன் முனங்காட்ட
மதித்துள் மகிழ்ந்து சம்பந்தர்
மலர்த்தாள் மன்னன் வணங்குதலும். 52

2279. திருநீ றள்ளி அவன்நுதலிற்
சேர்த்திச் சிவமந்தி திரம்ஈந்து
கருநோய் நீங்கும் படிகமலக்
கையைச் சிரசின் மேற்கவிப்ப
மருள்தீர்ந் தினிய சுந்தரபாண்
டியனாய்ப் பூதி வடிவினொடும்
அருள்மெய் வடிவாய்,சிவனருள்சேர்ந்து
அரவென் றார்த்துப் பணிவுற்றான். 53

2280. கருணை மிகுமங் கையர்க்கரசி
யார்க்கும் கவினார் மந்திரிக்கும்
திருவெண் ணீறு கொடுத்தருள
வாங்கித் தரித்துச் சிறப்புமிகும்

ஒருமை யுடன்நின் றடிபணிந்தார்
தமிழ்நாட் டுள்ளோர் அனைவர்களும்
அருள்வெண் ணீறன் பொடும்பூசி
அரன்தாள் பணிந்தார்த் தகமகிழ்ந்தார். 54

2281. எண்ணா யிரம்வன் சமணர்களும்
திருநீ றிடுதற் கிசையாமல்
உண்ணீ டகலா ணவவலியால்
ஒழுங்காய்க் கழுவின் மிசையேறி
அண்ணாந் திருந்தார் விதிவலியை
யாரே தடுப்பார் அரசனுடன்
தண்ணார் கிருபைச் சம்பந்தர்
ஆல வாய்ச்சங் கரர்முன்போய். 55

2282. வீட லால வாய்ப்பதிகம்
விளம்பி விடைபெற் றந்நாட்டில்
நீடும் பதிகள் பலபணிந்து
பதிகம் பாடி நிருபனொடும்
தேடற் கரிய பாண்டிமா
தேவி தனையுந் திறல்மருவும்
பீடு பெறுமந் திரியையும்நல்
மதுரைக் கனுப்பிப் பெயர்ந்திப்பால். 56

வேறு

2283. சோணாட்டி லெழுந்தருளி அரனார் மேவும்
தொல்பதிகள் பலவணங்கித் துதித்துப் பாடி
வாணாட்டங் களித்திடுநல் லடியார் கூட்டத்
துடன்முள்ளி வாய்க்கரையில் மருவி யங்கண்
கோணாட்டும் புனல்பெருக்கா யாற்றின் மேவக்
கொள்ளம்பூ தூர்ச்சிவனைக் குறித்துப் போற்றிப்
பாணாட்டுந் தமிழ்ப்பதிகப் பாவிற் றோணி
யுந்துகவக் கரைக்கென்று பாடிப் போந்து. 57

2284. திருக்கொள்ளம் பூதூர்வாழ் சிவனைப் போற்றித்
தெளிச்சேரிக் கருகுவரும் போது நாதம்
பரிக்கும்பொற் காளமொடு சின்ன மெல்லாம்
பரசமய கோளரிவந் தானென் றூத
உருத்தங்க ணுள்ளநத்திப் புத்தர் கூட்டம்
ஓடிவந்து தடுத்திடலும் உளம்பொ றாது
தருக்கினொடுஞ் சம்பந்த சரணா லையர்
தடித்துருமு தலையில்விழச் சாற்ற லோடும் 58.

2285. சாக்கியர்கள் தலைகள்பல சிதறி மாய்ந்து
தரையில்விழ விடிவிழுந்த தன்மை நோக்கி
ஏக்கமொடும் சிலரோடிச் சாரிப் புத்த
னிடத்துரைப்ப அவன்வரும்போ தெழிற்சம் பந்தர்
ஆக்கமிகு மண்டபமொன் றதனி லெய்தி
அவனையழைத் தவன்சமயம் அவனுக் கேற்ப
ஊக்கமிலாப் பொய்மொழியென் றறிவித் தன்னோர்க்கு
உணர்வருளிச் சிவசமயத் துடன்பா டாக்கி. 59

2286. நீறிடுவித் தங்குதெளிச் சேரி ஈசர்
திருமலத்தாள் பணிந்துபூந் துருத்திக் கேகத்
தேறுமுருத் தெரியாமல் அப்பர் வந்து
சிவிகைசுமந் திடலும்அமண் செயித்த செல்வர்
மீறுமரு ளப்பரெங்கே யெனவி னாவ
மேம்படுபொற் றாள்சுமக்கு மிக்க செல்வப்
பேறுபெற்றிங் குற்றேனென் றுரைப்பக் கேட்டுப்
பிள்ளையார் சிவிகையைவிட் டிழிந்து போற்ற. 60

2287. திருஞான சம்பந்தர் பாதம் மீது
திருநாவுக் கரசர்பணிந் தளவ ளாவிப்
பெருநீர்மைப் பாண்டிமா தேவி யன்பும்
பிறங்குகுலச் சிறையார்தம் பண்பும் பேசி
அருள்மேவு திருத்துருத்தி அண்ணல் பாதம்
ஆங்கவர்கள் இருவரும்போய்த் தொழுத மர்ந்து
தருமேவு காழிநகர்க் கப்ப ரன்பாற்
சம்மதிப்பச் சம்பந்தர் வந்து சார்ந்து. 61

2288. தோணிமிசை அமர்ந்தபிரான் கமல பாதம்
துதித்தினிய தமிழ்ப்பதிகம் பலவும் பாடிப்
பேணுதிருத் தாதைமுதற் சிலர்க ளந்தப்
பெரும்பதியி லிருக்கும்வகை நிறுத்திப் பின்னர்
வேணுபுரத் தலைவர்திருக் கூட்டத் தோடும்
விளங்கும்வட திசைப்பதிகள் விரும்பிப் போற்றப்
பூணுமுத்தின் சிவிகைமிசை ஏறிப் போந்து
பொருவிலாத் தலம்பலவும் புகழ்ந்து பாடி. 62

2289. திருவோத்தூ ரதனில்வந்தோர் அன்பர்க் காகத்
திகழும்ஆண் பனைகளைப்பெண் பனைக ளாக்கி
அருள்மேவு பனைகளெல்லா முத்தி சேர
அருள்நோக்கம் ஈந்தானை அங்குப் போற்றிக்

கருமேகந் திகழ்ந்திடுதென் கயிலை யான
காளத்தி மலைக்கொழுந்தைக் கண்டு போற்றிப்
பெருநீர்மை யன்புருவ முறுங்கண் ணப்பர்
பிரசமலர்த் தாள்பணிந்து பெயர்ந்து போந்து. 63

2290. ஒற்றியூர் தனில்வந்து பதிகம் பாடி
உம்பர்பிரான் தனையிறைஞ்சி உவகை யோடும்
கற்றைவார் சடைக்கபா லீசர் மேவும்
கவின்மயிலா புரிக்குவரக் காழி மேவும்
கொற்றவர்முன் சிவநேச ரரிதாப் பெற்ற
குலவுபூம் பாவைவிடங் கொண்டு மாய்ந்து
பற்றுமெரி தனில்வெந்து பொடியாம் என்பு
பரித்தகுடந் தனைக்கொணர்ந்து பரிவி னோடும். 64

2291. உமதுதிருப் பணிக்கென்று வளர்த்த என்பெண்
உரகத்தால் மாய்ந்தனளென் றுரைத்து வைப்பத்
தமதுதிருக் கண்ணருளால் நோக்கி மிக்க
சம்பந்தர் திருப்பதிகந் தன்னில் அன்பர்க்கு
அமுதுபணிந் தூட்டிஅரன் விழாக்கா ணாமற்
போதியோ பூம்பாவாய் வாவென் றன்பாற்
தமிழ்மதுரத் துதிபுகலக் குடத்தி னின்றும்
தாமரைமின் போலெழுந்தாள் தளிர்க்கொப் பன்னாள். 65

2292. அந்தரதுந் துமிமுழங்க அமர ரெல்லாம்
அலர்மாரி பெய்துதொழ அவனி யுள்ளோர்
சிந்தைகளித் ததிசயிப்பக் கிளையி னோடும்
சிவநேசர் மிகமகிழ்ந்து மணஞ்செய் திந்தப்
பைத்தொடியை ஆளுமென எம்பால் வந்த
பாவையிவள் என்றருளக் கன்னி மாடத்து
இன்பமொடும் பூம்பாவை யிருந்து நாதன்
இணையடித்தா மரைசேர்ந்தா ளிப்பால் அண்ணல். 66

2293. தொண்டர்குழாத் தொடுங்கபா லீசர் பாதம்
தொழுதுவிடை பெற்றுவந்து தில்லை மேவி
அண்டர்பிரான் திருநடனம் பணிந்து காழிக்கு
அழைத்தருளும் பிதாமுதலாம் அன்ப ரோடும்
தெண்டிரைமேல் மிதந்திடும்நற் தோணி வாழும்
செல்வர்தமைப் பணிந்துதிரு மனையின் மேவித்
தண்டமிழ்நற் திருப்பதிகம் பாடி நித்தம்
தனிமுதலைப் பணிந்தங்கு வைகும் நாளில். 67

2294. மணம்புரியும் பருவமிது என்று தாதை
மன்னுபெருங் கிளைஞரொடும் வந்து பேசி
இணங்குமதி கண்டினிய மணநல் லூரில்
இருக்கும்நம்பாண் டானம்பி ஈன்ற மாதைக்
குணங்கொடுபெண் கேட்டவர்சம் மதிப்ப மிக்க
கோதிலா மணச்சிறப்புக் குலவச் செய்து
கணம்பெருகும் அன்பர்புடை சூழ முத்தின்
கவின்மருவு சிவிகைமிசைக் கருணை வள்ளல். 68

2295. நல்லூர்நற் பெருமணத்துக் கெய்தி யவ்வூர்
நண்பரெதிர் கொளமணக்கா வணத்திற் சேர்ந்து
வல்லோர்கள் மறைச்சடங்கு மிகவுஞ் செய்து
மணவணிபூண் டிலகுதிரு மாதைத் தாதை
பல்லோரும் புகழ்ந்தேத்த வியங்க ளார்ப்பப்
பல்லாண்டு பலர்கூற அருகில் வைத்து
புல்லுமலர்க் கரம்பிடிப்பித் தோம குண்டப்
பொங்கழலைச் சூழ்கவென்று புகலக் கேட்டு. 69

2296. அங்கியா வதுபரம னன்றி வேறிங்
கிலையாரும் வருகவென அழைத்துப் போந்து
திங்கள்முடித் திருமணநல் லூர்ப்பெம் மான்முன்
திகழ்நல்லூர்ப் பெருமணம்வேண் டாமென் றோதப்
பொங்குமருட் சோதியாய் எழுந்து யாரும்
புணர்கநம தடியென்று புகலக் கேட்டுப்
பங்கமறக் காதலா கிக்க சிந்தென்
றருள்நமச்சி வாயவெனும் பதிக மோதி. 70

2297. ஈனமுறும் பிறவிநோய் அகல யாரும்
ஈசனொளி மேவுமென இயம்பக் கேட்டுக்
கானமர்தண் கமலமலர்த் தாதை முன்னாக்
கலியாணத் திருவழகு கண்டோ ரெல்லாம்
ஆனசிவச் சோதியிற்சென் றடங்கக் கைக்கொண்டு
அருள்மாதி னொடும்பின்ன ரருள்மெய்ஞ் ஞானப்
போனகர்தற் போதமற ஞேய வாரி
புக்கொன்றி யுடனானார் புவிகள் போற்ற. 71

2298. நலமேவும் ஆவடுதண் துறையுள் மேவும்
நாதர்திரு வுளமகிழ்ந்து நல்கு கின்ற
உலவாப்பொற் கிழிபெறுசம் பந்தர் தன்மை
உரைத்தனம்நா வுக்கரையர் உவந்து வந்து

சிலநாள்தண் துறைசையில்வீற் றிருந்து மிக்க
திருப்பதிகம் பலபாடிச் சீர்பெற் றுய்ந்த
புலன்மேவ உரைப்பதுகேள் மிதுல வென்று
புண்ணியமெய்த் தவுமியர்முன் புகல்வ தானார். 72

அறுபத்தொன்றாவது
திருஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி அருளிய
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2298

61. திருஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி அருளிய அத்தியாயம் (சுருக்கம்)

பொன்னி நதி வளம்சூழ்ந்த சோழநாட்டில் சீர்காழி என்ற நகரத்தில் சிவபாதவிருதயர் என்பார் வாழ்ந்து வந்தார். அவர், பிற சமயங்களை ஒடுக்கும் திறன்மிக்கதொரு பிள்ளையைப் பெறுவதற்காக இறைவனை வேண்டி, தவமிருந்து ஒரு மைந்தனைப் பெற்றார். அப்பிள்ளையே திருஞானசம்பந்தர் ஆவார்.

இக்குழந்தை வளர்ந்து மூன்றாண்டு நிரம்பியபொழுது, ஒருநாள் சிவபாதவிருதயர் குளத்தில் நீராடச் சென்றார். குழந்தையைக் குளக்கரையில் நிறுத்திவிட்டு அவர் நீரில் மூழ்கினார். தந்தையைக் காணாத அக்குழந்தை அழத் தொடங்கியது. அம்மா! அப்பா! என அக்குழந்தை அழுவதைக் கேட்ட இறைவனும் இறைவியும் இடப வாகனத்தில் அவ்விடத்திலே தோன்றினர். இறைவன் இறைவியைப் பார்த்து அக்குழந்தைக்கு ஞானப்பாலை ஊட்டென்று அருளினார். இறைவியும் அருகில் வந்து பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து திருவருள் ஞானத்தையும் அதில் குழைத்து ஊட்டினாள். அக்கிண்ணத்தையும் குழந்தையின் கையில் கொடுத்துவிட்டு இறைவனுடன் மறைந்தாள்.

குளத்தில் நீராடிவிட்டுக் கரையேறிய தந்தையார் குழந்தையைக் கண்டார். பாலொழுகும் வாயுடன் இருந்த குழந்தையிடம், இவ்வாறு எச்சிலை உண்ணச் செய்தவர் யார்? சொல் என மிரட்டினார். சிறு கோலால் பயமுறுத்தினார். உடனே அக்குழந்தை ஒரு விரலை மேலே சுட்டி, ஒரு காலை மடித்து அசைந்து ஆடி ''தோடுடைய நற்செவியன் வெண் கோதிலாமதிசூடி - இச்சைசேர் பிரமாபுரம் மேவும் எம்மான்

இவன்'' என்று காட்டியது. இதனைக் கண்ட சிவபாதவிருதயர் ஆனந்தமடைந்தார். தோணியப்பரை வணங்கிய பின் வீடு திரும்பினார்.

இறையருள் ஞானம் பெற்ற அக்குழந்தை மறுநாள் 'திருக்கோலக்கா' சென்று வணங்கலும், இறைவன் பொற்றாளம் அருள, அத்தாளம் ஒத்து இசையெழப் பதிகங்கள் பாடியது. பின்பு, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மூலமாக யாழிசையை உணர்ந்தார் சம்பந்தர். தந்தையாரின் தோள் மீது அமர்ந்து, அடியார்கள் ஜெய ஜெய எனத் துதிக்கச் சிதம்பரம் சென்று ஆனந்த நடனத்தைக் கண்டு களிப்புற்றார். பின்பு, அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணருடைய எருக்கத்தம்புலியூரை அடைந்து அன்புடன் இங்கிதப்பதிகம் அருளினார். பல சிவதலங்களைத் தரிசித்துப் பதிகங்கள் பல பாடினார்.

திருநெல்வாயிலரத்துறை சென்ற ஞானசம்பந்தர் இறைவனால் அருளப்பெற்ற மணிச்சிவிகையும் முத்துக் குடையும் பொற்சின்னமும் பெற்றுப் பதிகங்கள் பாடினார். பின்பு, சீர்காழியை அடைந்து அங்கு நாவுக்கரசரைக் கண்டு நட்பு கொண்டு இன்பமுடன் வாழ்ந்து வந்தார். மேற்றிசைத் தலங்களையெல்லாம் வணங்கித் துதித்த சம்பந்தர், திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தபோது வளவனது மகளுக்கு 'முயலகன்' என்ற நோயைத் தீர்க்கப் பதிகம் பாடினார். பின்பு, செங்குன்றூர் என்னும் தலத்தில் அடியார்களின் குளிர்சுரம் நீங்கப் பதிகம் பாடினார்.

ஞானசம்பந்தர் பட்டீச்சுரத்துக்கு வருகின்றபோது முத்துப்பந்தரைச் சிவனருளால் பூதகணங்கள் சிவிகைக்கு மேல் கொண்டுவந்து பிடிக்க, அதைக்கண்ட இவர் அன்புடன் சிவிகை விட்டிறங்கி வணங்கினார். நித்திலப்பந்தரைப் பூதகணங் களிடமிருந்து சில அடியவர்கள் பெற்றுக் கொண்டனர். பட்டீச்சுரரின் திருவடிகளை வணங்கி அவர் அருள்பெற்ற இவர் பல தலங்களுக்கும் சென்று பாடினார். பின்பு, திருவாவடுதுறையை அடைந்து மகிழ்ந்தார். மெய்யன்பர்களோடு சேர்ந்து மாசிலாமணிப் பெருமானின் திருமுன்பு வணங்கி, அருகிலிருந்த திருமடத்திலே தங்கியிருந்து திருத்தொண்டாற்றி வந்தார்.

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறையிலே இவ்வாறு தங்கியிருந்தபொழுது, தம் தந்தையானவர் யாகம் செய்வதற்குத் தமக்குச் செம்பொன் உதவ வேண்டுமென்று மாசிலாமணிப்

பெருமானின் சந்நிதியிலிருந்து விண்ணப்பம் செய்தார். ''பிறருக்குக் கொடுப்பது எமக்கு இல்லையானால் எம்மை ஆண்டருளும்விதம் இதுதானா! நோயால் துன்பப்பட்டாலும் உன் திருவடிகளை நான் மறவேன்'' என்று ஆவலோடு காந்தார பஞ்சமப் பண்ணினால் 'ஆவடுதண்துறையாய்! அருள் செய்வாயாக' என்று நான்கடிக்குமேல் இரண்டடி வைத்து இசையுடன் திருப்பதிகம் பாடினார். பாடலைக் கேட்டு மகிழ்ந்த இறைவன், ஆயிரம் பொன் குறையாதிருக்கும் உலவாக்கிழியைப் பூதத்திடம் கொடுத்து அனுப்ப, சம்பந்தரும் அதனை ஏற்றுக் கொண்டார். தமது தந்தையின் கையில் உலவாக்கிழியைக் கொடுத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட யாகங் களைச் செய்தாலும் பொன் குறைவுபடாமலே நிறைவுடன் இருக்கும் என்றும் கூறினார். மாசிலாமணிப் பெருமானைப் புகழ்ந்து பணிந்தார். பின்பு பல தலங்களையும் வணங்கினார். தருமபுரம், திருமருகல், தென்திருப்புகலூர் போன்ற தலங்களில் பல அற்புதங்களை நிகழ்த்தினார்.

திருவீழிமிழலையில் திருநாவுக்கரசருடன் இணைந்து இறைவனைப் பதிகம்பாடிப் பணிந்த ஞானசம்பந்தப் பெருமான் அங்கேயே சில நாள்கள் தங்கியிருந்தார். திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவன் அவ்விருவருக்கும் பொற் காசுகளை நல்க, அவற்றைக் கொண்டு அனைவருக்கும் திருவமுதை வழங்கினர்.

திருமறைக்காட்டில், முன்பு வேதங்களால் பூசித்து அடைக்கப்பட்ட திருக்கதவைப் பத்துப் பாட்டுக்களால் அப்பரடிகள் திறக்கப் பாடினார். சம்பந்தரை அடைக்கப் பாடும்படிக்குச் சொல்ல, அதன்படியே கதவை அடைக்கச் சம்பந்தர் பாடி முடித்தார். பின்பு திருவாய்மூர் அடைந்து இறைவன் திருநடனத்தை இருவரும் கண்டு களித்தனர். மீண்டும் திருமறைக்காட்டிலிருந்து இறைபணி செய்து வந்தனர்.

பின்னர் மதுரை நோக்கிச் சென்ற ஞானசம்பந்தரை அங்குக் குலச்சிறையார் எதிர்கொண்டு வந்து வணங்கி அழைத்தார். அங்கிருந்த திருமடத்தில் திருக்கூட்டத்துடன் சம்பந்தர் எழுந்தருளியிருந்தார். அமணர்களின் தீச்செயலை யுணர்ந்த சம்பந்தர் 'பாண்டியன் மீது பையச் சென்று சேரட்டும்' என்று ஏவ, அத்தீயானது சென்று அரசன் மீது கடுமையான வெப்ப நோயாகப் பொருந்தி உடலை மிகவும்

வருத்தியது. அதுகண்ட சமணர்கள் மயிற்பீலி கொண்டு அவ்வெப்பத்தைப் போக்க முற்பட்டனர். ஆனால், நோய் மேலும் பெருகியது. மங்கையர்க்கரசியார் அரசனுக்கு உண்மையை விளக்கினார். அவருடைய விருப்பப்படியே சம்பந்தர் பாண்டியனின் வெப்பு நோயைப் போக்கினார். அரசன் தன் கூனும் நிமிர்ந்து சம்பந்தப் பெருமானின் பெருமையை வியந்து அவரை வணங்கினான். இதனால் சமணர்கள் மேலும் சினமடைந்தனர்.

சம்பந்தரை அனல் வாதத்திற்கு அழைத்த சமணர்கள், முன்பு படித்த மந்திரங்களை எழுதி நெருப்பிலிட்டனர். அந்த ஏடானது பஞ்சுபோல எரிந்து கருகின. சம்பந்தர் 'போகமார்த்த பூண் முலையாள்' என்ற பாசுரம் எழுதிய ஏட்டை நெருப்பிலிட அது எரியாமல் பச்சையாகவே இருந்தது. சமணர்கள் தோற்றனர். பின்பு, புனல் வாதத்திற்கு அழைத்தனர். சமணர்கள் வைகை நதிக்குச் சென்று, 'அஸ்தி - நாஸ்தி' என்று எழுதிய ஏட்டை வைகை ஆற்றிலிட்டனர். அது ஆற்றுடன் கலந்து கடலை அடைந்தது. சம்பந்தர் எழுதிய ஏட்டை வைகை யாற்றிலிட, அந்த ஏடானது நீர்மேல் எதிர்த்து ஒருகாத தூரம் அடையவும், அதைத் திருஏடகத்திலுள்ள இறைவன் நிறுத்தினார். அமைச்சர் அதைத் தன் சிரசின் மீது வைத்துக் கொண்டு வந்து மன்னனிடம் காண்பிக்க மன்னன் மகிழ்ந்து சம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். வெண்ணீறு அளித்து, பஞ்சாட்சரம் உபதேசித்த சம்பந்தர் கூன்பாண்டியனை மாற்றிச் சுந்தரபாண்டியனாக்கினார். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சம்பந்தரை வணங்கி மகிழ்ந்தனர்.

பின்பு சோழநாட்டுக்கு வந்த சம்பந்தர் பல தலங்களை வணங்கித் துதித்துப் பதிகங்கள் பாடினார். திருக்கொள்ளம்பூதூர் பரமனைப் பாடிப் பணிந்து தெளிச்சேரிக்குப் பக்கமாக வரும்பொழுது அங்கிருந்த புத்தர்களை வாதிட்டு வென்றார். பின்பு பூந்துருத்திக்குச் சம்பந்தர் சென்றபோது அப்பரடிகள் சிவிகை தாங்கிவர, சிவிகை விட்டு இறங்கிய சம்பந்தர் அப்பரடிகளுடன் அளவளாவினார்.

சீர்காழிக்கு வந்த ஞானசம்பந்தர் அங்கிருந்து அடியார் கூட்டத்துடன் வடக்கே தலப்பயணம் மேற்கொண்டார். திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கினார். காளத்தியில் கண்ணப்பரைக் கண்டு வணங்கினார்.

திருவொற்றியூரில் பதிகம் பாடி வணங்கி, மயிலையில் கபாலீச்சுரரை வணங்கி மகிழ்ந்தார். அங்கு, சிவநேசர் பெற்ற பூம்பாவை சாம்பரிலிருந்து மீண்டும் உயிர்பெற்று எழுமாறு பதிகம் பாடினார். பூம்பாவையும் உயிர்பெற்று கன்னி மாடத்திலிருந்தே இறைவன் திருவடி நீழலை அடைந்தாள்.

தில்லையை அடைந்த சம்பந்தர் தோணிபுரம் வந்து தம் இல்லம் சேர்ந்தபொழுது தந்தையாரான சிவபாதவிருதயர் அவருக்கும் மணம் செய்விக்க ஏற்பாடு செய்தார். திருமண நல்லூரில் நம்பாண்டார்நம்பியின் புதல்வியை மணமகளாக நிச்சயம் செய்தார். மணநாளன்று மந்திரங்கள் ஒலிக்க, மணமக்களை ஓமகுண்டத்தைச் சூழ்ந்து வரும்படிக் கூறினர். அதனைக் கேட்ட சம்பந்தர், அக்கினியாவது இறைவனல்லாமல் வேறு இங்கு இல்லை; யாவரும் வாருங்கள் என்று கூறி, இறைவனது சோதியுள் அனைவரையும் கலக்கச் செய்தார். தாமும் மணப்பெண்ணின் கரம்பிடித்து ஞேயவாரிதியில் ஒன்றாய்க் கலந்தருளினார்.

இனி, திருநாவுக்கரசர் துறைசையிலே வீற்றிருந்து திருப்பதிகம் பாடிச் சீர்பெற்று உய்ந்ததைக் கூறுவோம், மிதிலேச! கேட்பாயாக என்று தவமிய முனிவர் தொடர்ந்து கூறினார்.

அறுபத்திரண்டாவது
திருநாவுக்கரசர் வந்து திருப்பதிகம் பாடி
அருள்பெற்ற அத்தியாயம்

2299. பெண்ணைத் திருநல் நதிநீரால்
மிகுசீர் மருவு முனைப்பாடி
வண்ணத் திருநா டதிற்திருவாய்
மூரில் வாழுங் கொறுக்கையர்கோன்
எண்ணத் தொடுவே ளாண்மரபில்
எய்தும் புகழ னார்க்குரிய
உண்ணட் புறுகற் புடைமனைவி
உயர்மா தினியார் வயிற்றுதித்தோர். 1

2300. திலத வதியா ரெனுமாது
மருள்நீக் கியாராஞ் செல்வருமத்
தலமீ தினிற்பொற் பொடும்வளர்நாட்
தந்தை தாதை மரித்திடலும்

குலவு திலத வதியாரைக்
கொள்வே னெனமுன் குறித்திருந்த
வலன்மே வினிய கலிப்பகையு
மனர்க்காப் போரில் மாய்ந்திடலும். 2

2301. வேறு மணஞ்செய் வதற்கிசையா
தவனே புருட னெனவிரும்பி
மாறு படாநற் கற்பதனா
லெரியிற் புகுவே னெனமதிப்பக்
கூறற் கரிய மருள்நீக்கி
யாரங் கழுதன் புறுங்குணத்தாற்
தேறித் திலத வதியாரும்
சிவசின் னங்கள் மிகத்தரித்து. 3

2302. அதிகைக் கெடில வீரட்டா
னத்தின் மருவி அரற்காளாய்க்
கதியுய்த் திடுமெய்த் திருவலகு
மெழுக்குந் தார்கட் டிடும்பணியும்
பதிமெய்த் திடச்செய் தமர்ந்திடுநாட்
பின்பு பிறந்தோர் பரிவுடைய
முதிர்நற் புகழ்சேர் மருள்நீக்கி
யார்செய் முன்னை வினைத்தொடர்பால். 4

2303. சமணர் சமயந் தனிற்குறுகித்
தருமசேனர் எனும்பெ யர்பெற்று
அமணர்க் கெல்லாம் அதிபதியாய்
அமரும் நாளிற் திலதவதிக்
கமல மயில்நே ரனையாள்வீ
ரட்டர் கமலக் கழல்போற்றி
எமையாள் வோய்என் பின்னோனை
எடுத்திங் காட்கொள் ளெனப்போற்ற. 5

2304. சூலைக் கொடுநோய் வயிற்றிலுறும்
படிக்குக் கருணை சுரந்தருள
வாலக் கனல்போல் வயிற்றினிலுற்
றடர்ந்து வருத்த ஆற்றாமற்
பீலிக் கரக்குண் டிகைச் சமணர்
பேணிப் பார்த்து மீறுதலாற்
சீலத் தரும சேனிருட்
போதிற் திலத வதியார்க்கு. 6

2301. புருடன் - கணவன். 2303. பின்னோன் - நாவுக்கரசர்.

2305. உண்மை மனித ருடனிந்நோய்
ஒழித்தாண் டருள வேண்டுமெனத்
தண்மை யுடன்சொற் புகன்றனுப்பக்
கேட்டுச் சமண்பள் ளியிலெய்தேன்
நண்ணி யிவண்வந் துறிற்தீர்ந்து
நலமெய் துவனென் றுரைநவின்று
பண்மென் மொழிப்புண் ணியத்திலத
வதியார் பணிப்ப அவன்மீண்டு. 7

2306. அருக ரறியா வகைபோயங்
குரைப்ப அமண்பள் ளியைவிட்டே
ஒருமை யுடன்வந் தடிபணியக்
கண்டஞ் செழுத்தோ தித்திருநீறு
இருள்மெய் யிடர்போம் படிகொடுத்து
வீரட் டானத் திறைவர்முன்
மருள்நின் றகன்ற தம்பியரை
அழைத்துக் கொடுபோய் வணங்கெனலும். 8

2307. மாற்றார் புரம்நீ றெழநகைத்த
வரதர் திருத்தாள் மலர்பணிந்து
கூற்றா யினவா றென்றெடுத்துக்
கோதில் பதிகத் தினிற்சூலைக்கு
ஆற்றேன் அதிகைக் கெடிலவீ
ரட்டா னத்துறை அம்மானென்று
ஊற்றா னதுபோல் இருவிழிநீ
ரொழுகப் பாடும் போதுஉமைகோன். 9

2308. நாவுக் கரசே யெனவழைத்து
நவைநோய் நலியா வகையகற்றி
மேவித் தலங்கள் தொறும்நம்மைப்
பாடென் றருள மிகக்களித்துச்
சேவித் திகழ்வோர் தமைமிகவும்
புகழ்ந்து திருத்தாண் டகமோதி
ஆவித் துணையா கியதிலத
வதியார் மடத்தங் கமர்ந்திடும்நாள். 10

2309. தரும சேனர் சிவசமயஞ்
சார்ந்து நமது சமண்சமயப்
பெருமை யழித்தா ரெனக்கொடும்பா
டிவிபுத் திரத்துப் பெருஞ்சமணர்

திருகு மனத்தி னொடும்போய்ப்பல்
லவமன் னவன்பாற் செப்பொண்ணாப்
புரைகொள் ளவ்வஞ் சனைபேசி
யவனுத் தாரப் புணர்ப்பதனால். 11

2310. அரசன் மனுடர் தமையனுப்பி
அதிகைத் திருவீ ரட்டமுறும்
ஒருமைத் திருநா வுக்கரசை
அழைத்துப் போய்ப்பல் லவனூரிற்
பருகும் அனல்நீற் றறையிலடைத்து
எழுநாட் கழித்துப் பார்த்திடலும்
பொருவில் வசந்த மண்டபத்தி
லிருந்து வருவார் போற்றோன்ற. 12

2311. கண்டு சமணர் பல்லவற்கு
நமது சமயக் கட்டிதென்று
விண்டு மீண்டுங் கொடியவிட
மூட்ட விமல ருயிர்புரத்தற்கு
உண்ட விடம்போ லெமக்கிதுவும்
அமுதா மென்றங் குண்டிடக் கண்டு
அண்டற் கரிய உனதுமத
கரிமுன் போடென் றவருரைப்ப. 13

2312. அவ்வா றியானை முன்பிருத்த
அசல மெனவந் தடற்களிறு
மெய்வாய் மையிற்சேர் வாகீசர்
பதத்திற் தாழ்ந்து மிகச்சூழ்ந்து
பொய்வாய் மையினாற் கெடுஞ்சமணர்
பொன்ற மிதித்துத் தலையிடறி
ஒவ்வா தெழுந்தோ டினர்போக
நின்றோர் தமைக்கொன் றுலவுதலும். 14

2313. இதுவுஞ் சமண்மந் திரத்துறுதி
யென்று பிழைத்த அமணரெலாம்
மதியி னுறுதி யில்லாப்பல்
லவனுக் குரைத்து வளர்கற்றூண்
அதனிற் பாசத் துடன்பூட்டி
ஆழி நடுவிற் புகவிடுத்துக்
கதுமென் றகன்று வந்திடலுங்
கருணைத் திருநா வுக்கரசர். 15

2314. கற்றுணைப் பூட்டி யாழ்ந்த கடலினிற் பாய்ச்சி னாலும்
நற்றுணை நமச்சி வாய மேயென நவின்று பாடப்
பற்றற விட்டுக் கற்றுண் தெப்பமாய் மிதப்பப் பண்போடு
உற்றதின் மேவி நற்பா திரிப்புலி யூரின் பாங்கர். 16

2315. கடற்கரை யதனிற் சேரக் கண்டுமெய்த் தொண்ட ரெல்லாம்
மிடற்றுறு கறையி னான்சீர் விளம்பியுட் களித்துச் சூழ
மடற்றரு மலரின் மாரி வானவர் பொழியத் தூண்விட்டு
அடற்பெரு விடையார்மேவும் பாதிரிப் புலியூர்க்கன்பாய். 17

2316. வாக்கின்மன் னவர்வந் தண்ணல் மலரடி பணிந்துபாடித்
தேக்கம ழதிகை வீரட் டானநன் னகரிற் சென்று
பூக்கமழ் கொன்றை யார்தம் பொன்னடி தொழுது பாடி
ஆக்கமோ டிருக்கு மேன்மை பல்லவ னறிந்து வந்து. 18

2317. அறிவிலாச் சமணர் சொற்கேட் டவர்புரிந் தடியேன் கெட்டேன்
பிறிவிலாக் கருணை யாலென் பிழைபொறுத் தருள்வீ ரென்று
நறுமலர்ப் பாதம் போற்ற நாவர சவனை நோக்கி
மறிமலர்க் கரத்தார்க் கன்ப னாக்கிநீ றளிப்ப வாங்கி. 19

2318. பல்லவ னுடல மெங்கும் பரிவுடன் பூசிச் சைவ
நல்லெழில் பூண்டு வீரட் டத்துறு நாதர் பொற்றாள்
அல்லொடு பகலும் போற்றி அருகர்பள் ளியையி டித்து
வல்லைநற் பரமர் கோயிற் திருப்பணி மகிழ்ந்து செய்து. 20

2319. மெய்ப்பரன் தனக்கா ளாகி அமர்ந்திட வீரட் டானத்து
அப்புறு சடையி னார்மெய் யருள்விடை பெற்றுப் போந்து
செப்புதற் கரிய மேன்மைத் திருநாவுக் கரசர் நீல
மைப்படி கண்டர் வாழ்தூங் கானைமா டத்திற் சென்று. 21

2320. பாலலோ சனர்பொற் பாதம் பணிந்துமுன் நிற்கும் போது
சூலமும் விடையும் பூதங் கொணர்ந்துதோட் புறத்திற் சாத்தச்
சாலவு மகிழ்ந்து பாடித் தலங்களெங் கணுபோய்த் தாழ்ந்து
மாலயற் கரியா ராடு மன்றமர் தில்லை மேவி. 22

2321. அண்ணலா னந்த நிர்த்தத் தமுதமுண் டருஞ்சொல் ஞானப்
பண்ணமர் பதிகம் பாடிப் பரனருள் விடைபெற் றப்பால்
நண்ணிவெங் குருவில் வந்து ஞானசம் பந்தர் தம்மைக்
கண்ணுறத் தரிசித் தன்பாய்க் கலந்துளங் களித்துப் போற்றி. 23

2322. இருவருந் தோணி மேவும் இன்பரைப் பணிந்து பாடிப்
பொருவிலா உமைமா தூட்டும் போனக முண்ட பிள்ளை
அருள்விடை பெற்று நாவுக் கரசரிப் பாற்போந் தங்கு
மருவுநற் தலங்க ளெல்லாம் வணங்கிநற் பதிகம் பாடி. 24

2323. திருநல்லூர்க் கெய்தி யண்ணல் சேவடி சூடப் பெற்றுப்
பொருவிலாத் திங்க ளூரப் பூதியார் மனையிற் சென்று
பரிவுகண் டிருப்ப வூட்டும் பரிகலக் கதலி கொண்டு
வருவதற் கெய்து நாவுக் கரசெனு மகவைப் பாம்பு. 25

2324. கவ்விட விடமேற் கொண்டு கதலியீந் தகத்தின் மாய
அவ்வகை தெரியா வாறங் கடக்கிஅப் பூதி யாரும்
செவ்விய மனைவி யாரும் திகழ்விருந் தருத்தும் போது
பெய்விட மதனால் மாய்ந்த பிள்ளைதன் செய்தி கேட்டு. 26

2325. பெய்விடந் தீர்ந்து பிள்ளை பிழைத்திடப் பதிகம் பாடி
அருமையாய் அவர்க ளோடும் அமுதுண்டப் பூதி யாருக்கு
உரிமைநண் பருளி ஆரூர்க் காதிரை யுறுநாட் சென்று
திருமலி விடங்க ராசர் சேவடி பணிந்து மீண்டு. 27

வேறு

2326. பூம்புக லூரிற் சென்றுசம்பந்த ரொடும் பொற்பார்
பாம்பணி வேணிப் பரமர் மலர்த்தாள் பணிந்தேத்தி
மேம்படு பூஞ்சோ லைத்திரு வீழி மிழலைக்கண்
தேம்படு தண்டார்க் காழிமன் னோடுஞ் சென்றெய்தி. 28

2327. ஆங்கமர் வீழிச் சங்கரர் பொன்னா ரடிபோற்றிப்
பாங்குறு தொண்டர்க் கன்ன மருத்தும் படிக்காசு
வாங்கி எவர்க்கும் வற்கடந் தீர்ந்தம் புவிவாழ்வுற்று
ஓங்கிடு காறும் அமுதிடு வித்தன் பொடுமேவி. 29

2328. வேத வனத்திற் சென்றிடு வோரும் விடையேறுஞ்
சோதி மலர்த்தாள் தாழ்ந்தினி தாஞ்சொற் பதிகங்கள்
ஆதர வாகப் பாடிமுன் வேத மடைத்திட்ட
ஓதரு செம்பொற் கதவு திறத்தற் கியல்போடும். 30

2329. சீர்மிகு நாவுக் கரசு படித்துத் திறப்பிப்பத்
தார்மலி தோட்சம் பந்த ரடைப்பத் தமிழ்பாடிப்
பார்மகிழ்ந் தேத்தப் பண்பொடு மேவும் பருவத்திற்
கார்மலி சோலைத் தென்மதுரைக்கா வலன்தேவி. 31

2327. வற்கடம் - பஞ்சம். 2328. வேதவனம் - திருமறைக்காடு.

2330. ஏவலி னால்மந் திரிவிடு வோர்வந் திருதாள் மீது
ஆவ லொடும்வீழ்ந் தார்சமண் டீங்கங் கறையக்கேட்டு
ஓவுத லில்லாச் சீர்பெறு கூடற் குறவேண்டித்
தாவறு வாகீ சர்க்கிசை மாற்றஞ் சாற்றிப்பின். 32

2331. தொண்ட ரொடுஞ்சம் பந்தர் நடப்பச் சொல்மன்னர்
அண்டர் பிரான்தன் மைந்த ரனுப்பும் அருள்பெற்றுத்
தண்டமி ழாற்சொற் பதிக முரைத்துத் தலமெங்கும்
கண்டு பணிந்தா வடுதுறை மேவிக் கனிவோடும். 33

2332. அத்த ருலாவும் வீதியெ லாஞ்சூழ்ந் தழகாகப்
பத்தி யுடன்மெய்த் திருவுழ வாரப் பணிசெய்து
நித்தில மென்னக் கண்மழை பெய்ய நிறையன்பு
மொய்த்தெழல் போலும் புளக மெழச்சொன் மொழிவிம்ம. 34

2333. உள்ளுரு கச்சென் றோங்கு திருக்கோ புரந்தாழ்ந்து
புள்ளமர் போதிக் காவொடு மம்பொற் பூங்கோயில்
மெள்ள வலஞ்செய் தெய்தியுள் ளார்வம் விரைவாய்முன்
தள்ள விழுந்தட் டாங்கபஞ் சாங்கந் தரைமேவ. 35

2334. வண்டமிழ் நாவுக் கரசுமா சில்லா மணிபாதம்
கண்டு பணிந்தா னந்தவெள் ளத்திற் கரைகாணா
தெண்டிசை கீழ்மே லெங்குமொன் றாம்பே ரின்புற்றுத்
தண்டமி ழின்பச் சொற்பதி கங்கள் தயவோடும். 36

வேறு

2335. குறுந்தொகைப் பதிக மொன்றும் குளிர்ந்தநே ரிசையி ரண்டும்
உறுந்திருத் தாண்ட கச்சீர்ப் பதிகமோ ரிரண்டும் ஓதித்
திறங்கொளா யிரம்பொன் சம்பந் தர்க்கருள் சிறப்பும் பாடிப்
பெறுந்திர வியப்பொற் தியாகர் பேரருள் மிகவும் பெற்று. 37

2336. திருவருட் துறைம டத்துட் சிலபக லிருந்து மாசில்
அருள்தரு மணியைப் போற்றி அருளுமெய் விடைபெற்
றப்பால்
மருமலி பொழில்சூழ் இன்ப வடதளி யதனிற் சார்ந்து
கரவுறும் அமண்ம றைத்த கடவுளை வெளிசெய் தேத்தி. 38

2337. கதிதரு திருப்பைஞ் ஞீலிக் கடிநகர்க் கெய்தி அண்ணல்
பொதியமு தெதிர்கொண் டீயப் புனலொடு முண்டு பண்சேர்
பதிகமங் குரைத்துப் போந்து பண்புறு தொண்டை நாட்டின்
முதிர்திருத் தலங்களெல்லா முன்பணிந் தேத்திப் பாடி. 39

2338. கண்ணப்ப குறுங்கா ளத்திக் கடவுளைக் கண்டு போற்றிப்
புண்ணியக்கயிலை சார்ந்து போற்றுதற் கன்பு பொங்க
விண்ணவர்தொழும்பொற் பார்ந்ததிருப்பருப் பதத்துள்மேவி
அண்ணலைப் பணிந்து போந்து தெலுங்குகன் னடங்கண்
டப்பால். 40

2339. மாளுவம் இலாட பூமி மத்திமம் பத்தி ரஞ்சேர்ந்து
ஆழுநீர்க் கங்கை சூழும் காசியங் கணரைப் போற்றிக்
கோளுறும் வடபால் மிக்க கொடுஞ்சுரக் காடு நண்ணிக்
காமுறு கால்கள் தேயக் கைகளா லுந்திப் போந்து. 41

2340. செங்கர மதுவுந் தேயத் திருவுர மதனா லுந்தி
பங்குருண் டயர்வு தோன்றக் கிடந்திடும் பொழுதி லங்கோர்
துங்கமா முனிபோ லண்ணல் தோன்றியுள் ளுறுதி கண்டு
பொங்குமால் விடைமேற் காட்சி புரிந்திடப் புனித மேவி. 42

2341. அண்ணலே! எனையாட் கொண்ட அமுதமே! உனது
கோலம்
கண்ணினாற் கயிலை மேவிக் காணுமா றருள்செய் என்னப்
புண்ணிய னங்கோர் பொய்கை புக்கிடப் பணித்தை யாற்றிற்
கண்ணக லொருத டாகத் தெழுந்திடக் கருணை செய்து. 43

2342. திருவையா றெல்லை முற்றுந் திருக்கையி லாய மாக
மருமலர்க் குழலி யோடு மகிழ்ந்துவீற் றிருக்குங் காட்சி
அருள்மிகும் அப்பர் காணும் படிக்கருள் செய்யக் கண்டு
பெருகுமன் பொடுதாழ்ந் தின்பப் பெருங்கட லதனில்
மூழ்கி. 44

2343. அங்குள சராச ரங்கள் அனைத்தும்நற் சிவமாய்த் தோற்றல்
கண்களி கூரக் கண்டு கண்டறி யாத காட்சி
இங்குநான் பெற்றே னென்றங் கெழுந்திருப் பதிகம் பாடி
பொங்குமுட் களிப்பி னோடும் போற்றிடத் திருவை யாறு. 45

2344. பண்டுபோற் தோற்றக் கண்டு பரமனைப் பணிந்து பாடி
அண்டநா யகனா ரின்ப அருள்விடை பெற்றுப் போந்து
துண்டவெண் மதிசேர் வேணிப் பரமர்பூந் துருத்தி மேவித்
தண்டமிழ்ப் பதிகம் பாடித் தாணுவைப் போற்றி யங்கு. 46

2345. மாமட மொன்று செய்து வாக்கர சிருக்கும் நாளில்
சீர்மலி பாண்டி நாட்டிற் சிவநெறி வளர்த்தோர் மீண்டு
பார்மகிழ்ந் தேத்தத் தோன்றும் பண்புணர்ந் தப்பர்முன்போய்த்
தாமநித் திலயா னக்கொம் பொருபுறந் தாங்கக் கண்டு. 47

2339. காசியங்கணர் - காசி விசுவநாதர்.

2346. சம்பந்தர் சிவிகை விட்டுத் தரணிமே லிழிந்து போற்றச்
செம்பொனார்கழற்பொற் றாள்மேற் திருநாவுக் கரசர் வீழ்ந்து
பண்பொடு முகமன் பேசிப் பாண்டிமா தேவி யன்பு
நண்புடன் சொல்லக் கேட்டு ஞானபோ னகரோ டெய்தி. 48

2347. திருத்துருத் தியில்வா ழீசர் சேவடி பணிந்து பிள்ளை
அருத்தியோ டனுப்பப் போந்து பாண்டிநா டதனில் மேவி
மருத்தகு மிதழிசூடு மதுரைநா யகரைப் போற்றிக்
கருத்துறப் பணியு மின்பக் கைதவ னுடனே மற்றும். 49

2348. அங்குள பதிக ளெல்லாஞ் சென்றக மகிழ்ந்து பாடி
மங்கையர்க் கரசி யார்க்கு மன்னவன் தனக்கும் வாய்மை
தங்குமந் திரியா ருக்குந் தண்ணளி புரிந்து போக்கிப்
பொங்குசோ ணாட்டின் மீண்டுத் தலம்பல போற்றி வந்து. 50

2349. பூம்புக லூரின் மேவிப் பொய்ப்பாசம் போக்கு தற்கா
வாம்பணி விடைகள் செய்தங் கலகுறு குப்பை யெல்லாம்
மேம்படு மணியும் பொன்னு மாயுற விருப்பு றாமற்
தீம்புனற் கரையில் வாரிச் சிந்தியங் கிருக்கும் நாளில். 51

2350. வானகத் தரம்பை மாதர் வள்ளல்தன் னருளாற் போந்து
கானநல் லிசைகள் பாடிக் கலபமா மயில்போ லாடி
மேனிமேற் தீண்டு மாபோல் மிகவுமா மயக்கஞ் செய்தும்
ஊனமொன் றில்லா ருள்ளத் துறுதிகண் டொதுங்கிப் போக.
52

2351. அண்ணலா ரடியுள் மேவும் சமயமீ தென்ற றிந்து
புண்ணியா உன்ன டிக்கே போதுகின் றேனியா னென்று
பண்ணமர் பதிகம் பாடிப் பணிந்துவா கீசர் சோதி
வண்ணமாம் புகலூர் ஈசர் மலரடி நீழல் சேர்ந்தார். 53

அறுபத்திரண்டாவது
திருநாவுக்கரசர் வந்து திருப்பதிகம் பாடி அருள்பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 2351

திருச்சிற்றம்பலம்

62. திருநாவுக்கரசர் வந்து திருப்பதிகம் பாடி அருள்பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

தென்னகத்தில் பெண்ணை யாற்றால் வளம்பெற்ற திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாய்மூரில் வாழ்கின்ற கொறுக்கையர் குடியின் தலைவரானவரும் வேளாண் மரபில் உதித்தவருமான புகழனார் என்பவருக்கும் மாதினியார் என்னும் மங்கை நல்லாளுக்கும் பிறந்தவர்கள் திலகவதியார் மற்றும் அவருடைய தம்பியான மருள்நீக்கியார் ஆகிய இருவருமாவர். பிள்ளைகள் வளர்ந்துவரும் காலத்தில் தாய் தந்தை இருவரும் இறந்துவிட்டனர். திலகவதியாரை மணப்பதற்காக நிச்சயித்திருந்த கலிப்பகையாரும் போரிலே இறந்துவிட்டார். துயரத்தில் ஆழ்ந்திருந்த திலகவதியார் வேறு ஒருவரையும் மணக்க விரும்பாது தீயில் புகுந்து உயிரைவிடத் துணிந்தார். இதையறிந்த தம்பியார் மருணீக்கியார் துன்பத்தால் அழுதார். தம்பிக்காக உயிர்வாழ முடிவு செய்த திலகவதியார் சிவச்சின்னங்களைத் தரித்து, கெடிலவீரட்டானத்து இறைவனுக்கு அடிமையாகிச் சரியைத் தொழிலை மேற்கொண்டார்.

மருணீக்கியார் முன்வினைத் தொடர்பால், சமய சமயத்தினைச் சேர்ந்து அங்குத் தருமசேனர் என்ற பெயருடன் விளங்கி வந்தது தமக்கையாகிய திலகவதியாருக்குப் பிடிக்க வில்லை. இறைவனிடத்திலே முறையிட்டார். தம்பியை ஆட்கொள்ளுமாறு வேண்டினார். மருணீக்கியாருக்குச் சூலைநோயை உண்டாக்கினார். சமணர்களால் அந்த நோயைப் போக்க முடியவில்லை. தம்பி தமக்கையிடமே தஞ்சமடைந்தார். திருநீறு தந்து, ஐந்தெழுத்து மந்திரம் ஓதிய திலகவதியார் தருமசேனரை வீரட்டானத்து இறைவனிடம் ஆற்றுப்படுத்தினார். 'கூற்றாயினவாறு' என்னும் திருப்பதிகம் பாடிய மருணீக்கியாரின் வேண்டுதலை ஏற்ற இறைவன் அவரை ஆட்கொண்டார். நாவுக்கரசரான தருமசேனர் இறைவனுடைய கட்டளையின் படியே தலங்கள்தோறும் சென்று பாடினார்.

தருமசேனர் சமண சமயத்தை விடுத்துச் சைவ சமயத்திலே ஈடுபட்டதைப் பொறுக்கவியலாத சமணர்கள் பல்லவ மன்னனிடம் முறையிட்டனர். பல்லவ மன்னன் திருநாவுக்கரசரை நெருப்பறையில் வைத்தும், நஞ்சூட்டியும், யானையைக் கொண்டு மிதிக்கச் செய்தும், கல்லில் பிணைத்துக் கடலில் எறிந்தும் இடர்கள் பல செய்தான். இவை அனைத்திலிருந்தும்

மீண்ட நாவுக்கரசர் அதிகை வீரட்டான இறைவனைப் பாடுவதிலேயே மனமகிழ்ந்தார். பல்லவ மன்னனும் தன்னுடைய அறியாமையையும் தவறையும் உணர்ந்தான். சமணர்கள் செய்த கொடிய செயல்களுக்காக மன்னிக்க வேண்டினான். நாவுக்கரசர் காட்டிய சைவநெறியில் திளைத்தான். சமணப் பள்ளியை இடித்து, இறைவனது கோயில் திருப்பணியை மகிழ்வுடன் செய்து வந்தான்.

திருநாவுக்கரசர் தூங்கானை மாடத்துக்குச் சென்றபொழுது, குலத்தையும் இடபத்தையும் பூதமானது கொண்டு வந்து அவருடைய தோளில் சாத்தியது. அவரும் பதிகம் பாடினார். பின்பு, பல சிவதலங்களையும் தரிசித்துவிட்டுச் சிதம்பரம் சேர்ந்தார். நடராசரின் ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்த பின்பு சீர்காழியை வந்தடைந்தனர். அங்கு ஞானசம்பந்தரிடம் விடைபெற்றுப் போய் பல தலங்களையும் தரிசித்தார். நல்லூரிலே சிவபிரானால் திருவடி சூட்டப் பெற்றார்.

திங்களூரிலுள்ள அப்பூதியடிகளாரின் இல்லத்திற்கு நாவுக்கரசர் சென்றபோது, அப்பூதியின் பிள்ளையைப் பாம்பு கடித்து அவன் இறந்ததையறிந்து வாகீசர் பதிகம்பாடி அவன் உயிர்பெறச் செய்தார். பின்பு, திருவாரூர், சீர்காழி போன்ற தலங்கள் சென்று இறைவனை வணங்கினார். நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருவீழிமிழலையை அடைந் திருந்த நாளில் அங்குப் பஞ்சம் தோன்றியது. அடியார்கட்கு அன்னமூட்டு வதற்காக இறைவன் அளித்த படிக்காசு பெற்று, எல்லாருக்கும் அமுதூட்டி, பஞ்சம் தீர்த்தனர். அங்கிருந்து திருமறைக்காடு சென்று, செம்பொற்கதவினைத் திறக்கப் பதிகம் பாடிய நாவுக்கரசர் பல தலங்களுக்கும் சென்றபின்னர் திருவாவடு துறையை வந்தடைந்தனர்.

மாசிலாமணிப் பெருமானின் திருவடிகளைப் பணிந்து பேரின்பம் அடைந்த நாவுக்கரசர், குறுந்தொகைப் பதிகம் ஒன்றும், நேரிசையில் இரண்டும், தாண்டகம் இரண்டும் ஆக இப்பதிகங்களைப் பாடினார். ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஆயிரம் பொன் அருளிய சிறப்பையும் பாடினார். திருவருட்டுறை மடத்தில் சில நாளிருந்து, வடதளியிற்சென்று அமணர்களால் மறைக்கப்பட்ட பெருமானை வெளியுறச்செய்து துதித்தார். பின்பு, திருப்பைஞ்ஞீலியை அடைந்தார். அங்கு இறைவன் கட்டுச்சோறு கொண்டு வந்து கொடுக்க அதை உண்டு பதிகங்களைப் பாடினார்.

தொண்டை நாட்டுத் தலங்களைத் தரிசித்த நாவுக்கரசர் திருக்காளத்தி நாதரையும் வணங்கி மகிழ்ந்தார். கயிலைக்குப் போகும் எண்ணங் கொண்டார். திருப்பருப்பதத்தை அடைந்து தெலுங்கு, கன்னடம் ஆகிய இடங்களைக் கடந்து போய் பூமிக்கு இலாடத்தானமாகிய மாளுவத்தையும், மத்திம ஸ்தானமாகிய பத்திரத்தையும் அடைந்து, கங்கை சூழும் காசியில் வீற்றிருக்கும் விசுவநாதரையும் தரிசித்தார். பின்பு காடுகளைக் கடந்து கால்கள் தேய, கைகளால் ஊன்றிச் சென்றார். மேலும், கரங்களும் தேய மார்பினால் நீந்திச் சென்றதனால் அயர்ச்சியுற்றார். அப்போது அங்கு இறைவன் ஒரு முனிவரைப் போன்று தோன்றினான். வாகீசரது மனவுறுதியைப் பார்த்து இடபவாகனத்தின் மீது காட்சியளித்தார். அக்காட்சியைத் தரிசித்த வாகீசர் அண்ணலே! என்னை ஆட்கொண்ட அமுதமே! உன்னுடைய திருக்கோலத்தை அடியேனுடைய கண்ணினால் திருக்கயிலையை அடைந்து தரிசிக்குமாறு அருள்வீராக! என்று வேண்டினார். அவ்வாறே இறைவனும் அவ்விடத்திலே உள்ள ஒரு குளத்தில் மூழ்கும்படிக் கட்டளையிட்டார். பின்பு திருவையாற்றில் உள்ள ஒரு தடாகத்தில் எழுந்திருக்கும் படியாகச் செய்தருளினார்.

இறைவன் ஆணைப்படியே திருவையாற்றின் எல்லை முழுவதும் திருக்கயிலாயமானது, இறைவன் உமையுடன் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கின்ற காட்சியை அப்பர் காணும்படி யாகத் திருவருள் செய்தார். அவரும் இன்பக் கடலில் மூழ்கி, ''கண்டறியாதன கண்டேன்'' என்று திருவையாற்றில் திருப்பதிகம் பாடி உள்ளம் மகிழ்ந்தார். பின்பு, பூந்துருத்தியை அடைந்து அங்கு ஒரு திருமடம் அமைத்து இறைபணி செய்து வந்தார். அப்போது, பாண்டி நாட்டிலே சிவநெறியை வளர்த்து மீண்டும் ஞானசம்பந்தர் திரும்பி வருவதை அறிந்த அப்பரடிகள் முன்பே சென்று அவரது சிவிகை தாங்கினார். இதை உணர்ந்த சம்பந்தர் சிவிகையைவிட்டு இறங்கி வாகீசரை வணங்கினார். இருவரும் திருத்துருத்தியை அடைந்து மகிழ்ந்தனர்.

ஞானசம்பந்தரின் விருப்பப்படியே வாகீசர் பாண்டி நாடு சென்றார். அங்குள்ள சிவதலங்களையெல்லாம் தரிசித்துப் பதிகங்கள் பல பாடினார். மங்கையர்க்கரசியார், சுந்தரபாண்டியன், குலச்சிறையார் ஆகியோருக்கு அருள் புரிந்தார். சோழநாடு திரும்பிய அப்பரடிகள் புகலூரிலே உழவாரப் பணிவிடை செய்து வந்தார். அப்போது, அங்கு அலகுறுகிற குப்பைகளையெல்லாம்

மணியும் பொன்னுமாக இறைவனின் அருளால் காட்சி அளித்தன. அவற்றை விரும்பாத அப்பரடிகள் ஆற்றிலே வீசி எறிந்தார். தேவலோக அரம்பையர் இசை பாடியும் ஆடியும் வந்து, அப்பரது திருமேனியைத் தீண்டுவார் போல மயக்கிப் பார்த்தனர். எதையும் பொருட்படுத்தாத அப்பரடிகளின் மனவுறுதியைக் கண்டு அவ்வரம்பையரும் ஒதுங்கிச் சென்றனர். இறைவன் திருவடி மட்டிலுமே நாட்டம் கொண்ட அப்பரடிகள், "புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன்" என்ற திருப்பதிகம் பாடி புகலூர் இறைவன் திருவடி நீழலைச் சேர்ந்து திருவருள் பெற்றார்.

அறுபத்து மூன்றாவது

சுந்தரர் திருப்பதிகம் ஓதித் தரிசித்து அருள் பெற்ற அத்தியாயம்

2352. திருநாவுக் கரசர்திரு வாவடுதண்
துறைமருவிச் சிவனைப் பாடிப்
பரஞானக் கதிமருவுந் திறமுரைத்தோம்
இனிமிதுல பணிவன் தொண்டர்
அருள்மேவுந் திரவியப்பொற் தியாகர்தமைத்
திருவாரூர் அமருங் கோலம்
பெருகார்வத் துடன்பணிந்துய் வகைகேளென்
றருள்முனிவன் பேச லுற்றான். 1

2353. முனைப்பாடித் திருநாட்டிற் திருநாவ
லூர்ச்சடையர் மொழிதப் பாநல்
மனைத்தேவி யாகுமிசை ஞானியார்
திருவயிற்றில் வையம் போற்றத்
தனிப்போதத் திருவுருவா யுற்பவித்தோ
ராதிசைவத் தலைவ ரின்பச்
சினப்போர்வெள் விடையார்க்கன் பார்நம்பி
யாரூரர் செல்வத் தோடும். 2

2354. முன்புவிளை யாடுமெழில் கண்டுநர
சிங்கமுனை யரசர் மோகித்து
அன்பினொடுந் தாய்தந்தை சம்மதிப்ப
மகன்மைக்கொண் டதிகச் சீர்செய்து

2352. வன்தொண்டர் - சுந்தரர்.

இன்பமுற வளர்த்திடுநாள் மணப்பருவம்
எய்துதலும் ஈன்றோர் புத்தூர்ப்
பொன்பொருவு சடங்கவிதன் மகளைமகட்
பேசிமணப் பொலிவு செய்ய. 3

2355. புரவிமேற் கொண்டுகிளை யொடும்போந்து
வலமாய்ப்புத் தூரிற் சென்று
திருமருவு கலியாணச் சடங்குபுரிந்
தமர்பொழுது தேவி பாகம்
மருவுதிருக் கயிலையரன் கிழவுருவாய்ச்
சழங்கலுடை மறையோ னாகி
பெருகுமணப் பந்தரில்வந் தென்னடிமை
இவனென்று பேசி யார்த்து. 4

2356. வழக்குரைத்து மணத்தைமறித் திடலும்நம்பி
யாரூரர் மறையோன் தன்னைக்
கிழப்பருவப் பித்தவனோ இவனென்று
புகலுமுரை கேட்டுத் துள்ளி
இளப்பமுரைத் திடுவதென்னோ அடிமைமுறி
என்னிடத்தி லிருக்க நீயென்று
அழற்கண்மறைத் தெய்துமர னுரைப்பவெழுந்து
ஆவணங்காட் டென்றங் கோடி. 5

2357. தொடர்ந்துவன்மை யாற்பறித்து முறிகீறத்
தொன்மைமுறி காட்டி யுன்னை
அடிமையெனச் சாதிப்பே னென்றுவெண்ணை
நல்லூர்வாழ் அவைமுன் பெய்தித்
திடமுறுவே தியப்பரமர் முறையிடஆ
ரூரரும்பின் சென்று நிற்ப
விடமருவு சபையிலுறும் பெரியோர்கள்
இருவரின்வாய் மொழியுங் கேட்டு. 6

2358. எவ்விதமிவ் வாரூரர் உமக்கடிமை
சொல்லுமென இவனை ஈன்ற
செவ்வியநற் றந்தையின்தன் தந்தைமுறி
உண்டென்று செப்பக் கேட்ட
சைவமறைப் பூசுரர்கள் எழுத்தொப்பு
நேர்பார்த்துச் சரியென் றெண்ணி
மெய்வகையீர் உமதுமனை இவ்வூரிற்
காட்டுமென விரைந்து சென்று. 7

2355. சழங்கு - முதுமைத் தளர்ச்சி.

2359. அருட்துறைக்கோ யிலிற்புகுந்து கரந்திடப்பின்
பெய்திடுமா ரூர ருள்ள
மருட்திறந்தீர்ந் திறைவர்நமை வலிந்திடஆட்
கொண்டதென மதித்துக் கண்ணீர்ச்
சுரப்பொழுக உடற்புளக முறத்தொழும்போது
அண்ணலெதிர் தோன்றி நின்று
பொருத்தமுறுந் திருநாமம் வன்தொண்டர்
எனக்கூவிப் புகல லுற்றார். 8

2360. தமிழ்ப்பதிகம் நாமிருக்கும் தலங்கள்தோறும்
பாடென்று சாற்றி யிப்போது
அமைத்திடுபா மாலையினிற் பித்தாவென்
றெமைப்பாடென் றறையக் கேட்டு
நமக்கரித்தன் பொடும்பித்தா பிறைசூடீ
யெனப்பாடி நாவ லூரர்
இமைப்பொழுது மறவாமல் புளம்பெருகப்
பற்பலகால் இறைஞ்சி வீழ்ந்து. 9

2361. விடைகொண்டு திருநாவ லூர்தொழுது
திருவதிகை மேவாது அப்பர்
அடிமைபுரி தலம்மிதியேன் எனச்சித்த
வடமடஞ்சேர்ந் தங்கோர் பக்கம்
நடமருவும் வீரட்டர் பதம்நினைந்து
துயில்பொழுது நாதர் சென்று
அடிமலர்சென் னியிற்சூட அறிந்தெழுந்து
திருப்பதிகம் அன்பாற் பாடி. 10

2362. பலபதியும் பணிந்துதில்லை நகர்ச்சார்ந்து
குஞ்சிதப்பொற் பாதங் கண்டு
நலமருவும் ஆனந்த வெள்ளத்துட்
திளைத்தலரும் நன்மை பெற்று
நிலவுபுகழ் ஆரூர்க்கு வாவென்னும்
மொழிகேட்டு நிறையன் போடும்
தலமெதிர்கொண் டிடத்திருவா ரூர்சேர்ந்து
வன்மீகர் சரணம் போற்றி. 11

2363. வீதிவிடங் கப்பெருமான் முன்சென்று
தொழும்பொழுது விமலர் நோக்கிக்
கோதில்லா மணக்கோலங் கொண்டுவிளை
யாடென்று கூறக் கேட்டுப்

போதலர்த்தா ரொடுசாந்தம் பூணணிந்து
நாடொறும்போய்ப் போற்றும் நாளில்
ஏதமிலாக் கயிலைநந்த வனத்தின்மயல்
கொடுத்தகம லினியார் வந்து. 12

2364. பரவையா ரெனும்நாமம் கொண்டாரூர்
தனிற்பிறந்து பதுமை போலும்
பெருகுமெழி லுடன்வளர்ந்து பருவமுறுங்
காலத்திற் பிரான்முன் சென்று
திருநடனம் புரிந்துதொழு தேகும்போது
ஆரூரர் திருக்கண் நோக்கம்
மருவுதலும் அடங்காத மயல்கொண்டு
வருந்திடஅும் மங்கை தானும். 13

2365. எதிர்நோக்குற் றகமயங்கி மனைபுகுந்து
மிகுதுயருற் றிருப்பக் கண்டு
கதுமெனப்புற் றிடம்மருவுங் கடவுளவ் வூர்த்
தலத்தார்தங் கனவிற் சென்று
மதுமலர்ப்பூங் குழற்பரவை தனைநாவ
லூரருக்கு வதுவை செய்வீர்
இதுநமதாக் கினையென்று சொலக்கேட்டு
நல்முகூர்த்த மெய்தும் நாளில். 14

2366. மிகுந்தசிறப் பொடும்வதுவை மணம்புரிந்து
கொடுப்பவருள் மிகும்வன் தொண்டர்
பகிர்ந்தவிழை நூல்மருங்குற் பரவைபுணர்
பேரின்பம் பலகாற் றுய்த்துத்
தகும்பரிசால் விளையாடி மகிழ்ந்திடும்நாள்
தனிலொருநாட் டவர்கண் மேவித்
தொகுத்திருத்தே வாசிரிய மண்டபங்கண்
டிறைஞ்சியிவர் துணைத்தாட் காளாய். 15

2367. என்றுதொழப் பெறுவேனென் றுள்ளுருகித்
தியாகர்முன்சென் றிறைஞ்சும்போது
குன்றவில்லி யாரவர்தங் குறிப்புணர்ந்து
மறுவிதிருக் கூட்டத் துண்மை
தன்றிருவா யாற்புகழ்ந்து பேசித்தே
வாசிரியந் தனிற்போய்த் தாழ்ந்து
நின்றுதனித் தனியடிமை யானெனநீ
பாடென்று நிகழ்த்திப் பின்னும். 16

2365. ஆக்கினை - கட்டளை.

2368. தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும்
அடியனெனச் செப்பென் றோத
வல்லைபோய் பணிந்துதே வாசிரியத்
துறுமன்பர் மகிழ வள்ளல்
சொல்லுமொழி முன்வைத்துத் திருத்தொண்டத்
தொகைப்பதிகந் துதித்துப் பாடி
எல்லையிலாத் திருக்கூட்டத் தடியரருள்
பெற்றுமகிழ்ந் திருக்கும் நாளில். 17

2369. குண்டையூர்க் கிழவரர னருளினாற்
தன்பதிநெற் குவிப்பப் பெற்றுத்
தண்டமிழ்வன் தொண்டர்க்கீந் தருளவெடுப்
பதற்காளுந் தலைவர் தாமே
தொண்டருக்கா விடுவரெனக் கோளிலிநா
யகர்பாதந் துதித்துப் பாடி
மண்டுபுகழ்ச் சுந்தரரா ரூர்மருவ
அன்றிரவு வளர்நெற் குன்றை. 18

2370. பூதங்க ளரனருளாற் சுமந்துவந்தா
ரூர்முழுதும் பொலிவு தோன்றப்
பேதங்கொள் நெற்பிறங்கல் குவித்தேகக்
கண்டுதொண்டர் பிரிய மெய்தித்
தாதொன்றுங் குழற்பரவைக் கீயஅவ
ரவர்மனைமுன் தங்கு நெற்போர்
ஏதங்க ளறஎவருங் கொள்கவெனப்
பறையறைவித் திடுதல் கேட்டு. 19

2371. ஆரூர்வாழ் வோர்மனைநெல் அவரவர்கொண்
டிடப்பரவை யாரும் பெற்றுச்
சீருரும் பெருமகிழ்வோ டிருக்கும்நாட்
கோட்புலியார் சிறந்து வாழும்
நீரூர்நன் னதிபுடைசூழ் நாட்டி யத்தான்
குடிக்கேக நிகழன் போடும்
பாரூர்நற் புகழ்பெறும்வன் தொண்டரெதிர்
வந்துமலர்ப் பாதம் போற்றி. 20

2372. கோட்புலியா ரழைத்தெழில்சேர் மனைபுகுந்தா
ரூரர்பதங் குணமாப் பூசித்து
ஆட்படுதன் மனைவியொடு மக்களொடுந்
தொழுதமுது செய்வித் தன்பாய்

வாட்படுகட் சிங்கடியோ டினியவனப்
பகையெனும்நல் மக்கள் தம்மை
நாட்படுதா மரைமலர்த்தாள் மிசைபணிவித்
தடிமைகொளும் நன்மை யோத. 21

வேறு

2373. மகண்மைக் கொண்டுவன் தொண்டர் மகிழ்ச்சியாய்ப்
பகரு நற்பதி கத்தினிற் பண்பொடும்
தகுநற் தந்தைதா மென்றுரை சாற்றிய
புகழ்நி றுத்தியா ரூரிற் புகுந்துபின். 22

2374. பங்கு னித்திரு நாட்பணிக் கன்பொடும்
பொங்கு நற்பொன் பெறப்புக லூரில்வந்து
அங்கு நற்பதி கம்புகன் றண்ணலார்
செங்க லைப்பொனாக் கித்தரச் சீரொடும். 23

2375. பெற்று நற்திரு வாரூர்ப் பிரான்பதம்
பற்றும் அன்பொடு சென்று பரவையார்க்கு
உற்ற செய்தி உரைத்தங் குறுநிதி
முற்று மீந்து முயங்கி யிருக்கும்நாள். 24

2376. ஆரு ரண்ணல் அருள்விடை பெற்றுநற்
சீரூர் மெய்த்திரு வாவடு தண்துறைக்
காரூர் கண்டக் கடவுளைப் போற்றுதற்கு
ஏரூர் சொற்றமிழ்ச் சுந்தர ரெய்தியே. 25

2377. செய்ய வீதி வலமுறச் சேர்ந்தருள்
அய்ய னாடு நவநிதி யம்பலத்து
உய்ய போதி வனந்தனைச் சூழ்ந்துநல்
மைய்யி லங்குகண் ஒப்பிலா மங்கைதாள். 26

2378. பணிவுற் றன்பு படரநல் மாசிலா
மணிபொற் பாதம் வணங்கி மகிழ்ந்தெழில்
அணிபொற் தியாகர் அமர்ந்தபூங் கோயில்முன்
அணுகிச் செங்கை குவித்துமுன் ஆடியே. 27

2379. கட்க டங்கிடாக் காட்சிகண் டன்பொடு
முட்க சிந்துரோ மஞ்சிலிர்ப் புற்றிட
மட்கண் வீழ்ந்து வணங்கி உலகெலாம்
எட்கண் நெய்போல் நிற்கும் இறைவனை. 28

2380. மிக்க ஆரூர் விடங்கத் தியாகரே
இக்கண் வந்திருந் தாரென் றிறைஞ்சிநற்
தக்கே சிப்பண் தமிழ்ப்பதி கத்தினிற்
திக்கி றைஞ்சுசெங் கட்சோழர் செய்பணி. 29

2381. பண்பி னோடுஞ் சிறப்பித்துப் பாடிமெய்
நண்பு மேவர நல்குந் திருவருட்
கண்பெ றுஞ்சிவ போகக் கடலமுது
உண்ப தென்று மொழிந்திடாப் பேறொடும். 30

2382. சிறந்த செம்பொற் தியாகர் விடைகொடு
புறம்பு போந்து மழபாடிப் புண்ணியர்
மறந்தா யோவெனும் வார்த்தைகேட் டன்பொடும்
பிறங்கு சொற்பதி கம்பாடிப் பின்புநல். 31

வேறு

2383. உறையூர்வாழ் சோழர்மணி யாரமாற்
றினினழுவி யொளித்த தங்கு
நிறைநீர்ப்பொற் குடத்தபிடே கத்தொடும்வந்
திடப்புனைந்த நிலைமை தோன்றப்
பிறையூர்தண் பொழிலானைக் காவிறைவர்
அருள்பாடிப் பெயர்ந்து நான்கு
மறைதேடுங் கொடுமுடியிற் போய்நமச்சி
வாயப்பண் மகிழ்ந்து பேசி. 32

2384. பேரூரிற் தில்லைநடந் தொழுதுகூ
டலையாற்றூர்ப் பிரான்முன் மார்க்கத்து
ஆரூரர் விருத்தகிரிக் குறும்வழிகேட்
கத்தமதூர்க் கழைத்துப் போந்த
சீரூரும் புகழ்பாடித் தொழுதுமுது
குன்றரடி சென்று போற்றி
ஏரூரும் பொன்பனிரண் டாயிரஞ்சொற்
பதிகத்துக் கீய வாங்கி. 33

2385. மணிமுத்தா நதியிலிட்டா ரூர்க்குளத்தில்
வந்தெடுத்து மகிழ்ச்சி கூடும்
பணிமொய்த்தார் களபமுலைப் பரவையார்
தமக்களித்துப் பரன்தாள் போற்றிக்
குணமுற்றா ரூர்தனிற்சின் னாளிருந்து
குருகாவூர் குறுகும் போதில்
உணுநற்போ னகப்பொதிசோ றுதகமொடும்
பரனெதிர்வுந் துதவப் பெற்று. 34

2386. தொண்டர்குழாத் தொடுமமுது செய்தரனைப்
பதிகத்தாற் துதித்துப் போற்றிப்
புண்டரிக புரமேவிப் பணிந்துகழுக்
குன்றெய்திப் புகழ்ந்து பாடித்
தண்டமிழ்வன் தொண்டர்பசி யொடும்வருதல்
கண்டோரந் தணராய் வந்து
மண்டுபுகழ்க் கச்சூர்ஆ லக்கோயிற்
பரமர்மிக மகிழ்ந்து பேசி. 35

2387. சோறிரந்து தருவேனுண் பதற்கென்று
மனைதொறும்போய்ச் சோறு வாங்கி
மீறிரதக் கறியினொடுந் தரவாங்கிப்
புசித்தவரை விமல ரென்று
தேறியுணர் வொடும்புகழ்ந்து திருப்பதிகம்
பாடியருட் திருக்கூட் டத்தோடு
ஏறுயர்ந்தோர் காஞ்சிகா ளத்திமுதற்
பதிகள்பல இறைஞ்சிப் போந்து. 36

2388. நெற்றிவிழி யார்மருவு திருவொற்றி
யூர்க்குவந்து நிகழும் பண்போடு
ஒற்றியூர் நீங்கலென வெழுத்திடுவார்
அடிபோற்றி உருகிப் பாடி
மற்றவரங் கிருக்கும்நாள் அநிந்திதையார்
கயிலைவிட்டு வந்து வேளாண்
குற்றமிலா மரபின்ஞா யிறுகிழவர்
மகளாகிக் குலவு நாமம். 37

2389. சங்கிலியா ரெனப்பெயர்பெற் றரனருளா
லன்றிமணஞ் சாரே னென்று
திங்களணி மாணிக்கத் தியாகரடி
தொழுதுதினந் திருப்பூந் தார்கள்
அங்கரனுக் கன்பினொடும் புனைந்துபுனை
வித்துவள ரார்வத் தோடும்
தங்குமொரு கன்னிமா டத்தவர்வா
ளொருநாட்சந் நிதிமுன் பெய்த. 38

2390. கண்டுநம்பி யாரூர ரதிமோக
மாய்மயங்கக் கனவிற் சென்று
தொண்டர்களுக் கெளியபிரான் சங்கிலியைச்
சுந்தரர்தோள் தோயென் றோத

வண்டுறுபூங் குழற்பரவை தனைவிட்டிங்
கிருக்கின்மணம் பெறுவே னென்று
விண்டிடக்கேட் டாரூரர் கனவிற்போய்
அவன்வாய்ச்சொல் விளம்ப லோடும். 39

2391. பிறியேனென் றிடுஞ்சபதங் கோயில்முன்பு
யான்சொலுவேன் பெயர்ந்து நீர்போய்
மறைவாய்நல் மகிழடியி லிருமென்று
சொலக்கேட்டு வள்ள லன்பு
நிறைநீர்மைச் சங்கிலிபால் மகிழடியிற்
சொல்லுமென்று நிகழ்த்தென் றோதிக்
குறிமேவு மகிழடியி லிருந்தருள
வன்தொண்டர் கோயில் முன்பு. 40

2392. சங்கிலியார் தமக்கேற்பச் சபதமுரைத்
திடப்போம்போ தவள்தன் னேவற்
திங்கள்முகச் சேடியர்கள் மகிழடியிற்
சபதநீர் செய்தாற் போதும்
எங்களுக்கென் றுரைசெயக்கேட் டவர்மறா
தப்படியே இயம்ப லோடும்
அங்கவர்நல் மணம்புரிதற் கிசைந்துகன்னி
மாடஞ்சேர்ந் தமரும் நாளில். 41

2393. பரமர்கன வினிலவ்வூர்ப் பரிசனங்கட்
குரைசெய்யப் பலருங் கூடித்
திருவுறுநல் லோரையினில் மணமுடித்தங்
கவர்கொடுப்பச் சிறப்பி னோடு
மருமலர்ப்பூங் குழலெழிற்சங் கிலியார்தோள்
வன்தொண்டர் மருவி வாழ்ந்து
பொருவறுநற் பரவையா ரூர்வ சந்த
விழவிலுறும் பொலிவு காண. 42

2394. மனத்திலடங் காவிருப்ப முறச்சபதந்
தனைமீறி வழிக்கொள் போது
தனிப்பரம ரருளாற்கண் மறைந்திடப்போய்த்
திருமுல்லை வாயில் சார்ந்தங்கு
இனித்தமொழிச் சங்கிலிக்கா யென்விழிகொண்
டீரோவென் றிரங்கிப் பாடிப்
பனிப்பிறைசே ரெயில்சூழ்நற் காஞ்சிநகர்
சேர்ந்தேகாம் பரர்முன் மேவி. 43

2395. அண்ணாகண் ணளித்தருளாய் எனத்துதித்துத்
தொழவிடக்கண் ணருளக் கண்டு
பண்ணார்மென் மொழித்தேவி முலைத்தழும்பும்
வளைச்சுவடும் பார்த்துப் போற்றித்
தண்ணார்பிப் பிலவனஞ்சூழ் ஆவடுதண்
துறையில்வந்து தயங்கு நெற்றிக்
கண்ணானைக் கங்கைவார் சடையானென்
றரும்பதிகங் கசிந்து பாடி. 44

2396. சிறைவண்டார் பொழில்புடைசூழ் திருவாரூர்ச்
செம்பொன்னே! உன்னை யன்றி
உறவுண்டோ வெனக்கென்று புகன்றிடக்கேட்
டாரூர்வந் துற்றா லுன்றன்
குறையெல்லாந் தீர்த்தருள்வேம் வாவென்றோர்
இனியமொழி கூறக் கேட்டு
நிறையன்பி னொடும்ஆரூர்க் கதிவிரைவாற்
போவதற்கு நினைந்து சென்று. 45

2397. குற்றாலத் திருத்துருத்திக் குழகனைச்சென்
றடிபணிந்து குளத்தின் மூழ்கி
நற்றேசு பெறும்பழைய சுந்தரமெய்
வடிவுகொண்டு நயந்து பாடிச்
செற்றார்தம் புரமெரித்தோர் திருவாரூர்
தனிற்சென்று திருமுன் பெய்திப்
பற்றார்ந்த திருப்பதிகம் பாடிவலக்
கண்பெற்றுப் பணிந்து போற்றி. 46

2398. திருத்தேவா சிரியத்திற் சென்றிருந்து
பரவைமுன்பு சிலரை யேவி
அருத்தியொடுந் தமதுவர வுரைத்தனுப்பச்
சங்கிலிபா லகப்பட் டோர்க்குப்
பொருத்தமென்பா லுண்டோவென் றாடல்மிகப்
புகன்றனுப்பப் பொறாமால் கொண்டு
மருத்தகுதண் கொன்றையணி வீதிவிடங்
கரைநினைந்து வருந்திப் பாட. 47

2399. அரியயன்கா ணாதமல ரடிநோவத்
தொண்டருக்கா வாரூ ரண்ணல்
பரவைமனைக் கிருகாற்றூ தெழுந்தருளிச்
சம்மதிக்கும் பரிவு செய்து

பெருகுபுகழ்ச் சுந்தரர்க்கங் கவளிணங்கும்
வகையுரைப்பப் பிரியத் தோடு
மருமலர்ப்பூங் குழற்பரவை யெதிர்கொளப்போய்
அவள்திருத்தோள் மருவி வாழ்ந்து. 48

2400. வன்றொண்டர் ஆரூரின் மருவியமர்ந்
துறுநாளவ் வார்த்தை கேட்டு
வென்றிபெறும் ஏயர்கோன் கலிக்காம
னார்மிகவும் வெகுண்டு சீறித்
துன்றுபுகழ்த் திருவாரூ ராண்டவனை
ஒருபெண்பாற் றூதுக் கேவும்
நன்றியிலான் தனைக்கண்டா லென்செய்யக்
கடவேனோ நானென் றெண்ணி. 49

2401. இருக்குநா ளிருவருக்கும் நண்புறுத்தற்
கீசர்திரு வுளத்தி லெண்ணி
அருட்பணிசெய் கலிக்காம னார்வயிற்றிற்
சூலைநோ யதனை யேவ
வருத்தமிக வுற்றரனைத் துதித்திந்நோய்
அகற்றெனவன் தொண்டர் வந்து
பொருத்தமுடன் தீர்க்கிலிந்நோய் போமென்று
சிவன்கனவிற் புகன்று பின்னர். 50

2402. சுந்தரா! நீபோய்நற் கலிக்காம
னார்வயிற்றுச் சூலை தீரென்று
அந்தரவாக் கினிலுரைப்ப அப்படியே
வன்தொண்டர் அவர்பா லெய்த
வந்தனர்சுந் தரரென்னும் வார்த்தைகேட்
டுடைவாளால் வயிற்றைக் கீறி
அந்தவிடத் தினில்மாய்ந்து கலிக்காம
னார்கிடப்ப அவர்தந் தேவி. 51

வேறு

2403. பிறர்க ளறியா வகைமறைத்துப்
பெருகுஞ் சிறப்பு வன்தொண்டர்க்கு
உறுமா றளித்து வரவேற்ப
உமது தலைவ ரிருக்குமிடம்
அறியு மாறு புகலுமென
உரைத்தற் கஞ்சும் அவர்செயல்கண்டு
இறுமா றறிந்து வன்தொண்டர்
ஏயர் கோன்பாற் சென்றிருந்து. 52

2404. வயிறு கீறு முடைவாளை
வாங்கித் தமது வயிற்றூன்றுஞ்
செயல்கண் டதிசீக் கிரமெழுந்து
சிக்கென் றுடைவாட் கரம்பிடிக்க
உயிர்வந் துய்ந்த கலிக்காம
னாரும் நாவ லூரரும்நற்
பயில்நண் பொடுநேர் தொழுதுதங்கள்
பரம ரருளைப் பணிந்தேத்தி. 53

2405. புன்கூர்ப் பரம ரிருபாதம்
போற்றித் திருவா ரூர்மேவி
அன்பாற் பரமர் தமைப்பணிந்தா
ரூரர் விடைபெற் றவர்மீண்டு
முன்போற் பணிகள் பலபுரிந்து
முதல்வர் திருத்தாள் மலர்சேர
இன்பார்த் திடுசொற் பரவையொடும்
எழிற்சுந் தரர்வாழ்ந் திருந்திடுநாள். 54

2406. மலைநாட் டிறைவர் கொடுங்கோளூர்
வாழுஞ் சேர மான்பெருமாள்
தலைநாட் டிங்கட் கெழுந்தணியும்
தலைவர் புலியூர்ச் சபைநடனத்து
ஒலிநீ டிருப்பொற் சிலம்போசை
ஒருநாட் கேளா துறக்கண்டு
கொலைவாள் மரணங் குறித்திடலுங்
குலவு சிலம்பி னொலிகாட்டி. 55

2407. நாவ லூர்ச்சுந் தரர்பதிக
நலத்தாற் தாழ்த்தோ மெனநடனத்
தேவ ருரைப்பச் சேரமான்
பெருமாள் கேட்டுச் சேனையொடும்
காவல் புரியு மலைநாடு
கழித்துப் போந்து சிதம்பரங்கண்டு
ஆவ லொடுந்தாழ்ந் திப்பாற்போந்து
அரனார் பதிகள் பலவணங்கி. 56

2408. ஆரூர்க் கணுகும் பொழுதெதிர்போய்
அழைத்துத் தொழுமவ் வரசரொடும்
ஏரூர் மணிப்புற் றிடங்கொண்ட
இறைவர் மலர்த்தாள் இருவர்களும்

சீரூர் துதியி னொடுமிறைஞ்சிப்
பரவை மணிமா ளிகைசேர்ந்து
காரூர் குழலா ளுபசாரக்
கருத்தி னொடும்பூ சித்தினிதாய். 57

2409. விருந்து நுகர்வித் திடப்புசித்து
மிகுந்தோ ழமைகொள் சேரரொடும்
திருந்து பாண்டிப் பெருநாட்டிற்
சிறந்த மதுரைத் திருநகர்சேர்ந்து
அரந்தை கெடுத்தான் டருடருமங்
கயற்கண் மேவும் அருமணியைப்
பரிந்து தொழுதந் நாட்டிலுள்ள
பதிகள் முழுதும் போய்ப்பணிந்து. 58

2410. மீண்டு திருவா ரூர்க்கெய்தி
விமல ரடிதாழ்ந் தமர்ந்திடுநாட்
பூண்ட பரிவுற் றிடுஞ்சேரர்
போற்றி உபசா ரத்தினொடு
நீண்ட மலைநாட் டினுக்குவர
வேண்டு மென்று நினைந்திரப்ப
ஆண்ட புகழ்ச்சுந் தரரிசைந்தங்கு
அரச ரொடுமை யாறணுகி. 59

2411. ஆறு வழிவிட் டிடப்பதிகம்
அன்பாற் பாடி அக்கரைசேர்ந்து
ஏறின் மிசைசேர்ந் திலகுமையாற்
றிறைவ ரடிதாழ்ந் தெழில்கொள்வளம்
மீறும் புகழ்சேர் கொடுங்கோளூர்
மேவிச் சேரர் மிகுசிறப்பங்
கூறி லாநல் வகைபுரிந்து
பணிந்து விருந்தூட் டிடநுகர்ந்து. 50

2412. சிலநா ளிருந்து திருவஞ்சைக்
களநா யகர்சே வடிபணிந்து
நலமார் திருவா ரூர்க்கெய்த
நினைந்து சேரர் நயந்தளித்த
பலமா மணிபொற் பூணாடை
நிதியாட் சுமையிற் பலதொடர
மலைநா டகன்று திருமுருகன்
பூண்டி வழியில் வரும்பொழுது. 61

2413. பூத கணங்கள் வேடர்களாய்ப்
போந்து பின்போந் திடுஞ்சுமையை
வேதை புரிந்து பறித்தேகக்
கண்டு மிகுவன் தொண்டரருட்
சோதி மருவுங் கோயிலிற்போய்ச்
சூழ்ந்து பணிந்து துதித்திடலும்
கோதி லாநற் சுமைமுழுதுங்
கொணர்ந்து பூதங் குவித்தேக. 62

2414. ஆரூர்ப் பரவை மனையிலுற
அனுப்ப வேண்டு மெனப்பாடி
நீரூர் சடையா ராரூர்க்கு
நிகழ்வன் தொண்டர் மீண்டிடலும்
காரூர் கண்டர் திருவருளாற்
கணங்கள் சுமந்து சுமைமுழுதும்
வாரூர் திரள்மென் முலைப்பரவை
மனையிற் குவிப்ப மகிழ்ந்தெடுத்து. 63

2415. பரவைக் களித்துச் சிலநாளங்
கிருந்து பரம ருள்விடைபெற்று
இருளற் றொளிர்வன் தொண்டர்பின்பும்
எழிற்சே ரரைக்கண் டிடவிரும்பிப்
பெருநல் மலைநா டுறுவதற்குப்
பெயர்ந்து வரும்போ தவிநாசித்
திருநன் னகரில் ஒருமனையிற்
சிறந்த மணஞ்செய் திடவொருபால். 64

2416. மருவு மனையி லழுங்குரல்கேட்
டழைத்து வினவ மனைவியொடும்
ஒருவே தியன்வந் தடிதொழுதிம்
மணத்துக் குரிய வெமதுமகன்
விரிநீர்க் குளத்திற் குளித்திடும்போ
தெடுத்து முதலை விழுங்கியதாற்
கருது முணர்வு சலிப்புறயாங்
கலங்கி யழுதே மெனக்கேட்டு. 65

2417. நீர்வற் றியவக் குளத்தினிற்போய்
நின்று பதிகம் பாடுதலும்
சீர்பெற் றிடுநீர்க் குளம்பெருகிச்
செவ்வாய் முதலை பிள்ளைதனை

ஆர்வத் தொடுநற் கரையினில்வந்
தளிப்பத் தாய்தந் தையர்க்களித்துப்
பார்மெய்த் திடநல் மணமுமந்நாட்
பண்ணப் பணித்து வன்தொண்டர். 66

2418. அருட்புக் கொளியூர் அவிநாசி
அண்ணல் பாதம் பணிந்தகன்று
பெருக்கும் புகழ்சேர் கொடுங்கோளூர்க்
கெய்தும் பெருமை கேட்டெதிர்வந்து
இரக்கத் தொடுநற் சேரமான்பெருமாள்
இறைஞ்சி யானை யின்மேல்
உருக்கத் தொடுசுந் தரர்மேவ
ஒருபால் நின்று குடையெடுத்து. 67

2419. விருப்பத் தொடும்வேண் டியபணிசெய்
திடவுள் மகிழ்ந்து விமலருறும்
அருட்பொற் திருவஞ் சைக்களத்துக்
கருள்வன் தொண்ட ரெழுந்தருளித்
திருச்சொற் பதிகந் தலைக்குத்தலை
மாலை யெனவே சிறந்தெடுத்துப்
பரிக்கு மனைவாழ்க் கையையொழிக்க
வேண்டு மென்று பணிந்திடலும். 68

2420. கயிலைப் பெருமா னயன்முதலாங்
கணத்தை நோக்கிக் கடிதெய்திப்
பயில்சொற் தமிழ்வன் தொண்டனைவெள்
ளானை மிசைநீர் பரிந்தேற்றிச்
செயுமெய்ச் சிறப்போ டழைத்திங்கு
வாரு மென்று செப்புதல்கேட்டு
இயல்புற் றிடுநற் திருவஞ்சைக்
களத்திற் சேர்ந்தங் கிமையோர்கள். 69

2421. அரனா ரருளிப் பாடென்றங்
கறைய வெள்ளா னையிலேறி
திரமா ரெழிற்சுந் தரர்சேரர்
தம்மை நினைப்பச் சேரர்வயப்
புரவி மேற்கொண் டெதிர்சென்று
போற்றி முன்பு போந்திடவிண்
மருவும் வழியிற் தானெனைமுன்
படைத்தா னென்னும் வளர்பதிகம். 70

2422. பாடிச் சென்று திருக்கயிலைப்
பரமர் முன்போய்ப் பணிந்திடலும்
நாடிக் கருணை மிகுந்திடவந்
தனையோ வென்று நகைமுகமீந்து
ஏடுற் றிடுபூங் கொன்றையணிந்
திலகுஞ் சடில ரெமதுரிமைப்
பீடுற் றிடுமெய்ப் பணிபுரிந்திங்
கிருநீ யெனப்பே ரருள்புரிந்தார். 71

2423. புத்தூர் மேவு சடங்கவிநல்
மகளார் தாமும் பொருவறுநல்
முத்தி யடைந்தார் பரவையும்நல்
முதிரு மெழிற்சங் கிலியாரும்
சித்த மகிழ்ந்து முன்போலத்
தேவி யிடத்திற் கமலினியும்
பத்தி மிகுந்த அநிந்திதையு
மாகிப் பழைய பணிபுரிந்தார். 72

2424. சேரர் தமைநீ கணத்தலைவ
ராகி நமைச்சே வித்திரென்று
ஒரு மறைநா டற்கரிய
உமைகோ னருளிச் செயமகிழ்ந்து
சாரு மினிய கதையையினுந்
தகுசேர் மிதுலே சாகேளென்று
ஆருங் கருணைத் தவுமியநல்
முனிவர் பின்னும் அறைகின்றார். 73

அறுபத்துமூன்றாவது
சுந்தரர் திருப்பதிகம் ஓதித் தரிசித்து அருள்பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2424
திருச்சிற்றம்பலம்

63. சுந்தரர் திருப்பதிகம் ஓதித் தரிசித்து அருள்பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

திருமுனைப்பாடி நாட்டிலே, திருநாவலூரிலே சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாக நம்பியாரூரர் பிறந்தார். ஆதிசைவ குலத் திலகராக நம்பியாரூரரின் அழகைப் பார்த்த நரசிங்கமுனை அரசர், தாய் தந்தையரின் அனுமதி

பெற்று நம்பியாரூரரைத் தம்முடைய வளர்ப்பு மகனாகக் கொண்டார். சிறப்புடன் வளர்ந்த நம்பியாரூரருக்கு மணப்பருவம் வந்ததும் பெற்றோர் பெண் பார்க்க முற்பட்டனர். புத்தூர் சடங்கவியாருடைய மகளை மகனுக்குத் திருமணம் பேசி முடித்தனர்.

நம்பியாரூரரின் திருமணச் சடங்கின்போது, இறைவன் கிழ அந்தண உருவத்துடன் மணப்பந்தருக்கு வந்து நம்பியாரூரர் என்னுடைய அடிமை என வழக்குப் பேசி திருமணத்தைத் தடுத்தார். நம்பியாரூரர் கிழவரைப் பார்த்து இவன் பித்தனோ என ஏளனம் செய்தார். அதற்கு இறைவன், அடிமைச்சீட்டு ஓலை என்னிடத்திலே இருக்கின்றது என்று கூற, அதைப் பறித்த நம்பியாரூரர் ஓலையைக் கிழித்தெறிந்தார். பழைய ஓலையைக் காட்டி உன்னை அடிமையென்று சாதிப்பேன் என்று இறைவன், திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் முதியோர் சபையில் முறையிட்டார். இந்த நம்பியாரூரனைப் பெற்ற தந்தையினது தந்தையாரின் அடிமை ஓலை என்னிடம் இருக்கின்றது என்று இறைவன் சொல்ல, சபையோர் கையெழுத்தை ஒத்துப் பார்த்துச் சரியாயிருக்கிறது என்றனர். முதியவரின் வீடு அந்த ஊரில் எங்கே இருக்கிறது என்று வினவினர். அதற்கு அம்முதியவர் வேகமாகச் சென்று கோயிலுள் போய் மறைந்தார். பின்னே சென்ற நம்பியாரூரர் இறைவன் தம்மை வலிய வந்து ஆட்கொண்டதை உணர்ந்தார். இறைவனும் அவருக்கு 'வன்றொண்டர்' என்ற திருநாமத்தை அளித்தார். நம்பியாரூரர் முதன்முதலில் தம்மை விளித்த "பித்தா" என்ற சொல்லையே முதலாக வைத்துப் பாடக் கட்டளையிட்டார் இறைவன். அவரும் "பித்தா பிறைசூடி" என்று தொடங்கி பதிகம் பாடி முடித்தார்.

திருநாவலூர்ப் பெருமானை வணங்கிய நம்பியாரூரர், அப்பரடிகள் அவதரித்த தலமென்று திருவதிகையை மிதியாமல் சித்தவடமடம் சேர்ந்து அங்கு நடனம் செய்யும் வீரட்டருடைய திருவடிகளை நினைந்து ஓரிடத்தில் துயில் கொண்டார். அப்போது இறைவன் தமது திருவடிகளை ஆரூரரது சிரசில் சூடினார். பின்பு ஆரூரர் தில்லையை அடைந்தார்.

இறைவனின் கட்டளைப்படியே நம்பியாரூரர் திருவாரூரை அடைந்து வன்மீக நாதர் திருவடிகளை வணங்கினார். அன்று முதல் அவர் மணக்கோலத்துடன் திகழ்ந்தார். திருவாரூரில் பிறந்த பரவையாரின் நடனம் கண்ட நம்பியாரூரர் மயங்கினார்.

அப்பரவையாரும் மையல் கொண்டார். இதை அறிந்த இறைவன் அவ்வூரிலுள்ள அர்ச்சகர்களுடைய கனவில் சென்று, "பரவையாரை நாவலூரர்க்கு மணம் புரிவிப்பீர்களாக" என்று கட்டளையிட்டார். அதன்படியே அவர்களும் பரவையாருக்கும் ஆரூரருக்கும் திருமணம் செய்து வைத்தனர். இருவரும் இன்பம் துய்த்து மகிழ்ந்திருந்தனர்.

அடியார்களின் திருவடிகட்கு ஆளாக விரும்பிய ஆரூரரின் திருக்குறிப்பை அறிந்த இறைவன், அவரை அங்குள்ள தேவாசிரிய மண்டபத்திலிருந்து அடியார் புகழ் பாடுமாறு கட்டளையிட்டார். இறைவனே "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க, ஆரூரர் 'திருத்தொண்டத் தொகை' பாடித் திருக்கூட்டத்து அடியார்களின் திருவருளைப் பெற்றிருந்தார்.

இறைவன் திருவருளால் குண்டையூர்க்கிழார் என்பவர் அளித்த நெற்குவியல்களை வன்றொண்டர் தம் வீடு கொண்டு வந்து சேர்க்க ஆட்களை அனுப்புமாறு கோளிலிப் பிரானைப் பாடினார். இறைவனும் பூதர்களை அனுப்பினார். பரவையாரின் வீடு வந்து சேர்ந்த நெற்குவியல்களை அனைவருக்கும் வழங்கி மகிழ்ந்தனர்.

பின்பு, ஆரூரர் திருநாட்டியத்தான்குடிக்குச் செல்ல, கோட்புலியார் எதிர்கொண்டு வந்து, அவருடைய திருவடிகளை வணங்கி, இல்லத்திற்கு அழைத்துத் திருவமுது செய்வித்தார். கோட்புலியார் தம் புதல்விகளாகிய சிங்கடியையும் வனப் பகையையும் அளிக்க, ஆரூரரும் அவர்களைத் தம் மகள்களாகக் கொண்டார். புகலூரில் இறைவனைப் பாடிய ஆரூரர் அங்கு இறைவன் செங்கற்களைச் செழும் பொன்னாகச் செய்து கொடுத்ததை வாங்கிப் பரவையாரிடம் அளித்து மகிழ்ந்தார்.

திருவாவடுதுறைக்கு வந்த ஆரூரர் மாசிலாமணிப் பெருமானை வணங்கி மகிழ்ந்தார். திருவாரூரிலுள்ள வீதிவிடங்கத் தியாகேசரே துறைசையில் வந்து எழுந்தருளியுள்ளமையைக் கருதி வணங்கி, தக்கேசிப் பண்ணிலே அமைந்த தமிழ்ப் பதிகத்தில் செங்கட்சோழர் செய்பணியைப் பண்போடும் சிறப்பித்துப் பாடினார். பின்பு, செம்பொற் தியாகேசரிடம் விடைபெற்றுக் கொண்டு, திருமழபாடி சென்று இறைவனை வணங்கி மகிழ்ந்திருந்தார்.

திருவானைக்காவிற்குச் சென்ற ஆரூரர் அங்கிருந்து திருப்பாண்டிக் கொடிமுடி சென்று நமச்சிவாயப் பதிகம்

பாடினார். பேரூர் சென்று, கூடலையாற்றூருக்குப் போய் இறைவனைத் தரிசித்தார். முதுகுன்றூரில் சிவபெருமானைப் புகழ்ந்து பாடினார். இறைவன் அளித்த பன்னிரண்டாயிரம் பொன்னை அங்குள்ள மணிமுத்தாற்றில் போட்டு விட்டுத் திருவாரூர்க் குளத்தில் வந்து எடுத்துப் பரவையாருக்குக் கொடுத்தார். பின்பு, திருக்குருகாவூருக்குச் செல்லும்போது கட்டுச்சோறும் தண்ணீரும் இறைவன் கொடுக்க அதை அடியார் கூட்டத்தோடு உண்டு மகிழ்ந்தார்.

சிதம்பரம், திருக்கழுக்குன்றம் போன்ற பல தலங்களுக்கும் சென்ற ஆரூரர் இறைவனைப் பாடி வணங்கி வந்தார். திருக்கச்சூர் ஆலக்கோயிலிலுள்ள இல்லங்கள்தோறும் சென்று சோறும் கறியும் இறைவன் வாங்கிக் கொடுக்க ஆரூரர் அவற்றைப் பெற்று உண்டு மகிழ்ந்து பதிகம் பாடினார். பின்பு, காஞ்சி, காளத்தி முதலிய பல தலங்களையும் தரிசித்தார். திருவொற்றியூரில் பிறந்த சங்கிலியாரை மணந்தார்.

இறைவனருளால் ஆரூரராகிய சுந்தரருக்குக் கண்கள் மறைந்த பொழுது, திருமுல்லைவாயிலை அடைந்து, "இனித்த மொழிச் சங்கிலிக்காய் என்விழி கொண்டீரோ" என்று பதிகம் பாடினார். பின்பு, காஞ்சி ஏகாம்பரநாதரிடம் "அண்ணா! கண்ணளித்தருளாய்!" என்று துதித்தார். அப்பெருமான் இடது கண்ணைக் கொடுத்தருளினார். அங்கிருந்து பல தலங்களுக்கும் சென்று வணங்கினார்.

திருவாவடுதுறையை வந்தடைந்த சுந்தரர், "கங்கைவார் சடையான்" என்ற திருப்பதிகம் பாடி. "சிறைவண்டார் பொழில் புடைசூழ் திருவாரூர்ச் செம்பொன்னே உன்னையன்றி யுறவுண்டோ எனக்கு" என்று பாடினார். அதற்கு இறைவன், "ஆரூர் வந்தால் உன்னுடைய குறைகளைத் தீர்ப்போம்" என்று கூறியருளினார். அவ்வாறே திருவாரூரையடைந்த சுந்தரர் பதிகம் பாடி வலக்கண்ணும் வழங்கப் பெற்றார். தேவாசிரிய மண்டபம் சென்று பரவையாரைச் சந்திக்க விரும்பிய சுந்தரர் மீது பரவையார் ஊடல் கொண்டார். சுந்தரர் இறைவனிடம் முறையிட, இறைவனும் இவருக்காகப் பரவையாரிடம் தூது சென்றார். பின்பு பரவையாரும் இவரை எதிர்கொண்டழைக்கச் சுந்தரரும் சென்று அவளுடன் இனிது வாழ்ந்திருந்தனர்.

சுந்தரர் ஒரு பெண்ணுக்காக இறைவனையே தூதாக அனுப்பிய செய்தியை அறிந்த ஏயர்கோன் கலிக்காமனார்

என்பவர் சுந்தரர் மீது மிகுந்த கோபங் கொண்டிருந்தார். இருப்பினும், தியாகேசர் இவ்விருவரிடையேயும் நட்பினை உருவாக்கத் திருவுளங்கொண்டார். அதற்காக, கலிக்காமர் வயிற்றில் சூலைநோயை உண்டாக்கினார். அவருடைய கனவில் இறைவன் தோன்றி, இந்தச் சூலை நோயைச் சுந்தரரே தீர்ப்பார் எனக் கூறி மறைந்தருளினார். பின்பு, கலிக்காமருடைய வயிற்றுச் சூலையைத் தீர்க்குமாறு சுந்தரருக்கும் ஆகாயவாக்கில் தெரிவித்தருளினார். அதன்படியே சுந்தரரும் கலிக்காமர் இருப்பிடம் சேர்ந்தார். அவர் வருகையை அறிந்த கலிக்காமர் தமது உடைவாளால் வயிற்றைக் கீறிக் கொண்டு இறந்தார். அவருடைய துணைவியார் இதை மறைத்துவிட்டுச் சுந்தரரை வரவேற்று உபசரித்தார். ஆனால், சுந்தரர் உண்மையை அறிந்து, கலிக்காமர் இருக்குமிடத்தைக் காட்டுமாறு அவருடைய துணைவியாரிடம் கேட்க, அவர் பயந்து நிற்கிறார். பின்பு, சுந்தரரே கலிக்காமர் இருப்பிடம் அடைந்தார். கலிக்காமர் வயிற்றைக் கீறிய உடைவாளை எடுத்துத் தம்முடைய வயிற்றில் ஊன்றினார். அப்பொழுது இறைவன் தோன்றி ஆரூரரின் கரம் பிடித்துத் தடுத்தருளினார். கலிக்காமரையும் உயிர்பெற்று எழச் செய்தார். பின்னர் இருவரும் நட்புடன் பழகி இறைவனைத் துதித்து வணங்கியிருந்தனர்.

மலைநாட்டின் தலைவராகிய கொடுங்கோளூரில் வாழும் சேரமான் பெருமாள் என்பவர், வழக்கமாகத் தமது சிவபூசையின் போது கேட்கும் நடராஜப் பெருமானது சிலம்போசையானது ஒருநாள் கேட்காததைக் கண்டு வாளினால் கொலை செய்து கொள்ள நினைத்தார். உடனே இறைவன் சிலம்போசையைக் கேட்கும்படிச் செய்து, சுந்தரருடைய பதிகம் கேட்டுக் கொண்டிருந்ததால் காலம் தாழ்த்தது என்றும் கூறியருளினார். இதைக் கேட்ட சேரமான் பெருமாள் தம் சேனைகளுடன் புறப்பட்டுத் திருவாரூரை அடைந்து அங்குச் சுந்தரரைக் கண்டு மகிழ்ந்தார். இருவரும் நட்பு கொண்டனர். பல தலங்களைத் தரிசித்தனர். பின்பு, சேரமான் பெருமாள் வேண்டுகோளின் படியே சுந்தரர் மலைநாடு சென்றார். சுந்தரர் திருவஞ்சைக்களம் சென்று இறைவனுடைய அடிபணிந்து, திருவாரூரை அடைய நினைத்துச் சேரர்பிரான் விரும்பி அளித்த மணி, பொன், ஆபரணம், ஆடை இவற்றை ஆட்கள் சுமந்து கொண்டு வந்தனர். இவ்வாறு மலைநாட்டைக் கடந்து திருமுருகன்பூண்டி வழியாக வரும்போது, இறைவனது ஏவலால் பூதகணங்களெல்லாம் வேடர்களாக வந்து நிதிச்சுமைகளையெல்லாம் பறித்துக்

கொண்டு போவதைக் கண்டு சுந்தரர் கோயிலுக்குள் சென்று வலமாக வந்து பணிந்து துதித்தார். நிதிச்சுமைகளையெல்லாம் பூதகணங்கள் கொண்டு வந்து குவித்துப் போக, திருவாரூரிலுள்ள பரவையார் வீட்டிற்கு அனுப்ப வேண்டுமென்று பதிகம் பாடினார். அவ்வாறே பூதகணங்கள் திருவாரூரில் பரவையார் இல்லத்தில் நிதிச் சுமைகளைச் சேர்க்கவும் சுந்தரர் மகிழ்ந்திருந்தனர்.

திருவாரூரிலிருந்து மீண்டும் சேரநாடு சென்றார். வழியில் அவிநாசித் தலத்தில் முதலை வாய்ப்பட்டு இறந்த ஒரு அந்தணச் சிறுவனை உயிருடன் மீட்டு, அவனுக்குத் திருமணமும் செய்து வைத்தார். பின்பு கொடுங்கோளூருக்குச் சென்றார். அப்போது சேரமான் பெருமாள் எதிர்கொண்டு போய் வணங்கி, யானையின் மீது சுந்தரரை அமரச்செய்து, தான் ஒருபக்கம் குடைபிடித்து, மற்றும் வேண்டிய பணிகளை யெல்லாம் செய்தார். மனம் மகிழ்ந்து திருவஞ்சைக்களம் சென்று, இறைவனை வணங்கி, "தலைக்குத்தலை மாலை" என்ற திருப்பதிம் பாடி, மனை வாழ்க்கையை ஒழிக்க வேண்டும் என்று வணங்கினார்.

கயிலையில் வீற்றிருக்கும் இறைவன், பிரமன் முதலான தேவ கணங்களை அனுப்பி ஆரூரரை அழைத்து வருமாறு கட்டளையிட்டருளினார். அவ்வாறே தேவர்கள் திருவஞ்சைக் களத்தை அடைந்து இறைவனது கட்டளையைச் சுந்தரரிடம் கூறினர். உடனே சுந்தரர் வெள்ளை யானையின் மீது ஏறி, சேரர் குதிரையில் ஏறி உடன்வர, கயிலையை அடைந்து பாடி, இறைவன் திருவடிகளிலே நிலைத்து மகிழ்ந்திருந்தனர்.

சுந்தரரின் மனைவியரான பரவையாரும் சங்கிலியாரும் கயிலையை அடைந்து முன்போல தேவியிடத்தில் கமலினியும் அநிந்திதையுமாகிப் பணிபுரிந்திருந்தனர். சிவபெருமான் சேரமான் பெருமாள் நாயனாரைப் பார்த்து நீ கணத்தலைவராக இருந்து கொண்டு நம்மைச் சேவித்திருப்பாயாக என்று கூறியருளினார். இவ்வாறு சேரர் மகிழ்ந்து சேரும் இனிய வரலாற்றைக் கேட்பாயாக என்று தவுமிய முனிவர் மிதிலேசனுக்கு மேலும் கூறத் தொடங்கினார்.

அறுபத்து நான்காவது
சேரமான் பெருமாள் சிவப்பிரதிட்டை செய்து அருள்பெற்ற அத்தியாயம்

2425. சேர மான்பெரு மாள்திரு வாவடு தண்துறை
ஊரி னிற்சிவ னார்பிர திட்டைசெய் தாருரரோடு
ஏரு றுங்கயி லைக்கெய்து மாறினும் பேசுவோம்
சாரு நல்மிது லேசநீ கேளெனச் சாற்றுவான். 1

2426. பொருவில் சீர்மலை நாட்டிற் கொடுங்கோளூர் போற்றிவாழ்
உரிய செங்கோற் பொறையர் தவஞ்செய்தற் குற்றிட
அருமை நன்முடி சூட்டுவோ ராரென் றமைச்சர்கள்
பெருமக் கோதைய ரேயுரி யாரென்று பெட்பொடும். 2

2427. பரமர் வாழ்திரு வஞ்சைக் களத்திற் பணிபுரிந்து
அருளு மன்பர்முன் வந்து பணிந்தர சாளுதற்கு
உரிமை கொண்டிட வேண்டிடு மென்னுநல்
லுண்மைகேட்டு
அரன ருட்பெறி லாகுமென் றஞ்சைக் களத்தர்முன். 3

2428. சென்றி றைஞ்சியச் செய்தி யுரைத்திடச் சேணிடை
ஒன்று நன்மொழி யாற்கழ றித்தறி வுற்றுநீ
மன்றல் மாமுடி சூடென வாக்கெழும் வன்மைகேட்டு
அன்று நன்முடி சூடிக் கொடுங்கோளூர்க் கன்பொடும். 4

2429. வந்து மந்திரி மார்முத லியாரும் வணங்கிடத்
தந்தி மீதினி லேறியவ் வூர்வலஞ் சார்பொழுது
உந்து வர்ப்பொலி வெண்மையொ டோர்வண்ணா
னுற்றிடச்
சிந்தை மெய்த்திழிந் தோடி வணங்கினர் சேரனார். 5

2430. அடியவன் நானெனக் கேட்டடிச் சேரனென் றாங்குரைத்
திடுநல் நீற்றை மறந்திடா வாறறி வித்திரென்று
உடைய நல்முக மன்சொலி யானைமீ துற்றுநற்
படியு ளோர்பணிந் தேத்திடச் சூழ்ந்துநற் பாங்கொடும். 6

2431. கோயில் சேர்ந்தரி யாசன மீதெழில் கொண்டிருந்து
ஏயும் நல்மனு நீதியு டன்புவி யின்புறத்
தாயி னும்பெருந் தண்ணளி யீந்தர சாளும்நாள்
ஆயும் நல்மலர் கொண்டு சபேசர் அருச்சனை. 7

2429. தந்தி - யானை.

2432. செய்தி டும்பொழு தம்பலத் தாடு சிலம்பொலி
உய்யு மாறு சபேச ரளித்திட உள்மகிழ்ந்து
எய்து மின்பவெள் ளத்திறு மாந்தமர் கின்றநாட்
பையயு றும்பணி யார்மது ரைப்பாண பத்திரர். 8

2433. அகம கிழ்ந்துநற் சுந்தர ரீந்த அருட்திரு
முகங்கொ ணர்ந்து கொடுத்திட வாங்கி முடிக்கண்வைத்து
இகலின் முத்த முதிர்த்துரோ மம்புள கித்திடத்
தகவொ டும்பணிந் தத்திரும் பத்திரந் தாங்கிநல். 9

வேறு

2434. மதிமலி புரிசை மாடக்
கூடலென் றுரைக்கும் வாய்மைக்
கதிதரு மொழிமுற் றோர்ந்து
பாணர்கால் மிசைதாழ்ந் தின்ப
நிதிபொதி கிழிபூ ணாடை
நிரம்பவா னையின்மீ தேற்றி
அதிகநண் பொடுபா ணப்பத்
திரர்தமை அனுப்பி யோர்நாள். 10

2435. சேரர்மன் றாடுந் தாள்பூ
சித்திடச் சிலம்பி னோசை
ஆரவந் தெழாமை கண்டங்
குடைவாள்நெஞ் சகத்தி லூன்ற
நீருறு சடையார் தாழ்ந்தோம்
வன்தொண்டர் நிகழ்த்தும் பாவில்
நேருறு மிசைகேட் டென்று
சொலிச்சிலம் போசை யீய. 11

2436. அதிசய முற்றுக் கேட்டன்று அக்கணம் ஆரூர்க் கெய்தித்
துதிமிகு பதிகம் பாடும் சுந்தரர் தமைக்காண் பேனென்று
உதியர்கோன் அமைச்சர்க் கோதி உடன்மிகு தானை சூழக்
கதுமெனப் போந்து மிக்க காவிரி நாடு சார்ந்து. 12

2437. பதிபல பணிந்து வந்து பதஞ்சலி வியாக்கிர பாதர்
நிதமடி தொழுபொன் மன்றில் நிருத்தமுன் கண்டி றைஞ்சிப்
புதுமது நிகர்பே ரின்பம் புசித்தக மகிழ்ந்து நாதன்
கதிதரு சிலம்பி னோசை அளித்திடக் களித்துப்
போற்றி.
13

2438. அருந்தமிழ்ப் பொன்வண் ணத்தந்
தாதிநூ றன்பாய்ப் பாடிப்
பொருந்துநல் லருள்பெற் றிப்பாற்
போந்துதண் பொன்னி யாடித்
திருந்துமா வடுது றைக்கட்
சேர்ந்துகோ முத்தி யீசர்
மருமலர்த் தாளட் டாங்க
பஞ்சாங்க முறைவ ணங்கி. 14

2439. திருவாரூர்த் தியாகர் கோலம்
திரவியத் தியாகர் காட்ட
உருகார்வத் தொடும்ப ணிந்து
சம்பந்தர்க் குலவாச் செம்பொன்
பெருகார்வத் தொடுகொ டுத்த
பேரருள் கேட்டு மிக்கு
மருவார்நற் பனந்தார்ச் சேர
மான்மகிழ்ந் திருந்தவ் வூரில். 15

2440. தன்பெய ராலோர் மிக்க சிவலிங்கந் தயவி னோடும்
இன்புறு திருக்கோ யிற்குத் தரம்வாயு மூலை யின்கண்
மன்புக லாக மத்தின் மந்திரப் படியே தாபித்து
அன்பொடும் பூசித் தேத்தி அளவிலாத் தானம் நல்கி. 16

2441. மாசிலா மணிமுன் வேண்டும்
வரங்கள்கேட் டருளப் பெற்றுத்
தேசுலாம் புகழ்சேர் ஆரூர்த்
திருநகர்க் கெய்தும் போது
வாசமா லிகைசேர் மார்பர்
வன்தொண்ட ரெதிர்வந் துற்று
நேசமோ டளவ ளாவி
நிற்பவீழ்ந் திறைஞ்சிப் போற்றி. 17

2442. கண்கொளாக் களிப்பு மேவக் கசிவொடுந் தழுவிக் கொண்டு
நண்புறுந் தோழத் தன்மை நல்கிவன் மீக நாதர்
பண்புறுங் கோயில் மேவிப் பணிந்துநற் பரவை பாற்றுது
எண்பெறு மிருகாற் சென்றோர் இணையடி தொழுது
வாழ்த்தி. 18

2443. மும்மணிக் கோவை நற்பா மாலைமுன் பொழிந்து சாத்தி
வண்மைவன் தொண்ட ரோடும் பரவையார் மனையி லெய்தி
உண்மைநற் பூசை செய்தங்கு அவள்விருந் தூட்ட உண்டு
செம்மைசேர் மறைக்கா டெய்திச் சிறந்தஅந் தாதி பாடி. 19

2444. பாண்டிநாட் டெய்தி யந்நாட்
டுறும்பதி பலவும் போற்றி
ஆண்டதம் பத்தற் காக
அருட்திரு முகமீந் திட்ட
நீண்டசெஞ் சடையி னாரை
நிறைபுகழ் மதுரை தன்னிற்
காண்டள வறுபே ரன்புட்
கரைந்திடக் கசிந்து போற்றி. 20

2445. சுந்தர ரொடுஞ்சோ ணாட்டிற்
றுகளறும் ஆரூர் மேவிச்
சிந்தையுள் மகிழ்ந்து சின்னாள்
தியாகநா யகர்தாள் போற்றிச்
சந்தவண் தமிழ்வன் தொண்டர்
தமைப்பணிந் தழைத்துக் கொண்டு
வந்தனர் மலைநா டெய்த
வரும்வழி தனில்வன் தொண்டர். 21

2446. பளிங்குமா மலைபோல் மேல்பாற்
றிரண்டுகா விரிநீர் பாதை
விளங்குமா றருள வையாற்
றண்ணலை விரும்பிப் பாட
உளமகிழ்ந் தவரோ டெய்தி
ஒளிர்செம்பொற் சோதி பாதம்
இளங்களி றனையார் போற்றி
இன்பமுற் றிப்பாற் போந்து. 22

2447. கொடுங்கோளூர் வந்து சேர்ந்து
கோதிலா வன்தொண் டர்க்கு
நெடும்புகழ்ச் சேர ரன்பால்
நிதமுநற் பூசை செய்து
திடம்படும் உபசா ரத்தோ
டெண்ணிலாச் சிறப்பு நல்கி
விடம்படு கண்டர் அஞ்சைக்
களஞ்சென்று விரும்பிப் போற்றி. 23

2448. இருக்கும்நாள் ஆரூர்க் கெய்த
நாவலூ ரண்ணல் எண்ணி
விருப்பொடும் அனுப்பிக் கொண்டு
போந்திட மிகுந்த செல்வச்

செருக்குறு பணிபொன் னாடை
சுமைபல சேர்த்துப் பின்பு
தருக்குறும் பரிச னங்கள்
தம்மிசை யேற்றி விட்டு. 24

2449. சேரமான் பெருமாள் மிக்க
திருவஞ்சைக் களத்தப் பர்க்குப்
பாரிறைஞ் சிடமிக் கான
பணிபல செய்து வாழ்நாட்
தாருறு புலவன் தொண்டர்
தகுந்திரு வாரூர்க் கெய்திக்
காருறு கண்டர் செம்பொற்
கழலிணை தொழுது போற்றி. 25

2450. திருவுறு சேரர் தந்த
திரவியம் பரவைக் கீந்து
மருவளர் களபக் கொங்கை
மணந்துவாழ்ந் திருக்கும் நாளிற்
பொருவறு கொடுங்கோ ளூர்க்குப்
போந்திடு மன்பு பொங்க
விரகொடும் விடங்கர் பாதம்
பணிந்தருள் விடைகொண் டெய்தி. 26

2451. கொடுங்கோளூர்க் குறுநற் செய்தி
கேட்டெதிர் கொண்டு போற்றிக்
கடம்பொழி களிற்றின் மீதி
லேற்றிவண் குடைக வித்துத்
தடம்பெரு கெழிற்பொன் வீதி
சூழ்ந்துதன் கோயில் மேவ
உடன்படும் உபசா ரங்கள்
சேரர்செய் துடன்வாழ் நாளில். 27

2452. திருவஞ்சைக் களத்திற் சென்று
சிறந்தவன் தொண்ட ரிவ்வாழ்வு
ஒருவிடும் படிநீர் செய்தாண்
டருளுமென் றுருகிப் பாட
அருள்மிகுங் கயிலை அண்ணல்
அறிந்தருள் செயும்வெள் ளானை
பெருகுமும் பர்கள் கொணர்ந்தங்
கழைத்திடும் பெருமை உண்டு. 28

2453. கரிமிசை யேறி நாவ
 லூரர்போம் பொழுது காதல்
உரிமையன் பொடுநி னைப்ப
மஞ்சன முறுநற் சேரர்
விரைவொடும் பரிமீ தேறி
முன்புவந் திறைஞ்சி வீரப்
புரவிவெள் ளானை முன்பு
போந்திட எழுத்தஞ் சோதி. 29

2454. எதிர்கொடு தொழுது போம்போது
இலகுவான் தனில்வீழ்ந் தின்ப
முதிர்சில வீரர் வீர
வாக்கைபெற் றெழுந்து முன்வந்து
அதிகநண் பொடுஞ்சூழ்ந் தேத்தக்
கயிலைசேர்ந் தருள்வன் தொண்டர்
நதிபொதி சடையார் முன்பு
நணுகிவீழ்ந் திறைஞ்சிப் போற்றி. 30

2455. சேரமான் பெருமாள் கூட
வந்தன ரென்று செப்ப
நேருறு தெற்கு வாயி
லிற்றடை யுண்டு நிற்கும்
வீரரை யழையென் றேவ
விரைந்துநற் பெரிய தேவர்
சாருமன் புடன ழைப்பத்
தலைவன்முன் சென்று தாழ்ந்து. 31

2456. பரவச முற்று நிற்குஞ்
சேரரைப் பார்த்துச் சற்றே
திருமணி முறுவல் காட்டி
யாமழை யாமற் சேர்ந்தது
உரையென நாவ லூரர்க்
குறும்பணி செய்து னின்பக்
கருணைவெள் ளங்கொண் டெய்த
வந்தனன் கழல்கண் டுய்ந்தேன். 32

2457. அடியனேன் திருவு லாவொன்
றுரைத்தன னன்பு கூரப்
பொடியணி மார்ப கேட்க
வேண்டுமென் றுரைத்துப் போற்றித்

திடமுறு செஞ்சொல் ஞானத்
திருவுலாச் சேர ரோதக்
கொடியிடை மடவாள் பாகர்
மகிழ்ந்தருள் கொண்டு கேட்டு. 33

2458. சிவகணத் தலைவ ராகும்
திருவருள் கொடுத்து மிக்க
பவமறத் திகழ்பே ரின்பப்
பரவையுள் படிந்து வாழென்று
உவகையோ டுரைப்ப நாவ
லூரரோ டுறைந்து ஞானத்
தவமுறு சேரர் சாயுச்
சியபதஞ் சார்ந்து வாழ்ந்தார். 34

அறுபத்து நான்காவது
சேரமான் பெருமாள் சிவப்பிரதிட்டை செய்து அருள்பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2458
திருச்சிற்றம்பலம்

64. சேரமான் பெருமாள் சிவப்பிரதிட்டை செய்து அருள்பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

திருவாவடுதுறையில் சேரமான் பெருமாள் சிவலிங்கப் பிரதிட்டை செய்து சுந்தரருடன் கயிலைக்குச் சென்ற வரலாற்றைக் கூறுகிறேன் கேட்பாயாக எனத் தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறுகின்றார்.

கொடுங்கோளூரில் அரசாட்சி செய்து வந்த சேரர் தவம் செய்யத் திருவஞ்சைக்களத்திற்குச் சென்றுவிட்டார். அடுத்து யார் முடிசூட்டிக் கொள்வது என்ற சிக்கல் தோன்றியது. முடிவில் அச்சேரரே உரிமையுடையவர் என அமைச்சர்கள் கருதினர். அவ்வாறே அவரிடம் சென்று வேண்டினர். சேரரும் இறைவன் திருவருளையே நாடினர். ''கழறிற்றறிவுற்று நீ மாமுடியைச் சூட்டிக் கொள்க'' என எழுந்த ஆகாய வாக்கைக் கேட்டு அப்படியே சேரரும் முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு இவர் யானை மீது உலா வரும்பொழுது, தூசு ஒலிக்கும் வண்ணான் ஒருவன் எதிரில் வந்தான். சேரர் யானையினின்றும் கீழே இறங்கி ஓடிச்சென்று அந்த வண்ணானை வணங்கினார். அவ்வண்ணான் 'அடியவன்

நான்' என்று கூற, அதைக் கேட்டு, 'அடிச்சேரன்' என்று சொல்லி, பூசப்படும் வெண்ணீற்றை மறந்திடாமல் அறிவித்தீர் என்று அவ்வண்ணானுக்கு முகமன் கூறினார். பின்பு, அரியணையில் அமர்ந்து அரசாண்டு வந்தார்.

சேரர், நாள்தோறும் நடராசப் பெருமானுக்கு அருச்சனை புரிந்து வழிபடும்பொழுது அம்பலத்தாடுகின்ற சிலம்பொலியைக் கேட்கும்படி இறைவன் அருளினார். அதைக் கேட்டு அவரும் இன்பக் கடலில் ஆழ்ந்திருந்தார். ஒருநாள், மதுரைப் பாணபத்திரர் மகிழ்ச்சியுடன் சோமசுந்தரப் பெருமான் கொடுத்தனுப்பிய திருமுகத்தைக் கொண்டுவந்து அரசனிடம் கொடுத்தார். அதை வாங்கிச் சிரசின்மீது வைத்து, கண்கள் நீர்வார, உரோமம் புளகிக்க அன்போடும் பணிந்தார். திருமுகத்தைத் தம் கையிலெடுத்து "மதிமலி புரிசை மாடக்கடல்" என்று கூறும் உண்மையினை வாசித்து முற்றும் உணர்ந்தார். பாணரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். பொற்கிழியையும் ஆபரணங் களையும் ஆடைகளையும் வழங்கி, யானை மீதேற்றி நட்புடன் பாணபத்திரரை அனுப்பி வைத்தார்.

பின்பு ஒருநாள், சேரர் பூசிக்கும்போது வழக்கமாகக் கேட்கும் சிலம்போசை கேட்கவில்லை. வருத்தமுற்ற சேரர் உடைவாளை எடுத்து நெஞ்சிலே அழுத்தினார். உடனே இறைவன் அவரைத் தடுத்து நிறுத்தி, 'சுந்தரர் பாடும் பாவினால் தாழ்த்தோம்' என்றருளி சிலம்போசையை அரசன் கேட்கும்படிச் செய்தார். சேரர் அதிசயமுற்று, அக்கணமே திருவாரூரை அடைந்து சுந்தரரைக் காண ஆவலுடன் புறப்பட்டார். திருவம்பலத்திலே திருநடனம் கண்டு தரிசித்து, அருந்தமிழால் 'பொன்வண்ணத்தந்தாதி' நூறு பாக்களைப் பாடினார். பின்னர் திருவாவடுதுறையை அடைந்து கோமுத்தீச்சுரர் திருவடிகளை வணங்கினார். திருவாரூர்த் தியாகேசர் கோலத்தை இறைவன் துறைசையில் திரவியத் தியாகேசராகக் காட்டியருளினார். திருஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி கொடுத்தருளியதையும் சேரர் கேட்டு மகிழ்ந்தார்.

திருவாவடுதுறையிலே, சேரர் தம் பெயரினால் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்ய விரும்பினார். திருக்கோயிலுள் வடபாரிசத்தில் வாயுமூலையில் ஆகம விதிப்படி தாபித்து அன்புடன் பூசித்துத் துதித்தார். அதற்கு வேண்டிய அளவில்லாத தானங்களையும் கொடுத்தார். பின்பு, மாசிலாமணிப் பெருமானிடம்

விடைபெற்று ஆரூருக்குச் சென்றார். அப்போது சுந்தரர் எதிர்கொண்டு வந்து சேரரை வரவேற்றார். இருவரும் நட்புடன் பழகி இறைவனைத் துதித்தனர். சேரர் அங்குள்ள வன்மீகநாதரைப் புகழ்ந்து மும்மணிக்கோவையைப் பாடினார். பின்பு, திருமறைக்காட்டை அடைந்து அங்கு சிறந்த அந்தாதியைப் பாடினார். சுந்தரரும் சேரரும் இவ்வாறு பல தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கினர். திருவஞ்சைக்களத்திலே சேரமான் பெருமாள் சுந்தரருக்குக் கொடுத்த செல்வங்களை யெல்லாம் சுந்தரர் திருவாரூரிலுள்ள பரவையாருக்குக் கொடுத்து இன்புற்று வாழ்ந்தார்.

பின்பு ஒருமுறை, சுந்தரர் மீண்டும் திருவஞ்சைக் களத்திற்குச் செல்ல விழைந்தார். சேரரும் எதிர்கொண்டு வந்து சுந்தரரை அழைத்து உபசரித்தார். அப்பொழுது, சுந்தரர் 'இந்த வாழ்வை வேண்டேன், என்னை ஆண்டருளும்' என மனமுருகிப் பாடினார். இதையறிந்த இறைவன் வெள்ளை யானையுடன் தேவர்களை அனுப்பி, கயிலைக்கு அவரை அழைத்து வருமாறு செய்தார். சேரரும் குதிரை மீதேறிச் சுந்தரருடன் சென்றார். இருவரும் கயிலையை அடைந்தனர்.

கயிலையில் இறைவனை தரிசித்த சுந்தரர், தம்முடன் சேரமானும் வந்துள்ளனர் என்ற செய்தியைக் கூறினார். 'நாம் அழைக்காமல் இங்கு வந்தது ஏன்?' என்று இறைவன் சேரரிடம் கேட்டார். அதற்கு அவர், சுந்தரருக்குப் பணிவிடைகளைச் செய்து, இறைவருடைய இன்பக் கருணையினைப் பெற வந்தேன்; திருவடி தரிசனம் பெற்று உய்ந்தேன் என்று சொல்லி, ' திருக்கயிலாய ஞான உலா'வைப் பாடினார். அதைக் கேட்டு மகிழ்ந்த இறைவன், சேரருக்குச் சிவகணத் தலைவர் பதவியை அளித்து இன்பக்கடலில் ஆழ்த்தினார். சேரமான் பெருமாளும் சுந்தரருடன் இருந்து சாயுச்சிய பதவியை அடைந்தார்.

அறுபத்தைந்தாவது
செங்கட் சோழர் திருப்பணியும் சிவார்ச்சனையும் செய்த அத்தியாயம்

2459. **மலைநாடு தொழுஞ்சேர மான்பணிசெய் வகையுரைத்தேம்**
கலைஞான முணர்கோச்செங் கட்சோழர் காதலொடும்
பலன்மேவும் ஆவடுதண் துறைமருவிப் பணிசெய்வகை
நலமேவு மீதுலேச கேளென்று முனிநவில்வான். 1

2460. மேருகிரி தனில்மருவு மொருமுனிவன் வெண்ணாவற்
சீருறுநற் கனியொன்று கைக்கொண்டு செழுங்கயிலைக்
காருறுசெங் கண்டர்முனஞ் சென்றிருபொற் கழல்பணிந்தங்கு
ஏருறுநற் கனிபரமர் திருக்கரத்தி லீந்திடலும். 2

2461. வாங்கியரு மறைபுகன்ற வாயினில்வைத் தருந்திவிதை
ஓங்குமுனி தனக்குதவப் பிரசாதம் உவந்து நுகர்ந்து
ஆங்குதொழு தெதிர்நிற்கு முனிவயிற்றி லதுமருவிப்
பாங்குறுமோர் வெண்ணாவற் பருமரமாய்
முளைத்தெழலும். 3

2462. கண்டுநுதற் கட்பெருமான் களித்துமுனி தனைநோக்கித்
தெண்டிரைநீர்ப் பொன்னிவட கரையினிற்சந் திரதீர்த்தத்து
அண்டர்தொழுந் தலமுளதங் கதில்நீசென் றமர்ந்திருந்தால்
எண்டிசையுந் தொழவுனது நீழலியாம் எழுந்தருள்வேம். 4

2463. அத்தலத்திற் போயிரென்றங் கருள்புரிய அப்படியே
மெய்த்துமுனி வெண்ணாவல் உருவாகி வீற்றிருப்ப
மொய்த்தமலர்க் குழலுமையை நோக்கிநீ முனிநிழலிற்
பத்தியொடு மெமைப் பூசி யென்ற னுப்பப் பார்வதியும். 5

2464. வந்துபுனல் தனைத்திரட்டி இலிங்கவடி வாயமைத்துச்
சந்திரபுட் கரணியரு குறும்வெள்ளைச் சம்புவின்கீழ்
அந்திநிறச் சம்புவைவைத் தருச்சிப்ப அப்புலிங்கச்
சுந்தரநற் குறியுருவாய்த் தோன்றியிருந் தருளுதலும். 6

2465. அவ்வனத்திற் சஞ்சரிக்கும் அடற்கரியொன்று அதிசயமாய்ச்
செவ்வியஅச் சிவனுருவைக் கண்டுதிகழ் நேசமொடும்
வெவ்வினைதீர்த் தருள்ஞான மேவுநாள் வந்துறலால்
இவ்வரனைப் பூசிப்பப் பெற்றோமென் றிறுமாந்து. 7

2466. நன்னீர்கொண் டாட்டிநறுந் தழைசூடி நற்கனிகள்
முன்னாவைத் தன்பினொடும் பூசித்து முயன்றுதொழும்
அன்னாளி லோர்சிலம்பி அவ்இலிங்க மேற்சருகு
துன்னாமற் பந்தரிடுந் தொழிற்பணிசெய் திறைஞ்சுதலும். 8

2467. பனைக்கரநீள் மதயானை கண்டுநூற் பந்தர்தனைத்
தினைப்பொழுது மிராதபடி தினமழிப்பச் சிலம்பிசினந்து
எனைச்சிறிதென் றெண்ணியிந்த விபமான தெமதுபணி
தனைச்சிதைப்ப தென்கொலெனத் தந்திகரந் தனிற்புகுந்து.
9

2468. துளைத்திடலுங் கரியலறி விழுந்துருண்டு துதிக்கைதனை
வளைத்துநிலத் துடனடித்து மாய்ந்திடஅச் சிலம்பியுமாய்ந்து
இளைத்தவுடல் விடும்பொழுதவ் இலிங்கத்தி னிடையிருந்து
முளைக்கொழுந்துப் பிறைச்சடில முதல்வன்விடை
மேற்றோன்றி. 10

2469. ஆனைதனக் கினியசிவ லோகமளித் தன்பினொடும்
கானமர்பூ மிகுந்திடுமவ் வனம்ஆனைக் காவாக
மாநிலத்திற் துலங்குபெயர் விளம்பியெழில் வளர்சிலம்பிக்கு
ஈனமிலாக் கருணைபுரிந்து இறையுருவா யுற்பவித்து. 11

2470. திருப்பணிசெய் தெமதுமலர்ச் சேவடிநீ ழலிற்சேரென்று
உரைத்தருளச் சோழர்குலத் துயர்வுபெறு சுபதேவன்
கருத்துமகிழ் பெருந்தேவி கமலவதி திருவயிற்றிற்
தரித்துமுனை யறிவொடுமோர் மகவாகிச் சார்ந்திடலும். 12

2471. கணிதநூற் பெரியோர்க ளொடுகடிகை கழித்திந்த
மணியனைய மகன்பிறந்தான் மதிச்சடையர்
பணிக்குரித்தாய்த்
துணிவொடுமூ வுலகாளுந் தோன்றலாய் வாழ்வனெனும்
பணிமொழிகேட் டனைக்கால்மே லாய்த்தூக்கு
மெனப்பகர்ந்து. 13

2472. கமலவதி யப்படியோர் கடிகைகழித் தம்மகவை
அமலரரு ளாலின்றெங் கோச்செங்க ணானோவென்று
இமையொடுங்கா துறநோக்கி உச்சிமோந் தெடுத்தணைத்துத்
தமதுடல்விட் டரனுலகு தனையடையச் சுபதேவன். 14

2473. அருமையொடும் வளர்த்துமுடி சூட்டியர சளித்துவனத்து
ஒருமையொடுஞ் சென்றுதவம் புரிந்துசிவ னுலகடையத்
திருமருவு கோச்செங்கட் சோழர்சிவா லயங்கள்பல
பெருமையுறச்செயும்மணிமேற் கொண்டுபெரும்
புகழ்மருவ. 15

2474. ஆனைபுகா வாயிலும்விட் டலர்மிகுவெண் ணாவலொடும்
வானவர்கோன் திருக்கோயி லமைத்துமதில் மண்டபங்கள்
தேனுலவு மலர்ப்பொழில்சூழ் திருவானைக்
காவினிற்செய்து
ஏனையுள தலங்கள்தொறும் இலகுதிருப் பணியியற்றி.
16

வேறு

2475. பிப்பிலா ரணியமுறும் ஆவடுதண்
துறைமேவிப் பிரியா அன்புற்று
ஒப்பிலா முலைத்தாய்பொற் பதம்பணிந்து
கண்குளிர உவந்து நோக்கி
அப்புலா வுஞ்சடைநல் மாசிலா
மணிநாத ரழகு கண்டு
கப்பிலாச் சிந்தையலர்ந் திடத்தாழ்ந்துச்
சியின்மிசைச்செங் கரங்கள் கூப்பி. 17

2476. என்றுமக லாதமலத் தொகுதியகன்
றிரிந்தோட இடர்கள் நீங்க
நன்றுதரு சுகச்சலதி யெறிதிரைநீர்
மேலெழுந்து நனையா நிற்ப
ஒன்றியமெய் மனங்குளிரக் கண்குளிரச்
சுருதியுமாய்ந் துணர வொண்ணாத்
தென்றுறைசை யிருந்தருளுஞ் சிவலோக
நாயகனைத் தெரிசித் தேனே. 18

2477. என்றுதுதித் தானந்த மாய்க்குதித்தா
டிப்பாடி இன்ப வெள்ளத்
தொன்றுமனு பவமேற்கொண் டுவந்துவளர்
பூங்கோயிற் குள்வாழ் செம்பொற்
குன்றனைய திரவியப்பொற் தியாகரடி
பணிந்துமனக் குறைகள் நீங்கிச்
சென்றுதிரு வருட்துறைநல் மடஞ்சேர்ந்து
திருப்பணிகள் சிறப்ப வெங்கும். 19

2478. சுற்றுதிரு மதில்மணிமண் டபந்திருமா
ளிகைசிகரி துலங்கச் செய்வித்து
உற்றகளிப் பொடுஞ்சிவார்ச் சனைசெய்தற்
குளம்விரும்பி உமைகோன் தன்னைப்
பற்றுபுகழ்ச் சேரமான் பணிசிவனுக்
கருகுகுண பாற்பிர திட்டை
நற்றுசிவா கமவிதியாற் செய்துகிரி
யாபூசை நலம்பெற் றோங்க. 20

2479. மஞ்சனம்வா சக்களபச் சந்தனம்பொற்
பணிமலர்த்தார் வர்க்க மாடை
மிஞ்சிரத முறுநிவே தனந்தூபந்
தீபமுதல் வேண்டு கின்ற

தஞ்சமிகும் பலவுபசா ரத்தொடும்பூ
சித்துமிகத் தாழ்ந்து போற்றி
இன்சொலொடுந் தோத்திரங்கள் பலபாடி
வேண்டும்வரம் ஈயப் பெற்று. 21

2480. சன்னிதிமுன் சென்றுதொழு தருள்விடைபெற்
றெழிற்தில்லை தன்னில் மேவி
இன்னதென மறையுமறி யாமுதல்நின்
றாடுபத வெழிற்தே னுண்டு
மன்னுமறை யோர்தமக்கு மாளிகைகள்
பலசமைத்து வழங்கி யன்பாற்
பன்னுபுகழ் மிகுகோச்செங் கட்சோழ
ரெடுத்தமலர்ப் பதஞ்சேர்ந் துய்ந்தார். 22

2481. கோச்செங்கட் சோழர்பணி யுரைத்தனமேற்
கூடல்நகர்க் கிறைவ னான
தூச்சந்திர குலராசன் வரகுணபாண்
டியனினிய துறைசை மேவிப்
பூச்செண்டு போவிலகு மிலிங்கபூ
சனைபுரிந்து புகழ்பெற் றுய்ந்த
பேச்சின்று மிதுலேச கேளென்று
தவுமியர்முன் பேச லுற்றான். 23

அறுபத்தைந்தாவது
செங்கட்சோழர் திருப்பணியும் சிவார்ச்சனையும் செய்த
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2481
திருச்சிற்றம்பலம்

65. செங்கட்சோழர் திருப்பணியும் சிவார்ச்சனையும் செய்த அத்தியாயம் (சுருக்கம்)

கலைஞானம் உணர்ந்த கோச்செங்கட்சோழர் துறைசையில் திருப்பணி செய்த வகையினைச் சொல்லுகின்றோம் கேட்பாயாக என மிதிலேசனுக்குத் தவுமிய முனிவர் சொல்லத் தொடங்கினார்.

மேருகிரியில் உள்ள ஒரு முனிவர், வெண்ணாவற்பழம் ஒன்றை இறைவனுக்குக் கொடுக்கவும், இறைவன் அதனை ஏற்றுச் சாப்பிட்டு அக்கனியின் விதையை அம்முனிவனுக்குக்

கொடுத்தார். முனிவரும் அதைப் பிரசாதமாக வாங்கி உண்டு அங்கு வணங்கி எதிரிலே இருக்கும் முனிவருடைய வயிற்றில் அவ்விதையானது பொருந்தி ஓர் வெண்ணாவல் மரமாய் முளைத்து எழுந்தது. இறைவன் இதனைக் கண்டு முனிவரைப் பார்த்து பூலோகத்தில் காவிரியின் வடகரையில் தேவர்களும் வணங்கும்படியான ஒரு தலம் உள்ளது; நீ போய் அதில் அமர்ந்திருப்பாயாக; உன்னுடைய நிழலிலே நாம் அமர்வோம் என்றருளினார். அவ்வாறே முனிவரும் வெண்ணாவல் உருவாகி நின்றார். இறைவன் உமையம்மையைப் பார்த்து நீ முனிவரது நிழலில் எம்மைப் பூசிப்பாயாக என்று விடை கொடுத்தனுப்பினார்.

கயிலையிலிருந்து வந்த பார்வதிதேவியும் நீரைத் திரட்டி, சிவலிங்க வடிவமாக அமைத்து, சந்திரபுஷ்கரணிக்கு அருகிலிருக்கும் வெண்ணாவலின் கீழ் இலிங்கத்தை வைத்து அருச்சனை புரிந்தாள். இறைவன் அப்புலிங்க உருவாய் அமர்ந்தருளினார். ஒருநாள், அவ்வனத்திலுள்ள ஒரு யானை அச்சிவலிங்கத்தைப் பார்த்து அதிசயித்து, பூசிக்கத் தொடங்கியது. தினமும் நீர் கொண்டு அபிடேகம் செய்து, தழை சூட்டி, கனிகளைப் படைத்து பூசித்து வந்தது. அந்நாளிலே, ஒரு சிலந்தியானது அந்த இலிங்கத்தின் மீது சருகு படியாமல் இருக்கத் தன் வாயில் ஊறும் நூலால் பந்தலிட்டு அந்த சிவலிங்கத்தை வணங்கி வந்தது. இதை யானை கண்டு கோபங்கொண்டது. நூற்பந்தரை அழித்தது. சிலந்தியோ மீண்டும் மீண்டும் நூற்பந்தரைக் கட்டியது. யானையின் சினம் மேலிட்டது. சிலந்திக்கும் கோபம் வந்து யானையின் துதிக்கையுள் சென்று துளைத்தது. யானை அலறிவிழுந்து துதிக்கையை நிலத்திலே அடித்து வீழ்ந்து இறந்தது. சிலந்தியும் இறந்தது. உடனே இறைவன் தோன்றி காட்சியளித்து, ஆனைக்குச் சிவலோகமளித்து, அவ்வனத்துக்கும் ஆனைக்கா எனப் பெயர் வரச் செய்தருளினார். சிலந்தியை ஒரு அரசனாகும்படியாகக் கட்டளையிட்டுப் பல திருப்பணிகள் செய்து தம் திருவடி நீழலில் சேருமாறும் பணித்தருளினார்.

சிலந்தியும் சோழர் குலத்திலே சுபதேவனுக்கும் கமலவதிக்கும் மகவாக அடைந்தது. இதுகண்ட சோதிடநூல் வல்லுநர்கள் ஒரு நாழிகை கழித்து இந்த அருமையான மகன் பிறந்தான்; எனவே, இவன் இறைபணிக்கு உரியவனாயும் மூவுலகையும் ஆளும்படியான ஒரு அரசனாகவும் வாழ்வான் என்று கூறினர். இதைக் கேட்ட கமலவதியானவள், என்

ஆவியானது மேலே கிளம்புகிறது என்று கூறி, ஒரு நாழிகை கழித்துத் தன் குழந்தையை எடுத்து 'கோச்செங்கணனோ' என்று கூறி இமைகொட்டாமல் பார்த்து உச்சிமோந்து மார்புடன் அணைத்துத் தன்னுடைய ஆவியை விட்டு இறைவனுலகை அடைந்தாள்.

சுபதேவன் அக்குழந்தையை வளர்த்து அரசனாக முடிசூட்டி அரசைக் கொடுத்து, வனம் சென்று தவம் செய்து சிவபதவி அடைந்தான். கோச்செங்கட்சோழன் பல சிவாலயத் திருப்பணிகளை மேற்கொண்டு புகழ் பெற்றான். திருவானைக்காவில் வெண்நாவலொடும் இறைவனுக்குத் திருக்கோவில் அமைத்தான். மதில், மண்டாம், கோபுரம், நந்தவனம் இவை அமைத்து வணங்கினான். இவ்வாறு பல தலங்களிலும் திருப்பணிகளைச் செய்தான்.

திருவாவடுதுறையை அடைந்த கோச்செங்கட்சோழன் மாசில்ாமணிப் பெருமானையும் ஒப்பிலாமுலையம்மையையும் வணங்கி மகிழ்ந்தான். திருவருட்துறை மடத்திலிருந்து கொண்டு ஆலயத் திருப்பணிகளைச் செய்வித்த பின்னர், சிவார்ச்சனை செய்தற்கு விரும்பினான். சேரமான் பிரதிட்டை செய்த இலிங்கத்திற்குப் பக்கமாகக் கிழக்குத் திசையில் சிவாகம விதிப்படி சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்தான். கிரியா பூசை நலம்பெற்று விளங்க திருமஞ்சனம், வாசனை கலந்த சந்தனம், ஆபரணம், மலர்மாலைகள், ஆடை, நிவேதனம், தூபதீபம் இவற்றுடன் உபசாரத்துடனும் சிவலிங்கத்தைப் பூசித்தான். பின்பு தில்லையை அடைந்து வணங்கி, தில்லைவாழ் அந்தணர்கட்கு மாளிகை அமைத்துக் கொடுத்தான். சிலநாள் அங்கிருந்து பின்பு நடராசப் பெருமானின் திருவடி நீழலை அடைந்தான்.

இனி, மதுரை மன்னன் சந்திரகுலத் தோன்றல் வரகுணபாண்டியன் திருவாவடுதுறையை அடைந்து இலிங்க பூசை செய்து புகழ்பெற்ற வரலாற்றைக் கூறுகிறோம் கேட்பாயாக எனத் தவுமிய முனிவர் மிதிலேசனுக்குக் கூறத் தொடங்கினார்.

அறுபத்தாறாவது
வரகுணபாண்டியன் சிவார்ச்சனை செய்து அருள்பெற்ற அத்தியாயம்

2482. பருப்பத ராச புத்திரி பாண்டியன் மகளாய்த் தோன்றி
விருப்பொடு மகுடஞ் சூடி விசயமெண் திக்குஞ் செய்து
திருக்கயி லாய நாதர் தமைக்கண்டு திரள்முக் கொங்கைப்
பொருப்பினி லொன்று காணா தொளித்திடப் பொருந்து நாளில். 1

2483. அவர்மணம் புரிய வோர்பால் அங்கயற் கண்ணி யாகிச்
சிவனறு பத்து நான்கு திருவிளை யாடல் செய்யும்
நவமுறு புதுமை கண்டு நயந்துள மகிழ்ந்து வாழும்
புவிபுகழ் மதுரை தன்னிற் புரவல னாகி வாழ்வோன். 2

2484. திங்கணன் மரபிற் தோன்றும் தென்னவன் மாற்றார் சிங்கம்
அங்கண்மா நிலத்தில் வாழ்வோர்க் காரமு தனையன் கார்போற்
பொங்குபொன் னிதிநல் மாரி பொழிந்திடு கொடையன் சேற்கண்
மங்கையோர் பங்கற் கன்பன் வரகுண தேவ னென்போன். 3

2485. திக்குறு மரசர் செம்பொற் றிறையளித் திருதாள் போற்ற
உக்கிர வரிப்பொற் பீடத் திருந்துல களிக்கு நாளிற்
புக்குநல் வனத்து வேட்ட மாடியோ ரிராப்போ தின்கண்
மிக்கவான் கலினப் பாய்மா மேற்கொண்டு மதுரை நோக்கி. 4

2486. வரும்வழி தனிலோர் வேத மறைமுனி மைந்தன் துஞ்சும்
சிரமிசைப் பரிமி திப்பச் சென்னியற் றாவி போம்போது
ஒருபெரும் பிரம கத்தி உறும்வர குணன்பா லுற்று
வெருவுறத் துயர்செய் தோர்பால் மேவிடக் கண்டு மன்னன். 5

2487. ஆலவாய் மருவு மண்ணல் ஆலயத் திருமுன் சென்று
பாலலோ சனனே! மாபா தகந்தவிர்த் தருள்செய் பண்பா!
வேலுமிக் கொடிய பாவ விடர்களைந் தருள்செ யென்று
சாலவும் வருந்திப் போற்றித் தாழ்ந்துவிண் ணப்பஞ் செய்ய. 6

2488. அப்பொழு தங்க யற்க ணம்பிகை பங்கர் வாக்குச்
செப்பரும் புகழ்ச்சோ ணாட்டிற் திருவிடை மருதூர்க் கெய்திற்
பொற்பொடிப் பிரம கத்தி போக்குவோ மென்று செப்ப
மெய்ப்பொடுந் தானை சூழ வரகுணன் விரைவிற் போந்து. 7

2489. காவிரி நாட்டில் வந்து கமழ்நறுங் கொன்றை சூடும்
தேவர்கள் தேவன் மேவு திருவிடை மருதூ ரெல்லை
ஆவலோ டிறைஞ்சி யன்போ டழகுகோ புரத்தை நோக்கப்
பாவமார் பிரம கத்தி பதைத்திறந் தகன்று போக. 8

2490. வரகுணன் மகிழ்ந்து மேலை வாயிலின் வழிச்சென்
றுட்போய்க்
கருணையங் கடலைக் கண்டு கண்கள்நீர் ததும்பச் செங்கை
சிரமிசைக் குவிய ரோமஞ் சிலிர்த்திட விதிர்ப்புற் றுள்ளம்
உருகிடப் பணிந்தா னந்த உத்தியிற் தாழ்ந்து வாழ்ந்து. 9

2491. சிலபகல் அத்த லத்திற் சிறப்பொடு மிருந்து வேண்டும்
பலதிருப் பணிகள் செய்து பண்பொடு மமர்நாட் கஞ்ச
மலர்மிகு குளத்துள் வாழ்மண் டூகங்கள் அரனை வாயாற்
புலனுறப் புகழ்ந்த தென்று பொன்பல சிதறிக் கேட்டும். 10

2492. நாடுநீள் வனத்தின் மேவும் நரிகள்சொக் கேசர் நாமம்
பாடின வென்று செம்பொற் பட்டுவர்க் கங்க ளீந்தும்
நீடுவேம் பிலிங்கங் காய்த்த தெனறிகழ் விமானம் போட்டும்
வீடுறு தலத்தி லுற்ற வெண்டலை யெடுத்துத் தாழ்ந்தும். 11

2493. பாக்கியம் நமக்கே என்று பரன்திருக் கோயில் முன்றில்
நாய்க்கட்டங் கலையில் வாரி நவமணி முடிமேற் தாங்கி
ஊக்கமோ டப்பாற் போட்டும் ஒருமகன் கோயி லெள்ளை
வாய்க்குண வாக வாரித் தின்பது கண்டு மற்றோர். 12

2494. பிடித்துமுன் விடக்கண் டெள்ளைத் தின்றதே னென்று பேச
எடுத்திடுஞ் சனனங் கோயிற் பணிசெய்கல் விழுப்ப தற்குத்
தடிப்புறு பகடாய்த் தோன்றத் தின்றன னென்னத் தானும்
இடத்துறு கடாவா வேனென் றெச்சிலைத் தோண்டித்
தின்றும். 13

2495. செம்பிய னன்னாண் மிக்காத் திருமணஞ் செய்வித் தீந்த
கொம்பெழில் கண்டுதிங்கட் கொழுந்தணி மருதப் பர்க்கென்று
அன்பினு மினியாள்தன்னை அத்தராத்திரிநற் கோயிற்கு
இன்பொடுங் கூட்டிப் போய்விட் டெடுத்தரன்
விழுங்கக் கண்டும். 14

2496. இவ்வண மொருவ ராலும் இயற்றொணாப் பணிகள்
செய்தங்கு
உய்வண மருள்பெற் றன்போடு உளமகிழ்ந் திருக்கும் நாளில்
நவ்விசேர் கரனைப் போற்றி நவகோடி சித்தர் மேவும்
திவ்விய துறைசைப் போதித் திருவளப் பெருமை கேட்டு. 15

2497. தெரிசனை செய்யு மன்பு சிந்தையுள் மிகுந்து பொங்க
வரிசைமா தவர்க ளோடும் வரகுண தேவன் போந்து
குருமணி ஈசர் மேவுங் கோமுத்தி நகரஞ் சேர்ந்து
பெருகருள் வீதி சூழ்ந்து பிறங்குகோ புரத்தைத் தாழ்ந்து. 16

2498. இலகுகோ முத்தி தீர்த்தத் திரும்புன லாடி வெண்ணீறு
அலர்மதிப் பிரபை போல்மெய் யழகுறப் பூசி யாரும்
விலைமதி யாத முத்தம் விரவுநல் அக்க மாலை
தலைகள் மார்பு செங்கை தமிற்றரித் தெழுத்தஞ் சோதி. 17

2499. துணைவரு கணேசர் பாதம் தொழுதசு வத்தஞ் சூழ்ந்து
பணிவொடு நந்தி தாள்நற் பயனுறக் கண்டு வாழ்த்தி
அணிநவ நிதிச்ச பைக்கண் ணாடுமா தாண்ட வங்கண்டு
துணைவொடு மிறைஞ்சி யொப்பி லாமுலை யுமைதாள்
போற்றி. 18

2500. அம்பொனா லயம்வ லங்கொண் டழகிய பிள்ளை பொற்றாள்
செம்பொனூ புரப்பொற் கஞ்சஞ் சிரமுறப் பணிந்து செவ்வேள்
இன்பநன் னிலைகண் டேத்தி எண்ணிலா அயன்மால்
தேடும்
சம்புவை மாசி லாத தலைவனைக் கண்டு தாழ்ந்து. 19

வேறு

2501. பரவசமாய்க் குதித்தாடிப் பாடிவிழி
நீர்சொரியப் பரிவு மேன்மேற்
தரையின்மிசைப் பிடித்துந்தத் தள்ளாடி
வீழ்ந்துதனை மறந்து ஞானப்
பெருகுசுக வாரிதியில் வீழ்ந்துகரை
காணாது பிதற்றி யார்த்துக்
குருமணியே! எனையுமாட் கொண்டருள்கோ
வேயென்று கும்பிட் டேத்தி. 20

2502. முசுகுந்தர்க் ககங்குளிர முன்னின்று
கூத்தாடு மூர்த்தி தன்னைப்
பசுமுட்செவ் வந்தித்தோ டணிந்திலகு
செவியனைப்பைங் கழுநீர்த் தொங்கல்
பொசிந்துகமழ் நறையொழுகும் புயத்தனைப்பொன்
வாசியிற்கீழ்ப் பொலிந்த கோவை
இசைந்தன்பர்க் கெளியன்பொற் றியாகனைப்பூஞ்
சப்பிரத்து ளிருத்தல் கண்டு. 21

2503. பலவாகி மறைபயிலுந் திசைமுகனுந்
திருமாலும் பண்டு காணா
நிலையாள னடியருள நீங்காத
பெருங்கருணை நிதியன் முன்னாட்
கலையான்மெல் லடிபரசிக் காழியர்கோன்
இருநிதியங் கருதி வேண்ட
உலவாத கிழியருளுந் தென்துறைசைத்
தியாகர்பதம் உளத்துள் வைப்பாம். 22

2504. எனத்துதித்துப் பாடிவீழ்ந் திறைஞ்சிவேண்
டியவரங்கள் ஈயப்பெற்று
மனக்கவலை நீங்கிநவ கோடிசித்தா
திகளையெலாம் வணங்கி வாழ்த்தி
உனற்கரிய களிப்பொடுமோர் பாலிருந்து
பலபணிகள் உவந்து செய்து
வினைக்கடலைக் கடந்தவர குணன்சிவார்ச்
சனைபுரிய விருப்ப முற்று. 23

2505. சோதிடநூற் கலையுணர்ந்தோர் நியமித்த
முகூர்த்தத்திற் சோதி லிங்க
நீதிமிகு கோச்செங்கட் சோழேசர்
கோயிலுக்கு நேராங் கீழ்பால்
ஆதியரு ளாகமத்தின் படிச்சைவ
வேதியரா லமர்வித் தந்த
வேதநா யகர்மேனி குளிரவபி
டேகங்கள் மிகவுஞ் செய்து. 24

2506. கருப்பூரக் கலவைச்சாந் தணிந்துமணங்
கமழ்நறும்பூங் கண்ணி சாத்தி
விருப்பார்பொற் பணிதரித்துத் திருவமுது
மிகவுநிவே தித்துத் தூபம்
திருத்தீபம் பணிமாறப் பண்ணிவில்வார்ச்
சனைசெய்து பின்புஞ் செய்தற்கு
உரித்தான உபசாரம் பலவுமகிழ்ந்
தியற்றிமன முருகிப் பாடி. 25

2507. மனமகிழ்ந்தோர் மண்டலமங் கிருந்தொருநாட்
போற்றினமும் வளஞ்சேர் செம்பொற்
சினகரத்துட் சிவனையருச் சித்தேத்திச்
சந்நிதிமுன் சென்றோர் நாளிற்

தனிமுதல்வன் தனைத்தொழுது வரம்பலபெற்
றருளும்விடை தாங்கிப் போந்து
பனிமதியுந் தெயில்சூழுந் தென்மதுரை
நகர்மேவிப் பரன்முன் சென்று. 26

2508. சுந்தரனே! அங்கயற்கண் துணைவா!நற்
சொக்கலிங்க மணியே! தூய
இந்துறுசே கர!சடா தரநாதா!
காவாயென் றிரங்கிப் போற்றி
வந்தொருபாற் புராணமுரைத் திடுமிடத்தி
லிருந்தெழில்வாக் கியத்தை யோர்ந்து
பந்தம்நீக் கிச்சிவலோ கந்தரவென்
றரன்முன்போய்ப் பணிந்து கேட்ப. 27

2509. சிவலோக வடிவாய்நற் றிருவால
வாய்முழுதுஞ் சிறந்து தோன்றத்
தவமேவு பாண்டியற்குச் சவுந்தரபாண்
டியரருளத் தயவி னோடும்
பவமேவும் வினைத்தொடர்பு நீங்கியடி
யாருடன்வாழ் பயன்பெற் றுய்ந்து
கவின்மேவு வரகுணவேள் முத்திநிலை
பெற்றிருந்தாள் கவலை தீர. 28

அறுபத்தாறாவது
வரகுணபாண்டியன் சிவார்ச்சனை செய்து அருள்பெற்ற
அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2509
திருச்சிற்றம்பலம்

66. வரகுணபாண்டியன் சிவார்ச்சனை செய்து அருள்பெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

அம்பிகையானவள் பாண்டியன் மகளாக அவதரித்து மகுடம் சூடி எட்டுத் திசைகளிலும் திக்விஜயம் செய்து இறைவனைக் கண்டதும் மூன்று தனங்களில் ஒன்று மறைய, அப்பாண்டியன் மகளை இறைவன் திருமணம் புரிந்து தமது இடப்பாகத்தில் அமர்த்தி, அறுபத்துநான்கு திருவிளையாடல் களையும் செய்யும்போது, மீனாட்சிய யம்மையார் பார்த்து மகிழ்ந்திருக்கும் மதுரையின் அரசனானவன் வரகுணபாண்டியன். சந்திர குலத்தில் தோன்றிய இவன் பகைவர்கட்குச் சிங்கம்

போன்றவன்; மதுரையில் வாழ்பவர்கட்கு அமுதம் போன்றவன்; மேகம் போன்று வழங்கும் கொடை வள்ளல் ஆவான்.

வரகுணபாண்டியன் ஒருமுறை வனத்தில் வேட்டையாடி வரும்பொழுது, வழியில் வேதமுணர்ந்த முனிவரது மைந்தன் தூங்கும்போது அவனுடைய தலைமீது குதிரையானது மிதிக்க, அம்மைந்தன் இறந்தான். இதனால் பிரமஹத்தியானது வரகுணபாண்டியனை யடைந்து துன்புறுத்தி வந்தது. இறைவனிடம் வரகுணபாண்டியன் முறையிட்டு வணங்கினான். இறைவன் அசரீயாக, 'சோழநாட்டிலுள்ள திருவிடைமருதூருக்குச் சென்றால் உன்னுடைய பிரமஹத்தியைப் போக்குவோம்' என்றருளினர். அவ்வாறே பாண்டியன் திருவிடைமருதூருக்குச் சென்றவுடனேயே பிரமஹத்தி அகன்றது. மன்னன் அங்குப் பல திருப்பணிகளைச் செய்திருந்தான்.

மன்னன் திருப்பணியின்போது, திருக்குளத்திலுள்ள தவளைகள் சத்தமிடுவதைக் கேட்டு, அவை இறைவனை வாயாரப் புகழ்கின்றன என்று மதித்துப் பொன்களை அக்குளத்தில் இறைத்தான். காட்டிலுள்ள நரிகள் ஊளையிடு வதைச் சொக்கேசருடைய திருநாமங்களைப் பாடின என்று பொன்னாடைகளை அந்நரிகளுக்குக் கொடுத்தான். வேப்பமர மானது இலிங்கங்களைக் காய்த்தது என்று அம்மரத்திற்கு விமானமிட்டான். அவ்வூரில் கிடக்கும் தலையோட்டை எடுத்துத் தாழ்ந்தான். கோயிலின் வாயிலிலுள்ள நாயின் மலத்தைத் துணியில் வாரியெடுத்து, தலையில் தாங்கி அப்பால் போட்டான். ஒருவன் கோயிலுக்குச் சொந்தமான எள்ளை வாயில் போட்டுத் தின்பதையறிந்து அவன் ஏன் அவ்வாறு செய்தான் என்று கேட்க, அடுத்துவரும் பிறவியில் ஆலயப்பணிக்குக் கல் இழுப்பதற்கு எருதாய்ப் பிறப்பதற்காகத் தின்றேன் என்று கூற, மன்னன் உடனே தானும் இடப்பக்கத்திற்குக் கடாவாகப் பிறப்பேன் என்று அவனுடைய வாயிலிருந்து எச்சில் எள்ளைத் தோண்டித் தின்றான். தன் மனைவியை மருதப்பருக்கு நடுநிசியில் கொண்டுபோய் விட்டான். இவ்வாறு வரகுணபாண்டியன் பல திருப்பணிகளைச் செய்து வந்தான்.

நவகோடி சித்தர்கள் வாழும் துறைசையிலுள்ள அரசவனத்தின் பெருமையைக் கேட்டறிந்த பாண்டியன் அங்கு வந்து தரிசிக்க ஆவல் கொண்டான். துறைசை வந்தவன் இறைவனைக் கண்டு தொழுது ஆனந்தமடைந்தான். முசுகுந்தச்

சக்கரவர்த்திக்கு மனங்குளிர அவன் முன்பு நின்று நடனமிடும் மூர்த்தியும், செவ்வந்தித் தோடு அணிந்து விளங்குகின்ற செவியனும், செங்கழுநீர்மாலை அணிந்த தோளனும், பொன்னாலாகிய திருவாச்சியின் கீழமர்ந்திருக்கும் தலைவனும், அன்பர்கட்கு எளியனுமாகிய செம்பொற்தியாகேசரைத் தரிசித்து வணங்கி வேண்டிய வரங்களையும் பெற்றான். சிவார்ச்சனையைச் செய்யவும் ஆவல் கொண்டான்.

நல்ல நாளிலே, கோச்செங்கட்சோழர் கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்திலே சோதிலிங்கத்தைப் பிரதிட்டை செய்வித்து, அபிடேகம் செய்தான். கற்பூரம் கலந்த கலவைச் சந்தனம், பூமாலைகள், ஆபரணங்கள் இவற்றை அணிவித்தான். திருவமுதை நிவேதித்தான். தூபதீபம் காட்டி, வில்வம் கொண்டு அருச்சனை செய்தான். இவ்வாறு ஒரு மண்டலம் துறைசையிலே இருந்து தினமும் கோயிலில் சென்று அருச்சனை செய்து வழிபட்டு இறையருள் பெற்றான்.

மதுரையை அடைந்த வரகுணபாண்டியன், சோமசுந்தரரை வணங்கி, பந்தத்தை நீக்கிச் சிவலோகத்தில் இருக்கும்படி அருளுமாறு வேண்டினான். உடனே மதுரை மாநகரம் முழுவதும் சிவலோகமாகவே சிறந்து காட்சியளித்தது. பிறவி நோய் தீர்க்கப்பெற்ற வரகுணன் முத்திநிலையை அடைந்திருந்தான்.

அறுபத்தேழாவது
புராண பல சுருதி உரைத்த அத்தியாயம்

2510. மதுரைப் பதிவாழ் வரகுணமன்
னவன்செய் பணியின் வகையுரைத்தேம்
புதிய மலர்த்தார் புனைமிதுல
கேள்!நற் துறைசைப் புராணகதை
பதிய உணர்வோர் படிப்போர்கேட்
போர்கள் பலனும் பணிபுரிவோர்
கதியும் உரைப்பேம் என்றுதவு
மியநல் முனிவன் கழறுவனால். 1

2511. குருவும் இலிங்க சங்கமமுஞ்
சிவமே யெனக்கொள் குணத்தினராய்,
வெருவும் வகையெவ் வுயிர்களுக்குஞ்
செய்யா திதஞ்செய் விருப்பினராய்,

மருவுந் தயவும் இன்மொழியும்
மதியுங் கொடையும் வளர்பொறையும்
பரிவும் இனிய வாய்மையுநற்
பண்பும் பணிவு முடையவராய். 2

2512. பூதி அணியும் பொலிவினராய்ப்,
பொருவில் சைவத் திறத்தினராய்,
நீதி மருவுங் குருபத்தி
நிறைந்த மனத்த ராய்நிமலன்
பாத மலர்மேல் மலர்சொரியும்
பத்தி மிகுந்த பாக்கியர்க்கே
ஓதும் எழில்சேர் ஆவடுதண்
துறைசைப் புராணம் உரித்தாமால். 3

2513. ஆத லாலிப் புராணமருள்
அரனார் திருவா லயத்தினிலும்
ஏத மிலாநற் சைவர்மனை
யிடத்தும் ஈச னருள்பிரியாப்
போத மிகுமெய் யடியவர்கள்
பொருந்து மடத்தும் நதியிடத்தும்
சீத மலர்நந் தனவனத்துஞ்
செப்புஞ் செயலே தெளிவாமால். 4

2514. மலர்ப்பூ விதானப் பந்தரின்கீழ்
மணித்தீ பங்கள் பலவமைத்து
நிலத்தார்ந் திலகு மெழிற்பீட
நிலையிற் திருப்புத் தகமிருத்திக்
கலந்தேந் தமுது கனியடைகாய்
நிவேதித் தினிய கமழ்தூப
நலத்தார் நீப முதலான
உபசா ரங்கள் நயந்தளித்து. 5

2515. ஆரா மையினாற் புராணீகர்
வாசித் தருத்த மிகவுரைப்பச்
சீரா ரன்புட் கரைந்துருகச்
செவிவா யாகச் சிவானுபவம்
பேரா தோங்கச் சிவசரிதப்
பெருக்கா ரமுத முணல்வேண்டும்,
ஏரார் கோமுத் தீசர்இந்தப்
புராண வடிவாய் இசைவதனால். 6

2516. ஒருகாற் கேட்போர் சாலோக
முறுவர், உள்ளத் துவகையொடும்
இருகாற் கேட்போர் சாமீபத்
தின்ப முறுவர், முக்காற்கேட்டு
அருள்சேர் மாந்தர் சாரூப
மடைவர், நான்கு தரங்கேட்கில்
இருள்சேர் மலந்தீர்ந் தருட்சாயுச்
சியமேய்ந் திடுவர் இஃதுண்மை. 7

2517. நித்தம் அருச்சித் தனுசந்தா
னங்கொள் நியமத் தொடும் வாசித்து
அர்த்தம் உணர்வோர் பெறும்பேறெம்
மளவா லுரைத்தற் கரிதாகும்
பத்தி யிலராய் மிகுபாவம்
பயின்றோ ரெனினு மொருகடிகை
சித்த மகிழ்ந்து கேட்கிலருந்
தவராய் ஞானத் தெளிவுறுவார். 8

2518. பொருவில் மறையோர் கேட்டிடில்அம்
புயன்போல் வாழ்வு பொருந்திடுவர்
அரசர் கேட்கின் மிகுந்திருவுற்
றடையார் தொழும்வெற் றியையடைவர்
பரசும் வணிகர் கேட்கில்நிதி
பலசேர்ந் திடுபாக் கியமுறுவர்
விரவு புகழ்க்கா ராளர்கள்கேட்
டிடில்வே ளாண்மை மிகுத்துயர்வார். 9

2519. திருமங் கலநா ணுறுமகளிர்
கேட்கிற் சிறந்த மகப்பெறுவர்,
பொருவி லெழிற்கன் னியர்கேட்கிற்
புகழ்சேர் புருடர் புயந்தோய்வர்,
அருள்பெற் றிடுவர் கைமையுறும்
அவர்கள் கேட்கிற், பலபிணியோர்
பிரியத் தொடுங்கேட் டிடிற்பிணியக்
கணந்தீர்ந் தின்பம் பெருகுவரே. 10

2520. இசைப்பண் ணுறவே படித்தில்நல்
ஈசர் மகிழ்ந்தங் கவருளத்தில்
வசிப்பர் எழிற்புத் தகத்தெழுதி
வளர்மா தவருக் களிப்போர்கள்

புசிக்கும் அமுதா சனரெனஇப்
புவியிற் பலபோ கமும்பெறுவர்
நசிக்கும் வறுமை வாழ்வகலா
திவ்வே டிருக்கும் நல்மனைக்கண். 11

2521. மாசி லாநல் மணியீசர்
மகிழுங் கருணைப் புகழ்மருவு
தேசு லாவுந் திருத்துறைசைப்
புராணந் தனையோர் திலத்துணையுள்
நேச மிலரா யிகழ்ந்திடினும்
நீச ராகிப் பிறந்துழல்வர்
பேசும் பவன்பொய் யெனவுரைப்போர்
பேயா யுதித்துப் பிதற்றுவரே. 12

2522. வாக்காற் புகழ்ந்து மனங்குளிர
நினைந்து கண்ணால் மகிழ்சிறப்ப
நோக்கித் துறைசை தனைவணங்கு
நோன்மை யுடையோர்க் கிணையுளதோ!
ஊக்க மிகும்போ தியைச்சூழும்
உரவோர் தேவர்க் குயர்ந்தோராம்!
ஆக்க மிகுங்கோ முத்தீசர்
அடியா ரெவர்க்கும் அதிகர்களே! 13

2523. உலவாக் கிழிசம் பந்தர்பெற
உதவும் பூதர் தமைத்தரிசித்து
இலகும் புகழுற் சவகாலத்
தினிய புழுகு நறுஞ்சாந்தம்
மலர்மா லிகைதூ பந்தீபம்
வழங்கி வடைகள் நிவேதனஞ்செய்து
அலர்பூங் கமலத் தாள்தொழுவோர்க்கு
அருநோய் துன்பம் அடையாவால். 14

2524. அற்சித் தலராற் பௌர்ணமி
அரிய பூச மவைகள்தொறும்
நற்சொற் துதியோ டுபசரித்து
நல்மா விளக்கேற் றிப்பணியில்
முற்செய் வினைத்தீத் தொடர்பகலும்,
முதிர்சூ னியம்பேய் முறிந்தோடும்,
துற்சொப் பனங்கள் அவைநீங்கும்,
தொகும்வந் திகட்குஞ் சுதனுளனாம். 15

2525. திருவார் கோயிற் கெதிராய்நற்
திருப்போ தியின்கீழ்ப் படுத்திருக்கும்
தரும நந்தீ சுரரைமலர்த்
தாரால் மிகவும் அலங்கரித்தெள்
அரிசி நறுஞ்சர்க் கரைதேங்காய்
அருங்கீற் றமுதம் பழமருந்தேன்
பெருக நிவேதித் திறைஞ்சிலின்பம்
பெருகும் வறுமைப் பிணியடையா. 16

2526. சறுவ ரோகஞ் சுரங்குட்டம்
தாகம் பில்லி வஞ்சனைகள்
உறுபேய் பித்து சன்னியிவை
ஒழித்து ஆரோக்கிய சுகமளிப்பர்,
வறுமை மருவா தட்டதிரு
மருவும் தரும வயித்தியரென்று
இறைவர் மகிழ்நந் தீசரைவா
னோரும் பூசித் திறைஞ்சுவரே. 17

2527. சோம வாரம் அமாவாசை
சுக்கிர வாரம் சங்கிராந்தி
ஆமெய் யயனம் விசுவுதையம்
ஆர்த்த மனங்கள் தமிலன்பாய்
நேம முடன்கோ முத்தீசர்
நிமல மலர்த்தாள் தொழுதுவந்து
பூமென் புயத்து நந்திபதம்
பூசிப் பவரே புண்ணியராம். 18

2528. பதும நிதிகச் சபநிதிமா
சங்க நிதிமா பத்மநிதி
முதிருங் கனக நிதிமகா
நிதிநல் முகுந்த நிதியினிதாம்
புதிய சங்க நிதிகுந்த
நிதிதி யாகர் புதைத்ததனால்
அதிக வெழில்சேர் நவநிதியம்
பலப்பே ராகும் அருட்சபையுள். 19

2529. நறுநெய் விளக்குப் பலவேற்றி
நறுமென் மலர்மா லிகைசூட்டி
உறுபொற் புடைய விதானங்கள்
பலசெய் துமைமா துவந்திடநின்று

இறைவர் புரிமா தாண்டவங்கண்
டிறைஞ்சு மன்பர் கால்மலர்த்தூள்
பெறுதற் குரிய தவமுடையோர்
பெறும்பே றெம்மாற் பேசரிதே. 20

2530. முக்கட் பரையொப் பிலாமுலையாள்
முதிர்சுக் கிரவா ரக்கொலுவில்
மக்கட் குயில்மென் மொழிப்பூர
வாலாம் பிகையாய் வளரொளிசேர்
செக்கர் மணிப்பொன் னாசனத்தி
லிருக்கு மெழில்சே வித்திடுவோர்
அக்குப் புனையுஞ் சிவனடிக்கீழ்
அமர்வார் சிவலோ கத்திலென்றும். 21

2531. ஐந்து கரத்து விநாயகனை
அழகு திகழுங் கணபதியைத்
தொந்தி வயிற்றுப் புகர்முகத்துத்
துதிக்கை நால்வாய்க் குஞ்சரத்தை
இந்து முடிக்குஞ் சடாதரனை
இமையா முக்கண் ணுடையானைக்
கந்த மலர்தூஉய்த் தொழுமவரே
கயிலைக் கணநா யகராவார். 22

2532. சூர னுடலை இருபிளவாத்
துணித்த வயிற்சுப் பிரமணியை
வாரும் வடமுந் திகழ்ந்தமுலை
வள்ளிக் கொடியை மணந்தோனைப்
பார மயில்மீ துகந்திடுபன்
னிருகை யுடைய பரம்பரனை
ஏர்கொள் மலர்தூஉய்த் தினம்பணிவோர்
இமையோ ரறியாப் பதம்பெறுவர். 23

2533. முத்தித் திருச்சேத் திரமுதலே!
முக்கட் கனியே! முன்னவனே!
பத்தர்க் கருள்மா சிலாமணியே!
பரனே! கோமுத் தீசுரனே!
சுத்தப் பொருளே! அருளே!ஒப்
பில்லா முலையாள் துணைவா!நல்
அத்தத் தியாகா! என்றுதுதிப்
பவரே முத்திக் குரியர்களே. 24

2534. இவ்வா றுயிர்கள் சுகமடைய
ஈச ரருணந் திக்குரைத்த
மெய்வா சகமா கியதுறைசைப்
புராணம் விளம்பி முடித்திடுநாள்
செவ்வா கியசொல் வித்தகரைச்
சித்த மகிழச் சிவிகையில்வைத்து
அவ்வாய் வேட்கை யுறும்பொருள்கள்
அனைத்து மீந்து தொழல்வேண்டும். 25

2535. முற்செய் தவத்தால் யாமுனக்கு
மொழிந்த துறைசைப் புராணகதை
இற்சொல் மதிகேட் டுய்ந்தமிது
லேச இனிஅத் துறைசையிற்போய்
அற்சித் தரனைப் பூசித்தங்
கடைய வேண்டும் வரங்கொளென
நற்சொற் சுருதி யுணர்ந்ததவு
மியமா முனிவன் நவின்றனனே. 26

அறுபத்தேழாவது
புராண பல சுருதி உரைத்த அத்தியாயம் முற்றிற்று.
ஆகத் திருவிருத்தம் 2535
திருச்சிற்றம்பலம்

67. புராண பல சுருதி உரைத்த அத்தியாயம் (சுருக்கம்)

துறைசைப் புராண கதையினை மனதிற்பதிய உணர்கின்றவர்கள், படிக்கின்றவர்கள், கேட்கின்றவர்கள் போன்றோர் அடையும் பலனையும், பணி செய்கின்றவர்கள் அடையும் நிலையினையும் சொல்லுகிறோம், மிதிலேச! கேட்பாயாக என்று தவுமிய முனிவர் கூறத் தொடங்கினார்.

ஆசாரியனையும், இலிங்கத்தையும், அடியார்களையும் சிவமேயாம் எனக் கொள்ளும் குணமுடையவர்கள், எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமல் இதம் செய்யும் விருப்பமுடையவர்கள், தயவு, இன்சொல், நல்லறிவு, கொடை, அடக்கம், அன்பு, உண்மை, நற்பண்பு, பணிவு ஆகிய குணங்களை உடையவர்கள், திருநீறு அணிந்து அதனால் பொலிவுடையவர்கள், சவத் திறத்தினர்கள், குருபக்தி நிறைந்த மனத்தவர்கள், இறைவன் திருவடிகளில் பக்தியுடன் மலர்

கொண்டு அருச்சிப்பவர்கள் ஆகிய இப்பாக்கியங்களை உடையவர்களும் இத்துறைசைப் புராணத்தைப் படிக்கவும் கேட்கவும் உரிமை உடையவர்களாவர். எனவே, இப்புராணத்தை இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்திலும், சைவர்கள் வாழும் மனைகளிலும், அடியவர்களிருக்கும் திருமடங்களிலும், நந்தவனத்தும் சொல்லுதலே மிகவும் சிறப்புடையதாகும்.

கோமுத்தீச்சுரர் இப்புராண வடிவாக இருக்கிறார். எனவே, சில ஒழுக்க நெறிப்படியே இதைச் சொல்லவும் கேட்கவும் வேண்டும். பூப்பந்தலில் விளக்குகளை ஏற்றி, சுத்தமான நிலத்திலே அமர்ந்து, பீடத்தின் மீது இப்புராணப் புத்தகத்தை வைத்து, திருவமுது கனிகள் தாம்பூலம் இவற்றுடன் நிவேதித்து, தூப தீபம் உபசாரங்கள் இவை காட்டி, பின்பு புராணிகர் வாசித்துப் பொருள் சொல்ல அன்புடன் மனம் உருகிச் சிவசரிதத்தைக் கேட்க வேண்டும்.

துறைசைப் புராணத்தை ஒருமுறை கேட்டவர்கள் சாலோக பதவியையும், இரண்டு தடவை கேட்டவர்கள் சாமீபத்தையும், மும்முறை கேட்டவர்கள் சாரூபத்தையும், நான்கு தரம் கேட்டவர்கள் சாயுச்சியத்தையும் அடைந்து இன்புறுவர் என்பது உண்மையாகும்.

இப்புராணத்தை நாள்தோறும் அருச்சித்துத் தொடர்ந்து நியமத்துடன் வாசித்து உணர்பவர்கள் பெறும்பேற்றை எவராலும் சொல்ல இயலாது.

பக்தியற்றவர்களாய் மிகுந்த பாவத்தைச் செய்தவர் களானாலும், இப்புராணத்தை ஒரு நாழிகை மனம் மகிழ்ந்து கேட்டால் அருந்தவசிகளாய் ஞானத்தெளிவை அடைவார்கள்.

அந்தணர்கள் இப்புராணத்தைக் கேட்பாராகில் பிரமனைப் போன்ற வாழ்வைப் பெறுவர். அரசர்கள் கேட்டால் பெருஞ் செல்வத்தையும் மிகுந்த வெற்றியையும் பெறுவர். வணிகர்கள் கேட்டால் நிதிகள் பலவற்றையும் பெறுவர். காராளர்கள் கேட்டால் வேளாண்மை மிகுந்து உயர்நிலையை அடைவர். சுமங்கலிகள் கேட்டால் சிறந்த மகப்பேற்றை அடைவர். கன்னியர் கேட்டால் நல்ல கணவனை அடைவர். விதவைகள் கேட்டால் இறையருளைப் பெறுவர். நோயாளிகள் கேட்டால் அக்கணமே நோய் நீங்கி நலம் பெறுவர்.

இப்புராணத்தைப் பண்ணுடன் படித்தால் அவர் இதயத்தில் இறைவன் மகிழ்ந்து வசிப்பார். புத்தகத்தில் எழுதி மாதவருக்கு அளிப்பவர்கள் 'அமுதாசனர்' என்று இவ்வுலகத்தில் பல போகங்களையும் அடைவர்.

இத்துறைசைப் புராண ஏடு உள்ள இல்லத்தில் வறுமை ஒழிந்து நல்வாழ்வு உண்டாகும்.

இப்புராணத்தை ஓர் எள்ளளவும் இகழ்பவர் நீசராகப் பிறந்து வருந்துவர். இப்புராணத்தைப் பொய்யென்று கூறுபவர்கள் பேயாகத் தோன்றிப் பிதற்றி அலைவார்கள்.

இத்திருத்தலத்தை வாயால் புகழ்ந்து கூறியும், மனங்குளிர நினைத்தும், கண்ணாரக் கண்டும் வணங்கும் நோன்புடைய வர்களுக்கு நிகராக வேறு எதுவுமே கிடையாது. இந்த அரச வனத்தை வலம் வருகிறவர்கள் தேவரினும் உயர்ந்தோர் ஆவர். கோமுத்தீச்சுரருக்கு அடிமைப்பட்டவர்கள் அனைவரும் உயர்ந்தோர் ஆவர்.

திருஞானசம்பந்தருக்கு உலவாக்கிழியைச் சுமந்து வந்து கொடுத்த பூதர்களைத் தரிசித்து, திருவிழா நாளில் புனுகுடன் கூடிய சந்தனம், மலர்மாலை, தூபதீபம் இவற்றை அப்பூதர் களுக்கு அளித்து வடைகளையும் நிவேதித்து வணங்குவோர் களுக்கு நோய்த் துன்பமே ஏற்படாது. மேலும், பௌர்ணமி, பூசம் இந்த நாட்களில் அப்பூதங்களை அருச்சித்துத் துதித்து மாவிளக்கேற்றி வணங்கினால் முன்செய்த வினையின் தொடர்புகள் நீங்கும்; சூனியம், பேய் போன்றவை விலகும்; கெட்ட கனவுகள் நீங்கும்; மலடிகட்கும் பிள்ளைப்பேறு உண்டாகும்.

துறைசையிலுள்ள திருக்கோயிலுக்கு எதிராக அரசமரத்தின் கீழ்ப்படுத்திருக்கின்ற தருமநந்தீச்சுரரை மலர்மாலைகளால் அலங்கரித்து, எள், அரிசி, சர்க்கரை, கீறிய தேங்காய், அமுது, பழம், தேன் இவை நிவேதித்து வணங்குபவர்களுக்கு வறுமை உண்டாகாது; இன்பமே பெருகும்; எல்லா நோய்களையும், சுரம், குட்டம், தாகம், பில்லி, சூனியம், பேய், பித்து, சன்னி ஆகியவற்றை ஒழித்து ஆரோக்கியமான சுகத்தை அளிப்பார்; தரும வைத்தியர் என்று நந்தீச்சுரரைத் தேவர்களும் பூசித்து வணங்குவர்.

திங்கட்கிழமை, அமாவாசை, சுக்கிரவாரம், சங்கராந்தி, அயனம், உதயாத்தமனம் ஆகிய காலங்களில் நியமத்துடன் கோமுத்தீச்சுரருடைய திருவடிகளை வணங்கி வந்து நந்தியின் திருவடிகளைப் பூசிப்பவர்களே புண்ணியர் ஆவர்.

பதுமநிதி, கச்சபநிதி, மாசங்கநிதி, மாபத்மநிதி, கனகநிதி, மகாநிதி, முகுந்தநிதி, சங்கநிதி, குந்தநிதி ஆகிய ஒன்பது நிதிகளையும் தியாகேசர் அருட்சபையில் புதைத்ததனால் 'நவநிதியம்பலம்' என்ற பெயராயிற்று. அந்த நவநிதி அம்பலத்திலே உமையாள் காணத் தாண்டவம் செய்யும் நடராஜப் பெருமானை, பல நெய் விளக்குகளை ஏற்றி, மலர் மாலை சூட்டி, விதானங்கள் செய்து, தரிசித்து வணங்குகின்ற வர்கள் பெறும் பேற்றை எம்மால் கூற இயலாது. அவர்கள் அளவற்ற நற்பேறுகளை அடைந்து முத்தியின்பத்தைப் பெறுவது உறுதி.

வெள்ளிக்கிழமையில் கொலுவின்கண், ஒப்பிலா முலையம்மை, ஆடிப்பூர வாலாம்பிகையாய் அழகிய பொன்னாசனத்தில் எழுந்தருளியிருப்பதைத் தரிசித்து வணங்குவோர், எப்போதும் சிவலோகத்தில் சிவனடிக்கீழ் இருப்பர்.

விநாயகப்பெருமானையும் சிவபெருமானையும் மலர்கொண்டு அருச்சித்து வணங்குபவர்கள் கயிலையில் கணநாயகராவர்.

சூரன் உடலை இருபிளவாகத் துணித்த வேலாயுதத்தை உடையவரும், வள்ளி மணாளரும், மயில் வாகனத்தையுடை யவரும், பன்னிரு கரங்களையுடைய பரம்பரரும் ஆகிய ஆறுமுகப்பெருமானை மலர்கொண்டு அருச்சித்து நாள்தோறும் வணங்குவோர், தேவர்களாலும் அறியமுடியாத மேலான பதத்தை அடைவர்.

முத்தித் தலமாகிய துறைசையின் தலைவனே! முக்கண்ணையுடையவனே! முன்னவனே! பத்தர்கட்கு அருள் புரியும் மாசிலாமணியே! பரனே! கோமுத்தீச்சுரனே! சுத்தப் பொருளே! அருளே! ஒப்பிலாமுலையாளின் துணைவனே! நல்ல பொற்தியாகா! என்று துதித்திருப்போர் முத்தி நிலைக்குரியவர்களாவர்.

இந்தவிதமாக, உலகிலுள்ள உயிர்களெல்லாம் இன்பம் அடையும் பொருட்டு, இறைவன் நந்திக்கு அருளிய உண்மை

வாசகமாகிய இந்தத் துறைசைப் புராணத்தைச் சொல்லி படித்து முடிக்கின்ற நாளில், சொல் வித்தகரை - புராணம் படித்தவரை மனமானது மகிழுமாறு சிவிகையில் வைத்துப் பஞ்சேந்திரியங்களும் விரும்பும்பொருள் எல்லாவற்றையும் அளித்து முறைப்படி வணங்கல் வேண்டும்.

மிதிலேசனே! நீ முன்பு செய்த தவத்தால் இத்துறைசைப் புராணத்தைக் கேட்கும் பேறு பெற்றுய்ந்தாய்; இனி, அத்துறைசைக்குப் போய் மாசிலாமணிப் பெருமானை அருச்சித்து, வேண்டும் வரங்களைப் பெறுவாயாக எனத் தவுமிய முனிவர் கூறியருளினார்.

அறுபத்தெட்டாவது
மிதிலேசன் முனிவருடன் வந்து அர்ச்சித்து முத்தி பெற்ற அத்தியாயம்

2536. *சந்திர வம்மிச சிங்க மெனப்புவி தனையாளும்*
சுந்தர மேவிய மாமிது லன்தவு மியர்சொற்கேட்டு
அந்த மிலாமகிழ் வுற்றரு ளாவடு துறையின்கண்
வந்து சிவார்ச்சனை செய்யும் விருப்ப மலிந்தோங்க. 1

2537. *ஏவல்செய் வோர்வச நீள்மிது லாபுரி யினில்மேவும்*
ஆவல்கொள் மைந்த ரமைச்சர் குடித்தம ரனைவோர்க்கும்
சீர்வளர் நல்மொழி வாசக வோலைகள் செலவேவத்
தாவறு நன்னிதி பலவள மோடவர் தாமெய்தி. 2

2538. *தாடொழ நல்முக மன்புகல் செய்தவர் தம்மோடு*
நீடு தவத்தவு மியரடி தாழ்ந்துமுன் நின்றின்பப்
பீடுறு காசியில் வாழ்முனி வோரொடும் பேராநல்
வீடரு ளுந்துறை சைக்கெய்த வேண்டும்நீ ரெனவேண்ட. 3

2539. *அம்மொழி கேட்டரு ளுந்தவு மியமுனி யருள்மேவும்*
செம்மைகொள் காசியில் வாழ்முனி வோர்க்கெலாஞ்
செப்பக் கேட்டு
இம்மையில் நல்லமு துண்ணவா வென்றிடி லிகழ்வாரார்
நன்மை யிதற்குமே லுமுள தோவென நலமுற்று. 4

2540. *இக்கணம் யாவரும் எய்துது மென்றிசை யுரைசெய்தே*
மிக்க விமான மதிற்தவு மியரொடு மிகவேறித்
தக்க தவத்துறு காசிப ரத்திரி சாண்டில்லியர்
துக்கமறுந்துரு வாசர் பரத்துவர் சுகர்வாமர். 5

2541. கௌதமர் வேதவி யாசர் வசிட்டர்கண் ணுவர்சூதர்
சவுனகர் சைமினி மார்க்கண் டியரா பத்தம்பர்
இவர்முத லாகிய முனிவர் அநேகர்கள் இயல்போடும்
சிவனுறை யும்பதி பலவெதிர் கண்டுசே வித்தெய்தி. 6

2542. கங்கை முதற்தச நன்னதி வந்து களிப்போடும்
பொங்கி யெழுங்குட மூக்கினில் மாமக நாட்போந்தே
அங்கண் மகக்குள நற்புன லிற்படிந் தன்புற்றுச்
சங்கர னைப்பணிந்து ஆவடு தண்துறை சார்போதில். 7

2543. இருடிகள் யாவரும் இன்பொடு நற்துறை சைக்கெய்து
மருளுணர் மாமிது லேசன் மகிழ்ந்திர தத்தேறிப்
பொருள்மிகு நன்னிதி யானைகள் கொண்டு புறஞ்சூழத்
தெருள்மிகு பலகிளை தானை தொடர்ந்திடு சீரோடும். 8

2544. உத்தர பூமி கழித்தெழில் மேவுசோ ணாடுற்றுப்
பத்தி யொடும்பல நற்தல முன்பு பணிந்தெய்திச்
சத்த தலந்தரி சித்தர னாரிரு தாள்போற்றி
முத்தி தருந்திரு வாவடு தண்துறை முன்பெய்தி. 9

2545. எல்லையில் வீழ்ந்து வணங்கி எழிற்திரு மறுகெய்தி
ஒல்லை பணிந்து வலங்கொடு போந்துகோ யிலுட்புக்கு
முல்லை நகைக்குயி லொப்பிலா மென்முலை யுமைபாதம்
புல்லுமெய் யன்பொடு கண்டு பணிந்துகண் ணீர்பொங்க.
10

2546. மாமறை நல்முடி மீதமர் மாசிலா மணிமுன்சென்று
ஓமர கரவென வங்கை சிரத்தினி லுறவாடித்
தாமரை யிற்படி வண்டென நற்பதஞ் சார்ந்தின்பத்
தேமயி னெஞ்சொடும் வீழ்ந்து பணிந்து சிறப்பெய்தி. 11

2547. தேர்மறை மாதவ ரெய்தும் வழிக்கெதிர் சென்றெய்தி
ஏர்மலி தாள்கள் பணிந்தவர் யாவரும் இணையில்லாக்
கூர்மழு மானுறு கையினர் தாள்மலர் கும்பிட்டங்கு
ஆர்மகிழ் வெய்திய பின்னர் அவர்க்கெலா மமர்சாலை. 12

2548. வேறுவே றாக மிகுந்தெழில் பொங்க விதித்தீந்து
தேறு தவத்தினர் செய்கிரி யைத்திர வியம்யாவும்
மாறுகொ ளாவகை வேண்டுவ நல்கி வணக்கஞ்செய்
தேறனை யான்மிது லேசனும் வேறோ ரிடம்புக்கு. 13

வேறு

2549. சோடச தானம் வேத மறையவர்க் களித்துத் தூய
வீடுறு மடியார் சிந்தை விரும்பிய வெல்லா மீந்து
நீடுகோ முத்தி நாதர் நின்மலப் பூசைக் கேற்ற
பீடுறு மபிடே காதித் திரவியம் பெருக நல்கி. 14

2550. மகமுறு மாசித் திங்கள் மருவுபிற் சதுர்த்த சிக்கண்
தகவுறு கோமுத் தித்தீர்த் தத்தினிற் சார்ந்து மூழ்கிப்
புகலருட் திருவெண் ணீறு புனைந்தக்க மணிகள் பூண்டு
மிகுமறை யாக மத்தின் விதிப்படி நியமஞ் செய்து. 15

2551. துணைவருங் கணேசர் மிக்க துதிக்கரத் தழகு பிள்ளை
மணிமுலை யொப்பி லாநல் மயில்நந்தி கந்தர் பூதர்
இணையறு கேத்திர பாலர் எழில்திகழ் காரிவீரர்
பணைமுலைத் துர்க்கைக் கேற்ற பூசனை பலசெய் தேத்தி. 16

2552. கோயில்மண் டபங்கள் சுற்று மாளிகை கோபு ரங்கள்
ஏயுநற் போதி மன்ற மெங்கணும் அலங்க ரித்துத்
தூயநற் தீபங் கோடி கோடிமேற் துலங்க வேற்றிப்
பாயிரு ளகற்ற ஞானப் பார்த்திப லிங்கங் கோடி. 17

2553. பொருவிலா முனிவர் நான்கு யாமத்தும் பூசித் தேத்தத்
திருநகர் மனைவி யோடும் சிவலிங்கார்ச் சனைநாற் சாமம்
பெருகுமன் புருகத் தானும் பிரசநல் மலராற் பூசித்து
அருள்தரு கோமுத் தீச அமலநல் மணிமுன் சென்று. 18

2554. தோத்திரம் பலவும் பாடித் தொழுமருள் முனிவ ரோடும்
வாய்த்தநே சத்தாற் தானும் வணங்கிநல் வரங்கள் பெற்ற
சீர்த்திகொள் முனிவ ராகி செப்பிடப் பெற்றன் னோர்கள்
மூர்த்திசேர் காசி மேவி முன்புபோ லிருப்ப மன்னன். 19

2555. தவுமியர் முதலா ஞானத் தபோதன ராசீர் வாத
நவமிகு வாழ்வு பெற்ற நலந்திகழ் களிப்பி னோடும்
கவினுறு மிதுலன் பின்னும் கண்ணுதல் மணிமுன் சென்று
பவமறுத் தருள்செய் தாளும் பதமலர் நோக்கித் தாழ்ந்து. 20

2556. தேவர்கள் தேவே போற்றி! சிவபரம் பொருளே போற்றி!
மாவடு வகிர்கண் ஒப்பி லாமுலை மணாளா போற்றி!
பாவினுக் காயி ரம்பொன் பரிசருள் தியாகா போற்றி!
ஆவடு துறையுள் மேவும் அமலனே போற்றி போற்றி! 21

2557. எனத்துதித் திறைஞ்சும் போதில் ஈசர்தங் கருணை நோக்கால்
வினைத்தொடர் பொழிய நோக்கி விமலமெய்ஞ் ஞான மீந்து
மனத்துடன் வாக்குக் கெட்டா வளர்சிவ போகம் நல்கித்
தனித்துணை யாயி ரண்டற் றுயிரினிற் தயங்கி நின்று. 22

2558. இனியநல் மதுர வாக்கால் மிதுலேச இன்று தொட்டு
நனியருட் சீவன் முத்தி நற்கதி மேவி ஞானச்
சனகனென் றுலக மேத்த சகலசம் பத்தி னோடும்
கனமிகு மளவில் காலம் களைகணா யுலகங் காத்து. 23

2559. நம்பரி பூர ணத்தின் நணுகென வுரைப்பக் கேட்டுச்
செம்பது மத்தாள் போற்றிச் சிவசிவ வென்று வாழ்த்தித்
தம்பெரு மிதுலை மேவித் தமருடன் வாழ்ந்து பின்னர்
இன்பநல் முத்தி வீடுற் றிருந்தனன் சனக னென்றும். 24

2560. ஞானநா யகன்தாள் வாழ்க! நலந்தரு பொற்றாள் வாழ்க!
ஊனமில் துறைசை வாழ்க! ஒப்பிலா முலைத்தாய் வாழ்க!
தேனுறை மலர்தூஉஞ் செம்பொற் சிங்கமா பீடம் வாழ்க!
வானவர் முதலோர் வாழ்க! வாழ்கசீர் அடியா ரெல்லாம்! 25

அறுபத்தெட்டாவது
மிதிலேசன் முனிவருடன் வந்து அர்ச்சித்து முத்திபெற்ற
அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் அறுபத்தெட்டுக்குத் திருவிருத்தம் 2560
துறைசைப் புராணம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறைசைப் புராணம்
நீடுழி வாழ்க!
அழகிய விநாயகன் துணை
மாசிலாமணி நாதர் திருவடி வாழ்க
ஒப்பிலா முலைத்தாய் ரட்சிக்க!
நமச்சிவாய
குருபாதமே கதி.

68. மிதிலேசன் முனிவருடன் வந்து அர்ச்சித்து முத்திபெற்ற அத்தியாயம் (சுருக்கம்)

தவுமிய முனிவர் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற மிதிலேசன் ஆவடுதுறை வந்து மாசிலாமணிப் பெருமானை அருச்சனை செய்ய மிகவும் விருப்பம் கொண்டான்.

மிதிலாபுரியில் உள்ள அமைச்சர்கள், குடிகள், சுற்றத்தார் அனைவருக்கும் ஓலை அனுப்பக் கட்டளையிட்டான். ஓலையைக் கண்ட எல்லாரும் பல நிதிகளுடன் காசியை வந்தடைந்து மிதிலேசனை வணங்கினர். அவர்களுடன் மிதிலேசன் தவுமியருடைய திருவடிகளை வணங்கினான். முனிவர்களுடன் தவுமியரும் துறைசைக்கு வரவேண்டுமென அவரை வேண்டினான். அவ்வாறே வர அவரும் ஒப்புக் கொண்டார்.

தவுமியருடன் காசிபர், அத்திரி, சாண்டில்லியர், துருவாசர், பரத்துவர், சுகர், வாமர், கௌதமர், வேதவியாசர், வசிட்டர், கண்ணுவர், சூதர், சவுநகர், சைமினி, மார்க்கண்டேயர், ஆபஸ்தம்பராகிய முனிவர்கள் அனைவரும் விமானத்தில் ஏறி வந்தனர். வழியில் பல தலங்களையும் கண்டு வணங்கினர். கங்கை முதலான பத்து நதிகளும் பொங்கி எழும் குடமுக்கினில் மாமகநாளில் வந்து, அவ்விடத்தில் மகக்குளத்தில் நீராடி, இறைவனைப் பணிந்து திருவாவடுதுறையை அடைந்தனர்.

திருவாவடுதுறையை வந்தடைந்த மிதிலேசன், துறைசையின் எல்லையிலேயே தேரிலிருந்து கீழிறங்கி வீழ்ந்து வணங்கினான். திருவீதியை வலமாக வந்து கோயிலினுள்ளே போய் ஒப்பிலா முலையம்மையின் திருவடிகளை அன்புடன் கண்டு தரிசித்துப் பணிந்தான். கண்ணீர் மல்க, மாசிலாமணிப் பெருமான் முன்சென்று 'ஓம் அரஅர' என்று கைகளைச் சிரசின் மீது வைத்துக் கூத்தாடிக் கீழே வீழ்ந்து பலமுறை வணங்கினான். அங்கு முன்பே வந்திருந்த முனிவர்களையும் வணங்கினான். அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் செய்தளித்தான். வேதியர்களுக்கு சோடச தானத்தையும் அடியார்கள் வேண்டிய அனைத்தையும் அளித்தான்.

முனிவர்கள், மக நட்சத்திரம் கூடிய மாசித் திங்களில் பின்வரும் சதுர்த்தசியில் கோமுத்தித் தீர்த்தத்தில் நீராடி, வெண்ணீறு அணிந்து, அக்கமாலை பூண்டு, ஆகம முறைப்படி அநுட்டானம் முடித்து, துணைவந்த விநாயகர், அழகிய பிள்ளையார், ஒப்பிலாமுலையாள், நந்தி, கந்தர், பூதர், சேத்திர பாலர், கர்ரி வீரர், துர்க்கை ஆகிய இவர்களுக்குப் பூசனைகள் பலவற்றையும் செய்து துதித்தனர். மேலும், கோயில் மண்டபங்கள், சுற்றுமாளிகை, கோபுரங்கள், போதி மண்டபங்கள் போன்ற வற்றை அலங்கரித்து, கோடிக்கு மேலான தீபங்களை ஏற்றி

வைத்தனர். மலவிருளைப் போக்கும் ஞான பார்த்திப கோடி இலிங்கத்தினை முனிவர்கள் நான்கு யாமத்தும் பூசித்தனர்.

மிதிலேசனும் மனைவியுடன் நான்கு யாமத்தும் இலிங்கார்ச்சனை செய்து, தாமரை மலர் கொண்டு அருச்சித்து, பல தோத்திரங்களைப் பாடி, கோமுத்தீச்சுரரிடம் வரங்களைப் பெற்றான். முனிவர்களின் நல்லாசியையும் பெற்றான். முனிவர்கள் அனைவரும் முன்புபோல் காசியை அடைந்தனர்.

மாசிலாமணிப் பெருமானை வணங்கித் துதித்த மிதிலேசனுக்கு இறைவன் தமது திருவருட் பார்வையை அருளினான். முன்னைப் பிறவியின் வினைத் தொடர்புகளெல்லாம் நீங்கப் பார்த்து, மெய்ஞ்ஞானம் அளித்து, மனம் வாக்குகளுக்கு எட்டாத சிவபோகமளித்தான். "மிதிலேச! இன்று முதல் நீ சீவன் முத்தி நிலையை அடைந்து 'ஞானச்சனகன்' என்று உன்னை உலகோர் துதிக்க எல்லாப் பேறுகளும் பெற்று, நீடூழி வாழ்ந்து, பின்னர் நம்முடைய பரிபூரணத்தில் அடைவாயாக!" என்றருளினான். இறைவன் திருவடி வணங்கிய மிதிலேசன் மிதிலையை அடைந்து சுற்றம் சூழ இன்பமாக வாழ்ந்திருந்து முத்திநிலை எய்தினான்.

செய்யுள் முதற்குறிப்பகராதி

(எண் : செய்யுள் வரிசை எண்)

அருஞ்சொல்லகராதி

(எண்:செய்யுள் எண்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

இலக்கிய இதழ்கள்	110.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3	60.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச்செல்வர் க. வெள்ளை வாரணனார்	25.00
தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்	25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும்	25.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
தமிழெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல்	105.00
வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்	70.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் இலக்கியம்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

537 திருவாவடுதுறைப் புராணம் 250.00